& CO
ENA.

C. W. KATIRAVELPILLAI'S
TAMIL DICTIONARY.

தமிழ்ச் சொல்லகராதி

முதலாம்பாகம்.

***

இஃது,

யாழ்ப்பாணத்து வல்வையம்பதி

க. குமாரசாமிமுதலியார் குமாரரும்

இலங்கைச் சுப்ரீம்கோடென்னும் அதிசிரேட்டநீதாசனர்சபையின்

அத்துவக்காத்தும்

இலங்கை அரசரால் நியோகிக்கப்பட்ட

மூலகிரந்த வித்தியாநுபாலந சங்கத்தாரு ளொருவரும்

இலங்கை அரசின் சிவில் சேவை நிரையில்

நீதிபதியாயிருந்து தற்காலம் இளைப்பாறுகின்றவரும்

ஆகிய

கதிரைவேற்பிள்ளையால்

இயற்றப்பட்டு,

***

வண்ணார்பண்ணை மகாசோதிடராகிய

வி. சபாபதியையர்க்கும் பிறர்க்கும் உடைய

அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

***

1904.

சோபகிருது.

Copyright Reserved.

S. RAGUNATH & CO
JAFFNA.

PREFACE.

"The chief glory of a nation," says Dr. Johnson, "arises from its authors" and it is hardly necessary to add that, for a proper study of their works, a good dictionary is required.

It is a characteristic peculiarity of the Tamil classics and shastras that poetry has been the recognised and almost the only vehicle of their authors, so much so that not only literature, properly so-called but also works on grammar, medicine, metaphysics, astronomy, astrology and chemistry have been metrical in their composition. To this rule even the dictionary has been no exception.

The first Tamil dictionary compiled on the more modern or what may be called the European method is the Sathur-Akarathi by the celebrated Beschi, an Italian priest, who holds perhaps the foremost place among foreigners as a Tamil scholar, poet and prose writer. Many words not given in the Sathur-Akarathi were collected and arranged for a Tamil-English dictionary by the late Mr. Knight of the Church Misson, Jaffna, with the assistance of the Tamil scholars of his day; and the manuscript left by him formed the basis of the Tamil dictionary compiled by Pundit Sandira Sekara and printed at the Manepay Press in 1842, under the auspices of the American Jaffna Missionaries. Two other dictionaries edited on similar lines appeared at a later date in Madras, and proved to be very useful and necessary additions to the number.

Many years ago I attempted, in the course of my reading, a collection of such words as are not found or defined fully in the dictionaries extant, with a view to the compilation of a new and comprehensive dictionary of the Tamil language; but the duties in which I had been successively engaged, as Instructor, Journalist, Advocate and Magistrate, interfered with the prosecution of my design. Since my retirement five years ago from Government service, I have devoted what intervals of health and leisure I have had, to the completion of a work undertaken many years ago as a labour of love, for the benefit as well of my countrymen who must ever regard a fair knowledge of Tamil as an intellectual neccessity, as of foreign students who will find it to be "one of the most copious and polished languages spoken by man."

I have included in the present work the words derived and gradually adopted from Sanskrit to meet modern requirements and now appropriated by various writers as part and parcel of the Tamil language. Although I had to correct a few words found in the other dictionaries, I have not rejected the foreign words included in that of Dr. Winslow. My chief aim has, however, been to rescue from obscurity and present to the public as large a collection as possible of words not found in any previous dictionary, occuring in shastras, whether existing in print or in manuscript.

To those wishing to study Hindu Philosophy and Metaphysics, including Vedantism and Siva-Sithantham, this dictionary will, it is hoped, be a great help. Medical men will be glad to find in this compilation, botanical and medical words collected from the medical books published by the celebrated Pandit Suppiramania. Technical words relating to the science of logic, rhetoric, astrology, astronomy, chemistry, and mathematics have received special attention. A noticeable feature of the work is the citations from standard authors and approved sources which are intended to illustrate the meanings and uses of words.

Words of Sanskrit origin are traced to their source and the originals from which they are derived are also given in Sanskrit characters.

To the sum total of the words given in previous dictionaries the present work claims the addition of thousands.

It was my original intention to publish the whole work in one volume, but as this must necessarily involve considerable delay, I have, in deference to the wishes of certain friends whose opinion I value, decided to issue it in six separate parts.

Part I, which is now issued, deals with the words beginning with அ and contains 3127 more words than the corresponding part in the latest Tamil dictionary published in Madras.

No one can be more sensible than I am of the many and great imperfections of this work; I shall, therefore, thank any gentleman, who notices any errors in this Dictionary to communicate them to me so as to enable me to make the necessary corrections in a supplement, in which I intend to deal with such words as I may not get into the body of the work.

I cannot conclude without expressing my obligations to the scholars who have assisted me in the prosecution of a laborious task. I have also to thank Mr. P. Coomaraswamy, J. P. (formerly Member of the Legislative Council) who, prompted by the keen interest he takes in everything that tends to revive the learning of the Tamil Language, has written to me from time to time to encourage me, and has generously volunteered to purchase a very large number of copies of the Dictionary.

Jaffna, January 1, 1904. C. W. KATIRAVELPILLAI.

முகவுரை.

அகராதியென்பது அகர எழுத்து முதலாக வருணமாலைக் கிரமப்படி சொற்களை ஒன்றன்பின் ஒன்றாகச் சேர்த்து வைக்கப்பட்ட ஒருகோவை. சொற்கள் அவ்வாறு கோவைசெய்யப்பட்டுப் பொருள்கூறுஞ் சொற்களோடு வருமுறையே அகராதி யெனக் காலாந்தரத்தில் வழங்கலாயிற்று. இவ்வகராதியிற் பெயர் வினை இடை உரி என நான்குவகைப்பட்ட சொற்களுக்கும் பொருள் கூறுகின்றோம்; ஆதலால் இதனைச் சொல்லகராதி யென்றோம்.

உரைநடையாய் வருணமாலைக் கிரமந்தவறாது ஒருசொற்கு ஒன்றாக அல்லது பலவாகப் பொருள் எழுதப்பட்டு முன்னாளில் வழங்கியது, ரோமாபுரியிலிருந்துவந்த கத்தோலிக்குக் குருவாகிய வீரமாமுனிவரால் செய்யப்பட்ட பெயரகராதி யொன்றே. அதனிற்காணப்படாதனவாய சொற்கள் தமிழ்நூல்களில அதிகமாக இருத்தலைக்கண்டு சேர்ச்சுமிசியோனைச் சேர்ந்த ரயிற்பாதிரியார் தமிழ்வித்தியாசங்கத்திலே தமிழும் இங்கிலிஷுமாக எழுதியும் நிறைவேற்றாது வைத்திருந்த அகராதியைத் துணையாக எடுத்து, அ. சந்திரசேகர பண்டிதரைக் கொண்டு எழுதுவித்து, அமரிக்கன்மிசியோன் குருமார் மானிப்பாயில் ௧௮௪௨-ம் ௵ அச்சிடுவித்த அகராதியும் அதன்வழியே சென்னபட்டணத்திற் பிரசுரிக்கப்பட்ட இரண்டு அகராதிகளுந் தமிழ்க்கடலில் நீந்துவார்க்குப் பெருந்துணையாயின. இவைகளிலுங் காணப்படாத சொற்கள் இன்னுந் தமிழிற் பல்லாயிரமுள என்பது வேதாந்தம், சித்தாந்தம், புராணம், மிருதி, இதிகாசம், வைத்தியம், சோதிடம், கணிதம் முதலிய சாஸ்திரங்களை வாசிப்பவர்களுக்கு நன்குவிளங்கும்.

நாம் முன் நெடுங்காலந்தொட்டு வாசித்துவந்த நூல்களில் உள்ளனவாய்ச், சதுரகராதி, மானிப்பாயகராதி, சென்னையகராதிகள், உவின்சிலோஅகராதி, வைத்தியஅகராதி என்னுமிவற்றில இல்லாதனவாகிய சொற்களைப், புதிதாக ஒரு அகராதி செய்யவேண்டுமென்று புத்திபண்ணிக் காலாந்தரத்திற் குறித்து வைத்திருந்தோம்; ஆயினும் முன்னர்த்தமிழ் அங்கிலேயம் என்னும் இருபாஷைகளிலும் நூலுரையாசிரியருமாயும் பின்னர் அத்துவக்காத்துமாயும் நீதிபதியாயும் ஏற்பட்டுச் செய்துவந்த கடமைகள் எமது காலத்தைக் கொள்ளைகொண்டமையால் எமது அபிப்பிராயத்தை நிறைவேற்றுதற்கேற்ற சமயம் வாயாமற்போயிற்று. நீதிபதித்தொழிலினின்று ஓய்ந்திருக்கும் பின்னிட்ட ஐந்துவருடகாலங்களில் நோயனுர் கைக்கொண்ட காலம் ஒழித்து எஞ்சியகாலத்தில் இவ்வகராதி எழுதுவதே நமது தொழிலாயிற்று.

நாம் இப்போது எழுதிவரும் அகராதி, தமிழ்க்கடலின் எக்கோணத்தையும் எட்டிநின்றதெனச் சொல்லோம்.

மகாசமுத்திரம் போன்று விரிந்து நானா சாஸ்திரஞ்ஞர் எழுதிய புத்தகங்கள் பரவியிருக்குஞ் சமஸ்கிருதபாஷையிலிருந்து தமிழ்ப்பாஷையிற் கொண்டுவரப்பட்டனவும் படுவனவுமாகிய சொற்களுக் கெல்லைகாண்பதரிது. இன்னுந் தமிழெழுதுவோர், சமஸ்கிருதம் வேற்றுப்பாஷையாகவுந் தமது சொந்தமாம் என்பார்போலச் சிறிதும் பின்னில்லாமற் சமஸ்கிருதபதங்களை யெடுத்துத் தமிழிற் புதிது புதிதாய்ப் பிரயோகித்துக்கொண்டே வருவாராயினர். சமஸ்கிருதத்திலிருந்து பலநூல்களுந் தொகுத்தும் விரித்தும் மொழிபெயர்த்தும் எழுதப்பட்டிருத்தலாலும் இன்னும் எழுதப்படுவதாலும் அப்பாஷை தமிழோடு நெருங்கச் சம்பந்தப்பட்டிருத்தலினாலும் அப்பாஷையிலிருக்கும் பதங்களைத் தமிழகராதியிலே தற்பவமாயுந் தற்சமமாயும் எழுதிமுடியும்போதே தமிழகராதியும் ஒருவாறு சமாப்தியானதெனலாம்.

இன்னும் இங்கிலீசிலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுந் தொகைவிரியா யெழுதப்பட்டுஞ் சிலநூல்களுள. அவற்றிலே சமஸ்கிருதபதங்களும் அங்கிலேய பதங்களும் மருவிநிற்கும். அவைகளையும் அகராதியிற் சேர்ப்பது உபயோகமாகும். போட்டுக்கீசர் ஒல்லாந்தர் என்னும் இவர் பாஷைச் சொற்களுந் தமிழில் மருவிவந்து நிற்கின்றன. இவையெல்லாம் அகராதியில் தோற்றுவிப்பது தமிழுணர்ச்சி வேண்டியவர்களுக்கு ஆவசியகமாம்.

இங்ஙனமாயினும் நாம் முக்கியமாகத் தேடியெடுத் திவ்வகராதியிற் சேர்த்தவைகள் தமிழில் முன் எழுதப்பட்டிருக்கும் நூல்களிலுள்ள அரும்பதங்களே.

அகராதியை முற்றமுடித்து ஒருகட்டடமாகப் பகிரங்கஞ்செய்வதே முதல் நாங்கொண்ட நோக்கமாக இருந்தும் காலந் தாழ்க்காதபடி பாகம் பாகமாக வெளிவிடுவது உபயோகமாம் என்று சில நண்பர்கள் உரைத்தமையால் அதனை ஆறுபாகமாகக் குறித்து அகரவெழுத்தை முதலிலுடைய சொற்களை முதற்பாகமாக்கி வெளிவிடுகின்றோம். இப்

பழைய பாகம் பாகம்பாகமாகப் பகிரங்கஞ்செய்தபின் அச்சுப்படாத சொற்களை அநுபந்தமாகப் பகிரங்கப்படுத்துவது கருதினோம். இதனில் அகராதிகளில் முதனிலையெழுத்தாக உள்ளசொற்கள், 7967. இத்தொகை, சென்னையிற் பிற்காலம் அச்சிட்ட அகராதியிலுள்ள ககாரமுதனிலைச் சொற்களிலிருந்து 3127 கூடியிருக்கின்றன என்றுகாட்டும்.

நாம் இவ்வகராதியிற் கொண்ட விதானங்கள்வருமாறு:

1. நெடுங்கணக்கின் கிரமப்படி உயிர்மெய்க்கு முன்னே மெய் வருக்கம் எழுதப்பட்டிருக்கின்றது. ஒருசொல்லுட்பல பொருள் எழுதப்பட்டவைகளையும் மாணாக்கருடைய சௌகரியத்திற்காக முன் அகராதிகளிற் போல நெடுங்கணக்குக் கிரமமாயே எழுதினோம்.

2. ஆரியத்திலிருந்து பிறந்தாவது ஆரியத்தோடொத்தாவது தமிழில் வழங்கும் பதங்களை இருமாங்கினும் பகரா அடைப்பிட்டு ஆரியரூபத்திலும் எழுதிக்காட்டுகின்றோம். அப்படிக்காட்டுமிடத்து, ஆரிய எழுத்துக்கள் இந்த யந்திரசாலையிற் குறைவாக இருந்தமையால் ஆரியத்திற்குந் தமிழிற்கும் பொதுவாகிய வடிவெழுத்துக்களைச் சிறப்பெழுத்துக்களோடு கலந்தும், வல்லினத்தில் உரப்பியும் எடுத்துங் கனைத்தும் உச்சரிக்கப்படும் எழுத்துக்களுக்குப் பதிலாகச் சில இடங்களில் அவ்வெழுத்துக்கள் நின்றமுறையே 2, 3, 4 என்னும் இலக்கங்களைப் பொதுவல்லெழுத்தின் அருகிற் புணர்த்தியும் அச்சிடுவித்தோம்.

3. உகரவீற்றுப் பதப்புணர்ச்சியின்கீழ் உகரக்கேட்டை யுணர்த்துமாறு ஒருகீற்றுச் சின்னமிட்டும் ஒன்றோடொன்று மயங்கும் பதங்களை இலக்கணவிதிப்படியே விகாரப்படுத்திப் புணர்த்தாதுவிட்டும் யாவரும் எளிதின் உணரும்படி பெரும்பாலும் அச்சிடுவித்தோம்.

4. சொற்களின் பொருள் வரம்புபட விளங்குமாறு, காலம் இடந்தந்த அளவு முன்னைய அகராதிச் சொற்கள்பலவற்றிற்கும் நாம் புதியனவாகச் சேர்த்துக்கொண்ட சொற்களெவற்றிற்கும் உதாரணங்களுங் காணப்பட்ட இடங்களுங் குறிக்கப்பட்டன.

5. மேற்கூறியபடி உதாரணங்களும் இடங்களுங் காட்டப்படாத பழைய அகராதிச் சொற்களுக்குச் சம்ஸ்கிருத அகராதிகளைப் பிரமாணமாகக் காட்டியும் அவற்றிற்காணப்படாதவற்றிற்கு அத்தமிழகராதிகளே பிரமாணமாகக்காட்டியும் எழுதினோம்.

6. முன் அகராதிகளிலே ஙகரவர்க்கத்திலே கண்ட வடசொற்கள் இப்போது நகரவர்க்கத்திலே யெழுதப்பட்டிருக்கின்றன.

7. பலபொருளுடைய சொற்களுக்குச் சொன்மூல முதலியன பொருளுரைமொழிகளின்பின் ஒரு புதுவிச்சேதத்தில் எழுதியிருக்கின்றோம். அங்ஙனமாகச் சொன்மூல முதலியன பல வேறுபடவருங்கால் அவ்வெழுத்து இன்னபொருளுக் கியைந்ததென்பது அவ்வப் பொருண்மொழியின் இலக்கத்தாற் காட்டப்பட்டிருக்கின்றது.

8. ꞉ இத்துவி விந்துவை விசர்க்கம் என்றுகொள்ளாதொழிக.

9. ஒருமைச் சொற்குத் தக்க விகுதி சேர்த்துப் பன்மைச் சொல் வருவிக்குமுறை மாணாக்கரறிவாராதலால் அவற்றுள் ஒன்றையே எழுதியும் உபயோகமாகுமெனக் கண்ட இடங்களில் அவ்விரண்டையும் எழுதியும் இருக்கின்றோம்

10. எட்டுவேற்றுமைகளிலும் வெவ்வேறு உருபுபெற்றும் ஒருவேற்றுமையிற்றானே பல உருபுபெற்றும் வரும் பெயரின் விகார ரூபங்களையும் பகுதியினின்றும் பலவேறுபடப் பிறக்கும் வினையின் விகாரரூபங்களையுந் தனித்தனியெழுதிப் பொருள்விளக்கிக் காட்டுதல் பயன்படும் ஆயினும் விரிவஞ்சி அங்ஙனங் காட்டாதுவிட்டோம். பயன்படும் என்பது கருதிச் சில இடங்களில் எச்சவினைகளுக்கும் பொருள் கூறி உதாரணங்கள் காட்டப்பட்டன.

11. முதனிலையினும் இறுதிநிலையினும் வாரா என்றஎழுத்துக்கள் அந்நிலையில் வருதலும் இடைநிலையில் வேற்றுநிலை மயக்கமாய் வாரா என விலக்கப்பட்ட எழுத்துக்கள் மயங்கிவருதலும் வடநூலார் வியாகரணத்தில் விதித்தபடி தமிழ்நூல்களிற் சிறுபான்மை வரக்கண்டமைபற்றி என்க.

கொழும்பு நகரத்திலே இலங்கையிராச மந்திரசபையிலே தமிழ்ப் பிரதிநிதியாயிருந்து பெரும்புகழ்படைத்தவரும் இலங்கைச்சமாதானநீதிபதிப்பட்டம் பெற்றவரும் அருங்கலைவிநோதரும் ஆகிய ஸ்ரீமான். பொ. குமாரசாமி முதலியாரவர்கள், இவ்வகராதியை விளம்பம் இன்றி யெழுதும்படி காலத்துக்குக்காலம் நிருபம் எழுதியும் பெருந்தொகைப்பணத்திற்கு அப்புத்தகங்களைத் தாம் வாங்குவோம என்று வாக்களித்தும் எம்மை யூக்கிய பெரிய நன்றிக்காக அவர்க்குக் கிருதஞ்ஞதோபகாரங் கூறுகின்றோம்.

இவ்வகராதியை யாமெழுதுவதில் எமக்குச்சகாயராயினோர் சிலருளர். அவர் நாமதேயங்கள் பின்வரும் பாகத்திலே வெளிப்படுத்துவோம். இவ்வகராதியில் யாதேனுந் தவறுகள்இருக்கக்காண்போர் அதனை யெமக் கறிவிக்குமாறு வேண்டுகின்றோம். அத்திருத்தங்கள் அநுபந்தத்திற் குறிக்கப்படும்.

இவ்வகராதியிற் குறிக்கப்பட்டநூல்கள்.

நூல்களின் பெயர்	குறிப்பு	நூல்களின்பெயர்	குறிப்பு
அகத்தியர்சிந்தூரம்.	சிந்தூரம்.	உபதேசகாண்டம	உபதேச;உபதேசகா.
அகத்தியர்பரிபாஷைத்திரட்டு.	பரிபா.	உபதேசவுண்மைக் கட்டளை	உபதே. கட்.
,, பரிபூரணம்.	பூரணம், அகத்தி. பூ.	உபதேசவுண்மை	உபதேசவு.
,, வைத்தியகாவியம்.	காவியம்.	உபநிடதம்	உபநி.
அகத்தியர்வைத்தியவல்லாதி௬00	அகத்தியர்வல்.	உபநிஷதார்த்தப் பிரகாசம்.	உபநி. பிர.
அகப்பொருள் விளக்கம்.	அகப்பொ.	உவில்சன் சம்ஸ்கிருத அகராதி	உவில்
அகபஞ்சஷஷ்டி.	அகபஞ்ச.	உவின்சிலோதமிழகராதி. [1862	உவின்
அகோரசிவாசாரியர் பத்ததி.	அகோ.	உள்ளமுடையான். வீமேசுர.	வீமே.
அசதிக்கோவை.	அசதி.	உள்ளமுடையான் சூடாமணி.	உள்ளமுடை.
அசுவசாத்திரம்.	அசுவ.	ஏகாதசவர்ணம்.	ஏகாதச.
அபிதானகோசம்.	அபிதாந; அபிதா.	ஏகாதசி புராணம்.	ஏகாதசி.
அமுதகலைக்கியானம்.	அமுத.	ஐங்குறுநூறு.	ஐங்குறு.
அரிச்சந்திரபுராணம்,	அரிச்ச.	ஒழிவிலொடுக்கம்.	ஒழிவி.
அரியவிதி.	அ. வி.	ஔவைகுறள்.	ஔவை.
அருணாசலபுராணம்.	அருணாசலபு.	கட்டளைக்கொத்து.	கட்.கொ.
அவிரோதவுந்தியார்.	அவிரோ.	கந்தசட்டிபுராணம்,	கந்தசட்.
அறப்பளீச்சுரர் சதகம்,	அறப்பளீ.	கந்தபுராணம்.	கந்தபு.
ஆசாரக்கோவை.	ஆசாரக்,	கந்தபுராண நவநீதம்.	கந். நவ.
ஆசிரியநிகண்டு.	ஆ—நி.	கந்தர் கலிவெண்பா,	கந்தர்கலி.
ஆசௌசதீபிகை,	ஆசௌ,	கந்தரந்தாதி.	கந்தரந்.
ஆத்திசூடி.	ஆத்திசூடி.	கந்தரநுபூதி.	கந்தரநு.
ஆத்திசூடி புராணம்.	ஆத். பு.	கந்தரலங்காரம்.	கந்தரல-
ஆனந்தலகரி.	ஆ-ரி.	கம்பரந்தாதி.	கம்பரந்.
ஆப்தி சம்ஸ்கிருத அகராதி.	ஆப்.	கல்லாடம்.	கல்லா; கல்லாட.
[1890ம் ஆண்டிற்பதிப்பு.]		கல்வளையந்தாதி.	கல்வளை.
இடைக்காட்டுச்சித்தர் பாடல்.	இடைக்காட்.	கலித்தொகை.	கலித்தொகை. கலி.
இதோபதேசம்.	இதோப.	கலைசைச்சிலேடை வெண்பா.	கலைசை.
இரகுநாத சேதுபதி ஒருதுறைக்	ஒருதுறை	காசிக்கலம்பகம்.	காசிக்கல.
கோவை.		காசிகாண்டம்.	காசிகா.
இரகுவம்மிசம்,	இரகு	காசிவிசுவநாத வைத்திய அகரா	கா. வைத்.
இராசவைத்தியமகுடம்.	இராசவைத்;ராசவை	காஞ்சி புராணம்,	காஞ்சிபு, காஞ்சி.
இராமாயணதாற்பரிய சங்கிரகம்.	இராமா. தாற்		
இராமாயணபதம்.	இரா. பத.	கிறீன்மருத்துவ வைத்தியம்.	ம. வை.
இராமாயணம்,	இராமா	குணவாகடத்திரட்டு.	குணவா.
இருபா விருபது.	இருபா.	குமாரசுவாமீயம்.	குமாரசாமி.
இரேகைச்சாத்திரம்,	இரேகை.	குவலயாநந்தம்.	குவ; குவல.
இலக்கணக்கொத்து.	இலக்.	குறிஞ்சிப்பாட்டு	கு.பா.
இலக்கண சந்திரிகை.	இல. சந்.	கூர்மபுராணம்.	கூர்மபு.
இலக்கண சிந்தாமணி. [1880]	இல. சிந்.	கெவுளிசாத்திரம்,	கெவுளி.
இலக்கண தீபிகை	இல. தீபி.	கைவல்லிய நவநீதம்,	கைவல்.
இலக்கண விளக்கம்	இலக்கணவி; இலக்க	கொலைமறுத்தல்.	கொலைம.
	ணவிள	கொன்றைவேந்தன்.	கொ. வே.
இலக்கண வினாவிடை	இலக்கணவி; இலக்க	கோயிற்புராணம்.	கோயிற்பு.
	ணவினா.	சகத்திரநாமம்.	சகத்திர.
இலிங்காபட்டியம்.	இலிங்.	சசிவர்ணபோதம்.	சசிவர்.
இறையனாரகப்பொருள்	இறைய.	சட்டமுனி நிகண்டு.	சட்ட.
உடலறிவிளக்கம்	உடலறி.	சத்தப்பிரகரணம்	சத்தப்.
		சதாசிவரூபம்.	சதாசிவ.

இவ்வகராதியிற் குறிக்கப்பட்ட நூல்கள்.

நூல்களின்பெயர்	குறிப்பு	நூல்களின்பெயர்	குறிப்பு
சதுர்வேததாற்பரிய சங்கிரகம்.	சதுர்.	சீவரட்சாமிர்தம்.	சீவரட்.
சந்தானதீபிகை.	சந்தா.	சீவாசீவ குணவிளக்கம். [1864	சீவாசீ.
சப்தஸ்தோமம்	சப்தஸ, சப்த.	ம் ஆண்டிற்பதிப்பு]	
சரசோதிமாலை.	சரசோ.	சீவோற்பவ சிந்தாமணி.	சீவோற்.
சரநூல்.	ச. நூ.	சூடாமணிநிகண்டு.	சூ. நிகண், சூடா. நி
சாதக சிந்தாமணி.	சாதகசிர்.		க, சூ. நிக.
சாதக கணிதாமிர்தம்.	கணிதாமிர்தம்.	சூதசங்கிதை.	சூத.
சாரங்கதகணேசர்புராணம்	சாரு.	சூளாமணி.	சூளா.
சால நிகண்டு.	சாலநிக.	செகராசசேகரம்.	செகராச.
சிதம்பரசபாநாதபுராணம்.	சி. நாத. பு.	செந்தமிழ்.	செ. த.
சிதம்பர சபாநாயகர் திருமாலை.	சிதம்பர.	செவ்வந்திப்புராணம்.	செவ்வந்.
சிதம்பரபுராணம்	சித. பு.	சென்னையகராதி பழையது.	செ.
சித்தார்தக் கட்டளை.	சித்தா. கட்.	ஷை புதியது.	சி.
சித்தாந்த சாராவலி.	சி-லி. சித்தா. சாரா.	சேக்கிழார்புராணம்	சேக்கிழார்பு.
சித்தாந்தப் பிரகாசிகை.	சி-பி-கை; சி-கை.	சேதுபுராணம்.	சேதுபு, சேது.
சிந்தாமணிநிகண்டு.	சி. நி.	சேந்தன் திவாகரம்.	திவாகர.
சிராத்தவிதி.	சி. வி.	சைவசமய நெறி.	சைவச.
சிலப்பதிகாரம்.	சிலப், சில	சைவசமய விளக்கம்.	சைவ. விள.
சிவகர்ணாமிர்தம்.	சிவகர்ண.	சைவப்பிரகாசனம்.	சைவப்.
சிவஞானசித்தியார் சுபக்ஷம்.	சி. சி; சி. சி. சு.	சைவபூஷண சந்திரிகை.	சைவபூ.
சிவஞானசித்தியார் ,, இராம	சி. சி. ரா. இராமலி.	சைவவினாவிடை.	சைவவின.
லிங்கதம்பிரான் உரை		சொரூபசாரம்	சொ. சா.
,, சிவஞானமுனிவர் உரை.	சி. சி. சிவஞா.	சொரூபானந்த உபநிடதம்.	சொரூபா.
,, சிவாக்கிரயோகியர்உரை.	சி. சி. சிவாக்; சிவா.	சோதிசாத்திரம்.	சோதி.
,, சுப்பிரமணியதேசிகர்ஷை.	சி. சி. சுப்பிர.	சௌந்தரியலகரி.	சௌந்.
,, ஞானப்பிரகாசர் உரை.	சி. சி. ஞானப்.	ஞானக்கட்டளை.	ஞானக்.
,, திருமறைஞானதேசிகர்ஷை	சி. சி. மறை.	ஞானவாசிட்டம்.	ஞானவா.
,, நிரம்பவழகியர் உரை.	சி. சி. நிரம்ப.	ஞான வெட்டியான்.	ஞானவெ.
சிவஞானசித்தியார்,பரபக்ஷம்.	சி. சி. பர, பரபக்ஷ.	ஞானாமிர்தம்.	ஞானா.
சிவஞானபாஷ்யம்.	சிவஞானபா.	தசகாரிய மகாவாக்கியம்.	தச. மகா.
சிவஞான போதம்.	சிவஞான. போ.	தஞ்சைவாணன்கோவை.	வாண.
சிவஞானபோதம்,சிற்றுரை.	சிவஞானபோ.சிவஞா	தக்ஷிணகைலாயபுராணம்.	தக்ஷிண.
சிவஞானபோதம்,பாண்டிப்பெரு	சிவஞானபோ. பாண்.	தண்டலையார்சதகம்.	தண்ட.
மாள் விருத்தியுரை.		தண்டியலங்காரம்.	தண்டி.
சிவதத்துவ விவேகம்.	சிவதத்து.	தணிகைப்புராணம்.	தணிகை.
சிவதருமோத்தரம்.	சிவதரு.	தத்துவ நிசாநுபோகசாரம்.	த நி. போ; த. போ.
சிவப்பிரகாசக் கட்டளை.	சிவப். கட்.	தத்துவப்பிரகாசம்.	த பி. ம்.
சிவப்பிரகாசம், சிதம்பரநாதரு	சிவப்பிர. சிதம்.	தத்துவ விளக்கம்.	த. வி. ம்.
ரை.		தர்க்ககௌமுதி.	தர்க்ககௌ.
சிவப்பிரகாசம் சிவப்பிரகாசர்வி	சிவப்பி. வியாக்.	தர்க்க சங்கிரகம். இராமகிருஷ	தர்க்கசங், தர்க்கச. இ
யாக்கியானம்.		ணர். சிவஞானமுனிவர்.	ராம. சிவஞா.
சிவபராக்கிரமம்.	சிவபரா.	தர்க்கபரிபாஷை. கதிரைவேற்பி	தர்க்கபா.
சிவரகசியம்	சிவரக.	தர்க்காமிர்தம்.	தர்க்கா,தர்க்கா மிர்.
சிவராத்திரிபுராணம்.	சிவராத்.	தன்வந்திரி நிகண்டு.	தன்வந்.
சிவானந்தலகரி.	சிவா-ரி.	தனிப்பாடற் றிரட்டு.	தனிப்பா.
சிவாலய தரிசன விதி.	சிவால-தி.	தனியூர்ப் புராணம்.	தனியூ.
சிறீயூகிமுனிவர் சிகிச்சாசாரசங்	சிகிச்சா.	தாயுமான சுவாமிபாடல்.	தாயு.
கிரகம்.		திராவிடப் பிரகாசிகை.	திராவிட.
சிறுபாணாற்றுப்படை.	சிறுபா.	திரிகடுகம்.	திரிக.
சீகாழிப் புராணம்.	சீகாழிப்பு.	திருக்கடைக்காப்பு.	கடை.
சீவக சிந்தாமணி.	சிந்தா. சிந்	திருக்குதிருசிய விவேகம்.	திருக்கு.

இவ்வகராதியிற் குறிக்கப்பட்ட நூல்கள்.

நூல்களின்பெயர்	குறிப்பு
திருக்குற்றால புராணம்.	திகு.
திருக்கோவையார்.	திருக்கோ.
திருச்செந்திநிரோட்டக யமகவ	செந்தில்.
திருச்செந்தூர்ப் புராணம்.	செந்தூர்.
திருத்தொண்டர் புராணசாரம்.	திருத்தொண்டர்.
திருத்தொண்டர் திருவந்தாதி.	திருத்-வர்.
திருநாகைக்காரோணபுராணம்	காரோ; திருக்கா.
திருநூற்றந்தாதி.	திருநூற்.
திருநெல்வேலிப் புராணம்.	திருநெல்.
திருப்பதிக்கோவை.	திருப்ப.
திருப்புகழ்.	திருப்பு.
திருப்போரூர்ச் சந்நிதிமுறை.	திருப்போ
திருமந்திரம்.	திருமந்.
திருமுருகாற்றுப்படை.	திருமு; திருமுரு.
திருமுல்லைவாயிலந்தாதி.	திருமுல்.
திருமுறைகண்ட புராணம்.	திருமுறைகண்ட.
திருவரங்கயமகவந்தாதி.	திருவ.
திருவள்ளுவர். பரிமேலழகர்.	வள். பரி.
ஷை சரவணப்பெருமாளையர்.	வள். சர.
திருவாசகம்.	திருவாச.
திருவாதவூரர் புராணம்.	திருவாத.
திருவாலவாய்க் கட்டளை.	திருவால.
திருவாவடுதுறைக்கோவை.	திருவாவடு.
திருவானைக்காப் புராணம்.	திருவானை.
திருவிளையாடற் புராணம்.	திருவிளை.
தேவாரம் (அடங்கன்முறை.) திருஞானசம்பந்தமூர்த்தி சுந்தரமூர்த்தி, திருநாவுக்கரசு	தேவார. சம், சம்ப. சுந், சுந்த. நாவ. திருநா.
தேவிகாலோத்தரம்.	தேவி.
தைலவருக்கம்.	தைல.
தொகையகராதி சதிரைவேற்பிள்	க. தொ.
தொடை. ,,	க. தொடை.
தொன்னூல் விளக்கம்.	தொன்னூல்.
தொல்காப்பியம்.	தொல்.
தொல்காப்பியம் எழுத்ததிகாரம் இளம்பூரணர் உரை.	எழுத்த. இளம்பூ.
,, சொல். சேனாவரைய	தொல். சேனா.
,, நச்சினார்க்கினியார்	நச், நச்சி.
" பொருள்.	தொல். பொரு
தோத்திரமாலை.	தோத்தி.
நல்லாபிள்ளை பாரதம்.	நல்லா. பார; நல். பாரத; நல். பார.
நல்வழி.	ந. வ.
நளவெண்பா.	ந. வெ.
நன்னூல்.	நன்.
நன்னூல் காண்டிகை ஆறுமுக நாவலர் உரை	நன். ஆறு.
நன்னூல் ,, இராமாநுசர்.	நன். இராமா. இரா.
நன்னூல் ,, கோவிந்தபிள்ளை.	நன். கோ.
நன்னூல் விருத்தியுரை.	நன். விரு.
நன்னெறி.	ந-றி.
நாநா சீவவாதக்கட்டளை.	நாநா. சட்.

நூல்களின்பெயர்.	குறிப்பு
நாலடியார்.	நாலடி.
நாலாயிரப் பிரபந்தம்.	நாலா, நாலாயி.
நான்மணிக்கடிகை.	நா. க.
நிட்டாநுபூதி.	நிட்டா.
நித்தியகருமவிதி.	நித்திய.
நீதிநெறிவிளக்கம்.	நீதிநெறி.
நீதிமஞ்சரி.	நீதிமஞ்.
நீதிவெண்பா.	நீ. வெ.
நீர்க்குறி நெய்க்குறிச் சாத்திரம்.	நீர்க்குறி.
நெடுநல்வாடை.	நெ. வா.
நெல்லைச்சிலேடைவெண்பா.	நெல்லை.
நேமிநாதம்.	நேமி.
நைடதம்.	நைட; நைடத.
பகவற்கீதை	பகவற்.
பசுபதிபாசவிளக்கம்.	ப-பா.
பஞ்சகாவிய நிகண்டு.	பஞ். நிக.
பஞ்சதசப்பிரகரணம்	பஞ். தச.
பஞ்சதந்திரம்.	பஞ்சதந்.
பஞ்சபட்சிசாத்திரம்.	பட்சி.
பட்டினத்துப்பிள்ளையார்பாடல்.	பட்டினத்தடி.
பட்டினப்பாலை.	ப-லை.
பதார்த்தகுண சிந்தாமணி.	பதார்த்த.
பதார்த்தகுண சிந்தாமணி. சுப்பிரமணியபண்டிதர் உரை.	பதார்த்த. சுப்பிர.
பதார்த்தகுண அரும்பொருள் வைத்திய அகராதி.	பதார்த்த. வை.
பரகிதம்.	ப. கி.
பழமலையந்தாதி.	பழமலை.
பராசரஸ்மிருதி [விரோதிவருஷம் பதிப்பு]	பராச; பராசர-
பராசரஸ்மிருதி [காலாந்தரப்பத்திரிகையாகப்பதிக்கப்பட்டது]	ப. மி.
பரிபாஷைத்திரட்டு.	பாஷை.
பழமொழி.	ப-மொ.
பருளை விநாயகர்பள்ளு.	பருளை.
பாகவதம்.	பாகவத.
பாடீகணிதம்	பா. க.
பாடுதுறை.	பாடு.
பார்க்கவபுராணம்.	பார்க்க.
பாரததாற்பரிய சங்கிரகம்.	பாரத-தாற்.
பாரதம் வில்லிபுத்தூராழ்வார்.	பாரத
பாரதவெண்பா.	பார வெ.
பாலவாகடத்திரட்டு.	பாலவா.
பிங்கலந்தை.	பிங்க; பிங்கல.
பிரபஞ்சோற்பத்தி.	பிரபஞ்ச.
பிரபுலிங்கலீலை.	பிரபுலி; பிரபுலிங்க.
பிரபோதசந்திரோதயம்.	பிர. சந்.
பிரமகீதை.	பிர. கீ.
பிரமோத்தரகாண்டம்.	பிர. காண்.
பிரமோ பநிடதம்.	பிரமோ.
பிரயோக விவேகம்.	பி. வி
பிராசாதசலைத்தியாகம்.	பிரா. சலை.

இவ்வகராதியிற் குறிக்கப்பட்ட நூல்கள்.

நூல்களின்பெயர்	குறிப்பு	நூல்களின்பெயர்	குறிப்பு
பிருகச்சாதகம்.	பிருகச்சாத.	மூன்ருழ் பாலபாடம்.	சிவப்பிரகாச பண்டித
பிள்ளைப்பிராயம்	பிள்.	யாப்பருங் கலக்காரிகை.	யா—காரிகை.
புலியூரந்தாதி	புலியூர; புலியூரந்.	யாப்பருங் கலம்.	யாப்—ம்.
புறநானூறு.	புறநா.	ரசாயன நூல்.	ரஜ.
புறப்பொருள்வெண்பாமாலை	பு. வெ.	ரிபுகீதை.	ரிபு.
பூவாளூர்ப்புராணம்.	பூவா.	வருஷாதிநூல்.	வருஷாதி.
பெரியபுராணம்.	பெரியபு.	வளளலார் சாத்திரம்.	வளள.
பெரும்பாணாற்றுப்படை.	பெரும்பா.	வள்ளுவமாலை.	வ. மா.
பொருநராற்றுப்படை.	பொருந.	வாக்குண்டாம்.	வாக்.
பொருளகராதி கதிரைவேற்பிள்	ச. பொ.	வாசஸ்பத்தியம்.	வாச.
ளை.		வாசுதேவமாநம்.	வாசுதே
போகர் சத்தகாண்டம்.	போ. சத்த.	விசாரசந்திரோதயம்.	விசா. சந்.
போகர் நிகண்டு.	போ. நிகண்.	விசார சாகரம்.	விசார; விசாரசா
பௌஷ்கரம்.	பௌட்.	விதாநமாலை.	விதாந.
மகா பாகவதம்.	ம. பா. ம.	விருத்தாசல புராணம்.	விருத்தாசலபு.
மகாராசா துறவு.	துறவு.	விவேகசிந்தாமணி.	விவே.
மச்சபுராணம்.	மச்சபு.	விவேக சிந்தாமணி.[கன்னடபா	வி—ணி.
மணிமேகலை.	மணிமேக.	ஷையிலிருந்து மொழிபெயர்	
மதுரைக்காஞ்சி.	மதுரை.	க்சப்பட்டது]	
மதுரைப் பதிற்றுப்பத்தந்தாதி.	மதுரை. பதிற்று.	விநோதரச மஞ்சரி.	விநோத.
மநுதருமசாத்திரம்.	மநு.	வீசகணிதம்.	வீச.
மயூரகிரிப்புராணம்.	மயூர.	வீரசோழியம்.	வீரசோ.
மரண கண்டி.	மரண.	வீரமாமுநிவர் தொகையகராதி.	வீர. தொகை.
மருதூரந்தாதி.	ம. தி. மருதூ.	வெண்பாப் பாட்டியல்.	வெண்பாப்.
மலைபடுகடாம்.	மலைபடு.	வெற்றிவேற்கை.	வெற்.
மலையகராதி.	மலைய.	வென்வி, சம்ஸ்கிருத அகராதி.	வென்.
மறைசையந்தாதி.	மறை-தி; மறைசை.	[1866 ம் ஆண்டிற்பதிப்பு]	
மனையடிச்சாத்திரம்.	மனையடி.	வேங்கடாசல புராணம்.	வேங்-
மாணிப்பாயகராதி. [1842 ம்ஆண்	மா	வேதாந்த சூடாமணி.	வே-சூ; வேதா. சூ
டிற்பதிப்பு .]		வேதாந்த தத்துவக்கட்டளை.	வேதா. தத்.
மிருகேந்திர சவ்வியாக்கியானம்.	மிருகேந்திர.	வேதாரணிய புராணம்.	வேதாரணியபு.
மிருதிசந்திரிகை.[பார்த்திவ வரு	மிரு. மிருச; மிரு-ச	வைத்திய நிகண்டு.	வைத். நி.
ஷப் பதிப்பு]	ந்; மிருதி;	வைத்திய ரத்திநச்சுருக்கம்.	வை. ர.
மீனாட்சியம்மைபிள்ளைத்தமிழ்	மீனா	வைராக்கியதீபம்.	வை. தீ.
முல்லைப்பாட்டு.	மு—பா.	ஔற்ஸரகராதி.	ஔற்
மூலிகை வைத்திய விரிவகராதி.	கர். வைத்.		

குறிப்புவிளக்கம்.

அவதாரிகை.	அ—கை.	மூலம்.	மூ.
இந்துஸ்தானிச்சொல்.	இந்துஸ்.	உலகவழக்கத்திற் கண்டசொல்.	வழக்.
தெலிங்குச்சொல்.	தெலிங்கு.	வார்த்திகம்.	வார்த்தி.
பெயரெச்சத்தொகை.	பெ—கை.		

தமிழ்ச் சொல்லகராதி.

திருவா ருலகஞ் சிருட்டித் தளிக்கும்
அருவார் பொருட்டென் னகம்.

அ — [இது தமிழ்ப்பாஷையின் வர்ணமாலையில் வரும் முதலாம் எழுத்து—உயிர்முயற்சியாற் பிறக்கும் எழுத்துக்களுள், அங்காந்தவளவிலே ஒலிக்கும் ஒரு குற்றுயிர். அங்காந்தவளவிற் பிறப்பதாகிய இந்த உயிரெழுத்து, அங்காப்போடண்பல் முதலிய கருவிகளின் றொழிலைக்கொண்டு பிறக்கும் மற்றையெழுத்துக்களோடு செறிந்தும் இருத்தல் பற்றிச் சிவஞானசித்தியார் உ: உ—ல் "அக்கரங்கடோறுஞ் சென்றிடுமகரம்போல நின்றனன் சிவனுஞ்சேர்ந்தே" என அச்செறிவு, ஆன்மாக்கடோறுஞ் சிவன் சேர்ந்திருத்தற் குபமானமாக்கப் பட்டது.]

1. அஃறிணைப் பன்மைப் படர்க்கையில்வரும் ஒரு பெயர்விகுதி; அது: தன்முன் அன் சாரியை பெற்றும் பெறாதும் வரும். (உ-ம்.) பொருளன, பொருள. (நன். பெய. உகூ.) அன்றியும், "இன்" சாரியை பெற்றும் வரும். (உ-ம்,) "உன்னின" (சி. சி. ச: உரு. சிவஞானமுனிவர் உரைப்படி.)
2. அஃறிணைப் பன்மைப் படர்க்கையில்வரும் ஒரு வினைமுற்று விகுதி; அதுவுந் தன்முன் அன் சாரியை பெற்றும் பெறாதும் வரும். (உ-ம்.) நடந்தன, நடந்த; கரியன, கரிய. (நன். வினை, க௦.)
3. ஆறும் வேற்றுமையில் அஃறிணைப் பன்மைப்பொருளில்வரும் ஓர்உருபு. (உ-ம்.) எனகைகள். (நன். பெய. சகூம் உரையும்.) [சிறுபான்மை "எனகருத்து" என்பதிற்போல அஃறிணை ஒருமைப்பொருளிலும் வரும். (உ-ம்.) "எனகருத்திடை முற்பகலெய்தினர்" (கந்தபு. மேருப். ருகூ.)
4. ஒருசாரியை யிடைச்சொல்; இது: "பொருநக்கடுமை" "கன்னத்தட்டு" "ஈமக்குடம்" கம்மக்குடம்" தமிழப்பிள்ளை"என்பவற்றிற்போலத் தொடர்மொழியிடத்தும், "நடந்தது" என்பதிற்போல ஒருமொழியின் அகத்தும் வரும். (நன். மெய். ரு, உ௦, உஉ; உருபு. ரு.)
5. ஒருபெயர்ச்சொல்லின் அகத்தாவது புறத்தாவது நின்று தூரத்திற்பொருளைச் சுட்டிவரும் ஓர் இடைச்சொல். (உ-ம்.) அவன். (அகம்.) அக்கொற்றன். (புறம்.)
6. ஒரு பெயரெச்சவிகுதி; இஃது: உடன்பாட்டுத் தெரிநிலைவினையில் வருங்கால், இறந்தகால நிகழ்கால இடைநிலைகளுள் ஏற்பதொன்றினை யணைந்தும், கு டு று என்னும் எழுத்துக்களில் ஒன்றை யீறாக உடைய சில குறிவினைப்பகுதிகள், இறுதிநின்ற உயிர்மெய்யின் ஒற்றிரட்டித் திறந்தகாலங் காட்டுவனவற்றில் உகரங்கெட அதற்குப் பற்றுக்கோடாய்நின்ற அவ்வொற்றினை யூர்ந்தும், எதிர்மறை வினையில் வருங்கால், எதிர்மறை யிடைநிலையாகிய ஆகாரத்தினை யடுத்த தகரமெய்யை யூர்ந்தும் வரும். (உ-ம்.) உண்ட சாத்தன், உண்கின்ற சாத்தன்; புக்கமனை, தொட்டகை, உற்றசெய்தி; உண்ணாதசாத்தன், உள்ளபொருள்; இல்லாதபொருள். (நன். வினை. உகூ. உரை. இராமா.)
7. ஒரு வியங்கோள்விகுதி. (உ-ம்.) "நான்மறையறங்களோங்க" (கந்தபு.வாழ்.)
8. ஒரு வினையெச்சவிகுதி; இது: ககரமெய்யை முன்னுடையதாய்க் "கின்று" "கிறு" என்னும் இடைநிலைகள் பெற்று நிகழ்காலங் காட்டும் இனத்தின் ஒன்றாய வினையடியோடு ககர பகர மெய்களின் ஒன்றிரட்டித் திடையில் வர அணைந்து "படிக்க" "அலைப்ப" என்பவற்றிற்போலவும், ககரமெய்யை முன்கொண்டு வாராத அவ்விடைநிலைகள் பெற்று நிகழ்காலங் காட்டும் இனத்தின் ஒன்றாய வினையடியோடு விதிப்படி யணைந்து "படிய" "போக" "வர" "உண்ண" என்பவற்றிற் போலவும் வரும். இவ்வினையெச்சந், தன்னை முடிக்குஞ் சொல்லோடொரு கருத்தா உடையதாய், வினைமுதலின் அபிப்பிராயத்தைப் புலப்படுத்திப், "படிக்க வந்தான்" என்பதிற்போலவும்; தனக்கு வினைமுதல் ஒன்றாகத் தன்னைமுடிக்குஞ் சொற்கு வினைமுதல் வேறொன்றாக வந்து தன்னால் உணரப்படுந் தொழிலும் முடிக்குஞ் சொல்லால் உணரப்படுந் தொழிலும் ஒரு காலத்திலே நிகழ்ந்தன என்றாவது நிகழ்கின்றன என்றாவது நிகழுமென்றாவ தொருவாறு நிகழ்காலப் பொருளுடையதாய்ச் "சூரியனுதிக்க அவன் வந்தான்" "சூரியனுதிக்க அவன் வருகிறான்" "சூரியனுதிக்க அவன் வருவான்" என்பவற்றிற்போலவும்; முடிக்குஞ்சொல்லால் உணரப்படுந் தொழிற்குத்தன்னால் உணரப்படுந் தொழில் காரணமென்பது படவருதலாகிய காரணப்பொருளாய், "மழைபெய்ய நெல்விளைந்தது" என்பதிற்போலவும்; முடிக்குஞ்சொல்லால் உணரப்படுந் தொழிற்குத் தன்னால் உணரப்படுந் தொழில் காரியமென்பது படவருதலாகிய காரியப்பொருளாய், நெல்விளைய மழைபெய்தது" என்பதிற்போலவும்

வர்து நான்குவகைப்படும்.

9. ஓரவ்வியயம்; அஃது: ஒற்றெழுத்தை முதலாகவுடைய வடமொழிப் பெயர்ச்சொற்கு முன் "அபடம்" என்பதிற்போல அந்நியங்கருதும் அன்மைப் பொருளிலும், "அப்பிராமீணன்" என்பதிற்போல ஒப்புமை யுள்ளிட்ட அன்மைப் பொருளிலும், "அமலம" என்பதிற்போல இன்மைப் பொருளிலும், "அமாம்சம்" என்பதிற்போல அற்பங் கருதிய இன்மைப்பொருளிலும், "அநீதி" என்பதிற்போல விரோதங் கருதிய மறுதலைப்பொருளிலும், "அகாலம்" என்பதிற்போலத் தகுதியின்மை யுள்ளிட்ட மறுதலைப் பொருளிலும் வரும். (ஆப். க.) [அபடம்–சீலையல்லாத பிறிதொரு பொருள். அப்பிராமணன்–பிராமணன் அல்லாதவனும் பிரமணன்போன்றவன். அமாம்சம்–அற்பமாமிசம்.]

10. சிவன். (ஆப். க.) "ஆருமறியாரகாரமவனென்று" என்னுந் திருமந். சதாசிவ. உஉஞ. செய்யுளாலும் பெறப்படும்.

11. சுக்கு. (இராசவைத்.)

12. தடைசெய்தற் பொருளில் வரும் ஓர் இடைச்சொல். (உ-ம்.) "அ! அவனை அடியாதே"

13. திப்பிலி. (இராசவைத்.)

14. பிரமா. அது "அச்சொரூப நான்முகற்றியாநித்துக்கொண்டு" என்னுஞ் செய்யுளாற் பெறப்படும். (சூத. ஞாந. சகூ: கூ)

15. விட்டுணு. (ஆப். க.) (உ-ம்.) "அவ்வெனுங்கரியமாலும்" (சாஞ்சிபு. திருவேச. உரு.)

["அ" என்பது அங்காந்த வளவிற் பிறக்கும் ஒலிக்குறிகுறியாய் நிற்பதுமன்றி, ஆஅது மென்னுமவர்" எனனும் வள். சுருகூ–ங் கவியிற்போல ஆகார உயிரெழுத்து ஒருமாத்திரை யளபெடுத்தமையைக் காட்டுதற் சறிகுறியாயும், அட்டம் என்னும் பதத்தில் முதலெழுத்தாய் இலக்கநிரையில் எட்டென்னும இலக்கத்தைக் காட்டுதற்கோர்றிகுறியாயும்வருவதறிக]

அஆ—இரக்கக் குறிப்பிலே வரும் ஒரு கூட்டிடைச்சொல். (உ-ம்.) "அஆ விழந்தானென்றெண்ணப்படும்" (நாலடி. செல்வநிலை. கூ.)

அஃகம்—1. ஊறுநீர். (பிங்க. ருருள.) 2. தானியம். (உ-ம்.) "அஃகஞ்சுருக்கேல்" (ஆத்திசூடி. சஉ.)

அஃகரம்—வெள்ளெருக்கஞ்செடி. (உவின். ச.)

அஃகல்—அஃகுதல்.

அஃகாமை—1. குறையாமை. (உ-ம். "அஃகுதல்" 1.பார்) 2. குறையாமைக்குக் காரணம். (உ-ம்.) "அஃகாமை செல்வத்திற் கியாதெனின் வெஃகாமை–வேண்டும்பிறன்கைப்பொருள்" (வள். சஎஅ.) 3. கழிந்துபோகாமை. (உ-ம் "அஃகுதல்" 2.பார்) 4. நுண்ணியதாகாமை. (உ-ம். "அஃகுதல்" "4" பார்.)

அஃகான்—1. அ என்னும் எழுத்து. (உ-ம்.) "அஃகானடைவுமாகும்" (நன். மெய். கூ.) [அ; கான்–ஒரு சாரியை.] 2-4. "அஃகு" என்னும் வினையடியார்பிறந் தெதிர்மறைப் பொருளிலே வரும் ஓர் உயர்திணைப் படர்கைவினைமுற்றும், அவ்வினைமுற்றாகிய வினையெச்சமும் பெயரும்

அஃகு—1-3. அஃகென்னேவலுந் தெரிநிலை வினைப்பகுதியும் பெயரெச்சத்தொகையும். 4. அஃகுதல், [ஒரு முதனிலைத்தொழிற்பெயர்.]

அஃகுதல் —— அளவிற் குறைதல், சுருங்கல். (உ-ம்.) "அஃகிய இ" (நன். எழுத்திய. ரு.) 2. கழிந்துபோதல். (உ-ம்.) "அலலாயிரமாயிரமஃகினவால்" (இராமா. அதிகா. கூகூ.) 3. குவிதல். (உ - ம்.) "அரிவையர்வாண்முகமதியாலாம்பன் மலர்தரநோக்கி–யிரவணைந்தெனக்கரையினிவர்ந்தவைமீட்டஃகுதலும்" (காஞ்சிபு. திருக்க. சeஅ.) 4. நுண்மையாதல். (உ -ம்.) "அஃகியகன்றவறிவென்னாம்" (வள். கஎரு.) 5. நீர்வற்றுதல். (உ-ம்.) "அஃகாகின்றபெருநதிகள்" (இரகு. திக்கு. சசு.)

அஃகல்லி—உக்காரி என்னுஞ் சிற்றுண்டி. (பிங்க. கககச.)

அஃகுள்—அக்குள். (உவின். கூ.) [அஃகு–சுருங்கிய. உள்–உள்ளிடம்.]

அஃகேனம்—1. நெடுங் கணக்கிலே உயிர்வருக்கத் திறுதியில் வைக்கப்பட்டு முப்புள்ளிவடிவினாற் குறிக்கப்படும் "ஃ" ஆகிய எழுத்து; அஃது; "இஃது" என்பதிற்போலக் குற்றெழுத்துக்கும் உயிரேறிய வல்லொற்றுக்கும் இடையே வருவது. (வீரசோ. எழுத். ச; நன். எழுத்தி. ருரு.) [அஃது "அற்றாலளவறிந் துண்கவஃதுடம்பு-பெற்றானெடிதுய்க்குமாறு" என்னும் வள்ளுவர் கூசாகூ-ஞ் செய்யுளிற்போல உயிரையொப்ப அலகு பெற்றும், "தோன்றிற்புகழொடு தோன்றுகவஃதிலார்– தோன்றலிற் றோன்றாமை நன்று" என்னும் வள்ளுவர் உகூசு -ஞ் செய்யுளிற்போல ஒற்றினையொப்ப அலகுபெறாதும் வருதலினாலும், ஒருபால் உயிரெழுத்தும் ஒருபால் மெய்யெழுத்தும்வந்தியக்க இயங்குவதினாலும் உயிர், மெய் என்னும் இரண்டு வருக்கத்துக்கும் நடுவில் வர்ணமாலையில் வைக்கப்பட்டது. இவ்வெழுத்தைப் பெயரிட்டழைப்பதற்காக அகர உயிர்த்துணைவேண்டப்பட்டது, ஏனம்-ஒருசாரியை.] 2. முள்ளில்லாப்பன்றி. (செ) [அஃகு - குறைதல். ஏனம்– பன்றி முள்ளில்லையென்றபடி.]

அஃதான்று — அஃதன்றி. (உ-ம்.) "அஃதான்றுமுன்னேன் காண்" (திருவாசகம். திருவண்ட. உஅ.) ["அஃது" என்பதனோடு சேர்ந்த "அன்றி" என்னும்வினையெச்சம், "அன்று" எனத் திரிந்து நீண்டு நின்றது. நன். உயிரீற். ருஉ.]

அஃதி—அஃதை, (நன். பொதுவி. உகூ, இரா.) ["அசதி" என்பதன் மரூஉ.]

அஃது —அஃறிணை யொன்றன் பாலிலேவரும் ஒருசேய்மைச் சுட்டுப்பெயர். (உ-ம்.) "மறத்திற்குமஃதே துணை" (வள். எகூ.)

அஃதை—திக்கற்றவன், திக்கற்றவள், திக்கற்றது எனப் பொருள்பட்டு, இருதிணையாணொருமை பெண்ணொருமைகளிலே விரவிநிற்பதோர் பொதுச்சொல். (உ-ம்.) "ஒவ்வொருவருந்தனித்தனி அஃதைக்குத் தந்தைபோல் வாராதலால்" (நன். பொதுவி. உகூ, இரா.) [இஃது "அகதி" என்பதன்மரூஉ.]

அஃபோதம் — நீர்முகிப்புள். (உவின். க.)

அஃறிணை — உயர்திணையன்மையாகிய சாதி. அது மனிதர், தேவர், நரகரை

னும் உயர்திணையாரொழிந்த உயி ர்ப்பொருளும் உயிரல்லாப்பொருளு ஆகிய சாதியைக் கருதும். (உ-ம்.) "மக்கடேவர் நரகருயர்திணை—மற் றுயிருள்ளவு மில்லவுமஃறிணை" (நன். பெய. ௪.) "தன்னுணர்ச்சிகெட்டஃறிணைகளினுடறரிப்பார்" (நல்லா. பார. யயா. ௪௨௦.) [அல்- அன்மை. திணை—சாதி. குற்றெழுத்தின் பின்னின்ற லகரம் ஆய்தமாய்த்திரிந்தது. நன். மெய். ௨௫.]

அக்ககந்நம்—திரிகோணவடிவத்திலே யிலக்பசோணத்துக் கேந்திராகிய ரேகை. (ஆப். கூ.) 2. பதங்கேந்திரம். (உவில். கூ.) [அக்ஷகர்ண.]

அக்கசாலை—பொன் முதலிய உலோகங்களிலே வேலைசெய்யும் இடம். (உ-ம்.) "பேயக்கசாலைபுகுந்தனள்காணந்தப்பொய்ம்மகளே" (தனிப்பா. பலவித். ௯௭.) [அர்க்க—செம்பு, நெருப்பு. ஶாலா—வீடு.]

அக்கசாலையர்—1. கண்ணாளர், கம்மியர். (சூ. நிகண். ௨: ௨௯.) 2. செம்பிலே வேலைசெய்வோர். 3. தட்டார். (பிங்க. ௭௧௨.)

அக்கட—அவ்விடம். (உ-ம்.) "அக்கடபோவெனும் லோபரைப்பாடியலுத்துவந்த-குக்கனையாண்டருள்" (தனிப்பா. ௧௧ வது. ௫.) [ஒருதெலுங்குச்சொல்.] (செ.)

அக்கடி—கடுங்காற்றாற் கயிறடியுண்டு (மரக்கலம்) அலைதல். (உவின். ௪.) [அக்கம்—கயிறு. அடி—அடித்தல்.]

அக்கணம்—1. அந்தக்கணப்பொழுது. (உ-ம்.) "அக்கணத்தேகியிருந்தவராறுதனன்னையோடுரைசெய்து" (பாரத. சம்ப. ௧௬.) [அ—அந்த. க்ஷணம்—கணப்பொழுது.] 2. பொரிகாரம். (உவின். கூ.) 3. வெங்காரம். (கா. வைத்.)

அக்கணு—தான்றிமரம். (உவின். ௪.)

அக்கதம்—அறுகும் வெள்ளரிசியுங்கூட்டி யணியப்படுமது. (சூ. நிகண். ௯: ௧அ.) 2. ஆசீர்வாதத்தில் உபயோகிக்கப்படுங் கண்டப்படாத அரிசி. (ஆப். ௪.) (உ-ம்.) "தலைத்தலையாசிகள் சாற்றிச்சேர்த்தனர்சிந்துநுணருமக்கதமும்" (கந்தபு. சூரன்ர. ௨௫.) 3. நோப்படாதது. (உவில். கூ.) 4. பங்சப்படாதது. (உவில். கூ.) 5. பொரித்த தானியம். (உவில். கூ.) [அக்ஷதம்: அ—எதிர்மறை. க்ஷதம்—கிழிக்கப்பட்டது, தகர்க்கப்பட்டது.]

அக்கதயோநி—ஆடவனோடு புணராதபெண். (உவில். கூ.) [அக்ஷதயோநி: அ—எதிர்மறை. க்ஷதம்—பங்கப்பாடு. யோநி—பெண்குறி.]

அக்கதாரி—1. சிவன். (சி.) 2. சிவனடியான். (சி.) [அக்ஷதாரிந்: அக்ஷ- உருத்திராக்கம். தாரிந்—தரித்தவன்.]

அக்கதூர்த்தன்—சூதாடுகிறதீயன். (உவில். கூ.) [அக்ஷதூர்த்த: அக்ஷ—சூதாடுசட்டை. தூர்த்த—வஞ்சகன், தீயவன்.]

அக்கதேவி—1. சூது விளையாடுவோன். (சப்த.) [அக்ஷதேவிந்: அக்ஷ—சூதாடுகருவி. தேவிந்—விளையாடுவோன்.] 2. சோளைப்புல். (கா. வைத்.)

அக்கதை—1. கண்டப்படாத அரிசி. (உவில். கூ.) 2. மங்கலகாரியத்திலே கொண்டாடப்படும் அரிசி. (உ-ம்.) "வெண்ணிலவெறிக்கு நித்திலவக்கதையுமிட்டாள்" (பிரபுலிங். மாயை. ௪௬.) [அக்ஷதா: அ—எதிர்மறை. க்ஷதா—பங்கம்.]

அக்கந்தம்—தான்றிமரம். (கா. வைத்.)

அக்கந்து—நென்முதலிய தானியங்களை மிதிக்குங் களத்திற்ல தூற்றும்போது காற்றுக் கெடுபட்டொதுங்கி அப்பாற்கிடக்கும் முதிராத தானியமுங் கலந்த பதர்க்கூட்டம். (உவின். ௪.) [அ—அப்பால். மம்—போதல். து—ஒருவிகுதி. உவில். ௨௬௰.]

அக்கப்பாடு—கடலிலாவது ஆற்றிலாவது மரக்கலத்தில் ஏற்றப்பட்ட தானியங்கள் கடுங்காற்று முதலிய காரணங்களினால் நட்டப்படுகை. (உவின். ௪.) [அக்க—தானியம். பாடு—கெடுகை.]

அக்கபாடகன்—நியாயாதிபதி. (உவில். ௨)

அக்கபாடம்—1. மற்போர்க்களம். (உவில். ௪) 2. திரைப்புடைவை. (சி-வி. கிரி. ௨௭. தாற்.) [அக்ஷபாட: அக்ஷ—மற்போர்,எடுத்தல். பாட—அடைப்பு.]

அக்கபாதன்—1. நியாயசூத்திரஞ்செய்த கௌதமமுநிவன். (உ-ம்.) "அக்கபாதன் கணாதன்சைமினி" (மணிமேகலை. ௨௭: ௮௨.) (இவர், தம்மதத்தை நிந்தித்த வியாசமுநிவருடைய முகத்தைக் கண்ணாலே பார்க்கமாட்டோம் என்று, சபதமிட்டும் வியாசமுநிவர் வேண்டிக் கொள்ளத் தம்முடைய பாதத்திலே கண்ணுண்டாக்கிப் பார்த்த காரணத்தால் இப்பெயர் பெற்றார் என்பது புராணகதை.) (வாச.) 2. நையாயிகன். (ஆப். கூ.) [அக்ஷ—தர்க்கம். பாத—போகிறவன்.]

அக்கபிரம்—மாமரம். (கா. வைத்.)

அக்கம்—1. அறிவு. (ஆப். கூ.) 2. ஆன்மா. (உவில். கூ.) 3. உருத்திராட்சம். (உ-ம்.) "தலையெலும்பப்புக்கொக்கிறககம்" (திருப்பு. ௬௩௫.) 4. ஒருமரம். [இதன் விதைகளால் உருத்திராக்கமாலையும், சூதாடு கருவியுஞ் செய்யப்படும்.] (உவில். கூ.) 5. கடலுப்பு. (உவில். கூ.) 6 கண். (உ-ம்.) "அக்கநிரைசிந்தினர்" (கந்தபு. சகத்திர. ௨௯.) 7. கயிறு. (உவின் ௪.) 8. சூதாடுகருவி. (உவில். கூ.) 9. ஞானேந்திரியம். (உவில். கூ.) 10. தராசுக்கோல். (ஆப். கூ.) 11. தானியம். (உவின். ௪.) 12. தான்றிமரம். (உவில். கூ.) 13. தரிசு. (உவில். கூ.) 14. தேர். (உவில். கூ.) 15. தேருருள். (உவில். கூ.) 16. தேருறுப்பு. (உவில். கூ.) 17. பக்கம். (உவின். ௪.) 18. பண்டியச்சு. (ஆப். கூ.) 19. பதினாறு மாடங்கொண்ட ஒருநிறை. (உவில். கூ.) 20. பாம்பு. (உவில். கூ.) 21. பூகோளாட்சம். (உவில். கூ) 22. பெறும்விலை. (ஆப். கூ.) 23. பொன். (உவின். ௪.) 24. வியவகாரம், வழக்கு. (உவில். கூ.) [1, 2, 3, 4, 5, 6, 8, 9, 10, 11, 13, 14, 15, 16, 17, 19, 20, 21, 24. அக்ஷ. 22. அர்க.]

அக்கமணி—உருத்திராக்கமணி. (உ-ம்.) "பூதியக்கமணியெழுத்தைந்தாதரியாப்புன்மையோரை" (சூத. எக்கி. பூ. ௬௪: ௨௭) அக்ஷ; மணி.]

அக்கமாலிகாபரணன்—சிவன். (உ-ம்.) "மன்னுமாபதிநல்லக்கமாலிகாபரணன்" (சூத. ஞான. ௧௧: அ.) [அக்ஷமாலிகா—உருத்திராட்சமாலை. ஆபரண.]

அக்கமாலை—1. அருந்ததி—வசிட்டன் மனைவி. (உவில். ௪.) [அக்கமாலையணிந்த தலையாயபெயர்.] 2. உருத்திராட்சமாலை. (உ-ம்.) "அக்கமாலைகுண்டிகை" (வேதாரணியபு. பிரம. ௬.) [அக்ஷமாலா: அக்ஷ - உருத்திராட்சம். மாலா—தொடுக்கப்பட்டது.]

அக்கமுன்றி—கண். (மா.) [அக்கம்—பஞ்சேந்திரியம். முன்றி—முன்னது. பஞ்சேந்திரியங்களின் முன்னது.]

அக்கமை—1. இயலாமை, சாமர்த்தியமின்மை. (உவில். ௪.) 2. பொறுமையில்மை. (உவில். ௪.) 3. பொறாமை அழுக்காறு. (உவில். ௪.)

[அக்ஷமா: அ -எதிர்மறை. க்ஷமா-பொறுமை. சாமர்த்தியம்.]

அக்கயத்துவம்—அழிவின்மை. (வென். உ.) [அக்ஷயத்வம்: அ - எதிர்மறை. க்ஷயம்-அழிவு. த்வம்-தன்மை.

அக்கயம்—அழிவின்மை. (உவில். ச.) [அக்ஷய.]

அக்கர்—1. உருத்திராக்கமணியுடையவர். (உ-ம்.) "திசைமுகன்மாறிரளக் கரக்கரை" (கந்தரந். சo.) [அக்ஷம்-உருத்திராக்கம்.] 2. கண்ணுடையவர். (உ-ம்) "திரளக்கர்" (கந்தரந்.சo) [அக்ஷம்-கண்.]

அக்கரச்சுதகம்—இருபதுவகைச் சித்திர கவிகளுள் ஒன்று; அஃது: ஒரு பொருள் பயப்பதோர் சொற்கூறி, அச்சொல்லின் எழுத்துக்களை ஓரோரெழுத்தாக நீக்க வேறுவேறு பொருள் பயப்பது. (உ-ம்.) "கற்றோர்பரவுங் ககாரி நகாரிகாரி" என்னுஞ் சொல்லில், முதலிலுள்ள ககாரத்தை நீக்க, "நகாரி" என்றாய்க் "ககாரி" என்பதற்கு வேறான ஒருபொருளும் நகாரத்தை நீக்கக் "காரி" என்றாய்ப் பின்னும் வேறான ஒரு பொருளும் பயந்தவாறுணர்க. (உ-ம்.) "கோமூத்திரியேகூடசதுர்த்த, மாலைமாற்றே மாத்திரைச்சுருக்க, மாத்திரைவருத்தந மெழுத்துவருத்தந, மொற்றுப்பெயர்த்தல் வினுவுத்தரமே, நாகபந்த முரசபந்தந், திரிபாதிரிபங்கி பிறிதுபடுபாட்டுக, காதைகரப்பே கரந்துறைச்செய்யுள், சக்கரஞ்சுழிகுளஞ் சருப்பதோபத்திரமக்கரச்சுதகநிரோட்டமென்ன, முறைபெறவகுத்த மிறைக்கவியிருபது, மறிவுறக் கிளந்தவவற்றின் பால" (இலக்கணவிள. பொரு. சுகo) [அக்ஷரச்யுதகம். அக்ஷர-எழுத்து. ச்யுதகம்- நீக்கப்பட்டது.)

அக்கரப்பிரஞ்சம்—எழுத்து மாறுட்டம். (உ-ம்.) "பாணிநிபிராதிபதிகத்தையுந் தாதுநிட்பந்நமென்றாராலெனின், எழுத்துமாறுட்டமென்னும் அக்கரப்பிரஞ்சம் வாராமைபற்றி அவ்வாறுரைத்தாரென்பர் பாடியகாரர்" (பி.வி.எ.உரை)[அக்ஷர ஹ்ரம்ஶ:அக்ஷர-எழுத்து-ஹ்ரம்ஶ-மாறுட்டம்]

அக்கரம்—1. அசரம். (ஆப். ச.) [அ-எதிர்மறை. க்ஷர- இயங்குவது.] 2. (யாப்பில.) அசை. (ஆப். ச) 3. அழியாதது, அழியாவஸ்து. (ஆப். ச)[அ-எதிர்மறை. க்ஷர-அழிவுள்ளது.]4. ஆகாயம். (வென். உ.) 5. உயிரெழுத்து. (உ-ம்.) "அக்கரங்கடோறுஞ் சென்றிடுமகரம்போல" (சி. சி. உ:உ; வென். உ.) 6. எழுத்து. (உ-ம்.) "அக்கரமொன்றினுக்கொன்றுடசப்பணம்" (சிவதரு. கோபுர. உசக; ஆப். ச.) 7. எழுதப்பட்டவாசகம். (ஆப். ச.) 8 ஓம் என்னும் மந்திரம். (வென். உ) 9. சலம்.(ஆப். ச.) 10. சொல். (ஆப். ச) 11. நித்தியாநந்தம்.(ஆப். ச.) 12. நோய்வகையிலொன்று. (உவின். ச.) 13. பிரமம். (ஆப். ச.) 14. மந்திரலிபி. (உ-ம்.) "அஞ்சக்கரமெனுங்கோடாலிகொண்டு" (பட்டினத்சடி. சகூ.) 15. மாமரம். (கா. வைத்.) 16. வெள்ளெருக்கு. (கா. வைத்.)

அக்கரவர்த்தநம்—இருபதுவகைச் சித்திரகவிகளுள் ஒன்று; அஃது: ஓரெழுத்தான் ஒரு மொழியாய்ப் பொருளபயந்து, பின் ஓரெழுத்தேற்றப் பிறிதொருமொழியாய்ப் பொருள் பயந்து, அவ்வாறு முறையானே யேற்ற ஏற்ற வேறு வேறு மொழியாய்ப் பொருள் பயந்துவரப் பாடுவது. (உ-ம்.) "உலைவிலெழுத்தடைவே யோரொன்றாய்ச்சேர்க்கத்- தலையலைபொன்றாமரையென்றாம்" [இச்செய்யுட்டொடையிலே ககரம், மகர ஒற்றை அணைந்து தலையெனப்பொருளபடும் "கம்" என்பதன்மேல்நகாரம் ஏற்ற "நகம்" என்றாய் மலையெனப் பொருள் பயந்து, ககாரம ஏற்றக் "கநகம்" என்றாய்ப் பொன்னெனப்பொருள் பயந்து, கோ என்பதை ஏற்றக் "கோகநகம்" என்றாய்த் தாமரை யெனப் பொருள்பயந்து வருதல் காண்க.(பிவி. ஏ. உரை; இலக்கணவிள. சுகo-ம் உரையும்.)[அக்ஷரவர்த்தந; அக்ஷர-எழுத்து. வர்த்தந-வளர்த்தல்.]

அக்கரவிலக்கணம்—1. எழுத்தியல்பு. (மா) 2. கலைஞானம் அறுபத்துநான்கனுள் ஒன்று; அஃது: எழுத்திலக்கணத்தைக் கூறுவது. (மா)

அக்கரன்—1. ஈச்சுரர் மூவரில் ஒருவனாகிய அந்தரியாமி. (த. நி. போ. சoக. ம் பக்.) 2. கூடஸ்தன். (கைவல். உப. அரும்பதவிளக்கம்.) 4. விஷ்ணு. (ஆப். ச.) 5. பிரமம். (ஆப். ச.)[அக்ஷர: அ -எதிர்மறை. க்ஷர: -அழிவுடையோன்.]

அக்கரா—1. அழியாதது. (உவில். ச.) [அக்ஷரா:அ-எதிர்மறை. க்ஷரா-அழிவுடையது. உவில். ச.) 2. விசாரமடையாதது. (உவில். ச.) [க்ஷரா-விகாரம்.]

அக்கராகாரம்—ஒருவகைப் பூண்டு. (உவின். ச.)

அக்கராரம்பம்-எழுத்துப்பயிலத்தொடங்குதல். (உவின். ச.) (உ-ம்.) "அக்கராரம்பம்பண்ணுமிடத்து" (விநாந. ஸமந்தர்வி. சகூ. உரை) [அக்கர-எழுத்து. ஆரம்பம்-தொடக்கம்.]

அக்கரை—அப்பாறகரை. (உ-ம்.) "அளக்கரக்கரைகாண்பான்" (கந்தரந். சo.)

அக்கவடம்—உருத்திராட்சமாலை. (உ-ம்.) "நீறணிந்தக்கவடம்பூண்டு" (மச்சபு. கடவுள். சஉ.) [அக்ஷ - உருத்திராட்சம். வடம் – மாலை. உவில். எடு.]

அக்கவாடம்—1. சூது விளையாடும் இடம். (உவில். ச.) 2. மற்போர்க்களம். (உவில். ச.) [அக்ஷவாட: அக்ஷ-சூதாடுகருவி, மற்போர். வாடம்—அடைப்பு.]

அக்களித்தல்—மாமகிழ்தல். (உவின். ச) [அகம்-மாம். களித்தல்-மகிழ்தல். அகக்களி என்பதிற் ககர உயிர்மெய் கெட்டு அக்களியென்றாய்த் தொழிற்பெயர்விகுதிபெற்றது.]

அக்களிப்பு—மாமகிழ்ச்சி. (மா.) [அக்களிப்பு என்பதிற் ககரவுயிர்மெய் கெட்டது.]

அக்கறை—கவனம், காரியம், தொடர்பு. (உவின். ச.) (தெலுங்கு.)

அக்கன்—இராவணன் மக்களுளொருவன். (இராமா. ஊர்தேடு. கசச.) 2. உருத்திராக்கமுடையவன். (உ-ம். "அக்கர்" பார்.) 3. கண்ணுடையவன். (உ-ம். "அக்கர்" பார்) 4. கருடன். (ஆப். ச.) 5. பிறவிக்குருடன். (ஆப். ச.) [அக்ஷ:] 6. நாய். (சூ. நிகண். ரு: உரு) [அக்கு—எலும்பு.]

அக்கா—தாய். (சப்த) 2. தமக்கை. (உ-ம்.) "வடிபரலை யருந்தென வென்னக்காவடி வேண்டாமென்றோதினல்" (தனிப்பாடல். கடிகை முத்துப்புலவர்.)

அக்காக்கிரம்—1. பண்டியச்சு. 2. பண்டியின் முற்பக்கம். [அக்ஷாக்ர: அக்ஷ-பண்டி. அக்ர-சிரேட்டம், முன்.

அக்காத்தான்—தான்றிமரம். (மலை. க.)

அக்காதேவி—மூதேவி. (உவின்.நு.) [அக்கா—மூத்தவள். தேவி-தெய்வப் பெண்.]

அக்காரக்கனிநச்சுமனார் —கடைச்சங்கப் புலவர் நாற்பத்தொன்பதின்மருள் ஒருவர். (வள்ளுவமாலை. சசு. கவிமுகம்.)

அக்காரடலை— சர்க்கரை சேர்த்தடப்பட்டசோறு. (உ-ம்.) "ஆம்பாலக்காரடலையண்பனீருறமிர்தம்." (சிந்தா.குணமா. எஅ.) [அக்காரம்– சர்க்கரை. அடலை– அடப்பட்டது. "அக்காரம்" என்பதில் "அம்" கெட்டு நின்றது.]

அக்காரம்—1. கரும்பு. (கா. வைத்.) 2. கரும்புக்கட்டி. (கா.வைத்.) 3. சருக்கரை. (உ-ம்.) "அக்காரமன்னாரவர்க்கு." (நாலடி. பொதுமக. ச.) 4. சீலை. (பிங்க.) 5. மாமரம். (கா. வைத்.)

அக்காள்—தமக்கை. (உவின். நு.) ["அக்கா" என்னும் வடமொழி, பெண்பாலைக் கருதும் ளவ்விகுதி பெற்றுவந்தது.]

அக்காளன்—வகப்புல்லு. (கா. வைத்.)

அக்கி— 1. அக்கினிக்கரப்பன். (கா. வைத்.) 2. அக்கிபுறப்பட்டவன். (கா. வைத்.) 3. அக்கினிதேவன். (உ-ம்.) "அக்கியுங்கரமிழந்தஞ்சினைஞ்சனன்." (சிவதரு. சொகமரண. ருக.) 4. ஆனைக்கரப்பனோய். (உவின். நு.) 5. உட்டணம். (உவின். நு.) 6. ஒருபூச்சி. (உவின். நு.) [அக்நி என்னும் வடமொழியில் நவ்வொற்றுக்கெட்டு மெய்யிரட்டித்து வந்தது.] 7. கண். (சப்தஸ.) [அக்ஷி.]

அக்கிக்கல்—ஓர் இரத்தினம். (மா.)

அக்கிசூலி—கந்தசுவாமி. (அபிதாந.) [அக்கி–அக்கினி. சூலி–கருப்பன்.]

அக்கிதாரை—கண்மணி. (உவில். ச.) [அக்ஷிதாரா: அக்ஷி–கண். தாரா–நட்சத்திரம்.]

அக்கிநாயி—1. அக்கினிதேவன் மனைவியாகிய சுவாகா. (ஆப். நு.) 2. திரேதாயுகம். (ஆப். நு.) [அக்நாயீ.]

அக்கிநி—1. அக்கினிதேவன். (உ-ம்.) "அக்கினிபுராணம்." 2. இரவிலே யேழாவதாகவும் பகலிலே பதினொராவதாகவும் நிகழும் முகூர்த்தம். (விதான. குண. எஅ-ம் உரையும்.) 3. உதராக்கினி. (உவில்.சு.) (உ-ம்.) "அக்கினிமாந்தியம்". 4. ஓமாக்கினி. (உவில்.சு.) (உ-ம்.) "அக்கினிதாரணம்" 5. செங்கொடிவேலி. (உவில். சு.) 6. நவச்சாரம். (உவின். நு.) 7. நெருப்பு. (உவில். சு.) (உ-ம்.) "ஈசனக்கினிமேனிகுளிர்ப்புற." (உபதேச. சிவத. சஉஉ.) 8. பித்தம். (உவில்.சு.) 9. பொன். (உவில். சு.) 10. மூத்திரம். (உவின். நு.) 11. மூலாக்கினி. (உவின்-நு.) 12. வெடியுப்பு. (உவின். நு.) [அக்நி.]

அக்கிநிக்கட்டு—அக்கினிதம்பனம். (உவின். நு.) [அக்கினி–நெருப்பு. கட்டு–தம்பனம்.]

அக்கிநிக்கண்ணன்—1. அக்கினிக்கண்ணையுடையவன். 2. சிவன். (அபிதாந.) [அக்கினிக்கண்ணையுடையவன் என்றபடி.] 3. பயங்கர ரூபன். (உவின். நு.)

அக்கிநிக்குமாரம்—குளிர் மந்தம் முதலிய நோய்க்குக் கொடுக்கப்படும் ஒருமருந்து. (கா. வைத்.)

அக்கிநிக்குமரன்—ஒருவகைமாத்திரை. (செ.)

அக்கிநிகண்டம்—1. நாற்பத்துமுக்கோண சக்கரத்திலே யெண்கோணமும், இரண்டு பத்துக் கோணமும், பதினான்கு கோணமும் ஆகிய கண்டம். (சௌந். கக. உரை.) 2. மூலஞ் சுவாதிட்டானம் என்னும் இரண் டாதாரங்களின் இடம் ஆகிய கண்டம். (சௌந். கச. உரை.)

அக்கிநிகணம்—1. தீப்பொறி. (ஆப். நு.) 2. நோய்விளைக்குமென்று நூன்முதற் செய்யுளின் முதற்சீராக வருதல் விலக்கப்பட்ட நிரைநேர்நிரை யாகிய மூவசைச்சீர். [இதனைப் பாட்டியலார் "தீக்கணம்" என்பர்.] (உவின். நு. இலக்கண விள. அ00-ம் உரையும்.) [கணம்– பொறி. ஆப். உ0௧; கண –சீர். ஆப். உ௭௧.]

அக்கிநிகர்ப்பம்—அக்கினிகருப்பம். (ஆப். நு.)

அக்கிநிகர்ப்பை— 1. சாமைப்பயிர். (ஆப். நு.) 2. பூமி. (ஆப். நு.) [அக்நிகர்ப்பா: கர்ப்பா– உட்கொண்டது.]

அக்கிநிகருப்பம்—1. அக்கினியைத் தன்னுட்கொண்ட வஸ்து, தீக் கடைகோல். (ஆப். நு.) 2. சூரியகாந்தக்கல். (ஆப். நு.) [அக்நிகர்ப்ப: கர்ப்ப– உட்கொண்டது.]

அக்கிநிகருப்பன்—கந்தசுவாமி. (செ.) [அக்நிகர்ப: கர்ப–கர்ப்பத்திற்பிறந்தவன்.]

அக்கிநிகலை—(சரசாத்திரம்) நாசியிலிருந்துவருஞ் சுவாசம். (உவின்.நு.) [கலை–கூறு. ஆப். உ௬௯.]

அக்கிநிகாதலன் — திட்டத்துய்மான் என்னும் ஓர் இராசகுமாரன். (சி.) [காதலன்-மகன்.]

அக்கிநிகாரியம்—1. ஓமாக்கினி வளர்த்தல். (உவில். சு.) 2. ஓமாக்கினிவளர்த்துச் செய்யப்படுங் கிரியை. (சி.) [அக்நிகார்ய: கார்ய-தொழில்.]

அக்கிநிகிரியை—1. தகிக்கப்படும் பிரேதத்திற்செய்யுங்கிரியை. (ஆப். நு.) 2. நெருப்பினாற்சுடுதல். (ஆப். நு.) [அக்நிக்ரியா: க்ரியா-செயல்.]

அக்கிநிகீடம்—கீடவகையுள் ஒன்று; [அஃது இருபத்துநான்கு பேதம். அவை: கௌடிந்யம், கண்டபவம், லாதரி, பத்திரவிருக்ஷிகம், சிநாதுகம், பிரமணிகம, விடபப்பிரமணம், பாகியகி, பிச்சிலம, கும்பி, வர்ச்சகீடம், அருமேதகம், டுனடுபம், பதுமகீடம், மகரம், சதபாதி, பஞ்சாவம், பாந்தமச்சம், சூட்சுமதண்டம், அதிகர்த்தபி, கீடக்கிரமம், சராஷி, சேதபி, சிலேஷ்மகம் என்பன. இவற்றின் விஷத்தினால் கடிவாயில் இரத்தங் கம்மி யிருப்பைப்பூ, பேரீச்சங்காய் இவைகளைப் போலக் கொப்புளம் எழும்புதலும் எரிச்சலும் பேதியும் உண்டாகுமென்பர். சீவரட். ௩௪க.]

அக்கிநிகுண்டம்—ஓமாக்கினி வளர்க்குங் கிடங்கு. (ஆப். நு.) [அக்நிகுண்டம்: குண்டம்–கிடங்கு.]

அக்கிநிகுமாரன்—கந்தசுவாமி. (ஆப். நு.) [அக்கினியிற் பிறந்தவன் ஆதலால். அக்நிகுமார: குமார–மகன்.]

அக்கினிகுமாரி—திரௌபதி யென்னும் பெண். (செ.) [அக்கினியிற் பிறந்தவளாதலால். அக்நிகுமாரி: குமாரி - மகள்.] (ஆப். உகூக.)

அக்கினிகேது—புகை. (ஆப்தி. ரு.) [அக்நிகேது: கேது—குறி.]

அக்கினிகோணம் — தென்கிழ்த்திசை. (சப்தஸ்.) [அத்திசைக் கக்கினி தெய்வமென்பது பற்றிவந்த பெயர். அக்நிகோண: கோணம் - மூலை.]

அக்கினிகோத்திரம்—1. நித்தியாக்கினி வளர்த்தல். (உவில். எ.) 2. நெய். (உவில். எ.) 3. நெருப்பு. (உவில். எ.) [அக்நிஹொத்ர:. ஹொத்ர—யாகம், யாகப் பொருள்.]

அக்கினிகோத்திரி—1. நித்திய ஓமாக்கினி வளர்ப்போன். (வென். ச.) 2. யாகாக்கினி வளர்த்திருப்போன். (வென். ச.) [அக்நிஹொத்ரிந்; ஹொத்ரி—யாகஞ்செய்பவன்.]

அக்கினிகோத்திரிவிபூதி— யாகச்சாம்பர். (வி.ணி.) [அக்நிஹொத்ர்விபூதி: விபூதி-சாம்பல். உவில். அ௦௦.]

அக்கினிச்சிவம் — குப்பைமேனி. (மலைய.)

அக்கினிச்சுவத்தர் — அக்கினிச்சுவாத்தர். (உ-ம்.) "உரைத்திடுமெக்கினிச்சுவத்தரெனுந்தேவர் பிதிர்க்களுனீளுலப்பில்சீர்த்தி-நிரைத்தவெருகிடதரெனுமாறுடர்தம்பிதிர்க்களும்." (கூர்மபு. பி.ரு.கு. கங.)

அக்கினிச்சுவாத்தர்— பிதிர்தேவதைகளில் ஒருவகுப்பார்—தேவபிதிரர். (உவில். எ.) [அக்நிஷ்வாத்த:. ஸ்வ—சொந்தம். ஆத்த—எடுத்த. நெருப்பிலே கொடுக்கப்பட்டவைகளைத் தமக்குச் சொந்தமாக எடுத்துக்கொண்டவரென்பது பொருள்.]

அக்கினிச்சுவாலை—1. அக்கினிக்கொழுந்து. (உவில். கூ.) 2. ஒருபூண்டு; இது சாயக்காரருக் குபயோகமுள்ள சிவந்த மலர்களைப் பூக்கும். (உவில். கூ.) [அக்நிஜ்வாலா:. ஜ்வாலா—கொழுந்து.]

அக்கினிச்சேர்வை—காரச்சீலை. (உவின். ரு.) [சேர்வை—சேர்க்கப்பட்டது.]

அக்கினிசகன்—வாயு. (ஆப். கூ.) [அக்நிஸக: ஸக—நண்பன்.]

அக்கினிசகாயன்—வாயு. (ஆப். கூ.) [அக்நிஸஹாய: ஸஹாய—துணைச்செய்வோன்.]

அக்கினிசந்மன்—கந்தசுவாமி. (ஆப். ரு.) [அக்நிஜந்ம: ஜந்ம-பிறந்தவன்.]

அக்கினிசயநம்—ஓமாக்கினி வளர்த்தல். (ஆப். ரு.) [அக்நிசயந; சயந—கூட்டுதல்.]

அக்கினிசன்—கந்தசுவாமி. (அபிதாந.) [அக்நிஜ:-ஜ-பிறந்தவன்.]

அக்கினிசாந்தி—அக்கினி தேவனால் வரும் இடையூற்றை நிவிர்த்தியாக்கற் பொருட்டு மந்திரம் நூற்றெட்டுருச் செபித்து நெய் முதலியவைகளைக் கொண்டு செய்யுஞ் சாந்தி. (உவின். ரு.) [அக்நிஶாந்தி: ஶாந்தி-நிவிர்த்தி.]

அக்கினிசாலம்—1. ஒருபூண்டு. (உவில். கூ.) 2. நெருப்பினாற்செய்யுஞ் சாலவித்தை. (உவின். ரு.) [அக்நிஜால.]

அக்கினிசாவர்ணி— பதினான்கு மநுக்களில் ஒருவன். (த. நி. போ. கூ௦.) [அக்நிஸாவர்ணி.]

அக்கினிசிகம்—1. அம்பு. (உவில். எ.) 2. கார்த்திகைப்பூண்டு. (உவில். எ.) 3. மஞ்சள். (உவில். எ.) 4. வாணம். (உவில். எ.) 5. விளக்கு. (உவில். எ.) [அக்நிஶிக: ஶிக-கொழுந்து.]

அக்கினிசிலேட்டுமரோகம்— சிலேட்டுமரோகத்திலே யொருவகை; அது, சர்வாங்கத்திலுமாவது கால் கை கண் மூக் கென்னும் உறுப்புக்களிலாவ தெரிச்சல், இருமல், கோழை, தாகம், கைகால்களிற் சீதளம், அதிசதிபநம் ஆகிய குணங்களைச்செய்வது. (சீவரட். கக௫.) [அக்நிஶ்லேஷ்மரோகம்.]

அக்கினிசேகரம்—1. குங்குமமரம். (சப்தஸ்.) 2. குசும்பமரம். (சப்தஸ்.) 3. மஞ்சட்பூண்டு. (சப்தஸ்.) [அக்நிஶேகர: ஶேகரம்-நுனி.]

அக்கினிட்டுது—ஒரு நாளிலே முடிக்கப்படும் ஒரு யாகம். (வென். ச.) [அக்நிஷ்டுத்: ஷ்டு-பலிசெய்தல்.]

அக்கினிட்டோமம்— அக்கினிதேவனுக்கு வசந்தகாலத்திலே, யைந்துநாட்களிற் செய்யப்படும் ஒருயாகம். இது சோதிட்டோமயாகத்தின் முதலாம் பாகம். (வென். ச.) (உ-ம்.) "அக்கினிட்டோமமாற்றியபயன்களை யடைவர்." (மச்சபு. தடாக. உசு.) [அக்நிஷ்டோம: ஸ்தோம—நைவேத்தியம்.]

அக்கினித்தம்பநம்— நெருப்பினைச் சுடாது தடுத்தல். [அக்நிஸ்தம்பநம்: ஸ்தம்பநம் - தடுத்தல். ஆப். கூசுஉ.]

அக்கினித்தம்பனை— அக்கினித்தம்பநம். (உ-ம்.) "அக்கினித்தம்பனைவல்லவனே." (சி. சி. ௬௦; கூ.)

அக்கினித்தம்பம்—1. அக்கினித்தூண். (உவின். ரு.) 2. அறுபத்துநான்கு கலைஞானங்களுள் ஒன்று; அஃது, அக்கினியின் சுடுஞ்சத்தியைத் தடுக்கும் உபாயத்தைச் சொல்வது. (உவின். ரு.) [அக்நிஸ்தம்பம்: ஸ்தம்பம்-தூண், தடுத்தல். ஆப். கசுக.]

அக்கினித்தம்பன்—சிவன். (உவின். ரு.) [அக்நிஸ்தம்ப: ஸ்தம்ப-தூணானவன்.]

அக்கினித்திரயம்—மூவகையக்கினி; அவை: சாருகபத்தியம், தக்கிணம், ஆகவனீயம் என்பன. (பெரியபு. திலைவா. ரு. உரை. ஆப். கூ.) [அக்நித்ரய: த்ரய - மூன்று.]

அக்கினித்திராவகம்—ஒருவகைச் செய்நீர்; அது வெடியுப்புத் திராவகம் போல்வது. (உவின். ரு.) [அக்நித்ராவக: த்ராவக-செய்நீர்.]

அக்கினித்திரேதை—அக்கினித் திரயம். (உவில். கூ.) [அக்நித்ரேதா: த்ரேதா—மூன்று.]

அக்கினித்தூண்—தீப்பிழம்பு. (மா.)

அக்கினிதம்—1. அக்கினியூட்டல். (உவில். கூ.) 2. சிரணிக்கச் செய்யும் ஒரு மருந்து. (உவில். கூ.) 3. வஞ்சகமாய் வீடெரித்தல். (உவில். கூ.) [அக்நித்ம: த-கொடுத்தல்.]

அக்கினிதன்—1. தீயிட்டவன். (உவில். கூ.) 2. வீடெரிக்கிறதுரோகி. (உவில். கூ.) [அக்நித: த:—கொடுப்பவன்.]

அக்கிநிதாரணம்—ஓமாக்கினி வளர்த்தல். (ஆப். சூ.) [அக்நியாரண: யாரணம் - வைத்துக்கோள்ளல்.]

அக்கிநிதிவ்வியம்—அக்கினி பரீட்சை. அஃதொன்பது வகைத் திவ்வியங்களுள் ஒன்று. (மிருதிசர். சூரு.) [திவ்யம் - தேவ சமபந்தமுடையது. ஆப். கூஅஅ.]

அக்கிநிதேவன்—1. அக்கினிதேவதை. (உவில். சூ.) இவனுக்கு மூன்று கால்களும் ஏழுநாக்களும் இரண்டு முகங்களும் உண்டெனபர். (அபிதாக.) 2. அக்கினியைவணங்குவோன். (உவில். சூ.) [அக்நிதைவ: தைவ:—தேவன், தேவனுக்குடையவன்.]

அக்கிநிநட்சத்திரம் / அக்கிநிநாள்—1. அக்கினி யாளுகை செய்யுங்காலம்; அது, பரணிநாலாங்காலிலும் கார்த்திகையிலும் உரோகிணிமுதலாங்காலிலுஞ் சூரியன்நிற்கும் காலம். [இந்நாட்களில் வீடுகட்டத் தொடங்கினால் அவ்வீடு நெருப்புக்கிரையாமென்பர். சரசோ. மனை. கூ.] 2. கார்த்திகைநாள். [எரிபிறந்தநாள்.]

அக்கிநிப்பிரத்தரம்—1. சூரியகாந்தம். (உவில். சூ.) 2. தீத்தட்டிக்கல். (உவில். சூ) [அக்நிப்ரஸ்தர: ப்ரஸ்தரம்—கல்.]

அக்கிநிப்பிரவேசநம் / அக்கிநிப்பிரவேசம்—அக்கினியிற் புகுதல். (ஆப். சூ.) [அக்நிப்ரவேஶ: ப்ரவேஶ-புகுதல்.]

அக்கிநிப்பிழம்பு—அக்கினித் திரட்சி. (உவின். ரு.) [பிழம்பு-திரட்சி.]

அக்கிநிபஞ்சகம்—ஆகவநீயம், தட்சிணாக்கினி, காருகபத்தியம் எனக்கிழக்குத் தெற்கு மேற்குத்திசைகளிலே வேதியில் வளர்க்கப்படும் அக்கினிகளும், சப்பியம் ஆவசத்தியம் என வளர்க்கப்படும் அக்கினிகளுமாகிய ஐந்தக்கினிகள். (ஆப். சஎஅ.) (அபிதா. பக். ரு.) 2. தவஞ்செய்வோர் நிற்கும் ஐந்தக்கினி. அவை நான்கு திசையிலும் நான்கு தீக்குண்டமும், மேலே சூரியனும், ("பஞ்சாக்கினி பார்.") 3. பஞ்சகதோஷங்களுள் ஒன்று. அது பிரதானமாகக் கிருகாரம்ப கிருகப்பிரவேசங்களுக் காகாதென நீக்கப்பட்டகாலம். (உ—ம்.) "பஞ்சகம் பார்க்கவேண்டிய காலம்வரையில் ஞாயிறு முதலாக அன்றையவாரம்வரையும், பிரதமை முதலாக அன்றைய திதிவரையும், அச்சுவினிமுதல் அன்றைய நட்சத்திரம் வரையும், மேஷமுதல் அப்போதுதய லக்கினம்வரையும் எண்ணிக் கண்ட தொகையை யொன்பதிற்கழித்ததின்மிச்சம் கூ, ரு, எ, 0, ஆயின் உத்தமம். க, உ, ச, சூ, அ, ஆயின் நீக்கப்படும். க. மிருத்தியுபஞ்சகம். உ. அக்கினிபஞ்சகம். ச. இராசபஞ்சகம். சூ. சோரபஞ்சகம். அ. ரோக பஞ்சகம்." (வருஷாதிநூல். கூஉ.)

அக்கிநிபதச்சிலந்தி—சிலந்திவகையுள் ஒன்று; அதன்கால்கடோறும் விஷமுண்டென்றுங், கால்பட்ட இடங் கொப்புளிக்குமென்றுஞ்சொல்வர். (சீவரட். பக், கூருச.)

அக்கிநிபம்—பொன். (உவில். சூ.) [அக்நிபு: பு—பிரகாசம். அக்கினிப்பிரகாசமுடையது.]

அக்கிநிபரிச்சதம்—ஓமஞ் செய்தற்கு வேண்டிய உபகரணம். (உவில். சூ.) [அக்நிபரிச்சத: பரிச்சதம் - உபகரணம்.]

அக்கிநிபரீட்சை—அக்கினியைக் கொண்டு பரீட்சித்தல்; அது, நெருப்பிலே நடப்பித்தாவது காய்ச்சிய இரும்பை யல்லது நெய்யைப் பரிசிப்பித்தாவது சோதித்தல். இப்பரீட்சையிலே தாக்கமுற்றவனை யசுத்தனென்றும், தாக்கமுறாதவனைச் சுத்தனென்றும் முன்னோர் சிலர்கொண்டனர். (உவில். சூ.) [அக்நிபரீக்ஷா: பரீக்ஷா-சோதனை.]

அக்கிநிபு—கந்தசுவாமி. (உ—ம்.) "ஆர்த்தெழுமனலிற்றோன்றலாலக்கினிபுவேயென்றும்." (மச்சபு. குமார. கசரு.) (அக்நிபூ.)

அக்கிநிபுத்து—ஒரு முனிவர். (வேதாரணியபு. வரன். கரு.)

அக்கிநிபுராணம்—பதினெண் புராணங்களுள் ஒன்று; அது பிரமகைவர்த்தம்; இப்புராணத்திலே விட்டுணுவுடைய அவதாரம், சிருட்டிக்கிரமம், விட்டுணுபூசை முதலியன சொல்லப்படும். அஃதெண்ணாயிரங்கிரந்தமுடையது. (வாச.) [அக்நிபுராண: புராணம்-பழங்கதை.]

அக்கிநிபூ—1. கந்தசுவாமி. (உவில். சூ.) 2. நீர். (உவில். சூ.) [அக்நிபூ: பூ—பிறந்தவன், பிறந்தது.]

அக்கிநிபூதவாதிமதம்—அக்கினிதானே மும்மூர்த்தி வடிவமாய் நின்று முத்தொழிலுஞ் செய்யும் என்று கொள்ளும் ஒருவனுடைய மதம். (தநி. போ. உசுக.)

அக்கிநிபோஷணம்—வைசுவதேவபூசை. (மா.)

அக்கிநிமண்டலம்—1. அக்கினியினாலே யதிட்டிக்கப்படும்மண்டலம். (உவின். அசஉ.) 2. சரீரத்திலேயிருதிவிக்கும் அப்புவுக்கு மூரியதானம்; அது, மூலாதாரமுதல் நாபி பரியந்த முள்ள இடம். (உவின். அசஉ.)

அக்கிநிமணி—சூரியகாந்தக்கல். (உவில். எ.) [அக்நிமணி: மணி-கல்.]

அக்கிநிமந்தச்சுரம்—சுரநோய் வகைகளுள் ஒன்று. (சீவரட். பக். சஎ.) [அக்கினி- உதராக்கினி. மந்தம்-மென்மை. சுரம்-காய்ச்சல்.]

அக்கிநிமந்தநம்—தேய்த்தலால், கோல்களினின் றக்கினியைப்பிறப்பித்தல். (ஆப் சூ.) [அக்நிமந்தநம்: மந்தநம்-கடைதல். உவில். சூசூச.]

அக்கிநிமந்தம்—1. கோங்கமரம். (சப்தஸ்.) [அக்நிமந்த: மந்த- கடைதல். கடையப்படும்பொழுதிதன் கோல்களிலே நெருப்புப் பிறத்தல்பற்றிவந்தபெயர்.] 2. சமியாமை. (உவின். ரு.) [மந்த - சேட்டையின்மை.] 3. தேய்த்தலாற்கோல்களினின் றக்கினியைப்பிறப்பித்தல். (ஆப். சூ.) [மந்த-கடைதல்]

அக்கிநிமாந்தம்—ஒருநோய். (செ.)

அக்கிநிமாந்தியம்—அசீரணம், சமியாமை. (கா. வைத்.) (ஆப். சூ.) [அக்நிமாந்த்யம்: அக்நி-நெருப்பு. மாந்த்யம்—மந்தத்தன்மை.]

அக்கிநிமாருதி—அகத்தியமுனிவர். (வாச) [இவர், ஒருகற்பத்திலே அக்கினிக்கும் வாயுவுக்கும் புத்திரராகப் பிறந்ததனால் வந்தபெயரென்பர். வேறு சிலர் வாதாபியைக், குரங்குபோல உண்டு சமிக்கச் செய்ததுபற்

றிவந்த பெயர் என்பர். [அக்நிமாருதி: அக்நி—அக்கிநிதேவன், உதராக்கிநி. மாருதி—காற்றின்மகன், அநுமான்.]

அக்கிநிமுகச்சிலந்தி—ஒருவகைச் சிலந்திப்பூச்சி. அஃது தடிக்க நோவையும் நெருப்பாற்சுட்டகொப்புளம்போன்ற கொப்புளத்தையும் உண்டாக்கும் விஷமுடையது. (சீவரட். பக். ௩௫௩.)

அக்கிநிமுகம்—சேங்கொட்டை. (உவில். எ.)

அக்கிநிமுகன்—சூரபன்மன்புதல்வருள் ஒருவன். [கந்தபு. புதல். ௧௬. இதில் "அங்கிமாமுகன்" எனக்குறிக்கப்பட்டவன்.] 2. தேவன். (உவில். எ.) [முக-வாய். அவியை, அக்கிநியை வாயாகக்கொண் டநுபவித்தலால் வந்த பெயர்] 3. பிராமணன். (சப்தஸ்.) [சாபரூபமான அக்கிநி முகத்தில் இருத்தலால் வந்தபெயர். அக்நிமுக.]

அக்கிநிமூலை—தென்கீழ்த்திசை. (உ-ம்.) "அக்கிநிமூலைதிங்கள்." (மச்சபு. சாந்தி. அ.) [மூலை—கோணம். தெலுங்கு]

அக்கிநியத்திரம்—அக்கிநிமயமான அம்பு. (ஆப். ரு.) [அக்ந்யஸ்த்ர: அஸ்த்ர—அம்பு.]

அக்கிநியாகாரம்—அக்கிநி யிருக்குஞ் சாலை. (ஆப். ரு.) [அக்ந்யாகார: ஆகாரம்—வீடு.]

அக்கிநியாதாநம்—ஓமாக்கிநிவளர்த்தல். (ஆப். ரு.) [அக்ந்யாதாந: ஆதாநம்—செய்து முடித்தல்.]

அக்கிநியாலயம்—1. ஓமகுண்டம். (வாச.) [அக்ந்யாலய: ஆலயம்-வீடு.]

அக்கிநியுற்பாதம்—1. வால்வெள்ளி. (ஆப். ரு.) 2. விண்வீழ்கொள்ளி. (ஆப். ரு.) 3. விழுகின்ற நட்சத்திரம். (ஆப். ரு.) [அக்ந்யுத்பாத: உத்பாத-தீமையை யறிவிக்குங்குறி.]

அக்கிநியேழுநா—அக்கிநி தேவனுக்குள்ள ஏழுநாக்குக்கள்; அவை; காளி, கராளி, மநோசவை, சுலோகிதை, சுதூம்பரவருணை, புலிங்கிநி, விசுவரூபி என்பன. (முண்டகோ.)

அக்கிநியேழுநாவண்ணம்—அக்கிநி தேவனுக் குள்ள ஏழு நாக்குக்களின் நிறம். அவை; அருணம், காகம், இரத்தம், கிருஷ்ணம், சுப்பிரம், வெகுவர்ணம், அதியிரத்தம் என்பன. (வி. ணி. ௧௫௦.)

அக்கிநியோகம்—அக்கிநிக் குரியயோகம். அது; ஞாயிற்றுக் கிழமையிலே சத்தமிதுவாதசிகளும், திங்களிலே சட்டியேகாதசிகளும், செவ்வாயிலே பஞ்சமிசப்தமிகளும், புதனிலே துதியையட்டமிகளும், வியாழனிலே சட்டிநவமிகளும், வெள்ளியிலே யட்டமிதசமிகளும், சநியிலே நவமியேகாதசிகளும் வரும் நாள். (சரசோ. குணகுண. ரு௦.)

அக்கிநிரசம்—1. அக்கிநியின்வீரம். (ஆப். சு.) 2. இந்திரகோபம். (ஆப். சு.) 3. பொன். (ஆப். சு.) [அக்நிரஜஸ்: ரஜஸ்—அணு.]

அக்கிநிரோகணிரோகம்—ஒருவகையுரோகம்; அது சுரத்தினன் மெலிந்தவருக்குப் பித்தப் பிரதாநமான வாதசிலேட்டுமங்களினாலே யக்குளுக்குள்ளே மாமிச கண்டத்தைப் போலக் கட்டிகளையுண்டாக்குமென்றும், அக்கட்டிகள் கட்டையினெருப்புப் போலிருந் துபத்திரவத்தைச் செய்து, ரு, எ, ௧ரு என்னும் நாட்களில் மரணங் கொடுக்குமென்றும், அந்நாள் விலகினுற் சாத்தியமாகுமென் றுஞ் சொல்வர். (சீவரட். பக். ௩௧௧.) [அக்கிநி—நெருப்பு. ரோகணம்—வளர்வு. ரோகம்—நோய்.]

அக்கிநிவருணன்—சூரிய குலத்திலே யிராமனுக்குப் பின்னிருந்த ஓரரசன். (இரகுவம். குலமுறை. ௩௨.)

அக்கிநிவருத்தகம்—உதராக்கிநியைவளர்க்கும் ஒரு மருந்து. (ஆப். சு.) [அக்நிவர்த்தக: அக்நி—உதராக்கிநி. வர்த்தகம்—வளர்ப்பது.]

அக்கிநிவருத்தநம்—1. உதராக்கிநியை வளர்க்கும் ஒருமருந்து. (உவில். எ.) 2. தீவளர்த்தல். (உவில். எ.) [அக்நிவர்த்தந: வர்த்தநம்—வளர்த்தல்.]

அக்கிநிவல்லபம்—குங்குலியம். (உவில். எ.) [அக்நிவல்லப: வல்லப—நட்பு. அக்கிநிசேர்ந் தெழுப்புவ தென்றபடி.]

அக்கிநிவாகம்—1. ஆடு. (வாச.) 2. புகை. (வாச.) [அக்நிவாஹ: வாஹ—வாகநம்.]

அக்கிநிவாது—புகை. (உவில். எ.) அக்நிவாஹ: வாஹ—புயம்.]

அக்கிநிவிசர்ப்பம்—புண்ணின் அழற்சி. (உவில். எ.) [அக்நிவிஸர்ப: விஸர்ப்ப—அழற்சி.]

அக்கிநிவிஷபாகரோகம்—எண்வகை விஷபாகரோகத்துள் ஒன்று; அது வாதபித்தாதிக்கம், தேக மினைத்தல், வீக்கம், கிடை பொருந்தாமை, புரளல், சோழை, இருமல், சர்த்தி, மூர்ச்சை, வாய் நீரூறல், வயிறளைதல், மலசலச்சிக்கல், பக்கநோவு என்னும் இக்குணங்களை யுண்டாக்கும். (சீவரட். பக். ௨௦௨.)

அக்கிநிவீசம்—பொன். (உவில. எ.) [அக்நிவீஜ: அக்நி-நெருப்பு. வீஜ-விதை

அக்கிநிவீரியம்—1. அக்கிநியின்வீரம். (வாச.) 2. பொன். (வாச.) [அக்நிவீர்ய; அக்நி-நெருப்பு. வீர்ய—வீரம்.]

அக்கிநிவேசன்—இக்குவாகுவுக்குத் தம்பியாகிய அரிஷியனுடையவம்மிசத்தில் வந்த தேவதத்தன்மகன் சாதகர்ணமகாஇருஷி. (அபிதாந.)

அக்கிநிவேசியாயநம்—அக்கிநிவேசன்வம்மிசப் பிராமணகுலம். (அபிதாந.)

அக்கினீத்திரன்—நாவலந்தீவை யரசுசெய்தபிரியவிரதனுடைய ஒருமகன் (பிருகேந். அத்துவா. ௩௭. (அக்நீத்ர இவனை அக்கிநிதுருவன் என்றும், (த. நி. போ. பக். ௩௩௦) அங்கிதீரன் என்றும், (கந்தபு. அண்ட. ௧அ.) அங்கிநேத்திரன் என்றும் (சிவதரு. கோபுர. ௬ரு.) சொல்வர்.]

அக்கிபடலம்—கண்ணோய்களுள் ஒன்று. (உவில். ௬.) [அக்ஷிபடல; அக்ஷி-கண் — படல—போர்வை.]

அக்கியம்—பகலிலே பதினன்காவதாக நிகழும் உத்தரமென்னும் முகூர்த்

தம். (விநா. குணு. ௭௯-ம் உரையும்.)

அக்கியாதம் — 1. அறியப்படாமை. (உ-ம்.) "ஓதுமொருவருடமக்கியாதமெனவும் புகன்றே." (நல். பார. சிறப்பு. ௬௫.) 2. மறைவு. (உவில். ௫.) [அவ்யாத: அ-எதிர்மறை. வ்யாத-பிரசித்தம்.]

அக்கியாதி — துர்க்கீர்த்தி, இகழ்ச்சி. (உவில். ௫.) [அவ்யாதி: அ-எதிர்மறை. வ்யாதி-புகழ்.]

அக்கியாநம் — அஞ்ஞாநம். (உவின். ௫. ஆப். ௪௨.) [அஜ்ஞாந: அ-எதிர்மறை. ஜ்ஞாந-அறிவு.]

அக்கியாநி — அஞ்ஞாநி. (உவில். ௧௪. உவின். ௫.) [அஜ்ஞாநிந்: ஜ்ஞாநிந்-அறிவுடையன்.]

அக்கிரகண்ணியன் — முதல்வனாக மதிக்கப்படத்தக்கவன். (உ-ம்.) "மகாவீரர்க்கெல்லாமக்கிரகண்ணியன்." (சி. சி. பாயி. சிவாக்.) [அக்ரகண்ய: அக்ர-முதல். கண்ய:-மதிக்கப்படத்தக்கவன். சப்தஸ்.]

அக்கிரகத்தம் — 1. கைந்நுதி. (உவில். அ.) 2. யானைக்கைந்நுதி. (உவில். அ.) 3. வலக்கை. (உவில். அ.) [அக்ரஹஸ்த: அக்ர-நுனி, பிரதாநம். ஹஸ்த-கை.]

அக்கிரகம் — முன்னர்ப்போதல். (வென். ச.) [அக்ரக: அக்ர-முன். க-போதல்.]

அக்கிரகரம் — 1. கிரணத்தின் அந்தம். (உவில். அ.) 2. கைந்நுதி. (உவில். அ.) 3. வலக்கை. (உவில். அ.) [அக்ரகர: அக்ர-நுனி, பிரதாநம். கர-கிரணம், கை.]

அக்கிரகன் — 1. சிரேட்டமானவன், முதன்மையுடையவன். (வென். ச.) 2. முன்னுக்குப் போகிறவன். (வென். ச.) [அக்ரக: அக்ர-முன். க:-போகிறவன்.]

அக்கிரகாரம் — 1. தலைமையான இடம். (உவில். அ.) 2. பிராமணனுக்குச் சீவநத்திற்காகக் கொடுக்கப்பட்ட நிலம், அல்லது கிராமம். (உவில். அ.) [அக்ரஹார: அக்ர-தலைமை. ஹாரம்-எடுக்கப்படுவது.]

அக்கிரச்சா — அக்கிரச்சியை. (உவில். அ.) [அக்ரஜ்யா.]

அக்கிரச்சியை — கிரகங் கிழக்குமேற்குவீதியகறலில் வருஞ்சா. (சா. பார்) [அக்ரஜ்யா.]

அக்கிரசங்கை — 1. கணைக்காலின்மேற்பாகம். (வாச.) [அக்ர ஜங்கா.] 2. முதன்மரியாதை. (உவின். ௫.) [அக்ர-மேல், முதல். ஜங்கா-கணைக்கால். ஸங்க்யா-எண்ணப்படுகை. உவில். ௯௦௭]

அக்கிரசந்தாநீ — இயமபஞ்சிகை; இது பிராணிகளுடைய நன்மை தீமைகள் எழுதப்படும் ஏடு. (உவில். அ.) [அக்ரஸந்தாநீ: அக்ர-முன். ஸந்தாநீ-தொடுக்கப்பட்டது. உவில். ௯௧௫.]

அக்கிரசந்மன் — 1. பிரமா. (உவில். அ.) 2. பிராமணன். (உவில். அ.) 3. மூத்தசகோதரன். (உவில். அ.) [அக்ரஜந்: அக்ர- முதல். ஜந்ம- பிறந்தவன்.]

அக்கிரசம்பாவனை — முதன்மரியாதை. (மா.) [அக்ரஸம்பாவநா: அக்ர-முதல். ஸம்பாவநா- மதிக்கப்படுகை. ஆப். ௧௬அ.]

அக்கிரசர்மம் — நுனித்தோல். (உவின். ௫.) [அக்ர-நுனி; சர்மந்-தோல். உவில். ௯௯௯.]

அக்கிரசாரதை — முன்னுக்குப்போதல். (வென். ச.) [அக்ரஸரதா: அக்ர- முன். ஸரதா-போதல்.]

அக்கிரசரம் — முன்போதல். (உவில். அ.) [அக்ரஸர: ஸர-போதல்.]

அக்கிரசருமம் — நுனித் தோல். [அக்ர-சர்மந்.]

அக்கிரசன் — 1. பிராமணன். (உவில். அ.) 2. மூத்தசகோதரன். (உவில். அ.) [அக்ரஜ: அக்ர-முதல். ஜ:-பிறந்தவன்.]

அக்கிரசாதகன் — 1. பிராமணன். (உவில். அ.) 2. முன்பிறந்தோன். (உவில்-அ.) [அக்ரஜாதக: அக்ர முதல். ஜாதக-பிறந்தோன்.]

அக்கிரசாதி — 1. பிராமணன். (ஆப். ௬.) 2. முன்பிறந்தவன். (ஆப். ௬.) [அக்ரஜாதி: ஜாதி-பிறந்தவன்.]

அக்கிரசை — முன்பிறந்தவள். (வி.ணி.) [அக்ரஜா: ஜா-பிறந்தவள்.]

அக்கிரணீ — தலைவன். (வென். ச.) [அக்ரணீ: நீ- நடத்துகிறவன். ர-னோக்கி நகாரம் ணகாரமாயிற்று.]

அக்கிரதாம்பூலம் — முதற் கொடுக்குந் தாம்பூலம். (செ.)

அக்கிரநிருபணம் — முன்னுற நியமஞ்செய்தல். (உவில். அ.) [அக்ரநிரூபண: நிரூபணம்-நியமித்தல்.]

அக்கிரபாகம் — 1. சிரேட்டபாகம். (ஆப். ௬.) 2. நுனிப்பாகம். (ஆப். ௬.) 3. மிஞ்சியபாகம். (ஆப். ௬.) [அக்ரபாக: அக்ர- பிரதாநம், நுனி. பாக-பங்கு.]

அக்கிரபாணி — 1. கைந்நுனி. (உவில் அ.) 2. வலக்கை. (உவில். அ.) [அக்ரபாணி: அக்ர-நுனி, பிரதாநம். பாணி-கை.]

அக்கிரபூசனை — அக்கிரபூசை. (மா.) (உ-ம். "அக்ரபூசனை" பார்.)

அக்கிரபூசை — 1-மிகமேலான மதிப்பு. (ஆப். ௬.) 2. முதற்பூசை. (வாச.) [அக்ரபூஜா: பூஜா-மதிப்பு.]

அக்கிரபூமி — 1. இலக்குக் குறிக்கப்பட்ட தாநம். (ஆப். ௬.) 2. பெறநோக்கிய பொருள். (ஆப். ௬.) [அக்ரபூமி: அக்ர-இலக்கு. பூமி- இடம்.]

அக்கிரம்-1. அதிகம், மிகுதி. (ஆப். ௬.) 2. அருகு. (ஆப். ௬.) (உ-ம்.) "அக்கிரேவணம்." [இப் பொருளில் வரும்போது, ரவ்வொற்றுக் கெட்டுக் கவ்வொற்றிரட்டித்து "அக்கம்" எனவும்வழங்கும்.] 3. இலக்கு. (ஆப். ௬.) (உ-ம்) "அக்கிரபூமி." 4. உச்சி. (ஆப். ௬.) (உ-ம்.) "பர்வதாக்கிரம்" 5. கிரகங் கிழக்குமேற்குவீதியகறல். (உவில். அ.) 6. கூர். (ஆப். ௬.) 7. சிரேட்டம். (ஆப். ௬.) (உ-ம்.) "அக்கிராசநம்." 8. திரள். (உவில். அ.) 9. தொடக்கம். (ஆப். ௬.) (உ-ம்.)

"அக்கிராயணம்." 10. நுனி. (ஆப். சு.) (உ-ம்.) "முசலாக்கிரம்." "அங்கிலங் குருப்பைக்கொண்டக்கிரங்கிழுக்க தாக." (இரகு. கடி. எகூ.) 11. மிச்சம். (ஆப். சு) (உ-ம்.) "அக்கிரபாகம்." 12. முதலாவது, முந்தியது. (ஆப். சு) (உ-ம்.) "அக்கிரசந்மன்." 13. முற்பாகம். (ஆப். சு.) (உ-ம்.) "அக்கிரபாதம்." 14. மேற்பாகம். (ஆப். சு.) (உ-ம்.) "அக்கிரசங்கை."

அக்கிரமம்—1. ஒழுங்கின்மை. (ஆப். ரூ.) 2. கொடுஞ்செயல். (உ-ம்.) "அக்கிரமத்தாற்குற்ற மடித்துத்தீர்த்தச்சம்பண்ணி." (சி. சி. உ: சஙு.) ரூ. மரியாதையின்மை. (ஆப். ரூ.) [அக்ரமம்: அ-எதிர்மறை. க்ரமம் - ஒழுங்கு. "கிரமம்" என்பதனுற் போந்தபொருள் எல்லாவற்றிற்கும் மாறுய் பொருட்கண்வரும்.]

அக்கிரமாமிசம்—இரத்தாசயம், இரத்தாசயத்தின் மாமிசம். (உவில். அ.) [அக்ரமாம்ஸ: அக்ர-பிரதானம். மாம்ஸம்-தசை.]

அக்கிரமி—கொடியவன். (சி.)

அக்கிரவருணம்—உயர்ந்தசாதி. (செ.) [அக்ரவர்ண: அக்ர- முதல். வர்ணம்-சாதி.]

அக்கிரன் — முதல்வன், முந்தினவன். (ஆப். சு.) [அக்ர:]

அக்கிராகரம்—அக்கிரகாரம். (உவின். ரு.) [அக்ர-முதல். ஆகரம்- கூட்டம். ஆப். கக்ச.]

அக்கிராகாரம்—தோஷகாரத் திரவியங்களுள் ஒன்று; அது, வாயில் அடக்கினுல் வாய்நீர் ஊறச்செய்யும் ஒருவகைப் பதார்த்தம். (உ-ம்.) "அக்கிராகாரமதன்பேருரைத்தக்கால் —உக்கிராகாரத்தோடமோடுங்காண் —முக்கியமாய்— கொண்டாற்சலமூறுங் கொம்பனையாய் தாகசுரங்—கண்டாற் பயந்தோடுங்காண்." (பதார்த்தகுண. ஙஎச.)

அக்கிராகியம்—1. எடுக்கத்தகாதது, எற்றுக்கொள்ளப்படத்தகாதது. (உவில். அ.) 2. கிரகிக்கப்படாதது. (உ-ம்.) "அக்கிராகியமானதேசோருபமாம்." (சி. சி. பாயிரம். சிவாக்.) 3. சம்மதி பெறாதது. (உவில். அ.) [அக்ராஹ்ய: அ— எதிர்மறை. க்ராஹ்ய- கிரகிக்கத்தக்கது.]

அக்கிராந்தம் —1. கடக்கப்படாதது. (உவில். ரு.) 2. சேம்பு. (மா.) 3. வெல்லப்படாதது. (உவில். ரூ.) [அக்ராந்த: அ- எதிர்மறை. க்ராந்த-கடக்கத்தக்கது.]

அக்கிராரம்—1. தலைமையான இடம். (செ.) 2. பிராமணனுக்குச் சீவனத்திற்காகக் கொடுக்கப்பட்டவிளைநிலம். (ஆப். எ.) [அக்ராஹாரம்.]

அக்கிரியம்—1. முதலிலுண்டானது. (பிரமோப.) 2. சிறந்தது. (பிரமோப.) [அக்ரீய.]

அக்கிரியன்—1. சிரேட்டன். (உவில். அ.) 2. தமையன். (உவில். அ.) [அக்ரிய: அக்ர — முதல். இய—விகுதி.] 3. முயற்சியற்றவன், மந்தன். (உவில். ரூ.) [அக்ரிய: அ- எதிர்மறை. க்ரிய— தொழிலுடையவன்.]

அக்கிருதன்—யோகாட்டகரிலொருவன். (வி. ணி.)

அக்கிரேவணம்— காட்டின் அருகு. (ஆப். எ.) [அக்ரேவணம்: அக்ரே- அருகில். வநம்-காடு.]

அக்கிலீபதை—ஆண்டன்மை. (வென். உருஉ.) [அக்லீபதா: அ—எதிர்மறை. க்லீபதா-அலித்தன்மை.]

அக்கிலு—நெருஞ்சில். (கா. வைத்.)

அக்கு —1. அகில். (கா. வைத்.) 2. உகாமரத்துக்காய். (உவின். ரு.) 3. உருத்திராக்கம். (உ-ம்.) "அக்கையணிந்தவர்." (திருவானைக்கா. கோச்செங். ச) 4. எட்டிமரம். (கா. வைத்.) 5. எருத்துத்திமில். (பிங். ருஂருகூ.) 6. எலும்பு. (உ-ம்.) "கக்கக்கை." (திருப்புகழ். சஙுக.) 7. ஒரு சாரியை. (உ-ம்.) "ஆனேயக்கேயிக்கே சாரியைமொழியே." (தொல். எழுத். கககூ.) [இச்சாரியை, உம் ரூம் எழுத்துக்கள் கெட்டன் றிவாரா தென்பர். மேற்படி. கஉஅ.] உ-ம். "தமிழநாகன்." "தாழக்கோல்." இவைகளிலே "அக்கு" என்பதன்று, "அ" என்பதேசாரியை என்பர் நன்னூலார். (நன். மெய். உஉ.) 8. கண். (உ-ம்.) "அக்குப்பீழை." (திருப்புகழ். ஒளகூ.) 9. சங்கு. (கா. வைத்.) 10. சங்குமணி. (உ-ம்.) "அக்கே தரவல்லார்மதிகெட." (கம்பர. கூ.) 11. பலகறை. (உவின். ரு.)

அக்குமணி—சங்குமணி. (கா. வைத்.)

அக்குமாலை — உருத்திராக்கத்தினுற் கோக்கப்பட்டமாலை. (உ-ம்.) "அக்குமாலைகொடங் கையிலெண்ணுவார்." (தேவாரம். பஞ்சாட். சம்ப.)

அக்குரன்—இடையெழுவள்ளல்களில் ஒருவன். (உவின். ரு.)

அக்குரு—விரல். (உவில். அ.) [அக்ரு.]

அக்குருக்கி—கயரோகம். (உவின். ரு.)

அக்குருரன்—கிருட்டிணனுடைய தகப்பனுடன்பிறந்த ஒரு யாதவன். (உவில். ரூ.)

அக்குரோணி— உகஅ௭0 யானையும், கூ௬௬௧0 குதிரையும், உகஅ௭0 தேரும், க0௯௩௫0 காலாட்களுங் கொண்ட ஒருசேனைத்தொகை. (உ-ம்) "இருபத்தோராயிரத்தெண்ணூற்றெழுபதியற்றேர்களியானையஃதே,பொருவற்றபரிகளறுபத்தையாயிரத்தறுநூற்றொருபான்போர்செய், திருமிக்கோரிலக்கமுடனென்பதினுயிரத்து முந்நூற்றைம்பான்சேர, நிருமித்த வகைநான்குமக்குரோணியென்றொருபேர்நிசழுமன்றே." (நல். பார. சிறப்பு. உரு.) ["அக்ஷௌஹிணி" என்னும் வடமொழி "அக்குரோணி" எனமரீஇயிற்று. அக்ஷ—தேர். ஊஹிணி—கூட்டம். உவில். ரு.]

அக்குரோதம் — குரோதமின்மை. (உவில். ரூ.) [அக்ரோத: அ—எதிர்மறை. க்ரோத—கோபம்.]

அக்குல்லி—1. உக்காரி. (கா. வைத்.) 2. சிற்றுண்டி. (கா. வைத்.) 3. பிட்டு. (கா. வைத்.)

அக்குள் — கக்கம். (உவின். சு.) ["அஃகு" என்பது, "அக்கு" என மருவிற்று.] (உ. ம்.) "அக்குளுக்குண்மாமிச கண்டத்தைப்போற் கட்டிகளை யுண்டாக்கும்." (சீவரட். ௯௬௫.)

அக்குளுத்து — அக்குளுக் காட்டுதல். (உ-ம்) "அக்குளுத்துப்புல்லலு மாற்றேன்." (கலித்தொகை. கூச.)

அக்கை — 1. தமக்கை. (உவின் கூ.) 2. தாய். (உவில். கூ.) [அக்கா.]

அக்கோ — ஓர் அதிசய இரக்கச்சொல். (உவின். கூ.)

அக்கோகிணி — அக்குரோணி. (உவின். கூ.) [அக்ஷ-ஊஹிணி.]

அக்கோடகம் — கடுக்காய். (கா. வைத்.) [அக்ஷோடக.]

அக்கோடம் — அக்கோடகம். (உவில். ரு.) [அக்ஷோடு:]

அக்கோணி — அக்குரோணி. (உவின். கூ.) ["அக்ஷௌஹிணி" என்பதன் மரூஉ.]

அக்கோபம் — 1. அசையாநிலை. (உவில். ரு.) 2. யானைகட்டுந் தூண். (உவில். ரு.) [அக்ஷோப: அ—எதிர்மறை. க்ஷோப-அசைவு.]

அக்கோலம் — 1. தேற்றாங்கொட்டை. (கா. வைத்.) 2. தேற்றாமரம். (உவின். கூ.)

அக்கௌகிணி — அக்குரோணி. (உவில். ரு.) [அக்ஷௌஹிணி: அக்ஷ-தேர். ஊஹிணி-கூட்டம்.]

அக்ரபூசனை — முதற்பூசை, முதன்மரியாதை. (உ-ம்) "ஆர்கொலோ வக்ரபூசனைக்குரியார்." (பாரத. இராய. கக௨.)

அகக்கடவுள் — 1. ஆன்மா. (சி.) 2. ஆன்மாவின் உள்ளிருந் ததனைச் சேட்டிப்பிக்குங் கடவுள். (சி.) 3. மனம். (சி.) [அகம்-உள். கடவுள்—தெய்வம், தெய்வம்போல்வது.]

அகக்கண் — ஞானக்கண்ணாகிய அகத்துக்கண். (சி.) (உ-ம்) "அகத்துக்கண் கொண்டறிவதேயாநந்தம்."

அகக்கணு — உள்ளிருக்குங்கணு. (சி.)

அகக்கரணம் — அந்தக்கரணம், உட்கருவி. (உ-ம்) "சமமகக்கரணதண்டம்." (கைவ. தத். கூ.) [அகம்-உள். கரணம்-கருவி,]

அகக்காழ் — 1. உள்வைரம். (மா.) (உ-ம் "அகக்காழன" பார்.) 2. உள்வைரமுடைய மரம். (மா.) 3. வச்சிரக்கல். (மா) [அகம்: காழ்—வைரம்.]

அகக்காழன — உள்வைரமுடைய மரங்கள். அவை; இருப்பை, புளிமுதலியன. (வரலாறு,) "அகக்காழனவே மரமென மொழிப." (தொல். பொரு. கூசுக.)

அகக்கூத்து — அகச்சுவையாகிய குணத்தின்வழி நிகழுங்கூத்து; அது தேசி, மார்க்கம் என இரு வகைப்படும். (உ-ம்) "குணத்தின் வழியதகக்கூத்தெனப்படும்." (குண நூல். சிலப். அரங்கே. க௨. அடியார்க்கு நல்லார் உரையும் அரும்பதவுரையும்.)

அகக்கூத்துக்கை — அகக்கூத்திற் காட்டப்படுங் கை; அஃது, எழிற்கைதொழிற்கையென இருவகையினது; பொருட்கை கூட்டிமூவகையின் தென்பாருமுளர். [அதுபின்வருஞ் சூத்திரத்தினாற்பெறப்படும். "அவைதாம், எழிற்கையழகே தொழிற்கை தொழிலே பொருட்கைக வியின் பொருளாகும்மே."] (சிலப். அரங்கே. ௪௮. உரை. அடியார்.)

அகங்கரம் — அகங்காரம். (உ-ம்) "அகங்கரத்தால்வரும்." (ஞானவா. வைராக். ௩௪) [அஹம்-நான். கரம்—செய்வல்.]

அகங்கரித்தல் — 1. கர்வங் கொள்ளல். (உ-ம்.) "அன்புடையதம்முனடிவீழ்ந்தகங்கரித்தான்." (பாரத. கன ம்போ. க௬௨.) 2. மனம்வெறுத்தல்.

அகங்கரிப்பு — 1. அகங்கரித்தல். 2. மனவெறுப்பு. (செ.)

அகங்களித்தல் — மனமகிழ்தல். (உ-ம்) "அப்பார்சடையானடித்தொண்டரகங்களிப்ப." (காஞ்சிபு. தழுவ. ௨௫)

[அகம்-மனம். களித்தல்-மகிழ்தல்.]

அகங்களிப்பு — மனமகிழ்வு. (உவின். க.)

அகங்காரக்கிரந்தி — சமுசாரபந்தம். (நாநா. வா. ரு.) [அகங்காரம்—நானென்கை. கிரந்தி—கட்டு.]

அகங்காரசைதந்யவாதி — "அகங்காரவியாபாரமாய் இருக்கும் பிராணாதி வாயுக்களை யான்மா என்னும் ஞானத்தினாலே யதனையறிந் தத்தத்துவம் அடைதலே மோக்ஷம்" என்னு மதத்தன். (சி. சி. உ: எ௯. உரை. மறை.) [அகங்காரம்—அகங்காரதத்துவம்: சைதந்யம் — சேதநமுடையது. வாதி-சொல்லுகிறவன்.]

அகங்காரத்திரயம் — 1. முக்கிய அகங்காரம், அமுக்கிய அகங்காரம், முக்கியாமுக்கிய அகங்காரம் எனமூவகைப்பட்ட அகங்காரங்கள். (உவின். க.) 2. தைசத அகங்காரம், வைகாரிக அகங்காரம், பூதாதியகங்காரம் என மூவகைப் பட்ட அகங்காரங்கள். [இது பின்வரும் மேற்கோளாற் பெறப்படும். "தானும் (அகங்காரம்) மூன்றதாய்நிகழுமென்பர்பாங்கார்பூதாதிவைகாரிகந்தைசதந்தானென்றே." (சி. சி. உ: ருக.) [த்ரய-மூன்று.]

அகங்காரம் — அந்தக்கரணம்நான்கனுள் ஒன்று; அது புத்தியினால் நிச்சயித்துக் கிரகிக்கப்பட்ட விடயங்களை நான்செய்தேன் என்று நிச்சயித்தலும், பிராணவாயுவினால் அந்தபாநாதிகளைக் கிரகித்தலும், ஒன்று செய்யுமாறு பிரவர்த்தித்தலும், "யான்" "எனது" என்றபிமானித்தலும் உடையது. (உ-ம்.) "திருவார்மனமே புத்தியொடுசித்தமகங்காரமுங்கூட,மருவுமந்தக்கரண நான்காம்." (நல். பார. கௌசிக. அச.) "ஆனதறுவதனிலநிலனையுமியக்கியாங்கார நீங்காதவகந்தைக்குவித்தா, யானலது பிறரொருவரென்னை யொப்பாரிப்புவியிலில்லையெனுமியல்பினதாயிந்திரியம்புலன்க, டானுகருமளவிலதின்முந்தியுறும்." (சிவப்பிர. உ: உரு.) 2. கர்வம், நானென்றெழும்புகை. (சபதஸ். கூ.) .3(பேரண்டம்.) மநத்துக்கு மேலே பத்துப்பங்குபடர்ந்து தானுவட்டகருக் கிடமாய் உள்ள ஒரு தத்துவம். (த. போ. கூசக.) [அஹங்கார; அஹம்-நான். காரம்— செய்தல்.]

அகங்காரவாதி — மநோமய கோசமே யான்மா என்று வாதிக்கு மதத்தன். (உ-ம்.) "அகங்காரவாதிகள் மநோம

யகோசன் ஆன்மா என்பர்கள்." (சி. சி. ச: உ௬. உரை. மறை.)

அகங்காரான்மஞாநம் —(வைசேடிகம்)அகங்காரதத்துவமேயான்மா எனக் கொள்ளும் ஞாநம். (உ-ம்.) "அகங்காரான்மஞாநோபாயம் உபதேசிக்கும் வைசேடிகனுக் ககங்காரபுவநப் பிராப்திதானே மோட்சம்." (சி.சி. அ: ௪௨. ஞா.) [அகங்காரம்-அசங்காரதத்துவம். ஆன்மா-உயிர். ஞாநம்- அறிவு.]

அகங்காரான்மவாதி—அகங்காரமேயான்மா என்று வாதிக்கும் வைசேடிகன். (உ-ம்.) "அகங்காரான்மவாதியாகிய வைசேடிகனையும்." (சி. சி. ௯: க. ஞா.) [வாதி- பேசுகிறவன். உவில். எஎ௫.]

அகங்காரி—செருக்குடையவன். (உ-ம்) "வண்ணகங்காரிகை மற்றுமென்பேறற்பகர்வாரிலையென் - றெண்ணகங்காரி." (முல்லையந். ௬௨.) [அஹங்காரீ.]

அகங்காழ் — அகக்காழ். (உவின். உ.)

அகங்கிரகத்தியாநம் — தியாநிக்கப்படுஞ் சொருபத்தைத் தனக் கபேதமாகச் சிந்தித்தல். (விசார. ௨௦௭.)

அகங்கிரகோபாசனை— (தெய்வங்களைத்) தான் என்று பாவித்துச் செய்யும் உபாசனை. (உ-ம்.) "தெய்வங்களை யகங்கிரகோபாசனை பண்ணுகிறான்." (சி.சி. அளவை. க௯. சிவாக்.)

அகங்கிருதன் — கர்வ முடையவன். (சப்தஸ.) [அஹங்க்ருத: அஹம்-நான். க்ருத- பண்ணப்பட்ட. தன்னைமேலாக எண்ணுகிறவன் என்றபடி.]

அகங்கிருதி —1. அகவிவகாரம். (உ-ம்.) "அகங்கிருதிநிரங்கிருதியுறுமல்." (வேதா. சூ. க௪அ.) 2. செருக்கு, நானென்கை. (ஆப். ககரு.) [அஹங்க்ருதி: அஹம்-நான். க்ருதி-செயல்.]

அகங்கை—உள்ளங்கை. (உ-ம்.) "அகங்கையினவிர்மதியதனை" (காஞ்சி. திருக். ௪௨௩.) [அகம்-உள்.]

அகச்சத்தாநுவித்தசமாதி— ஆறுசமாதிகளில் ஒன்று; அது: தனித்துவிளங்கிய சச்சிதாநந்தமே யாத்துமா என்னுஞ் சிந்தனையை யகத்தில் அநுசரித்துவருதல். (உ-ம்.) "அசங்கசச்சிதாநந்த சுயம்பிரகாசசுவரூபமே தான் எனச் சிந்திப்பதே யகச்சத்தாநுவித்த சமாதியாம்." (வேதா. சூ. க௫௧.உரை. க௪அ.) [அகம்-உள்.ஸத்தா-உண்மை. அநுவித்தம்-பதிந்தது. ஸமாதி-நன்குசிந்தித்தல்.]

அகச்சத்தாநுவேதம்— அகச்சத்தாநுவித்தசமாதி. (வேதா. சூ. க௫௧. உரை.) [அநுவேதம்-பதிந்தது.]

அகச்சமயம் — உட்சமயம்; சைவம், பாசுபதம், மகாவிரதம், காளாமுகம், வாமம், வைரவம் என்னும் ஆறுஞ் சைவசமயத்துக் குட்சமயங்களாம். (உ-ம்.) "அகச்சமயத்தொளியாய்." (சிவப்பிர. மங்கல. எ.) [சமயம்-மார்க்கம்.] (சிவஞானமுநிவர் பகுப்பின்படி.) பாஷாணவாதசைவம்முதல் சிவாத்துவிதசைவம் ஈறாகிய ஆறும். "பாஷாணவாதசைவர் முதலிய அறுவரும் பொருளுண்மையெல்லாஞ் சித்தாந்தசைவரோ டொப்பக்கொள்ளும் அந்தரங்க வுரிமை யுடையராயினும்,அவ்வப்பொருள்கட்குக் கூறுந் தன்னியல்பு பொதுவியல்பு மாத்திரையின் முரணுதலான் அவர்சமயம் அகச்சமயமென வேறுவைத்தெண்ணப்பட்டன." (சிவஞானபாஷ்யம். ௫-ம் ௬-ம் பக்கம்.)

அகச்சுட்டு—பெயர்ச்சொல்லின் அகத்து மூதனிலையுறுப்பாய் அமைந்துநிற்குஞ்சுட்டெழுத்து. (உவின். க. நன். எழுத். கக. உரை. (உ-ம்.)"அவன்."

அகச்சுவை—1. நாடகரசத் தொன்று. (சி.) 2. முக்குணம். (சி.)

அகசியக்கூத்து—பகடிக்கூத்து;அஃது உள்ளதுபோல இல்லாததைக்காட்டும் வெளிவேடம். (ஒழிவி.)

அகசியகாரன்—விதூஷகன். (உவின். க.)

அகசியம்—1. பகடிக்கூத்து. (உ-ம்.) "ஒருபாலினேழிசையு முணர்த்தும் பாடலொருபாலினகசியங்கள்." (நல். பார. இராசசூ. கஎ.) 2. பரிகாசம். (உவின். க.) ௩. வேடிக்கை.(மா) [ஹாஸ்ய: ஆப். ௬௬௬.]

அகசு—1. இராப்பகல்கொண்ட திநம் (ஆப். க௪௨.) 2. பகற்பொழுது. (ஆப். க௪௨.) [அஹந்.]

அகசை—1. மரத்திற்பிறந்தது. (உவில். ௫.) 2. மலையிற்பிறந்தது. (உவில் ௫.) 3. மலையிற்பிறந்தவள், பார்வதி. (உவில். ௫) [அஜா: அக-மலை. ஜா-பிறந்தது, பிறந்தவள்.]

அகஞ்சுகி—"நான்சுகியெனப்" பொருள்படும் ஒரு வடமொழி வாக்கியம். (சி. சி. எ: க. சிவாக்.) [அஹஞ்ஸுகீ: அஹம்- நான். ஸுகீ -சுக முடையவன்.]

அகஞாநாமி — "நான் அறிவேன்"எனப்பொருள்படும் ஒருவடமொழிவாக்கியம். (வி. ணி.) [அஹம்ஜாநாமி: ஜாநாமி-அறிவேன்.]

அகட்டுத்தே—விநாயகக்கடவுள். (செ) [அகடு-வயிறு. தே-கடவுள்.]

அகடசக்கரம்—உதரபந்தம் என்னும் அணி. (உ-ம்.) "அகடசக்கரவின் மணியாவுறை." (கந்தபு. காப்பு.)[அகடு- உதரம். சக்கரம் - வட்டவடிவம்.]

அகடநம்—1. கேடு. (உவின். க.) 2. செய்யக்கூடாதது. (உவின். க.) [அவடந: அ-எதிர்மறை. வடநம்-செயல். ஆப். ௬௬௬.]

அகடம்—1. அநீதி. (சி.) 2. சித்தியாகாமை. (சி). 3. பொல்லாங்கு. (சி.) [அ-எதிர்மறை. கடம்-நீதி. உவின். க. வடம்-செயல். உவில்.]

அகடவிகடம்—உண்மையை மறைத்து வேறாகத் தோன்றும்படி காட்டுஞ் சாமர்த்தியம். (உவின். க.) [அவட-செய்தற்கரியது. விகடம் - மாறாகத் தோன்றுவது.உவில். எஅ௨]

அகடன்—1. துட்டன். (உவின் க.) 2. நீதியில்லாதவன். (உவின். க.) [அகடு-பொல்லாங்கு. அன்-ஒரு விகுதி.]

அகடிதகடநா — செய்தற் கரியதைச் செய்தல். (உ-ம்.) "அகடிதகடநாசாமர்த்தி."

அகடிதகடநாசமர்த்தன் — செய்தற் கரியதைச் செய்ய வல்லவன். (செ.) [அவடிதம்-செய்தற் கரியது. வடநா-செய்தல். ஸமர்த்த-வல்லவன்.]

அகடிதகடநாசமர்த்தை — செய்தற் கரிய காரியத்தைச் செய்ய வல்லமையுடையவள். (வி. ணி.) [ஸமர்த்தா-வல்லமையுடையவள். உவில். கூஉக]

அகடிதகடநாசாமர்த்தி — அகடிதகடநாசமர்த்தை. (உ-ம்.) "துளங்ககடிதகடநாசாமர்த்தியாகியுமே" (வேதா. சூ. ருகூ.) [ஸமர்த்ம்-வல்லமை.]

அகடிதகடநாபடீயசி — அகடிதகடநாசமர்த்தை. (உ-ம்.) "அதிருசியமாய் இருக்கிற மாயையிற் றிருசியமாய் இருக்கிற பிரபஞ்சம் அகடிதகடநாபடீயசிமாயா என்றுண்டாவதன்றி" (சி. சி. க:சச. சிவா.) [படீயஸி-வல்லமையுடையவள்.]

அகடிதம் — செய்தற் கரியது. (உ-ம்.) "அகடிதகடநாசாமர்த்தி" (ஆப். கூ௦சு) [அ-எதிர்மறை. வடிதம் - செய்யப்படுவது. உவில். கூஉ௦.]

அகடியம் — அநீதி. (உவின். க.)

அகடு — 1. உள். (உ-ம்.) "வண்டுபொறையுயிர்த்துச்செழுந்தோட்டகட்டினடைகிடக்கும்" (கூர்மபு. தக்கன் வேள். ருஎ.) 2. நடுப்பக்கம். (உ-ம்) "மதியகடுதோய்மாட கூடச்சிகரம" (தாயு. சச்சி. கூ.) 3. பொல்லாங்கு. (உ-ம்.) "அகடுசெய்ய" (உவின். க.) 4. வயிறு. (உ-ம்.) "அகடாரரல்லலுழப்பர்" (வள். கூகூ.)

அகடுரம் — கோணமை. [அமஞ்ரா: அ-எதிர்மறை. மஞ்ர - கோணல். ஆப். உஎஎ.]

அகடூரி — பாம்பு. (செ.) [அகடு-வயிறு. ஊரி-ஊர்வது. வயிற்றாலூர்வது.]

அகண் — அருகு. (செ.) [அஃகுகண் என்பதன் மரூஉப்போலும்.]

அகண்டகம் — முள்ளில்லாதது. (உவில். உ.) [அகண்டக. அ - எதிர்மறை. கண்டகம்-முள்.]

அகண்டச்சுருதி — அகண்டத்தன்மையான பொருளுணர்த்தும் வேதம். (சைவப். கூச.) [அ-எதிர்மறை. கண்டம். ஸ்ருதி-வேதம்.]

அகண்டஞாநம் — பூரணஞாநம். (உ-ம்.) "அகண்டஞாநத் தொலைவில்பரபதமெவர்க்குந்தோன்றுமாறு" (ஞாநவா. சுச. உரு.) [அவண்டம்-பூரணம். ஜ்ஞாநம்-அறிவு.]

அகண்டத்துவம் — தேசத்தினாலும், காலத்தினாலும், பொருளினாலுஞ் சிந்நப்படாதிருக்குந் தன்மை. (வாசுதே. கூக.) [அவண்டம்-சிந்நப்படாதது. த்வம்-தன்மை.]

அகண்டபதம் — 1. அகண்டாகாரமான பிரமபதம். (உ-ம்.) "அழுத்துமலக்கற்பனைநீக்கியகண்ட பதத்திலிருவெனலும்" (ஞாநவா. வேதாள. க) 2. பகாப்பதம். (உ-ம்.) "வடமொழியகண்டபதத்திற்குப் பெயரும் மேற்பிரதமாவிபத்தி என்னும்முதல்வேற்றுமையுருபு முதலிய உருபுபெறுமாறுங் கூறுகின்றது" (பி. வி. எ.) [அவண்டம் - பிரிவுபடாமை. பதம்-நிலை, சொல்.]

அகண்டபரிபூரணம் — எங்கும் நிறைந்திருத்தல். (உ-ம்.) "அகண்டபரிபூரணமாகிவாழி." (உபதேச. சிவசாட். ச௦.) [அவண்டம் -எங்கும். பரிபூரணம்-நிறைந்திருத்தல்.]

அகண்டபூரணம் — எங்கும் நிறைந்திருத்தல். (உ.ம்.) "அகண்ட பூரணமாய் ஞாநச்சோதியாய்நின்றமாயன்" (சி. சி. பர. பாஞ். மதம்.க.) [அவண்டம்-எங்கும். பூரணம்-நிறைவு.]

அகண்டம் — 1. எல்லாம். (உ-ம்.) "அண்டகூடமுமகண்டமுநெக்குவிட்டு" (நல். பாரத. உத்தா. கூஅகூ.) 2. கண்டிக்கப்படாதது; கூறுபாடில்லாதது. (உ-ம்.) "அகளமாய் ஞானமேயாயகண்டமாயமர்ந்ததன்றே" (கோயிற்பு. பதஞ். சுரு.) 3. பூரணம். (உ-ம்.) "அன்றுசடபாவனைநீங்கியகண்டவறிவின்மையைப் பெறலாம்" (ஞாநவா. உபசாந். கூச) [அவண்ட: அ- எதிர்மறை. வண்ட- கூறுபாடு.] 4. மண்விளக்கு. (உவின். ச. வழக்.) [அகல்-தகழி. வண்டம் - உடைவது. அகற்கண்டம் என்பது அகண்டம் என மருவியதுபோலும்.]

அகண்டவடிவம் — அகண்டாகாரசுவரூபம். (உ-ம்.) "அகண்டவடிவப்பரம்பொருளாம்." (ஞாநவா. பிரகலா. கூ)

அகண்டவாக்கியம் — விட்டும் விடாத லக்கணை. (வாசுதே. உகக.)

அகண்டன் — 1. அருகன். (செ.) 2. கடவுள். (செ.) 3. கூறுபடாதவன். (ஞாநவா. புசுண். ரு. உரை.) 4. சிவன். (செ.) 5. பூரணன். (செ.) 6. விட்டுணு. (செ.) [அ-எதிர்மறை. வண்டம். கூறு.]

அகண்டாகண்டன் — பரப்பிரமம். (உவின். க.) [அவண்ட-அவண்ட]

அகண்டாகாரஞாநம் — பூரணஞாநம். (உவின். க.) (உ-ம்.) (அஞ்ஞாநமும்மநோவிருத்தியு மாகிய) "மூடங்களைகளை யொருங் ககலப்பண்ணிப் பண்ணினவிடத்துச் சதோதயமாய் நின்றொளிர்வது சுயஞ்சைதந்நிய மாதலால், அதனை யதுவாசநின் றறிதல் அகண்டாகார ஞாநம் எனப்படுவதாம்" (உபநிட. அ. உரை. சச்சி.) [அவண்டம் - கண்டிக்கப்படாதது. ஆகாரம்-வடிவம். ஞாநம்-அறிவு.]

அகண்டாகாரம் — 1. அகண்டாகாரவிருத்திஞாநம். (உ-ம்.) "ஓதரியவஞ்ஞாநந்தனையறியாவுணர்விதற்கோருறுதிமூலமாதன்மநவிருத்தியவையகற்றியொளிதனையறியு மகண்டாகாரம்" (உபநிட. அ.) 2. எல்லைப்படாத வடிவம். (உ-ம்.) "அகண்டாகாரசிவபோகமெனும் பேரின்பவெள்ளம்." (தாயு. காடு. கூ.)

அகண்டாகாரவிருத்தி — அகண்டாகாரவிருத்திஞாநம். (உ-ம்.) "பிரிவிலகண்டாகாரவிருத்தியிற் சாட்சியையறியாப் பெந்தநீங்கும்" (உபநிட. கஉ)

அகண்டாகாரவிருத்திஞாநம் — சாட்சியா யிருந்த கூடஸ்தரை யறியாதபடி மறைத்திருந்த அஞ்ஞாநத்தை நீக்கும் ஞாநம். (உ-ம்.) "மநோவிருத்திஞாநத்தினு மேலாகப் பிரிவற்று விளங்கும் அகண்டாகாரவிருத்திஞாநத்தினால், கூடஸ்த சைதந்நியத்தை யுணரவொட்டாமல் மறைத்து நிற்கும் பெந்தம் ஆகிய அவித்தையை நீக்க அது நீங்கும்" (உபநிட. கஉ. உரை. சச்சி.)

அகண்டி—ஒருவாச்சியம். (உவின். க)

அகண்டிதம்—1. இடையறுத்தொடர்புடையது. (உ-ம்.) "அகண்டிதோற்சவம்." (ஆப். ச.) 2. கண்டிக்கப்படாதது; கூறு செய்யப்படாதது. (உ-ம்.) "நின்மலமா யகண்டிதமாய்" (தாயு. ஆசை.க. ஆப்.ச.) 3. மறுக்கப்படாதது.(சி)4.முழுதும்(சி)[அவண்டிதம்: அ-எதிர்மறை. வண்டிதம்- கண்டிக்கப்பட்டது, கூறு செய்யப்பட்டது, மறுக்கப்பட்டது. [ஆப். உஎஉ.]

அகண்டிதமூர்த்தி — கண்டிக்கப்படாத வடிவுடையோன். (உ-ம்.) "அகண்டிதமூர்த்தியாகச் சொல்லலாம்" (சி.சி. க: சஉ. ஞா.) [அவண்டிதம்–கண்டிக்கப்படாதது. மூர்த்தி- வடிவுடையவன்.]

அகண்டிதன்—எங்கும் நிறைந்தவன். (உ-ம்.) "அகண்டிதனகம்பன்மூத்தமிழ் மதுரைவாழ்மூதல்வன்." (மதுரை. பதிற். ஏ0.)

அகண்டிதாகாரம்— கண்டிக்கப்படாதவடிவம். (உ-ம்.) "போதபரிபூரண வகண்டிதாகாரமாய்." (தாயு. சிந்மய.ச.) [அவண்டிதம்–கண்டிக்கப்படாதது. ஆகாரம்-வடிவு.]

அகணி—1. உள். (உவின். க.) 2. கடுக்காய். (கா. வைத்.) 3. சுக்கிலப்புரணிநஞ்சு. (கா. வைத்.) 4.தெங்கு பனை முதலியவற்றின் நார், (கா. வைத்.) 5. நஞ்சு. (கா. வைத்.) 6. மருதநிலம். (உ-ம்.) "அகணிநாட்டேன்." (கந்தபு. தெய்வ. கூரு.) 7. வயல். (செ.)

அகணிதபஞ்சாங்கம்—அல கிடாது மகக்கணிதமாய்ச் சொல்லப்படும் பஞ்சாங்கம். (உவின். க.) [அகணிதம்- கணிக்கப்படாதது. பஞ்சாங்கம்—ஐந்துறுப்பு.]

அகணிதபஞ்சாங்கி—அல கிடாது மகக்கணிதமாய்ப் பஞ்சாங்கஞ் சொல்பவன். (செ.)

அகணிதம்—1. கணிக்கப்படாதது.(உவில். ரு.) 2. மகக்கணிதம். (உ-ம்.) "அகணிதபஞ்சாங்கம்"(உவின் க.)[அ கணிதம்: அ-எதிர்மறை. கணிதம்-எண்ணப்பட்டது.]

அகத்தடியாள் — வீட்டில் இருக்கும் அடிமைக்காரி. (உவின். ரு.) [அகம்-வீடு. அத்து-ஒருசாரியை. அடியாள்-அடிமைக்காரி.]

அகத்தன் — 1. இடத்தினன். (உ-ம்) "ஆதவனெழுகிரி யகத்தராக்கினன்" (கந்தபு. சிங்க. ருகூஅ.) 2. கர்த்தா அல்லாதவன். (உ-ம்.) "அகத்தனிற்கத்தன்றன்னிலமைந்ததேதனினிற்பாய்." (ஞானவா. கசன். ச.) [அ- எதிர்மறை : கர்த்ரு–கர்த்தா.]

அகத்தார்—1. இல்வாழ்வார். (உ-ம்) "அகத்தாரேவாழ்வாரென்றண்ணாந்துநோக்கி." (நாலடி. ச; க.) 2. உள்ளிடத்துள்ளார். (செ) 3. சுற்றத்தார். (உவின். ரு.) [அகம்--உள். அத்து-ஒருசாரியை. ஆர்--ஓர்விகுதி.]

அகத்தி—1. அகத்தியமுநிவன். (வென். ரு.) [அகஸ்தி: அகம்--மலை. ஸ்திநிலைப்படுத்தினவன். மலையைப் பூமிக்குள்ளே யடங்கிநிற்கப்பண்ணினவன்.] 2. உள்ளிருக்கிறவன்- (செ) [அகம்--உள்-] 3. ஒருமரம். (உ-ம்) "நல்லகத்திவேரதனை நாடுங்கான்மேகமெனுஞ்--சொல்லகனுந் தாகமறுந்தோகையே-- மெல்ல மெல்ல-மெய்யெரிவுகையெரிவுமேகாத்தினுள்ளெரிவு—மையெரிவும்போமென்றறி" (பதார்த். சஎச.) [அகத்தி, சாழையகத்தியுஞ் சிற்றகத்தியுஞ் செவ்வகத்தியும் முதலாகப் பலதிறப்படும். கா. வைத்.]

அகத்திடல்—1- உட்புகுத்தல். (உ-ம்.) "வாளினையுறையகத்திட்டான்" (கந்தபு. பாநுகோபன்வதை. கருஉ) [அகம்-உள். இடல்--புகுத்தல்]

அகத்திணை—1. உள்ளத்தேநிகழ்கின்ற இன்பமாகிய ஒழுக்கம். அது, கைக்கிளை, குறிஞ்சித்திணை,பாலைத்திணை முல்லைத்திணை, மருதத்திணை, நெய்தற்றிணை, பெருந்திணையென எழுவகைப்படும். (உ-ம்) "திணையாவது ஒழுக்கம். இயல்–இலக்கணம். எனவே யகத்திணையியல் என்றது, இன்பமாகிய ஒழுக்கத்தின் இயல் என்றவாறாயிற்று" (தொல். பொரு. க. உரை. நச்.) [அகம்–உள்: திணை-ஒழுக்கம்.] 2. உரைப்பான் எடுத்த பொருளைக்காட்டற்குதவும் நியாயங்கள் அப்பொருளின் அகத்தேதோன்றும் நிலை. அகத்திணையின் உறுப்புகள்; இயல்பு, வகை, பொது, சிறப்பு, உவமை, புறநிலை, எதிர்நிலை, கருவி, காரியம், காரகம், முன்னவை, பின்னவை எனப் பன்னிரண்டாம். (உ-ம்) "அகத்திணையியல்பேயறைபடும் வகையே, பொதுச் சிறப்புவமை புறநிலை யெதிர்நிலை, கருவி காரியங் காரக முன்னவை, பின்னவையெனவாம் பிரிவீராறே" (தொன்னூல். கரு0.)

அகத்திணைப்புறம் — (உவின். உ.) அகத்திணைகள் ஏழனுள் அகனைந்திணைக்குப் புறமாகிய கைக்கிளையும் பெருந்திணையும். (தொல். பொரு. ருச. உரை. நச்.)

அகத்திணையியல் — இன்பமாகிய ஒழுக்கத்தினதிலக்கணம்.[தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் முதல் இயல் இப்பெயர்த்து.] (திராவிட. சக.)

அகத்தியம்—1. அகத்திய முநிவரால் செய்யப்பட்ட ஓர் இலக்கண நூல். இந்நூலிலே இயல், இசை, நாடகம் என்னு முத்தமிழ் இலக்கணங் களுஞ் சொல்லப்பட்டன. (உவின்.உ) 2. அவசியம். (உ-ம்.) "ஆகையால் திநீக்ஷை யகத்தியம் வேண்டும்." (விசாரசா. சஉ.) 3. சொல்லத்தகாதது. (உவில். உ.) [அகத்யம்: அ- எதிர்மறை. கத்யம்- சொல்லத்தக்கது.]

அகத்தியர்குழம்பு — அகத்தியமுநிவரால் விதிக்கப்பட்ட ஒருமருந்து. இதற்குப் பெருங்காயம், இந்துப்பு, இரசம், வெண்காரம், மனோசிலை. அரிதாரம், நேர்வாளம், ஓமம், கருஞ்சீரகம் என்னுஞ் சம்பாரங்கள் சேர்க்கப்படும். (கா. வைத்.)

அகத்தியவாசம்—பொதியமலை. (சி) [வாசம்--இருக்கும் இடம்.]

அகத்தியன் — ஒரு முநிசிரேட்டன். இவன், அகத்தியமெனப்பெயரிய இலக்கண நூலுக்கும் பிறதமிழ் நூலுக்கு மாசிரியன். பொதியமலை இவன் வாசஸ்தானம். (உ-ம்) "ஆரணங்களுணர்ந்த வகத்தியனுக்கு" (சிவப்பிர. மங்கல. ச.) [விந்தமலையைப் பிலத்திலே புகும்படி செய்..க்

கியகாரணம்பற்றி யகத்தியன் எனப் பெயர் பெற்றனன் என்பர். [அகஸ்த்ய: அகம்—மலை. ஸ்த்யன்-அடக்கியவன்.]

அகத்தியா — 1. சமுத்திரம். (உவின். உ.) 2. சொல்லக்கூடாதது. (உவில். உ.) 3. மிக்க ஆழம். (உவின். உ.) [அகத்யா: அ--எதிர்மறை கத்யா--சொல்லத்தக்கது.]

அகத்தியாச்சிரமம்— அகத்தியான்பள்ளி. (உ--ம்) "அற்றைநாண்முதல அகத்தியாச்சிரமமென்றருட்பேர்--மற்றைப்பதிபெற்றது" (வேதாரணி. மணவா. உஎ) [அகஸ்தி--அகஸ்திய முனிவர். ஆச்ரமம்--முனிவர்வாசம்.]

அகத்தியான்—அகத்தியமுநிவன். (உ-ம்) "அகத்தியான்பள்ளி."

அகத்தியான்பள்ளி-வேதாரணியத்திற்குச் சமீபமாயுள்ள ஒருதலம்.(தேவா. திருச்சே. ச. சம்பந்த.) [அகத்தியான்—அகத்திய முநிவன். பள்ளி-ஆச்சிரமம்.]

அகத்திருசியாநுவித்தம்—ஆறு சமாதிகளில் ஒன்று. அது, மநத்தின்கண் உள்ள இராகத்துவேஷாதி விடயங்களுக்குத் தானேசாட்சியென்று சிந்திப்பது. (வேதா.சூ.கருo. உரை.) [அகவிடயத்தில் அநுசந்தாநம் ஆதலின் இப்பெயர்பெற்றது]

அகத்தினள்—மனைவி (உ-ம்.) "அகத்தினளோய்தனில்வருந்த." [அகம்—வீடு]

அகத்தீசாறுகு — அகத்தியேசாறுகு. அது, பேராறுகு, சிற்றறுகென இருவகைப்படும். (கா. வைத்.)

அகத்தீடு—1. உள்ளிடுதல். 2. கைக்குள்ளேவிட்டணைத்தல், (சி) 3. தழுவுதல். (உவின். உ.) [அகம்; அத்து; ஈடு--இடுதல்]

அகத்துறுப்பு— 1. உள்ளவயவம். (சி.) 2. மநத்திற் குறுப்புப்போல்வதாகிய குணம். (உ--ம்) "யாக்கையகத்துறுப்பன்பிலவர்க்கு" (வள். எக.) [அகம்; அத்து; உறுப்பு-அவயவம்.]

அகத்தை—தாய். (சி) [அகம்; அத்து; ஐ--தெய்வம். "அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வம்" என்பது பற்றி வந்ததுபோலும்.]

அகதங்காரன்—வைத்தியன். (உவில். ரு.) அகதம்—ஆரோக்கியம். காரன்-செய்வோன்]

அகதம்—1. ஆரோக்கியம். (ஆப்.ரு.) (உ—ம்) "அகதங்காரன்" 2. மருந்து. (உவில். ரு.) [அகதம்: அ—எதிர்மறை. கதம்--நோய்.]

அகதன்—நோயிலி. (உவில். ரு.) [அகத: அ-எதிர்மறை. கத-நோயாளி.]

அகதி— 1. நெல்லிமரம். (உவின். ச.) 2.புகலிடம் இல்லாதவன்.(உ-ம்.)"அகதியைமறவனே." (திருப்புகழ்.ருஙஎ) 3. புகலிடம் இன்மை. (ஆப். ரு.) 4. போதற்கிடமின்மை. (ஆப். ரு.) 5. வேலமரம். (கா. வைத்.) 6. வறியவன். (சி.) [அகதி: அ-எதிர்மறை. கதி-வழி, புகலிடம்.]

அகதிகன்—1. ஆதரவற்றவன். (ஆப். ரு.) 2. உதவியற்றவன். (ஆப். ரு.) [அகதிக: அ—எதிர்மறை. கதிக-கதியுடையவன்.]

அகதிதகருமம்—"பசுவைப்பாலைக் கறந்தான்" என்பதிற்போலச் செயப்படுபொருட்பெயரும், அதனோடு சம்பந்தப்பட்டாரும்வேற்றுமையுருபு பெறற்பாலதாய்வரும் பொருட்பெயருந் தனித்தனி "ஐ" யுருபுபெற்றும் "ஆசிரியனை யையுற்றபொருளை வினவினான்" என்பதிற்போலச்செயப்படுபொருட் பெயரும், அச்செயலைக்கருதும் வினைச்சொல்லோ டேழாம் வேற்றுமை யுருபு பெற்றணைதற்பாலதான் பொருட்பெயருந் தனித்தனி "ஐ" யுருபு பெற்றும் இவ்வண்ணம் ஈருருபிணையநிற்குஞ்செயப்படுபொருள். (உ--ம்) "துணைநிலையகதிதந்து கன்மகமென்பர்" [பி. வி. கஉ. உரை.] [அகதிதம்--சொல்லப்படாதது. கருமம் - செயப்படுபொருள்.]

அகதிதம்—சொல்லப்படாதது. [அகதிதம்: அ; கதிதம்—சொல்லப்பட்டது.] (ஆப். உoச.)

அகதீகம் — ஊடு செல்லற் கரியது. (வென். ரு.) [அகதீக: அ; கதீக—செல்லற்கியைந்தது.]

அகதேசி—(மா) உள்ளூரவன்.

அகதேசு—பிணியில்லாதவன். (சி.)

அகந்தை— 1. அகங்காரதத்துவம். (உ--ம்-)"ஏனுறுமகந்தையொன்றிலெய்துமைம்புலனும்" (கந்தபு. அண்ட. உ.) 2. செருக்கு. (உ-ம்.) "ஒழிந்தவானவர்குருதியுமகந்தையுங் கொண்டு" (கந்தபு. கடவுள். எ.) 3, நான் எனதென்னுந்தன்மை. (உ--ம்) ("அகங்காரம்" பார்.)[அஹந்தா: அஹம்--நான். தா—தன்மை.]

அகநகர்—நகருள். (செ.)

அகநகை— இகழ்ச்சிநகை. (சிலப். கொலைக்களக். கசுசு. உரை.) [அகம்--உள். நகை—சிரிப்பு.]

அகநகைத்தல்—இகழ்ச்சிநகை செய்தல், உள்ளே சிரித்தல். (உ-ம்.) "அருந்திறன்மாக்களையகநகைத்துரைத்து" (சிலப். கொலைக்களக். கசுச.) [நகைத்தல்—சிரித்தல்.]

அகநம்—1. பாரமின்மை. (உவின். ரு.) 2. பெருமையின்மை. (உவின்.ரு) [அவநம்: வநம்-பாரம். ஆப். ருoஎ.]

அகநாடகவுரு —அகக்கூத்தின் வண்ணம். அவை கந்தமுதல் பிரபந்தமீறாக இருபத்தெட்டாகும். (சிலப். அரங்கே. கசு. உரை.)

அகநாடகம் — அகக்கூத்து. (சிலப். அரங்கே. கசு. உரை.)

அகநாடு—உள்ளிருக்கும் நாடு.(உ-ம்.) "அகநாடு புக்கவரருப்பம்வெளவி" (பத்து.மதுரை.கசக) [அகம்; நாடு.]

அகநிட்டம்—இளைய தல்லாதது, மூத்தது. (ஆப். உ.) [அகநிஷ்ட: கநிஷ்ட-இளையது.]

அகநிட்டலோகம் — (பௌத்தம்.) பிரமலோகம் இருபதினுள்ளே பதினாறும் லோகம். (மணிமேகலை. பதிக. ரு.)

அகநிட்டன்—1. கநிட்டன் அல்லாதவன். (ஆப். உ.) 2. கௌதம புத்தன். (ஆப். உ.) [அகநிஷ்ட:] அ; கநிஷ்ட—இளையவன்.

அகநிர்ணயம்—ஆசௌச விதிகளைக் கூறும் ஒரு சம்ஸ்கிருதநூல். [அவ நிர்ணய: அவம்–ஆசௌசம். நிர்ண யம்-நியமநம்.]

அகநிருவிகற்பசமாதி—(வேதாந்தம்) ஆறுசமாதிகளுள் ஒன்று; அது: திருசியாநுவேதம், சத்தாநுவேதம் என்னும் இரண்டும் நீங்கி மநங்கரைந்து நிச்சலமாய் நிற்றல். (உ-ம்.) "புகன்றதிருசியஞ்சத்தமெனு மிரண்டுமேகன்றே-யிங்கசைவிறீபமெனப் பந்தமற விருத்தலிலங்குமகநிருவிகற்பசமாதி." (வேதா. சூ. கருச.) [அகம்-உள். நிர்விகல்பம்- பேதமின்மை.-ஸமாதி--நன்குதியாநித்தல்.]

அகநிலை—உள்ளானநிலை. (உ-ம்.) "அகநிலைச் செயப்படு பொருள்." (பி. வி. சஉ. உரை.) 2. ஊர். (உ-ம்.) "அரசுமேம்படீஇயவகநிலை மருங்கின்" (சிலப். இந்திர. கசுக.) 3. கடவுள். (உவின். உ.) [அகம்- உள். நிலை–நிற்றல், நிற்பது, நிற்பவன்.]

அகநிலைக்குறிஞ்சி—ஒருபண். [இது பின்வரும் மேற்கோளாற் பெறப்படும். "தென்னுறுபாலைகுறிஞ்சியேமருதஞ்செவ்வழியென்னுநானிலத்திற்—பின்னகம்புறமேயருகியன் மற்றைப் பெருகியலுறழவெண்ணிரண்டாய்—மன்னியாநாதத்திசைகளில்." கந்தபு. சூரனரசி. உரு.]

அகநிலைச்செயப்படுபொருள்— வினைச்சொல்லின் அகத்தே செயப்படுவதாக நிற்குந்தொழில். அது, "வந்தான்" என்பதில் வருதலைச் செய்தான்" என இவ்வாறாய் இரண்டனுருபு விரிந்து நிற்கப் பெற்ற கருமபாவம். (பி. வி. சஉ. உரை.)

அகநிலைச்செவ்வழி — ஒரு பண். (உ-ம். "அகநிலைக்குறிஞ்சி." பார்.)

அகநிலைப்பசாசக்கை— மூவகைப்பசாசக்கைளிலொன்று. அது, சுட்டுவிரனுனிமிற் பெருவிர லகப்படவளைப்பது. "அவைதாம், சுட்டுவிரனுனிமிற் பெருவிரலகப்பட வொட்டிவளைத்த தகநிலை." (சிலப். அரங்கே. கஅ. உரை.)

அகநிலைப்பாலை — ஒரு பண். (உ-ம்.) ("அகநிலைக்குறிஞ்சி." பார்.)

அகநிலைமருதம்—ஒருபண்; அஃது உழைகுரலாய சோடிப்பாலை. (உ-ம்) "அகநிலை மருதமும்." (சிலப்.வேனில். ௯௯.)

அகப்பக்கம்— 1. அநுமாநிக்கப்படும் பொருள். அகத்து நிகழும் பக்சம் (உவின். உ; எ0சு.) 2. உட்பக்கம். (உவின். உ.)

அகப்பகை— உட்பகை. (உ-ம்) "புறப்பகை கோடியின்மிக்குறினுமஞ்சா—ரகப்பகையொன்றஞ்சிக்காப்ப." (நீதிநெறி. ருரு.) [பகை--விரோதம்.]

அகப்பட்டி —சுருங்கியபட்டி. (உ-ம்.) "அகப்பட்டியாவார்" (வள். க0எச. பரி)

அகப்பட்டியாவார்—அகமாகிய மநம் பட்டிபோன்று வேண்டியபடி நடப்பவர். (உ-ம்) "அகப்பட்டியாவாரைக்காணின்." (வள். க0எச. உரை. சரவண.)

அகப்படல்—அகப்படுதல்.

அகப்படுத்தல்— 1. உட்படுத்தல். (உ-ம்.) "பரதவர் வலையினகப்படுத்தரிய." (பாரத. குரு. க0ரு) 2. பிடித்தல். (உ-ம்) "மற்றவன்பெருமுரண் முருக்கிக் கையகப்படுத்துய்ப்பனுல்." (கந்தபு. வச்சிர. கூ.) [படுத்தல்- ஆக்குதல்.]

அகப்படுதல்—1. உட்படுதல். (சி) 2. உள்ளேசிக்கிக்கொள்ளுதல். (உ-ம்) "ஆசைவெள்ளங் கவர்ந்து கொண்டிழுப்ப வந்தக்கட்டிலே யகப்பட்டேயோ" (தாயு. சிவன்செயல். எ.) 3. கிடைத்தல். (உ-ம்.) "அடியனேற்கிவர்தாமிங்கே யகப்பட்டாரச்சோவென்று" (பெரியபு. கண்ண. க0சு) 4. பிடிக்கப்படுதல் (உ-ம்) "எழிலுடைக்கொணடல்வண்ணனகப்படானெவர்க்குமென்றான்." (பாரத. கிருட். களச.) 5. வசப்படுதல். (உ--ம்) "தநஞ்சயன்கைவாள்வெரீஇ, யகப்படுந்தராதிபன்." (பாரத. வாரணா. அ0.)

அகப்பணி—வீட்டுவேலை. (சி) [அகம்–வீடு. பணி-வேலை]

அகப்பத்தியம் —உட்பத்தியம்; அது மருந்துண்ணும்போது நடக்கவேண்டிய முறை. (உவின். உ; அ0உ.) [பத்ய- இணக்கம். உவில். கூசஎ.]

அகப்பரம்—திண்ணை. (உவின். உ.) வேதிகை. (சி.) [அகம்--வீடு. பரம்--முன்.]

அகப்பற்று—1. நான் என்னும் பற்று அது, தானல்லாத உடம்பைத் தான் எனக் கருதி யதன்கட் செய்யும் பற்று. (உ--ம்.) "போமேயகப்பற்றென்றுந்தீபற" (அவிரோ. கச.) 2. மநவிருப்பு. (சி.) [அஹம்--நான்; அகம்--உள். பற்று-விருப்பு.]

அகப்பா—1. அகழி. (சி.) 2. மதில் (உ-ம்.) "குட்டுவனகப்பாவழியநூறி" (இறைய. உரு. உரை) 3. மதிலுண்மேடை. (பிங்க. ௯0.கூக.)

அகப்பாட்டு— 1. அகநானூறென்னும் நூல். (புறநா. முகவுரை.) [இது அகப்பொருளைக்குறிக்கும் பாட்டென்றபடி.] (சிலப்- ககூ. பக்.) 2. அகப்பொருள்பற்றி வரும் பாட்டு; அகப்பொருளிலக்கணத்திற் கிலக்கியமாகச் செய்யப்படுஞ் செய்யுட்கோவை. (இலக்கணவிள. ருகூஉ. கருத்துரை.)

அகப்பாட்டுவண்ணம்— வண்ணச்செய்யுள்வகை யிருபதனுள் ஒன்று. அது, முடிந்ததெனக்காட்டும் ஈற்றசையே காரத்தானன்றி யொழிந்த உயிரீற்றானுவ தொற்றீற்றானுவது வந் திறுதியடி யிடையடி போன்று நிற்பது. (உ–ம்) "அகப்பாட்டுவண்ணம்முடியாத்தன்மையின் முடித்தன் மேற்றே" (தொல். பொரு. ருகஎ.) [அகம்-உள். பாடு - ஆதல். வண்ணம்–விதம். இறுதி உள்போல வருதல் என்றபடி.]

அகப்பாட்டுறுப்பு —அகப்பொருள்பற்றி வருஞ் செய்யுட்கோவையின் உறுப்புக்கள்: திணை, கைகோள், கூற்று, கேட்போர், இடம், காலம், பயன், முன்னம், மெய்ப்பாடு, எச்சம், பொருள்வகை, துறை எனப் பன்னிரண்டுவகைப்படும். (உ–ம்.) "திணையே கைகோள் கூற்றே கேட்போரிடனே காலம் பயனே முன்னம்

மெய்ப்பாடெச்சம் பொருள்வகை துறையென்- றப்பா லாறிரண் டகப் பாட்டுறுப்பே" (அகப்பொ. ஒழிபி. உ.)

அகப்பாடு—1. அகப்படுதல். (மா.) 2.. உண்ணிகழ்ச்சியானது. (சி) [அகம்—உள். பாடு— ஆதல், ஆவது.]

அகப்பு—ஆழம். (உவின். உ.)

அகப்புறக்கைக்கிளை—ஒருவன் காமக்குறிப்பிற் சமைதியில்லாத இளமைப்பிராயத்தாள் பக்கத்தில், குறிப் பறியாதுசென் றவளோடு மேன் மேலுங் கூறுவது. (உ-ம்.) "காமஞ்சாலாவிளமையோள்வயின்-குறிப் பறிவுறாது குறுகியாங்கவளோ-டிறப்பக் கூறுவதகப்புறக்கைக்கிளை" (அகப்பொ. ஒழிபி. கூஉ.) [அகத்தே நிகழும் இன்பநுகர்ச்சிக் கொவ்வாத ஒருதலைக்காமம் என்றபடி.]

அகப்புறச்சமயம்—சைவ சமயத்துக்குள்ளாகிய வேதசிவாகமங்களைப் பிரமாணமாகக் கொண்டும் அவற்றுக்குவிலக்கான கொள்கையைச் சாதிக்குஞ்சமயம். அது: பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமம், வைரவம், அயிக்கவாதசைவம் என் றாறுவகைப்படும். (சிவஞானபா. ௫.) "பாசுபதர்முதலிய ஐவரும், வேதஞ் சிவாகமம் இரண்டிற்கும்பொதுவகையாற் பிரமாணங் கொள்ளினும் அவ்விரண்டிற்கும் புறமாகிய பாசுபதமுதலிய நூல்கட்குச் சிறப்பு வகையாற் பிரமாணங்கோடலானும், வேதஞ்சிவாகமமிரண்டினும் ஆகாவென விலக்கப்பட்டனவற்றை யாசரித்தலானும், அயிக்கவாதசைவர் வேதஞ் சிவாகமமிரண்டிற்குஞ் சிறப்புவகையாற் பிரமாணங்கொண்டு அவற்றின் விலக்கியன ஒழித்து விதித்தவழி யொழுகுவாராயினும், எல்லாப் பெருங்கேட்டிற்கும் மூலகாரணமாகிய ஆணவமலத்துண்மைகொள்ளாமையானும், அவ்வாறுவகைச்சமயமும் அகப்புறச்சமயமென வேறுவைத்தெண்ணப்பட்டன" (சிவஞானபா. கூ.)

அகப்புறத்திணை—அகனாகிய ஐந்திணைக்கும் புறனாகிய ஒழுக்கம். அவ்வொழுக்கம், கைக்கிளையும் பெருந்திணையுமென இருவகைப்படும். (செ.) அவை: காந்தள், வள்ளி, சுரநடை, முதுபாலை, தாபதம், தபுதாரம், குற்றிசை, குறுங்கலி, இல்லாண்முல்லை, பாசறைமுல்லையெனப் பத்தாகவிரியும். "ஆய்ந்தவகப்புறமையிரண்டுமாயுங்காற்—காந்தள்கவிமடன்மாவேறுதல்-காமமிக்- காய்ந்தவர்வள்ளிவெறியாட்டாம்வாய்ந்த- சுரநடைமாதர்வருத்தஞ்சுரனுண்-முதுபாலைதன்னைமொழியின்மதுமலர்த்தார்— காவலன்வீயக்கவன்றததுவாகும்- பாசறைமுல்லைதலைமகன்பாசறைக்கண்- மாசறுமாதரையுள்ளுதல்-மாசற்ற-வில்லவண்முல்லையுமஃதேயாஞ்சொல்லுங்காற்-குற்றிசைகோல்வளையாளைத்--தலைமகன் -முற்றத்துறந்ததுறவாங்குறுங்கலி—முற்றத் துறந்ததலைமகனை-முன்னின்று -பொற்றொடிமாதர்பழிதூற்றுங்குற்றந்திர்--தாபதங்காதற்றலைமகனை-நீங்கிய- மேவருமாதர்நிலையாகுமேவருஞ்சீர்-நீக்கப்பட்டாளையுவர்ந்தலைமகன்— பார்த்துறாஉந்தன்மைதவாந்தபுதாரம்-பத்துமகத்தின்புறம்" (வீரசோ. பொரு. சஉ. உரை.)

அகப்புறப்பாட்டு—அகப்புறப் பெருந்திணை. (உ-ம்.) "அகப்புறப்பாட்டு மிகப்பலவவையே" (அகப்பொ. ஒழிபி. சகூ.)

அகப்புறப்பெருந்திணை—(அகப்பொருள்.) மடலேறுதல் முதல் தபுதாரநிலையீறாயுள்ள கிளவிகளினால் இயற்பெயர் கூறப்படாத தலைவன் புணர்ச்சிபெறாது வருந்துதலைக்கூறுதல். (உ-ம்.) "மடலேறுதலொடுவிடைதழாலென்று-குற்றிசைதன்னொடுகுறுங்கலியென்று-சுரநடைதன்னொடுமுதுபாலையென்று- தாபதநிலையொடுதபுதாரநிலையெனப்- புகன்றவையியற்பெயர்பொருந்தாவாயி-னகன்றவகப்புறப் பெருந்திணைக்காகும்." (அகப்பொ. ஒழிபி. கூரு.)

அகப்புறப்பொருள்—அகப்புறத்திணை. (செ.)

அகப்புறம்—அகமாகிய ஐந்திணைக்கும் புறமாகிய திணை; அவை: கைக்கிளையும் பெருந்திணையும். (உ-ம்.) "ஏறுகொ ற்றுமுதுபாலைபாசறைமுல்லையியன்றவள்ளி-தோற்றுஞ்சுரநடையில்லவண்முல்லைதொல்காந்தளன்றி -- மாற்றுங்குறுங்கலி தாபதங்குற்றிசைகைக்கிளையோ -- டாற்றம்பெருந்திணையாந்தபுதாரமகப்புறமே. (வீரசோ. பொரு. சஉ.) ["அகமென்பது நடுவினின்ற ஐந்திணையாதலின் கைக்கிளையும் பெருந்திணையும் அவற்றின் புறத்தினிற்றலின் அகப்புறமென்று பெயர்பெறுதலும் பெற்றும்" (தொல். பொரு. ருச. நச்சி.)

அகப்புறமுழவு—எழுவகை முழவுகளுள் ஒன்று; அது: தண்ணுமை, தக்கை, தகுணிச்சம் முதலாகப் பலவகைப்படும். (சிலப். அரங். உஎ. உரை.)

அகப்பூ—இதயகமலம். (உ-ம்.) "பெருவெண்டிங்கண்மாலகப்பூமலர்துபெட்பநகுகின்ற" (சிந்தா. கஙக. கoகூ. [அகம்-மநம். பூ—புட்பம்.]

அகப்பேய்ச்சித்தன்—"அகப்பேய்ச்சித்தர்பாடல்" என்னும் நூல்செய்த ஒருசித்தன். (உவின். உ.) [தன்னூலில் "அகப்பேய்" "அகப்பேய்" என்றுபலதரமும் வரப்பாடினமையால் அகப்பேய்ச்சித்தன் எனப்பட்டான்]

அகப்பை—உணவுப்பதார்த்தமுதலியவைகளைப் பானை முதலியவைகளில் அள்ளுதற்குத்தேங்காயோட்டிலிருந்தாவது, இரும்பு முதலிய லோகங்களிலிருந்தாவது, காம்பை நுழைத்துச் செய்யப்படும் ஒருகருவி. அகப்பைகளமைக்கவேண்டியவிதியாவது: தாழிகளினுயர்வுக்குச் சரியாய் ஒரு கோலை யளந்தெடுத்து, அவ்வளவு கோலை நாலு பங்காகப் பகுத் திரண்டு பங்கை யக்கோலினளவுடன் சேர்த்து அந்த அளவின் பிரகாரம் நீளமுங் கொஞ்சம் முன் வளைவுமுள்ளதாகிய காம்பைப் பாண்டங்களின் வாய்க்குப் பொருந்தியவாறே செய்த தெங்கினதோடுகளிலும் இருப்புக் கிண்ணிகளிலும் நுழைத்துக் கொள்வதென்றும், பானைகளுக்கோவென்றால் அப்பிரகாரமே நாலுபங்காக்கி யந்தக் கோலின்மேலின்னும் மூன்றரைப்பங்கு கூட்டி யந்த அளவின்படிக்குத் தானிட்டுக் கொள்வ

தென்றும், வில்லையொத்த முனைவ
ளைவையுடைய சில அசப்பைகளின்
வாயைக் கூர்மைப்படுத்துவதுந் தவி
ர இப்பிரகாரமேயிரும்பினாலுமமை
த்துக்கொள்வதென்றும் வைத்திய நூ
லிற் சொல்லப்பட்டிருக்கின்றது. அ
கப்பைகள்: தட்டைரூபமாகிய மண்
மடக்குப்போல வட்டமாகவும், பரந்
த பள்ளத்தையுடையதாகவும் இருக்
குந் தகட்டகப்பையும், அந்த உருவ
ம் போன்று சல்லடைக் கண்களைப்
போற் சிறு சிறு சில்லிகளை யுடைய
சில்லியகப்பையும், துளைகள் நிறை
ந்துள்ள இரண்டிருப்புக்கிண்ணங்க
ளைத் தலையிற் பதித்த கொல்லன்கை
க்குறடுபோல விரிக்கவுங் குவிக்கவுந்
தக்கதாயிருக்குந் துளைக்கிட்டியகப்
பையும், கூன்போலக் குழியையுடை
ய குவையகப்பையும், கோழி முட்
டை பதியும் பள்ளமுள்ள முட்டை
யகப்பையும், குறுக்காக நீண்டிருக்
குந் திரியக்ககப்பையும், மரக்கால்
என்னும் அளவைக்கருவிபோல வடி
வமும் நீண்டதாளும் உள்ள சச்சக
ப்பையும் எனப் பலவகைப்படும்.
(உ-ம்.) "பல்லாயதாழிகட்கவ்வுயர்
வைநாற்பகுப்பாப் பகுத்ததன்மேலி
ருபகுப்புப்பானைகளுக்கிந்தச்- சொ
ல்லாய பகுப்பின்மிசைமூவகையாம்
பகுப்புந்தோன்றுமளவாய்த்தாளைத்
துந்திவைத்துத்துறுத்துப்- புல்லாய
மரக்கனியோ டிருப்பினுழைக்கேற்ப
ப் புகறயிலாதிகட்கெல்லாம்புரிமூழி
யிவற்றுள் - வில்லாயவாய்வாய்ச்சி
வாயஞ்சவமைப்பாய் விண்டவற்று
ளுளதுசிலவிகற்பமினியுரைப்பாம்"
(தைல. பாயி. ௩௬.) "உரைத்தலென்
னைமடக்குவட்டத் தகட்டகப்பையந்
தவுருவமொத்துச் சில்லியடைமூழி
கீழ்மேலும்-நிரைத்ததுளைக்கிட்டிகு
வைமுட்டைதிரியக்கு நீடுகச்சங்கசி
தமத்தநேரலகாதிகளாம்- விரைத்தை
லமினிப்புறுநெய்பாறயிர்காய்குடிநீ
ர்வீபிரசாயனம் பாகிவ்விதங்களுக்கு
மிரத-மரைத்தபாடாணகற்கமரவிட
ஞ்சேர் தைலமாதிகட்கு மிருப்பகப்
பையிருப்பையகற்றுவரே." (தைல.
பாயி. ௩௭.)

அகப்பொருட்கைக்கிளை — காமஞ் நு
கர்தற்கமைந்த இளமையையுடைய
தலைமகளிடத் துண்டாகிய குறிப்பி
னைத் தானறியுமளவுந் தலைமகன் அ
வளைச் சாராது நின்று நெஞ்சொடு
சொல்லுதல். (அகப்பொ. அகத்.உஅ,
உக.)

அகப்பொருட்கோவை — பிரபந்தவ
கைகளுள் ஒன்று; அது: முதற்பொ
ருளுங், கருப்பொருளும், உரிப்பொ
ருளும் பொருந்திக் களவொழுக்கத்
தையும், கற்பொழுக்கத்தையுங் கூறு
தலே யெல்லையாகக்கொண்டு திணை
முதலாகத் துறையீறாகச் சொல்லப்
பட்ட அகப்பாட்டுறுப்புப் பன்னிர
ண்டுந்தோன்ற நானூறு கட்டளைக்க
லித்துறையாசப்பாடப்படுவது (உ-ம்)
"முதற்பொருள் கருப்பொருளுரிப்
பொருண் முகந்து களவுகற்பெனும்
வரைவுடைத்தாகி—நலனுறுகலித்து
றைநானூறாக — வாறிரண்டுறப்புமூ
றின்றிவிளங்கச்-கூறுவதகப்பொருட்
கோவையாகும்" (இலக்கணவி. அ௩௬)

அகப்பொருட்டுறை — அகப்பாட்டுறு
ப்புக்கள் பன்னிரண்டனுள் ஒன்று;
அது: உரைப்போருங் கேட்போரு
மின்றிக் கவிக்கூற்றாகச்சொல்லப்படு
வது. "சொல்லியவல்ல வொன்றினு
மவற்றினொ - டொல்லும்வகைதேர்ந்
துணர்த்தியல்வழாம - லுரைப்போ
ர்கேட்போருண்மையின்றி- யுரைக்கு
ங்கவியேயுரைப்பது துறையே" (அக
ப்பொ. ஒழிபி. உ௫.)

அகப்பொருட்பெருந்திணை — அகத்
தின்கண் உள்ள இன்பத்தைச் சில
நாள் நுகர்ந்த தலைவனுந் தலைவியும்
பின் இடைக்காலத்து நுகராமைக்கா
ன இடையூற்றுக் கூற்றுக்களைக் கூ
றுவது. (உ-ம்.) "அகன்றுழிக்கலங்க
லும்புகன்றமடற்கூற்றுங்-குறியிடை
யீடுந்தெளிவிடைவிலக்கலும் - வெறி
கோள்வகையும்விழைந்துடன் போக்
கும்-பூப்பியலுரைத்தலும்பொய்ச்சூ
ளுரையுந்-தீர்ப்பிலூடலும்போக்கழு
ங்கியல்பும் - பாசறைப்புலம்பலும்ப
ருவமாறுபடுதலும் -வன்புறையெதி
ர்ந்துமொழிதலுமன்புறு - மனைவியு
ந்தானும்வருமடைந்தோற்றலும் —
பிறவுமகப்பொருட் பெருந்திணைக்கு
ரிய" (அகப்பொ. ஒழிபி. ௩௪.)

அகப்பொருள் —1. அகப்பொருளில
க்கணத்திற் கிலக்கியமாகவருஞ் செய்
யுட்கோவை. (உ-ம்.) "பயந்தோன்
றன்னையுயங்குநோயறிவோர்—குரவ
ரயலோர்சேரியோரென்றிவர்—முக
த்துரை நிகழா வகப்பொருளகத்
தே" (அகப்பொ. ஒழிபி. ௬.)
2. உட்பொருள். 3. சிற்றின்பம்.
(உ-ம் "5" பார்.) 4. பொருளிலக்கண
வகையிரண்டனுள் ஒன்று; அது,
புணர்ந்துரையுலகியலெனும் இரண்
டுதிறத்தானுங் கைக்கிளையைந்திணை
பெருந்திணை யென்னும் ஏழுவகை
களையும் அமைத் தகப்பாட்டு நூல்
செய்யு முறையைக்கூறுவது. இதில்,
குறிஞ்சி பாலை முல்லை மருதம் நெய்
தல் ஆகிய ஐந்து நிலங்களிலும் வசிப்
பவர்க்குரியபொதுப்பெயர்களுந்தொ
ழிலும் உணவும் அவர்கள் வணங்கு
ந்தெய்வமும் அவ்வந் நிலங்களுக்குரி
ய விலங்கு புள் மரம் இவைகளும்
பிறவுஞ் சொல்லப்படும். (உ-ம்)
"மலர்தலை யுலகத்துப்புலவோராய்ந்
த-வருந்தமிழகப்பொருள் கைக்கிளை
யைந்திணை -பெருந்திணையென வெ
ழு பெற்றித்தாகும்" (அகப்பொ.
அகத்தி. க.) 5. வீட்டிலுள்ள பொ
ருள். (உ-ம்) "அகப்பொருடமக்
கருளுவார்க்கஃது நல்கி—யுகப்புறு
பரத்தையர்கள்." (தணிகை. நக.எஅ)

அகம் —1. அகக்கூத்து. (உ-ம்) அகத்
தெழுசுவையானக மெனபபடுமே"
(சயந்தநூல். சிலப். அரங். கஉ. உ
ரை.) 2. அகங்காரம். (உ-ம்) "அ
கமறுவுணர்வின்றியும்" (ஞானவா.
சுகர். அ.) [அஹம்.] 3. அகநானூறெ
ன்னும்நூல். (உ—ம்) "கற்றறிந்தார்
சொல்லுங்கலியோடகம்புறமென்-றி
த்திறத்தவெட்டுத்தொகை" (புறநா.
முகவுரை.) 4. ஆசாயம். (தைல.
அக.) 5. ஆசௌசம். (உ-ம்) "அ
கமறநூற்றெட்டாகுதி மூலத்தாக்
கி" (திருவானை. கோச்செங். எக.)
[அவம். ஆப். எ.] 6. ஆழம். (உவி
ன். ௩.) 7. இடம். (உ-ம்) "அரு
வியஞ்சாரலகத்து" (வாண். உ௫.)
8. இருப்பிடம், வீடு. (உ-ம்) "அந்
தகாரத்தையோரசமாக்கி" (தாயு. ப
ரிபூரண. ௪0.) 9. உபத்திரவம்.
(ஆப். உ.) [அகம்] 10. உள்ளிடம்.

(உ-ம்) "அகம்புறநிறைந்த சோதியாய்" (தாயு. சிவன்செயல்.) 11. ஒருமரம். (கா. வைத்.) 12. ஒருவனுமொருத்தியுங் கூடுங்காலத்துப் பிறந்தவோரின்பம். (தொல். பொரு. க. உரை. நச்சி.) [அகத்து நிகழ்வதனையகமென்றதாகுபெயர்.] 13. ஒருவிகுதி. (உ-ம) "நாடகம்" [நட்--அகம்] "மன்மமையகம்" (வீரசோ. தாது. ச, ரு. உரை.) 14. ஓரேழாம்வேற்றுமைச்சொல்லுருபு. (உ-ம்) "கண் கால் புற மகம்" [எயிலகம்புக்கான்] (தொல். சொல். அஉ) 15 குணுகுணம். (செ.) 16. சரீரம். (உ-ம) "அகத்தெலும்புமுரித்திடுவர்" (சிவதரு. சுவர்க். கமகூ.) 17. சீவன். (உ-ம்) "தேரினகமெனுஞ் சத்தமெம்மலமூயிலீர்சிவர்க்கிடுகுறிவாசகம்" (சூத. எக்கி. எ: கூ.) 18. சூரியன். (ஆப். ரு.) [அஹ.] 19. தாகியம். (உ-ம்) "மகபதிதனக்கு மன்னன்வருவிழாநடத்தலாலே யசமதுகுறைவிலாதாய்" (நல். பார. வியாசருற்அ.) 20. துக்கம். (ஆப். எ.) [அவ.] 21. நான். (உ-ம்.) "முல்லைத்தண்பதியெந்தாயகங்கைக்கிளையாற்பயன் கோடலைத்தன்மையதே" (திருமுல்லை. கக.) [அஹம்.] 22. பகல். (உ-ம்) "ஈரேழ்நாளகத்தெல்லைநீங்கி" (சிலப். பதிக. ருக.) [அஹந்] 23. பள்ளம். (மா.) 24. பாம்பு. (ஆப். ரு.) [அக: அ-எதிர்மறை. க-போதல்.] 25. பாவம். (உ-ம்) "விருப்பொடேயுழுதொழிலசமறக்கலைமேலோன்-றருப்பைநீர்நிலத்தையன்மேற் றெளித்தமைசகுமால்." (இரகு. நாட்டு. நஉ.) [அவம்] 26. பூமி. (பிங்க. கூ0கூஉ.) 27. மநம். (உ-ம்) "பொய்யிலாவகமும் வாய்மையும்" (தாயு. பொன். எஉ.) [அகம் என்னும் உள்ளிடப்பெயர் ஆகுபெயராய் மரத்திற்காயிற்று.] 28. மரம். (பிங்க. கூ0கூஉ.) [அக.] 29. மலை. (உ-ம்) "விறற்கொள்வாகு விடுத்தன கல்லகம்" (கந்தபு. நகரழி. எ0.) [அக: அ-எதிர்மறை. க-போதல்] 30. மார்பு. (உ-ம்) "அகந்தனிலிணைமுலையெதிர்பொர" (திருப்பு. ரு.)

அகம்படித்தொண்டு-உள்ளாகநின்று செய்யுந்தொண்டு. (உ-ம்) "அங்கணர் கோயிலுள்ளாரகம் படித்தொண்டுசெய்வார்." (பெரியபு. தில்லை. வா. ச.)

அகம்படிமை—அகம்படித் தொண்டு (உ-ம் "நிருத்தனருட்செல்வமலியகம்படிமைத்திறலினர்தம்பதம்போற்றி" (கோயிற்பு. பாயிர. கரு.)

அகம்படியார்—உள்வேலைக்காரர்-ஒருசாதியார்; இவர்கள் அரசர்வீடுகளிலுந் தேவாலயங்களிலும் ஏவல்செய்பவர். (உவின். ரு.)

அகம்பதவாச்சியம்— அகமென்னும் பதத்தாற் சொல்லப்பட்ட பொருளாகிய ஆன்மா. (சி. சி. கூ: எ. ஞான) [அஹம்--நான். பதம்-சொல். வாச்யம்--சொல்லப்பட்டது.]

அகம்பன் — அசைக்கப்படாதவன். (உ-ம்) "அகண்டிதன் யார்) [கம்பம்--அசைவு.]

அகம்பாவம் — செருக்கு, நானென்னுமெண்ணம். (உ-ம்) "மிகுந்தவகம் பாவ நிறைந்து" (ஞானவா. வைரா. கரு.) [அஹம்பாவ: பாவம்--எண்ணம்.]

அகம்பிரதமர்—— என்னைமுதலாகவுடையவர். [நானுமென் போலிகளும் என்றபடி] (உ-ம்) "பின் அகம்பிரதமர்க்கும்" (சி. சி. க: சஅ: ஞான.) [ப்ரதமர்-முதலானோர்.]

அகம்பிரதமிகா—1. நூர்திக்கொள்ளவேண்டுமென்றோடுகை. (ஆப். கசரு) 2. பெருமைபாராட்டுகை. (ஆப். கசரு) [ப்ரதமிகா-முன்னுக்குப்போகை.]

அகம்பிரமமெனல் — சிவோகம்பாவனைசெய்தல், (உ-ம்) "அமலனைத்தன்னுட்கண்டகம் பிரமமென்றே" (சைவச. ஆசாரி. உரு.) [ப்ரஹ்மம்--கடவுள்.]

அகம்பிரமவாதி — நானேபிரமமென்றுவாதிக்கிறவன். (சிவப். எ. வியாச்.)

அகம்பிரமாஸ்மி — நான்பிரமமாயிருக்கிறேனெனப் பொருள்படும் ஒரு யசுர் வேத மகாவாக்கியம். (சைவல். சந்தே. கசுகூ. உரை.) [ப்ரஹ்ம-கடவுள். அஸ்மி-இருக்கிறேன்.]

அகம்மதி—1. அஞ்ஞானம். (சப்த.) 2. நானென்னுமெண்ணம். (சப்த.) அஹம்மதி: மதி-எண்ணம்.]

அகம்மியம் — 1. அணுகக்கூடாதது (வென். உரு.) 2. அறியக்கூடாதது (உ-ம்) "பிரத்தியக்ஷாதிபிரமாணசதுட்டயங்களிலுமகம்மியமாதலாலே" (சி. சி. அளவை. உ. சிவாச்.) [அகம்ய: கம்ய-அணுகத்தக்கது, அறியத்தக்கது.] 3. ஒரெண். (உவின். ரு.)

அகம்மியா—அகம்மிபை. (உ-ம்) "அகம்மியாகமநம்."

அகம்மியாகமநம்—அகம்மியையோடு புணர்தல். (ஆப். ரு.) [அகம்யாகமநம்: கமநம்-புணர்தல்.]

அகம்மியை—1. இழிகுலப் பெண். (ஆப். ரு.) 2. புணர்ச்சிக்குத்தகுதியற்றபெண். (ஆப். ரு.) [அகம்யா: அ-எதிர்மறை. கம்யா-புணரத்தக்கவள்.]

அகமநம்—1. அடையாமை. 2. நடவாமை. (சு.) 3. புணராமை. 4. போகாமை. [அகமநம்: அ-எதிர்மறை. கமநம்-போதல், அசைதல், அடைதல், புணர்தல். ஆப். உஅகூ.]

அகமம்—1. மரம். (உவில். ரு,) 2. மலை. (உவில். ரு.) [அகம: கம-போதல்]

அகமமரம்—வெள்வேலமரம். (கா. வைத்.)

அகமருடணதீர்த்தம்—அகமருடணஸ்நாநத்துக்காகியநீர். (உவின். ச.)

அகமருடணநாநம் — அகமருடணத்தோடு கூடியஸ்நாநம். [அகமர்ஷணஸ்நாநம்.]

அகமருடணம்—நீர்விடப்பட்ட வலப்பக்கத் துள்ளங்கை மூக்கிற்பிடித்திருக்குவேதத்திலே பத்தாம் பாகத்துள்ள கஙo. ஆஞ் சுலோகத்தை நீருள்ளேநின்று செபித்துப் பாவத்தை நீக்குதல்; (உவில். கூ.) அகமம

ர்ஷணம்: அவம்--பாவம். மர்ஷணம்--துடைத்தல்.] (உ--ம்) "முன்னுறுபவாசம் புரிந்து முழங்குங்கண்டத்துணைநீருண்--மன்று நின்றுமூன்றுதரமருவகமருடணஞ்செபிக்கில்" (சூத. எக்கி. பூ. சஉ: சரு) அங்கநியாசஞ்செய்து இடக்கையிலே சலத்தை விட்டு வலக்கையால் மூடிக்கொண்டு ஹூம், யம், ரம், லம், வம், என்றுமூன்றுதரம் அபிமந்திரித்து மூலமந்திரத்தையுச்சரித்தொழுகும் நீர்த்துளிகளினால் எழுதரந் தலையிலே தெளித்து மிஞ்சியநீரை வலக்கையிலேவிட்டுத் தேஜோரூபத்தைத்தியானித்திடைகலையினால்முத்துடம்பினர்தர்பபாவத்தைக் கழுவிக்கழிய நீர் கருநிற மடைந்ததாகப் பாவித்துப் பிங்கலையினாலேவெளியிலே விட்டுத்தன்முன் னேகர்பித்துக்கொள்ளப்பட்டவச்சிரசிலையிலே பாவ புருஷ வடிவமாகிய அந்தநீரைவிட்டுவிடுக என்பது அகமர்ஷணம் என்னுங்கிரியையென்று தந்திரசாரத்திற் சொல்லப்பட்டது. (வாச.)

அகமருடம் — அகமருடணஸ்நாநம். (உ-ம) "ஆராதவிருப்பினுலகமருடம்படிய" (பெரியபு. திருஞாந. கூ௦.) [அவும்--பாவம். மர்ஷம்--அழித்தல்.]

அகமாட்சி — மனையறத்திற் குரிய நற்குண நற்செய்கைகள். (உ-ம்.) "அனையவனுக் குயிரனையாளொருத்தியகமாட்சிபுரந்தளிப்பாள்" (உபதேச. சூராதி. எஎ.) [அகம்--மனை. மாட்சி--மகிமை.]

அகமார்க்கநடம் — மெய்த்தொழிலாற் செய்யுங் கூத்து. (சி.)

அகமார்க்கம் — 1. அருமையிற்பாடல். அது: வாய்திறவாமற் கீழ்க்குரலெடுத்துப்பாடுதல். (பிங்கல. கசசம் உவின். உ.) 2. உள்வழி. (உ--ம்.) "மூச்சதுரமூலாதாரங்க ளகமார்க்கமதிர்ந்து" (சி. சி. அ: உக. உரை. நிரம்ப.) 3. மந்திரக்கிரமம். (சி. சி. அ: உக. உரை. சுப்பிர.) 4. மெய்த்தொழிலாற் செய்யுங்கூத்து. (உ--ம்.) "மெய்க்கூத்தாவது தேசிவடுகு சிங்களமென மூவகைப்படும். இவை அகச்சுவைபற்றி யெடுத்தலின் அகமார்க்கமென நிகழ்த்தப்படும்" (சிலப். அரங். சஉ. ஆடலாசிரி. உரை.) [அகம்-உள். மார்க்கம்-வழி.]

அகமான்மா — நானேயான்மா என்றுபிரமத்தின் வேறாகத் தன்னைக்காண்போன். (உ-ம்.) "அறிவுடையோனகமான்மாவொடுவருசம்பந்தம்" (வேதா. சூ. கடுசு.) [அஹமாத்மா]

அகமிதம் — நான் இது என்பது. (உ-ம்) "உகளமற்றசமிதமற வொன்றதாய்" (வேதாரணியபு. வரன்மு. டுடு.) [அஹம்-நான். இதம்--இது.]

அகமுகம் — அந்தர்முகம். (உ-ம்.) "அகமுகமாந்தொடர்பால்" (ஞானவா. சரகு. சஉ.)

அகமுடையான் — வீட்டுக்காரன். (சி.) [இச்சொல், அகமெனும் பெயர்பெறக் கிடந்த பொருளெல்லாவற்றையுந், தனித்தனிகுறித்து, அதனையுடையானெனவும் பொருள்படுதலறிக.]

அகமுழவு — எழுவகை முழவுகளுள் ஒன்று. அது உத்தமகருவியான மத்தளம், சல்லிகை, இடக்கை, கரடிகை, பேரிகை, படகம், குடமுழா வென ப் பலவகைப்படும். (சிலப். அரங். உஎ. உரை.)

அகர் — பகல். (தொல். எழுத். மொழிமரபு. சஎ. உரை. இளம்.) [இது அஹர் என்னும்வடமொழித்திரிபு. அகர்மணி என்பதிற்போலப் பிறசொற்களோடு சேர்தன்றித் தனித்துவாராது.]

அகர்ணம் — 1. செவிடு. (வாச.) 2. பாம்பு. (வாச.) [அகர்ண: அ--எதிர்மறை. கர்ணம்-காது.]

அகர்த்தத்துவம் — அழிக்குந்தன்மை. (சி.)

அகர்த்தநன் — குறள்வடிவமுடையவன். (ஆப். உ.) [அ--எதிர்மறை. கர்த்தநம்--துண்டுபடுத்தல்.]

அகர்த்தவ்வியம் — 1. செய்யக்கூடாதது. (உவில். உ.) 2. செய்யத்தகாதது. (உவில். உ.) 3. செயற்பாலதல்லாதது. (உ-ம்.) "கரையும்விதிநிடேதவாக்கியங்களுரைத்திடுங்காற் கர்த்தவ்வியவகர்த்தவ்விய விடயமாயினவால்" (சூத. எச். பூ. சo: உo.) [அகர்த்தவ்ய.]

அகர்த்தன் — 1. கர்த்தனல்லாதவன். 2. செய்கையில்லாதவன்.

அகர்த்தா — 1. கர்த்தாவல்லாதவன். (உ-ம்.) "நான் அசங்கன் அகர்த்தா அபோக்தா என்கிறநிச்சயபலன்ஞானிக்குண்டு" (விசாரசாகர. கூசடு.) [அ-எதிர்மறை. கர்த்ரு. ஆப். உசஉ.] 2. செய்கையற்றவன். (சி.)

அகர்த்திருத்துவம் — கடவுளுடைய பிரபுத்துவசாமர்த்தியகுணங்கள்மூன்றனுள் ஒன்று; அது கர்த்திருத்துவம் நீங்கிநிற்றல். அஃதாவது, தநுகரண புவநபோகங்களைக் கூடிக் கர்மாநுசாரப் பிரகாரம் ஆத்மாக்கள் பிரேரிக்கும்படி பிரேரகஞ்செய்தும் அவற்றிற் பற்றின்றித்தனியே தானிருத்தல். (உ-ம்.) "கர்த்திருத்துவமோடகர்த்திருத்துவம் பின்னர்நிதாகர்த்திருத்துவமே-யத்தன்மெய்ப்பிரபுத்துவவலி" (வேதாந். சூ. சஎ.) [கர்த்திருத்துவம்-செய்வோன்றன்மை.]

அகர்த்திருவாதம் — சிருட்டிகர்த்தா இல்லை யென்று வாதித்தல். (சி. சி. பரபக்ஷ. சௌத்திராந்திகன்மதம். க. உரை.) [அ-கர்த்ரு-வாத.]

அகர்நாதன் — சூரியன். (வாச.) [அஹர்நாத: அஹர்-பகல். நாத-தலைவன்.]

அகர்ப்பதி — சூரியன். (சப்த.) [அஹர்பதி: அஹர்-பகல். பதி-தலைவன்.]

அகர்மகத்திருப்பிரயோகம் — அகர்மகர்த்தரிப்பிரயோகம்.

அகர்மகர்த்தரிப்பிரயோகம் — அகர்மகர்த்தரிப்பிரயோகம். (உவின். ரு.) [அகர்மக. - செயப்படுபொருளில்லாதது. ஆப். உ. கர்த்ரு -செய்கிறவன் ஆப். உசஉ. ப்ரயோக- பிரயோகித்தல். ஆப். ருகூஅ.]

அகர்மணி — சூரியன். (ஆப். சகூ) [அஹர்மணி: அஹர்-பகல். மணி-இரத்தினம்.]

அகர்மம்—1. செயலில்லாமை. (ஆப். உ.) 2. தகாதசெயல். (ஆப். உ.) [அகர்ம்மம்: அ-எதிர்மறை. கர்ம்மம்—செயல்.]

அகர்மி— கர்மமில்லாதவன். (பௌட். பச. உரு.) [அகர்ம்மி:அ-எதிர்மறை. கர்ம்மி—கர்மமுடையவன்.]

அகர்முகம்—வைகறை. (ஆப். கசரு.) [அஹர்முகம்:அஹர்-பகல். முகம்-தொடக்கம்.]

அகரம்— 1. "அ" என்னு மெழுத்து (உ-ம்.) "அகரமுதலவெழுத்தெல்லாமாதி-பகவன்முதற்றேயுலகு" (வள். க.) [அ; கரம்-ஒருசாரியை.] 2. இரசம். (கா. வைத்.) 3. இறையின்மை. (ஆப். உ.) [கர-இறை.] 4. ஊர். (உ-ம்) "அகரமுல்லையுள்ளார்." (முல்லையங். எஎ.) 5. ஒற்றெழுத்தின் சாரியைகளுளொன்று. (உ-ம்.) "மகரவிறுதியஃறிணைப் பெயரினகரமோடுறழா நடப்பனவுளவே" (நன். எழுத்தி. கூஎ.) 6. கையின்மை. (ஆப். உ.) [கரம்-கை.] 7. செயலின்மை. (ஆப். உ.) [கரம்-செயல்.] 8. பார்ப்பனச்சேரி. (உவின். ரூ.) 9. மருதநிலத்தூர். (உவின்-ரூ.) 10. வீடு. (உ-ம்.) "அகரங்கள்பற்பலவுமாலயங்கள்பற்பலவும்" (நல். பாரத. கிருட்டிண. கூகூ. உவில், உ.) [அகாரம்.]

அகராதி— 1. சொற்களை, யவற்றின் முதலிலுள்ள எழுத்துக்கள் வர்ணமாலையின் கிரமப்படி அகரமுதலாக ஒன்றன்பின்னொன்றாய்த் தொடர்ந்துவர, அடுக்கிப் பொருள்விளக்கும் புத்தகம். (உவின். ரூ.) [அ; கரம்;ஆதி. கரம் என்பதீறுகெட்டது.] 2. சொற்களை, யவற்றின்முதலிலுள்ள எழுத்துக்கள் வர்ணமாலையின் கிரமப்படியொன்றன்பின்னொன்றாய் வர நிரைக்கப்பட்ட கோவை. (உ-ம்.) "சூத்திரவகராதி" 3. பகல்தொடங்குங் காலம். (வாச.) [அஹராதி: அஹர்—பகல். ஆதி-தொடக்கம்.]

அகரிடணம்—1. துக்கம். (உவின். ரூ.) 2. வெறுப்பு. (உவின். ரூ.) [ஹர்ஷணம்—மகிழ்ச்சி. உவில். கூகூ.]

அகரிடம்—1. துக்கம். (உவில், சoரு) 2. வெறுப்பு. (உவில். கoச.) [அ; ஹர்ஷ-மகிழ்ச்சி.]

அகருமகம்—செயப்படுபொருளில்லாத வினை. (வீரசோ. தாது. உ. உரை.) [அகர்ம்மக: அ—எதிர்மறை. கர்ம்மகம்— செயப்படுபொருளுடையது.]

அகல்—1–3. அகல் என்னேவலும்; தெரிநிலைவினைப்பகுதியும் பெயரெச்சத்தொகையும். (உ–ம்) "வஞ்சமகல்குக்கும சொருபத்தால்-" (சூத. எக். மு: கூ. பெ-கை.) 4. அல்குல். (பிங்கல. சooரு) 5. ஓரளவு. (தொல். தொகைமரபு. உஅ. உரை, இளம்.) 6. சட்டி. (உ–ம்) "சாரகற்கூவியன் பாகொடுபிடித்த" (பத்து. பெரும்பாணற். கூஎஎ.) 7. தகழி. (உ-ம்) "திருவிளக்குத் திரியிட்டகல்பரப்பி" (பெரியபு. கலய. கரு) 8. பெருமரம் என்னுமரம். (உவின். ரூ.) 9. விரிவு. (உவின். ரூ) 10. வெள்வேலமரம். (கா. வைத்.)

அகல்கத்துவம் — வைரமின்மை. (பௌட். பும்ஸ். ருச. [அகல்கத்வம் அ–எதிர்மறை. கல்கத்துவம்— வைரம்.]

அகல்கதை—வைரமின்மை. (பௌட். பும்ஸ். கூo) [அகல்க்தா: கல்கதா—வைரம்.]

அகல்கை—அகலல் (சி.) [கை-ஒரு தொழிற்பெயர் விகுதி.]

அகல்வு —1. அடர்ச்சியின்மை (உ-ம்) "வித்துநிலத்தின் வெறுத்தபயிர் விறப்பினீங்க விடைவாங்கிப் பைத்த நிலத்தினகன்ற பயிரகல்வினீங்கப்பதித்து" (தணிகை. திருநா. கூரு.) 2. நீங்குகை. (உ-ம்.) "அமுதம் வவ்வியகல்வுழி" (காஞ்சிபு. மூத்தி. கo.) 3. விசாலம் (சி.)

அகல்வோர்—1. நீசர். (செ) 2. விலகியிருப்பவர் (செ)

அகல—தூரமாக. (உ–ம்) "அருகணுகாவகையகலவிருந்தான் —மருவுறு நண்புவளர்ந்திடுமென்றே" (பராத. வாரணு. சoரு.) 2. நீங்க. (உ-ம்) "மீன்றிகழ்விசும் பிற்பாயிருளகல" (புறநா. உரு.)

அகலக்கட்டை—அகலக் குறைவுடையது. (உவின். ரூ.)

அகலக்கவி–1. வித்தாரகவி. அதுதொடர்நிலைச்செய்யுளாலும் அடிபலவாய் நடக்கும் முத்தகச்செய்யுளாலும் பாடப்படுவது. (இலக்கணவி. எகூஎ. உரை) (உ-ம்) "முன்மொழிக்—கிட்டியதொன்மை யிலக்கணங்களிவ்வகையே, காட்டுமகலக்கவிக்கு" (வெண்பாப். முதன். உக.) [அகலம்—வித்தாரம். கவி—பாட்டு.] 2. வித்தாரகவி பாடும்புலவன்.]

அகலப்பா — அகலக்கவி. (உ–ம்) "பாங்கார்தொடர்நிலைப்பாப்பல்பாதஞ்சேர்தனிப்பா- ஈங்ககலப்பாக்களிரண்டாகும்" (வெண்பாப், செய்யு. ரு.) [அகலம்—விரிவு. பா-பாட்டு.]

அகலம். 1. அகலவுரை. அது; வினாவி அவ்வினாவுக்கு விடையாகத்தோன்றும் விகற்பங்களெல்லாங் காட்டி எழுதப்படு முரை. (உ-ம்) "தன்னூன் மருங்கினும் பிறநூன்மருங்கினுந்— துன்னியகடாவின் புறந்தோன்றும் விகற்பம்—பன்னியவகலமென்மனார் புலவர்" (தொல். சிறப்புப்பா. நச்சி.) 2. உழாதுவிடப்பட்ட நிலம், தரவைநிலம். (ஆப். ககரு.) [அஹல்ய: ஹல்யம்-உழவுக்குரியது] 3. மார்பு. (உ-ம்.) "ஏடவிழ்ந்ததாரகலமுமிணைத்தடந்தோளும்" (திருவிளை. நகரப். ரூரு.) 4. விசாலம் (உ–ம்.) "சென்னியகலமுப்பாணிராயிரமாம்" (கந்தபு, அண்ட. உக.) 5. வித்தாரகவி, (உ-ம்) "ஆசுமதுரஞ் சித்திரமகலமென் – றோசையெழும் பாட்டொருநால் வகைத்தே" (இலக்கணவி. எகூரு.) 6. விரிவு. (உ-ம்) "உரைத்தனைசுருக்கியாங்கணன்றி தனகலங்கேட்க" (கந்தபு. பாயிர. அச.) [அகல்; அம்.]

அகலர்—1. கலைநீங்கினவர். (உ-ம்) "விஞ்ஞானாகலர்க்குக்கலாதிசம்பந்தமுண்டாயிருந்துங் கலாதிபரதந்திரமில்லாதபடியால் அகலரே" (சி.சி.சு:உரு உரை. சிவாக்.) [அ-எதிர்மறை. கலர்—கலையுடையவர்.] 2. சண்டாளர், நீச

ர். (சி.) [விலகி நடப்பவரென்ற படி.]

அகலல்—1. அடர்ச்சியின்மை. (உ-ம்) "அகல்வு" பார். 2. நீங்குதல். (உ-ம்.) "மீன்றிகழ்விசும்பிற்பாயி ருளகல" (புறநா. உ௫.) 3. பிரிந்துபோதல். (உ-ம்) "அகன்றபூங்கொடியை" (பாரத- குருகுல. எக.) 4. விசாலித்தல். (உ-ம்) "அகன்றவியன்மார்பும்" (புறநா. ௬.) 5. விருத்தியாதல், பெருக்கமடைதல். (உ-ம்.) "அழுக்கற்றகன்றாருமில்லை" (வள். கஎ0)

அகலவுரை—ஒருவகையுரை ["அகலம்" என்பதின 1 ம் பொருள்பார்.]

அகலறை— 1 பகைவர்மேற் சென்றோருறைவிடம். சி 2. மலைப்பக்கம். (சி) (உ-ம்) "மாசகணகலறையதிர் வனமுழங்க" (பத்து. பட்டி. உகஎ ம் உரையும்.) [அகல்; அறை.]

அகலன்—1. ஏழை.(சி) 2. கடவுள்(சி) 3. கொடியவன். (சி) 4. பெருத்தவன். (சி) 5. பெருமையுடையவன் (சி)

அகலி—அகலியை. (உ-ம்.) "அகலிமெய்க்கேள்வனுதியர்கள்" (நல். பாரத. கிருட்டி. கக.)

அகலிடம்—பூமி. (உ-ம்.) "அகலிடத் துயர்ந்ததில்லை" (பெரியபு. தில்லைவா. ௪0.) [அகல்; இடம்]

அகலிது — அகலமுடையது. (உ-ம்) "ஈமத்தாழியகலிதாகவனைமோ" (புறநா. உ௫௬.) [அகல்; இ; து]

அகலியம் — 1. ஆயத்தமில்லாதது. (உ-ம்.) "அகலியமாமிசம்" 2. இணங்காதது. 3. ஒருமரம். (கா. வைத்.) 4. சாமர்த்தியமில்லாதது. 5. மரம்- (பிங்கல. உஎகக.) [1, 2, 4. அ-எதிர்மறை. கல்யம்-ஆயத்தம், இணக்கம், சாமர்த்தியம். ஆப். உகஎ.]

அகலியமாமிசம்— தனனுல் அல்லது தன்னிமித்தமாகக் கொல்லப்பட்ட பிராணியின் மாமிசம். அது "திரிகொடி, சட்கொடி, நவகொடி மாமிசமென மூன்றும். திரிகொடியாவது கொலைசெய்தல், செய்வித்தல், உடன்படல் என மூன்றும். சட்கொடியாவது அம் மூன்றுடனே தன்னிமித்தம வேறொருவன் கொல்வது காண்டல், கேட்டல், ஐயப்படாமை, கூட ஆறும். நவகொடியாவது அந்த ஆறுடனே சுவைமேல்விருப்பம, மிகப்படுத்தின்னுங் கருத்து, இனிமை கூறுங் சொல்லுதலாகிய புகழ்ச்சிகூட ஒன்பதாம். இவற்றின் ஒன்று வரினும் அகலியமாம்சமாம்,,"கொடி என்பது தொழில (சி. சி. பா.சௌத்திராந்திகன் மதம். உக.உரை.) [அ-எதிர்மறை. சல்யம்- ஆயத்தம். மாமிசம்—இறைச்சி.]

அகலியாசாரன்— இந்திரன். (வாச.) [அஹல்யாஜார: அஹல்யா—கௌதமமுநிவருடையமனைவி. ஜார:-சோரநாயகன்.]

அகலியாநந்தநன்—சதாநந்தன். (வாச.) [அஹல்யாநந்தந: அஹல்யா- அகலியை. நந்தந:—மகன்.]

அகலியை—ஒருபெண், இவள் கௌதம முநிவருடைய மனைவி. (உ-ம்.) "அகலியைகல்லதானாள்" (சி. சி. உ: சச.) [அஹல்யா. அ — எதிர்மறை. ஹல்யா— அவலட்சணமுடையவள். சப்த.]

அகலுகை—அகலுதல். (உவின். ௬.)

அகலுதல்—அகலல். (சி.)

அகலுள்—1. அகலம்.(சூ. நிக. அ: ௪உ) 2. ஊர். (சூ. நிக. ௫: ௬௫.) 3. நாடு. (சூ. நிக. ௫: ௬௫.) 4. பூமி. (ஆசிரியநிகண்டு. ௬.) 5. பெருமை.(மா) [அகல்; உள்.]

அகலுஷிதம்—கலங்காதது. (உ-ம்.) "இந்த உபாதிகளினாலே அகலுஷிதசைதந்யம்பிரமாதாவாம்" (சி. சி. அளவை. க.) [அகலுஷித: அ-எதிர்மறை. கலுஷிதம்-கலங்கினது.]

அகவடி—அடியினுள்ளிடம், உள்ளங்கால். (உ-ம்.) "அகவடியங்கைநாட்டக்கடை" (திருவிளை. உக்கிரபாண்டியனவ. சச.)

அகவர்— 1. சூதர், அழைத்துப்புகழ்வோர். (உ-ம்.) "நாளீண்டநல்லகவர்க்கு" (பத்து. மதுரை. உஉக.) [அகவு—அழைத்தல். அர்- ஒருவிகுதி.] 2 நாட்டில்வாழ்வோர். (உ-ம்.) "அகவர்நீனிறமுல்லைப் பஃறிணைநுவல" (பத்து. பொருந. உஉ0.) [அகம் - உள்.]

அகவல்—1. அழைத்தல். (உ-ம்) "அகவினம்பாடுவாந்தோழீ" (கலி. ௪0.) 2-ஆசிரியப்பா. (உ-ம்.) "அகவலென்பதாசிரியமமே" (தொல். பொரு. ௬அக. ["அகவிக்கூறுதலாலகவலெனக்கூறப்பட்டது" மேற்படியுரை] 3. எடுத்தலோசை. (பிங்கல. உச0க.) 4. ஒலித்தல். (உ-ம்.) "பல்பொறிமஞ்ஞைவெல்கொடியகவ" (பத்து- திருமுரு. ௧உஉ.) 5. ஓர் ஓசை. அஃது அகவற்பாவுக்குரியது. (உ-ம்.) "ஒலிமுறையே திண்பாமலிசெப்பல்சீர்சாலகவல்" (யா. காரிகை. செய்யு. க.) 6. கூத்தாடல். (பிங்கல. ௬சகூச.) 7. மயிலின் குரல். (உ-ம்.) "பாலம்பகவன்மயிலுரைசோவியற் பாவைக்கண்" (மறைசையந்தா. கக.)

அகவல்விருத்தம்—ஆசிரியவிருத்தம். (உ-ம்.) "அகவல் விருத்தங்கலித்தாழிசையால்" (இலக்கணவி. அசரு.) [அகவல்—ஆசிரியம். விருத்தம் - மூவகைப்பாவினத்து ளொன்று.]

அகவலிசை—அகவலோசை. (உ-ம்.) "அகவலிசையனவகவன் மற்றவை ஏ ஓ ஈ ஆய் என் ஐ யென்றிறுமே" (இலக்கணவி. எகஉ.)

அகலுரிச்சீர்—அகவற்பாவுக்குரியசீர் இது: தேமா, புளிமா, கருவிளம், கூவிளம் என்னும் வாய்பாட்டால்வரு

ம் ஈரசைச்சீர். (உ-ம்.) "அகவலுரிச் சீர்விகற்பமுமொண்ணுதலே" (யா. காரிகை, உறுப்பு. கo.)

அகவலோசை — ஆசிரியப்பாவிற்குரிய சந்தம். அது நேரொன்றாசிரியத்தளையாற் பிறப்பதேந்திசை யகவலெனவும், நிரையொன்றாசிரியத்தளையாற்பிறப்பது தூங்கிசையகவலெனவும் அவ்விருதளைகளினது கலப்பாற்பிறப்பதொழுகிசையகவலெனவுஞ் சொல்லப்படும். (உ-ம்.) "அகவலோசை மூன்றுவகைப்படும்" (இலக்கணவி. எஙஉ ம் உரையும்) [அகவல்—ஆசிரியம். ஓசை-சந்தம்.]

அகவற்சீர்—அகவலுரிச்சீர். (செ.)

அகவற்சுரிதகம்— கலிப்பாக்களின் கடையுறுப்பாய்த் தனிச்சொல்லின்பின் மூன்றடிமுதற் பலவடியாக அகவலான்வருவது. (மா.) [அகவல்--ஆசிரியப்பா. சுரிதகம்-கலிப்பாவுறுப்புக்களுள் ஒன்று.]

அகவற்பா — ஐவகைப் பாக்களிலொன்று. அது, நாற்சீருக்கு மேற்படாத அடியுடையதாய் இயற்சீர் பயின்றும், கருவிளங்கனி, கூவிளங்கனியென்னும் இரண்டுமொழிந்த அயற்சீர்விரவியும், ஆசிரியத்தளை தழுவியும் பிறதளைமயங்கியும், ஏ, ஓ, ஈ, ஆய், என், ஐ, என்பனவைகளுள் ஒன்றனை இறுதியாகக்கொண்டு முடிவது. (மா) [அகவல்-ஆசிரியம. பா-பாட்டு.] அகவற்பாவின் பெருக்கத்துக்காயிரமடியும், சுருக்கத்துக்கு மூன்றடியுமெல்லையாமென்பர். (தொல்.பொரு.சஎo)

அகவற்றாழிசை — ஆசிரியப்பாவினத்துளொன்று; அது, எவ்வகைச்சீரானுந் தளையானும் ஒத்த மூவடியாகத் தனித்தாவது ஒருபொருண்மேல் மூன்றடுக்கியாவது வருவது. (உ-ம்.) "மூன்றடியொத்த முடிவினவாய்விடி—ஞன்றவகவற் றாழிசையாகும்" (யாப்பருங். எடு.) [அகவல்— ஆசிரியம். தாழிசை- பாவினத்துளொன்று.] அகவற்றாழிசைக்குதாரணம்:

"வாலுற நிமிர்ந்தனை வெய்யசமளந்தனை, பானமதிவிடுத்தனைபல்லுயிரோம்பினை, நீன்றவண்ணநின் னிரைகழறொழுதனம்" இது தனியே வந்த ஆசிரியத்தாழிசை.

"கன்று குணிலாக்கனியுதுத்தமாமாயன், இன்றுநம்மானுள்வருமேலவன் வாயிற், கொன்றையந்தீங்குழல்கேளாமோதோழீ"

"பாம்புகயிறாக்கடல்கடைந்த மாமாயன், ஈங்கு நம்மானுள் வருமேலவன்வாயில், ஆம்பலந் தீங்குழல் கேளாமோதோழீ"

"சொல்லையஞ்சாரற் குருந்தொசித்த மாமாயன், எல்லினம்மானுள் வருமேலவன் வாயின், முல்லையந்தீங்குழல்கேளாமோதோழீ"

இவை மூன்றும் ஒருபொருண்மேலடுக்கிவந்த ஆசிரியத்தாழிசைகள்.

அகவற்றுள்ளல்—துள்ளலோசை மூவகையுளொன்று, அது வெண்டளையுங் கலித்தளையுங் கலந்துவருதலாற் பிறக்குமோசை. (உ-ம்.) "வெண்டளைதன்றளையென்றிரண்டியையிலொன்றிய வகவற்றுள்ளலென்றோதுப" (யா. காரிகை, செய்யு. க. உரை. [அகவல்—ஆசிரியம். துள்ளல்—துள்ளிச்செல்வது.]

அகவற்றுறை— ஆசிரியப்பாவினத்துளொன்று. அது, நான்கடிபெற்றீற்றயலடி குறைந்தும், நான்கடி பெற்றீற்றயலடி குறைந்திடைமடக்காயும், நான்கடிபெற்றிடை யிடைகுறைந்தும், நான்கடிபெற்றிடையிடைகுறைந்திடை மடக்காயும் வருவது. (உ-ம்.) "கடையதனயலடிகடைதபுநடையவு—நடுவடிமடக்காய்நான்கடியாகி—யிடை யிடைகுறைநவுமகவற்றுறைமே" (யாப்பருங். எசு) [துறை--பாவினத்துளொன்று.]

அகவற்றுறைக்குதாரணம்:

கரைபொருகானியாற்றங் கல்லதரெம்முள்ளிவருவிராயி, னரையிருள்யாமத்தடு புலியேறஞ்சியகன்றுபோக, நரையுருமேறுநுங்கைவேலஞ்சுநும்மைவரையரமங்கையர்வௌவுதலஞ்சுதும் வாரலையோ.

இஃது ஈற்றயலடி குறைந்துவந்தது.

வண்டுளர்பூந்தார்வளங்கெழு செம்பூட்சேஎய்வடிவேபோலத், தண்டளிர்ப்பூம்பிண்டித்தழையேந்தி மாவினவித்தணந்தோன்யாரே, தண்டளிர்ப் பூம்பிண்டித்தழையேந்தி வந்துநம், பண்டைப்பதிவினவிப பாங்குபடமொழிந்து படர்ந்தோனன்றே.

இஃது ஈற்றயலடி குறைந்திடைமடக்காய்வந்தது.

கொன்றூர்ந்தமைந்த குருமுகத்தெழினிறக்குருதிக், கோட்டினவிருந்தாட்பெருங்கைக், குன்றுடனவன்றுமெனக்குமுறுநின்றன, கொடுந்தொழில் வேழம;
வென்றூர்ந்தமைந்த விளங்கொளியிளம்பிறைத், துளங்குவாளிலங்கெயிற்றழலுளைப், பருஉத்தாளதிரும்வானெனவெதிருங், கூற்றெனச்சுழலாநின்றனசுழிக்கண்யாளி;
சென்றூர்ந்தமைந்த சிறுநுதிவள்ளுகிர்ப்பொறியெருத்தெறுழ்வலிப்புலவுநாறழல்வாய்ப், புனலாமெனக்கனலாமெனப்புகையாநின்றன; புலிமானேற்றை;
எனவாங்கிவையிவை யியங்கலினெந்திறத், தினிவரல்வேண்டலந்தனிவரலெனத்தலை, விலக்கலினிறுவரைமிசையெறிகுறும்பிடை, யிதுவென்னென்னவதுநோனார்கரவிரவிடைக், களவுளமதுகற்போரோதுங் கற்பன்றே. இஃது இடையிடைகுறைந்து வந்த ஆசிரியத்துறை.

இரங்குகுயின் முழவாவின்னிசையாழ்தேனு, அரங்கமணிபொழிலாவாடும்போலு மிளவேனில், அரங்கமணிபொழிலாவாடுமாயின், மரங்கொன்மணந்தகன்றார்நெஞ்சமென்செய்ததிளவேனல்,

இஃது இடையிடை குறைந்திடைமடக்காய்வந்த ஆசிரியத்துறை.

அகவற்றூங்கல்—தூங்கலோசை மூவகையுள் ஒன்று; அது, ஒன்றுதவஞ் சித்தளையாற் பிறக்கு மோசை. (உ-ம்) "ஏந்திசைத்தூங்கல்" பார்.

அகவாட்டி — அகத்துள்ள அடியாள். (உவின். கூ.) [அகம்—உள். ஆட்டி ஆளப்படுபவள்.]

அகவாயுக்கள் — அகத்திலுள்ள அந்தக்கரணங்களைச் சீவனோடு கூடிநின்று அசைப்பிக்கின்றனவாகச் சொல்லப்படும் வைரம்பன், முக்கியன், பிரபஞ்சனன், அந்தரியாமி, மகாப்பிராணன் என்னும் ஐந்து வாயுக்கள். (வேதா. சூ. எசு. உரை. எஎ.) [அக-உள். வாயுக்கள்.]

அகவிடன் — அகப்பொருளுக்குரிய சட்டக முதலாகிய இருபத்தேழு உரைகளுள் ஒன்றாகிய இடத்தின் வகை யிரண்டனுள் ஒன்று; அது ஒருசெய்யுள் மணியும் வளாகமும் பற்றிவருவது. (வீரசோ. பொருட். சு-ரு. சு. உரையும்)

அகவிதழ்—உள்ளிதழ். (உ-ம்.) "செய்யதாமரையகவிதழ்" (பெரியபு. திருஞான. எஅ.) [அகம்-உள். இதழ்-மடல்.]

அகவிலை—தானியவிலை (உ-ம்) "ஆதலாலுலகினெல்லுமகவிலைகுறைந்து" (திருநெல். நெல்லுக்கு. ச.) [அகம்—தானியம். விலை.]

அகவு—1-3. அகவு என்னேவலுந் தெரிநிலைவினைப்பகுதியும் பெயரெச்சத்தொகையும். 4. அழுக்கிரா. (கா. வைத்.)

அகவுதல் — 1. அழைத்தல் (செ) 2. ஒலித்தல். (உ-ம்) "செங்கணிருங் குயிலகவுஞ்சோலை" (கூர்மபு. சந்திர. கூச.) 3. கூத்தாடல். (உ-ம்) "பீலிமாமயிலகவுமதவரம்" (கூர்மபு. இராம. வக. ககஎ.)

அகவேற்றம்— தானியவிலையேற்றம். (சி) [அகம், அர்க்கம் என்பதன்மரூஉ. ஏற்றம்.]

அகவை— 1. உள்ளிடம். (உ-ம்) "ஆயகானகத்தகவையுட்சரித்தனு மங்ஙனாள்" (உபதேசகா. சிவவிரத. கச) 2. வயசு. (உ-ம்) "ஈராறுண்டகவையாள்" (சிலப். மங்கலவாழ்.)

அகழ்—1. அகழி. (உ-ம்) "வையையுமொருபுறத்தகழாம்" (திருவிளை. நகரப்ப. கஎ.) (2-4) அகழென்னேவலுந் தெரிநிலைவினைப்பகுதியும் பெயரெச்சத்தொகையும். (உ-ம்) "கல்லியங்ககழ் காமர்கிழங்கெடா" (இராமா. பா. வரைக். சுக. பெ-கை.)

அகழ்தல்—1. உழுதல். 2. தோண்டுதல். (உ-ம்) "அகழ்தன்மாக்கடலன்ன" (சிந். நாமக. ௪0க.) 3. மூலத்தோடு நீக்குதல். (உ-ம்) "அகழ்தருபாவத்தினராய்" (சூத- சிவ. கங:கூ.)

அகழல்—அகழ்தல். (சி.)

அகழான்—அகழெலி. (உவின். கூ.) [அகழ்; ஆன்.]

அகழானெடுத்தல் — அகழான் நிலத்திலே வளையுண்டாக்கி மண்ணைப்புறம்பே தள்ளுதல். (சி.)

அகழி—1. கிடங்கு. (உ-ம்) "பாராடைத்தகுண்டகழி" (புறநா. சச) கோட்டையின் மதிலினைச்சூழ்ந்துவர நீர் நிறைகும்படி ஆழமாகத்தோண்டப்பட்டிருக்குங் கிடங்கு (உ-ம்) "அருமிளையுடுத்த வகழிசூழ் போகி" (சிலப். புறஞ்சேரி. அக.) [அகழ்—தோண்டு இ-ஒரு செயப்படுபொருள்விகுதி]

அகழுதல்—அகழ்தல். (உவின். கூ.)

அகழெலி—ஒருவகைப்பேரெலி. (உவின். கூ.) [அகழ்; எலி]

அகளங்கம் — 1. களங்கமின்மை. (உ-ம்) "தேயுங்களங்கவுருவுடையை நீயிவன்செம்கூமலாய்ந்து தேயாதென்று மகளங்க வுருவுடையனுகலின்" (செங்கழுநீர் விநாயகர்பிள்ளைத்தமிழ். அம்புலி. உ) 2. சீதாங்கபாஷாணம். (உவின் கூ.) [அகளங்க: அ- எதிர்மறை. களங்க- குற்றம். உவில். உ0எ.]

அகளங்கமூர்த்தி — 1. கடவுள். (உவின் கூ.) 2. புத்தன். (திவாகர.) [அகளங்கம்-குற்றமின்மை. மூர்த்தி-வடிவுடையவன்.]

அகளங்கன்—1. கடவுள். (உவின். கூ) 2. குற்றமில்லாதவன். (உ-ம்.) "அகளங்கன நகனாதி" (நல். பாரத. கௌசிக. எஎ.) 3. புத்தன். (உவின். கூ.) [களங்கன்-- குற்றமுடையவன்.]

அகளம் — 1. சாடி. (சூ. நிக. எ: கூச.) 2. நிட்களம். (உ-ம்.) "அகளமெய் வடிவாநந்தவற்புதக்கூத்தனூர்" (காஞ்சிபு. திருச்சண். உஅ.) [களம்-உருவம்.] 3. நீர்ச்சால். (உ-ம்.) "அகளத்தன்னநிறைசுனைப்புறவின்" (பத்துமலை. ௪0சு.) 4. மிடா. (உவின். கூ.) 5. யாழின்பத்தர். (உ-ம்.) "வயிறுசேர் பொருகியவகையமையகளத்து" (பத்து. சிறு. உஉசு.) ["தாழிபோலப்புடைபட்டிருத்தலின்" அப்பெயர்த்து. மேற்படியுரை.]

அகளர் — நிட்களர். (உ-ம்.) "ஆன்மாக்கடேகம்போற் சர்மாஸ்தி முதலிய தேகதாதுக்களில்லையாகலின் அகளரே" (சி. சி. அளவை. சுரு உரை. சிவாக்.) [அ-எதிர்மறை. களர்-களையுடையவர்.]

அகளி — 1. தாழி. (மா.) 2. மிடா. (மா.)

அகற்சி — 1. அகலம், விசாலம். (உ-ம்) "அன்னமாபெருங்கயிலையினகற்சியுநிலைப்பும்" (உபதேசகாண். கயிலை. கச) 2. பிரிவு. (உ-ம்.) "அயலோராயினுமகற்சிமேற்றே" (தொல். பொரு. கூஅ.) 3 நீங்குதல்.

அகற்பசெபம்—விதியின்றிச்செய்யுஞ் செபம். (தத். நி. போ- உகஅ.) [அ-எதிர்மறை. கல்ப-விதி. ஜப-செபிக்கப்படுவது.]

அகற்பனை — கற்பனையில்லாதது, மநநினைவிற் கமையாதது. (உ-ம்) "இன்பமுதிரநிறைந்தகற்பனைக்கேதுன்னித்திகழ்தற்பதம்பற்றி" (ஞானவா. உற்பத்தி. கூ) [கற்பனை-நினைவு]

அகற்பம்— 1. ஒருபிராணயாமயோகம். அது: வாக்கினலே மந்திரஞ்செபியாமலும், மாத்திரலே சிவனைத்தியானியாமலுஞ் செய்யப்படுவது. (உ-ம்) "அகற்பமவ்விரண்டுமின்றியாக்கிமோயாமந்தான்" (சிவதரு. சிவஞானயோ. கூசு) 2. கற்பம் அநுகற்பம் உபகற்பமென்னும் மூவகையுமல்லாத விபூதி. (உ-ம்.) "இடியுண்டவிடத்திலுண்டானவிபூதியும் மலையுச்சியினும் பூமியினும் விளைந்தவிபூதியும் அகற்பமெனப்படும்" (சைவபொது. கஅசு-உரை.) [கல்ப- நியாயவழி. சப்த.]

அகற்பிதமரணம்—விதியின்றி நிகழு மரணம். (வி-ணி. உஉசு) [அகல்பித ம்-விதிக்கப்பட்டது. மரணம்-இறப்பு.]

அகற்பியமாமிசம்—அகலியமாமிசம். (சி. சி. பர. சௌத்-தம். உக. உரை.) [அ-எதிர்மறை. கல்ப்ய-விதியுடையது.]

அகற்றல்—அகலச்செய்தல். இது, "அறுவகையகற்றி" (வாதவூ. திருப். ருரு.) என்பதிற்போல, நீக்குதற் பொருளிலும், "களிறுசென் றுகளனகற்றவும்" (புறநா. உசு.) என்பதிற்போல விசாலமாக்குதற்பொருளிலும், "மடங்கொன்றறிவகற்றுங்கல்வி." (நீதிநெ. ந.) என்பதிற் போலப் பெருகச்செய்தற்பொருளிலும் வரும்.

அகற்றி—1. அகற்றினவன். (உ-ம்.) "சினமுதலகற்றிவாழும்" (சி.சி. உ:உச. சிவஞா.) 2. செய்தென்வாய்பாட்டோர்வினையெச்சம். (உ-ம்.) "அங்குறப்படுத்துவையகற்றி" (கந்தபு. திருநா. உச)

அகற்று—1 அகலேயுடைத்தெனப்பொருள்பட் டொன்றன்பாலில் வரும் ஒரு குறிப்புவினை முற்று. 2. அகற்றுதல். (உ-ம்) "யாவராலு மகற்றரிதிப்பிழை" (திருவிளை. கிரனை. சு.) [முதனிலைத்தொழிற்பெயர்.] 3-5. அகற்றென்னேவலுந் தெரிநிலைவினைப்பகுதியும் பெயரெச்சத்தொகையும்.

அகற்றுதல்—அகற்றல்.

அகறல்—1. அகலம். (சூ. நிகண். அ: சஉ.) 2. கடத்தல். (உ-ம்) "அடர் மலர்க்காற்குங்கட்குமகறலால்" (இரகு. மாலே. ருரு) 3. நீங்குதல். (உ-ம்) "அகறலினூற் பிறருடல்போற் றன்னுடலந்தனினு முறதிதரும பிமானமின்மையேயாகி" (வேதா. சூ. சுருக.)

அகன்—1. அகன்ற. (உ-ம்) "அகன்பிலவாயினூர்" (கந்தபு. வச்சிர. உச) 2. அகாசுரன், [இவன் பகன் பூதனை என்பவர்க்குச் சகோதரன்; கஞ்சனுக்குச் சேனைத்தலைவன்.] (ஆப்.எ. பிரபஞ். ருருச.) 3. உள். (உ-ம்) "அகனைந்திணையும்" (தொல். பொரு. ருச.) [அகம், அகனெனப் போலியாயிற்று.] 4. வினைமுதற் பொருளில்வரும் ஒருவிகுதி. (உ-ம்) நாயகன். (வீரசோ. தாது. ரு)

அகன்பணை—அகன்ற மருதநிலம். (உ-ம்) "ஆம்பலம்போ தளவோவளர் காணும் மகன்பணை நகே" (திருக்கோ. கக.)

அகன்மகதாது—செயப்படுபொருளில்லாத வினைப்பகுதி. (உ-ம்) "நட" (பி. வி- ருரு. உரை.) [அகர்மம்-செயப்படுபொருளில்லாதது. தாது-வினைப்பகுதி]

அகன்மகம்—செயப்படுபொருள் குன்றியவினை. (உ-ம்) "செயப்படுபொருள் குன்றாவினை குன்றிய வினைத்திறமிரண்டுஞ் சகன்மக மகன்மகம்" (பி. வி. ருரு. உரைச்சூத்திரம்) [அ-எதிர்மறை. கர்மகம்-செயப்படுபொருளுடையது.]

அகன்மகர்த்தரிப்பிரயோகம்—செயப்படு பொருளில்லாத வினையை எழுவாயிற் பிரயோகித்தல். (உ-ம) "சாத்தன்வரும்" (பி.வி. ருசு உரை) [அகர்மம்-செயப்படுபொருளில்லாதது. கர்த்தரிப்பிரயோகம்-எழுவாயிற் பிரயோகிப்பது.]

அகன்மணி—1. அகன்ற இரத்தினம். (உ-ம்) "அகன்மணி முன்றிலிற் றயில்வார்" (கூர்மபு. அந்தகா. உக.) 2. தெய்வமணி. (சி)

அகன்றவறிவு—சர்வஞ்ஞத்துவமாகிய பேரறிவு. (உ-ம்) "ஆயவாணவமகன்றவறிவொடு தொழிலையார்க்கும்" (சி- சி. ச. சக. உரை. ஞாந.)

அகன்றில்—ஆணன்றில். (உ-ம்) "உறைந்தனவகன்றிலுடனன்றிலுயிரொன்றி" (இராமா. கார்கா. எக.)

அகன்னம்—செவிடு. (உவில். உ.) [அகர்ண: அ- எதிர்மறை. கர்ணம்-காது]

அகஸ்மாத்து—காணப்பட்டகாரணமில்லாமை. (பௌட். பும்ஸ். கூச) [அகஸ்மாத்: கஸ்மாத்- யாதிலிருந்து.]

அகாகம்—ஆசௌசதினம். (வாச.) [அகாஹ: அகம்-ஆசௌசம். அஹம்-நாள்.]

அகாடி—(இர்தஸ்.) 1. குதிரைமுன்னங்கால் கட்டுங்கயிறு. (உவின். ரு.) 2. முன். (உவின். ரு.)

அகாண்டசாதம்—அகாலத்திற் பிறந்தது. (உவில். உ) [அகாண்டஜாத: அகாண்ட-அகாலம். ஜாதம்-பிறந்தது]

அகாண்டபாதசாதம் — அகாலத்திலே பிறந்து உடனே யழிதல். (ஆப். உ.) [அகாண்டபாதஜாதம்: அகாண்ட-அகாலம். பாதம்-விழுதல். ஜாதம்-பிறந்தது.]

அகாண்டபாதம் — அகாலசம்பவம். (ஆப். உ.) [அகாண்டபாத: அகாண்ட-அகாலம். பாதம-சம்பவித்தல்.]

அகாண்டம்—அகாலம், காத்திராப்பிரகாரம். (ஆப்.உ.) [அகாண்ட: காண்ட-காலம்.]

அகாத்தியம்—1. உண்ணத்தகாதது. (உவில்.ரு.) [அவாத்ய: வாத்ய-உண்ணத்தக்கது.] 2. பொல்லாங்கு. (உவின். ரு.) 3. வஞ்சனை. (சி.)

அகாத்திரம்—அவசியம்.(சி) கவனமின்மை. (சி.)

அகாத்துமசை—பார்ப்பதி.(வென்.ரு.) [அகாத்மஜா: அகம்-மலை. ஆத்மஜா-புத்திரி.]

அகாதத்துவம்—மிக்க ஆழத்தன்மை. (உவில். ரு.) [அகாதத்வம்: அகாத-ஆழம். த்வம-தன்மை]

அகாதம்—1 நீந்துபுனல். (பிங்க எஅ.) 2. பள்ளம். (உவின். ரு.) 3. பொந்து. (உவின். ரு.) 4. மிக்கஆழம். (வாச.) (உ-ம்) "உத்தரவாகினியாயும் அகாதமாயுமிருக்கிற

கங்கைநதிக்கரையில்" (விசார. அரு.) 5. வஞ்சகம். (உவின். ரு) [அகாத: அ-எதிர்மறை. காத-நிலே; மேடு.]

அகாதன் — வஞ்சகன். (உவின். ரு.) [அகாத-ஆழம்.]

அகாதிதம் — உண்ணப்படாதது. (உவில். ரு.) [அவாதித: வாதிதம்-உண்ணபபட்டது.]

அகாமம் —1. அகாமவினை.(உ-ம்) "முற்றும்வினைதைவிகத்தான் மோகத்தானேயான்மூர்க்கரசர் சோராரிவர்முடுகுபயத்தாலும்,அற்றுமுறைய றிவழிந்துமகாமமென வறிக" (சிவதரு. பரிகா. ரு.) 2. இச்சையின்மை. (வாச.) [அகாம: காமம்--இச்சை.]

அகாமவினை — அபுத்திபூர்வமாகச் செய்யுஞ் செய்கை; அது: தைவிகத்தாலும், மோகத்தாலும், வியாதியாலும், சோரபயம் முதலியவற்றாலும், அறிவழிந்து செய்யுஞ்செயல். (உ-ம்) "இருகபதியகாமவினையினுக்குப் பரிகாரம் பகர்ந்திடுவோம்." (சிவதரு. பரிகா. உ.) [அகாமம்- இச்சையின்மை. வினை--தொழில்.]

அகாயம் — 1. இராகு. (ஆப். உ.) 2. சரீரமில்லாதது. (ஆப். உ.) 3. பரப்பிரமம். (ஆப். உ.) [காயம்--சரீரம்.]

அகாயு — 1. கத்தி. (சி) 2. காகம். (சி) 3. தீயவழியில்நடக்கிறவன். (ஆப். எ.) [அவாயுஸ்]

அகாரணம் — 1. காரணமின்மை. (உ-ம்) "பொருதெல்லீருமகாரணத் தெதிர்த்தீர்" (காஞ்சிபு. தக்கி. கஉ. உவில்- உ.) 2. தற்செயல். (சி) 3. நிஷ்பிரயோசநம். (சப்த) [காரணம்-ஏது.]

அகாரணன் — 1. கடவுள். (செ) 2. காரணமில்லாதவன். (செ)

(காரணன்-காரணமுடையவன்.)

அகாரத்திரயவித்தை.— அகர எழுத்தை முதலிலுடைய மூன்றாகிய ஆகருடணம், அத்ரிச்சியம் அஞ்சநம் என்னும் பதங்களாற் கருதப்பட்ட மந்திரவித்தைகள். ஆகருடணம்-தூரத்திலுள்ளதைச்சமீபத்தில் வருவித்தல். அத்ரிச்சியம்—கண்களுக்குப் புலப்படுவதைப் புலப்படாமற் செய்தல். அஞ்சநம்—மறைந்து கிடக்கும் பொருட்களை விளக்கிக் காட்டுதல். [இது பின்வருமேற்கோளாற் பெறப்படும். "அகரமாதிமூன்றாகிய வாகருடணமே,புகரிலா வதிரிச்சியமஞ்சநம் பொருவில், வசரமாதி மூன்றாகிய வசிய மவாத,மிகவில்லாவயத்தம்ப மென்றின்னவை செய்தும்" (திருவிளை. எல்லாம். கஎ.) அகாரம்—ஒரெழுத்து. அஃது அகரத்தின் விகாரமாகிய ஆகாரத்தையும் உள்ளடக்கிற்று. த்ரய—மூன்று, வித்யா-மந்திரவித்தை.]

அகாரம்—1. அ என்னுமெழுத்து.(உ-ம்) "அகாரமுன்னுச், சார்ந்தவைம்பத்தோரெழுத்தின் சொரூபமாய்" (சூத. எக்கி. சஅ.) 2. ஒற்றெழுத்தின் சாரியைகளுளொன்று.(உ-ம) "லகார ளகாரமாயிரண்டும் பிறக்கும்" (நன். எழுத்தி. உகூ.) 3. செயலின்மை. (சப்த.) [காரம்-செயல்] 4. வீடு. (சப்த.) [அகார: அக-மலே, மரம். ஐ-எழுதல், அடைதல்.]

அகாரி — 1. இடி. (சி) [அகாரி: அக-பாம்பு. அரி-பகை.] 2. இந்திரன் (செ) [அக-மலே. அரி-பகைவன்] 3. கடவுள். (உவின். ச.) [அவ-பாவம். அரி-பகைவன்]

அகாரியம்-1.அப்பிரசாநமான காரியம். (உவின்.ச.) [அ; கார்ய] 2.எடுக்கக்கூடாதது, களவெடுக்கக் கூடாதது. (உவில.சுoச.) [அஹார்ய] 3.தகாதகாரியம். (உ-ம்) நாவகாரியஞ் சொல்லிலாதவர்" (நாலாயிர. நாவ. க.) [அகார்ய.] 4. துர்க்கிரியை. (சப்த.) [கார்யம்-செய்யத்தக்கது] 5. மலே. உவில்.சுoச.) [அஹார்ய; ஹார்ய எடுக்கத்தக்கது.]

அகாருண்ணியம்—காருண்ணியமின்மை. (சி. சி. பர. நிகண்ட-மதம். இ. உரை.) [காருண்யம்-- கிருபை]

அகாலம்— 1. அவகாலம். (உவில். உ.) 2. காலமல்லாதது. (உ-ம்) "உடலைநோக்குதிடகாலத்திலுன்னுடையுடலை." (ஞானவா. பிரகலா. சுக.) 3. நியமமல்லாதகாலம். (உ-ம்) இக்குவாகுவின் மரபோர் நாட்டுத்தன் றிடாவகாலந் தன்னிற்றோன்றிய பிரேத்த" (இரகு. சம்புக. உகூ.) [காலம்—சமயம்]

அகாலமரணம்—நியமமல்லாதகாலத்திற் சம்பவிக்கு மரணம். (செ)

அகாலமிருத்து — அகாலமரணம். (உவின். ச.) [அகாலம்-நியமமல்லாத காலம். மிருத்யு-மரணம்.]

அகி—1. ஆவணி. (இராசவைத்.) 2. இரும்பு. (பிங்க. ருoகூச.) 3. இராகு. (உவில். சுoச.) 4. ஈயம். (உவில். சுoச.) 5. ஒருவகைமரம். (சி) 6. சூரியன். (உவில். சுoச.) 7. பாதகன். (ஆப். சுசகூ)8. பாம்பு. (உ-ம்) "கடியகிப்பிணிதீர்ந்ததன்பின்"(சேதுபு. இராமனரு- ருo. உவில். சுoச.) 9. மேகம். (ஆப். சுசகூ.) 10. வச்சிராயுதம். (சி.) 11. வஞ்சகன். (ஆப். சுசகூ.) 12. வழிப்போக்கன். (உவில். சுoச.) 13. விருத்திராசுரன்.(உவில். சுoச.) [3, 4, 6, 7, 8. 9, 11, 12, 13 -அஹி]

அகிகாந்தம் — காற்று. (உவில். சுoச.) [அஹிகாந்த: அஹி—பாம்பு. காந்தம்-விரும்பப்பட்டது.]

அகிசை — 1. இலவமரம். (வாச.) 2. அருவநட்சத்திரம்.(வாச) [அஹிசா]

அகிஞ்சகன் — பிராணிகளுக்குப் பீடைசெய்யாதவன். (வாச) [அஹிம்ஸக: ஹிம்ஸக- பிராணிகளுக்குப்பீடைசெய்வோன்.]

அகிஞ்சந்யாயதநலோகம்— (பௌத்.) பிரமலோகமிருபதனுள்ளே ப

த்தொன்பதாம் உலோகம். (மணி மேகலை. கூ.)

அகிஞ்சநன்—மிகவறியவன். (உவில். உ.) [அ; கிஞ்சநம்-யாதுமொன் று.]

அகிஞ்சன்—மிகவறியவன். [அகிஞ்சநன் என்னும் வடமொழியின் ஈறு தொக்க து.]

அகிஞ்சை—1. கொல்லாமை. (வென். ககசு.) 2. தீங்குசெய்யாமை.(வென் ககசு) 3. பீடைசெய்யாமை. (வென் ககசு) 4. வருத்தாமை. (வென். ககசு) [அஹிம்ஸா: ஹிம்ஸா—கொலை,தீங்கு]

அகிதம்—1. அயோக்கியமானது, தகாதது. (உவில். கoசு.) உரியதல்லாதது. (உவின். சு.) 2. உயிர்களுக்குத்தீயென வேதாகமங்களில் விதித்தவற்றிற்கு மறுதலை செய்தல். (உ-ம்) "அகித மற்றது செய்யாமை" (சி. சி. உ: கூ, சிவஞா.) 3. பகை. (உவில். கoசு.) 4. நோயாளிக்குக் கொடுக்கத்தகாத போசநம். (உவில். கoசு.) [அஹித: ஹிதம்—நன்மை.]

அகிதமிட்டிரன்—ஓரரக்கன். (சேதுபு. விதும. சஅ. குறிப்பு.) [அஹிதம்ஷ்ட்ர: அஹி—பாம்பு. தம்ஷ்ட்ர—பல்லு.]

அகிதர்—பகைவர். (உவில். கoசு.) [அஹித: அ—எதிர்மறை. ஹித—சிநேகம்.]

அகிதலம்—பாதாளம். (உ-ம்) "அகித லவரயினதணிமுடிமணி யிடையண வின சிலவாளி" (இரகு. யாகப். எக.) [அஹி — பாம்பு, ஸ்தலம்—இடம்.]

அகிதன்— பகைவன். (வாச.) [அஹித.]

அகிதுண்டிகன்—1. பாம்பாட்டி (சப்த.) 2. பாம்புபிடிப்போன். (சப்த.) [அஹி துண்டிக: துண்டிக—துண்டத்திற் பிடித்து விளையாடுவோன் துண்டு—முகம். இகன்-ஓர்வடமொழிவிகுதி.]

அகிப்பிரத்திநதேவதை—உத்தரட்டாதியின் அதிதெய்வம். (உவில். கoசு.) [அஹிர்ப்ரத்நதேவதா.]

அகிப்பிரத்திநம்—1. இரவிலே நிகழும் மூன்று முகூர்த்தமாகிய உத்தரட்டாதி. 2. உத்தரட்டாதிநட்சத்திரம். (உ-ம்) "அகிப்பிரத்திநதேவதை"

அகிப்பிரத்திநன்—1. ஒருருத்திரன். (உவில். கoசு.) 2 சிவன். (உவில். கoசு.) [அஹிர்ப்ருத்ந: அஹி—பாம்பு. ப்ருத்ந—கட்டுதல், ந—ஓர்வடமொழி விகுதி. பாம்புகளாற்கட்டுண்ட கழுத்துடையானென்றபடி.]

அகிபதி—1. ஆதிசேடன். (உவில். கoசு.) 2. பெரும்பாம்பு. (உவில். கoசு.) 3. வாசுகி. (உவில். கoசு) [அஹிபதி: பதி—தலைவன்.]

அகிபுக்கு—1. கருடன். (சப்த) 2. கீரி. 3. மயில். (சப்த.) [அஹிபுஜ்: புஜ்—உண்பது.]

அகிபேநம்—1. அவின். (உவில். கoசு.) 2. பாம்பின்விஷம். (உவில். கoசு.) [அஹிபேந: அஹி-பாம்பு பேநம்—நுரை.]

அகிம்சை—கொல்லாமை. (உ-ம்.) "ஐந்துசீலமாவன: அகிம்சை, சத்தியம், அஸ்தேயம், பிரமசரியம், சங்கிரகம் எனக்கொள்க" (சி. சி. பர. சௌத்-தம். க. உரை.) 2. மநம்வாக்குக்காயங்களாற் தீங்கு செய்யாமை. (ஆப். ககூ.) [மகர ஒற்றுச் சகரத்தோடுமயங்குதல் சம்ஸ்கிருதவழக்கு. அஹிம்ஸா; ஹிம்ஸா—கொலை, தீங்கு.]

அகிமரால்—வெள்வேலமரம். (கா. வைத்.)

அகிர்—அயறு, தலைச்சுண்டு. (உவின். சு.) [வழக்.]

அகிர்த்துருமவிஷம்—பாம்புமுதலிய சரப்பொருள்களிலும், மரமுதலிய அசரப்பொருள்களிலு முள்ள விஷம். (சீவரட். கூஉஎ.) [அஹி—பாம்பு. த்ருமம்—மரம்.]

அகிர்ப்பிரத்திநன்—அகிப்பிரத்திநன் (வென். சுஎ.) [அஹிர்ப்ருத்ந]

அகிர்ப்புத்திநி—இரவில் நிகழும்மூன்று முகூர்த்தமாகிய உத்தரட்டாதி (விதான. குணகுண. எகூ. உரை.) 2 உத்தரட்டாதிச்சதிபர். (காலாமிர்தம். கூஞ் சுலோகம்) [அஹிர்புத்ந்ய]

அகிரச்சுசாமியம்—பாம்புக்குங் கயிற்றுக்குமுள்ள ஒப்புமை. (பௌட். மாயா. உசு.) [அஹி; ரஜ்ஜு; ஸாம்ய. ரஜ்ஜு—கயிறு. ஸாம்ய—ஒப்புமை.]

அகிரன்—1. சூரியன். (உவில். ௫.) 2. நெருப்பு. (உவில். ௫.) 3. புவர்லோகத்திலிருக்கும் பதினொருருத்திரரி லொருவன். (வி-ணி. உசஉ.) [அஹிர: அஹ—போதல். இர—ஒரு வடமொழி விகுதி.]

அகிரிபு—1. இந்திரன். (வாச) 2. கருடன். (வாச.) 3. கிருட்டிணன். (வாச.) 4. கீரி. (வாச.) 5. மயில். (வாச.) [அஹிரிபு: அஹி-விருத்திராசுரன், பாம்பு. ரிபு—பகை]

அகிருத்தியம்—செய்யத்தகாத செயல் (உ-ம்) "வேதத்தைப் பொருளுடனறிந்தவன் அகிருத்தியங்களால் சேரிட்ட பாவத்தைக் கொழுத்திவிடுவன்" (மநு. சஉ. கoங.) [அக்ருத்யம்: க்ருத்யம்-செய்யத்தக்கது.]

அகிருதம்—இருநூற்றிருபத்துநான்கு புவனங்களுளொன்று. (கந்தபு. கணங்கள். கo. உரை.)

அகிருதகம்—செய்யப்படாதது. (வென். உகக.) [அ; க்ருதக —செய்யப்பட்டது.]

அகிருதஞ்ஞதை—நன்றிமறத்தல் (உவில். கூ.) [அக்ருதஞ்ஞதா; க்ருதஞ்ஞதா—நன்றியறிதல்.]

அகிருதஞ்ஞன் — நன்றிமறந்தோன். (வாச.) [அகிருதஞ்ஞ: கிருதஞ்ஞ— நன்றியறிவோன.]

அகிருதம் — 1. செய்யப்படாதது. (உவில. கூ.) 2. ["ஓமத்திரவியம்" பார்.] 3. முடிவுபெறாத கிரியை. (உவில். கூ.) [அகிருத: கிருத-செய்யப்பட்டது.]

அகிருதர் — கிரியைசெய்யாதவர். (பௌட். பும்ஸ. உஎஇ.)

அகிருதித்துவம் — 1. அந்தக்கேடு. (உவில். கூ.) 2. தகுதியின்மை. (உவில். கூ.) 3. செய்யப்படாமை. 4. திருத்தமின்மை. [அகிருதித்வ: கிருதி-செயல். த்வ—தன்மை.]

அகில் — 1 அகில்வாசம். (உ-ம்) "அகிலுமாரமுமார" (இராமா. பால. வரை. ருஅ) 2. ஒருமரம். (உ-ம்) "அங்கோங்குமே, அகிலுமாரமுமாரவங் கோங்குமே" (மேற்படி ருஅ.) [இது கள்ளி விருக்ஷத்தி லுண்டாவதென்று சிலநூல்கூறும். (உ-ம்) "கள்ளிவயிற்றிலகில் பிறக்கும்" (திருவிளை. நாட். சகூ.)]

அகிலகாரணர் — சிவன். (உ-ம்.) "அகிலகாரணர்தாள்பணிவார்." (பெரியபு. திருக்கூ. ச.) [அகில-எல்லாம். காரணர்-காரணமானவர்.]

அகிலகாரணி — உமாதேவி. (உ-ம்) "அகிலகாரணி மலையான் மகள்" (காஞ்சிபு. வயிரவ. உகூ.) [அகில—எல்லாம். காரணி—காரணமாயிருப்பவள்.]

அகிலநாயகன் — கடவுள். (உ-ம்.) "அகிலநாயகனவற்குமேலிறையவனில்லை" (காஞ்சிபு. சார்ந்தா. உ0) [அகிலநாயக: நாயக — நடத்துவோன்]

அகிலபோகம் — 1. சகல அநுபவம். (சி.) 2. உலகவாழ்வு. (சி.) [அகில — எல்லாம், உலகம். போக — அநுபவம்.]

அகிலம் — 1. எல்லாம். (உ-ம்) "அகிலதேவர்க்கும்" (பெரியபு. திருஞான. கூக.) 2. சருவலோகம். (உ-ம்) "அகிலத்துள்ளதோர்கணங்களும்" (கந்தபு. பார்ப். கூ.) 3. பிரபஞ்சம். (உ-ம்) "அழிந்தபிணனுக்கடாமேயகிலமாய்வாதுநின்று, அழிந்ததே" (சி.சி.ச: கக.) 4. பூமி. (உ-ம்) "அகிலமெலாங்குநாடுவன்" (கந்தபு. சூரன்றண். உகூ.) [அகில: அ-எதிர்மறை. கில-குறைவு]

அகிலநூபன் — 1. எல்லாவடிவமுமானோன் (சி.) 2. கடவுள். (சி.) அகில: ரூப- வடிவுடையவன்]

அகிலலோகம் — சகலலோகம். (உ-ம்.) "அகிலலோகமும்போல்வததனில்—" (பெரியபு. திருக்கூ. ச.) [அகில; லோகம்]

அகிலாங்கம் — சதுரவடிவம். (உ-ம்) "அற்புதமாந்திரிபுண்டமதியின்பாதியகிலாங்கந்தீபமிகுமழசார்வட்ட, முர்பொலியுமுடலணியுமுறையாரன்றேமுமுநீறுபூசவல்லமுநிவர்தாமே" (திருமுறைகண்டபு. கூஅ.) [அகில—பிருதிவி. அங்க—வடிவம்.]

அகிலாண்டகோடி — கோடிக்கணக்கான முழுவண்டங்கள். "அகிலாண்டகோடி யெல்லாம்" (தாயு. க.) [அகில; அண்ட; கோடி.]

அகிலாண்டம் — 1. சகல அண்டம். (உ-ம்) "நீ பெற்றவகிலாண்டமு நிரைத்துவைத்தது கடுப்ப" (மீனாட்சியம்மைபிள், அம்மானை. ரு.) 2. பிருதிவியண்டம். (சி.) [அகில-எல்லாம், பிருதிவி.]

அகிலாண்டவல்லி — உமாதேவி. (சி) [வல்லி-கொடிபோல்வாள், சகல அண்டங்களையும் பிறப்பித்த பெண் என்றபடி.]

அகிலேசர் — விசுவேசர். (உ-ம்.) "உடையாளகிலேசர்க்கு" (காசிக். க.உ.) [அகில-விசுவம். ஈச - தலைவர்.]

அகிவைரி — 1. கருடன். (சி) 2. மயில். (சி.) (அஹிவைரி: அஹி-பாம்பு. வைரி- விரோதி.]

அகிற்குடம் — அகிற்றூமக்குடம். (உ-ம்) "அகிற்குடம்பரப்பி" (சிந்தா. இலக். சகூ.)

அகிற்குறடு — அகிலங்கட்டை. (சி) [அகில்-அகிலமரம். குறடு-கட்டை]

அகிற்கூட்டு — ஏலம், கருப்பூரம், எரிகாசு, சந்தனம், தேன் என்னும் ஐந்தின் கலவை. இதுமயிருக்குப் பரிமளம் ஊட்டும்படி கொள்ளப்படுவது. (உ-ம்) "உந்து சந்தனங் கர்பூர முடனெரிகாசு செந்தேனந்தவேலங்களென்பவகிற்கூட்டோரைந்தாநதாமே" (சூ. நிகண். சஉ: கூகூ) 2. சந்தனம், கர்ப்பூரம், எரிகாசு, ஏலம், தேன், கோர்கட்டி என்னும் இவ்வாறின் கலவை. (சி. தொ.)

அகிற்புகை — அகிலங்கட்டையெரிந்துண்டாகிய புகை. (உ-ம்) "அகிற்புகைகாட்டி" (கந்தபு. தெய்வ. உசகூ.)

அகீசன் — ஆதி சேடன். (சி) [அஹி-பாம்பு. ஈச— தலைவன்.]

அகீநகு — சூரியவமிசத்திலே ஸ்ரீராமனுக்குப் பின்னிருந்த ஓரரசன். (இரகு. குலமு. கூ.) [அஹீநகு]

அகீநம் — 1. குறைவின்மை. (வாச.) [அ-எதிர்மறை. ஹீநம்-குறைவு. -] 2. பலநாளாகச் செய்யப்படும் ஓர் யாகம். (ஆப். கககூ.) [அஹீந: அஹந்-நாள். ஈந- ஓர்வடமொழிவிகுதி.]

அகீநன் — பெரியோன். (உவில். சoச) [அஹீந: அ-எதிர்மறை. ஹீந-நீசன்.]

அகீர்த்தி — துர்க்கீர்த்தி. (உவில். உ.) [அகீர்த்தி: அ-எதிர்மறை. கீர்த்தி-புகழ்]

அகுசலம் — 1. அதிட்டவீனம், துக்கம். (உ-ம்) "அகுசலவேதனை" 2. சாமர்த்தியமின்மை. (உவில். கூ.

[அகுஶல: அ- எதிர்மறை. குஶல-ச ந்தோஷம், சாமர்த்தியம்]

அகுசலவேதனை—துக்க அறிவு; இது பஞ்சகந்தங்களுள் ஒன்றாகிய வேதனையின்பகுதி மூன்றனுள் ஒன்று. (மணிமேகலை.உகஉ.) [அகுஶல—து க்கம். வேதநா-அறிவு.]

அகுட்டம்— மிளகு. (உவின். ச.)

அகுடம்—கடுரோகிணிப்பூண்டு. (உவின். ச.)

அகுணத்துவம்—அகுணதை. (உவில். ரு.) [அகுண;த்வ-தன்மை.]

அகுணதை-குணமின்மை.(உவில். ரு.) [அகுணதா:தா--தன்மை]

அகுணம்—1. குற்றம், குறை. (உவில். ரு.) 2. குணமின்மை, நற்குணமின்மை, ஒன்றுக்கு முதவாதது.(உவில். ரு.ஆப்.ரு) [அகுணம்; அ; குணம்]

அகுணன். — குணமில்லாதவன். (ஆப். ரு.) [அகுண.]

அகுணாத்துமா—அவ்வியத்தம். (பௌட். பும்ஸ்.கூகஇ.) [அகுணாத்மா:அ-எதிர்மறை-குணாத்மா—குணவடிவுடையது]

அகுணி—1. குணமில்லாதது. (உவின். ச.) 2. குணமில்லாதவன். (சி) 3. மூடவன்.(உவின்.ச.) [அகுணி: அ; குணம்; இ.]

அகுதம்—1· அழைக்கப்படாமை. (உவில். கoச.) 2. ஐவகை யாகத்து ளொன்றாகிய திடாநம்; அது: மாமான துசதாசிவாதி விக்கிரகங்களுளொன்றை யன்பினாலே நினைந்தத்தியாநத்திலே யிடைவிடாது கலந்துநிற்றல். (உவில். கoச.) 3. யாகஞ்செய்யப்படாமை. (உவில். கoச.) 4. வேதமோதல். (மநு. ௩: எச.)

[அஹுத: ஹுதம்-ஓமஞ்செய்யப்பட்டது, அழைக்கப்பட்டது.]

அகுதி—அகதி. (உ-ம்) "அகுதியிவடலையின்விதியாலும்"(திருப்பு. 'சஉக. நன். பொதுவி. உக. உரை. இராமா.) [அகதியென்பதன்விகாரம்.]

அகுப்பியம்— 1. பொன். (உவில். உ) 2. வெள்ளி. (உவில். உ.) [அகுப்ய; குப்ய —செம்பு,பித்தளைமுதலிய இழிந்த லோகங்கள்]

அகும்பை—கவிழ்தும்பைப்பூண்டு. (உவின் ச.)

அகுரு— அகிலமரம் (ஆப். ரு.) 2 இலகுவானது, கநமில்லாதது. (சிசி. அ; கஉ. உரை. மறை.) 3. குருவில்லாதவன். (ஆப்.ரு.) [அகுரு: அ—எதிர்மறை, குரு-கநம், ஆசிரியன்.]

அகுருத்துவம் — கநமின்மை. (சி. சி. பர. நிகண்ட. ரு.) [அ—எதிர்மறை. குருத்வம்-பாரமுடைமை] 2. குருத்தன்மை யின்மை. [குருத்வம்-குருத்தன்மை.]

அகுலி—நச்சுவிலிமரம். (வை. தி.)

அகுலீநன்- உயர்குலத்தோனல்லாதவன்.(உவில்.௩,) [அ—எதிர்மறை. குலீந-உயர்குலத்தோன்.]

அகுவைக்கட்டி—அரையாப்புக்கட்டி. (வை.தி.)

அகுளிதநாதர்—நிஷேத கர்ம சாத்திரங்கள் செய்த நவநாதசித்தர்களிலொருவர். (த. நி. போ. உருக.)

அகுளுந்தி—வேப்பமரம்.(வை.தி.)

அகூடகந்தம்—பெருங்காயம். (உவில். கூ.) [அகூடகந்த: அகூட—மறைவின்மை. கந்த - வாசனை.]

அகூப்பாரம்—1. (பூமியைத்தாங்குவதென்று சொல்லப்படும்) ஆதிகூர்மம். (உவில். ௩.) 2. ஆமை. (உவில். கூ.) 3. கடல். (உவில்-௩.) 4. கன்மலை (உவில்.௩.)

[அகூபார: கூ-பூமி. பாரம்-சுமை, கரை·]

அகூபாரன்—1. ஆதி கூர்மம். (சி.) [பூமியைத் தனக்கோர் பாரமென்று மதியாதவனென்றபடி.] 2. சூரியன். (ஆப்.௩.) [பூமியின் பாரத்தைக்குறைக்கிறவன் என்றபடி.]

[அகூபார: அ; கூ;பாரம்.]

அகேசன்—மயிரில்லாதவன். (உவில், ரு-) 2. மூண்டிதமுடையவன். (உவில். ரு.)

[அகேஶ; கேஶ-மயிருடையவன்.]

அகேது—காரணமின்மை. (உவில். சoரு.) [அஹேது: ஹேது- காரணம்.]

அகை —1-3. அகையென்னேவலுந் தெரிநிலைவினைப்பகுதியும் பெயரெச்சத்தொகையும். 4. எரிதல். (உ-ம்) "அகையுறுகழைகொன்றுண்ட"(கந்தபு. வள்ளி. கக.) [இதுமுதனிலைத்தொழிற்பெயர்.] 5, கூறுபாடு. (சிந். முத்தி. கூகூ. உரை.)

அகைத்தல்— 1. அடித்தல். (பிங்க. உகஙஎ.) 2. அறுத்தல். (உ-ம்) "மயிருக்கொன்றாக வாங்கியகைத்தகைத்திடுவேர்" (சிந்· முத்தி. ககூஅ.) 3. எழுப்புதல்· (உவின். ச.) 4. ஓட்டுதல். (இராசவை.) 5. செலுத்துதல். (இராசவை.) 6. தழைத்தல், கிளைத்தல். (உ-ம்) "குப்பைக்கீரைகொய்கண்ணகைத்த"(புறநா. கருக.) 7. முறித்தல். (உ-ம்) "உம்பலகைத்த வொண்முறியாவும்" (பத்து. மலைபடு. சஉக) 8. வருத்தல். (உவின். ச.)

அகைதல்— 1. எரிதல். (உ-ம்) "அகையெரியானாது" (கலி. கஙகூ.)

2. ஒடிதல். (உ-ம்.) "அகைந்தவித்து ணைமலர்" (பாரத. புட்ப. சo.) 3. தளிர்த்தல். (உ-ம்) "கொய்குழை யகைகாஞ்சி" (கலி. எசு) 4. முரிதல். (உவின். ச.) 5. வருந்தல். (உ-ம்) "அ கையேலமர்தோழி" (சிந். சேம. கக௬.)

அகைப்பு—1. அடித்தல். (உவின். ச.) 2. அறுத்தல். (உவின். ச.) 3. எழுப்புதல். (உவின். ச.) 4. ஒடித்தல். (உவின். ச.) 5. முறித்தல். (உவின். ச.)

அகைப்புவண்ணம்—இருபது வண்ணங்களுள்ஒன்று; அது"வாராராயினும் வரினு மவர்நமக்-கியாராகியரோ தோழீ" என்பதிற்போல அறுத்தறுத்துப் பயிலுஞ் சந்தமுடையது. (உ-ம்.) "அகைப்புவண்ண மறுத்தறுத் தொழுகும்" (தொல். பொரு. ருசஉ) [அகைப்பு-அறுத்தல், வண்ணம்-சந்தம். விட்டுவிட்டுச்செல்வது என்றபடி]

அகைமம்—குருவிச்சை. (வை. தி.)

அகோ—ஒருவடமொழி யவ்வியயம்; இது: இகழ்ச்சி, துக்கம், இரக்கம், ஐயம், அழைப்பு, ஆச்சரியம், புகழ்ச்சி, சம்மதம், பொறுமை முதலிய பொருள்களுளொன்றையுள்ளிட்ட ஒருகுறிப்புமொழி. (வூச.) (உ-ம்) "மண்டலத்திலொருவன் செய்த வித்தை யகோவெனவும்" (ஆச்சரியம்) (தாயு. மண்ட. ச.) [அஹோ.]

அகோசரம்— 1. அறியப்படாமை. (உ-ம்) "காட்சிமுன்னைம்பிரமாணங் களுக்கு மகோசரமதான- திருகில் பிரமம்" (சூத. எக்கி. பூ. கஅ; சூ. உவில். சூ.) 2. காணப்படாமை. (உவில். சூ.). பரப்பிரமம். (உவில். சூ.) 4. புலன்களுக்கு விடயமாகாமை. (உவில். சூ.) [அகோசர: அ-எதிர்மறை. கோசர-விடயம்.]

அகோடம்—கமுகமரம். (உவில். ௬.) [அகோட: அ-எதிர்மறை. கோட-வளைவுடையது.]

அகோத்திரம் — கோத்திர மின்மை. (உவின். ச.) [கோத்ரம் - குலம். உவில். ௬கo.]

அகோதாரை-அதிகமாகமழைபொழிகை. (உவின். ச.) [அஹோ-ஆச்சரியங்குறிக்கும் ஓரவ்வியயம். (ஆப். கக௪.) தாரா-நீரொழுக்கு. (ஆப். ௬உக.)

அகோபிலம்—கடப்பையென்னு மூரிலுள்ள ஒரு விட்டுணுதலம்; இது சென்னைக்கு வடமேற்கே யுள்ளது. (உ-ம்) "சோலகோபில நரசிங்கம்" (திருச்செந். கஅ; சங.)

அகோரகலை— சிவபூசை செய்யும்போது சிவலிங்கத்தைச் சதாசிவனுகப்பாவித் தவரதைந்து முகத்தினு நிற்பனவாகக் கொள்ளப்படுங் கலைகளுள் அகோரமுகத்தில் நிற்குங் கலைகள்; அவை: தமம், மோகம், காயை, நிட்டை, மிருத்து, மாயை, உருத்திரபயம், சுவரம் என எட்டாமென்றும் அவற்றுக்குத் தாநங்கள் இருதயம், கண்டம், வலத்தோள், இடத்தோள், நாபி, வயிறு, முதுகு, மார்பு என எட்டாமென்றுஞ் சொல்வர். (அகோ. கிரி. உசங-உசச.)

அகோரகைவல்லியப்பிரதம்—தணிகைமலை. (உ-ம்) "வீட்டினையகோரனென் றுரைக்கு-மிறபுநவத் தேரற்குத்தளித்திடலாலகோரகைவல்லியப்பிரதம்" (தணிகை. புராண. சுo) [அகோர-ஒரு தபோதநன். கைவல்யம்-மோட்சம். ப்ரதம்-கொடுப்பது. (உவில். ருககு.)]

அகோரசிவாசாரியர்—பத்ததிகாரர் பதினெண்மருள் ஒருவர்; இவர் வசித்த இடஞ் சிதம்பரம். (உ-ம்) "ஸ்ரீமத். அகோரசிவாசாரியர் பத்ததி முதற் சிலபத்ததிகளில்" (சி. சி. அ; ரு. உரை. ஞா.)

அகோரதந்திரம் — உபாகமங்களுளொன்று. (சி) [அகோரதந்த்ர.]

அகோரப்பிரமம்—அகங்காரம், சட்சு, பாதம், ரூபம், அக்கினியென்பவற்றிற் கதிட்டாநதேவதையாகிய உருத்திரர். (கூர்மபு. பிர. தோ. கூ-உரை.) [அகோரப்ரஹ்மம்.]

அகோரம்—1. அகோரமுகம். (உ-ம்) "விசயமுதலைந்தும் விகிர்தவகோரத்தி-லிசையவுதித்தே" (சைவச. பொது. ௬௬) 2. அச்சம்விளைக்கத்தக்கது. (உவில். கூ.) 3. அச்சம்விளையாதது. (ஆப். எ.) 4. உக்கிரம். (உவின். ச.) 5. கொடுஞ்செயல். (உ-ம்) "அன்னதோர்காலையகோர வெங்காலன்" (திருநெல். சுவேத. அஅ.) 6. நரி. (சி) 7. பஞ்சமந்திரங்களு ளொன்று; அது பஞ்சபாசங்களையும் அழிப்பது. (பௌட். பதி. சுo.) [அகோர: அ-எதிர்மறை, ஒப்புமை. கோர-அஞ்ஞாநம், பயங்கரமானது.]

அகோரமுகம்—சதாசிவனுடைய ஐந்துமுகங்களுளொன்று; இதுசாத்திருசாதாக்கியமென்னுந் தத்துவமும் ஈசுரனென்னு மூர்த்தியும் பொருந்தியுள்ளது. [அகோர; முக.]

அகோரலிங்கம் — பஞ்சலிங்கங்களுளொன்று. (த. நி. போ. ௬கூஉ.) அகோர; லிங்க.]

அகோரவுரை — அகோரமந்திரம். (உ-ம்.) "உரைத்தேயகோரவுரை" (சைவச. பொது. ௬உக.) [அகோரம்; உரை-மந்திரம்.]

அகோரன்—பரசிவன். (உ-ம்) "அவமறுத்தெமைப் புரக்கு மீசானன

கோரன் சத்தியோசாதன்" (சூத எக்கி. பூ.௬௯: உ.) [அவொர: அ-ஒப்புமை. [வொ ர-பயங்கரம்.]

அகோராத்திரம்—1. அகோரம் அத்திரமென்னும் இரண்டு மந்திரங்கள். (உ-ம்) "அருமைமகவின் சிரப்புறத்திலகோராத்திரத்தான் (திருவாலை. கோச்செ. எச.) [அவொராஸ்த்ரம்] 2, இரவும் பகலும்; அஃதொரு சூரியோதயந்தொடங்கி மற்றைநாட் சூரியோதயம்வரையுமுள்ள காலம். (உ-ம்) "அக்கலை முப்பான்கொண்டது முகூர்த்த -முஹமது முப்பான்கொண்டது மனிதர்க் கோர கோராத்திரமாகும்" (சூத. சிவமா. அ: ௬.) [அஹோராத்ர: அஹஸ்-பகல். ரத்ர-இரவு.]

அகோரை—1. இரண்டரைநாழிகைக்காலம். (உவின். ௬.) [அஹோரா] 2. புரட்டாசிமாதத்துக் கிருட்டிணபக்கத்துச் சதுர்த்தசி. (உவில். ௬.) [அவொரா.]

அங்கக்கிரகம்—ஒருவகைச்சரீர வலி-கெண்டைவாங்கல். (ஆப். அ.) [அங்க ஹ: அ௦ற-சரீரம். ஹ-பிடிப்பு.]

அங்கக்கிரியை—1. சரீரத்தினதுறுப்பினுற் செய்யுஞ்செயல். 2. சரீரத்தினுல், நடனார்த்தமாகச் செய்யுஞ்செயல்; அச்செயல்: சரிகை, புரிகை, சமகலி, திரிகை, ஊர்த்துவகலிகை, பிருட்டகம், அர்த்தபிருட்டகம், சுபத்திகம், உல்லோலம், குர்த்தாம், வேட்டநம், உபவேட்டநம், தாநபதப்பிராயவிருத்தம்,உட்சேபணம், அவட்சேபணம், நிகுஞ்சநம் எனப்பதினறுவகைப்படும். (உ-ம்) "ஈரெண்வகைய வங்கக் கிரியையும்" (சிலப். அரங்கே. கஉ. உரை.குறிப்பு.) [அங்கக்ரியா: அங்க-உறுப்பு, சரீரம். க்ரியா-தொழில்.]

அங்ககம்—1. அங்கத்தோடுசம்பந்தமானது. (உவில். க௦.) 2. உறுப்பு. (வென். ௬.) 3. சரீரம். (உவில். க௦.) [அ௦றக: அ௦ற; கா.]

அங்ககாரம்—1. அங்கசேட்டை. (ஆப். ௬.) 2. பரதத்திற்பொதுஇலக்கணங்களாகிய இருபதுபேதங்களுளொன்று. (உ-ம்) "விண்டிடாத் தேசிசாரியே நியாயம் விருத்தியே பிரவிசாரம்பூ-மண்டலமுடனகரசமண்டலமே மாசில்சுத்தக் கரணஞ்சேர்-கண்டவுற்புலிதகரணமே யங்ககாரமே யிரேசிதமென்னக்-கொண்டநாலைந்துபேதமுங்கற்றுக்கோதறப்பயின்றபினவற்றுள்" (திருவிளை. சான்மா. ௬.) [அங்கஹார: அங்க-சரீரம். ஹார-அசைத்தல். இருபதுபேதங்களினெஞ்சியவற்றின் நாமம் எட்டாஞ்செய்யுளிற் காண்க-]

அங்ககீநம்—உறுப்புக்குறைவு. (வாச.) [அ௦றஹீந: அங்க-உறுப்பு. ஹீநம்-குறைவு.]

அங்ககீநமந்திரம்—இருதயம் முதலிய அங்கங்களைக் குறியாதுசொல்லும் மந்திரம். (த. நி. போ. உகள்) [அ௦றஹீநமந்த்ர]

அங்ககீநன்—உறுப்புக்குறைந்தவன். (வாச.) [அ௦றஹீந: அ௦ற-உறுப்பு. ஹீந:-குறைந்தவன்.]

அங்கச்சநி—ஒருவன் பிறக்கும்போதவனுடைய தேக உறுப்பில் நிற்பதாகக் கணிக்கப்படுஞ் சநி. (உ-ம்.) "ஒன்றுநான்காறு நான்கோரைந்துமூன்றிரண்டுற்றிரண்டு-மென்றும் வாய்கைகாலிடக்கைவயிறுச்சி கண்ணிலிங்கம்-பொன்றுமரணம் வழிபோக்கிடர் திருப்போற்றுநன்மை-நன்றுதீதங்கச்சநி நின்றநாண்முதலுட்டிக்கொள்ளே" (விதாந. எச்ச. ௫௧.) [அ௦ற;ஶநி.]

அங்கச்செவ்வாய்—ஒருவன்பிறக்கும்போதவனுடைய தேக உறுப்பில் நிற்பதாகக் கணிக்கப்படுஞ் செவ்வாய். (உ-ம்) "அங்கச்செவ்வாய் பலன்" (விதாந. எச்ச. ௬எ. கவிமுகம்.) [அ௦ற; செவ்வாய்.]

அங்கச்சோமன்—ஒருவன் பிறக்கும்போதவனுடைய தேக உறுப்பில் நிற்பதாகக் கணிக்கப்படுஞ் சந்திரன். (உ-ம்)"முண்டந்தொடை கணைக்கால்பத முச்சி கண் வாய் செவிதோ-டொண்டையுரம் வயிறங்கச்சோமற்குத்தன்னேரைபற்றிக்-கண்டனரின்பநற்காலஞ் சுகநோய் கணிகைதுன்ப-முண்டிடரின்பமொடோகையிலரப் நோயுற்றிடுமே" (விதாந. எச்ச. ௬௬) [அ௦றஸொம; அ௦ற-உறுப்பு. ஸொம-சந்திரன்.]

அங்கசங்கம்—புணர்ச்சி. (ஆப். க.) [அ௦றஸங்க: அங்க-சரீரம். ஸங்க-புணர்ச்சி.]

அங்கசம்—1. இரத்தம். (உவில். க௦.) 2. உரோமம். (உவில். க௦.) 3.காமம். (உவில். க௦.) 4. நோய்.(உவில். க௦.) [அ௦றஜ: அ௦ற-உடம்பு, மாம். ஜ-பிறந்தது.] 5. மலைகளிலொன்று. (உ-ம்.) "அங்கசமென்னுங் குன்றும்" (கூர்மபு. சம்பு-அஅ.)

அங்கசலநவாதரோகம்—ஒருவகை வாதரோகம்; அது:

"வாதத்தைப் பிறப்பிக்கின்ற வஸ்துவையும், வாதகோபவஸ்துவையும் மிகவும் புசித்தலினுல் சர்வாங்கத்தினும் பிறந்து வாதநரம்புத்துவாரங்களினும்வியாபித்து, உடம்பெங்கும் பரவி வேதனையைச் செய்யும். அப்போது ஊர்த்துவாங்கத்திலாவது, அதோங்கத்திலாவது, நடுக்கல் உண்டாகும். (சிவரட். ௧எ௬) [அ௦ற-தேகம். சலநம்-அசைதல்.]

அங்கசவேள்—மன்மதன். (உ-ம்) "அங்கசவேள்முரசென்னவதிர்ந்த"

(பிரபுலி. கைலாச. உக) [அംഗജ; வேள்.]

அங்கசன்—1. புத்திரன். (வாச.) 2, மன்மதன். (உ-ம்) "அங்கசன்றென் றற்றேரிலாயினன்" (நல். பார. வ ந. கoரு(உவில்.கo.) [அംഗജ: அംഗ—உடம்பு, மாம். ஜ:—பிறந்தவன்.]

அங்கசா—சோதிடவுறுப்புக்களிலொன்று. (சி) [அங்ற—ஜ்யா]

அங்கசாதநம்--ஒருவன் பிறக்கும்போதவனுடைய தேக உறுப்புக்களில் நிற்பனவாகக் கணிக்கப்பட்டவனுக்கு நிகழும் பலாபலன்களையுதியச் செய்யுங் கிரகநிலை. (உவின். சு.) [ஸாதநம்—வசிக்குமிடம்.]

அங்கசாரி—சிவன். (சி) [அംഗജாரி: அംഗജ:-மன்மதன். அரி:-பகைவன்]

அங்கசாலைக்காரன்—ஊரதிபதியின் கட்டளைப்படி கிராமத்தாரைக் கூடும்படி செய் தற்கான ஆயத்தங்களைப் பண்ணுகிறவன். (உவின். சு.)

அங்கசிவயோகம்—அட்டாங்க சிவயோகம். (சி. சி. அ: உக. உரை. சிவாக்.)

அங்கசுபாதி—சிறுபுள்ளடியென்னும் ஓர்பூண்டு- [அங்ஸ்--பறவை. (ஆப். க.) பாத-அடி. இ-ஓர்விகுதி. இதனை "அங்குசபாதி" யென்றும் "அங்கிஷபாதி"யென்றும் பிறழவழங்குவர். (கா. வைத்.) (பதா. வைத்.]

அங்கசேட்டை- (உவின்.சு.) உடம்பினதுசலநம். 2. கைமெய்க்காட்டு. [அங்கம்—உடம்பு, உறுப்பு. சேஷ்டா-அசைதல். (ஆப். ருஉஎ.)]

அங்கசை—மகள். (உவில். கo.) [அംഗജா: அംഗ—உடம்பு. ஜா--பிறந்தவள்.]

அங்கண்—1. அவ்விடம். (உ-ம்) "அங்கணுற்றில" (கந்தபு. சூரன் றண்ட.உக.) [அ-அந்த. கண்-இடம்.] 2. அழகியஇடம்.(உ-ம்) "அங்கணுலகந்தனில்" (கந்தபு. மாயை. அo.) [அம்--அழகு. கண்—இடம்.]

அங்கணம்—1. இரண்டுதூண்களுக்கிடையிலுள்ள இடம். (உவின். அநு.) 2. உள்ளறை. (உவின். அநு.) 3. கடிமரம். (கா. வைத்.) 4. சலதாரை. (உ-ம்) "ஊரங்கணநீருரவு நீர்ச்சேர்ந்தக்கால்"(நாலடி. நல்லின. ரு.) 5. சேறு. (உ-ம்) "அங்கணம் படர்வோரென்னவகமெலிவுற்றேன்" (கந்தபு. வீரவாகுசய. கஅ.) 6. பத்துமுழத்தளவு. (சி) 7. பரப்பு. (உ-ம்) "ககநாங்கணம்" (ஆப். க.) 8. பொரிகாரம். (சி) 9. மதகு. (சி) 10. முற்றம். (உ-ம் "அங்கணத்துக்கவமிழ்தற்ருல்" (வள். எ௨o) 11. வெண்காரம். (உவின். சு.) [1,2,4,5,6,7,8,9,10, 11, அங்கண.]

அங்கணர்—சிவன். (உ-ம்) "வீரட்டத்தமர்ந்தருளுமங்கணரும்" (பெரியபு. தடுத்தாட். அடு) [அம்—அழகு. கணர்-கண்ணுடையவர். அருட்கண்ணரென்றபடி]

அங்கணன்—1. அருகன். (உவின். சு.) 2. சிவன். (உ-ம்) "அங்கணனேயருளாய்" (தேவாரம். திருமுது. ச. சுந்தர.) 3. மிருதபாஷாணம். (கா. வைத்.) 4. விட்டுணு. (உவின். சு.)

அங்கணாளர்—சிவன். (உ-ம்) "அங்கணாளர்தமபிமுகத்தினில்" (பெரியபு. திருஞான. கoஅரு.)

அங்கணி—1. கற்றாழை. (கா. வைத். 2. காளி. (உவின், சு.) 3. பார்ப்பதி. (உவின். சு.)

அங்கத்தீ—உதராக்கினி; அது: சமாக்கினி, விஷமாக்கினி, தீட்சணக்கினி, மந்தாக்கினியென நான்குவகைப்படும். (உ-ம்) "சேர்த்தங்கத்தீ நான்கிலாதியந்தத்தி முறையேயெரி" (தைல. சுஅ.)

அங்கத்தை--அவ்விடத்திருக்கும் பெரியவர். (உ-ம்) "அங்கத்தைச்செல்லாந்தெரியும்" (வழக்.) [அங்கு; அத்து; ஐ--பெரியவர்.]

அங்கதச்செய்யுள்—வசைக்கவி. (உ-ம்) "செடுவெண்பாட்டேகுறுவெண்பாட்டே, கைக்கிளைபரிபாட்டங்கதச்செய்யுளோ, டொத்தவையெல்லாம்வெண்பா யாப்பின" (தொல். பொரு- சகூo.)

அங்கதப்பாட்டு—அங்கதச்செய்யுள் (உ-ம்) "அங்கதப்பாட்டவற்றளவோடொக்கும்" (தொல். பொரு. சஎஉ.)

அங்கதம்—1. சந்திரகலை பதினறிலொன்று. (வி-ணி. உசகு.) 2. தோளணி, வாகுவலயம். (உ-ம்-) "மற்றடம்புயவரைமிசைவரம்பிலாவிலைகள் பெற்றவங்கதம்" (திருவிளை. மாணிக். கஉ.) [அங்கத.] 3. பாம்பு- (உ-ம்) "அங்கதக்குழாமங்கதுபுரிந்தன" [சேதுபு. காசிப. சஉ.) 4-பொய். (உவின். சு.) 5. மார்பு. (சி) 6. யானையுணவு.)உவின். சு.) 7. வசைகூறுங் கவி; அது; செம்பொருளங்கதமென்றும் வசைப்பொருளினைக் கரந்துசொல்வதாகிய பழிகரப் பங்கதமென்றும் இரண்டுவகைப்படும். (உ-ம்) "ஆற்ற நன்னெடுங் கவிஞரோரங்கதமுரைப்ப" (இ. ராமா. முதற். உசஅ.) "அங்கதந்தானேயரிறபத்தெரியிற்-செம்பொருள் கரந்ததென விருவகைத்தே"(தொல். பொரு. சகூசு.)

அங்கதர்—வசைச் செய்யுள் சொல்வோர்.(உ-ம்-) "புலவோர்களைப்பழிக்கும் பொல்லாவங்கதர்க்கெளியேனலேன்"(தேவார.ஆலவா. கo. சம்.)

அங்கதன்—1. இலக்குமணனுடைய ஒரு மகன். (இரகு. அவதா, ரு.) [அங்கத.] 2. கிட்கிந்தையிலே யிருந்த குரக்கரசனுகிய வாலியின் ஒருமகன். (இராமா, விடை. கஅ.)

அங்கதாரி—1. சிவன். (சி) 2. சீவன். (சி) 3. தேசம். (சி) [அங்ம—எனுடம்பு, உடம்பு. தாரி-தரிப்பவன், தரிப்பது.]

அங்கதாளம்--பரதசாத்திரத்திற் சொல்லப்பட்ட தாளப் பிரமாணங்கள் பத்தினுள் ஒன்று; அது: அநுதரிதம், துரிதம், இலகு, குரு, புலுதம், காகபதம் என ஆறுவகைப்படும். (சி. தொ. "தாளப்பிரமாணம்" பார்.)

அங்கதி— 1. கொடை, தியாகம். [அ௦ஹதி] 2. நெருப்பு. (உவில். கூ.) 3. நோய். (சப்த.) [அ௦ஹதி.] 4. பிரமா. (உவில். கூ.) 5. யாகாக்கினி வளர்க்கும் பிராமணன். (உவில். கூ.) 6. வாகநம். (ஆப். கூ) 7. வாயு. (உவில். கூ.) 8. கிருட்டிணன். (உவில். ௪௦.) [2, 4, 5, 7, அங்கதி. 6, 8, அ௦ஹதி.]

அங்கதை—1. சதாசிவனுடைய பஞ்சமுகங்களு ளொன்றாகிய ஈசாநமுகத்தினிற்கும் கலைகளுள் ஒன்று. (த. நி. போ. ௬௦௪.) 2. தென்றிசை யானையின் பெண்யானை. (உவில். ௪௦) [அ௦ஹதா.]

அங்கநட்சத்திரம்—ஒருவன் பிறக்கும்போது அவனுடைய தேக உறுப்பின்றபதாகக் கணிக்கப்படும் நட்சத்திரம். (சாதகசிந். ௧௬௬. கவிமுகம்.) [அங்கநக்ஷத்ர.]

அங்கநம்—1. அசைதல், போதல். (உவில். ௪௦.) 2. அரசர்மனையின் முற்றம். (உவில். ௪௦.) 3. முற்றம். (உவில். ௪௦.) [அங்கந.]

அங்கநாகணம்— மாதர்கூட்டம். (உவில். ௪௦.) [அங்கநாகணம்: அங்கநா—பெண், கணம்—கூட்டம்.]

அங்கநியாசம்—அநுட்டானக்கிரியைகளுள் ஒன்று; அது: இருதயம் முதலிய அங்கங்களிலே மந்திரத்தோடு கையாற்றொடுதல். (உ-ம்) "அங்கநியாசஞ்செய்க" (சூத. ஏக்கி. ரு: ௪௫. (ஆப். அ.) [அங்கந்யாஸ: அங்க--உறுப்பு. ந்யாஸ-வைத்தல்.]

"இருதயத்திலே வலதாநாமிகாங்குட்டத்தினாலே யாசகமூர்த்தியை நியசித்துக், கையை முட்டியாகப்பிடித்துச் சிரசாதி பாதாந்தமாக அங்குட்டாதி கநிட்டாந்தமான விரல்களினாலே யீசாநாதியான பஞ்சப்பிரமங்களையும் நியசித் திருதயத்தில் வித்தியாதேகத்தை யங்குட்டாநாமிகாதிகளினாலே நியசித்து நேத்திரங்களில் நேத்திரமந்திரங்களை நடுவிரல் மூன்றினாலேயும் நியசித் திருதயத்தில் மூலமந்திரத்தை நியாசஞ்செய் திருதயசிரச்சிகாஸ்தாநங்களிலே யிருதயசிரசிகாமந்திரங்களை யங்குட்டத்துடனே கூடின கநிட்டாதியான மூன்றுவிரல்களினாலும் நியாசஞ்செய்து, கவசத்தை ஸ்தநமத்தியங்களிற் கண்டத்தைச்சுற்றுதலுடனே தர்ச்சநிகளினாலே நியசித் துள்ளங்கைகளிலே யஸ்திரத்தை யநாமிகைகளினாலே வலமிடமாக நியசித்து, ஹும்படாந்த அஸ்திரத்தினாலே தாளத்திரய திக்குபந்தநஞ்செய்து கவசத்தினாலே யவகுண்டநஞ்செய்து வௌஷடந்த மூலத்தினாலே சிரசுமுதல் பாதமளவாக மகாமுத்திரையுந் தரிசிப்பித்தல்வேண்டும்" என் றகோரசிவாசாரியர் பத்ததி, கம் பாகம் ௧அ ம் பக்கத்தில், அங்கநியாச விபரங் கூறியிருக்கின்றது.

அங்கநூல்—வேதாங்கநூல். (உ-ம்) "மந்திரஞ் சிட்சை சோதிடாதி மற்றங்கநூல்" (தாயு. ஆசார. உ.)

அங்கநை—1. அழகுள்ளபெண். (ஆப். கூ.) 2. கந்நிராசி (ஆப். கூ.) 3. பெண். (உ-ம்) "அங்கநைகடவாகடஞ்செய் கச்சிவாணன்" (கம்பர. உ௧) 4. வடதிசையானையின் பெண்யானை. (சப்த.) [அங்கநா.]

அங்கநையர்— 1. அழகுள்ளபெண்கள். 2. பெண்கள். (உ-ம்) "அங்கனையரிளமாமுலை" (பாரத. பதினே. ௬௬.)

அங்கப்பிரத்தியங்கம்—அங்கமும் பிரத்தியங்கமுமான உறுப்புக்கள்; சிரமும், முகமும், இருதயமும் அங்கமெனப்படும். மார்புங், கழுத்துந், தாலங்களுந், தோள்களுங், கொப்பூழும், வயிறுங், குய்யமுங், கண்களும், மூக்குங், காதுகளும், நெற்றியுங், கால்களும், விரல்களுந், தொடைகளும், முழங்கால்களுங், கணைக்கால்களும்,பிரத்தியங்கமென்று சொல்லப்படும். (உ-ம்) "அங்கப்பிரத்தியங்கஞ்செறிந்த மற்றையுறுப்பெல்லாம்" (சிவதரு. சௌச. ௧௮; சி. சி. க: ௭௭. உரை. சிவாக்.) [அ௦ஹ—பிரத்ரங்கம். ப்ரத்யங்க— அப்பிரதாநம்]

அங்கப்பிரதக்கிணம்—சரீரத்தா லுருண்டு வலம்வருதல். (உ-ம்) "வீதியிலங்கப் பிரதக்கிணம் புரிந்தோர் விமலனோடொளவளாய" (சேகாழிப்பு. தல. ௧௪.) [அ௦ஹ—உடம்பு. ப்ரதக்ஷிண-வலம்வரல்.]

அங்கப்பிரதட்சிணம்—அங்கப்பிரதக்கிணம். (சி)

அங்கப்பிராயச்சித்தம்—தேகவியோகத்தைக்குறித்த புலம்பற் காலத்தில் வரலாய ஆசௌசம் நிவிர்த்தியாதற் பொருட்டுத் தேகசுத்தி பண்ணிச்செய்யும் பிராயச்சித்தம். (உவில்.௪௦.) [அ௦ஹப்ராயஶ்சித்த: ப்ராயஶ்சித்த —நிவிர்த்தி.]

அங்கபங்கம்—1. உடம்பினுறுப்புக்களின் சோர்வு, சோர்வாத்ம். (ஆப்.அ.) 2. சரீரவுறுப்பின் சேதம். (உ-ம்) (சாதகசிந். ௧௨௬௨. கவிமுகம்.) [அங்கஹங்க: ஹங்க—பின்னம.]

அங்கபாலி—1. கட்டித் தழுவுதல். (உவில். கூ.) 2. வளர்த்ததாய். (உவில். கூ.) [அம்சபாலி: பாலி-காப்பது, காப்பவள்.]

அங்கபாலிகை— கட்டித்தழுவுதல். (உவில். கூ.) [அம்சபாலிகா.]

அங்கபுதன் — ஒருவன் பிறக்கும் போதவனுடைய தேக உறுப்பில் நிற்பதாகக் கணிக்கப்படும் புதனென்னுங்கிரகம். (உ-ம்) "அங்கபுதன்பலன்" (விதான. எச்ச. சஅ. கவிமூசம்.) [அங் ம; வ-டய.]

அங்கபூ—மகன். (ஆப். அ.) [அங்ம ஹூ: அங்ம –சரீரம். ஹூ-பிறந்தவன்]

அசையந்தாதி—செய்யுளில் ஓரடியின் ஈற்றசை மற்றையடிக்கு முதலசையாகவருந் தொடை. (சி.) [இது, யா. காரிகை. உறுப்பி. ௧எ. உரையில், அடிதோறும் இறுதிக்கண் நின்ற எழுத்தையும், அசையையும், சீரையும் ஆதியாகத் தொடுப்பது அந்தாதித் தொடையென்பதனாற் பெறப்படும்.]

அசையாநிலை —அசையாத நிலை. (உவின். க.)

அசையாமணி—விசேடசமயங்களினன்றி அசைக்கப்படாத மணி. [அரசருடைய ஆராய்ச்சிக்குக் கருவியாக வைக்கப்படுதலால் இதனைச் சிலர் ஆராய்ச்சிமணியென்பர். உவின். க.]

அசையாமை—சலநமின்மை. (உ-ம்.) "விஞ்சமசைவசையாமை யிரண்டுமொன்றாய்" (ஞானவா. சிகித். ௧௪0.)

அசையிடல் —அசைபோடல். (சி.)

அசையு—அமுக்கிரா என்னும் பூண்டு. (சி.)

அசைவாடுதல்—1. அசைதல். (உவின். க.) 2. உலாவுதல். உவின். க.)

அசைவின்மை—முயற்சி. (உ-ம்.) "ஆகூழாற்றோன்று மசைவின்மை" (வள். ௬௭௧.)

அசைவு—1. அசைந்து தூங்கும் ஒரு தாங்கி. (சி.) (உ-ம்.) "பாயை யசைவிலே வைத்தாள்" 2. ஆட்டம், எழுச்சி. (உ-ம்.) "பெருத்து நீண்டசைவுபெற்றிடுமாலை" (கந்தபு. முதனாட். ௬௮.) 3. சலநசத்தி. (உ-ம்.) "காற்றிலே யசைவும்" (ஞானவா. பாலன். ௨.) 4. சலநம். (உ-ம்.) "தூணமொத்தசைவற நின்றான்" (காஞ்சிபு. சார்ந்தா. ௬௧.) 5. சோம்பலாகிய பாட்டிற்குற்றம். (உ-ம்.) "நாசிகாகுளி- பேசுறு குற்றமசைவொடு மா

ற்றி" (கல்லாடம்.) 6. சோர்வு, தளர்வு. (உ-ம்.) "அற்றுத்தற்சேர்ந்தார்க் கசைவிடத்து" (நாலடி. குடிப். ௪0.) 7. நிலைதவறுகை. (உ-ம்.) "ஓரசைவிலாதவனறைந்தனன்" (பாரத. கிருட். ௪௯அ.) 8. புடைபெயர்ச்சி. (சி.) 9. மடிதல், பின்னிடுதல். (உ-ம்.) "அசைவிலூக்கத்து நசைபிறக்கொழிய" (சிலப். இந்திர. ௯டு.) 10. மனக்கலக்கம். (உ-ம்.) "அசைவிலாடவன் றன்னை" (கந்தபு. சூரன்றவ. உஅ.) 11. முன்னிலைமைகெட்டு வேறொருவாறுகி வருந்துதல். (உ-ம்.) "இழிவே யிழவே யசைவே" (தொல். பொரு. உடுரு.) 12. வருத்தம். (உ-ம்.) "என்னுழை யசைவின்றையனே" (சிந்தா. கநக. உடுஅ.)

அசைவுதீர்தல்—இளைப்பாறுதல். (உ-ம்.) "சென்றதுபரிதிவட்டஞ்செம்மலு மசைவுதீர்த்தான்"

அசைவெட்டுதல்—இரைமீட்டு மெல்லுதல். (சி.)

அசோகத்தளிர்மணி—சௌகந்திகப் பதுமராகமணி. (சி.)

அசோகம்—1. அசோகமரம். (உ-ம்.) "அளிமுரலணிமல ரசோகம் பூத்தன" (நைட. அன்னத்தைக்க. ௲.) 2. அசோகம்பூ. (ஆப். ௪0௨.) 3. சோகமின்மை. (உ-ம்.) "அசோகமெய்தி-மாருததண்ணளிகூர் மலர்வாண் முகமாதவியே" (வாண. கக.) 4. பாதரசம். (உவில், ௯க.) 5. மருதமரம். (உவின். ௯.) 6. வாழை. (உவின். ௯.) [அஶோக.]

அசோகரோகிணி—ஒருமருந்துப்பூண்டு. (உவில். ௯க.) [அஶோகரோஹிணீ.]

அசோகவநம்—1. அசோகமரச் சோலை. (க. பொ.) 2. இராவணனுடைய உத்தியானவனம். (க. பொ.) 3. வாழைவனம். (மா.)

அசோகவநிகாநியாயம்—இராவணன் சீதையை வைத்தற்கு மற்றை யிடங்களை விட்டுப் பிரதான காரணம் ஒன்று மின்றி யசோகமரச்சோலையைத் தெரிந்து கொண்டது போல ஒருகாரியத்தைச் செய்தற்குப் பலவழியிருக்கவும் பிரதான காரணமின்றி யொருவழியைத் தெரிந்து கொள்ளுதல். (ஆப். ௪. எ௨.) [அஶோகவநிகா – அசோகமரச்சோலை. ந்யாய–நீதி.]

அசோகவநிகை—அசோகமரச்சோலை. (ஆப். ௪0௨.) [அஶோகவநிகா: அஶோக–அசோகமரம். வநிகா-சோலை.]

அசோகன்—1. அருகன். (உ-ம்.) "சமணருமசோகன்றனை நினைந்து" (திருவிளை. பாண்டி. ௬0.) [அசோகமர நிழலில் இருக்கிறவன் என்றபடி.] 2. சோகநீங்கினவன். (உ-ம்.) "எனையசோகனெனச் செயவெண்ணியோ" (சேது. இராமனரு. ௧எக.) 3. மன்மதன். (சி.) [அஶோக.]

அசோகாரி—கடம்பமரம். (ஆப். ௪0௨.) [அஶோகாரி.]

அசோகு—1. அசோகமரம். (உ-ம்.) "கணியின்கொம்பருலவியே யசோகின்வாவி" (கந்தபு. வள்ளி ௬௨.) 2. அசோகம்பூ. (சி.) [இதனை மன்மதனுடைய பஞ்சபாணங்களுளொன் றென்ப.] 3. மருது. (கா. வைத்.) 4. வாழை. (கா. வைத்.)

அசோகை—சவரிப்பூண்டு. (உவில் ௯க.) [அஶோகா:]

அசோசம்—1. அமைதி. (உவில். ௯ச.) 2. மனத்திருத்தி. (உவில். ௯க.) 3. விசாரமின்மை. (உவில். ௯க.) [அஶோச: அ-எதிர்மறை. ஶோசம்–துக்கம்.]

அசோண்டி—அசோணம். (கா. வைத்.)

அசோணம்—சூறட்டைப்பூண்டு, சவரிப்பூண்டு. (கா. வைத்.) 2. சவரிலோத்திரம். (கா. வைத்.)

அசோதநம்—1. அசுத்தம். (உவில். ௯க.) 2. திருத்தமின்மை. (உவில். ௯க.) [அஶோதந: ஶோதநம்-சுத்தி.]

அசோதிதம்—சுத்திபண்ணப்படாதது. (உவில். ௯க.) 2. திருத்தப்படாமை, பரிசோதிக்கப்படாமை. (உவில். ௯க.) [அஶோயித: அ; ஶோயித.]

அசோதை—நந்தகோபன்மனைவி; இவள் கண்ணபிரானை வளர்த்த தாய். (உ-ம்.) "அன்றிற்பெடைபோலரற்று மசோதை கையினளித்தார்" (கூர்மபு. கண்ணனவ. ௬0) (சப்த) [யஶோதா: யஶஸ்–கீர்த்தி. தா-கொடுப்பவள். யகாரங்கெட்டு "அசோதை" யெனத் தற்பவமாயிற்று.]

அசோவதி—மேருவின் வடகிழக்கிலுள்ள ஒருநகரம். (உ-ம்.) "இலகொளிவடகீழ்த்திசை யிடைவிளங்கு மசோவதி யென்னு நன்னகரில்" (கூர்மபு. மேருவின்சி. கடு.)

அசௌசம்—1. அசுசி, அழுக்கு, சுத்தியின்மை. (ஆப். ௪0௨.) 2. சனனமரணங்களால் வரும் ஆசௌசம். (ஆப். ௪0௨.) [அஶௌச: ஶௌசம்- சுத்தம்.]

அசௌந்தரியம்—அவலட்சணம். (உவில். ௪00.) [அஸௌந்தர்ய: ஸௌந்தர்ய–அழகு.]

அசௌரியம்—வீரமின்மை. (ஆப். ௯க.) [அஸௌர்ய: ஸௌர்ய–வீரம்.]

அஞ்சணங்கம்—பஞ்சலக்கணம். (மா.)

அஞ்சணங்கியம்—பஞ்சலக்கியம். (மா.)

அஞ்சத்தான்—பிரமா. (உ-ம்.) "அஞ்சத்தானுடியான வானவர்" (கந்தபு. அக்கினி. ௯எ.) [ஹம்ஸம்-அன்னப் பறவை. அத்து-ஒருசாரியை. ஆன்–ஒருவிகுதி.]

அஞ்சதி—காற்று. (உவில். கச.) [அஞ்சதி: அஞ்ச்-போதல். அதி - ஒருவடமொழிவிகுதி.]

அஞ்சநக்கல்—கருநிமிளை. (உவின். கo.)

அஞ்சநக்கலிக்கம்—அஞ்சநம் பார்க்கக் கண்ணுக்கிடும் ஒருமருந்து. (உவின். கo.)

அஞ்சநக்காரன்—அஞ்சநவித்தை செய்கிறவன். (சி.)

அஞ்சநக்கிரி—நீலமலை. (உ-ம்.) "அஞ்சநக்கிரியில் வாழு மசுரன்ருன்" (அருணசலபு. இடப். க.)

அஞ்சநக்கோல்—அஞ்சநந்தீட்டும்இலேகநி. (உ-ம்.) "அஞ்சநக்கோலினுற்ற நாகம்" (சிந்தா. விமலை. சு.)

அஞ்சநகிரி—சேடமலை. (சி.)

அஞ்சநசலாகை—மைதீட்டுங்கோல். (ஆப். கஉ.) [அஞ்ஜநஶலாகா: அஞ்ஜந–மை. ஶலாகை-கோல்.]

அஞ்சநசேவோத்தேசநம்—அஞ்சநபிரயோகத்தினுல் விளக்குதல். (உ-ம்.) "அஞ்சநசேவோத்தேசநகிருத்தியத்தாற் கண்ணுெளிவிளங்கிக் காணப்படுதல்போல்" (சி. சி. ரு: க. ஞாங்ப.) [அஞ்ஜந; ஸேவா; உத்தேஜநம்.]

அஞ்சநத்திரயம்—மூவகையஞ்சநங்கள்; அவை: பூதாஞ்சநம், சோராஞ்சநம், பாதாளாஞ்சநம் என்பன. (உவின். கo.) [அஞ்ஜந; த்ரய-மூன்று.]

அஞ்சநபாஷாணம் — விளைவுப்பாஷாணம் முப்பத்திரண்டி னென்று. (உவின். கo; சட்ட. கஅஉ.) [அஞ்ஜந; பாஷாணம்-கல்லு.]

அஞ்சநம்—1. அக்கிநி. (ஆப். கஉ.) 2. ஆணவமலம். (உ-ம்.) "அணுக்கடஞ்சத்திதன்னைத் திரைப்பரஞ்சநமுமற்றே" (சிவதரு. சிவஞா. கக.) 3. இரவு. (ஆப். கஉ.) 4. ஒருபூண்டு. (வெண். க.) 5. ஒருமரம். (உ-ம்.) "சூலஞ்சந மந்தாரை" (மச்சபு. அத்திரி. ரு.) 6. ஒருமலை. (உ-ம்.) "அஞ்சநந் தவஞ்சங் கோவத்தநந் திரிகூடங் காஞ்சி-குஞ்சரஞ்சைய மேமகூடமேவிந்தமென்னு–மஞ் சிவர் வரைகளெட்டும்" (திருவிளை. யானையெ. எ.) 7. கண்ணுக்கிடும் மை. (உ-ம்.) "அஞ்சநவியர்மதர்க்கண்ணிணைவிரகின்" (இரகு. தேநு. சுரு.) 8. கருமை. (உ-ம்.) "மேலோரஞ்சநப் போர்வை போர்த்தாலன்னதால்" (கந்தபு. காளிந். கo.) 9. கலிக்கம். (உவின். கo.) பரம்புகடியுண்டவர் முதலியோர்க்குக்கண்ணிலிடும் மருந்து. 10. சலவைக்கல். (உவின். கo.) 11. தாமதகுண சித்துகளுளொன்று; அது: கண்ணுக்குப் புலப்படாது மறைந்து கிடக்கும்பொருளை வெளிப்படுத்திக்காட்டுவது. (கூர்மபு. உ: கச. உரை.) 12. மறைந்துகிடக்கும் பொருளைக் காட்டும் மை. (உவின். கo.) 13. மேற்றிசைக் காவலமர்ந்துளதென்றுசொல்லப்படும் ஓர் யானை. (சூ. நிகண். கஉ. எசு.) 14. மை. (பிங். ருoசச.) [அஞ்ஜந]

அஞ்சநவண்ணன் — விஷ்ணு. (உ-ம்.) "அஞ்சநவண்ணனுழி யெடுத்திடில்" (பாகவத. உத். ருo.) [அஞ்ஜந; வர்ண–நிறமுடையவன்.]

அஞ்சநவித்தை—அறுபத்துநான்கு கலைஞாநங்களில் ஒன்று; அது: மறைந்தபொருளைக் காண்பிப்பது. (உ-ம்.) "அறுபத்து நான்கு கலைகளாவன; மாயாசம் பிரதம்......அஞ்சநவித்தை...... அஞ்சநவித்தை-மறைபட்ட பொருளைக் காண்பிப்பது" (சௌந். ருo. உரை.) [அஞ்ஜந; வித்யா.]

அஞ்சநன் — 1. இந்திரன். (சி.) 2. சநி. (சி.) 3. விட்டுணு. (சி.) [அஞ்ஜந–கருமை. ன்-ஒருவிகுதி.]

அஞ்சநாட்சியம்மை — திருக்கற்குடியிலே கோயில் கொண்டிருக்குந் தேவியார். (அபிதா.)

அஞ்சநாலர் — 1. கருங்காக்கணம். (மா.) 2. நீலோற்பலம். (மா.)

அஞ்சநாவதி — சுப்பிரதீகமென்னும் வடகிழ்த்திசை யானையின் பெண்யானை. (உவில். கச.) [அஞ்ஜநாவதி: அஞ்ஜந–கருமை. வதி–உடையது.]

அஞ்சநி—1. காயாவென்னு மரம். (உ-ம்.) "அஞ்சநி தலையசைப்ப" (இரகு. குசவயோ. கூஅ.) 2. நாணற் புல். (உவின். கo.) [அஞ்ஜந-கருமை. இ–ஒருவிகுதி.]

அஞ்சநேயன்—அநுமான். (உ-ம்.) "அஞ்சநேயனுமார்த் தெதிர்ந்து" (நல். பார. இராவண. சஉ.) [அஞ்ஜநா-அஞ்சநை. ஏய - மகன்மையைக்காட்டும் ஓர் விகுதி.]

அஞ்சநை—1. அநுமானுடைய தாய் (உ-ம்.) "திருமலரஞ்சநை சேய்பணிமாலத்தர்" (மறை–தி.) [இவள் முன் ஓர் அப்சரஸ்திரியாயிருந்து பின் ஒரு சாபத்தாற் குஞ்சரன் என்னும் வாநரனுக்குப் புத்திரியாகப் பிறந்து, இச்சித்த ரூபங்களை யெடுக்கும் வன்மையுடையளாய் ஒருநாள் மனுஷரூப மூள்ள ஒரிளம் பெண்ணுகி வாயுபகவானைக்கூடி யநுமானைப்பெற்றவள், பின்னர்க் கேசரியென்னும் வாநரனை மணம்புரிந்து அவனுக்கு மனைவியாயினவள் என்பர். அபிதா.] 2. ஒருநதி. (உ-ம்.) "கங்கையமுனை பிரயாகை கலைகாவிரி சந்திரபாகை–தங்குகோதாவிரி தேவிசரையு நமிதைகோமதியே– யங்கண்டகிமந்தாகிநியோ–டயிரஞ்சநை மந்தகை சோணை–நங்கவுசிகைசிந்து சங்கால்லகேயை சரசுக்கள்" (விருத்தாசலபு. தீர்த்தச். கo.) 3. தீபசிகை. (உ-ம்.) "அஞ்சநை நாமிகாவர்த்தமரோகம்" (சீவரட். உசரு.) 4. வடதிசைக் காவலமர்ந்துள தென்று சொல்லப்படும்

சாருவபூமம் என்னும் யானையின் பெண்யானை. (உவின். சo.) [அஞ்ஜநா.]

அஞ்சனைநாமிகாவர்த்தமரோகம்— இமையைப் பற்றிய ரோகபேதங்களு ளொன்று; அது: இமைகளின் நடுமைய த்திலாயது முனைகளிலாவது பயறு களின் பிரமாணமாகத் தாம்பிரநிற த்துடன் உதிரத்தைக் கக்குவதான கட்டிகளை யெழுப்புவதும் அக்கட்டி கள் தினவுடன் நோவைத்தருபவைக ளும் திரமுள்ளவைகளுமாக இரு ப்பதுமானது. (சீவரட். உசரு.) [அஞ்ஜநா-தீபச்சிகை. நாமிகா; வர்த்த ம-இமை. ரோ ரு.]

அஞ்சப்படுதல் — மதிக்சப்படுதல். (உ-ம்.) "மாலால்-அலரேந்தியஞ்சலி செய்தஞ்சப்படுவான்" (சிந்தா. கந க. ருச.)

அஞ்சபாதம் —1 அன்னப்புள்ளினடி. (உவின். சo.) 2. ஓர் புள்ளடிக்குறி. (சி.) 3. சாதிலிங்கம். (உவில். கூகூஉ.) [ஹம்ஸபாத: அன்னத்தின்கால்போலு ம்நிறமும் உருவும் உடைமையாற் சா திலிங்கத்திற்கு இப்பெயர் வந்தது.]

அஞ்சம்— 1. அசபாமந்திரம். (உ-ம்) "காயத்திரியதனின திகமஞ்சமாமந்தி ரம். (காஞ்சிபு. திருவேக. உஅ.) 2. அன்னப்பறவை. (உ-ம்.) "அஞ்சமு மஞ்சவருஞ் சசிவந்தாள்" (கந்தபு. தெய்வ. உசo.) 3. ஒருவகைச் சந் நியாசம். (உ-ம்.) "குலவுறு சந்நியா ச வாச்சிரமங் குடீசகம் வெகூதகம ஞ்சம்- நலமுறுபரமகஞ்சமேயென் ன நான்கதாம்" (சூத. சந்நியாச. உ.) 4. பங்கு. (உ-ம்.) "அஞ்சக்கலைப டு" (திருப்பு. கூக.) [1, 2, 3, ஹம்ஸ. சப்த. 4. அம்ஸ.]

அஞ்சாதன்—பிரமன். (உவில். கூகூஉ.) [ஹம்ஸ; ரத - வாகநம்.]

அஞ்சல்—1. அஞ்சாதிருக்க எனப்பொ ருள் படும் ஒருவியங்கோள்வினைமுற் று. (உ-ம்.) "அஞ்சலஞ்ச லென்றடி மைக்கு" (தாயு. பராபர. கஉச.) 2. தபால். (உவின். சo.) 3. தரங்கல். (உ வின். சo.) 4. தோல்வி. (பிங்க. கஅசூஎ.) 5. பயப்படுதல். (உ-ம்.) "எ ஞ்சுமவர் தம்மை யிளையோன் பரி வினோக்கி-யஞ்சல்விடு மின்களென" (கந்தபு. தகரே. கஎ.)

அஞ்சலம்—1. சீலையினேரம். (உவில். கச.) [அஞ்சல.] 2. வாளுறை. (மா.)

அஞ்சலர்—பகைவர். (உ-ம்.) "அஞ்சல ர்தனிப் போரேறே" (நல். பார. மா ர்க். உசரு.)

அஞ்சலளித்தல்—அபயங்கொடுத்தல் (உ-ம்.) "வெள்ளைக்கயேந்திரனுக் க ஞ்சலளித்து" (கந்தர் கலிவெண்பா. கூசா.)

அஞ்சலி— 1. ஆடுதின்னாப்பாலை. (உ வின். சo.) 2. இரண்டுகைகளையும் இ ணைத்து உள்ளங்கைகளைப் பதித்துக் கோலிய குழி. (வென். கூ.) 3. இர ண்டுகைகளையும் இணைத்து உள்ளங் கைகளைப்பதித்துக் கோலிய குழியிற் கொள்ளத்தக்க அளவு. (வென். கூ.) 4, இரண்டு கையும் பதாகையாய் அ கம் ஒன்றுவது. (உ-ம்.) "அஞ்சலி யென்ப தறிவுறக்கிளப்பின் — எஞ்ச லின்றி யிருகையும்பதாகையாய்-வந் தகம்பொருந்து மாட்சித்தென்றன ர்-அந்தமில்காட்சி யறிந்திசினோரே" (சிலப். அரங்கே. கஅ. உரை.) 5. ச ங்கங்குப்பிப்பூண்டு. (உவின். சo.) 6. நான்குபலம். (உ-ம,) "கழலடிய ஞ்சலியைந்து" (தைல. தைலவ. ருச) 7. நெற்றியிற் கைகுவித்துக் கும்பிடு தல். (உ-ம்.) "அஞ்சலிகுவித்தகரங்க ளுந் தலைமேலணைந்திட" (பெரியபு. திருஞா. சூருரு.) 8. மாவிலிங்கைம ரம். (உவின். கo.) 9. வண்டுகொல்லி ப்பூண்டு. (கா. வைத்.) 10. வறட்சு ண்டி. (உவின். சo.) 11. வெளவால். (உவின். கo.) [2, 3, 7. அஞ்ஜலி.]

அஞ்சலிக்கை—கைமுகிழ்த்தல்.

அஞ்சலிகாரிகை—1. ஒருபூண்டு. (உவில். கச.) 2. சித்திரப்பாவை. (உவில. கச.) [அஞ்ஜலிகாரிகா: அஞ்ஜலி-கைகுவிப்பு. காரிகா-செய்வது.]

அஞ்சலிகை — வெளவால். (பிங்க. உகூஅக.)

அஞ்சலித்தல்—அஞ்சலிசெய்தல். (உ-ம்.) "அஞ்சலித்தடிமேற்சூடி" (நல். பார. மார்க்கண். உசரு.)

அஞ்சலிவந்தநம்— நெற்றியிற் கைகு வித்து வந்தநஞ்செய்தல். (உவில். சச) [அஞ்ஜலிவந்தநம்.]

அஞ்சலினவர்— பாஞ்சராத்திரமதத் தோர். (உ-ம்.) "அஞ்சலினவர்புக ழண்ணலாதியோர்" (சந்தபு. திருவ வ. சூஉ.) [அஞ்சு-ஐந்து. அலின வர்-இராத்திரிசம்பந்தமுடையவர் அல்-இரா.]

அஞ்சலோமசம்—அன்னபேதி. (உவில். கூகூஉ.) ஹம்ஸலோமஸ.]

அஞ்சவத்தை—ஐந்துநிலை; அவை: ஆ ன்மாவுக்குரிய சாக்கிரம், சொப்பந ம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்பன. (உ-ம்.) "ஆன்மாத் தங்கிய வஞ்சவத்தை" (சிவப்பிர. கூ: க.) [அஞ்சு-ஐந்து. அவஸ்தா-நிலை.]

அஞ்சவாச்சிரமம்—நால்வகைச்சந்நி யாசங்களுள் ஒன்று. (உ-ம்) "பரத் தியலுமஞ்சவாச்சிரமத்திற்செய்தன் மிசப்பாங்கேயாகும்" (சூத. ஞான. ச: உகூ.) [ஹம்ஸ; ஆச்ரமம்.]

அஞ்சற்காரன்—தபாற்காரன். (உவின். சo.) [வழ.]

அஞ்சற்துளச்சி—முப்பத்திரண்டு பா ஷாணங்களுள் ஒன்றாகிய குங்கும பாஷாணம். (கா. வைத்.)

அஞ்சறைப்பெட்டி—ஐந்து அறையு ள்ளதாகச் செய்யப்பட்ட பெட்டி. (உவின். சo.)

அஞ்சன்—1. "அஞ்சம்" என்னும் சந்நியாச ஆச்சிரமத்துக்குரிய சந்நியாசி. இவனிலக்கணம், சூத. ஞாந. கூ: எ-ம் அ-ஞ செய்யுட்களிற் கூறப்பட்டுளது. அவை வருமாறு: "கொண்டசீரஞ்சன் கமண்டலங்கந்தைகோவணம்பலிக்கலன்வேணுத்- தண்டமுத்தரீயங்கொளதிருநீறுத்தூளநந்தகச்செயறகைமுப்- புண்டரந்தரித்தல் சிரச்சிகைமழித்தல் பொம்மலெண்கவளமேபுசித்தன் – மண்டலம்புகழ் சாவித்திரிசந்திவயங்குகாலந்தொறுஞ்செபித்தல்" "திடமுறவான்மவிசாரஞ்செய்திடுத தீர்த்தயாத்திரைபுரிந்திடுதல்-படர்கிருச்சிரஞ் சாந்திராயணமுதலாப்பலவிரதமுமநுட்டித்தல் இடமுறு மோரூரினிலொர்நாளன்றியேற்றநாளிராமை சஞ்சரித்தல் — படவரவணிந்தோனருட்குறிப் பூசை பத்தியிற்புரிந்திடன்மரபால்" 2. ஆறிருதுக்களிலுஞ் சூரியசமூகத்து நின்று ஓரிருதுவுக் கிருவராகப் பாடுவோர் எனச்சொல்லப்படும் பன்னிருவருளொருவன். (உ-ம்.) "மன்னுதும்புருயாழ்நாரதனஞ்சன்" (கூர்மபு. ௩௧: எ.) 3. பன்னிரண்டாதித்தருள் ஒருவன்; இவன் ஏழாயிரங்கதிர்பரப்பியிருளைத்துரப்பவனென்றும், மேடமாதத்திலுதிப்பவனென்றும் கூர்மபு. ௪0: கூ-ம் ௬-ம் செய்யுட்களிற் சொல்லப்படும். அச்செய்யுட்கள் வருமாறு: "ஒற்றை......செற்றுவெங்கதிரேழாயிரம்பரப்பிச் செறியிருள்பருகிடுமஞ்சன்...... தாதா" "மாசிநீள்வருணன்பங்குனிபூடாச்சித்திரையஞ்சன்வைகாசிக்- காசறுதாதாவானி யிந்திரனடியிற்சவிதாநலாவணிக்கு- நாசமில் விச்சுவான்புரட்டாதிபகனலைப்பசிப்பரிச்சநிசீர்- வீசுகார்த்திகைதொட்டாநன்மார்கழிக்குமித்திரன்றைக்குவிட்டுணுவே" 4. பிரமன். (உ-ம்.) "அஞ்சன்கரியோனுருத்திரன் மற்றொருவர்க்கொருவரதிகரெண" (சூத. எக்கி. உத். உ: கரு.) [ஹம்ஸ.]

அஞ்சாச்சிறப்பு—வாகைத்திணை விகற்பங்களுளொன்று; அது: பகைவர்கண்ணும் தன்பாலார்கண்ணும் ஒப்புமையாகப் பாசறையுள்ளாச் சால்புடைமை கூறல். (வீரசோ.பொருட். கக. உரை.)

அஞ்சாநநம்—சிங்கம். (மா.) [அஞ்சு-ஐந்து. ஆநநம்-வாய். ஒன்றைப் பற்ற வாயோடு நான்குகால்களும் வாய்போல உபயோகப்படுதலால் வந்த பெயர்போலும். "பஞ்சாநநம்" என்பதிற் பகர ஒற்றுக்கெட்டு நின்றதெனினுமமையும். பஞ்ச-திறந்த, விரிந்த.]

அஞ்சாநநன்—சிவன். (சி) [அஞ்சு-ஐந்து. ஆநநன்-முகமுள்ளவன்.]

அஞ்சாப்பட்டயம்—அச்சமின்றியுலாவும்பொருட்டு அரசினரால் ஒருவருக்குக் கொடுக்கப்படும் பத்திரம. (உவின். ௪௦.)

அஞ்சாமை—திண்மை. (உ-ம்.) "அஞ்சாமையீகையறிவூக்கம்" (வள். ௩௮௨)

அஞ்சாரப்பெட்டி— அஞ்சறைப்பெட்டி. (உவின். ௪௦.)

அஞ்சாலியிடையர்—இடையருள் ஒருபகுதியார். இவர்களுடைய பெண்கள் மங்கல அணியாக ஐந்தாலியணிபவர்கள். (உவின். ௪௦.) [ஐந்தாலி யஞ்சாலியென்று மருவிற்று.]

அஞ்சாவிரா—பெருங்குமிழ். (சா.வைத்.)

அஞ்சி—1. கற்பிப்போன். (உவில். ௪௪) 2. யசமாநன். (உவில். ௪௪.) [அஞ்ஜி]

அஞ்சிட்டன்— சூரியன். (ஆப். ௪௮.) [அஞ்ஜிஷ்ட: அஞ்ஜ்;இஷ்ட-ஓர்வடமொழிவிகுதி]

அஞ்சித்தல்— பூசித்தல். (உ-ம்.) "அஞ்சித்தல்சொற்ற பூசனையடைவுமாம் (காஞ்சிபு. திருவே. ௯௯.)

அஞ்சிதம்—1. பூசிக்கப்பட்டது. (ஆப் ௪௨. 2. வளைந்தது. (ஆப். ௪௨.) [அஞ்சித]

அஞ்சிதழகம்—தலையைத்தோளின்மேலே சாய்த்தல். (உவின். ௪௦.) [அஞ்சிதமுகம். அஞ்சித-வளைந்த.]

அஞ்சிதவணி—தற்குறிப்பேற்ற அணி (மா.)

அஞ்சீரம்—1. அத்தி. (உவில். ௪௪.) 2. அத்திப்பழம். (உவில். ௪௪.) [அஞ்ஜீர: இது பார்சியபாஷையிலிருந்து சம்ஸ்கிருதத்தில்வந்த சொல் என்றுஎண்ணபடுகின்றது.]

அஞ்சு—1-3. அஞ்சென்னேவலுந் தெரிநிலைவினைப்பகுதியும் பெயரெச்சத்தொகையும். 4. அலங்கரித்தல். (ஆப் ௪௨.) 3. ஐந்தென்னுமெண். (உ-ம்.) "அஞ்சுவைக லிவ்வகன்கிரிநண்ணி" (கந்தபு. வள்ளி. ௨௨௫.) 4. சூதாடுவோர் வசநிக்குங் குழூஉக்குறிகளுளொன்று. (கந்தபு. கயமுகனு. ௧௬௭.) 5. பயப்படுதல். (ஆப். ௪௨.) 6. பிரார்த்தித்தல். (ஆப். ௪௨.) 7. போதல். (ஆப். ௪௨.) 8. வணங்குதல். (ஆப். ௪௨.) 9. வளைதல். (ஆப். ௪௨) [4, 5, 6, 7, 8, 9. அஞ்சு.]

அஞ்சுகம்—1. கிளி. (உவின். ௪௦.) 2. உத்தரீயவஸ்திரம். (உவில். ௧.) 3. சேலை. (உவில். ௧.) 4. வெள்ளைச்சீலை. (உவில். ௧.) [2, 3, 4. அம்ஸுக.]

அஞ்சுதல் — 1. நடுங்குதல். (உ-ம்.) "அஞ்சு மஞ்சு மென்னுருயி ரென்னுமால்" (இராமா. நகர்நீ. ௪௦.) 2. பயம். (உ-ம்.) "அஞ்சுதல்வெருளிசோகமச்சணத்தகற்றி" (அருணாசலபு. திருமலைவல. ௨௯.) 3. மதித்தல். (உ-ம். "அஞ்சப்படுதல்" பார்.)

அஞ்சுபயம்—குடிகளுக்கு நேரிடும் ஐந்துவகைப்பட்ட பயங்கள்; அவை: அரசனால் வருவதும், அவன் பரிச

னரால் வருவதும், பகைவரால் வருவதும், கள்வரால் வருவதும், விலங்கு முதலிய உயிர்களால் வருவதும் ஆம். (உ-ம்.) "என்காவல்—அறமலி செங்கோலஞ்சுபயந் தீர்த்தரசாளுமுறைமையு நன்ருல்" (திருவிளை. பழியஞ். உ௦.)

அஞ்சுமாந்—1. இருபத்தெட்டாகமங்களுளொன்று; அது: சதாசிவமூர்த்தியுடைய வாமதேவமுகத்தினின் றுற்பவித்த ஐந்தாகமங்களுள் ஒன்றென்பர்; அதற்குக் கிரந்தசங்கியை யைந்திலக்கம். (சைவச. பொது. ௬௬உ.) 2. கந்நியிராசியில்உதிக்குஞ்சூரியன். (உ-ம்.) "அஞ்சுமாந்விட்டுணுவென்ன" (கூர்மபு. அந்தகா. கஉ.) 3. சூரியன்மரபிற் பிறந்த ஓரரசன்; இவன் சகரனுக்குப் பௌத்திரன். (கூர்மபு. சூரிய. ௬௬.)

அஞ்சுமாலி—சூரியன். (வாச.) [அம்ஸுமாலிந்: அம்ஸு-கிரணம். மாலிந்-மாலையுடையவன்.]

அஞ்சுருவாணி— அச்சாணி. (உ-ம்.) "தடையற்ற தேரிலஞ்சுருவாணிபோலவேதன்னிலசையா துநிற்கும்" (தாயு. மவுன. கக.)

அஞ்சுவர்ணத்தோன்— தத்தநாகம். (கா. வைத்.)

அஞ்சுவ்ரத்தந — அஞ்சத்தகுவன. (உ-ம்.) "அஞ்சுவரத்தகுருபுள்ளுக்குரலியம்பவும்" (புறநா. சுக.)

அஞ்சுவனத்தார் —நெய்வாரின் ஒருபகுதியார். (உவின். ௬௦.)

அஞ்சுவனம்—பஞ்சாட்சரம். (உ-ம்) "அஞ்சுவனத்தை வரன்முறையோதும்" (பழமலை. ௬௬.) [அஞ்சு-ஐந்து. வனம்-எழுத்து. "வர்ண" மென்பதன்விகாரம்.]

அஞ்சுறல்—பயப்படுதல். (உ-ம்) "செல்லுதற்கஞ்சுறுந்தமியேன்" (கந்தபு. அக்கினி. உஉஎ.)

அஞ்சேவி—1. உட்செவி. (நன். மெய். கக-ம் உரையும்.) [அகம்-உள். அகமென்பதிற் ககரவுயிர்மெய்கெட்டு நின்றது.] 2. வறட்சுண்டி. (கா. வைத்.)

அஞ்சேழுத்து— பஞ்சாட்சரம். (உ-ம்.) "அஞ்செழுத்தாலமைந்தமையும்" (சி. சி. கூ: அ.) அவை, நமசிவாய என்னும் எழுத்துக்கள். இவற்றுள், ந-திரோதாநசத்தியையும், ம-ஆணவமலத்தையும், சி-சிவத்தையும், வ-அருளையும், ய-ஆன்மாவையுங் கருதும். (சிவப்பிர. கூ: உரை.)

அஞ்ஞத்துவம்—ஞாநமின்மை. (உவில். கச.) [அஜ்ஞகூம் அ; ஜ்ஞகூ-அறியுர்தன்மை.]

அஞ்ஞதை—அறியாமை. (பௌட். பசு. ககடு.) [அஜ்ஞதா:அ; ஜ்ஞதா-அறியுந்தன்மை.]

அஞ்ஞர்—அறிவில்லார். (உ-ம்.) "வெகுதிநர்களாயுமஞ்ஞர்களாயு மிருக்கிறோம்" (விசார. அச.) [அஜ்ஞ: ஜ்ஞ - அறிவுடையவர்.]

அஞ்ஞன்—அறிவில்லான். (ஆப். கஉ.) [அஜ்ஞ: ஜ்ஞ —அறிவுடையவன்.]

அஞ்ஞாதம்—அறியப்படாதது. (உ-ம்.) "ஞாதமஞ்ஞாதமாகிய வெல்லாவற்றிற்குநல்லசான்ருகி" (சூத. எக்கி. பூ. கக: எ.) [அஜ்ஞாத: அ; ஜ்ஞாதம்-அறியப்பட்டது.]

அஞ்ஞாதவாசம்— இவர் இன்னரென்று பிறர், தம்மையறிய வொண்ணுதபடி, மறைந்து வசித்தல் (உ-ம்.) "பின்மாறுவேடம்பூண்டு விராடநகரத்திலேயொருவருட காலம் அஞ்ஞாதவாசஞ்செய்தனர்" (பாரத. சௌ. கக. பக்.)

அஞ்ஞாதவாசி—பிறராலறியப்படாதவாசமுடையவன். (உ-ம்.) "அஞ்ஞாதவாசியாகியபீமசேனேயென் றுநிச்சயிப்பது" (சி. சி. அளவை. க. சிவாக்.)

அஞ்ஞாநப்பாறை— கருங்கற்பாறை. (உ-ம்.) "பழுமரமுதலஞ்ஞாநப் பாறையாய்க்கிடமினென்ன" (திருவிளை. அட்டமா. கூ.)

அஞ்ஞாநபூமி—பொல்லாதவாசனையாகிய ஏழுபூமிகள்; அவை: விந்துசாக்கிரம், மேற்சாக்கிரம், மகாசாக்கிரம் சாக்கிரசொப்பநம், சொப்பநம், சொப்பநசாக்கிரம், சுழுத்தி யென்பன. (தாயு. எங்கு. ௬. உரை.) [அஜ்ஞாநபூமி.]

அஞ்ஞாநம்—1. ஆணவமலம். (சிவப்பிர. உ: உ. உரை. "அசுத்தி" பார்.) 2. ஒருதோல்வித்தாநம்; அது பிறன் கூறிய பொருளை யறிந்தும் அறியான் போன்று வினவல் (சி. சி. அளவை. கச. சிவாக். சிவஞா.) 3. ஞாநமின்மை. (உ-ம்.) "அஞ்ஞாநத்தாலுறுவதுதான்பந்தம்" (சி. சி. அ: உஎ.) 4. தெய்வ அறிவின்மை. (சி) 5. (வேதாந்தம்) மாயை. (விசாரசா. களக.) 6. விபரீதஞாநம். (பௌட். மாயா. சடு.) [அஜ்ஞாந: ஜ்ஞாநம்-அறிவு.]

அஞ்ஞாநநிவிருத்தி— அஞ்ஞாநச்செயல்கள்; அவை: தமம், மோகம், மகாமோகம், தாமிச்சிரம், அந்ததாமிச்சிரம் என ஐந்துவகைப்படும். (பௌட். பும்ஸ். ககஉஇ.) [அஜ்ஞாநவ்ருத்தி: அஜ்ஞாநம்- அறிவின்மை. வ்ருத்தி-செயல்.]

அஞ்ஞாநி—அறிவிலி. (உ-ம்.) "அலைந்து பிறப்பிலாங்கார வஞ்ஞாநிகளாமாறுடரும்" (பிரபுலிங்க. விமலை. உகூ.) [அஜ்ஞாநி. அ; ஜ்ஞாநி-அறிவுடையவன்.]

அஞ்ஞான்று—அப்போது. (உ-ம்.) "அஞ்ஞான்றுடலைவெஃகி" (கந்தபு. காளி. கடு.) [அ-அந்த. ஞான்று-பொழுது.]

அஞ்ஞை—1. அஞ்ஞானம். (உவின். கo) 2. அறிவில்லான். (உ-ம்) "உணர்விலியஞ்ஞையென்னும்பிரிவிலன்" (சீகாழிப்பு. புகலி. சு.) [அஜ்ஞா: ஜ்ஞா அறிவு, அறிவுடையவன்.] 3. இலாடத்தாரம். (சி.) [ஆஜ்ஞா] 4. தாய். (உ-ம்.) "அஞ்ஞைநீயேங்கியழலென்று" (சிலப். கஞ. உச.)

அஞர்—1. அறிவில்லார். (உவின். கo.) [அஜ்ஞ: ஜ்ஞ – அறிவுடையவர்.] 2. துன்பம். (உ-ம்.) "பேரஞர்க்கண்ணள்பெருங்காடுநோக்கி" (புறநா. உசஎ) 3. துன்பம். (சி.)

அஞராட்டி— நோயுள்ளவள். (உ-ம்.) "அழிவுடையுள்ளத்தா ரஞராட்டி" (சிலப். புறஞ்சே. அo.)

அஞலம்—1. கொசுகு. (மா.) 2. தளம்பு. (திவாகரம்.)

அட்சகந்நம் — அக்ககர்நம். (ஆப். கூ.)

அட்சசூலை—ஒருவியாதி. (சி.)

அட்சதை—1. அக்கதை. (உவில். கூ.) 2. ஆரியரிசி. (சி.)

அட்சபாகை—பூகோளரக்ஷத்தின் பாகை. (உவின். கச.)

அட்சபாடநம்—திரைப்படல். (சி.)

அட்சபாதன்—அக்கபாதன். (சப்த.)

அட்சம்—1. குன்றிமைந்துகொண்ட ஒருநிறை. (மிரு. ச. ருஅ.) 2. வெங்காயம். (தைல.) ["அக்கம்" என்பதற்குச் சொல்லப்பட்ட பொருள்களில் 7, 12, 18, 23, 25, தவிர்ந்தன இதற்கும் பொருளாம்]

அட்சமணி—1. அக்கமணி. (சி)

அட்சமாலாதரன்—அட்சமாலைதரித்தவன். (உ-ம்.) "அட்சமாலாதரா" (திருப்பு. கூoக.) [அக்ஷமாலா, தர;]

அட்சமாலிகை—1. இருக்குவேத உபநிடதங்களுளொன்று. (கூர்மபு. தேவித. உகூ. உரை.) 2. உருத்திராட்சமாலை. [அக்ஷமாலிகா.]

அட்சமாலை—அக்கமாலை. (சி.)

அட்சய—வியாழவட்டமாகிய அறுபது வருடங்களிலே யறுபதாம் வருடம். (வருஷாதிநூல்.) [அக்ஷய.]

அட்சயதிருதீயா—வைகாசிமாதத்துச் சுக்கிலபக்கத்தில் வரும் மூன்றாந்திதி. (உவில். ச.) [இது முதலாவதுயுகமாகிய சத்திய யுகத்தின் ஆரம்பதிமென்றும், இத்திதத்திற் செய்யும் புண்ணியக் கிரியைகள் நித்தியபலமுடையன என்றும், இதனால்இப்பெயர்வந்ததென்றும் சொல்வர். அக்ஷய த்ருதீயா.]

அட்சயதூணி—அருச்சுனனுடைய அம்புக் கூடு. (உவின். கச.) [அக்ஷய–குறைவின்மை. தூணி-அம்புக்கூடு.]

அட்சயபாத்திரம் — 1. பாண்டவர்களுக்குச் சூரியனாற் கொடுக்கப்பட்ட பாத்திரம். (உவின். கச.) 2. வைஷ்ணவர்களுடைய பிட்சாபாத்திரம். (உவின். கச) [அக்ஷய; பாத்ரம்.]

அட்சயம்—கேடின்மை. (சப்த.) [அக்ஷய: அ; க்ஷயம். கேடு.]

அட்சயா—1. சாந்திரமாதத்தில் ஞாயிற்றுக்கிழமையில் அல்லது திங்கட்கிழமையில்வரும் ஏழாம் நாள். (உவில் ச.) 2. சாந்திரமாதத்துப் புதன்கிழமையில் வரும நாலாம் நாள். (உவில். ச.) [அக்ஷயா.]

அட்சரகணிதம்—பீசகணிதம். (உவின். கச.) [எழுத்துக்களை யெண்ணுக்காகப்பிரயோகித்தலால் வந்தபெயர். அக்ஷர-எழுத்து. கணித-கணக்கு.]

அட்சரச்சுதகம்—அச்சரச்சுதகம். (ஆப். ச.) [அக்ஷரச்யுதகம்.]

அட்சரசஞ்சன்—அட்சரசணன். (சி.)

அட்சரசணன்—எழுத்துக்காரன். (சப்த.) [அக்ஷரசண: அக்ஷர; சண – ஓர் வடமொழிவிகுதி.]

அட்சரசநநி—எழுத்தாணி. (ஆப். ச.) [அக்ஷரஜநநி: ஜநநி–பிறப்பிப்பது.]

அட்சரசநன் — அட்சரசணன். (சி.)

அட்சரசீவகன்—எழுத்தினற் சீவித்தோன். (ஆப். ச.) [அக்ஷரஜீவக: ஜீவக–சீவிப்போன்.]

அட்சரசீவி — அட்சரசீவகன். (ஆப் ச.) [அக்ஷரஜீவிந். ஜீவிந்–சீவிப்போன்.]

அட்சரசுத்தி—1. உச்சரிப்புத்திருத்தம். (உவின். கச.) 2. எழுத்துத்திருத்தம். (உவின். கச.) [அக்ஷர; சுத்தி.]

அட்சரதாபநம்—மந்திர எழுத்துக்களை யந்திரத்திலடைத்தல். (உவின். கச.) [அக்ஷர; ஸ்தாபநம்–தாபித்தல்.]

அட்சரதூலிகை—இலேகனி. (ஆப். ச.) [அக்ஷர தூலிகா: தூலிகா–கோல்.]

அட்சரப்புல்—பீனசப்புல். (உவின். கச.)

அட்சரபாவனை—மகேச்சுரிய பாவனை. (கூர்மபு. வருண. சகூ. உரை.) [அக்ஷர பாவநா.]

அட்சரம் — 1. அக்கரம். 2. தருமம். (சி.) 3. தவம். (சி.) 4. பிரகிருதி. (சி.) 5. பிரணவம். (சி.) 6. முத்தி. (சி.) [அக்ஷர.]

அட்சரமுகன் — மாணுக்கன். (ஆப். ச.) [அக்ஷரமுக: முக–ஆரம்பமுடையவன்.]

அட்சரலட்சணம் — அக்கரவிலக்கணம். (சி.)

அட்சரவிந்நியாசம் — 1. எழுத்து. (சி.) எழுதப்பட்டபத்திரிகை. (உவில். ச.) 3. வேதம். (சி.) [அக்ஷரவிந்யாஸ: அக்ஷர; விந்யாஸம்—தாபநம்.]

அட்சரன் — 1. அக்கரன். (சப்த.) 2. காலதத்துவத்திலிருக்கும் ஒருருத்திரன். (வி—ணி. உஎச.) [அக்ஷர.]

அட்சராத்துமகசத்தம் — எழுத்தாலாகிய ஒலி. (த. நி. போ. உகூஉ; பௌட். விந்து. கடுஇ.) [அக்ஷராத்மகஶப்த: அக்ஷராத்மக—எழுத்தோடு கூடியது. ஶப்த—ஒலி.]

அட்சராரம்பம் — அக்கராரம்பம். (சி.) [அக்ஷராரம்ப]

அட்சன் — அக்கன். [அக்ஷ.]

அட்சி — 1. கண். (ஆப். ச.) 2. கண்ணுடையவள். (உ-ம்.) "மீநாட்சி" 3. சேர் என்னும் அளவை. (சி.) [அக்ஷி]

அட்சியம் — யசுர் வேத உபநிடதங்களுளொன்று. (கூர்மபு. அட்டமூ. உசு. உரை.)

அட்சீபம் — 1. ஓர்வகைமாமரம். (சி.) 2. முருங்கைமரம். (சி.)

அட்சௌகிணி — அக்குரோணி. (சப்த.) [அக்ஷௌஹிணி.]

அட்டக்குற்றம் — மலசகிதர்க்குரிய எண்வகைக்குற்றங்கள்; அவை: அந்தராயம், ஆயு, கோத்திரம், ஞாநாவரணீயம், தரிசநாவரணீயம், வேதநீயம், மோகநீயம், நாமம் என்பன. (மா.)

அட்டகசம் — 1. ஆடாதோடை. (கா. வைத்.) 2. அட்டதிக்கியானை. (ஆப். க0ச.) [அஷ்டகஜ.]

அட்டகணம் — நூன்முதற்செய்யுளின் முதற்சீர்க்குச் சுபமெனவிதிக்கப்பட்ட நான்கும் அசுபமென விதிக்கப்பட்ட நான்குமாகிய எட்டுச் சீர்; அவை: ஆகாயகணம், இயமாநகணம், சூரியகணம், தீக்கணம், நிலக்கணம், நீர்க்கணம், மதிக்கணம், வாயுகணம், என்பன. (உவின். கடு.) [அஷ்ட-எட்டு. கணம்—சீர்]

அட்டகணிதம் — எண்வகைக்கணக்குகள்; அவை: சங்கலிதம், விபகலிதம், குணநம், பாகாரம், வர்க்கம், வர்க்கமூலம், கநம், கநமூலம் என்பன. அவற்றுள், சங்கலிதம்-கூட்டல். விபகலிதம்-கழித்தல். குணநம் - பெருக்கல். பாகாரம்-பிரித்தல். வர்க்கம்-ஒரு எண்ணை யவ்வெண்ணால் ஒருமுறை பெருக்கல். வர்க்கமூலம்- வர்க்கத்துக்கு மூலங்காணல். கநம்-ஒரு எண்ணாலே யந்த எண்ணைப் பெருககிப் பெருக்கிப்பெற்றபேற்றை மறுபடியும் அவ்வெண்ணாலே பெருக்கல். கநமூலம் — கநத்துக்கு மூலங்காணுதல். (பிங்க. கஙச.) [அஷ்—எட்டு. கணிதம்—கணக்கு.]

அட்டகந்தம் — எண்வகை வாசனைப் பொருள்; அவை: சந்தநம், அகரு, கஸ்தூரி, கருப்பூரம், பச்சிலை, குங்குமம், இலாமிச்சை, கோட்டம் என்பன. (த. நி. போ. ஙoக.) [அஷ்; கந்யம்—வாசனை.]

அட்டகம் — 1. அயமலாதி. (கா. வைத்.) 2. எட்டன்கூட்டம். (உ-ம்.) "உருவமெல்லாம் பூதவுடாதாய சுத்தாட்ட கவுருவமென்னின்" (சி. சி. பர. சௌத். மறு. கஎ; ஆப். கoச.) 3. எட்டு. (ஆப். கoச.) 4. எண்மடங்கு. (உ-ம்.) "ஆற்றினட்டகஞ் சோடசங்கயைப் பலனளிக்கும்" (வேதாரணியபு. வன்னி. ஙக.) 5. வசம்பு. (கா. வைத்.) [2, 3, 4. அஷ்டக.]

அட்டகர்ணன் — பிரமா. (ஆப். கoச.) [அஷ்டகர்ண: அஷ்ட— எட்டு. கர்ண—காதுள்ளவன்.]

அட்டகருமம் — 1. அரசர்க்குரிய எண்வகைக் கருமம்; அவை: ஆதாநம், விசர்க்கம், பிரஷம், நிஷேதம், சார்த்தவசநம், வியவகாரேக்ஷணம், தண்டம், சுத்தியென்பன. (ஆட். கoச.) 2. எண்வகைக்கருமங்கள்; அவை: வசியம், மோகநம், தம்பநம், ஆகருஷணம், உச்சாடநம், வித்துவேடணம், பேதநம், மரணம் என்பன. (வேதா. சூ. கச. உரை.) [அஷ்டகர்ம: அஷ்ட — எட்டு. கர்மம்—செயல்.]

அட்டகவர்க்கம் — அட்டவர்க்கம். (உ-ம்.) "அட்டகவர்க்கமென்பது தானே யாதித்தன் சந்திரன் செவ்வாய்—இட்டமாம் புந்திபொன் புகர்சநியனி லக்கினத்துடனெட்டுவகையில்—வட்டவான் புவிமேலட்டவர்க்கம் வகுத்தனர்" (சர்தகசிந். கசுடுசு.) [அஷ்டக; வர்க.]

அட்டகவுடலம் — புரியட்டகம். (உ-ம்.) "அட்டகவுடலத்தோடே யுயிர்பிதா வருந்தர்நாதி—தொட்டவனுதரர்தொக்குச்சுக்கிலத்துடனே தோன்றி" (சிவதரு. அ; கங.)

அட்டகாசம் — 1. இருநூற்றிருபத்துநான்கு புவநங்களுள் ஒன்று. (கந்தபு. கணங். சo. உரை.) இது வாயுதத்துவத்தி லிருக்கும் எட்டுப் புவநங்களுளொன்று. (சிவபரா. கூக.) 2. ஒருதலம். (உ-ம்.) "அட்டகாசத்துப் பெருந்தகை மகாநந்தேச்சுரனே" (சூத. எக்கி. பூ. சங: உக.) 3. பெருஞ்சிரிப்பு. (உ-ம்.) "அட்டகாசத்திலட்டகயங்களுமதிர்ந்து நிற்ப" (மச்சபு. இரணியசி. கங.) [அட்டஹாஸ:]

அட்டகாசன் — இருபத்தெண் கலியுகத்தொன்றில் மறைவிரிப்போன். [அட்டஹாச]

அட்டகாசி — 1. சிவன். (ஆப். கங.) 2. பெருநகைசெய்வோன். (ஆப். கங.) [அட்டஹாசிந்.]

அட்டகிரி — எட்டுமலைகள்; அவை: இமயம், மந்தரம், கைலை, விந்தம், நிடதம், ஏமகூடம், நீலம், கந்தமாதநம் என்பன. (பிங்க. சகங.) [அஷ்ட—எட்டு. கிரி—மலை.]

அட்டகீடம்—எட்டுவகைக் கீடமாகிய பிராணிகள்; அவை: ஒறுன், தவளை அடவியீ, வீட்டுப்பல்லி, காட்டுமசகம், மக்ஷிகா, மலைப்பீலிகை, சிலந்தியென்பன. (சீவரட். சுறு௦.) [அஷ்ட கீடம்.]

அட்டகுட்டம் — எட்டுவகைக்குட்டநோய்கள்; அவை: கருங்குட்டம், இரணக்குட்டம், வெண்குட்டம், செங்குட்டம், கிருமிக்குட்டம், நீர்க்குட்டம், விரல்குறைகுட்டம், சொறிகுட்டம் என்பன. இது "கருங்குட்டமிரணக்குட்டங் காகநறு வெண்மைக்குட்டம்—பெருகுசெங் குட்டநாளும் பேசருங் கிருமிக்குட்டம்-விரியுநீர்க்குட்டங் கால்கைவிரல் குறைகுட்டமேலுஞ்-சொறிகுட்டமித்னேடெட்டாய்ச் சொற்றனர் பிணிதேர் நூலோர்" என்னும் வைத்தியநிகண்டாற் பெறப்படும். [அஷ்ட குஷ்டம்.]

அட்டகுணச்செல்வம் — அணிமாதி குணங்களையுடைய அட்ட ஐசுவரியங்கள். (உ-ம்.) "அட்டகுணச்செல்வமும் படைத்தவர்தமாதரனைவோரும்" (ஞானவா. புசுண். சுடு.)

அட்டகுணபூதன் — அருகன். (எண்குணமுடையவன் என்றபடி.) (உ-ம்.) "புசிப்புவந்திடுபிறப் புறக்கமிவைவிட்டொரட்டகுண பூதனாய்" (சி. சி. பர. நிகண். மத. ௯.) [அஷ்ட குண பூத:]

அட்டகுணம்—கடவுளுக்குரிய எட்டுக் குணங்கள்; அவை: தன்வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயற்கையுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவேபாசங்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை என்பன. (வள். க. உரை. பரி.) [அஷ்ட குண.] [அருகநூலார் "அநந்தஞானம், அநந்ததரிசநம், அநந்தவீரியம், அநந்தசுகம், நிர்நாமம, நிர்ககோத்திரம், நிராயுஷியம், சகலசம்மியக்குபாவம்" என்னும் எட்டினையும் அருகனெண்குணங்களென்பர்.] (சி. சி. அ: க௨. மறை.)

அட்டகுரவர்—எட்டுவகையாசாரியர்கள்; அவர்கள்: போதககுரு, வேதககுரு, நிகிதகுரு காமியகுரு, சூசககுரு, வாசககுரு, காரககுரு, விகிதகுரு என்பவர்கள். இவர்களுள், போதககுரு—சாத்திரார்த்தம் போதிப்பவன். வேதககுரு-தத்துவதரிசகன். நிகிதகுரு—வசியாகருஷணாதிகளால் இகலோகத்திற் சுகமும் பரலோகத்திற் றுக்கமுங், கொடுப்பவன். காமியகுரு—சுகர்மமோபதேசத்தால் இகபரங்களிற் சுகமெய்தப்பண்ணுபவன். சூசககுரு—விவேகமுகத்தாற் சமாதிசட்குணங்களையும் ஒருங்கேவரப்பண்ணுகிறவன். வாசககுரு—விஷயங்கள் பொய்யெனவெறுத்து ஆன்மவிருப்பமுண்டாகச் செய்பவன். காரககுரு—சிவசீவர் ஐக்கியஞானத்தை வரச்செய்கிறவன். விகிதகுரு—சந்தேகம் நீங்கி மோக்ஷம் அடையச்செய்கிறவன். (வி—ணி. ௨௨; வேதா. சூ. கசு, கஎ. உரை.) [அஷ்ட குரவ:]

அட்டகுலபருவதம்— அட்டகுலவெற்பு. சி.) [அஷ்ட குலபர்வத.]

அட்டகுலயானை — அட்டதிக்கயம். (சி.)

அட்டகுலவெற்பு—அட்டகிரி. (தாயு. சித்தா. க.)

அட்டகுன்மம் — எட்டுவகைக் குன்மம்; அவை: சூலைகுன்மம், சூலைக்குன்மம், வாதகுன்மம், பித்தகுன்மம், சிலேட்டுமகுன்மம், எரிகுன்மம், சர்த்திகுன்மம், சந்நிகுன்மம், வலிகுன்மம் என்பன. இது "சூலைகுன்மம் வாதகுன்மங் கொடுமைகொள் பித்தகுன்மம், வலிகுன்மஞ் சந்நிகுன்மம் வாந்திகொள் சர்த்திகுன்மம்- நிலைதடுமாறச்செய்யு நிகரிலாவையகுன்மம, உலைவுகொ ளெரிகுன்மத்தோடோதியகுன்ம மெட்டே" என்னும் வைத்திய நிகண்டாற்பெறப்படும். [அஷ்ட குல்ம.]

அட்டகை—1. அட்டமி. (வாச.) 2. இருபத்தொருவகை யாகத்தொன்று. (க. தொ.) 3. பிதிரர்களையுபாசித்தற்குரியனவாய், மார்கழி, தை, மாசியென்னும் மாதங்களிலே யபரபக்கங்களிலே வருஞ் சத்தமி, அட்டமி, நவமி யென்னும் மூன்றுதிதிகள். (ஆப். ௪௦௪.) [பங்குநிமாதமுங் கொள்ளுப.] 4. மேற் குறித்த காலங்களிற் செய்யப்படுஞ் சிராத்தம். (உ—ம்.) "மருவுமார்கழி தையொடு மாசியி— லருளினேடுமபர பக்கந்தனிற் -றெருளுமட்டகை யென்னுஞ் சிராத்தமாங் – கொருவிடாமலுஞற் றிடவேண்டுமால்" (கூர்மபு. அழற். கூ.) 5. மேற்குறித்த மூன்றுதிதிகளுள்ளும் முக்கியமாகக் கொள்ளப்படும் அட்டமி. (ஆப். ௪௦௪.) [அஷ்ட கா.]

அட்டகைச்சிராத்தம்— பிதிரர்களையுபாசித்தற்குரியனவாய் மார்கழி, தை மாசியென்னும் மாதங்களிலே யபர பக்கங்களிலே வரும் சத்தமி, அட்டமி, நவமி என்னும் மூன்று திதிகளிற் செய்யப்படுஞ் சிராத்தம். (உ-ம்) "விருப்பமெய்தி - யாதரவோடுசெய்யுமட்டகைச்சிராத்தநாளின்" (கூர்மபு. பிரமசரி. ௨க.) [அஷ்ட கா; ச்ராத்ய.]

அட்டகோணம்—எட்டுக்கோணம். (உவின். சடு) [அஷ்ட கோணம்.]

அட்டங்கால்—அட்டணைக்கால்.

அட்டசத்திகள்—1. ஆரணி, ஜநநி, ரோதயித்திரி, என்னும் மூன்றுபரிக்கிரகசத்திகளும், ஈசாநம், தற்புருடம், வாமம், அகோரம், சத்தியோசாதம் என்னும் பஞ்சசத்திகளுமாகிய எட்டுச்சத்திகள். 2. சயை, விசயை, சயந்தி, அபராசிதை, சித்தை, ரத்தை, அலம்புசை, உற்பலை, யென்னும் எட்டுச்சத்திகள். இது "தரத்திலுயர்ந்தசயைவிசயைசயந்தியபராசிதைசித்தை - யிரத்தையொ

டேயலம்புசையுற்பலேயென்றெண்மர்மாதர்கடாம்- புரத்திலுறநாயகிகள் என்னும் ஞானவா. புசண். சச-ம் செய்யுளாலும் உரையாலும் பெறப்படும். 3. சிவனுடைய கிரியாசத்தியினதுள்ளுருவும புறவுருவுமாகிய உருவுகள் எட்டு. அவை: ஈசானி, பூரணி, ஆர்த்தி, வாமை, மூர்த்தி, ஆரணி, ரோதயித்திரி, ஜநநி யென்னும் எட்டுச்சத்திகள். இது பின்வரும்மேற்கோளாறபெறப்படும். "ஈசாநி, பூரணி, ஆர்த்தி, வாமை, மூர்த்தி யென்னும பஞ்சசத்திப் புறவுருவுடைத்தாய், ஆரணி, ஜநநி, ரோதயித்திரி என்னுந் திரிசத்தியுள்ளுருவுடைத்தாய் இருசகும கிரியாசத்திசரீரப்புறவுருவிலுதித்த" (சி. சி. க: ருகூ. முகவாசகப.) 4. வாமை, சேட்டை, ரௌத்திரி, காளி, கலவிகரணி, பெலவிகரணி, பெலப்பிரமதமநி, சர்வபூததமநி யென்னும் எட்டுச்சத்திகள். (உ-ம்.) "வாமாதிசர்வபூத தமநியந்தமாகிய அட்டசத்திகளுமாகி" (சி. சி. பாயிரம். சிவசத்தி.) [அஷ்ட ஶக்தி]

அட்டசித்தி — அணிமா, மகிமா, இலகிமா, கரிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்னும் எட்டுச்சித்திகள். (உ-ம்.) "எந்தையட்டசித்திவேண்டு மெங்களுக்கெனத்தொழ" (திருவிளை. அட்டமா. சு.) "அணிமாமகிமாவிலகிமாவரியகரிமாப்பிராத்திமலப்- பிணிமாசுடையோர்க்கடைவரியபிராகாமியமீசத்துவமெய்- துணிமாயோகர்க் கெளியவசித்துவமென்றெட்டாம்" என்னுந் திருவிளை. அட்டமா. உஉ-ம் செய்யுளாலும் பெறப்படும். [அஷ்ட ஸித்தி.]

அட்டசிரவணன் — பிரமா. (ஆப். ௧௦௫.) [அஷ்ட ஶ்ரவண]

அட்டசுபம்—அட்டமங்கலம். (உவின். க௫.) [அஷ்ட ஶுபம்.]

அட்டணை—குறுக்கே. (உவின். க௫.)

அட்டணைக்கால்—ஒன்றின்மேலொன்றுகக் குறுக்கேஅணைத்து வைக்கப்பட்டகால். [அடு; அணை; கால்.]

அட்டத்திரிஞ்சத்—முப்பத்தெட்டு. (உ-ம்.) "அட்டகரிஞ்சற்கலைகள்" (சி. சி. க: ருக. ஞானப்.) [அஷ்டத்ரிம்ஶத்: அஷ்ட-எட்டு. த்ரிம்ஶத்-முப்பது]

அட்டத்திரிஞ்சற்கலா — அட்டத்திரிஞ்சற்கலைகள். (அகோ. கிரி.) [அஷ்டத்ரிம்ஶத்கலா.]

அட்டத்திரிஞ்சற்கலைகள்—சிவபூசை செய்யும்போது சதாசிவனது ஐந்துமுகத்தினும் நிரபனவாகக் கொள்ளப்படும் முப்பத்தெட்டுக்கலைகள். (உ-ம்.) "கிரியாசத்தி சரீரப்புறவுருவிலுதித்தசநியாதியட்டத் திரிஞ்சற்கலைகளினது" (சி.சி.க: ருசு. முகவாசகம்.) அவை: ஈசானகலைகளைந்தும், தற்புருஷகலைகள் நான்கும், அகோரகலைகளெட்டும், வாமதேவகலைகள் பதின்மூன்றும், சத்தியோசாதகலைகளெட்டுமாம். (அகோ. கிரி.)

அட்டதந்திரவாதம் — வாயுவினால் வரும் ஒருவகைரோகம். (உவின். ௧௫.)

அட்டதநம்—எண்வகைச்செல்வம்; அவை: அழகு, குணம், ஆயு, குலம், சம்பத்து, வித்தை, விவேகம், தநம் என்பன. (உவின். க௫.) [அஷ்ட யநம்]

அட்டதயாவிருத்தி—எண்வகைத் தயவுச்செயல்; அவை: பிறரையந் தீர்த்தல், தீமைகஞ்சல், பிறர்துயர்க்கிரங்கல், நன்மைகடைப்பிடித்தல், பிறர்கருமத்திற்குடன்படல், பிறர்கருமமுடிக்கவிரைதல், பிறர்க்குப் பொருள்வரவை யுவத்தல், பிறர்செல்வம் பொறுத்தலென்பன. (மா.) [அஷ்டதயாவ்ருத்தி: வ்ருத்தி-செயல்.]

அட்டதருமம் — எண்வகைத்தருமம்; அவை: யாகம், வேதமோதுதல், தாநம், தபம், சத்தியம், திடம், பொறுமை, லோபமின்மை யென்பன. (இதோப. ௪௦.) [அஷ்டயர்ம: அஷ்ட-எட்டு. யர்மம்-அறம்.]

அட்டதளசக்கரம்—எண்வகையிதழுடைய சக்கரம்; அவை: சோத்திரத்துவாரம் இரண்டு, நேத்திரத்துவாரமிரண்டு, ஆக்கிராணத்துவாரமிரண்டு, துவக்குத்துவாரம் ஒன்று, சிங்நுவைத்துவாரம் ஒன்று. (த. நி. போ. ௬௫௬.) [அஷ்டதலசக்ரம்.]

அட்டதளம்—எட்டிதழ்த்தாமரை; (ஆப். ௧௦௪.) அது: எட்டிதழையுடையதாகக்கொள்ளப்படுந்தாமரை. [அஷ்டதல.]

அட்டதா — 1. எட்டுப்பிரிவு. (ஆப். ௧௦௫) 2. எண்மடங்கு. (வென். சு௬.) [அஷ்டயா: அஷ்ட-எட்டு. யா-மடங்கு.]

அட்டதாது — எண்வகைலோகங்கள்; அவை: பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, வெண்கலம், தரா, வங்கம், துத்தநாகம் என்பன. (வாச.) [அஷ்டயாது.]

அட்டதாநபரீட்சை — வைத்தியர் பரீட்சிக்கும் எட்டுக்குறியிடங்கள்; அவை: நாடி, மூசம், மலம், அமரி, கண், நா, சரீரம், தொனி யென்பன. (மா.) [அஷ்டஸ்யாநபரீக்ஷா.]

அட்டதிக்கயம் — எட்டுத்திக்கியானைகள்; அவை: ஐராவதம், புண்டரீகம், வாமநம், குமுதம், அஞ்சநம், புட்பதந்தம், சார்வபௌமம், சுப்பிரதீகம் என்பன. (மா.) [அஷ்டதிக்கஜம்.]

அட்டதிக்கரிணி— அட்டதிக்கயங்களின் பிடிகள்; அவை: அப்பிரமை, கபிலை, பிங்கலை, அநுபமை, தாமிரகர்ணி, சுப்பிரதந்தி, அங்கனை, அஞ்சநாவதியென்பன; இவை: ஐராவதம் முதலியவற்றிற்கு முறையே பெண்களாகும. (வாச.) [அஷ்டதிக்கரிணி: திக்கரிணி-திக்குப்பெண்யானை.]

அட்டதிக்காளர்—எண்டிசை காப்பாளர். (உ-ம்.) "அளக்கரும்பிரமாண்டம் போலட்டதிக்காளர் காப்பர்" (ஞானவா. வீமபா. உ.)

அட்டதிக்கு—எட்டுத்திசைகள்; அவை: கிழக்கு, தென்கிழக்கு, தெற்கு, தென்மேற்கு, மேற்கு, வடமேற்கு, வடகிழக்கு என்பன. (உ-ம்.) "அட்டதிக்கையு மடைப்பார்கள்" (காஞ்சிபு. வாணீ. கடு.) [அஷ்டதிச்: திக்-திசை]

அட்டதிக்குப்பாலகர்—எட்டுத்திசைகளையுங் காப்பவர்; அவர்: இந்திரன், அக்கினி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் என்பவர். இவர் முறையே கிழக்கு முதலியதிக்குக்களிலே காவல் செய்துகொண்டிருப்பர். (மா.) [அஷ்டதிக்பாலகர்.]

அட்டதிசம்—எருக்கஞ்செடி. (கா. வைத்.)

அட்டதேறல்—காய்ச்சியமது. (சாராயம்.) (உ-ம்.) "அட்டதேறலு மடாதமைதேறலும்" (கந்தபு. நகர்பு. ௬௦.) [அட்ட—காய்ச்சிய. தேறல்—மது.]

அட்டநம்—வட்டவடிவமாகிய பரிசை. (வாச.) [அட்டநம்.]

அட்டநாகபந்தம்—சித்திரகவிவகைகளுளொன்று; அது: நான்காமெழுத்து நாற்பத்தோராமெழுத்தாகவும், ஆறுமெழுத்து நாற்பத்தைந்தா மெழுத்தாகவும், எட்டாமெழுத்து இருபதாமெழுத்தாகவும், பன்னிரண்டாமெழுத்துப் பதினெட்டாமெழுத்தாகவும் இருபத்திரண்டாமெழுத்து நாற்பத்தேழாமெழுத்தாகவும், இருபத்துநான்காமெழுத்து முப்பத்தொன்பதாமெழுத்தாகவும், முப்பத்துமூன்றாமெழுத்து ஐம்பத்தோராமெழுத்தாகவும், முப்பத்தேழாமெழுத்து நாற்பத்தொன்பதா மெழுத்தாகவும் வரும்படி ஒருசெய்யுட் செய்து கிரமப்படி எட்டுப்பாம்பு வரைந்து அதன்கண் அடைத்துக்கொள்ளப்படுவது. (தண்டி.) [அஷ்ட; நாக; பந்த]

அட்டநாகம் — எட்டுவகைப் பாம்புகள்; அவை: அநந்தன், வாசுகி, தக்கன், கார்க்கோடன், பதுமன், மகாபதுமன், சங்கபாலன், குளிகன் என்பன. (பிங்க. உக.) [அஷ்ட; நாக.]

அட்டநிக்கிரகங்கள்—(தர்க்கம்.) எட்டுத் தோல்விதகாநங்கள். (உ-ம்.) "அட்டநிக்கிரகங்களாவன" (தர்க்கபா. எஅ.) அவை: நியூநம், அதிகம், அபசித்தாந்தம, அசித்தம், விருத்தம், அநைகாந்திகம், பிரகரணசமம், காலாதீதயாபதிஷ்டம் என்பன. [அஷ்ட; நிக்ரஹ.]

அட்டப்பயிரவர் — அட்டவைரவர். (உ-ம்.) "திசகுப்பரி யட்டப்பயிரவர்" (திருப்பு. க.) [அஷ்; பைரவ.]

அட்டப்பிரகரணம் — எட்டுப்பிரகரணங்கள்; அவை: தத்துவப்பிரகாசிகை, தத்துவசங்கிரகம், தத்துவத்திரயநிர்ணயம், போககாரிகை, மோக்ஷகாரிகை, நாதகாரிகை, பரமோக்ஷநிராசகாரிகை, இரத்நத்திரயம். (சைவச.) [அஷ்; ப்ரகரணம்.]

அட்டப்பிரணவம் — எட்டுப்பிரணவம். (த. நி. போ. ௩௭௬.) [அஷ்; ப்ரணவம்.]

அட்டப்பிரமாணம் — எட்டுவகைப்பிரமாணங்கள்; அவை: அநுமாநம், அபாவம், அருத்தாபத்தி, ஆகமம், உபமாநம், ஐதிகம், சம்பவம், பிரத்தியட்சம், என்பன. (மா.) [அஷ்; ப்ரமாணம்.]

அட்டபந்தநம்—சுக்கான்கல்லு, கொம்பரக்கு, சாதிலிங்கம், செம்பஞ்சு, தேன்மெழுகு, எருமைவெண்ணெய், குக்குலியம், நற்காவியென்னும் எட்டுப்பொருளையுஞ் சேர்த்திடித்துத் திரட்டப்படும் ஒரு மருந்து; அவை சிலாவிக்கிரகங்கள் சலநமின்றியிருக்கும்படி சார்த்தப்படும். [அஷ்; பந்தநம்.]

அட்டபரிசம்—எண்வகைப்பரிசங்கள்; அவை: ஊன்றல், கட்டல், குத்தல், தட்டல், தடவல், தீண்டல், பற்றல் வெட்டல் என்பன. (பிங்க. ௬௦௫.) [அஷ்; ஸ்பர்ஶ.]

அட்டபாதம் — 1. எண்காற்புள். (வாச.) 2. சிலந்திப்பூச்சி. (வாச.) [அஷ்பாத: பாதம்—கால்.]

அட்டபாலகர் —அட்டதிக்குப்பாலகர். (உ-ம்.) "அட்டபாலகரும் வசுக்களும்" (நல். பார. குமாரசு. ௧௦௬.) [அஷ்; பாலக-காவலாளர்.]

அட்டபுட்பம் — 1. எட்டுவகைப்பூக்கள்; அவை: புன்னை, வெள்ளெருக்கு, சண்பகம், நந்தியாவர்த்தம், பாதிரி, நீலோற்பலம், அலரி, செந்தாமரையென்பன. (உ-ம்.) "அட்டபுட்பமவைகொண்டடிபோற்றி" (தேவார. பழ. அ. சுர.) 2. பூப்போலவிரும்பத்தக்கவெட்டுக்குணங்கள்; அவை: கொல்லாமை, ஐம்பொறியடக்கல், பொறை, அருள், அறிவு, வாய்மை, தவம், அன்பு என்பன. (சைவச. பொது. ௬௯அ. உரை.)

அட்டபுயம்—காஞ்சிபுரத்துள்ள [விட்டுணு ஆலயங்களெட்டினுள் ஒன்று. விட்டுணு எட்டுப்புயங்களோடிருந்திலக்குமியை விவாகஞ்செய்தமையால் "அட்டபுயம்" எனப்பெயர்பெற்றதென்பர்.] (உ-ம்.) "கரிகிரி யட்டபுயம்" (கந்தபு. நகர. ௬௦.) [அஷ்டபுஜ.]

அட்டபோகம்—எண்வகையின்ப அநுபவம்; அவை: அணிகலம், ஆடை, தாம்பூலம், பரிமளம், சங்கீதம், பூவமளி, பெண், போசநம் என்பன. (பதார்த். வை. தி. கக.) விவேகசிந்தாமணிகாரர் அணிகலமென்பதை விலக்கிஸ்நாநமென்பதைச் சேர்த்தனர். (வி—ணி. உ௬௦.) [அஷ்டபோக.]

அட்டம்—1. அருகு. (உ-ம்.) "அங்காய்களட்டமாக விட்டு" (பெரியபு. கண்ணப். எ௬.) 2. எட்டு. (உ-ம்.) "அட்டமாம்புயமாகு மாறுரரே" (தே

வார. திருவாரூ. திருச்சு. ழு.எ.) [அஷ்ட்] 3. குறுக்கு. (உவின். கஞ.) 4. சாதிக்காய். (உவன். கஞ.) 5. கோர். (உ-ம்) "அட்டமாக வழுதிமேலமர்க் கெழுந்ததொக்குமே" (திருவிளை. கடல்சு. கூ.) 6. மேல்வாய். (மா.) [அட்டம்] 7. மேல்வீடு. (ஆப். கஈ.) 8. ராசமனை. [அட்டம்.]

அட்டம்பாரித்தல்—பக்கலிலேவிசாலித்தல், பருத்தல். (மா.) [அட்டம்—அருகு. பாரித்தல்—பரத்தல்.]

அட்டமக—எட்டாவது. (வென். சுஈ.) [அஷ்டமக.]

அட்டமகாலிகன் — வாநப்பிரஸ்தருளொருவன். இவன் மூன்றுநாள் உணவின்றியிருந்து நான்காநாளிற் பின்பகலில் உண்போன். [ஒருநாளைக்கிருகாலப் போசனமாகக்கொண்டெட்டாங்காலத்திறபுசிப்போனென்றபடி.] (வாச; ஆப். சசு.) [அஷ்டமகாலிக: அஷ்டம—எட்டாவது: காலிக—காலசம்பந்தமுடையவன்.]

அட்டமங்கலம்—எட்டுவகைமங்கலங்கள்; அவை: கவரி, நிறைகுடம், கண்ணடி, தோட்டி, முரசு, விளக்கு, பதாகை, இணைக்கயல் என்பன. (உ-ம்.) "அட்டமங்கலமூர்ந்து" (கந்தபு. விண்குடி. ஙக.) [சிந்தாமணி கோவிந்தையாரிலம்பகம் அறுபத்துநான்காஞ்செய்யுளுரையிற் காட்டப்பட்ட "சாமரைதீபந் தமனியப்பொற்குடங்—காமர்கயலிணைமுதலாத்—தேமநவு—கண்ணடி தோட்டி கதலிகைவெண்முரசு—மெண்ணியமங்கலங்களெட்டு" என்னுஞ்செய்யுளால் அட்டமங்கலம் இவையெனக்காண்க. வாசஸ்பத்திய அகராதிகாரர் சிங்கம், எருது, யானை, குடம், ஆலவட்டம், கொடி, பேரி, தீபமென்பவைகளேயட்டமங்கலமென்பர்.] 2. ஒருவகைக்குதிரை; அது: உரம், நான்குகுளம்புகள், வால், முகம், முதுகு என்னுமெட்டிடங்களிலுமுள்ள மயிர்கள் வெண்ணிறமுடையனவாயிருப்பது. (உ-ம்.) "முகமார் புச்சிவால் காலென் றுரைத்தவெட்டிறுப்பினும்வெண்மை—விரவிய தட்டமங்கலம்" (திருவிளை. நரிபரி. சகo.) 3. ஒருவகைப்பிரபந்தம்; அது: "கடவுள்காக்க" என ஆசிரியவிருத்தம் எட்டினாலே பாடப்படுவது. (உ-ம்.) "கடவுள்காக்கவெனக்கவியிருநான்—கடைவுறவகவல் விருத்தமதனால் —வகுப்பதட்டமங்கலமாகும்" (இலக்கணவிள. அசஈ.) [அஷ்டமங்கல: மங்கல—சோபனம்.]

அட்டமச்சநி —உதயலக்கினத்துக் கெட்டாம் இடத்தில் நிற்குஞ்சநி. (உவின். கஞ.) [அட்டம—எட்டாவது. சநி—ஒருகிரகம்.]

அட்டமணம் — எண்வகைவிவாகங்கள்; அவை: பிராமம், பிராசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தருவம், ஆசுரம், இராக்கதம், பைசாசம் என்பன. (மநு. ஙः உக.) [அஷ்டமண: மணம்—விவாகம்.]

அட்டமதம்—குலம், ரூபம், யௌவனம், வித்தை, தநம், பிரபுத்துவம், சகாயம், சகசம் என்னும் எட்டினாலும் உண்டாகுஞ்செருக்கு. (தாயு. பன்மாலை. உo. உரை.) [அஷ்ட—எட்டு. மத—ம்—செருக்கு.]

அட்டமம்—எட்டாவது. (உ-ம்.) "ஒத்தவுதயத்துக்கட்டமத்தேநிற்குமோர திபன்" (விதாந. குணகுண. அஎ.) [அஷ்டம.]

அட்டமாசித்தி—எட்டுச்சித்திகள்; அவை: அணிமாமுதலியன. (உ-ம்.) "அட்டமாசித்திதந்ததிறமினித் தெரிந்தவாறுசெப்புவாம்" (திருவிளை. அட்டமாசி. க.)

அட்டமாநாகம்—அட்டநாகம். (உ-ம்.) "அட்டமாநாகமாட்டும்" (தேவார. ஆவடு. திருநாவு.) [அஷ்ட;மாநாக—பெரும்பாம்பு.]

அட்டமாந்தம்—எட்டுவகைமாந்தநோய்; அவை: செரியாமாந்தம், போர்மாந்தம், மலட்டுமாந்தம், பெருமாந்தம், வாதமாந்தம், சுழிமாந்தம், வலிமாந்தம், கணமாந்தம் என்பன. (கா. வைத்.) "பெருமாந்தங் கணமாந்த முட்பெய்திடு முணவுசற்றுஞ்—செரியாதமாந்தம் வன்மைசெறிந்திடு மலட்டுமாந்தம் பொருமியவாதமாந்தம் புகல்வலிமாந்தங்கண்கள்—சொருகிய சுழிமாந்தம் போர்மாந்த மெண்ணெனச்சொன்னார்" என்னும் வைத்தியச்செண்டால மாந்தவகையைக்காண்க.

அட்டமி—1. எட்டாந்திதி. (உ-ம்.) "அட்டமியுமேனையுவாவும்" (ஆசாரக். சஎ.) 2. எட்டாவது. (உ-ம்.) "காமனங்காசநியட்டமியாஞ்சபை" (வேதாரண்யபு. சபை. சு; உவில். கூசு.) [அஷ்டமி]

அட்டமிகை — அரைப்பலம். (உ-ம்.) "தணித்தனிக்கங்கஷ்டமிகை வெவ்வேறுந்தமூலடியுருதுவெதப்பி" (தைல. தைலவ. ருசு;) [அஷ்டமிகா.]

அட்டமூர்த்தம் —சிவனுக்குச் சொல்லப்படும எண்வகைவடிவங்கள்; அவ்வடிவங்கள நிலம், நீர், தீ, காற்று, வெளி, சூரியன், சந்திரன், இயமாநன் என்பன. (உ-ம்.) "அட்டமூர்த்தங்கொண்டருளினேன்றண்டீச்சுரன்" (சூத. எகளி பூ. சஈ; எ.) [அஷ்டமூர்த்தம்.]

சிவன், பிரமாவினது நுதலிடைத்தோன்றிய உருத்திராவதாரத்திற் சருவனென்னும்உருத்திரனுக்குப்பிருதிவியும், பவனென்னும் உருத்திரனுக்கு அப்புவும், பசுபதியென்னும் உருத்திரனுக்கு அக்கினியும், ஈசானன் என்னும்உருத்திரனுக்குவாயுவும், வீமனென்னும் உருத்திரனுக்கு ஆகாயமும், உருத்திரனென்னும் உருத்திரனுக்குச் சூரியனும், மாதேவனென்னும் உருத்திரனுக்குச் சந்திரனும், உக்கிரனென்னும் உருத்திரனுக்குஇயமாநனும் வடிவமாமென்று சொல்வர். சைவபுராணத்திலே உருத்திரனுக்கு நெருப்பு எனவும், உக்கிரற்கு வாயு எனவும், ஈசானனுக்குச் சூரியன், எனவும், மாதேவற்கு மதியமெனவும், பசுபதிக்கு இயமாநனெனவுஞ்

சொல்லப்படும். (உ-ம்.) "தோன்றியோர் விளையாட்டயர்ந் தெழுதலுந் தூயோற்—கேண்றவாகுமற் றுருத்திரன் முதற்பெயரெட்டு - மான்றதாகமோரெட்டரிவையருஞ் - சான்றமைந்தரோ ரெண்மரூஞ் சார்ந்தனரன்றே" (கூர்மபு. அட்டமூ. கக.) "எய்த நாமமென்னெனிற்பவன் சருவனீசானன்—வைதிகந்தருபசுபதிவீமன்மாதேவ-னெய்திளம்பிறை யணிந்திடுமுக்கிரனெனப-மைதிகழ்ந்தொளிர்கண்டனெண்வடிவ மும்வகுப்பாம்" (சஉ) "பரிதிவெண்சதிர்கடவுணீர்புவியழல்பனி வா-னுருவநல்வளிய நமகம்புரிந்தழனூட்டும—பொருவி'னுண்மறையந்தணனென்பரப்புகிதர் - மருவிவாழ்வுறுமங்கையரெண்மர்பேர் வகுப்பாம். (சக.)

அட்டமூர்த்தி—சிவன். (உ-ம்.) "மலைமகள்பாகத்தட்டமூர்த்தியை" (பெரியபு. திருநாவ. எஅசு.) [அஷ்டமூர்த்திர்: மூர்த்திர்-மூர்த்தமுடையவர்]

அட்டமூர்த்திகள்—எட்டு மூர்த்திகள். அவர்கள், பவன், சருவன், ஈசானன், பசுபதி, வீமன், உக்கிரன், மாதேவன், உருத்திரன் என்பவர்கள். (உ-ம்.) "கட்டுசெஞ்சடைப்பவர்முதலாகவேசமுற - மட்டமூர்த்திசடாங்களும்" (கந்தபு. கணங். கக.)

அட்டமூர்த்திதான் — சிவன். (ஆப். சoகு.) [அஷ்டமூர்த்திமூர்: எண்மூர்த்தத்தையுடையவன்.]

அட்டமூலம்—எட்டுவகை வேர்கள். அவை: சுக்கு, அரத்தை, (சிற்றரத்தை, பேரரத்தை) செவ்வியம், சித்திரமூலம், கண்டுபாரங்கி, (சிறுதேக்கு) கோரைக்கிழங்கு, நன்னாரிவேர், காஞ்சொறிவேர் என்பன. (கா. வைத்.) [அஷ்; மூலம்—வேர்.]

வைத்தியநிகண்டுடையார்: சுக்கு, சிற்றரத்தை, சித்திரமூலம், பேரரத்தை, காஞ்சொறி, செவ்வியம், திரண்டமிள்கு, கண்டுப்பாரங்கியாகிய எட்டும் அட்டமூலமென்பர்.

அட்டமெய்ப்பரிசம்— அட்டபரிசம். (உவின். சகு.)

அட்டயோகம் — அட்டாங்கயோகம். (உ-ம்.) "மெய்ஞ்ஞானந்தரு மட்டயோகத்தவமே" (கந்தர்கலி. கூசு.) [அஷ்டயோகம்.]

அட்டயோசம்— அரைபொடி. (மா.)

அட்டரக்கு—உருக்கிய அரக்கு. (உ-ம்) "அட்டரக்கனையசெவ்வா யணிநலங் கருகி" (சிந்தா. கோவிந். சூo.) [அட்ட-உருக்கிய. அரக்கு-மெழுகு.]

அட்டல்—1. அழித்தல். (உ-ம்.) "அட்டலின்றியமர்தருசாலிகை. (கந்தபு. வச்சிர. கூ.) 2. அள்ளுதல். (உ-ம்.) "அட்டித்தரப்பணியே" (தேவா. ர.திருக்கோளி. க. சுங.) 3. கொல்லல். (உ-ம்.) "வெஞ்சமரியற்றியட்டல்பழியாகும்" (கந்தபு. சதமுக. கூ.) 4. நெருப்பிற்காய்ச்சுதல். (உ-ம்.) "அடைபலங்காய்தாரியம் வெவ்வேறட்டல்" (தைல. உகூ.)

அட்டலக்குமி — தனலக்குமி, தானியலக்குமி, தைரியலக்குமி, சௌரியலக்குமி, வித்தியாலக்குமி, கீர்த்திலக்குமி, விசயலக்குமி, இராச்சியலக்குமியென்னும் எட்டிலக்குமிகள். (உவின், சகு.) [அஷ்டலக்ஷ்மி.]

அட்டலட்சணம் — அட்டகுணம். (சி) [அஷ்ட; லக்ஷணம்.]

அட்டலட்சுமி—அட்டலக்குமி. (சி.)

அட்டலோகபற்பம்—பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, வெண்கலம், தரா, வங்கம், துத்தநாகம் என்னும் எட்டுலோகங்களினுஞ் செய்யப்பட்ட ஒருமருந்து. (உவின். சகு.) [அஷ்; லோஹ ஹஸ்மம்-உலோகத்திலுண்டாகிய பற்பம்.]

அட்டலோகம் — அட்டதாது. (மா.) [அஷ்டலோஹ: அஷ்; லோஹம்-தாது.]

அட்டவசுக்கள் — எட்டுவசுக்கள்; அவர்: அநலன், அநிலன், ஆபன், சோமன், தரன், துருவன், பிரத்தியூடன், பிரவாசன், என்பவர். (உ-ம்.) "முனிவனீசநிந்தே யட்டவசுக்களைமுனிந்து" (பாகவத. குருகுல. கூடுரு.) [அஷ்டவஸு: வஸுக்கள் - ஒருவகைத் தேவகணங்கள்.]

அட்டவணை—1. அநுக்கிரமணி. (மா) 2. சேர்க்கப்பட்டது. (மா.)

அட்டவர்க்கம் — 1. அட்டவருக்கம். (உ-ம.) "திப்பிலிமிளகு சுக்குச் சீரகமிந்துப்போமம்- வெப்பங்சொள் பெருங்காயந்தான்விதித்தனரிவற்றினோடே-செப்பருங்கருமைகொண்டசீரகம்பின்னுஞ்சேர்க்கில்- ஒப்பிலாவட்டவர்க்கமுறுமெனத்தொகுத்தார் முன்னோர்" (வைத். நிக) 2. (சோதிடம்.) ஏழு கிரகங்களுக்குமஇலக்கினத்திற்கும்எட்டுவகையாகவகுக்கப்படும் ஒருகணக்கு. இதன்விபரஞ் சாதகசிந்தாமணியிலிருந்து பின்னுற் குறிக்கப்படும் சசுநிசூ-ம் கசுஙு-ம் செய்யுட்களையும் அவற்றின்பின்வரும் கoசசெய்யுட்களையும் வாசித்தறிக.

அட்டவருக்கம்—எட்டுவகைமருந்துச்சரக்குகள்; அவை; இந்துப்பு, ஓமம், கருஞ்சீரகம், சீரகம், சுக்கு, திப்பலி, பெருங்காயம், மிளகு என்பன. (தைல. தைலவ. சகூ. உரை.) 2. (சோதிடம்.) அட்டவர்க்கம். (குமாரசாமியம். கூகூ-ம் பக்.)

அட்டவருக்கு—சுக்கு, மிளகு, திப்பலி இந்துப்பு, சீரகம், கருஞ்சீரகம், ஓமம், பெருங்காயம் ஆகிய அட்டவருக்கம். (உ-ம்) "அட்டவருக்கிவைநீடாரகை யெண்ணெலாநேர விழைத்து" (தைல. தைலவ. சகூ.)

அட்டவன் —1. அழித்தவன். (உ-ம்.) "மாற்றலார்புரமட்டவன்" (கந்தபு. கணங்க. கஎ.) 2. (அடுதல்செய்தவன் (எப்பொருளிலாயினும்.)

அட்டவாதம் — எட்டுவகைவாதங்கள்; அவை; சிவசமவாதம், ஐக்கியவாதம்

சங்கிராந்தவாதம், பிரவாகேசுவரவாதம், காபாலிகவாதம், அவிகாரவாதம், பேதாபேதவாதம், அநேகேச்சுரவாதம், என்பன. (த. நி. போ. கூஉ.) [அஷ்டவாதம்.]

அட்டவிகாரம் — உயிர்களுக்குள்ளன என்று சொல்லப்படும் எட்டுவிகாரங்கள்; அவை: காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம் அசூயை, இடும்பையென்பன. (உவின். சடு.) [அஷ்டவிகார.]

அட்டவிஞ்சதி—இருபத்தெட்டு. [அஷ்ட; விம்ஶதி-இருபது.]

அட்டவிஞ்சதியோகாசாரியர் — இருபத்தெட்டுயோகாசாரியர்; அவர்: ஸ்வேதர், சதாசிவர், தமனர், சகோத்திரர், சங்கர், லோகாக்ஷர், ஜைகிஷர், ததித்தியவந்தர், விஷயர், உக்கிரர், அத்திரி, சுபாலகர், கௌதமர், வேதசிரர், கோகர்ணர், குகாவாசர், சிகண்டி, சடமாலி, அட்டகாசர், தாருகர், லாங்குலி, மகாகாயர், சூலி, டிண்டிமுண்டி, சயிஷ்ணு, சோமசர்மர், இலகுலீசுவரர், என்னும் முநீசுவரர். (வி-ணி. கசுo.) [அஷ்டவிம்ஶதி- இருபத்தெட்டு; யோகாசாரியர்.]

அட்டவித்தியேசுரர்—எட்டுவகைவித்தியேசுரராகிய விஞ்ஞானாகலர்; அவர்: அநந்தர், சூக்குமர், சிவோத்தமர், ஏகநேத்திரர், ஏகருத்திரர், திரிமூர்த்தர், ஸ்ரீகண்டர், சிகண்டியென்பவர். [இவர் ஈசுரதத்துவத்திலிருக்கும் ஈசுரனைச்சூழ்ந்திருந்து மாயையின்கீழுண்டாகிய சிருட்டி முதலிய கிருத்தியங்களைச் சிவனுடைய ஏவலாற் செய்பவர்களாய் அபரமுத்தி பெற்றிருப்பார். அநந்தர் முதலிய இவர் மேற்சொல்லிய அடைவே ஒவ்வொரு கலைகுறைந்து குறைந்து வருதலால் ஒருவர்க்கொருவர் தாழ்வுடையவர் என்பர். அநந்தர் அதிகாரத்தில் வைரம்பிறந்து மோட்சமடைய அதன்பின் அவர்க்கடுத்த சூக்குமர் அவ்வதிகாரம்பெற்று அவர்போலக் கிருத்தியஞ்செய்வர். மற்றையோரும் இப்படியடைவே யதிகாரத்தைப் பண்ணுவர். எல்லார்க்கும் பிந்தின சிகண்டியுடைய இடம் பாழ்கிடவாமல் விஞ்ஞானாகலருட் பக்குவமான ஒருவரைச் சிவன் அடைவே எண்மரிற்குறையாமற் கூட்டுவர்.] (சி. சி. அ: உ. மறை.)

அட்டவிததாடநம் — எட்டுவகைத்தாடநம்; அவை: சங்கோசம், பக்கத்தம், பிரசுரிதம், முட்டி, கிலம், கர்த்தரிகை, சந்தங்கிசம், வித்தை யென்பன. (கொச்சோ. டு ஏஉ. எகூ.) [அஷ்டவித—எட்டுவகை. தாடநம்-தட்டுதல்]

அட்டவூறு — எண்வகையூறு; அவை; வெம்மை, தண்மை, மென்மை, வன்மை, நொய்மை, சீர்மை, இழுமெனல், சருச்சரையென்பன. (உவின். சடு.) [அஷ்ட-எட்டு. ஊறு - பரிசம்.]

அட்டவெற்றி— எண்வகைவெற்றி; அவை: பகைநிரைகவர்தல், பகைவர்கவர்நிரைமீட்டல், பகைமேற்செல்லல், பகைமுன்னெதிரூன்றல், தன்னரண்காத்தல், பகைவரரண்வளைத்தல், பொருதல், போர்வெல்லல். இவற்றிற்குமுறையே மாலைகள்: வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை யென்பன. (சி)

அட்டவைசுவரியம்—எண்வகைச்செல்வங்கள்; அவை: அடிமை, இராசாங்கம், சுற்றம், நெல், பொன், மக்கள், மணி, வாகநம் என்பன. (சி.) [அஷ்ட—எட்டு. ஐஶ்வரியம்—பாக்கியம்.]

அட்டவைரவர் — எட்டுவைரவர்கள்; அவர்: மகாவைரவர், உக்கிரவைரவர், சண்டாளவைரவர், குரோதவைரவர், உன்மத்தவைரவர், காபாலவைரவர், பீஷணவைரவர், சாகரவைரவர் என்பன. இவர் சிவலோகத்திலேசோதிமயமானகோட்டையில் எட்டுவாயில்களிலுங் காவல்செய்துகொண்டிருப்பர் என்பர். (வி—ணி உகூக.) [அஷ்டபைரவ:]

அட்டாங்கசீலம் — (பௌத்தம்.) நல்லொழுக்கமாகிய சீலத்தினெட்டுறுப்புக்கள்; அவை: கொல்லாமை, திருடாமை. வியபிசரியாமை, பொய் கூறாமை, கள்ளுண்ணாமையென்னும் பஞ்சசீலத்துடன் இல்லறத்தார்களில் நிட்டாபரர்களே யுபயோகியாமை, தரையிற்படுத்தல், பாய்மேற்படுத்தல் என்பன. (மணிமேகலை. கஅ.) [அஷ்டாங்கஶீலம்.]

அட்டாங்கநமஸ்காரம் — மோவாய், கன்னங்கள் இரண்டு, தலை, கைகள் இரண்டு, புயங்கள் இரண்டென்னும் எட்டுறுப்பும் நிலத்திலே தோய நமஸ்கரித்தல். (சைவச. பொது. டுகூ உரை.) [அஷ்டாங்கநமஸ்காரம்: அஷ்டாங்க-எட்டுறுப்பு. நமஸ்காரம்-வணக்கம்.]

அட்டாங்கம் — எட்டுறுப்புக்கள்; அவை: தலை, கைகள் இரண்டு, செவி இரண்டு, மோவாய், தோள்கள் இரண்டென்பன. (உ-ம்.) "ஒருகாலட்டாங்கமுடன் பஞ்சாங்கமுட னுதலொண்செங்காலவெண்- குருசாலுமலர்த்தடஞ்சூழ் கூடலுயகர்ப் பணிவோர்" (திருவிளை. மூர்த்தி. கூo.) [அஷ்டாங்க.]

அட்டாங்கமார்க்கம்— பழுதிலாவாழ்க்கையெனப்படும் எட்டங்கங்களையுடைய துக்கநிவாரணமார்க்கம்; அவை: நற்காட்சி, நல்லூற்றம், நல்வாய்மை, நற்செய்கை, நல்வாழ்க்கை, நன்முயற்சி, நற்கடைப்பிடி, நல்லுளத்தோர்தலைப்பாடென்பன. (மணிமேகலை. கூஉ.) [அஷ்டாங்கமார்க.]

அட்டாங்கயோகம்— யோகஉறுப்புக்கள்எட்டு; அவை: இயமம், நியமம்,

ஆதநம்,பிராணுயாமம்,பிரத்தியாகாரம், தாரணை, தியாநம், சமாதியென்பன. (உ-ம்.) "மார்க்கவட்டாங்கயோகமுற்றுமுழத்த அழர்ந்தவர்" (சி. சி. அ: உக.) [அஷ்டாங்கயோகம்.]

அட்டாங்கவந்தநம் — அட்டாங்கநமஸ்காரம். (மா.) [அஷ்டாங்கவந்தநம்: வந்தநம்-நமஸ்காரம்.]

அட்டாங்நலசிகாச்சேதம் — குடுமியெட்டங்குலம்விட்டறுத்தல். (சி. சி. அ. உரை. ஞாந.)

அட்டாட்சரம் —ஒருவிஷ்ணுமந்திரம்; அது "நாராயணுயநம:" என்பது. (உ-ம்.) "(அ-கை.) அட்டாட்சரத்தின்பெருமையையுணர்தல்" (கவி) "நயர்ந்ததெல்லாமெளிதருளுநாராயணுயநமவென்னு-முயர்ந்ததிருமந்திரம்" (ஞாந வா. பிரகலா. ௫.) [அஷ்டாக்ஷரம்.]

அட்டாட்சரி—அட்டாட்சரம். (உ-ம்.) "தன்னை விட்டுணுவாகவும், ஸ்திரியை யிலட்சுமியாகவும் பாவித்து விடயமும்பொருந்தி யட்டாட்சரியைச்செபித்து" (த. நி. போ. கஅள.) [அஷ்டாக்ஷரி.]

அட்டாதசகணம் — பதினெண்கணங்கள்; அக்கணங்களாவார்: தேவர், சித்தர், அசுரர், தைத்தியர், கருடர், கின்நரர், நிருதர், கிம்புருடர், காந்தருவர், இயக்கர், விஞ்சையர், பூதர், பைசாசர், அந்தரர், முநிவர், உரகர், ஆகாயவாசியர், போகபூமியர் என்பவர். (மா.)[அஷ்டாதசகணம்.]

அட்டாதசகுணம்— யாக்கைக்குரிய பதினெட்டுக்குணங்கள்; அவை: பசி, நீர்வேட்டல், பயம், வெகுளி, உவகை, வேண்டல், நினைப்பு, உறக்கம், நரை, நோய்ப்படுதல், மரணம், பிறப்பு, மதம், இன்பம், அதிசயம், வியர்த்தல், கேதம்,கையறவு என்பன. (பிங்க. சசஎ.) [அஷ்டாதசகுணம்.]

அட்டாதசதருமசாத்திரம்—பதினெட்டுத்தருமநூல்கள்; அவை: மநு, அத்திரி, விட்டுணு, வாசிட்டம், யமம், ஆபத்தம்பம், யாஞ்ஞவற்கியம்,பராசரம்,ஆங்கீரசம்,உசநம்,காத்தியாயநம், சம்வர்த்தம், வியாசம், பிருகற்பதி, சங்கலிதம், சாதாதபம், கௌதமம், தக்கம் என்பன. இவற்றுள், மநு கிரேதாயுகத்திலுங், கௌதமந் திரேதாயுகத்திலும், சங்கலிதந் துவாபரயுகத்திலும், பராசரங் கலியுகத்திலுஞ் சிறந்தன. (சி; ஆப். சுகஎ.) [அஷ்டாதசதர்மசாஸ்த்ரம்.]

அட்டாதசப்பாடை — பதினெண்பாடைகள்; அவை: அங்கம், அருணம், கலிங்கம், கௌசிகம், காம்போசம், கொங்கணம், கோசலம், சாவகம், சிங்களம், சிந்து, சீனம், சோனகம், திரவிடம், துளுவம், பப்பரம், மகதம், மராடம், வங்கம் என்பன. (மா.) [அஷ்டாதசபாஷா.]

அட்டாதசபுராணம்—பதினெண்புராணங்கள்; அவை: சைவம், பவிடியம், மார்க்கண்டம், இலிங்கம், காந்தம், வராகம், வாமநம், மற்சம், கூர்மம், பிரமாண்டம், பிரமம், பதுமம், காருடம், நாரதம், விண்டு, பாகவதம், ஆக்கிநேயம், பிரமகைவர்த்தம் என்பன. (உ-ம்.) "அட்டாதசபுராண மறைமுநி" (மச்சபு. பூரு. க; கந்தபு. பாயிர. ௰௪, ௰௫.) [அஷ்டாதசபுராணம்.]

அட்டாதசம்—பதினெட்டு. (உ-ம்.) "அட்டாதச மகாபுராணங்களையுமறிந்தும்" (சி. சி. அ: கக. சிவாக்; வென். கூ.) [அஷ்டாதசம்: அஷ்ட-எட்டு. தசம்-பத்து.]

அட்டாதசமூலம் — பதினெண்வகைவேர்கள்; அவை: எருக்கு, கண்டங்கத்தரி, கரந்தை, சிறுமுன்னி, குமிழ், கொடிவேலி, சங்கங்குப்பி, சிற்றாமல்லி, தழுதாழை, தூதுளை, நன்னாரி, மாவிலிங்கை,நொச்சி, பாதிரி,பேராமல்லி, முருங்கை,வில்வம், வேர்க்கொம்பென்பன. (சி.) [அஷ்டாதசமூலம்]

அட்டாதசவித்தை — பதினெண்வித்தைகள்;அவை: ஆறுவேதாங்கங்கள், நான்குவேதங்கள், மீமாஞ்சை, நியாயம்,ஸ்மிருதி, புராணம்என்னும் பதினன்கும், ஆயுர்வேதம், தநுர்வேதம், காந்தருவவேதம், அருத்தவேதம் என்பனவும். (ஆப். ௬௦௫.) [அஷ்டாதசவித்யா: வித்யா—வித்தை.]

அட்டாதசவியவகாரபதம்— வழக்குக்குரிய பதினெண்விடயங்கள்;அவை: கடன்கோடல், உபநிதி, கூடிமேம்படல், நல்கியதைநல்காமை, ஒப்பிப்பணிசெய்யாமை, கூலிகொடாமை, உடையானல்லான்விற்றல், விற்றுக்கொடாமை, கொண்டுள்ளமொப்பாமை, கட்டுப்பாடுகெடத்தல், நிலவழக்கு, மாதராடவர்தருமம், தாயபாகம், வன்செய்கை, சொற்கொடுமை, தண்டக்கொடுமை, சூது என்பனவும் ஒழிந்தனபலவும். (மிரு. ச. உ;வள். உரைப்பா.) [அஷ்டாதசவ்யவஹாரபதம். [அஷ்டாதச-பதினெட்டு. வ்யவஹார-வியாச்சியம். பதம்-விஷயம்.]

அட்டாதசவிவாதபதம்— அட்டாதசவியவகாரபதம். (ஆப். ௬௦௫.) [அஷ்டாதசவிவாதபதம். விவாத—வியாச்சியம்.]

அட்டாதசோபபுராணம்— பதினெட்டுப்புராணங்கள்; அவை: நாரசிங்கஞ்,சநற்குமாரம், நாரதீயஞ், சிவதன்மம், துருவாசம், நந்திகேச்சுரம், அவுசநங், காளிகம், வாருணஞ், சாம்பேசம், பராசரம், பார்க்கவம், காபிலம், மாநவம், வாசிட்டலிங்கஞ், சவுரம், மாரீசம், பிரமாண்டமென்பன. (பிங்க. ௬சரு.) [அஷ்டாதசோபபுராணம்.]

அட்டாதுட்டம்—அதிகதீங்கு. (உவின். கூ.) [அட்ட துஷ்டம்.]

அட்டாதுட்டி — 1. அதிகதுட்டத்தனஞ் செய்கிறவன். [அட்ட - அதிகம். துஷ்ட - தீங்கு. இ - ஒருவிகுதி.] 2. அதிகதுட்டத்தனம். (உவின். கூ.) [அட்ட; துஷ்டி.]

அட்டாபதபத்திரம் — பொற்றகடு. (ஆப். க0௪.) [அட்டாபதபத்ர:பத்ரம்-தகடு.]

அட்டாபதம் — "ஒருவகை வன்னப்புடைவை. (ஆட். க0௪.) 2. கதவின்தாழ். (ஆப். க0௪.) 3. கைலாசமலை. (ஆப். க0௪.) 4. சரபப்புள். (ஆப். க0௪) 5. சிலந்தி. (ஆப். க0௪.) 6. பொன். (ஆப். க0௪.) [அஷ்டாபதம்.]

அட்டாபந்தநம்—அட்டபந்தனம்.(சி-)

அட்டாலகம்—1. கோபுரம். (வென். க0.) 2. மேல்வீடு. (ஆப். கரு.) [அட்டாலக: அட்ட-அதிகம். அல-அலங்கரித்தல். க-ஒருவிகுதி.]

அட்டாலம் — 1. அட்டாலை. (சி.) 2. மேல்வீடு. (ஆப். கரு.) [அட்டால: அட்ட; அல.]

அட்டாலிகாகாரன்—அரசர்மனைகளைக் கட்டுஞ் சிற்பாசாரி. (ஆப். கரு.) [அட்டாலிகாகார: அட்டாலிகா-அரசர்மனை, காரன்-செய்வோன்.]

அட்டாலிகை—1. அரசர்மனை. (உவில்: சரு.) 2. மேல்வீடு. (உவில். சரு.) [அட்ட-அதிகம். அல - அலங்கரித்தல். இக-ஒருவடமொழிவிகுதி.]

அட்டாலை—1. அட்டாளை. (உ-ம்.) "கீழ்த்திசைமருங்கோரட்டாலை மண்டபஞ்செய்யெனவதுகேட்டெழுந் தரசன்" (திருவிளை. யானை. உரு.) 2. அரசர்மனை. (உ-ம்.) "கதநவாயிலுங்கட்டியட்டாலையும்" (இராமா. முதற்போர். ருஉ.) 3. மேல்வீடு. (உவின். கசு.) [அட்டால.]

அட்டாலைமண்டபம்— மேல்வீடாகக் கட்டப்பட்ட மண்டபம். (உ-ம்.) "அகங்கவ்வியகளிப்பெய்திவர்— தட்டாலை மண்டபம்பொன் - னகங்கவ்வியுதெனத்துனொருநாளுன்கினிலெடுத்தே" (திருவிளை. யானை. உச.)

அட்டாலைமரம்—ஒருமரம். (கா. வைத்.)

அடகு— 1. இலைக்கறி. (உவின். க0.) (உ-ம்.) "மூலமடகுதுய்த்தல்" (கூர்மபு. வருணச். கக.) 2. கடன்வாங்குவோன் ஈடாகக் கொடுக்குஞ் சங்கமப்பொருள். (உ-ம்.) "ஆபரணம் வைத்தடகு தேடுபொருள்" (திருப்பு. ருகூச) [இது வாங்குதலெனப்பொருள்படும் "அட" என்னும் வடசொல்லினின்றுவந்தது போலும்.] 3. பச்சிலை. (உ-ம்.) "ஆயிரமாண்டு புல்லடகுமேயினன்" (கந்தபு. கயமு. எரு.)

அடங்க—"உள்ளாக" எனப்பொருள்படும் ஒருவினையெச்சம் (உ-ம்.) "அவனிமுழுதுமோரடிக்கு ளடங்கவளந்துகொண்டவனே" (சூத. முத்த. ச: உக.)

அடங்கம் — கடுரோகிணிப் பூண்டு" (கா. வைத்.)

அடங்கல்—1. அந்தர்ப்பவித்தல்.(உ-ம்) "அளவைகாண்டல்கருதலுரையென்றிம்மூன்றினடங்கிடுமே" (சி. சி. அளவை. க.) உள்ளாதல். (உ-ம்) "அவுணர்கோன்சேனை யறிஞர்கூறிய பெருந்தொகைதன்னிலுமடங்கா" (கந்தபு.சூர.கஉஉ.)2.அமைதல்,செயப்படக்கூடியதாதல். (உ-ம்) "இடங்கொளுந்தாதையரிட்ட காரியமடங்கலின்ருயினுமமையுமாயினும்" (சேதுபு. அவை. உ.) 3. எல்லாம், [இப்பொருளிலே வரும்போது பெரும்பான்மையும் முற்றும்மை பெற்று வரும்.] (உ-ம்.) "திக்கடங்கலுங்கடந்த" (திருவிளை. திருநகரங்கண்ட. கரு.) 4. ஒடுங்குதல் (உ-ம்.) "சிந்தையுமென்போலச் செயலற்றடங்கிவிட்டால்" (தாயு. பராபர. ருஉரு.) 5. கீழ்ப்படிதல். 6. மதம்புறத்துப்பரவாதறத்தின்கண்ணேநிற்றல். (உ-ம்,) "கதங்காத்துக் கற்றடங்கலாற்றுவான்" (வள். கரு0) 7. வலிகுறைதல். (உ-ம்.) "தடிசுவைத்தீருளுண்டுந் தழற்பசியடங்கிடாது" (சூத. எக்கி. பூ உ0: கூ.) 8. வெளிப்படாது மதத்தினுள்ளே அமர்தல். (உ-ம்.) "அடங்கருநாணமும்பயமுங்கொண்டனன்" (சூத. எக்கி. உ. ச: உரு.)

அடங்கலர்—1. ஐம்பொறிகளையும் வாட்டாதோர் (உ-ம்.) "அடங்கலர்க்கீந்ததாநப்பேற்றினல்" (சிந்தா. முத்தி. உசச.) உ. கீழ்ப்படியாதவர்கள். (உவின். கக.) 3. பகைவர். (உ-ம்.) "அடங்கலர்முப்புரமெரித்தார்" (பெரியபு. இடங்கழி. ச.)

அடங்கலன்—பகைவன். (உ-ம்.) "அடங்கலனோர் வஞ்சனையினலடமதித்தான்" (திருவிளை. யானை. சு.)

அடங்கலார்—பகைவர். (உ-ம்.) "அடங்கலார்புரமழலெழச்சிரித்த" (காஞ்சிபு. வீராட். சக.)

அடங்கலும்— 1. அனைவரும். (உ-ம்.) "பார்விசும்புறையு நீரரடங்கலும்" (கந்தபு. திருக்கல். எஎ.) 2. எல்லாம். (உ-ம். திருவிளை. திருநகரங்கண்ட. கரு. "அடங்கல்" பார்.)

அடங்கவும்—முழுவதும். (உ-ம்.) "உடம்படங்கவுமுன்கொடு" (பெரியபு. திருநா. ருருக.)

அடங்கன்முறை—தேவாரம் முற்றும் அடங்கியஒருபுத்தகம். இது,திருஞானசம்பந்தமூர்த்திநாயனரது தேவாரத்திருப்பதிகம் முந்நூற்றெண்பத்துநான்கும் திருநாவுக்கரசுநாயனரது தேவாரத் திருப்பதிகம் முந்நூற்றுப்பன்னிரண்டுஞ்சுந்தரமூர்த்திநாயனர் தேவாரத் திருப்பதிகம் நூற்றொன்றும் ஆகிய எழுநூற்றுத்தொண்ணூற்றேழுதிருப்பதிகங்கள் அடங்கியும்அபயகுலசேகரசோழமகாராசாவினது வேண்டுகோளின்படி நம்பியாண்டார் நம்பியால் ஏழு திருமுறைகளாக வகுக்கப்பட்டும் உள்ளது.

அடங்காதோர் — பகைவர். (உ-ம்.) "அடிபுறந்தருகுவ ரடங்காதோரே",

(புறநா. ௯௫) 2. மநஅடக்கம் இல்லாதோர். (உ-ம்) "தன்றுபிணியோர்துறந்தோரடங்காதோர்" (பாரத. கிருட்டி. ௫௧.)

அடங்காப்பற்று—அரசனாணையை மீறுவோரிருக்கும் ஊர். (உவின். கக)

அடங்காமாரி— ஒருவருக்குக் கீழ்ப்படியாது முரணிநடப்பவள். (உவின். கக) [அடங்கா-அடங்காத.மாரி-தூர்க்கை. ஆப். ௬அ௦. மாரி.]

அடங்காமை—1. கீழ்ப்படியாமை. (உவின். கக.) 2. மநம்வாக்குக்காயங்கள் அடங்காது தீநெறிக்கட்செல்லல். (உ-ம்.) "அடங்காமையாரிருளுய்த்துவிடும" (வள். கஉ௧.)

அடங்கார்—பகைவர். (உ-ம்.) "அடங்கார்சேடுடைமுடித்தலைகள்" (காஞ்சிபு. வாணீ. உ.)

அடங்காவாரிதி—1. கடலுப்பு. (கா. வைத்.) 2. மூத்திரம். (கா. வைத்.)

அடங்கிடம் — அழிந்தொடுங்குமிடம். (உ-ம்.) "விந்துநாதஞ்சத்திநெறியேயடங்கிடம் பரசிவத்தினில்" (அருணசலபு. திருமலை. ௫.)

அடங்கு—அடங்குதல். (உ-ம்.) "அடங்கருநாணமும் பயமுங்கொண்டனன்" இங்கே, வெளிப்படாதுள்ளேயிருத்தல் என்னும்பொருட்டு. (சூத. எக்கி. உ. ௪: உ௬.)

அடங்குதல்—அடங்கல். வெளிப்படாதுமநத்தினுள்ளேயமர்தல். (உ-ம். "அடங்குபார்") [·"அடங்கல்" என்பதற்குக்கூறியபொருள்களில் நான்காவதொழிந்தன இதற்கும்பொருளாம்.]

அடசுதல்—அடையப்பண்ணுதல். (உ-ம்.) "அழுந்தவாளியொன்று பத்துநூறு வன்பொடடசினுன்" (பாரத. பதினு. ௬௦.)

அடஞ்சாதித்தல்—எதிரிடைபண்ணுதல். (உவின். கக.)

அடடா—1. ஓரதிசயக்குறிப்பு. (உ-ம். "அட்டா அவனெவ்வளவு இரசமாய்ப்பாடுகிறுன்" (உவின். கக.) 2. தனக்குக் கீழ்ப்பட்ட ஒருவனை விளிக்கும் ஒரு சொல்; [இது அடா அடா என்னும் அடுக்குமொழியின் முன்னதினிறுதி ஆகாரமும் பின்னதின் முதல் அகரமுங் கெட்டுநின்றன] (இராமாயணபத.)

அடத்தி—வாசி. (உவின்.கக.) [இது கடன்கொடுப்போன் கடன்தொகையிற் கழித்தெடுக்கும் பணம்.]

அடதாளம் — எழுவகைத்தாளங்களில் ஒன்று. (உவின். கக.)

அடந்தாளம் — அடதாளம். (உவின். கக.)

அடந்தை—ஒருதாளம். (மா.)

அடநம்—1. அலைந்துதிரிதல். (உவில். க௪.) 2. போதல். (உவில். க௪.) [அடந.]

அடநி—வின்னுனியிலே நாண்கொளுவும் இடம். (ஆப். க௯.) [அடநி.]

அடப்பங்கோடி — அடம்பங்கொடி. (உவின். கக.)

அடப்பம்—1. நாவிதன்கருவிப்பை. (உவின். கக.) 2. வெற்றிலைப்பை. (உவின். கச.) [இஃது அடைப்பை என்பதன் மரூஉ.]

அடப்பன்—1. கடப்பமரம். (கா.வைத்.) 2. நெய்தனிலத்தலைவனைக்கூறும் ஒருபட்டப்பெயர். (உவின்.கக.) [வழக்]

அடப்பனர் — நெய்தனிலத்தலைவனைக்கூறும் ஒருபட்டப்பெயர். (உவின். கக.) [வழக்.]

அடப்பிரதீபிகை—அடயோகத்தை விபரிக்கும் ஒரு வடநூல். (த.நி. போ. ௯எ௪.)

அடம் — 1. அலைந்துதிரிதல். (உவில். க௪.) 2. பொல்லாங்கு. (உவில். க௯௬.) 3. போதல். (உவில். க௪.) 4. வலாற்காரம். (உவில். க௯௬.) (1, 3. அட. 2, 4. ஹ௦.)

அடம்பங்கோடி—ஓர்பூக்கொடி. (உ-ம்.) "அடம்பங்கொடியுந்திரண்டால் மிடுக்கு" (உவின். கக.)

அடம்பண்ணல்—தீங்குசெய்தல். (பஞ்சதந்திரம். எக.)

அடம்பாரம் — முழுதும். (உவின். கக.)

அடம்பு—ஒருபடர்கொடி. (உ-ம்.) "தும்பைவெள்ளடம்புதிங்கள்" (பெரியபு. ஏயர். ௧௦௦.)

அடயோகம் — நால்வகையோகங்களிலொன்று; இது ஒற்றைக்காலிலேநிற்றல், தலைகீழாகத்தூங்கிப் புகைசுவாசித்தல், கையுயர்த்தி நிற்றல்முதலிய பிரயாசச்செயல்களோடு செய்யப்படுவது. (ஆப். ௬அ௫.) [ஹ௦யொ௴. ஹ௦-வலாற்காரம். யோ௴ம்-

அடர்—1.3.அடரென்னேவலுந் தெரிநிலைவினைப்பகுதியும்பெயரெச்சத்தொகையும். 4. தகடு. (உ-ம்.) "அடர்ப்பொன்முட்டை" (மணிமேகலை. க௫-ங் காதை. க௪.) 5. நெருக்குதல். (உ-ம்.) "அடர்க்குறுமாக்களொடு" (மணிமேகலை. க௯-ங்காதை. ௪௦.)

அடர்ச்சி—1. குரூரவுரைசிந்தனைசெயல்களாகிய இராசதத்தின்குணம். (உ-ம்)"அடர்ச்சிமிகுங்கவுரவமாநங்கியம்" (சிவப்பிர. உ:உ௪.) 2. நெருக்கம். (உவின். கக.)

அடர்த்தல்—கொல்லல். (உ-ம்.) "இடங்கரையாழிவலவனடர்த்தனபோல்" (கல்லாட. ௫௯.) 2. நெருக்கல். (உ-

ம்.) "திருவிரலாலடர்த்தான்வல்லரக்கனையும்" (தேவார. திருநனி.அ.சுந்) 3. போர்செய்தல். (உ-ம்.) "ஆனையாள்கொண்டடர்த்தனர்" (கந்தபு. முதனாட். ககக.) 4. வருத்துதல். (உ-ம்.) "அடர்புலன்போக் கற்றோர்க்கும்" (கோயிற்பு. பாயிர. கஅ.)

அடர்த்தி—நெருக்கம். (மா. வழக்.)

அடர்தல்—1. நெருங்கல். (உ-ம்.) "அறுகையுநெருஞ்சியுமடர்ந்து" (மணிமேகலை. கஉ-ங் காதை. சுo) 2. புடைத்தல். (உ-ம்.) "வச்சிரங்கொண்டு வெற்படர்வதென" (ஞானவா. சநகரா. கச) 3. போர்செய்தல். (உ-ம்.) "எண்ணுறுபடைகளிவ்வாறெதிர்தழீஇ யடரும்வேலை" (கந்தபு. தாரச. ஙக)

அடர்ந்தேற்றம்—அடர்ந்தேற்றி. (உவின். கக.)

அடர்ந்தேற்றி — கொடுமை. (உவின். கக.)

அடர்ப்பம் — நெருக்கம். (உவின். கக.)

அடர்ப்பு — 1. நெருக்குகை. (உ-ம்.) "அவன்சங்கற்ப புருடனைப்போல சைவற்றிருப்பவடர்ப்பரிதாய்" (ஞானவா. ஞானவிண். சகூ.) 2. போர். (உ-ம்) "அசநியினயிற்படையடர்ப்புமோரயலாக" (இரகு. திக்கு. கஎo.)

அடர்பு—1. அச்சத்தகடு. (உவின். கக) 2. ஐமை. (உவின். கக) 3. நெருக்கம். (உவின். கக) 4. நெருங்கித் தொடர்கை. (உவின். கக.)

அடாடிபடாடி— முற்றும் அழிக்கை. (உவின். கக.) [வழச்]

அடரார்—பகைவர். (உவின். கக.)

அடரேன்—கொல்லேனெனப் பொருள்பட்டுத் தன்மையொருமையில் வரும் ஒரு எதிர்மறைவினைமுற்று. (உ-ம்.) "நீதியின் நியுனையடரேன்" (ஞானவா. வதாள. கஎ.)

அடரோலி — அதட்டல். (பிங்க உககக.)

அடல்—1. ஒருமீன். (உவின். கக. திசை.) 2. கொல்லுதல். (உ-ம்.) "அன்னவர்தமை யடலரியதாமெனின்" (கந்தபு. மூவாயி. எo.) 3. போர் (உ-ம்.) "அடல்வலிமானவர்" (கந்தபு. தெய்வ. கூஎ.) 4. வருத்துதல். (உ-ம்.) "அடல்வண்ணவைம்பொறியும்" (சிந்தா. கேமச. ருஎ.) 5. வலி. (உ-ம்) "அடன்மாவின் பேருரித்திறந்தரித்தனை" (கந்தபு. மோந. கஉ.) 6. வெற்றி. (உ-ம்) "அடலயினெடுவேலண்ணல்" (கந்தபு. சூரபன். உருகூ)

அடலம்—1. மாறுமை. (உவில். கச.) 2. விகாரமடையாமை. (உவில். கச) [அடலம்.]

அடலார்—1. பகைவர். (உவின். கக.) 2. போர்வீரர். (உவின். கக.)

அடலி—(மா.) அடுக்களைவேலைபார்க்கும் அடிமைக்காரி.

அடலை—1. சாம்பல். (உ-ம்.) "வேளும் புரமு மடலைபடவிழித்து நகைத்த வெள்விடையோன்" (உபதேச. நரக. ஙகூ.) 2. பற்பம். (இராசவைத். உகூஅ.) 3. போர்க்களம். (உ-ம்.) "அடலையினுணர்வின்றுகும்" (கந்தபு. சூர உருகூ.) 4. மாறுமை. (உவில். கச.) [அடலா.] 5. விபூதி. (உ-ம்.) "ஆதியாலயத்தடலைகொண்டு" (திருவிளை. சமணர். அஉ.)

அடலைமுடலை — வீண்வார்த்தை. (உவின். கக. வழக்.)

அடவாதி—1. தீங்குசெய்கிறவன். (உவின். கக.) 2. பிடிவாதக்காரன். (சி.) [ஹடவாதி.]

அடவி—1. காடு. (உ-ம்.) "விந்தத்தடவியும்" (சிலப். கடலாடு. உஅ.) 2. சோலை. (உவில். கச.) 3. மிகுதி. (உ-ம்.) "எரியலர்முண்டகத்தடவிதிக்கெடிய" (சல்லாட. ருகூ.) 4. திரள் (உ-ம்) "ஆயிரஞ்சுடிகைப்பணாடவிகிடர்து" (கூர்மபு. மநுமர. சு.) [அடவீ.]

அடவிக்கச்சோலம் — ஒரு சரக்கு. (உவின். கக.)

அடவிகன்—வனவாசி. (உவில். கச.) [அடவிக:]

அடவிச்சொல்—சோரோசனை. (கா. வைத்.)

அடவிசரர்—வேடர். (உ-ம்.) "அடவிசரர் குலமரகதவநிதையும்" (திருப்பு. சகூரு.) [அடவி—காடு. சரர்-சரிப்போர்.]

அடவியீ — ஒருவகைக்கீட்டம். [இதுகடிக்கில் அதிகநித்திரையும் மிகுமூர்ச்சையும்உண்டாகும்.] (சீவரட். சருக.)

அடா — தனக்குக் கீழ்ப்பட்டவனை விளிக்கும் ஒருசொல். [இது, தனக்கு ஒத்தாரோடும் மிக்காரோடுங் கோபமாய் நிந்தித்துப்பேசுமிடத்தும் பிரயோகிக்கப்படும்.] (உ-ம்.) "நில்லடா சிறிது நில்லடா" (இராமா. நாக. எகூ.)

அடாசனி—புளியாரைப்பூண்டு. (கா. வைத்.)

அடாசு—உக்கினபதார்த்தம். (உவின். கக.)

அடாசுதல்—1. திணித்தல். (உவின். கக.) 2. விலகுதல். (உவின். கக.) [வழக்.]

அடாணு—ஓர்ராகம். (உவின். கக.) [அஜாணு.]

அடாத் — பலாற்காரமாய். (உவில். கககூ.) [ஹடாத்.]

அடாத்தியம்—அடாத்து. (உவின். கக.) [திசை.]

அடாத்து—பலாற்காரம். (உவின். கக.) [ஹடாத்.]

அடாத — "தகாத" எனப்பொருள்படும் ஓர் எதிர்மறைப்பெயரெச்சவினை. (உ-ம்.) "அடாதவான்களைகட்டனர்" (கந்தபு. நாட்டு. கரு.)

அடாது—1. "அடு" என்னும் பகுதியினின்றும் பிறந்தவொரெதிர்மறை வினைமுற்றாய்த், "தகாது" எனப்பொருள்படவரும் ஒருசொல். 2. தகாதது. (உ-ம்.) "அடாதுசெய்சடாசுரன்" (பாரத. சடாசு. உஉ.) [அடாதது என்பது அடாதென நின்றது.]

அடார்—புலிமுதலியவைகளை அகப்படுத்தும் பொறியாகிய கல்லடார். (உ-ம்.) "பெருங்கல்லடாரும் போன்மென விருப்பி" (புறநா. கக.)

அடாவந்தி—அடாததாய்வந்தது. (உவின். சக.)

அடி—1–3. அடியென்னேவலுந் தெரிநிலைவினைப்பகுதியும் பெயரெச்சத்தொகையும். 4. அடுத்த இடம், சமீபம். (உவின். கக.) (உ-ம்.) "இணற்றடியினின்றான்" 5. உடம்பின்காற்பரட்டின்கீழிருப்பதாய் நடக்கும்போதல்லது நிற்கும்போது நிலத்திற்றோயும்பாகம். (உ-ம்.) "தோயுநிலத்தடி" (திருக்கோ. ௬.) 6. உடம்பினுறுப்பினாலே தாக்குதல். 7. கருவிகொண்டாவது கொள்ளாமலாவது கையினாலே தாக்குதல். 8. பாதமிதி. (உ-ம்.) "ஆத்தனூன்று மடிதொறுந் தோன்றியசீத்தம்யாவும்" (கந்தபு. காவலா. அ.) 9. கீழ். (உ-ம்.) "அடிவயிறு" 10. குளம்படி. (உ-ம்.) "ஆவடியளவுபூமியந்தணர்க்களித்தோர்" (அருணாசலபு. தீர்த்த. ௬உ.) 11. சத்திருபசாமர்த்தியம். (உ-ம்.) "சிவனடிசென்னிவைப்பாம்" (சி. சி. பாயிர. ௪.) 12. சூதாடுவார் வசநிக்குங் குழூஉக்குறிகளிலொன்று. (உ-ம்.) "அடியிதுபொட்டையீதென்பர்" (கந்தபு. கயமுக. க௯அ.) 13. செய்யுளுறுப்புக்களுளொன்று; அது: நாற்சீர்கொண்டுவருவதன்றியும், இருசீர் முச்சீர்களினாலும் ஐந்துமுதலியபலசீர்களினாலும் வருவதுமுண்டு. (உ-ம்.) "நாற்சீர்கொண்டதடியெனப்படுமே" (தொல். பொரு. ௬௪௪-ம் உரையும்.) 14. தொடக்கம், ஆதி. (உ-ம்.) "நடுவின்முடிவினிலடியினன்றானபொருளொன்று ஞாலத்தில்லை" (ஞாநவா. சநகரா. உஉ.) 15. பகுபதத்தின்முதனிலை. (உவின். கக.) 16. பழமை. (உ-ம்.) "அடியிட்டசெந்தமிழின்" (தாயு. மலைவளர். ௪.) 17. பன்னிரங்குலங்கொண்ட ஓரளவு. (உவின். கக.) 18. மரம்மலைமுதலியவற்றிலே நிலத்தோடடுத்திருக்குங் கீழ்ப்பாகம். (உவின். கக.) 19. வமிசமூலம். (உ-ம்.) "பனிமதிமரபிற்கடியுநீ" (பாரத. குருகுல. உரு.) 20. விசையாயசைந்துதாக்குதல். (உ-ம்.) "மலையிலிருந்துருண்டுவந்தகல் என்றலையிலடித்தது" 21. வேர். (உ-ம்.) "அடியற்றமரமென்னவடியிலே வீழ்ந்து" (தாயு. தேசோ. ௬௦.) [சிவஞானசித்தியா ரெட்டாஞ்சூத்திரம் ௬உ-ம்கவியுரையிலே சிவாக்கிரயோகியர் அடியென்பதன் பரியாயமொழியாகிய பதமென்பதற்கு வஸ்துஎன்னும் பொருளுமிருத்தலால் அடி யென்பதற்கு வஸ்து எனவும் ஒருபொருள் கூறுவர்.]

அடிக்கடி—1. அடிபெயர்க்குந்தோறும். (உ-ம்.) "அடிக்கடிபடித்துகள்பரவைதூர்த்தன" (பாரத. பதினொன். உ௦க) 2. பலமுறை. (உ-ம்.) "அண்ணல்சாமந்தன்றுஞ்சானடிக்கடியெழுந்து" (திருவிளை. மெய்க்கா. உ௬.)

அடிக்கணை—கணைக்கால். (உ-ம்.) "இணைவராணிகரடிக்கணையாளை" (சேதுபு. விதூம. அ௦.)

அடிக்கீழ்ப்படுத்தல்—1. அடக்கிநடத்துதல். (மா.) 2. ஆண்டுகொள்ளுதல். (மா.)

அடிக்குடி—அடிச்சேரி. (உவின். கக.)

அடிக்குடில்—1. அடிச்சேரி. (மா.) 2. வேடரிருக்குமூர். (மா.)

அடிக்குடில்வீடு—(அண்டத்தினடிப்பக்கத்திலுள்ள வீடாகிய) வைகுந்தம். (உ-ம்.) "அடியோங்களடிக்குடில் வீடுபெற்றுய்ந்ததுகாண்" (நாலா. பல்லா. ௯.)

அடிக்குள்ளே — உடனே. (உவின். ௬உ.)

அடிக்கொள்ளுதல்—தொடங்குதல். (உ-ம்.) "வாட்டடங்கண்ணிமார்பின் வந்தடிக்கொண்டதன்றே" (கூர்மபு. சண்ணவ. உரு.)

அடிக்கோலுதல் — அத்திவாரம்போடுதல். (மா.)

அடிகண்மார்—சமணருள் ஆசிரியராய் நின்றவர்களைக் குறிக்கும் ஒருசிறப்புப் பெயர். (உ-ம்.) "அடிகண்மாராவாரெண்ணாயிரவரும்" (திருவிளை. யானை. அ.)

அடிகள்—1. கடவுள். (உ-ம்.) "திருவாரூர்ப் பெருமானடிகள்" (பெரியபு. தண்டி. உ.) 2. குரு. (உ-ம்.) "அன்னைதன்னைத்தாதையை யடிகடன்னை" (கந்தபு. வீர. சய. உக.) 3. சமணகுரவர். (திருவிளை. யானை. அ. உரை.) 4. தலைவன். (உ-ம்.) "பட்டணத்தெம்மடிகடொகுத்த கட்டுரை" (வைராக்கியதீப. உ௦.) 5. தலைவி. (உ-ம்.) "இங்குவரவென்னைகுலம்யாதடிகட்கென்ன" (சிந்தா. கஙக. உ௩க) 6. தேவரீர். (உ-ம்.) "அடிகள்சொற்றுக" (இராமா. அகலிகை. ௪ரு.) 7. முனிவர். (உ-ம்.) "அடிகண்மார்" (பெரியபு. திருஞா. ௬௪௪.) 8. பாதங்கள். (உ-ம்.) "குமரேசனதடிகண்முன்னி" (கந்தபு. காவலா. ௪.) 9. மூத்தோன். (சூ. நிகண். உ௯.)

அடிகாற்று—பெருங்காற்று. (உவின். கக.)

அடிகேள்—சுவாமிகாளென்னும் பொருள்பட "அடிக"ளென்பதுவிளிவேற்றுமையிலே விகாரமாய்வந்த ஒரு சொல். (உ-ம்.) "அடிகேள்வந்தெய்தியதேவன்" (கந்தபு. தவம். உ.)

அடிகோள்ளல்—தொடங்குதல். (சி)

அடிகோலல்—1. அத்திவாரம்போடல். (சி.) 2. முயலல். (சி.)

அடிச்சால் — உழவின் முதற்சால். (உவின். கஉ.)

அடிச்சி — அடியாள். (உ-ம்.) "சூட்டுன்னடிச்சியை" (சிந்தா. கோவிந். எரு.)

அடிச்சியர் — குற்றேவல் செய்யும்பெண்கள். (உ-ம்.) "அடிபணிந்தடிச்சியரைய-வமுதுசெய்வதற்குள்ளெழுந்தருள்கென" (திருவிளை. இரச.கரு)

அடிச்சுவடு — பாதம் பதிந்தவடையாளம், பாதமுத்திரை.(உ-ம்.) "எக்கர்வாயவரிடுமடிச்சுவட்டு"(திருவானை. நகர. உஎ.) [அடி-கால். சுவடு-அடையாளம்.]

அடிச்சூடு — காலடியிற்சுதேல். (உவின். கஉ)

அடிச்சேரி — நகரவெல்லையினிருக்கும் ஊர். (உவின். கஉ)

அடிசில்—உண்பன தின்பன பருகுவன நக்குவனஎன்னும்ஆகாரப்பொது. (தொல். சொல். கிளவி. சசு. உரை. சேனு.)(உ-ம்.) "சீலமோடடிசில்செய்வன் சிறிதுபோ திருத்தியென்று" (கந்தபு. வில்வலன் வாதாவிவதை. கக.) "துணைமுலைகள்பொழிகின்றபாலடிசில்" (பெரியபு. திருஞான. சுஉ) 2. சோறு. (உ-ம்.) "அடிசிலஞ்சாலை" (கந்தபு. நகர. சடு.)

அடிஞானம்—சிவஞானம். (உ-ம்.) "ஆரியனுமாசான்வந்தருளாற்றேன்றவடிஞானமான்மாவிற்றேன்றும்" (சி. சி. அ: உஅ. சிவாக்.) [அடிகள் – சிவன். அடிகளதுஞானம் அடிஞானமென்றுயிற்றென்ப சிவாக்கிரயோகிகள். சிவஞானமுனிவர் முர்திய ஞானமென்ப-]

அடித்தல்—1. (பறை) அடித்துச்சொல்லல். (உ-ம்.) "வாய்ப்பறைகொண்டடிநீ" (தாயு. வினை. ரு.) 2. (ஆணி) அறைதல். (மா.) 3. இறைச்சியின் பொருட் டாடு மாடுமுதலியவற்றைக்கொல்லல். (உவின். கரு.) (உ-ம்.) "மாடடிக்குமிடம்" 4. சவிகொண்டு செய்தல். (உவின். கரு.) (உ-ம்.) "மழையடித்துப்பெய்தது" "அவனடித்துச் சொல்லிக்கொண்டு போனான்" "அவனுக்கதிட்ட மடிக்கிறது" 5. மோதல். (உ-ம்.) "திரையடித்துப் போகின்றது. 6. விரித்தகையினாலாவது தண்டுமுதலிய கருவியினாலாவது தோங்கித் தாக்குதல். (உ-ம்.) "அக்கிரமத்தரற் குற்றமடித்துத் தீர்த்து" (சி. சி. உ: கடு.) 7. வீசுதல். (உ-ம்) "சண்டமாருதச்சுழல் வந்தடிப்ப" (தாயு. தேசோ. உ-)

அடித்தலம்—1. அத்திவாரம். (உ-ம்) "பாசறைகொண்டேயொப்பவடித்தலம்படுத்து" (கந்தபு. நகர்செய். ரு.) 2. கீழிடம். (உவின். கஉ.) 3. பாதம். (உ-ம்.) "முத்தமிழ் விரகர்பொன்னடித்தலம்" (பெரியபு. திருஞா. கஎஉ.) 4. முதலிடம். (உவின். கஉ)

அடித்தழும்பு—1. அடிச்சுவடு. (உவின். கஉ.) 2. அடிபட்டதழும்பு. (உவின். கஉ.)

அடித்தளம்—1. அடிவரிசை. (உவின். கஉ.) 2. கற்படுத்தநிலம்.(உவின்.கஉ) 3. கிணற்றினடிப்பார். (உவின். கஉ) 4. பின்னணி. (உவின். கஉ.)

அடித்திகம்—அசுவகந்தி. (கா. வைத்)

அடிதல்—அடிபடுதல். (மா.)

அடிதலை—1. ஆதியந்தம். (உ-ம்.) "அடிதலைவரவிது" (அருணாசலபு. திருமலை. சுo.) 2. கீழ்மேல். (உவின்.கஉ) 3. வரலாறு. (உவின். கஉ.)

அடிதலைதடுமாற்றம்—ஆதியந்தந்தெரியாது தடுமாறுதல். (உ-ம்.) "அர்தமின்மறையெல்லாமடிதலைதடுமாறி" (கந்தபு. பாயிர. க.)

அடிநா—நாக்கினடி. (உ-ம்.) "அடிநாவடியணமுற" (நன். எழுத்தி. அஉ)

அடிநிலம் — அடிப்பக்கம், அடியிடம். (உ-ம்.) "அடிநிலத்திலே படிவனவிடுமுகிலனைத்தும்" (பாரத. கிருட்டிண. சுo.)

அடிப்பட்டகாந்தி — தீமுறுகப்பாஷாணம். (கா. வைத்.)

அடிப்பட்டசாந்தி—மகாசாந்தம். (உவின். கஉ.)

அடிப்பட்டசான்றேர் — பரம்பரைப் பெரியோர். (உவின். கஉ.)

அடிப்படல் — 1. கீழ்ப்படிதல். (உ-ம்) "உரியவம்புவி - பல்லாண்டடிப்படவாண்டான்" (பாரத. உலூகன். ரு.) 2. கீழ்ப்படையிலிருத்தல். (உவின். கஉ.) 3. பாதத்தின்கீழ்ப்படுதல்.

அடிப்படுத்தல்—1. கீழ்ப்படுத்துதல். (உ-ம்.) "பிறபுலங்க ளடிப்படுத்து" (பெரியபு. ஐயடி. உ.) 2. பாதத்தின் கீழ் அடங்கச்செய்தல். (உ-ம்.) "மாவலியளிப்பஞாலமுழுவது மாயனெய்திப்-பாவடிப்படுத்திமுன்னம் பண்பொடுகவர்ந்தவாறும்" (கூர்மபு. அநுக்கிரகமணி. க.)

அடிப்படுத்துதல் — கீழ்ப்படுத்தல். (உ-ம்.) "உரவுநீருலகமேழுந்தனதடிப்படுத்தி" (கூர்மபு. தக். வேள். அழி க.)

அடிப்பிடுதல்—கீழைமைதல். (சி.)

அடிப்படை—1. ஆதாரமாக அடியிற்கிடப்பது. (உ-ம்.) "சிவவிவேகத்திற்கு மான்மவிவேகமடிப்படையாகலான்" சி. சி. கஉ: அ. ஞான.) 2. பிரதானசேனை. உவின். கஉ.)

அடிப்பதறல் — 1. கால்நடுங்குதல். (உவின். கஉ.) 2. நிலைகுலைதல். (உவின். கஉ.)

அடிப்பந்தி — முதற்பந்தி. (உவின். கஉ.) [அடி-முதல். பந்தி-]

அடிப்பலம் — முதற்பலன். (உவின். கஉ.) [அடி-முதல். பலம்-பிரயோசநம்.]

அடிப்பற்றல்—அடிப்பற்றுதல். (உவின். கஉ.)

அடிப்பற்று—1. பாண்டத்தில் அடிப்பற்றின பதார்த்தம். (மா.) 2. பாறையுப்பு. (மா.)

அடிப்பற்றுதல்—பாகஞ் செய்யப்படும்போது வேகும்பதார்த்தம் நீரின்மையினாற் பாண்டத்தினடிப் பக்கத்தினுள்ளே யொட்டிக்கொள்ளல்.

அடிப்பாடு—1. (இலக்கணம்) பகுதி. (நன். வினை.உ.உரை.இரா.) 2. வரன்முறை. (உ-ம்) "மற்றவட்குவிபூதிபுகலடிப்பாட்டின் றொடர்பாகுமகேசன்" (கூர்மபு. திருக்கல். சு.) 3. வழக்கம். (உவின். கஉ.) 4. வழி. (உ-ம்.) "நிலந்தனிலடிப்பாடுணர்ந்து" (நல். பார. அரசநீ. கடுரு.) [அடி-பாதம். பாடு-படுதலுடையது.]

அடிப்பிடித்தல்—அடிப்பற்றுதல். (சி)

அடிப்பிணை—1. வங்கம். (கா. வைத்.) 2. வங்கமணல். (கா. வைத்.)

அடிப்போடல் — அடிப்போடுதல். (உவின். கஉ.)

அடிப்போடுதல் — தொடங்கல்.

அடிபட்டவன் — பழகினவன். (உவின் கூ.) (உ-ம்.) "நாநாகாரியங்களிலும் அடிபட்டவன்"

அடிபடல்—அடிபடுதல்.

அடிபடுதல்—1. அடிக்கப்படுதல். (உ-ம்.) "பிட்டுமுதுக்கடிபடுவோன்" (திருப்பு. சுOஉ.) 2. தாக்கப்படுதல். (உ-ம்.) "அவசமாகியடிபட்-டெனைத்தாமுறுப்புந்துளாய். (ஞானவா. மந்த. சு.) 3. பகிரங்கப்படுதல்.

அடிபணிதல்—காலிலே விழுந்து நமஸ்கரித்தல். (உவின். கஉ.)

அடிபிடித்தல்—1. அடிச்சுவடு பார்த்தல், பின்றொடருதல். (உவின். கஉ.) 2. மூலமறிதல். (உவின். கஉ.) 3. (வியாபாரத்துக்கு) முதற் பிடித்தல். (சி.)

அடிபிடி — சண்டை. (உவின். கஉ.)

அடிபெயர்தல் — நின்றஇடத்திலிருந்து விலகுதல். (உவின். கஉ.)

அடிம்பு—சிவதைக்கொடி. (கா.வைத்)

அடிமடக்கு — முன்வந்த அடியே பெயர்த்தும் வேறு பொருள் விளைத்துவருவது; அது: ஈரடிமடக்கு, மூவடிமடக்கு, நான்கடிமடக்கு என மூவகைப்படும். (தண்டி. கசு) [அடி-பாவினடி. மடக்கு-மடங்கிவருவது.]

அடிமடை — நீர்வாய்க்காலின் முதன்மடை. (உவின். கஉ.)

அடிமயக்கு—சித்திரகவிகளுளொன்று; அது: மூவர்மூன்றாசிரியவடிசொன்னால், தான் ஓரடிசொல்லிக் கிரியைகொளுத்துவது. இதனை யாப்பருங்கலநூலார் பாதமடக்கென்பர். (யாப். வி. செய்யு. கசு.)

அடிமறி—எண்வகைப் பொருள் கோளிலொன்றாகிய அடிமறிமாற்று. (உ-ம்.) "ஏற்புழியெடுத்துடன் கூட்டுறுமடியவும்-யாப்பீறிடைமுதலாக்கினும் பொருளிசை - மாட்சியுமாறுவடியவுமடிமறி" (நன்.பொது. சுஅ.) [மறிதல்-மடங்கல்]

அடிமறிமண்டிலம் — அகவற்பாக்களுளொன்று; அஃது: எல்லாவடியும் அளவடியாகி யெவ்வடியை முதல் நடு இறுதியாகக் கொள்ளினும் ஓசையும் பொருளும் வழுவாது நிற்கப் பாடப்படுவது. (உ-ம்.) "நவோதியந்தத்தடைதருபாதத்தகவலடிமறிமண்டிலமே" (யாப். காரிகை. செய்யுள். அ.) (அடிமறிமண்டிலத்துக்குதாரணம்) "தீர்த்தமென்பதுஞ்சிவகங்கையே- ஏத்தருந்தலமெழிற் புலியூரே—மூர்த்தியம்பலக்கூத்தனதுருவே"

அடிமறிமண்டிலவாசிரியப்பா— அடிமறிமண்டிலவாசிரியம். (இலக்கணவி. எசஎ. உரை.)

அடிமறிமண்டிலவாசிரியம்— அடிமறிமண்டிலமென்னும் வகைப்பட்ட ஆசிரியப்பா. (உ-ம்.) "மாசப்படுமடிமுதல்டையீறுமின்- அடிமறிமண்டிலவாசிரியமாதலும்" (இலக்கணவி. எசஎ.)

அடிமறிமாற்று—பொருள்கோள் எட்டினுள்ஒன்று; அது:சீர்நின்றாங்குநிற்ப அடிகள் ஒன்றனிலைக்களத்துமற்றொன்று பொருளுக்கியைய மாற்றப்படுவதாய் அல்லது ஒருசெய்யுளின் யாதாயினு மோரடியை யாதாயினுமோரிடத்துக் கூட்டி யுச்சரிப்பினும் பொருளும் ஓசையும் வேறுபடாதிருப்பதாயுள்ளது. (உ-ம்.) "யாற்றுநீர்மொழிமாற்று நிரனிறைவிற்பூண்-டாப்பிசை யளைமறிபாப்புக் கொண்டுகூட்-டடிமறிமாற்றெனப் பொருள்கோளெட்டே" (நன். பொது. சுO. சுஅ-ம் உரையும்) (அடிமறிமாற்றுக்குதாரணம்) "நடுக்குற்றுத் தற்சேர்ந்தார்துன்பந்துடையார்—கொடுத்துத்தான் துய்ப்பினு மீண்டுங்காலீண்டு-மிடுக்குற்றுப்பற்றினுநில்லாது செல்வம் – விடுக்கும்வினையுலந்தக்கால்" "மாறுக்காதலர்மலைமறந்தனரே-யாறுக்கட்பனிவரலானவே – வேறுமென்றோள்வளைநெகிழும்மே- கூறுய்தோழியான்வாழுமாறே"

அடிமறிமாற்றுப்பொருள்கோள் — எண்வகைப்பொருள்கோள்களுளொன்றாகிய அடிமறிமாற்று. (சி.)

அடிமுடி — 1. ஆதியந்தங்கள். (உ-ம்.) "அடிமுடியொன்றிலாத வகண்டவாழ்வே" (தாயு. பன்மாலை.) 2. காலுந்தலையும். (மா.) 3. வரலாறு. (உவின். ௯௨.)

அடிமுதன்மடக்கு — ஆதிமடக்கென்னுஞ்சொல்லலங்காரம். (தண்டி. ௯௬. உரை.)

அடிமுரண்டோடை — செய்யுட்டொடை நாற்பத்துமூன்றனுளொன்று; அது: ஒருசெய்யுளில் ஒரு அடியில் முதலிலேவருஞ் சொல்லாவது பொருளாவதடுத்த அடியின் முதற்கண்ணே வருஞ் சொல்லோடும் பொருளோடும்மாறுகத் தொடுக்கப்படுவது. (யாப். காரிகை. உறுப். ௧௬. உரை.) (அடிமுரண்டொடைக் குதாரணம்.) "இருள்பரந்தன்னமாநீர்மருங்கி- னிலவுகுவித்தன்ன வெண்மணலொருசிறை- இரும்பினன்னகருங்கோட்டுப்புன்னை - பொன்னினன்ன நுண்டாதிறைக்குஞ்- சிறுகுடிப்பரதவர்மடமகள்- பெருமதர்மழைக்கணுமுடையவாலணங்கே"

அடிமை — 1. அடிமைவேலைசெய்வோர். (உ-ம்.) "தள்ளருமடிமையாந்திரநங்கள் செய்தபேறும்" (திருவிளை. தலவி. ௪௦.) 2. தாழ்ந்துநின்றேவல்கேட்டல். (உ-ம்.) "ஒன்னார்க்கடிமைபுகுத்திவிடும்" (வள். ௬௦௮.) 3. தொண்டன். (உ-ம்.) "அஞ்சல்" பார். 4. தொண்டுபடுந்தன்மை. (உவின். ௧௬.)

அடிமைக்கோள்ளல் — அடிமையாக்கல். (உவின். ௧௬.)

அடிமைப்படல் — தொண்டுபூணுதல். (உவின். ௧௬.)

அடிமைப்படுத்தல் — அடிமையாக்குதல். (உவின். ௧௬.)

அடிமைப்பத்திரம் — "ஒருவன்ஆடையுணவின்றி வருத்தப்பட்டுக் கொடியவழியிற்போகும்போது தன்துன்பந் தீரும்பொருட்டு "நானுனக்கடிமை; உன்பணியைச் செய்குவேன்" என்று மற்றொருவனுக்கு எழுதிக்கொடுக்கும் பத்திரம்" (மிரு. ௬௪.)

அடிமைபூணல் — அடிமையாதல். (உவின். ௧௬.)

அடிமையோலை — அடிமைப்பத்திரம். (சௌந். ௭.)

அடிமோனைத்தொடை — செய்யுட்டொடைகள் நாற்பத்துமூன்றிலொன்று; அது: அடிகடோறும் முதலாமெழுத் தொன்றிவரத் தொடுக்கப்படுவது. (யாப். காரிகை. உறுப். ௧௬.) (அடிமோனைத் தொடைக் குதாரணம்) "மாவும்புள்ளும்வதிவயிற்படர- மாநீர்விரிந்தபூவுங்கூம்ப-மாலைதொடுத்தகோதையுங்கமழ -மாலைவந்தவாடை- மாயோளின்னுயிர்ப்புறத்திறுத்தன்றே"

அடியந்தாதி — ஒரு செய்யுளினீற்றடியடுத்து வருமடியுமாக வரத் தொடுக்கப்படுவது. (யாப். காரிகை. உறுப். ௧௭. உரை.) (அடியந்தாதித்தொடைக்குதாரணம்.) "ஆசநத் திருந்ததிருந்தொளியறிவன்- ஆசநத்திருந்ததிருந்தொளியறிவனை"

அடியநாதி — தொன்றுதொட்டுள்ளகாலம். (உவின். ௧௬. வழக்.)

அடியம் — அடியேம். (உ-ம்.) "அடியமில்லறத்தையாற்றி" (கந்தபு. நகர. ௧௧௧.)

அடியர் — அடியார். (உ-ம்.) "பணிதற்கடியர் சென்றெதிர் கொள்ள" (பெரியபு. திருஞான. ௫௦௧.)

அடியரேங்கள் — அடியேமாகிய நாங்கள். (உ-ம்.) "சிற்றடியரேங்கள்செயல் சீருளதையன்றே" (கந்தபு. தெய்வ. ௨௨௬.)

அடியல் — 1. சொரிதல். (உ-ம்.) "கதிரடிந்தது" (மா) 2. தொடர். (மா.)

அடியவர் — தொண்டர். (உ-ம்.) "அந்நகரில்வாழ்வாருமடியவருமநமகிழ்ந்து" (பெரியபு. திருஞான. ௬௨௫.)

அடியவன் — அடிமையானவன். (உ-ம்.) "அமரர்நாயகன்றனக்கடியவன்" (கந்தபு. சிங்கமுகா. ௨௭௬.)

அடியளபெடைத்தொடை — செய்யுட்டொடைகள் நாற்பத்துமூன்றனுளொன்று. அது: அடிகடோறும் முதலாமெழுத் தளபெடுத்து வரத் தொடுக்கப்படுவது. (யாப். காரிகை. உறுப். ௧௬, உரை.) (அடியளபெடைத்தொடைக்குதாரணம்.) "ஆஅவளியவலவன்றன்பார்ப்பினோ-டீஇரிரையுங்கொண்டீரளைப்பள்ளியுட்-டூஉந்திரையலைப்பத்துஞ்சாதிறைவன்றோஒண்- மேஎவலைப்பட்டநம்போனறுநுதா-லோஒவுழக்குந்துயர்"

அடியறுக்கி — மட்கலமறுக்குங்கருவி. (உவின். ௯௨.)

அடியனேன் — அடியேனாகிய நான். (உ-ம்.) "பொய்யடியனேன் பிழை" (கந்தபு. தெய்வ. ௬௬.)

அடியார் — 1. அடிமைக்காரர். (உ-ம்.) "பின்னும்பகர்வாண் மகனேயிவன்பின்செல்தம்பி-யென்னும்படியன்றடியாரினிலேவல்செய்தி" (இராமா. நகர்நீ. ௧௫௧.) 2. தொண்டர். (உ-ம்.) "அடியார்க்கெல்லாமலகிலாவினைதீர்க்க" (தாயு. ஆசை. ௭.)

அடியாள் — அடிமைபூண்டவள். (உ-ம்.) "அடியாளானபரவையோ" (பெரியபு. ஏயர். ௬௫௬.)

அடியாறு — தொண்டுதொட்டவரலாறு. (மா.)

அடியான்—ஏவலாளன். (உ-ம்.) "அடியானீங்கி யருளுவாயன்பருடனணையவேத்தி" (திருமுறைகண்ட. சகூ.)

அடியிடுதல்–1. சீர்பலவடுக்கிச் செய்யுளுக்குறுப்பாக வருதல். (உ-ம்.) "அடியிட்டசெந்தமிழினருமையிட்டாருரில்" (தாயு. மலைவளர். ச) 2. தொடங்கல். (உ-ம்.) "பரிந்தழுவதற்குப்பாவாயடியிட்டவாறுகண்டாய்" (சிந்தா. பதுமை. உஉகூ.) 3. நடக்கக்கால்வைத்தல். (உ-ம்.) "பரவைவாயிலம்மட்டு மடியிட்டு" (தாயு. மலைவளர். ச.) 4. நடத்தல். (உ-ம்.) "ஆடுநராடலெஞ்சி னெண்ணி னேரடியிட்டோர்கள்" (கூர்மபு. நவகண். கூக) 5. மிதித்தல் (உ-ம்.) "சேடன்முடியுங்கதிர்கொள்சென்னிவரையுந்து – ளாடவடியிட்டு" (திருவிளை. மாயப். கூ.)

அடியியைபுத்தொடை–செய்யுட்டொடை நாற்பத்துமூன்றனுளொன்று; அது: செய்யுளடிகளினிறுதிதோறும்ஈற்றெழுத்தாவதுசொல்லாவதொன்றிவரத்தொடுக்கப்படுவது. (யாப். காரிகை. உறுப். கசு. உரை.) (அடியியைபுத்தொடைக் குதாரணம்.) "இன்னகைத்துவர்வாய்க்கிளவியுமணங்கே-நன்மாமேனிச்சுணங்குமாரணங்கே– யாட்டமைத்தோளிகூடலுமணங்கே– யரிமதர்மழைக்கணுமணங்கேதிருநுதற்பொறித்ததிலதமுமணங்கே" "அவரோவாரார்கார்வந்தன்றே–கொடிக்குழல்லையுங்கடிக்கரும்பின்றே"

அடியீடு—1. தொடக்கம். (சி.) 2. பாதம்வைத்தல். (உ-ம்.) "மங்கையரடியீடேத்த" (கூர்மபு. வயிரவ. உஅ.)

அடியுண்ணல்—1. அடிக்கப்படுதல். (மா.) 2. திரிந்து பழகுதல். (சி.)

அடியுரம்—1. அத்திபாரம். (சி.) 2. முன்னுள்ளபெலம். (உவின். கஉ.)

அடியுறை — பாதகாணிக்கை. (உ-ம்.) "விமலன்மலையீட்டியபல்பொருள்களெம்பிரானுக்கடியுறையென்று" (நாலாயிர. உருப்பிணி. க.)

அடியெதுகைத்தொடை— செய்யுட்டொடை நாற்பத்துமூன்றனுளொன்று; அது: அடிகடோறும் முதற்கண் இரண்டாமெழுத் தொன்றிவரத் தொடுக்கப்படுவது. (யாப். காரிகை. உறுப். கசு.)

அடியேம்—அடிமையாயுள்ளேம். (உ-ம்.) "தொழுமடியேம் வல்வினையின் வேர்தடிந்தாய்" (கந்தபு. தேவர். கூ)

அடியேன்—தொண்டனேனாகிய யான். (உ-ம்.) "அடியேற்கொன்று ம்ற்றிவணருளியவேண்டும்" (கந்தபு. பானுகோ. கஙு.)

அடியொட்டி— நிலத்திலேநட்டுவைக்கப்படுகிற ஒருவகையூசி. (உ-ம்.) "கூப்பிட்டோடுகின்றவர்கள், அங்ஙனமோடாமைக்கு நட்டுவைத்த அடியொட்டி யுள்ளடியிலே பாய்கையிலுலே, கால் நிலத்தோடேயொட்டிக்கொண்டுதெறிவலையிலகப்பட்ட மான்போலே பின்னரும் அகப்பட்டாரென்றுணென்க" (சிந்தா. முத்தி. கஎ௦. உரை.)

அடியோட்டி—ஓர்யுத்தக்கருவி; அது: நெருஞ்சின்முட்போன்ற இருப்பாயுதம். (உவின். கஉ.)

அடியோர் — பிறர்க்குக்குற்றேவல்செய்வோர். (உ-ம்.) "அடியோர்பாங்கினும்" (தொல். பொரு. உகூ.)

அடிலஞாகம் — ஒருசெடி. இதனிலைகளும் வேருஞ் சாறு பிழிந்து மந்தாரகாசங்கபமென்னும் வியாதிகட்கு மருந்தென்று மலையாளதேசத்திலே வழங்குகிறார்களாம். (கா. வைத்.)

அடிவயிறு—கீழ்வயிறு. (உவின். கஉ.)

அடிவருடல்—கால்பிடித்தல், கால்தடவுதல். (உ-ம்.) "அடிவருடிப்பினறாங்கிமுன்னெழுந்த" (திருவள். சரித்.)

அடிவாநம்—திகாந்தம். (உவின். கஉ.)

அடிவாரம்—மலைச்சாரல். (உ-ம்.) "திருக்காளத்திமலையடிவாரம்" (பெரியபு. திருஞா. க௦உக.)

அடிவிடுதல்—பாத்திரம் முதலியவற்றின் அடிப்பொருத்துவிடுதல். (மா)

அடிவீழ்ச்சி—வணங்குதல். (உ-ம்.) "அநங்கமாலையடிவீழ்ச்சி" (சிந்தா. இலக்கணை. உக௦.)

அடிவீழ்தல்— வணக்கம். (உ-ம்.) "அடிகண் முன்னர்யானடி வீழ்ந்தேன்" (சிலப். புறஞ்சே. அஎ.)

அடிவேண்தநத்து – முருந்து. (சி.)

அடிவைத்தல்—1. ஆரம்பித்தல். (உவின். கஉ.) 2. கால்வைத்தல். (உவின். கஉ.) 3. நடக்கத்தொடங்குதல். (உவின். கஉ.) 4. பிறர்காரியத்திலே தலையிடல். (உவின். கஉ.)

அடு—1–3. அடு என்னும் ஏவலுந் தெரிநிலை வினைப்பகுதியும் பெயரெச்சத்தொகையும். (உ-ம்.) "அடுபிணிகுறித்தேல்" (வைரா– தீப. உரு. பெ. கை.) [அடுபிணி-கொல்லும்வியாதி.]

அடுக்கணி—சொன்மிக்கணி மூவகையுளொன்று; அது: சிறப்புக்காட்டவாவ தன்பு துயர் களிப் பிவற்றினொன்றின்மிகுதியைக் காட்டவாவதொரு பொருளைத்தரும் பலதிரிசொற்களடுக்கிவைக்கப்படுவது. "இகழ்ந்தொளித்தானே வெண்ணையிகழ்ந்தகன்முனேகொடியநெஞ்சான்" என்பதுபோல. (உ-ம்.) "அடுக்கணியொருபொருட்கடுக்கியதிரிசொல்– அடுக்குவைப்பதடுக்கணியெனப்படும்" (தொன்னூல். நகஎ.)

அடுக்கம்–1. அரைமலை. (உ-ம்.) "ஆமழை–யணங்குசாலடுக்கம் பொழியுநும்" (புறநா. கஙுக.) பக்கமலை. (உ-ம்.) "சூரரமகளிராடுஞ்சோலை– மந்தியுமறியாமரன்பயிலடுக்கத்து" (தி

ருமுரு. சஉ.) 2. ஒன்றன்மேல் ஒன்ருய் அடுக்கிச் செய்யப்பட்ட வீடு. (உ-ம்.) "விஞ்சுமேனிலவடுக்கமும்" (கந்தபு. நகர்புகு. அஉ.) 3. மரச்செறிவானசோலை. (உ-ம்.) "குரங்கமையுடுத்தமரம்பயிலடுக்கத்து" (சிலப். நாடு. கடுஎ.) 4. மலைச்சாரல். (உ-ம்.) "கறிவளரடுக்கத்தமலர்ந்த காந்தள்" (புறநா. கசுஅ.) 5. மலைப்பக்கம். (உ-ம்.) "மழைமிசையறியா மரல்வரையடுக்கத்து" (புறநா. உ00)

அடுக்கல்—1. அடுக்கற்க. (எதிர்மறை வியங்கோள்) 2. அடுக்குக. (உடன்பாட்டுவியங்கோள்) 3. அடுக்கு. (உ-ம்.) "ஆரவடுக்கல்பொன்ஞரமிலங்க" (கந்தபு. அவைபு. கூடு.) 4. ஒன்றன் மேலொன்றுவைத்தல். (உ-ம்.) "திங்கண்மூன்றடுக்கிய" (சிலப். காடு. க.) 5. குவித்தல். (சி.) 6. குவியல். (உ-ம்) "மீனத்தடுக்கன்முழுவதுநோக்கி" (கந்தபு. தேவரையேவல். அ.) 7. மலை. (உ-ம்.) "அடுக்கன்மீமிசையருப்பம் பேணு" (மலைபடு. கக.)

அடுக்கலிடல்—உமிழுற்றக்கனையும்படி நென் முதலியவைகளை யிரண்டாமுறைகுற்றுதல். (உவின். கஙூ.)

அடுக்களை—பாகசாலை. (உ-ம்.) "வகையமை யடுக்களைபோல்" (மணிமே. உகூக-ங் காதை. சுக.)

அடுக்காலாத்தி—அடுக்குத்தீபம். (சி) [அடுக்கு—ஆரதி. ஆரதி – ஆலாத்தியென வழக்கிற் றிரிந்ததுபோலும்]

அடுக்கானகன்னி—1. பவளப்புற்றுப் பாஷாணம். (கா.வைத்) 2. பூரணநிலையிலுள்ள பெண். (உவின். கஙூ.)

அடுக்கியல் — வண்ணகவொத்தாழிசைக்கலிப்பாவின் உறுப்புக்களுள் ஒன்ருகிய அராகம். (வீரசோ. யாப். கக. உரை.)

அடுக்கு — 1-3. அடுக் கென்னும் ஏவலுந் தெரிநிலைவினைப்பகுதியும் பெயரெச்சத்தொகையும். 4.(இலக்கணம்) அடுக்குத்தொடர். என்பதுபோல "தீத்தீ" (உ-ம்) "தழுவுதொடரடுக்கெனவீரேழே" (நன். உயிரீற்.உ.) 5. ஒன்றுடனொன்று பொருந்தவைக்கும் வைப்பு. (உ-ம்.) "அண்டமவையடுக்கடுக்காயந்தரத்தினினிறுத்து மதிகாரம் போல" (தாயு. மண்டல. க.) 6. ஓரினமான பலபொருட்களின்கூட்டம். (உ-ம்.) "தடிமூன் குயப்பாண்டத்தினடுக்காக" (தைல. தைலவ. கடு.) 7. சேர்மானம். (சி.) 8. வரிசை. (உ-ம்.) "அண்டகோடிக ளெலாங் கருப்பவறை போலவுமடுக்கடுக்காவமைத்து" (தாயு-தேசோ.எ.)

அடுக்குகை—அடுக்குதல். (உவின்.கஙூ)

அடுக்குச்செவ்வரத்தை — அடுக்காக மலருள்ள செவ்வரத்தை.

அடுக்குத்தீபம்—அடுக்குவிளக்கு. (சி.) [அடுக்கு—அடுக்கப்பட்டது. தீபம்—விளக்கு.]

அடுக்குத்தொடர் — அல்வழித்தொடர் பதினுன்கனுளொன்று; அது: அசைநிலைக்கண்ணும், விரைவு, துணிவு, உடம்பாடு, ஒருதொழில் பலகாணிகழ்தல், வெகுளி, உவகை, அச்சம், அவலம் முதலிய பொருணிலைக்கண்ணும், இசைநிறைக்கண்ணும், ஒருசொல் இரண்டு முதலியவாக அடுக்கிவருவது. (உ-ம்.) "அன்றே வன்றே" (அசைநிலை) "வந்தது வந்தது கூற்று" (விரைவு) "அவனவன்" (துணிவு) "வைதேன் வைதேன்" (உடம்பாடு) "போம் போம்" (ஒருதொழில்பலகாணிகழ்தல்) "ஏயே" (வெகுளி) "வருக வருக" (உவகை) "படை படை" (அச்சம்) "உய்யேனுய்யேன்" (அவலம்) "பாடுகோ பாடுகோ பாடுகோ பாடுகோ" (இசைநிறை) (இலக்கணவி. ஙசகூ.)

அடுக்குதல்—அடுத்தல். (உவின். கஙூ.)

அடுக்குப்பண்ணல்—ஆயத்தஞ்செய்தல். (உவின். கஙூ.)

அடுக்குப்பார்த்தல் — பொருந்துமாறுபார்த்தல். (உவின். கஙூ.)

அடுக்குமல்லிகை — ஒருவகைமல்லிகைக்கொடி. (உவின். கஙூ.)

அடுக்குமுள்ளி—ஒருவகை முள்ளிப்பூண்டு. (கா. வைத்.)

அடுக்கூமத்தை—ஒருவகையூமத்தை. கா. வைத். ஙகூ.)

அடுகலம்—பாகஞ்செய்யும் பாத்திரம். (உ-ம்.) "அரிசிமுத்தழல்செம்மணியடுகலம்பிறவும்" (திருவிளை.நகர.சுச)

அடுகளம்—போர்க்களம். (உ-ம்.) "அடுகளத்தினெதிர் பொருநின்ருற்றலனுய்" (உபதேச. விபூ. ருடு.)

அடுகனலவன் — சங்காரத்தொழில் செய்யுங்காலாக்கினியுருத்திரன். (உ-ம்.) "அடுகனலவன்கூர்மாண்டனுடைகன்" (கந்தபு. திருக்கல். கூச.)

அடுகிடை—ஏழும்பாதகிடை. (உவின். கஙூ.) [அடு—கொல்லுதல். கிடை—கிடத்தல்.]

அடுதறல்—கொல்லுதல். (உ-ம்.) "அடுகுற்றிடுசூலமடற்கதைகடொரடுகுற்றனர்" (கந்தபு. மூவாயிர. உஅ.)

அடுகை—1. கொல்லுதல். 2. பாகஞ்செய்தல். (சிவதரு. சிவஞாநதா.எ0) (உ-ம்.) "அடுகைமனைபார்" 3. போர்புரிதல்.

அடுகைமனை—மடைப்பள்ளி. (உ-ம்) "அங்கிமுதற் றென்றிசை யந்தத்தடுகைமனை" (சிவதரு. சிவஞாநதா.எ0) [அடுகை—பாகஞ்செய்தல்.மனை—வீடு]

அடுங்குன்றம் — யானை. [கொல்லுந் தொழிலுடையமலையெனவே யானையென்பது பெறப்படும்.] (உ-ம்.) "அடுங்குன்றமுரித்தானை" (பெரியபு. திருஞாந. கூகூ0.)

அடிசிலைக்காரம் — செங்நாயுருவி. (உவின். கரு.)

அடுத்தல்—1. அடைதல். (உ-ம்.) "அடுத்தவர்க்கமுத விளக்கமேய்த்தலில்" (சூத. முத். ௪: ௯௨) 2. ஏற்றதாயிருத்தல். (நான்காம்வேற்றுமையோடு) (உ-ம்.) "இது யோக்கியருக்கடுத்ததல்ல" (மா.) 3. கிட்டல். (உ-ம்.) "அந்நாளடுத்துவயமாருதியை" (பாரத. மணிமா. ௩.) 4. கூடியிருத்தல். (உ-ம்.) "முநிவர்யாருமடுத்திடுமேவைக்கணெய்தி" (கந்தபு. ததீசியுத். ௯௯.) 5. சம்பவித்தல். (உ-ம்.) "ஆவினைந்திறவடுத்ததென்றெய்வதங்காளெனும்" (இராமா. நகர்நீ. ௪௬.) 6. சார்தல், நண்புகொள்ளல். (உ-ம்.) "கற்பகந்தனையடுத்துய்வாம்" (சூத. முத். ௪: ௪.) 7. சேர்த்தல். (உ-ம்.) "வெண்டுகிலடுத்து" (சிந்தா. காந்தை. ௯௨௫) 8. நினைவுண்டாதல், அயிர்த்தல். (உ-ம்.) "இடித்துமின்னி யிருண்டு மேகமெழுந்தபோதிதுபெய்யுமென்றடுத்ததும்" (சி. சி. பர. உலோகா. மறு. உ.) 9. போரிலெதிர்த்தல். (உ-ம்.) "அடுத்தமரியற்றுதி" (கந்தபு. தாரக ௬௦.) 10. வருத்தல். (உ-ம்.) "மதுரைநின்றுமடுத்து" (திருவிளை. அட்ட. ௬௦.)

அடுத்தார்—சேர்ந்தார். (உவின். கரு.)

அடுத்தி—அடத்தி. (இது தென்னிந்தியாவில் வழங்கப்படும்) (உவின். கரு.)

அடுத்து—மேன்மேல். (உ-ம்.) "அதனையடுத்தூர்வதஃதொப்பதில்" (வள். ௬௨௧.)

அடுத்துவரல் —1. அடிக்கடிவருதல். (உவின். கரு.) 2. நெருங்கி வருதல். (உவின். கரு.)

அடுதல்—1. இயக்கமறச்செய்தல். (உ-ம்) "வியாதனீட்டியகையடுநேர்ந்தி" (கந்தபு. கடவு.) 2. குத்துதல். (உ-ம்.) "வித்தட்டுண்டனை" (புறநா. ௨௨.) 3. கொல்லுதல். (உ-ம்) "அவனையாரடுதற்பாலார்" (கந்தபு. தருமகோ ௭௪.) 4. தீயிற்பாகஞ்செய்தல். (உ-ம்.) "சிறுவீடுகட்டியதனடுசோற்றையுண்டுண்டு" (தாயு. கருணா. ௪.) 5. பொருதல். (உ-ம்.) "ஈறிலாதிக்குரம்பிருந்தாலிஃதாறதாகவடுவோரடலுளோர்" (சேதுபு. தனுக்கோ. ௬௪.) 6. வருத்தல். (உ-ம்.) "கழிபசிநோயடக்கவலும்பூதரும்" (கந்தபு. சூரனமை. ௫௯.) 7. வெல்லுதல். (சி.)

அடுநை—சொல்வாய். (இது முன்னிலைவினை) (உ-ம்.) "அடுநையாயினும்" (புறநா. ௯௬.)

அடுப்பங்கரை — அடுப்பின் பக்கம். (உவின். கரு.) [அடுப்பு; அம் — ஒருசாரியை; கரை.]

அடுப்பு—1. அச்சம். (பிங்க. ௯௦௪௭.) 2. அடுத்தமை. 3. நிரை. (சிலப். அரும்.) 4. பரணிநாள். (சூ. நிகண். ௪: ௬௭.) 5. பாகஞ்செய்யும்படி நெருப்புமூட்டி யெரித்தற்கிடமாக அடுத்துவைக்கப்பட்டிருக்குமது. (உ-ம்.) "பாலைக்கறந்தடுப்பேறவைத்து" (நாலாயிர. வெண்ணெய். ௫.)

அடும்பு—அடப்பங்கொடி. (உ-ம்.) "அடும்பிவரணியெக்கர்" (கலித்தொகை ௯௨.)

அடுவல் — வரகும் நெல்லுங்கலப்பு. (உவின். திசை.)

அடை—1. அடுத்தல். (உ-ம்.) "ஆடுகின்றனர் பண்ணடையின்றியே பாடுகின்றனர்" (இராமா. மந்திர. ௮.) 2. அடைகஷாயம். (தைல) 3–5. அடையென்னேவலுந் தெரிநிலைவினைப்பகுதியும் பெயரெச்சத்தொகையும். 6. அப்பவருக்கத்துளொன்று. (சூ. நிகண். ௬: ௨௫.) 7. இலை. (உ-ம்.) "வனசஞ்சாய் கழைக்கடையணை விரித்திடுவன". (இரகு. நாட்டு. ௯.) 8. கரை (உ-ம்.) "ஆற்றிடையியக்கவெண்ணுமடையினையடையும்" (சிவதரு. ௪. ௯௫.) 9. கனம். (பிங்க. ௯௦௪௮.) 10. கோழிமுதலிய பறவைகள் முட்டைகளிற் குஞ்சுபொரிக்குமாறு தம்முடம்பின் அனல்படக்கிடத்தல். (உவின். ௧௪.) 11. சும்மாடு. (உவின். ௧௪.) 12. தோசை. (சி.) 13. நிலவிளைவிலே யரசனையடையும்பாகம். (உவின். ௧௪.) 14. (நென்முதலியவற்றின்) மூளை. (உ-ம்.) "பூம்புறநல்லடையளைஇ" (பத்து. பெரும்பா. ௨௭௮.) 15. விசேடணம். (உ-ம்.) "அடைசினைமுதலென" (தொல். சொல். ௨௬.) 16. வெற்றிலை. (உ-ம்.) "நாறுகாயடைகூடும்" (சி. சி. பர. உலோகா. மறு. ௭.)

அடைக்கத்து — அடைகிடக்குங்கோழியிடுஞ் சத்தம். (சி.)

அடைக்கலக்குருவி— அடைக்கலம்புக்கதுபோல வீடுகளிற்போய்க் கூடுகட்டியிருக்கும் ஊர்க்குருவி. (உவின். ௧௪.)

அடைக்கலங்காத்தல்—1. அடைக்கலப்பொருளைக்காத்தல். (உவின். ௧௪.) 2. அடைக்கலம்புகுந்தவனைக் காத்தல். (உவின். ௧௪.)

அடைக்கலங்குருவி— அடைக்கலக்குருவி. (உவின். ௧௪.)

அடைக்கலப்பொருள் — அடைக்கலமாகவைக்கப்பட்டபொருள். (உ-ம்.) "அடைக்கலப்பொருள்கவர் வஞ்சகர்" (உபதேச. சிவத்துரோ. ௨௨௯.)

அடைக்கலம் — 1. சரண்புகுந்தவர். (உ-ம்.) "அடைக்கலமடியேனென்று" (காஞ்சிபு. திருநெறி. ௫௯.) 2. பாதுகாத்தற் பொருட்டொப்பிக்கப்படுகிறபொருள். (உ-ம்.) "அஞ்சினனுன்றனடைக்கலமையா" (கந்தபு. இந்திரகயி. ௬௯.) 3. புகலிடம். (உ-ம்.) "திருப்பாற்கடலில்வசிக்கும் விட்டுணுவினதடைக்கலமன்றி—வேறடைக்கலமில்லை" (ஞானவா. பிரகலாத. ௪.)

அடைக்கலம்புகுதல் — சரண்புகுதல். (உ-ம்.) "இருளிறைமிடற்றினடைக்கலம்புக" (பிரபுலி. கைலாச. சஎ.)

அடைக்கலாங்குருவி — அடைக்கலக்குருவி. (உவின். கசு.) [வழக்.]

அடைக்காய் — 1. பாக்கு. (உ-ம்.) "வெள்ளிலையடைக்காய்விரும்பி" (தாயு. சச்சி. கக.) 2. வெற்றிலைபாக்கு. (உ-ம்.) "விஞ்சியவடைக்காயுண்டிவழியிடை வெறுப்பதாகி" (அருணாசலபு. திருமலை. உசு.)

அடைகட்டி — அடைமண். (சி. வழக்.)

அடைகல் — 1. ஆதாரசிலை. (உ-ம்.) "ஆமையாய் மேருத்தாங்கி யடைகலாய்க்கிடந்தபோது" (சி. சி. பர. பாஞ்சரா. மறு. கக.) 2. கம்மப்பட்டடை. (உ-ம்.) "சுட்டவல்லிரும்படைகலைச் சுடுகலாதனபோல்" (இராமா. பாச. ௬௨.) 3. மதகடைக்குங்கல். (உவின். கசு.)

அடைகலம் — சேமக்கலம். (மா.)

அடைகாத்தல் — அடைகிடத்தல். (மா.)

அடைகாய் — 1. ஊறுகாய். (மா.) 2. வெற்றிலைபாக்கு. (உவின். கசு.)

அடைகிடத்தல் — 1. ஒட்டிக்கொண்டுகிடத்தல். (உ-ம்.) "முயலடைகிடக்குந்திங்கள்" (கூர்மபு. மேருச்சி. கரு.) 2. கோழிமுதலியன குஞ்சுபிறப்பிக்குமாறு தம்முடம்பின் அனல் முட்டையிற்படக்கிடத்தல். (உ-ம்.) "பெடைக்குருகணங்கின் விடுத்தவெண் சினையொடு காவலடைகிடக்குங்கைதையம்பொழிலே" (கல்லாட. உசு.)

அடைகுதல் — அடைதல். (உ-ம்.) "புரையில்வீட்டின்ப மடைகுவான்" (வைராக்கியதீப. கஎ.) [கு-ஒருசாரியை.]

அடைகுளம் — 1. நீர்வெளியிற்போக வழியில்லாதடைபட்டகுளம். (உவின். கசு.) 2. பூராடம். (சூ. நிகண்.)

அடைகுறடு — கம்மப்பட்டடை. (உவின். கசு.)

அடைகை — 1. சேர்கை. (உவின். கசு.) 2. பெறுகை. (உவின். கசு.)

அடைகொடுத்தல் — 1. நிலவிளைவிலொருபங்கையரசனுக்குக் கொடுத்தல். (உவின். கசு.) 2. நிறைத்துவைத்தல். (தி. க. அரு.)

அடைகோளி — அடைமொழியைக் கொள்ளுதலுடையது — விசேடியம். (நன். பொது. ௫0. உரை.)

அடைகோட்டை — முற்றுகைசெய்யப்பட்டகோட்டை. (உவின். கசு.)

அடைகோழி — அடைகிடக்குங்கோழி. (சி.)

அடைச்சல் — பொத்துதல். (உ-ம்.) "கையாற்செவிமுத லடைச்சிச்சொன்னாள்" (சிந்தா. குண. கருஅ.)

அடைச்சுதல் — 1. அடைவித்தல். (உ-ம்.) "அடைச்சியகோதைபரிந்து" (கலித்தொகை. ௫க.) 2. சொருகுதல்.

அடைசல் — அடைசுதல். (சி.)

அடைசீலை — மருந்தாகவாயிலே யடைசப்பட்டசீலை. (உவின். கசு.)

அடைசுதல் — 1. அடைதல். (உவின். கசு. வழக்.) 2. ஒதுக்கல். (உவின். கசு.) 3. ஒதுங்குதல். (உ-ம்.) "அஞ்சுபூதமடைசியபடலை" (திருப்பு. ௫ளு.) 4. கிட்டுதல். (உவின். கசு.) 5. செருகுதல். (சி.) 6. நெருக்குதல். (சி.) 7. நெருங்குதல். (உ-ம்.) "தொடைகளிற் றொடையடைசி" (பாரத. பதினான். உ0௬.)

அடைசுப்பலகை — செருகிவெளியடைக்கும் பலகை. (செ.) [வழக்.]

அடைசுவலை — ஒருவிதவலை. (செ.)

அடைசொல் — அடைமொழி. (உவின். கசு.)

அடைத்தது — இட்டகட்டளை. (உ-ம்.) "இதுவெனக்கடைத்ததென்ன" (கந்தபு. மேரு. க.)

அடைத்தல் — 1. அமைத்தல். (உ-ம்.) "திருவினட்கடைத்த வினைதருமடைவினின்" (கல்லா. உக.) 2. காப்புச்செய்தல். (உவின். கசு.) 3. காவலிலிடுதல். (உ-ம்.) "செழியனடைத்த சென்னிபாட" (கல்லா. ௬சு.) 4. செல்லாது தடுத்தல். (உ-ம்.) "கங்கைப்பெருநதியடைக்குமன்னோ" கந்தபு. திருவிளை. உரு.) 5. சேர்த்தல். (உ-ம்.) "இடப்பாகமார்தராளோடியைந்துயிர்க்கின்பமென்றும்மடைப்பானுமவும்" (சி. சி க. ௫சு.) 6. தடுத்தல். (உ-ம்.) "அரண்மணியடைப்ப" (கல்லா. ௫எ.) 7. பகுத்தல். (உ-ம்) "கடுகிற்பெரிய கடலையடைக்கும்" (தாயு. சொல்லற். க.) 8. பூட்டல். (உ-ம்) "அடைத்தலைநீங்கிய வம்பொற்கோநகர். (கந்தபு. சிங்க. கசு)

அடைதல் — 1. எடுபட்டுப்போதல். (உவின். கசு.) 2. ஒன்றோடொன்று சேர்ந்திறுகுதல். (உவின். கசு.) 3. சரண்புகல். (உவின். கசு.) 4. சேர்தல். (உ-ம்.) "கரையடைந்தார்" (பாரத. வாரணா. ௬.) 5. தூருதல். (உவின். கசு.) 6. பெறுதல். (உ-ம்.) "உலவாப்பொன்னுலகடைதரவைத்த" (கல்லா. உஎ.) 7. பொருந்துதல். (உ-ம்.) "அணுவிறேடெல்லாமாகியடைந்திடுந்தத்துவங்கள்" (சி. சி. உ. எஅ.) 8. முதலியடைதல். (உவின். கசு.) 9. வண்டல்படிதல். (உவின். கசு.)

அடைதூண் — கடைதறி. (உ-ம்.) "மத்தமந்தரம் வாசுகிகடைகயிறடைதூண்-மெத்துசந்திரன்" (இராமா. அகலி. உக.)

அடைந்தார்—1. அடைக்கலம்புகுந்தவர். (உ-ம்.) "தன்னடைந்தார்தம்பிரான்" (தேவார. பிரம. எ. சம்.) 2. மித்திரர். (சி.) 3. அடைந்தவர்.

அடைந்தோர்—1. அடைந்தவர். (உ-ம்.) "வந்தினிதடைந்தோர் வினையகற்றிடலால்" (கூர்மபு. நவகண். ருள.) 2. நண்பினர். (சி.)

அடைப்பம்—1. நாவிதன் கருவிப்பை. (உவின். கச.) 2. சாமான்பை. (உவின். கச.) 3. வெற்றிலைப்பை. (உவின். கச.)

அடைப்பன்—ஒருவியாதி. (மா.) [இது மாடுகளுக்குத் தொண்டையிலுண்டாவது. அடைப்பு; அன்- ஒருவிதி.]

அடைப்பு—1. (குப்பிமுதலியவற்றை) அடைக்குங்கருவி. (உவின். கச.) 2. அடைத்தல். (உ-ம்.) "கதவடைப்பின்றி" (திருவிளை.) 3. அடைத்தற்றன்மை. (உவின். கச.) 4. கதவு. (உவின். கச.) 5. வேலி. (சி.) 6. வேலியினாலடைக்கப்பட்டநிலம். (உவின். கச.) [அடைத்தலென்னுஞ்சொற்குரியபொருளெல்லா இதற்குமாகும்.]

அடைப்பை—பாக்கு, வெற்றிலை, சாதிக்காய், ஏலம் முதலியவாசங்கள் வைத்திருக்கும்பை. (பெரியபு. தடுத். சஅஎ. உரை.) வெற்றிலைப்பை. (உ-ம்.) "அடைப்பைபொற்களாஞ்சியேந்த" (திருவிளை. தடாதகை. சஎ.)

அடைப்பைக்காரன் — வெற்றிலைப்பை வைத்திருக்கும் ஏவலாளன். (உவின். கச.)

அடைமண் — கலப்பையிலடைந்தமண். (மா.)

அடைமழை — விடாமழை. (உவின். கச.) ஒருவர் வெளிக்கிடக்கூடாதபடி யடைத்துக்கொள்வதுபற்றி வந்த பெயர்.

அடைமாங்காய் — மாங்காயூறுகாய். (உவின். கச.)

அடைமானம்—1. ஈடு. (உவின். கச.) 2. உவமை. (உவின். கச.) 3. பிரதி. (உவின். கச.) 4. வழிவகை. (உவின். கச.)

அடைமொழி — ஒருபொருளின்றன்மை விளங்க அதனோடடுத்துக்கூறப்படுஞ்சொல், விசேடணம். (உ-ம்.) "அடைமொழியினமல்லதுந் தருமாண்டுறின்" (நன். பொது. ருக.)

அடைய—1. எல்லாரும். (உ-ம்.) "அடையவன் றும்பர்பதிகுடிபுக" (பாரத பதினே. அஅ.) 2. முழுதும். (உ-ம்.) "அவித்தையெல்லா மடையவுண்டு" (தாயு. ஆகார. உக.)

அடையடிமை— தனம் வாங்குதன்முதலியவற்றால் அடையப்பட்டஅடிமை. (மிரு. ச. கருகூ.)

அடையடுத்தவாகுபெயர்— ஒருபொருளின்பெயராய், அதனோடுசம்பந்தமுள்ள பிறிதொரு பொருளை, யடைமொழியோடு கூடிவிளக்குவது. "திருவாசகம்" என்பதிற்போல. (நன். பெய. ருரு. உரை.)

அடையல் — 1. அடைக அல்லது அடையற்க எனப்பொருள்படும் ஒருவியங்கோண்முற்று. 2. அடைதல். (உ-ம்.) "சாயலுள்ளத்தடையலுற்றிருந்தேன்" (தேவார. திருக்கழு. ஏ. சம்.) 3. அடைந்தபொருள். (உவின். கச.) 4. எல்லாம். (உவின். கச.)

அடையலர் — பகைவர். (உ-ம்.) "அடையலர்தம்மைவென்று" (கந்தபு. அக்கினி. சருக.)

அடையலவர்—பகைவர். (உ-ம்.) "அடையலவராவிவெருவ" (திருப்பு. காப்பு. சு.)

அடையலார் — அடையலர். (சி.)

அடையாதவர்—பகைவர். (உ-ம்.) "அடையாதவர்மூவெயில் சீறும் விடையான்" (தேவார. திருப்பனை. எ. சம்.)

அடையார்தார்—பகைவர். (உ-ம்.) "அடையாதார் தம்புரங்கள்" (தேவார காவிரி. க. சம்.)

அடையார்—பகைவர். (உ-ம்.) "அடையாரென்னும் பொங்கிருட்பிழம்பு" (கூர்மபு. கண்ணனவ. கஅ.)

அடையாளம்—அறிகுறி. (உ-ம்.) "தந்தைதாய்மாமன்மாமிதாயத்தாரவரையீன்றார் – மைந்தர்களுடன்பிறந்தார் மனைவியர் கிளைஞர்மற்று – மந்தமில் குணங்கள்செய்கையாதிய வடையாளங்கண்–முந்தையின் வழுவாவண்ணமுறையினுன் மொழிந்தான்முன்னோன்" (திருவிளை. மாமனு. ௬௨.)

அடைவிகச்சேலம் = கஸ்தூரிமஞ்சள். (கா- வைத்.)

அடைவு—1. அடைதல். (உ-ம்.) "நின்னையேயடைவாக" (பெரியபு. திருஞான. சஎரு.) 2. ஈடு. (உவின். கச.) [இது அடகென்பதன்மரூஉ.] 3. உபமானம். (உவின். கச.) 4. எல்லாம். (உவின். கச.) 5. முறை. (உ-ம்.) "அங்கதினொருசிலவடைவிற் கூறுகேன்" (கந்தபு. அவையட. ௬உ.) 6. விதம். (உவின். கச.)

அண் — 1–3. அண்ணெனேவலுந் தெரிநிலைவினைப்பகுதியும், பெயரெச்சத்தொகையும். 4- தடியில்வெட்டியவரை. (ஜெற்.) 5. மேல். (சி.) 6. வேட்டைநாயின் உருவு கயிறு. (உவின். கச.)

அண்டகடம் — அண்டகடாகம். (உ-ம்.) "அண்டகடமுதற்றரையீருக" (கந்தபு. அண்ட. கஅ.)

அண்டகடாகம் — அண்டகோளத்தின் சுவர். (உ-ம்) "எண்கைத்தலப்பிரமனண்டகடாகமுங் கீண்டதவ்வேல்" (திருவிளை. தீர்த்த. க.)

அண்டகபாலம் — அண்டகடாகம். (உ-ம்.) "அண்டகபாலத்தப்பாலானுன்கண்டாய்" (தேவார. திருக்கோட். உ. திருநாவு.) [அண்ட;கபாலம்-ஓடு. ஆப். உ௦௬.]

அண்டகம் — 1. குப்பைமேனி. (காவைத்.) 2. சிறுமுட்டை. (ஆப். கூ.) 3. பீசகோசம். (ஆப். கூ.) [அண்டக.]

அண்டகன் — அண்ணகன். (சி.) [அண்டக.]

அண்டகை — அப்பவருக்கத்துளொன்று. (சூ. நிகண். சு: உ௫.)

அண்டகோசம் — 1. அண்டசாத்திரம். (சி.) 2. அண்டத்திறேடு. (வென். உ௨க.) [கோசம்-ஓடு.] 3. எல்லை. (உவில். க௫.) 4. பழத்தின்தோல். (உவில். க௫.) 5. பழம். (உவில். க௫) 6. பீசப்பை. (ஆப். கூ.) [அண்டகோசம்: கோசம்-உறை.]

அண்டகோளகை — 1. அண்டகடாகம். (உ-ம்.) "அதற்குமீதேதிகழண்டகோளகையுங்கோடியாமே" (கந்தபு. அண்ட. சு௫.)

அண்டகோளம் — உண்டை வடிவமான அண்டம். (உ-ம்.) "திசையுமண்டகோளமும்பரந்து" (திருவிளை. நகர. உ௧.)

அண்டங்காக்கை — அண்டங்காகம். (மது. ௫: க௪.)

அண்டங்காகம் — ஒருவகைக்காகம். (உவின். கஎ) [இது கழுத்தில் வெண்மைதரவியமற்றைக்காகங்கள்போலாது உடல்முழுதுங்கருமையுடையது]

அண்டசம் — முட்டையிற்பிறப்பன; அவை: பல்லி, அரணை, ஓந்தி, ஆமை, தவளை, மீன், உடும்பு முதலியன. (பிங்க. ௯௦௫௦.) (உ-ம்.) "அண்டசஞ்சுவேதசங்கள்" (சி. சி. உ: அகூ.) [இராமாயணத்திலே சூர்ப்பநகை. கக-ங்கவியிலே "அண்டசத்தருந்துயிறுறந்தவையனே" எனப்பாம்புக்கும்பிரயோகிக்கப்பட்டது. அண்டஜ: அண்ட-முட்டை. ஜம்-பிறந்தது]

அண்டசன் — பிரமா. (ஆப். கூ.) [அண்டஜ: ஜன்-பிறந்தவன்.]

அண்டசை — கஸ்தூரி. (ஆப். கூ.) [அண்டஜா. அண்டத்திற் பிறந்ததென்றபடி.]

அண்டதரன் — சிவன். (ஆப். கூ.) [அண்டதர: தர-உடையவன், காக்கிறவன்.]

அண்டநாயகி — உமாதேவி. (உ-ம்.) "அண்டநாயகிதன்முகிழ்முலை சுரந்தபால்" (திருப்பு. ச௮.) [அண்ட; நாயகீ-முதல்வி.]

அண்டப்பார்த்தல் — பொருந்தச்செய்தல். (மா.)

அண்டப்புத்தேள் — விராட்புருடன். (உ-ம்.) "திருந்துகல்லண்டப்புத்தேள்சிந்தையாம்புண்டரீக-புரந்தனில்" (கந்தபு. திருவவ. ச௦க.)

அண்டபகிரண்டம் — திருவசக்கரத்துட்பட்ட உலககோளமும் அதற்குப்புறத்திலுள்ள கோளமும் (உ-ம்.) "அண்டபகிரண்டமுமரயா விகாரமே" (தாயு. பரிபூ.எ) [வஹிர்-புறம்]

அண்டபிண்டம் — பிரமாண்டமுந்தேகமும். (உவின். கஎ) [அண்டபிண்டம்.]

அண்டம் — 1. ஆகாயம். (உ-ம்.) "அண்டப்பாற்றுக்கிரையிடுகின்றனர்சிலர்" (கந்தபு. யாக. எஎ.) 2. உலகம். (உ-ம்.) "பிறங்குந்தொல்லை-நீர்கொண்டவண்டத்துந்தாவரத்துஞ்சங்கமத்துநிறைந்துநின்றோன்" (அரிச்ச. பாயிர. கூ) 3. கஸ்தூரிமானின்கோசம். (உவில். க௫.) 4. கோசம், பீசப்பை. (உவில். க௫.) 5. சுக்கிலம். (உவில். க௫.) 6. தலையோடு. (சி) 7. தேவுலகம். (உ-ம்.) "பின்னவர்க்கண்டமளிப்பன வஞ்செழுத்துமே" (தேவார. பஞ்சாக்ஷ. சம்.) 8. பீசம். (உ-ம்.) "அண்டத்திலூதுசெய்வனவால்" (திருவிளை. பரிகரி. கஎ.) 9. முட்டை. (உ-ம்.) "மயிலினண்டம்" (சி. சி. ௬: உஉ.) 10. விதை, கொட்டை. (உ-ம்.) "இல்லமுறுமண்டங்கணுறுபலம்" (தைல. கூகூ.) [அண்ட:]

அண்டமீன்றவன் — பிரமா. (உ-ம்.) "அண்டமீன்றவன் பிறங்கடையாச்சிரமத்தில்" (சேதுபு. கவிதீர். கூ.)

அண்டமுகடு — அண்டத்தினுச்சி. (உ-ம்.) "அண்டமுகட்டுறநின்று சிரித்தனன்" (பாரத. கிருட்- உ௦உ.)

அண்டமூர்த்தி — அண்டரூபி. (உ-ம்.) "அண்டமூர்த்தியழனிறவண்ணனை" (தேவார. இலிங்க. ௬௦. திருநாவு.) [அண்டமூர்த்தி.]

அண்டயோநி — 1. சூரியன். (பிங்க. உ௬௦.) 2. முட்டையிற் றோற்றுவது. (கா.வைத்.) [அண்ட-ஆகாயம், முட்டை. யோநி - பிறப்பிடமாக உடையது.]

அண்டர் — இடையர். (உ-ம்.) "ஆன்கிளைக்காப்புச்செய்தங்கண்டர்நின்றரற்றுமோதை" (இரகு. நாட். ௫௮) 2. தேவர். (உ-ம்.) "அண்டர்மடவார்கள்" (திருவாத. திருப்பெரு. ௫.) 3. பகைவர். (பிங்க. கூ௦௫௫.)

அண்டர்நிலை — பொன்னாங்காணி. (உ-ம்.) "அண்டர்நிலைசிலிகரியவேம்பாடசிவயற்பயறுசிறிய முற்கம்பலினியசை" (தைல. பாயிர. ௫எ.)

அண்டர்பிரான் — சிவன். (உ-ம்.) "அண்டர்பிரான்கோயிலினை" (பெரியபு. திருஞா. ச௦க.) [அண்டர்-தேவர். பிரான்-தலைவன்.]

அண்டரண்டம் — 1. தேவரண்டம். (சி.) 2. பகிரண்டம். (உ-ம்.) "அண்டரண்டமளவிடுஞளிகை" (கந்தபு. நகரழி. ௫ள.)

அண்டல்—1. அழுந்துதல். (உவின். கள.) 2. அருகிற் செல்லுதல். (உ-ம்.) "தீச்சுடர்கண்டலுங்கின்றிலங்கவலுற் ரேடின-மண்டவும்வெருவுதும்" (கந்தபு. திருவவ. எக.) 3. கிட்டுதல். (உ-ம்.) "அண்டினள்சேர்தலும்" (கந்தபு. திருமண. சுடு.) 4. சார்தல். (உ-ம்.) "பேய்மகதை யண்டியே" (தாயு. சச்சிதா. க)5. பொருந்துதல். (உ-ம்) "ஆகாரமாமுவமைக்கண்டாதென்னும்" (ஞானவா. முமுட்ச. உள.)

அண்டலர்—பகைவர். (உ-ம்.) "அண்டலர்வன்மையாலயுதயோசனை - யுண்டதுகொழுங்கனல்" (கந்தபு. யுத்த. நகர்புகு. ௫க.)

அண்டலார்—பகைவர். (உ-ம்.) "அண்டலார்புரம்" (மச்சபு. சுக். உஅ)

அண்டவாணர் —1. ஆகாயவாசிகள். (மா.) 2. தேவர். (உ-ம்.) "அண்டவாணர்மறைபாட" (பெரியபு- தண்டியடி. க.) [அண்ட - ஆகாயம், தேவலகம். வாணர்-வாழ்வோர்.]

அண்டவாணன்— தேவன். (உ-ம்.) "வலிதாயத் தண்டவாணனடியுள்குதலால்" (தேவார. வலி. கக. சம்.) [வாணன்-வாழ்நன்.]

அண்டவாதம்—1. அண்டவாயுநோய் (உ-ம்.) "மூலவியாதியொடண்டவாதம்" (திருப்பு. ௫கூஅ.) [அண்ட—பீசம். வாதம்—வாயு.] 2. அந்திரவாயு; குடர்வாதம். (சி.)

அண்டவாயு — 1. அந்திரவாயு. (கா. வைத்) 2. விரைவாதம். (கா. வைத்.) [அண்ட; வாயு.]

அண்டன்—1 கர்த்தா. (சி. சி. பாஞ்ச. மறு. ௬க.) 2. சிவன். (ஆப். க௬.) [அண்ட:]

அண்டா—செம்பினாலே செய்யப்பட்ட சட்டிவடிவமான ஒரு பெரும்பாத்திரம். (உவின். கஎ. தெலுங்கு.)

அண்டாகாரம் — முட்டைவடிவம். (உவில். கடு.) [அண்டாகாரம்: ஆகாரம்-வடிவம்.]

அண்டாதவன் — பகைவன். (உ-ம்.) "அண்டாதவனுலெம்மகத்திலிரு-ளண்டாகிய தன்மையுணர்ந்து" (கந்தபு. முதனாட். ௬௫௧.)

அண்டாதிநாதன் — சிவலோகத்திலே தக்கிணதிசையோலக்கஞ்சேவிக்கும் பதினெட்டு முக்கிய கணேசரிலொருவன். (வி-ணி. உகூச.)

அண்டார்—பகைவர். (உ-ம்.) "அண்டார்தமக்கோரரியே" (கந்தபு. சிங்க. சஎ௦.)

அண்டிகம்—செந்நாய்.(பிங்க.உ௫கூ)

அண்டிகா—மட்பானை.(உவில். ககக௬) [ஹண்டிகா.]

அண்டிரன் — 1. ஆடவன். (மா.)2. ஆயென்னும் வள்ளல். (உ-ம்.) "ஆயண்டிரனடுபோர் வள்ளல். (புறநா. சஉ௬.) 3. சமர்த்தன். (மா.) 1, 3. [அண்டீர.]

அண்டில்— மாடு முதலியவற்றின் கண்ணிற்பற்றும் ஒருபூச்சி. (உவின். கஎ.)

அண்டீரன்—1. ஆடவன். (ஆப். க௬) 2. சமர்த்தன். (ஆப். க௬.) [அண்டீர.]

அண்டுகை—அண்டுதல். (சி.)

அண்டுதல்—அண்டல். (உவின். கஎ)

அண்டை—1. அருகிடம். (சி.) (உ-ம்) "அவன் கிணற்றண்டையி னிற்கிறன்". 2. அயல். (சி.) (உ-ம்.) "அண்டைவீட்டுக்காரி" 3. ஒன்றை நிறுத்தும்படிகொடுக்கும்முட்டு. (உவின். கஎ.) 4. ஒட்டைமுதலியன அடைக்கும் ஒட்டு. (சி.) 5. சமீபம். (உ-ம்) "கிடத்திமனையவள் சம்பத்துறைமுறையண்டைக்கொழுகையில்" (திருப்பு. ௫கஎ-) 6. நீர்தூவுங்கருவி. (உ-ம்.) "செம்பொன் செய்தருத்திதும்புசெய்குழல்வட்டமாக-வம்பொன் செய்சிவிறிவெண்பொனண்டைகொண்டு" (திருவிளை. உக்கிர. உச.) 7. பீறலடைக்குந்துண்டு. (சி.) (உ-ம்) "சேலைக்கண்டைவைத்துத்தைத்தான்" 8. வரம்பு. (உ-ம்.) "அண்டைகொண்டுகெண்டைமேயும்" (நாலாயி. திருச்ச. சுக.)

அண்டையர் — பக்கத்தார். (உவின். கஎ.)

அண்டைவீடு—பக்கத்தில்வீடு.(உவின் கஎ.)

அண்ணகன்— பீசம்வாங்கப்பட்டவன். (உவின். கஎ.)

அண்ணணித்து—மிகக்கிட்டியது. (உ-ம்.) "அண்ணணித்தூராயின்" (கலித்தொகை. க௦அ.)

அண்ணந்தாள் — தலையையுங்காலிற் பெருவிரலையுஞ் சேர்த்துக்கட்டித் தலைநிமிர்ந்திருக்கச்செய்யுந்தண்டனை (உவின். கஎ.)

அண்ணம்— 1. உண்ணாக்கு. (உவின். கஎ.) 2. மேல்வாய். (உவின். கஎ.)

அண்ணல் — 1. அரசன். (சூ. நிகண். உ: கஉ.) 2. அருகன். (சூ. நிகண். க: உ.) 3. சார்தல். (சி.) 4. சிவன். (உ-ம்.) "அண்ணலருளானண்ணியவையவராயதனால்" (சிவப்பிர. உ: க.) 5. சிறப்பு. (உ-ம்.) "ஓங்குமண்ணன்மால்வரை" (கூர்மபு. திருக்கல். கஅ.)6. தமயன். (உ-ம்.) "அடைக்கலம்யானுமென்பா - யென்பதுகருதியண்ணன் மறைந்துநின்றெய்ததென்முன்" (இராமா. வாலிவதை. ககஎ.) 7. தலைமை. (சி.) 8. தலைவன். (உ-ம்.) "அடுபோரண்ணல் கேட்டிசின்வாழி" (மதுரை.உ௦எ.) 9. புத்தன். (சூ. நிகண். க:

கஅ.) 10. பெருமை. (உ-ம்.) "அண்ணலங்கும்ரராமென்று" (பாரத. திரௌ. கூ.) 11. பெருமையிற்சிறந்தோன். (உ-ம்.) "அகத்தியனுக்கோத்துரைக்குமண்ணல்" (சிவப்பிர.மங்கல. ௬.) 12. முல்லைநிலத்தலைவன். (உவின். சஅ.)

அண்ணலார்—சிவன். (உ-ம்.) "ஆடன்மேவியவண்ணலாரடி" (பெரியபு. ஏயர். கூஅ.)

அண்ணன்—தமயன். (சி.)

அண்ணா—1. அண்ணனென்பதன்விளி. (உ-ம்.) "பரஞ்சோதி யண்ணாவா வா" (தாயு. அன்பு. எ.) 2-3. அண்ணாவென்னேவலுந் தெரிநிலைவினைப்பகுதியும். 4. அருணாசலம். (உ-ம்.) "உயர்பொழிலண்ணாவிலுறைகின்றாரும்" (தேவார. திருவிடை. டு. திருநாவு.) 5. உண்ணாக்கு. (உ-ம்.) "அண்ணா வில்லாவமை வருவறுவாய்" (பொருந. கஉ.)

அண்ணாக்கு—உண்ணாக்கு. (மா.)

அண்ணாத்தல்—1. அங்காத்தல். (உ-ம்.) "அண்ணாத்தல் செய்யாதளறு" (வள். உடுசு.) 2. தலையெடுத்தல். (உ-ம்.) "நண்ணார் நாணவண்ணாந்தேகி" (புறநா. சஎ.) 3. நிமிர்ந்துநிற்றல். (உ-ம்.) "அண்ணாந்தவனமுலை" (கல்லாட. உஅ.) 4. மேனோக்கல். (மா.)

அண்ணாந்தாள் — அண்ணந்தாள். (மா.)

அண்ணாமலை — அருணாசலம். (உ-ம்.) "அண்ணாமலையங்கமரர்பிரான்" (பெரியபு. திருஞா. கூ௯௦.)

அண்ணார் — பகைவர். (உ-ம்.) "அண்ணார்புரமவியக்கனல்" (உபதேச. திரிபுர. கசஉ.)

அண்ணாவி — கூத்துமுதலியனபழக்குவோன். (உவின். கஎ. திசை.)

அண்ணி — தமயன்மனைவி. (மா.)

அண்ணிசு — அண்ணிது. (உவின். கஎ.)

அண்ணிடல் — பொருந்தல். (உ-ம்.) "பின்னுமண்ணிடும்" (சிவப்பிர. ௪. ௬.)

அண்ணித்தல்—1. பொருந்துதல். (உ-ம்.) "அடியார்க்கென்று மாரமுதாய அண்ணிக்குமையாற்றான்காண்" (தேவார. திருவாரூ. உ. திருநாவு.) 2. மதுரித்தல். (உ-ம்.) திருப்புத்தூரானைச்சிந்தைசெயச்செயக் கருப்பஞ்சாற்றிலண்ணிக்குங்காண்மினோ" (திருக்கடைக்காப்பு.)

அண்ணிது — அணிமை. (உவின். கஅ.)

அண்ணிப்பான் — மதுரிப்பான். (உ-ம்.) "ஆகமமாகிநின்றண்ணிப்பான்" (திருவாச. சிவபுரா. ௪.)

அண்ணியது — கிட்டியது. (உ-ம்.) "அண்ணியதாயு மகன்றும்" (கூர்மபு. பொது. ௬௨.)

அண்ணியன்—சமீபமானவன். (உ-ம்.) "கடிதுபோயுநீஇயண்ணியனுதலும்" (கந்தபு. மாயை. கஎ.)

அண்ணுதல் —1. அணுகுதல். (உவின். கஅ.) 2. சார்தல். (உவின். கஅ.) 3. பொருந்துதல். (உ-ம்.) "உன்னடிக்கீ ழண்ணியமெய்யடியவர்க்கு மாதக்கவென விரந்து" (திருவிளை. மெய்க்கா. அ.)

அண்பல்—மேல்வாய்ப்பல்லு. (உ-ம்.) "அண்பன்முதலா விளிம்புறவருமே" (நன். எழுத்தி. உஉ.) [நாவிளிம்பு அணுகுதற்காரணமாகிய பல் என்பது பொருள்.]

அண்மல் — அண்முதல்.

அண்முதல் — கிட்டுதல். (உ-ம்.) "இந்திரஞாலம் விடுத்தனனண்மி" (தணிகை. நீபரி. ௯எஉ.)

அண்மை—1. அடையுந்தன்மை. (உ-ம்.) "விண்ணவர்பாலண்மையிலனுகுமண்ணல்" (கந்தபு. காமத. கூஅ.) 2. அந்நுவயித்தற்கு வேண்டப்படும் பதங்களிடையீடின்றிநிற்றல். (சைவப்பிர. உடு.) 3. சமீபம். (உ-ம்.) "அண்மையினியல்பும்" (இலக்கணவி. உகடு.)

அண்மைச்சுட்டு —சமீபத்திலிருக்கும்பொருளைச் சுட்டிக்காட்டுதல். (உவின். சஅ.)

அண்மைவிளி—சமீபத்திலுள்ளாரையலலதுள்ளதை யழைத்தல். (சி.)

அணங்கம் — இலக்கணம். (மா.)(உ-ம்) "அஞ்சணங்கம்"

அணங்கயர்தல்—விழாக்கொண்டாடுதல். (உ-ம்.) "கழிச்சுழல்சுறவமுண் மருப்பணங்கயர்வன" (பெரியபு. திருக்குறி. எ.) [அணங்கு – தெய்வம். அயர்தல்—செய்தல்.]

அணங்கல்—அணங்குதல்.

அணங்காட்டு —வெறியாட்டு. (உ-ம்.) "அணங்காட்டுமுதியோன்"(கல்லாட. கஎ.) [அணங்கு-தெய்வம். ஆட்டு-ஆடல்.]

அணங்காடல்—வெறியாடல். (உ-ம்.) "பேரணங்காடல்செய்து"(பெரியபு. கண்ணப்ப. உச.)

அதிபாதகம் — மிகப்பெரும்பாதகம்; இது, சிவனுக்குஞ் சிவனடியார்க்குஞ், சிவனைப்பூசிக்குங் குருவுக்கும், விரோதமாகச்செய்யப்படுவது. சிவநிந்தை, சிவத்திரவியம்புசித்தல், கூலிக்குப்பூசித்தல், குருநிந்தை, குருத்திரவியம்புசித்தல், சிவனடியார் நிந்தை, வேதாகமநிந்தை யென்பன அதிபாதகமென்பர். சைவச. பொது. உசக. உரை. (உ-ம்.) "பிழைத்தவதிபாதகந் தீர்த்திலங்குகவே" (சீகாழிப்பு. ஸ்ரீகாளிபுர. ச०.) [அதிவாதக: அதி—அதிகம். வாதகம்-குற்றம்.]

அதிபாதகர் — மிகுந்தபாதகமுடையவர். (உ-ம்.) "அதிபாதகர்களெம்பெருமாற்கன்பாகியதென்னென வயிர்த்தார்" (ஞானவா. பிரகலா. சo.)

அதிபாதம் — 1. எல்லைகடத்தல். (உவில். கஎ.) 2. நியாயப்பிரமாணத்தையாவது தேசவழக்கத்தையாவது மீறிநடத்தல். (உவில். கஎ.) [அதி-அப்பால். வாதம்-போதல்]

அதிபானம் — மதுபானம். (மா.)

அதிபாரகம் — கோவேறுகழுதை. (உவில். கஎ.) [அதிஹாரக: அதி-அதிகம். ஹாரக-சுமைகொண்டுசெல்வது.]

அதிபாரகன் — மிகுநிபுணன். (உவில். கஎ.) [அதிஹாரக. அதி- அப்பால். ஹாரக-கடப்போன்.]

அதிபாரம் — மிகுபாரம். (உவில். கஎ.) (உ-ம்.) "அதனாலேசாவில்லாப்பல்லுயிராலறநெருங்குமதிபாரத்தை — யெதினாலே தீர்வமென" (ஞானவா. அருச்சுனன். க.) [அதிஹார; அதி- அதிகம். ஹாரம்-சுமை.]

அதிபாவம் — பெருங்குற்றம். (உ-ம்.) "வில்லாளி கூரம்பொடிராமன்கையடலம்புமுவமிக்கிலதிபாவமே"(பாரத. பன்னிர. அஅ) [அதி; பாவ.]

அதிபீடிதம் — அதிகமாக இறுக்குதல். (கொக்கோ. சு: உகு.) [பீடித.]

அதிபூச்சியர் — அதிகம்பூசிக்கப்படத்தக்கவர். (வி-ணி. உசஉ.) [பூஜ்ய.]

அதிபூதம் — 1. சீரத்துக்கு வேறாயும், இந்திரியங்களுக்குவிடயமாயும்இருக்கும்பொருள். (விசாரசா. உக.) 2. பரமாத்துமா, மேலானவஸ்து. (ஆப். உஉ.) [அயிபூதம்.]

அதிபேலம் — அதிபலமென்னும் புவனம். (கந்தபு. கணங்கள். சo. உரை.) [அதிவலம்.]

அதிமதுரம் — 1. ஒருசரக்கு. (உ-ம்.) "அருந்ததிமதுரம்" (மச்சபு.சருவபல. அ.) 2. குன்றிவேர். (உவின். கக.)

3. மிக்க இனிமை.(உ-ம்.) "அதிமதுரக்கனியொன்று" (பெரியபு. காரைக். உரு.) 4. வெண்குன்றி. (மா.)

அதிமந்தம் — சர்வநேத்திரரோகம் மூன்றுவகையுளொன்று, அது: வாதாதிமந்தம், பித்தாதிமந்தம், சிலேட்டுமாதிமந்தம், இரத்தாதிமந்தம், அதாதிமந்தம் என ஐந்தாக விரியும். (சீவரட். உருஅ.)

அதிமலம் — மாவிலிங்கைமரம். (கா. வைத்.)

அதிமாத்திரம்—அளவுக்கு மேற்பட்டது. (ஆப். கசு.) [அதிமாத்ர.]

அதிமாதம் — அதிகமாதம். (சரசோ.குணகுண. உ.)

அதிமாநம்—மிக்க அபிமாநம். (வாச.) [அதிமாந: அதி-அதிகம். மாநம் - அபிமாநம்.]

அதிமாநுடம்— 1. தெய்வத்தன்மை. (உவில், கள.) 2. மநுடனுக்குமேற்பட்டது. (சி. சி. உ: ருஅ. சிவாக்.) அதிமாநுஷ: அதி- அப்பால். மாநுஷ —மநுடத்தன்மை.]

அதிமாநுடன் — 1. உத்தமபுருடன். (சி.) 2. சிரஞ்சீவி. (சி.) 3. தேவன். (உவில். கள.) 4. மநுடனுக்குமேற்பட்டவன். (உவில். கள.) [அதிமாநுஷ: அதி-அப்பால். மாநுஷ-மாநுடன்.]

அதிமாமிசகம்—ஒருவகைத்தந்தரோகம். (சப்த.) [அதிமாம்ஸக. உண்ணாக்கில் வரும் அழற்சியென்று உவில்சன் உகூல் எழுதப்பட்டுள்ளது.]

அதிமாமிசம் — கண்ணில்வரும் ஒருவகைத்தசைச்சுரப்புநோய் (உவில். உகூ.) [அதிமாம்ஸ: அதி—மேல். மாம்ஸ-தசை.]

அதிமாமிசரோகம்—பற்களிலே வரும் ஒருவகைநோய்; அது: பல்லின்வேர்ச்சந்துகளிலே ஆணியையொத்தகட்டிகளைப்பிறப்பித்துக் காதுகளிலுந்தாடையிலும் நோவுண்டாக்கும் (சீவரட். உஅகூ.) [அதிமாமிசமென்பதற்கு உவில்சன் சொல்வதை மேலேபார். அதிமாம்ஸரோக.]

அதிமாமிசார்மரோகம்— கண்ணில் வரும் ஒருநோய்; அது: வெள்ளைவிழியிலே அதிகமாமிசம் வளர்வது. சீவரட். உருo.) [அதிமாம்ஸ; அர்மகண்ணோய். ரோக]

அதிமாயம்—மாயையினின்றும் நீங்கினது. (ஆப். கசு.) [அதிமாய: அதி-அப்பால். மாய-மாயை.]

அதிமார்க்கநூல்—பரசமயங்களுக்கப்பாற்பட்டு உட்சமயமாய்ச் சித்தாந்தமல்லாததாயுள்ள ஞாநத்தைப்போதிக்குஞ் சாத்திரம்; அது: பாசுபதம், காபாலம், மகாவிரதம் என மூன்றுவகைப்படும். (சைவச.பொது.கூகூஅ. உரை; சதாசிவ. சகூ.) [இவை உருத்திரர்களாற் செய்யப்பட்டன என்பர். (சி-பி. கை. பக். கஉ.]

அதிமார்க்கம்—பரசமயங்களுக்கப்பாற்பட்டு உட்சமயமாய்ச் சித்தாந்தமல்லாததாயுள்ள ஞாநம். (சதாசிவ. சகூ.) [அதி—அப்பால். மார்க-சமயம்.]

அதிமித்திரன்—கணவன். (மா.) [அதி-அதிகம். மித்திரன்—நண்பன்.]

அதிமிதம்—1. அளவின் மிக்கது. (உவில். கள.) 2. காய்ந்தது, ஈரமில்லாதது. (உவில். கள.) [அதி; மித-அளவு. அதிமித: அ- எதிர்மறை. திமித-ஈரம்.]

அதிமிதி—அதிக்குதி. (மா.) [வழக்.]

அதிமிருத்தியாதிமாத்திரை — கோரோசனை மாத்திரை. (கா. வைத்.] [அதி; ம்ருத்யு-மரணம்; ஆதி; மாத்ரா.]

அதிமுத்தம் — 1. குருக்கத்திக்கொடி. (உவில். கஎ.) 2. தேகம் நீங்கி யடையும் முத்தி. (வாச.) [அதிமுக்த: அதி-அதிகம். முக்த-விடப்பட்டது.]

அதிமுத்தி—சாயுச்சியமுத்தி.(ஆப். சகூ) [அதிமுக்தி: அதி-மேல். முக்தி-விடுதல்.]

அதிமூர்க்கம் — கடுங்கோபம். (உவின். உo.)

அதிமூர்க்கன்— கடுங்கோபி. (உவின். உo.)

அதிமோகம் — 1. அதிகசிற்றின்ப ஆசை. (உவின். சகூ.)2. அநேகம். (சி.) 3. ஒருதலைக்காமம். (சி.)

அதிமோட்சம்—அதிமுத்தி. (ஆப். சகூ) [அதிமோக்ஷ: அதி-அதிகம். மோக்ஷ-வீடு.]

அதியட்டி — அடியொன்றிற்குப் பதினேழு அசையுடையதாய் நான்கடியால் வரும் ஒருகவிச்சந்தம். (சிவதரு.உ:க.உரை) [சப்த.அத்யஷ்டி: அதி-அதிகம். அஷ்டி—ஒருசந்தம்.]

அதியம்—ஒருமருந்து. (மா.)

அதியாதரம்— மிகுவிருப்பம். (உ-ம்.) "அதியாதரத்தொடழையா" (பாரத. பதினெட். ச.) [அதி- அதிகம். ஆதர-விருப்பம்.]

அதியாமம்— 1. அறுகம்புல்லு. (கா. வைத்.) 2. முயற்புல்லு. (கா. வைத்)

அதியுக்கிரகண்டன்—ஓர் இயமதூதன். (வி—ணி. உஅக.) [அதி; உக்ர—கடுமை. கண்டன்.]

அதியுட்டணம்— அதிக வெப்பம். (உவின். கக.) [அத்யுஷ்ண. அதி- அதிகம். உஷ்ண—வெப்பம்.]

அதியோகம் — சென்மலக்கினத்துக்காவது சந்திரலக்கினத்துக்காவது ஆ

ரு மேழாமெட்டாமிடங்களிற் சுபக்கிரகம்இருக்குகிலே. இது, ஞாநம்,கீர்த்தி. இராசபிரியம், முதலிய சுபகாரியங்களைக்கொடுக்கும்யோகம் என்பர். (சரசோ. சாதக. கககூ;விதாந.சாதக. உரு. உரை.) [அதி-மேல். யொற்.]

அதிர்—1-3. அதிரென்னேவலுந் தெரிநிலைவினைப் பகுதியும் பெயரெச்சத்தொகையும். (உ-ம்.) "அதிர்கடல்சூழ்புவி" (சூத. எக்கி. பூ.சு: உஉ. பெகை.) 4. ஒலி. (சி.) 5. நடுக்கம். (சி.) 6. பயம். (செ.)

அதிர்ச்சி—1. அசைவு. (உவின். உ௦.) 2. அதிகப்படுதல். (சி.) 3. ஆரவாரம், குமுறல். (உ-ம்.) "காய்சினக்களிறதிர்ந்திடுமெதிர்ச்சி" (உபதேச. விபூதி. ககஅ.) 4. நடுக்கம். (உவின். உ௦.) 5. பயம். (மா.)

அதிர்ச்சியம்— 1. காணப்படயோக்கியமாகாதது. (உ-ம்.) "அதிர்ச்சியமுமன்றென்றுசொல்லி" (சி. சி. உ: க. ஞாநப்.) 2. காணப்படாமை. (உவில். உ௦.) [அத்ருஶ்ய: அ-எதிர்மறை. த்ருஶ்ய- காணப்பட்டது.]

அதிர்த்தல்—1. அசைத்தல். 2. அதட்டல், உரப்பல். (பிங். உகககூ.) (உ-ம்.) "அரிப்பதாகனுரகப்பதாகனேயதிர்த்து" (பாரத. பதினே: கஅசு.) 3. அதிரச்செய்தல். (உவின். உ௦.) 4. ஒலித்தல். (உ-ம். "மதித்தவேலையவ்வேலையினுடைந்தென வாய்விட்டதிர்த்த" (கந்தபு. ததீசியுத். கூஉரு) 5. சொல்லுதல். (பிங். உ௦௦கூ.) 6. அசைத்துத் தள்ளுதல். (உ-ம்.) "அஞ்செழுத்தாலதிர்த்தெழுந்து" (கோயிற்பு. பாயிர. கூ.)

அதிர்தல்— 1. அசைதல். (உ-ம்.) "பெண்ணொருத்திபேசிற்பெரும்பூமிதானதிரும்" (நீதிவெண்)2. ஒலித்தல். (உ-ம்) "அதிர்ந்துவீசினான்" (பாரத. குருகுல. ருஎ.) 3. நடுங்கல். (உ-ம்.) "அதிரவருவதோர்நோய்" (வள். சஉக)

அதிர்ப்பு — அச்சம். (மா.) 2. அசைப்பு, அசையச்செய்தல். (உ-ம்.) "அடும்படைவலத்தினர் தெழித்தெழுமதிர்ப்பில்" (காஞ்சிபு. வாணீ. சுக.) 3. ஆரவாரம். (உ-ம்.) "பஞ்சதுந்துபியொலியதிர்ப்பும்" (சீகாழி. திருஞா சரு.) 4. நடுக்கம். (பிங். கஅருச.)

அதிர்வு — 1. நடுக்கம். (உ-ம்.) "உலகெலாமதிர்வுறப்பார்ந்து" (காஞ்சிபு. மணி. சரு.) 2. நரம்பினிசையாற் பிறந்த பொல்லாமை நான்கனுளொன்று; அது: நரம்பினைச் சிதறவுந்தல். (உ-ம்.) "செம்பகையார்ப்பேயதிர்வே கூடம்" (சிலப். வேனில். உகூ.)

அதிர்வெடி — 1. சிறுபீரங்கி. (உவின். உ௦.) 2. திடுக்காட்டத்தையுண்டாக்குஞ் சிறுபீரங்கிச்சத்தம். (உவின். உ௦.)

அதிர்வேட்டு — அதிர்வெடி. (உவின். உ௦.)

அதிரசம் — 1. உப்பு. (செ.) 2. ஒருபண்ணிகாரம். (திருவாத. திருப்பெரு. எ௦. விருத்தியுரை.) 3. ஒருபாநம். (உவின். ககூ.) 4. மிக்க இரசம். (உ-ம்) "அன்னமும் பாலுமதிரசக்கனியுநல்கி" (திருநெல். சுவேத. ருஅ.) [அதிரஸ.]

அதிரத்தம் — மிக்கசிவப்பு. (வாச.) [அதிரக்த: அதி-அதிகம். ரக்த-சிவப்பு.]

அதிரதம் — ஓர்பண்ணிகாரம். (சி) 2. ஓர்பாநம். (சி.) 3. நால்வகைத்தேர்களுளொன்று. (மா.) அதிரத: அதி-அதிகம். ரத-தேர்.]

அதிரதர் — தம்மையுந் தமதுதேரையும் சாரதியையுந், தேர்க்குதிரைகளையுஞ் சேனைகளையுங் காத்துக்கொண்டு பகைவரை அழிவு காணவல்ல தேர்வீரர்; முழுத்தேர்வீரர். (சி.) (பாரதவெண். பதினொரா. எக) "அதிரதர் மாய்ந்தார்" (பாரத. பதின்மூன். கூச). [அதி-அப்பால். ரத:-தேர்.]

அதிரதன் — 1. சத்தியகர்மன் மகன் இவன்கங்கைக்கரையில்வந்தடைந்த குந்தி சிசுவாகிய கன்னனை யெடுத்து வளர்த்தவன். இவன் மனைவி விராதை. (அபிதா.) 2. முழுத்தேரரசன். இவன், தேரினின்றமர் புரிந்து தனது சேனையையும் தேரையும் காவல்பண்ணிக்கொண்டு சத்துருவைச் சயம்பண்ணும் அரசன். (பாரதவெண். பதினொரா. எச.)

அதிரதி — அதிரதன். [அதிரதி] [அதி-அப்பால். ரதி-தேருடையவன்.]

அதிரல் — 1. அதிர்தல். (செ.) 2. புனலிமரம். (உ-ம்.) "அதிரல்பூத்தவாடுகொடிப்படாஅர்" (முல்லை. ருக.) 3. மோசிமல்லிகைக்கொடி. (உ-ம்.) "விரிமலரதிரலும்" (சிலப். புறஞ்சே. கருகூ.) 4. விரிதூறு. (திவாகர.)

அதிராகம் — கர்தகம். (கா. வைத்.) [அதி-அதிகம். ராக-சிவப்பு.]

அதிராசன் — 1. அரசனுக்குமேற்பட்டவன். 2. சிரேட்டராசன். (ஆப். ககூ- அதிராஜ: அதி-மேன்மை. ராஜ-அரசன்.)

அதிராத்திரம் — யாகமிருபத்தொன்றினொன்று; இதுசோதிட்டோம யாகத்தினோர்பகுதி. (உ-ம்.) "பின்பனிக்காலந் தூசினீர்நிற்கிற்சொல்லதிராத்திரந் துலங்கியமகப்பயனடைவர்" (மச்சபு. தடாகவி. உக. சப்த.) [அதிராத்ர. அதி-அப்பால். ராத்ர-இராத்திரி.]

அதிரம்பை — பொற்றலைத்தகரைப்பூண்டு. (கா. வைத்.)

அதிராயம் — அதிசயம். (உவின். உ௦.)

அதிரித்தம் — மிகுதி. (உவில். கஎ.) [அதிரிக்த: அதி; ரிச; க்த.]

அதிருக்கு — குருடு. (உவில். உ௦.) [அத்ருக்: அ-எதிர்மறை. த்ருக்-கண்.]

அதிருச்சியம்—காணப்படும் பொருளைக் காணுமற் போகச்செய்வது. (உ-ம்.) "அகரமாதிமூன்றுகியவாகருட்டணமே — புகரிலாவதிருச்சியமஞ்சனம்" (திருவிளை.எல்லாம்.கஎ) [அத்ருஶ்ய "அதிர்ச்சியம்" என்றதன்பொருள் எல்லாம் இதற்கும்வரும்.]

அதிருசம் — அதிருசியம். (உவின். உ0.) [அத்ருஶ்ய.]

அதிருசன்—குருடன். (ஆப். கக.) [அத்ருஶ: அ-எதிர்மறை. த்ருஶ:-கண்ணுளவன்.]

அதிருசியந்தி—அருந்ததி. (அபிதா.)

அதிருசியம்—1. அறுபத்துநான்கு கலைஞானங்களுள் ஒன்று. (உவின். உ0.) [அது: காணப்படும்பொருளைக் காணப்படாமற்போகச்செய்யுஞ் சித்தியையுரைப்பது] 2. காட்சிக்குவிடயமாகாதது (உ-ம்.) "உணர்வரிதாயதிருசியப்பொருளாய்" (சூத. முத்தி. ச: கக.) 3. காணப்படயோக்கியம் இல்லாதது. (உவில். உ0) 4. தாமதகுணசித்திகளுள் ஒன்று; அது: காணப்படும்பொருளைக் காணுமற்போகச் செய்வது. (கூர்மபு. உ: கசு. உரை.) [அத்ருஶ்ய அ—எதிர்மறை. த்ருஶ்ய—காணப்படத்தக்கது]

அதிருசியன்—கடவுள், பரசிவன். (உ-ம்) "சீர்மொய்த்தவந்தரியாமி-சாலவேத்திடுதிருசியாயகன் சாற்றதிருசியன்னே" (சூத. எக்கி. பூ. கூகூ அ.) [அத்ருஶ்ய: அ-எதிர்மறை. த்ருஶ்ய—காணப்படுகிறவன்.]

அதிருட்டகன்மம்—மறுமையிலே சுவர்க்க நரகங்களை யநுபவித்தற்குக் காரணமாக இருக்கும் இம்மையிற் செய்யப்பட்ட கன்மம். [இக்கருத்து "அதிருட்டமாவது, இம்மையிலேசெய்த கன்மம் மறுமையிற்சுவர்க்கநரகங்களை யநுபவிக்கை" யெனச் சி. சி. உ: கஉ. உரையிலே மறைஞானசம்பந்தர் கூறியதாற் பெறப்படும். அத்ருஷ்-காணப்படாத, கர்ம-கிரியை.]

அதிருட்டபோக்கியம்—ஒருவர் செய்த கன்மந் தேகாந்தத்திலே சுவர்க்கத்திலாதல் நரகத்திலாதல் மற்றொரு பிறப்பிலாதல் பலிப்பது. (சி. சி. உ: கூகூ. ஞாநப்.) [அத்ருஷ்-காணப்படாத. ஹோஜ்ய—புசிப்பு.]

அதிருட்டம்—1. இந்திரியங்களாற் காணப்படாதது. (சித்தா. சாரா. ஞாந. எ-ஞ் சுலோகவுரை.) 2. பார்வைக்கெட்டாதது. (வி-ணி.) 3. பாவபுண்ணியத்தொழிலினுற் புத்திதத்துவத்திற் சமவாய சம்பந்தியாய் வைக்கப்பட்டுப் பலபரியந்தமிருக்குஞ் சம்ஸ்காரமாகிய சூக்குமகன்மம். இது சுவர்க்க நரகபூமிகளுக்கு ஆன்மாவுடன் சூக்குமதேகத்தில் இருந்து போதலும்வருதலும் உடையதென்பர். (சி. சி. உ: கக. ஞாநப்.) [அத்ருஷ்: அ-எதிர்மறை, த்ருஷ்-காணப்பட்டது.]

அதிருட்டாநுமாநம்—அதிட்டாநுமாநம். (சி. சி. அளவை. கஉ. மறை.) [அத்ருஷ்; அநுமாநம்.]

அதிருட்டிபூதநா—ஒரு குருட்டுப்பெண்பேய். இது, குழந்தைகளை வருத்தும் ஏழு பெண் பேய்களுள் ஒன்றென்று சொல்வர். (சீவரட். உஉஉ.) [அத்ருஷ்-கண்ணில்லாதது. பூதநா—ஒருபசாசு.]

அதிருட்டிபூதநாக்கிரகதோஷம்—அதிருட்டிபூதநையென்னும் பெண்பேயினுற் குழந்தைகளுக்கு வருந்தோஷம். அது: அற்பபார்வை, வாந்தி, சுரம், இருமல், மலபேதம், தேகநிறமாறுதல், அத்தேகத்திற் றுர்க்கந்தக்கவிச்சுவீசுதல், அல்லது அசங்கிய நாற்றம், இளைத்தல், சொற்பநித்திரை, உதடுநோவு, நினைவு, விக்கல், பயம், மூலைப்பாலில் அசங்கியம், ஈகத்தொனி, நடுக்க முதலிய குணங்களையுண்டாக்கும். (சீவரட். உஉச.) [அத்ருஷ்டிபூதநாக்ரஹதோஷம்.]

அதிருத்தி—திருத்தியின்மை. (உவில். கமு.) [அத்ருப்தி: அ-எதிர்மறை. த்ருப்தி-நிறைவு.]

அதிருபம்—மிகச்சிறந்தவடிவம். (உவின். கூ.) [அதிரூப.]

அதிரேகம்—1. அதிசயம். (உவின். உ0) 2. அளவுக்கதிகம். (ஆப். கசு.) 3. மிகுதி. (உ-ம்.) "அதிரேக மாயை" 4. மேன்மை. (ஆப். கசு.) [அதிரேக: அதி-அதிகம், ரேகம்—கடந்தது.]

அதிரேகமாயை—பெரிதாகியமயக்கம். (உ-ம்.) "ஆரிவ்வதிரேகமாயையறிவார்" (இராமா. நாகபாச. உருஉ.)

அதிரோகணி—அதிரோகிணி. (உவில். உகூ.) [அதிரோஹணீ.]

அதிரோகம்—1. கயரோகம். (உவில். கஎ.) 2. மிகுபிணி. (உவின். கக.) [அதிரோக: அதி-அதிகம். ரோக—நோய்.] 3. மேலோங்கியது. (உவில். உகூ) [அதிரோஹ: அதி—மேல். ரோஹ—ஏறுதல்.]

அதிரோகிணி—ஏணி. (உவில். உகூ) [அதிரோஹிணி: அதி-அப்பால். ரோஹிணி - ஏறுதற்குரியது.]

அதிரோகிதபாவம்—மறைக்கப்படாதிருத்தல். (பௌட். பசு. கடுகூ.) [அதிரோஹிதபாவ: அ—எதிர்மறை. திரோஹிதபாவ- மறைக்கப்பட்டிருத்தல்.]

அதிரோகிதம்—1. மறைபடாதிருக்கை. வாச.) [அ - எதிர்மறை. திரோஹித-மறைக்கப்பட்டமை. உவில். கூசஉ]

அதிரோபிதம்—மேலாக உயர்த்தப்பட்டது, மேலாகவைக்கப்பட்டது. (உவில். உகூ.) [அதிரோபித: அதி—மேல். ரோபித—உயர்த்தப்பட்டது.]

அதிலவோடாகம்—அடிலவோடகச்செடி. (கா. வைத்.)

அதிலுத்தன்—பிறர்பொருளில் மிக்க ஆசையுடையோன்.(உவில். கஎ.) [அதிலுஶ: லுஶ-ஆசைக்காரன்.]

அதிலோகம்—1. இரசகர்ப்பூரம்.(கந். வைத்.) 2. உலகத்தில். (ஆப். உஉ.) 3. சர்வலோகம், அசிற்பிரபஞ்சம். (உவில். உரு.) [அயி-மேல். லோக.]

அதிலோபம்—1. தன்பொருளைப்பிறர்க்குக்கொடுக்க விரும்பாமை. (உ-ம்.) "ஆய்ந்தபொருளொருவர்க் கீயாவதிலோப - மாந்தர்" (சிந்தா. முத்தி. ௬எக.) 2. மிக்கபொருளாசை. (சி. சி. அ: கஉ. மறை.) [அதிலோப.]

அதிவ்வியசம்பந்தம் — அறுவகைச் சம்பந்தத்துள் ஒன்று; அது: (ஆகமவுபதேசத்தை பற்றிக்) குருவுக்குஞ் சிடனுக்குமுள்ள சம்பந்தம். (சி. சி. க: சரு. மறை.) [அதிவ்ய_ திவ்வியமல்லாத. ஸம்பந்த-தொடர்ச்சி.]

அதிவ்வியம் — திவ்வியமல்லாதது. (உ-ம்.) "அதிவ்வியசம்பந்தம்" [அதிவ்ய]

அதிவசநம்—1. பட்சபாதமான பேச்சு. (வாச.) 2. பெயர். (உவில். உரு.) [அயிவசந.]

அதிவர்ணச்சிரமி — வருணச்சிரமங்களைக் கடந்து வேதாந்த மகாவாக்கியக் கேள்வியினாலே சடவுளையுந் தன்னையும்அறிந்தஜக்கியாத்துமஞானி. (வாச.) [அதிவர்ணாஶ்ரமிந்:அதி-அப்பால். வர்ண-குலம். ஆஶ்ரம-நிலை.]

அதிவருணர் — அதிவர்ணச்சிரமத்தோர். (உ-ம்.) "ஐயமற்ற வதிவருணர்க்கெலாங் கையிலா மலகக் கனியாகிய மெய்யனே" (தாயு. பொன். ௬௬.)

அதிவன்னச்சிரமி — அதிவர்ணச்சிரமி. (உ-ம்.) "உலகமுழுதுஞ்சொப்பனம்போலுறக்கண்டிடுவானெவனுரும்-இலகுநம்பேரொளிப்பிழம்பினிலினமாவானெவனிதனுன்மலரும்வருணச்சிரமதன்மம் வழுவவறிதரானெவனெவ்-வலகில்சீர்த்தியுடையானெயதி வன்னச்சிரமியாவான்" (சூத. முத்தி. ரு: கசு.)

அதிவாசநம்—1. சுவாமியை விக்கிரகத்தில் வருவித்துப் பிரதிட்டைசெய்தல். (ஆப். உரு.) 2. மணமூட்டுதல். (ஆப். உரு.) [அயிவாஸந.]

அதிவாசம் — 1. அயல். (உவில். உரு.) 2. இடம். (உவில். உரு.) 3. பிடிவாதமாய்க் கேட்டல். (ஆப். உஉ.) 4. மணமூட்டுதல் (ஆப். உஉ.) 5. மிகுமணம். (ஆப். உஉ.) 6. யாகாரம்பத்திற்கு முதனாளிலே தெய்வங்களையாவாகித்துத்தாபிக்குங்கிரியை.(வாச. ஆப். உஉ.) (உ-ம்.) "அற்றிகழ்வொன்றுசடங்கதிவாசமமைத்தார்கள்" (கோயிற்பு. திருவிழா. ச.) 7. வஸ்திரம். (ஆப். உஉ.) 8. வாசஸ்தானம். (உவில். உரு.) [அயிவாஸ: அயி-மேல்.வாஸ-இருத்தல்;மணம்]

அதிவாதம் — 1. சுவாமியை விக்கிரகத்திலே திருமேனி கொண்டுறையும்படி செய்யும்பிரதிட்டைக்கிரியை.(உ-ம்.) "விதிநூன்முறையேயதிவாதவினையுமற்றைவினையனைத்தும்-பதியாம்பரமன்றனக்கிசையப்பண்ணிடுக" (சிவதரு. உ: எக.) [அயி-மேல். வாஸம்-வாதம்.] 2. நிந்தைமொழி, விரோதமானபேச்சு. (உவில். கஅ.)[அதிவாத: அதி-அதிகம். வாத-பேச்சு.] 3. பெருங்காற்று. (உவில். கஎ.) [அதிவாத: அதி-அதிகம். வாத-காற்று.]

அதிவாதி — 1. பிறமதங்களெல்லாவற்றையுங் கண்டித்துத் தன்மதந்தாபிப்போன். (வாச.) 2. மிகவாய்ச்சாலமாய்ப்பேசுவோன். (ஆப். கசு.) [அதிவாதிந். அதி-அப்பால். வாதிந்-வாதிப்போன்.]

அதிவாலகன்—குழந்தை. (உவில்.கஎ.) [அதிவாலக: அதி-அதிகம். வாலக-இளையோன்.]

அதிவிகடம் — துட்டத்தன்மையான யானை. (உவில். கஅ.) [அதிவிகடம்: விகடம்-பயங்கரப்படத்தக்கது.]

அதிவிகடன் — மிக்கரோபி. (உவில். கஅ.) [அதிவிகட.]

அதிவிசித்திரம்—மிகுந்த ஆச்சரியம். (மூன்றும்பால. உசு.) [அதி-அதிகம். விசித்ரம்-ஆச்சரியம்.]

அதிவிடம் — அதிவிடயம். (கா. வைத்.) விஷத்தைக் கண்டிக்கும் ஒரு மருந்து. (உவில். கஅ.) [அதிவிஷ: அதி-அப்பால். விஷம்-நஞ்சு.]

அதிவிடயம் — ஒருபூண்டு; இதன்வேர் ஓரங்குல நீளமாயும், வெண்மைநிறமுடையதாயும், மிகுகசப்பாயுமிருக்கும். (கா. வைத்.)

அதிவிடை—அதிவிடயம். (உ-ம்.) "திரிபலைமரிசமம்பதிவிடைகுபேரிகைசிகிப்பீலியொலிசாதி சந்திரிபூரம்வெட்பாலைபங்கிவித்தரிசனந்திவி நீகாமங்குன்றிவேர்- கிருமியரிசிஞ்சைவித்துரியொருபதொடு நவங்கிளர் வகைக்கொரு கஃசெலாங் கிண்டியிழை" (தைல. தைலவ. ச.) [விஷத்தன்மையுடைமையால்வந்தபெயர்.] ஒருமரம். இது,மருந்துக்குபயோகமானது. இதன்பட்டை சாயங்கொடுத்தற்குப் பிரயோகிக்கப்படும். (உவில். கஅ.) [அதிவிஷா.]

அதிவித்தாரம் — அதிகவிஸ்தாரம் (பௌஷ். பசு. கசரு.) [அதி-அதிகம். விஸ்தரம்- விஸ்தாரம்.]

அதிவிந்நை—தன்கணவன் வேறொருத்தியை விவாகஞ்செய்தற்குக் காரணமாயிருந்த முதன் மனைவி. (பராசர. கருஎ.) [அயிவிந்நா: அயி-மேல். விந்நா-அடைந்தவள்.]

அதிவிநயம்—1. அதிகக் கீழ்ப்படிவு. (உவில். கக.) 2. மாரீசாசாரம். (உவின். கக.) [அதி-அதிகம். விநயம்-வணக்கம்.]

அதிவியதை—மிக்க உடைத்திரவம். (உவில். கஅ.) [அதிவ்யதா: அதி-அதிகம். வ்யதா-வருத்தம்.]

அதிவியப்பு —அதிக வியப்பு. (உ-ம்.) "ஆழியானதிவியப்பெய்தி" (இராமா. உத். கார்த்த க.) [அதி-அதிகம். வியப்பு—மேன்மை.]

அதிவியயம்—அதிகச்செலவு. (வாச.) [அதி-அதிகம். வ்யயம்—செலவு.]

அதிவியயி—பெருஞ்செலவாளி. (உவில். கஅ.) [அவ்யயி:]

அதிவியாத்தி —1.(தர்க்கம்.)மூன்றுதூஷணங்களுளொன்று;அது: ஒருபொருளுக்குச் சொல்லப்படும் இலக்கணம் அஃதல்லாத பொருளிலும் இருத்தல்; பசுக்கொம்புடையதென்று சொல்லுமிடத்துக் கொம்புடைமையாகிய அவ்விலக்கணம் பசுஅல்லாத யானைமுதலிய மிருகங்களுக்கு மிருத்தலால் அதிவியாத்தி. (தர்க்கச. இராம. கூஉ.) 2. விதிப்பிரமாணமொன்றனைக் கருதியதற்கு மேலே பாரித்தல். (ஆப். கசு.) [அதி-அதிகம்வியாப்தி-வியாபித்தல்]

அதிவிரகன்—அதிக உபாயமுள்ளவன். (உ-ம்.) "கள்ளத்தாலருந்ததிவிரகனதருளினால்" (பாரத. அருச்சுனன்றீ. எசு.) [அதி--அதிகம். விரகன்—உபாயமுடையவன்.]

அதிவிருட்டி —அதிகமழை. (ஆப். கசு.) [அதிவ்ருஷ்டி: அதி-அதிகம். வ்ருஷ்டி—மழை.]

அதிவெப்பம் —இருபத்தெட்டுத்தொகைநரகங்களிலே முதலாவதாகிய கோரத்துக்குள்ள ஐந்து நாயகநரகங்களில் ஒன்று. (சிவதரு. எ: ககஉ.) [அதி—அதிகம். வெப்பம்-வெம்மை.]

அதிவெள்ளைச்சிந்தூரம் — சவ்வீரம். (கா. வைத்.) பறங்கிப்பாஷாணம். (சி.)

அதிவேகம் —மிகுகதி. (உவின். கக.)

அதிவேதநம் —1. அதிகக்கூலி. (செ) [அதி—அதிகம். வேதநம்-கூலி.] 2. முன்விவாகஞ்செய்த மனைவியிருக்கப் பின்னும் ஒருத்தியை விவாகஞ்செய்தல். (உவில். உகூ.) [அயிவெஹந: அயி-அப்பால். வெஹந—விவாகம்.]

அதீக்கிதர் —தீக்கைபெறாதவர். (உ-ம்.) "அதீக்கிதரொழியமற்றைமூவருள்" (சைவச. பொது: கூகூஉ. உரை.) [அதீக்ஷித: அ-எதிர்மறை. தீக்ஷிதா—தீக்கைபெற்றவர்.]

அதீக்கையோர்— தீட்சையில்லாதவர். (உ-ம்.) "அதீக்கையோர் கொணர்ந்தனவும்" (திருநெல். விபூதி. உக.)

அதீச்சன்—மிக்கஇச்சையுடையோன். (உவில். சஅ.) [அதீஹ: அதி-அதிகம். இஹ—இச்சையுள்ளவன்.]

அதீச்சுரபதவி—அர்ச்சிய பிரபுத்துவம். இஃது, (உரோமான் சமயிகள் சொல்லுகிறபடி) பத்திச்சுவாலகர் முதலிய நவவிலாச சபையாருக்குரிய அதிகாரம். (வீர. தொகை. வானோர்கணம்.)

அதீச்சுரன்—1. அதிபதி. (ஆப். உகூ.) 2. கடவுள். (சி.) 3. தலைவன். (உ-ம்.) "துகளறு சாமவேதத்துக் கதீச்சுரனேயென்றும்" (மச்சபு. நட்சத்.சு.) [அதீ-மேல். ஈஶ்வர-கடவுள்.]

அதீசன் —1. அதிபதி. (ஆப். உகூ.) 2. ஏகசக்கிரவர்த்தி. (ஆப். உகூ.) 3. கடவுள். (ஆப். உகூ.) [அயீஶ: அயி—மேல். ஈஶ—தலைவன்.]

அதீசாரம் —அதிசாரம். (உவில். கஅ.) [அதீஸார.]

அதீட்சணதை —கூர்மையின்மை. (உவில். கஅ.) [அதீக்ஷணதா: அ-எதிர்மறை. தீக்ஷணதா-கூர்மை.]

அதீட்சணன்—கூர்மையில்லான். (உவில். கஅ.) [அதீக்ஷண:]

அதீதகலை — ஐந்துகலைகளுளொன்றாகிய சாந்தியதீதகலை; அது: விகற்பஞானஞ் சாந்தமானதென்கின்ற நினைவுங் கழன்று பரமாகாச ரூபமாய் நிற்பது. (சிவப்பிர. உ: கூ. உரை. இலக். சிதம்.) [அதீத—கடந்த. கலா]

அதீதகாலம் — இறந்தகாலம். (பௌட். பாசபதா. எடு.) [அதீதகால: அதீத—சென்ற; கால-]

அதீதப்பிரமம் — மேலான பிரமம். (மா.) [அதீத; ப்ரஹ்ம]

அதீதம்— 1. ஆன்மாவில் ஆணவமலம்பரிபூர்ணமாயிருக்குங் கேவலாவத்தையாகியதன்மை. (உ-ம்.) "நீக்கமிலதீதமாக நிறைந்த கேவலாமாநீர்மை" (சிவப்பிர. சு: கூ.) 2. இறந்தகாலம். (பௌட். பாசபதா. சக.) 3. எட்டாதது, கடந்துமேலேபோனது. (உ-ம்.) "சிந்தையாரதீதமானசிவசத்தி" (சி. சி. க: ருஎ.) 4. சென்றது. (உவில். கஅ.) 5. தடையினின்று விடுக்கப்பட்டது. (உவில். கஅ.) 6. தாளப்பிரமாணம் பத்துவகையுளொன்றாகிய கிரகமென்பதன் பிரிவு நான்கனுளொன்று; அது: குரல்முன்னுந் தாளம்பின்னுமாய் வருவது. (மா. தொகை. தாளப்.) 7. துரியாதீதம்; அது: கருவிகளெல்லாம் நீங்க ஆணவமலம் நீங்காதிருக்க மூலாதாரத்திலே புருடனின்ற அவதரம். (உ-ம்.) "தனியதீத முயிர்க்குண்மையெனவுணர்த்துமன்றே" (சிவப்பிர. கூ: க.) "எண்ணமொன்றில்லாவதீதம்" (சிவப்பிர. சு: க.) 8. பொன். (சி.) 9. மரித்தது. (உ-ம்.) "எல்லாமதீதமயமானதன்றோ" (தாயு. ஆனப. கo.) 10. மேற்பட்டது. (சி.) [அதி-அப்பால். ஊத-போனது.]

அதீதர் —1. முனிவர். (செ.) 2. மேலோர். (செ.) 3. வானோர். (செ.) [அதீத: உலகப்பற்றையொழித்தவரென்றபடி.]

அதீதவேதன்—வேதம் முற்றக்கற்றவன். (உவில். உச.) [அயீதவெடீ: அயீத-படிக்கப்பட்ட. வெடீ-வேதமுடையோன்.]

அதீதன்— எட்டாதவன், கடந்தவன். (உ-ம்.) "வாக்கெவைக்கு மதீதனுமப்பிரானருளால்" (சூத. ஞாந. ௬௦: ௨௦.) "பாவநாதீதன்" (சி. சி சூ. ௭. சிவாக்.) 2. பாசத்தினின்று விடுவிக்கப்பட்டவன். (உவில். கஅ.) [அதீத; அதி; ஊத-போன.]

அதீதாவத்தை—கீழாலவத்தை ஐந்தனுள் ஒன்று; அது: கருவிகளெல்லாம் நீங்கி யொன்றும்அறியாமற்கிடக்கும் அவத்தை. இதிலே புருதத்தவம் ஒன்றுமே சீவிப்பது. இந்த அவத்தையிலே வெம்மையற்ற இரும்பு போலவும், பிறவிக்குருடன் அந்தகாரத்திலே விழித்திருக்குந் தன்மை போலவும் அறிவு வலிகெட்டிருக்கும் என்பர். (சிவப்பிர. ௪. க- உரை. சிதம்பர.)

அதீதியம்—ஆசையின்மை. (மா.)

அதீந்திரியம்—1. இந்திரியத்திற் கெட்டாதது. (உ-ம்.) "செறிதரு மந்தகாரஞ் சிதைத்ததீந்திரியமாகி" (மச்ச பு. பிரமாண்ட. கஎ.) 2. மகம். (வென். கஉ.)[அதீ௦ ந்ரீய: அதி- அப்பால். ஊந்ரீய௦ —இந்திரிய சம்பந்தமுடைது.]

அதீநத்துவம் — அதீநதை. (உவில். உச.) [அயீநகூ௦.]

அதீநதை—1. அடிமைத்தன்மை. (உவில். உச.) 2. கீழ்ப்படிதல். (உவில். உச.) 3. சார்ந்திருத்தல். (உவில். உச.)
[அயீநதா.]

அதீநம்—1. உடைமை. (உவின். உக.) 2. கீழ்ப்பட்டது. (வென். கஎ.) 3. சார்ந்திருப்பது. (உ-ம்.) "சந்தமுறுபிராணவளியதீநமேயாய் மூலாதாரத்தேத்து" (சூத. எக்கி.பூ. ௪: ௪; வென். கஎ.) [அயீந.]

அதீரம்—1. கரையின்மை. (சி.) 2. தைரியமின்மை. (உவில். உச.) 3. நிலையின்மை (உவில். உச.)
[அயீர: அ-எதிர்மறை. யீர-நிலை.]

அதீரை—1. அமையாதவள். (சி.) 2. பிணங்குகிறமனைவி. (உவில். உச.) 3. மின்னல். (உவில். உச.)
[அயீரா: அ-எதிர்மறை. யீரா-நிலையுடையவள்- து.]

அது— 1. அஃறிணைப்பிரபஞ்சம். (உ-ம்.) "அவனவளதுவெனுமவைமூவினைமையில்" (சிவஞா. போ. க.) 2. அஃறிணையொருமையிலே, "வந்தது" என்பதிற்போல இறந்தகால வினைமுற்றிலும், "வருகிறது" "வருகின்றது" "வாராநின்றது" என்பவற்றிற்போல நிகழ்காலவினைமுற்றிலும், "வருவது" "நடப்பது" என்பவற்றிற்போல வருங்காலவினைமுற்றிலும், இவ்வுருபமுடைய தொழிற்பெயர் வினையாலணையும் பெயர்களிலுங் கால இடைநிலையை யடுத்து வருவதோரிறுதிநிலை. தொழிற்பெயரிறுதிநிலையாய் வருவதற்குதாரணம். "உலகமெல்லாம்வருமுறைவந்துநின்றுபோவதுமாதலாலே" (சி. சி. ௧: க.) வினையாலணையும்பெயரிறுதிநிலையாய் வருவதற்குதாரணம், "பகுதிவிகுதி பகுத்திடைநின்றதைவினைப் பெயரல்பெயர்ச்கிடைநிலையெனலே" (நன். பதவி. கச.) 3. அஃறிணையொன்றன்பாலிற் சேய்மைத்தாகிய ஒன்றைச்சுட்டி வரும் ஒருபெயர். (உ-ம்.) "அதுகண்டு நடந்தறுமாமுகவன்" (கந்தபு.தெய்வ. உகஎ.) 4. ஒன்றன்பாலில்வரும் ஒரு பகுதிப்பொருள்விகுதி. (உ-ம்.) "உருவினுயிர்வடிவதுவுமுணர்ந்திலர்" (சி. சி. அ: ருசு.) 5. ஒன்றேடொன் றிணைந்துவரும் இரண்டுபெயர்ச்சொற்களில் நிலைமொழியோடணைந்தொற்றுமைபற்றிய சம்பந்தப்பொருளிலாவது வேற்றுமைபற்றிய சம்பந்தப்பொருளிலாவது ஆறும்வேற்றுமையில் வரும் உருபுகளுள் ஒன்று. அது: (கந்தபு. தெய்வ. கூ௪ல்.) "நினது சிந்தை" என்பதிற்போல அஃறிணையொருமையினும், (கந்தபு. தெய்வ. ஙு௦ல்) "உனதுநண்டன்" என்பதிற்போல உயர்திணையொருமையினும், (கந்தபு. தெய்வ.ஙு௦ல்) "புரந்தரன்றனதுதூதர்" என்பதிற்போல உயர்திணைப்பன்மையினும் வழக்கத்தில் "எனதுகைகள்" என்பதிற்போல அஃறிணைப்பன்மையிலும் வரும். அவ்வொற்றுமைச் சம்பந்தப்பொருள் "சாத்தனது கருமை" என்பதிற்போலக் குணத்தற்கிழமையாயுஞ் "சாத்தனதுவரவு" என்பதிற்போலத் தொழிற்தற்கிழமையாயும், "சாத்தனதுகை" என்பதிற்போல உறுப்புத் தற்கிழமையாயும் "நெல்லதுகுப்பை" என்பதிற்போல ஒருபொருட் கூட்டத்தற் கிழமையாயும், "பறவைகளதுகூட்டம்" என்பதிற்போலப் பலபொருட்கூட்டத்தற்கிழமையாயும், "நெல்லினது பொரி" என்பதிற்போல ஒன்றுதிரிந்தொன்றுயதன்தற்கிழமையாயும், "இராகுவினதுதலை" "எனதுயிர்" என்பவற்றிற்போல உடையதும் உடைமைப்பொருளும் வேறாகாத தற்கிழமையாயும் விரியும். 6. "தோட்டம் அவனது" என்பதிற்போல அஃறிணையொன்றன்பாலில் வரும் ஒருகுறிப்புவினைமுற்றிறுதிநிலை. 7. அவனதைவாங்கினேன்" என்பதிற்போல அஃறிணையொன்றன்பாலில்வருங் குறிப்புவினையாலணையும் பெயரினிறுதிநிலை. [2, 4, 6, 7. அ- சாரியை. து-விகுதி.]

அதுக்ககரம்—துக்கமின்மையைச்செய்வது. (பௌட். விந்துபட. ௪௦இ.)[அதூ௱வகர. அ—எதிர்மறை. தூ௱வகரம்—துக்கஞ்செய்வது.]

அதுக்கம்—1. அடிப்பு. (உவின். உக) 2. அமுக்குதல். (உவின். உக.) 3. ஒதுக்குதல். (உவின். உக.) 4. துக்கமின்மை. (உவின். உக.)

அதுக்கல்—1. அடித்தல். (உ-ம்) "மூலைக்கருங் கண்சேர்ந்து கலங்கவதுக்கினுள்" (சிங். பதுமை. உகஎ.) 2. அமுக்குதல். (உவின். உக.) 3. கடித்தல்.

(உ-ம்.) "நகையாச்சினவியிதழதுக்கி" (கூர்மபு. தக்கன்வேள்-கூஉ.) 4. நருக்கல். (உ-ம்.) "வீரநோய்வெகுளிதோற்றிவிழுப்புறவதுக்கியிட்டுக்-காரகற்பொரிப்பர்" (சிந்.முத். களகூ.) 5. மெல்லுதல். (உ-ம்.) "வாயினிலதுக்கிப்பார்த்து. (பெரியபு. கண்ணப்ப. ககஅ.)

அதுங்கல்—1. அமுங்கல். (உவின். உக.) 2. ஒதுங்கல். (உவின். உக.)

அதுட்டி—துக்கம். (உ-ம்.) "அதுட்டியாதிநூறு குணத்தையு முடையதாய்" (சி. சி. உ: ருஅ. சிவாக்.) [அதுஷ்டி: துஷ்டி-மகிழ்ச்சி.]

அதுநா—இப்பொழுது. (உவில். உச.) [அதுநா.]

அதுநாதநம்—இப்பொழுதைக்குரியது. (உவில். உச.) [அதுநாதந: அதுநா-இப்பொழுது. தந-ஒருவிகுதி.]

அதுநாபாவம்—இப்பொழுதுள்ளது. (சி. சி. ஞா. அரும்.) [அதுநாபாவ: அதுநா-இப்பொழுது, பாவ-இருத்தல்.]

அதுல்லியம்—ஒப்பின்மை. (உவில். கஅ.) [அதுல்ய: அ-எதிர்மறை. துல்ய-ஒப்பு.]

அதுலம்—1. ஒப்பின்மை. (உ-ம்.) "அசலமாநாயமசங்க மதுல நிரந்தரம்" (கைவல். சந்தே. கஙஎ.) 2. ஓரெண். (க00, 0000000, 0000000, 0000000, 0000000) (உவின். உக.) (உவில். கஅ.) [அதுல: அ-எதிர்மறை. துல-ஒப்பு.]

அதுலன்—ஒப்பிலி. (உ-ம்.) "வான்மிசைய துலனதியராட்சியும்" (காஞ்சிபு. இரணிய. ரு.) 2. கடவுள். (செ.) [அ-எதிர்மறை. துல: ஒப்புடையவன்.]

அதுலிதம்—ஒப்பாக்கப்படாதது. (உவின். உக.) 2. நிறுக்கப்படாதது. [அ-எதிர்மறை. துலித-ஒப்பாக்கப்பட்டது, நிறுக்கப்பட்டது. உவில். கூஎ.]

அதூரம்—சமீபம். (உ-ம்.) "அதூரத்தோடும் புந்திவிழியால்" (ஞானவா. சிகித்து. ருரு.) [அ-எதிர்மறை. தூர-சமீபமல்லாதது.]

அதூவபந்தம்—(சமணம்.) விட்டுவிட்டுப் பந்திக்குஞ் சொரூபத்தது. (சி. சி. பர. நிகண். ரு.)

அதேந்து—பயப்படாதேயெனப் பொருள்படும் ஒரு திசைச்சொல். (உ-ம்.) "ஆதியே யடியே னதரித்தழைத்தாலதெந்துவென்றருள்புரியாயே" (திருவா. அருட்பத். க.) [தெலுங்கு.]

அதேகி—தேகமில்லாதவன். (உ-ம்.) "தேகியதேகி யெனினுமுத்தனையமில்லை" (ஞானவா. உற்பத். ரு0.) [அ-எதிர்மறை. தேஹிந்-தேகமுடையவன்.]

அதேயதாநம்—கொடுக்கத்தகாததைக் கொடுத்தல். (உவில். உ0.) [அதேயதாந.]

அதேயம்—கொடுக்கத் தகாதது. (உ-ம்.) "அதேயதானம்" [ஆப். கக. அதேய. அ-எதிர்மறை. தேய-கொடுக்கத்தக்கது.]

அதைத்தல்—1. தாக்கிமீளல். (மா.) (உ-ம்.) "அதைத்து விழுந்தபந்து" 2. வீங்குதல். (உ-ம்.) "அதைத்தமுகம்" (வழக். மா.)

அதைப்பு—1. தாக்கியெழுகை. (செ.) 2. வீக்கம். (செ.)

அதைரியம்—தைரியமின்மை. (உ-ம்.) "தைரியம்போயதைரியமாம்" (ஞானவா. வைராக். ச0ரு. உரை.) [உவில். உச. அதைர்ய: அ-எதிர்மறை. தைர்ய-தீரமுடைமை.]

அதோ—1. கவனிப்பித்தற்காகத் தூரத்திலேதோன்றும் ஒன்றனைச் சுட்டிக்காட்டிச்சொல்லும் ஒருசொல். (உவின். உக.) 2. கீழ். (உ-ம்.) "அதோகதி" (உவில். உஉ.) [அயஸ் என்பது

வேறுமொழியோடு புணரும்போது, அதோ எனத்திரிந்துவரும்.]

அதோகததோஷம்—சலரோகசம்பந்தமான ஐவகைத்தோஷங்களுளொன்று; அது: நாபித்தானத்தின்கீழ் வாயுவைச் சஞ்சரிக்கச்செய் தடிக்கடி மலம் நழுகல், வாயுலர்தல் என்னுங் குணங்களையுண்டாக்கும் ஒருநோய். (சீவரட். சுக.) [அதோகததோஷ: அதோகத-கீழிறங்கிய. தோஷ-குறை.]

அதோகதி—1. இழிவடைதல். (உவில். உச.) 2. இறங்கல். (உவில். உச.) 3. கீழேபோதல். (உவில். உச.) 4. நரகத்திற்குப்போதல். (வென். உரு0.) 5. நரகம். (உ-ம்.) "அற்றதுநம்வாழ்வெனவதோகதியின் வீழ்ந்து" (மச்சபு. கபாலமோ. சரு.) [அதோகதி: அயஸ்-கீழ். கதி-போதல்.]

அதோங்கம்—1. அபானவாயில். (உவில். உச.) 2. பாதமுதல் இடுப்புவரைக்குமான அங்கப்பகுப்பு. (தைல. தைலவ. ருச. உரை.) 3. பெண்குறி. (உவில். உச.) [அதோ0ங: அயஸ்-கீழ். அங்க-உறுப்பு.]

அதோசாதி—கீழ்ச்சாதி. (உ-ம்.) "அதோசாதியகத்தினருந்தினனும்" (சிவதரு. பரி. ரூக.) [அயஸ்-கீழ். ஜாதி-வருணம்.]

அதோட்சசன்—விட்டுணு. (உவில். உச.) [அதோக்ஷஜ: அயஸ்-கீழ். அக்ஷ-இந்திரியம். ஜ:-பிறந்தவன்.]

அதோநியாமிகாசத்தி—ஆன்மாக்களுக்குப் போகநுகர்ச்சியை விளைவிக்கும் ஆணவமலசத்தி. (உ-ம்.) "ஆவாரகசத்தியினாலான்மாவினதுசர்வஞ்ஞத்துவ சர்வகர்த்திருத்துவரூப சிவத்துவத்தை மறைத்திருந்து அதோநியாமிகாசத்தியினாலே போக்கியாசத்தியைப்பண்ணி" (சி. சி. உ: அ0. ஞானப்.) [அயஸ்-கீழ். நியாமிகா-நியமிப்பவள். சக்தி-வல்லமை.]

அதோபாகம்—அடிப்பக்கம். (உவில். உச.) கீழ்ப்பாகம். (உ-ம்.) "அறைந் தாஞ்சொன்முறையுறவே பிரமாண் டத்ததோபாகம்" (சிவதரு. கோபுர. ௬௦.) [அயொஹா஗. அயஸ் - கீழ். ஹாக-பக்கம்.]

அதோபுடம் — கீழ்ப்புறம். (சி. சி. உ: எ௬. மறை.) [அயொவுடீ. அயஸ்-கீழ். வுடீ.]

அதோபுவநம்—பூமியின்கீழுள்ளபுவநம். (உவில். உச.) [அயொஹுவநः அயஸ்-கீழ். ஹுவந-பூமி.]

அதோமாயை— அசுத்தமாயை. [சுத்தமாயையின் அதோபாகமாதலால்] (சி. சி. உ: அ௦. சிவாக்.) [அயொகாயா. அயஸ்—கீழ். காயா-]

அதோமார்க்கம்— கீழ்மார்க்கமாகிய சரியைமுதலியன. (சி. சி. உ. ௫௧. சிவாக்,) [அயொகார்ஹ. அயஸ்- கீழ். கார்ஹ-வழி.]

அதோமுகக்கட்டு — வயிற்றிலேனும் இடுப்பிலேனுஞ் சருமிறத்துடன் பருமனாக எழும்பி அதிக உபத்திரவத்தையும, வியர்வையுங் கொடுக்கும் ஒருவகைக் கட்டு. (சீவரட். உ௦௬.)

அதோமுகம் — 1. ஆற்றுநீர்க்கழிமுகம். (உவின். உக.) 2. கீழ்நோக்கியநட்சத்திரங்கள்; அவை, விசாகம், ஆயிலியம், கார்த்திகை, பூரத்திரயம், மகம், மூலம், பரணி என்பன. (உ-ம்) "மூற்றிலராவழல்பூரமூன் றுமகம்விற்பரணியதோமுகம்" (விதாந. பஞ்சாங்க. ௪அ.) 3. கீழ்நோக்கியமுகம். (உ-ம்.) ஐந்துதிருமுகத்தோடதோமுகமூந்தந்து திருமுகங்களாறுகி" (கந்தர்கலி. எ௬.) 4. தலைகீழாகல். (உ-ம்.) "அதோமுகமாகியாங்கோரும்பரின் கொம்பர்நாலு மொருவனே" (இரகு. சம்புக. ௪க.) 5. தலைகுனிந்துபார்த்தல், கீழ்நோக்குதல். (தொகையக; உவில். உச.) [அயொமுவ. அயஸ் —கீழ். முவ]

அதோமுகாத்நபித்தம்— இரத்தபித்தரோகத்தில் ஒருவகை; அது சலத்துவாரம், மலத்துவாரம், ரோமத்துவாரம், என்னும் மூவகைத்துவாரங்களினாலும் இரத்தம்போகச் செய்யும் ஒருவகைநோய். (சீவரட். ௫௨.) [அயொமுவ; ரக்த; பித்த.]

அதோமுகராசி—ஆதித்தியன்நின்ற இராசி. (உ-ம்.) "மேனோக்கியமுகமென்பர்வெய்யோன்விட்டவோரை நின்று-தானேக்குமோரை யதோமுகமாகும்" (விதாந. குணகுண. ௬௪.) [அயொமுவராஶி. அயொமுவ-கீழ்நோக்கிய ராஶி.]

அதோமுகவாதம்— மார்பிலும் வயிற்றிலுங் கீழ்வயிற்றிலுங் கவுட்டியிலுங் கீழேயிறங்கி வேதனைசெய்யும் ஒருவகை வாதநோய். (சீவரட். ௧எ௪) [அயொமுவவாத. அயொமுவ- கீழ்நோக்கிய; வாத-வாயு.]

அதோமுகா — ஆற்றுநீர்க்கழிமுகம். (உ-ம்.) "கயற்குலவதோமுகாநற்கழிக்கரை" (இரகு. நாட். ௬௬.)

அதோமுகி—1. கவிழ்தும்பைச்செடி. (மா.) 2. மூன்றும் மருதாதாரமேகஸ்தானத்தில்இருக்கும்யோகினியருள் ஒருத்தி. (வி-ணி. உ௪௧.) அயொமுவி. அயஸ்—கீழ். முவி-முகமுடையவள்—து.]

அதோமுகியான்—கன்றீன்றுகொண்டிருக்கும்பசு. (உ-ம்.) "நனியதோமுகியான்கோடி நயப்புறவளித்து" (மச்சபு. வசுவான். ௧௧.) [அயொமுவி-கீழ்நோக்கியமுகமுடையது. ஆன்-பசு.]

அதோரணர் — யானைப்பாகர். (உ-ம்.) "அதோரணரடக்குவான்செங்கைத்தலத்தடுத்தவள்வாயங்குசம்" (இரகு. திக்கு. ௭௧.) [இஃது ஆதோரணர் என்பதன்குறுக்கம். ஆயொரண.]

அதோலம்பம் — 1. ஓரிரேகைமற்றொரு ரேகையின் இடையினின் றெழுந்து தன்னிருபக்கத்திலும் வருங் கோணங்கள் சமகோணங்களாயுற நிற்பது. (உவில். உச.) 2. கீழேதூங்குதல். (மா.) [அயொலஂவ: அயஸ்—கீழ். லஂவ-தூங்குதல்]

அதோலோகம் — கீழுலகம். (உவில். உச.) [அயொலொக: அயஸ்- கீழ். லொக-உலகம்.]

அதோவதநம் — அதோமுகம். (உவில் உச.) [அயொவஜந அயஸ்—கீழ். வஜந-முகம்.]

அதோவாயு — அபாநவாயு. (உவில். உச.) [அயொவாயு. அயஸ்-கீழ். வாயு-காற்று.]

அதோளி — அவ்விடம். (தொல். எழு. தொகை. ௧எ. உரை.)

அந்—உயிரெழுத்தை முதலாகவுடைய வடமொழிப்பெயர்ச்சொற்கு முன்வரும் ஓரவ்வியயம். அஃது: "அநங்கன்" எனபதிறபோல ஒப்புமையுள்ளிட்டஅன்மைப்பொருளிலும் "அநாரியன்" என்பதிற்போல அந்நியங்கருதும் அன்மைப் பொருளிலும் "அநாகுதி" என்பதிற் போலத் தகுதியின்மையுள்ளிட்டமறுதலைப் பொருளிலும் "அநாகாரம்" என்பதிற்போல இன்மைப்பொருளிலும் "அநுதரை" என்பதிற்போலஅற்பங்கருதிய இன்மைப் பொருளிலும் "அநிட்டம்" என்பதிற்போல விரோதங்கருதிய மறுதலைப் பொருளிலும் வரும். [அநாரியன்-ஆரியனல்லாதான்—சூத்திரன். அநிட்டம்—வெறுப்பு. அநாகாரம்— உணவின்மை. அநாகுதி -தகுதியற்றயாகம். அநுதரை—சிற்றிடையாள்.]

அந்த — சேய்மைச்சுட்டுப்பொருளிற் பெயர்ச்சொற்கு முன்னாக வரும் ஒரிடைச்சொல். (உ-ம்.) "அந்தவேலை" (பாரத. பதினு. ௨௧௨.)

அந்தக்கரணசதுட்டயம்—மநம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் நான்கு அந்தக்கரணம். (த. நி. போ. ௧௧௬.) [அந்தஃகரணசதுஷ்டய: அந்த: கரண-உட்கருவி. சதுஷ்டயம்-நான்கன் கூட்டம்.]

அந்தக்கரணசாபேட்சம் — பாகியேந்திரியங்களினாலே கண்டபதார்த்தங்களைச் சிற்சத்தியானது அந்தக்கரணங்களோடுகூடிநின்று சிந்திப்பது. (சி. சி. அளவை. க. சிவாக்.) [அந்த:கரணஸாபெக்ஷ. அந்த: கரண-உட்கருவி. ஸாபெக்ஷ-அபேட்சையோடு கூடியது.]

அந்தக்கரணசைதந்நியர் — அந்தக்கரணங்களே ஆன்மாவென்று சொல்லும் மதஸ்தர். (த. நி. போ. சஙு.) [அந்த:கரண-உட்கருவி. சைதந்ய-அறிவு.]

அந்தக்கரணபுவநம் — அந்தக்கரணதத்துவங்களிலே யிருக்கும்புவநம். அவை: மநோதத்துவத்தில் தூலேசுரமென்னும்புவநமொன்றும் அகங்காரதத்துவத்தில் தலேசுரம் என்னும் புவநமொன்றும் புத்திதத்துவத்தில் பைசாச, இராக்ஷச, யாக்ஷ, காந்தர்வ, ஐந்திர, சௌமிய, பிராசேச, பிரம்ம ஆகிய புவநங்களெட்டுமாம். (சித்தா. சாரா. கிரியா. உக-ஞ் சுலோகவுரை.) [அந்த:கரண; புவநம்-உலகம். த. நி. போ. சஙு.]

அந்தக்கரணம் — ஒருவனுடைய அகத்தினின்று தொழில்செய்யும் உணர்வுக்கருவி; அது: மநம், புத்தி, சித்தம், அகங்காரமென நான்குவகையது. உயிரான் அதிட்டிக்கப்பட்டுஐம்பொறிகளறிந்தவிடயங்களுளொன்றனை இஃதியாதாகற்பாற்றெனச் சித்தஞ் சிந்தித்தறியும். மநம் அதனை யிஃதின்னதாகற்பாற்றெனவும் அஃதாமோ அன்றோ எனவும் இவ்வாறு சங்கற்பவிகற்பஞ்செய்தறியும். அகங்காரமதனை யின்னதென்த்துணிவேன் யானென்றெருப்பட்டெழுந்தறியும். புத்தியின்னதிதுவென நிச்சயித்தறியும். (சிவஞா. போ. ச-ஞ் சூ. க. அதிகரணம்.) [அந்த: கரண. அந்த; -உள். கரண-செயல், கருவி.]

அந்தக்கரணான்மவாதி — அந்தக்கரணங்களுளொன்றே யான்மா என்று சாதிக்கும் மதஸ்தன். (உ-ம்.) "அவையே (அந்தக்கரணம்தனித்தனியான்மாவென்றல்அமைவுடைத்தெனஅந்தக்கரணான்மவாதிகள் கூறுங் கடாவை யாசங்கித்து" (சிவஞா. போ. ச. கருத்துரை. சிவஞா.) [அந்த: கரண—அந்தர்க்கரணம். ஆத்ம-ஆன்மா. வாதிந்-வாதிப்போன்.]

அந்தக்காரி — அழகுள்ளவள். (செ.) [அந்த—அழகு.]

அந்தக்கிருத்தசாங்கம் — அங்காகமத்துளொருபகுப்பு. (சில. நாடு. சஅக. உரை. குறிப்பு.)

அந்தக்கேடு — அழகீநம். (உவின். உச) [அந்த—அழகு. கேடு-கெட்டது.]

அந்தக்கேணி — உள்ளேமறைந்தநீரையுடைய கிணறு; இது, சுரப்புநீர்க்கேணி யெனப்படும். (மணிமேகலை. கஎஉ.) [அந்த: - உள். கேணி—நீர்நிலை.]

அந்தககசயன் — ஞமனை வென்றோன். (சி.) சிவன். (சி.) [அந்தகஜய: அந்தக-ஞமன். ஜயன்-வென்றவன்.]

அந்தககசந்நிபாதசுரம் — ஒருவகைச்சந்நிபாதசுரம்; அது: மறதி, அடிக்கடி தலைநடுக்கம் முதலியகுணங்களையுண்டாக்கும். (சீவரட். உஅ.) [அந்தக—முடிவு. ஸந்நிபாத—விழுதல். ஜ்வர—காய்ச்சல்.]

அந்தககம் — 1. ஆமணக்சமரம். (கா. வைத்.) 2. ஒருசந்நிநோய். (மா-)

அந்தகர் — அறிவிலிகள். (இராசஸவைத்.) [அந்யுக.] 2. யமர். (உ-ம்.) "இரண்டந்தகரங்கிருந்தன்னபார்வை" (மறைசை. ருக.) [அந்தக.] 3. குருடர். (உ-ம்.) "அந்தகர்செவிடராதலர்" (நல். பார. வேள்வி. ருச.) [அந்யுக.]

அந்தகரணம் — குருடாக்கல். (ஆப். சஉ.) [அந்4தகரண:அந்4த-குருடு. கரணம்—செய்தல்.]

அந்தகரன் — அழிப்போன். (உவில். கூஅ.) [அந்தகர:அந்த-அழிவு.கர-செய்கிறவன்.]

அந்தகரிபு — சிவன். (உவில். சo.) [அந்தகரிபு: அந்தக:-ஓரசுரன். ரிபு—பகைவன்.]

அந்தகன் — 1. அந்தம்வரையுஞ்செல்லுகிறவன், நன்றாகப்பயின்றவன். (ஆப். கூஅ.) [அந்தக: அந்த—முடிவு. க:-செல்லுகிறவன்.] 2. அழிப்போன். (சப்த.) [அந்தக.] 3. ஞமன். (உ-ம்.) "இருளுடலந்தகன்" (கல்லா. உகூ.) [அந்தக: அந்த—முடிவு. க-விகுதி] 4. ஓர் ஞமதூதன். (உ-ம்.) "நெரித்தபுருவத்தினொடந்தகனுநீட" (சிவதரு. சுவர்க்கநரக. அஎ.) [அந்தக.] 5. ஓரசுரன். (உ-ம். "அவுணரிற்கள்வனனவந்தகற்காய்ந்து" (திருவிளை. அருச். கக.) [அந்யுக] 6. குருடன். (உவில். சo.) [அந்யுக: அந்ய—குருடு. க:—விகுதி.] 7. சநி. (உவின். உகூ) 8. சவக்காரம். (கா. வைத்.) 9. புல்லுருவி. (கா. வைத்.) 10. மரித்தவன். (உவில். கூஅ.) [அந்தக: அந்த—முடிவு. க:—சென்றவன்.]

அந்தகாசுகிருத்து — சிவன். (உவில். சo.) [அ௦தகாஸுஹ்ருத். அ௦தக: ஓரசுரன். அஸுஹ்ருத்-பகைவன்.]

அந்தகாந்தகன் — சிவன். (உ-ம்.) "அந்தகாந்தகநம" (பாகவத. கைலா. கஎ.) [அந்தக— ஞமன். அந்தகன்-முடிவுசெய்தோன்.]

அந்தகாரம் — 1. அஞ்ஞாநம். (உ-ம்.) "இருவினைமும்மலம் போர்த்தவந்தகாரப்படலவ்ருணீத்து" (மச்சபு. கடவு. கசு.) 2. இருள். (உ-ம்.) "பகவருமந்தகாரம் படர்தரவிருந்தகாலை" (சூத. சிவ. கஉ. உ.) [அந்யகார. அந்ய—குருடு. கார—செய்வது.] 3. நரகம். (உவின். உகூ.)

அந்தகாரி — 1. ஞமன்பகைவன். (சி.) 2. சிவன். (உ-ம்.) "தக்கவெக்கிய விநாசகனந்தகாரி" (சூத. எக்கி. பூ. கூகூ: கூ.) [அந்தகாரி. அந்தக.—ஞமன். அரி—பகைவன்.]

அந்தகாலம் — மரணகாலம். (நாலடி

ர. முத. ருள.) [அந்த—முடிவு. காலம்.]

அந்தகூபம்—1. ஒருநரகம். (ஆப். ௬௨.) 2. செடிகள் வளர்ந்துவாய்மறைந்திருக்குங்கிணறு. (ஆப். ௬௨.) [அ௦ய௧௩வ. அ௦ய—குருடு. க௩வ—கிணறு.]

அந்தகோ— ஐயோஎனப் பொருள்படும் ஓர் இரக்கச்சொல். (உ-ம்.) "அந்தகோவிதுவருவதே யெனக்கென வயர்ந்தான்" (வேதார. பிரமாசா. ௨௨.)

அந்தகோரம்—நெல்லிமரம். (கா. வைத்.)

அந்தகோலம்—நெல்லிமரம். (கா. வைத்.)

அந்தகோலாங்கூலநியாயம்—மீமாஞ்சையிற் சொல்லப்பட்ட நியாயங்களுளொன்று; அது ஒருகுருடன் பிறர் வார்த்தையை நம்பி ஊர்க்குப் போகலாமென்று ஓரெருத்தின் வாலை விடாமற் பிடித்துப்போய் நட்டம்அடைந்ததுபோலப் பிறர் வார்த்தையை நம்பி நட்டமடைதலைக்காட்டுவது. (விசாரசா. ௯௯௯.) [அ௦ய௧-குருடன். லாங்கூல-வால். ந்யாயம்]

அந்தகோளம்—நெல்லிமரம். (மா)

அந்தசடகநியாயம்— மீமாஞ்சையிற் சொல்லப்பட்ட நியாயங்களுள் ஒன்று; அது. ஓர் அவி[illegible]வகியாற் சொல்லப்படுவதொன்று ஒருகுருடன் ஊர்க்குருவியைப் பிடித்துக்கொண்டது போலப் பலிக்கவருவது. இது, கருத்திலுலே குணக்ஷரநியாயத்தையொத்தது. (ஆப். ௭௯.)[அ௦யசடகந்யாய. அ௦ய - குருடன். சடக - ஊர்க்குருவி. ந்யாய.]

அந்தண்—அந்தணர்குலம். (உ-ம்.) "அந்தண்மாமுதுகுரவரென் றுன்னினன்" (கந்தபு. தவங்காண். ௬௨.)

அந்தணத்துவம் — அந்தணனுந்தன்மை. (உ-ம்.) "ஒருவனேற்றுலவாவந்தணத்துவமடைந்தனன்" (உபதேச. சிவவி. ௯௯௭.) [அந்தணன்—பிராமணன். த்வ—தன்மை.]

அந்தணநாபி—விஷத்தைப்போக்கும் ஒரு மருந்து. (கா. வைத்.)

அந்தணமை—அந்தணன்றன்மை. (உ-ம்) "குளித்துமூன்றனலையோம்புங்குறிகொளந்தணமைதன்னை" (நாலாயிர. திருமாலை. ௨௫.) [இது கன்னியப்பமுதலியார் பிரதியில் அந்தண்மையென்றிருக்கின்றது.]

அந்தணர்—1. பார்ப்பார். (உ-ம்.) "ஆறறியந்தணர்க்கருமறைபலபகர்ந்து" (கலித்தொகை. க.) [இங்கே நச்சினார்க்கினியர் "அந்தத்தைஅணவுவார் அந்தணர்; என்றது, வேதாந்தத்தையே பொருளென்று மேற்கொண்டு பார்ப்பா ரென்றவாறு" என்றார்.] 2. முனிவர். (உ-ம்.) "அந்தணரென்போரறவோர்" (வள். ௩௦.) [அம்—அழகிய. தணர்-தண்ணளியுடையவர்.]

அந்தணர்வாக்கு—வேதம். (மா.) [அந்தணர் —பார்ப்பார். வாக்கு-சொல்.]

அந்தணரறுதொழில்—பிராமணருக்குரிய அறுவகைத் தொழில்கள்; அவை: ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்பன. (மா.)

அந்தணன்—1. அபிசித்துமுகூர்த்தம்; [இது, பகலிலே நிகழும் எட்டாவதான முகூர்த்தமென்றும், நூறுயிரங்குற்றத்தைப்போக்குமென்றுஞ் சொல்லபபடும்.] (உ-ம்.) "அரன்பாம்பணுட்மகம் புட்புனலாடியந்தணன்றேர்" (விதாந. குணகு. ௭௨, ௭௩.) 2. அருகதேவன். (உவின். ௨௩.) 3. கடவுள். (உவின். ௨௩.) 4. சநி. (உவின். ௨௩.) 5. சிவன். (உ-ம்.) "அந்தணனுதியென்றேயேவரையிசைத்தவம்மாவெல்லையின்மறைகளெல்லாம்" (கந்தபு. ததீசி. ௨௯.) 6. பார்ப்பான். (உ-ம்) "அந்தணனேவையெல்லாம்" (பாரத. பதினே. ௧௪௦.) 7. பிரமன். (உ-ம்.) "அறத்தைநல்கலினந்தணன்போல்வன" கந்தபு. சிங்க. ௨அ௪.) 8. வியாழனென்னுங்கிரகம். (உ-ம்.) "மற்றவன்மேலுயரந்தணனுலவும்" (கூர்மபு. மண்டல. ௪௯.) [அம்—அழகு. தண்ண்—தண்ணளியுடையவன்.]

அந்தணாளர் — 1. அழகியதண்ணளியுடைய்வர். (உ-ம்.) "செய்யதீவண்ணரந்தணாளர்கண்டீர்" (தேவார. அன்னியூர். ௯. திருநாவு.) 2. பார்ப்பார். (உம்.) "அருந்தவமுனிவருமந்தணாளரும்" (இராமா. திருவவ. ௪.) 3. முனிவர். (உவின். ௨௪.) [அந்தண் - அழகியதண்ணளி. ஆளர்.ஆள்பவர்.]

அந்தணாளன் — 1. அழகியதண்ணளியுடையவன் ("அந்தணாளர்பார்") 2. பிராமணன். (உ-ம்.) அந்தணாளனுமதிசயித்தரும் பெறன்மகட்குச்-சிந்தையார்வமோ டிறைவிதன்மனுவினைச்செப்ப" (திருவிளை. விருத்தகுமார. ரு.) 3. முனிவன். (உ-ம்.) "அந்தணாளனுன்னடைக்கலம்புகுத" (தேவார. திருப்புன். க. சுர்.)

அந்தணி—1, உமை. [அழகியதண்ணளியுடையவளென்றபடி] (உ-ம்.) "உலகடையப்பெற்றவுந்தியந்தணி" (திருப்பு. ௪௨௦.) 2. பிராமணப்பெண். (பிராயச்சித்தசமுச்.)

அந்தத்தம்—அந்தத்தாக்கரம். (உ-ம்.) "யகாரமே ரகாரமிலங்கிய லகாரமே வகாரமென்னு மிந்நான்கந்தத்தமென்றுரைப்பர்" (மச்சபு. [அந்தர்-இடை. ஸ்த-நிற்றல்.]

அந்தத்தாக்கரம்—ய, ர, ல, வ என்னும் இடையெழுத்துக்கள். (பி. வி. ரு. ஆப். ௬௦.) [அந்த:ஸ்தாக்ஷர. அந்தர்-இடை. ஸ்தா-நிற்றல். அக்ஷர- எழுத்து.]

அந்தத்தாபம் — உள்ளே தபிக்கை. (பௌட். பசு.௧௬௯.) [அந்தஸ்தாவ. அந்தர்-உள். தாவு-தபித்தல்.]

அந்தஸ்து — 1. ஒழுங்கு. (உவின்.௨௪) 2. நிலை. (உ-ம்.) "உன்னந்தஸ்துக் கிடையோக்கியமல்ல" (உவின்.௨௪.) [இஃது இந்துஸ்தானி.]

அந்ததமசம் — மிக்கஇருள். (ஆப். ௪௨) [அந்யதமஸ: அந்ய-குருடு. தமஸ-இருள்.]

அந்ததரம் — சித்தாந்தம். (உ-ம்.) "சிவமென்னுமந்ததர சிந்தை" (சிவஞா. போ. ௧௨. அ. சிவஞானமுநிவருரைப்படி.) [அந்த-வேதாந்தம். தர-உயர்ந்தது.]

அந்ததரன்-(சர்வான்மாக்களுக்கும்) பிராணனுயுள்ளவன். (உ-ம்.) "சிவமென்னுமந்ததரன்" (சிவஞா.போ. ௧௨: அ. பாண்டிப்பெருமாளுரைப்படி.) [அந்தர்-உள்ளே. யர-தரிக்கப்பட்டவன்.]

அந்ததாமிச்சிரம்—1. ஒருநரகம். (உவில். ௪0.) 2. தமோசிருட்டியாகிய ஐவகை யஞ்ஞானத்துள் ஐந்தாவது; அது, திவ்வியாதிவ்விய பேதத்துலே சத்தாதிகள்பத்தும்அணிமாதிசித்திகள் எட்டும்பெற்று அதிலேமிகப்பற்றுவைத்தல். (பௌட். பும். ௧௧அ; சி. சி. ௨: ௫அ. சிவாக்.) 3. மிகுந்தஇருள். (ஆப். ௪௨.) [அந்யதாமிஸ்ர:அந்ய-குருடு. தாமிஸ்ர-இருள்.]

அந்ததாமிசிரம்-அந்ததாமிச்சிரம். (உ-ம்.) "அந்ததாமிசிரமெனவிலைநாளும்" (சூத. பிரமசிரு. ௯.) [அந்யதாமிஸ்ர.]

அந்தந்த—அந்த அந்த. (உவின். ௨௯.) [இடைநின்ற அகரங்கெட்டது.]

அந்தந்தலை — முடிவுமுதலும். (சி.)

அந்தப்புரம்—1. பெண்களுடைய அறை. (உவில். ௯அ.) 2. மன்னன்தேவியில்லம். (உ-ம்.) "அடைதருந்தனியேயந்தப்புரத்தினில்" (சி. சி. ௯: ௯௨.) [அந்த:புர: அந்த:-உள். புர-வீடு.]

அந்தப்போதிகை—பின்னங்காலிற்சங்கிலி. (உ-ம்.) "அந்தப்போதிகைபரிந்தழன்றதே" (சிந்தா. ௧௬௧. ௨௭௫.)

அந்தபரம்பராநியாயம்— மீமாஞ்சையிற் சொல்லப்பட்ட நியாயங்களுளொன்று; அது: குருடனைக் குருடன் பின் தொடர்வதுபோலத் தான் செய்வதின்னதென ஆலோசியாமல் ஒருவன மற்றொருவன் செய்வது போற் செய்தல். (ஆப். ௪௭௯.) [அந்யபரம்பரா ந்யாய; அந்ய - குருடன். பரம்பரா-தொடர்ச்சி. ந்யாய:- நியாயம.]

அந்தம் — 1. அந்தத்தைச்செய்யுங் கடவுள். [இஃது உபசாரவழக்கு.] (உ-ம்.) "அந்தமாதியென்மனூர் புலவர்" (சிவஞா. போ. ௧. சூ. சிவஞா.) 2. அவயவம். (உவில். ௯அ.) 3. அழகு. (உ-ம்.) "வரகந்தமாதநவாழ்வோருணற்கு" (கம்பரந்.௭0) 4. அளவிடல் (உ-ம்) "அந்தமில்லதோராயிழைமாரொடு" (கந்தபு. பாநுகோ. ௧௨௪.) 5. இருள். (உவில். ௪0.) 6. இறுதி. (உ-ம்.) "அந்தமுமாதியும்" (தாயு.ஆசையெனு. ௧0.) 7. எல்லை. (உவின். ௨௪.) 8. கஸ்தூரி. (கா. வைத்.) 9. குருடு. (உவில். ௪0.) 10. சமீபம். (உவில். ௯அ.) 11. சுபாவம், தன்மை. (உவில். ௯அ.) 12. நாசம். (உ-ம்.) "சதமகன்வாழ்வினுக்-கந்தமாகியதோ" (கந்தபு. சுக்கிர. ௧௨.) 13. நிச்சயம். (உவில். ௯அ.) 14. நீர். (உவில். ௪0.) 15. மரணம். (உ-ம்.) "நெஞ்சமே யுடலந்தமாவியை விடாநிற்க்" (வைராக்கியசத. ௧௫.) 16. வேதாந்தம், (சிவஞா. போ. ௧௨: அ. சிவஞா.) [1, 2, 3, 4, 6, 7, 10, 11, 12, 13. 15, 16; அந்த; 5, 9, 14. அந்ய.]

அந்தமந்தம்— சமியாத்தன்மை. (சி.) [அந்த-தன்மை, மந்த-தாமசம்.]

அந்தமன்—திருதராட்டிரன். (பாரதவத. அத்திநா. ௯.) [அந்ய-குருடு. மன்-அரசன்.]

அந்தமுள் — குறிஞ்சா. [இது வடநாட்டார்வழக்கு.] (வை. தி. ௭௭.)

அந்தர் — 1. அறிவில்லார், கடையாயார். (உ-ம்.) "அந்தர்கடம்மினும்" (கல்லா. ௯.) 2. உள். (ஆப். ௯௯.) 3. கீழ். (ஆப். ௯௯.) [அந்த:] 4. குருடர். (உ-ம்.) "அந்தரினலமந்தஞ்சி" (இராமா. யுத். வருண. ௬௬. "அந்தன்" பார்.) 5. நடு. (ஆப். ௯௯.) [அந்தர்.]

அந்தர்க்கதம் — 1. இடையில் வருதல். (மா.) 2. உட்போனது. (உ-ம்.) "மாயையின் அந்தர்க்கதமான ஈசுரன்" (த. நி. போ. ௧௪௫.) 3. உள்ளானது. (உ-ம்.) "அந்தர்க்கதமானசத்தத்தை" (சி. சி. ௧: ௨௨. சிவாக்.) 4. மறைந்திருக்கை. (உவில். ௯௯.) [அந்தர்கத: அந்தர்-உள். கதம்-அடைந்தது.]

அந்தர்க்கதவுவமை—உள்ளுறையுவமை. (ஆப்.௪௧.) [அந்தர்கதம்;உவமா.]

அந்தர்க்கரணம்—அந்தக்கரணம். (ஆப். ௯௯) [அந்தர்-உள். கரண-கருவி]

அந்தர்க்கிருகம் — உள்வீடு. (உவில். ௯௯.) [அந்தர்க்ருஹ: அந்தர்-உள். க்ருஹ-வீடு.]

அந்தர்ச்சடாம் — அந்நாசயம். (உவில். ௯௯.) [அந்தர்ஜடர: அந்தர்-உள். ஜடர-வயிறு.]

அந்தர்ச்சரீரம் — 1. ஆன்மா. (ஆப். ௪0.) 2. உடம்பினுள்ளிருப்பது. (ஆப். ௪0) [அந்தர்ஶரீர: அந்தர்-உள். ஶரீர-உடம்பு.]

அந்தர்த்தகநம்— 1. உள்ளால். (ஆப். ககூ.) 2. மதுநீர்வடித்தல். (உவில். ககூ.) [அந்தர்ஊஹந: அந்தர்—உள். ஊஹந-அகல்.]

அந்தர்த்தசை— சோதிடத்திற்சொல்லப்பட்ட மகாதசையில் இடைவருங்கிரகங்களுடைய அதிகாரத்தோடு பொருந்தியகாலம். (வாச.) [அந்தர்தசா: அந்தர்-இடை. தசா—நிலை.]

அந்தர்த்தாநம்—1. உள்ளிடம். [அந்தர்—உள். ஸ்தாந—இடம்.]2. மறைவு. (உ-ம்.) "அந்தர்த்தாநமாநேர்ந்து போவார்" (மச்சபு. அசுர. ககூ.) [உவில். ககூ. அந்தர்தாநம்.]

அந்தர்த்துவாரம்—உள்வாயில். (உவில். ககூ.) [அந்தர்த்வார: அந்தர்—உள். த்வார—வாயில்.]

அந்தர்நியமநம்—உள்ளேயடக்குதல். (உ-ம்.) "சிவன் அந்தர்ப்பகிர்வியாப்தனாகிநின்றுசுவதந்திரகர்த்தாவாகித் தேகேந்திரியாதிகளுக்கு ஆன்மாப்போல ஆன்மாக்களை யந்தர்நியமநத்தையும் பகிர்ப்பிரவர்த்தநத்தையும்பண்ணுவரென்றும் ஆன்மாக்கள் ஈசுவர பரதந்திரரென்றுஞ் சொல்லியது" (சி. சி. ரு: கூ. சிவாக்.) [நியமநம்—அடக்குதல்.]

அந்தர்ப்பகிர்வியாப்தன்—உள்ளும் புறமுஞ் செறிந்திருப்போன். (உ-ம்.) "அந்தர்நியமநம்பார்" (சி. சி. ரு: கூ. சிவாக்.) அந்தர்பஹிர்வ்யாப்த: அந்தர்—உள். பஹிர்—வெளி. வ்யாப்த - நிறைந்தவன்.]

அந்தர்ப்பவம்—1. உள்ளாதல். (உவில். ககூ.) 2. உள்ளேபிறத்தல். (உவில். ககூ.)
[அந்தர்பவ: அந்தர்-உள். பவ-பிறத்தல்.]

அந்தர்ப்பவித்தல்—1. உள்ளாக்குதல். (உ-ம்.) "மேற்சொல்லிய பிரமாணங்களை இம்மூன்று பிரமாணங்களுள்ளேஅந்தர்ப்பவித்து" (சி. சி. அளவை. க. சிவாக்.) 2. உள்ளாதல். (உ-ம்.) "அந்த எல்லாப்பிரமாணங்களும்-மூன்றுபிரமாணங்களில் அந்தர்ப்பவிக்கும்" (சி. சி. அளவை. க. ஞானப்.) [அந்தர்பவ.]

அந்தர்ப்பாவநை— உள்ளத்திற்பாவித்தல். (உவில். ககூ.) [அந்தர்பாவநா—அந்தர்-உள். பாவநா - தியானம்.]

அந்தர்ப்பாவிதகருமம் — அகநிலைச்செயப்படுபொருள். (உ-ம்.) "வந்தான்" இங்கேவருதலைச்செய்தானெனப் பொருள்பட்டு செயப்படுவதாகியவருதல் அகநிலையாதலறிக. [அந்தர்—உள். பாவித—அடைந்த. கர்மந்-செயப்படுபொருள்.] (பி. வி. கஉ. உரை.)

அந்தர்ப்பாவிதணிசசு— பிறவினைவிகுதிகள் தொக்குநிற்பது. (பி. வி. கரு. உரை.) [அந்தர்பாவிதணிச்:அந்தர்—உள். பாவித—அடைதல். ணிச் -ஒரு பிறவினைவிகுதி.]

அந்தர்ப்பிரகிருதி—1. அரசனுடைய மந்திரிமுதலிய அங்கங்கள். (ஆப். சுO.) 2. ஆத்துமா. (ஆப். சுO.) 3. மனிதருடைய உள்ளியற்கை. (ஆப். சுO.)
[அந்தர்ப்ரக்ருதி: அந்தர்—உள். ப்ரக்ருதி-இராச்சியாங்கம், இயற்கை.]

அந்தர்ப்பிரஞ்ஞன்—தன்னையறிகிறவன். (உவில். ககூஅ.) [அந்தர்—உள். ப்ரஞ்ஞ-அறிகிறவன்.]

அந்தர்ப்புரம்—அந்தப்புரம். [அந்தர்-உள். புர-வீடு.]

அந்தர்ப்பூதம்—உள்ளிருப்பது. (உ-ம்.) "அந்தமுப்பத்தாறுதத்துவங்களும்,இந்தச்சரீரத்தில்அந்தர்ப்பூதமாயிருக்கிற படியினால்" (வாசுதே. உ௦உ.) [உவில். ககூ. அந்தர்பூத: அந்தர்-உள். பூத—அடைந்தது.]

அந்தர்மலக்கிருமி—தேகத்திலே கபத்திலும் உதிரத்திலும் பிறக்கின்ற கிருமிகள்; மதுராந்நம், வெல்லம், பால், தயிர், மா, மழைத்தண்ணீர் இவ்வஸ்துக்களைத்தின்பதினாற் பிறக்கின்ற கிருமிகள். (ஜீவரட். கருங.) [அந்தர்-உள். மலம்-அழுக்கு. க்ருமி-புழு.]

அந்தர்முகம் — உள்நோக்கிய முகம். (உ-ம்.) "அந்தர்முகத்திலேதனதுசைதந்நியத்தையடைய" (ஞானவா. முமுட்சு. உ. உரை.) [அந்தர்-உள். முக]

அந்தர்முகி—அடங்கிய மநத்தன், உள்ளே நோக்கிய முக முடையவன். (உ-ம்.) "இச்சையானது அந்தர்முகியையும் பகிர்முகியாக்குமென்பார்" (ஞானவா. வைராக். சுகூ. உரை.)[அந்தர்முகி: அந்தர்-உள். முகி-முகமுடையவன்.]

அந்தர்முகியோநி — வாயுஅதிகரித்து அந்தர்முகமாகஎழும்பிப்பெண்களுக்கு யோநித்தாநத்திலே உபத்திரவஞ்செய்யும் ஒருவகை ரோகம். (ஜீவரட். ககூஉ.) [அந்தர்முகி-உள்ளேநோக்கியமுகமுடையது. யோநி--பிறப்பிடம்.]

அந்தர்யசநம்—அந்தரியாகம். (சி. சி. கூ: கக. சிவாக்.) [அந்தர் யஜந: அந்தர்-உள். யஜந-யாகம்.]

அந்தர்யாகம்— கண்களைமூடியல்லது மூக்குநுனியைப்பார்த்து ஞாநமூர்த்தியையோ டிருந்துகொண்டு தன்னுள்ளே குண்டமுதலிய எல்லா உபகரணங்களையுந் தேடியதாகவும் புறத்திற் செய்யுமாறே யுள்ளே அக்கிநிகாரியஞ்செய்யப்படுகிறதாகவும் பாவித்துச்செய்யும்வழிபாடு. (சிந்தா. கிரியா. கஅ.)

அந்தர்வஞ்சிகன்—அரசனுடைய அந்தப்புரத்திலே காவலாளனாக நியமிக்கப்பட்டவன். (உவில். ககூ.) [அந்தர்வம்ஸிக. அந்தர்-உள். வம்ஸிக—குடும்பமுடையவன்.]

அந்தர்வேதி—1. இரண்டியாறுகளுக்கு நடுவேயுள்ள சமபூமி. (உ-ம்.) "அங்கவற்றிடைமே யேகம்படமுதலாமாலயத்தந்தருவேதி" (கந்தபு. நகர.

எகூ.) 2. பிரயாகைதொடங்கிக் கங்கைக்கும் யமுனைக்கும் நடுவேயுள்ளதேசம். (உ-ம்.) "அவர்களையந்தர் வேதி-சென்றுடன்காணர்வாயென்று திருமுகி யருளிச் செய்தான்" (கோயிற்பு. இரணிய. ச0எ.) [வாச. அந்தர்வெதி. அந்தர்—நடு. வெதி—சமபூமி.]

அந்தரகணம்—பாட்டியலுட்சொல்லப்பட்ட எண்வகைக்கணங்களுளொன்று; அது: நிரை நிரை நேர் என்னு மூவசையாலாகிய ஒருசீர். இஃதொரு நூலின் முதற்செய்யுளின் முதற்சீராக வரலாகாதென்றும், வருமாயிற் பாட்டுடைத்தலைவனுடைய வாழ்நாளை யகற்றுமென்றுங் கூறுவர். (உ-ம்.) "அந்தரகணமே வாணாளகற்றும்" (இலக்கணவி. பொருள். பாட்டி. சம.) [அந்தர—ஆகாயம். கண—சீர்.]

அந்தரகாமி— ஆகாயமார்க்கமாகச்செல்லுங்குதிரை. (மா.) [அந்தர—ஆகாயம். காமின்—செல்வது.]

அந்தரகுமரன் — தேவருளொருசாதியான். (சிங்.)

அந்தரங்ககிருத்தியம்—தன்னாலே நேரேசெய்யப்படுங் கிருத்தியம். (உ-ம்.) "அந்தரங்ககிருத்தியம் வெகிரங்ககிருத்தியம் இரண்டுமுறைமையிற் சாட்சாத்தன்னாலும்பிறரைச்செலுத்தியவர்தானுகி மறைவாலும் நடக்குமென்று கூறுகின்றார்" (சி. சி. க: ருச. கருத்துரை; ஞானப்.) [அந்தரங்க—தன்னுடைய. க்ருத்யம்—செயல்.]

அந்தரங்கத்தியாநி—ஆமை. (கா. வைத்.)

அந்தரங்கம்—1. அதிகம்நேசிக்கப்பட்டது, அருமையானது. (ஆப். ககூ.) 2. ஆலோசனை. (மா.) 3. இரகசியம். (உ-ம்.) "அந்தரங்கத்திற் பொருத்துறு புருட்னேடு மாசனத்திற்பொருந்துதல்" (நல். பார. உமாம. கூ0எ) 4. உள்ளம். (ஆப். ககூ.) 5. உள்ளானது. (உவில். கூஅ.) 6. தன்னுடையது. (உ-ம்.) "அந்தரங்ககிருத்தியம்" [அந்தரங்க: அந்தர்—உள். அங்க-அவயவம்; அந்தரம்-உள். க-போவது.]

அந்தரங்கன்— 1. அதிகம் நேசிக்கப்பட்டவன், அருமையானவன். (ஆப். ககூ.) 2. இரகசியங்கேட்டுவைத்திருப்போன், விஷயங்களில் நம்பத்தக்கவன். (ஆப். ககூ.) 3. உற்றநண்பன். (ஆப். ககூ.) [அந்தரங்க: அந்தர்-உள். அங்க- உறுப்பு]

அந்தரச்சிந்து—கற்பாஷாணம்; இது: முப்பத்திரண்டுபாஷாணங்களுள் ஒன்று. (கா. வைத்.)

அந்தரசரிதர்—ஆகாயத்திலேதிரிபவர். (உ-ம்.) "அந்தரசரிதர் கொண்டேகாமல்" (பாரத. உலூக. கஅ.) [அந்தர—ஆகாயம். சரிதர்-திரிவோர்.]

அந்தரசாதி—வேறுசாதி. (உ-ம்) "சந்திரகலையானெக்குநீர்பொழிவ சந்திரகாந்தமேயல்லா -லந்தரசாதிச்சிலையிலுண்டாகாது" (அரிச்ச. விவாக. உ0) [அந்தர—வேறு.ஜாதி-குலம்]

அந்தரசாரி—ஆகாயசாரி. (உ-ம்.) "அந்தரசாரிகளறைந்தனர்" (சிலப்நாடு [அந்தர—ஆகாயம். சாரி - செல்வோன்.]

அந்தரசைவம்—ஒருவகைச்சைவம். [இதனிலக்கணஞ் சைவமென்னுஞ் சொல்லிற்காண்க.]

அந்தரசைவர்— அந்தரசைவத்தைத் தழுவினோர். (த. நி. போ. கசுக.) [அந்தர; ஶைவ-சிவசமய.]

அந்தரசௌசம்—உட்சுத்தி. (த. நி. போ. உககூ.) [அந்தர-உள். ஶௌசம்-சுத்தி.]

அந்தரத்தர் — சுவர்க்கலோகவாசிகள். (உ-ம்.) "அந்தரத்தரிலொருவனே யிணையவரங்கை—சிந்தி யுற்றனனென்றுநீயுரைத்திடுந்திறனே"(கந்தபு. சூரன்றண்ட். உச.) [அந்ரதஸ்த: அந்தர-ஆகாயம். ஸ்த:-இருக்கிறவன்.]

அந்தரத்தானம் — ஆதாரமில்லாத நிலை, இடைவெளியினிற்கும் நிலை. [அந்தர- ஆதாரமின்மை, இடைவெளி. ஸ்தாந—நிலை.]

அந்தரத்தாமரை — ஆகாயத்தாமரைப்பூண்டு. (உவின். உ; பதார்த்த. கூகூசு.) [அந்தர-ஆகாயம். தாமரை—ஒருபூண்டு.]

அந்தரதசை—மகாதசையில் உள்ளானகிரகநிலை. (வாச.) [அந்தர்தஶா.]

அந்தரதாமசர் — இடையிற்கருமையடைந்தவர். (த. நி. போ. கசச.) [அந்தர—இடை. தாமஸர்-கரியவர். தமஸ்—இருள்.]

அந்தரதிசை—கோணத்திசை, இடையிலுள்ள திசை. (ஆப். சுக.) [அந்தர- உள். திஶா-திக்கு.]

அந்தரதுந்துபி—ஒருவாச்சியம். (உ-ம்.) "சங்கநாத மந்தரதுந்துபிமுதலாமளவில் பெருகொலி தழைப்ப" பெரியபு. ஞான. கூஅ.) [அந்தர—தேவ. துந்துபி-ஒருவகைவாச்சியம்.]

அந்தரநடநர்— கம்பங்கூத்தர். (மா-) [அந்தர-ஆகாயம். நடநர்-கூத்தர்.]

அந்தரநதி—ஆகாயத்திலுள்ள கங்கை. (உ-ம்.) "அந்தரநதியைநாடி" (பாகவத. சுபத். கஅ.) அந்தர- ஆகாயம் நதீ—யாறு.]

அந்தரநாதன்—இந்திரன். (உ-ம்.) "அன்னதோர்காலையிலந்தரநாதன்" (கந்தபு. தெய்வ. உசக.) அந்தரம்—தேவுலகு. நாத—தலைவன். ன்— ஆண்பாலில் வரும் ஒரு இறுதிநிலை.]

அந்தரபவனி—1. ஆகாயகதி. (செ.) 2. ஆகாயகமநம். (உவின். உச.) 3. மிருவேகம். (உவின். உச.) [அந்தர — ஆகாயம். பவனி-உலா.]

அந்தரபுத்தி — கிரகங்களினுட்கதி (த. நி. போ. ௨௮௫.) [அந்தர–உள் ஹுக்தி-கதி.]

அந்தரபுருஷன் — உடம்பினுளிருக்கும் ஆன்மா. (வென். ௫௬௨.) [அந்தரபுருஷ: அந்தர-உள். புருஷ-]

அந்தரம்—1. அந்தரிப்பு. (மா.)[வழக்] 2. ஆகாயம். (உ-ம்.) "அண்டமவையடுக்கடுக்காயந்தரத்திலுறுத்து மவதாரம்போல" (தாயு. மண்டல. க) 3. ஆதரவின்மை. (மா.) 4. இடைக்காலம். (உவில். ௩௮.) 5. இடையிடம். (உவில். ௩௮.) 6. இருள். (பிங்க. ௩௦௬௧.) 7. உட்பக்கத்திலிருப்பது. (ஆப். ௪௦.) 8. உடுப்பு. (உவில். ௩௮) 9. உள்வெளி. (உவில். ௩௮.) 10. உள்வீடு. (ஆப். ௪௦.) 11. உள்ளுக்கிருக்கும் பொருள். (வென். ௨௭.) 12. ஒத்தது. (உவில். ௩௮.) 13. ஒப்பு. (உ-ம்.) "பொரற்குநீகொலந்தரமெனக்கென" (பாரத. வாரணா. ௬௫.) 14. காலம். (உவில். ௩௮.) 15. கூட்டம். (பிங்க. ௩௦௬௧.) 16. (கணிதம்) சேடம். (உவில். ௩௮.) 17. சொந்தம். (உவில். ௩௮.) 18. தனிமை. (பிங்க. ௩௦௬௧.) 19. தூரம். (வென். ௨௭.) 20. தேவராலயம். (பிங்க. ௩௦௬௧.) 21. நடு. (உவில். ௩௮.) 22. பரமான்மா. (ஆப். ௪௦) 23. பலக்கேடு (ஆப். ௪௦) (உ-ம்.) "விண்ணோர்காறும் வென்றவெனக்கென் மனைவாழும் - பெண்ணால்வந்ததந்தரமென்னப்பெறுவேனோ" (இராமா. கைகேசி. ௪௦.) 24. புறத்திலுள்ளது. (ஆப். ௪௦.) 25 பேதம். (உ-ம்.) "அந்தரஞ்சிறிதுமின்றி" (கந்தபு. வள். ௨௫௫.) 26. மேன்மை. (உ-ம்.) "அந்தரந்தீர்ந்துலகளிக்கும் நீரினல்தந்தையுங் கொடியன்" (இராமா. மந்தரை. ௬௦.) (ஆப். ௪௦.) 27. வேறு. (உ-ம்) "தூலதேகம் விட்டுச்சூக்குமதேகத்தோடுபோய்த் தூலதேகாந்தரத்தைப்பொருந் துதற்கு உவமையுரைக்கிறார்" (சி. சி. ௨. ௩௮. ஞாநப்.) [அந்த - முடிவு. ர- கொடுப்பது.]

அந்தரமகளிர்—அரம்பையர்கள். (உ-ம்) "அந்தரமகளிர்பாட" (திருவிளை. உக்கிர. ௬௨.) [அந்தர-தேவுலகம். மகளிர்-பெண்கள்.]

அந்தரமாழலி — ஆகாயத்தாமரை. (செ.) [அந்தர–ஆகாயம். மா - பெருமை. மூலி-மூலத்தையுடையது.]

அந்தரர்—தேவர். (உ-ம்.) "அந்தரர் கோனாசனத்தில்" (திருவிளை. பதிக. ௯.) [அந்தர-சுவர்க்கம். ர்- ஒருபலர்பால் விகுதி.]

அந்தரவல்லி — கருடன் கிழங்குப்பூண்டு. (சா. வைத்.) கொல்லன் கோவை. (உவின். ௨௪.) [அந்தர-ஆகாயம். வல்லி-கொடி.]

அந்தரவநசம் — கொடிப்பாசி. (கா. வைத்.) [அந்தரம் - ஆதாரமில்லது. வநம்-நீர். ஜ-பிறந்தது.]

அந்தரவநம் — ஊர்க்குப்புறத்திலிருக்குங்காடு. (உவின். ௨௪.) [அந்தர - புறம். வநம-காடு.]

அந்தரவாசம்—1. ஆகாயத்தில் வசிக்கை. (உவின். ௨௪.) 2. கொட்டைப்பாசிப்பூண்டு. (மா.) [அந்தர-ஆதாரமில்லது. வாஸ- வசித்தல்.]

அந்தரவாணி — அசரீரிவாக்கு. (உ-ம்.) "அந்தரவாணிகேட்டு" (கூர்மபு. கண்ணனவ. ௨.) [அந்தர–ஆகாயம். வாணி-வார்த்தை.]

அந்தரவாயு — 1. அண்டவாதநோய். (உவின். ௨௪.) 2. புறம்பிலுள்ளகன்மேந்திரியங்களுக்கும் அகத்திலுள்ள அந்தக்கரணங்களுக்கும் இடையிலுள்ள ஞானேந்திரியங்களை யசைப்பிக்கின்றனவாகச்சொல்லப்படும், பிராணன், அபானன், சமானன், உதானன், வியானன் என்னும் ஐந்துவாயுக்கள். (வேதா. சூ. ௭௬. உரை.)

அந்தரவாயுக்கிரகணி — ஒருவகைக்கிரகணரோகம்; அது: இரைச்சல், அசதி, தாகம், தளர்ச்சி, புசித்தவுடன்பேதியாதல், விலாவில் இசிவு, சரீரம்வெளிறல், விக்கல் என்னும் இக்குணங்களை யுண்டாக்கும். (சீவரட். ௮௫.)

அந்தரவிட்டை — ஒருநோய். (சீவரட். ௩௬௪.) [அந்தர; விஷ்டா-மலம்.]

அந்தரவீச்சு — 1. அந்தரத்தில்வீசுதல். (உவின். ௨௪.) 2. ஆதாரமின்மை. (மா.) [அந்தரம்; வீச்சு–வீசுதல்.]

அந்தரவீணை — இருபத்திரண்டுவகை வீணைகளுள் ஒன்று. (வி-ணி. ௨௨௦.)

அந்தராத்மா — (வேதாந்தம்.) தாமரையிலையின் நீர்போலச் சமுசாரத்திலுள்ள பெரிய விவகாரங்களைக்கலந்தும் கலவாது சொப்பனத்திற்குச் சாட்சியா யிருக்கும் பிரமசைதந்நியம். (உ-ம்) "தாமரையிலையினீர்போலத்தோய்ந்துளகுடும்பப் பெருவிவகாரந்தோய் விலனந்தராத்மாவாம்" (வே. சூ. ௩௧.) [அந்தர; ஆத்மா–சீவன்.]

அந்தராந்தரதசை — கிரகங்களினது தசையில் உள்ளுக்குள்ளானதசாகாலம். (த. நி. போ. ௨௮௫.) [அந்தர-அந்தர–உள்.]

அந்தராபத்தியை—கருப்பஸ்திரி. (ஆப் ௪௧.) [அந்தராபத்யா: அந்தர–உள் அபத்யா-பிள்ளையுடையவள்.]

அந்தராயம்—1. இடையூறு. (உவில். ௩௩.) 2. தீமை. (உவின். ௨௪.) 3. துக்கம். (சி. சி. பர. நிகண். ௨: உரை.) [அந்தர-இடை. அயம்-போதல்.]

அந்தராயாமவாதம் — தேகத்தின் உட்புறநரம்புகளைப்பற்றிய ஒருநோய். (சீவரட். ௬௩௩.) [அந்தர–உள். ஆயாமம்-சஞ்சரித்தல். தேகத்தின் உட்புறநரம்புகளைப் பற்றியதால் வந்த பெயர்.]

அந்தராளசம்பந்தம் — ஆகமம் உபதேசஞ்செய்த ஸ்ரீகண்டர்க்கும் உபதேசங்கேட்ட தேவர்க்கும் உள்ளச்

பந்தம். (சி. சி. ௧:௪௬. மறை.) [அந்தராள-நடு. ஸம்வந்ய-தொடர்பு.]

அந்தராளதிக்கு—கோணத்திசை.(வாச.) [அந்தராலதிக்: அந்தரால- இடையிடம். திக்-திசை.]

அந்தராளம் – 1. இடைக்காலம்.(ஆப். ௪௧.) 2. இடையிடம். (ஆப். ௪௧.) 3. உட்பாகம். (ஆப். ௪௧.) 4. நடுப்பாகம். (ஆப். ௪௧.) (உ-ம்.) "ஒன்பதினுயிரம்யோசனையந்தராளமுண்டாய்" (த. நி. போ. ௩௩௩.) [அந்தராலு: அந்தர-அவகாசம். லம்-கொடுப்பது.]

அந்தராளன் — அநுலோமத்தந்தைக்குப் பிரதிலோமத்தாயிடத்திற் பிறந்தவன். (உ-ம்.) "மருவநுலோமத்தந்தைவளர்பிரதிலோமத்தாய்பாலொருவறப்பிறந்தபிள்ளையுறுபெய,ரந்தராளன்" (சூத. சிவ. ௧௨; எ.)

அந்தரான்மா — 1. ஆகாயத்தில் அந்தரமாகத்திரியும் ஆன்மா. (உ-ம்.)"தூலசரீரத்துக்கேற்ற கன்மம் பரிபக்குவம் இல்லாதிருந்தால் அதற்கேற்றபரிபாகம் வரும்வரைக்குஞ் சூக்குமசரீரத்தோடு கூடி அறிவின்றி ஆகாயத்தைப்பற்றி அந்தரான்மாவாயிருந்து கன்மபரிபாகத்திற் காலாந்தரத்தில் உடலுறும் என்றும்" (சி. சி.உ. ௩எ. ஞாநப்.) 2. உள்ளுணர்வு. (ஆப். ௩௧.) 3. உள்ளேயிருக்கும் ஆன்மா. (ஆப். ௩௧.) 4. மநுடன் உள்ளத்திலிருக்கும் பரமான்மா.(ஆப். ௩௧. சி. சி. அ. ௩௦.) அந்தர- ஆகாயம், உள். ஆத்மா-சீவன்.]

அந்தரி – 1-3. அந்தரியென்னேவலும் தெரிநிலைவினைப்பகுதியும், பெயரெச்சத்தொகையும்.4.ஆகாயவாணி. (சி.) 5. ஒருவகைத்தோற்கருவி. (சிலப். அரங்கே. உஎ. உரை.) 6. துர்க்கை. (உ-ம்.) "அந்தரியிருந்தவிந்தமால்வரை" (மணிமே. ௨௦.கா. ௧௬௬.) 7. பார்ப்பதி. (உ-ம்.) "அந்தரிபோற்றினா ளன்புறு" (சந்தபு. திருமண. ௩அ) 8. காளி. (உ-ம்.) "அந்தரியாமளையமலையாலகாலி, யம்பிகை மாதரி கௌரியாளியூர்தி,வந்தரிநான்முகன் வணங்குமலர்த்தாட்சூரி வைரவிதாருகவைரி மதங்கிநீல கந்தரியோகினிசூலினீலி நாககங்கணி சங்கரிவிமலை காளிவாலசுந்தரி சாமுண்டி திரிசூலி கோலத்துணையடி யென்முடிமீது சூடினேனே" (அரிச்ச. பாயி. எ.)

அந்தரிட்சம் – பறவைமுதலியனசெல்லுதற் கிடமாகப் பூமிக்குஞ் சூரியனுக்கும் இடையிலுள்ள வெளி. (உ-ம்.) சத்தாசாமாநியமானது வியாபிக்கஅந்தரிட்சலோகம் நசிக்கும்"(ஞாநவா. வைராக். ௪௦௬. உரை.) (சப்த.) [அந்தரிக்ஷ: அந்தர்-உள். இக்ஷ- தாண்டுதல்.]

அந்தரித்தல்—1. அலைதல். (மா)2.ஒருதொகையை மற்றொரு தொகையிற் கழித்துச்சேடம்அறிதல்(உவின்.உச) 3. உதவியற்றிருத்தல். (உவின். உச.) 4. தனித்திருத்தல். (உவின். உச.) 5. நிலைகெடுதல். (மா.) 6. மனந்தடுமாறுதல். (மா.) [மூ. அந்தர]

அந்தரிதம்—1. (கணக்கதிகாரம்.) ஒன்றையொன்றிற்கழித்தலால்வருஞ்சேடம். (உவில்.௩௧)2. தேசவியோகம். (உவில். ௩௧.) 3. மறைக்கப்பட்டது. (ஆப்.௪௧.) (உ-ம்.) "படிகாந்தரிதமாயிருக்கிறவஸ்து" (சி. சி. உ: ௬௦. சிவாக்.) 4. விபாகம், பிரிவு.(ஆப். ௪௧.) [அந்தரிதம்.]

அந்தரிந்திரியம் – 1. மனம். (தர்க்காமி [அந்தர்-உள். இந்திரியம்-பொறி.]

அந்தரிப்பு—அந்தரித்தல். (சி.)

அந்தரியாகம்—உட்பூசை. (உ-ம்.)"அந்தரியாகந்தன்னை" (சி. சி. ௯: ௧௦.) [அந்தர்-உள். யாகம்-பூசை.]

அந்தரியாமி—1. அகவாயுக்களைந்தனுளொன்று; அது சித்தத்தையசைப்பிக்குமென்பர். (உ-ம்.) "சாற்றின்வயிரம்பன்முக்கியனபிரபஞ்சனன் அந்தரியாமியொடு மகாப்பிராணனென்னும் பெயர்கொள் காற்றிவைகள் சீவசம்பந்தமாயே உட்கரணங்களியக்கியிடும்"வேதா.சூ,எஎ) [அகத்தின்நிறைந்திருத்தலின்வந்தபெயர்] 2. ஆன்மா. (உவில். ௩௧.) 3. உள்ளீடாயிருப்பவன். (உ-ம்.) "சிவனெல்லாவஸ்துக்களினு மந்தரியாமியாகநின்றமையும்" (சி. சி. அ: ௩௪. சிவாக்.) 4. கடவுள். (உவில். ௩௧.) 5. கூடஸ்தன். (உ-ம்.) "சீவனென்றிடு மூவகையதிட்டாந சேதநனந்தரியாமி - ஆவலின்நுசந்தாத்திருசுயஞ்சத்தார்த்தனேடவிச்சிந்த சீவன்—தாவரும்பரமார்த்திகன் றூரியன் சான்றினன்பிரத்திகான்மாவா — மேவமிறும்பதத்திலக்கியார்த்தனென்ப கூடத்தனுமங்கள்" (வேதா.சூ. ௫௨.) 6. சிவன். (உ-ம்) "சீர்மொய்ததவந்தரியாமிசால வேத்திடுதிருசியநாயகன்சாற்றதிருசியன்னே" (சூத. எக்கி. பூ. ௩௩. அ) 7.சீவசாட்சி.(உவில்.௩௧.) 8. மாயையாகிய சத்துவகுணத்திற் பிரதிவிம்பித்தபிர்மச்சாயையாகிய ஈசன். (உ-ம்.) "அகிலகாரணமாமாயையைமருவி அந்தரியாமியாய்" (வேதா. சூ. ௪௪.)9. வாயு. (சப்த.) [அந்தர்யாமி. அந்தர்-உள். யாமி-நடத்துபவன்.]

அந்தரியாமித்துவம்—1.ஆன்மாவோடுகலந்திருத்தல்(வி-ணி) 2. உள்ளீடாயிருக்குந்தன்மை. (உ-ம்.) "சர்வாந்தரியாமித்துவம்" (வேதா. சூ. ௪எ. உரை.) 3. கடவுள். (வி-ணி.) [அந்தர்யாமி-கடவுள். த்வம்-தன்மை.]

அந்தரிலம்பம்— குகோணம், அஃது ஒடுங்கியமூன்றுகோணங்களையுடைய வடிவம். (உவில். ௩௧.) [அந்தரலம்ப: அந்தர்-உள். லம்ப-தூங்குதல்]

அந்தரிலயம்—துரியாதீதம். (மா) [அந்தர்-உள். லயம்-ஒடுக்கம்.]

அந்தரீட்சம்—அந்தரிட்சம். (சி.)

அந்தரீபம் – தீவு. (உவில். ௩௧.) [அந்தரீப: அந்தர்-உள். ஆப-நீர். இது

ஈவு என்றுயிற்று.]

அந்தரீயம்— உள்ளுடை. (ஆப். சா. பௌட். பதி. க.) [அந்தரீய: அந்தர்-உள். ஈய—ஒருவிகுதி.]

அந்தருத்திரேகம் —உட்டொடக்கம். (உ-ம்.) "சூக்குமயோசுசாத்தசவிகற்பசங்கற்பத்தினது அந்தருத்திரேகத்தைப்பண்ணிக் கிரியாசத்திபேதமாகிய இச்சாசத்தியாயிருத்தல் அதிகாரம்" (சி. சி. பாயி.உ. "ஈசனருள்"ஞாநப்.)[அந்தர்-உள். உஜ்ரே0—வளர்ச்சி, தொடக்கம்.]

அந்தரேண— 1. ஒழிய, இல்லாமல். (உவில். ௯௧.) 2.நடுவில்,ஊடாக.(உவில். ௯௧.) [அந்தரேண—ஒரு அவ்வியயம். அந்தர்—உள். இண்—போதல். ந—ஒருவிகுதி.]

அந்தலை—முடிவும் முதலும். (உ-ம்.) "இந்தக்காரியத்தின்அந்தலையெங்கேயோதெரியாது" (வழக். மா)[அந்தம் முடிவு. தலை—முதல். அந்தலையென மருவிற்று.]

அந்தளம்—கவசம். (உவின். ௯௪.)

அந்தளி—தேவர்கோவில். (சது.)

அந்தன்—1. அழகன். (உ-ம்.) "சங்கைசூடும்பிரான் மைந்தனே யந்தனே" (திருப்பு. ௪0.) 2. கடுக்காய். (கா.வைத்.) 3. குருடன்.(உ-ம்.)"அந்தனண்ணியகண்ணுமொத்த"(ஞாநவா.வைரா. உ௯.) 4. சநி. (உவின். ௯௪.) [1. அந்த—அழகு. 3, 4. அந்ய—குருடு, இருள்போலுங்கருமை.]

அந்தா—ஒருமகிழ்ச்சிக்குறிப்புமொழி. (உ-ம்.) "அந்தாவுய்ந்தேன்" (கந்தபு. அசுரர்தோ. க.) [இது "ஹந்த" என்னும் வடமொழித்திரிபுபோலும்.] (உவில். ௯௧௯)

அந்தாதி—1. அடிதோறும் இறுதிக்கண்நின்ற எழுத்தாவது அசையாவது சீராவது அடுத்துவரும் அடிக்குமுதலாய் அல்லது அவ்வடிமுழுதும் மற்றைப்பவடியாய்வரத்தொடுக்குந் தொடை. (உ-ம்.) "அந்தமுதலாய்த் தொடுப்பதந்தாதி" (யா. காரிகை. உறுப்பி. ௪௪.) 2. ஒருசெய்யுளின் இறுதியில்நின்ற சீராவது சீரின்ஒருறுப்பாவது அடுத்துவருஞ் செய்யுளுக்கு முதலாகவரச் செய்யப்படும்நூல். (உ-ம்.) "இரட்டைமாலையந்தாதியெடுத்தப்பாடி" (பெரியபு. காரைக். ௫௯) 3. கடவுள். (உவின். உ௪.) [அந்த—முடிவு. ஆதி—முதல்.]

அந்தாதித்தல்—அந்தாதியாகத்தொடுத்தல். (மா.)

அந்தாதித்தொடை—அடிதோறும் இறுதிக்கண் நின்ற எழுத்தேனும் அசையேனும், சீரேனும் மற்றை அடிக்கு ஆதியாக்வருவது. (உ-ம்.) "அடியுஞ் சீருமசையுமெழுத்து-முடிவுமுதலாச்செய்யுண்மொழியின் — அந்தாதித தொடையுமென் றறிதல்வேண்டும்" (இலக்கணவி. எஉ௫.)

அந்தாதிமடக்கு—ஓரடியின் இறுதியில் வந்தசொல்லே வேறுபொருளோடு மற்றைய அடிக்கு முதல்ரகவருவது. (தண்டி. ௯௨து. ௫.) [அந்த—முடிவு, ஆதி-முதல், மடக்கு—மடங்கிவருவது.]

அந்தாளி—குறிஞ்சியாழ்த்திறன்வகை முப்பத்திரண்டில் ஒன்று. (பிங்க. ௧௩௮உ.) (உ.ம்.) "கோலக்குறிஞ்சியந்தாளிக்குறிஞ்சி" (இரகு. அவதா. ௧௯.)

அந்தாளிபாடை—1. ஒருபண். (மா. தவாசுர. பத்தா.) 2. பாலையாழ்த்திறன்வகையில் ஒன்று. (பிங்க.௧௩௮௧.)

அந்தி—1. (நாடகம்.) அக்காள். (உவில். ௪0.) [அந்தி.] 2-4. அந்தியென்னேவலுந் தெரிநிலைவினைப்பகுதியும் பெயரெச்சத்தொகையும். (உ-ம்.) "பத்தர் சித்தமெய்யிற்செவ்வந்திநீ" (கந்தர. ௬. ஏவல்) 5. இரா. (சூ. நிகண். ௧௧: ௩௧௪. ௪.) 6. இருட்புலர்வுக்குஞ் சூரியோதயத்திற்கும் இடைக்காலம்.(உ-ம்.) "காலையந்தியும்" (புறநா. ௯௪)7. சூரியாத்தமயநத்திலே தோன்றுஞ்செவ்வானம். (உ-ம்.) "அந்திவேண்யண்ணல்"(கந்தபு. காமதக-௯௬.) 8. தில்லைமரம். (கா. வைத்.) 9. பாலையாழ்த்திறத்தின் ஒன்று. (பிங்கல. ௧௩௮௪)10. மாலைக்காலம். (உ-ம்.)"அந்தியந்தணரருங்கடனிறக்கும்" (புறநா. உ.) 11. முடிவு, பொருத்து. (உ-ம்.) "அந்தக்கடலிற் கடிதோடா" (திருப்பு. ௯அ) 12.முச்சந்தி, முத்தெருக்கூடுமிடம். (பிங்க. ௬௪௯.)

அந்திக்கோன்—சந்திரன். (உ-ம்) "அந்திக்கோன் றனக்கேயருள்செய்தவர்" (தேவா. திருப்பாசு. ௪. நாவு.) [அந்தி—மாலை. கோன்—தலைவன்.]

அந்திகம்—1. அயல். (உவின். உ௫.) 2. கொளுவுகொம்பு. (சி) 3.சமீபம். (உவில். ௪0.) [அந்திக.]

அந்திகாசிரயம் — கொளுவுகொம்பு போல அடுத்திருக்கும் ஆதரவு. (உவில். ௪0-) [அந்திகாஶ்ரய: அந்திக-சமீபம், ஆஶ்ரய—ஆதரவு.]

அந்திகாவலன்—1.சந்திரன். (உ-ம்.) "அந்திகாவலனமுதுறுபசுங்கதிர்"(நாலாயிர. இரண்டாயி. பெரியதிரு. அவதா பத்து. ௫: ௪.) 2. மாலைக்காலத்திலே காவலாகத் திரிகிறதென்று சொல்லப்படும் ஒருதேவதை (உவின். உ௪.) [அந்தி—மாலை. காவலன்—அரசன்.]

அந்திகை—1. (நாடகம்) அக்காள். (உவில். ௪0.) 2. அடுப்பு. (உவில். ௪0.) 3. இரவு. (உவில். ௪0.) 4. ஒருவகைக்கண்ணோய். (உவில். ௪0.) 5. சமீபம். (உவில். ௪0.) 6. மாறுடப்பெண். (உவில். ௪0.) [1, 2, 5. அந்திகா] 3, 4, 6. [அமயிகா.]

அந்திசந்தி—காலையும் மாலையும் (உவின். உ௪.)

அந்தித்தல்—1. கிட்டுதல். (உ-ம்) "வேதமந்தித்தமறியான் செய்த திருவிளையாடல் கேட்டும்" (திருவிளை. நகர. ௬௦௧.) 2. சந்தித்தல். (உ-ம்.) யமபடையென்வந்திக்குங் கட்கடையாலே" (திருப்பு. அரு.) 3. நியமித்தல். (உ-ம.) "அந்தித்தநின்புணர்ப்பை" (கந்தபு. சயந்தன்பு. ரு௮.) 4. பொருந்துதல். (உவில்- உ௪.) [மூ. அந்த]

அந்திப்பூ—அந்திமல்லிகை. (கா. வைத்.) [அந்தி—மாலை.]

அந்திப்பொழுது—மாலைக்காலம். (உ-ம்.) "அந்திப்பொழுதிற்பிறையாலே" (திருப்பு.) [அந்தி—மாலை. பொழுது—காலம்.]

அந்திபகல்—1. இராப்பகல். (உ-ம்.) "அந்திபகலாய்ச் சிவனையாதரித்து" (பட்டணத்து) 2. சேவலசகலாவத்தைகளைக்கருதும் ஒரு குறிப்புமொழி. (உ-ம்.) "அந்திபகலென்றிரண்டையுமொழித்திந்திரியசஞ்சலங்களையறுத்து" (திருப்பு. ௬௨.) [அந்தி-இரா. பகல்.]

அந்திமந்தாரம்— அந்திமந்தாரை. (உவின். உ௪.) [அந்தி—மாலை.]

அந்திமந்தாரை—ஒருமரம். (மா.) [அந்தி-மாலை. இது அந்திக்காலத்திற புட்பிக்குமபூண்டு.]

அந்திமல்லிகை— ஒருவகைப்பூண்டு. (சி.) [அந்தி—மாலை.]

அந்திமலர்ந்தான் — அந்திப்பூ. (கா. வைத்.) [அந்தி—மாலை. மலர்ந்தான்-மலர்தலுடையது.]

அந்திமான்—இடையெழுவள்ளல்களுளொருவன். (கந்தபு. கந்தவிர. ௪௮.)

அந்திமாலை—பகற்காலத்தின் முடிவில்வரும் மாலைக்காலம். (பெரியபு. திருஞா. ௭௦.)

அந்தியகருமம்—மரணத்தின்பின் செய்யும் பிரேதக்கிரியை; இறந்த ஆன்மாவை ஈடேற்ற எண்ணிச்செய்யுங் கிரியை. (ஆப். ௬௨.) [அந்தியகர்ம. அந்திய—இறுதி. கர்ம—கிரியை.]

அந்தியகாலம்—மரணகாலம். (உ-ம்) "அந்தியகாலந்தன்னி லணிவயிற்றிரதநிற்கில்" (விருத்தாசல. சிவபூ.௬௧) அந்திய—இறுதி. காலம்—பொழுது.]

அந்தியகிரியை—அந்தியகருமம். (ஆப். ௬௨.)

அந்தியசர்—புலையர். (உ-ம்.) "அந்தியசர்வண்ணார்முதலோர்மனை" (சைவச. பொது. உ௬௩.) [அந்திய- இறுதி. ஜ—பிறந்தவன். ர்—பன்மைவிகுதி.]

அந்தியசன்—1. சூத்திரவருணத்தோன். (உவில்.௬௦)2. தம்பி. (உவில்.௬௦.) [அந்திய—இறுதி. ஜ: பிறந்தவன்.]

அந்தியசைவர்—சிவதீக்ஷைபெற்ற பிரதிலோமர்முதலிய சாதியார். (உ-ம்.) 'ஆரியசதாசிவனென்போனாதிசைவனவன்பாலவதரித்த சிவமறையோராதிசைவரிவர்பால்-உரியசிவதீக்கைபெற்றபூசுரர்மாசைவருயர்ந்தவரசன்வணிகனநுசைவராவார்—பெரியகுலத்துப்புயத்தோனவாநதரசைவன்சீர்பெறுசவன்னனுதி யநுலோமர்பிரவரராம்விரியவணிமிசையொழிர்தோரந்தியசைவத்தோர் விரிந்திடு மேழ்சைவவிதமிவையென நூல் விளம்பும்" (ஆசௌசதீபிகை. ௨௦.) [அந்திய-இறுதி. சைவர் — சிவசமயத்தோர்.]

அந்தியபம் — இரேவதி. (உவில். ௬௦.) 2. மீநராசி. (உவில். ௬௦.) [அந்தியஹ. அந்திய—இறுதி. ஹம்—நட்சத்திரம். (பிருகசாதக. ௧: ௮.)

அந்தியம்—1. (கணிதம்) சமுத்திரம் பத்துக்கொண்ட எண். (பிங்க. உ௨௭.) 2. மரணம். (உ-ம்.) "அடல்வாலியந்தியத்திலறைந்த" (இராமஉத். அநும. ௬௫) 3. முடிவு. (சப்த [அந்திய. அந்த—இறுதி. ய-ஒருவிகுதி.]

அந்தியர்—கீழ்மக்கள். (மா.) [அந்த—இறுதி.]

அந்தியவருணம்—1. நான்காம்வருணம். (ஆப். ௬௨) 2. மிகக்கீழானவருணம். (ஆப். ௬௨.) [அந்தியவர்ண. அந்திய—இறுதி. வர்ண—குலம்.]

அந்தியாவசாயி—நிஷாதமாதுக்குஞ் சண்டாளனுக்கும் பிறந்தவன்; இவன் றொழில் சண்டாளத் தொழிலும் சுடுகாடுகாத்தலும். (உவில். ௬௦. மநு. ௬௦. ௫௧.) 2. வேட்டையாடுதற்றொழிலுடைய ஒரு வருணத்தார். [அந்திய-இறுதி. அவஸாயின்-வெட்டுவோன்.]

அந்தியாவயவி — இறுதியிலேவரும் அவயவமுலடைய பிண்டம். (உ-ம்.) "பரமாணுத்துவயங்கள் சேர்ந்து துவியணுகங்டோன்றும் துவியணுகங்கள்மூன்று சேர்ந்து திரிசரேணுகந்தோன்றும்; இங்ஙனமே சதுரணுகம் முதலியன முறையானே தோன்றலின் அந்தியாவயவிகளாகிய மகாபிருதிவி, மகாசலம், மகாதேயு, மகாவாயுத்தோன்றும். (தர்க்காமிர். பச. ௧௯.) அந்திய—இறுதி. அவயவி-அவயவமுடையது]

அந்தியேட்டி—மரணத்தின்பின் செய்யும் யாகம். (ஆசௌசதீபிகை.௫௧.) (உ-ம்.) "எண்ணவருமந்தியேட்டி மந்திரத்தாற்றகமிலே. அந்தியேஷ்டி. அந்திய—இறுதி இஷ்டி—யாகம்.

அந்தியை—மிலேச்சப்பெயருடையவள். (பராசர. ௬௨.) [அந்த—இறுதி. யா-ஒரு விகுதி.]

அந்திரக்கண்மணி — நீலக்கல். (சா. வைத்.)

அந்திரக்கோடிச்சி—செந்தகம். (சா. வைத்.)

அந்திரம்—குடர். (உவில். ௬௦.) [அந்த்ர: அம்-பிரிதல். த்ர - ஒருவடமொழி விகுதி. உணவினைப் பிரிப்பதென்னும் பொருட்டு.]

அந்திரவசநம் — கொட்டைப்பாக்கு. (கா. வைத்.) [அசநம்-உணவு]

அந்திரன் — ஓரிழிந்தசாதியான்; இவன்தந்தை வைதேகனும் தாய் காராவரப்பெண்ணும்ஆவர். இவன் காட்டுப்பசுக்களைக் கொன்று வயிறுவளர்க்கிறவன். (பரா. கருகூ; வென். உக; உவில். ௬௧.) [அந்த்ர.]

அந்திரு — நிவிர்த்திகலையிற் பிருதிவிதத்துவத்தில் உள்ளனவாகச்சொல்லப்படும்புவநங்கள் நூற்றெட்டனுள் தென்மேற்றிசையில் இருக்கும்பத்துப்புவநங்களுள் ஒன்று. (சி-லி. கிரி. உக. உரை; சி. சி. அ: எ. மறை.) [ஹந்த்ரு.]

அந்தில்—1. அவ்விடம். (உ-ம்.) "அந்திலரங்கத்தகன்பொழில்" (சிலப்.காடு. கூ.) 2. ஓரசைச்சொல்" (உ-ம்.) "அந்தில்செம்பொனணிமணிக்கோயிலின்" (கந்தபு. பாயிர. கூ) 3. வெண்கடுகு. (பிங்க. உகூகூ.)

அந்திவண்ணர்—சிவன். (உ-ம்.) "அந்திவண்ணர்தம்மடியவர்க்கு" (பெரியபு. அமர்நீதி. கூ.) [அந்தி—செவ்வானம. வர்ணர்-நிறமுடையவர். ர்-ஒருமைச்சிறப்பில்வந்தது.]

அந்திவண்ணன் — 1. சிவன். (உ-ம்.) "இகலிலந்திவண்ணனோர் சென்றிடல்" (கந்தபு. ததீசியு. கா௦.) 2. செக்கர் நிறமுடையோன். (சி.) [அந்தி—செக்கர். வர்ண—நிறம். ன்-ஒருஆண்பால்விகுதி.]

அந்தீகிருதன்—குருடனுக்கப்பட்டவன். (உவில். ௬௦.) [அந்தீக்ருத: அந்ய -குருடன். க்ருத-ஆக்கப்பட்டவன்.]

அந்தீபூதன் —குருடனானவன். (உவில். ௬௧.) [அந்தீபூத-அந்ய-குருடன். பூத-ஆனவன்.]

அந்து—1. எருது. (உவில். கூகூ. [ஹந்து] 2. கிணறு. (உவில். ௬௧.) [அந்யூ] 3. கொலை. (உ-ம்) "அந்துசெய்குவெனென" (இராமா. யுத். இராவணவதை.௬௧.) [உவில். கூகூ. ஹந்து] 4. நெல்வண்டு. (உ-ம்) "அந்தேயனவும்மளியில்சிறியேன்" (கந்தபு. காவிரிநீ. ௬௪) 5. பாதகிங்கிணி. (உவில். ௬௦) [அந்தூ]

அந்துகம் — 1. சங்கிலி. (உவில். ௬௦) 2. பாதகிங்கிணி. (உவில். ௬௦) 3. யானைக்காலிற் கட்டுஞ்சங்கிலி. (உவில். ௬௦) [அந்தூக அதி-கட்டுதல்]

அந்துளியிந்துளியாத்தல்—1. குறையாடல். (மா) 2. தலைச்சுழற்சி. (மா) 3. பதைபதைத்தல். (மா) [அந்த;உளி இந்த;உளி; உளி-இடம் வழக்]

அந்தூகம் — யானையைக் காலிற்சட்டுஞ் சங்கிலி. (உவில். ௬௦.) [அந்தூக; அதி-கட்டுதல்.]

அந்தேசம்—1. அந்தரிப்பு. (மா) 2. அபலம். (மா) [அந்தே-முடிவில். ஜம்-பிறந்தது. [வழக்]

அந்தேவாசி — 1. சண்டாளன். (உவில். ௬௦.) 2. நீசன். (உவில். ௬௦.) 3. மாணுக்கன். (உவில். ௬௦.) [அந்தே-சமீபத்தில், இறுதியில். வாஸின்-வசிப்போன்]

அந்தை—ஒருநிறை. (தொல். எழுத். தொகை. உஅ. நச்.)

அந்தோ — இரக்கத்தினையுணர்த்தும் ஒருகுறிப்புச்சொல். (உ-ம்.) "பெற்றிலடவமந்தோபெருநிலமகள்" (இராமா. அயோ. வசம். உடு.) [இதனை நச்சினார்க்கினியர் சிங்களச்சொல் என்பர். (தொல். சொல். ௬௦௦. உரை.) [ஹந்த என்னும் வடமொழியவ்வியயம் ஐயோ எனப்பொருள்படவருவது சம்ஸ்கிருத அகராதிகளிற் காண்கிறது. (ஆப். கூஅஎ.) அதன்றிரிபாகிய "அந்த"என்பது ஈற்றகரங்கெட்டு ஓகாரம்பெற்று "அந்தோ" எனவந்ததெனினும் இழுக்காது.]

அந்தோட்டம் — கண்டோட்டம் என்னும் ஓர்உரோகம்; அது: வாயுஉதட்டிற்சேரும்போது பிறந்து உதடுகளிலேவெடிப்பையுண்டாக்குவதென்பர். (சீவரட். உஎகூ.) [அந்த - நாசம். ஓஷ்ட-உதடு.]

அந்தோர் — நெல்லிமரம். (கா. வைத்.)

அந்நக்கலை —பெலவீனமான நேரத்திலே யந்நத்தையதிசம் புசித்தலால்வருங்கலை. (உவின். ௫அ.) [அந்ந-சோறு. கலை-இளைப்பு.]

அந்நக்காவடி — 1. யாசகர்பொருட்டு வீடுதோறும் யாசித்துவாங்கிய அந்நங் கொண்டுபோகுங் காவடி. (உவின். ௫அ.) 2. விக்கிரகத்துக்குநைவேதிக்கும்படி யந்நங்கொண்டு போகுங் காவடி. (உ-ம்.) "அந்நக்காவடியாற்கமுகாசலத்தாதிக்காவடிமைததிறம்பூண்டு" (தனிப்பாடல் கடிகைமுத்.எஎ.) [அந்நம்-சோறு. கா-காவுதல். அடி-அடுத்தது.]

அந்நக்கோடி—தருமமாகச் சோறுகொக்கப்படும் என்பதை அறிவித்தற்குச் சத்திரத்திற் கட்டியகொடி. (உவின். ௫அ.) [அந்ந; கொடி.]

அந்நக்கோடை — அந்நதானம். (உவின். ௫அ.) [அந்ந—சோறு. கொடை-கொடுத்தல்.]

அந்நகந்தி — வயிற்றுளைவு. (உவில். ௬௧.) [அந்நகந்தி: அந்ந-சோறு. கந்தி மணமுடையது.]

அந்நகாலம் — போசனகாலம். (உவில். ௬௧.) [அந்நகால: அந்ந-உணவு. கால-பொழுது.]

அந்நகோட்டகம்—தானியம்வைக்கும் வீடு. (உவில். ௬௧.) [அந்நகோஷ்டக: அந்ந-தானியம். கோஷ்டகம்-சாலை.]

அந்நகோட்டகன் — 1. சூரியன். (உவில். சக.) 2. விட்டுணு. (உவில்.சக.) [அந்நகோஷ்க: அந்ந-உணவு. கோஷ்டக-கொள்ளுமிடம்.]

அந்நகோட்டம்—தானியம்வைக்கும்வீடு. (உவில். சக.) [அந்நகோஷ்: அந்ந-தானியம். கோஷ்ட—சாலே.]

அந்நசத்திரம் — தருமமாகச்சோறுகொடுக்குஞ்சத்திரம். (உவின். ருஅ.) [அந்ந-சோறு. ஸத்ர-வீடு.]

அந்நசலம் — 1. கஞ்சி. 2. சீவனுக்காதாரம்,வெற்றணவு. (ஆப். சரு.) 3. சோறுந்தண்ணீரும். (ஆப். சரு.) [அந்நஜல: அந்ந-சோறு. ஜல-நீர்.]

அந்நசாரம் — 1. அந்நரசம். (உ-ம்.) "மன்னியவந்நசாரமிருதயமலரின்வாய்த்துத்-தன்னியநாடிதோறுஞ்சொரிந்திடும்" (சிவதரு. சொப்பமரண.கூ.) 2. கஞ்சி. (மா.) [அந்ந- உணவு, சாதம். ஸாரம்-சிரேட்டம், பெலம்.]

அந்நசாலே — அந்நசத்திரம். (மா.) [அந்ந-சோறு. ஶாலா-வீடு.]

அந்நசுத்தி — நெய். (மா.) [அந்ந-சோறு. ஶுத்தி-சுத்தஞ்செய்வது.]

அந்நதன் — போசநங்கொடுப்போன். (உவில். சக.) [அந்நத: அந்ந-சோறு. த:-கொடுப்பவன்.]

அந்நதாதா — அந்நங்கொடுக்குந்தருமவான். (உ-ம்.) "அந்ந-தாதாவுமுதலானதயாவினோர்" (இராமா. உத். திக்கு. ருக; உவில். சக.) [அந்நதாதா: அந்ந-உணவு. தாதா-கொடுப்போன்.]

அந்நதாதிரு — அந்நங்கொடுக்கிறவன். (சி.) [அந்நதாத்ரு.]

அந்நதானம்—சோற்றுக்கொடை. (உ-ம்.) "அருட்படுதோரந்தம்முள்விழுமிதாமந்நதானம்" (திருவிளை. மூர்த்தி. அ.) [அந்நதாந-அந்ந-உணவு. தாந-கொடை.]

அந்நப்பாகு — அந்நரசம். (உவின். ருஅ.) [அந்ந-உணவு. பாகு-ரசம்.]

அந்நப்பால்—கஞ்சி. (உவின். ருஅ.) [அந்ந-சோறு. பால் -பால்போல்வது.]

அந்நப்பிராசநம்—குழந்தைக்கு முதன்முதற்சோறூட்டுங்கிரியை. (உ-ம்.) "பூணிருதுசங்கமநங்கருப்பாதாநம்புஞ்சவனஞ்சீமந்தஞ்சாதகன்மம்-பேணுமுத்தாபநநாமகரண மந்நப்பிராசநம்மேபிரவாசம்பிண்டவிர்த்த-காணலூறுசவுளமுபநயங்காண்டோபக்கிரமணங்கண்டமேமாசஞ்சீர்-மாணுசமாவர்த்தநமேவிவாசமின்ன வகுத்தபதி றுறுமெனமதிக்கமன்னு" (திருவானை. கோச்செங். கச.) அந்நப் பிராசநஞ் செய்யவேண்டிய காலத்தைக் குறித்து: "ஆறினுமெட்டினும் பத்தினுந் திங்களீராறிடத்தும்-தேறியநாட்செல்லச்சித்திரைமான்றலேகுன்றுபுட்டே-றூறியகையிருபூசங்கலம் விளக்குத்தரங்கள்-கூறியபெண்ணேயாழோணமுண்டிக்கெனக்கூறினரே" எனவும், "க்ய்றேட்கொறித்ங்களொட்சி யொன்பானிற் கணக்கனெழிற் — புயலெட்டிடஞ்சேயிவைபொருந்தா வென்பருண்டிதனக் —கியல்புறு பத்தாமிடஞ்சுத்தியாகமுன்னேயிசைத்த— நயமுறுநாளோரைகன்றுனவல்லிற் கொணன்னுதலே" எனவும். விதாந. மைந்தர். ச0-ம், கசங் கவிகளிலும், "ஆறுவதுமாசத்திலந்நப்பிராசநஞ் செய்விக்கவேண்டியது; அல்லது தங்கள் குலவழக்கப்படி மூனறுவதுமாதந்தொடங்கி யெப்போதாவதுசெய்யலாம்" என்று மநு: க. சாதகன்மாதிசமஸ்காரத்திலும், "ஆறுவதுதிங்களில் விதிப்படி யந்நமூண்பிக்கவேண்டும்; எட்டாவது திங்களிலுஞ்செய்யலாம் தன்மரபின்வழக்கப்படியெத்துசுகமென்றுவிரும்பப்பட்டுளதோ அதுசெய்யவேண்டுமென்றும் ஐந்துமுதலிய ஒற்றைப் பட்டதிங்களிற் பெண்மக்களுக் கந்நப்பிராசநஞ் செய்தல்வேண்டுமென்றும், ஒருவருஷமானஉடன் அந்நப்பிராசநஞ் செய்தல் வேண்டுமென்று சங்கர்சொல்லுகிறு ரென்றும் ஆறுவதுதிங்களாயினும் பல்முளைத்த உடனுயினும் அந்நப்பிராசநஞ்செய்யலாமென லோசாட்சிசொல்லுகிறு ரென்றும், பரா. ஆசார. உ. அத்தியாயத்திலுஞ்சொல்லப்பட்டது. [உவில். சஉ. அந்நப்ராஶந: அந்ந-சோறு. ப்ராஶந-முதலுண்பித்தல்.]

அந்நபானம் — சோறுந்தண்ணீரும். (சி.) [அந்நம்-சோறு. பாநம்-குடிப்பது]

அந்நபாநோற்காரம்—சோற்றையும் நீரையும் வாந்திசெய்தல். (த. நி. போ. ககரு.) [அந்ந-சோறு. பாந-குடிப்பது. உத்கார-உமிழ்தல்.]

அந்நபூமி — சோற்றுக்குவியல். (உவில். சக.) (அந்நபூமி: அந்ந-சோறு. பூமி-குவியல்.)

அந்நபூர்ணி ⎫ தர்க்கை. (ஆப். சரு.)
அந்நபூர்ணை ⎭ [அந்நபூர்ணா: அந்ந-சோறு. பூர்ணா - பூரணமுடையவள், பூரணமாகக்கொடுப்பவள்.]

அந்நபேதி—சோற்றினைநீராக மாறச்செய்யுஞ்சத்தியுடையதென்ச்சொல்லப்படும் ஒருமருந்து. (உவின்.ருஅ.) [அந்ந-சோறு. ஹேதிந்-பேதஞ்செய்வது. அந்நத்திலேபோடச் சலமுண்டாதலால்; இந்தப்பெயரால் இரண்டுவகையான சரக்குகள் கடையில்விற்கப்படுகின்றன என்றும் ஔஷதத்துக்குப் பிரயோகிக்கப்படும் அந்நபேதி பிரகாசமான பச்சைநிறமுள்ளதாய்ப் பளிங்குக்கற்போல இருக்கின்றதென்றுஞ்சொல்லப்படுகிறது] (கா. வைத்.)

அந்நம்—1. உணவு. (உ-ம்) "பூதத்தேயந்நமாகியந்நததானுடம்புபுத்தி" (சி. சி. பர.லோகா.மதம். கரு) 2.சோறு. (உ-ம்.) "மூல்லேமுகையின்பொற்ப

மைந்தவன்னஞ்சொரிந்து கருணைகொட்டி" (கூர்மபு. தென். ருு.) 3. தானியம். (உவில். சுக) [அந்ந: அந்-உண்ணல். ந-விகுதி.] 4. வேற்றுச்சாதி. (உ-ம்) "அந்நமெனவீன்றவரிணமருண்டோடியபின்-றந்நியமிலாததொருதநயை சமித்தனளாய்" (கந்தபு. வள்ளி. கூஉ) [தமிழில் "நித்யம்" என்னும்வடமொழி யகரவொற்றுக்கெட்டுத் தகரவொற்றிரட்டித்து "நித்தம்" எனவந்ததுபோல "அந்யம்" என்னும்வடமொழியகர ஒற்றுக்கெட்டு நகரவொற்றிரட்டித்து "அந்நம்" என்முயிற்று.]

–அந்நம்–["அஹ்ந" என்னும் வடமொழியின்விகாரமாய்ச் சம்யுக்தபதங்களில் இரண்டாம்பதமாய் நிற்பது.] ஆறு நாழிகைகொண்டபகற்கூறு. இது:பூர்வாந்நம், பராந்நம், மத்தியாந்நம், அபராந்நம், சாயாந்நம் என ஐவகைப்படும். (வருஷாதி. வென். கூஎ.)

அந்நமயகோசம்—தூலதேகம்; இது தாய் தந்தையர் புசித்த அந்நத்தினாலே அவர்களுடைய சுக்கிலசுரோணிதங்களாற் பிறந்ததாயும் பாலினும் அந்நத்தினாலும் வளர்ந்ததாயும் இருப்பது. (வாசுதே. ககஎ.) உணவிலேயுண்டாகியதோல், எலும்பு, நரம்பு மச்சை, சோரி, சுக்கிலம் என்னும் ஆறுதாதுக்களுங்கூடி வந்தகோசம். (சி. சி. பர. மாயா. மதம். அ.) [அந்ந–சோறு. கோஶ– உறை.]

அந்நமயம்—1. அந்நமயகோசம். (உ-ம்.) "மதமூறு நல்லந்நமயம் பிராணமயத்தால்" (சூத. எக்கி. உத். ௩; கக) 2. சரீரம், போசநத்தாலாயது. (உவில். சுக.) [அந்நமய: அந்ந–சோறு. மயம்–ஆயது என்னும் பொருளுடைய ஒருவிகுதி.]

அந்நமலம்—1. அமேத்தியம். (ஆப். சுரு.) 2. மஸ்துநீர். (ஆப். சுரு.) 3. அரிசி பொங்கி வடிந்தநீர். (உவில். சுக.)
[அந்நமல: அந்ந – சோறு. மலம்– சளிநீர், வேர்வைநீர், அழுக்கு.]

அந்நமுரசு—யாசகர்க்கு அந்நங்கொடுக்கப்படுமென்றறிவிக்க அடிக்கப்படும் பறை. (சி.) [இப்படிச்செய்யப்பட்டு வருவது நைடத. நாட். சசு-ஞ்செய்யுளால் விளங்குகிறது. அந்ந–சோறு. முரஜ—ஒருவாச்சியம், பேரி.]

அந்நயம்—1. உடல். (சி.) 2. போசநத்தாற் பிறந்தது. (உவில். சுக.)
[அந்நஜ: அந்ந–சோறு. ஜ–பிறந்தது.]

அந்நரசம்—1. இரத்தம் முதலியவாக மாறும் அந்நத்தின் சாரம். (ஆப். சுரு.) 2. கஞ்சி. (செ.) [அந்நரஸ: அந்ந–உணவு. ரஸ–சாரம், சலம்.]

அந்நரேகை— உள்ளங்கைரேகைகளுளொன்று; அதுதன்னையுடையானுக்குச் சம்பத்துமிகுதியைக்காட்டுமென்பர். (உவின். ருஅ) (உ-ம்) "ஆகவே அந்நத்தின் ரேகையுண்டப்பனேசொல்லுகிறேனறியத்தானே–தாகவேபிர்ம வரையுள்ளடியில் மைந்தா தகையான முக்கோணங் கீறுமுண்டாம்–ஏகவே யிருபுள்ளிரண்டுரேகையென்ன சொல்வேன் மைந்தனுடையியல்புதானே" (இரேகை. ௩-கா. ௩௪.) [அந்ந–சோறு. ரேகா–வரை-கீறு.]

அந்நலார்—அந்தப்பெண்கள். (உவின் உரு.) 2. அழகியபெண்கள். (உ-ம்.) "அந்நலாரியல்புறவணிய" (நைடத. நகர. ௩.)
[அ–அந்த; அம்-அழகு. நலார்–பெண்கள்.]

அந்நவத்திரம்—சோறுஞ்சீலையும். (ஆப். சுரு.) [அந்நவஸ்த்ர அந்ந–சோறு. வஸ்த்ர - சீலை.]

அந்நவாகிசுரோதம்— கண்டத்தினின் றுணவை யந்நாசயத்துக்குக் கொண்டுசெல்லுங் கால்வாய். (உவில். சுக) [அந்நவாஹிஸ்ரோதஸ்: அந்ந–சோறு. வாஹி– கொண்டுசெல்வது. ஸ்ரோதஸ்-கால்வாய்.]

அந்நவிகாரம்—சுக்கிலம். (உவில். சுக) [அந்நவிகார. அந்ந - உணவு. விகாரம்–பரிணாமம்.]

அந்நவூறல் — கஞ்சி. (உவின். ருஅ) [அந்ந–சோறு. ஊறல் - ஊறியது.]

அந்நவேதி — அந்நபேதி. (உவின். ருஅ) [அந்ந + ஹேதி]

அந்நாகாரம்—சோற்றுணவு. (உவில். கூஉ) [அந்ந–சோறு. ஆகாரம்-உணவு.]

அந்நாசயம் — வயிற்றினுள்ளே உணவுபோய்த் தங்குமிடம். (ஆப். கரு௦) [அந்நாஶய: அந்ந - சோறு. ஆஶய தங்குமிடம்.]

அந்நாதரம்— சோறு புசித்தலிலுண்டாகும்விருப்பம். (உ-ம்.) "அந்நாதரம்போய்த்தவஞ்செய் தவிழ்பன்னமுணாய்" (ஞானவா. சுரகு. ௩ரு.) [அந்ந–சோறு. ஆதரம்–விருப்பம்.]

அந்நாதன்—1. பிறனுடைய உணவையுண்போன். (உவில். சஉ) 2. விட்டுணு. (உவில். சஉ.)
[அந்நாத அந்ந – உணவு. அத–உண்போன்.]

அந்நாபிடேகம் — விக்கிரகத்துக்கு சந்நத்தாற் செய்யும் அபிடேகம். (உவின். ருஅ.) [அந்ந – சோறு. அபிஷேகம் - முழுகச்செய்தல்.]

அந்நாலத்தி — விக்கிரகத்துக்குமுன்னும் மணவாளனுக்குமுன்னுங் கண்ணூறுகழித்தற்குச் செய்யுஞ் சோற்றாலாத்தி. (உவின். ருஅ.) [வழச்] [அந்ந–சோறு. ஆரதி– தீபங்காட்டல். "ஆரதி" ஆலத்தியென மருவிற்று. நெருப்புச்சொள்ளியைக்கருதும் ஆலாதம் என்னும் வடமொழியாகு பெயராய் மருவிவந்து ஆலத்தியாயிற்றெனினும் இழுக்காது]

அந்நாள்—அக்காலம், (உ-ம்.) "அந்நாளுற்றதெல்லாமவனுக்கரசனறைவான்" (இராமா. நகர்நீ. எ௩.) [அ–அந்த: நாள்–காலம்.]

அந்நியகாமி—வியபிசாரி. (உவில். சஎ.) 2. பரதாரகமநஞ் செய்கிறவன்.

(உவில். சக.) 3. பரபுருஷனிடம் போகிறவள். (உவில். சக.) [அந்யகாமி. காமி-போகிறவர்.]

அந்நியகுணசகநம்—தடாவிருத்திபதி னன்கினென்று; அது பிறர் குணத் திலே அழுக்காறின்றிப் பொறுத்தல். (மா. தொகையக.) [அந்யகுணம்- பி றர்குணம். ஸஹந-பொறுத்தல்.]

அந்நியகுலம்—வேற்றுக்குலம். (உவி ன். டுஅ.) [அந்ய-வேறு. குலம்-சா தி.]

அந்நியசந்மம்— வேறுபிறப்பு. (ஆப். சரு.) [அந்யஜந்ம. அந்ய-வேறு. ஜ ந்ம-பிறப்பு.]

அந்நியசாகன்—மார்க்கபதிதன். (மா. உவில். சஉ.) [அந்யசாக. அந்ய- வேறு. சாக- சாகையுடையோன்]

அந்நியசாதி— வேறானசாதி. (உ-ம்.) "அந்நியசாதியுந்தன்சாதியுமகன்றுநி ற்றறன்னியல்பு" (சி. சி. அளவை. ரு.) [அந்ய- வேறு. ஜாதி-ஒருங்கிர னவாகிய பலபொருட்குப்பொதுவா வதோர்தன்மை.]

அந்நியஸ்திரீ—பிறன்மனைவி, தன்னுடை யவள் அல்லாதவள். (ஆப். சரு.)[அ ந்யஸ்திரி. அந்ய-வேறு. ஸ்திரி- பெ ண்.]

அந்நியத்துவம்—அந்நியமா யிருக்குந் தன்மை. (உ-ம்.) "அப்பேதந்தானய ப்பவுண்டானற்றூனந்நியத்துவம் வ ந்திடுமே" (சூத. எக்கி. பூ. சுஉ. உகூ.) [அந்ய-வேறு. த்வம்-தன்மை.]

அந்நியதர—1. இரண்டனுளொன்று. (உவில். சக.) 2. மற்றையது. (உவி ல். சக.) [அந்யதர.]

அந்நியதரகந்மசம்—இரண்டில் ஒன் றன் கன்மத்தாற்பிறந்தது. (தர்க்காமி ர்.) [அந்யதர - இரண்டிலொன்று. காமஜம்-கன்மத்தாற்பிறந்தது.]

அந்நியதா — 1. தவறாய், திருத்தமில் லாததாய். (ஆப். சக.) 2. வேறுவித மாய். (உ-ம்) "அத்தையபியாமல ந்நியதாவாகச் சொல்வார்கள்" (சி. சி, க; சுக. சிவாக்.) 3. வேறொருபொ ழுது. (ஆப். சச.) [1,2. அந்யதா. அந்ய-வேறு. தா-வி தம். 3. அந்யதா]

அந்நியதாகர்த்தத்துவம்—ஈச்சுரனு டைய பிரபுத்துவ சாமர்த்திய கு ணங்கள் மூன்றனுள் ஒன்று; அது: கடத்தைப் படமாகச் செய்வதுபோ ல ஒன்றை மற்றொன்றாகச்செய்யுஞ் சாமர்த்தியம். (வேதா. சூ. சஎ. உ ரை)[அந்நியதா-வேறுவிதமான. கர் த்தத்துவம்-கர்த்தாவின் செயல்.]

அந்நியதாசித்தி — எடுத்துக்கொண்ட சாதநத்தி னின்று கருதிய தல்லாத வேறு சாத்தியஞ் சித்தித்தல். (உவி ல். சஉ.) 2. போலியாய்ச்சித்தித்தல் (ஆப். சச.) [அந்யதாஸித்தி. அந்யதா -வேறுவிதம்,தவறு. ஸித்தி- முடிவு.]

அந்நியதாஞாநம்—ஒன்றை வேறொன் றாய் அறிதல். (உ-ம்.) "ஒன்றையொ ன்றாகக்கருதுதலேயந்நியதாஞாநமெ னில்" (சிவப்பிர. உ: உ. உரை. சித ம்பர)[அந்யதா-வேறுவிதம். ஜ்ஞாந ம்-அறிதல்.]

அந்நியதாப்பிரதிபத்தி—போலி. அஃ து: ஒன்றுநின்றவிடத்து அதுபோன் ற வேறொன்று வந்தடைதல். (பி. வி.) [அந்யதா - வேறுவிதம். பிரதி பத்தி-அடைதல்.]

அந்நியதோவாதரோகம்—சர்வநேத் திர ரோகபேதத்திலொன்றாகிய சங் கரரோகம் ஏழுவகைகளுள் ஒன்று;இ து: கண், நெற்றி, வாதநரம்பு,மற்றை யநரம் பாகிய இந்தஇடங்களில் வா யுதங்கிச் சஞ்சரிக்கும்போது பிறந் து, கண்களிற் சிவப்பு, வீக்கம், அதி கநோவு, நீர்க்கம்ம லென்னுமிக்குண ங்களையுண்டாக்கும்.(சீவரட்.உருக.) [வாயுவானது தனக் கந்நிய ஸ்தா நமாகிய பித்த சிலேஷ்ம நரம்புகளி லும் வியாபித்து நேத்திரத்திற் கு பத்திரவத்தைக் கொடுப்பதால் வந்த பெயர்.]

அந்நியநாத்தி—வேறன்மை. (உ-ம்.) "அத்துவிதமென்ற சொல்லேயந்நிய நாத்தியையுணர்த்துமாயிட்டு" (சிவ ஞாநபோ. உ:க. அதி.வார்த்திக.) [அ ந்ய-வேறு. நாஸ்தி-அன்மை.]

அந்நியபாவம்—வேறாயிருக்கை. (உ- ம்.) "ஆன்மாசிவனுக் கந்நியபாவத் தையுமடைந்து" (சி.சி.அ:க.சிவாக்.) [அந்ய - வேறு. பாவம்-இருக்கை.]

அந்நியபிருத்து—காகம். (உவில். சக.) [அந்யபிருத்: அந்ய-வேறு. பிருத்- வள ர்ப்பது.]

அந்நியபிருதம் — குயிற்பறவை. (உவி ல். சக.) [அந்ய-பிறிது. பிருத்-வளர் க்கப்பட்டது.]

அந்நியபுட்டம்—குயிற்பறவை. (உவி ல். சக.) [அந்யபுஷ்ட: அந்ய-பிறிது. புஷ்ட:-வளர்க்கப்பட்டது. காகத் தினாலே வளர்க்கப்பட்டதென்றப டி.]

அந்நியம்—1. ஒப்பாகாதது. (உவில். சக.) 2. தகாதகாரியத்தைச் செய்ய வேண்டும் என்னுஞ் சங்கற்பம். (உ- ம்.) "மிகுங்கௌரவமந்நியம்" (சிவ ப்பிர. உ: உசு.) 3. வேறு. (உ-ம்.) "அந்நியமின்மையி னரன்கழல்செ லுமே" (சிவஞாநபோ. அஞ். சூத்.) [அந்ய.]

அந்நியமநஸ்கம்—கவனம் வேறாயிரு த்தல். (உவில். சஉ.) [அந்யமநஸ்க: அந்ய - வேறு. மநஸ்க - மநங்கொள் ளல்.]

அந்நியமபுபுட்சு—நியமமின்றிப் புசி க்கவிரும்புவோன். (உ-ம்.) "அந்நிய மபுபுட்சுக்கள்" (சி. சி. அ: ச. உ

ரை. சிவாக்.) [அ—எதிர்மறை. நியம ஹாஹாக்ஷ-நியமமாக உண்ணவிரும்புவோன்.]

அந்நியயோகவியவச்சேதம் — பிறிதினியைபுநீக்குதல். (பி. வி. ருo.) [அந்யயொகும் - பிறிதினியைபு. வ்யவச்சேத-பிரித்தல்.]

அந்நியர் — பிறர். (உ-ம்.) "அந்நியர்தமையொழித்தரனையேத்துதும்" (காஞ்சிபு. திருநெறி. ரு.)

அந்நியவாதி — 1. ஒவ்வாமற்பேசுவோன். (உவில். சஉ.) 2. புரட்டிப்பேசுவோன். (உவில். சஉ.) [அந்யவாதிந். அந்ய -வேறு. வாதிந்-பேசுவோன்.]

அந்நியவோடாலிகாகிரகம் — பாலர்களைத் தொடருகின்ற பன்னிரண்டுபெண்கிரகங்களுளொன்று; அஃது குழந்தைபிறந்தஎட்டாம் நாளிலாவது எட்டாம் மாதத்திலாவது எட்டாம் வருஷத்திலாவது சிசுவையல்லது தாயைப்பிடிக்கும். அப்போது அங்கத்துவேஷம், அடிக்கடி நாவை நீட்டுதல், இளைத்தல், நோவு, சதாஅழுகை, கண்மூடல் என்னுமிக்குணங்களையுண்டாக்கும். (சீவரட். உஉஎ.)

அந்நியன் — பிறன். (உ-ம்.) "அந்நியன்றனைக்கொண்டாங்கருமகம் நடத்துகின்ற" (இராமா. உத். இலவண. கரு.) [அந்ய:]

அந்நியாதீநன் — பிறருக்குக்கீழ்ப்பட்டிருக்கிறவன், பிறரைச்சார்ந்திருக்கிறவன். (உவில். சஉ.) [அந்யாயீந:அயீந—சார்ந்திருத்தல்.]

அந்நியாயம் — அநீதி. (உ-ம்.) "என்னையந்நியாயத்தாலேயெரிவித்தசாபம்" (இராமா. உத். இலவண. கசு.) [அந்யாய: அ — எதிர்மறை. ந்யாயம்-நீதி.]

அந்நியேத்துகவாதரோகம் — வாதரோகவகையுளொன்று; அது: உப்புவஸ்து, உட்டணபதார்த்தம், சிலேட்டுமசீதளபதார்த்தம், இலைக்கறியென்னு மிவைகளினாற்பிறந்து தோள், முதுகு, கழுத்து, சிரசு, விலா என்னுமிடங்களிலே வேகமாக வியாபித்துப் பித்தத்துடன்கூடி யொன்றைவிட்டொருநாளில் மிகுவேதனை செய்வது. (சீவரட். கஎசு.)

அந்நியை — பிங்காசத்தி. (பௌட். பதி சo.) [அந்யா.]

அந்நியோந்நியகலகம் — ஒருவரோடொருவர் இளையாது செய்யுங்கலகம். (உவில். சஉ.) [அந்யோந்யகலஹ: அந்யோந்ய—ஒருவருக்கொருவர். கலஹ- சண்டை.]

அந்நியோந்நியம் — ஒன்றற்கொன்றிருக்குஞ்சம்பந்தம். (உவில். சஉ.) [அந்யோந்ய: அந்ய + அந்ய— வேறு.]

அந்நியோந்நியவத்தியாசம் — இந்தவஸ்துவின் தர்மம் அந்தவஸ்துவினிடத்தும், அந்தவஸ்துவின் தர்மம் இந்தவஸ்துவினிடத்துமாகத்தோற்றப்பட்டது. (வாசுதே. எஎ.) [அந்யோந்ய-ஒன்றற்கொன்று. அத்யாஸ-விபரீதம்]

அந்நியோந்நியவிருத்தம் — அந்நியோந்நியவிரோதம் (சி.சி.க: சுக. உரை. சிவாக்.) [அந்யோந்ய-ஒன்றற்கொன்று. வ்ருத்- விரோதம்.]

அந்நியோந்நியவிரோதம் — ஒன்றற்கொன்று விரோதம். (உ-ம்.) "சகல விஷயங்களுக்கும் நித்தியத்துவஞ் சாதிக்கின்றமெய்ஞ்ஞானத்துக்கும் அவ்விடயங்களுக்குச் சத்தியத்துவஞ் சாதிக்கின்றதேகத்தினால் அநுபவிக்கும் பிராரத்தவினைக்கும் அந்நியோந்நியவிரோதமாய்" (வேதா. சூ. கசுரு. உரை.) [அந்நியோந்ய-ஒன்றுக்கொன்று.விரோத-முரண்.]

அந்நியோந்நியாச்சிரயதோஷம் — இருபொருள்கள் ஒன்றற்கொன்று பற்றுக்கோடாயிருக்குமென்னுந்தோஷம்; அது: இருவினைகள் உடலின் காரியமாயும் உடல் இருவினையின் காரியமாயுமிருக்குமென்று சொல்லுதல்போல்வது. (சி. சி. உ: சo. சிவாக்.) [அந்யோந்ய - ஒன்றுக்கொன்று. ஆச்ரய - பற்றுக்கோடு. தோஷம்—குற்றம்.]

அந்நியோந்நியாச்சிரயம் — இருபொருட்கள் ஒன்றுக்கொன்றுபற்றுக்கோடாக இருத்தல். (சி. சி. அ: உ. உரை. சிவாக்.) ஒன்றனையொன்றுபற்றுதல். (சிவஞா.) [அந்யோந்ய - ஒன்றையொன்று. ஆச்ரயம்-பற்றுதல்.]

அந்நியோந்நியாபாவம் — ஒன்றிலொன்றில்லாதிருக்கை. (உ-ம்.) "கடத்திற்படமும்படத்திற்கடமும இல்லையென்பது" (வேதா. சூ.கூருஉரை.) [அந்யோந்யம்-ஒன்றுக்கொன்று. அபாவம். இன்மை.]

அந்நியோந்நியாலங்காரம் — ஒன்றுக்கொன்று தவியணி: அஃது: ஒன்றற்கொன்று பகரித்தலைச் சொல்லுதல். (உ-ம்.) "திங்களிரவால்விளங்குஞ்செப்பியவத்திங்களினாற் - கங்குன்மிக விளங்குங் காண்" (இலக்கணவிள. ககூஉ. விசாக.) [அந்யோந்ய—ஒன்றுக்கொன்று. அலங்காரம் - அணி.]

அந்நுவயச்சொல் — பரார்த்தாநுமானமென்று சொல்லப்பட்ட சொல்லினொருவகை; அது: திருட்டாந்த பூர்வமாகப் போதிக்கும் உடம்பாட்டுச்சொல். (உ-ம்.) "தொக்கவிவற்றாற்பிறர்தெளியச் சொல்லாகுமச்சொல்லுமிக்க வந்நுவயத்தினொடுவெதிரேகச்சொல்லெனவிரண்டாம" (சி. சி. அளவை. அ.) [அந்வயம்—உடம்பாடு. சொல் - வாக்கியம்.]

அந்நுவயம் — 1. அந்நுவயச்சொல். (உ-ம்.) "புகையாலனலுண்டடுக்களை போலென்னப்புகறலந்நுவயம்" (சி. சி. அளவை. கக.) 2. ஒருவாக்கியத்திலே எழுவாய், பயனிலை, செயப்ப

டு பொருள் என்னுமிவைகளைவெளிப்படுத்தற்குப் பொருத்தமான பதங்களை யெடுத்துக் கூட்டிக்கொள்ளுதல். (வேதா. சூ. அ.) 3. காரணகாரியங்களின்து உடம்பாட்டுரூடமான சம்பந்தம். (ஆப். சரு.) 4 சம்பந்தம். (ஆப். சரு.) 5. பின்போதல். (ஆப். சரு.) 6. வமிசத்தொடர்ச்சி. (ஆப். சரு.)
[அநுவ: அநு-பின். அயம்—போதல்.]

அந்நுவயலக்கணம் — பொருத்தமான பதங்களையெடுத்துக் கோத்துச் சொல்லப்படும் வாக்கியத்திற்குரிய இலக்கணங்கள்; அவை: க்ருத்தா, கருமம், கிரியை, விசேடணம், விசேடியம் என்பன. (உ-ம்.) "கோத்துரை செய்விசேட விசேடியங்கருத்தாக் கருமங்கொள் கிரியை யிவையைக் தந்நுவய விலக்கணம்" (வேதா. சூ. அ.) [அந்வய- கூட்டிக்கொள்ளுதல். லக்ஷண.]

அந்நுவயவியதிரேகி — பரார்த்தானுமான வகையுளொன்று; அது: அந்நுவயத்தானும் வியதிரேகத்தானும் வியாத்தி யுடையது. "யாண்டுப் புகை, ஆண்டுத்தீ; எங்ஙனம்; அட்டிலில்" என்பது அந்நுவயவியாத்தி. யாண்டுத்தியில்லை, ஆண்டுப் புகையுமில்லை, எங்ஙனம்; மடுவில்" என்பது வியதிரேகவியாத்தி. இப்படியிருவகை வியாத்தியினாலு மலைக்குத் தீயுண்மை சாதிக்கப்படக்கிடந்ததனால் இந்தநியாயம் அந்நுவயவியதிரேகி. (தர்க்கபா.உக)[அந்வயவ்யதிரேகிந்: அந்வய-உடன்பாடு. வ்யதிரேகிந் - எதிர்மறையுடையது.]

அந்நுவயவியதிரேகியநுமாநம் —பிரதிஞ்ஞை, ஏது, திருட்டாந்தம், உபநயம், நிகமநம் என்னும் ரூபங்கள் ஐந்தினால் அந்நுவய வியதிரேகவியாத்திகளைக்கொண்டுசொல்லப்படும் அநுமாநம். (சி.சி. ௧: ௧. உரை. சிவாக்.)

அந்நுவயவியாத்தி—"யாண்டுப்புகை ஆண்டுத்தீ" என்பதிற்போலஅந்நுவய உண்மையது காட்சியைச் சொல்லும் உடனிகழ்ச்சி நியமம். (தர்க்கபா. உக சப்த)[அந்வயவ்யாப்தி: அந்வய-உடன்பாடு. வ்யாப்தி-உடனிகழ்ச்சி நியமம்.]

அந்நுவாகாரியபசநம் — தக்ஷிணாக்கிநி. [அந்வாஹார்யம் -ஒரு சிராத்தம். பசநம் - அக்கிநி. ஆப். ௬௭அ.]

அந்நுவாகாரியம் — 1. இறந்த பெற்றோருக்கு முதல்வருடத்திலேமாசந்தோறுஞ்செய்யப்படும் மாசிகசிராத்தம். (உவில்.௬உ.) 2. மாசந்தோறும்வரும் அமாவாசித் திநத்திலே பிதிருக்குச் செய்யுஞ்சிராத்தம். அது புதிதாயும் நாற்றமில்லாததாயும் இருக்கிற மாமிசத்தாற் செய்யத்தக்கது. (மநு. ௩: ௧உ௩.)
[அந்வாஹார்ய: அநு-பின். ஆஹார்ய - உண்ணப்படுவது.]

அந்நுவாசநம்— 1. அபானவாயிலால் உள்ளேபுகட்டப்படும் நெய்ப்பற்றுள்ள ஒருமருந்து. (உவில். ௬உ.) 2. உபத்திரவம். (உவில். ௬உ.) 3. துக்கம். (உவில். ௬உ.) 4. தொழில்செய்யுமிடம். (உவில். ௬உ.)
[அந்வாஸந: அநு - பின். ஆஸந - இருப்பு.]

அந்நுவாதேயம்— கணவனுடைய சுற்றத்தாராற் பெண்ணுக்கு விவாகத்தின் பின் கொடுக்கப்படும் பொருள். (உவில். ௬உ.) [அன்வாதேய: அநு-பின். ஆதேய -எடுக்கப்படுவது.]

அந்நுவாரோகணம் -பெண்ணானவள் இறந்த தன்நாயகனோடவன்பிரேதஞ்சுடுகட்டையிலாவது பின் வேறாக அடுக்கப்பட்ட சுடுகட்டையிலாவது தகிக்கப்படும்படி யேறுதல். (ஆப். ௬௬) [அந்வாரோஹண: அநு- பின். ஆரோஹண—ஏறுதல்.]

அந்யதாகர்த்திருத்துவம்—அந்நியதாகர்த்திருத்துவம். (உ-ம்.) "கர்த்திருத்துவமோடகர்த்திருத்துவம்பினந்யதாகர்த்திருத்துவமே யத்தன் மெய்ப்பிரபுத்துவவலி" (வேதா. சூ. ௬௭.)
அந்யதா-வேறுவிதம். கர்த்ருத்வ-செய்வோன்றன்மை.]

அந்யாயம்—அந்நியாயம். (ஆப். ௬௬.)
[அ-எதிர்மறை. ந்யாய-நீதி.]

அந்யோந்யாலங்காரம்— அந்நியோந்நியாலங்காரம். (குவல. ௬௩)

அந்வயம் — 1. பொருத்தமுள்ளது. உடப்பாடாய்வருவது(சி.சி. அளவை. அ. சிவாக்.) 2. "அந்நுவயம்" என்னும்பதத்திற்குண்டாகிய அர்த்தங்கள் இதற்குமர்த்தங்களாகும்.
[அந்வய அநு-பின். அயம்-போதல்]

அந்வயித்தல் — சேர்தல், கூடுதல். (உ-ம்.) "தொன்மையிற் றொடர்ந்தவாய்மையறத் தொடுந் தொடர்ந்திலோரை யந்வயித்தோரும்" (இராமா. இரணிய. ௧௩௬.) [மூ. அந்வய.]

அந்வாசயம் — 1. அந்வாசயவும்மை. (உ-ம்.) "மன்மொழித்தோற்றஞ் சமுச்சயத்தோடு மந்வாசயமே" (பி. வி. உ௩) 2. பிரதாந விஷயத்தோடப்பிரதாநமான ஒன்றைச் சேர்த்துச் சொல்லல். (ஆப். சரு.)
[அந்வாசய: அநு - பின். ஆந்-முன். சி-சேர்த்தல். அ - ஒருவிகுதி.]

அந்வாசயவும்மை—ஒருபெயர் இருவினைகொள்ளும் எதிர்மறையும்மை; அது: சாத்தன் பசுமேய்த்தும் வருவன் என்னுங்கால், மேய்க்காதும் வருவன் எனப் பின்னும் ஒருவினைகொள்ளுவதுபோல்வது. (பி. வி. உ௩.) அந்வாசய - இணைத்தல். உம்மை "உம்" என்னும் ஓரிடைச்சொல்.]

அந்விதம் — கூடிவருவது, தொடர்ந்துவருவது. (உ-ம்.) "யுத்தியந்விததர்க்கபாஷையை" (தர்க்கபா. ௧; ஆப். ௬௬.) [அந்வித: அநு- பின். இத-போதல்.]

அநக்கம் — குருடு. (ஆப். உரு.)[அநக்ஷ அந்—எதிர்மறை. அக்ஷ—கண்.]

அநக்கரம் — 1. சொல்லத்தகாதது. (வாச) 2. நிந்தை. (வாச.) [அநக்ஷர: அந்-எதிர்மறை. அக்ஷர-எழுத்து]

அநக்கரன் — 1. ஊமை. (ஆப். உரு.) 2. கல்வியில்லாதவன். (ஆப். உரு.) 3. சொல்லத்தகாதது சொல்வோன். (ஆப். உரு) [அநக்ஷர. அந்-எதிர்மறை. அக்ஷர-எழுத்து.]

அநக்கிநி—அக்கினியல்லாத வஸ்து. (ஆப். உரு.) 2. அக்கினியில்லாமை. (ஆப். உரு.) 3. உதராக்கினியின்சேட்டையற்றவன். (ஆப். உரு.) 4. விவாகம்பண்ணாதவன். (ஆப். உரு.) [அநக்நி அந்-எதிர்மறை. அக்நி-நெருப்பு.]

அநகங்காரம் — அகங்காரமின்மை. (உவில். உரு.) தானென்கிற அகங்காரமின்மை. (பகவற்கீ. கங: சஉ.) தேகேந்திரியங்களிற் றானென்கிற அகங்காரமற்றிருப்பதுந் தன்னுடையதல்லாத வஸ்துக்களிற் றன்னுடையதென்கிற அபிமாநமற்றிருப்பதும். (பகவற்கீ. கங; சஉ. ரா.) தன்னிடத்தில் இல்லாமலிருக்கிற குணங்கள் தன்னிடத்திலிருப்பதாக எண்ணியஞ்ஞாந மடையாதிருத்தல். (பகவற்கீ. கங: சஉ. ஸ்ரீ. வி.) [அநஹங்கார. அந்-எதிர்மறை. அகங்கார-கர்வம்.]

அநகம் — 1. அழகியது. (ஆப். உரு.) 2. இன்பமானது. (உவில். உசு.) 3. கிழானது. (உவில். உசு.) 4. பாவமின்மை. (ஆப். உரு.) (உ-ம்.) "அநகமாகெநிபடரடிகளும்மலால்" (இராமா. சடாயுவுயிர். நக.) 5. புல்லுருவி. (கா. வைத்.) 6. மாசின்மை. (உ-ம்.) "அநகமார்ந்துடலமுந்தன்வசப்படும்" (சூத. ஞாந. சஉ. கக.) [1, 2, 4, 6. அநவ. அந்-எதிர்மறை. அவ-தவறு, மாசு, பாவம். 3. அநக.]

அநகர்—1. அழகுடைய ஆடவர். (உ-ம்.) "அநகருமணங்களுருமம்மலர்ச்சோலைநின்று - வநகரிபிடிகளோடுவருவனபோலவந்தார்" (இராமா. நீர்விளை. க.) 2. அழகுள்ளவர். (ஆப். உரு.) 3. பாவமற்றவர், மறுவற்றவர் (உ-ம்) "அநகரநாளாங்கிதர்தமை" (திருப்பு. சஈரு.) 4. மேன்மக்கள். (உ-ம்.) "கயவரெனவநகரெனத்தரமறியாதரசரைப்போலடைந்தார் பாலனுகுஞ்செல்வம்" (ஞாநவா. வைராக். ருo.) [அந்-எதிர்மறை. அவம்-தவறு, பாவம்.]

அநகன்—1. அருகன். (சூ. நிகண். ச:ரு) 2. கடவுள். (உ-ம்) "அநகன்கண்டதற்கருள்செய்தேகினன்" (கந்தபு. தெய்வ. உoஅ.) 3. சிவன். (ஆப். உரு.) 4. பதினொரா மநுவின் காலத்துள்ள ஏழுமுநிவருளொருவன். (கூர்மபு. மநு. உசு.) 5. பாவமில்லாதவன். (உ-ம்.) "அநகனச்சுதனுருத்திரன்" (சிவதரு. ஐவகை. கூரு) 6. விஷ்ணு. (ஆப். உரு.) [அநவ. அந்-எதிர்மறை. அவ-பாவமுடையோன்.]

அநங்கதிலகை —ஓர் அப்சரஸ்திரி. (செ)

அநங்கம்— 1. ஆசாயம். (ஆப். உரு.) 2. இருவாட்சிப்பூஞ்செடி. (கா. வைத்.) 3. உடலின்மை. (உ-ம) "அங்கமநங்கமானமரனுருடன்" (பாரத. அருச்சுனன்றீ. கூo.) 4. மநம். (ஆப். உரு.) 5. மல்லிகைக்கொடி. (கா. வைத்.) 6. வாயு. (ஆப். உரு.) [அநங்க அந்-எதிர்மறை. அங்க-உடம்பு, உறுப்பு. உறுப்புப்போல ஒருவர் விரும்பத்தக்க பூவுடையவாயும் உறுப்பல்லாதிருத்தல்பற்றி உ-ம் ரு-ம் பொருட்களுக்குப் பெயராயிற்று.]

அநங்கமாதா — 1. அரக்கு. (செ.) 2. செம்பஞ்சு. (செ.)

அநங்கர்—மதநனெனப்படுவார் பலர். (உ-ம்) "கோடிகோடி யநங்கரெய்தார்கொலோ" (திருவிளை. மாபாத. ரு.) [அந்-எதிர்மறை. அங்க-உடம்பு.]

அநங்கலீலை—மதநநூல் வழியாடும் விளையாட்டு. (உ-ம்.) "அநங்கலீலையிற்றோய்காம வமுது" (இரகு. மாலை. சoகூ.) [அநங்க-மன்மதன். லீலா-விளையாட்டு.]

அநங்கன் — உடம்பில்லாதவன். (உ-ம்) "உடம்பிழந்தநங்கனாயமன்மதன்" (தேவார. திருத்துருத்தி. அ. சம்.) 2. மன்மதன். (உ-ம்.) "அநங்கனை யொழிய மண்ணிலாடவர்த்தெரிகிர்" (நைடத. அன்னத்தைக்கண். ச.) [அநங்க: அந்-எதிர்மறை. அங்க-உடம்புடையவன். அங்கமில்லாமையினலும் அங்கமுடையான்போல இருத்தலைக் கருதுவதோர் பெயர். "அந்" ஒப்புமை யுள்ளிட்ட அன்மைப்பொருளில் வந்தது.]

அநந்த—மன்மதன். (உ-ம்) "தடங்கணஞ்சுண டநங்கைக்காய்ந்தபிரான்" (தேவார. கச். ரு. சம்.) [அந் -எதிர்மறை. அங்க-உடம்பு.]

அநச்சுவம்—குதிரையல்லாதது. (பி. வி. உo) [அநஶ்வ-அந்-எதிர்மறை அஶ்வ-குதிரை.]

அநசநம் — உபவாசம். (உ-ம்) "தவம், சாந்திராயணம், கிர்ச்சிரம், மாசோபவாசநம் அட்டமியாதி அநசந விரதங்களினுல்" (சி. சி. அ. சிவாக்) அந்-எதிர்மறை. அஶந-உணவு]

அநசூயம் — அழுக்காறின்மை. (ஆப். உஎ.) 2. பிறர்குணத்திலே குற்றமேற்றுதலின்மை. (ஆப். உஎ.) [அநஸூய: அந் - எதிர்மறை. அஸூயா-அழுக்காறு; பிறர்குணத்திற்குற்றமேற்றல்.]

அநசூயை—1. அழுக்காறின்மை. (உவில். உஅ.) [அநஸூயா: அந் -எதிர்மறை. அஸூயா-பொறாமை]2. அத்திரிமுநியின் மனைவி. (ஸ்ரீராமா. விராத. ரு.)

அநஞ்சநம்—1. அஞ்சநமின்மை. (ஆப். உரு.) 2. ஆகாயம். (ஆப். உரு.

3. பரப்பிரமம். (ஆப். ௨டு.) [அநஜா: அந்-எதிர்மறை. அஜா-குற்றம்.]

அநட்சரசத்தம்—எழுத்தொலியல்லாத ஒலி. (பௌட். பிந்து. கடு. உரை.) [அநக்ஷரஸப்த: அநக்ஷர-எழுத்தல்லாத. ஸப்த-ஒலி.]

அநட்சராத்மகம் — எழுத்தல்லாததலாய ஓசை. (த. நி. போ. உஅஉ.) [அநக்ஷர-எழுத்தல்லாத. ஆத்மக-சொரூபம்]

அநணு—1. அணுவின்மை. (கைவல். சந்தேச. கஙஎ.) 2. அற்பமான அணு. (உவில். உகூ.) [அநணு: அந்- எதிர்மறை. அற்பம். அணு-நுண்ணியது.]

அநத்தம் — பயனற்றது. (உ-ம்.) "அநத்தமானவுள்ளந்தான்" (ஞானவா. உபசாந்.கக) [அந்-எதிர்மறை. அர்த்த-பயன்.]

அநத்தியயநம் — ஓதுதலொழிந்திருக்க வேண்டிய காலம். (பராசர. ஆசார. உ௦.) [அநத்யயந: அந்-எதிர்மறை. அத்யயந-ஓதுதல்.]

அநத்தியவசாயாத்துமா—பாவம்; அது: கிரகக ஆத்துமாவினுடைய சுபாவம். (பௌட். புஂஸ். சசஇ.)[அநத்யவஸாயாத்மா:]

அநத்தியாயம் — அநத்தியயநம். (பராசர. ஆசார. உ௦; ஆப். உடு.) [அநத்தியாடதிநத்தின்முதனாளிராத்திரி. அநத்யாய: அந்-எதிர்மறை. அத்யாய-அத்தியயநம்.]

அநதிக்கிரமம் — அதிக்கிரமமின்மை. (வாச.) [அநதிக்ரம: அந்- எதிர்மறை. அதிக்ரம-கடத்தல்.]

அநதிக்கிராந்தம்—கடவாதது. (வென். உஉடு.) [அநதிக்ராந்த: அந்-எதிர்மறை. அதிக்ராந்தம்-கடந்தது.]

அநதிக்கிராந்தவிந்துகபாசிவம் — விந்துவை நீங்காத இலயர்; இவர் மகாமாயையினது பரநாதப் பிரதேசத்தை யதிட்டிப்பவர். (சி. சி. உ: எசு. ஞாநப்.) [அநதிக்ராந்தவிந்துக-கடவாதவிந்துவையுடைய. பரசிவ-மேலானசிவம்.]

அநதிக்கிராந்தவிந்துகபாசத்தி—சிவனுடைய நவபேதத்துளொன்று; அது: பரவிந்துவை யதிட்டிக்குஞ்சிவசத்தி. (சி. சி. உ: எசு. ஞாநப்.) [பராசக்தி-மேலானசத்தி.]

அநதிகதம்—1. அறியப்படாதது. 2. படிக்காதது. (சி. சி. அளவை. க. சிவாக்) [அநயிகத: அந்-எதிர்மறை. அதிகத-அறியப்பட்டது.]

அநதிகதார்த்தகந்திரு—ஒருகாலுமறியாத வஸ்துவை யறிவிப்பது. (உ-ம்.) "பாட்டர் அநதிகதார்த்தகந்திரு பிரமாணமென்பர்" (சி. சி. அளவை. க. சிவாக்) [அநதிகதார்த்தகந்த்ரு: அநதிகதார்த்த; கந்த்ரு-அறிவிப்பது.]

அநதிகதார்த்தம்—அறியப்படாத வஸ்து. (சி. சி. அளவை. க. சிவாக்.) [அநதிகதார்த்த: அநதிகத-அறியப்படாத. அர்த்த-வஸ்து]

அநதிகாரம்—அதிகாரமின்மை. (வாச) [அநதிகார: அந்-எதிர்மறை. அதிகார.]

அநதிகாரி—1. அதிகாரமில்லாதது. 2. அதிகாரமில்லாதவன். (உ-ம்.) "மேல்வினைகூடா தநதிகாரியாதலினால்" (வேதா. சூ. கசுஉ.) [அந்-எதிர்மறை.அதிகாரி-அதிகாரமுடையவன்-து.]

அநதிசயம் — அதிசயமின்மை. (வாசு தே. சுடு.) [அந்-எதிர்மறை. அதிசயம்-மேன்மை.]

அநதிதேசம் — அதிதேசமின்றி யுணர்த்துவது. [அநதிதேச: அந் - எதிர்மறை. அதிதேச-மாட்டெறிந்துசொல்லுதல். வென். கக.]

அநதிரேகம் — அதிரேகமின்மை. [அந்-எதிர்மறை. அதிரேகம்-மிகுதி.]

அநந்த—1. நிவிர்த்திகலையிற் பிருதிவி தத்துவத்திலுள்ள நூற்றெட்டுப்புவநங்களு ளொன்று. (சி- லி. கிரி உச. தாற்.) 2. வித்தியாகலையிலே இராக தத்துவத்திலுள்ள ஐந்து புவநங்களுளொன்று. (சி-லி. கிரி. உச. தாற்.) [அநந்த.]

அநந்தகீர்த்தி — அளவிறந்தகீர்த்தியுடையவர். (உ-ம்.) "அச்சுதனநந்தகீர்த்தியாதியந்தமில்லவன்" (நாலாயிர. திருச்சந்த. ககஎ.) [அநந்த-அளவற்ற. கீர்த்தி-புகழ்.]

அநந்தகோடி — எண்ணத்தொலையாதன. (உ-ம்.) "தேர்நிரையநந்தகோடி செறிந்தன திசைகளெங்கும்" (கந்தபு. தெய்வ. கக.) [அநந்த-அளவற்ற. கோடி-ஓரெண்.]

அநந்தசத்தி — 1. அளவிலாற்றலுடைமை; இது: கடவுளுடைய அருங்குணங்களுளொன்று. (உ-ம்.) "குறையாமல் வளர்சத்தி யநந்தசத்தி" (கூர்மபு. பிரபஞ்ச. சு.) 2. கடவுள். (வாச.) [அநந்தசக்தி: அநந்த-அளவற்ற. சக்தி-வலிமை.]

அநந்தசதுட்டயம்— ஆருகதமதத்திற் சொல்லப்பட்ட மோக்ஷத்திற் பெறும் பயனாகிய அநந்தஞானம், அநந்ததரிசனம், அநந்தவீரியம், அநந்தசுகம் என்னும் நான்குவகை. (உ-ம்.) "அநந்தசதுட்டயமவையெய்த" (யா. காரிகை. உறுப். கூ. உதாரணப்பாட்டு) [அநந்தசதுஷ்டயம்- நான்கன்கூட்டம்.]

அநந்தசதுர்த்தசி — புரட்டாதிமாசத்துச் சுக்கிலபக்க சதுர்த்தசி திதி; இது: விட்டுணுவைப் பூசிக்குமொருவி

சேடதிநம். (உவில். உஎ.) [அநந்த ஜீர்ஷஶி: அநந்த-அநந்தன். ஶீர்ஷ ஶி-பதினான்காந்திதி.]

அநந்தசயநம் — சர்ப்பசயநம். (செ,)2. மலையாளதேசத்துள்ள ஒருவிட்டுணு தலம். (செ.)
[அநந்த—ஆதிசேடன். ஶயநம்-படுக்கை.]

அநந்தசயநன் — விட்டுணு. (உ-ம்.) "அக்குவடமுடுத்தாமைத்தாலிபூண்டவநந்தசயநா" (நாலாயிர. தளர்நடை. உ.) [அநந்தஶயந: அநந்த- ஆதிசேடன். ஶயநன்-படுக்கையாகவுடையவன்.]

அநந்தசாயி — விட்டுணு. (உ-ம்.) "கருநிறத்தநந்தசாயி" (பாரத. பதினெண். அ. வென். கஙசு.) [அநந்தஶாயி: அநந்த- ஆதிசேடன். ஶாயி - கிடப்போன்.]

அநந்தசீரிடை— வாசுகியின் மனைவி. (உவில். எஎ.) [அநந்தஶீர்ஷா: அநந்த—அநேகம். ஶீர்ஷா-தலை.]

அநந்தசுகம் — வரம்பிலா இன்பம். (த. நி. போ. உஎஉ.) [அநந்த - அளவற்ற. ஸுக-இன்பம்.]

அநந்தநுபி— கடவுள். (உ-ம்.) "சோதியேசுடரேயநந்தசொரூபியே" (நல். பார. பாசறை. ௬௬) [அநந்த- அளவில்லாத. ஸ்வரூபி - இயல்புடையோன்.]

அநந்தஞாநம் — வரம்பிலா அறிவு. (த. நி. போ. உஎஉ.) [அநந்த-அளவில்லாத. ஜ்ஞாநம்- அறிவு.]

அநந்தஞாநி — 1. கடவுள். (செ.) 2. பார்ப்பதி. (செ) 3. பிரமன். (செ)
[அநந்த- அளவில்லாத. ஜ்ஞாநி- அறிவுடையவன்-வள்.]

அநந்தத்துவம் — அநந்தமாயிருக்குநதன்மை. (உ- ம்.) "அந்தவநந்தத்துவ தன்மமானது" (பௌட். பசு, எஎ. உரை.) [அநந்த - அளவில்லாத. த்வம்-தன்மை.]

அநந்ததரிசநம் — வரம்பில்லாக்காட்சி. (த. நி. போ. உஎஉ.) [அநந்த - அளவில்லாத. தர்ஶந-காட்சி.]

அநந்ததிருட்டி — 1. இந்திரன். (ஆப். உடு. ஆயிரங்கண்ணுடைமையின்)2. சிவன். (ஆப். உடு. எங்கும் பார்த்தலால்.)
[அநந்தத்ருஷ்டி: அநந்த - அந்தங்கெட்ட; அளவில்லாத. த்ருஷ்டி - கண்.]

அநந்ததிருதியை — புரட்டாசி, மார்கழி, வைகாசியென்னும் மாசங்களில் வருஞ் சுக்கிலபக்க திருதியை. (உ-ம்.) "தேவருந்தொழு மநந்ததிருதியைவிரதந்தன்னை" (மச்சபு. அநந்த. ௩, ச.) [அநந்த; த்ருதீயா - மூன்றாந்திதி.]

அநந்ததீர்த்தகிருத்— பதினான்காஞ் சமணதீர்த்தகன். (உவில். உஎ.) [அநந்ததீர்த்தக்ருத்.]

அநந்ததீர்த்தம் — சிதம்பரத்திலே திருக்கோயிலுக்கு மேற்கே திருவநந்தேச்சுரத்துக்கு முன்னுள்ள ஒரு தீர்த்தம். (கோயிற்பு. வரலா. ௬.) [அநந்த - ஆதிசேடன். தீர்த்த - பவித்திரநீர்.]

அநந்ததேவன் — 1. அநந்தேசுவரன். 2. ஆதிசேடன். (ஆப். உடு.) 3. சேடசயநத்திற் றுயில்கொள்ளுகிற விட்டுணு.
[அநந்ததேவ: அந்—எதிர்மறை. அந்த-முடிவு; அநந்த -ஆதிசேடன். தேவ; தேவன்-]

அநந்ததை — நித்தியம. (உவில். உஎ.) [அநந்ததா.]

அநந்தன் — சர்வேசன். (உவின். ௫௫.) [அநந்த-அளவிறந்தவைகளுக்குநாயகதலைவன்.]

அநந்தநான்மை — அநந்தசதுட்டயம். (உ-ம்.) "ஆடெழிற்றோளினையநந்தநான்மையே" (சிந்தா. முத்தி. உசஅ) [அநந்த-முடிவில்லாத. நான்மை—நான்கு தன்மை.]

அநந்தம்—1. அந்தங்கெட்டது, அழகின்மை,2.அறுகு. (கா. வைத்)3. ஆகாயம். (உவில். உ௬)4.எண்ணத்தொலையாதது. (உ-ம்) "இக்கதையுமநந்தமாம்பேதமாகும்" (கந்தபு. அவையட. சடு.)5.எல்லையின்மை. (உவில். உ௬.) 6.ஓரெண்-பத்துக்கோடிகோடாகோடி(உவின்.௬௫)7. குப்பைமேனி. (கா. வைத்.) கோளகபாசாணம்.8. உவின் ௫௫) 9. சிறுகாஞ்சொறி.(கா. வைத்) 10 நித்தியமானது.(உவில்.உ௬)11பரப்பிரமம். (ஆப்.உடு)12.பெருநன்னாரி. (கா.வைத்)13 பொன்.(ஆசிரியநி. ௬-) 14முடிவில்லாதது. (உ-ம்)"அநந்தமானதத்பதத்தி லிருந்தும்" (ஞாநவா. தாசூர. உக.) 15.மேகம். (ஆப். உடு.) [அநந்தர் அந்—எதிர்மறை. அந்த- முடிவு.]

அநந்தமயன் — அந்தரியாமி. (உ-ம்.) "சூத்திரான்மகனென் பெயர்முதலாகச் சொற்றன நிரணிய கருப்பத்-கேத்துகாரணமா முடம்புறுசமட்டியெனுமபிமாநி யவ்வியத்தன் -வாய்த்தகாரணமாமுபாதிகனநந்தமயன் பரதேவதைபரம-ணுத்ததற்பதமுக்கியார்த்தனென்பெயர்முனந்தரியாமி பெற்றிடுமே" (வேதா. சூ. சஉ.) [அநந்தமய: முடிவின்றி வியாபித்திருத்தலின் வந்தபெயர்.]

அநந்தர்— சுத்தத்த்துவங்களுள் ஒன்றாகிய ஈசுரதத்துவத்திலிருக்கும் அட்டவித்தியேசுரர்களுள்ளேதலைமை பெற்றவராகி யசுத்தாத்துவ கர்த்தாவாயிருக்கிறவர். (சி. பி. கை. உ௬.) இவர் மாயைக்குமேற் சுத்தவித்தைக்குக் கீழிருந்த விஞ்ஞானகலருணின்று மலபரிபாகத்திற்குத் தக்கபடி ஈசுர தத்துவத்திற் போகப் பெற்றவர். (சி-லி. ஞாந. க - ம், ௬௦ — ஞ் சுலோதாற்.) இவர் அசுத்தமாயையின்

ஏகதேசத்தைக் கலக்கிக் கலைமுதலிய வற்றைத் தோற்றுவிப்பர். (உ-ம்.) "அருத்திமிகுங்கலைகால நியதியுடன் வித்தையராகமிவை யாந்தரான்மா வைதனிலாகும்" (சிவப்பிர. உ: அ.) இவருக்கு அசுத்தமாயா கிருத்தியம ஐந்தும் நடந்தாலுஞ் சுத்தமாயையிலே திரோதாந கிருத்தியம் நடவா திருந்தாலும் திரோதாநகிருத்தியம் பிரதாநம்.(சி.சி.௧:௬௦.ஞாநப்.)இவரே யசுத்தாத்துவாவிற் கலைமுதலானவற்றால்உண்டாகிய சூக்குமதேகமுள்ள பிரளயாகலர்களையும் நூற்றுப்பதினெட்டுருத்திரர்களையுஞ் சிருட்டித்துப் புரியட்டகதேகமுள்ள பிரம விஷ்ணு முதலானவர்களைக் கர்மாநுகுணமாய்வருஞ்சம்சாரத்திற் புவநாதிபதிகளாகச் செய்கிறார். (சி-லி. ஞாந. ௧௧-ம். உரையும்.)

அநந்தரம்—1. அடுத்தது. (ஆப், உரு.) (உ-ம்.) "அரவுயர்த்தவனுக் கநந்தரமானதம்பியுடன்" (பாரத. பதினேழு. ௪உ.) [அநந்தரமானதமபி—துரியோதனனுக்கு நேரே இளையதம்பி.] 2. இடைக்காலம்இல்லாதது.(ஆப்.உரு.)3. இடையிடம் இல்லாதது. (ஆப்.உரு) 4. உடனே. (உ-ம்) "அநந்தரம் பொரற்குநீகொலந்தரம்மெனக்கெனத் – தநஞ்சயன் செயிர்த்தல்கண்டு" (பாரத. வாரண. ௬௫.) 5. உள்ளேதுவாரம்இல்லாதது. (ஆப். உரு.)6. சமீபம். (ஆப். உரு.) 7. பரப்பிரமம். (ஆப். உரு.) 8. பின்பு. (ஆப். உரு.) 9. மயிலின்சிகை. (பிங்க. உ௯௪௧.) [அநந்தர: அந் – எதிர்மறை. அந்தர–இடை.]

அநந்தரூபன்—1. அளவிறந்த ரூபங்களைக்கொண்டவன். (ஆப். உரு.) 2.சிவன். (உ-ம்-)"மூத்தன்பூரணனநந்தரூபன்"(சூத. எக்கி. பூ. ௯௯: ரு.) 3. விட்டுணு. (ஆப். உரு.) [அநந்த—அளவில்லாத. ரூபன்-உருவமுடையவன்.]

அநந்தலோசநன்—1. கடவுள். (மா.) 2. புத்தன். (திவாகர.) [அநந்த—அளவின்மை. லோசந – கண்ணுடையவன்.]

அநந்தவாதம்—ஒருவகை வாதரோகம்; அது: மூன்றுமூங் கழுத்துஞ் சோரும்படிசெய்வது. (உவில். உஎ.) [அநந்தவாத: அநந்த—அந்தமின்மை. வாத—வாயு.]

அநந்தவிசயம் — சுவாயம்புவ ஆகமத்தற் சொல்லப்படும் ஒரு மண்டலம். [இதனிலக்கணஞ் சி—லி. கிரி. ருஉ – ம் ருரு - ஞ் சுலோகங்களிற் காண்க.] 2. பஞ்சபாண்டவருள்ளே யொருவனாகிய தருமனுடைய ஒருசங்கு. (ஆப். உரு; பாவற்கி. ௭௬.) [அநந்தவிஜய:அநந்த-அளவின்மை.விஜயம்-வெற்றி. வெற்றிதருமென்பதால் வந்தபெயர்.]

அநந்தவிரதம்—புரட்டாசிமாசச் சுக்கிலசதுர்த்தசியிலே விட்டுணுசமயத்தார் அநுட்டிக்கும் ஒரு விரதம்.(வாச.) [அநந்தவ்ரத: அநந்த -விட்டுணு. வ்ரத-நியமம். இவ்விரதம் பௌரணமியிற் கொள்ளபபடுகிற தென்று உவில்சனகராதியிற் காண்கிறது.]

அநந்தவிபவை—உமாதேவி. (உ-ம்.) "சிந்மயை யநந்தவிபவை" (கூர்மபு. திருக்கல். உ௯.) [அநந்த—அளவில்லாத. விபவா-செல்வமுடையவள்.]

அநந்தவீரம்—அளவில்லாதவீரம். (த. நி. போ. உ௭உ.) [அநந்த - அளவின்மை. வீரம்-ஆற்றல்.]

அநந்தவீரியம் — அநந்தவீரம். (சிலப். நாடு. ௪அஅ. உரை.) [அநந்த—அளவில்லாத. வீர்யம் - ஆற்றல்.]

அநந்தவீரியன் — சைநத்திற் சொல்லப்படும இருபத்துமூன்றாந் தீர்த்தகரன். (உவில். உஎ.) [அநந்தவீர்ய:]

அநந்தன் — அட்டநாகங்களுளொன்று; அது: தென்கிழக்குத் திசையில் இருக்கிறது,அதன் படத்திலே வெண்டாமரைப்பூப்போலும் புள்ளிகளுள்ளன என்பர். (சீவரட். ௯௯௧.) 2. அருகதேவன். (செ.) 3. ஆதிசேடன். (உ-ம்.) "வெவ்வாயரவிலநந்தனி" (கூர்மபு. திருக்கல்-

௯அ

௯௬.) 4. இருபத்தெட்டாகமங்களுள்ளே சந்திரஞாநமென்னும் ஆகமோபதேசம் பெற்ற ஒருதொண்டன்.(த. நி. போ. ௧௫௬.) 5. கிருட்டிணனுடைய தமயனாகிய பலதேவன்.(ஆப். உரு.) 6. சாகத்தீவரசனாகிய மேதாதியின் ஏழுபுத்திரர்களுள் ஒருவன். (சிவதரு. கோபுர. ௬௬. உரை.) 7. சாந்திகலையில் ஈசுரதத்துவத்திலுள்ள எட்டுப்புவநங்களுள் ஒன்று. (சி-லி. கிரி. உ௧. தாற்.) 8. சிவன். (ஆப். உரு.) 9. சைநமதத்திற் சொல்லப்பட்ட பதினன்காந் தீர்த்தகரன் - அநந்தசித். (உவில். உ௬.) 10. சோரபாஷாணம். (சட்டமு. உ௧௯.) 11. பதஞ்சலி. (உ-ம்.)"கூடுமெநந்தன் கூடுமெநந்தங்கொடுவெம்மை" (கோயிற்பு. நடரா.௯எ.) 12. பரப்பிரமம். (ஆப். ருஉ.) 13. புத்தன். (செ.) 14. வாசுகியென்னுஞ் சர்ப்பராசன். (ஆப். உரு.) 15. விட்டுணு. (உ-ம்.) "ஆரமார்பனரங்கனநந்தன்" (நாலாயிர. மெய்யில். ௯.) [அநந்த: அந் - எதிர்மறை. அந்த—முடிவு.]

அநந்தாசநம் — பஞ்சாசநங்களுளொன்று; அது: சர்ப்பாசநம். (சி. சி. பர. மாயா. மதம். ௪ரு.) [அநந்த—ஆதிசேடன். ஆஸநம்—இருக்கை.]

அநந்தாநந்தம் — வரம்பிலா ஆநந்தம். (த. நி. போ. உ௭உ.) [அநந்த--அளவில்லாத. ஆநந்தம்—மகிழ்ச்சி.]

அநந்தியம் — அழிவற்றிருக்கை. (உவில். உஎ.) 2. எண்ணற்றிருக்கை. (உ-ம்.) "கிரியாநந்தியம்" (சி. சி. ௧: ௬௯. ஞாநப்.) 3. நித்தியம். (உவில். உஎ.) [அந் - எதிர்மறை. அந்தியம்-முடிவு.]

அநந்தீச்சுரம் — சிதம்பரத்திலே பதஞ்சலி முநிவராலே தாபிக்கப்பட்ட கோயில். (உ-ம்.) "ஆங்கிடமாகாநுமமர்ந்தநந்தீச்சுரத்தும்" (கோயிற்பு. பதஞ்சலி. ௬௬.) [அநந்த—பதஞ்சலி. ஈச்வரம் —ஈசன்கோயில்.]

அநந்தேசுரர் — அநந்தேசுவரர். [அநந்தேஶ்வர]

அநந்தேசுவரர் — 1. ஈசுரதத்துவத்திலுள்ள எட்டுப்புவனங்களிலொன்று. அநந்தர். (சி. சி. அ: அ. மறை) 2. சுத்தாசுத்தாத்துவாவிற்குக் கர்த்தராகிய அநந்தர்; இவர் ஈசுரதத்துவத்தைத் தமதிருப்பாகக் கொண்டு அத்தத்துவத்திற் சமிமாந தேவதையாயிருக்கிறவர். (சி. சி. உ: எஉ. சிவாக்; சி—லி. ஞாந. உ. தாற்.) இவராலே மூலப் பிரகிருதிக்கு மேலா யுள்ள ஆறுதத்துவமும் ஒடுங்குவதுந் தோற்றுவதும். (சி. சி. உ: எஉ. சிவஞா) ["அநந்தர்" எனமேலேசொல்லப்பட்டவர் இவரே. "அநந்தர்"பார்.] [அநந்தேஶ்வர.]

அநந்தை — 1. அழிவில்லாதவள். (உ-ம்.) "பொருவரியசிவையாகியநந்தையாயேசையாய்" (கூர்மபு. திருக்கல். ரு.) 2. அறுகு. (சப்த.) 3. ஒரு சத்தி. (பௌட். மந்திர. சா௦.) 4. சொந்தான்கொடி. (தைல. தைலவ. சஉரு) 5. சாந்தியாதீதகலையிலே சிவதத்துவத்திலே யிருக்கும் பத்துப்புவனங்களுள் ஒன்று. (சி. சி. அ. கூ. மறை; சி—லி. கிரி. உக. தாற்.) 6. செல்லிமரம். (சப்த.) 7. பார்ப்பதி. (ஆப். உரு.) 8. பிராசாத சோடசகலைகளில் ஒன்று; அது கண்ணாடியொளி போல்வது. அதன் வடிவு வட்டம். அது வியோமரூபிநிக்குமேல் ஓரங்குலத்திலே துவாதசாந்தத்துள்ளே யிருக்கிறதாகப் பாவிக்கப்படும். (பிராசாதகலைத்தியாகம்; த. கி. போ. நஎரு) 9. பூமி. (உவில். உகூ.) 10. வான்மிளகு. (வாச) [அநந்தா: அந்— எதிர்மறை. அந்தா—முடிவுடையது.]

அநந்நியசன் — மன்மதன். (உவில். உஎ) [அநந்யஜ: அநந்ய—தனக்கந்நியமல்லாதது. ஜ: பிறந்தவன். தனக்கந்நியமில்லாத இடமாகிய மனத்திற் பிறந்தவன்.]

அநந்நியராக் — பிறருக்குத் தொண்டு பூணாதவன். (ஆப். உகூ.) அநந்யஹாஜ். அந்-எதிர்மறை. அந்யஹாஜ்-பிறராளப்படுகிறவன்.]

அநந்நியம் — அந்நியமல்லாதது. (உ-ம்.) "வீட்டின்பமுயிர்க் கநந்நியமாதலின்" (வைராக். தீப. சச. உரை) 2. ஒற்றுமை. (உவில். உஎ.) (உ-ம்) "கடத்தோடுமட்கநந்நியமென் வாக்கியமேபோல்" (வேதா. சூ. கஉஎ.) [அநந்ய: அந்—எதிர்மறை. அந்யம்-வேறு]

அநந்நியை — அபிந்நாசத்தி. (பௌட். பதி. சா௦.) [அநந்யா: அந்—எதிர்மறை. அந்யா—வேறானவள்.]

அநந்வயாலங்காரம் — இயைபின்மையணி. (குவல. உ.) [அநந்வய — இயைபில்லாதது. அலங்காரம்—அணி]

அநநுபாடணம் — தோல்வித்தானம் இருபத்திரண்டனுள் ஒன்று; அது: பிறன்கூறிய பொருளை யநுவதிக்கமாட்டாமை. (சி. சி. அளவை. சச. மறை.) [அநநுபாஷணம்: அந்-எதிர்மறை. அநுபாஷணம்-அநுவதித்தல்.]

அநப்பியாசம் — அப்பியாசமின்மை. (மா) [அந் - எதிர்மறை. அப்யாஸ—பயிற்சி. ஆப். சஅ.]

அநபக்கிரியை — 1. கடன் இறுக்காமை. (ஆப். உகூ.) 2. கோப்படுத்தாமை. (ஆப். உகூ.) 3. பழிக்குப் பழிவாங்காமை. (ஆப். உகூ.) [அநபக்ரியா: அந்—எதிர்மறை. அபக்ரியா-தீங்கு, கடனிறுத்தல்.]

அநபத்தியம் — பிள்ளையின்மை. (வென். நஉ.) [அநபத்ய: அந்—எதிர்மறை. அபத்யம்-பிள்ளை.]

அநபரன் — பிரமன். (உவில். நஎ.) [அநபர: அந்—எதிர்மறை. அபரன்—பின்னுளான்.]

அநபாயம் — 1. அழிவின்மை. (ஆப். உகூ.) 2. குறைவின்மை. (ஆப். உகூ) 3. தேய்வின்மை. (உவில். உஎ.) [அநபாய: அந்-எதிர்மறை. அபாய—அழிவு, நிலையார்தன்மை. ஆப். உகூ.]

அநபாயன் — 1. அநபாயனென்னுஞ் சோழச்சக்கரவர்த்தி. (உ-ம்.) "வென்றிபுனையநபாயன் விளங்கியபூங்கமல்போற்றி" (கோயிற்பு. பாயிர. சஉ) 2. அழிவில்லாதவன். (உவில். உஎ.) 3. சிவன். (ஆப். உகூ) 4. நிலையாயிருக்கிறவன். (உவில். உஎ.) [அநபாய: அந்-எதிர்மறை. அபாயன்-அழிவுடையவன், குறைவுறுதவன்.]

அநபாயோகம் — சந்திரனுக்குப் பன்னிரண்டாம் இடத்திற் சுபக்கிரகங்கணிற்கும் நிலை. (உ-ம்.) "மதிக்கிருபானிற்சேர்ளெழில் வாழ்வுடனுயுமிகும் விதிக்குமாபைசுநபை" (விதான. சாதக. உரு-ம் உரையும்.)

அநபிகிதகருத்தன் — அநபிகிதகருத்தா. (செ; பி. வி. சசு.)

அநபிகிதகருத்தா — தன்செயலை யுணர்த்தும் வினைக்கு எழுவாயாகாது மூன்றும் வேற்றுமையிலே யல்லது நான்காம் வேற்றுமையிலே நிற்குங் கருத்தா. "மகன் றந்தையால் அடிக்கப்பட்டான்" என்னும் வாக்கியத்திலே அடித்தலைச்செய்த "தந்தை" மூன்றும் வேற்றுமையினிற்பதும், "அவர்க்குச் செய்யத்தகும் அக்காரியம்" என்னும் வாக்கியத்தில் செய்தற்கருத்தாவாகிய "அவர்" நான்காம்வேற்றுமையினிற்பதும் போல்வது. (உ-ம்.) "ஆதியதென்பரபிகிதகர்த்தாவநபிகித-மாதிவிட் †டாறெடு மூன்றம்பெறுமெனபராய்ந்துணர்ந்தோர். (பி. வி. சசு.) [அநபிஹித: அந்- எதிர்மறை. அபிஹித-சொல்லப்பட்டது - விகுதியினுல் விளங்கச் சொல்லப்படாதது. கர்த்தா-செய்பவன். சப்த சங். கககூ]

† குவ்வுருபு.

அநபிகிதகருமம் — செய்வினைச் செழுவாயாகாது உ-ம், ரு-ம், சு-ம், கூ-ம் வேற்றுமைகளுள் ஒன்றனது உருபமாக வருஞ் செயப்படுபொருள்; அது "மரத்தைக்குறைத்தான்" "ஆலத்திலைமீர் தாக்கியசோன்" "அவட்குக் கொள்ளுமிவ்வணிகலம்" "குடுப்பத்

தினது குற்றமறைப்பான்" என்பவ ற்றிற்போல வருவது. "ஆதியதென் பாபிகிதசன்மமாபிகித — மாதியைர் தேழொழிந்தல்லாதன பெறமாரண க்கே" (பி. வி. கசு-ம் உரையும்) [அ நபிஹிதகர்மம்: அநபிஹித-சொல்ல ப்படாத. கர்மம்-செயப்படுபொருள். வினைவிகுதியினால் விளங்கச்சொல்ல ப்படாதது. சப்தசங், கககு.]

அநபிகிதம் — 1. சொல்லப்படாதில்லை. 2. தெரியாதில்லை. (உ-ம்) "சொல்லப்ப டுதில்லைசொல்லப்படாதில்லை-யபிகிதமந பிகிதமெனமொழிப - தெரிநிலைதெரி யாநிலையெனவும பெறுஉம்" (பி. வி. கக. உரைச்சூத்திரம்)

அநபிமதம் — சம்மதமின்மை. (வாச.) [அநபிமத: அந்-எதிர்மறை. அபிமத ம்-சம்மதம்.]

அநபிவியந்தம் — வெளிப்படையாகா தது. (உ-ம்.) "அவ்விருத்திராசமாம் போதாபிவியத்தமான கோதிலாச்சி தாகாரம்" (சூத. எக்கி. பூ. கசு: சு; உவில். உஅ.) [அநபிவ்யக்த: அந்-எ திர்மறை. அபிவ்யக்தம் -வெளிப்ப டை.]

அநபிவியந்தி — வெளிப்படையாகா மை. (உ-ம்.) "ஆன்மாவிற் சிவத் துவம் அப்போதப்பிரவர்த்திரூப அ நபிவியத்தியெனுஞ் சத்திரூபமாயிரு ந்து" (சி. சி. எ: உ. ஞானப்.) [அநபி வ்யக்தி: அந்-எதிர்மறை. அபிவ்யக்தி -வெளிப்படை.]

அநபேட்சன் — அபேட்சையில்லாத வன், ஆசையில்லாதவன். (பகவற்கி. கஉ: சு.) [அநபேக்ஷ: அந் - எதிர்ம றை. அபேக்ஷ- ஆசையுடையவன்.]

அநபை — அநபாயோகம். (உ-ம்) "அ நபாயோகம்" பார்.

அநம் — சோறு. (உ-ம்) "உரையுமவர் க்கமுமுதவுவார்கள்" (சிவதரு. உ: எஞ; உவில். உஅ.) [அநஸ்.]

அநம்பு — 1. சாதசப்புள்ளு. (சி.) 2. நீரில்லாதது. (சி.) [அந் - எதிர்மறை. அம்பு—நீர்.]

அநயம் — அதிட்டமின்மை. (உவில். உஅ.) 2. தீங்கு. (உவில். உஅ.) 3. வருத்தம். (உவில். உஅ.) [அநய: அந்- எதிர்மறை. அயம்- அதி ட்டம்.]

அநர்க்களம் — தடையின்மை (உவில். உஅ.) [அநர்கல: அந்-எதிர்மறை. அ ர்கல—தாழ்க்கோல்.]

அநர்த்தகம் — பிரயோசனமின்மை. (உ வில். உஅ.) [அநர்த்த: அர் — எதிர்ம றை. அர்த்தம்-பிரயோசனம்]

அநர்த்தம் - 1. அர்த்தம் இல்லாதது, பய ன் இல்லாதது. (ஆப். உசு.) 2. இடுக்க ண். (உ-ம்.) "மெய்தருநிமித்தமாக த்தரிப்பதாம் விளம்புஞ்சுத்த-மெய் தினர்பிறவியானவநர்த்தத்திலென் று மெய்தார்" (ஞானவா. வைராக். கச) 3. பிரயோசனமற்றது. (உ-ம்.) "அ ருத்தங்களனர்த்தமாகும்" (ஞானவா. வீமபா. ரு.) 4. புத்தியின்மை. (ஆப். உசு.) 5. பொல்லாங்கு. (உ-ம) "எல் லாவநர்த்தங்கட்குமூலமாகிய ஆண வமலத்தைப் போக்குதற் பொருட்டு ம்" (சி. சி. உ: எக. சிவஞா.) அநர்த்த: அர்- எதிர்மறை. அர்த்த-பிர யோசனம், பொருள்]

அநாண்ணியன் — சூரிய வமிசத்திலே பிறந்த பாணனென்பவனுடைய மக ன். (இராமா. உத். திக்கு. ஈஈ.) [அ நரண்ய.]

அநரவன் — 1. பஞ்சபட்சிபாஷாணம். (கா. வைத்.) 2. வேந்தோன்றிப்பூ ண்டு. (உவின். உக.)

அநருகம் — தகுதியின்மை. (உவில். உஅ.) [அநர்ஹ: அந்-எதிர்மறை. அ ர்ஹ-தகுதி.]

அநருகர் — தகுதியற்றவர். (உவில். உஅ.) [அநர்ஹ அந்-எதிர்மறை. அர் ஹ-தகுதி. ர்-ஒரு விகுதி.]

அநல் — 1. அக்கினி. (உ-ம்.) "அநலுமா கி" (பெரியபு. ஞான. ருசுஈ.) 2-4. அ லென்னேவலுந் தெரிநிலைவினைப் ப குதியும் பெயரெச்சத்தொகையும். 5. இடி. (மா) 6. உட்டணம். (உவின். ருரு.) 7. கொடிவேலி. (தைல. தைலவ. சஉக.) 8. பித்தம். (இராசவைத்.) 9. மூலாக்கினி. (உ -ம்.) "அநலை யம்மமருண்டலியடிக்க லைமதியினூடுதாக்கி" (தாயு. தேசோ. ச.) 10. வன்னியிலை. (இராசவைத்.) [மூ. அநல.]

அநல்காலி — சூரியகார்தக்கல். (மா.) [அநல்-நெருப்பு. காலி-காலுவது.]

அநல்வென்றி — தங்கம். (மா) [அநல்- நெருப்பு. வென்றி- வெற்றியடைவ து. அநலிலேயழியாதது.]

அநலக்கிரி — அண்ணாமலை. (திருச்செ ந்) [அநல—அக்கினி. கிரி-மலை.

அநலசநபட்சி — தழல் விழுங்கிப் பற வை. (உவின். ருரு.) [அநல்-நெருப் பு. அஶந-உணவு. பக்ஷி-பறவை.]

அநலநட்சத்திரம் — செவ்வாய்நின்ற நாளுக் கேழாநாள், பதினைஞ்சாநாள், பதினாறுநாள், இருபத்தைந்தாநாளா ய்வந்து தோஷம் அடைந்தநாள். (வி தான. குணகுண. சο. உரை.) [அந ல-நெருப்பு. நக்ஷத்ர-விண் மீன்.]

அநலபித்தம் — உண்பதைச் சீரணிக்க ச் செய்யும் உதராக்கினி. (சீவரட். ச) [அநல-அக்கினி. பித்தம் – சரீரத்திலு ள்ள ஒருதாது. அக்கினித்தொழிலைச் செய்யுங்காரணத்தால் வந்தபெயர்.]

அநலம் — 1. அக்கினி. (உ-ம்.) "அணையா னருட்புனலாலநங்காநல மாற்றுதற் கே" (வாண. ஙக.) 2. அநலநட்சத்தி ரம். (உ-ம்.) "செய்யவனின்றநாட் கேழிரு பத்தைந்துசேர்பதினாறையு பன்னான்கு மநலமென்னுர்" (விதான. குணகுண. சο.) 3. உட்டணம். (உ வின். ருரு.) 4. சித்திரமூலப்பூண்டு. (தைல. தைலவ. சஈ௫) [அந்-எதிர்மறை அலம்-சிறைவு.] 5. சிவாகமம் இருபத் தெட்டினொன்று. (செ) 6. திருப்தியற்

றது. (பகவற்கீ. ௩: ௬௧.) 7. பித்தம். (உவில். உஅ.)
[அங்-எதிர்மறை. அலம்-நிறைவு.]

அநலர் — அக்கினியுடையவர். (உ-ம்.) "பொங்கார்சடையர் புனல்ரலர்" (தேவார. ஈறையூர். தக்கே. உ. சம்.) [அனல்—அக்கினி. அர்-ஒருவிகுதி.]

அநலல் — கனலுதல், வெப்பமாயிருத்தல். (உ-ம்.) "அநலுமுதுகானச்மக ன்று" (பாரத. வெளிப். எ.)

அநலன் — 1. அக்கினிதேவன். (உவில். உஅ.) 2. அட்டவசுக்களிலொருவன். (சப்த.)
[அலன்: அங் - எதிர்மறை. அலம்-திருப்தி, உணவினாலே நிறைவடையாதது.]

அநலாடி — சிவன். (உ-ம்.) "போருலாவுமழுவானநலாடி" (தேவார. நறை. தக்க. ௬. சம்.) [அநல்—நெருப்பு. ஆடி—ஆடினவர்.]

அநலி — 1. சூரியன். (உ-ம்.) "அநலியென்றுலகெலாம் வணங்கு மாரியன்" (நல். பார. சநற்குமார. ௬௨.) 2. நெருப்பு. (உ-ம்.) "அநலியுண்ணவிடுவனோ விவ்வூரென்னும்" (கந்தபு. அக்கினி. ௪௧.)
[அநல்; இ.]

அநலுதல் — கனலுதல். (உவின். ௫௫.)

அநலேறு — இடியேறு. (உவின். ௫௫.)
[அநல்—அக்கினி. ஏறு - ஏறுவது.]

அநலோடுவேந்தன் — கார்முகிற்பாஷாணம். (உவின். ௫௫.)

அநவ்வியயகிருத்து—அவ்வியயமல்லாத கிருத்து; வெண்டும், தகும், படும் என்னுங் கிருததியப் பிரத்தியயம் மூன்றும் ஒன்றற்கொன்று பிரதிபதமாய் இருதிணையைம்பான் மூவிடத்தினு நிற்றலின் அநவ்வியயகிருத்தாமென்பர்- (பி-வி. ௪௪. உரை)

அநவச்சிந்நத்துவம் — அநவச்சிந்நமாயிருக்குந்தன்மை. (சி. சி. உ: ௫௪. சிவாக்.) [அநவஹிந்ந - எல்லைப்படாதது. ௬௦—தன்மை.]

அநவச்சிந்நம்—எல்லைப்படாதது. (உ-ம்.) "காலாநவச்சிந்நத்துவமே" (சி. சி. உ: ௫௪. சிவாக்.) [வெண். ௬௭. அநவஹிந்ந—அங்-எதிர்மறை. அவஹிந்ந-எல்லைப்பட்டது.]

அநவசரம்—1. அகாலம். (உவில். உஅ.) 2. ஓய்வுநேரமின்மை. (உவில். உஅ.) [அநவஸர—அங்-எதிர்மறை. அவஸர-ஓய்வுகாலம்.]

அநவத்தாதோஷம் — முடிவுகாணாமையாகிய தோஷம். (வேதா. சூ. ௧௬௫. உரை.) [அநவஸ்தா — முடிவின்மை. தோஷம்-குற்றம்.]

அநவத்தாநம்—1. தவறுனநடை. (உவில். உஅ.) 2. தவறுனநிலை. (உவில். உஅ.) 3. நிலையின்மை. (உவில். உஅ.) 4. வாயு. (உவில். உஅ.)
[அநவஸ்தாந: அங் - எதிர்மறை. அவஸ்தாந-நிலை.]

அநவத்திதம் — நிலையற்றது. (உவில். உஅ.) [அநவஸ்தித: அங்- எதிர்மறை. அவஸ்திதம்-நிலையுடையது.]

அநவத்தை— 1. அநவத்தாதோஷம். (உ-ம்.) "இந்தவுடம்பிவந்கே யாம் போகசாதநமற்றேனோர்க்கன்றெனிற் போகத்திதிபுகலொணுதாம் – வந்தவுடம்பெத்திறத் துமிவன்வினையால்வரலான் மற்றிவற்கேயெனின் வினையுமெவர்க்குமிலையோதான் –முந்தையுடம்பபிமாநத்தாற்செய்வினையிவற்கே முற்றுமெனினவ்வபிமாநமு முந்தையுடல்சே – ரந்தவுயிரனைத்திற்குமிலையோதானிவ்வாறநவத்தை நீக்கலரிதரேசவுயி ரெனலால்" (வேதா. சூ. ௧௬௫.) 2. சந்தேகம், நிச்சயமின்மை. (உ-ம்.) "அதனுனேமிகுமோக்மூளைத்திடப் பாடண்டமதத்தமைந்தான் பின்பு–சுதமாருமத்தருக்கவநவத்தைத யாற்றொடருமஞ்ஞாநத்தா - லிதமாராவன்னனம் மதத்தையும்விட்டு" (சூத. எக்கி. பூ. ௪௮. ௬௦.) 3. நிலையின்மை. (உவில். உஅ.)
[அநவஸ்தா: அங்-எதிர்மறை. அவஸ்தா—நிலை.]

அநவத்தைப்படுதல்— முடிவுகாணுது முட்டுப்படுதல். (உ-ம்.) "முன்னுடைப்பலவறங்கள் பூரித் தெம்மிறைவன் முழுதுணர்ந்திங்கருளினு னுயிர்கண் முத்தியடையப் - பின்னைப் பிடசநூலுரைத்தானென்று பேசினுயிவன்மூன்புபேரறங்கள் புரிநூல்- சொன்னாரரிவனைப்போன் முன்னொருவனென்னிலவனுக்குச் சொன்னாராரெனத் தொடர்ச்சியாகி – யன்னுய் பினநவத்தைப்படு மொருவனின்று மாரோவுன் பாழியிருப்பாரிதனையறையே" (சி. சி. பர. சௌ. மறு. அ.)

அநவதாநம்—அவதாநமின்மை. (உவில். உஅ.) [அநவதாந: அங் - எதிர்மறை. அவதாந—கவநம்.]

அநவபாசம்—தோற்றுமை, வெளிப்படாமை. (வெண். ௫௭.) [அங்—எதிர்மறை. அவபாஸ—வெளிப்படல்.]

அநவரதம் — எப்பொழுதும். (உவில். உஅ) (உ-ம்.) "அநவரதம் பதைத்தலாவி" (ஞாநவா. சநக. ௪௬.) [அநவரத: அங்—எதிர்மறை. அவரதம் - ஓய்வு.]

அநவலோபநம்—கருப்பந்தரித்த மூன்றும் மாதத்திற் செய்யப்படுங் கர்ப்பக்கிரியை. (ஆப். உஎ.) சீமந்தத்தின்பின் நாலாமாதத்திற் செய்யப்படுங் கர்ப்பக்கிரியை. (சப்த.) (உ-ம்.) "கர்ப்பந் தரித்த இரண்டல்லது மூன்றுந் திங்களி லொர்தத் திநத்திலாண் நக்ஷத்திரத்தோடு சந்திரன் கூடியிருக்கின்றுனே அந்தத்திநம் பும்ஸவநாநவலோபநமென்னுங் கருமத்தைச்செய்யவேண்டும்" என்று பராசர. கங்காண்டம். உ - ம் அத்தியாயத்திற் கூறப்பட்டுள்ளது. [அநவலோபந:]

அநவலோபம்— இச்சித்த பண்டங்களைத் தந்து திருத்தி செய்தல். (பராசர. க-ங் கா. பும்ஸவநப் பிரகரண

ம்.) [அநவஸ்ரோஹ: அந்-எதிர்மறை. அவரோஹ-திராசை.]

அநற்கல் — சக்கிக்கல் என்னும் ஒரு சரக்கு. (தைல. தைலவ. கஉஎ.)

அநற்பம் — அதிகம். (வாச.) [அநல்ப: அந்-எதிர்மறை. அல்ப-சிறிது.]

அநற்புதம் — அற்புதமின்மை. (வாசுதே. சுரு.) [அந்-எதிர்மறை, அத்புதம்-அதிசயம்.]

அநற்றல்—1. எரித்தல். (உவின். ருரு.) 2. கனலச்செய்தல். (உ-ம்.) "அநற்றினனலலனென் றிக்காலத்தும் வெறுததா ரந்தோ" (காஞ்சிபு. கழுவாய். கஎக) 3. சுடுதல். (உவின். ருரு.)

அநற்றிரள்—சோதிரூபி. (உ-ம்.) "சிவனுமநற்றிரளல்லன்" (கோயிற்பு. பாயிர. உசு.) [அநல்-அக்கினி. திரள்-கூட்டம்.]

அநற்று—1 -3. அநற்றென்னேவலும், தெரிநிலைவினைப்பகுதியும், பெயரெச்சத்தொகையும்.

அநற்றுதல் — 1. எரித்தல். (உவின். ருரு.) 2. சுடுதல். (உவின். ருரு.)

அநாகதசிவமூர்த்தி — அநாகத சிவமூர்த்தங் கொண்டது. (உ-ம்.) "அப்பெயர்பெறுஞ் சமநாகலையாகும் அநாகதசிவமூர்த்தியாஞ் சத்திகலையுமதிலடங்கும்" (சி. சி. உ: எகு. ஞானப்.) [அநாஹதசிவமூர்த்தி.]

அநாகதசிவன் — பரசிவத்திலிருந்து தோன்றினவருஞ் சதாசிவத்தைத் தோற்றுவித்தவருஞ் சகள நிட்கள போகருமான சிவன்; இவர்: வியாபிநிக்குமேல் நாலங்குல அளவிலிருக்கின்ற வியோம என்னுஞ் சமனையின் தானத்தைவியாபித்தவர். (சி-லி. ஞாந. க. உரை.) இவர் பிரமரந்திரத்தானத்துக்கப்பால் துவாதசாந்தம் வரையில் வியாப்தியுள்ள சத்தி, வியாபிநி, சமனை, உன்மனை யாகியநான்கு கலைகளுக்குங் காரணேசுவரர் (சி-லி. கிரி. சு0. தாற்.) [அநாஹதசிவ:]

அநாகதநாதம்—பராசத்தி. (உ - ம்.) "நின்மலதுரியாதீதத்துக்குக் காரணமாகிய அநாகதநாதமுஞ் சிவாநந்தாநுபவியாகிய உள்ளமும் அதீதாவஸ்தாவஸ்தாநமாகிய பிரமரந்திரத்திலேநின்று" (சி. சி. ச: ருச. சிவாக்.) [அநாஹதநாத.]

அநாகதம்—1. அடிக்கப்படாமை. (உவில். ரு0.) 2. அறியப்படாதது. (உவில். உக.) 3. சம்பாதித்துக்கொள்ளப்படாதது. (உவில். உக.) 4. சொல்லப்படாதது. (வென். கக.) 5. நோப்படுத்தப்படாமை. (உவில். ரு0) 6. வெளுக்கப்படாததும் புதிதுமான (சீலை.) (உவில். ரு0.) 7. மாறுடசரீரத்திலே யுள்ளவாகச் சொல்லப்படும் ஆறுதாரங்களிலேநான்காவது; அது: மணிபூரகத்துக்குப் பத்துவிரற் பிரமாணத்துக்கு மேலே யிருதயகமலத்தில் முக்கோணவடிவினதாய்ப் பன்னிரண்டிதழுடையதாயிருக்கும். (சி. சி. அ: உக. மறை; உவில். ரு0.) 8. வர்தடையாமை. (உவில். உக.) 9. வருங்காலம். (உவில். உக.) [1, 5, 6, 7. அநாஹத: அந்-எதிர்மறை. ஆஹத-அடிக்கப்பட்டது, விளங்கினது; 2, 3, 4, 8, 9. அநாகத: அந்-எதிர்மறை. ஆகத-வருதல்.]

அநாகந்துகம் — அநாதியாயுள்ளது, இடையில்வந்ததல்லாதது. (பௌட். பசு. கககூ.) [அநாகந்துக: அந்-எதிர்மறை. ஆகந்துகம்-இடையிலுள்ளது.]

அநாகாமி—(பௌத்த) தியாநங்களைத் தனுள்ளே மூன்றாவது. (மணிமேக. பக். சுரு.) [அந்- எதிர்மறை. ஆகாமிந்-வருதல்.]

அநாகாரம்—1. உணவின்மை. (ஆப். உச.) [அநாஹார: அந்-எதிர்மறை. ஆஹார-உணவு.] 2. வடிவமின்மை. (உவில். உக.) [அநாகார: அந்-எதிர்மறை. ஆகாரம்-வடிவு.]

அநாகாலபிந்தன் — பஞ்சகாலத்திலே தன்னைக் காத்துக்கொள்ளும்படி ஒருவனுக் கடிமையானவன். (மிருதிசந். கஙசு; ஆப். உஎ.) [அநாகாலப்ருத: அநாகால-பஞ்சகாலம்-ப்ருத-அடியவன்.]

அநாகாலம்—பஞ்சகாலம். (ஆப். உக.) [அநாகால: அந-உணவு. அகாலம்-காலமல்லாதது.]

அநாசத்தன் — விருப்பமில்லாதவன். (உ-ம்.) "சாக்கிரத்திலேயந்த இச்சாஞாநக்கிரியைகளிருக்கையிலும், அநாசத்தனை புருஷனுக்குப் போகமில்லாமலிருக்கையினாலும்" (சி. சி. உ: ருசு. சிவாக்.) [அந்-எதிர்மறை. ஆஸக்தன்-விருப்புடையவன்.]

அநாசரணம்—ஒழுக்கந்தவறியநடை, துன்னடை. (உவில். உக.) [அநாசரண: அந்-எதிர்மறை. ஆசரணம்-ஒழுக்கம்.]

அநாசரித்தல் — துராசாரமாய் நடத்தல். (சி.)

அநாசாரம்—1. உபசாரமின்மை, மரியாதையின்மை. (உவின். ருரு.) 2. உலகநடைக்குமாறு. (உவில். உக.) 3. நல்லொழுக்கமின்மை. (உ-ம்.) "அடியார் செய்தவநாசாரம் பொறுத்தருளி" (தேவார. திருமாற. திருத்தாண்டக. ரு. திருநாவு; உவில். உக.) 4. நிருவாணம், சீலையுடாமை. (சி.) [அநாசார: அந் - எதிர்மறை. ஆசார-ஒழுக்கம், சீலை.]

அநாசாரன்—நல்லொழுக்கமில்லாதவன். (உ-ம்.) "அசடனாசாரனை யவலனை யாபாசனை யடியவரோடாள்வதுமொருநாளே" (திருப்பு. ருகரு.) [அந்-எதிர்மறை. ஆசாரன்-ஒழுக்கமுடையவன்.]

அநாசிகன் — மூக்கில்லாதவன். (உவி

ல். கo.) [அநாஸிகா: அ-எதிர்மறை. நாஸிகா—மூக்கு.]

அநாசிரயம் — சார்பின்மை, பற்றுக் கோடாதலின்மை. (உவில் ௬o) [அநாஶ்ரய: அந் —எதிர்மறை. ஆஶ்ரயம்-சார்பு.]

அநாசிரிதம் — சார்பில்லாதது, பற்றுக் கோடாகாதது.(உவில்.௬o) [அந்-எதிர்மறை. ஆஶ்ரிதம்-ஆசிரயமானது.]

அநாசிரிதர்—அநாசிருதையைப் பொருந்தினவர், ஒன்றைப்பற்றுக்கோடாகக் கொண்டு பொருந்தாதவர். (உ-ம்.) "உன்மனை சத்தி சகிதரான அநாசிரிதரை" (சி. சி. கஉ: ௬. சிவாக்.) [அந்-எதிர்மறை. ஆஶ்ரிதர் - பொருந்தினவர்.]

அநாசிரிதன்—அபேட்சியாதவன்.(பகவற்கீ. ௬:க.) [அநாஶ்ரித: அந்-எதிர்மறை. ஆஶ்ரித-பற்றுகிறவன்.]

அநாசிரிதை — 1. சாந்தியாதீதகலையிற் சிவதத்துவத்திலிருக்கும் பத்துப்புவனங்களுளொன்று. (சி. சி. அ: க. மறை; சி-லி. கிரி. உகூ-ஞ் சுலோ. தாற்.) 2. சோடசகலைப்பிராசாதத்திற் பதினொன்காவது கலை; இது வியாபிகலைக் கப்பாலுஞ் சமனை கலைக்கிப்பாலும் நடுவிலிருக்கின்ற நான்கு கலைகளில் நான்காவதும் அந்த நான்கிலொன்றுன அநாதை கலைக்கு மேலோரங்குலத்தில் அவாதசாந்தத்துள்ளிருக்கிறதுமானது; அதன் வடிவு வட்டமென்றுஞ் சொல்வர். (பிராசாதகலைத்தியாநம்.) (சி-லி. கிரி. எ.த. நி. போ.௬௭௫.) 3. திரோதாந சத்தி. (த. நி.போ. ௬௭௬.) [அநாஶ்ரிதா.]

அநாசிரியர்—ஆசிரியராகாதவர். (உபதேசவு. ௬. அவ்தாரிகை.) [அந்-எதிர் மறை. ஆசார்ய-குரு.]

அநாட்யம்—சிவபூசைக் காதாரமான நான்குவித லிங்கங்களுளொன்று. அதில்இருபத்துநாலில் ஏழேமுக்காற்பங்கு அடியில் பிரமபாகமென்றும் எட்டுப்பங்குநடுவில் விட்டுணுபாகமென்றும் எட்டேகாற்பங்கு மேலே உருத்திரபாகமென்றுஞ் சொல்லப்படும். (சி-லி. சரி. கக.) [அநாட்ய]

அநாத்தன்—ஆத்தனல்லாதவன். (சைவப். ௬௬.) [அநாப்த:அந்-எதிர்மறை. ஆப்தன்—உள்ளது கூறுவோன்.]

அநாத்துமலட்சணம்—(வேதாந்தம்) ஆத்துமா அல்லாததன் இலட்சணம். அவ் விலட்சணங்கள்: அசத்து, சடமென்பன. (வாசுதே. சூஉ.) (அநாத்ம—ஆன்மாஅல்லாதது. லக்ஷண-]

அநாத்துமா—ஆத்துமா அல்லாத பதார்த்தம். (உ-ம்.) "அரசன் ஆத்துமதரிசநஞ் செய்யும்பொருட்டு அநாத்மாவான தேகத்தை நேதி செய்தல்" (ஞாநவா. சுரகு. உசு. உரை.) 2- தன்னையடக்கியாண்டு கொள்ளாமை. (ஆப். உஎ.) [அந்-எதிர்மறை. ஆத்மா—சீவன்.]

அநாத்தை — 1. அவசங்கை. (உவில். ௬o.) 2. நிலையின்மை. (உவில். ௬o.) [அநாஸ்தா: அந்-எதிர்மறை. ஆஸ்தா -நிலை.]

அநாதகி—சந்நியாசி. (செ.) [அந்நாத: அந்ந—உணவு. அத—உண்கிறவன். மற்றொருவருடைய உணவையுண்கிறவனுதலால் வந்தபெயரென்று கொள்ளலாம்.]

அநாதபம் — குளிர்மை. (உவில். உக.) 2. நிழல். (உவில். உக.) 3. வெயிலின்மை. (உவில். உக.) [அந்-எதிர்மறை. ஆதபம்-வெயில்.]

அநாதம் — 1.அந்தரித்தது. (சி; உவில். உக.) 2. ஆதரவற்றது. (சி; உவில். உக.) [அநாத: அ-எதிர்மறை. நாத-பாதுகாப்பு.]

அநாதர் — பாதுகாப்போரையில்லாதவர். (உ-ம்.) "அநாதர்களாயுனை யடையுமவர்தம்பால்" (சேதுபு. சவிசம்பு. சூஎ) [அ-எதிர்மறை. நாத-பாதுகாப்போன்.]

அநாதரட்சகர் — கடவுள். (சி.) [அநாத-ஆதரவற்றவன். ரக்ஷக - காப்பவர்.]

அநாதரம்—1. அவமதித்தல். (சைவப். சூஉ.) 2. அன்பின்மை. (வென். எசு.) 3. கவனமின்மை. (வென். எசு.) [அநாதர: அந்-எதிர்மறை. ஆதர -விருப்பு.]

அநாதரித்தல் — பற்றிக்கொள்ளாது விடுதல். (உ-ம்.) "உள்ளபடிமுடியு மென்றுநான் சொல்லவும் அதையநாதரித்து நீ வேறென்றைப் பற்றிக்கொண்டு" (தாயு. நினைவொ. சு. உரை.) [மூ. அநாதர:]

அநாதன் — 1. தனக்கொருதலைவனை யில்லாதவன். (உ-ம்.) "ஞாலம் விழுங்குமநாதனை" (நாலாயிர. இயற்பா.திருவிருத். எகூ.) 2. பாதுகாப்போரில்லாதவன். (உவில். உகூ.) (உ-ம்.) "அநாதர்" பார் [அநாத: அ-எதிர்மறை. நாத—தலைவன, பாதுகாப்பு.]

அநாதி—1. உமாதேவி. (கூர்மபு. திருக்கல். உ௬.) 2. கடவுள். (உவின். உ௬.) 3. சிவன். (உவின். ௫௫.) 4. தனக்கு மேலாக ஒரு சிரேட்டமில்லாதவன். (உ-ம்.) "ஆதியநாதியுமாகி, யெனக்காரநந்தமாயறிவாய் நின்றிலங்கும்" (தாயு.ஆநந். க.) 5.தொடங்காதுள்ள நித்திய காலத்துக் கிருக்கிறவன். (சி-லி. ஞாந. உ.) ஆதியற்றவன். (பகவற்கீ. ௰: ௩) 6. தொடங்காதுள்ள நித்திய காலம். (உ-ம்.)"உலகநாதியாகமன்னியதென்பர்" (சி. சி. ௪: உ.) 7. விட்டுணு. (உவின். ௫௫.) [அநாதி: அந்-எதிர்மறை. ஆதி-முதல், காரணம்.]

அநாதிகரம்பு—நெடுநாட்பாழாய்க் கிடந்தநிலம். (சி.) [அநாதி - அறியப்பட்டகாலத்துக்கு முந்தியகாலம். கரம்பு-பாழ்நிலம்.]

அநாதிகாரணம் — பிரபஞ்சத்தினது முதற்காரணமாகிய மாயை. (உ-ம்.) "அநாதிகாரணமாகிய மாயையினையீண்டுச்சூறுது ஆதிகாரணமாகிய செவிப்புலனுமணுத்திரளையெழுத்திற்கு முதற்காரணமென்றார்" (நன். எழுத்தி. ௬. சங்கர.) [அநாதிகாரண.]

அநாதிசடிலன் — சிவன். (செ.) [அநாதியாய்ச்சடையுடையவர். [அநாதி; ஜடில.]

அநாதிசித்தபதி — அநாதியாய்ச்சித்தித்த பதித்துவமுடையவர். (சி. சி. [அநாதிஸித்தபதி.]

அநாதிசித்தன் — அருகக்கடவுள். (சிவஞானபா. ௪௦.) [அநாதி-இயல்பு. ஸித்த-சித்தியுடையவன்.]

அநாதிசைவம் — பதினாறுவகைச் சைவத்துளொன்று; இது: பதி, பசு, பாசமென்னும் மூன்றும் அநாதிநித்தமாய் வியாத்தமாயிருக்கின்றன என்றும், பதிப்பொருளாகிய சிவனே முச்குண விகற்பமில்லாதவராய்க்கண்டு விபூதி, உருத்திராக்கம், பஞ்சாட்சரம், குருலிங்கவேடம் பொருளாய்க்கொண்டு சிவபூசைசெய்து பாசம் நீங்கி யான்மாவானது சிவனுடன் சேர்ந்து அவரைக்கும்பிட்டிருத்தல் பரமுத்தியென்றுஞ் சொல்லும். (த. நி. போ. உ௫௬.) [அநாதிசைவ.]

அநாதிசைவன் — 1. சதாசிவமூர்த்தி. (உ-ம்.) "அரிய சதாசிவனென்போனாதிசைவன்" (ஆசௌசதீ.) 2. பதினாறுசைவத்துளொன்றாகிய அநாதிசைவத்தைத்தழுவினவன். [அநாதிசைவ.]

அநாதித்துவம் — தொடக்கமில்லாத நித்தியத்தன்மை. (வாசுதே. ௯௨௪.) (உ-ம்.) "இதனாலே கன்மமநாதித்துவமும் ஆதித்துவமுங்கூறவே கன்மக்ஷயங் கூறியதாயிற்று. (சி. சி. ௧௧; ௬. மறை.) [அநாதி—ஆதியல்லாதது. த்வம்—தன்மை.]

அநாதிநாதர் — கௌளயாமளசிகளைக் கற்பித்தாவாத சித்தர்களிலொருவர். (வேதா. சூ. ௧௬. உரை.)

அநாதிநின்மலன் — அநாதியாகவே மலரகிதமாயிருக்கிறவன்: (சி. சி. ௫: ௬. சிவாக்.) [அநாதி – ஆதியின்மை. நிர்மலன்—மலமில்லாதவன்.]

அநாதிபந்தம் — அநாதியாயுள்ளபந்தம். (உ-ம்.) "அநாதிபந்தமோடநுபந்தமாவது மலமே" (தணிகை. நந்தி. ௯௬)[அநாதி—ஆதியல்லாதது. பந்த-கட்டு.]

அநாதிபெத்தசித்து — அநாதியே ஆணவமலத்திலே கட்டுண்டுகிடந்த ஆன்மா. (சி. சி. ௧; ௧. சிவஞா.) [அநாதி-இயல்பு. பத்த—கட்டுப்பட்ட. சித்-அறிவுடைப்பொருள்.]

அநாதிபெத்தன் — அநாதியேமலத்திற் சட்டுண்டவன். (சிவஞானபா. ௪௦.) [அநாதி-இயல்பு. பத்த-கட்டப்பட்டவன்.]

அநாதிபோதம் — இயல்பாகவே ஞானமுடைமை. இக்குணம் மலரகிதமான ஆன்மாவுக்குரியதாதலால் இதனை அநாதிமுத்தத்தன்மையில் அடக்குவர். (உ-ம்.) "சாற்றரிய வநாதிபோதமடங்கலருஞ் சுதந்திருதை" (கூர்மபு. பிரபஞ்ச. ௬.) [அநாதி—இயல்பு, ஆதியல்லாதது. போத—அறிவு.]

அநாதிபோதன் — நித்தியஞானமுடையவனுகியகடவுள். (உ-ம்.) "அடைவுதரின் முடிவின்கணநாதிபோதன்—சொன்னுளும்" (சி. சி. பர. சௌத். மத. மறு. ௬.) [அநாதி—இயல்பு. போத-அறிவன்.]

அநாதிமலமுத்தர் — இயல்பாகவே பாசங்களின்நீங்கினவர். (உ. சை. வி. க.) [அநாதி—தொடக்கமில்லாத நித்தியகாலம். மலமுக்த-மலத்தால் விடப்பட்டவர்.]

அநாதிமாந்—அநாதியுள்ளதாயிருப்பது. (பௌஷ். பக். ௧௬௬.) [அநாதி ஆந்: அநாதி - ஆதியின்மை. ஆந்-ஒரு விகுதி.]

அநாதிமுத்தசித்து — இயல்பாகவேபாசங்களினீங்கினவராகியகடவுள். (உ-ம்.) "அநாதிமுத்தசித்துருமன்னிநின்றே" (சி. சி. ௧: ௧.) [அநாதிமுக்த. இயல்பாகப் பாசங்களினீங்கிய. சித்—அறிவுடைப்பொருள்.]

அநாதிமுத்தசிவன் அநாதியே மலபந்தமின்றி யிருக்குஞ்சிவன். (உ-ம்.) "பதிபதார்த்தத்து ளநாதிமுத்த சிவனுக்கு" (சி. சி. அளவை. ௫. ஞாநப்.) [அநாதிமுக்தசிவ:]

அநாதிமுத்தத்துவம் — இறைவனது குணங்களுளொன்று; அஃது: இயல்பாகவே பாசங்களின் நீங்கியிருக்குந்தன்மை. (சி. சி. பாயிர. ௬.) [அநாதிமுக்தத்வ: அநாதிமுக்த-அநாதியே மலத்தால்விடப்பட்டிருக்கிற. த்வ — தன்மை.]

அநாதிமுத்தன் — அநாதியே மலத்தாற் பந்திக்கப்படாத கடவுள். (உ-ம்.) "அநாதிமுத்தனயாதியே கலந்தருளமலன்" (தணிகை. நந்தியுப. ௯௬.) [அநாதிமுக்த: அநாதி — தொடக்கமில்லாத நித்தியகாலம். முக்த—விடப்பட்டவன்.]

அநாதியமலன் — அநாதியே மலமில்லாத நிட்களசிவன். (உ-ம்.) "அநாதியமலன்றருநூல்" (சி. சி. அ: ௪௫) [அநாதி; அமல—மலமில்லாதவன்.]

அநாதியன் — அநாதியாயுள்ள கடவுள் (உ-ம்.) "அநாதியனைமழுமான்கரத்தனை மால்விடையானை" (பட்டணத்துப்பி. பொது. ௫௬)[அநாதி; அன்.]

அநாதிரேக்கியம் — மிகுதியின்மை. (சி.) [அந்; ஆதிரேக்கியம்—மிகுதி.]

அநாதீநவம் — ஆதீநவமின்மை, சுத்தம். (உவில். உ௬.) [அநாதீநவம்; அந்-

எதிர்மறை. ஆதீநவம்—மாசு.]

அநாதுரம்—1. அவாவின்மை. (ஆப். உஎ.) 2. சிரமமடையாமை. (ஆப். உஎ.) 3. தைரியம். (உவில். உகூ.) 4. நோயின்மை. (உவில். உகூ.) [அநாதுர: அந்—எதிர்மறை. ஆதுரம்—அவா, நோய்.]

அநாதேயம்—ஆதேயமற்றது. (சி.) அங்கீகரிக்கத்தகாதது. (உவில். உகூ.) [அநாதேய: அந்—எதிர்மறை. ஆதேயம்—அங்கீகரிக்கத்தக்கது.]

அநாதை—1. ஒருசத்தி; அது: ஞானசொரூபமாய் ஞானசத்தியாயிருக்கும். (த. நி. போ. ௩௭௬.) 2. சாந்தியாதீதகலையிற் சிவதத்துவத்திலிருக்கும் பத்துப் புவனங்களுளொன்று. (சி. சி. அ: க. மறை; சி—லி. கிரி.உக. தாற்.) 3. சோடசகலைப்பிராசாதத்திற் பதின்மூன்றுவதுகலை; இது: வியாபிநி கலைக்கப்பாலுஞ் சமனைகலைக்கிப்பாலும் நடுவிலிருக்கின்ற நான்குகலைகளில் மூன்றுவதும் அந்தநான்கிலொன்றுன அநந்தைகலைக்குமேலோசங்குலத்திற் றுவாதசாந்தத்துளிருக்கிறதுமானது. (சி—லி. கிரி. எ; த. நி. போ. ௩௭௫.)

அநார்ந்தம் — இறுதியல்லாதது. (சி.) [அந்; ஆர்ந்த—இறுதியானது.]

அநாமயம்—நோயின்மை. (உ-ம்.) "அசடமநாமயம்" (கைவல். சந்தேக. ௩௭; உவில். உகூ.) [அநாமய: அந்—எதிர்மறை. ஆமயம்—நோய்.]

அநாமயன்—1. கடவுள். (உவில்.உகூ.) 2. நோயில்லாதவன். (உவில். உகூ.) [அநாமய: அந்—எதிர்மறை. ஆமயன்—நோயுடையவன்.]

அநாமிகை — 1. ஆழிவிரல். (உ-ம்.) "பெருவிரலை யநாமிகையோடியையச்கூட்டி" (கூர்மபு. சுத்தாசம. ௩௦.) [அ— எதிர்மறை. நாமிகா — பெயருடையது.]

அநாமை—அநாமிகை. (உவில். உகூ.) [அநாமா: அ—எதிர்மறை. நாமா—பெருடையது.]

அநாயகம்—அரசாட்சியின்மை. (உவின். உகூ.) 2. முதன்மையின்மை. (உவின். உகூ) [அ—எதிர்மறை. நாயகம்—முதன்மை.]

அநாயதம் — 1. தடையினில்லாதது. (உவில். உகூ.) 2. நீளமில்லாதது. (உவில். உகூ.) 3. பிரிவின்றி நெருங்கிய தொடராயிருப்பது. (உவில். உகூ.) [அநாயத: அந்—எதிர்மறை. ஆயதம்—தடை, நீளம்.]

அநாயம்—அநியாயம். (உ-ம்.) "அநாயமேயுருத்தெனைய" (இராமா. கும்ப. ௧௬௦) [அ—எதிர்மறை. ந்யாய—நீதி.]

அநாயாசகவாதம்—ஒருவகைவாதம்; அது: வேகமான ஓட்டம், மலசலமுதலிய பதினலுவேகத்தையடக்கிவிடுதல்—சீதளவஸ்து, க்ஷயபோஜநம் இவைகளினுற் பிறந்து சகல தாதுக்களிலும் வியாபித்துச் சரீரத்தில் மரத்தல், குத்தல், கனத்தல் முதலியநாநாவித வருத்தங்களை யுண்டாக்கும். (சீவரட். ௧௬௪,) [அநா—பிராணன். ஆயாஸ—வருத்தம்.]

அநாயாசம்—1. அலைவில்லாதது. (உ-ம்.) "அழியாததுமநாயாசமானதுமாகிய தேவரீரது வாழ்வை விரும்புவோன்" (கந்தபு. சயந்த. எகூ. உரை.) 2. இலகு. (உவில். உகூ.) 3. சோம்பின்மை. (உவில். உகூ.) [அநாயாஸ: அந் — எதிர்மறை. ஆயாஸ—வருத்தம், இளைப்பு.]

அநார்யு—தக்கன்மக்களிலொருத்தி; இவள் விருத்திராசுரன்முதலிய நாற்பது பிள்ளைகளுக்குந்தாய். (வி — ணி. உ௫௫; அபிதா.)

அநார்ச்சவம்—1. மனக்கோட்டம், மநேர்மையின்மை. (ஆப். உ௮.) 2. வளைவு. (ஆப். உ௮.) 3. வியாதி. (ஆப். உ௮.) [அநார்ஜவ: அர்—எதிர்மறை. ஆர்ஜவ—நேர்மை.]

அநாரதம்—1. இடையறுமை. (ஆப். உ௮.) 2. ஓய்வின்மை. (ஆப். உ௮.) 3. நித்தியமாய். (ஆப். உ௮.) [அநாரத: அர்—எதிர்மறை. ஆரதம்—ஓய்வு.]

அநாரப்தம்—ஆரம்பஞ்செய்யப்படாதது. (பௌட். பகு. ௫௮.) [அநாரப்த: அந்— எதிர்மறை. ஆரப்தம்—தொடங்கப்பட்டது.]

அநாரம்பம்—தொடக்கமின்மை. (உவில். உகூ.) [அநாரம்ப: அந் - எதிர்மறை. ஆரம்ப—தொடக்கம்]

அநாரியதித்தம் — நிலவேம்பு. (சாவைத்; உவில். ௩௦.) [அநார்யதிக்த: அநார்ய—இழிந்த. திக்த—கசப்பு.]

அநாரியர்—1. ஆரியரல்லாதவர். (ஆப். உ௮.) 2. மிலேச்சர். (ஆப். உ௮; சூ. நிகண். உ: ௩௧) [அநார்ய: அந்—எதிர்மறை. ஆர்யர்—மதிக்கத்தக்கவர்.]

அநாரோக்கியம் — நோய். (உவில். உகூ.) [அநாரோக்ய: அந்—எதிர்மறை. ஆரோக்ய—நோயின்மை, சுகம்.]

அநாவிருட்டி—மழையின்மை. (உ-ம்.) "இன்றுதொட்டநாவிருட்டி யெய்துநூருண்டிவற்றுள்—வென்றிவெங்கதிரோன்காய வெர்திடுந் தரணியெல்லாம்" (மச்சபு. பிரமாண்ட. உ; உவில். ௩௦.) [அநாவ்ருஷ்டி: அந்—எதிர்மறை. ஆவிருஷ்டி—மழை.]

அநாவிருத்தி — 1. திரும்பிவாராமை. (ஆப். உ௮.) 2. மறுதரம்பிறவாமை. (பகவற்கீ. அ: உ௬.) 3. பாசமுத்தி. (ஆப். உ௮.) [அநாவ்ருத்தி: அந்—எதிர்மறை. ஆவ்ருத்தி—திரும்பிவருதல்.]

அநாவிருதம்—1. தடையின்மை. (சி. சி. அளவை. எ.) 2. மறைக்கப்படா

தது. (உவில். ௬௦.) [அநாவ்ருத: அந்-எதிர்மறை. ஆவ்ருத ம்-மறைக்கப்பட்டது.]

அநாவிலம் — 1. கலங்கலின்மை. (உவில். ௬௦.) 2. தெளிவு. (உவில். ௬௦.) [அநாவிலம்: அந்-எதிர்மறை. ஆவிலம்-கலங்கல்.]

அநாவிலன் — சுக்கிரன். (சி.) [அந்-எதிர்மறை. ஆவிலம்-அழுக்கு, கருமை நிறம். ஆப். ௯௬௭.]

அநான்ம — ஆன்மா அல்லாதது. (உ-ம்.) "அநான்ம ஆன்ம விவேக தரிசநம் பண்ணுஞ்சகலர்க்கும்" (சி. சி. ௪: ௫- ஞாநப்.) [அந்-எதிர்மறை, ஆத்ம]

அநான்மபுத்தி — ஆத்துமா அல்லாத தேகாதிப் பிரபஞ்சத்தையுண்மையாகத்தானென்று கொள்ளுதல். (உ-ம்.) "அவனநான்ம புத்தியினை யொழித்து" (வேதா. சூ. ௧௧.) [அந்-எதிர்மறை. ஆத்மபுத்தி-ஆத்மா என்று புத்திபண்ணல்.]

அநான்மவாதி — ஆன்மா என்றொரு பொருளில்லையென்று சொல்லுவோன். (மணிமேக. ௬௦௭.) [அந்-எதிர்மறை. ஆத்மவாதி-ஆன்மா உண்டென்போன்.]

அநான்மா — 1. ஆன்மா அல்லாதது. (வாச) 2. ஆன்மா அல்லாத தேகாதிப் பிரபஞ்சம். (வாச.) 3. தேகம். (சி. சி. ௪: ௫. ஞாநப்.) [அந்-எதிர்மறை. ஆத்மா-சீவன்.]

அநி—நெற்பொரி. (இராசவைத்.)

அநிக்கிரகம் — பந்தமின்மை. (உவில். ௬௦.) [அ-எதிர்மறை. நிக்ரஹ-பந்தம்.]

அநிகம் — 1. சங்கம் மூன்றுகொண்ட சேனை. (உவின். உ௬.) 2. சேனை. (உ-ம்.) "அநிகமோடலும்" (சேதுபு. இராமதீ. ௬௫.) [அநீக.]

அநிகர்—சேனையாளோர். (உ-ம்.) "கவியநிகர்க்கெதிர்" (சேதுபு. இராமன ரு. ௩௫௭.)

அநிகேதன் — நிலையான வாசஸ்தானமில்லாதவன். (பகவற்கீ. ௧௨: ௧௯) [அ-எதிர்மறை. நிகேத-வீடு.]

அநிச்சகன் — விருப்பில்லாதவன். (ஆப். உ௮.) [அநிச்சக: அந்-எதிர்மறை. இச்சக-விருப்புள்ளவன்.]

அநிச்சாப்பிராரத்தம்—ஒருவருக்குப் பிரியமில்லாதிருந்தும் வலாற்காரத்தினால் அவரைப்பயனநுபவிக்கச்செய்யும் முன்னைவினை. (உ-ம்.) "இச்சையுடனநிச்சை பிறரிச்சை யெனுமிவற்றா லியம்பலூறுபிராரத்தமூன்றுவகைப்படுமா - லச்சுரர்களானும் விலக்குதற்கரியவாகு மபத்தியஞ்செய்திடறனக்கே கேடெனவிங்கறிந்தும்-வைச்சுமதுபுரிவித்த லிச்சைசெய்யேனெனினுமன்னவர்தம்மாணைபோற் செய்வித்தலநிச்சை- யிச்சையநிச்சைகளின்றியிருந்து மயலோராலின் பதுன்பநுகர்வித்தல் பிறரிச்சைவினையாம்" (வேதா-சூ. ௧௭௫-ம் உரையும் பார்.) [அநிச்சா-இச்சையின்மை. ப்ராரப்த.]

அநிச்சிதம் — நிச்சயிக்கப்படாதது. (தர்க்கபா. ௨௬.) [அ-எதிர்மறை. நிச்சித-நிச்சயிக்கப்பட்டது.]

அநிச்சை — இச்சையின்மை. (உ-ம். "அநிச்சாப்பிராரத்தம்" பார்.) [அந்-எதிர்மறை. இச்சா-விருப்பு.]

அநிசம்—1. ஓயாமல், இடைவிடாமல். (ஆப். உ௧.) 2. நித்தியமும். (உ-ம்.) "சிவத்துவமநிசந்தோயாநல்கலாற் சதாசிவமெனப் பெயர்துன்னும்" (வேதாரணியப்பு. வேதநதி. ௫௮; உவில். ௬௧.) [அ-எதிர்மறை. நிசா-இரவு = அந்தம். கிரியைவிட்டோய்ந்திருக்குங் காலம் இரவாதலால் ஓய்வெனப் பொருள்தந்தது.

அநிட்டநிவிர்த்தி—வேண்டாதன ஒழிதல். (உ-ம்.) "ஆன்மாவைக்கஞ்சுகம் போலஆவரித் தேகதேச விருத்திபண்ணிக்கொண்டிரியும் பும்ஸத்வமலம் போகையால் ஜநநமரணமு மதனாலுண்டானபிராந்தியும் விகாரமும் இல்லையாம் இது அநிட்டநிவிர்த்தி" (சி. சி. ௪: உ௬. சிவாக்.) [அநிஷ்ட-பிரியமில்லாதது. நிவிர்த்தி-ஒழிதல்.]

அநிட்டப்பிரசங்கம் — தர்க்கபாஷையிற் சொல்லப்படும் எட்டாம் பதார்த்தமாகிய தர்க்கம்; அது: சித்தமான வியாத்தியையுடைய தருமங்களுள், வியாப்பிய அங்கீகாரத்தால் வியாபகத்தின் வரவு. (உ-ம்.) "இம்மலை தீயுடையதோ இல்லதோ என்னும் ஐயத்தின் பின் ஒருவன் தீயில்லது என்று கருதின், அப்போதவனைக் குறித்துத் தீயில்லதாயின், அதனால் புகை யில்லதுமாகவேண்டுமென்று புகையில்லாமையின் வரவுபண்ணப்படுதல்" (தர்க்கபா. ௭௬.) [அநிஷ்ட-இட்டமில்லாத. ப்ரஸங்க-வரவு, சாத்தியம்.]

அநிட்டம்—இட்டமல்லாதது, விரும்பப்படாதது. (உ-ம்.) "அநிட்டநின்றகற்றி" (நெடுங்கழில். ௪. சிவப்பிரகாசர். பிரபந்த.) 2. இடையூறு, இடுக்கண். (வாச.) 3. உவப்பாக்கொள்ளப்படாதது. (வென். ௪0௩.) [அநிஷ்ட]

அநிட்டை — நிலையின்மை. (உவில். ௬௪.) [அநிஷ்டா: அ-எதிர்மறை. நிஷ்டா-நிலை.]

அநித்தம் — 1. இடையிடையே நிகழ்வது, நிலைப்படவழங்காதது. (உ-ம்.) "சித்தமநித்தமலுக்குலுக்காந் தொகைகின்றநிலை-மெய்த்த கிடக்கை முறைத் தொகைப்பார்தம் விபரியமாம்-பொய்த்தொகையாறும்" (பி. வீ. உ௭.) 2. நிச்சயமல்லாதது, சந்தேகம். (ஆப். உ௧.) 3. நித்தியகாலத்துக்கில்லாமை. (உ-ம்.) "தருமாத்திகாயமழிவித்த நித்தமதுபண்ணும்" (சி. சி. பர. நிகண். மதம். ௭) 4. நித்தியமல்லாதசாலம். (ஆப். உ௧.)

[அநித்ய: "நித்ய" என்பதில் யகரங் கெட்டுவந்தது.]

அநித்தியசமம்—தர்க்கசாஸ்திர விதிப்படியன்றித் திருட்டாந்தத்தைக்கொண்டு ஞாயம் பேசுதல். (உவில். ருO.) [அநித்யஸம: அநித்ய—நிச்சயமல்லாதது. ஸம—போல்வது. எப்போதும் பலங்கொள்ளாத ஞாயமென்றபடி.]

அநித்தியசமாசம்—நித்தியசமாசமல்லாதசமாசம்; வேறுரூபமாகப் புணர்வதும் விலக்கப்படாத ஒருவகைப்புணர் மொழி. அநித்தியசமாசத்திற்கு தாரணம்: எண்டிசை; அது எட்டு, திசையென்னுஞ் சொற்கள் புணர்ந்து சமாசமாகுமிடத்து எண்டிசையென வருதலன்றி யெட்டுத்திசையெனவரலுமாம். ஆதலால் "எண்டிசை" யென்பதநித்தியசமாசம். (ஆப். உஅ; பி. வி. உஎ—ங் கவியுரை பார்.) [அநித்யஸமாஸ. எப்போழ்தும் வரவேண்டியவகையிதுவேயென ஒருநியமமில்லாததால் வந்தபெயர்.]

அநித்தியத்துவப்பிரசங்கம் — அநித்தியத்துவஞ்சாதித்தல். (உ-ம்.) "அப்படியாகில் தன்ம தன்மிகளுக்கு விபாகபேதமாதலாற் றன்மிக்கு மநித்தியத்துவப் பிரசங்கம் வரும"(சி. சி. எ: உ.) [அநித்தியத்வம் — நித்தியமின்மை. ப்ரஸங்கம்—சாதித்தல்.]

அநித்தியத்துவம் — நித்தியத்துவமல்லாமை. (உ—ம்.) "அநித்தியத்துவத்தையறையாநிற்கும்" (சூத. எக்கி. பூ. கஅ: ச.) [அ—எதிர்மறை. நித்யத்வம்—அழியாவியல்பு.]

அநித்தியதை—அநித்தியத்துவம். (சி. சி. உ: உ. சிவாக்.) [அநித்தியதா: அநித்திய—நித்தியமல்லாத. தா—தன்மை.]

அநித்தியம்—1. இடையிடையே நிகழ்வது, நிலைப்பட்டவழக்கம் இல்லாதது. (ஆப். உகூ.) 2. நிச்சயமல்லாதது, சந்தேகம். (ஆப். உகூ.) 3. நித்தியகாலத் தக்கில்லாமை. (ஆப். உகூ.) 4. நித்தியமல்லாதகாலம். (உ-ம்.) "அம்மவோ சிசியிந்தவநித்திய வாழ்வு வேண்டேன்" (காஞ்சிபு: திருநெறி. சஅ.)

அநித்தியலிங்கம்—வடமொழியில் விசேடணமாகிவரும் பதம் ஒருலிங்கத்தில் நின்றது விசேடியமாய்வரும் பதத்துக்கு ஒத்ததாக மற்றொன்றாகவரும் லிங்கம். "வடநூலார் கர்மதாரயனென்னும் பண்புத தொகைக்குப் பண்புவேறொரு லிங்கமாக நின்றாலும் பண்புடைப்பொருள் எந்தலிங்கமாம் அந்தலிங்கமாக்கிப் புணர்த்துவராதலன், அடையாகநின்ற குணலிங்கத்தை அநித்தியலிங்க மென்பர்" (பி.வி. சகூ. உரை) [அநித்ய—நித்தியமின்மை, ஒருபடித்தாய்வராமை. லிங்கம்—பால்.]

அநித்திரைச்சுரம் — அறுபத்து நான்குவகைச் சுரரோகங்களுளொன்று; அது: நித்திரையின்மை, தேக எரிச்சல், தாகம், மயக்கம், தலைத்திருப்பல், நாவும் வாயுமுலரல், மேற்சுவாசம், சீதளமதிகரித்தல், மிகுகூச்சல், அடித்தொடைச் சதையும் முழங்காற் சதையும்நோவு, ஈனத்தொனியான வார்த்தை, சதாஇருமல், மூர்ச்சையென்னு மிக்குணங்களை யுண்டாக்கும். (சீவரட். சஅ.)

அநிதம்—அளவுபடாமை. (உ-ம்.) "அநிதகோடி யணிமுடிமாலையும்" (பெரியபு. திருமலை. ரு.)

அநிதானம்—1. ஆதாரமின்மை. (உவில். ருO.) 2. ஒழியாமை, ஓயாமை. (உவில். ருO.) 3. காரணமின்மை. (உவில். ருO.) [அநிதாந: அ—எதிர்மறை. நிதாந—காரணம், ஓய்வு. உவில். ரு அச]

அநிந்திதை—1. உமாதேவியாருடைய தோழிப் பெண்களுளொருத்தி. (பெரியபு. திருமலை. உச.) 2. நிந்திக்கப்படாதவள். (உவில். ருO.) [அ—எதிர்மறை. நிந்திதா—நிந்திக்கப் பட்டவள்.]

அநிமிடம்—1. இமை கொட்டாமை. (ஆப். உகூ.) 2. மச்சம். (உவில். ருO.) [அ—எதிர்மறை. நிமிஷ—இமைத்தல்]

அநிமிடன் — 1. கண்ணிமைக்காதிருக்கிறவன். (உவில். ருO.) 2. தேவன். (உவில். ருO.) 3. விட்டுணு. (ஆப். உகூ.) [அநிமிஷ: அ — எதிர்மறை. நிமிஷ—இமைக்கிறவன்.]

அநிமீலநம்—இறவாமை. [அ—எதிர்மறை. நிமீலந—இறத்தல். ஆப். சசகூ.]

அநிமேடம்—1. பிசாசு. (உவில். ருO.) 2. மீன். (உவில். ருO.) [அநிமேஷ: அ—எதிர்மறை. நிமேஷம்—இமைத்தலுடையது.]

அநிமேடன்—1. இமையாது கண்ணான்றிப் பார்ப்போன். (உவில். ருO.) 2. கடவுள். (உவில். ருO.) [அநிமேஷ: அ—எதிர்மறை. நிமேஷ—இமைத்துப்பார்ப்போன்.]

அநியதகன்மம்—ஈட்டியமுறையில் வராமற் பக்குவம் வந்தவழிப்புசிக்க வருங்கன்மம்; அது: அசுவமேதமுமபிரமகத்தியும்ஒருகாலத்திற் செய்யப்பட்டுப்பக்குவம்வந்தவழி யொருங்கே இரண்டும் புசிக்கப்படாமையிற் கருத்தா இன்னகாலத்தில் இதுவென்று உறுத்திப் புசிப்பிக்குமதுபோல்வது. (சிவப்பிர. உ: சகூ. உரை. சிதம்பர.) [அநியத—நியமமல்லாத. கர்ம-வினை.]

அநியதகாலம்—நியமமல்லாதகாலம். (பௌட். பசு. கூக.) [அநியத—நியமமல்லாத. காலம்-சமயம்.]

அநியதகாலோபபோக்கியம்—இன்னவேளை புசிக்கப்படுமென் றறியப்படாத கன்மம். (பௌட். பசு. கூச.) [அநியதகால; உபபோஜ்ய-புசிக்கப்படுவது.]

அநியதம்—1. கிரமத்தில்லாததது. (ஆப். உகூ.) 2. நியதமில்லாதது. (ஆப். உகூ.) (உ-ம்.) "அநியதகன்மம்" [அ-எதிர்மறை. நியதம்—நியமம்.]

அநியம்—அர்கியம். (உ-ம்.) "தநுக்கு டலநியமுணர்தரின்" (வைரா. நிப. சசு.) [அந்ரு.]

அநியமச்சிலேடை —(சி.) ஓரலங்காரம்; அது: சிலேடித்தபொருள் நியமஞ்செய்யப்பட்டதனோடு பிறிதுமொன்றைச் சேர்த்தல். (உ-ம்.) "சிறைபடுவபுட்குலமேதீம்புனலுமன்ன" [அநியத-நியமமின்மை. ஶ்லேஷா — பலபொருட்சொற்றொடர்.]

அநியமம்—1. அநாசாரம், அதர்மம். (உ-ம்.) "அநியமபரியாயமான வதன்மத்துக்கும்" (சி. சி. உ. சுஙு. சிவாக்.) 2. சந்தேகம், நிச்சயமின்மை. (உவில். ஙo.) 3. மரியாதைத்தப்பா னநடை. (உவில். ஙo.) 4. விதிகற்பிக்கப்படாதது. (உவில். ஙo.), [அநியமம்: அ-எதிர்மறை. நியமம்—நிலை.]

அநியமவுவமை — உவமையலங்காரத்தினொருவகை; அது: இன்னதற்கின்னதே யுவமையாகுமென்று அணிந்து நியமித்த உவமையோடு பிறிதும் ஒருவமையைச் சேர்த்தல். (உ-ம்.) "செவ்வி-மதுவார் கவிரேசிலவாய் போல்வதன்றி-யதுபோல்வதுண்டே னினுமாம்" (தண்டி. ஙக.) [அநியத-நியமமின்மை. உவமா — ஓரலங்காரம்.]

அநியாயசம் — அநியாயத்தாலுண்டாயிருப்பது. (பௌட். பும். ருஅ.) [அந்யாயஜம்-அந்யாயம்-அநீதி. ஜம்--பிறந்தது.]

அநியாயம் — நியாயக்கேடு, நியாயமின்மை. (உ-ம்) "அநியாயமாயெமையடக்கிக் குறுக்கே யடர்ந்தரசுபண்ணி" (தாயு. சுகவா. கஉ.) [அந்யாய அ — எதிர்மறை. ந்யாயம் - நீதி.]

அநிர்தம்—அநிருதம். (வி - ணி.) (உ-ம்.) "அநிர்தசடதிக்கம்" [அந்-எதிர்மறை. ருத-மெய்.]

அநிர்வசநம் — வசகித்தற் கியலாத இல் பொருள். (உ-ம்.) "அநிர்வசாத்திலுலகந்தோன்றும் என்னும்மாயாவாதத்தை" (சி. சி. க. உஎ. சிவஞா.) [அ —எதிர்மறை. நிர்வசந—பேச்சு.]

அநிர்வசநீயம் — வசநிக்கப்படக்கூடாதது. (உவில். ஙக.) [அநிர்வசநீய: அ—எதிர்மறை. நிர்வசநீயம் — இலக்கணம் முதலியவைகளாற் சொல்லத்தக்கது.]

அநிர்வாகம்—1. இயைபின்மை. (உவில். ஙக.) 2. உணவுக்குவழியின்மை. (உவில். ஙக.) 3. ஒவ்வாமை. (உவில். ஙக.) 4. பூரணமின்மை. (உவில். ஙக.) [அநிர்வாஹ. அ—எதிர்மறை. நிர்வாஹம்—இயைபு.]

அநிராகர்த்திருசம்பிரதாநம்— (இலக்கண) கௌாதேற்றலில் "முக்கண்மூர்த்திக்குப் பூவிட்டான்" என்பதிற் போல்வரும் நான்காம் வேற்றுமை. (பி. வி. சுங. உரை.) [இதனை வீரசோழியகாரர்கிடைப்புக்கோளி என்பர்.(வீரசோ.உபகாரக) [அ-எதிர்மறை நிராகர்த்திரு—தள்ளுதல்.]

அநிராகருத்தா—அநிராகருத்திரு சம்பிரதாநம். (உ-ம்.) "பெடைமயிலேயநிராகருத்தாவும்பிரேரகமுங் - கொடையெதிர் கூற்ற நுமந்தாவுமாமென்பர் கொள்பவனே" (பி. வி. சங.)

அநிருத்தபதம் — 1. ஆகாயம். (ஆப். உக.) 2.தடையற்றவழி. (ஆப். உக.) [அநிருத்தபத: அ—எதிர்மறை. நிருத்த —தடை.]

அநிருத்தபாவிநி—அநிருத்தன்மனைவியாகிய உஷை. (ஆப். உக.) [அநிருத்தபாவிநீ: பாவிநீ-சௌந்தரியமான் பெண்.]

அநிருத்தம்—1. தடையின்மை. (ஆப். உக.) [அநிருத்த: அ-எதிர்மறை. நிருத்த —தடை.] 2. நன்குவிளக்காமை. (ஆப் உக.) [அநிருக்த. அ-எதிர்மறை.நிருக்த-சொல்லப்பட்ட.]

அநிருத்தன்—1. ஒற்றன். (ஆப். உக.) 2. தன்னிட்டமாய்த் திரிவோன். (ஆப். உக.) 3. பிரத்தியுமிநனுடைய ஒருமகன். (உ-ம்.) "கண்ணன்சேய்பெறும் பெருஞ்செழிலநிருத்தன்" (காஞ்சிபு. வாண. ங.) [அநிருத்த: அ-எதிர்மறை. நிருத்த—தடுக்கப்படுவோன்.]

அநிருதம்—உள்ளதல்லாதது, பொய். (உவில். ஙஅ.) [அந்ருத: அந் - எதிர்மறை. ருத-உண்மை.]

அநிருதவாதி—பொய்பேசுவோன். (உவில். ஙஅ.) [அந்ருதவாதி: அந்ருதம் - பொய். வாதி--சொல்வோன்.]

அநிருமலம் — அழுக்கு. (உவில். ஙo.) [அநிர்மலம்: அ-எதிர்மறை. நிர்மலம்-சுத்தம்.]

அநிருவசநம் —சொல்லொணாதது. (சிவஞாநபா. கஎ.) [அநிர்வசநம்.]

அநிலச்சூலை — வாதசூலை. (உ-ம்.) "கொடுவிட வநிலச்சூலைக் குலம்" (தைல. தைலவ. கஙக.) [அநில; சூலா.]

அநிலசகன் — நெருப்பு. உவில். ஙக.) [அநிலஸக: அநில-காற்று. ஸக- நண்பன்.]

அநிலசம் — செம்முகக் குரங்கு. (சி.) [அநில—வாயு. ஜம்—பிறந்தது.]

அநிலநாள் — 1. சோதிநாள். (மா.) 2. விசாகநாள். (மா.) [அநில—காற்று. நாள்-நட்சத்திரம்.]

அநிலம்—1. காற்று. (உ-ம்.) "பரிசதன்மாத்திரையடையுமநிலம்" (கூர்மபு பிரகிரு. கஉ; உவில். ஙக.) 2. பிறப்பு. (சி; உவில். உங.) 3. வாதரோகம். (உ-ம்.) "அநிலக்குழுவை பிநாதி முன்னெதிர்மறமாம்" (தைல. தைலவ. கங.)

[அந—பிராணன். ஊல்-ஓர்வடமொழி விகுதி.]

அநிலன்—1. அட்டவசுக்களிலொருவன். (உவில். ௬௧.) (உ-ம்.) "ஆபன் வேற்றுருவனற்சோமன்—திங்களங்க விசைத்தானுய ரநிலனநலன் மெய் தெளிபிரத்யூடன்—றுங்கவேற் பிரபா சகனெனவெடுத்துரைப்பர்" (கூர்மபு தக்கன்வ. ௬.) 2. ஓரிராக்கதன். (உவின். ௨௬.) 3. பிராணவாயு. (உ-ம்.) "ஆனதநுவதனிலுறு மநிலனையுமியக்கி" (சிவப்பிர. ௨: ௨௫.) 4. வாயுதேவன். (உ-ம்.) "அநிலன்மன்னுந்திக்கினில்" (வேதாரணியபு. சபை.௧௪.)

அநிலாசநம்—உபவாசம். (ஆப். ௨௬.) காற்றையுண்ணுதல். (ஆப். ௨௬.) (உ-ம்.) "நிலாதவநிலாசநியாயபரியாலவர்" (திருப்பு. ௬௬௦.) [அநில-காற்று. அசநம்-உணவு.]

அநிலாத்துமசன்—1. அநுமான். (உவில். ௬௦.) 2. வீமன். (உவில். ௬௦.) [அநிலாத்மஜ: அநில-காற்று. ஆத்மஜ-புத்திரன்.]

அநிலாமயம்—வாதநோய். (சப்த.) [அநில-வாயு. ஆமயம்-நோய்.]

அநிலி—சோதிநாள். (உவில். ௬௧.) [அநிலீ: அநில-காற்று. ஈ-ஓர்விகுதி.]

அநிவாரிதம்—தடுக்கப்படாதது. (உ-ம்.) "சிவனைப்போல அநிவாரித சிற்சத்திப்பிரகாசவரூபனு" (சி. சி. ௭: ௨. சிவாக்; வெண். ௪௮௬.) [அ-எதிர்மறை. நிவாரிதம்-தடுக்கப்பட்டது.]

அநீகம் — 1. கவசமின்மை. (உவில். ௬௧.) [அநீஹ.] 2. சேனை. (உ-ம்.) "அலகிலானையநீகமொடெய்தினன்" (திருவிளை. உக்கிர. வேல்வளை. ௧௭.) 3. சேனைத்தொகையிலொன்று. (திவாகர.) (உ-ம். "அநீகிநி" பார்) 4. போர். (உவில். ௨௬.) [2, 3, 4-அநீக.]

அநீகிதம்—விரும்பப்படாதது. (உவில். ௯௪௧.) [அநீஹித: அந்-எதிர்மறை. ஈஹிதம்-விருப்பம்.]

அநீகிநி—1. சேனை. (உவில். ௬௧.) (உ-ம்.) "அநீகிநித்துளிகண்புதைத்தசென்று" (பாரத. வாரணா. ௭௬.) 2. தாமரை. (உவில். ௬௧.) 3. படைத்தொகைகளு ளொன்று; அஃது: இரண்டாயிரத்து நூற்றெண்பத்தேழு யானைகளும், அவ்வளவுதேர்களும், ஆறுயிரத்தைந்நூற்றறுபத்தேழு குதிரைகளும். பதினாயிரத்துத் தொளாயிரத்து முப்பத்தைந்து காலாட்களுங் கொண்டது; இஃதக் குரோணியின் பத்திலொருபங்கு. (உவில். ௬௧.) [அநீகிநி: அநீக-யுத்தம். இநி-ஒருவிகுதி.]

அநீச்சுவரவாதி—கடவுள் இல்லையென்பவன். (உவில். ௬௧.) [அநீஸ்வர: அந்-எதிர்மறை. ஈஸ்வர — கடவுள். வாதி.]

அநீச்சுவரன்—1. கடவுள் இல்லையென்கிறவன். (ஆப். ௬௦.) 2. சாமர்த்தியம் இல்லாதவன். (ஆப். ௬௦.) 3. தனக்கொருமுதல்வன் இல்லாதவன். (ஆப். ௬௦.)

அநீசம்—மரியாதை. (உவில். ௬௧.) [அநீச: அ; நீச-இழிவு.]

அநீசன்—1. சாமர்த்தியம் இல்லாதவன். (பௌட். பதிபட, ௮௬.) [அநீச] 2. தலைவனை யில்லாதவன். (உவில். ௬௧.) [அநீச: அந்; ஈச-தலைவன்.] 3. நீசனல்லாதவன். (உவில். ௬௧.) [அநீச: அ; நீசன்-கீழ்மகன்.] 4. விட்டுணு. (உவில். ௬௧.) [அநீச: அந்; ஈச-தலைவன்.]

அநீசுவரவாதி—கடவுள் இல்லையென்னும் மதஸ்தன். (உவில். ௬௧.) [அநீஸ்வரவாதி.]

அநீசுவரன்—1. கடவுள் இல்லையென்னும் மதஸ்தன். (ஆப். ௬௦.) 2. தனக்குமேலேயதிபதியில்லாதவன். (பௌட். பசு. ௧.) [அநீஸ்வர: அந்; ஈஸ்வர - அதிபதி.]

அநீதம்—நீதம்இன்மை. (மா.) [அ; நீதம்-நல்லொழுக்கம். ஆப். ௪௬௭.]

அநீதர்—நீதமற்றவர். (உவின். ௨௬.) [அ; நீதர்.]

அநீதி—நீதியின்மை. (உவில். ௬.) (உ-ம்.) "கேடுசெய்யக் கிளர்ந்த தநீதியே" (திருநெல். சத்த. ௭௬.) [அ; நீதி-நல்லொழுக்கம்.]

அநீதிமாந்—நீதியில்லாதவன். [த. நி. போ. ௨௮௫.] [நீதிமாந்-நீதியுடையவன்.]

அநீதியர் — நீதியில்லாதவர். (உவின். ௨௬.) [நீதியர்-நீதியுடையவர்.]

அநு—1. ஆயுதம். (உவில். ௬௬௨.) [ஹநு.] 2. இன எழுத்தால் வரும் மோனை; இனஎழுத்தாவன: அ, ஆ, ஐ, ஔ ஓரினமும், இ, ஈ, எ, ஏ ஓரினமும, உ, ஊ, ஒ, ஓ ஓரினமும், ஞ, ந ஓரினமும், ம, வ ஓரினமும், ச, த ஓரினமுமாகும். (உ-ம்.) "அகரமொடாகாரமைகாரமௌகா - னிகரமொடீகாரமெஏ - உகரமொ - டூகாரமொ ஒனுமவதச்சக்கர - மாகாதவல்ல வநு" (இலக்கணவிள. செய்யுளிய. ௬௬.) 3. கதுப்பு. (உவில். ௬௬௨.) [ஹநு.] 4. சீவநாசஞ்செய்யுமது. (உ-ம்.) "கடவுள் வேடன்றருங்கணை கரத்திற் கொண்டு—தானுடைத்தநுவிற்பூட்டியநுப்படச் சமைந்ததோரார்" (பாரத. நிவாதக. ௬௪.) [ஹநு.] 5. நோய். (உவில். ௬௬௨.) [ஹநு.] 6. பின், போல, கீழ், கூட, நீளமாய், சமீபம், உறுப்பு, தனித்தனி, குறித்து, வரிசை யென்னும்பொருள்களைக் காட்டும் ஓர் உபசர்க்கம். (உவில். ௬௧, ௬௨.) [அநு] 7. மரணம். (உவில். ௬௬௨.) [ஹநு.] 8. முலைப்பால். (இராசவைத்.)

அநுக்கம்—1. சந்தநம். (உவின். ௫௭.) 2. பாம்பு. (உவின். ௫௭.)

அநுக்காட்டல்—சாடைகாண்பித்தல். (சி.) [அநு-அம்சம்.]

அநுக்கிரககர்த்தா—அநுக்கிரககிருத்தியஞ்செய்யுங்கடவுள். (உவின்.டுகூ) [அநுக்ரஹ—தயை. கர்த்தா - செய்வோன்.]

அநுக்கிரகபரை—1. அநுக்கிரகத்தை முக்கியமாக உடையது. 2. பராசத்தி. (உ-ம்) "பரமசிவத்தில் ஆயிரத்தொரு அமிசமாகப் பராசத்தியானது ஆவிர்ப்பவித்து அநுக்கிரகபரையாயிருக்கும்" (சி. சி. உ: எசு. சிவாக்.) [அநுக்ரஹ—கிருபை. பரா—முக்கியமாக உடையது.]

அநுக்கிரகம்—சிவனுடைய பஞ்சகிருத்தியங்களுளொன்று; அது பசுவாகிய ஆன்மாவில் மலம்நீக்கிச் சிவத்துவம்வருவித்தல். (சி. சி. க: கூஎ. ஞானப்.) "மகாசங்காரத்திற் சத்திரூபமாக மாயையிலிருக்கும் புவனங்களில் அதிசூக்ஷ்ம சரீரமுள்ளவர்களாய் அங்குள்ள அதிகாரிகளும் பிரகிருதிமுதலானபுவனங்களிலிருக்கும் புவனபதிகளும் வியாபாரத்தைவிட்டு விஞ்ஞானகலராவார்கள். அவர்களுக்குளளே மகாசங்காரகாலத்தில் மலபரிபாகம்வந்தவர் முத்தராவார்கள்; வாராதவர்தத்தந்தானத்தைத் தரித்துக்கொண்டிருப்பார்கள். சுத்தாத்துவாதிகாரிகளாகிய அநந்தாதிகள்சர்வோத்கிருஷ்டமான பரமோக்ஷமென்னும் சிவசுவரூபத்தை யடைகின்றார்கள். இதுதான் சிவனுடைய அநுக்கிரககிருத்தியம்" (சி-லி.ஞான.சுஉஅ. தாற்.) 2. தீக்ஷைசெய்தல். (சி.சி.க:கூஎ. ஞானப்) 3. தீமையைவிலக்கிநன்மையை யதிகப்படுத்தலாகிய தயவு. (உ-ம்.) "புலனமைவிற்றகச் செய்யநுக்கிரகமெலாஞ் சிலரொருபாற்புகழ்ந்துபாட" (சூத.சிவமான்.எ.உகூ; உவில்.கூஉ) [அநுக்ரஹ: அநு-பின. க்ரஹ-எடுத்தல்.]

அநுக்கிரகாங்குரம்—அநுக்கிரகமுளைத்தல். (உவில். ...) [அநுக்ரஹ—தயை. அங்குரம்-முளை.]

அநுக்கிரகித்தல்—அநுக்கிரகஞ்செய்தல். (யா.)

அநுக்கிரகிப்பு—அநுக்கிரகித்தல். (உவின். டுகூ.)

அநுக்கிரமணம்—1. கிரமமாககடத்தூதல். (உவில். கூஉ.) 2. பின்போதல். (உவில். கூஉ.) [அநுக்ரமண: அநு-பின். க்ரமண-போதல்.]

அநுக்கிரமணி—அநுக்கிரமணிகை. (உ-ம்.) "சீர்பெறுமச்சபுராணவத்தியாயச்சிறப்புறுபெயரினை வகுத்தே—மேயர்பெற வுரைப்பலிதன்பெயர் புராணத்தநுக்கிரமணியென விசைப்பர்" (மச்சபு. அநுக்கிர. க.) [அநு—வரிசை. க்ரமணி-செல்வது.]

அநுக்கிரமணிகை—நூலினிடத்தடங்கியவிஷயங்கள் இவையெனச் சுருக்கிச் சொல்லும்பாகம். (சப்த.) பொருளட்டவணை. (உவில். கூஉ.) [அநு—வரிசை. க்ரமணிகா - கிரமமுடையது.]

அநுக்கிரமம்—கிரமப்படிநிகழ்தல். (உவில். கூஉ.) [அநுக்ரம: அநு—பின். க்ரம—போதல்.]

அநுக்கிராககம்—அநுக்கிரகஞ்செய்தல். (சி. சி. உ: உ. ஞானப்; உவில்.கூஉ.) [அநுக்ராஹக: அநு-பின். க்ராஹக—எடுத்தல்.]

அநுக்கிராககன்—அநுக்கிரகஞ்செய்வோன். (பௌட். பசு. சாகூஇ; வென். உச.) [அநுக்ராஹக: அநு—பின். க்ராஹக—எடுப்பவன்.]

அநுக்கிராகி—அநுக்கிரகிப்பவன். (உவில். கூஉ.) [அநுக்ராஹிந்: அநு-பின். க்ராஹிந்-கிரகிப்போன்.]

அநுக்கிராகிணி—அநுக்கிரகஞ்செய்பவள். (உவில். கஉ) [அநுக்ராஹிணி; அநு—பின். க்ராஹிணி-எடுப்பவள்.]

அநுக்கிராகியத்துவம்—அநுக்கிரகிக்கப்படயோக்கியமாயிருத்தல். (சி. சி. ஞானப்.) [அநு—பின். க்ராஹியத்வம்—கிரகிக்கத்தக்கதன்றன்மை.]

அநுக்கிராகியம்—அநுக்கிரகிக்கப்படயோக்கியமானது. (உ-ம்.) "அநுக்கிராகியாநுக்கிராகசம்பந்தம்" பார் [அநுக்ராஹ்ய.]

அநுக்கிராகியர்—அநுக்கிரகிக்கப்படுதற்கு யோக்கியமுள்ளவர். (பௌட். மாயா. கூஉ.) [அநுக்ராஹ்ய:]

அநுக்கிராகியன்—அநுக்கிரகிக்கப்படுதற்குயோக்கியமுள்ளவன். (பௌட். மாயா. கூஉ.)

அநுக்கிராகியாநுக்கிராககசம்பந்தம்—அநுக்கிரகிக்கப்படுவதும் அநுக்கிரகிப்பதுமாகிய சம்பந்தம். (உ-ம்.) "பெத்தரிடத்திலே யேகதேசத்திலே சிவசத்திச்சொவ்வாமற்சிற்சத்திவிளங்குதலால் அநுக்கிராகியாநுக்கிராககசம்பந்தமென்றுஞ் சாற்றப்படும்" (சி.சி.உ:உ. ஞானப்) [அநுக்ராஹ்யாநுக்ராஹகஸம்பந்த: அநுக்ராஹ்ய—அநுக்கிரகிக்கப்படத்தக்கது. அநுக்ராஹக—அநுக்கிரகிப்பது. ஸம்பந்த-தொடர்பு.]

அநுக்குரோசம்—இரக்கம். (உவில். கூஉ.) [அநுக்ரோஶ: அநு- பின். க்ரோஶ—அழுகை.]

அநுக்ரகித்தல்—அநுக்கிரகித்தல். (உ-ம.) "நின்பதசேவைய நுக்கிரகிப்பது மொருநாளே" (திருப்பு. சுஙஉ.)

அநுகதநம்—சம்பாஷணை. (உவில். கூஉ.) [அநுகதந: அநு—கூட. கதந—பேசுதல்.]

அநுகதம்—1. ஈட்டப்பட்டது. (உவில். கூஉ.) 2. தொடர்பு. (உ-ம்) "அநுகதமாயப்பொழுதே பெயர்களெல்லா

யாதியாம் பார்வைகள் வந்தடையா நிற்கும்." (ஞானவா. தாசூர. உக.) 3. நிச்சயிக்கப்பட்டது. (உ-ம்) "உரையுமிலிங்கமும் போலவநுகதாசாரத்தை யகப்படுத்தலில்." (தர்க்கபா. கூக.) [அநு-பின்-கதம்-போதல்.]

அநுகதன் —பின்தொடர்வோன். (உவில். கூஉ.) [அநுகத: அநு-பின். கத:-செல்வோன்.]

அநுகதி —பின்போதல். (வென். உக.) [அநுகதி: அநு-பின்- கதி-போதல்.]

அநுகதிகம் — அநுகதி. (வென். உக.) [அநுகதிக: அநு-பின். கதிகம்- போதல்.]

அநுகம் —1. இசைதல். (வென். உச.) 2. செஞ்சந்தனம். (சா. வைத்.) 3. பின்போதல். (வென். உக.) [1, 3. அநுக: அநு-பின். க-போதல்.]

அநுகம்பநம் —இரக்கம், கிருபை. (ஆப். கூ0.) [அநுகம்பந.]

அநுகம்பம் — இரக்கம், கிருபை. (உ-ம்.) "ஓர்த்துணருதாரந்தாழ்ச்சியறவநுகம்பங் சோபம்- தீர்ததிடலென்னுமைந்துமுடையரே சிறந்தார்தேரில்" (சிவதரு.பல. கூகூ.) [அநுகம்ப. ஆப். கூ0.]

அநுகம்பை —அநுக்கிரகம். (பாகவத்கீ. கூ0: கக.) இரக்கம். (வென். உ0) [அநுகம்பா: அநு-பின். கம்பா-நடுக்கம்.]

அநுகமநம்
அநுகமம் } 1. கூடப்போதல். (வென். உ0.) 2. தனதுநாயகனோடுடன் கட்டையேறுதல். (ஆப். கூக.) 3. பின்போதல். (வென். உ0.) [அநுகம: அநு-பின். கமம்-போதல். அநுகம]

அநுகரணம் — 1. ஒப்பாதல். (உவில் கூஉ.) 2. வேறொன்று செய்வதுபோலச்செய்தல். (உவில். கூஉ.) [அநுகரணம்: அநு - போல. கரணம்-செய்தல்.]

அநுகரணவோசை — வேறொன்று செய்வதுபோலச் செய்யும் ஒலி, மாதிரிகைசாட்டுமொலி. (மா.) [அநுகரண; ஓசை-ஒலி.]

அநுகரி —யானையின்மேல். (பி-வி. அ.) [அநு-மேல். கரி-யானை.]

அநுகருடணம் —1. ஆகருஷணம்; அது, மந்திரத்தினாலேயழைத்தல். (உவில். கூஉ.) 2. இழுத்தல். (உவில். கூஉ.) [அநுகர்ஷண. அநு-பின். கர்ஷண--இழுத்தல்.]

அநுகவீநன் — இடையன். (உவில். கூஉ.) [அநுகவீந; அநு-பின். கவீந-பசுவுக்குரியோன்.]

அநுகற்பம் —1. உபவிதி. (உவில். கூஉ.) 2. பிரதமகற்பமாகிய உரியபொருள் கிடையாத காலத்துக் கொள்ளப்படும் இரண்டாம் பொருள். (ஆப். கூ0.) 3. பிரதிவிதி. (உவில். கூஉ) 4. மூவகைவிபூதிகளுளொன்று; அது: காட்டிலேயுலர்ந்துகிடந்த கோமயத்தை யெடுத்திடித்துத் தூளாக்கி மந்திரத்தோடுகோசலம்விட்டுப்பிசைந்து உண்டையாக்கி அக்கிநியில் வைததெடுக்கப்படுவது. (உ-ம்.) "அணியநுகற்பந்தனையு-மிட்டநூறக்கூறுவெம்" (சைவச. பொது. கஎகூ.) [அநுகல்ப. அநு-பின். கல்ப-விதி]

அநுகன் —1. கணவன். (உவில். கூஉ) 2. காம இச்சையுள்ளவன். (உவில். கூஉ.) [அநுக: அநு-பின். கம-ஆசை.] 3. பின்தொடர்வோன். (உவில். கூஉ.) 4. யசமானன். (உவில். கூஉ.) 5. வேலைக்காரன். (உவில். கூஉ.) [1, 3, 4, 5. அநுக: அநு-பின். க:-செல்வோன்.]

அநுகாமி —கூடச்செல்வோன். (உவில். கூஉ.) 2. தோழன். (உவில். கூஉ.) [அநுகாமிந்: அநு-பின். காமிந்-செல்வோன்.]

அநுகாரம் —1. ஒப்புமை. (வென். உ0.) 2. வேறொன்றுசெய்வதுபோலச்செயதல். (வென். உ0.) [அநுகாரம்: அநு-போல. காரம்-செய்தல்.]

அநுகிருதி —அநுகரணம். (வென். உக.) ஒத்தசெய்கை. (உ-ம்.) "தர்மாநுகிருதிலட்சணை" (சி. சி. சு: உஅ. சிவாக்.) [அநு-போல. கிருதி-செயல்.]

அநுகிலாதன் — இரணியகசிபுவின் மக்களுளொருவன். (உ-ம்.) "அநுகிலாதனுயர்பொற்றவெஞ்சிலை குனித்து" (கூர்மபு. அந்தகா. ருரு.) [அநுஹ்லாத: அநு-பின். ஹ்லாத-மகிழ்தல்.]

அநுகீர்த்தநம் — பிரசித்தஞ்செய்தல். (உ-ம்.) "ஆட்சநாற்கிரமரூபத்தநுகீர்த்தநத்தினையும்" (மச்சபு. அநுக்கிர. உகூ.) [அநு-பின். கீர்த்தந-சொல்லுதல். ஆப். உகூச.]

அநுகுணம் — ஏற்றது, அநுகூலமானது. (உ-ம்.) "அறைதருமிருதியெல்லாமவைக்கநுகுணமாம்" (திருவிளை. சகூ: சஎ.) [சம்ஸ்த. அநு - அநுகூல. குண-தன்மை.]

அநுகுணாலங்காரம் — தன்குணமிகையணி; அது. மற்றொன்றன்சார்பினாலே தனதியற்கைக்குணமிகுதல். (உ-ம்.) "வார்செவிசேர்சாவிமலர்மானனையாய்நின்கடைக்கட், பார்வையினன்மிக்ககரும்பண்பு" (இலக்கணவி. உ0க. விசாக; குவல. எஅ.)

அநுகூலசாத்திரம் — ஆத்தவாக்கியமாகி யிம்மைக்குரியவைகளையும் பரலோகார்த்தங்களையுங் குற்றமறவுணர்த்திச் சுருதியின் மூதன்மையை விளங்கப் போதிக்கின்ற வழிநூல். (சைவப். கூச) [அநுகூல-இணக்கம். சாஸ்த்ர-நூல்.]

அநுகூலம் —1. இணக்கம். (உ-ம்.) "அநுகூலஞ்செய்சிராத்தத்தின் பலத்தினாலே" (மச்சபு. திதிமான். கஉ.) 2. காரியசித்தி. (சி.) 3. நயவு. (உவில். கூஉ.) 4. விக்கினமின்மை. (சி.) [அநுகூல:]

அநுகூலர் — அநுகூலமுடையவர். (உ-ம்.) "குருக்களுக்கநுகூலராய்" (நாலாயிர. நாவ. உ.)

அநுகூலன்—1. உபகாரி. (சி) 2. சிங்கார நாயகர் நால்வருளொருவன். (உவின். கூ௦.) 3. சிநேகன். (உவில். கூ௨.)

அநுகூலி—சகாயஞ்செய்வோன். (உவின். ருகூ.)

அநுகூலித்தல் — அநுகூலமுடைய தாதல். (பரா. சு௦.)

அநுபோதம்—மூளையின் பிற்பக்கத்துக்கீழ்ப்பிரிவாகிய சிறியமூளை. (உவின். ருகூ) [அநு-பின். மொக-மூளை. உவில். கூ௰.]

அநுச்சிட்டம் — உச்சிட்டமல்லாதது. (உவில். கூ௨.) அநுஞ்சிஷ்ட: அந்-எதிர்மறை. உஞ்சிஷ்ட — தள்ளப்பட்டது.]

அநுச்சுவாரம் — உயிரின் பின்வரும் மகாரவிகாரமாகிய புள்ளி; இது வடமொழியிலுயிர் வருக்கத்துப் பதினைந்தா மெழுத்து. (சப்தசங்கிர.) [உவில். கூஎ. அநு-ஸ்வார: அநு-பின். ஸ்வாரம்- தொனி.]

அநுச்சூநகம் — வடுப்படாது பற்குறி வைத்தல். (கொக்கோ. ரு:சுகூ [மூ-ந:-வீகம்]

அநுச்சை—உத்தரவு. (உ-ம்.“அவ்வண்ணஞ் செய்வதேயென்றரசனு மநுச்சைசெய்ய” (திருவிளை. சமணரை௪௦) [அநு-படி. ஜ்ஞா-அறிதல்]

அநுச்யூதன்—கலந்தவன்.(உ-ம்.) “பஞ்சாவஸ்தாநுச்யூதன்.” (சி. சி. க௨: எ. சிவாச்.) [அநுஸ்யூத: அநு-பின். ஸ்யூத-தொடர்ந்த.]

அநுசங்கம்—1. அதிகாரத்தால்வருவித்து முடிப்பது. (பி. வி. எக-) 2. இரக்கம். (ஆப். கூசு.) 3. காரண காரியத்தொடர்ச்சி.(ஆப்.கூசு.) 4. சம்பந்தம். (உ-ம்.) “அகங்காராநுஷங்கமாயிருக்கிறபிராணுதி வாயுக்களுக்கும்” (சி. சி. ௨. சுரு.) 5. சொற்புணர்ச்சி. (ஆப். கூசு.) 6. புணர்ச்சி. (ஆப் கூசு.) 7. விருப்பம். (வென். உரு.) [அநுஷங்க: அநு-பின். ஷங்க-தழுவுதல்.]

அநுசங்கிகம்—1. காரியமாகத்தொடர்ந்தது. (உவில். கூஎ.) 2. கூடநிகழ்வது. (உ-ம்.) “ஐந்துகிருத்தியமும் ஒவ்வொருசருத்தாவுக்கு ஒவ்வொரு கிருத்தியஞ்சுவதந்தரமாகவுநின்ற நாலுகிருத்தியமும் அநுஷங்கிகமாகவும் பரமசிவனது சத்தியாலே பொருந்தும்” (சி. சி. க: சு௦. சிவாச்.) 3. சம்பந்தப் பட்டது. (உவில். கூஎ.) [அநுஷங்கிக: அநு-பின. ஷங்க-தொடர்ந்தது.]

அநுசந்தாத்திரு — 1. அநுசந்தானஞ் செய்பவன். 2. (வேதாந்) கூடஸ்தன். (அவாவின்றி யாவனும் அநுசந்திக்கிருதலின் வந்தபெயர்.) (உ-ம். “அந்தரியாமி” பா ர.) [அநுஸந்தாத்ரு.]

அநுசந்தானம் — 1. ஆயத்தப்படுதல், ஒழுங்குசெய்தல். (ஆப். கூசு.) 2. இடையறாது சிந்தித்தல், செபஞ்செய்தல். (உ-ம்.) “ஓங்காராதிகளநுசந்தானத்தால்” (வேதா. சூ.கஉஅ.) 3.இலக்குப்பார்த்தல். (ஆப். கூசு.) 4. ஏற்றசார்பு, தக்கசம்பந்தம். (உ-ம.) “நான் சுகி நான் துக்கி என்கின்றசத்தாநுசந்தானத்தைத்தவிரச் சுகதுக்கா நுபவமில்லை” (பௌட். பிந்த. உஅ௨.) 5. மிக்க ஆராய்வு. (உவில். கூஎ.) 6. விசாரணை. (உவில். கூஎ.) [அநுஸந்தாந. அநு-பின். ஸம்தாந-இருப்பு.]

அநுசந்தானம்பண்ணல் — 1. இடையறாதுசிந்தித்தல், செபஞ்செய்தல். (உ-ம்.) “அஞ்செழுத்தின்வாசகத்தால உண்டாம வாச்சியங்களையவரவர்கள் வர்ணத்தர்குமாசிரமத்துக்குஞ் சொன்னபடியே யநுசந்தானம்பண்ண” (சி. சி. கூ: க. சிவாச்.) 2. வில்லில் அம்புபூட்டல். (உவின். ருசு.)

அநுசந்தித்தல் — 1. கிரமமாகச்செய்தல். (உ-ம். “அநுசந்தித்தால்” (ஞானவா. வீம. சு. உரை.) 2. சிந்தித்தல். (உ-ம்.) “சான்குவேதவாக்கியங்களில் எந்தவாக்கியத்தை அநுசந்திக்கினும்” (தாயு. கருணா. எ. உரை.)

அநுசந்தேயம் — 1. விசாரணைக்குப் பாத்திரமானது. (உவில். கூஎ.) 2. விசாரிக்கத்தக்கது. (உவில். கூஎ.) [அநுஸந்தேய:]

அநுசயம்—1.ஒருபொருளிற் சம்பந்தப்பட்டிருத்தல். (உ-ம்.) “அநுசயப்படஅதுவேயிதுவோ வெனி நதொடொண்கணீர்மல்கி” (தேவாரா. பூவணூர். கூ. திருதாவு) 2. பகைமை. (உவில். கூசு.) 3. பறு. (உவில். கூசு.; 4. மனஸ்தாபம். (உவில. கூசு.) [அநுசய: அநு-பின. மய-கிடத்தல்.]

அநுசர் — தம்பியர். (உ-ம்.) “ஆல்வருமபுரவித்தன்டேரறன் மகனநுசராண-நால்வரும” (பாரத. இராய. சுகூ.) [அநு-பின. ஜ:-பிறந்தவன]

அநுசரணம் — 1. ஒன்றன்காரியம். (உவில். கூ௪.) 2. ஒன்றுடனாகிய இசைவு. (உவில். கூஎ) 3. பழக்கம். (உவில். கூஎ.) 4. பின்தொடர்தல். (உவில். கூஎ.) 5. வழக்கம். (உவில். கூஎ.) [அநுஸரண: அநு-பின். ஸரண—போவது.]

அநுசரணை — அநுசரணம். (மா.)

அநுசரன்—1. கூடச்செல்வோன். (ஆப். கூசு.) 2. தோழன். (ஆப். கூசு.) 3. பின்செல்வோன். (ஆப். கூசு.) [அநுசர: அநு-பின். சர:-செல்வோன்.]

அநுசரிக்கை — அநுசரித்தல். (செ)

அநுசரித்தல் — சார்ந்துநடத்தல், பின்செல்லல். (உ-ம்.)“மகாபுராணஞ்சளிசைத்திடும் பொருளெலாமிசைத்தேயவையநுசரித்துமொழு” (மச்சபு. நைமிசா. ௪௦.)

அநுசரிதம் — தொடர்ந்தசரித்திரம். (உ-ம்) "வம்மிசாநுசரிதம்" (மச்சபு. நைமிசா. கூள.) [அநு-பின். சரித-சரித்திரம்.]

அநுசரிப்பு — அநுசரித்தல்.

அநுசன் — தம்பி. (உ-ம்) "அநுசனிற்றசொல்" (இராமா. பாசப். உ; உவில். கூகூ) [அநுஜ: அநு-பின். ஜ:-பிறந்தவன்]

அநுசாசகன் — ஆளுபவன். (உவில். கூகூ.) [அநுஶாஸக: அநு-பின். ஶாஸக:-ஆளுவோன்]

அநுசாசநம்—கட்டளை. (உவில். கூள.) [அநுஶாஸந: அநு; ஶாஸந-கட்டளை.]

அநுசாத்தி —கட்டளை. (உவில். கூள.) [அநுஶாஸ்தி: அநு; ஶாஸ்தி—கட்டளை.]

அநுசாதன் — தம்பி. (உவில். கூகூ.) [அநுஜாத: அநு-பின். ஜாத:-பிறந்தவன்.]

அநுசாதை — தங்கை. (உவில். கூகூ.) [அநுஜாதா: அநு-பின். ஜாதா-பிறந்தவள்.]

அநுசாரணம் — பின்தொடர்தல். (உவில். கூள.) [அநுசாரணம்; அநு-பின். சாரணம-போதல்.]

அநுசாரம்—1. ஒப்புமை. (சி.) 2. காரியம். (உவில். கூள.) 3. கிரகவக்கிரம். (உவில். ருசு.) 4. நியாயப்பிரமாண அதிகாரததை அங்கீகரித்தல், (உவில். கூள.) 5. பின்செல்லல். (உ-ம்.) "கர்மாநுசாரம்" (பௌட். பாச- சஇ.) 6. பொருட்சுபாவம். (உவில். கூள.) 7. வழக்கத்தற்கிசையைந்த ஒழுக்கம். (உவில். கூள.) 8. வழக்கம். (உவில். கூள.) [அநு-பின். ஸார]

அநுசாரி —1. உதவிசெய்வோன். (மா.) 2. சார்ந்துநடப்பவன். (மா.) 3. வழிபடுவோன், பின்செல்வோன். (உவில். கூள.) [அநு-பின். ஸாரின்-செல்வோன்.]

அநுசாரேண—அநுசரித்தலினால். (சி. சி. உ:கூக. சிவாக்.) [அநுசார-அநுசரித்தல். இந - மூன்றும் வேற்றுமையுருபு.]

அநுசிதம்—1. தக்கதல்லாதது. (உ-ம்.) "செல்யானையநுசிதமென்றதனைச் சிதைக்க" (பெரியபு. கோச்செங். ௪.) 2. பொய். (திவாகர. ௬௦.) [அநுசித: அந—எதிர்மறை. உசிதம்-தக்கது.]

அநுசிந்தநம்—முன்னறிந்த விஷயத்தை நினைத்தல். (ஆப். கூக.) [அநுசிந்தந: அநு—பின். சிந்தந-நினைத்தல்.]

அநுசிந்தை — தியானித்தல். (உவில். கூஉ.) [அநுசிந்தா: அநு-பின். சிந்தா-நினைத்தல்.]

அநுசிரஞ்சவாதம்—மகாவாதமிருபத்துநான்குவகைகளுளொன்று; அது: தாடையின் பூட்டையநுசரித்து எந்நேரமும் வாயைத் திறந்தாவது மூடியாவது இருக்கச் செய்யும். (சீவரட். களகூ.) [அநு-பின். சிரஞ்சம்-தளர்தல்.]

அநுசீவகன்—அநுசீவி. (சி.) [அநு; ஜீவக-வேலைக்காரன். உவில். கூகூகூ.]

அநுசீவி — ஒருவரையடைந்து சீவிப்போன். (ஆப். கூக.) 2. வேலைக்காரன். (ஆப். கூக.) [அநுஜீவிந்: அநு-பின். ஜீவிந் — சீவிப்போன்.]

அநுசூதத்துவம்— மிக்க இயைபுடைமை. (வென். உரு.) [அநுஸ்யூதத்வம்: அநு-பின். ஸ்யூதத்வ-இயைபுடைமை.]

அநுசூதம்— நீங்காது கூடியிருத்தல். (உ - ம்.) "இம்மூன்று பிரமாணத்தாலும் அநுசூதமா யிருக்கிற ஆன்மசிற்சத்தியானது" (சி. சி. அளவை. க. சிவாக்.) [அநுஸ்யூத: அநு- பின். ஸ்யூத-இயைபு.]

அநுசூதன்—கலந்திருப்பவன். நீங்காதிருப்போன். [அநுசூதம்பார்.]

அநுசூதை — நீங்காதிருப்பவள். (உ-ம்.) "பிரபஞ்சாநுசூதையாய்" (சி. சி. உ; க. சிவாக்.) [அநு-பின். ஸ்யூதா-தொடர்ந்தவள்.]

அநுசை — தங்கை. (உவில். கூகூ.) [அநுஜா: அநு-பின். ஜா-பிறந்தவள்.]

அநுசைவர் — சிவதீக்ஷைபெற்ற க்ஷத்தரியரும் வைசியரும். (உ-ம்.) "உயர்ந்தவரசன் வணிகனநுசைவராவர்" (ஆசௌசதீ. உ௦.) [அநு-பின். சைவ.]

அநுசோகம்—அநுசோசநம். (வாச.) [அநுஶோக: அநு-பின். ஶோக-துன்பம்.]

அநுசோசநம் — 1. பின் துன்புறுதல். (வாச.) 2. மேலும்மேலுந்துன்புறுதல். (வாச.) [அநுஶோசந: அநு-பின். ஶோசந-துன்பம.]

அநுஞ்ஞாலங்காரம் — வேண்டலணி. அது: குணமல்லாதததொன்றற் குணமுண்டாதலை அறிந்து அக்குணமல்லாததனைவேண்டுதல். (உ-ம.) "வெண்டிருநீறு புனையுமாதவர்க்கு விருந்துசெய்தறமிடியும் -கொண்டநல்விரதத்தினைக்கும் யாக்கையுநீகொடியனேற்கருளுநா ளுளதோ" (இலக்கணவி. கககூ. விசாக; குவல. எக.) [அநுஜ்ஞா-வேண்டுகோள். அலங்காரம்.]

அநுஞ்ஞை — 1. உத்தரவு. (வென். உ௪.) 2. கட்டளை. (உ-ம்.) "இந்நூல்சொல்லியது பெரியோரநுஞ்ஞை சொண்டாகையாலும்" (வைராக்கியதீப. எ. உரை.) 3. சம்மதம். (உவில். கூகூ.) 4. விடுகை. (வென். உ௪.) [அநுஜ்ஞா: அநு—போல. ஜ்ஞா-அறிதல்.]

அநுஞை — கட்டளை. (உ-ம்.) "தன்னநுஞையாலே யண்ணலங் கணத்தினோரை மூழ்குவித்து" (திருவிளை. தீர்த். சுடு.) [அநு-பின். ஜ்ஞா-அறிதல்]

அநுட்டணசீதம் — வெப்பமுங் குளிருமில்லாதது. (பாஷா. ௪௦௯.) [அநுஷ்ணசீத: அந்- எதிர்மறை. உஷ்ண- வெம்மை. சீத-குளிர்.]

அநுட்டணம் — 1. உற்பலம். (வாச.) 2. குளிர்ந்தது. (வாச.) 3. சூடற்றது. (வாச.) 4. சோம்பு. (உவில். ௬௭.) [அநுஷ்ண: அந்- எதிர்மறை. உஷ்ண -வெம்மை, சாக்கிரதை.]

அநுட்டணுசீதம் — சூடுங்குளிர்ச்சியுமின்மை. (சி-லி. ஞா. ௪௬. தாற்.) [அந்-எதிர்மறை. உஷ்ண-வெப்பம். அசீத-குளிரின்மை.]

அநுட்டாதா — 1. அநுட்டிக்கிறவன் (சி. சி. உ: ௭௬. மறை.) 2. தொழின்முயன்று செய்வோன். (உவில். ௬௭.) [அநுஷ்டாதா:]

அநுட்டாநம் — சித்தாந்தப்படுத்துதல். (உவில். ௬௭.) 2. செய்கை. (உ-ம்.) "சமயிபண்ணுந்தா சாநுட்டாநத்தினின்று" (சி. சி. ௪௦: ௧. ஞாநப.) 3. செய்துமுடித்தல். (ஆப். ௬௯.) 4. தகுதி. (உவில். ௬௭.) 5. தியானித்தல். (வென். உடு) 6. தொடங்குதல். (ஆப். ௬௯.) 7. விதிக்கப்பட்ட கிரியைகளைச்செய்தல். (உ-ம்.) "வயங்கநுட்டாநம்பண்ணிப் பிதிர்முறை தர்ப்பணஞ்செய்து" (மச்சபு. வீம. ௨௧.) [அநுஷ்டாந: அநு-பின். ஸ்தாந-நிற்பது.]

அநுட்டித்தல் — 1. சித்தாந்தப்படுத்துதல். 2. செய்தல். 3. தொடங்குதல். 4. தொழில்செய்தல். (உ-ம்.) "சிவாகம முறையினீரிருபாதமு மநுட்டித்து" (காஞ்சிபு. நகர. ௧௪௦.) 5. நோற்றல். (உ-ம்.) "மநுடருமநுட்டித்து" (திருவிளை. இந்திரன்முடி. ௨௧.) [1, 2, 3. அநுட்டாநம் பார்.]

அநுட்டிப்பு — அநுட்டித்தல். (உவின். ௫௯.)

அநுட்டுப்பு — முப்பத்திரண்டசைகளையுடைய ஒரு வகைச் செய்யுட் சந்தம்; அஃது: அடியொன்றற்கு எட்டசைகளுடையதாய்நான்கடிகளைக்கொண்டதாயாவது முதலாமடிக்கு எட்டசையும் இரண்டாம் அடிக்குப் பன்னிரண்டசையும் மூன்றாமடிக்குப் பன்னிரண்டசையுமுடைய மூன்றடிகளைக் கொண்டதாயாவது வருஞ்சந்தம். (உ-ம்.) "சந்தமாமநுட்டுப்பு" (காஞ்சிபு. திருவேகம். ௪௪) [இங்கேயசையென்றதை வாசஸ்பதி "அக்ஷரம்" என்பர்.] 2. சரசுவதிதேவி. (உவில். ௬௭.) [அநுஷ்டுப்.]

அநுட்டுபு — 1. சூரியனுடைய தேருருஞ் சந்தச்சானவயப்பரி ஏழின்பெயர்களுளொன்று. (ஏழ்பரியினுமங்கள் உதாரணச்செய்யுளிற் காண்க.) (உ-ம்.) "நசநுதியச்சினுற்ற நுதிநுவல் பக்கமாகு- மகிழ்வுறுசந்தச்சானவயப்பரி யேழினுமக் – திகழ்காயத்திரியினோடுதிருட்டுபுசெகதிவென்றி–மிகுமநுட்டுபு கர்ப்பந்திவிருகதிவிளங்கியோங்கும்" "மருவுமுட்டிணிகு வென்னும்வயப்பரியேழுபூண்ட–விரதநல்லச்சு" (மச்சபு. சூரியரத. ௨௨. ௨௯.) [அநுஷ்டுப்:]

அநுட்டேயம் — அநுட்டிக்கப்படுவது. (உ-ம்.) "ஆனசன்ம வநுட்டேயங்களந்தக்கரணசுத்திதரும்" (சி சி. பர. மாயா. மத. ௩௯.) [அநுஷ்டேயம்]

அநுடம் — இருபத்தேழு நக்ஷத்திரங்களுள்ளே பதினேழாவது நக்ஷத்திரம். (உ-ம்.) "களங்கமிலநுடமூலமிவையினுங்கதிரோன்செல்வன்" (மச்சபு. சூரியசந். ௨௫.) 2. பகலிலே நிகழும் மூன்றாம் முகூர்த்தம். (விதாந. குணகுண, ௭௯.) [அநுஷ.]

அநுத்தசித்தம் — சொல்லப்படாமற்சித்தியானது. (உ-ம்.) "சத்திநிபாதத்துக்கு மலபரிபாகமே யேது என்பது மூவகையான்மாக்களுக்குமநுத்தசித்தமாகையாலும்" (சி. சி. அ: ௨. சிவாக்.) [அநுக்த – சொல்லப்படாதது. ஸித்த–ஏற்பட்டது.]

அநுத்தம் — 1. சொல்லப்படாதது. (வாச.) 2. பொய். (உவின். ௫௭) [அநுக்த: அந்–எதிர்மறை. உக்த–சொல்லப்பட்டது.]

அநுத்தம்பவாதம் — ஒருவகைவாதரோகம்; அது: வாயினிருபக்கமூலங்களினுங் காதினடிகளினும் வருவது. (சீவரட். ௧௭௦.) [ஹநு–கதுப்பு. ஸ்தம்ப–தம்பித்தல்.]

அநுத்தமம் — 1. உத்தமமல்லாதது. (உவில். ௬௬.) 2. எல்லாவற்றினும் மிக்க உத்தமம், தனக்குமேலாக உத்தமமான ஒன்றையில்லாதது. (பகவத்கீ. ௭. ௨௪.) [அநுத்தம: அந்–எதிர்மறை. உத்தமம்–சிரேட்டம்.]

அநுத்தரம் — 1. உத்தமம். (உவில். ௬௬.) 2. உறுதியில்லை. (உவில். ௬௬.) 3. தெற்கு. (உவில். ௬௬.) 4. மற்றொன்றுகூறும் மறுமொழி. (உவில். ௬௬.) 5. மறுமொழி சொல்லக்கூடாமை, பேசாதிருத்தல். (உவில். ௬௬.) 6. மாறுகொளக்கூறும் மறுமொழி. (உவில். ௬௬.) 7. மிகச்சிரேட்டம், தனக்குமேலாக ஒன்றில்லாதது. (உவில். ௬௬.) 8. மேன்மை. (உவில். ௬௬.) [அநுத்தர: அந்–எதிர்மறை. உத்தர–மேல், விடை, வடக்கு.]

அநுத்தரன் — 1. உத்தமன். (உவில். ௬௬.) 2. மிகச்சிரேட்டன். (உவில். ௬௬.) [அந்–எதிர்மறை. உத்தர–பின். தன்னின் மிக்காரிலானென்றபடி.]

அநுத்தரோபபிரதிகதசாங்கம் — அங்காகமத்தினொருபகுப்பு. (சிலப். நாடு. ௧௩௭.)

அநுத்தாநம் — மூகங்குப்புறக்கிடத்தல். (உவில். ௯௯.) [அநுத்தாந: அந்–எதிர்மறை. உத்தாந–மேல்.]

அநுத்தியோகம்— 1. சோம்பு. (உவில். ௯௯.) 2. முயற்சியின்மை. (உவில். ௯௯.)
[அநுத்யோக: அந்-எதிர்மறை. உத்யோக–முயற்சி.]

அநுத்துருதபஞ்சமம்–1. ஒருபண். (உவில். ௯௯) 2. குறிஞ்சியாழ்த்திறவகையினொன்று. (பிங்கல. ௧௯அஉ.)
[அநு–பின். த்ருத–செல்வது. பஞ்சம– ஓரிசை.]

அநுத்துருதம்—1. (இசைநூல்) ஒருகால அளவு; அஃது: ஒருதுருதகாலத்தின் பாதி– ஒரு மாத்திரையின் காற்பங்கு. (உவில். ௯௯.) 2. பின்தொடரப்பட்டது. (உவில். ௯௯.)
[அநுத்ருத: அநு–பின். த்ருத–சென்றது.]

அநுத்துவயம் — இருகதுப்பு. (த. நி. போ. உ௦௫.) [ஹநு–கதுப்பு. த்வய–இரண்டு.]

அநுத்துவாகம்—1. பிரமசரியம். (உவில். ௯௯.) 2. விவாகமின்மை. (உவில். ௯௯.)
[அநுத்வாஹ: அந்-எதிர்மறை.உத்வாஹ-விவாகம்.]

அநுத்துவேகம்—ஆவலின்மை.(உவில் ௯௯.) [அநுத்வேக: அந்; உத்வேக-ஆவல்.]

அநுதரம்—1. சிற்றிடை. (ஆப். ௯௧.) [அநுதர: அந்–அற்பம். உதரம்–இடை.] 2. தோணிமுதலியவற்றினேற்றுமதிகூலி. (உவில். ௯௯.) [அநுதர: அநு–சம்பந்த. தர–தோணி.]

அநுதரிசணம் —1. மதுநீருண்ணல். (உவில். ௯௯.) 2. மதுநீருண்ணும்பாத்திரம். (உவில். ௯௯.)
[அநுதர்ஷண: அநு–பின் த்ருஷ–தாகம்.]

அநுதரிசம்—1. ஆசை. (உவில். ௯௯.) 2. தாகம். (உவில். ௯௯.) 3. மதுநீருண்ணும்பாத்திரம். (உவில். ௯௯.)
[அநுதர்ஷ. அநு; த்ருஷ்-தாகம்.]

அநுதரித்தல்—1. படகிலேற்றல். (மா.) 2. மெலிதல். (மா.)
[1. மூ. அநுதர. 2. அநுதர.]

அநுதாத்தம் — படுத்தலோசை, மெள்ளச்சொல்லுதல். (உ-ம்) "உதாத்தவோசை யநுதாத்த சொரிதந்தழுவவோதி" (திருவிளை. தடாதகை. அ.)
[அநுதாத்த. அந்-எதிர்மறை.உதாத்த–எடுத்துச்சொல்லல்.]

அநுதாபம் — பச்சாத்தாபம்,செய்ததற்குவியசநப்படல். (உவில். ௯௯) [அநுதாப: அநு–பின். தாப–வெப்பம்.]

அநுதாரன் — 1. உதாரகுணமில்லாதவன், பிசுநன். (ஆப். ௯௧.) 2. தகுந்த மனைவியையுடையான். (ஆப். ௯௧.) 3. மனைவியாற் றொடரப்பட்டவன். (ஆப். ௯௧.)
[அநுதார: அந்–எதிர்மறை. உதார–கொடை; அநு-கூட. தார–மனைவி.]

அநுதாவநம் — 1. ஆராய்தல். (ஆப். ௯௨.) 2. சுத்திசெய்தல், (ஆப். ௯௨.) 3. பின்தொடர்தல். (ஆப். ௯௨.) 4. பின்னாக ஓடித்துரத்துதல். (ஆப். ௯௨.) 5. பின்னாகப்போதல். (ஆப். ௯௨.)
[அநுதாவந; அநு-பின். தாவந-ஓடுதல்.]

அநுதிநம்—நாடோறும். (உ-ம்.) "அநுதிநமரன் புகழ் சாற்றுசைவபுராணநூல் - பொங்கு மின்சுவையமுது தன்செவிவாய் திறந்து புகட்டவுண்டு" (திருவிளை. விடையில. ௬.) [உவில். ௯௯. அநுதிந: அநு–தோறும். திந–நாள்.]

அநுதோடம் — உபபாதகம். (உ-ம்.) "கொலைகளவாதிசெய்வோர்தம்முடன்குழீஇயபாவந் - தொலைவுறுங்கணமதொன்றிலவைக் கநுதோடந்தானும்" (சேதுபு. சங்கரபா. ௭௧.) [அநுதோஷ: அநு–பின். தோஷ – குற்றம்.]

அநுநயம்—1. ஆசாரக்கிரமம். (ஆப். ௯௨.) 2. சாந்திசெய்தல். (ஆப். ௯௨.) 3. பயிற்றுதல். (ஆப. ௯௨.) 4. மரியாதை. (ஆப். ௯௨.) 5. விண்ணப்பம். (ஆப். ௯௨.) 6. விருந்தர்முதலியோரை யுபசரித்தல். (ஆப் ௯௨.)
[அநுநய: அநு–பின். நய–நடத்துவது.]

அநுநாசிகம்—மெல்லெழுத்து. (பி.வி. ௫.) [அநுநாஸிக; அநு–கூட. நாஸிக – நாசியையுடையது. மூக்கினுற்பிறந்ததனால் வந்தபெயர்.]

அநுநாசிகை — அநுநாசிகம். (உவில். ௯௯.) [அநுநாஸிகா.]

அநுநாதம்—1.எதிரொலி. (ஆப். ௯௨.) 2. ஒலி. (ஆப். ௯௨.)
[அநுநாத: அநு–பின். நாத–ஒலி.]

அநுப்பிரமாணம் — 1. அளவானது. (வென். ௬௦௯.) 2. இசைவானது. (வென், ௬௦௯.) [அநுப்ரமாண:]

அநுப்பிரவிட்டம் —உட்புகுதல். (உ-ம்) "மாயாதநு முதலியவற்றிலநுப்பிரவிட்டமாகவியாபித்து." (சி.சி. அ: ௯௪. மறை.) [அநுப்ரவிஷ்ட: அநு கூட. ப்ரவிஷ்ட-உட்புகுதல்.]

அநுப்பிரவிட்டன்—உட்புகுந்திருப்பவன். (உ-ம்.) "சிவனொருவனே மாயாப் பிரபஞ்ச மெல்லாமாய்ப்பரபஞ்சத்தன்மையுந்தானல்லவாயநுப்பிரவிட்டனாகநின்று" (சி. சி. ௩: ௨௭. சிவாக்.) [அநுப்ரவிஷ்ட: அநு -கூட. ப்ரவிஷ்ட-உட்புகுந்தவன்]

அநுப்பிரவேசம் — 1. அநுக்கிரகம். அது போகவாசனையை நீக்கித் தெளிவித்தல். (உ-ம்) "ஆக்க லளித்தல் போக்குதல்சமைந்தா–னெய்த்திடலகற்றுமநுப்பிரவேசமென்பனவிசனொ

தொழிலே" (வேதா. சூ. சஎ.) 2. உட்புகுந்திருத்தல். (ஆப். ககூ.) 3. ஒருவர் கருத்துக்குத் தன்னை யிசைவாக்கல். (ஆப். கூகூ.) [அநுப்ரவேஶ அநு-கூட. ப்ரவேஶ-அடைதல்.]

அநுப்பிரவேசி — உமாதேவி. (உ-ம்.) "நித்தையநுப்பிரவேசி" (கூர்மபு. திருக். உக.) [அநுப்ரவேஶி. அநு-கூட. ப்ரவேஶி-அடைந்திருக்கிறவள்]

அநுப்பிராசம்—1. அநுராசகம். (மா.) 2. வழியெதுகை. அது: ஒருசெய்யுளடியில்வரும் பலசீர்களிலிரண்டாமெழுத்திமுதலியன ஒன்றிவருதல், பிலவருமுதாரணச் செய்யுளாலிது நன்குபுலப்படும். "மண்டலம் பண்டுண்டதிண்டேர்வரகுணன் றெண்டியின்வாய்க் - கண்டலன் தண்டுறைக்கண்டதொன் றண்டுகனமகர-குண்டலங்கெண்டையிரண்டொடுதெண்டையுங்கொண்டொர்திங்கண் - மண்டலம் வண்டலம்பக்கொண்டருழவருகின்றதே" (இலக்கணவிள. செய்யு. கூகூஉரை) [உவில். கூசு. அநுப்ராஸ. அநு-பின். ப்ராஸ-மேன்மையாயிருப்பது.] 3. விரகம். (மா.)

அநுபசங்காரி — சவ்வியபிசாரமாகிய ஏதுப்போலிவகையுளொன்றாகிய முடிவுபெறுமை- அந்நுவய திருட்டாந்தம் வெதிரேகதிருட்டாந்த மிரண்டுமில்லாதது. அது எல்லாப்பொருளுமநித்தம். அளவையா னளக்கற்பாலதாகலின் என்பதிற்போல. (ஈண்டுமுழுவதும்பக்கமாயிருத்தலிற்திருட்டாந்தமில்லை) (தர்க்காமி. அநு; தர்க்கசங். கூ0.) [உவில். கசுசு.) [அநுபஸம்ஹாரிந்: + அந்-எதிர்மறை. உபஸம்ஹாரிந்-முடிவுடையது.]

அநுபத்தாநம் — சமீபத்திலில்லாமை. (ஆப். ககூ.) [அநுபஸ்தாந: அந்-எதிர்மறை. உபஸ்தாநம்-சமீபம்-]

அநுபத்திதி — சமீபத்திலில்லாமை. (ஆப். ககூ.) 2. ஞாபகப்படுத்த இயலாமை. (ஆப். ககூ.) [அநுபஸ்திதி: அந்-எதிர்மறை. உபஸ்திதி-சமீபம், ஞாபகம்.]

அநுபதிதம்—1. இறங்கினது. (உவில். கூசு.) 2. பின்தொடரப்பட்டது. (உவில். கூசு.) 3. விழுந்தது. (உவில். சுகூ) [அநுபதித. அநு-பின். பதித-விழுந்தது, போனது.]

அநுபந்தசதுட்டயம்—ஒரு நூல் செய்வோன் அந் நூலோடு சேர்த்துத் தந்துரைக்கும் நான்கு பொருள்கள்; அவை: விடயம், சம்பந்தம், பயன், அதிகாரியென்பன. (உ-ம்.) "சாத்துமநுபந்தசதுட்டய நூற்குவிடயஞ்சம்பந்தம்பயனதிகாரிகளெனநான்கென்பதறியே" (வேதா. சூ. அ.) [அநுபந்தசதுஷ்டய: அநு-பின். பந்த-கூடிநிற்றல். சதுஷ்டய-. நான்கன் கூட்டம். சம்பந்த நீக்கி ஆநந்தரியங் கூட்டிநான்கென்பாருமுளர். (நன். விருத்தி. சிறப். உரை.]

அநுபந்தம்—1. அநுசரித்தல். (வாச.) 2. அபிப்பிராயம், ஏது. (ஆப். ககூ.) 3. ஆகாமியம், இம்மையிலுண்டாகின்றநன்மைதீமைகள். (வாச.) 4. இடையறுத் தொடர்ச்சி. (ஆப். ககூ.) 5. ஒற்றுமை, ஒன்றிப்பு. (சி.) 6. ஒன்றனோடிணைக்கப்பட்டது. (ஆப். ககூ.) 7. கட்டுதல். (வாச.) 8. காரியத்தொடர்ச்சி. (ஆப். ககூ.) 9. கூடுதல். (சி.) 10. சிசு. (வாச.) 11. தடை. (ஆப். ககூ.) 12. தொடக்கம். (வாச.) 13. தொடர்ச்சி. (ஆப். ககூ.) 14. பிரயோசனமான செய்கையைச்செய்யப் பழகல். (வாச.) [அநுபந்த: அநு-பின். பந்த-கூடிநிற்றல்.]

அநுபந்தன்—1. உடன்பட்டவன். (உ-ம்.) "காயுமவர்க்கநுபந்தருமாயுள்களிதநீரே" (சிவதரு. சுவர். ககூ.) 2. குருவைப் பின்றொடர்ந்து நடக்குஞ் சீடன். (உவில். கூசு.) 3. பெற்றோரைப் பின்றொடர்ந்து நடக்கும் பிள்ளை. (உவில். கூசு.) [அநுபந்த்ய: அநு-பின். பந்த்ய- தொடர்ப்பாடுடையவன்.]

அநுபந்தித்தல் — கூடிப்பந்தித்தல். [மூ. அநுபந்த]

அநுபந்தை — 1. தாகம். (உவில். கூசு) 2. விக்கல். (உவில். கூசு.) [அநுபந்த்யா: அநு-பின். பந்த்யா-கட்டுவது.]

அநுபபத்தி — 1. சாத்தியத்தைச் சாதிக்கவல்லதல்லாதது. (உ-ம்.) "ஓதநுபபத்திஞானத்தாலேயுற்பத்தியாகுமாதரவுடையஞானமருத்தாபத்தியெனச்சொல்வர்" (சூத. எக்கி. பூ. சo: கசு.) 2. சித்தாந்தமாகாத நியாயம். (ஆப். கூஉ.) 3. சித்தியாகாமை. (ஆப். கூஉ.) 4. தகுதியின்மை, பொருத்தமின்மை. (உ-ம்.) "அநுபபத்திச்சொன்மயங்கேரான்றப்பொருள்வேறுணர்த்தில்" (பி. வி. சஎ.) 5. நிறைவேறாமை. (ஆப். கூஉ.) 6. பிரயோகிக்கப்படாமை. (ஆப். கூஉ.) [அநுபபத்தி: அந்-எதிர்மறை. உபபத்தி-தகுதி, பிறத்தல்.] 7. யுத்தியின்மை. (வாச) [அந்- எதிர்மறை. உபபத்தி-யுத்தி.]

அநுபபத்திப்பிரசங்கம் — முற்றுப்பெறுததாதல். (உ-ம்.) "பெத்தமின் மாதேவனுடை மகத்துவத்திற்கநுபபத்திப்பிரசங்கந்தான்-சித்தமருவுறவரும்" (சூத. எச்கி. உத். சு: கக.) [அநுபபத்தி-நிறைவேறுமை. ப்ரஸங்க-அடைதல்.]

அநுபபத்தியேது— 1. சாத்தியத்தைச் சாதிக்கவல்லதல்லாத ஏது. (உவின். ருஎ.) 2. சித்தாந்தமாகாத நியாயம். (உவின். ருஎ.) [அந்; உபபத்தி; ஹேது.]

அநுபம்— 1. சேற்றுநிலம். (உவில். கூகூ.) 2. மிகுதியும் நீர்ப்பாங்கான நிலம். (செ.) [அநூப. "அநூபம்" பார்.]

அநுபமம் — தனக்கு நிகரில்லாதது. (ஆப். கூஉ.) (உ-ம்.) "தெரிவரிதாயநுபமமாய்" (தத்துவ. பதி. கூ.) 2. மிகச் சிரேட்டமானது. (ஆப். கூஉ.) [அநுபம: அந் - எதிர்மறை. உபம-ஒப்பு.]

அநுபமன் — 1. தனக்கு நிகரில்லாதவன். (உ-ம்.) "அநுபமனநீ" (வீரசோ. அலங். கச. உரை.) 2. மிகச்சிரேட்டன். (செ.) [அந் - எதிர்மறை. உபமா- ஒப்புடையோன்.]

அநுபமை — 1. உவமையின்மை. (ஆப். கூஉ.) 2. குமுதமென்னுந் தென்மேற்குத் திசையானையின் பெண்யானை. (ஆப். கூஉ.) 3. மிகச்சிரேட்டமானது. (ஆப். கூஉ.) [அநுபமா: அந்-எதிர்மறை. உபமா -ஒப்பு.]

அநுபயம் — இரண்டுமல்லாதது. (தர்க்கபா. அச.) [அந்- எதிர்மறை. உபயம்-இரண்டு.]

அநுபயோகம் — உபயோகமில்லாதது. (மா.) [அந்- எதிர்மறை. உபயோகம்-பிரயோசநம்.]

அநுபல்லவம் — நுனித்தளிரையடுத்திருக்குங்கீழ்த்தளிர். (வாச) [அநு-தொடர்ந்த. பல்லவ-தளிர்.]

அநுபல்லவி — பதமென்று வழங்கப்படுஞ்செய்யுளின் இரண்டாமுறுப்பு. (உவின். ருசு.)

அநுபலத்தம் — 1. அடையாமை. (தர்க்கபா. எசு.) 2. காணப்படாதது. (பொட். பசு. சoரு.) [அநுபலப்தி: அந்-எதிர்மறை. உபலப்தி-அடைதல்.]

அநுபலத்தி — 1. அநுபலத்தியலங்காரம். (சி.) 2. உண்டென்னும் ஞானத்தின்மை. (உ-ம்.) "அநுபலத்தியதுசீதமின்மை பனியின்மைகாட்டல்போலும்" (சி. சி. அளவை. சo.) [அநுபலப்தி: அந்-எதிர்மறை. உபலப்தி-அறிதல்.]

அநுபலத்தியலங்காரம் — நுகர்ச்சியின்மையணி. (குவல. கசரு.)

அநுபலத்தியேது — மூன்றேதுக்களுளொன்று; அது: "சீதமின்மை பனியின்மையைக் காட்டல்போலப் பிறிதொன்றினதில்லாமையைக்காட்டுமொன்றனதில்லாமையாகிய ஏது. (சி.சி. அளவை. சo. சிவாக்.) [அநுபலப்தி; ஹேது-காரணம்.]

அநுபலத்திவேத்தியம் — இல்லாமையைக்கொண்டறியப்படுவது. (உ-ம்.) "அபாவமானது அநுபலத்திவேத்தியமாகையால் அபாவம் பிருதக்பிரமாணமென்பர்கள்" (சி. சி. அளவை. க. சிவாக்.) [அநுபலப்தி; வேத்யம் - அறியப்படுவது.]

அநுபவப்படல் — உற்றறிதல். (மா.)

அநுபவபூமி — இருவகை ஞானபூமிகளுளொன்று; அது: சத்துவாபத்தி, அசஞ்சத்தி, பதார்த்தாபாவனை, துரியகாமியென நான்கு வகைப்படும். (வேதா. சூ. கசஅ. உரை.) [அநுபவபூமி: அநுபவ- தானேயறியுமறிவு. பூமி-நிலை.]

அநுபவம் — 1. அநுபோகம். (உ-ம்.) "கண்டபேரின்ப வநுபவக் கருத்திலேயெழுந்து" (காஞ்சிபு. தழுவ. கசுஉ.) 2. காரியம். (ஆப். கூகூ.) 3. கைவல்லியம். (உ-ம்.) "அநுபவநிலையுஞ்சேருமோ" (தாயு. ஆரண. கூ.) 4. சுகபோகம். (உ-ம்.) "பிறைநுதல் வஞ்சியரநுபவமுண்டு" (மதுரைப் பதிற்றுப்பத். ருஅ.) 5. தானேகண்டறியுமறிவு, நினைவிற்குவேறாகிய உணர்வு, வாசனையாற்றோன்றுமறிவு. (உ-ம்.) "யதார்த்தாநுபவயபிரமை" (தர்க்கபா. கூ.) [அநுபவ: அநு-பின். பவ - இருக்கை.]

அநுபவாரூடம் — அநுபவத்திலேறினது. (சி. சி. உ: எஎ. சிவாச்.) [அநுபவ; ஆரூட-ஏறினது.]

அநுபவி — உலக விவகாரங்களை நினையாமல் ஆத்துமவிவேகத்தையடைந்து ஒரு சாதனத்திலே சீவன்முத்தனானோன். (உ-ம்.) "வீடுலகவிவகாரநினையாமல் விவேகமேவியோர்பிரட்பிறழுமுத்தனநுபவியே" (வேதா. சூ. கச.) [அநுபவி: அநுபவ; இ- ஒரு வடமொழிவிகுதி.]

அநுபவித்தல் — துய்த்தல். (உ-ம்.) "இச்சாபருமநுபவித்தல்லதுவிடாதால்" (காஞ்சிபு. அரிசா. சo.)

அநுபவிப்பு — அநுபோகம். (மா.)

அநுபவியம் — அநுபவிக்கப்படுவது. (உ-ம்.) "சீவனானவன் றனதுபிரியத்தைத் தநாதி விடயங்களின் மேல் வைத்து அவைகளையின்பமாயநுபவிக்குமிடத்தநுபவிப்பானுமநுபவியமுமாகிய இரண்டுமின்றி" (வேதா. சூ. ருரு. உரை.) [அநுபாவ்ய: அநுபவ; ய-ஒருவிகுதி.]

அநுபவை — பார்ப்பதி. (அநுபவமுள்ளவள்.) (உ-ம்.) "இமகிரிகுமாரத்தியநுபவை பராசத்தி" (திருப்பு. கூஅச.) [அநுபவா: அநுபவா.வடமொழிஆவீறு தமிழில் ஐயீறாயிற்று.]

அநுபவைகவேத்தியம் — அநுபவமொன்றாலேயறியத்தக்கது. (உ-ம்.) "பரமசிவம் ஸ்வரூப ஞாநாநுபவைகவேத்தியம்" (சி. சி. பாயிர. ரு. சிவாச்.) [அநுபவ; ஏக-ஒன்று. வேத்ய-அறியத்தக்கது.]

அநுபவைகவேத்தியன் — அநுபவமொன்றினாலே அறியத்தக்கவன். (சி. சி. கூ: சு. சிவாக்.) [அநுபவ; ஏக- ஒன்று. வேத்யன்-அறியத்தக்கவன்.]

அநுபாகம் — அலகுக்குரியபாகம். (உவின். ருசு.) [அநு-சுதப்பு. பாக - பங்கு.]

அநுபாடணம் — 1. கண்டிக்கும் பொருட்டாக ஒரு பிரதிஞ்ஞையைத் திரும்ப எடுத்துச் சொல்லுதல். (ஆப். கூச.) 2. சொன்னதைப்பின்னுஞ்சொல்லுதல். (உ-ம்.) "ஆயாமமறைபொழுதிலறைந்தவநுபாடணத்தால்" (சி.

வதரு. சிவஞானயோ. எடு.)
[அநு ஹாஷண: அநு-பின். ஹாஷண-சொல்லுதல்.]

அநுபாடித்தல்—1. அநுவதித்தல், ஒருவர் சொன்னதை யெடுத்துச் சொல்லல். (உ-ம்.) "சுத்தமாயையிலசுத்தமாயைதோன்றுமென்றுஞ், சூக்கும தேகத்திற் றூலதேகந்தோன்றுமென்றுஞ் சொல்லுஞ் சைவபௌராணிக மதாநுசாரிகளாயிருக்கின்ற ஆசாரியர்மதமநுபாஷித்து" (சி. சி. உ: ருச. ஞானப்.) 2. சொல்லுதல். (ஆப். உகூ.)
[மூ. அநு ஹாஷ். அநு-பின். ஹாஷித்தல்-சொல்லல்.]

அநுபாதகம் — மகாபாதகதுல்லியம். (வாச.) (உ-ம்.) "பஞ்சபாவந்தனக் கநுபாதக-மெஞ்சலில்லனயாவையு மெஞ்சுமால்" (சேதுபு. தநுக்கோ. உச.) [அநு-ஒப்பு. பாதக-தீங்கு.]

அநுபாதம்—1. (மதநூல்) கரணங்களிலொன்று. (கந்தபு. இந்திரபுரி. சஎ.) 2. (கணக்கதிகாரம்.) சங்கலிதம். (உவில். கூச) 3. (கணக்கதிகாரம்) திரயராசிகம். (ஆப். கூகூ) விகிதம். (உவில். கூச.) 4. பின்றொடர்தல். (உவில. கூச.)
[அநுபாத: அநு-பின். பாத-விழுதல்.]

அநுபாதேயன் — அங்கீகரிக்கப்படக் கூடாதவன். [அநுபாதேய: அந்-எதிர்மறை. உபாதேய-அங்கீகரிக்கப்படக் கூடியவன். உவில். கசூசூ.]

அநுபானம்—1. மருந்தையுட்புகுத்தற்குக் கொள்ளும் பானம், மருந்துடன் குடிக்கும் பானம். (உவில். கூச.) 2. மருந்துடனருந்தும் பதார்த்தம். (உவின். ருகூ.)
[அநு-கூட, பின். பான-குடித்தல், பேணுதல்.]

அநுபாலநம்—1. கீழ்ப்படிதல். (உ-ம்.) "ஆஞ்ஞாநுபாலநம்" (பௌட். பும். சூஉ.) 2. பாதுகாத்தல். (ஆப். கூகூ.)
[அநுபாலந:]

அநுபாவம்-1. கண்காட்டு, கைகாட்டுமுதலிய அங்கசேட்டைகளினால் மாக்கருத்தைவிளக்குங்குறி. (ஆப். கூகூ) 2. திடமானஎண்ணம். (உவில். கூடு) 3. தேசசு. (ஆப். கூகூ) 4. நிச்சயம். (உவில். கூடு) 5. மகத்துவம். (உவில். கூடு.)
[அநுபாவ: அநு; பாவ-கருத்து, இருத்தல்.]

அநுபாவியம் — அநுபவிக்கத்தக்கது. (உ-ம்.) "ஸ்வாநுபவாநுபாவியமாம்" (சி. சி. அ: கூச. ஞானப்.) [அநுபாவ்ய.]

அநுபூதம் — 1. அறிந்துகொள்ளப்பட்டது. (உ-ம்.) "பூர்வத்திலே யநுபூதமானபேரியாதிசத்தசாதியங்கள் என்றுநிச்சயிக்கப்படும்" (சி. சி. உ: சூக. சிவாக்) 2. காரியமாகவந்தது. (உவில். கூடு.)
[அநுபூத:]

அநுபூதி — 1. தானேகண்டறிந்ததும் பிறர்க்குச்சொல்ல இயலாததுமான அறிவு. (உ-ம்.) "பேசாவநுபூதியையடியேன் பெற்றுப் பிழைக்க" (தாயு. சொல்லற். கூ.) 2. நினைவிற்கயலாய் வேறாகிய உணர்வு. (உ-ம.) "அநுபூதியாவதுஸ்மிருதிவியதிரிக்தஞானம்" (சி. சி. அளவை. க. சிவாக்.)
[ஆப். கூகூ. அநுபூதி.]

அநுபூதிகம் — அநுபவிக்கத்தக்கது. (உ-ம்.) "சிவாநுபவஞ் சுவாநுபூதிகமாம்" (சி. சி. அ: கூச. சிவாக்.) [அநுபூதிக: அநு-பின். பூதிக-ஐசுவரியம்.]

அநுபூதியநுசூதம் — அநுபவசித்தி. (உ-ம.) "சொரூபசாட்சாத்காரவநுபூதியநுசூதமும்" (தாயு. கருணா. க.)
[அநுபூதி: அநுபவம். அநுஸ்யூத-கலப்பு.]

அநுபூதியர் — அநுபூதியுடையோர். (உ-ம்.) "அநுபூதியர்க் கெனினுமிலாதவர்க்கெனினும்" (ஞானவா. வேதாளரு.)

அநுபோகம் — 1. அநுபூதி. (உ-ம்.) "தானே தானுயநுபோகந் தன்னில்" (சி. சி. பர. மாயா. மத. கச) 2. அப்பியாசம். (உ-ம்.) "அவன் இராம பாணக்குளிகை செய்வதிலநுபோகப் பட்டவன்" [வழக்.] 3. இன்பம். (உ-ம்) "சிவமாதுடனே யநுபோகமதாய்ச்சிவஞானமுதேபசியாறி" (திருப்புருகஎ.) 4. சுகவாழ்வு. (உ-ம்.) "நீதியநுபோகநெறிநின்று" (இராமா. நாற்பய. அ.) 5. புணர்ச்சி. (உ-ம்.) "குறமாதினின்பவநுபோகசரசக்கார" (திருப்பு. கூடு.)
[அநு-கூட, போக-உண்ணல்.]

அநுபோகி — அநுபோகங்கொள்ளுவோன். (உ-ம்.) "திகைலோகமெலாமநுபோகி" (திருப்பு. ருகஎ.) [அநு-கூட. போகின்-உண்போன்.]

அநுபோகித்தல் — அநுபவித்தல். (மா.)

அநுமக்கொடியோன் — அருச்சுனன். (மா.) [அநுமந் -அநுமக்குரங்கு.]

அநுமகுண்டம் — சேதுவிலுள்ள ஒரு தீர்த்தம். (உ-ம்.) "அநுமகுண்டவியனீராடி" (சேதுபு. சேதுயா. உஅ.)
[அநுமகுண்டு.]

அநுமசக்கரம் — விதிப்படியநுமமந்திரமெழுதப்பட்ட யந்திரம். (த. நி. போ. உகஉ.) [அநுமந்- அநுமாந். சக்கரம்-யந்திரம்.]

அநுமதம் — 1. அங்கீகரிப்பு. (உவில். கூடு.) 2. அன்பு. (உவில். கூடு.) 3. சம்மதி. (உ-ம்.) "ஆசற்றுநிறைவேறவநுமதஞ்செய்கென" (சிவதரு. சிவஞா. தா. உஎ.) 4. பிரியம். (உவில். கூடு.)
[அநுமத: அநு-கூட. மத-கருதப்பட்டது.]

அநுமதி—1. கட்டளை. (உ-ம்.) "அநும

திகொடுதொழுது'' (திருவிளை. நாக. சச.) 2. சம்மதி. (உ-ம்.) "தெளித ருபுனலின் மூழ்கத்திருவருள் செய் தியென்று-வுளமலியுவகையோடு மூ ரைத்தநுமதிபெற்றங்கண்'' (சேதுபு. சேதுயா. கரு; உவில். கூ௫.) 3. சுக்கிலபக்க சதுர்த்தசியோடு கூடிய பௌர்ணமி. (வாச.)
[அநு-கூட. மதி-சம்மதமுடையது, சந்திரன்.]

அநுமந் — அநுமாந். (செ.) [ஹநு'மந்]

அநுமந்தன்—அநுமான். (உ-ம்.) "அநுமந்த னடித்தானே'' (இராமநா; (ஆப். கூ௮௭) [ஹநூமத]

அநுமந்தா—சம்மதித்தவன் போலிருக்கிறவன் (பகவற்கீ. கூ. உகூ. ஸ்ரீ. தேகேந்திரிய வியாபாரங்களில் தான் பிரவிருத்தியற்றவனுனாலும் பிரவிருத்தியுள்ளவனைப்போல்தோற்றப்படுகிறவன்.(ஷெ௰௦). செவ்வையாயேவுகிறவன். (ஷெ௫௦).செய்யவேண்டியகாரியங்களி லாலோசனை சொல்லுகிறவன். (ஷெ ஸ்ரீ. வி). [அநும்ஂதா.]

அநுமந்திரு—1. இணங்குதல். (உவில். கூ௫.) 2. உத்தரவுசெய்தல். (உவில். கூ௫.) 3. சம்மதித்தல். (உவில். கூ௫.) [அநுமந்த்ரு.]

அநுமந்திருசம்பிரதாநம்-(இலக்கண) சம்மதமாயேற்றற்பொருளில் வரும் நான்காம் வேற்றுமை யுருபு. "ஆசிரியன் மாணுக்கனுக்குக்கசையடிகொடுத்தான்''என்பதிற்போல(பி. வி.௧௬. உரை.) [உவில். கூ௫. அநுமந்த்ரு. சம்மதி. சம்ப்ரதாந-நான்காம்வேற்றுமை]

அநுமரணம்-இறந்தஒருவனேடுடன்கட்டையேறிமரித்தல். இஃதிஓருகைமை இறந்த நாயகனுடைய பிணஞ்சுடுங் கட்டையிலேறி மரித்தலைக்குறிக்கும். (உ-ம்.) "பந்தமுறவநு மரணஞ்செய்தவுருக்குமணிமூதற்பாவைமார்கள்'' (நல். பார. முத்தியடை. சு; உவில். கூ௫.) [அநுமரண: அநு-கூட. மரணம்-இறத்தல்.]

அநுமாந்—1. அஞ்சனை யென்னும் பெண்ணினுடையமகன்; இவன் கிட்கிந்தைமலையிலே சுக்கிரீவனுடைய சேனையைச் சேர்ந்திருந்து இராமச்சந்திரனுக்குத் துணைவனுந் தூதனுமானவன். இந்திரனுடைய ஐராவதயானையிற் பாய்ந்து அவனுடையவச்சிராயுதத்தினுல் ஊறுபட்ட கதுப்புடைமையால் அநுமானெனப் பெயர்பெற்ருன் என்பர்.(உ-ம்) "கூர்பற்றியவெண் குலிசத்தாற்கூறுபடுபுண்வடுத்தீர்க-வார்பெற்ருர்நீபெற்றதுஙின்னநுவற்றிடலாலநுமானெனும்பேர் பெற்று'' (இராமா.உத்.அநு. கூச.) 2. ஒருவகைக்குரங்கு. (உவில். கூகூ.) [ஹநுமாந்.] 3.சிற்பநூன் முப்பத்திரண்டிலொன்று. (மா.) [அநுமாந்.]

அநுமாநசாமக்கிரி — அநுமாநத்திற்குவேண்டும் உறுப்புக்கள். (சி. சி. அளவை. கூ. சிவஞா.) [அநுமாநம்-ஒரளவை. ஸாமக்ரி-காரணசமூகம். சப்த.]

அநுமாநப்பிரமாணலங்காரம் — அநுமாநப் பிரமாண அணி. (குவல. கoகூ.)

அநுமாநப்போலி — பக்ஷத்திலிருக்கையின்மை, சபக்ஷத்திலிருக்கையின்மை, விபக்ஷத்தினீக்கமின்மையென்னுங் குற்றங்களோடு கூடியுஞ் சிலருபயோகத்தால் அநுமாநம்போலத் தோற்றும் போலிநியாயம். (சைவப்பி. கரு; தர்க்கபா. எசு.)

அநுமாநம்--1.ஐயத்தோடெண்ணுதல். (ஆப்.கூச.)2. ஐயம்.(உ-ம்.)"இனியிங்கிதற்குமநுமாநமோ'' (தாயு.அகிலா. க.) 3. தர்க்கசாத்திரத்திற் சொல்லப்பட்ட பிரமாணங்களுளொன்ருகிய கருதலளவை. இதுநேரே யறியப்படாது சாதித்துப் பெறற்பாலதாய் மறைந்துநின்றபொருளை யதனைவிட்டு நீங்காது யாண்டும் உடனாய்நிகழும் ஏதுவைக் கொண்டு உணர்வதாகிய ஆன்மாவின் ஞாநசத்தி; அது "புகையைக்கண்டு காணப்படாதநெருப்பையுண்டென்றுணர்தல்'' போல்வது(சி. அளவை. உ. சிவஞா) ஏதுக்களைக் கொண்டு மறைந்தபொருள்களை யறிதல். (ஷெ. நிரம்ப.)
[அநுமாந: அநு-பின். மாந-அளவை.]

அநுமாநவாக்கியம் — அநுமாநப்பிரமாணத்தால் ஒருவன் அறிந்ததைப்பிறன் அறியும்படியுணர்த்தும் வாக்கியம்.இவ்வாக்கியத்திற்குப்பிரதிஞ்ஞை, ஏது, உதாரணம், உபநயம், நிகமநம் என்பன அவயவங்கள். (உ-ம்.) "அநுமாந வாக்கியத்தினுடைய ஏகதேசங்கள் அவயவங்கள்'' (தர்க்கபா. எஉ.) [அநுமாநவாக்ய.]

அநுமாநாகம்மியம்—அநுமாநத்தால் அறியப்படாதது. (சி. சி. உ: எகூ. சிவாக்.)[அநுமாந-கருதலளவை. அகம்யம்-அறியப்படாதது.]

அநுமாநாநுமாநம்—கருதலநுமாநம். (மா.) [அநுமாந; அநுமாநம்.]

அநுமாநாபாசம் — அநுமாநப்போலி. (சி.சி.அளவை. கச.மறை) [அநுமாந-கருதலளவை. ஆபாஸ-போலி.]

அநுமாநித்தல்-1.அநுமாநப்பிரமாணத்தாலறிதல்(உவின்௫கூ)2.ஐயத்தோடெண்ணுதல். (ஆப்.கூச.)3. குதிரைகளைத்தல்.(உ-ம்)"குதிரைதற்செயலாயாவது வாங்குகிற ஆளைக்கண்டாவது அநுமாநித்தாலுங் கூத்தாடினுலும்'' (அசுவசாத். கள; உவின். ௫கூ)

அநுமாநிதம்—குதிரைக்களைப்பு.(மா.)

அநுமாநோத்தி — அநுமாநித்துப் பேசுதல். (உவில். கூ௫.) [அநுமாநோக்தி: அநுமாந; உக்தி-பேசுதல்.]

அநுமாபகம் — 1. அநுமிக்கப்பண்ணுவது. (ஆப். கூச.) 2. அறிவிப்பது. (பௌட். பதி. எஇ.)
[அநுமாபக.]

அநுமித்தல் — அநுமாநப்பிரமாணத்தினுலறிதல். (உ-ம்.) "மாயையிடையையுளண் மூலையான் மற்றைமார்தா

போலென்று தூயமதிஞரநுமித்துச் சொல்லுமருங்குற்றேலகதான்'' (பிரபுலி. பிரபுதே. ௬௭.)

அநுமிதி — அநுமாநத்தினற்றேன்றும் அறிவு. (தர்க்கபா. ௧௭.) [அநுமிதி.]

அநுமேயம்—1. அநுமாநப் பிரமாணத்தாலறியப்பட்டது. (ஆப். ௬௪.) 2. அறியத்தக்கது. (பௌஷ். பசு. ௬அ.) [அநுமேய.]

அநுமை—1. அநுமாநத்தினல் வரும் அறிவு. (ஆப். ௬௪) [அநுமா.] 2. கண்ணிமையினடி. (உவின். ௫௬.) [இஃது அநிமையின்றிரிவு போலும்.]

அநுமோதநம்—1. அங்கிகரிப்பு. (ஆப். ௬௪.) 2. ஒத்துமகிழ்தல். (உவில். ௬௫.) 3. சம்மதம். (ஆப். ௬௪.) [அநுமோதந: அநு—கூட. மோதந—மகிழ்தல்.]

அநுயாத்திரி — யாத்திரையிற் கூடப்போவோன். (வென். ௨அ.) [அநுயாத்ரி: அநு—கூட. யாத்ரி — பயணகாரன்.]

அநுயாத்திரிகன் — அநுயாத்திரி. (வென். ௨அ.) [அநு—பின். யாத்ரிக—செல்வோன்.]

அநுயோகம்—1. கண்டித்தல். (உவில். ௬௫.) 2. தேவத்தியாநம். (உவில். ௬௫.) 3. வருந்திக்கேட்டல். (உவில். ௬௫.) 4. விசாரணை. (வென். ௨௬.) 5. வினு. (உவில். ௬௫.) [அநுயோக: அநு—பின். யோக — இணைத்தல்.]

அநுயோகி—1. கூடியிருக்குமது. (தர்க்கபா. ௧௪.) 2. விதிவினை. (உ-ம்.) "விதியநுயோகி மறைபிரதியோகி" (பி. வி. ௧௬. உரை.) [அநுயோகிந்.]

அநுயோசநம்—வினு. (உவில். ௬௫.) [அநுயோஜந: அநு—பின். யோஜந—இணைத்தல்.]

அநுரகசம்— ஏகாந்தம். (சி.) இரகசியம். (ஆப். ௬௪) [அநுரஹஸ: அநு—கூட. ரஹஸ—மறைவு.]

அநுரஞ்சகம்—திருத்தியாதல். (உவில். ௬௫.) [அநுரஞ்ஜக: அநு-கூட. ரஞ்ஜக-பிரியமாதல்.]

அநுரஞ்சநம்—1. நேசித்தல். (உவில். ௬௫.) 2. பிரியப்படுத்துதல், (உவில். ௬௫.) [அநுரஞ்ஜந: அநு—கூட. ரஞ்ஜந-பிரியமாதல்.]

அநுரதம்—1. ஆசையாயிருத்தல். (உவில். ௬௫-) 2. நேசிக்கப்படல். (உவில். ௬௫.) [அநுரத: அநு—கூட. ரத—இனிமை.]

அநுரதி—1. அன்பு. (உவில். ௬௫.) 2. நன்குமதிப்பு, (உவில். ௬௫.) [அநுரதி:அநு-கூட. ரதி-இனியது.]

அநுராகபோகம் — காம அநுபவம், காமபோகம். (உ-ம்.) "வளம்புகுந்தவநுராகபோகமிகுமாதர் மங்கையர்" (பாரத. குருகுல. ௧௬௬.) [அநுராக; போக.]

அநுராகம் — 1. சிற்றின்பவிருப்பம். (உ-ம்.) "இதழைக்கொடுத்தநுராகத் திருக்கி" (திருப்பு. ௨௪௬.) 2. சிநேகம், (வாச.) 3. மிகுபிரியம். (வாச.) [அநுராக.]

அநுராகமாலை—ஒருபிரபந்தம்; அது: தலைவன்கனவின்கண் ஒருத்தியைக்கண்டு சேட்டு உண்டு உயிர்த்து இனிமையுறப் புண்ர்ந்ததைத் தன்னுயிர்ப்பாங்கற்கு உரைத்ததாக நேரிசைக் கலிவெண்பாவாற் கூறுவது. (தொன்னூல். ௨அ௬. உரை.) [அநுராகமாலா]

அநுரூபம்—1. இணக்கம். (உவில். ௬௬.) ஏற்றது. (உவில். ௬௬.) 2. ஒத்தது. (உ-ம்.) "மேலோர்வாக்குக் கநுரூபமாக" (தாயு. பொன். ௪௫. உரை.) 3. தக்கது. (உ-ம்.) "முநிவர்தோன்றினர்க்குமவநுரூபமாய்ச் சிவாக்கினையா ல்" (சூத- சிவ. ௧௯: ௪௬.) 4. தடை. (உவில். ௬௬.) 5. மத்தியஸ்தம். (உவில். ௬௬.) [அநுரூப: அநு-ஒத்த. ரூப-வடிவம்.]

அநுரோதகம்—இணங்குதல். (உவில். ௬௬.) [அநுரோதக.]

அநுரோதம்—பிறனுக்காக அவன் விரும்புங் காரியங்களைமுடித்தல். (உவி. ௬௬.) [அநுரோத: அநு—பின். ரோத-எல்லைப்படுத்தல்.]

அநுலாபம் — அடிக்கடிபேசுதல். (லிங்.) மறுபடியும் பேசுதல். (லிங்.) [அநுலாப: அநு-பின். லாப—பேசுதல்.]

அநுலேபகம்—1. சந்தநம் முதலிய பூசும் பொருள், (உவில். ௬௬.) 2. தைலம் முதலியவைகளைப் பூசுதல். (உவில். ௬௬.) [அநுலேபக: அநு— கூட. லேபக-பூசுவது.]

அநுலேபநம்—1. அபிடேகஞ்செய்தல். (உவில். ௬௬.) 2. அபிடேகத்திரவியம். (உவில். ௬௬.) 3. தைலம் முதலியவற்றை யுடம்பிற் பூசுதல். (உவில். ௬௬.) அநுலேபந: அநு—கூட. லேபந—பூசுதல்.]

அநுலேபம் — 1. அபிடேகம். (மா.) 2. தைலம் முதலியவைகளைப் பூசுதல். (உவில். ௬௬.) [அநு—கூட. லேப—பூசுதல்.]

அநுலோமசன் — அநுலோமன். (உவில். ௬௬.) [அநுலோமஜ:]

அநுலோமசை—சூரியசமூகத்து நடிக்கும்மாதர்களிலொருத்தி. (கூர்மபு. ஆதவர்சிறப். ௩௦.)

அநுலோமன்—நாற்குலத்துள், உயர்குலத்தாடவன் இழிகுலப்பெண்ணை விவாகஞ்செய்து பெற்றபிள்ளை. (உ-ம்.) "குலமுய ராணுந்தாழ்ந்தகுலமுறபெண்ணுங்கூடி—யலமரப்பிறந்

தன்மைந்தனநுலோமனென்னும்பேரான்" (சூத. சிவ. ௧௨: ௬.) இப்படிப் பிறந்த அநுலோமர்: சவர்ணன், அம்பட்டன், பாரசவன், மற்குரு, உக்கிரன், சூசுகன் என அறுவகையர் (சைவச. பொது. ௪௬௬. உரை.) [அநுலோம்: அநு - கிரமம். லோம -தொடர்பு.]

அநுவக்கிரம்—கிரகந்தானின்றுவந்த இராசிக்கு மீண்டுபோதல். (உவின். ௬௭.) அநு-பின். வக்ர--மீளுதல்]

அநுவக்கிரேட்டம்—இட்டத்தைச் சர்ப்பாகாரம்ாக வைத்து இதிலே ஒரு இராசிகளைந்து நின்ற கால அளவு. இது, மூன்று பாகையும் இருபது கலையுமாம்- (உவின். ௬௭; சோதிசாத். ௬௭.)

அநுவகன்—வாயுசக்கரங்களுளொன்று. (உ-ம்.) "ஆங்சணுவகன் பிரவதனநுவகன்சிறப்பின் - வீங்குசங்கனிவசன்மேற் பராவகனதன்மே-லோங்கிநின்றதோர்பரிவகனெனும் பெயருடைய—தீங்கில்வாயு சக்கரங்களேழுந்தனிசிறக்கும்" (கூர்மபு. மண்டல. ௪; ஆப். ௭௮௦.)

அநுவசநம்— 1. சொன்னதைப் பின்னுஞ்சொல்லல். (ஆப். ௩௫.) 2. படிப்பித்தல். (ஆப். ௩௫.) 3. பாடஞ்சொல்லல். (ஆப். ௩௫.) 4. முன்சொல்லியவசநத்தோடிணங்கிய துணைவசநம். (உவில். ௩௬.)
அநுவசந: அநு-பின். வசநம்.]

அநுவதித்தல்—முன்னர்க்கூறிய ஒரு பொருளை யொருநிமித்தத்தாற் பின்னும் எடுத்துக் கூறுதல். (உ-ம்.) "இருவர்சொல்வழக்குமேற்கொண்டநுவதித்து" (திருவிளை. மாமணு. ௩௦; பி. வி. ௫௦. உரை.)

அநுவமிசம்—வமிசவரலாறு. (வென். ௨௧.) [அநுவம்ஸ: அநு-வரிசை. வம்ஸ-மரபு.]

அநுவயித்தல்— ஒரு வாக்கியத்திலே இலக்கணமுறைப்படி யெழுவாய் பயனிலைகள் வெளிப்படத்தோன்றுமாறு சொற்களைக் கூட்டிச் சொல்லுதல். (உ-ம்.) "விந்துஞானமோவிடவென் றநுவயித்துப் பொருட்கூட்டி" (சிவப்பிர. உண்மை. ௩௦. உரை.)

அநுவர்ணநை—வர்ணித்துச் சொல்லல். (உ-ம்.) "பெருகுபிதிர்வஞ்சாநுவர்ணநை" (மச்சபு. அநுக்கிர. ௬.) [அநுவர்ணநா.]

அநுவர்த்தநம் — 1. காரியம். (ஆப். ௩௫.) 2. கீழ்ப்படிதல். (ஆப். ௩௫.) 3. சம்மதித்தல். (ஆப். ௩௫.) 4. தொடருதல். (ஆப். ௩௫.) 5. பிரியப்படுத்துதல். (ஆப். ௩௫.) 6. முற்சூத்திரத்திற் சொல்லப்பட்டதைக்கொண்டு குறைநிரப்புதல். (ஆப். ௩௫.)
[அநுவர்த்தந: அநு-பின். வர்த்தநம் -விருத்தியாதல், தாபித்தல்.]

அநுவர்த்தி—அநுசரித்தல். (உ-ம்.) "ததநுவர்த்தியாயிருக்கிறபுத்தியாதி பிருதிவியந்தமான தத்துவங்களும்" (சி. சி. ௪: அ. சிவாக்.) [அநு; வர்த்தி—இருத்தல்.]

அநுவர்த்தித்தல்—தொடருதல். (உ-ம்.) "அந்தச்செய்தகருமசித்ததினொலொரு ஆபூர்வஞ்செநித்துப் பலபரியந்தஞ் சம்ஸ்காரான்மாவாய் அநுவர்த்திக்கும்" (சி. சி. ௨: ௫அ. சிவாக்.)

அநுவர்த்தித்துவாத்— தொடர்ந்திருத்தலினால். (உ-ம்.) "நித்தியகாலாநுவர்த்தித்துவாத் ஆன்மா நித்தியன்". (சி. சி. ௨: ௫௪. சிவாக்.)

அநுவழி—புதன். (சூ. நிகண். ௧: ௬௧.) [ஹநு-வேசி.வழி-மகன். சந்திரன் குருவின் மனைவியாகிய தாரையை வியபிசாரமார்க்கமாகக் கூடிப்பெற்ற பிள்ளையென்பர்.]

அநுவாக்கியை — யாகததிலே தேவதையை யழைத்தற்குச் சாதநமான ஒருவேதமந்திரம். (உவில். ௩௬.) [அநுவாக்யா: அநு; வாக்யா.]

அநுவாகம் — இருக்கு அல்லது யசுர் வேதத்தின் சங்கிரகம். (உவில். ௩௬.) 2. வேதத்தின் உட்பகுப்பு. (உவில். ௩௬.) (உ-ம்.) ["இருக்குவேதத்தின் சூக்தங்கள் பத்துமண்டலங்களாகவும், ஒருமணடலம் நூற்றுக்கு மேலான அநுவாகங்களாகவும் பகுக்கப்பட்டிருக்குமென்பர்.] (வென். ௨௪; உவில். ௩௬.) (செ. அகராதிபார்.)

அநுவாகாரியம் — அந்நுவாகாரியம். (சி.) [அந்வாஹார்ய.]

அநுவாசநம்—1. அன்பு. (உவில். ௬௩.) 2. கூடியிருத்தல். (சி.) கூடியிருந்து வழிபடுதல். (வாச.) 3. வஸ்திரங்களுக்கு மணமூட்டுதல். (உவில். ௩௬.) 4. வாசனையூட்டுதல். (உவில். ௩௬.) 5. வேலைச்சாலை. (சி.)
[அநுவாஸந: அநு; வாஸந-மணமூட்டுதல்.]

அநுவாசம்—1. அன்பு. (சி.) 2. கூடியிருத்தல். (வாச.) 3. வாசனையூட்டுதல். (உவில். ௩௬.) 4. வேலைச்சாலை. (சி.)
[அநுவாஸ: அநு-கூட. வாஸ-பரிமளம்.]

அநுவாசிதம்—வாசனையூட்டப்பட்டது. (உவில். ௩௬.) [அநுவாஸித.]

அநுவாதம்—சம்மதம். (சி.) 2. நிந்தித்தல். (உவில். ௩௬.) 3. முன்னர்க்கூறிய ஒருபொருளை யொருநிமித்தத்தாற் பின்னும் எடுத்துக் கூறுதல். (பி. வி. ௫௦.) 4 வாதிகூறிய பொருளை நீயிவ்வாறுகூறினையெனக் கண்டநஞ்செய்தற்பொருட்டுப் பிரதிவாதியுங்கூறுதல். (உ-ம்.) "ஆங்கவனுரைத்தமொழி கேட்டவன்பரதனையநுவாதஞ் செய்து" (பெரியபு. ஞாநசம். ௯௪அ.)
[அநுவாத: அநு-பின். வாத-சொல்லுதல்.]

அநுவாதி — சமணரிலொருவன். (சி. சி. பர. நிகண் மதம். க. உரை.)

அநுவாதித்தல் — அநுவதித்தல். (உ-ம்.) "சொன்னநூலநுவாதித்து" (திருவிளை. தடாத. ருச.)

அநுவாதேயம் — அங்கீகரிக்கப்படாதது. (சி.) [அநுபாதேய.]

அநுவாரோகணம் — அந்நுவாரோகணம். (சி.) [அந்வாரோஹணம்.]

அநுவித்தம் — 1. கலக்கப்பட்டது. (வாச.) 2. கலந்து பிரிக்கப்பட்டது. (ஆப். ருரு.) 3. குயிற்றப்பட்டது. (ஆப். ருரு.) 4. கூடினது. (ஆப். ருரு.) 5. சம்பந்தப்பட்டது. (ஆப். ருரு.) 6. துளைக்கப்பட்டது. (ஆப். ருரு.) 7. பலவன்னப்பட்டது. (ஆப். ருரு.) [அநுவித்ய: அநு; வித்ய]

அநுவிதாயிநீ — அநுசரிப்பது, இணங்கியது. (உ-ம்.) "ஈசுவரனுடைய இச்சாநுவிதாயிநீயாகமாயையானது ஆன்மாவாரகமாகிய ஆணவம் நீங்கும்படிக்குக் கலையாதி தத்துவங்களைத் தன்னிடத்திலே யுதிப்பிக்கும்" (சி. சி. உ: அச. சிவாக்.) [அநுவியாயிநீ. அநு-பின். வியாயிநீ-விதிகளையநுசரிப்பது.]

அநுவியவசாயம் — பிரத்தியக்ஷப் பிரமாணத்தினால் உணர்ந்ததை யுணர்ந்தேன் என ஒருவனுக்குப் பின்னிகழுமுணர்வு. (தர்க்காமிர்த. ருரு.) [அநு-பின். வ்யவஸாயம்-உணர்வு, செயல். ஆப். அருரு.]

அநுவிரசநம் — வழிவிட்டனுப்புதல். (உவில். ருரு.) [அநுவ்ரஜந: அநு-பின். வ்ரஜந-போதல்.]

அநுவிருத்தம்-முட்டைவடிவம். (வென்.உச; சி) 2 முன்சூத்திரத்திலிருந்து அவாய்நிலையாற்பின்சூத்திரத்துக்கெடுத்துக் கொள்ளப்படுஞ் சொல்முதலியன. (வாச.) [அநுவ்ருத்த]

அநுவிருத்தி — 1. இசையச் செய்தல். (உவில். ருரு.) 2. இணங்கல். (உவில். ருரு.) 3. உபசாரம். (உவில். ருரு.) 4. ஒப்பாகச்செய்தல். (உவில். ருரு.) 5. கூடிநின்று செய்தல். (உ-ம்.) "அவ்வொருவனே யென்று-மான் றலிலநுவிருத்தியாயிருக்கும் வகையினால்" (சூத. எக். பூ. கக: கo.) 6. சேர்ந்திருத்தல். (உவில். ருரு.) 7. தொடர்ச்சி. (உ-ம்.) "ஆகில் எங்கும் ஞானமானது அநுவிருத்தியாயிருக்கையினாலே" (சி. சி. உ:ருo.சிவாக்.) 8. புறநடை. (உவில். ருரு; வென். உரு.) [அநுவ்ருத்தி: அநு-பின். வ்ருத்தி-தொழில்.]

அநுவுரு—ஒத்தரூபம். (உ-ம்.) "பார்ப்பனமாக்களினிடையேயநுவுருக்கொண்டிருந்ததன்மை" (பாரத. திரௌ. மக.) [அநு-ஒத்த. உரு-ரூபம்.]

அநுவுலோமன்—அநுலோமன். (உ-ம்.) "அரும்பிரதிலோமனுமநுவுலோமனும்" (நல். பார. கன்னிகா. உச.) [அநுலோம.]

அநுவேதம் — 1. கூட்டுதல். (ஆப். ருரு.) 2. சம்பந்தம். (உ-ம்.) "சங்கமறுசச்சிதாநந்தவொளியுருவந்தானெனச்சிந்தித்திடலுட்சத்தாநுவேதம்" (வேதா. சூ. கருக.) [அநுவேத்ய. அநு-கூட. வெத்ய-துளைத்தல்.]

அநுற்பத்தி — 1. சித்தியின்மை. (உவில். ருரு.) 2. பிறப்பின்மை. (உவில். ருரு.) [அநுத்பத்தி: அந்-எதிர்மறை. உத்பத்தி-பிறப்பு.]

அநுற்பூதம்—காணப்படாதது. (உ-ம்.) "அநுற்பூதசத்தம்" (சி. சி. உ: ருரு. சிவாக்.) [அநுத்பூத: அந்-எதிர்மறை. உத்பூத-காணப்படுவது.]

அநூகம் — 1. ஆமோதித்தல். (சி.) 2. ஒழுக்கம். (ஆப். ருஎ.) 3. கழிந்தபிறப்பு. (வாச.) 4. குணம், தன்மை. (ஆப். ருஎ.) 5. கோத்திரம். (ஆப். ருஎ.) [அநூக.]

அநூகன்—பிறப்புநீங்கினவன். (சி) [அநூக.]

அநூடன் — விவாகஞ்செய்யாதவன். (உவில். ருஎ.) [அநூ஢: அந்-எதிர்மறை. ஊ஢:-விவாகஞ்செய்தவன்.]

அநூநகன் — குறைவில்லாதவன். (உவில். ருஎ.) [அநூநக: அந்-எதிர்மறை. ஊநக-குறைவுடையோன்.]

அநூநம் — 1. குறைவின்மை. (உவில். ருஎ.) 2. முழுமையும். (உவில். ருஎ.) [அநூந: அந்-எதிர்மறை. ஊந-குறைவு.]

அநூபசம் — இஞ்சிப் பூண்டு. (உவில். ருஎ.) [அநூபஜ: அநூப-ஈரம். ஜ-பிறந்தது.]

அநூபம்—1. ஈரம். (உவில். ருஎ.) 2. எருமை. (உவில். ருஎ.) 3. தவளை. (உவில். ருஎ.) 4. நீர்நிலை. (உவில். ருஎ.) 5. நீருடைமை. (உவில். ருஎ.) 6. யானை. (உவில். ருஎ.) [அநூப: அநு-சமீபம். ஆப்-நீர். இது, ஊப என்றாயிற்று.]

அநூர்த்துவாத்தி — மேற்கதுப்பினெலும்பு. (செ.) [ஹநூர்த்வாஸ்தி: ஹநு-கதுப்பு. ஊர்த்வ-மேல். அஸ்தி-எலும்பு.]

அநூரு — 1. சூரியனுடைய தேர்ப்பாகனாகிய அருணன். (உவில். ருஎ.) 2. தொடையில்லாதவன். (உவில். ருஎ) [அநூரு: அந்-எதிர்மறை. ஊரு-தொடை.] 3. புதன். (உவின். ருஎ.) 4. விடியற்காலம். (ஆப். ருஎ.) [அந்-எதிர்மறை. ஊர்ண-மூடுதல்.]

அநேகத்துவம்—அநேகமாயிருக்குந்தன்மை. (தாயு. எனக்கென. கஉ. உரை.) [அநேக-பல. த்வம்-தன்மை.]

அநேகதங்காவதம் — காஞ்சிபுரத்துள்ள ஒருசிவஸ்தலம். (பெரியபு. ஏயர். ககஉ.)

அநேகபம்—1. அநேகபேசமென்னுந் தலம். (உ-ம்.) "பச்சிமால்யநல்லநேகபங் கடம்பை" (கந்தபு. நகர. அகூ.) 2. யானை. (உவில். கூஅ.) [அநேகப: அநேக-பல. பம் - குடிப்பது. கையினாலும் வாயினாலுங்குடிப்பதென்றபடி.]

அநேகபேசம் — காஞ்சிநகரத்துள்ள இருபதுசிவாலயங்களுளொன்று; இது: விநாயகர் கயமுகனைக் கொன்று அவன்கொம்பிலுள்ள முத்துக்களாற் சிவனைப்பூசித்தமையால் வந்தபெயர் என்பர். (கந்தபு. நகர. அகூ. உரை.) [அநேகப—யானை. ஈஶம்—ஈசுரனிருக்குமிடம்.]

அநேகம் —ஒன்றுக்கு மேற்பட்டது, பல. (உ-ம்.) "இந்நகரநேகநாளிருந்தவெல்லையில்" (பாரத.வேத்திர. கூள.) [அநேக: அந்—எதிர்மறை, ஏக-ஒன்று.]

அநேகமூர்த்தி—கடவுள். (வாச.) [அநேகமூர்த்தி: அநேக-பல. மூர்த்தி-மூர்த்தமுடையவன்.]

அநேகர் —பலர் (உ-ம்.) "அடலரக்கரநேகருடன் அடுபோர்செய்து" (பாரத. புட்பயா. கக.)

அநேகவற்பாவி—முன்மொழியெண்ணும் பின்மொழிதத்திதார்த்தமாயும் வந்து பலரையாவது பலபொருளையாவது கருதிநிற்குஞ் சமாசம். "பஞ்சபாண்டவ"ரென்பதிற்போல. (உ-ம்.) "தொகைத்தவிகு - மூற்பதமெண்பிற் பதந்தத்தி தார்த்த மூடித்து மெழூஉம் -புற்பலவேகவற்பாவி யநேகவற் பாவியென்றே" (பி. வி. உக.) [அநேக—பல. வத்—போல, ஆஸ. பாவி—இருப்பது.]

அநேகன்—1. கடவுள். (உ-ம்) "ஏகனுமாகி யநேகனுமானவ னுதனுமானுனென்றுந்தீபற"(திருவுந்தி.கு.) [அவனவளதுவென்றுபலவாய் நிற்கத்தக்கவனென்றபடி.மேற்படி. சிற்றம்ப.உரை.] 2. பசுவாகிய ஆன்மா. (உ-ம்.) "ஏகனநேகனிருள்கருமமா மாயை" (திருவருட்பய. கூ:உ. இது சாதியொருமை.) 3. பலயோனிகளிலும்பிறப்பவன். (உ-ம்) "ஏகனநேகன்" (சங்கற்பமாயாவாதி. சங். கூ. அடி.) [அந்-எதிர்மறை. ஏக - ஒன்றுயிருப்பவன்.]

அநேகாகாரம் — பலவடிவம். (செ.) [அநேக—பல. ஆகாரம்—வடிவம்.]

அநேகாங்கம்—1. அநேகாங்க வுருவகம். (உ-ம்.) "உருவகமேகாங்கமநேகாங்கமென" (தண்டி. கூகூ.) 2. பல அங்கம். [அநேக; அங்க.]

அநேகாங்கவுருவகம்—உருவக அணிவகையுளொன்று; அஃது: ஒன்றன் அங்கங்கள் பலவற்றையு முருவகஞ்செய்து சொல்லுவது. "கைத்தளிராற் கொங்கை முகிழ்தாங்கிக் கண்ணென் னு—ஊமத்தடஞ்சேன்ஊமந்தர் மநங்கலங்க--வைத்ததோர் - மின்னுளதான்மேகமிசையுளதான்மற்றதுவு - மென்னுளதா நண்பாவினி" என்னுங் கவியிற்போல. (தண்டி. கூகூ. உரை.) [அநேகாங்கரூபக.]

அநேகாசிரிதகுணம்—இரண்டு அல்லது இரண்டுக்கதிகமாகிய பலதிரவியங்களை யாதாரமாகக் கொண்ட சையோகம் முதலிய குணம்.(தர்க்காமிர். உகூ.) [அநேக—பல. ஆஶ்ரிதம்—பற்றியது.]

அநேகாந்தம் — சந்தேகமானது, பலமுடிவு. (ஆப். கூள.) [அநேகாந்த: அநேக—பல. அந்த—முடிவு.]

அநேகாந்தவர்தம் — ஆருகதவாதம். (சி. சி. ச: உ0. சிவாக்.) [அநேகாந்த: பலமுடிவு. வாத—பேச்சு.]

அநேகாந்தவாதி — ஆருகதன். (சிவஞானபா. கக.) (இல்லது முள்ளதுமாயபொருடோன்று மென்னுமநேகாந்தவாத முடையனாதலின். சி. போ. க; உ. சிவஞா.) [அநேகாந்தவாதிந்.]

அநேகாந்திகம்—அனைகாந்திகம். (சி. சி. அளவை. கச. நிரம்ப.) [அநேக—பல. அந்திகம்—அந்தமுடையது.]

அநேகார்த்தம்—பலபொருள். (உ-ம்.) "ஆன்மாவின்வடிவதானுமநேகார்த்தகூட்டமென்னில்" (சி. சி. ச: ரு.) [அநேக—பல. அர்த—பொருள்.]

அநேகான்மவாதி — ஆன்மாக்கள் அநேகம் என்றுவாதிப்போன். (உ-ம்.) "வியங்கியவியஞ்சக பாவசம்பந்தத்தோடு வியாப்பிய வியாபக பாவசம்பந்த சம்பந்தியாயிருப்பனென்றநேகான்மவாதியாய்நீர் சொன்னதேதென்னில்" (சி. சி. உ; உ. ஞானப்.) [அநேக—பல. ஆன்மவாதிந்—ஆன்மா என்போன்.]

அநேகேச்சுரர் — பலகடவுளர் (உ-ம்.) "அணுபேதமென்கின்ற நவபேதத்தையணுப்பிரமாதியணுபரசிவாந்த அநேகேச்சுரர்கள் சுவரூபத்தினாற் காண்பிப்பர்" (சி. சி. உ: எச. ஞானப்.) [அநேக; ஈஶ்வர.]

அநேகேச்சுரவாதம் — பலகடவுளருளரென்றுவாதித்தல். (உ-ம்.) "அற்றேல் அநேகேச்சுரவாதம் பரிகரித்தற்பொருட்டு" (சி. சி. க: கூ0. சிவஞா.) [அநேக; ஈஶ்வர; வாத.]

அநேகேச்சுரவாதி — சிருட்டிமுதலிய பஞ்சகிருத்தியங்களை யோரீசுவரர் தனியே நடத்தமாட்டாரென்றும் அநேக ஈசுரர் கூடி நடத்துவார்கள் என்றுங் கொள்பவன். (த- நி. போ. உசக.) [அநேக; ஈஶ்வர; வாதிந்.]

அநேகேசுரவாதி — அநேகேச்சுரவாதி. (உ-ம்.) "இப்படிச்சகத்துக்கீசுரர் அநேகராய் அநேகேசுரவாதியானீர்" (சி. சி. கூ: க. ஞானப்.)

அநேகேசுவரத்வம் — ஈசுவரர்பலராயிருக்குந்தன்மை. (உ-ம்.) "சத்திமானுமநேகமாய் அநேகேசுவரத்வம்வரும்" (சி. சி. ச: கூக. சிவாக்.) [அநேகேஶ்வர - பலகடவுளர். த்வம்-தன்மை.]

அநேகை — அநேகமாயிருக்கிறவள். (உ-ம்.) "சத்தியநேகை யென்னில்" (சி. சி. க: கூக. சிவாக்.) [அநேகா]

அநேடமூகன்—1. கபடமுடையவன். (உவில். கூஅ.) 2. செவிடு மூமையுமானவன். (உவில். கூஅ.) 3. துர்ச்சநன். (உவில். கூஅ.) [அநேடமூக: அந்-ஒப்பு. ஏடு-செவிடு. மூக-ஊமை.]

அநேடன் — அறிவில்லாதவன். (ஆப். கூஅ.) [அநேட: அந்-ஒப்பு. ஏட-செவிடு.]

அநைக்கம்—அநைக்கியம். [அநைக்யம்.]

அநைக்கியம்—1.ஒற்றுமை. (ஆப். கூஅ.) 2. ஒன்றன்மை,பன்மை. (ஆப். கூஅ) 3. தடுமாற்றம். (ஆப். கூஅ.) 4. தாறுமாறு. (ஆப். கூஅ.) [அநைக்யம்: அந்- எதிர்மறை. ஐக்யம்-ஏகத்துவம்]

அநைக்குமம்—1. ஐக்கக்குறைவு.(சி.) 2. பன்மை. (சி)

அநைகாந்தம்— ஏதுப்போலி மூன்று வகையுளொன்று; அது: விபக்ஷத்தினிங்கிப் பக்ஷசபக்ஷங்களி விருத்தலாகிய நியமமல்லாத ஏது. இது பொது அநைகாந்தம் சிறப்பு அநைகாந்தம் என இரண்டாய் விரியும். (சைவப். சக.) [அந்- எதிர்மறை. ஐகாந்தம்-ஏகாந்தசம்பந்தம்.]

அநைகாந்திகம் — அநைகாந்தம். (உ-ம்.) "ஆகையால் ரூபாரூபமென்னும் விருத்ததருமத்வயாசிரயத்துவம் அநைகாந்திகதோஷ மென்றிதன்பொருள்" (சி. சி. ச: கஉ. சிவாக்.) [அந்-எதிர்மறை. ஐகாந்திகம்-ஏகாந்த சம்பந்தமுடையது.]

அநைசுவரியம் — ஐசுவரியமின்மை. (த. நி. போ. கூ00) [அந்- எதிர்மறை. ஐஶ்வர்யம்-செல்வம்]

அநைதிகம்— ஐதிகமல்லாதது, (ஆப். கூஅ.) [அநைதிகம்: அந்-எதிர்மறை. ஐதிகம்-பரம்பரையானது.]

அநோகசம் — மரம். (உவில். கூஅ.) [அநோகஹ.]

அப்சரசு—தேவுலகத்துள்ளவேசிகள். (சப்த.) [அப்ஸரஸ்: அப்-சலம். ஸரஸ்-சரிப்பவர்.] இவர் கந்தருவருடைய மனைவியரென்றும் ஸ்நாநஞ் செய்வதிலே மிகப்பிரியரென்றும்,சூரிய சகாயரான ஏழு கணத்தவர்களுள்ளே யொரு கணத்தவரென்றும் அவர் கிருதஸ்தலை, புஞ்சிதஸ்தலை, மேநகை, சகசநியை, பிரமலோசை, அநுமிலோசா, கிருதாசி, விசுவாசி, ஊர்வசி, பூர்வசித்தி, திலோத்தமை, அரம்பையெனப் பன்னிருவரென்றும், முறையே சித்திரை முதலிய மாசந்தோறுந் தனித்தனி சூரியனோடு போக்குவர வுடையரென்றுஞ் சொல்லப்படுவர். (பிரபஞ்சவுற். ருo. ருக) வாசஸ்பதி: ஊர்வசி, மேநகை, அரம்பை, மிசிரகேசி, அலம்புடை, விசுவாசி, கிருதாசி, பஞ்சசூடை, திலோத்தமை, பாநுவதி, அபலை, இரம்மியை" யெனப்பன்னிருவரென்பர். இவரின்னும் பேதித்துக் கூடுவர்.

அப்சரம் — நீர்வாழும் பிராணிகள். (வென். கூகூ.) [அப்ஸர: அப்-நீர். ஸர-சரிப்பது.]

அப்சரர்—ஒருவகை வீரதேவதைகள். இவர்: வயித்துதசம் என்னும் நான்காம் பவநாதார மேகாசிரயபட்டணத்திலிருக்கிறவர் (வி-ணி. உகூச.)

அப்சன்— 1. சந்திரன். (அபிதா) 2. தன்வந்திரி. (அபிதா.) [அப்-சலம். ஜ: பிறந்தவன்.]

அப்தசதம் — நூறு வருடங்கொண்ட ஒரு கால எல்லை, சுதகம். (உவில். ருகூ.) [அப்தஶத: அப்த-வருடம். ஶதம்-நூறு.]

அப்தம்—வருடம். (உ-ம்)"சகாப்தம்" (செ; சப்த.) [அப்த]

அப்தா—கிழமை. (செ.) [திசைச்.]

அப்தாக்கணக்கு — வாரக்கணக்கு, வாரக்குறிப்பு. (செ.)

அப்தோரியாமம்—1. சோதிட்டோமயாகத்தின் ஏழாமங்கமாய் இறுதியிற் செய்யப்படும் யாகம்.(ஆப். ருரு.) (உ-ம்.) "வடக்குநோக்கிய முகத்தினின்றும் அதர்வணவேதமும், அப்தோர்யாமமென்னும் யாகமும், அநுட்டுப்பு என்னுஞ்சந்தமும், வஞ்சிப்பாவும், ஏனையவுந்தோன்றின" (கூர்ம பு. பலவ. உச. உரை.) 2. இந்தயாகத்தினிறுதியிலே யத்தியயாநஞ் செய்யுஞ் சாமவேத வாக்கியம். (ஆப். ருரு.) [அப்தோர்யாம.]

அப்ப — ஓரதிசயச்சொல். (உவின். உஅ.) [வழக்.]

அப்பட்டா—வட்டத்திருப்பிப்பூண்டு. (உவின். உஅ.) வைத்திய அகராதிகாரர் "அப்பட்டர்" என்பர்.]

அப்படா—ஓரதிசயச்சொல். (உவின். உஅ) [வழக்.]

அப்படி — அவ்வண்ணம். (உ-ம்.) "அப்படியொருத்தி செல்ல" (கந்தபு. தெய்வ. அகூ.) [அ-ஒருசுட்டெழுத்து. படி-வண்ணம்.]

அப்பணை — 1.ஆதாரம்.(உவின். உஅ.) 2. உத்தரவு. (உவின். உஅ.) 3. பிணை, (உவின். உஅ.) [திசைச்.]

அப்பத்தாள் — அக்காள்.(உவின். உஅ.) [திசைச்.]

அப்பதி—1. கடல். (ஆப். சகூ.) 2. வருணன். (உவில். ருo.) [அப்பதி: அப்-நீர். பதி-தலைவன்.]

அப்பப்பா — ஓரதிசயச்சொல். (உவின். உஅ.) [வழக்.]

அப்பம்—ஒருவகைச் சிற்றுண்டி. (உ-

ம்.) "ஏனலெட்பொரியொ டப்பமிவையென்பவுணரா" (உபதேச. வாஞ. கசுகூ.) 2. புட்டுத்திருப்பிப்பூடு. (கா. வைத்.) வட்டத்திருப்பிப்பூண்டு. (உவின். உஅ.)

அப்பர்— ஆண் ஆட்டின் பெயர்களுளொன்று; இஃது இப்போது வழக்கமில்லை. இப்பெயர் குரங்குக்குமாமென்பது நச்சினார்க்கினியார்"அப்பர்குரங்கென்றலுமாம்"என்றதனாற்பெறும். (தொல். பொரு. சுOகூ.) 2. சிவன். (பெரியபு. நமிநந். கரு.) 3. சைவசமயகுரவர் நால்வருளொருவராகிய திருநாவுக்கரசர். (பெரிய. திருஞான. சகரு.) 4. தந்தையார். (உ-ம்.) "விற்பரமரப்பரருள்வித்தகமருப்புடையபெருமாளே" (திருப்பு. காப்பு. கூ.)

அப்பல்—1. ஒற்றுதல். (உவின். உஅ.) 2. பூசுதல். (உவின். உஅ.)

அப்பவருக்கம் — சிற்றுண்டியினம். (சி.)

அப்பவாணிகர்— ஒருவகைச்சாதியார்; இவர் அப்பஞ்செய்துவிற்பவர். (மணிமே. உசுக.)

அப்பளம்—ஒருவகையப்பம்; இது: உழுந்தினாலும் அரிசியினாலும் செய்யப்படுவது. (உவின். உஅ.)

அப்பளாகாரம்—உறைப்பும் உவர்ப்பும் உள்ள ஒருவஸ்து. (உவின். உஅ.)

அப்பறாத்தூணி-1. அம்புதொலையாமல் இருக்குங்கூடு. (மா.) 2. சரகாண்டபாஷாணம். இதனை யப்புறாத்தூணியென்பர் உவின்சிலோ அகராதிகாரரும் வைதத்ய அகராதிகாரரும். [அம்பு-பாணம்.அறு-நீங்காத.தூணி-கூடு.]

அப்பன்—1. சைவசமய குரவருளொருவராகிய திருநாவுக்கரசுநாயனார். உபதேச. கடவுள். எ.) 2. நீருடையவன். (உ-ம்) "ஆடனீள்சடைமேவியவப்பனே"(தேவார.திருவால. திருவிய. கூ. சம்.) [அப்பு-நீர்.] 3. பிதா, (உ-ம்.) "அப்பனென்றுமன்னையென்று மாரியனென்று முன்னையே செப்புவது" (தாயு. பரா. உஅஉ.)

அப்பனார்—சிவன். (உ-ம்.) "அப்பனாரம்மையோ டமர்ந்துவாழ்தருஞ்செப்பரிதாஞ் சிவலோகஞ்சேர்ந்தனன்" (சூத: சிவ. ச: சகூ. தகப்பனார்.)

அப்பா—1. அதிசயம் துக்கம் முதலியவைகளைக்காட்டும் ஒருசொல். (உ-ம்.) "என்னப்பா மற்றிவ்வெழுபதுவெள்ளமுமொருவன்– றின்னப்போதுமோதேவரில் வலியரோ" (இராமா. மூலபல. சO.) 2. பிதாவைப் பிள்ளை யழைக்கும் ஒரு விளிப்பெயர். (உ-ம்.) "அம்மையென நாதனப்பாவென்று" (திருமுறைகண்டபு. உஅ.) 3. பிள்ளைகள் பாட்டனை விளிக்கும்போதும் இளைஞர் தாம்நன்குமதிக்கும் முதியோரை விளிக்கும்போதும் பிரயோகிக்கும் ஒருசொல். (உவின். உஅ.) 4. முதியோர் இளைஞரை யன்புகாட்டி விளிக்கும்போது பிரயோகிக்கும் ஒருசொல். (உவின். உஅ.)

அப்பாகம்—வாலுளுவை. (சா. வைத்.)

அப்பாட்டன்—பாட்டனுடைய பிதா. (உவின். உஅ) [திசைச்]

அப்பாயி—தகப்பனைப்பெற்ற பாட்டி. (செ.)

அப்பால் — 1. அதன்பின். (உவின். உஅ.) 2. அதன்மேல். (உ-ம்.) "பின்னவன்பெற்றசெல்வ மடியனேன்பெற்றதன்றோ–என்னினியுறுதியப்பால்" (இராமா. கைகேசி. கசO.) 3. அப்பக்கம். (உ-ம்.) "அப்பாலிருந்தவநசரிதரைவர்க்கு" (பாரத: நச்சுப். கரு.) [அ; பால்.]

அப்பாலைக்கப்பாலைக்கப்பால் — அந்த இடத்துக்கு மேலுள்ள இடத்துக்கும் மேலுள்ள இடம்; அது: பிரகிருதிக்கு மேலுள்ள அசுத்தமாயைக்கும்மேலாகிய சுத்தமாயையைக்கடந்தவெளி. இதனையே "நாதமுங்கடந்தவெளி" யென்பர். (உ-ம்.) "அப்பாலைக்கப்பாலைக்கப்பாலாயறிவரியவமலைதன்னை" (சிவதரு. சிறப்புப். கூ.)

அப்பாலைக்கப்பாலைக்கப்பாலான்-சிவன். (உ-ம்.) "மெய்ப்பால்வெண்ணீறணிந்த வப்பாலைக் கப்பாலைக்கப்பாலானை யாரூரிற்கண்டடியேனயர்த்தவாறே" (தேவார. திருநாவு.)

அப்பாவி—1. கபடமில்லாதவன். (உவின். உஅ.) 2. பாவமற்றவன். (உவின். உஅ.) 3. பேதை. (உவின். உஅ.)

அப்பி—அக்காள். (உவின். உஅ.) [திசைச்.]

அப்பிங்கநம்—அப்பியங்கம். (உ-ம்.) "மோர்ந்தசடத்தயமெய்யெலாமுழுகமுதன்மூர்த்த முசட்டினிடைச்சொரிந்திவ்வண மூழ்கலப்பிங்கநமாம்" (தைல. பாயிர. ருக.) [அஞு Oറ: உவில். ருக.]

அப்பியங்கநம்—அப்பியங்கம். (உ-ம்.) "தேகம் முழுதும் நனையும்படி முதலில், சிரசிற்சொரிந்து ஸ்நாநஞ்செய்வதுவே யப்பியங்கநமாம்" (தைல. பாயிர. ருக. உரை.) [அஞுOறா.]

அப்பியங்கஸ்நாநம்—எண்ணெய்தேய்த்து முழுகுதல். (ஸ்மிருதி முக்தாபல. உஉO.)

அப்பியங்கம்—1. உடம்பிலே தைலம் பூசுதல். (உவில். ருக.) (உ-ம்.) "அப்பியங்கம் செய்யிற் செவிடுண்ணுக்கு–மகலும்" (தைல. தைலவ. சுஅ.) 2. கண்ணுக்குமைதீட்டல். (உவில். ருக.) 3. பிண்ணுக்கு. (உவில். ருக.) [அஞுOற.]

அப்பியசநம்—1. அப்பியாசித்தல். (உவில். ருக.) 2. வாய்ப்பாடம் பண்ணுதல். (உவில். ருக.)
[அஹ்யஸந: அஹி-அடிக்கடி. அஸந-அனுப்புதல்.]

அப்பியசித்தல் — அப்பியாசஞ்செய்தல. (உ-ம.) "மறுமைக்குடயோகமான வேதாந்தசாத்திரங்களையும் நாடோறும் அப்பியசிக்கவேண்டியது" (மநு. ச: கக.)

அப்பியசூயகன் — பிறர்குணத்திற்குற்றமேற்றுவோன், மிக்க அழுக்காறுடையவன். (ஆப். சுஎ.) [அஹ்யஸூயக: அஹி — மிக. அஸூயக—அழுக்காறுடையோன்.]

அப்பியஞ்சநம்—1. எண்ணெய்ப்பதார்த்தம். (ஆப். சுஎ.) 2. கண்மடலில் மைதீட்டல். (ஆப். சுஎ.) 3. தேகத்தில்எண்ணெய் பூசுதல். (ஆப். சுஎ.)
[அஹ்யஞ்ஜந. அஹி; அஞ்ஜந.]

அப்பியந்தம் — தாமதம், பின்போடுதல். (உவின். உஅ.)

அப்பியந்தரகரணம் — அகத்துறுகிகழ்கருவி. (உ-ம.) "அப்பியந்தரமேவாகியமென்னச்- செப்பியகரணமகம்புறமாகும்" (பி. வி. கஉ. உரைச்சூத்திரம்) [அஹ்யந்தரகரண. அஹ்யந்தர—உள். கரண—கருவி.]

அப்பியந்தாசத்தாநுவித்தம்—அகச்சத்தாநுவித்தம் என்னுஞ் சமாதி. (வி-ணி. சுக.) [அஹ்யந்தரஸத்தாநுவித்தம்.]

அப்பியந்தாதிருசியாநுவித்தம் — அகத்திருசியாநுவித்தம் என்னுஞ்சவிகற்பசமாதி. (வி—ணி. சுக.) [அஹ்யந்தரத்ருஶ்யாநுவித்தம்.]

அப்பியந்தாம்—1. இடைக்காலம். (ஆப். சுஎ.) 2. உள்வீதி. (ஆப். சுஎ.) 3. உள்ளிடம். (ஆப். சுஎ.)
[அஹ்யந்தர: அஹி-முன். அந்தர-உள்.]

அப்பியமிதன் — நோயினுற்பிடிக்கப்பட்டவன். (உவில். ருக.) [அஹ்யமித: அஹி; அம-நோய்.]

அப்பியமேகம் — ஒருவகைமேகரோகம; அதன்தன்மை: மூத்திரமானது யானையின் மதசலத்தைப்போல அதிசவிரைவாய் ஒவ்வொரு வேளைக்கொருபடியளவாக இறங்குவதுங் காய்ச்சினால் உவர்மண்ணைப்போல் அடியில் வண்டல்படிவதும் ஆம். (சீவரட். சுoரு.)

அப்பியர்ச்சநம்—வழிபாடு. (உவில். ருக.) [அஹ்யர்ஜந.]

அப்பியர்ச்சை — வழிபாடு. (உவில். ருக.) [அஹ்யர்ஜா.]

அப்பியர்த்தநை—பிரார்த்தனை. (உவில். ருக.) [அஹ்யர்த்தநா: அஹி; அர்த்தநா-வேண்டுகோள்.]

அப்பியர்த்தி — பிரார்த்திப்போன். (ஆப். சுஎ.) [அஹ்யர்த்தி: அஹி; அர்த்தி—கேட்டிப்பான்.]

அப்பியவகரணம்— உண்ணுதல். (உவில். ருக.) [அஹ்யவஹரண: அஹி; அவஹரண—எடுத்தல்]

அப்பியவகருடணம்—கல்லிப்பிடுங்குதல். (உவில். ருக.) [அஹ்யவகர்ஷண: அஹி—மேல். அவகர்ஷண—வலிமையோடிழுத்தல்.]

அப்பியவகாரம்—உண்ணுதல். (உவில். ருக.) [அஹ்யவஹார: அஹி-உள். அவஹாரம்—கவர்தல்.]

அப்பியாகதன் — 1. சந்திக்கவந்தோன். (உவில. ருக.) 2. முன்னரறியப்படாதவந்தோன். (சப்த.) (உ-ம்.) "அப்பியாகதரோடுத்தமவதிதிபூசையும்புரிதல்" (திருவானை. கோச்சேங். ககூo.) 3. வந்துசேர்ந்தவன். (ஆப். சுஅ.)
[அஹ்யாகத: அஹி—எதிர். ஆகத—வந்தவன்.]

அப்பியாகமநம்—1. சந்தித்தல். (ஆப். சுஅ.) 2. வந்துசேருதல். (ஆப். சுஅ.)
[அஹ்யாகமந: அஹி—எதிர். ஆகமந-வருதல்.]

அப்பியாகமம்—1. அடித்தல். (உவில். ருக.) 2. அயல். (உவில். ருக.) 3. எழும்புதல். (உவில் ருக.) 4. கொலை. (உவில். ருக.) 5. சந்தித்தல். (உவில். ருக.) 6. பகை. (உவில். ருக.) 7. யுத்தம். (உவில். ருக.) 8. வந்துசேருதல், வருதல். (உவில். ருக.)
[அஹ்யாகம: அஹி—கிட்ட. ஆகம—வருதல்.]

அப்பியாகாதம்— எதிர்த்துத்தாக்குதல். (உவில். ருக.) [அஹ்யாகாத: அஹி—எதிர். ஆகாத—தாக்குதல்.]

அப்பியாகாரம் — 1. உண்ணுதல். (உவில். சுo.) 2. களவு. (உவில். சுo.)
[அஹ்யாஹார: அஹி; ஆஹார-எடுப்பது, உண்பது.]

அப்பியாசபூமி — ஞானபாதத்துக்குச்சாதநமாகிய சுவேச்சை, விசாரணை, தநுமாநசியென்னும் நிலைகள். (வேதா. சூ. கசஎ, கசஅ. உரை.) [அஹ்யாஸ—பலகாற்செய்தல். ஹூமி—நிலை.]

அப்பியாசம்—1. (வேதாந்தம்) சடுவிதலிங்கத்திலிரண்டாவது; அது: கூடத்தனே பிரமமென மீட்டும் மீட்டுந் தெளியச்சொல்லுதல். (உ-ம்.) "கூடத்தனே பிரமமென மறித்து மறித்துந் தேறவுரைத்திட லப்பியாசம்" (வேதா. சூ. ககூ.) 2. சமீபம். (உவில். சுo.) 3. தொழில்கொள்ளுகை. (உவில். சுo.) 4. பலகாலுஞ்செய்திருக்கை. (உவில். சுo.) 5. பலகாலுஞ்சொல்லுகை. (உவில். சுo.) (உ-ம்.) "மறுவப்பியாசஞ்செயலுமது" (சூத. ஞாந. கச: கரு.) 6. பலகாலும்அறிந்திருக்கை. (உவில். சுo.) 7. பழக்கம். (பகவற். சு: ருரு.) 8. (கணக்கதிகாரம்) பெருக்கல், (உவில். சுo.) 9. வாய்ப்பாடம் பண்ணுதல். (உவில். சுo.)
[அஹ்யாஸ: அஹி; ஆஸ.]

அப்பியாசயோகம் — கடவுளைக்குறித்துப் பலகாலுஞ் செய்யுந் தியானம். (உவில். சு௦.) [அப்யாஸ—பலகாலுஞ்செய்தல். யோக—கூட்டம். பகவற். அ: ௮.]

அப்பியாசி — 1. அப்பியாசமுடையவன். (உவின். உஅ.) 2. (வேதாந்த) ஐந்ததிகாரிகளில் ஒருவன்; இவன் சமசருமமுதிர்ச்சியால் கனவைப்போல மநத்தோற்றரவே செகமெனக்கருதி இரண்டுசென்மத்திற் சீவன்முத்தனாகுமவன் (உ-ம்.) "உலகங் கனவெனக்கண்டுள்ளநற்கருமஞ்சேர்ந்து பிறப்பிரண்டினிலப்பியாசி" (வேதா. சூ. கசு.)

[அப்யாஸி; பிறப் பிரண்டினில் முத்தனும் என்றுசொல்லியதன் சாரம்: பிரமவஸ்துவைச் சமுசயமற மநநஞ்செய்பவன்—ம்மணிதித்தியாசநம், சமாதி இவ்விரண்டையும் அநுட்டித்துமுத்தியையடையவேண்டும் என்பதே என உரைகாரர்சொன்னார்.]

அப்பியாசித்தல் — அப்பியாசஞ்செய்தல். (உ-ம்.) "நான்குவேதங்களையுங் கலைகளனைத்தையும் அப்பியாசித்து" (ஞானவா. வைராக். கசு. உரை) [மூ. அப்யாஸ.]

அப்பியாதாநம் — தொடக்கம். (உவில். ருக.) [அப்யாதாந: அபி; ஆதாந—எடுத்தல்.]

அப்பியாமர்த்தம் — யுத்தம். (உவில். ருக.) [அப்யாமர்த: அபி; ஆமர்த—மிதித்தல்.]

அப்பியுக்கணம் — 1. நனைத்தல். (உவில். சு௦.) 2. நால்வகைச்சுத்திகளுளொன்று; அது: கவிழ்ந்தபதாகைமுத்திரையையுடையகைத்தலத்தினால் பதார்த்தத்தினிடத்துத்தோன்றியசித்தினது பிரகாசமானது தன்னுடைய தாநத்தைவிட்டு நீங்காமலிருக்கும்பொருட்டு மூடுவது. (உ-ம்) "அருகங்கவசந்தானப்பியுக்கணத்தென் றுரைசெய்வர்" (சைவச. பொது. ௬௫௫.) 3. நீர்தெளித்தல். (உவில். சு௦.)

[அப்யுக்ஷண. அபி; உக்ஷண — நனைத்தல்.]

அப்பியுத்தாநம் — 1. இருக்கையிலிருந்தெழும்புதல். (ஆப். சுஅ.) 2. உயர்தல, மேம்படல். (ஆப். சுஅ.) 3. கீர்த்தி. (உவில்.சு௦.) 4. சித்தியடைதல். (ஆப்.சுஅ.) 5. சூரியோதயம். (உவில். சு௦) 6. வளர்ச்சி, மேலெழுகை. (பகவற். ச; எ.)

[அப்யுத்தாந. அபி, உத்தாந—எழும்புதல்.]

அப்பியுதயம் — 1. (கிரகம்முதலியவைகளின்) உதயம். (உவில். சு௦.) 2. சித்தியடைதல். (உவில். சு௦.) 3. சூரியோதயம். (உவில். சு௦.) 4. திருவிழா. (உவில். சு௦) 5. தொடக்கம். (உவில். சு௦.) 6. நலவாழ்வு. (உவில். சு௦.) 7. வர்த்திப்பு. (உவில். சு௦.)

[அப்யுதய; அபி; உதய—உதித்தல்]

அப்பியுபகமம் — 1. அணித்தாகுகை, போய்ச்சேருகை. (ஆப். சுக.) 2. இசைபு. (உவில். சு௦.) 3. மெய்யென்றொத்துக் கொள்ளுகை. (ஆப். சுக) 4. வாக்குத்தாநம், உடன்பாடு. (உவில். சு௦.)

[அப்யுபகம: அபி; உபகம—போதல்.]

அப்பியுபபத்தி — 1. உடன்பாட்டுப்பொருத்தம். (உவில். சு௦.) 2. உதவிக்குப்போதல். (ஆப். சுக.) 3. தயவு, இரங்குகை. (ஆப். சுக.) 4. தேற்றுகை. (ஆப். சுக.) 5. பாதுகாப்பு. (ஆப். சுக.)

[அப்யுபபத்தி; அபி; உபபத்தி-போதல்.]

அப்பியுபாயநம் — 1. கைக்கூலி. (ஆப். சுக.) 2. புகழ்ந்து கொடுக்கும் உபகாரம். (ஆப். சுக.)

[அப்யுபாயந: அபி; உபாயந—உபகாரம்.]

அப்பியுபாயம் — 1. உடன்பாட்டுப்பொருத்தம். (உவில். சு௦) 2. மிக்க உபாயம். (வாச.)

[அப்யுபாய: அபி; உபாயம்-போவது.]

அப்பியுபேத்தியாசுசிருடை — வேலையைச் செய்வேனென்றொப்புக் கொண்டபின் செய்யாதொழிதல்; இது: ஸ்மிருதிகளிற் சொல்லப்பட்ட பதினெட்டு வியவகார பதங்களுள் ஒன்று. (மிருதிசங். உ.) [அப்யுபேத்யாஸுஶ்ருஷா: அப்யுபேத்ய—உடன்பட்டு. அஸுஶ்ருஷா—வேலைசெய்யாமை.]

அப்பிரககற்பம் — ஒரு வைத்தியநூல்; அது: அப்பிரகத்தைப்பற்றிச் சொல்வது. (அபிதா.)

அப்பிரகசிந்தூரம் — அப்பிரகத்தாற் செய்யப்பட்ட சிந்தூரம். (உவின். உஅ.) [அப்ரக; ஸிந்தூர.]

அப்பிரகத்தகடு — அப்பிரகநவநீதம். (கா. வைத்.)

அப்பிரகநவநீதம் — அப்பிரகஞ்சேர்த்துச் செய்யப்படும் ஒருநெய். (உவின். உஅ.) [அப்ரக - ஒருவகை நிரசவஸ்து. நவநீதம்—வெண்ணெய்.]

அப்பிரகபற்பம் — அப்பிரகத்தைப்பஸ்மமாக்கிச் செய்யப்படும் ஒருமருந்து. (உவின். உஅ) அப்ரக; ஹஸ்தர்—சாம்பர்.]

அப்பிரகபாஷாணம் — விளைவுபாஷாணத்தொன்று. இது இரசப்பிரீதி. (சட்ட. கஅஎ; கா. வைத்) [அப்ரக; பாஷாண.]

அப்பிரகம் — ஒருவகை நிரசவஸ்து; (உவில். சு௦) இது: பொன்னப்பிரகம், வெள்ளியப்பிரகம், தேனப்பிரகம், கிருட்டிணப்பிரகம், கெந்தகாப்பிரகம் என நிறம் பற்றியைவகைப்படும். (உவின். உஅ.) [இவையெல்லாம் நூற்றிருபதுவகை யுலோகங்களிற் சேர்ந்தவைகள். கா. வைத். அப்ரக]

அப்பிரகம்பதை — 1. அசைவின்மை. (உவில். ரு௦) 2. எதிர் சொல்ல ஏலாமை. (உவில். ரு௦) 3. நடுக்கமின்மை. (மா.)

[அப்ரகம்பதா: அ—எதிர்மறை. ப்ரகம்பதா—நடுக்கத்தன்மை.]

அப்பிரகம்பம் — 1. அசைவின்மை. (உவில். ௫௦. 2. எதிர்சொல் ஏலாமை. (உவில். ௫௦. 3. நடுக்கமின்மை. (மா) [அப்ரகம்ப; அ; ப்ரகம்ப—நடுக்கம்.]

அப்பிரகலோகம்—(பௌத்த) பிரமலோகம் இருபதினுள்ளே பன்னிரண்டாவது. (மணிமேக. ௬.)

அப்பிரகாசத்துவம் — பிரகாசமில்லாத தன்மை. (வாசுதே. ௧௪௪.) [அப்ரகாஶத்வ: அ—எதிர்மறை. ப்ரகாஶத்வம்-பிரகாசத்தன்மை.]

அப்பிரகாசம்—1. இருள். (ஆப். ௫௫.) 2. பிரகாசமின்மை. (உ-ம்.) "ஒருகாலத்துப்பிரகாசமொருகாலத்தப்பிரகாசமருவாநிற்குமோசத்து" (சூத. எக்கி. பூ. ௪௭: ௨௭.) 3. பிரசித்தமல்லாதது. (உவில். ௫௦.) 4. மறைவிலிருப்பது. (உவில். ௫௦.) 5. வெளிப்படையல்லாதது. (உவில். ௫௦.) [அப்ரகாஶ: அ—எதிர்மறை. ப்ரகாஶ-ஒளி.]

அப்பிரகிருட்டம் — 1. இழிந்தது. (உவில். ௫௦.) 2. காகம். (உவில். ௫௦.) [அப்ரக்ருஷ்ட: அ—எதிர்மறை. ப்ரக்ருஷ்ட—மேன்மை.]

அப்பிரசந்நம்—1. கலங்கல். (உவில். ௫௧.) 2. திருத்திபெற்றிராமை. (உவில். ௫௧.) 3. பிரியவீனமாயிருத்தல். (உவில். ௫௧.) [அப்ரஸந்ந: அ — எதிர்மறை. ப்ரஸந்ந-தெளிவு, பிரியமானது.]

அப்பிரசம்—1. சந்ததியில்லாதது. (உவில். ௫௦.) 2. சனங்களில்லாதது. (உவில். ௫௦.) [அப்ரஜ: அ—எதிர்மறை. ப்ரஜா—சந்ததி, சனம்.]

அப்பிரசன் — சந்ததியில்லாதவன். (உவில். ௫௦.) [அப்ரஜ: அ; ப்ரஜா—சந்ததி.]

அப்பிரசாதம் — தயவின்மை. (உவில். ௫௧.) [அப்ரஸாத.]

அப்பிரசாதை — மலடி. (உவில். ௫௦.) [அப்ரஜாதா: அ; ப்ரஜாதா— பிள்ளை பெற்றவள்.]

அப்பிரசித்தசம்பந்தம்—பக்கப்போலிநான்கனுள் ஒன்று; அது: "தமக்கு மாறாய்நின்றவன், ஆராய்ந்து துணிந்தபொருளைத் தானும் அவனுக்குப் பொருந்தச் சாதித்துக்கொடுத்தல்" (சி. போ. அளவை. ௧௪. பாண்டிப்.) [அப்ரஸித்தஸம்பந்த.]

அப்பிரசித்தம் — பிரசித்தமின்மை. (மா.) [அப்ரஸித்த.]

அப்பிரசித்தர்—பிரசித்தமாயறியப்படாதவர். (உ-ம்.) "விஞ்ஞானாகலர்பிரளயாகலரறிவின்றி யப்பிரசித்தராதலால்" (சி. சி. ௪: ௪௭. ஞானப்.) [அ; ப்ரஸித்தர்—பிரசித்தமாயறியப்பட்டவர்.]

அப்பிரசித்தவிசேடணம் — பக்கப்போலிநான்கனுள்ஒன்று; அது: "தத்தமக்குமாத்திரஞ் சாத்தியாசாத்தியமாயுள்ள துணிவைத்தாமறியாதிருத்தல்" (சி. போ. அளவை. ௧௪. பாண்டிப்.) [அப்ரஸித்த—பிரசித்தமல்லாதது. விஶேஷண—துணிவு.]

அப்பிரசித்திவிசேடியம் — பக்கப்போலிநான்கனுளொன்று; அது: தம்முடைய எதிரிக்குத்தாங் கூறுந்தன்மைதெரியாதிருத்தல். (சி. போ. அளவை. ௧௪. பாண்டிப்.) [அப்ரஸித்தி விஶேஷ்ய.]

அப்பிரசை—சந்ததியில்லாதவள். (உவில். ௫௦.) [அப்ரஜா: அ-எதிர்மறை. ப்ரஜா—சந்ததி.]

அப்பிரசித்தோபயம்—பக்கப்போலிநான்கனுளொன்று; அது: "தமக்குமாறாயினோர்க்குள்ள தன்மியுஞ்சாதந தன்மமுமாகிய அவ்விரண்டும் மாற்றோரியையாமையால் அவை தெரியாதிருத்தல்" (சி. போ. அளவை. ௧௪. பாண்டிப்.) [அப்ரஸித்தோபய: அப்ரஸித்த — அறியப்படாதது. உபய—இரண்டு.]

அப்பிரத்தியக்ஷம்—இந்திரியங்களுக்குவிடயமாகாதது. (உ-ம்.) "அமூர்த்தமாய் அப்பிரத்தியக்ஷமாய்" (சி. சி. ௪: ௩௦. ஞானப்.) [அப்ரத்யக்ஷ: அ; ப்ரத்யக்ஷ.]

அப்பிரத்தியக்ஷன்—பிரத்தியக்ஷப்படாதவன். (உ-ம்.) "ஒருவன் அப்பிரத்தியக்ஷனைச் சேதனனை" (சி. சி. ௪: ௪.) [அ; ப்ரத்யக்ஷ.]

அப்பிரத்தியயம் — 1. அறிவில்லாமை. (ஆப். ௫௬.) 2. சந்தேகம். (உவில். ௫௭.) 3. நம்பிக்கையின்மை. (உவில் ௫௧.) 4. விகுதியன்மை. (உ-ம். "அதாது" பார்.) 5. விகுதியின்மை. (ஆப். ௫௬.) [அப்ரத்யய: அ—எதிர்மறை. ப்ரத்யய-விகுதி, நிச்சயம், நம்பிக்கை, அறிவு.]

அப்பிரத்தியவாயம் — குறைதலின்மை. (வாசுதே. ௬௫.) [அ—எதிர்மறை. ப்ரத்யவாய—குறைதல். ஆப். ௫௬௦.]

அப்பிரத்துதப்பிரசஞ்சாலங்காரம்—புனைவிலிபுகழ்ச்சியணி; அது: அவர்ணியத்தை வர்ணிக்க அதனது சம்பந்தத்தால் வர்ணியந் தோன்றுதல். (குவல.) [அப்ரஸ்துதப்ரஶம்ஸாலங்காரம்: அப்ரஸ்துத- புகழப்படாதது. ப்ரஶம்ஸா- புகழ்தல். உவில். ௬௦௦.]

அப்பிரத்துதம் — 1. சம்பந்தப்படாதது. (உவில். ௫௧.) 2. தொடங்காதது. (உவில். ௫௧.) 3. புகழப்படாதது. (உவில். ௫௧.) 4. வழக்கமில்லாதது. (உவில். ௫௧.) [அப்ரஸ்துத: அ; ப்ரஸ்துத —புகழ்ச்சி.]

அப்பிரதக்கிணம் — இடப்பக்கத்திலிருந்து வலப்பக்கமாகப் போதல். (ஆப். ௫௬.) [அப்ரதக்ஷிண: அ; ப்ரதக்ஷிணம்—வலம்வருதல்.]

அப்பிரதட்சிணம் — அப்பிரதச்கிணம். (உவின். உஅ.) [அப்ரதக்ஷிண.]

அப்பிரதாநம்—1. கீழானநிலை, சிரேட்டமில்லாதநிலை. (ஆப். ருசு.) 2. தலைமையில் பொருள். (உ-ம்.) "பிரதாநத்தோடப்பிரதாநீ – தலைமைப் பொருளொடு தலைமையில் பொருளே" (பி. வி. கசு. உரைச்சூத்திரம்.) 3. முக்கியமற்றசெயல்.
[அப்ரதாந: அ; ப்ரதாந–தலைமை,முக்கியம். உவில். ருசுஉ.]

அப்பிரதாநி — பிரதாநம் அற்றவன். (மா.) [ப்ரதாநி–பிரதாநமுடையவன்.]

அப்பிரதாநிகம்—கொடாமை. (உ-ம்.) "தத்தாப்பிரதாநிகம்" (மிருதிச. உ.) [அப்ரதாநிக.]

அப்பிரதாபம் —1. எளிமை, மேன்மையின்மை. (உவில். ருO.) 2. விளக்கமின்மை. (உவில். ருO.)
[அப்ரதாப: ப்ரதாப–பிரகாசம்.].

அப்பிரதிகரம்— ஒருநரகம். (சிவதரு. சுவர்க்கநரக. கஉO.)

அப்பிரதிகரன்—பழிவாங்காதவன், வன்மஞ்சாதியாதவன். (உவில். ருO.)
[அ–எதிர்மறை. ப்ரதி–மறுபடி. கர–செய்கிறவன்.]

அப்பிரதிகாரம் — பழிக்குப்பழிவாங்காமை. (உவில். ருO.) 2. பிரதிகாரஞ்செய்யாமை, மாறுசெய்யாமை. (உவில். ருO.)
[அ–எதிர்மறை. ப்ரதிகாரம் – எதிர்ச்செயல்; பகவற். க: சசு.]

அப்பிரதிட்டம் — ஒருநரகம்; இதில் கொடியபாவிகள் யந்திரங்களிலிடப்பட்டு அரைக்கப்படுவர்கள். (அபிதா.)

அப்பிரதிட்டிதை—(தருமசாஸ்திரம்) நிலையான இடமில்லாமற் சஞ்சரிக்கின்ற ஆரணியர், வணிகக்கூட்டத்தார், சேனைக்கூட்டத்தாராகிய மூவரிடத்துச் சபை. (மிருதிச. அ.)

அப்பிரதிபத்தி—1. அசட்டை. (உவில். ருO.) 2. செய்துமுடிக்காமை. (உவில். ருO.) 3. தோல்வித்தாநம் இரண்டனுள் ஒன்று; அஃது: அர்த்தந் தெரியாதது. (சி. சி. அளவை. கச. சிவாக்.) 4. நிச்சயப்படுத்தாமை. (உவில். ருO.)
[அப்ரதிபத்தி: ப்ரதிபத்தி– காரியப்படுத்தல்.]

அப்பிரதிபா — அப்பிரதிபை. (உ-ம்) "அப்பிரதிபாசாக்கிரம்" (சி. சி. ௯: ச. சிவாக்.) [அப்ரதிஹா.]

அப்பிரதிபை— 1. தடுமாறுதல். (உவில். ருO) 2. திகைத்தல். (உவில். ருO) 3. சோற்றுமை. (சி. சி. ௯: ச. சிவாக்.) 4. விடைசொல்லத் தெரியாது வேறொரு கருத்துடையான் போன்றிருத்தலாகிய தோல்வித்தாநம். (சி. சி. அளவை. கச. சிவாச், சிவஞா; தர்க்கபா. அச.)
[அப்ரதிஹா. அ – எதிர்மறை. ப்ரதிஹா–ஒளி.]

அப்பிரதிரதன் — நிகரற்ற யுத்தவீரன். (ஆப். ருசு.) [அப்ரதிரத: அ- எதிர்மறை. பரதி-எதிர். ரத–தேர்.]

அப்பிரதிருபகதை—எதிரில்லாவாக்கு நிகரில்லா வாக்கு. (உவில். ருO.) [அப்ரதிருபகதா: அப்ரதிருப–எதிரின்மை. கதா–பேச்சு.]

அப்பிரதிருபம் — நிகரில்லாதது. (உவில். ருO.) [அப்ரதிருப: ப்ரதிருப–எதிரினம்.]

அப்பிரநாகம்—அயிராவதயானை. (ஆப். சுசு.) [அப்ரநாக: அப்ர–தேவுலகம். நாக–யானை.]

அப்பிரபிசாசகம் — அப்பிரபிசாசம். (உவில் சுO)[அப்ரபிசாசக: அப்ர- ஆகாசம். பிசாசக–பேய்.]

அப்பிரபிசாசம் — இராகு. (உவில். சுO.) [அப்ரபிசாச: அப்ர– ஆகாயம். பிசாச–பேய். சந்திரனைப்பிடித்துத் தீங்குசெய்தலால்.]

அப்பிரபு — வல்லமையில்லாதவன. (ஆப். ருசு; சி–லி. ஞாநபாத. ரு. சுலோ.) [அப்ரபு.]

அப்பிரபுட்பம் — 1. ஆகாயப்பூ, இல்பொருள். (ஆப். சுசு) 2. நீர். (ஆப். சுசு.) 3. மழை. (உவில். சுO.)
[அப்ரபுஷ்ப: அப்ர –மேகம். புஷ்ப–பூ.]

அப்பிரம்—1. அப்பிரகம். (உவில். சுO.) 2. ஆகாயம். (உவில். சுO.) 3. (கணக்சதி) சுன். (ஆப். சுசு.) 4. தேவலோகம். (சி.) 5 பொன். (உவில். சுO.) 6. மேகம். (உ-ம்.) "மேகநண்ணுநீர் பொழிதலாலப்பிரமெனுநாமஞ்சாரும்" (மச்சபு. சூரியரத. சஎ.)
[அப்ர:]

அப்பிரம்லிகம் — 1. மிக உயர்ந்தது. (வென். சச.) 2. மேகத்தைத்தொடுவது. (வென். சச.) 3. வாயு. (வென். சச.)
[அப்ரம்லிஹ: அப்ரம் – மேகம். லிஹ–நக்குதல்.]

அப்பிரமாணம் — 1. அளக்கப்படாதது. (ஆப். ருசு.) 2. எல்லைக்குட்படாதது. (ஆப். ருசு.) 3. பிரமாணமல்லாதது. (உ-ம்.) "சாத்திரவசநமப்பிரமாணமாய் விடும்" (விசாரசா. ருசு.)
[அப்ரமாண: ப்ரமாண–அளவை.]

அப்பிரமாணன் — கடவுள். (உவின். உஅ.) [அப்ரமாண: பிரமாணங்களை யின்றியறிகிறவன்.]

அப்பிரமாணுபலோகம்—(பௌத்த) பிரமலோகம் இருபதனுள் ஐந்தாவது. (மணிமேக. ௯.)

அப்பிரமாணிக்கம் — 1. ஒவ்வாநியாயம். (சி.) 2. பிரமாணிக்கத்தகாதது. (சி.)

அப்பிரமாணிக்கன்—பொய்யன். (சி.)

அப்பிரமாதங்கம் — இந்திரனயானை.

(ஆப். சுக.) [அஜ்ஞாதங்ம: அஜ—மேகம். ஞாதங்ம—யானை.]

அப்பிரமாதம்—சாக்கிரதை. (வாச.) (உ-ம்.) "புத்திநற்போதமப்பிரமாத முமளித்தாள்" (கூர்மபு. தமோ. சo.) [அப்ரமாத: அ—எதிர்மறை. ப்ரமாத—அவதானமின்மை.]

அப்பிரமாலை — மேகசமூகம், மேகநிரை. (வாச.) [அப்ரமாலா: அப்ர—மேகம். மாலா—வரிசை.]

அப்பிரமு—ஐராவதயானையின் பெண்யானை. (வாச.) [அப்ரமு.]

அப்பிரமுப்பிரியம் — ஐராவத யானை. (உவில். சுக.) [அப்ரமுப்ரிய: அப்ரமு—ஒருபெண்யானை. ப்ரிய—நட்பு.]

அப்பிரமேயம்— 1. எல்லைப்படாதது. (ஆப். ருசு.) 2. ஒரெண்; அது: தசம காபூரி. (சி.) 3. பிரமம். (ஆப். ருசு.) 4. பிரமாணத்தினு லறியப்படாதது. (ஆப். ருசு.) [அப்ரமேய: அ; ப்ரமேய—அளக்கப்பட்டது.]

அப்பிரமேயன் — 1. கடவுள். (ஆப். ருசு.) 2. சிவன். (உ-ம்.) "புகழ்கொளப்பிர மேயன்" (சூத. எக்கி. பூ. ருரு: சு.) 3. பிரமாணங்களாலறியப் படாதவன். (உ-ம்.) அத்துவாமூர்த்தியாகியப்பிரமேயனுகி" (சூத. ஞாந. கக: சஅ.) [அப்ரமேய: அ; ப்ரமேய:—அளக்கப்பட்டவன்.]

அப்பிராமை—பொய்யறிவு. (ஆப். ருசு.) [அ—எதிர்மறை. ப்ரமா—மெய்யறிவு.]

அப்பிரயோச்சியம்— 1. ஏவப்படாதது. 2. பிரயோகிக்கப்படாதது. [அ—எதிர்மறை. ப்ரயோச்ய— ஏவப்படுவது, பிரயோகிக்கப்படுவது. ஆப். ருசுக.]

அப்பிரயோசநம்-பிரயோசநமின்மை. (உ-ம்.) "அநிர்வசநீயமாயப்பிரயோசநமாய்" (சி. சி. சு: ரு. ஞானப்.) [அப்ரயோஜந: அ; ப்ரயோஜந.]

அப்பிரவர்த்தகம் — 1. செய்யஏவாமை. (உவில். ருக) 2. செயலின்மை. (உவில். ருக.) [அப்ரவர்த்தக: அ—எதிர்மறை. ப்ரவர்த்தக—எழுப்புதல், ஏவுதல்.]

அப்பிரவர்த்தநம் — 1. ஏற்படாமை. (உவில். ருக.) 2. சம்பவியாமை. 3. செய்ய ஏவாமை. (உவில். ருக.) 4. செய்யாதொழிதல். (உவில். ருக.) 5. துராசாரம். 6. தொடங்காமை. 7. முன்போகாமை. [அப்ரவர்த்தந: அ; ப்ரவர்த்தந- (ஆப். ருஎ०) சம்பவித்தல், ஆசாரம், தொடக்கம், போதல்.]

அப்பிரவிருத்தன் — பிரவிருத்தியற்றவன். (மா.) [அப்ரவ்ருத்த- அ-எதிர்மறை. ப்ரவ்ருத்த - தொழில், செய்கை]

அப்பிரவிருத்தி—1. செயலொழிந்திருக்கை. (உவில். ருக.) 2. முயற்சியின்மை. (உவில். ருக.) (உ-ம்.) "ஆன்மாவிற்சிவத்துவம் அப்போதப்பிரவிருத்திருபவாபிவியத்தியெனுஞ் சத்திரூபமாயிருந்து" (சி. சி. எ: உ. ஞானப்.) [அப்ரவ்ருத்தி: அ—எதிர்மறை. ப்ரவ்ருத்தி—செயல், முயற்சி.]

அப்பிராகிருதசரீரம்— பிரகிருதிசம்பந்தமில்லாதசரீரம். (உவின். உஅ.) (உ-ம்.) "தேவமநுஷ்யாதிரூபங்களாய் அப்பிராகிருதசரீரத்துடன் அவதரிக்கிறேன்" (பகவற். சு; சு. உரை.)

அப்பிராகிருதம் —1. பாகதமல்லாதது. (உவில். ருக.) 2. பிரகிருதி சம்பந்தமில்லாதது. (உ-ம்.) "அப்பிராகிருத லோகம் நித்தியம்" (சி. சி. உ: எஉ. சிவாக்.) 3. விசேடமானது. (உவில். ருக.) [அப்ராக்ருத: அ—எதிர்மறை. ப்ராக்ருத-பொது, கோடியபேச்சு.]

அப்பிராஜ்ஞன் — 1. அறிவில்லாதவன். (உவில். ருக.) 2. கற்றுக்கொள்ளாதவன். (உவில். ருக.) [அப்ராஜ்ஞ: அ—எதிர்மறை. ப்ராஜ்ஞ—அறிவுடையவன்.]

அப்பிராஜ்ஞதை — 1. அறிவின்மை. (உவில். ருக.) 2. கற்றுக்கொள்ளாமை. (உவில். ருக.) [அப்ராஜ்ஞதா: அ; ப்ராஜ்ஞதா—அறிவோன்றன்மை.]

அப்பிராணம் — சுவாசமின்மை. (சி.) [அ; ப்ராணம்—சுவாசம்.]

அப்பிராணன்—உயிரில்லாப்பொருள். (உவில். ருக.) [அப்ராண: அ; ப்ராண:—சீவன்.]

அப்பிராணி—உயிரில்லாதது. (உவில். ருக.) 2. தீங்கில்லாதவன். (உவின். உஅ.)

அப்பிராத்தகாலம் — 1. (தர்க்க) நிக்கிரகத்தானங்களுளொன்று; அது: பிரதிஞ்ஞைமுதலிய ஐந்து அவயவங்களையும் முறை பிறழப் பிரயோகித்தல். (உ-ம்.) "அப்பிராத்தகாலமாவது—வாதம்பண்ணுமிடத்து வாதியானவன்பஞ்சாவயவங்களை யடைவின் மாறிப்பிரயோகித்தலெனவறிக" (சி. சி. அளவை. கச. மறை.) 2. பிராத்தகாலமல்லாதது. (ஆப். ருஎ.) [அப்ராப்தகால: அ; ப்ராப்தகால—அடைந்தகாலமுடையது.]

அப்பிராத்தம் — 1. அடையாதது. (ஆப். ருஎ.) 2. வராதது. (ஆப். ருஎ.) 3. விதிப்படிவராதது. (ஆப். ருஎ.) (உ-ம்.) "ஏத்துமப்பிராத்தப் பிராத்தியபேதமெனில்" (சூத. எக்கி. பூ. ருஅ. கசு.) [அப்ராப்த: அ; ப்ராப்த — அடைந்தது.]

அப்பிராந்தி — 1. தடுமாற்றமின்மை. (உவில். சுக.) 2. மெய்யுணர்வு. (உவில். சுக.) [அப்ராந்தி: ப்ராந்தி-மயக்கஉணர்வு.]

அப்பிராப்பியம் — அடையத்தகாதது. (உ-ம்.) "அப்பிராப்பியமென்றுரை

க்கினம்மூத்திக்கமைந்தசாதநந் தழுவுதலென்–ஞெப்பவாதலினல்" (சூத. எக்கி. பூ. ௯அ: கரு.)

அப்பிராமணன்—பிராமணனல்லாதவன். 2. பிராமணனைப்போன்றும் பிராமண னல்லாதவன். (பி. வி. உக. உரை.) [அ-அன்மை, ஒப்புமையுள்ளிட்ட அன்மை.]

அப்பிராமாணிக்கம் — அப்பிரமாணிக்கம். (சி.)

அப்பிராமாணியம் — பிரமாணத்தாலே நிச்சயம் பண்ணப்படாதது. (உ-ம்.) "பவுதிகாசாரியர்பவுதிகர்க்குத்திகைஷ பண்ணக் கடவர்களென்னும் வசநம் நிஷ்பலமாய் அப்பிராமாண்ணியத்தாநமாய்ப்போகாதோ" (சி.சி. அ: ரு. ஞாநப்.) "இதரமார்க்கங்களுக்குமப்பிராமாணிய மெடுத்தியம்பல் கூடாது" (சூத. எக்கி.பூ. உஉ: க௬.) [உவில். ருஉ. அப்ராமாண்ய; அ-எதிர்மறை. ப்ராமாண்ய -பிரமாணஞ் செய்யத் தக்கது.]

அப்பிரியதரு — ஒதியமரம். (கா. வைத்.)

அப்பிரியம் — 1. மேகசம்பந்தமானது. (உவில். சுக.) [அஹ்ரியம்: அஹ்ர-மேகம்.] 2. வெறுப்பு. (உ-ம்.) "நேர்ந்தெனக்கப்பிரியத்தையாற்றினே" (நல்.பார. இந்திர.எஎ) [அப்ரிய: ப்ரிய-இட்டமுடையது.]

அப்பிரியன் — சத்துரு. (உவில். ருஉ.) [அப்ரிய: ப்ரிய–நண்பன்.]

அப்பிரீதி — 1. சிநேகமின்மை. (உவில். ருஉ.) 2. பகைமை. (உவில். ருஉ.) 3. வெறுப்பு. (உவில். ருஉ.) [அப்ரீதி: ப்ரீதி–விருப்பு.]

அப்பிருதக்கு — 1. உடனாய், வெவ்வேறன்றி. (உவில். சக.) 2. கூட்டமாய். (உவில். சக.) [அப்ருதக்: ப்ருதக்–வேறு.]

அப்பிரேரகசாதநம் — தன்னையேவுவோனில்லாத கருவி; அது. பறவைக்குச் சிறையுங் காலும்போல்வது. (மணிமே. உசு௦.) [அ; ப்ரேரக–ஏவுவோன். ஸாதநம்–கருவி.]

அப்பிரகம்—புளிமா. (கா. வைத்.)

அப்பு — 1. அப்பென்னேவலுந் தெரிநிலைவினைப் பகுதியும் பெயரெச்சத்தொகையும். 2. அம்பு. (உ-ம்.) "வில்லுமிழப்பொடு" (கந்தபு. இரண். சூரபன். ௬க.) [அம்பு என்பதன் விகாரம்.] 3. கடல். (உவின். உஅ.) 4. கடன். (உவின். உஅ. தெலுங்கு.) 5. தந்தை. (மா.) 6. நீர்; இதுகுளிர்ந்து பிறபொருள்களைநெகிழச்செய்யும். (சிவப். கட். அ.) (உ-ம்) "துப்பாயினதாய்த்துவரத்தகைசே-ரப்பாயுவரற்றழிவில்பொருளின்வைப்பாய்" (கந்தபு. காளிந் சு.) 7. முப்பத்தாறுதத்துவங்களுளொன்று. அது சிற்றண்டத்திலே பிருதிவிபூதத்திற்கும் அக்கினிபூதத்திற்கும் இடையிலிருக்கும் ஓர் அசாதாரண பூதமாயப் பிறைவடிவமுடையதாய் வெண்ணிறமுடையதாய்த் தாமரைப்பூவாகிய அடையாளமுடையதாய் இருக்கும் என்றும் (சி. சி. உ; க௬–ம் கஎ–ம் கஅ–ம் உரைகளும்) பேரண்டத்திலே தூலபூதபிருதிவிதத்துவத்துக்கப்பால் தசகுணமதிகமாக ஆவரித்திருக்குமென்றுஞ்சொல்வர். (வி–ணி. உஎக) 8. பாதிரிமரம். (உவின். உஅ.) 9. பூராடநாள். 10. பூராடமுகூர்த்தம். (விதாந. குணகுண. எ௬. உரை.)

அப்புத்திரட்டி — கட்டுக்கொடிப் பூண்டு. (மலைய.)

அப்புதத்துவம் — முப்பத்தாறுதத்துவங்களுளொன்று ("தத்துவம்"பார்)

அப்புதல் — 1. அறைதல். (சி.) 2. ஒற்றுதல். (உ-ம்.) இருவரும்புயங்களினப்பிமொத்தினர்" (பாரத. பதினே. கசஎ.) 3. கும்முதல். (சி.) 4. கொட்டுதல். (சி.) 5. கௌவல். (சி.) 6. சாத்துதல். (சி.) 7. பூசுதல். (உ-ம்.) "அரைபடு மகிலுஞ்சாந்துமப்பி" (திருவிளை. நாட். க௬.)

அப்புது — யானையைப்பாகன் அதட்டும் ஓசைகளுள் ஒன்று. (உ-ம்) "அங்கையைந்தலத்தினலப்புதாதை யென" (சிந்தா. கநஎ. உஎஅ.)

அப்புபூதவாதிமதம்—அப்பு என்னும் பூதமே பிரமம் என்பவனுடைய மதம். (த, நி. போ. உஅ௦.)

அப்புருவம் — 1. உப்பு. (மா.) 2. நவசாரம். (மா.)

அப்புலிங்கத்தலம் — திருவானைக்கா என்னுஞ் சிவத்தலம். இத்தலத்தில் இருக்கிறகோயிலிலேமூலத்தாநத்திலே சல மூறிக்கொண்டிருப்பதை அப்பாகார சிவலிங்கமென்பர். (தணிகை.முகவுரை.)

அப்புவின்கோபம் — சேத்துமம். (மா.)

அப்புளண்டம்—தகரை. (கா. வைத்.)

அப்புறப்படல்-குறித்த ஓரிடத்துக் கப்பாற்போதல். (உவின். உஅ.)

அப்புறப்படுத்தல் — இடமாற்றுதல். (சி.)

அப்புறம்—அப்பக்கம், மற்றைப்பக்கம். (உ–ம்.) "அப்புறவுலகினுள்ளாரறிந்திடயானே சென்று செப்புவனென்பான்போல" (கந்தபு. தேவகி. ௬.) 2. அதன்பின். (உவின். உஅ.)

அப்பூதி—அப்பூதியடிகள். (உ-ம்.) "இலைமலிந்தவேனம்பியப்பூதி"

அப்பூதியடிகள் — அறுபத்து மூன்று நாயன்மார்களுளொருவர். (பெரியபு. திருநா. உ௦க.)

அப்பை — 1. அப்பைக்கொவ்வை. (கா. வைத்.) 2. கற்கொவ்வை. (கா. வைத்) 3. கொன்றைமரம். (உவின். உஅ.)

அப்பைக்காய்—கொவ்வங்காய். (உ-ம்.) "அப்பைக்காய்நெய்துவட்டலாக்

கினுள்'' (தனிப்பா.)

அப்பைக்கோவை—ஒருவகைக் கோவைக்கொடி. (பதார்த்.)

அப்பொழுது — அந்தவேளை. (உ-ம்.) ''அப்பொழுதிலாரமுத வாழியிடை'' (கந்தபு. அடிமுடி. உசு.) 2. அப்படியிருக்க. (உவின். உஅ.) [அ-அந்த. பொழுது-காலம்.]

அப்பொழுதை — அப்பொழுது. (உ-ம்.) ''அப்பொழுதைத்தாமரைப்பு'' (நாலாயிர.)

அப்போது — அக்காலம்.

அப்போதைக்கப்போது — ஒன்று வேண்டியதாகக் கண்டவுடனே. (உ-ம்.) ''அஞ்சல் அஞ்சலென்றடிமைக் கப்போதைக்கப்போதேநெஞ்சிலுணர்த்துநிறைவேபராபரமே'' (தாயு. பரா. ௨௨௪.)

அப்ரத்துதபிரசஞ்சாலங்காரம்—புனைவிலிபுகழ்ச்சியணி. (குவல். உஅ.) [அப்ரஸ்துத - புனையாமை. ப்ரஸம்ஸா-புகழ்தல்.]

அப்ரத்துதம்—1. தொடங்காமை. (உவில். ருச.) 2. புனையாமை. (உவில். ருக.) 3. வழக்கமின்மை. (உவில். ருக.) [அப்ரஸ்துத. அ - எதிர்மறை. ப்ரஸ்துத-புகழப்பட்டது.]

அப்ரமாணம்—அப்பிரமாணம். (ஆப். ருசு.) (உ-ம்.) ''ஐதிகம் அப்ரமாணமெனவும், ப்ரமாணமெனவும் இருவிதயாம்'' (சி. சி. அளவை. க. மறை.)

அப — அபாவம், இயற்கையல்லாமை, இழத்தல், எதிர்மறை, தவறு, நீக்கம் எனப் பொருள்படும் ஒருபசர்க்கம். (வென். ௬௧.) [அவ.]

அபக்கியாதி—1. அபகீர்த்தி. (உவின். உச.) 2. நிந்தை. (உவின். உச.) [அவ்யாதி: அவ-எதிர்மறை. வ்யாதி-புகழ்.]

அபக்கிரமம்—1. கிரமமின்மை. (ஆப். சஎ.) 2. தோற்றோடுதல். (ஆப். சஎ.) 3. போதல். (ஆப். சஎ.) 4. விலகியோடுதல். (ஆப். சஎ.) [அவ-இயற்கையல்லாமை. க்ரம-அடிவைத்தல்.]

அபக்கிரியை—அகாலத்துச் செயல். (வென். ௬௧.) 2. தவறுனசெயல். (வென். ௬௧) 3. தீச்செயல். (உவில். சரு.) [அவ க்ரியா: அவ; க்ரியா - செயல்.]

அபக்ரோசம் — ஏசிப்பேசுதல். (வென். ௬௧.) [அவக்ரோஶ: அவ-எதிர். க்ரோஶ-உரத்துப் பேசுதல்.]

அபக்குவம் — 1. சீர்ணமாகாதது. (வென். சகள.) 2. பக்குவமின்மை. (மா.) 3. பாகம்பண்ணப் படாதது. (வென். சகள.) 4. பூரணப்படாதது. (வென். சகள.) 5. முதிராதது. (வென். சகள.) [அபக்வம்: அ-எதிர்மறை. பக்வம்-முதிர்ந்தது.]

அபக்குவர்—பக்குவரல்லாதவர். (உ-ம்.) ''அபக்குவர்க்கோவர்நலந்தான் விளங்கும்'' (தாயு. நினை. அ.) [அ-எதிர்மறை. பக்குவர்-பக்குவமுடையவர்.]

அபக்குவி—பக்குவமில்லாதவன். (உ-ம்.) ''அபக்குவியாகிய என்னிலையைப்பெற்ற'' (தாயு. எங்கு. எ. உரை.) [அபக்வ-பக்குவமின்மை. இ-ஒருவிகுதி.]

அபகடம்—அவகடம். (உ-ம்.) ''அபகடநினைவிகள்'' (திருப்பு. உசஉ.) [அவகடம். உவில். எஎ.]

அபகதம்—அவயவம். (ஆப். சஎ) [அவவா: அவ; வா-கோப்படுத்தல்]

அபகமம் — 1. புறப்பட்டுப்போதல். (ஆப். சஎ.) 2. மரணம். (உவில்.சரு)

3. மறைந்துபோதல். (ஆப். சஎ.) அவமஜ: அவ-நீக்கம். மஜ-போதல்]

அபகர்டசமை — (தர்க்கம்) அசத்தான உத்தரசாதியில் ஒருவகை; அது அவ்வியாத்தமான திட்டாந்த தருமத்தால் அவ்வியாபகமான தருமத்தின தபாவத்தைப் பொருளுக்கு வருவித்தல். (உ-ம்.)''சத்தம் அநித்தியம், காரியத்துவத்தால், கடம்போல', என்றுசொல்லுதற்கண் ஒருவன் இங்ஙனஞ் சொல்லாநின்றுன் காரியத்துவ ஏதுவாற் கடம்போலச் சத்தம் அநித்தியமாயின்; அந்த ஏதுவாற் கடம்போலச் சத்தமுஞ் செவியாற்கவரப்படாததாகவேண்டும்.கடஞ்செவியினுற் கவர்வதன்றே என (தர்க்கபா. ச.) [அபகர்ஷஸமா]

அபகர்த்தா — அகற்றுவோன். (வென். ௬ச.) 2. அபகரிப்போன். (வென் ௬ச.) 3. கள்ளன். (வென். ௬ச.) [அவஹர்த்ரு]

அபகரணம் — 1. அபகரித்தல். (வென். ௬ச.) 2. களவுசெய்தல். (வென். ௬ச)3. தவறுசெய்தல்.(உவில். சரு.) [அவ-தவறு. ஹரணம்-எடுத்தல். கரண-செய்தல்.]

அபகரித்தல் —1. எடுத்துக் கொண்டுபோதல். 2. கவர்தல். (உ-ம்.) ''என்மயமெனக்குக்காட்டாதெனையபகரிக்கவந்தசின்மயம்'' (தாயு. ஆசை.௬௬.) 3. வஞ்சனையாய்க்கவர்தல். (உ-ம்.) ''குதிரைகளையும் வேகத்தையுடைய யானைகளுடன் அபகரிக்கச் சென்றார்கள். (கந்தபு. திக்கு.௬ரு. உரை.)

[மூ. அவஹார.]

அபகருடசமை—அபகர்டசமை. (தர். பா. அச.) [அவகர்ஷஸமா.]

அபகருமம் — 1. இடுக்கண்செய்தல். (உவில். சரு.) 2. கடனிறுத்தல். (ஆப். சரு.) 3. தகாத செயல். (ஆப் சரு.) 4. துர்க்கருமம். (உவில். சரு.

5. பொல்லாங்கு. (உவில். சரு.) [அவகர்ஜ்ர: அவ–தவறு. கர்ஜ்ர–செயல்.]

அபகளங்கம் — தீராவசை. (உவில். சரு.) [அபகளங்க.]

அபகாசம்—வீண்சிரிப்பு. (வாச.) [அவஹாஸ: அப–தவறு. ஹாஸ–சிரிப்பு.]

அபகாதம் — 1. அடித்தல். (உவில். சரு.) 2. கொல்லல். (உவில். சரு.) 3. வெட்டல். (உவில். சரு) [அபவாத: அப–கேடு. வாத–அடித்தல்.]

அபகாரகன் — கள்ளன். (வென். ருடு.) [அபஹாரக: அப:–தவறு. ஹாரக:–கவர்வோன்.]

அபகாரம்—1. களவுசெய்தல். (உவில். சஎ.) 2. கொடுங்கோன்மை. (உவில். சரு.) 3. பகைமை. (உவில். சரு.) 4. பிறருடைமையை நியாயமின்றி எடுத்துச்செலவிடல் (உவில். சஎ) 5. மறைத்துவைத்தல். (உவில். சஎ.) 6. தீயசெயல். (உ–ம்.) "அவநிசெரர்க்கபகாரமெத்தனை புரிவான்" (நல். பாரத. அரசநீ. கடுக.) [1, 4, 5. அவஹார: அவ –தவறு. ஹார–எடுத்தல். 2, 3, 6. அபகார: அப–தவறு. கார–செயல்.]

அபகாரி — அபகாரஞ்செய்வோன். (வாச.) [அபகாரிந்.]

அபகிருதி — 1. இடுக்கண்செய்கை. (உவில். சரு.) 2. தீர்ச்செய்கை. (உவில். சரு.) 3. பகைமை. (உவில். சரு.) [அவக்ருதி: அப–தவறு. க்ருதி– செயல்.]

அபகீர்த்தி-1. தூர்க்கீர்த்தி. (உவில். சரு.) 2. நிந்தை. (உவில். சரு) (உ–ம்.) "நாம்பகைவர்களையடக்காமல் வாழுதல் அபகீர்த்திக்கிடம்" (கந்தபு. சூரனமை. ருக. உரை.) [அபகீர்த்தி: அப–தவறு. கீர்த்தி. புகழ்.]

அபங்கம் — 1. கோளக பாஷாணம். (கா. வைத்.) 2. பங்கமின்மை. [அபங்க.]

அபங்கன் — நாசமில்லாதவன், பங்கமில்லாதவன். (உ–ம்.) "மங்கையுமைபங்குறை யபங்க" (சேதுபு. சருவ. உ0.) [அ–இன்மை. பங்க – பங்கமுடையவன்.]

அபச்சாயை—1. சாயையில்லாதது. (உவில். சச.) 2. தள்ளுபடியானசாயை. (மா.) 3. தீமையைக்குறிக்குஞ்சாயை, பிசாசின்தோற்றம். (உவில். சச.) [அபச்சாயா: அப–கேடு. சாயா–நிழல்.]

அபச்சுமாரம்—1. சாக்காய்வலி. (வென். ருச.) 2. பைத்தியம். (வென். ருச.) [அவஸ்மார: அவ–நீக்கம். ஸ்மார–நினைப்பு.]

அபசகுனம் — துன்னிமித்தம். (ஆப். டுக.) [அவசகுன. அப–தவறு. சகுனம்–நினைப்பு.]

அபசங்கம்—அச்சப்பட்டாமை. (வென். ருச.) [அவசங்க: சங்க–பயம்.]

அபசத்தம்—1. அமங்கலமொழி. (உ–ம்.) "சுசத்தவபசத்தசொரூடமாய்" (சூத. எக்கி. ச; சஅ.) 2. வழுமொழி. (உவில். சஎ.) 3. வீண்பேச்சு. (உவின். உடு) [அவசப்த: அப–தவறு. சப்த–சொல்லு.]

அபசதர் — 1. அநுலோமராகியகீழ்ச்சாதியார். (மநு. க0: க0.) 2. கீழ்மக்கள். (உவில். ருஎ.) [அபஸத: அவகீழ். ஸத–இருப்பவன்.]

அபசதன்—1. அநுலோமனுகிய கீழ்ச்சாதியான். (வென். ருச.) 2. கீழ்மகன். (வென். ருச.) [அபஸத.]

அபசயப்படல் — தோல்வியடைதல். (உவின். உடு)

அபசயம்—1. குறைவு, தேய்வு. (பி. வி. சச.) [அவசய.] 2. சித்தியடையாமை. (ஆப். சஎ.) [அவஜய.] 3. தோல்வி. (உ–ம்.) "அசுரசேனைகளுறுபுரத்தொடுமபசயந்துன்ற" (மச்சபு. திரிபுர. உ.) [அபஜய.]

அபசரணம்—1. பின்னிடுகை. (வென். ருச.) 2. புறப்படுதல். (உவில். சஎ.) [அவஸரண: அவ; ஸரண - போதல்.]

அபசாரம் — 1. ஒருபொருளை ஓரிடத்துநின்றுமபிறிதோரிடத்திற் சகற்றுதல். (உவில். சஎ.) 2. சீக்கிரகதி. (மா) [அவஸர.]

அபசரிதம்—1. தூர்ச்சரிதம். (உவின். உடு) 2. துராசாரம். (உவின். உடு)

அபசருச்சநம்—1. கைவிடுதல். (உவில். சஎ.) 2. சொல்லுதல். (உவில். சஎ.) 3. நன்கொடை. (உவில். சஎ.) 4. பிறவிநீங்குதல். (உவில். சஎ.) [அபஸர்ஜந: அப–தவறு. ஸர்ஜநம் – விடுதல்.]

அபசவ்வியம்–1. தர்ச்சநிக்கும் அங்குட்டத்திற்கும் நடு. (மா.) 2. வலப்பக்கம். (உ–ம்.) "நலத்தசவ்வியமேயபசவ்வியமாமம்" (வேதார. பிரதக். கரு.) [அவஸவ்ய: அவ–நீக்கம். ஸவ்ய–இடப்பக்கம்.]

அபசாரம்—1. உபசாரமின்மை. (உவில். சரு) 2. குறைவு. (உவில். சரு) 3. துராசாரம். (உ–ம்.) "அத்தகையபசாரந்தானன்னவன்செய்தும்" (மச்சபு. சந்திரோ. கஎ.) 4. பத்தியபாகங் கவனியாமை. (உவில். சரு.) 5. புறப்படுதல். (உவில். சஎ.) 6. போகும்வாயில். (உவில். சஎ.) 7. போதல். (உவில். சஎ.) 8. மரணம். (உவில்.

சரு.)
[1, 2, 3, 4, 8. அவசார. 5, 6, 7. அவஸார.]

அபசாரி — 1. ஒழுக்கந் தவறினவள். (ஆப். சஎ.) 2. ஒழுக்கந்தவறினவன். (ஆப். சஎ.) 3. பொல்லாதவள். (ஆப். சஎ.) 4. பொல்லாதவன். (ஆப். சஎ.)
[அபசாரிந்.]

அபசித்தாந்தம்—தன் சித்தாந்தத்திற் கிணங்காதன வற்றைச் சொல்லிச் சித்தாந்தஞ் சாதித்தல். (சி. சி. அளவை. கச சிவஞா.) சித்தாந்தத்தின் கேடு; அது. நிக்கிரகத்தானத்துளொன்று. (தர்க்கபா. அுசு.) [அப — தவறு. சித்தாந்தம்—முடிந்தமுடிபு.]

அபசிதம்—1. குறைக்கப்பட்டது. (உவில். சரு.) 2. பொருட்செலவுசெய்யப்பட்டது. (உவில். சரு.) 3. வாழ்த்தப்பட்டது. (உவில். சரு.)
[அபசித.]

அபசுமாரம்—1 காக்காய்வலி. (உவில். சஎ.) 2. புத்தி பின் தெளிவு நீங்குதல். [சீவரட். உசo.)
[அப; ஸ்மாரம்.]

அபசுமாரரோகம்—புத்தியின் தெளிவை நீக்கும் ஒருவகைரோகம். (சீவரட். உசo.) [அபஸ்மார-பைத்தியம். ரோற—நோய்.]

அபசெயம்—தோல்வி. (ஆப். சஎ.) [அபஜய.]

அபசேதா — அதிகமாக வீண்செலவு செய்வோன். (உவில். சச.) [அபசேதா: அப — எதிர். சேதா—அழிப்போன்.]

அபஞ்சீகிருதபூதம்—தன் மாத்திரை. (நா. சீ. சு.) [அபஞ்சீக்ருதபூதம்.]

அபஞ்சீகிருதம்—ஐந்தாகப் பகுக்கப்படாதது. (உ-ம்.) "ஆயவபஞ்சீகிருத சுக்கும வாகாயமும்" (சுத. எக். உ த். சு: க,)

அபட்கை—பாம்பின் நச்சுப்பல்லினொன்று. (உவின். உசு.)

அபட்சணம் — உபவாசம். (உவில். ருசு.) [அபக்ஷண: அ—எதிர்மறை. பக்ஷண—உணவு.]

அபட்சதை — பட்சமில்லாத தன்மை, பகைமை. (உவில். சரு.) [அபக்ஷதா: அ—எதிர்மறை. பக்ஷதா—விருப்புடைமை.]

அபட்சம்—வெறுப்பு. (உவில். சரு.) [அபக்ஷ: அ-எதிர்மறை. பக்ஷ—விருப்பு.]

அபட்சியம்—உண்ணத்தகாதது. (உ-ம்.) "அபட்சிய பட்சணப்பிராயச்சித்தம்" (மநு. கக: கசகு.) [அபக்ஷ்ய: அ-எதிர்மறை. பக்ஷ்ய—உண்ணத்தக்கது.]

அபட்டம் — யானைத்தோட்டியின் நுனி. (உவில். சஎ) [அபஷ்ட: அப; ஷ்டோ—சுற்றுதல்.]

அபட்டமம்—யானைத்தோட்டியின் நுனி. (உவில். சஎ.) [அபஷ்டம.]

அபடி — திரைச்சீலை. (வென். ருஉ.) [அபடி.]

அபடு—1. சாமாத்தியமின்மை. (உவில். சச.) 2. நோய்ப்பட்டது. (உவில். சச.)
[அபடு: அ; படு—சாமர்த்தியம்.]

அபடுகரணம்—ஊனப்பட்ட இந்திரியம். (உவில். சச.) [அபடுகரண: அபடு—வன்மையின்மை. கரண—இந்திரியம்.]

அபத்நசந்தம்—1. உணவில்விருப்பின்மை. (உவில். ருசு.) 2. பசியின்மை. (உவில். ருசு.)
[அறுக்தச்ச்ந்த: அ-எதிர்மறை. றுக்த-போசனம். ச்சந்த—சார்பு.]

அபத்தம்—1. கட்டப்படாதது. (உவில். ருஉ.) 2. தவறு. (சி) 3. பயனில் சொல். (உவில். ருஉ) 4. பொய். (சி) 5. மோசம். (சி.)
[அபத்த: அ-எதிர்மறை. பத்த—கட்டுப்பட்டு.]

அபத்தன்—பத்தியில்லாதவன். (பௌட். பசு. சசுஇ.) [அறுக்த: அ; றுக்த—பத்தியடையவன்.]

அபத்தி-1. பத்தியின்மை. (உவில். ருசு) [அறுக்தி. அ; றுக்தி- விசுவாசம்]2. பயனிலகூறுகிறவன். உ-ம்.) "வாய்வித்தார மூரைக்குமபத்திகள்" (திருப்பு. சoஉ.) [அறுர்த்—பயனில்லாதது. உவில். ருஉ. இ—ஒருவிகுதி.]

அபத்தியசத்துரு — நண்டு. (உவில். சச.) [அபத்யமூத்ரு: அபத்ய—பிள்ளை. மூத்ரு—விரோதி.]

அபத்தியதை—மருத்துவிச்சி (உவில். சச., [அபத்யதா: அபத்ய—பிள்ளை. தா—கொடுப்பவள்]

அபத்தியதோஷம்— தருணசுரத்தில் வரும் ஏழுவகைத் தோஷங்களிலொன்று. (சீவரட். ருo)

அபத்தியபதம்—யோநி. (உவில். சச.) [அபத்யபத; அபத்ய-பிள்ளை. பத—வழி.]

அபத்தியம் — 1. பத்தியந்தவறுதல. (உ-ம்.) "இச்சையுடனிச்சைபிறரிச்சையெனுமிவற்றாலிபம்பலூறுபிராரத்தமூன்றுவகைப்படுமா-லச்சுரர்களானும் விலச்குதற்சரியவாகுமபத்தியஞ்செய்திடறணக்கே கேட்டனவிங்கதிர்தும" (வேதா. சூ. சoரு.) 2. பிள்ளை. (ஆப். சஅ.)
[அபத்ய.]

அபத்தியவிக்கிரயி — 1. தன்மகட்கொண்டானிடம் பரிசம்வாங்கும் பிதா. (உவில. சச.) 2. பிள்ளையை விற்பவன். (உவில், சச.)
[அபத்யவிக்ரயி: அபத்ய-பிள்ளை. விசஎ

க்ரயி-விற்போன்.]

அபத்தியாநம்—1. அவமதிப்பு. (வெ ன். கூஉ.) 2. கெட்டசிந்தனைகள். (ஆ ப். சஅ) [அபத்யாநா: அப—தவறு. த்யாந-எண்ணம்,]

அபத்திரபம் — 1. வெட்கக்கேடு. (உவி ல். சஅ.) 2. வெட்கப்படுகை. (உவில். சச) [அபத்ரப. அப; த்ரப-வெட்கம்.]

அபத்திரபை—1. வெட்கக்கேடு. (உவி ல். சச) 2. வெட்கப்படுகை. (வென். கூஉ.) [அபத்ரபா. அப; த்ரபா- வெட்கம்.]

அபத்திரவியம்—1. அசுத்தபதார்த்த ம். (வென். சஉஉ.) 2. கலப்பினுற் கெட்டபதார்த்தம (உவில். சச.) [அபத்ரவ்ய: அப - கேடு. த்ரவ்ய - பொருள்.]

அபதந்திரகவாதம் — ஒருவகைவாத ரோகம்; அது: ஊர்த்துவகாயத்திலி ருந்து அதோகாயத்தை மரத்தலடை யச் செய்தும், அதோகாயத்திலிருந் து ஊர்த்துவ காயத்தை மரத்தல டையச் செய்தும், மிகுந்த உபத்தி ரவத்தை விளைப்பதும், அங்கத்தை விற்போலவளைத்து வருத்தமுற நெ ட்டுயிர்ப்பையெழுப்புவதுமான ஒரு நோய். (சீவரட். கசுக.)

அபதம்—மாதீத் பூரண நின்மல சிவ ம். (உ-ம்.) "புரையாருஞ்சத்தமே ப தமாதீத பூரண நின்மல சிவமே ய பதமெனப்படுமால்" (சூத. எக்கி.பூ. ச: கக.) [அபத]

அபதர்ப்பணம் — 1. திருப்தியில்லா மை. (ஆப். சஎ.) 2. நோயுற்றழிப்ப சிபொறுத்தல். (ஆப். சஎ.) [அபதர்ப்பண:அப—எதிர். தர்ப்பண—திருப்தி.]

அபதாந்தரம் — அடுத்தது, உடன். (வென். ருகூ.) [அபதாந்தர: அ—எ திர்மறை. பத-கால். அந்தர- இடை]

அபதாநகம் — ஒருவகைவாதநோய்; அது: அபதந்திரகவாதம். (ஆப். சஅ.) 2. சுத்தமான ஒழுக்கம். (ஆப். சஅ.) 3. நன்குமுற்றுப்பெற்றதொழில். (ஆ ப். சஅ.) 4. மேன்மையானதொழில். (ஆப். சஅ.) [1. அபதாநக: அப; தாந-பரவுதல். சகல நரம்புகளிலும் பரவுதலால் வ ந்தபெயர். 2, 3, 4. அபதாநக.]

அபதாநம்— 1. நன்குமுற்றுப்பெற்ற தொழில். உவில். சச) 2 வியந்து கொள்ளப்பட்ட தொழில் (உவில். சச) [அபதாந]

அபதூறு—1. கொள்ளை. (உவின். உகூ.) 2. துர்க்கீர்த்தி. (உவின். உகூ.)

அபதேசம் — 1. இலக்கு. (உவில். சச.) 2. உபாயம். (உவில். சச.) 3. கீர்த்தி. (உவில். சச.) 4. திக்கு, இட ம். (உவில். சச.) 5. பிறர்பொருட்ட நுமாநத்தில் ஐந்தவயவங்களுளொ ன்றாகிய ஏது. (ஆப். சஅ.) 6. புரளி, வாய்ப்புரட்டு- (உவில். சச.) 7. பெ யர்சொல்லிப்பொருளைத் தெரிவித்த ல். (ஆப். சஅ.) 8. மறுத்தல். (ஆப். சஅ.) 9. வஞ்சம். (ஆப் சஅ) 10. வீ ண்சாட்டு. (ஆப். சஅ.) 11. வேஷ ந்தரித்தல். (உவில். சச.) [அபதேசம: அப—கேடு. தேசம-காண் பிப்பது.]

அபதேவதை—பைசாசம். (உவில். சச.) [அபதேவதா; அப—கேடு. தே வதா—தெய்வம்.]

அபந்தலம்—செங்கத்தாரி. (கா. வை த்.)

அபநயம்—1. அகற்றல். (உவில். சச.) 2. அழித்தல். (உவில். சச.) 3. கட னிறுத்தல். (உவில். சச.) 4. பிணிதீ ர்த்தல். (ஆப். கூஅ.) 5. மரணம். (உ வில். சச-) [அபநய: அப-நீக்கம். நய-கொண் டுபோதல்.]

அபநீதம் — அகற்றப்பட்டது. (உவில். சச.) 2. இறுத்துத்தீர்ந்தது. (உவில் சச.) 3. எடுக்கப்பட்டது. (உவில். சச.) [அபநீத: அப-நீக்கம். நீத—எடுக்கப்ப ட்டது.]

அபநுத்தி — அகற்றுதல், துரத்துதல். (உவில். சச.) [அபநுத்தி:அப; நுத- அனுப்புதல்.]

அபநோதநம்—போக்குதல். (சப்த.) [அபநோதந: அப—மூன். நுத-அனுப் புதல்.]

அபநோதம்—1. நீக்குகை. (உவின். உகூ.) 2. பிராயச்சித்தம். (உவின். உகூ.) [அப; நுத.]

அபப்பிரசாதை—வயிற்றிற் சரு அழி யப்பெற்றவள். (வென். கஉஉ.) [அ பப்ரஜாதா: அப—கேடு. ப்ரஜாதா—பி ள்ளைப்பெற்றவள்.]

அபப்பிரஞ்சம் — பாமரசாதிகளானஇ ழிசகர் மொழி. (இலக்கணவிள. கசுரு.) [அபப்ரம்ஸ: அப—கேடு. ப்ரம்ஸ—வழுவுதல்.]

அபமம்—கீழ்க்கதி; அது: சூரியன் தக் கிணாயநத்திலாவது உத்தராயணத்தி லாவது இறங்குதல்போல்வது. (உவி ன். உகூ.) [அபம; அப-கீழ் ம—அளத் தல்]

அபமரணம்—துன்மரணம். (மா.) [அ ப—கேடு. மரணம்—சாவு.]

அபமாநம் — மாநகேடு. (வென். கூக.) [அபமாந]

அபமார்க்கம்—1. ஒருபக்கத்தாற்போ கும் வழி. (வென். கூக.) 2. கெட் டவழி. (ஆப். சக.) 3. சுத்தி செய்தல். (வென். கூக.) 3. துன்மார் க்கம. (மா.) 4. புன்சமயம். (மா.) [அபமார்க]

அபமார்க்கி—செந்நாயுருவி. (உ -ம்.)

"சங்கெட்கோதபமார்க்கி மூன்றுஞ் சுட்டசாம்பரிடை" (ஸ்தல. தைலவ. கசஅ.)

அபமிருத்தியு—1. சடிதிமரணம். (உவில். சஞ.) 2. நோய்முதலிய காரணமில்லாத மரணம். (உவில். சரு.) [அபம்ருத்யு: அப-இயற்கையல்லாமை. ம்ருத்யு-மரணம்.]

அபமிருத்து—அபமரணம். (மா.) [அபம்ருத்யு.]

அபயக்கை—அபயகரம். (உ-ம்.) "வரதமொடபயக்கைகண் முறைமையினேங்க" (தாயு. தேன்முக. ஞ.)

அபயகத்தம்—அபயகரம். [அபயஹஸ்த.]

அபயகரம்—(மா.) ஒருவன்பயப்படாதிருக்கும் படிக்கான கருத்தைக்குறிப்பிக்குங் கைகாட்டு. [அபயம்-பயமின்மை. கரம்-கை.]

அபயகுலசேகரன்—அபயகுலசேகர சோழ மகாராசா. (திருமுறைகண். க.)

அபயங்கரம்—பயங்கரமின்மை. (ஆப் ருஅ.) [அபயங்கர: அ; பயங்கர.]

அபயங்கொடுத்தல்—பயப்படாதிருக்கும்படி யொருவரைத்திடஞ்செய்தல். (உவின். உசு.)

அபயசம்—அர்க்கீர்த்தி. (உவில்.சரு.) [அபயஶஸ்;அப-தவறு. யஶஸ்-புகழ்.]

அபயதன்—அபயங்கொடுக்கிறவன், அச்சம் அகற்றுகிறவன். (உவில். ருரு.) [அபயத: த:-கொடுக்கிறவன்.]

அபயதானம்—அபயங்கொடுத்தல். (உவில். ருரு.) [அபய-பயமின்மை.தான-கொடுத்தல்.]

அபயப்பிரதானம்—அபயங்கொடுத்தல். (உவில். ருரு.) (உ-ம்.) "சக்கிரபாணிதேவர்க்கபயப்பிரதானவாறும்" (மச்சபு. அநுக்கிர. ருஎ.) [அபயப்ரதாந: அபய-பயமின்மை. ப்ரதாந கொடை.]

அபயம்—1. அச்சம் நீங்கியிருத்தற்குச் சரண்புகல், அடைக்கலம். (உ-ம்.) "அவநிபரெலா மப்யமபயமென்றடி வணங்கவே" (பாரத. இராச. சச.) 2. அச்சமின்மை. (உ-ம்.) "விசயை கண்ணபயம்வைததான்" (சிந். முத். ருகரு.) 3. ஒருவகைவாசனைப்புல். (வென். சுசரு.) 4. ஓலம், முறையிடுதல். (உவின். உசு) 5. பயந்தீர்க்குங் கரம். (மதுரைப்பதிற்று. காப்பு. குறிப்பு.) [அபய: அ; பய]

அபயமிடல்—அடைக்கலம் புகுதல், முறையிடுதல். (உ-ம்.) "அபயமிடுகுரலறியாயோ" (திருப்பு. கஅ0)

அபயமிடுதல்—அபயமிடல். (சி.)

அபயர்—1. சோழர். (உ-ம்.) "சமரிற்பிறகிடுமுதியரு மபயருமெதிரிட்டமராட" (மீனாட்சியம்மைபி. சப்பாணி. எ.) 2. போர்வீரர். (உவின். உசு)

அபயலை—இலாமிச்சம்வேர். (உ-ம். "அமிர்ணை" பார்.) (தைல. தைலவ, ருச.)

அபயவத்தம்—1. அபயகரம். (உ-ம்) "வரதாபயவத்தங்கள்" (சூத. எக்கி. பூ. கூ: ச.) 2. இணைக்கை பதினைந்து வகையுளொன்று, அது: இருகையுஞ் சுகதுண்டமாக நெஞ்சுறநோக்கிநெகிழ்ந்து நிற்பது. (உ-ம்.) "அபயவத்தம்மேயறிவுறக்கிளப்பின்- வஞ்சமில்சுகதுண்டமிருகையுமாட்சியி-னெஞ்சுறநோக்கிநிற்பதுவே" (சிலப். அரங்கே. கஅ உரை.) [அபய; ஹஸ்த.]

அபயவாக்கு—அஞ்சாதே யென்னுஞ் சொல். (உவில். ருரு.) [அபயவாக் அபய-பயமின்மை. வாக்-சொல்.]

அபயன்—1. அச்சமறுப்போன். (சி.) 2. அருகக்கடவுள். (திவாகர.) 3. ஒருவகைக்கடுக்காய். (உ-ம்.) "அபயனென்னுங் கடுக்காயங்க ணோயெல்லாமபயமிட்டோடவடிக்கும்" (பதார்த். க0ருஉ, சப்த.) 4. கடவுள். (செ.) 5. சோழன். (செ.) 6. துரியோதநன் றம்பிமாருளொருவன். (பாரத. எட்டாம். சு.) 7. பயமில்லாதவன். (உ-ம்.) "செய்யகோலபயன்" (பெரியபு. திருமலை. சஉ.) 8. வீரன். (செ.) [அபய. பய-அச்சமுடையவன்]

அபரகாத்திரம்—1. கால், பின்கால். (உ-ம்.) "தடாம்பிறை மருப்புத்திண்கை யபரகாத்திரங்கடம்மால்" (சிந். காந்தரு. ருகச.) [அபர; காத்ர]

அபரசத்திதத்துவம்—அபரவிந்து. (உ-ம்) "நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியதீதை யென்கின்ற பஞ்சகலா கர்ப்ப சத்தரூப அர்த்தரூப சத்திகலைகளும், அர்த்தரூப மாத்திர சத்திகலா புவநங்களும், அபரசத்தி தத்துவமென்கின்ற அபரவிந்துவாக வறியப்படும்" (சி. சி. உ: எச. ஞாநப்.) [அபர; ஶக்தி; தத்வ]

அபரசன்—பின்பிறந்தோன். (மா.) [அபரஜ: அபர-பின். ஜ:-பிறந்தோன்.]

அபரசாமாநியம்—அற்ப விடயங்களினுளதாகிய சாமாநியத்தன்மை. திரவியத்துவமுதலியன போல. (தர்க்க பா. சுச.)

அபரசிவதத்துவம்—அபரநாதம். (உ-ம்.) "பிரமரந்திரத்துக்குள் இந்திகை, தீபிகை, ரோசிகை, ஊர்த்துவகையென்கின்ற பஞ்சகலாகர்ப்பசத்தரூப அர்த்தரூப சிவகலைகளும், அர்த்தரூபமாத்திரசிவகலா புவநங்களும், அபரசிவதத்துவமென்கின்ற நாத நாதாந்த அபரநாதமாக அறியப்படும்" (சி. சி. உ: எச. ஞாநப்.) [அபர; ஶிவ; தத்வ]

அபரஞ்சி—புடமிட்டபொன். (உ-ம்.) "ஆயிரத்தெட்டு மாற்றினபரஞ்சியத

ஞற்செய்த" (மச்சபு. தாரகா. உகூ.) [தெலுங்கு.]

அபரஞாநம் — கீழ்ப்பட்டஞானம்; அது: சாத்திரங்கற்றலால்வரும்ஞானம். (ஒழிவி. கிரியை. கக.) 2. காமிகமுதலிய திவ்வியாகமங்கள். (திருவிளை. வரகுண. சகூ. உரை.) [அபர; ஜ்ஞாந.]

அபரத்துவம்—இடத்தாலாவதுகாலத்தலாவது பின்னாகநிற்குந்தன்மை. (தர்க்கபா. ருஅ) [அபரத்வம்: அபர-பின். த்வம்—தன்மை.]

அபரதி — ஒழிகை, நிவிர்த்தி. (உவில். சச.) [அபரதி: அப-நீக்கம். ரதி-இன்பம்.]

அபரநாதகலைகள் — இந்திகை, தீபிகை. ரோசிகை, மோசிகை, ஊர்த்துவசாமிநி யென்னும் ஐந்துகலைகள். (சதாசிவ. கக.)

அபரநாதம் — 1. அபரசிவதத்துவம். (சி. சி. உ: எச: ஞாநப்.) 2. எதிரொலி. (மா.) 3. (மகாமாயையென்னுங் குண்டலநீ)சத்தியினது முதல்க்ஷோபத்தாலுண்டாகும் தவநி ரூபமான நாதம். (சி-லி. ஞாந. கஉ. தாற்.) [அபர; நாத-]

அபரப்பிரணவம்—சத்தப்பிரணவம். (உ-ம்.) "மருவபரப்பிரணவமென்பதுமாயாசொருபமாய் வயங்குசத்த-வுருவமேயிம்மநுவினாற்சிவதத்துவவுண்மைஞாநமென்னும்- பொருவில்பிரகரு—முண்டாகிப்புதியமகத்துவமெய்பொலிசிவர்க்குத் – திருவமுறவுறுதலிற்பிரணவமெனமொழிவரிதைத்தெளிந்தோர்யாரும்" (சூத. எக்கி. பூ. ரு: கூ.) இதுவே "உம்பர்நாயகன் திருவாக்கிற்- பிரணவமுதித்ததனிடைவேதம் பிறந்தன" என்று திருவிளையாடற்புராணத்திற் ககூ: கூ, ச.) கூறியதூஉமென்க.) [அபரப்ரணவ]

அபரப்பிரமம்—சகுணப்பிரமம். (விசார. உ0அ.) [அபர, ப்ரஹ்மந்]

அபரபக்கம் — பௌர்ணமைக்குப்பின்வரும் பதினைந்து திதிகொண்ட பக்கம். (உ-ம்.) "அடரிருளபரபக்கமதனும்" (இரகு. மாலையீ. கூகூ.) [அபரபக்ஷ: அபர-பின். பக்ஷ.]

அபரபட்சம் — 1. அபரபக்கம். (உவின். உகூ.) 2. பதினைந்துநாளெனப் பொருள்படும் ஒருகுறிப்பு மொழி. (உ-ம்.) "அபரபட்சஞ்சாலிவைத்தெடுத்தாடு" (தைல. தைலவ. கூச.) [அபரபட்சம் பதினைந்துநாட்கொண்டதென்பதுபற்றி வந்தகுறிப்பு.]

அபரபதி—ஆணவமலம் நீங்கி யிடைக்காலத்திலே பதித்தன்மையடைந்த ஆன்மா. (உ-ம்.) "மலம் நீங்கியதிகாரமலமாத்திரர்களாய் அபரபதிகளாய்க் கடந்துபோனவர்" (சி. சி. க: உடு. ஞாநப்.) [அபர; பதி]

அபரபுத்தி—1.கீழ்ப்போகங்களையநுபவித்தல். (உ-ம்.) "சரீரார்த்தத்திற்றோனேவரும் பராபரபுத்தி யபரபுத்தி போகவாஞ்சை மாத்திரத்தினாலேயும்" (சி. சி. அ: ரு.ஞாநப்.) 2. பின்புத்தி. (உவின். எகூச.) [அபர; புத்தி]

அபரபோகம்— கீழ்ப்பட்டபோகாநுபவம்; அது: அசுத்தமாயாகாரிய மாகிய புவநங்களிலிருக்கும் அமரேசராதியான உருத்திரர்கள் புசித்திருக்கும்போகம். (சி. சி. அ: உகூ. மறை.) [அபர; போக]

அபரம்—1. உருத்திரருக்குபதேசித்த விஜயம் முதலிய பதினெண் ஆகமம். (சி-லி. சரி. க.) 2. எதிர்காலம். (ஆப். சகூ.) 3. ஒப்பற்றது. (ஆப். சகூ.) 4. கப்பலின் பிற்பக்கம். (உவின். உகூ.) 5. கவசம். (பிங். ககூ0அ) 6. (காலத்தாலாவது, இடத்தாலாவது வரும்) பின். (தர்க்கபா. ருஅ) 7. சகளம். (சி. சி. க: ருரு. மறை.) 8. நரகம், (பிங்க. கூ0கூச.) 9. பிணக்கு. (சூ. நிகண். கூ: கூகூ.) 10. பிந்தினது, அடுத்துப்பின்வருவது. (ஆப். சகூ.) 11. பிற்பக்கம். (பிங்க. கூ0கூச.) 12. பொய். (பிங்க. கூ0கூச.) 13. மற்றையது. (ஆப். சகூ.) 14. முதுகு. (பிங்க. ச0உகூ.) 15. மேற்குத்திசை. (சப்த.) 16. யானைப்பின்கால். (ஆப். சகூ.) [அபர.]

அபரமந்திரேசுவரர் — சிறீகண்டர். வீரபத்திரர்முதலிய அபரமுத்தசிவன்கள்; இவர்கள் பிரளயாகலருட் பரிபக்குவ மலர்களாய்ச் சிவாநுக்கிரகம்பெற்றுப் பதிபதார்த்தங்களாவர்கள். (உ-ம்.) "பிரளயாகலருட் பரிபக்குவமலர்கள்சிவாநுக்கிரகம் பெற்றுப் பதிபதார்த்தங்களாய் ஆதிமுத்தசிவன்களாயும் சிறீகண்டர் வீரபத்திரர்முதலிய அபர மந்திரேசுவரர்கள் புவநவாசிகள் என்னும் அபரமுத்த சிவன்களாயும போயிருப்பார்கள்" (சி. சி. அ: உ. ஞாநப்.) [அபர; மந்த்ர; ஈஶ்வர.]

அபரமுத்தசிவன் — அபரமுத்தியடைந்து சிவதத்துவம் பெற்றிருக்கும் ஆன்மா. (சி. சி. அளவை. ரு.) "அநுசதாசிவர், அநந்தாதிகள்,மந்திரர்கள், ஸ்ரீகண்டர், வீரபத்திரர் முதலிய அபரமந்திரேசுவரர் என்பவர்களும், இன்னுஞ் சிவாநுக்கிரகம்பெற்று நாநாபத முத்தராயிருக்கிறவர்களும் அபரமுத்தசிவன்கள் எனப்படுவர். (சி. சி. அ: உ. ஞாநப்.) [அபரமுக்தஶிவ] கீழ். முக்தி-விடுதலை]

அபரமுத்தி—சுத்த மாயா புவநத்தையடைந்திருத்தல்; அது: பதமுத்தி. (சி. சி. பாயிர. உ. ஞாநப்.) [அபர-

அபரர் — கீழ்ப்பட்டவர். (உ-ம்.) "அபரராயுள்ள அநந்தேசுவராராத்தியதிகாரபுருஷரெல்லாம்" (சி. சி. க: க. சிவாக்.) [அபர]

அபரராத்திரம் — இராத்திரியின் பிற்சாமம். (உவில். சரு.) [அபரராத்ர: அபர-பின். ராத்ர-இராத்திரி.]

அபரலோகம்—1.கீழ்ப்பட்டலோகம். (மா.) 2. மற்ற உலகம். (ஆப் சகூ)

[அபர-ஜீம், வருகாலம். லோக.]

அபரவயசு—முதிர்ந்தவயது. (உவின். உசு.) [அபர-பின்; வயஸ்.]

அபரவாக்கியம்—பிரதான வாக்கியத்திற்குப் பின்வரும் வாக்கியம். (உவின். உசு) [அபர—பின். வாக்ய-சொற்றொடர்]

அபரவாகீசுவரர்—பரவாகீசுவரரல்லாதவர், அபரமாகிய வாக்குக்கதிபர். (உ-ம்.) "அநர்தேசுவரர்த்துவாரத்திலே மாயோபாதி புவனோபாதிமணந்து, அபரவாகீசுவரிஅபரவாகீசுவரர்களாயும்" (சி. சி. உ; எஎ. ஞாநப்.) [அபரவாகீஸ்வர.]

அபரவாக்கீசுவரி — பரவாகீசுவரியல்லாத சக்தி, அபரமானவாக்குக் கதிபதியானவள். (உ-ம். "அபரவாகீசுவரா" பார்.) (சி. சி. உ: எஎ. ஞாநப்.) [அபரவாகீஸ்வரீ.]

அபரவித்தை — வேதாங்கம் முதலியன. (உ-ம்.) "வேதவேதாங்காதிகளபரவித்தை பரமார்த்தத்துக்குப் போதகமா முபநிடதம் பரவித்தை" (சூத. எக்கி- உத். எ: ட.) [அபர; வித்யா]

அபரவிந்து — 1. அநதிக்கிராந்த விந்துகட்ராசத்தி; இது அநதிக்கிராந்த விந்துகபரசிவம் என்னும் அபரநாதத்தாற் றோற்றுவிக்கப்பட்டது. (சி. சி. உ: எஎ. ஞாநப்.) 2. அபரசத்தித்தத்துவம்; அர்த்தசந்திரன், நிரோதி யென்னுமிரண்டும் இதிலடங்கும். (சி.சி.உ: எசு. ஞாநப்) 3. மூலோபாதாரமான குண்டலியினின்றுண்டான குணாத்மகங்கள் மூன்றிலொன்று. "அபரவிந்து, மோகினி, மகான் என்பவைகளே மூன்றுகுணாத்மகங்களாம்" (சி. சி. க: ருஎ. சிவாக்.) 4. மகாமாயை யென்னுங் குண்டலினீ சத்தியின் இரண்டாவது சோபத்தாலுண்டாகுஞ் சங்கற்பரூபமான விந்து. (சி-வி. ஞாந. கஉ. தாற்.) [அபரவிந்து]

அபரவிந்துகலை — நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியதீதை யென்னும் பஞ்சகலைகள். (உ-ம்.) "மூந்துரைநிவிர்த்திமுதலிய வபரவிந்துகலையென விளம்பியவைந்தே" (சதாசிவ. கூஅ.) [அபரவிந்துகலா]

அபரன்—தாழ்வுடையோன். (சைவப். உகூ; ஆப். சுக.) [அ—எதிர்மறை. பரன்—உயர்ச்சியுடையவன்.]

அபராங்கம் — சரீரத்தின் பிற்பாகம். (உ-ம்.) "வேடனதபராங்கம்பிளக்கவெய்தான்" (பாரத. அருச்சு. தவ. கூ0.) [அபர—பின். அங்க—சரீரம்.]

அபராசிதன்—1. சிவன். (உவில். சடு.) 2. முநிவன். (உவில். சடு.) 3. விட்டுணு. (உவில். சடு.) 4. வெல்லப்படாதவன். (பகவற். ச: சஅ; உவில். சடு.)
[அபராஜித: அ; பராஜித: வெல்லப்பட்டவன்.]

அபராசிதை —விசயதசமியில் வணங்கப்படுந் துர்க்கை. (ஆப். ரு0.) [அபராஜிதா.]

அபராண்ணம் — மத்தியானத்தை யடுத்துப் பின்வரும் ஆறுநாழிகைகொண்டநேரம். (உ-ம்.) "நிரைத்தபின்முகூர்த்த மூன்றை நிகழபராணமென்ப" (மச்சபு. சூரியசந்திர. ஙஎ; சபத.) [அபராஹ்ண: அபர—பின். அஹ்ந—நாள்]

அபராத்தர்—பின்னுள ஆப்தர். (சைவப். உக.) [அபர—பின். ஆப்தர்—உள்ளது கூறுவோர்.]

அபராத்தன் — 1. தவறுசெய்கிறவன். (உவில். சடு.) 2. தீங்குசெய்கிறவன். (உவில். சடு.) 3. பின்னுள ஆப்தன். (சைவப். உக.)
[1, 2. அபராத்: அப—கேடு, ராத்—செய்தல். 3. அபராப்த; அபர, ஆப்த.]

அபராதம் — 1. கட்டளையைமீறுதல். (உவில். சடு.) 2. குற்றமானசெயல், பாபச்செயல். (உ-ம்.) "அடியனேன் முன்னஞ் செய்தவபராதமிரண்டுந் தீரும் படிபொறுத்தருள்வாயென்று" (திருவிளை.கக.உரு) "வசையபராதமாயவுவரோதநீங்கும்" (தேவார. நாரை, ரு.சம்)3. தண்டம் (உவின். உசு.)
[அபராத: அப-கேடு. ராத—நிறைவேற்றல்.]

அபராதர் — கட்டளையை மீறுவோர். (உ-ம்.) "அரையனும் வேறேயபராதர்வேறே-யவர்பலமும் வேறென்றறி" (சி. சி. பர. மாயா. மறு. சo. உரை.) [அபராத: உவில். சடு.]

அபராதி—தீங்குசெய்கிறவன். (உ-ம்.) "உறவினுக் கபராதியும்" (சிவதரு. பாவ. சுஅ.) [அபராதிந்.]

அபராந்தம் — மேற்குக்கடற்கரையிலுள்ள தேசம். (ஆப். சுக.) [அபராந்த: அபர—மேற்கு. அந்த—முடிவு.]

அபராந்தர் — மேற்குக்கடற்கரையிலிருக்கிறவர். (உ-ம்.) "வாசத்தண்டொடையல்வாகு வாளபராந்தர்" (இரகு. திக்கு. கசஎ.)

அபராந்நம்— மத்தியானத்தையடுத்துப் பின்வரும் ஆறுநாழிகைகொண்டநேரம் (உ-ம்) "செப்புங்காலங்-தவ்வலில் பிராதக் காலஞ் சங்கம மத்தியாந்நமவ்வபராந்நஞ்சாயாந்ந மொன்றுக் காருங் கன்னல்" (மச்சபு. தீர்த்தசிரா. கக.) [அபராஹ்ண: அபர—பின். அஹ்ந—நாள்.]

அபரிகாரம்—விலக்காமை. (உ-ம்) "சொல்லுகிறவர்களுக்கு அபரிகாரமாக இடிவிழுவதுபோலச் சங்கையும்வரும்" (வாசுதே. கசச; வென். நுசு.) [அபரிஹார; அ—எதிர்மறை. பரிஹார—விலக்குதல்.]

அபரிச்சதம்—உடையின்மை. (உவில். சடு.) [அபரிச்சத: அ; பரிச்சத—மூடுகை.]

அபரிச்சிந்நத்துவம் — 1. கண்டஞ் செய்யப்படாத தன்மை 2. தேசத்தா

ஹுங், காலத்தாலும், வஸ்துவாலும். எல்லைப்படாமை. (வாசுதே. கசஎ.) [அபரிச்சிந்நம்: அ — எதிர்மறை. பரிச்சிந்நம்— எல்லைப்படுந்தன்மை.]

அபரிச்சிந்நம் — கண்டஞ்செய்யப்படாமை. (சி. சி. பாயிர. உ.) [அபரிச்சிந்ந: அ; பரிச்சிந்ந-எல்லைப்படுத்தல்]

அபரிச்சேதம் — 1. எல்லைப்படாமை, கண்டிக்கப்படாமை. (உ-ம்) "அசுத்தமாயாகாலத்தினு லபரிச்சேதமாகையால்" (சி. சி. க: சுசு. சிவாச்.) 2. ஒழுங்கின்மை. (உவில். சடு.) 3. பிரிவின்மை. (உவில். சடு.) [அபரிச்சேத: அ; பரிச்சேத-எல்லைப்படுத்தல்.]

அபரிசதுட்டரோகம் — ஒருவகைக்குட்டரோகம்; அது: சர்வாங்கத்திலுங் கறுத்தரத்தம் வடிதல், நோவு, தொடப்படக்கூடாமை, வீக்கம், வெடிப்பு முதலிய குணங்களுடையது. (சீவரட். கருஉ.)

அபரிசாம் — அடுக்க இராதது, தூரம். (உவில். சசு.) [அபரிஸர: அ; பரிஸர-சமீபம்.]

அபரிட்காரம்—சீர்கேடு, திருத்தமின்மை. (உவில். சசு.) [அபரிஷ்கார: அ; பரிஷ்கார-திருத்தம்.]

அபரிட்சயம் - நாசமின்மை. (பௌட். பசு. கடு.) [அபரிக்ஷய: அ; பரிக்ஷய-நாசம்.]

அபரிணயநம் -இல்வாழ்க்கைப்படாதிருத்தல். (உவில். சடு.) [அபரிணயந: அ-எதிர்மறை. பரிணயந— விவாகம்.]

அபரிணீதை — விவாகஞ்செய்யாதவள். (உவில். சடு.) [அபரிணீதா; அ; பரிணீதா-விவாகஞ்செய்தவள்.]

அபரிதம் — அளவில்லாதது. (உ-ம்.) "அங்கவெங்கணையபரித மிசைமிசைதரந்து" (கந்தபு. முதனு. உஉச.) ["அபரிமிதம்" என்பதன் விகாரம்.]

அபரிபக்குவமலர்—விட்டுநீங்கப் பக்குவமாகாத ஆணவ மலத்தையுடைய ஆன்மாக்கள். (உ-ம்.) "விஞ்ஞானகலருள் அபரிபக்குவ மலர்கள் மாயைக்குமேற் சுத்த வித்தைக்குக் கீழ் ஆணவமலமொன்றுமே யுடையவராய்ப் பசுபதார்த்தங்களாய் இருப்பார்கள் என்றும், பிரளயாகலருள் அபரிபக்குவமலர் சிருட்டிகாலத்திற் சகலராவார்கள் என்றுஞ், சகலருக்குள் அபரிபக்குவமலர் சஞ்சாரிகளாயிருப்பார்கள் என்றுஞ் சொல்வார்கள்" சி. சி. அ: உ. ஞாநப்)

அபரிபாடி — கிரமமின்மை. (உவில். சடு) [அபரிபாடி: அ; பரிபாடி-கிரமம்.]

அபரிபூதம் — கனியாதது, பூரணப்படாதது, முதிராதது. (உவில். சசு.) [அபரிஹூத: அ; பரிஹூத — பூரணமானது.]

அபரிமாணம் — அளக்கக்கூடாதது, அளவுபடாதது. (உவில். சசு.) [அபரிமாண: அ; பரிமாணம்—அளவு.]

அபரிமிதம் — 1. அளவுபடாதது, எல்லைப்படாதது. (உ-ம்.) "அபரிமிதமசொலாக வுரைசெய்தே" (பாரத. பதின்மூ. சடு.) 2. பெருமை. (உவின். உசு.) [அபரிமித: அ; பரிமித — எல்லைப்பட்டது.]

அபரியந்தம் — எல்லையற்றது. (உவின். உசு.) [அ; பர்ய்யந்த—எல்லை. உவில். ருசுசு.]

அபரியாத்தம்—வல்லமையற்றது. (பகவற். க: கo.) [அபரியாப்தம்: அ; பரியாப்தம்—வல்லமையுடையது.]

அபரியாத்தி — பூரணமில்லாமை. (ஆப். ருo.) [அபர்யாப்தி; அ;பர்யாப்தி-பூரணம்.]

அபரியாயம் — கிரமமின்மை. (உவில். சசு.) [அபர்ய்யாய: அ; பர்ய்யாய — கிரமம்.]

அபரிபாத்திரம் — தசவித பாத்திரங்களிலொன்று. (வி—ணி. உஉஉ.)

அபரூபம் — அவலட்சணரூபம். (உவில். சசு.) [அபரூப: அப-கேடு. ரூப-வடிவு.]

அபரை — 1. சிவசத்தி மூன்றனுள் ஒன்று; இதுவும் பிராமி, வைஷ்ணவி, ரௌத்திரியென மூன்றுவிதப்படும். இவற்றுள் பிராமி நூறுகோடியோசனை விசாலங்கொண்ட இரத்தமண்டலத்திலே சகல லோகங்களையுஞ்சிருட்டித்தல் காரணமாகவும், வைஷ்ணவி யிரண்டுகோடி யோசனை விசாலங்கொண்ட சுவேத மண்டலத்திலே சகல லோகங்களை இரட்சித்தல்காரணமாகவும் ரௌத்திரி மூன்றுகோடி யோசனை விசாலங்கொண்ட விந்துமண்டலத்திலே சங்கரித்தல்காரணமாகவும் இருப்பார்கள் என்பர். (சைவச. பொது. எசு. உரை.) 2. சிவதன்மிணி தீக்ஷையிரண்டனுள் ஒன்று; அது: பவுதிகிதீக்ஷை. (சி. சி. அ: ரு. ஞாநப.)

அபரோட்சஞாநம் — 1. (வேதாந்த.) சீவாவத்தை யேழனுள் ஒன்று; அது: குருகடாட்சத்தினுற் பரோட்சமாய்க் கேட்கப்பட்ட பிரமசைதந்நியமே தானெனது. (உபநி. சஎ. உரை.) 2. சுவாநுபூதியினுல்வரும் ஞானம்.

அபரோட்சம் — 1. அநுபவ அறிவு, அபரோட்ச ஞானம். (உ-ம்.) "தன்னிலைதானனதுவே யபரோட்சம்"(உபநி. சஎ.) 2. பிரத்தியக்ஷம். (சி. ஞா; ஆப். ருo.) [அபரோக்ஷ: அ; பரோக்ஷ—காணப்படாதது.]

அபரோட்சன் — பிரமசைதந்நியதரிசனன். (சி.) [அபரோக்ஷ]

அபலச்சா — அபலமானசா, அபமானமான மரணம். (உவின். உசு.)

அபலம் — 1. அடைக்குந்தாழ். (ஆப். ௫௦)[அபல: அப-கீழ். ல-எடுத்தல் 2. ஆண்டன்மை யின்மை. (ஆப். ௬௭) 3. கனிகொடாதது. (ஆப்.௬௭) 4. கைம்மாறு வேண்டாதது. (ஆப். ௬௭.) 5. பிரயோசனமில்லாதது. (ஆப். ௬௭.) (உ-ம்.) "தப்பில் பலாபலமிலற்றில் விருப்பமற" (ஞானவா. வீரசூர. ௪௦) 6. பெலமின்மை, பெலவீனம். (மா)
[1, 2, 3, 4, 5. அஃபல: அ; ஃபல 6. அபல: அ; பல]

அபலன் — பெலவீரன். (உவில். ௫௨.)
[அபல:]

அபலாடிகை—தாகம். (உவில். சசு.)
அபலாஷிகா: அப; லாஷிகா - விரும்புவது.]

அபலாபம் — 1 அறிந்ததை மறைத்தல். (உவில். சசு.) 2. நேசம். (உவில். சசு.)
[அபலாப: அப; லாப-பேசுதல்]

அபவநம் — 1. காற்றில்லாத இடம். (உவில். சசு.) 2. நந்தநவநம். (உவில். சசு.)
[அபவந; அ; பவந - காற்று. அப் வந-சோலை.]

அபவம் — 1. அபாவம், இராமை. உவில். ௫௬.) 2. உலகமுடிவு. (உவில். ௫௬.) 3. திமிங்கிலம். (கா. வைத்.)
[1, 2. அஹவ. அ; ஹவ-இருத்தல்.]

அபவர்க்கம் — அபவருக்கம். (உ-ம்.) "மைஞ்ஞான்ற கண்டனருளபவர்க்கம்" (சேதுபு. தூராசார. உஎ. இதனில் "அபவர்க்கம்" முத்தி யென்னும் பொருட்டு.) [அபவர்ஃ.]

அபவர்த்தநம் — 1. ஆட்டியசைத்தல். (உவில். சசு.) 2. சுருக்குதல். (உவில். சசு.) 3. நீக்குதல். (உவில். சசு.)
[அபவர்த்தந. அப-வெளி. வர்த்தந-இருத்தல்.]

அபவர்த்தம் — 1. அகற்றியெடுத்தல். (உவில். சசு.) 2. (வீசகணிதம்) ஒன்றுக்கொன்று வித்தியாசமான இரண்டு இராசியையாவது பலராசியையாவது சேடம் வராமல் அரிக்கும் வேறோர் இராசி. (உ-ம்.) "௧௫, ௧௦க்கும் ௨௦ க்கும் ௫ அபவர்த்தம்"
[அபவர்த்த: அ; வர்த்த-இருத்தல்.]

அபவரணம் — 1. அங்கவஸ்திரம். (உவில். சசு.). 2. மறைத்தல். (உவில். சசு.) 3. மூடுதல். (உவில். சசு.)
[அபவரண. அப; வரண-மறைத்தல்.]

அபவருக்கம்—1. நிறைவேற்றம். (உவில். சசு.) 2. பலம். (உவில். சசு.) 3. முடிவு. (உவில். சசு.) 4. முத்தி. (உவில் சசு.) 5. விடுதல். (உவில். சசு.)
[அபவர்க. அப-நீக்கம். வர்க-விடுத்தல்.]

அபவருச்சநம்—1. நற்கொடை. (உவில். சசு.) 2. முத்தி. (உவில். சசு) 3. விடுதல். (உவில். சசு.)
[அபவர்ஜந: அப-நீக்கம். வர்ஜந -விடுதல்.]

அபவருத்தநம் — அபவர்த்தநம். (உவில். சசு) [அபவர்த்தந: அப - வெளி. வர்த்தந-இருத்தல்.]

அபவருத்தம்—அபவர்த்தம். (சி.)
[அபவர்த்தந: அப; வர்த்தந-இருத்தல்.]

அபவாகம் — 1. அருத்தாபத்தி. (உவில். சசு) 2. (கணக்கதி) கழித்தல். (ஆப். ௫௪.) 3. கொண்டு போதல். (ஆப். ௫௧.)
[அபவாஹ. அப; வாஹ- கொண்டு போதல்.]

அபவாதம்— 1. உள்ளபடியுணர்தல். (வென். ௩௬.) அது சர்ப்பாகாரமாகத் தோன்றுங் கயிற்றைச் சர்ப்பமன்று கயிறுதானென்றறிதல். ஞானவாசிட்ட உரைகாரர் "அபவாதமாவது விபரீத பாவனையாற் பார்க்கின்ற இல்லாத நாமரூப வடிவமாகிய சகத்தை யதார்த்தமான சச்சிதாநந்த வடிவமாகத் தெளிவினாற் காண்குதல்" என்பர். (ஞானவா. வைராக். ௪௦. உரை.)
2. ஒவ்வாப்பேச்சு. (ஆப். ௫௧.) 3. கட்டளையிடுதல். (ஆப். ௫௧.) 4. கண்டாஞ் செய்தல். (ஆப். ௫௧.) 5. குற்றம்பேசுதல். (ஆப். ௫௧.) 6. நிந்தித்தல். (உ-ம்.) "உரையாதொழிதிமற்றொருவர்க்கபவாதம்" (சேதுபு. கவிசம். ௬௪.) 7. பழிச்சொல். (உ-ம்.) "அழுசையுங் சோரும் பொய்யுமயலபவாதந் தானும்" (சிவதரு.மோ. பாவ. ௬.)8. எய்தியதுவிலக்கிப்பிறிதுவருஞ்சிறப்புவிதி. (பி. வி. ௫௦.உரை.) 9. வெள்ளை. (மா.)
[அபவாத: அப-அபத்தம். வாத-பேச்சு.]

அபவாதயோகம் — குற்றஞ் சொல்லல். (மா.) [அபவாதயோக:]

அபவாரணம் — 1. தோற்றுதொழிதல். (உவில்.சசு.)2. மறைவு. (உவில். சசு.)
[அபவாரண: அப-நீக்கம். வாரண-மறைவு.]

அபவித்தபுத்திரன் — தாய் தந்தையரால் நீக்கப்பட்டுப் பிறரால் எடுத்து வளர்க்கப்பட்ட புத்திரன். (ஆப். ௫௧; மநு. ௯. ௧௭௪.) [அபவித்தபுத்ர. அபவித்த-நீக்கப்பட்ட.]

அபவித்தன் — 1. அகற்றப்பட்டவன். (உவில். சசு.) 2. அபவித்தபுத்திரன். (உ-ம்.) "ஔரசன், க்ஷேத்திரசன், தத்தன், கிருத்திரிமன், கூடோற்பந்நன். அபவித்தன் இவ்வாறு புத்திரர்களும் பிதுராஸ்திக்கும் பிள்ளையில்லாத ஞாதிகளாஸ்திக்கு முரியவர்கள்" (மநு. ௯; ௧௫௯.)
[அபவித்த.]

அபவித்திரம் — அசுத்தம். (உவில். சசு.) [அபவித்ர: அ; பவித்ர-சுத்தம்.]

அபவித்திரன் — அசுத்தன். (உவில். சகூ.) [அஹவித்ர:: ஹவித்ர:- சுத்தன்.]

அபவிதவ்வியம் — வருங்காலத்துளதாகாதது. (உவில். ருகூ) [அஹவிதவ்ய: அ; ஹவிதவ்ய-உளதாவது.]

அபவியயம் — அளவுக்கு மேற்பட்ட செலவு. (உவில். சஎ.) [அபவ்யய: அப-தவறு. வ்யய-செலவு.]

அபவியயமாநம் — 1. சடனிருமை. (உவில். சஎ.) 2. விருதாவாகச் செலவிடல். (உவில். சஎ.) [அபவ்யயமாந.]

அபவிருத்தி—குறைவு. [அப - எதிர். வ்ருத்தி-வளர்ச்சி. (உவில். அ௨௪.)

அபவேட்டிதம் — கைவட்டணை நான்கனுளொன்று; அது: தர்ச்சநிவிரல் முதலாக அகம்வரப் பிடிக்குந் தொழில். (சிந். பதும. கூ௨. உரை.)

அபாக்கியம்—நிர்ப்பாக்கியம். (உவில். ருச.) [அஹாக்ய: அ; ஹாக்ய-செல்வம்.]

அபாக்கியவான்—நிர்ப்பாக்கியவான். (உ-ம்.) "பொருந்தியதரித்திரரைப் போல அபாக்கியவான்கள் எப்படி விளங்குவார்கள்" (ஞானவா. சிகித்தி. உகூ. உரை.)

அபாக்கியன்—நிர்ப்பாக்கியன். (உவில். ருச.) [அஹாக்ய: அ; ஹாக்ய:-செல்வன்.]

அபாகசாகம்—இஞ்சி. (உவில். சஅ.) [அபாகஸாக; அபாக-அசீர்ணம். ஸாக-கீரை.]

அபாகம்—1. சமியாக்குணம். (உவில். சஎ.) 2. பாகம்பண்ணப் படாதது. (உவில். சஎ.) 3. முதிராதது. (உவில். சஎ.) [அபாக: அ; பாகம்-பக்குவமானது.]

அபாகரணம்—1. கடனிறுத்தல். (உவில். சஎ.) 2. நிராகரணம். (உவில். சஅ.) [அபாகரண]

அபாகிரோகம்—மசூரிகைரோகவகையுள் ஒன்று; அது: சரீரத்திலே தூரந்தூரமாக உலர்ந்தது போலுங் கருகினது போலும் கொப்புளங்களாக எழும்பி யிறக்கங் கொள்ளாமல் நெருக்களைக்கு நின்று உபத்திரவஞ் செய்யும். (சீவரட். கசகூ.)

அபாங்ககம்—1. அங்ககிரம். (உவில். சஅ.) 2. சடைக்கண். (உவில். சஅ.) [அபாங்க.]

அபாங்கதரிசநம் — கடைக்கண்பார்வை. (வாச.)

அபாங்கம்—1. அங்ககிரம். (உவில். சஅ.) 2. கடைக்கண். (உவில். சஅ.) 3. சடைக்கண் பார்வை. (சி.) 4. நெற்றித்திலகம். (உவில். சஅ.) [அபாங்ந: அப; அங்க-உறுப்பு.]

அபாசங்கம் — அம்புக்கூடு. (உவில். சஅ.) [அபாஸங்க.]

அபாசம்—1. ஆசையின்மை. (உவின். உகூ.) 2. ஆபாசம். (உவின். உகூ) [அபாஸ.]

அபாசிரயம் — முற்றத்திற்பந்தல். (உவில். சஅ.) [அபாஸ்ரய: அப; ஆஸ்ரய-பாதுகாப்பு.]

அபாசீநம்—1. தெற்கிலுள்ளது. (உவில். சஅ.) 2. தெற்கு. (உவில். சஅ) [அபாசீந: அபாச்-தெற்கு. ஈந-ஓர்வடமொழி விகுதி.]

அபாசுவரம்—ஒளியில்லாதது(தர்க்காமி. உச.) [அஹாஸ்வர: அ - எதிர்மறை. ஹாஸ்வர-ஒளியுடையது.]

அபாடணம்—பேச்சின்மை. (உவில். ருச.) [அஹாஷண: அ; ஹாஷண-பேச்சு.]

அபாடவம்—1. அந்தக்கேடு. (உவில். சஅ.) 2. சாமர்த்தியமின்மை. (வாச.) 3. நோய். (உவில். சஅ.) [அபாடவ: அ; பாடவ - சாமர்த்தியம், சுகம்.]

அபாண்டம்—1. அபாத்திரம். (சி.) 2. இடுநிர்தை, பொய்க் குற்றச்சாட்டு. (உ-ம்.) "என்மேலேயபாண்டம்போட்டான" (உவின். உகூ.)

அபாணிக்கிரகணம் — விவாகமின்மை. (உவில். சஅ) [அ; பாணி-கை. க்ரஹணம்-பற்றல்.]

அபாத்திரம்—1. அசற்பாத்திரம் (உ-ம்.) "தன்னைகருதித்திரப்பான்றன்னை யபாத்திரமென் றுன்னிடுவர்" (சைவச. பொது. ௨௨௫.) 2. கூடாத பாத்திரம். (ஆப். ருகூ.) 3. பாத்திரமல்லாதவன். (ஆப். ருகூ.) 4. பாத்திரமின்மை. (உவின். உகூ.) [அபாத்ர: அ; பாத்ர-பாண்டம்.]

அபாத்திரீகரணம் — 1. அயோக்கியமான கிரியைகளைச் செய்தல்; அது, பிராமணன் சூத்திரனுக்கு ஏவல்செய்தல் முதலியன. (உவில். சஅ.) (உ-ம்.) "நிந்திக்கப்பட்டவனிடத்துப்பொருள்வாங்கல் வர்த்தகஞ்செய்தல் சூத்திரசேவைசெய்தல் பொய்சொல்லல் இவையெல்லாம் தனித்தனியே யபாத்திரீகரணம்" (மநு. கக சுகூ.) 2. அயோக்கியனென்று தள்ளுதல். (உவில். சஅ.) [அபாத்ரீகரண.]

அபாத்வரம்—விளக்கமில்லாதது(தர்க்காமி. உச.)

அபாதாநகாரகம் — நீக்கப்பொருள் கொடுக்கும் ஐந்தாம்வேற்றுமை வினையோடு முடிவது. (பி. வி. அ.)

அபாதாநம்—ஐந்தாம் வேற்றுமையில்வரும நீக்கப்பொருள். (மா.)

அபாதிதவிடயத்துவம்— அவாதிதவிடயத்துவம். (தர்க்கபா. உ௫.)

[அவாயிதவிஷயத்வம்]

அபாநத்தாநவித்திரிதிக்கட்டி—ஒருவகை வித்திரிதிக்கட்டி; இது ஆசநத்திற் பலவித உபத்திரவங்களை யுண்டாக்கி மலத்துவாரத்தைக் கெடுக்குமென்பர். (சீவரட். ௪௦அ.) [அபாநஸ்தாநவித்ரதி: வித்ரதி. உவில்.எகூச]

அபாநம்—1. இரகசியஸ்தாநம்; மூத்திரம் முதலியனபோகும் வழியென்பர். (சப்த.) (உ-ம்.) "நன்றூறுமபாநமின்றியோர் மகவமையப்பெற்றாள்" (மச்சபு. தீர்க்கதம. கூஉ.) 2. கடுக்காய். (கா. வைத்.) 3. குடிக்கக்கூடாதது. 4. மலவாயில். (சீவரட். ௪௦அ.) 5. மூலாதாரம். (உவில். சஅ.) [அபாந: அப-கீழ். அந-சுவாசித்தல். 3. அ; பாந.]

அபாநவாயு — பத்துவாயுக்களுளொன்று; இது நாபித்தாநத்திலேதோன்றிச் குதத்தையுங் குய்யத்தையும் பற்றிநின்று மலசலங்கள் கழியவகை செய்யும்; (த. வி. சி. ஓற்) சரீரத்திற்குள்ளிருக்கும் வாயு ஒன்றாயிருந்தபோதிலும் ஸ்தாநவியாபாரபேதத்தினாலேயைந்தென்னப்படும்வாயுக்களுளொன்று; அது:குதஸ்தாநத்திலேயிருந்துவிட்டைமூத்திரம் சுக்கிலம் இவற்றைக் கீழேதள்ளும். (சி-லி. ஞா ா. சஎ. உரை; சீவரட். ௪.) [அபாநவாயு.]

அபாநவிருந்தி — அபாநவாயுவாய்ச் சேட்டித்தல். (உ-ம்) "அத்தகுபிராண வளியின் சொரூப மூன்றென்றதோமுகமாய்ப் பூரக சொரூபமாயமைய-வொத்தவபாநவிருத்திசொரூபமாயிருக்கும்" (சூத.எக்கி.பூ.சு:சடு) [அபாநவ்ருத்தி.]

அபாநன்—அபாநவாயு. (உ-ம்.) "அபாநனற்சுக்கிலம்போம்" (நல். பார. கிருட்டிண. கூஉ) "அபாநன்குதத்திலுற்றுச் சென்றொழிய மலசலங்களொழித்த லூறம்" (வேதா. சூ. எடு; வேதாந்த. தத். கட். ருஅ) பிங்கலநிகண்டுகாரர்:"உச்சத்தலத்திடைநிற்பதபாநன்"என்பர். (பிங்கல.கூச.) [அபாந]

அபாநீயம்—குடிக்கத்தகாதது. (வென். ருகூகூ.) [அபாநீய: அ; பாநீய—குடிக்கத்தக்கது.]

அபாபம்—1. குற்றமின்மை. (வென். ருசஉ.) 2. பாபமின்மை. (வென். ருசஉ.) [அபாப: அ; பாப-புண்ணியமல்லாதது.]

அபாம்பதி — 1. சமுத்திரம். (ஆப். ருகூ.) 2. வருணன். (உ-ம்.) "அரியதோர் விண்டுவாகி யபாம்பதியாகி" (சேதுபு. சேதுயாத். ககூ.) [அபாம்பதி: அபாம்-நீருக்கு. பதி—தலைவன்.]

அபாமார்க்கநாநம்—சரீரத்தில் நாயுருவிதடவிச்செய்யும் ஸ்நாநம் (பரா. மிரு. ஆசார. ஸ்நாந. கூஅ.) [அபாமார்கஸ்நாந.]

அபாமார்க்கம் — 1. நாயருவி. (கா. வைத்; ஆப். ருகூ.) 2. வெண்ணாயுருவி. (கா. வைத்.) [அபாமார்க.]

அபாயம்—1. அந்தம். (வென். கூரு.) 2. ஆபத்து. (உ-ம்.) "தேயத்து-வாய்த்தவபாயஞ் சிவவுற்சவ மிக்காலங்களின்மெய் மயங்குமாறு-நீத்தவிழிஞர்களுறினுந்தோடமில்லை" (சூத. எக்கி. பூ.சச:கஅ) 3. இணக்கமின்மை. (உவில். சஅ.) 4. குறைதல். (வென். கூரு.) 5. சந்செய்தல். (வென். கூரு) 6. சேதம்பண்ணுதல். (வென். கூரு.) 7. தோற்றப்படாமை. (வென். கூரு.) 8. நட்டம். (உவில். சஅ.) 9. பிரிவு. (உவில். சஅ.) 10. போதல். (வென். கூரு.) 11. மோசம். (உ-ம்.) "மற்றதுகண்டு மைந்தன் வந்ததிங்கபாயமென்று" (பெரியபு. திருவா. உச.) [அபாய.]

அபார்த்தகம்—ஒரு நிக்கிரகத்தாநம்; அது: அவாய்நிலை, தகுதி, அண்மையில்லனவாய்ப் பேசல். (சி. சி. அளவை. கச. மறை; சிவஞா.) [அபார்த்தகம்.]

அபார்த்தகரணம்—வீண்வழக்கு. (உவில். கூஅ.) [அபார்த்தகரணம்.]

அபார்த்தம் — 1. அர்த்தமில்லாதது. (உவில். சஅ.) 2. பிரயோசநமில்லாதது. (உவில். சஅ.) [அபார்த்த: அப-எதிர்மறை. அர்த்த—பொருள், பிரயோசநம்.]

அபாரணை—பாரணைசெய்யாதொழிதல். [அ; பாரணா-உபவாசமிருந்துபின்னுண்ணல். உவில். ருசகூ.]

அபாரம் — 1. அளவற்றது, எல்லைப்படாதது. (உ-ம்.) "தேசகாலவஸ்துக்களால் அந்தமில்லாமல் அபாரமாயமிருக்கிறது" (விசார. உ.) 2. ஆற்றின் எதிர்க்கரை. (ஆப். ருகூ.) 3. கடவுள். (உவின். உகூ.) 4. கரையற்றது. (ஆப். ருகூ.) 5. தொலையாதது. (ஆப். ருகூ.) [அபார.]

அபாரமார்த்திகம்—(அபிதா.) பரமார்த்தமில்லாதது, யதார்த்தமல்லாதது. [அபாரமார்த்திகம்.]

அபாவசதுட்டயம் — முன்னில்லாமை, பின்னில்லாமை, ஒன்றிலொன்றில்லாமை, என்றுமில்லாமை யென்னும் அபாவம்நான்கு. (த. நி.போ. ௪௦அ.) [அபாவசதுஷ்டயம்.]

அபாவநம்—மறப்பு. (உ-ம்.) "இம்மநத்தை யபாவநமென்னுங் கத்தியினாற்கெடுப்பாய்" (ஞாநவா. உற்பத்தி. எ. உரை.) [அபாவநம்.]

அபாவநை—1. தியாநமின்மை. (உவில். ருச.) 2. நிந்தை. (சி.) 3. பகுத்தறிவின்மை. (உவில். ருச.) [அபாவநா: அ; பாவநா-கருதல்.]

அபாவப்பிரமாணம்—ஓரளவை; அ

து: இல்லதனை யில்லையென்றல். "முயற்கோடில்லையென்றவழி யதனை யுண்டோ என்றுமயங்காமற்றானும் இல்லையென்றுகோடல்போல்வது" (சிவ. போ. விருத்தி. கடுசு.) [அபாவப்ரமாணம்.]

அபாவம்—1. அபாவப்பிரமாணம். (உ-ம்.) "அளவைகாண்டல்கருதலுரையபாவம்" (சி. சி. அளவை. க.) 2. அபாவயோகம். (வேதா. சூ. கஙசு) 3. அறியாமை. (உ-ம்.) "அகமினதுபாவாபாவங்கள்" (வேதா. சூ. சo அ.) 4. இன்மை. (உ-ம்.) "அக்கிவிர்த்திதானுமபாவமாம்" (சூத.எக்கி.பூ.உ: சு.) 5. கனவிற்சுழுத்தி. (வைராக். தீப. உரு.) 6. நிருமூலமானஅழிவு, முழுதுமழிதல். (உவின். உசு.) 7. நினையாமை. (உ-ம்.) "பாவமொடபாவமும்" (தாயு. ஆநந்த. ருி. உரை.) 8. மரணம். (உ-ம்.) "நீண்டபாவாபாவம்" (ஞாநவா. உபசா. கஎ.) [அபாவ.]

அபாவயோகம்—ஐவகையோகங்களுளொன்று. (த. நி. போ. கூஎச) அது: கரணங்களுக்கெட்டாத பிரமத்திலே மனோலயமாவது. (வேதா. சூ.கஙகூ. உரை.) [அபாவயோக.]

அபாவர்த்தநம்—திரும்புதல். (உவில். சஅ.) [அபாவர்த்தந.]

அபாவவளவை—அபாவப்பிரமாணம். (சி.)

அபாவாபாவம்—ஓரலங்காரம்; அது: "பள்ளியுமீரம்புலராமையேறற்க" என்பதிற்போல எச்சமுமுடிக்குஞ்சொல்லும் எதிர்மறுத்து உடன்பாட்டுப்பொருளில் வருவதொன்று(பி. வி. கூகஉரை.) [அபாவ; அபாவ.]

அபி—1. அதட்டுகை, கண்டித்தல், கேள்வி, சந்தேகம், சையோகம், நிகழக்கூடியதன்மை, ஆவலான விசாரணை ஆகியவற்றின் ஒன்றன் பாற்படப் பொருள்விளைத்து நிற்பதும் பொருள் ஒன்றுமின்றி யசைத்து நிற்பதுமான ஒருபசர்க்கம். (உவில். சகூ.) [அபி.] 2. இடத்திலாவது குலத்திலாவது அதிகாரத்திலாவது மேற்பட்டிருக்குந்தன்மை, சமீபம், விருப்பம், வேறுந்தன்மை யாகியவற்றின் ஒன்றன் பாற்படப் பொருள் விளைத்துநிற்கும் ஒருபசருக்கம். (உவில். ருச) [அபி.]

அபிக்கியாதம்—அறியப்பட்டது. (வென். உசஎ.) [அபிக்யாத: அபி; க்யாதம்-அறியப்பட்டது.]

அபிக்கியை—1. அழகு. (உவில். ருச.) 2. அழைத்தல். (உவில். ருச.) 3. சீர்த்தி. (உவில். ருச.) 4. சொல்லல். (ஆப். ருகூ.) 5. தூர்க்கீர்த்தி. (ஆப். ருகூ.) 6. காமம். (உவில். ருச.) 7. பரியாயபதம். (ஆப். ருகூ.) 8. பிரகாசம். (ஆப். ருகூ.) 9. மேன்மை. (உவில். ருச.) [அபிக்யா.]

அபிக்கிரகணம்—உடையவன் முன்னிலையிலே யாதுமொரு பொருளைக் கவர்தல், கொள்ளை யிடல். (உவில். ருச.) [அபிக்ரஹண: அபி - சமீபம். க்ரஹண-கவர்தல்.]

அபிக்கிரகம்—1. திருடுதல். (உவில். ருச.) 2. போர்க்கறைகூவுதல். (உவில். ருச.) 3. பலாற்காரமான களவு. (உவில். ருச.) [அபி; க்ரஹ: அபி; க்ரஹ்-எடுத்தல்.]

அபிக்கிரணம்—அபிக்கிரகணம். (சி.)

அபிக்கிரமம்—1. அடர்த்தல். (உவில். ருச.) 2. ஊறுபாடுசெய்ய முயலுதல். (உவில். ருச.) 3. ஏறுதல். (உவில். ருச.) 4. தொடக்கம். (பகவற். உ: சo.) [அபிக்ரம: அபி - மேல். க்ரம - போதல்.]

அபிகதம்—சமீபித்தது. (உவில். ருச.) [அபிகத: அபி- கிட்ட. கத - போனது.]

அபிகமநம்—சமீபமாசப் போதல். (உவில். ருச.) [அபிகமந: அபி – சமீபம். கமந – போதல்.]

அபிகமம்—சமீபமாசப்போதல். (உவில். ருச.) [அபிகம: அபி- சமீபம். கம-போதல்.]

அபிகருடணம்—1. உரிஞ்சுதல். (உவில். ருச.) 2. பேய்க்கோட்படல். (உவில். ருச.) [அபிவர்ஷண: அபி-சமீபம். வர்ஷண-இடித்தல்.]

அபிகாதசுரம்—ஒருவகைச்சுரம்; இது: குத்துக்காய முதலிய விரணங்களினாலும் அக்கினி சமீபமாயிருந்து நடத்துந் தொழிலினாலும், அதிக நடையினாலும், அதிக உழைப்பினாலும் வருவது. (சீவரட். கூக.) [அபிவாதஜ்வரம்: அபிவாத – குத்துக்காயம். ஜ்வரம்–சுரம்.]

அபிகாதசோபை—ஆயுதக்காயம் முதலியவற்றால் உண்டாகும் ஒருவகைரோகம். (சீவரட். கஙஅ.) [அபிவாதசோபா.]

அயசிலவேதை — கோளகபாஷாணம். (கா. வைத்.)

அயசீசம் — அயம். (கா. வைத்.)

அயசு — 1. இரும்பு. (ஆப். எரு.) (உ-ம்.) "அயஸ்காந்தசந்நிதியிலேயயசானதுபோல' (சி.சி. ச: அ. சிவாக்; 2. உருக்கு. (ஆப். எரு.) 3. பொல்லாநிலம், வழுக்குநிலம். (மா.) [அயஸ்.]

அயசுபடில் — வெள்ளீயமணல். (கா. வைத்.)

அயணம் — செலவு, வழி. (உ-ம்.) "மாசறு விசும்பின்வெய்யோன் வடதிசையயணமுன்னி" (சிந்தா. குணமா. ச.) [அயநம் என்பது அயணமெனப்

பாசதமாயிற்று.]

அயத்திநம் — முயற்சியின்மை. (உவில். சுசு.) [அயத்ந: அ—எதிர்மறை. யத்ந—முயற்சி.]

அயத்தின்சாரம் — இரும்புக்கிட்டம். (உவின். ருரு.)

அயத்தீ — இரும்புத்தொட்டிப்பாஷாணம். (கா. வைத்.)

அயத்தோட்டி — வைப்புப்பாஷாணத்தொன்று. (மா.)

அயதார்த்தம் — பொய். (தர்க்கபா. சுஎ.) [அயதார்த்ய: அ—எதிர்மறை. யதார்த்யம்—மெய.]

அயதார்த்தமரணம் — யதார்த்தமல்லாத நினைவு; கனவிற் றோன்றும் ஞாநமென்பதிற் போல. (தர்க்கபா. சுஅ) [அயதார்தஸ்மரண: ஸ்மரண—நினைவு.]

அயதார்த்தாநுபவம் — யதார்த்தமல்லாத அநுபவம்; அது சமுசயம், தருக்கம், விபரியயம் என மூவகை. (தர்க்கபா. கஎ) [அயதார்த; அநுபவம்—தானேகண்டறியுமறிவு.]

அயதி — திருநாமப்பாலைக்கொடி. (கா. வைத்.)

அயநகாலம் — துலாயநத்துக்கும் மேடாயநத்துக்கும் இடையே நிகழும் காலம். (உவில். சுரு.) [அயந; காலம்.]

அயநசலநம் — கிரகங்கள் மையவரிசியிலிருந்து பக்கவரிக்குத் திரும்புதல். (மா.) அயநத்தின் ஒரு அம்சத்தினின்று அதற்கு முன்னுவது பின்னுவது வேறிடம்போதல். (வாச.)

அயநம் — 1. அயநப்பிறப்பு. (உ-ம்) "அயநமேவிடுவேங்கட்பிறப்புருத்தோதயம்" (வேதாரணியபு. தோற்றம் அஉ.) 2. ஆண்டிற்பாதி. (உ-ம்.) "பருமத்திங்களோராறுக்தொக்கதோரயகம்" (சூத. சிவமான். அ: ச.) 3. இடம். (கூர்மபு. பிரமா. ச. உரை.) வாசத்தலம். (ஆப். எடு) 4. கடைசிவிடுதலை, மோட்சம். (ஆப். எடு.) 5. சரித்திரம். (உ-ம்) "இராமாயணம்" (ஆப். எடு) 6. சாத்திரம், வேதம். (உவில். சுசு.) 7. சூரியன் சமரேகைக்கு வடக்கிலுந் தெற்கிலும் போகும் பாதை. (உ-ம்.) "அயநமில்லை யருக்கனுக்கவ்வழி" (இராமா. நாடவிட். சகூ.) 8. போதல். (ஆப். எடு.) 9. வருடம். (வெண். ககஎடு.) [ஹயந.] 10. வழி. (உ-ம்.) "அத்தின புரியின்மனயந மெங்கணும்" (பாகவத. உத்தி. கரு.)
[2, 3, 4, 5, 6, 7, 8, 10. அயந. 9. ஹயந.]

அயநமண்டலம் — சமரேகைக்கு வடக்கே யல்லது தெற்கேசூரியன்செல்லும்வீதி. (உவின். ருரு.) [அயந—சூரியகதி. மண்டல—பாதை.]

அயநமாசம் — அயநாஞ்சாநுசாரத்திலே திகமாந முதலிய அறியும்பொருட்டுக் கற்பிக்கப்பட்டமாசம். (வாச) [அயநமாஸ.]

அயபற்பம் — இரும்புத்தூள். (உவின். ருரு.) [அயஸ்; ஹஸ்மந்—தூள்.]

அயபானி — ஒருசெடி. இதனிலையாலாய குடிநீர் மிகப்பிரயோசநமானது. இதனிலையைத் துவைத்து உடனே கட்டினாற் புண்கள் மாறும். (கா. வைத். ஆங்கிலபாடைச்சொல்.)

அயம் — 1. அசுபதி. (உள்ளமுடை. க.) 2. அதிட்டம். (உவில். சுசு.) 3. அரத்தாலராவியபொடி. (உ-ம். "அசீதளம்" பார். தைல. தைலவ. சு.) 4. அலரி. (உவின். ருரு.) 5. ஆடு. (உவில். கஉ.) (உ-ம்.) "அயக்குலத்துட்கரந்தனை" (உபதேச. அயமு. எரு.) 6. இரும்பு. (உ-ம்.) "புவனிவிடங்கரடக்கயநீர்போல்" (மறைசை. உஎ.) 7. இவனென்னும் பொருள்படும் ஒருவடமொழி அவ்வியயம். (வேதா- சூ. கககூ. உரை.) 8. குதிரை. (ஆப். சுஅஎ.) (உ-ம்.) "அயப்பெயர்த் தங்கவன் றகைவேள்வி" (இரகு. மாலை. கஅ.) 9. குழி. (உவின். ருரு.) 10. குளம். (உவின். ருரு.) 11. சித்திரைமாசம். (தைல. பாயிர. ருச.) 12. சிறுபூலாக்கொடி. (கா. வைத்.) 13. சேறு. (உவின். ருரு.) 14. நல்வினை (சி.) 15. நிலம். (உ-ம.) "அயங்கொண்டதிண்டோள்சொண்ட வறன்மகன்" (சேதுபு. இலகு. உக.) 16. நீர். (உ-ம்.) "வாரியயத்தினிற்படிந்தான்" (பாகவத. சுபத். சு.) 17. விழா. (உவின். ருரு.) [1, 2, 8, 14. ஹய. 3, 6. அயஸ். 5, 11. அஜ. 7. அய.]

அயம்பற்றி — காந்தம். (செ.)

அயமகம் — அசுவமேதயாகம். (உ-ம்.) "அயமகமாமாயிரத்துக்கேனும்" (நல். பார. தீர்த்த. கஅ.) [ஹய; மஹம்.]

அயமணல் — அயமலை. (கா. வைத்.)

அயமத்தி — இவனிருக்கிறானெனப்பொருள்படும் ஒருவடமொழிவாக்கியம். (உ-ம்.) "கோவாமமகிம்" என்னும் வடமொழிவினுவில். "உத்தரமொப்புச் செப்புதலாகு மயமத்தி யாதிபடர்க்கை முன்னிலை தன்மைமுக்குறி" (சி. சி. அ: ருo. ஞாந) [அயமஸ்தி; அயம்—இவன். அஸ்தி—இருக்கிறான்.]

அயமாரம் — அலரி. (கா. வைத்.)

அயமாரகம் — அலரிச்செடி. (உவில். கககூ.) [ஹயமாரக: ஹய—குதிரை. மாரக—அழிப்பது.]

அயமாரணம் — அரசமரம். (உவில். கககூ.) [ஹயமாரண: ஹய—குதிரை. மாரண—அழிப்பது.]

அயமாரம் — அலரி. (உவில். கககூ.) [ஹயமார: ஹய—குதிரை. மார—அழிப்பது.]

அயமான்மாப்பிரமம் — (வேதாந்தம்) இந்தஆன்மாப் பிரமம் எனப்பொருள்படும் அதர்வணவேத மகாவாக்கி

யம். (உபதேசவுண். எ.) [அயம்; ஆத்மா; ஸூஹ்மந்.]

அயமி — வெண்கடுகு. (சா. வைத்.)

அயமுகம்—ஓர் இருக்கை. (உ-ம்.) "பதுமுகமுற்கட்டிதமே யொப்படி—இருக்கைசம்புட மயமுமஞ்சுவத்திகர்—சனிப்புடமண்டில மேகபாத —முளப்படவொன்பதுமாகுந்—த்ரிதரவில்லா விருக்கையெண்ப" (சிலப். வேனி. உசு. உரை.)

அயமேதம்—அசுவமேதயாகம்; இது: குதிரையைக் கொன்று பலியிட்டுச் செய்வது. (இராமா. திக்கு. கசஎ.) [ஹயமேத: ஹய-குதிரை. மேத-பலியிடல்.]

அயர் — 1-3. அயரென்னேவலுந் தெரிநிலைவினைப் பகுதியும் பெயரெச்சத்தொகையும். 4. தளர்தல், வாட்டம். (உ-ம்.) "சிற்றிலிற் சென்றழியாதுநின்றயர்சாண்பன்" (கல்லா. ருஅ.) 5. வருத்தம். (மா.)

அயர்க்குதல் — மறத்தல். (உ-ம்.) "தன்னை யயர்க்குதல்" (உபதேசகா. சிவபுண்ணி. உஅ.)

அயர்ச்சி—1 உணர்வழிவு. (மா.) 2. செய்தல். (உ-ம்.) "சாறயர்ச்சிவிளைப்பன" (சீகாழிப்பு. பூந்தரா. சு) 3. சோம்பு. (உவின். ௲) 4. பெலவீனம். (உவின். ௲) 5. மறதி. (உவின். ௲.) 6. வருத்தம். (உ-ம்.) "மறைந்துபோயினுரெனச் சிறிதயர்ச்சியுமாத்தி—னிறைந்தசோர் பெருங்கவற்சியை நீக்கினுரென்னு" (திருவிளை. இரசவா. உஎ.) 7. வெறுப்பு. (சி.)

அயர்த்தல் — மறத்தல். (உ-ம்) "அயர்த்தனைபழமறைத்துணிவு" (உபதேசகா. சநகா. ௧௧)

அயர்தல்—1. உணர்வழிதல். (உ-ம்.) "கள்ளுண்டயர்தல்" (கூர்மபு. திரிபுர. உஅ.) 2. இளைத்தல். (உ-ம்.) "அயராமலஞ்சலென்று" (வாண. உஅ௦.) 3. செய்தல். (உ-ம்.) "விருந்தயர்தலும்" (வள். ருக. உரை.) 4. சோர்தல். (சி.) தளர்தல். (உ-ம்.) "அற்புதனேயிங்கார்கிலமென்றென் றயர்கின்ருர்" (கோயிற்பு.நட. சகூ) "உடலெங்கு மோய்ந்தயர்ந்தவச மாகி" (தாயு. சுகவா. க.)

அயர்தி — 1. உணர்வழிவு. (உவின். ௲.) 2. இளைப்பு. (உவின். ௲.) 3. சோம்பு. (உவின். ௲.) 4. மறதி. (உவின். ௲.)

அயர்ந்தநித்திரை — மிக்கநித்திரை. (உவின். ௲.)

அயர்ந்தீகம் — செய்வேம். (உ-ம்.) "கிளவியோ டயர்ந்திகம் விருந்தே" (கலித்தொகை. ௲உ.) [இது தன்மைப் பன்மை வினைமுற்று.]

அயர்ப்பு—மறப்பு. (உ-ம்) "அயர்ப்பிலாதானே யோலம்" (பெரியபு. இயற். உகூ)

அயர்வு — 1. அகலம். (மா.) 2. உன்மத்தம். (மா.) 3. சோகம். (உ-ம.) "உள்ளமாழ்கியயர்வெய்தலும்" (கூர்மபு. தக்கன்வமி. ருஅ.) 4. சோம்பு. (உ-ம்.) "அயர்வில்சாலன்" (ஞானவா. ஞானவிண். உ௦.) 5. தளர்வு. (உ-ம்.) "சளைந்துசளைந்தயர்வுறுவார்" (சேதுபு. நாட்டு. சுஉ.) 6. மனக்கவற்சி. (உ-ம்.) "உலகுடன்பெறினுங் கொள்ளலரயர்விலர்" (புறநா. கஅஉ) 7. வருத்தம். (உ-ம்.) "அயர்வன்றியில்" (ஞானவா. புசுண். அச.) 8. வெறுப்பு. (மா.)

அயர்வுயிர்த்தல்—1. சிந்துதல். (உ-ம்.) "கள்ளயர்வுயிர்க்குஞ்செழுங்கமலமென்பொகுட்டு வள்ளல்" (கூர்மபு. அட்ட. அ.) 2. தளர்ச்சிநீங்குதல். (உ-ம்.) "குருகயர்வுயிர்க்குஞ் சோலை" (சூளா. துற. உ௲.) 3. வருத்தந்தீர்தல். (உவின். ௲.)

அயரப்போடல்—அயரவிடல். (சி.)

அயரவிடல்—சமயம் வாய்க்கும்வரையும் அயரவிடுதல்.

அயல் — 1. அந்நியமானது. (உ-ம்.) "திருவருட்கயலுமாய்" (தாயு. சுகவாரி. ௲) 2. அருகு. (உ-ம்.) "தனக்கயலின்வந்தபரிசநத்தை" (கந்தபு. காமதக. சுரு.) 3. இடம். (உவின். ௲.) (உ-ம்.) "தலைக்குவட்டயன்மதிதவழுமாளிகை" (இராமா. நகர்நீ. ககூஎ.) 4. வேறு. (உ-ம்.) விரியுருவா யயல்போலாய்" (ஞானவா. விரதகு. ௲.)

அயலகத்தார்—அடுத்த இடத்திலிருப்போர். (உவின். ௲.)

அயலவர்—பக்கத்தார். (உ-ம்.) "அயலவர்பரவவும்" (தேவார. திருக்கமு.எ. சுந)

அயலவன்—அயலில் இருப்போன். (உவின். ௲.) 2. பிறன். (உவின். ௲.)

அயலன்—அந்நியன். (உ-ம்.) "பிரமகோத்திரக் கயலனுகியே" (சேதுபு. பாவநா. கஎ.)

அயலாதாரம்—(இலக்கணம்) ஏழாம் வேற்றுமையில் வரும் நான்குவகை ஆதாரகாரகங்களுள் ஒன்று; அஃது: ஆதேயத்திற்கு அயலாகஇருக்கும் ஆதாரம். "ஆலின்சட் பசுக்கிடந்தது" என்பதிற்போல. (வீரசோ. உபகார. சு.) [அயல்; ஆதார.]

அயலார் — 1. அயலவர். (உ-ம்.) "அன்புடையன்சொல்லென் றயலாரெடுத்துரைப்ப" (கந்தபு. இரணிய.அ.) 2. ஏவல்செய்வோர். (உ-ம்.) "அடியார்க்கினியாண்ளி நாளளந்தல்கித்-தன்பன்னியோடு மயலார் சுற்றந்தமரோடும்" (திருவிளை. உலவாக்கோ. சஅ.) 3. பிறர். (சி.)

அயலி — வெண்கடுகு. (சா. வைத்.)

அயலுரை — 1. அயலார் ஒருப்பட்ட உரை. (திருக்கோ. க௲எ. உரை) 2. (அகப்பொருள்) தலைமகட்கு யாதும் இயைபில்லாத உரை. (திருக்கோ.

௧௬௭. உரை)

அயலோர்—1. அயலார். (சி.) 2. மற்றையோர். (உ-ம்.) "ஆரியர்பேணுவதாகி யயலோர்க் கெல்லா மரிதான" (ஞானவா. முமூட்சு. ௪௭.)

அயவணம் — ஒட்டகம். (பிங்க. ௨௪௧௧.)

அயவந்தி—ஒருசிவத்தலம். (பெரியபு. ஞாந. ௪௯௪.)

அயவாகநன் — அக்கினிதேவன். (சி.) [அஜவாஹந: அஜ-ஆடு. வாஹந: —வாகநமாகஉடையவன்.]

அயவாரி—வசம்புப்பூண்டு. (கா. வைத்.)

அயவி—சிற்றரத்தை. (கா. வைத்.)

அயவு—அசலம். (மா.) [அயர்வு.]

அயவெள்ளை — இரும்புப்பற்பம். (உவின். ௬௬.) [அயஸ்-இரும்பு.]

அயற்படல்—விலகிச்செல்லல். (உ-ம்.) "இயற்படுமோனமூ நாணுமீதலு-மயற்பட" (சந்தபு. சயந்தன்பு. ரு.)

அயறு—புண்வழலை. (உ-ம்.) "அயறு சோருமிருஞ் சென்னிய" (புறநா. ௨௨.)

அயன்—1. அருகன். (உவின். ௬௬.) 2. கிரமமானது. (உவின். ௯௯௯. அராபி.) 3. சர்க்காரைச்சார்ந்தது. (உவின். ௯௯௯. அராபி.) 4. சரியானது. (உவின். ௯௯௯. அராபி.) 5. சூரியகுலத்தோரரசன்; இவன் இரகுவின் மகன். (உ-ம்.) "பேதமில்லதோர் பிரம மூர்த்தமே – யாதலாற்பெயரயனென்றேறினர்" (இரகு. அயனு. ருஉ.) 6. பிரமா. (உ-ம்.) "அயன்படைத்திடு மண்டத்திற் காவியாய்" (கந்தபு. வள்ளி. உ.) 7. பிறப்பில்லாதவன். (உவில். ௯௨.) 8. மகேச்சுரன். (உ-ம்.) "சாதலும்பிறப்புந் தோயாத் தன்மையாலயன்" (கூர்மபு. பிரகிருதித்தோற். ௨௬.) [1, 5, 6, 7, 8 அஜ.]

அயன்ஜமா — சரியானவசூல். (உவின். ௯௯௯) [அராபிச்சொல்]

அயன்பதஞ்சேர்ந்தோர் — சூத்திரர். (உ-ம்.) "அயன்பதஞ்சேர்ந்தோர் துங்கவீதியும்" (சந்தபு. ௩௧௮. ௪௦.) [பிரமாவுடைய பாதத்திலேபிறந்தமைபற்றிவந்தபெயரென்பர்.]

அயன்பதத்துதித்தோர்— சூத்திரர். (சி.)

அயன்மனைவி—சரசுவதி. (சூ. நிகண். ௪: ௬௫.) [அஜ:-பிரமன். மனைவி-இல்லாள்.]

அயன்முகத்துதித்தோர்—பிராமணர். (சி.)

அயன்வாவி—மாநசவாவி. (செ.)

அயன்றேளுதித்தோர் — அரசர். (செ.)

அயனாள்—1. உரோகிணிநாள். (மா.) [பிரமன்பிறந்தநாள்.] 2. பிரமன்வாழ்நாள். (மா.)

அயனிலம்—சர்க்காருக்கு இறை கட்டும் நிலம் (சி.)

அயனூர்—சீகாழியென்னுந்தலம். (தேவார. திருக். உ. சம்.)

அயனூருவில்வந்தோர் } —வைசியர். (மா) [அஜ:-பிரமா. ஊரு-தொடை.]
அயனூருவிலுதித்தோர் }

அயா—வருத்தம். (உ-ம்.) "மானயா நோக்கியர்மருங்குல்" (சிந்தா. ௧௩௧. ௨௬௬.)

அயாசகபிச்சை—கேளாதிருக்கத் தானிருக்குமிடத்திலே மற்றொருவன் கொண்டுவந்து தர ஒருவன் வாங்கும் பிச்சை. (சைவச. பொது. ௨௫௭. உரை.) [அயாசக; ஷிக்ஷா.]

அயாசகம்—அயாசகபிச்சை. (உ-ம்.) "சாந்தாநிகபிச்சைதக்ககணமாதுகரியாய்ந்தார்க் கயாசகமுமாம்" (சைவச. பொது. ௨௫௭.) [அயாசக.]

அயாசகன்—இரந்து கேளாதவன். (உவில். ௬௬.) [அயாசக: யாசக:-இரந்துகேட்பவன்.]

அயாசிதம்—கேளாமற் றரக்கொள்ளும்பிச்சை. (உவில். ௬௬.) [அயாசித: அ; யாசிதம்-யாசிக்கப்பட்டது.]

அயாசிதவிருதம்—கேளாது வந்த பிச்சைப்பொருளைக் கொண்டு சீவநம் பண்ணுதல். (உ-ம்.) "பிராரத்தம் அல்லது வாராதென்னுமுறைமையை யறிந்த பெரியோர் அயாசிதவிருதமாகப் பூமியின்கண்ணே யிருக்கவும் அவர்களுக்குச் சீவநம் நடக்கவுங் கண்டோம்" (சி. சி. உ: அ. சிவாக்)(ஆப். ௭௬.) [அயாசித-கேட்கப்படாதது விருதம்-விருத்தி.]

அயாநம்—இயற்கைக் குணம். (உவில். ௬௬.) [அயாந: அ; யாந-போதல்.]

அயாவுயிர்த்தல்—1. அறிவுமயக்கமொழிந்து எழும்புதல். (உ-ம்) "கேடு நீங்கிகிளையாவுயிர்த்தார்போல" (கந்தபு. மார்க்க. ௪௦௧) 2. வருத்தம் நீங்கியெழும்பல், இளைப்பாறுதல். (உ-ம்.) "இளையவரயாவுயிர்த்தெழுந்தார்" (சிந்தா. மண். ௭.)

அயிக்கம்—ஒற்றுமை. (உ-ம்.) "கூடஸ்தப்பிரமாயிக்கமே" (வேதா.சூ. ௧. உரை.) [இஃது ஐக்கியம் என்பதன் றிரிபு.]

அயிக்கவாதி—ஐக்கவாதி. (சிவ. ௧.உரை.) [ஐக்யவாதி.]

அயிக்யம்—ஒன்றுந்தன்மை. (உ-ம்) "அத்துவிதமாமைவயிக்யவநுபவமே" (தாயு. பரா. ௨௬௬.)

அயிகம்—ஊமத்தைப்பூண்டு. (கா. வைத்.)

அயிங்கிதை—கொல்லாமை. (உ-ம்.) "அயிங்கிதை பொறையேமேன்மை" (சிவதருமோ.சிவதரும. ௬) [இஃது "அஹிம்ஸா" என்பதன் றிரிபு]

அயிச்சுவரியம் — ஐசுவரியம். (உ-ம்) "மெய்ச்சயிச்சுவரியமுளவேள்விரா யகற்கு" (நல். பார. சாருட. உச.) [ஐஶ்வர்யம்.]

அயிச்சோரியம் — செல்வம். (உ-ம்.) "அதனமிச்சொரியர்தாவில்சீர்-வித்த சமுநிவராவிபூதியாகுமால்"(கூர்மபு இந்திரத். நுஅ) [ஐஶ்வர்யம்]

அயிஞ்சி — நிலப்பனைப்பூண்டு. (கா. வைத்.)

அயிஞ்சை—கொல்லாமை. (உ-ம்) "ஒப்புறு மறையோர் பூசை குருபூசை யோக்குமங்கி-யைப்புரிபூசைதன்னி னீங்கிசையறத்திற்செய்யிற்-றப்பிலா வயிஞ்சை யென்று சாற்றுவர் தலைமையோரே" (மச்சபு. யோகசாத். சகூ.) [அஹிம்ஸா]

அயிணம் — மான்றோல். (உவின். ஙுகூ) [ஐணம் என்பதன்றிரிபு.]

அயிந்திரம்—ஐந்திரவியாகரணம். (உ-ம்) "அயிந்திரவியாகரணமூமோதி" (இராமா. அநு. சடு) [ஐந்த்ர.]

அயிப்பை — ஒருசெடி. (மா)

அயிர் — 1—3. அயிரென்னேவலுந்தெரிநிலைவினைப்பகுதியும் பெயரெச்சத் தொகையும். 4. ஆற்றுமணல். (தைல. தைலவ.௧உள) 5 கண்டுசர்க்கரை. (உ-ம்) "குடதிசைமருங்கின் வெள் ளயிர்தன்னொடு" (சிலப். அந்தி. கூடு) 6. சந்தேகம். (உ-ம்) "அயிர்த்தீர்ந்தபேரறிஞரும்" (திருவிளை. நகர. சுடு) 7. சருக்கரை. (உ-ம்) "அயிருந்தேனும்" (இராமா.நகர.ருடு.) 8. சிறுநீர். (இராசவைத்) 9. நுண்மணல். (உ-ம்) "அயிரார்திரைவந்துன்வண்டலம்பாவையழித்தனவோ" (வாண. உஅ) 10. நுண்மை. (மா) 11. யானைக்காஞ்சொறி. (இராசவைத்)

அயிர்க்கல்—அயிர்த்தல். (உ-ம்) "அயிர்க்கலாந் தன்மை யன்மையனுகி" (உபதேசகா, சநகா. க)

அயிர்த்தல்— 1. சந்தேகித்தல்.(உ-ம்) "அன்பாகியதென்னெனவயிர்த்தார்" (உபதேசகா. சநகா. க) 2. மறைத்தல். (உ-ம்) "உயிரனையாயயிராமனுரையெனக்கே" (வாண. ௩௦௬)3. மாறுபடுதல். (உ-ம்) "சென்றுவேல்வலந்திரித்துச்செயிர்த்தனனயிர்த்துச்சீற" (திருவிளை. சோழன். ௧௭)

அயிர்ப்பு — 1. அநுத்தருதபஞ்சமம். (பிங்கல. ௧௩௩௬.) 2. அயிர்த்தல்.(உ-ம்) "அண்ணலங்குமரராமென் றயிர்ப்புறுமரசர்யாரும்" (பாரத. திரௌ. ௬௬)

அயிரம் — கண்டசருக்கரை. (சா. வைத்.)

அயிராணி — 1. இந்திராணி, (உ-ம்.) "நகைமணிப்பூணயிராணி" (காஞ்சிபு. நகரேறு. ௧௪௪.) 2. பார்ப்பதி.(திவாகர.)

அயிராணிகேள்வன் — இந்திரன். (திவாகர.)

அயிராவச்சுரபி — காமதேநு. [இராவத்-கடல்; சுரபி—டசு. இதுமானிப்பாயகராதியில் அயிராச்சுரபி என்றெழுதப்பட்டிருக்கிறது.]

அயிராவணம் — அயிராவதயானை. (ஆப். ௧௬௬.) (உ-ம்.) அயிர்வணமேறுதானேறேறி" (தேவார. திருவாரூ. ௧. நாவு.) [ஐராவண.]

அயிராவதப்பாகன்—இந்திரன். (உ-ம்.) "அண்ண லயிராவதப்பாகனைடப்பைதாங்க" (கூர்மபு. திருக்கல். ௪௬.)

அயிராவதம் — இந்திரனுடைய யானை. (உ-ம்.) "பணைக்கைப்பிறைவெண்கோட்டயிராவதமே போலும் பகட்டின்" (பாரத. திரௌ. ௪௪.) [ஐராவத; ஐராவத்—கடல். பாற்கடலிற்பிறந்ததென்பர்]

அயிராவதன் — 1. இந்திரன். (செ) [ஐராவத; அயிராவத யானையையுடையவன் என்றபடி.] 2. சூரியனுடைய தேரைப் பரிக்கும் நாகரில் ஒருவன். (ஆப். ௧௧௬.) (உ-ம்.) "ஆசறுமயிராவதன்" (கூர்மபு. ஆதவ. ௬.) [ஐராவத.]

அயிரி — 1. நெட்டிலைப்புல். (உவின். ௬௬.) 2. மீன்முள்ளரியும் ஒருவகைக்கத்தி. (பிங்கல. ௧௧உ௬)

அயிரியம் — நெட்டிச்செடி. (உவின். ௬௬.)

அயிரை — 1. ஒரு சிறுமீன். (உ-ம்.) "குமரியம்பெருந்துறை யயிரைமாந்தி" (புறநா. ௬௭) 2. நுண்மணல். (உ-ம்.) "அயிரைவார்கரைக்குடகடல்" (குளா. கல்யா. ௫௬)

அயில்— 1—3. அயிலென்னேவலுந்தெரிநிலைவினைப்பகுதியும் பெயரெச்சத்தொகையும். 4. அழகு. (உவின்.௬௬) 5. இரும்பு. (உவின். ௬௬) (உ-ம்)"அயிலுண்ணறல். (தைல. தைலவ.௧௧.) 6. உண்ணல். (உவின், ௬௬) 7. கலப்பை. (உவின். ௬௬) 8. கூர்மை.(உ-ம்.) "அயில்வேற்கைக் கந்தவேள்" (கந்தபு. வள்ளி. உ௧௫) 9. சோளைப்புல். (உவின். ௬௬) 10. வேலம்பட்டை. (இராசவைத்) 11.வேற்படை. (உ-ம்) "சுற்றுமயிலும் வட்டமுமெடுத்திருகை" (அரிச்சந். விவாக. ௧௧௭.)

அயில்வித்தல் — உண்பித்தல். (உ-ம்) "அடிசிலயில்வோர் தம்மையயில்வித்து" (திருவிளை. உக்கிர. வேல்வளை. ௬௦.)

அயில்வு—உண்ணல். (சி)

அயிலம் — இருப்பைவேர்ப்பட்டை. (இராசவைத்)

அயிலல்—உண்ணல்.(உ-ம்.) "உருபாலயிலுற்றிடுபொழுதத்தினில்" (கந்தபு. சரவண. ௬.)

அயிலவன் — வேற்படையுடையவன், கந்தசுவாமி. (உ-ம்) "தினைகாவன்ம யிலைமணந்தவயிலவ" (திருப்பு. ௬௫) [அயில்-வேற்படை. அ-ஒருசாரியை அன்-ஒருவிகுதி.]

அயிலான் — கந்தசுவாமி. (உவின். ௬௫) [அயில்-வேர்படை. ஆன் - ஒருவிகுதி.]

அயிலிடம் — சிற்றரத்தை. (மலையா.)

அயிலுதல் — உண்ணல். (உவின். ௬௫)

அயிலேயம் — முசுமுசுக்கைச்சொடி. (உ-ம்) "வானநாடயிலவே" (தைல. தைலவ. ௬௧)

அயிற்கடு — அங்குசம். (மா. அயிர்க்கடு)

அயிறல் — உண்ணல். (உ-ம்.) "ஆனபல்கடல்களுமயிறன்மேயினார்" (கந்தபு. சிங்க. ௨௭)

அயின்றன் — தாய். (மா)

அயினி — 1. சோறு, உணவு. (உ-ம்.) "அயினியுமின்றயின்றனனே" ( ) 2. நீராகாரம். (இராசவைத்.)

அயினிநீர் — சோறுகலந்த ஆலத்திநீர். (உ-ம்.) "போதுடனயினிநீர்சுழற்றி" (இராமா. மிதிலை. ௬௧.)

அயுக்தம் — தகாதது. (சி. சி. ௨: ௬. சிவாக்.) [அ-எதிர்மறை. யுக்தம்-இயைபு.]

அயுகலம் — தனிமை. (உவில். ௬௭.) [அயுகளு: அ-எதிர்மறை. யுகளு - இரண்டு.]

அயுத்தம் — 1. ஏதுவலங்காரவகையைந்தனுள் ஒன்று. அது, "இகன்மதமால்யானையகபாயனெங்கோன் -முகமதியின்மூரனிலவா-னகமலர்வ-செங்கயற்கணல்லார்திருமருவுவாள்வதந-பங்கயங்கள்சாலப்பல" என்பதிற்போலக் காரணத்துக்கேலாத காரியம் நிசழ்வது. (உ-ம்) "தூரகாரியமுமொருங்குடன்றோற்றமுங்-காரியமுற்தூஉங் காரணநிலையும், யுத்தமு மயுத்தமுமுத்தையோடியலும்" (தண்டி ௬௧) 2. பொருத்தமில்லாதது. (சி) [அயுக்தம்.]

அயுத்தி — 1. நியாயவிரோதம். (உவில். ௬௭.) 2. பொருத்தமில்லாமை. (உவில். ௬௭) 3. பொருந்தாமை. (உவில். ௬௭) [அயுக்தி: அ-எதிர்மறை. யுக்தி-பொருத்தம்.]

அயுதசித்தசம்பந்தம் — நீக்கமின்றிருப்பவற்றின்சம்பந்தம்; அது, கெடாததாய் ஒன்றமற்றொன்றை எப்பொழுதும் பற்றி நிற்பது. (தர்க்கபா. ௫.) [அயுதஸித்தஸம்பந்த: அயுத-பிரிவின்மை. ஸித்த-சித்தாந்தப்பட்டது. ஆப். ௭௬]

அயுதசித்தம் — சமவாயசம்பந்தம். (ஆப். ௭௬) [அயுதஸித்த.]

அயுதம் — பதினாயிரம். (உ - ம்.) "இரண்டுபடையுமயுதவருடனேர்ந்து" (காஞ்சிபு. மகாலி. அ.) [அயுத.]

அயுதாயு — சூரியகுலத்துள்ள ஓரரசன்; இவன், சிந்துதீபனுடைய மகன். (கூர்மபு. சூரிய. ௬௭.)

அயே — அழைத்தலைக்குருதும் ஓர் அவ்வியயபதம். (ஆப். ௭௬.) [அயே]

அயோக்கியதை — 1. இசையாமை. (உவில். ௬௭.) 2. பொருத்தமின்மை. (உவில். ௬௭) [அயோக்யதா: அ-எதிர்மறை. யோக்யதா-பொருத்தம்.]

அயோக்கியம் — 1. இசையாமை. (உ-ம்.) "பிரத்தியக்ஷத்திற்கு யோக்கியமுமயோக்கியமுமாய் ஒளித்தவஸ்துவை யறிவிப்பதாகும்" (சி. சி. அளவை. ௨: ஞான.) 2. தகுதியின்மை. (உவில். ௬௭.) 3. பொருத்தமின்மை. (உவில். ௬௭.) [அயோக்ய.]

அயோக்கியன் — யோக்கியனல்லாதவன். (உவில். ௬௭.) [அ-எதிர்மறை. யோக்ய: -தக்கவன்.]

அயோக்கிரம் — 1. உலக்கை. (உவில். ௬௭.) 2 சுத்தியல். (உவில். ௬௭.) [அயோக்ர: அயஸ்-இரும்பு. அக்ர-நுனி.]

அயோகநம் — சுத்தியல். (உவில். ௬௭.) [அயோகந: அயஸ்-இரும்பு. ஹந-அடித்தல்.]

அயோகம் — 1. சுத்தியல். (உவில். ௬௭.) [அயஸ்-இரும்பு. க-போதல்.] 2. தகுதியின்மை. (உவில். ௬௭.) 3. பிரிவு, கூடுதலின்மை. (உவில். ௬௭.) 4. முயற்சி. (உவில். ௬௭.) 5. வெறுப்பு. (உவில். ௬௭.) [அயோக: அ-எதிர்மறை. யோக-சேர்க்கை.]

அயோகவன் — சூத்திரனுக்கு வணிகப் பெண்ணிடத்திலே பிறந்தவன். (சைவச. பொது. ௬௭.) (உ - ம்.) "பார்கொள் சூத்திரற்கு நாய்கர் பாவைக்கு முதித்தவாட்கண் நேரயோகவப் பெண்" (சூத. சிவமான். ௬௨: ௬௨.) [அயோகவ: அயோக-வேறுக்கப்பட்ட. வ-போதல்.] (உவில். ௬௭.)

அயோகவியவச்சேதம் — இயைபின்மை நீக்குதல். (பி. வி. ௫௦. உரை) [அயோகவ்யவச்சேத: அயோக-இயைபின்மை. வ்யவச்சேத-நீக்குதல்.]

அயோகன் — 1. தாரமிழந்தவன். (ஆப். ௭௬.) 2. மனைவியைப்பிரிந்திருப்பவன். (ஆப். ௭௬.) [அயோக: அ-எதிர்மறை யோக:-கூடியிருப்போன்.]

அயோகிருதயம் — இரும்புபோன்ற கடினமானமனம். (வாச.) [அயோஹ்ருதய: அயஸ்-இரும்பு. ஹ்ருதயம்-மனம்.]

அயோசநம் — 1. ஒன்றுதலின்மை. (உவில். ௬௭.) 2. வேறுபாடின்மை. (உவில். ௬௭.)

[ஆயோஜக: அ-எதிர்மறை. யோஜநம். ஒன்றுதல்.]

அயோத்தி — சூரியவமிச ராசாக்களுடைய இராசதானியாய்ச் சரயுநதிக்கரையிலுள்ள ஒருநகரம். (உ-ம்.) "மணிமாடவயோத்தியென்னும் பொன்னகரு மல்லாது புகலுண்டோ" (இராமா. கைகேயி. எ.) [அயோத்யா: அ-எதிர்மறை. யோத்யா -யுத்தஞ்செய்யத்தக்கது.]

அயோதகதி — "இரும்பு சுடுகின்றது" எனப்பொருள்படும் ஒரு வடமொழி வாக்கியம். (உ-ம்.) "பிரமா சிருட்டிக்கவும் விட்டுணு இரட்சிக்கவுங் காலருத்திரன் சங்கரிக்கவும் பொருந்துகையாலே, "அயோதகத்" யென்றாற்போலச், சிவசத்தி யிவர்களை யதிட்டித்துச் செய்கையால் இவர்களே செய்ததெனப்பெறும்" (சி. சி. ௧: ௬௪. சிவாக்.) [அயோதஹதி: அயஸ்-இரும்பு. தஹதி-சுடுகின்றது.]

அயோநி — 1. சிவன். (ஆப். எஎ.) 2. தொடக்கமில்லாதது. (ஆப். எஎ.) 3. நித்தியம். (ஆப். எஎ.) 4. பிரமா. (ஆப். எஎ.) 5. யோநியாற்பிறவாதது. (ஆப். எஎ.)
[அயோநி: அ-எதிர்மறை, யோநி-கருப்பம்.]

அயோநிசத்துவம் — யோநியாற்பிறவாத்தன்மை. (ஆப். எஎ.) [அயோநிஜத்வ: அயோநிஜ- யோநியாற் பிறவாமை. த்வம்-தன்மை.]

அயோநிசம் — யோநியாற்பிறவாமை. (ஆப். எஎ.) [அயோநிஜ: அ-எதிர்மறை. யோநிஜ - யோநியாற்பிறத்தல்.]

அயோநிசை — யோநிவழியாற் பிறவாது கலப்பைச் சாலிற் பிறந்த சீதையென்னும் பெண். (ஆப். எஎ.) [அயோநிஜா: அ; யோநிஜா-யோநியிற் பிறந்தவள்.]

அயோமயம் — இரும்பினாற் செய்யப்பட்டது. (ஆப். எ௬.) (உ-ம்.) "அயோமயத்த குறந்தண்டால்" (சிலதரு. எ: க௫எ.) [அயஸ்; மய.]

அயோமலம் — இரும்புக்கிட்டம். (வாச.) [அயோமல: அயஸ்-இரும்பு. மலம்-அழுக்கு.]

அயோமுகி — ஓரரக்கி. (இராமா. ஆரணியகா. அயோ. ௬௬.) [அயோமுகீ.]

அயோற்கம் — அரத்தினாலே யராவியெடுத்த இரும்புப்பொடி. (உவின். ௬௬.)

அர் — 1. ஒரு பகுதிப்பொருள்விகுதி. (உ-ம்.) பூவர்சோலை புகுவலென்றெண்ணினான்" (சிந்தா. பதுமை. க௬உ) 2. பெயர்வினைகளில் உயர்திணைப்பன்மையைக் காட்டும் ஒருவிகுதி; "அவர்வந்தனர்" என்பதுபோல. இவ்விகுதி: தெரிநிலைவினைமுற்றில் இறந்தகால இடைநிலையாகிய தகர ஒற்றை யல்லது அதன்றிரிபாகிய டகர றகர ஒற்றுக்களை யொட்டி வரும்போதும் நிகழ்கால இடைநிலைகளாகிய கின்று, ஆநின்று என்பவைகளை யொட்டி வரும்போதுந் தன்முன் அன்சாரியை பெற்றன்றி வருதலில்லை. மேலும் இவ்விகுதி வினைமுற்றின் ரூபமல்லாத வினையாலணையும் பெயரில்வரும்போது "வந்தவர்" என்பதிற்போல அகரச் சாரியை யடுத்தே பின்வரும். 3. பெயர்விணைகளில் ஒருமைச்சிறப்பில் வரும் ஒருவிகுதி. "சம்பந்தர் நின்றனர்" என்பதற்போல. 4 மென்றொடர்க் குற்றியலுகரப்பெயரிறுதியுகரத்தோடொத்துவரும் ஓரிடைச்சொல்; "சுரும்பர்" என்பதிற்போல.

அர்க்கக்கீராதித்தைலம் — எருக்கம்பால், சதுரக்கள்ளிப்பால் முதலியவற்றில் வடித்தெடுக்கும் ஒருவகைத் தைலம். [இதனிலக்கணம், தைல. தைலவ. ௬௧-ம் ௬௨-ங்கவிகளிற்காண்க.]

அர்க்கசூநு — 1. இயமன். (வாச.) 2. கன்னன். (வாச.) 3. சநி. (வாச.) 4. சுக்கிரீவன். (வாச.)
[அர்க்கஸூநு: அர்க்க-சூரியன். ஸூநு-மகன்.]

அர்க்கத்து — தடங்கல். (உவின். ௬௬௬) [அராபி.]

அர்க்கபந்து — 1. கௌதமபுத்தன். (உவில். எ௯.) 2. தாமரைக்கொடி. (வாச.) [அர்க்கபந்து: அர்க்க - சூரியன். பந்து - உறவு. சூரியவமிசத்திலேதோன்றினானென்பர்.]

அர்க்கம் — 1. எருக்கஞ்செடி. (உவின. சo.) 2. செம்பு. (ஆப். எக.) 3. தேவருக்கு அல்லது பெரியோருக்கு வணக்கத்தோடு கொடுக்கும்பொருள்; அப்பொருள்; தீர்த்தம், பால், தருப்பை, தயிர், நெய், அரிசி, கோதுமை, கடுகு என்பன. (ஆப். அo.) 4. கீர்க்காகம். (சூ. நிகண். ௬: ௬௬.) 5. பளிங்கு. (வாச.) 6. பூசோளாட்ம். சி.) 7. பொன். (சி.) 8. விலைப்பொருள். (ஆப். அo.)
[2, 5. அர்க்க; 3, 8. அர்க்ய.]

அர்க்கமலை — அருணாசலத்திறகுக் கிழக்கேயுள்ள ஒருமலை. (அருணாசலபு. திருந. ௬௬.)

அர்க்கலம் — கதவடைக்குந் தாழ். (வென். சஅ.) [அர்கல.]

அர்க்கன் — 1. இந்திரன். (வாச.) 2. உத்திரநட்சத்திரம். (வாச) 3. சூரியன். (வாச.) 4. ஞாயிற்றுக்கிழமை. (வாச) 5. நெருப்பு. (ஆப். எக.) [அர்க்க:]

அர்க்காதிபன் — திரவியாதிபதி. (செ) [அர்க்காதிப:]

அர்க்காம்சு — துவாதசகலாப்பிரசாதம். சூரியமாகிய ஹகாரத்தின் மேல் சண்டாம்ஸு ஆகிய அகாரம், சோணம் ஆகிய உகாரம், ஆன்மா ஆகிய மகாரம், லம்பிகா ஆகியபிந்து, அர்த்தாஜம் ஆகிய அர்த்த சந்திரன், ரோதி ஆகிய நிரோதினி, உண்டம்ஆ

கிய நாதம், உண்டாந்தமாகிய நாதாந்தம், இடப் புறத்தில் விந்தவோடு கூடின கலப்பைவடிவான ஶக்தி, வியாபிகா ஆகிய வியாபிநி, ஸமநா உந்மநா ஆகியவைகளே. இதற் சமனைவரையிற் பாச சமூகம். உந்மநாந்தத்திற் பிராசாத மந்திர வாச்சியராகிய பரசிவன்விளங்கினுர். (சி-லி. கிரி. எ-ம் உரையும்.) [அர்தாஂஶ.]

அர்க்கார் — வேவுகாரன். (உவின். ௯௬௯.) [இந்துஸ்.]

அர்க்காரி — அர்க்கார். (உவின். ௯௬௯.) [இந்துஸ்.]

அர்க்கியம்—அருக்கியம். (உ-ம்.) "அவரவர் மந்தரத்தினுலே விதமாரர்க்கியங் கொடுத்து" (சேதுபு. சேதுபல. ௯௦.) [அர்஘்ய.]

அர்கதமுநி — அருகன். (வேதா. சூ. பொது. உ௪) [அர்ஹதமுநி.]

அர்ச்சகன்—அருச்சகன். (வாச.) [அர்சக:]

அர்ச்சகாகிரகம் — ஒருவகைநோய்; அது: குழந்தை பிறந்த பதினேரா நாளிலாவது பதினேராம் மாசத்திலாவது பதினேரா வருடத்திலாவது குழந்தையை யல்லது தாயைப் பிடிக்கும்ஒருபெண்கிரகத்தாலாயதென்பர். அசனுல், தேகமிளைத்தல், சுரம், சர்வாங்கத்தினுமிகுநோவு, அந்நத்தில் வெறுப்பு, விழிதத்விழி விழிதத படியிருத்தல் என்னும் இக் குணங்களுண்டாகும். (வேரட். உ௨௮) [அஜ்ஞா -சம்பாதித்தல்--"நாட்பட்ட அநுசரித்தல்"]

அர்ச்சநம்—1. திரவியஞ்சம்பாதித்தல். (உவில். ௭௧.) [அர்ஜந.] 2. பூசைசெய்தல். (ஆப். அ௦.) [அர்சந.]

அர்ச்சநாதிகாரம் — பூசனைசெய்தற்கு யோக்கியம். (உ-ம். "அதிகாரம்" "5" பார்.) [அர்சநாதிகார.]

அர்ச்சநீயம்—1. மதிக்கத்தக்கது. (ஆப். அ௦.) 2. வணங்கத்தக்கது. (ஆப். அ௦.) [அர்சநீய:]

அர்ச்சனை—1. பூசை. (உ-ம்.) "செவ்விரர்ச்சனைசெய்தன ரென்பவே" (கந்தபு. திருவி. ௪௨௬.) 2. வணக்கம். (ஆப். அ௦) [அர்சநா.]

அர்ச்சி — 1. ஒளி. (ஆப். அ௦) 2. சுவாலை. (உவில். ௭௧.) 3. பூசைசெய்யெனப்பொருள்படும் "அர்ச்சி" யென்னேவல். [I, 2, அர்சி: 3 அர்ச.]

அர்ச்சித்தல்—பூசைசெய்தல். (உ-ம்.) "அர்ச்சிப்பாரிற் நூலலரினுல்" (சைவச. பொது. ௫௬௬.)

அர்ச்சிதன்—பூசிக்கப்படுவோன். (உ-ம்.) "ஆதிநாத னமரர்க ளர்ச்சிதன்" (தேவார. திருப்பூவ. ௭. திருநாவு.) 2. விட்டுணு. (வாச) [அர்ச்சித:]

அர்ச்சியசிட்டர் — பூசிக்கத்தக்கபெரியோர். (உவின். ௪௦.) [அர்ச்யஶிஷ்ட: அர்ச்ய - பூசிக்கத்தக்க. ஶிஷ்ட-பெரியோர்.]

அர்ச்சியம் — அர்ச்சநீயம். (ஆப். அ௦.) [அர்ச்ய.]

அர்ச்சுரம் — அருச்சுரம். (செ.) [அர்ஜுர.]

அர்ச்சுநன்— அருச்சுனன். (செ.) [அர்ஜுந.]

அர்ச்சை — மூர்த்தி, கல், மரம், மண் முதலியவற்ருற் செய்யப்பட்ட விக்கிரகம். (தாயு. சுக. ௧௦. உரை.) [ஆப். அ௦. அர்சா.]

அர்ஜி—விண்ணப்பம். (உவின். ௯௬௯.) [பார்சி.]

அர்ஜிதாஸ்து—விண்ணப்பப்பத்திரம். (உவின். ௯௬௯.) [பார்சி.]

அர்டணம் — 1. சந்தோஷம். (உ-ம்.) "சோகமோக அர்ஷணதிகள் அந்தக்கரணதருமமாசவும்" (சி. சி. அ: ௫௦. சிவாச்; உவில். ௬௯௬.) [ஹர்ஷண.] 2. நித்திய யோகத்தொன்று.

அர்த்தக்கிரியாஸ்திதி—யாதொருபதார்த்த செரிசநத்தினுலே ஞானமான து கெடுக்கப்படாமலிருக்குமோ அது. (சி. சி. அளவை. உ. சிவாச்) [அர்த்தக்ரியாஸ்திதி.]

அர்த்தக்கிரியார்த்தி— பிரயோசனமான கிரியையை யிச்சிக்கின்றவன். (பௌட். பாச. ௫௮.) [அர்த்தக்ரியா; அர்த்தி.]

அர்த்தசஞ்சயக்கிருது—ஒருவகையதிசாரி. (கூர்மபு. திருக்கல். ௬. உரை.) [அர்த்தஸஞ்சயக்ருத்: அர்த்த - பொருள். ஸஞ்சய-ஈட்டல். க்ருத்-செய்பவன்.]

அர்த்தசந்திரபாணம் —பிறைமுகங்கொண்ட அம்பு. (உ-ம்.) "அர்த்தசந்திரபாணமானது தைக்கின்ற" (ஞானவா. சிகித். ௬௭. உரை) [அர்த்தசந்த்ரபாண.]

அர்த்தசந்திரம்—வியூகவகை நான்கனுளொன்ருகிய அசங்கத்தின் விரியாறனுள் ஒன்று. (உ-ம்.) "தோலாவர்த்தசந்திரப்பேர் வியூகம்வகுத்தான்றுளவோனே" (பாரத. ௯-ம் போர். உ; வள். ௭௬௭. உரை. குறிப்பு) [அர்த்தசந்த்ர.]

அர்த்தசந்திரன்-1. பாதிச்சந்திரன். (உவில். ௭௬.) 2. பாதிச்சந்திரன்வடிவான வளைவாக கத்தைப் பதித்துவைக்கும நகக்குறி. (கொக்கோ. ௫:௫௮.) 3. பாதிச்சந்திராகாரமாக வளைக்கப்பட்ட கை. (உவில். ௭௬.) 4. பிறைமுகாஸ்திரம். (உவில். ௭௬.) 5. புருவநடுவுக்கு மேலே மூன்றங்குலம் வியாபித்து நிற்கும் பிறைவடிவுடைய கலை; அது: பன்னிரண்டுகலைகளில் ஆரு

வது. (பிராசாததீபி; சி. சி. உ: எ௬ ஞாடப்; சி-லி. கிரி. கூ-ம் உரையும். [அர்த்தசந்த்ர: அர்த்த-பாதி. சந்த்ர.)

அர்த்தசம்வாதம் — உண்டில்லை என்னும் வாதம். (சி. சி. அளவை. ௪. சிவாக்.) [அர்த்த-உள்ளதன்மை. ஸம்வாத-வாக்குவாதம்.]

அர்த்தசம்வித்தி—விடயத்தை யறியும் அறிவு. (பௌட். பும். ௧௫௪௯.) [அர்த்த-விஷயம். ஸம்வித்-அறிவு.]

அர்த்தசா—விருத்தபாகமாகிய பிறை வடிவு. (உவின். ௬௦.) [அர்த்தஜ்யா.]

அர்த்தசாமம் — இரவில் நடுச்சாமம். (உ-ம்.) "அர்த்தசாமத்தில் நித்திரை செய்யும்வஞ்சிக்கொடிபோன்றசூடாலையானவள்" (ஞாநவா. சிகித். எ௨. உரை.) [அர்ய; யாமம-இரவு.]

அர்த்தசாமர்த்தியம் — சொற்பொருளின் வலிமை. (சைவப்பி. ௯௯.) [அர்ய-பொருள். ஸாமர்த்ய-வல்லமை.]

அர்த்தசாலம் — பொருட்கூட்டம். (உ-ம்.) "சுபாசராத்மசமாயிருக்கிற அர்த்தசாலமும் கிரமத்தி லுண்டாம்" (சி. சி. அளவை. ௧௯.) [அர்த்த; ஜால]

அர்த்தசித்திரம் — தாளப்பிரமாணம் பத்துவகையுளொன்றாகிய மார்க்கம் என்பதன் பிரிவுகள் ஆறனுள் ஒன்று; அஃது: அரை மாத்திரை யோர்தாளையாகக் கொண்டது. (மா.) [அர்த்த;சித்ரம்.]

அர்த்தநாரீசத்துவம் — பாதி பெண்ணாயிருக்குஞ் சிவமூர்த்தம். (வி-ணீ. உஎஎ.) [அர்ய-பாதி. நரீ- பெண். [ஈஶூகூம.]

அர்த்தநாரீசுரன் — பாதியுடம்புபெண்ணாக இருக்குஞ்சிவன். (உ - ம்.) "திருவளருமர்த்தநாரீசுரப் பொற்பமைமையதில்" (மச்சபு. புரா. ௨௨.) [அர்ய நாரீ; ஈஶ்வர:]

அர்த்தநாரீசுவரம் — பாதிச்சரீரம் பார்வதியாரும் பாதிச்சரீரஞ் சிவபெருமானுமாக வீற்றிருந்தகோலம். (சிவபரா. எ௨. பக்.)

அர்த்தப்பிரகாரன்—1. அர்த்தப் பிரகரதோஷம்; அது: ஞாயிற்றுக்கிழமை முதற் சனிக்கிழமை வரையும் முறையேவரும் நாலாஞ்சாமம், ஏழாஞ்சாமம், இரண்டாஞ் சாமம், ஐந்தாஞ்சாமம், எட்டாஞ் சாமம், மூன்றாஞ்சாமம், ஆறாஞ்சாமம் என்னுங்காலங்கள். (விதாந. குணகுண. ௫௦.) 2. புதன்மகன். (குமாரசுவா. திநாதி. உ.) [அர்த்த; ப்ரஹர.]

அர்த்தப்பிரதீதி — அர்த்தமறிதல். (உ-ம்.) "இப்படியிருக்கிற வாக்கியங்களால் வைதிகலௌகிக ஏதுவாயிருக்கிற அர்த்தப்பிரதீதியுண்டாம். (சி. சி. அளவை. ௧௯. சிவாக்.) [அர்ய - பொருள். ப்ரதீதி-அறிவு.]

அர்த்தப்பிராணன் — அற்பப்பிராணனுக்கும மகாப்பிராணனுக்கும் இடையாக உச்சரிக்கப்படும் எழுத்துக்கள். (பி. வி. ௪. உரை) [அர்ய; ப்ராண.]

அர்த்தபிதாபூதம்— ஒருவகை நோய்; இது: கண்ணிமைகள் சரிந்து தொங்குதல், தலைமயிர்முறைத்தல், தாடையுலரல், மூக்கிலைநீங்குதல், துக்கித்தமுகம், உருட்டியுருட்டிப் பார்க்குதல், அகாலநித்திரை, மந்தாக்கினி, சுபாவவார்த்தை, சொப்பனத்தில் இறந்தவர்களைக்கண்டு பேசுதல், கருப்பாகியவஸ்து, வெல்லம், பால், மாமிசம் இவைகளில் விருப்பம் என்னும் இக்குணங்களை யுண்டாக்கும். (சீவரட். உ௯௫.)

அர்த்தபிப்பலீ — பாதிவான்மிளகு. பி. வி. உக. உரை.) [அர்ய; பிப்பலி.]

அர்த்தபிருட்டகம் — அங்கக்கிரியை பதினாறிலொன்று. (சிலப். அரங்கே. ௧௨.) [ஹ்ருஷ்டக.]

அர்த்தபேதரோகம் — சிரசில் வரும் ஒருவகைரோகம். (சீவரட். உ௯௧.) [இது சிரசிலொருபக்கத்தைப் பேதிப்பதால் அர்த்தபேதமெனப்பட்டது.]

அர்த்தம்—1. இரந்துகேட்டல். (உவில். எக.) 2. ஒருகூறு. (உவில். எ௨.) 3. சடப்பொருள். (உவில். எக.) 4. சம்பத்து. (உவில். எக) 5. சொல்லினாற் கருதப்படும் பொருள். (உ-ம்.) "மருந்தனவேதார்த்த முழுவது முரைக்கும்" (சூத. எக்கி. பூ. ௪: ௧௪.) 6. திரவியம். (உவில். எக.) 7. தொடக்கம். (உவில். எக.) 8. நன்றாயிருத்தல். (உவில். எக.) 9. பாதி. (உவில். எ௨.) 10. பிரயோசனம். (உவில். எக.) 11. பிறப்பு. (உவில். எக.) 12. வியாச்சியம். (உவில். எக.) [1, 3, 4, 5, 6, 7, 8, 10, 11, 12. அர்த்த 2, 9. அர்த்த.]

அர்த்தம்பண்ணல் — பொருள் சொல்லல். (உவின். ௬௦.)

அர்த்தமண்டபம் — கோயிலிலே மூலத்தானத்துக் கடுத்தமண்டபம். (உவின். ௬௦.) [அர்ய; மண்டப.]

அர்த்தமாத்திரயோசந நிர்விகற்பக் காட்சி — குணங்களையின்றிப் பொருண்மாத்திரம் அகப்படுக்கும் நிருவிகற்பக்காட்சி. [அர்த்த - பொருள். மாத்ர-மட்டும். யோஜந-பொருந்துகை. நிர்விகல்ப- விகற்பமின்மை. காக்ஷி-பிரத்தியட்சம்.]

அர்த்தரதன் — சாமர்த்தியத்தில் ரதிக்குத் தாழ்ந்தவனான ஒருவகைத் தேர்வீரன். (உ-ம்.) 'நண்ணுமர்த்தரதர்க்குநாயகர்' (பாரத. அணி. ௯.) [அர்த்ய; ரத.]

அர்த்தராத்திரி — பாதியிரா. (உ - ம்.) "அர்த்தராத்திரியதாகு மமரர்கோன் வாழுமூரில்" (மச்சபு. சூரியசங்.௧௨.) [அர்யராத்ரி: அர்த்த -பாதி. ராத்ரி-இரா.]

அர்த்தவாதம் — 1. பிரயோசனத்தைச்சொல்லுதல். (சைவப்பி. ௯௧.) 2. புகழ்தல், துதித்தல். (உ-ம்.) "பட்டு

க்களைப்போல வேதார்த்தத்தின் மகிமையைத் துதிப்பதே யர்த்தவாதமெனவும்" (வேதா. சூ. கூ. உரை.) (அருத்தவாதம்பார்.) [அர்; வாத.]

அர்த்தவுதயம் — அர்த்தோதயம். (உ-ம்.) "மன்னுமர்த்த வுதயமகோதயம்" (சேதுபு. தநு. சுச.) [அர்; உதய]

அர்த்தவேதம்—உபவேதங்கள் நான்கனுளொன்று; அது: தெக்ஷண, ஆச்சியசரு உபகாராதிகளை நிண்ணயம் பண்ணுவித்துத் தருமார்த்தசதுர்வித புருஷார்த்தத்திற்குஞ் சாதகமாயிருப்பது. (வேதா. சூ. கூ. உரை.) [அர்; வேத.]

அர்த்தாங்கம் — 1. அர்த்தாங்கவாதரோகம். (உ-ம்.) "இழியுமிர்தவள்ளியத்தாந்தயிலப்பேரை யியம்புங்காலர்த்தாங்கமிசுவுவீக்கம்" (தைல. தைலவ. சஉஅ.) 2. பாதிச்சரீரம். (ஆப். எசு.) [அர்-பாதி. அங்க-சரீரம்.]

அர்த்தாங்கவாதம் — பாரிசவாதம். (சீவரட். சசுசு.) [அர்; அங்க; வாத]

அர்த்தாங்கீகாரம்— ஒருபகுதியை யங்கீகரித்தல், பாதியையங்கீகரித்தல். (உ-ம்.) "இங்ஙனங்கூறிய உபதேசமொழிகளை யர்த்தாங்கீகாரமாக உட்கொண்டு" (வைரா. சத. கக. அவதாரி.) [அர்தாங்கீகார: அர்-பாதி. அங்கீகார-ஒத்துக்கொள்ளுதல்.]

அர்த்தாட்சி — பக்கப்பார்வை. (ஆப். அசு.) [அர்தாக்ஷி.]

அர்த்தாத்— அர்த்தத்தினாலே, இருக்கிறபடி, உள்ளபடி. (ஆப். அசு.) (உ-ம) "சாத்திருத்துவ முண்டான பொழுதேயிச்சை யர்த்தாத்சித்தம்" (சி.சி. உ: ருசு சிவாச்.) [அர்த்த மென்பது அர்தாத் என வடமொழி மூன்றும் வேற்றுமையில் வர்தது.]

அர்த்தாதுரம்— பொருளாசை. (உவின். சு0) [அர்த்த-பொருள். ஆதுரம்-ஆசை.]

அர்த்தாந்தரநியாசம்—வேற்றுப்பொருள் வைப் பென்னும் ஓரலங்காரம். (விசா. இலக். கக்சு; குவ. சுக.) [அர்த்தாந்தரந்யாஸ: அர்த்த-பொருள். அந்தர-வேறு. ந்யாஸ-வைப்பு.]

அர்த்தாந்தரம் — 1. தோல்வித்தானம் இருபத்திரண்டில் ஒன்று; அது: தனக்குவருந் தோல்வியைப் பிறிதொன்றுபேசி மறைத்தல். (சி. சி. அளவை. சச. மறை. சிவஞா.) 2. பிரகிருதத்திற் சம்பந்தமான பொருளுடைய சொல். (தர்க்கபா. அசு.) 3. வேறர்த்தம். (ஆப். அஉ.) 4. வேறுகாரணம். (ஆப். அஉ.) [அர்த்தாந்தர: அர்த்த-பொருள். அந்தர-வேறு.]

அர்த்தாபத்தி — அருத்தாபத்தி யென்னும் பிரமாணம். (சி. சி. அளவை. க.) [அர்தாபத்தி: அர்த-பொருள். ஆபத்தி-பேறு.]

அர்த்தாபத்தியலங்காரம் — பொருட்பேற்றுப்பிரமாண அணி. (குவல. சுஉ) [அர்த்; ஆபத்தி; அலங்காரம்]

அர்த்தி — 1. இரந்து கேட்போன். (ஆப். அசு.) 2. ஏவியதுசெய்வோன். (ஆப். அசு.) 3. முறையீடுசெய்வோன். (ஆப். அசு.) 4. வாதி. (ஆப். அசு.) [அர்த்திர்.]

அர்த்தித்தல்—இரத்தல், வேண்டுதல். (தாயு. மௌன. சு. உரை.)

அர்த்திதவாதம்— ஒருவகைவாதரோகம். (சீவரட். கசுசு.) [இது பாதிமுகத்தை விகாரப்படுத்துதலால் வந்த பெயர். அர்த்யித; வாத.]

அர்த்தோதயம் — அறுபதுவருஷத்துக்கொருமுறை வரும் ஒரு விசேடகாலம்; அது: தைமாசத்திலே ஞாயிற்றுக்கிழமையும் அமாவாசையுந் திருவோண நட்சத்திரமுங் கூடியகாலம். (சைவ. வி.) (உ-ம்.) "அயாசங்கிராமம்சிமகத்தி லர்த்தோதயத்தில்" (அருணசலபு. திருமலை.வலம். உசு.) [அர்த்யோதய.]

அர்ப்பகன்—பாலகன். (வாச.) [அர்ஹக.]

அர்ப்பணம்—1. ஒப்பித்தல். (உ-ம்.) "சுசுராார்ப்பணம்" (ஞானவா அாச்ச. சசு.) 2. கொடுத்தல். (ஆப். அடு) 3. திருப்பிக்கொடுத்தல். (ஆப். அடு.) 4. தளைத்தல். (ஆப். அடு) 5. நிவேதித்தல். (ஆப். அடு.) [அர்ப்பண.]

அர்ப்பம்—1. ஒளியில்லாதது. (உவில். எசு.) 2. பனி. (உவில். எசு.) 3. பின்ளை. (உவில். எசு.) 4. பூண்டு. (உவில். எசு.) [அர்ப்ஹ.]

அர்ப்பன்—மாணுக்கன். (உவில். எசு.) [அர்ப்ஹ:]

அர்ப்பித்தல் — நிவேதித்தல். (உவின். சo.)

அர்ப்பிதம் — 1. கொடுக்கப்பட்டது. (உவில். எசு.) 2. நிவேதிக்கப்பட்டது. (உவில். எசு.) [அர்பித.]

அர்ப்பீடம்—அரப்பாயம். (வீரசோ. பொருட், உச. உரை.)

அர்ப்புநோட்டரோகம் — உதடுகளிலே சிறிய பேரீச்சங்காய்போல வீக்கத்தை உண்டாக்கும் ஒரு ரோகம். (சீவரட். உஎக.)

அர்ப்புதம்—1. இந்தியாவிலே மேற்குத்திசையிலிருக்கும் ஒருமலை. (ஆப். அடு.) 2. ஓரெண்; அது: ஆயிரம் இலட்சங் கொண்டது. (த. நி. போ. உடு.) பத்துக்கோடி. (சி-லி. ஞான. உடு. சு.) 3. பாம்பு. (ஆப். அடு.) 4. மாமிசமொத்தை. (வாச.) (உ-ம்.) "அர்ப்புதவர்த்துமரோகம்" 5. மேகம். (ஆப். அடு.) [அர்வுத.]

அர்ப்புதவர்த்துமரோகம்— கண்ணி

மையினோரங்களிலே மாமிசமொத்தைப்போலத் தடித்தலையுண்டாகும் ஒருநோய். (சீவரட். உசரு.) [அர்வு-ஊ-மொத்தை. வர்த்தும-இமை.]

அர்வாசீநம்—1. நவீநகாலத்தது. (ஆப். அரு) 2. பின்வருவது. (ஆப். அரு.) 3. மாறுனது. (ஆப். அரு.) [அர்வ்வாசீந.]

அர—1. பாம்பு. (உ-ம்.) "பொருப்பின் முழையெய்தி மிகவொய்தின்-உள்வாழரக்கொண்டெழுதிண்கலுழனொத்தான்" (இராமா. கடறு. அச.) [அரா என்பது அர என நின்றது.]

அரக்கம்—1. சொம்பரக்கு. (கா. வைத்.) 2. திருநாமப்பாலைப்பூண்டு. (கா. வைத்.) 3. நன்னாரிக்கொடி. (உவின். ரூச.)

அரக்கர்—1. அசுரர். (உ-ம்.) "அசுரன்" பார். 2. இராக்கதர். (உ-ம்) "அரக்கரோரழிவு செய்து கழிவரேல்" (இராமா. வாலிவதை. அக.)

அரக்கல்—1. "அரக்கல்" என்னும் ஒருவிடங்சோள்வினைமுற்று. 2. அரைத்தல். (சி) 3. இருப்புவிட்டுப் பெயர்தல். (உவின். ரூச) 4. தேய்த்தல். (உவின். ரூச) 5. புடைபெயர்தல். (உ-ம்.) "கல்லரக்குங் கடுமையவல்ல" (இராமா. நகர்நீ. உ௨௦.) 6. வருநதச்செய்தல். (உ-ம்) "எல்லரக்குமயினுதிவேலிராவணனும்" (இராமா. ஊர்தேடு. உ௯௦.) [அரங்கு என்னுந் தன்வினையினின்ற ஙகரங் ககரமாய்த் திரிந்து பிறவினைப்பொருளில்வந்தது.]

அரக்கன்—அசுரன். (உ-ம்.) "ஆம்பன்முகவரக்கன்" (கல்லா. க.) 2. இராக்கதன். (உ-ம்.) "ஆயிடையரக்கன்" (இராமா. நிந்தனை. உக.) [ரக்ஷஸ்.]

அரக்காம்பல்—செவ்வாம்பற்பூண்டு. (உ-ம்.) "உழத்தியராய்ந்து களைகடிந்திட்டநாட்பிழைத்து-மருவரக்காம்பல் பங்கயந்தழைந்து" (சூத. முத்தி. அ: ௯௦.) [அரக்கு-சிவப்பு.]

அரக்கி—இராக்கதஸ்திரி. (உ-ம்.) "மைவண்ணத்தரக்கிபோரில்" (இராமா. அகலி. அஉ.)

அரக்கியர்—இராக்கதப்பெண்கள். (உ-ம்.) "இருளுடலரக்கியர்" (கல்லா. எரு.)

அரக்கில்—அரக்குமாளிகை. (உ-ம்.) "கைபுனையரக்கில்லை" (கலித்தொகை. உரு.) [அரக்கு-மெழுகு. இல்-வீடு.]

அரக்கிலச்சினை—மெழுகினால் வைத்த முத்திரை. (உ-ம்.) "அரக்கிலச்சினையில்வைத்தவெஞ்சலிலோலைகாட்ட" (சூளா. தூது. அஉ.)

அரக்கினிரதம்—சொம்பரக்குக் கஷாயம். (உ-ம்.) "அரக்கினிரதஞ்சுவச்சமும்" (தைல. தைலவ. உ௯.)

அரக்கு—1-3. அரக்கென்னேவலுந் தெரிநிலைவினைப் பகுதியும் பெயரெச்சத்தொகையும். 4. கொம்பரக்கு. (உ-ம்.) "வராககற்ணபலையரக் கோர்வகைக்கீரைம்பலமாம்" (தைல. தைலவ. உச.) 5. சாதிலிங்கம். (உ-ம்.) "அங்கையரக்குத்தோய்ந்தன்ன சேயிதழ்" (சிறுபா. எச.) 6. சாராயம். (உவின். ரூச.) [அர்நியபா.] (பத்திலகிரி பாடலையும் போகர் பூசாவிதியையும் பார்) 7. சிவப்பு. (உ-ம்.) "அரக்குண்பஞ்சிக்கிடரட்டி" (சிந்தா. கநக. அ.) 8. சிவப்புமெழுகு. (உ-ம்.) "தீயூட்ட ரக்கேயென்ன வுருகி" (கந்தபு. மார்க்கண். சரு.) 9. தேன். (உவின். ரூச.)

அரக்குக்காந்தம்—ஒரு வகைக்காந்தக்கல். (கா. வைத்.)

அரக்குத்தைலம்—கொம்பரக்குமுதலியவற்றிலிருந்து வடிககும் ஒரு வகைத் தைலம். (உ-ம். தைல. தைலவ. ருக, ௬௦. பார்.)

அரக்குதல்—1. அழித்தல். (உவின். ரூச; பிங்க.) 2. இருப்புவிட்டுப்பெயர்த்தல். (உவின், ரூச) 3. உரைஞ்சுதல், தேய்த்தல். (உ-ம்.) "அரக்கனீரைந்து வாயுமலறவே யரக்கினனடியாலும்" (தேவார. திருவை. ௬௦. திருநா.) 4. சகரம் பூமியிற்படப் புடைபெயர்தல். (சி.) "பிள்ளையரக்கி யரக்கிவந்தது" (உவின். ரூச.) ["அரக்கல்" "அரக்குதல்" இரண்டும் ஒருபொருளன.]

அரக்குநீர்—இரத்தநீர் (உ-ம்.) "புண்ணிடையரக்குநீர் பொழியச் சாம்புவர்" (சூத. முத்தி. எ: உரு.) [அரக்கு-சிவப்பு.]

அரக்குமஞ்சள்—மிகச்சிவந்தமஞ்சள். (உவின். ரூச.)

அரக்குமாளிகை—செம்மெழுகாற் செய்யப்பட்டவீடு. (உ-ம்.) "அரக்குமாளிகையில் வீந்தார்" (பாரத. திரௌ. க.)

அரகர—சிவ சிவ எனப்பொருள்படும் ஒரு அடுக்குமொழி. (பெரியபு. ஞாந. ௬௦௯உ.) [ஹரஹர.]

அரங்க—1. அரங்கு என்னும் வினையடியாகப் பிறந்த ஒரு வினையெச்சம். (உ-ம்.) "அரங்கல்" பார். 2. முற்றுக. (உ-ம்.) "நூலரங்கக்கற்றூர்" (உவின். ரூச.)

அரங்கக்கூத்தி—பகிரங்கமான நாடகசாலையிற் கூத்தாடும் பெண். (உ-ம்.) "அரங்கக்கூத்தியெனச்செல்லும்" (கூர்மபு. நவகண். ௬௯)

அரங்கக்கூத்தியர்—பகிரங்கமான நாடகசாலையிற் கூத்தாடும் பெண்கள். (உ-ம்.) "அரங்கக்கூத்தியராயிரம்" (கூர்மபு. கண்ணன்மண. உ௬௦.)

அரங்கசீவகன்—மைப்பூச்சுவேலை செய்து சீவிப்போன். (உவில். எகச.) [ரங்கஜீவக: ரங்க-சபை. ஜீவக-சீவிப்போன்.]

அரங்கபூசை—அரங்கதேவதைக்குச் செய்யும் பூசை. (உ-ம்.) "சினந்தணிந்தரங்கபூசை செய்வனென்று" (பாரத. வாரணா. சுரு.) [ரங்க; பூஜா.]

அரங்கபூதி—ஐப்பசிமாசப்பௌரணை வரும் இராத்திரி. (ஆப். எகள.) [ரங்கபூதி.]

அரங்கபூமி—1. நாடகசாலை. (உவில். எகஞ.) 2. யுத்தகளம். (உவில்.எசகூ.) [ரங்கபூமி.]

அரங்கம்—1. அபிநயசாலை, கூத்துப்பயிலிடம். (உ-ம்.) "ஆடம்பலமு மரங்கமுஞ் சாலையும்" (சிந்தா. முண்டக. கக.) 2. கல்விச்சாலை. (உ-ம்.) "செம்மலியரங்க மன்றந்தெற்றியே மூதிலவெல்லாம்" (கந்தபு. சூரனகர்புகு. உசு) 3. கூத்தாடிப்பாடல். (உவில். எசகூ.) 4. சத்திரம். (மா.) 5. சதுரச்சாலை.(மா) 6.சபை. (உ-ம்.) "சூளிகை யரங்கமன்றம்" (கந்தபு. நகர்செய்.எ.) 7. சிலம்பகூடம். (மா.) 8. சூது பயிலிடம். (மா.) 9. சோழதேசத்துள்ள ஸ்ரீரங்கம் என்னும் விட்டுணுதலம். (உ-ம்) "அலங்காரமளிக்குந்தென் னரங்கத்திடை தொழுதான்" (பாரத. அருச்சுனன்றீ. கக) 10. நிறம். (உவில். எசகூ.) 11. யாற்றிடைக்குறை. (உ - ம்.) "அந்திலரங்கத் தகன்பொழில்" (சிலப். காடு.) 12. யுத்தகளம். (உவில். எசகூ.) 13. வண்ணங் கொடுக்குமை. (உவில். எசகூ.) [1, 2, 3, 4. 5, 6, 7, 8, 9, 10, 12, 13. ரங்க.]

அரங்கர் — ஸ்ரீரங்கத்துப் பெருமாள். (உ-ம்.) "கண்ணியவரங்கர் முன்னே கவியரங்கேற்றினானே" (இராமா. தனியன்.) [ரங்க:]

அரங்கல் — 1. அழிதல். (உ-ம்.) "பிணியரங்கவினையகல" (இராமா. பால. குலமு. உ.) 2. அழுந்தல். (உ-ம்) "மஞ்சரங்கியமார்பினும்" (இராமா. இராவணவ. சகஎ.) 3. ஈடழிதல், மனங்கலங்கல். (உ-ம்.) "கோடரங்கிடவெழுங்குவிதடக் கொங்கையார்" (இராமா. பால. எதிர். ஙஙு.)

அரங்கன்—விட்டுணு. (உ- ம்.) அத்தனச்சனரங்கன்" (நாலாயி. தேட்ட. கூ.) [ரங்க.]

அரங்கு—1-3. அரங்கென்னேவலுந் தெரிநிலைவினைப்பகுதியும் பெயரெச்சத்தொகையும். 4. அறை. (உவின். ஙசு.) 5. இடம். (உவின். ஙசு.) 6. சபை. (உவின். ஙசு.) 7. சூதாடுதற்கு வகுத்ததானம். (உ-ம்.) "அரங்கின்றி வட்டாடியற்றே" (வள். சௌசு.) 8.நாடகசாலை. (உ-ம்.) "அவைபுகழரங்கின்மேலாவோளணிநுதல்" (கலித்தொகை. எக) 9. போர்க்களம். (சி.) 10. யாற்றிடைக்குறை. (சி.) [4, 5, 6, 7, 8, 9. ரங்க.]

அரங்கேற்றம் — சபையாரிடங்கொண்டுவந்து அவரதங்கீகரிப்பைப் பெறல். (உவின். சஙூ.) [ரங்க—சபை. ஏற்றம்—ஏற்றுதல்.]

அரங்கேற்று— 1. அரங்கேற்றம். (உவின். ஙசு.) 2—4. அரங்கேற்றென்னேவலுந் தெரிநிலைவினைப்பகுதியும் பெயரெச்சத்தொகையும்.

அரங்கேற்றுதல்—1. அரங்கேறச்செய்தல். (சி) 2. புதிதாக இயற்றப்பட்ட ஒரு நூலைச் சபையார்முன்கொண்டுவந்து தெரிவித்து அவரது சம்மதத்தைப் பெறல். (உ-ம்) "கண்ணியவரங்கர் முன்னே கவியரங் கேற்றினானே" (இராமா. சிறப்பு. கக) 3.முதன்முறைசபைக்கு முன்கொண்டுவருதல். (உவின். ஙசு.)

அரங்கேறுதல்—1.சபைக்குமுன்வருதல். (உவின். ஙசு.)

அரங்கொழிசெய்யுள்—புறநாடக உருக்களுள்இறுதியுரு.(சிலப்.ஙு:சசு. உரை.)

அரசங்கம்— அரசினுக்குளவாகிய உறுப்புக்கள்; அவை: அமைச்சு, நாடு, அரண், பொருள், படை, நட்பு என்பன. (சி; வள். ஙஅக. பரி.)

அரசசிந்நம்—மரபுபற்றி யரசர்க்குரியனவாகிய விசேடமானகுறிகள்; அக்குறிகள்:முடி,குடை,கவரி,தோட்டி முரசு, சக்கரம், யானை, கொடி, மதில், தோரணம், நீர்க்குடம், பூமாலை, சங்கு, கடல், மகரம், ஆமை, இணைக்கயல், சிங்கம், தீபம், இடபம், சிங்காசனம், என்னும் இருபத்தொன்றுமாம். (மா;தொல். பொரு.கூஉஎ.சே. திவா. சஉ வது.]

அரசன்மை — பகையரசன் அணித்தாக இருக்கை. அஃது ஈதிகள் ஆறனுள் ஒன்று. (வள். எகூஉ. பரி.)

அரசநீதி— அரசு நடாத்து முறைமை கூறுநூல். (உ-ம்.) "தேறலார்தமைத் தேறலுந் தேறினர்த்தேறலாமையுமென்று— மாறலாருடன் மலைதலுமாறுடன்மருவிவாழ்தலுமுன்னே—யாறலாதனவரசருக்கென்று சொண்டரசநீதியிற்சொன்னார்" (பாரத.குது. எஉ.)

அரசபரி—பெண்களதுமணம்போலமிக்கமணத்ததாய் வாழைமடலைப்போலச் செவியுளதாய் நான்குகாலும் பிடரும் முகமும் முதுகும் முன்புறமும் வெண்ணிறமாய் எண்பத்திரண்டு விரலுயர்ந்த குதிரை. (சி)

அரசம்—1.சாரம் இல்லாதது. (வாச) 2. சுவையில்லாதது. (வாச.) 3. மூலரோகம். (உ - ம்.) "அரசம்மொலிகுன்மம்" (தைல. தைலவ. அசு.) [1, 2, அரஸ.]

அரசர்க்குழு—அரசர்க்கைம்பெருங்குழு. (சி.)

அரசர்க்குத்துணைவர்—அரசர்க் கெண்பேராயம். (உவின். ஙசு.)

அரசர்க்குறுதிச்சுற்றம் —அரசரைப் பற்றி நின்றவர்க் குயிர்த் துணை செய்வோர்; அவர்: அந்தணாளர், நிமித்திகப் புலவர், நட்பாளர், மடைத்தொழிலாளர், மருத்துவக்கலைஞர் என்னும் ஐவர். (மா.) இதை அடுத்த நட்பாளரு மந்தணாளரும் - மடைத்தொழிலாளரும்—மருத்துவக்கலைஞரும்நிமித்தாரும் நீண்லவேந்தர்க்குரைத்தவைம்பெயருறுதிச்சுற்றம்" என்னுஞ் சேந்தன்திவாகரச் செய்யுளாற் பெறப்படும்.

அரசர்க்கைம்பெருங்குழு — அரசரோடு கூடித் தொழினடாத்தும் ஐவர்; அவர்: மந்திரியர், புரோகிதர், சேனாபதியர், தூதுவர், ஒற்றர் என்பவர். இதனை "அமைச்சர்புரோகித

ர்சேனாபதியர்—தவாத்தொழிற் றூது வர்சாரணரென்றிவர் - பார்த்திபர்க் கைம்பெருங் குழுவெனப்படுமே" என்னுந் திவாகரச் செய்யுளிற்காண்க.

அரசர்க்கெண்பேராயம் — அரசர்க்குத் துணைசெய்யும் எண்மர்; அவர்: மந்திரியர், கருமவிதிகாரர், சுற்றம், கடைகாப்பாளர், நகரமாக்கள், படைத்தலைவர், இவுளிமறவர், யானைவீரர் என்பவர். இதனைக் "கரணத்தியலவர்கருமவிதிகள்- கனகச்சுற்றங் கடைகாப்பாளர்-நகரமாந்தர்நனிபடைத்தலைவர்- யானைவீரரிவுளிமறவரினையவரெண்பெருமாயமென்ப" என்னுந் திவாகரச் செய்யுளிற்காண்க.

அரசர்குணம் — தூங்காமை, கல்வி, துணிவு என அரசர்க்குரிய மூவித இலக்கணங்கள். (உவின். ௩௪) இது "தூங்காமைகல்விதுணிவுடைமையிம் மூன்று-நீங்காநிலனாள்பவற்கு" என்னுங் குறளாற் பெறப்படும். (வள். ௩௮௩) [தூங்காமை- விரைவின்மை.]

அரசர்பா—அகவற்பா, (உ- ம்) "அரசர்ப்பாவாலாற்றுப் படைமேல்" (இலக்கணவிள. பாட். ௧௧௩.)

அரசர்பின்னோர்— வணிகர். (உ - ம்) "அரசர் பின்னோரகநகர் மருங்கில்" (சிலப்- அடைக்கல. ௭௦௧.)

அரசர்மன்னன் — துரியோதனனென்னும் ஓரரசன். (சூ. நிகண். உ:௧௫.)

அரசராறுதொழில்—அரசர்க்குரிய ஆறுதொழில்கள்; அவை: ஈதல், பல்லுயிரோம்பல், ஓதல், படைக்கலம்பயிலல், பகைத்திறந்தெறுதல், வேட்டல் என்பன. (வள். ௩௮௪; திவா. ௧௨வது மா.)

அரசரியல்பு— அரசர்க்கெப்பொழுதும் இருக்கவேண்டிய தன்மைகள்; அவை: அஞ்சாமை, ஈகை,அறிவு,ஊக்கம் என்பன. (உவின். ௩௪.) இது: "அஞ்சாமை யீகையறிவூக்க மிந்நான்கு-மெஞ்சாமைவேந்தர்க்கியல்பு" என்னுங் குறளாற் பெறப்படும். (வள். ௩௮௨.)

அரசரொளி — குடியோம்பல், கொடை, செங்கோல், தலையளி ஆகிய அரசர்க்குரிய மகிமை. (உவின்.௩௪.)

இது "கொடையளிசெங்கோல் குடியோம்பனான்கு-முடையானாம் வேந்தர்க்கொளி" என்னுங் குறளாற்பெறப்படும். (வள். ௩௯௦.)

அரசவநம் — திருவாவடுதுறையென்னும் ஒரு சிவஸ்தலம். (தணிகை. மு கவு.)

அரசளித்தல் — இராச்சிய பரிபாலநஞ்செய்தல். (உ-ம்.) "ஆரூரரசளிப் பவரருளினால்" (பெரியபு. ஞான. ௫௦௬.)

அரசன் ——1. இராசா. (உவின்.௩௪.) 2. எப்பொருட்கு மிறைவன். (உவின். ௩௪.) 3. கார்முகிற்பாஷாணம். (கா. வைத்.) 4. துருசு. (சா. வைத்.) 5. பாணகெந்தகம். (சா. வைத்.) 6. வியாழன். (உ - ம்.) "ஓகையோடரசனேகிடுகின்றான்" (கந்தபு. திருச்செந்தி. ௧௮.)

அரசன்விருத்தம் — தொண்ணூற்றாறு பிரபந்தங்களுள் ஒன்று; அது; பத்துக் கலித்துறையும், முப்பது விருத்தமும், கலித்தாழிசையுமாக மலைவருணனையுங்,கடல் வருணனையும் நாட்டுவருணனையும், நிலவருணனையும், வாண்மங்கலமும், தோண்மங்கலமும் பாடிமுடிப்பது. இது முடிபுனைந்த அரசனுக்குரியது. (தொன்னூல். ௨௮௩. உரை.)

அரசன்விரோதி—1. கோவ்வைச்செடி. (சா. வைத்.) 2. பூவரசமரம். (கா. வைத்.)

அரசனாணை — இராசகட்டளை. (உவின். ௩௪.)

அரசனீதி—அரசாளிய காவலை நடாத்தும் முறை. (வள். ௩௯-ம் அதி.)

அசரனுயிர்காத்தோன்—காண்டாமிருகம். (உவின். ௩௪.) [இஃதொரு கதையிலே ஓரரசனுயிரைக் காத்ததென்பதனால் வந்தபெயர்.]

அரசாட்சி—அரசாளுதல். (உ - ம்.) "யானுமிவ் வரசாள்வனென்னேயிவ்வரசாட்சியினிதேயம்மா" (இராமா. யுத். மீட். ௨௨௧.)

அரசாணி — 1. அரசு செய்கிறவள். (மா.) 2. விவாகமண்டபத்திலே யரசங்கால் நாட்டும் மேடை. (மா.) [அரசு-அரசமரம், இராச்சியம். ஆணி-எல்லை, அச்சாணி.]

அரசாணிக்கால் — விவாகமண்டபத்திலே யரசாணியிலே முருக்குடன் நாட்டப்படும் அரசங்கொம்பு. (உவின். ௩௫.)

அரசாளுகை—இராச்சியஞ்செய்கை. (உ-ம்.) "அரசாளுதல்" பார்.

அரசாளுதல்—அரசுசெய்தல். (உ - ம்.) "மூண்டபகைசெற்றுலகமுற்றுமரசாளும்-பாண்டியன்" (திருவாதவூ. மந்திரி. ௨.)

அரசானம்—1. அரசமரம். (கா. வைத்.) 2. அரத்தைப்பூண்டு. (கா. வைத்.) 3. பேரரத்தைப்பூண்டு. (சா. வைத்.)

அரசி—1. அரசன்மனைவி. (உ-ம்.) "அரசிற் புகுந்துபேரரசியானக்" (இராமா. மந். ௬௯.) 2. அரசுசெய்கிறவள். (மா) 3.சிரேட்டமானவள். (உ-ம்) "உன்னைக்காட்டினன் கற்பினுக்கரசியென்றுலகில்" (இராமா. மீட். ௬௨௨.)

அரசிகம்—சுவையின்மை, ரச மில்லாமை. (ஆப். ௭௮.) [அரஸிக: அ; ரஸிக-சுவை.]

அரசியல்—1. அரசனதியல்பு. (வள். ௩௯-ம் அதி.) 2. அரசுநடாத்து முறைமை. (உ-ம்.) "அழைத்து நீடரசிய லுசாவி" (பாரத. வாரணா. ௬௨௮.)

அரசிருக்கை— 1. அரசன்வீற்றிருக்குஞ்சபை. (சூ. நிகண். ௫: ௪௯.) 2. அரசுசெய்யும் உரிமை. (உ-ம்.) "தநயனுங் குலோத்துங்கற்குத் தன்

னரசிருக்கைகல்கி" (திருவிளை. பழி யஞ். உ.) 3. சிங்காசநம்.

அரசிருத்தல்—1. இராசாவாக வீற்றிருத்தல். (உ-ம்.) "தென்னவனின்றக னன்ப பெண்ணரசிருந்து" (திருவிளை. தடாதகை. சகூ.) 2. வீற்றிருத்தல். (உ-ம்.) "விரைச் செழுங் கமலப் பொருந்—டரசிருக்கும் வேதியரது" (கூர்மபு. அரியய. கச.)

அரசிருப்பு—அரசிருக்கும் இடம். (உ-ம்.) "சகருமரசிருப்புமண்டபமும்" (திருவிளை. மாணிக். எஎ.) 2. அரசிருத்தல்.

அரசிலியை—ஒரு சிவஸ்தலம். (பெரியபு. ஞான. ககஙரு)

அரசிலை—1. அரசமரத்தின் இலை. (உவின். ஙரு.) 2. பிருகங்களுக்கிடும் அரசிலைக்குறி. (உவின். ஙரு.)

அரசிலைத்தூக்கம்—அரசிலைபோலுந் தொங்கல். (உவின். ஙரு.)

அரசிறை—1. அரசர்க்கரசன். (உ-ம்.) "அரசிறையரசரொடெழூதலும்" (சூளா. கல்யாண. ௧௦௧) 2. அரசர்க்கிறுக்கும் இறைப்பொருள்.

அரசு—1. அரசர். (உ-ம்.) "அரசுபடவமருழக்கி" (மதுரைக் காஞ்சி. கஉஅ.) 2. அரசன். (உ-ம்.) "நராதிபனுகருக்கரசாய்—மகுடமேந்தியகுரிசில்" (பாரத. குருகு. சஎ.) 3. அரசாட்சி. (உ-ம்.) "அரசேதஞ்சமென்றருங்கானடைந்த" (சிலப். புறஞ்சேரி. ஙச.) 4. அரசியல், அரசன்றன்மை. (உ-ம்.) "அரசுமேம்படீஇய" (சிலப். இந்திரவிழ. சகூச.) 5. அரசென்னுமரம். (உ-ம்.) "மீச்செலாதவரசு" (சூத. எக்கி. பூ. ங. ஙஉ.) 6. இராச்சியம். (உ-ம்.) "எனதுயிரரசுவாழ்வெண்பயாவையு + நினது" (பாரத. குருகு. சரு.) 7. சிரேட்டமானவன். (உ-ம்.) "மின்னூர்தமக்கோரரசே" (கந்தபு. தெய்வ. கசஙு.) 8. திருநாவுக்கரசுநாயனார். (பெரியபு. ஞான. சகஙச.)

அரசுகட்டில்—சிங்காசநம். (உ-ம்.) "அரசுகட்டிலிற் றுஞ்சியதறியாது" (சிலப். அழற்படு. எ.)

அரசுநீழலிலிருந்தோன் — புத்தன். (சூ. நிகண். க: உக.)

அரசுவா—நான்குகால்கள், துதிக்கை, கோசம், வாலென்னும் ஏழுறுப்பும் நிலத்திலே தோய்வதாய், கால்னகம் பாலையுஞ் சங்கினையும் ஒத்த வெண்ணிறம் உடையதாய், நான்குகால்கள் துதிக்கை வால் இரண்டுகொம்புகள் என்னும் எட்டுறுப்பாலுங் கொல்ல வல்லதாய், ஏழுமுழவுயர்ச்சியும் ஒன்பதுமுழ நீட்சியும் பதின்மூன்று முழச்சுற்று முடையதாய்ச், சிறுகண்ணுஞ் செம்புள்ளியு முடையதாய், மூற்பக்கமுயர்ந்து பிற்பக்கர் தாழ்ந்த அரசியானை. (உ-ம்.) "அரசுவாவதனொடாடி" (சூளா. கல்யாண. ௪௦௬.) (சே. திவா. கஉவது)

அரட்டம்—பாலைநிலம். (மா.)

அரட்டர்—1. குறுநிலமன்னர். (உ-ம்.) "அரட்டக்கரும்படை-மானவேற்குறுமன்னவர் கண்ணினூர்" (திருவிளை. உக்கிர. வேல்வளை. சகூ.) 2. குறும்பர், துட்டர். (உ-ம்.) "அடைந்தவர்க்குறுகணற்றுமரட்டரும்" (காஞ்சிபு. இருபத். ஙஅச.)

அரட்டன்—குறும்பன். (உ-ம்.) "ஆறிருமதியினெய்தியரட்டனையடர்த்து" (சிந்தா. பதுமை. ருக.)

அரட்டி—அச்சம். (உவின். ஙரு.) [இலத்தரனென்னுஞ் சொல்லினின்று பிறந்தது.]

அரட்டுகம் } —தச நாடகத்தொன்று.
அரட்டுசம் } (மா)

அரண்—1. அழகு. (உவின். ஙரு.) 2. கற்படை. (பிங்க.) 3. காவல். (உ-ம்) "அரணிலாவெனக்கட்டங்கிய வன்பிலூல்" (சிந்தா. காக. உருஎ.) 4. காவற்காடு. (உவின். ஙரு.) 5. கோட்டை. (உவின். ஙரு) 6. மதில். (உவின். ஙரு.) 7. மதில், கடல், மலை, காடு என்னும்நான்கனுலும் ஆகிய காவல். (உவின். ஙரு.) இது, "மணிநீருமண்ணும் மலையுமணிநிழற்காடு முடைய தரண்" உயர்வகலந்திண்மையருமையிந்நான்கி - னமைவரணென்றுரைக்கும்நூல்" என்னுங்குறட்களாற் பெறப்படும். (வள். எசஉ. எசங.)

அரண்மனை—1. கோட்டை. (மா.) 2. மதிலாற் காவல்செய்யப்பட்டவீடு. (மா.)

அரணம்—1. அழகு. (சி.) 2. இருப்பிடம். (உ-ம்.) "துன்னெறியவுணர்யாருந்துவன்றிய வரணமாகி" (கந்தபு. விந்தம்பி. க.) 3. கதவு. (சி.) 4. கருஞ்சீரகம். (உ-ம்.) "அரணம்பலங்கடுகை நீரடிமுத்தமொல்போகிபுட்பேந்திரங்கார மட்டம்" (தைல. தைலவ. ககஉ.) 5. கவசம். (உ-ம்.) "பாசம்பிணித்தவரணம்பரிவெய்த" (கந்தபு. அவுணர். ருச.) 6. கழித்தல். (உ-ம்) "புறம்பாகவைத்ததனையரணஞ்செய்யும்" (சாதக. அட்ட. உஉ.) 7. சட்டாலாடகாவல். (உவின். ஙரு.) 8. காவல். (உ-ம்.) "அவுணர்வைகுமோரரணமானகிரவுஞ்சகிரி" (கந்தபு. தாரகன்வதை. ௧௦அ.) 9. காவற்சாலை. (மா.) 10. கோட்டை. (மா.) 11. தொடுதோல். (உவின். ஙரு.) 12. மாணாக்கனுக்குச் செய்யும் நற்கொடை. (ஆப். கூஅஅ.) (உ-ம்.) "துயர்த்தழல்சமிப்பவரணவாசிரீரருளினுற்றெளித்தளித்து" (சேதுபு. மங்கல. ருகூ.) 13. நீக்குதல். (உ-ம்.) "பாசஹரணம்" (சி. சி. அ: உரு. சிவாக்.) 14. மஞ்சம். (உவின். ஙரு.) 15. மதில். (உ-ம்.) "நம்மூர்ப்புறத்தினிலரணமீதாய்ப் போகுதலரிது" (கந்தபு. அசுரசெய். ங.) 16. வேலி. (உ-ம்.) "மாற்பெரு மதிலைச்சூழ வரம்பறுதானைதன்னை-யேற்புடையரணமாக வியற்றுவித்து" (கந்தபு. அசுரர்யா. ஙஎ.) 17. வேற்படை. (உவின். ஙரு.)

அரணும்பரம்—1. மதில். (மா.) 2. வேலி. (மா.)

அரணி—1. அக்கினி. (ஆப். எஎ.) 2. அக்கினியைப் பிறப்பிக்க உபயோகமாகும் அரசு முதலிய மரங்களின் கட்டை. (பிரமோப. கூகூ.) 3-5. அரணியென்னேவலும தெரிநிலைவினைப் பகுதியும; பெயரெச்சத் தொகையும். 6. சண்சாரிகை யென்னு மொரு சிறுமரம்; அது: தீக்கடைதற்கானது. 7. சவசம். (மா.) 8. காடு. (உவின். கூடு.) 9. சூரியன். (உவில். கூஎ) 10. தீக்கடைகோல். (உ-ம்.) "அரணியின்புறத்தனலென" (பாரத.சம்பவ.எ) 11. தீத்தட்டிக்கல். (உவில். கூஎ.) 12. மதில். (உவின். கூடு)

அரணித்தல் — 1. அரணுக்கல். (உவின்.கூடு) 2. உரத்தல், கடினப்படல், முறைத்தல். [படர்க்கையொருமையில் வருவது. உவின். கூடு; மா;சி] (உ-ம்)"இந்தப்பருஅரணித்திருக்கிறது" 3. காவல்செய்தல். (மா.) 4. சிறப்பித்தல். (உவின். கூடு.)

அரணிப்பு—அரணித்தல். (மா.)

அரணிய — அரணேயுடைய. (உ-ம்.) "அரணியவிலங்கைமூதூர்" (பாரத. இராயசூ. கூஎ.)

அரணியகதலி—காட்டுவாழைமரம்.(உவில். கூஎ) [அரண்ய கதலி: அரண்ய—காடு. கதலி—வாழை.]

அரணியசடகம்—காட்டுக்குருவி. (உவில். கூஎ.) [அரண்ய சடக.]

அரணியசாரணை — காட்டிஞ்சி. (கா. வைத்.)

அரணியம்—காடு. (உ-ம்.) "அரணியகதலி" [அரண்ய. உவில். கூஎ.]

அரணியன்—காட்டிலிருப்பவன். (உ-ம்.) "அரணியனென்றவர்க் கன்புகூர்ந்தனே" (இராமா. விபீடண. உ.) [அரண்ய:]

அரிணியா—காட்டுக்கரணை. (உவின். கூடு.) [அரண்ய.]

அரணியாநி — பெருங்காடு. (உவில். கூஎ.) [அரண்யாநி.]

அரணிருக்கை— கோட்டை. (உவின். கூடு.)

அரணை—ஒருசெந்து. (சிவரட். கூகூஉ.)

அரத்தகம்—செம்பஞ்சி(உவில். எககூ) (உ-ம்.) "அரத்தக மருளச்செய்தசீறடி" (சிந்தா. இலக்க. அஉ.) [ரக்தக]

அரத்தம்—1. அரக்கு. (உ-ம்.) "அரத்தமாதிவகைகாய்ச்சு—மூளவை" (தைல. பாயிர. உஎ.) 2. இரத்தம். (உ-ம்.) "அரத்த முண்டொளிரும்வாளவுணர்ச்செற்று" (நைடத. நளன். கசு.) 3. குங்குமப்பூ. (தைல.) 4. சிவப்பு. (உ-ம்.) "அரத்தவேணியர்" (கந்தபு. முரனு. அஉ.) 5. செங்கடப்பமரம். (உவின். கூடு.) 6. செங்கழுநீர். (சி.) 7. செங்குவளை. (உவின். கூடு.) 8. செம்பஞ்சு. (உவின். கூடு.) (உ-ம்.) "அரத்தமென் பஞ்சியூட்டிய பொனனஞ் சேவடி" (கூர்மபு. மேரு. க.) 9. செம்பரத்தைப்பூண்டு. (உவின். கூடு.) 10. செம்பருத்தி. (மா.) 11. செம்பு. (உவில். எககூ.) 12. செம்மெழுகு. (உவின். கூடு.) 13. செம்மை, செவ்வை. (சி.) 14. பவளம். (சூ. நிகண். கூஎ.) 15. பொன். (உவின. கூடு.) 16. மஞ்சள். (உவில். எககூ.) [ரக்த.]

அரத்தன் — 1. ஆசையில்லாதவன். (பௌட்.பாச.உக) [அ—எதிர்மறை. ரக்த—ஆசையுடையவன்.] 2. செவ்வாயென்னுங்கிரகம். (சி) [ரக்த: ரகரந் தமிழில் அகரம் பெற்றுவந்தது]

அரத்தாங்கம்—1. செவ்வாயென்னுங் கிரகம். (ஆப். எகடு.) 2. பவளம். (ஆப். எகடு) 3. மூட்டை. (ஆப்.எகடு) [ரக்த; அ௦ு.]

அரத்தி—இன்பமானது. (ஆப். எககூ.) [ரக்தி.] 2. செவ்வல்லி. (மா.)

அரத்திநி—சிறுவிரல் நீட்டிய பிடிமுழம். (ஆப். எஎ.) 2. முழங்கை. (ஆப். எஎ.) [அரத்நி.]

அரத்துறை—ஒரு சிவஸ்தலம். (பெரியபு. ஞாந. கஅஎ.)

அரத்தை—1. ஒருசெடி; இது: சிற்றரத்தை, பேரரத்தையென இருவகைப்படும். (உவின். கூடு.) 2. சிற்றரத்தை. (உ-ம்.) "அரத்தைமுக்கடுமூஸ்தைமஞ்சிட்டி" (தைல. தைலவ. ச.)

அரத்தோற்பலம்—1. செங்கழுநீர்ச்செடி. (உவில். எகடு.) 2. செங்குவளைச்செடி. (உவில். எகடு.) [ரக்தோத்பல.]

அரதநம்—1. இரத்திநம், அகன்மணி. (உ-ம்.) "அரதநகலசவியன்கரம்" (தணிகை. கடவுள்வாழ். கூ) 2. சிரேட்டமானது. (உவில். எகஅ.) 3. பெண்கள் காலிலணியுஞ்சிலம்பு. அது: பொன்னினுல் அல்லதுவெள்ளியினுல்ஆக்கப்பட்டது. (உவின். கூடு.) 4. மிருதபாஷாணம். (உவின். கூடு) [1, 2, 3. ரத்ந]

அரதநாகரம்—1. இரத்திநமெடுக்குஞ் சுரங்கம். (உவில். எகஅ.) 2. சமுத்திரம். (உவில். எகஅ.) (உ-ம்.) "மரகதாதிகளுறுத்த விழித்துமணி மேடையினும்வாரிவீச — அரதநாகரமானதன்றுமுதலின்றளவுமாழிதானே" (அருணசலபு. திருக்கண். கசு.) [ரத்நாகரம்.]

அரதி—1. கோபம். (உவில். கூஅ.) 2. திருத்தியின்மை. (உவில். கூஅ.) 3. மநக்கலக்கம். (உவில். கூஅ.) 4. வெறுப்பு. (உவில். கூஅ.) [அரதி: அ; ரதி—பிரியம்.]

அரதேசி—உலகவழக்கத்திலே பரதேசி என்பதனேடு சேர்த்துச்சொல்லப்படும் ஒருபயனின்மொழி. (உவின். கூடு.)

அரதைப்பெரும்பாழி — ஒருதலம். (பெரியபு. ஞாந. சூ௦கூ.)

அரந்தை—1. குறிஞ்சியாழிசை. (பிங். ௬௦௭௧.) 2. சரவெட்டை. (இராசவைத்.) 3. பாரிசசந்தி. (இராசவைத்.) 4. மரக்கவற்சி. (உ-ம்.) "அரந்தைப் பெண்டிரினைந்தன ரகவ" (மதுரைக் காஞ்சி. ௯௯.) 5. வருத்தம். (உ-ம்.) "மானத்தரக் கரந்தைப்படவீர்த்து" (மறைசையந். ௯௯.)

அரநி—ஒரு அரிட்டதேவதை. (ச. தொகை. ௪௯௯-ம். பக்)

அரப்பள்ளியான்—சர்ப்பசயனராகிய விட்டுணு. (உ-ம்.) "அரப்பள்ளியானுமலருறைவானும்" (தேவார. திருச்சி. ௯.)

அரப்பிரியை—உமாதேவி. (உ-ம்.) "அரப்பிரியைபார்ப்பதியே" (திருவானைக்கோச்செங். அ௯.) [ஹர-சிவன். பிரியா-மனைவி.]

அரப்போடி — 1. அயவெள்ளை. (கா. வைத்.) 2. இரும்பை யரத்தினாலேயராவி யெடுத்ததூள். (மா.)

அராபி—1. கடுக்காய். (கா. வைத்.) 2. காடு. (சி.)

அரம்—1. இரணம். (இராசவைத்.) 2. இரும்பு முதலியவைகளை யராவுதற்காகக்கூரிய கிறுகிறுன பற்களுடையதாக உருக்கினாற் செய்யப்பட்ட ஒருகருவி. (உ-ம்.) "அரம்போலுங்கூர்மையரேனும்" (வள். ௯௯௭.) 3. உருளையின் சிலைக்கம்பு. (வென். ௪௭.) [அர.] 4. கீழறை. (உவின். ௯௫.) 5. குகை. (சி) 6. பாதலம். (உ-ம்.) "அரமடங்கலுந்தழைசெலமேலாய்" (திருச்செந்து.) 7. வாளரம். (உ-ம்) "அரமபோழ்ந்தறுத்த" (மதுரைக்காஞ்சி. ௯௪௯.)

அரம்பு—குறும்பு. (உ-ம்.) "மேலைவரம்பிகந்தரமபுசெய்யுங் கலியதுபிறவி கண்டாம" (சிந்தா. முத். ௪௨௧)

அரம்பை—1. அசமதாகப்பூண்டு. (கா. வைத்.) 2. தெய்வப்பெண். (உ-ம்.) "செருவின் மாண்டவ ரரம்பையர்ச் சேர்குவ ரன்றே" (நைடத. நிலா. ௯௯) 3. தேவலோகத்தில்இருக்கும்ஒரு அப்சரஸ்திரி; இவள், நளகூபரன்மனைவி. (ஆப். ௯௨௧.) (உ-ம்.) "திலோத்தமை யரம்பையுருப்பசி மேனகைமுதலோர்" (கூர்மபு. மேரு. ௯.) 4. வாழைமரம். (உ-ம்.) "துன்னரம்பைநிரம்பியதொல்வரை" (இராமா. வரைக்காட்சி. ௫௧.) 5. வேசை. (உவில். ௭௨௦) [2, 3, 4, 5, ஈ0 ஹா]

அரமகள்—தெய்வப்பெண். (உ-ம்.) "அங்கினி திருந்தகாலை யரமக ளவனை நோக்கி" (கந்தபு. வள்ளி. ௨௯௭.)

அரமங்கை—தெய்வப்பெண். (உ-ம்) "அரமங்கையர் சாமரைபாங்கரசைத்திட" (காஞ்சிபு. பன்னி. ௨௯௪.)

அரமடந்தை—தெய்வப்பெண். (உ-ம்) "அரமடந்தையர்கருங்குழல்" (நைடத. நிலா. ௪௨.)

அரமனை—அரசன்மனை. (உ-ம்.) "அரமனைக்கெய்துமூனியம்பினேன்" (பாரத. கீசக. ௯.)

அரமாதர் — தெய்வப்பெண்கள். (உ-ம்.) "அம்மென்மூரசரமாதரொருவர்க்கொருவர்" (இரகு. திக்கு. ௪0௫.)

அரமாரவம் — நாயுருவி. (கா. வைத்.)

அரமியம்—1. அரண்மனை. (ஆப். ௯அ௯.) 2. செல்வர்வீடு. (உவில். ௯௯௯.) 3. நிலாமுற்றம். (உ-ம்) "நிரைநிலைமாடத்தரமியந்தோறும்" (மதுரைக்காஞ்சி. ௪௫௧.) 4. பிரமிப்பூண்டு. (கா. வைத்.) [1, 2, 3, ஹர்மிய.]

அராழறி — இருப்புமுறிச்செடி. (உவின். ௯௫.)

அராயன்—அரசன். (உவின். ௯௫.)

அரரம்—1. ஆயுத முதலியன வைக்கும் உறை. (ஆப். ௭அ.) 2. கதவுத்தட்டு. (ஆப். ௭அ.) 3. துன்னூசி. (ஆப். ௭அ.) [அரர.]

அரரி—கதவு. (உவில். ௯அ.) [அரரி.]

அரரு— சத்துரு. (உவில். ௯அ.) [அரரு.]

அரலை—1. கடல். (உவின். ௯௫.) 2. கழலை. (சூ. நிகண். ௨: ௪0௨) 3. குற்றம். (உ-ம்.) "நரம்பினரலைதீரவுரீஇ" (மலைபடு. ௨௪.) 4. கொடும்பு. (மலைபடு. ௨௪) [அது: முடங்கிப் பரற்றன்மைபோலிருப்பதாலரலையென்றாயிற்று] 5. மரற்பூண்டு. (மா) 6. விதை. (உ-ம்) "அரலையுக்கனநெடுந்தாளாசினி" (மலைபடு. ௧௯௯.)

அரவக்கரையன்—சிவன். (உ-ம்.) "பரமனையரவக்கரையனை" (சிவதரு. சிவஞான. அ௯.) [அரவு-பாம்பு. அக்கு-சங்குமணிவடம். அரையன்-அரையிலுடையவன்.]

அரவக்கிரி—வேங்கடமலை. (உ-ம்.) "அரவக்கிரிசார்ந்தான்" (பாரத. அருச்சுனன்றீ. ௪௨.)

அரவக்கோடியோன் — துரியோதனன். (உ-ம்.) "அரவநெடுங்கொடியுயர்த்தோன்" (பாரத. திரௌ. அ௪.) [அரவம்-பாம்பு.]

அரவகங்கணத்தோன்—சிவன். (உ-ம்) "சூட்டாடரவகங்கணத்தோன்" (கூர்மபு. மாயனே. ௭.) [அரவம்-பாம்பு. கங்கணம்-காப்பு.]

அரவணிந்தமூர்த்தி—சிவன். (சூ. நிகண். ௧: ௯.)

அரவணிந்தார்—சிவன். (பெரியபு. ஞான. ௪௭0.) [அரவு-பாம்பு. அணிந்தார்-அணிந்தவர். ஒருமைச்சிறப்பு.]

அரவணிந்தோன்—சிவன். (மா.)

அரவணை — பாம்பின் மேலான படுக்கை. (உ-ம்.) "நெளிந்தாடரவணையையன்" (பாரத. அருச்சுனன்றீ. ௧௧.) [அரவு-பாம்பு. அணை-படுக்கை.]

அரவணைச்செல்வன் — விட்டுணு. (உ-ம்.) "அரவணைச்செல்வன் மெய்யும்" (பாரத. பதினே. ௧0௯.)

அரவணைத்தல்—தழுவிக்கொள்ளுதல்.

(உவின். கூரு.) [ஹ ர-வசியம்பண்ணல். ஆப். கூஅஎ]

அரவணையான் — விட்டுணு. (உ-ம்.) "விளங்கொளி யரவணையானும்" (சம். தேவார. மறைக்க. க.)

அரவதுவசன் — துரியோதநன். (உ-ம்.) "அரவதுவசன்றுணைவர்" (பாரத. பதின்மூ. சுசு.) [அரவ - பாம்பு. த்வஜ: -கொடியுடையோன்.]

அரவப்பகை — கருடன். (உ-ம்.) "அரவப்பகையூர்தி" (நாலாயிர. அட்டு. கச.) [அரவம்-பாம்பு.].

அரவம்—1. ஆயிலியநாள். (உ-ம்.) "ஆதிரைகேட்டையரவம்" (விதாந. பஞ்சா. கசு.) 2. ஆரவாரம். (ஆப் எஉக) 3. இராகுகேது. (உ-ம்.) "வரியரவம்பெண்" (விதாந. பஞ்சா. கஎ) 4. இரைச்சல். (ஆப். எஉக) 5. ஒலி. (உ-ம்) "அரவவண்டினமார்த்துடனியாழ்செயும்" (சிலப். சஉ. உரைப்பாட்டுமடை. ரு.) 6. சிலம்பு. (மா) 7. படையெழுச்சி. (வீரசோ. பொருட். கசு.) 8. பதஞ்சலிமுநிவர். (உ-ம்.) "புலியரவங்கண்டு கொண்டாடவாடும்புராதநன்" (புலியூரந். எச.) 9. பாம்பு. (உ-ம்.) "கச்சணையரவமென்ன" (பாரத. பதினொன். கசுரு) 10. பேரொலி. (உ-ம்.) "அரவமார்நதியணியும்" (பாரத. குரு. கககூ) 11. மரக்கலக்கம். (உ-ம்.) கண்ணும்புருவமுமரவஞ்செய்ய" (சிந்தா. முத்தி. உ0அ.) [2, 4, 5, 10. ரவ.]

அரவமணி — 1. உருத்திராக்கமணி 2. நாகரத்திநம். [அரவன்- சிவன்; அரவ-நாகம்; மணி]

அரவமின் — நாகலோகப்பெண். (உ-ம்.) "அரவமின்மகன்" (பாரத.

அரவரசோன் — பதஞ்சலிமுநிவன். (கோயிற்பு. நடராஜ. கூரு.) [அரவு-பாம்பு. அரசோன்-தலைவன்.]

அரவன் — சிவன். (உ-ம்.) "அரவன் பால்வெண்ணீற்றன்" (சூத. எக்கி. பூ. கூச: க.)

அரவான் — அருச்சுநனுக்கு நாககந்நியிடம் பிறந்தவன். (உ-ம்.) "நாகர்காட்டிற்கந்நியைமீட்டுந்தோய்ந்திளங்கறுமரவான்" (நல். பார. திட்டி. க0ரு.) [அரவு-நாகம்.]

அரவாபரணன் — சிவன். (உ-ம்.) "அரவாபரணன் றந்தருளரு மாமறை" (பாரத. பதினொன். ருக.) [அரவு-பாம்பு. ஆபரணம்-அணி.]

அரவாய்க்கடிப்பகை — வேப்பிலை. (மணிமேகலை. எகூ-ம். பக்) [அரம்போன்றவாயுடையதாய்ப் பேய்க்குப் பகையாயிருத்தல்பற்றி வந்த பெயரென்பர். அரம்; வாய்; கடி-பிசாசம்; பகை.]

அரவித்தல்—ஒலித்தல். (உ-ம்-) "அரவத்தால்வரையைச்சுற்றியமரரோடசுரர்கூடியரவித்துக்கடைய" (திருநாவு. தேவார. திருகணி. எ.)

அரவிந்தம் — 1. தாமரைச்செடி. (உவில். கூஅ.) 2. நாரைப்பறவை. (உவில். கூஅ.) 3. பஞ்சலோகத்தொன்றாகியசெம்பு. (ஆப். எஅ.) [அரவிந்த: அர - விரைவு. விந்த-அண்டுதல்.]

அரவிந்தலோசநன் — விட்டுணு. (உ-ம்.) "அனைத்துலகுமுடையவரவிந்தலோசநனை" (நாலாயி. திருவாய்மொழி. சு-ம். பத்து. க0)

அரவிந்தன் — பிரமா. (உ-ம்.) "அரக்கரவிந்தன் குலத்தோர்" (கல்வளை.) [தாமரைப்பூவிலிருக்கிறவ ரென்றபடி.]

அரவிந்தாக்கன் — விட்டுணு. (ஆப். எஅ.) [அரவிந்த-தாமரை. அக்ஷ-கண்ணன்.]

அரவிந்தை — இலக்குமி. (உ-ம்.) "அரவிந்தையன்னானை" (அரிச்சந்.) [அரவிந்தா - தாமரையுடையாள்.]

அரவினள் — ஆயிலியநாள். (உவின். கூரு.)

அரவீசம்—பாதரசம். (உவில். கூகச) [ஹரவீஜ: ஹர-சிவன். வீஜ-விதை]

அரவு — 1. ஆயிலியம். (இராசவைத்.) 2. பதஞ்சலிமுநிவர். (உ-ம்.) "புலியோடரவுதொழுங் கூத்துடையவர்" (வேங்கை. கூசஎ) 3. பாம்பு. (உ-ம்) "நச்சாடரவணையான்" (பாரத. பதின்மூ. ச0அ.) 4. வைக்கோற்பழுதை. (உ-ம்.) "இட்டுவார்பரிதிறுத்துவா ரரவுருட்டுவார்" (திருவிளை. வாதவூர். ரு.)

அரவுநாள் — ஆயிலியநாள். (உவின். கூரு.)

அரவுயர்த்தவன் — துரியோதநன். (உ-ம்.) "அரவுயர்த்தவன்மதலையொடடலுடையரசபுத்திரனைவரும்" (பாரத. பதின்மூ. அச.) [பாம்பின்வடிவந்தனதுகொடியிற்கொண்டவன்.]

அரவுயர்த்தோன் — துரியோதநன். (உ-ம்.) "அரவுயர்த்தோன்கொடுமையினு முரசுயர்த்தோயுனதருளுக் கஞ்சினேனே" (பாரத. கிருட். கரு.) [பாம்பின்வடிவந்தனது கொடியிற்கொண்டவன்.]

அரவுயிர்ப்பு—பாம்பின் சுவாசம். (உவின். கூரு.)

அரவேணுந்துதி—கருமசாந்தி. (தைல.)

அரவொலி — ஹர என்று சிவனைநோக்கிச்சொல்லுஞ்சத்தம். (உ-ம்) "அரவொலியாகமங்களறிவாரறிதோத்திரங்கள்" (தேவார. கொடி. அ. சுந்தர.)

அரவோன்—பதஞ்சலி முநிவன். (உ-ம்.) "சீரரவோனும்" (கோயிற்பு. நடராஜ. எ0.)

அரளல் — அரளுதல். (உவின். ௬௫.)

அரளி —நாறிமரம். (கா. வைத்.) பீநாறிமரம். (கா. வைத்.) பெருமரம்.(கா வைத்.)

அரளித்தொக்கு — பீநாறிமரப்பட்டை. (உவின். ௬௫.) [அரளி–பீநாறிமரம். தொக்கு–தோல்.]

அரளுதல் — பிரமித்தல், மிக அஞ்சுதல் (உவின். ௬௫.)

அரற்றல் — 1. அரற்றுதல். 2. யாழ்நரம்போசை. (பிங்கல. ௧௪௪௪.)

அரற்று — 1. ஒலி. (உ–ம்.) "அரற்றெடுகுறைந்து வீழ்ந்தும்" (கந்தபு. சூர. ௪௮௮.) 2. குறிஞ்சியாழ்த்திறவகை. (பிங்கல. ௧௩௭௭.) 3. பலவுஞ்சொல்லியழுது தன்குறைகூறுதல், வாய்விட் டழுதல். (சிந்தா. நாம. ௨௭௩. உரை;தொல். பொருள்.௨௯௦. நச்சினார்.)

அரற்றுதல் — 1. அலறுதல். (உ – ம்.) "அருமறையின்னமுங்காணு தரற்ற" (தாயு. ஆகார. ௪.) 2. அழுதல். (உ–ம்.) "கல்லுயர்பொருப்பினிடைகாமரடிசெல்ல – வல்லனகொலென்றுமணிநூபுர மரற்ற" (கந்தபு. தெய்வ. ௨௯௦.) 3. ஒலித்தல். (உ–ம்.) "சோண்கழல் கல்லெனவரற்றிடக்கழலிற்பூட்டினன்" (கந்தபு. முதனாட்பா. ௨௨.) 4. சத்தமிட்டுச்சொல்லுதல். (உ-ம்.) "அங்கசரீரியரற்றியசாபம்" (பாரத. புட்ப. ௭௯.)

அரன் — 1. இரௌத்திர முகூர்த்தம்; இது: பகலிலும் இரவிலும் முதலில் நிகழுமுகூர்த்தம். (விதாந. குணாகு. ௭௩.) 2. எப்பொருட்கு மிறைவன். (உவின். ௬௫.) 3. சிவன், சங்காரகர்த்தா. (சிவதரு. ஐவகை. ௬௯.) [பக்குவான்மாக்களுடைய பாசத்தை யரிக்கையினாலே யரனென்னும் நாமத்தையுடையசிவன் என்பர் சிவாக்கிரயோகியர். சி. சி. அ: ௬. சிவாக்.] 4. திரிகலனிடத்திலே காமிகாகமங்கற்றுக்கொண்ட ஒருவன். (த. நி. போ. ௧௫௮.) 5. பதினோருருத்திரரிலொருவன். (மா.) 6. மஞ்சட்பூண்டு. (கா. வைத்.) [1–5. ஹர.]

அரன்மகன் — 1. குமரன். (மா.) 2. விநாயகன். (மா.) 3. வீரபத்திரன்.(மா.) [ஹர; மக.]

அரன்வெற்பு—கைலாசமலை. (உவின். ௬௯.)

அரன்றோழன் — குபேரன். (உவின். ௬௯.) [ஹர–சிவன். தோழன் – நண்பன்.]

அரனிடத்தவள் — உமாதேவி.(உவின். ௬௫.) [சிவனுடைய இடப்பக்கமுடையவளென்றபடி.]

அரனெறி — ஒரு சிவாலயம். (பெரிய பு. ஞாந. ௧௫௯.)

அரா — 1. அராவென்னேவல். (சி) 2.ஆயிலியநாள். (உ-ம்.) "முற்றிலராவழல் பூரமூன்று-மகம்விற்பரணியதோமுசம்" (விதாந. பஞ்சா. ௧௮) 3. நாகமல்லி. (இராசவைத்.) 4. பாம்பு. (உ–ம்) "பொங்கரா வெயின்மணிப் பூணும்" (பாரத. பதின்மூ. ௨௦௮)

அராக்கோள்—இராகுகேது. (உ–ம்.) "அராக்கோளிரண்டும்" (சேந்தன்திவாகர. ௧௨–வது.)

அராகதத்துவம் — வித்தியாதத்துவம் ஏழினொன்று; அது: வித்தையிலிருந்து தோற்றிப் போகத்திலே யாசையை யெழுப்புவது. (உ-ம்.)"வித்தியாதத்துவத்திலே யராகதத்துவந்தோன்றி யான்மாக்கள் செய்தகன்மத்துக்கீடாகப் பிரகிருதியினின்றும் பிறந்த சுகதுக்காநுபவங்களை மேலுமேலும் புசிக்கையின் பொருட்டிச்சையைப்பண்ணுகிற்கும்" (சி. சி.உ: ௫௬. மறை.) [ராக; தத்வ:]

அராகபகவான்—புருஷதத்துவத்திற்கும் அராகதத்துவத்திற்கும் அபிமான தேவதை. (சி. சி. உ: ௭௧. சிவாக்.) [ராக; பகவத்.]

அராகம் — 1. அடக்கமானதன்மை. (உ. வில்.௬௮)[அராக:அ–எதிர்மறை.ராக-விருப்பு]2.அடங்காத இச்சை.(உ-ம்) "அரகரவராசமிலரானவர்பராவும்வர" (சேதுபு. சர்வ. ௨௧) 3. ஒருவன் தான் விரும்பிய பெண்ணைப்பெறாதபோது மிகவும்வருந்தி யழும்படியாசையைச்செய்வது. (சி. சி. உ: ௮௦. மறை.) 4. இராகதத்துவம். (உ-ம்.) "அருந்தின்பத்துன்ப முள்ளத்தறிவினுக்கராகமாதி-தருந்தன் வேதனையாங் காட்சி" (சி. சி. அளவை. ௭.) 5. இராகம். (உ–ம்.) "பாவமோடராகந்தாளமிம்மூன்றும் பகர்ந்திடுமுறையினூற்பரதம்" (திருவிளை. கான்மாறி. ௮.) இது: பைரவிமுதற் குறிஞ்சியீறாயுள்ள ௬௨-என வரையறைப்படினும் இவ்வரையறையுள் அடங்காது நெஞ்சு,மிடறு,நாக்கு, மூக்கு, அண்ணம், உதடு, பல், தலை யென்னும் எட்டுத்தானங்களினின்று எடுத்தல், படுத்தல், நலிதல், கும்பித்தல், குடிலம், ஒலி, உருடு, தாக்கு என்னும் எட்டுக்கிரியைகளால் இன்னும்பலவகைப்படும். 6. கலிப்பாவுறுப்புள்ஒன்றாகிய முடுகியல். அது: அளவடிமுதலாக எல்லா அடியானும்வந்து நான்கடியிற் குறையாமலும் எட்டடியில் மிகாமலுமிருப்பது. (இலக்கணசிந். ௭௭.) 7.சிவப்பு.(ஆப்.௭௨௪)8.செம்பராகம். (உ–ம்)"நெய்யராகமழிய"(இராமா. நீர்விளை. ௧௯.) 9. பாலையாழ்த்திறம். (சூ. நிகண். ௪௦: ௬௯.) 10. பொன். (உவின். ௬௯.) [ராக0, என்னும்வடமொழி தமிழில் அகாரம் பெற்று அராகமென நிற்றலன்றி இராகம் என இகாரம் பெற்றும் நிற்கும். "இராகம்" பார். 2--10. ராக.]

அராகவொத்தாழிசைக்கலிப்பா— வண்ணகவொத்தாழிசைக் கலிப்பா. (மா.) அது: தரவுந்தாழிசையும் வந்தபின் வண்ணகமும் அதன்பின் அம்போதரங்கமும் அதன்பின் பின் தனிச்சொல்லுஞ் சுரிதகமும் வந்

ஆறுறுப்பினல் முடிவது. (இலக்கணசிந். எகூ)

அராத்தல் — 1. அராவுதல். (உவின். கூசு.) 2. சிந்தித்தல். (உவின். கூசு.) 3. முட்டுதல். (உவின். கூசு.) [வழக்.]

அராத்திரி — கைலாசமலை. (உவில். கூகூ௨.) [ஹராத்ரி: ஹர-சிவன், அத்ரி-மலை.]

அராத்துதல்—அராத்தல்.

அராதி—சத்திரு. (உவில். சுஅ.) [அராதி.]

அராதிபங்கம் — சத்திருவைப் பங்கப்படுத்தல். (உவில். சுஅ.) [அராதி-சத்துரு. ஹ௦ஹ-நிலைகுலைதல்.]

அராநட்பு—பிடிகொடாத கொண்டாட்டம். (உவின். கூசு.) [வழக். அரா பாம்பு. நட்பு-சிநேகம்.]

அராபதம்—வண்டு. (உ-ம்.) "தங்கராபதநெருங்கு தொங்கலணிதாமவேலடலரக்கனீ" (பாரத.மணிமான்.௩௦க.)

அராமம் — 1. சோலை. (உவின், கூசு.) 2. தோட்டம். [ஆராமம்: என்பது குறுகிவந்தது.உவில். ௬௨௯.)

அராமி—1. கெட்டவள், (மா.) 2. கெட்டவன். (மா.)

அராமுநி—பதஞ்சலிமுநி. (உ-ம்.) "அராமுநியீது வேண்டும்" (திருவிளை. திருக்கூ. உரு.)

அராமை — கீழ்மகள். (ஆப். எ௨எ.) [ராமா.]

அராலம்—1. கொடுவாள். (ஆப். எஅ) 2.மதம்பிலிற்றும்யானை. (ஆப்.எஅ.) 3. வளைந்தது. (ஆப். எஅ.) [அராலு.]

அராலை-1.நாட்டியஸ்திரி. (ஆப். எஅ.) 2. வேசைப்பெண். (ஆப். எஅ.) [அராலா.]

அராவணம்—புலம்பாமை. (உ-ம்.) "ஞாலம்-அராவணமதாவவுரித்திடு மருட்சிதரா" (சேதுபு. இராமனருச். ருக.)

அராவணல்—ஆதிசேடன். (சேதுபு. இராமனரு. ருக.) [அரா-நாகம். அண்ணல்-சிரேட்டன்.]

அராவணை—அரவணை. (உ-ம்.) "பொங்கராவணைதுறந்து வாநெதிர் புரந்தபுண்ணியனையொக்கவே" (பாரத. மணிமான். ௩௦க.)

அராவல் — 1. அழுத்தல். (சி) 2. உரிஞ்சுதல். (சி.) 3. மிண்டல். (சி.)

அராவவேங்கொடியோன் — திரியோதநன். (பாரத. இராச. ௪ருஉ.) [அரவம் அராவமென நீண்டது.]

அராவாரம் — கொடிமுந்திரி. (உ-ம்) "மது மாங்கனிமாதுலங்கங்கதலியராவாரங்கொழிஞ்சி" (தைல, தைலவ. கசுரு.)

அராவுதல்—அராத்துதல். (உ-ம்.) "தராதலத்தினுள்ளதமிழ்க் குற்றமெல்லாமராவுமரமாயிற் றன்றே" (இராமா. தனியன்.)

அராவைரி — 1. சருடன். (உவின்.கூசு.) 2. கீரி. (உவின். கூசு.) 3. மயில். (உவின். கூசு.) [அரா-பாம்பு. வைரி-பகை.]

அராளகடகாமுகம் — நிருத்தக்கைமுப்பதனுளொன்று. (சிலப். அரங்கே. க௨.) [இது: சுத்தாநந்தப்பிரகாசமென்னுந் தமிழ்ப்பரத நூலிற்காணப்பட்டதென்றார்.]

அராளம்—1. இருவாய்ச்சிச்செடி. (உ-ம்.) "ஓம்புபுளியாரை மருக்கொழுந்தராளம் பதின்மூன்றும்" (தைல. தைலவ. கசுரு.) 2. குங்குலியம். (தைல. தைலவ. ககக.) 3. பெருவிரல் குஞ்சித்துச் சுட்டுவிரன்முடக்கியொழிந்த விரன்மூன்றும் நிமிர்ந்து வளைவது. (உ-ம்.) "அராளமாவதறிவரக்கிளப்பிற்-பெருவிரல்குஞ்சித்துச் சுட்டுவிரன்முடக்கி-விரல்கண் மூன்றும் நிமிர்த்தகம் வளைத்தற்-குரியதென்பவுணர்ந்திசினோரே" (சிலப். அரங்கே. கஎ. உரை.)

அரி — 1. அக்கிநி. (ஆப். கூஅஅ.) 2. அக்கிநிதேவன். (உ-ம்.) "அரியுமற்றெனது கூறுநீலனென் றறைந்திட்டானுல்" (இராமா. திருவவ. உஎ.) 3. அங்கிரீரனுடைய ஒன்பது புத்திரர்களுளொருவன். (உ-ம்.) "கிம்புருடனரிகேதுமாலன்" (கந்தபு. அண்டகோ. உஅ.) [அங்கிரீரனென்பது அங்கிரஸ் என்பதன் விகாரம். அங்கிரஸ் என்பது மிருகேந்திரம் அத்வப்பிரகரணம் கஎ-ஞ் சுலோகத்திற்காணப்பட்டது.] 4. அடர்பு. (உவின். கூசு.) 5. அரிசி. (உ-ம்.) "வாலரிசுழுவிய வண்ணச்செம்புனல்" (சிந்தா. காந். கூகூஅ) 6. அரித்தல்.(உ-ம்) "அரிக்கூடின்னியம்" (மதுரைக்காஞ்சி.கூசஉ) 7. அரிதல். (உ-ம்.) "ஆக்கரிய மூக்குங்கையரியுண்டாளென்றுரை" (இராமா.சூர்ப்பநகை.க௨ரு) 8-10. அரியென்னேவலுந் தெரிநிலைவினைப்பகுதியும் பெயரெச்சத்தொகையும். (உ-ம்) "ஆலவாய்க்கருபின்றேனுமரிதலைப்பாளைத்தேனும்" (இராமா. நாட்டு. க. பெ-கை.) 11. அரிவிப்பிடி. (உ-ம்.) "எதிதரு மரியின்சும்மையெடுத்துவானிட்டபோர்கள்" (இராமா. நாட். உச) 12. அழகு. (உ-ம்.) "அரிநீரவிழ்நீலமல்லி" (கலித்தொகை. கூக.) 13. அறுத்தல். (உ-ம்.) "அரிபுகும்பொழுதில்" (மதுரைக்காஞ்சி.) 14. ஆயுதம். (சூ. நிகண். கக·கூச) 15. ஆவணிமாதம். (இராசவைத்.கசு௦) 16. ஆறென்னும் எண். (வாச) [அரியாகிய உட்பகைகள் ஆறென்னுங் குறிப்புப் பற்றி வந்த பெயர்.] 17. இந்திரன். (உவில். கூகூச.) (உ-ம்.) "அரிதிரு முன்னரெய்தி" (கந்தபு. திருவிளை. கூஎ.) 18. இந்திரன்குதிரை. (ஆப். கூஅஅ.) 19. இயமன். (உவில். ககூச.) (உ-ம்) "ஆருயிர்கொண்டிடுமரிதனூர்தியும்" (கந்தபு. தா

ஊ. சு०.) 20. இரணியகசிபு என்னும் அசுரன். (உ-ம்) "அந்தியம்போதிலரியுருவாகியரியையழித்தவனே" (நாலாயிர.முதலா. பல்லா. ரு) 21. இலக்கிரத்திற் காருமிடம். (வாச)22.ஈர்வாள். (உவின். ருசு) 23. உட்டுளைப்பொருள். (உவின். ருசு) 24. உள்ளத்தில் நிகழும்பகைகள்; அப்பகைகள்: காமம், குரோதம், மோகம், லோபம், மதம், மாத்சரியம் என ஆறு. (ஆப். எஅ.) 25. உருக்குமகவசனுக்கு மகனும் விதர்ப்பநாட்டரசனுமாயிருந்த ஒருவன். (மச்சபு.போச.சo) 26. உருளை. (சப்தஸ்) 27. ஐம்மை. (உ-ம்.) "அரிமயிர்த்திரண்முன்கை" (புறநா. கக.) 28. ஒருதாளம். (சூ. நிகண்.சஉ-வது) 29.ஒன்பதுகண்டங்களுளொன்று. (உவில். கூகச) 30. கட்டில். (உவின்,ருசு)31. கடல். (உவின்.ருசு)32.கடுக்காய்.(இராசவைகசுரு) 33. கண்வரி, செவ்வரி. (உ-ம்) "அரிமதருண்கணார்" (கலித்தொகை.கூக.) 34. கபிலநிறம்.(ஆப்.கூஅஅ) 35.கருங்காலிமரம்.(உவில்.சுஅ)36.கருங்கிளி. (பிங்க)37.கருஞ்சிவப்பு(ஆப்.கூஅஅ) 38.கள்ளு.(சூ.நிகண்.கக:கூச)39.காசம். (இராசவைத்.கசுரு)40.காற்று (உவில்.கூகச) 41. கிளி. (உவில்.கூகச) (உ-ம்.) "மாப்புக்கரியுங் குயிலும்பயில்பொழில்" (பழமலையந்தாதி. எஅ) 42. கிரணம், ஒளி. (ஆப். கூஅஅ.) (உ – ம்.) "அரிமணிச்சிலையின்சலாகையால்" (பாரத. இந்திரப். உரு)43. கீழாநெல்லி. (இராசவை. கசுரு)44. குதிரை. (ஆப். கூஅஅ) (உ-ம்.) "நன்றிகொளரிமகரடத்தவெண்ணியோ" (இராமா. திருவவ. அo) 45. குசத்தீவிலுள்ள ஒருமலை. (உ–ம்.) "அரியெனுங்குன்றும்" (கூர்மபு. பிலக்க உஎ) 46. குயில். (உவில் கூகச) 47. குரங்கு. (உவில். கூகச)(உ-ம்.) "அரியினஞ்சென்றசென்றவடவிகளனைத்தும்" (இராமா. மீட். கூஎ) 48. குற்றம். (சூ. நிகண் கக: ருரு) 49. குன்மம்.(இராசவை.கசுரு)50.கூர்மை. (சூ. நிகண். கக: ருச) 51. கொடிவேலிச்செடி. (கா. வைத்) 52. கொள்ளின்வேர். (இராசவைத்)53. சத்துரு. (ஆப். எஅ) (உ–ம்) "தங்கடிராரியே வல்லுல்வந்ததிலோத்தமை" (பாரத. இந்திர. சகூ) 54. சந்திரன். (உவில். கூகச.) 55. சிங்கம். (உவில். கூகச)(உ-ம்)"அரியெனும்பெயர்பொருமையில்" (பாரத. காண்ட. ருஎ) 56. சிங்கமுகன் என்னும் அசுரன். (உ-ம்) "திறலரிச்கிளவல்" (கந்தபு. கிரவுஞ்ச. ச.) 57. சிங்கவிராசி. (உ–ம்) "மதியரியாறின்" (விதாந. குணகுண. சரு.) 58. சிலம்பு. (உவின். ருசு.) 59. சிலம்பு முதலியவைகளுக்குள்ளிடுமணி. (உ-ம்) "சில்லரிச்சிலம்பின்வள்வார்" (சிந்தா. கோவிந். ருo) "அரிபுனைபுட்டில்" (கலித்தொகை. அo) 60. சிவன். (உவில். கூகச) (உ-ம்) "முராரிநாராயணனரிமுதற்புகலுறுநாமங்கள்—வினையிலந்தணீர்காரணவளவி னவ்விமலனையுணர்த்துமே"(சூத.எக்கி.பூ. ருசு:க) 61. சுரம். (இராசவை. கருசு)62 சூரியன். [உவில்.கூகச.](உ-ம்.) "நிலவெனக்கென வரியெனக்கெனு நீதியொப்பனவீதியே" (அரிச்ச.இந்திர. கச) 63. செம்மறியாட்டுக்கடா. (உ-ம்.) "அரியினெடுத்தரக் குறவாடும்" (மச்சபு. நைமி. ருo) 64.சோலை. (உவின். ருசு) 65. தகட்டுவடிவம்.(உவின். ருசு.)66. தவளை.(உவில். கூகச) (உ-ம்) "தொல்லையோர்பிரமனுஞ்சியகாலைத் தோன்றிய நீத்தமேலரிபோற்செல்லுமார்க்கண்டன்" (கந்தபு. திருநகர. எஎ.) 67. தான்றிக்காய். (இராசவை. கசுரு)68. திருவோணநட்சத்திரம்.(உ–ம்)"அரிமகங்குன்றிருபான்" (விதாந. குணகுண. உஎ.) 69. திண்டமம். (பாரத.) 70. துளசி. (நைல. தைலவ. கருடு) 71. தேர். (உவின். ருசு) 72. நித்திரை. (பிங்கல) 73. நிறம். (உ-ம்.) "வெள்ளரிவெண்சோறு" (மலைபடு. சருடு) 74. நீர். (விசுவநிகண்டு) 75. நீர்த்தொட்டி. (மேதிநிகோசம்.) 76.நெருக்கம்.(உவின்.ருசு) 77. நெல்லு. (உ-ம்)"அரிமண்டலம்புதைத்து" (தைல.தைலவ.அச; சி) 78.நெற்கதிர். (உவின். ருசு.) (உ-ம்.) "அரியடித்தார்கள்" 79. நெற்கதிர்களின் பசுங்காய்த்தண்ணீர். (இராசவைத்.) 80. நெற்கூடு. (உ –ம்.) "எள்ளரிமா நுடா மிகுப்ப" (இலக்கணவி. சூஎக.உரை) 81. பகைமை.(சூ. நிகண். கக: ருரு) 82. பச்சைகலந்தமஞ்சணிறம். (ஆப். கூஅஅ) 83. பச்சைநிறம். (உவில். கூகச) 84. படுக்கை. (உவின். ருசு) 85. பத்திரஹரியென்னும் புலவன். (ஆப். கூஅஅ.) 86. பறை, ஒருகட்பறை. (உ-ம்) "சில்லரித்துடிசோடெங்கும்" (திருவிளை. பன்றி. சச) மருதப்பறை. (உ - ம்.) "அரிக்குடரரியின்யா மை மிளிர" (புறநா. உசக.) 87.பன்றி. (உ-ம்)"அரிக்குருளைவடிவான்'(திருவிளை கரிக்குருவி.க) 88. பனைமட்டைக்கருக்கு.(இராசவைத். சசஅ) 89.பாம்பு.[உவில். கூகச] (உ-ம்) "கரத்தரிக்கங்கணங்கட்டரனார்" (திருச்செந்தினிரோட்ட.)90. பிரமன். (உவில்.கூகச)91. புகை. (உ-ம்) "சாதிகநுந்தைலவரியார்க்கு நிறையாயுடந்தளித்தாலென" (தைல. கடவுள்வா. ரு) 92. பொடி. (இராசவைத்) 93. பொன். (உ-ம்.) "அரித்தேர்நல்கியுமமையான்" (பெரும்பாணு. சகo) 94. மறுடன். (ஆப்.கூஅஅ)95.மஞ்சணிறம்,செந்நிறம். (ஆப். கூஅஅ)(உ - ம்.) "அரித்தளிர் மெல்லணை" (இராமா. மிதிலை.அக) 96 மயில். (உ–ம்) "அரியினெமொரியுற வாடுமால்" (மச்சபு. நைமி ச. ருo.) 97. மரகதம். (சூ. நிகண். சு: சு) 98. மரவயிரம். (உ-ம்.) "அரிகிணைமுழக்கி" (கல்லாட. ருரு.) 99. மலர்மாலை. (உவின்.ருசு)100. மலை. (உவின். ருசு.) 101. மழைத்துவல். (உவின். ருசு) 102.மூங்கில். (உவின். ருசு)103. மென்மை.(உ-ம்)"மெல்லிலையரியாம்பலொடு" (மதுரைக் காஞ். உருஉ) 104.யாழின்நரம்பு.(உ-ம்) "அரிக்குரற்றட்டை" (மலைபடு. கூ.) 105.வண்டு. (உ-ம்) "அரிவிரசுந்துழாய்" (பாரத. இராய. கஎ) 106. வரி. (சூ. நிகண். கக: ருரு) 107. வலிமை. (சூ. நிகண். கக; ருச) 108. வாயுதேவன். (உ-ம்) "இரண்டரிகளை

ருளாண்மையோரும்" (பாரத. இராச. ௬௭)109. விகங்கப்பட்சி-அன்னம். (உவில்.௯௧௪)110.விசி, சட்டலின்விசி. (உவின். ௬௯) 111. விட்டுணு. (உவில். ௯௧௪) 112. வெண்பகை. (ஆசிரியநிகண்.) 113. வெற்றி. (செ.)

[1, 2, 3, 15, 17, 18, 19, 20, 25, 29, 32, 34, 36, 37, 40, 41, 42, 44, 46, 47, 54, 55, 56, 57, 60, 61, 62, 66, 74, 82, 83, 85, 89, 90, 91, 93, 94, 95, 96, 97,108,109, 111, ஹரி; 16, 21, 24, 26, 35,53, 75, 81. அரி.]

அரிக்கட்டு — அரிவிக்கட்டு. (உவின். ௬௯.)

அரிக்கண்சட்டி — அரிசியரித்தற்குச் சிறுதுவாரங்கள் விட்டுச் செய்யப்பட்டசட்டி. (மா.)

அரிக்கரியார்—சிவன். (உ-ம்.) "அரிக்கரியார்கழல் வணங்கி" (பெரியபு. ஞாந. ௪௦௦௪.) [ஹரி -விட்டுணு. அரியார்—காணுதற்கரியவர்.]

அரிக்காந்தி — விஷ்ணுகாந்திப்பூண்டு. (உ-ம்.)"புனர்நவமரிக்காந்திதாழை" (தைல. தைலவ. ௭௯.)

அரிக்குதல் — அரித்தல். (மா.)

அரிகண்டப்புலவர்—காளமேகப்புலவர். (சி.) [அரிகண்டம் பாடினதால் வந்தபெயர்.]

அரிகண்டம் — 1. ஒருவிரதவேடம்; அது: படலமாக இருப்புத்தகடுகளிணைத்துச் செய்து தன்னைவருத்தும்படி கழுத்திலே மாட்டிக்கொள்ளும் வேடம. (உவின். ௯௭.) [அரி- அரிதல். கண்ட—கழுத்து.] 2. தொந்தரவு.(உவின். ௬௭.) [அரி-அரிதல். கண்டக — இடைஞ்சல்.] 3. நவகண்டங்களுளொன்று. (உ-ம்.) "அரிகண்டத்து வாழ்வோர்" (கந்தபு. அண்ட. ௪0.) [ஹரி; வண்ட—பிரிவு.]

அரிகண்டம்பாடுதல் — சமுத்தி பாடவும் பாடத்தவறினற் கததியின லரியப்படவுமிசைந்து கழுத்திலே கத்திமாட்டிக்கொண்டு பாடல். (செ; பாவலர்சரித். ௧௦௨.)

அரிகயிறு — அரிநூற்பொறி. (சிந்தா. நாம. ௭௫. உரை.)

அரிகாதுமரன்—அரிகரபுத்திரன். (சூ. நிகண். ௧: உ௮.) [ஹரி - விட்டுணு. ஹர-சிவன். குமார-மகன்.]

அரிகரப்பன் — ஒருகரப்பன். (மா.) [வழக்.]

அரிகரப்பான் — வாதக்கரப்பான். (உ-ம்.) "குட்டரிகரப்பான்வெய்யமருத்தணிமருட்காய்கள் வதப்பும்போம்" (தைல. தைலவ. ௧௯௯.)

அரிகரபுத்திரன் — ஐயனார். (உ - ம்.) "அத்தகுந்திருமைந்தற்கரிகரபுத்திரனெனுநாமம்புனைந்து" (கந்தபு. மகாசாத். ௫0.) [ஹரிஹரபுத்ர: ஹரி—விட்டுணு. ஹர—சிவன். புத்ர—மகன். விட்டுணு மோகினியென்னும் பெண்வடிவங்கொண்டபோது அம்மோகினியைச் சிவன்கூடிப்பெற்றபிள்ளையென்பர்.]

அரிகரி—அத்திக்கொழுந்து (கா. வைத்.)

அரிகல் — மகாமேரு. (சி.)

அரிகள் — பகைவர். (சூ. நிகண். உ: ௫௧.) [அரியென்னும்பெயரின் பன்மைச்சொல்லாதலால் அப்பெயரின் பொருள்களனைத்துக்கும் பன்மையாம்.]

அரிகளவம் — நதி. (மா.)

அரிகறையான் — அரிக்குங்கறையான். (உவின். ௯௯.) 2. தொந்தரவுகொடுக்கிறவன். (உவின். ௯௯) [கறையானரிப்பைப்போல விடுக்கண் செய்கிறவனென்றபடி.]

அரிகிணை — மரவயிரத்தினற் செய்யப்பட்ட ஒரு மருதநிலவாத்தியம். (உ-ம்,) "அழலவிர்மணிப்பூண்மள்ள ரரிகிணைக்கிசையவூதுங் குழலிசை யறுகாற்கூட்டம்" (அருணசலபு. திருக்கண். ௪௫.)

அரிகுரல் — பரகரத்தகுரல். (உ-ம்.) "அரிகுரற்கோழி நாமத்தரவவட்கடித்ததாக" (சிந்தா- ௧௩௧. ௧௯௯.)

அரிகூடம் — கோபுரவாயின் மண்டபம். (மா.)

அரிகேசம் — சூரியனுடைய கதிர்களினென்று. (உ-ம்.) "ஆதவன்கதிரிலேழ்கதிர் சிறந்தவவற்றினிற் சுசுமுணத்தோடு-மேதமற்றுளிருமியலரிகேசமிரண்டும் வான்புதற்கொளிவழங்கும்" (கூர்மபு. ஆதவ. ௧.)

அரிகோராதிநி—ஓரரிட்டதேவதை. (௧. தொகை. ௪௯௯-ம். பக்)

அரிச்சந்திர } **அரிச்சந்திரம்** } —பிரதிட்டாகலையிலே தேயு தத்துவத்திலுள்ள எட்டுப்புவாங்களுளொன்று. (சிலி. கிரியா. உ௧-ம் சுலோ, உரை.) [ஹரிஶ்சந்த்ர:]

அரிச்சந்திரன் — சூரியகுலத்தரசர்களுளொருவன்; இவன், திரிசங்குவின் மகன்; சேட்டது மருதுகொடுத்தலால் இடையேழு வள்ளல்களுளொருவனுகவும், இராச்சியமிழத்தல், மனைவியிழத்தல் முதலிய பல இடுக்கண்வந்தும் மெய்யினை நிலை நிறுத்தினவனுகவும் இருந்தவன்- (உ-ம்) "ஒடைமால்யானைச் சத்தியாதனன்றனுயிர்நிகரெழிலுடைமைந்தனோடவிழ்நறுந்தார்மன்னவர்போற்றுமடலரிச்சந்திரனென்பான்" (கூர்மபு. சூரியன்மர. ௯௪.) [ஹரிஶ்சந்த்ர.]

அரிச்சிகன் — சந்திரன். (உவின். ௯௭.) [ருக்ஷ: இதனைத்தமிழில் "அரிச்சிகன்" என அபத்தமாய்த்திரித்தார்போலும்.]

அரிச்சுவடி—அரிவரியெழுதப்பட்டஏடு. (மா.)

அரிசட்டுவர்க்கம் — காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மற்சரம் என்னும் ஆறு உட்பகையின் கூட்டம். (மணிமேக. ௪௦௨.) [அரி-பகை; ஷட்—ஆறு; வர்க்க.]

அரிசந்தநம் — 1. ஐந்தருவிலொன்று. (ஆப். ௯௮௮.) 2. ஒருவகைச் சந்தநமரம். (உ-ம்.) "மலரரிசந்தநவாசம்

(பாரத. அருச்சுனன்றவ. கருஅ.) 3. தாமரைப்பூந்தாது. (உவில். கூகூச.) 4. நிலவு. (உவில். கூகூச.) 5. மஞ்சள். (உவில். கூகூச.) [ஹரிசர்ஜந:]

அரிசம் — 1. அமாவாசை யதிகமும் பிரதமை குறைவுமாகக் கூடிநிற்குந்திநம். (உ-ம்.) "சொல்லமாவாசையிஞ்சிற் பிரதமைதுலங்குமர்நா-ளொல்கவிலரிசமெல்பர்" (மச்சபு. புரூரவா. உஎ.) 2. மகிழ்ச்சி. (சி. சி. உ: அ௦. மறை.) [ஹ'ஷ: அரிசமாவது புத்திரமித்திராதிகளைக்கண்டு களித்து இனியெமக் கொன்றுங் குறைவில்லையென்கை.] 3. மிளகு. (சி; கா. வைத்.)

அரிசரன் — சிவன். (உவில். கூகூச.) [ஹரி-விட்டுணு. சர - அம்பு. விட்டுணுவையம்பாகக்கொண்டவரென்றபடி]

அரிசனம் — 1. மஞ்சள். (உ-ம்.) "அரிசனமேனிநல்லாள்" (கந்தபு. தெய்வ. அஎ.) 2. மஞ்சள்விரவிய கலவைப்பொடி. (உ-ம்.) "ஆசநத்தணிநீராட்டியரிசனஞ்சாத்தி" (பெரியபு. தடுத்தாள். சரு. உரை.)

அரிசா — பெருங்குமிழிமரம். (உவின். கூஎ.)

அரிசி — 1. உமியுடைப்பொருளில் உமி கழற்றியெடுக்கப்பட்ட உட்பதார்த்தம். (உ-ம்.) "தினையரிசி" (உவின். கூஎ.) 2. நெல்லிலே உமி கழற்றியெடுக்கப்பட்ட உட்பதார்த்தம். (உ-ம்.) "பண்டுமூளைப்பதரிசியேயாகுலும்" (வாக்குண்டாம்.) 3. மூங்கிலரிசி. (உவின். கூஎ.) [அதவரிசி, உருளரிசி, ஏலரிசி, கார்புகா அரிசி, லூவா அரிசி, வெட்பாலையரிசியென ஔஷதவகைக்காக ஆறுவகையரிசி யுண்டென்பர் வைத்தியர். உவின். கூஎ.] 4. விதை. (உ-ம்.) "அதவு" பார்.

அரிசில் — ஒருநதி. (உ-ம்.) "அரிசிற்றென்கரையழகார்திருப்புத்தூர்" (சுந். தேவார. புத். ரு.) [இது, "அரிசொல்" என்பதன்றிரிபு.]

அரிசு — மிளகுக்கொடி. (கா. வைத்.)

அரிசொல் — கும்பகோணத் துள்ள ஒரு நதி. (உ-ம்.) "அரிசொற்கரைப் புத்தூர்" (பெரியபு. திருப்பதி. சஉ.)

அரிசோபகந்தரவிரணம் — மூலபகந்தரம். (சீவரட். ௩௦உ.) [அரிஶஸ்-மூலம். பகந்தரம்.]

அரிசோரோகம் — ஆண்குறியில்வரும் ஒருவகைரோகம்; அது: வாதபித்தகபங்கள் இரத்த மாமிசங்களை யநுசரிக்கும்போது பிறப்பதும், அப்போதாண்குறியினுள்ளிலாவது வெளியிலாவது நமைச்சல், அவ்விடங்களில் மூலரோக முளைகளைப்போலுஞ் சிறு சிறு காளான் முளைகளைப்போலும் மாமிசம் எழும்புதல், அவைகளில் மிகவும் வியர்வைகசிதல், இரத்தம் வடிதல், என்னும் இக்குணங்களுண்டாவதுமானது. (சீவரட். ௩சரு.) [அரிஶஸ்-மூலம்.]

அரிசோவர்த்தமரோகம் — கண்ணிமையில்வரும் ஒருவகை ரோகம்; அது: இமைச்சந்திகளிலே துர்மாமிசம்வளரக் கண்களிலே மரத்தல், மினுமினுப்பு, எரிச்சல், சிவப்பு என்னுங் குணங்களுண்டாதல். (சீவரட். உசஎ.) [அரிஶஸ்; வர்த்தம.]

அரிட்டசூதநன் — விட்டுணு. (உவில். சுக.) [அரிஷ்டஸூதந: அரிஷ்ட-ஓரசுரன். ஸூதந:-கொன்றவன்.]

அரிட்டநேமி — 1. சூரியனுடைய துவாதச சாரதிகளுளொருவன். (உ-ம்.) "கோங்கிளமுலையார் நால்வரையரிட்டநேமி கொள்கெனக் கொடுத்தான்" (கூர்மபு. அந்தகா. ச; வி-ணி. உசரு.) 2. சைநமதத்திலுள்ள இருபத்துநான்கு தீர்த்தகரருள் இருபத்திரண்டாந் தீர்த்தகரன். (உவில். சுக.) [அரிஷ்ட; நேமி.]

அரிட்டம் — 1. அதிட்டகீநம். (உ-ம்.) "சாடு[illegible]ளவில்லாத பல்லரிட்டங்களனுங்கவும்" (திருவானை. கான. க.) 2. கள்ளு, மது. (உவில். சுஅ.) 3. காகப்பறவை. (உ-ம்.) "எங்குஞ் சங்கவரிட்டவிரக்கமே" (இரகு. திக்கு. கஅரு.) 4. தீங்கு, கேடு. (சி.) 5. துன்னிமித்தம். (உவில். சுஅ.) 6. நல்லதிட்டம். (உவில். சுஅ.) 7. நாரைப்பறவை. (உவில். சுஅ.) 8. பிரசவமண்டபம். (உவில். சுஅ.) 9. பிறவிக்குற்றம், சென்மதோஷம். (பிங்க. ௩௦அசு.) 10. மரணக்குறி. (உ-ம்.) "இவைமுன்னுயவரிட்டங்களெய்துகாலை" (சூத. எச்கி. பூ. ருசு: உசு.) 11. முட்டை. (சூ. நிகண். ௩: கக.) 12. மோர். (உவில். சுஅ.) 13. வெள்ளுள்ளிப்பூண்டு. (சப்த.) 14. வேப்பமரம். (சப்த.) [அரிஷ்ட: அ; ரிஷ்ட-அதிட்டம், கேடு.]

அரிட்டன் — ஓரசுரன். (உவில். சுஅ.) [அரிஷ்ட:]

அரிட்டாநகம் — 1. அபசயம். (உவில். சுக.) 2. ஏக்கம். (உவில். சுக.) [அரிஷ்டாநக:]

அரிட்டித்தல் — சொல்லுதல். (சதுரக.)

அரிட்டை — கடுரோகிணிப்பூண்டு. (தைல. தைலவ. உ௩.) (உ-ம்.) "அதிபலை" பார். 2. கந்தருவராயிரவர்தாய். (கூர்மபு. வாரணாசு. க.)

அரிடணம் — 1. சதாசிவனுடைய பஞ்சமுகங்களுளொன்றாகிய ஈசான முகத்தினிற்குங்கலைகளுளொன்று. (சை. நி. போ. ௩௦க.) 2. சந்தோஷம். (ஆப். கூஅக.) 3. நித்திய யோகங்களுளொன்று. (வருஷாதி) 4. மன்மதனுடைய பஞ்சபாணங்களி லொன்று. (ஆப். கூஅக.) [ஹர்ஷண.]

அரிடம் — 1. அதிட்டகீநம். (உ-ம்.) "அரிடமானதன்விதியினால்" (பாரத. நிரை. ச௩.) 2. கடுரோகிணிப்பூண்டு. (கா. வைத்.) 3. கேடு. (உ-ம்.) "ராவணபுயாரிட நிராமயசரோருகரனருள்பாலா" (திருப்பு. ௩௩௦.) 4. மூல

த்திலே வரும் ஒருவகை நோய். (ஆப். எஅ.) 5. விடாமழை. (ஆப். எஅ.) 6. வீடுமுதலிய வளங்களைக்கண்டு களித்து இனியெமக்கென்னகுறையென்னுங்குணம். (சிவப்பிர.உ:உ. சிதம்பர)7.வேப்பமரம். (கா–வைத்.) [இது அரிட்டம் என்பதன்சிதைவு போலும்.] 8. ரோமப் புளகம். (ஆப். கூஅகூ) [1-3. அரிஷ்ட. 4-5. அரிஷ. 6, 8. ஹ்'ஷ.]

அரிடிகம்—சிற்பநூன் முப்பத்திரண்டினொன்று. (மா.)

அரிணம்—1. சிவப்பு. (ஆப். கூஅஅ.)2. பொன். (சதுரக.) 3. மான். (உ–ம்.) "அரிணமாதியமிருகங்கள்" (திருவானை. செசார. ௬.) 4. யானை. (சதுரச.) 5. வெள்ளை. (ஆப். கூஅஅ.)
[1, 2, 3, 5. ஹரிண.]

அரிணவம்– கடல். (ஆப்.அக) [அ'ணவ.]

அரிணன்—1. சிவன். (ஆப். கூஅஅ.)2. சூரியன். (உவில். கூகூச.) 3. விட்டுணு. (ஆப். கூஅஅ.)
[ஹரிண.]

அரிணி – 1. சித்திநிச்சாதிப்பெண். (உவில். கூகூச.) 2. பெண்மான். (உவில். கூகூச.) 3. பொன்னூலாய உருவம். (உவில் கூகூச.) 4. மான்சாதிப்பெண். (உ-ம்.) "அரிணிவடவையத்திநியென்பவை தெரியுங்காலை யரிவையர்சாதி" (கல்லா. எ. உரை.) 5. வஞ்சிக்கொடி. (மா.)
[1-4. ஹரிணி.]

அரிணை—கள்ளு. (சதுரக.)

அரித்தல்—1. கெடுத்தல். (உ-ம்.) "பாலிக்குமரிக்குந்தாணிழல்வெப்பம்" (கம்பரா. கரு.) 2. சங்கரித்தல். (உ-ம்.) "சருப்பத்தையுமரைக்கச் செனத்தரிப்பா னுலகரிப்பான்" (சீகாழி. ஆபத்து. ௪.) 3. சிறிதுசிறிதாக அறுத்தல். (உ–ம்.) "களக்கறையானைச்சற்றென்னுநெஞ்சே – கலங்கலரிக்குநதீவினையான கருங்கலையே" (மறைசையந். கக.) 4. சிறிதுசிறிதாக எடுத்துப்போதல். (உ–ம்) "அரித்தொழுகுவெள்ளருவி" (தேவார.திருவையா. திருநா. ௬.) 5. புல்லுமுதலியவைகளைத் துசணீச்கியெடுத்தல். (சி.) 6. மாமுதலியவைகளை அரிக்குங்கருவியிலிட்டுக்கழிவு நீக்கியெடுத்தல். (சி.)

அரித்தவிசு—சிங்காசனம். (உ-ம்.) "அரித்தவிசுயர்ச்சி" (கந்தபு. அண்டசோ. ௪௦.)

அரித்திரம்—1. சுக்கான். (ஆப். எஅ.) 2. தோணிவலிக்குந் தண்டு. (ஆப். எஅ.) 3. மஞ்சட்பூண்டு. (பிங்க. களஉரு.)
[1, 2. அரித்ர. 3. ஹரித்ர.]

அரித்திரா—1. மஞ்சட்கிழங்கின் மா. (ஆப். கூஅகூ.) 2. மஞ்சள். (ஆப். கூஅகூ.)
[ஹரித்ரா.]

அரித்திராசுரம்—ஒருவகைச் சுரநோய்; அது: சர்வாங்கத்திலும் மஞ்சள் வன்னத்துடன் தடிப்பு, சயித்தியம், சடத்தவம், முகத்திலெண்ணெய் தடவினதுபோலப் பிசுபிசித்தல், நகங்களிலுங் கண்களிலும்நோவு, கீல்களில் வீக்கம், ஏப்பம், கொட்டாவி, விக்கல், கைகால்குளிர்ச்சி, சிரோபாரம், தலைத்திருப்பல், நாவுகசத்தல், தாகம், நெஞ்சுலர்தல், மார்பெரிச்சல், அக்கினிமந்தம், மலபந்தம், பலவீநம், அரோசகம், வாயில்நுரைவீழ்தல், அதிகபேச்சு என்னும் இக்குணங்களையுண்டாக்கும். (சீவரட். ௪௬.)

அரித்திராந்நம் — மஞ்சட்சோறு; இது: அறுவித நைவேதநங்களுளொன்று. (த. நி. போ. ௬௦உ.) [ஹரித்ரா–மஞ்சள். அந்நம்–சோறு.]

அரித்திராப்பிரமேகரோகம் — ஒருவகைப் பிரமேகரோகம்; அது: மஞ்சணிறமான வெள்ளைகாணல், சூடாக நீரிறங்கல், நெருப்பைக்கொழுத்தினதுபோல எரிச்சலுடன் கூடிய கடுப்பு, விருவிருப்பு, அதிக உட்டணம், முகத்தில் மஞ்சணிறம், நாவிற் கசப்பு, மாந்திடுக்கிடல் என்னும் இக்குணங்களையுண்டாக்கும். (சீவரட். ௬கக.)

அரித்திராபம் — ஒருமரம். (உவில். கூகூரு.) 2. மஞ்சணிறம். (உவில். கூகூரு.) 3. மஞ்சணிறமுள்ளது. (உவில். கூகூரு.)
[ஹரித்ராபः: ஹரித்ர–மஞ்சள். ஆப–போன்றது.]

அரித்திராமேகம்—போகத்தால் விளைந்த பித்தவெட்டை. (உ–ம்.) "போகத்தால் விளைந்த அரித்திராமேகம் வார்தி யென்னும் ரோகங்களெல்லாம்" (தைல. தைலவ. ௫அ. உரை.)

அரித்துவசன் — சிங்கக்கொடியுடையோன். 2. வீமன். (உ–ம்.) "அரித்துவசன்றனைநோக்கியரக்கன்– கருத்துடனின்றிவைகட்டுரைசெய்வான்" (பாரத. புட்ப. எஉ.)
[ஹரி – சிங்கம். த்வஜः – கொடியுடையோன்.]

அரித்து — 1. அரித்தெனப் பொருள்படும் ஒருவினையெச்சம். (சி.) 2. சிங்கம். (ஆப். கூஅஅ.) 3. சூரியன். (ஆப். கூஅஅ.) 4. சூரியனுடைய பச்சைநிறக் குதிரை. (ஆப். கூஅஅ.) 5. திக்கு. (ஆப். கூஅஅ.) 6. பச்சைதாவிய மஞ்சணிறம். ஆப். கூஅஅ.) 7. பச்சைநிறம். (ஆப். கூஅஅ.) 8. மஞ்சணிறம். (ஆப். கூஅஅ.) 9. விரைவாகச்செல்லுங்குதிரை. (ஆப். கூஅஅ)
[2-9. ஹரித்.]

அரித்துவஞ்சத்துவம்— இருபத்தைந்து சிவ மூர்த்தத்தொன்று; அஃது: யமனைச் சங்கரித்த மூர்த்தம். (வி–ணி. உஎஅ.) [ஹரி– யமன். த்வம்ஸநம்–அழித்தற்றன்மை.]

அரித்துவம் — பகைமை. (உவில், ௬அ.)

[அரி–பகை. கூ௦–தன்மை.]

அரித்துவாரம் — 1. கங்காத்துவாரம், மாயாபுரி. (ஆப். கூஅஅ; சி; கூர்மபு. தக்கன்வேள். உ. உரை.) [மாயாபுரியின் பக்கத்திற் சங்காநதியுற்பத்தியென்பர். ஹரித்வாரம்:]

அரித்தை — 1. அரித்தாயெனப்பொருள்படும் ஒரு முன்னிலை வினைமுற்று. 2. கிலேசம். (சதுரச) 3. துன்பம். (சதுரக)

அரிதகி–கடுக்காய்மரம். (உவில்.கூகூசு) (உ–ம்.) "அரிதகியினலர் பாரிபாவியயம்" (தைல. தைலவ. சுசு) [ஹரீதகி.]

அரிதம் — 1.இருண்டநீலநிறம்.(வென். ககoசு.) 2. பச்சைநிறம். (வென். கக௦சு) 3. பசும்புன்னிலம். (வென். கக௦சு.) 4. பசுமை. (உவின். கூஎ.) 5. பொன்மை. (பிங்க,) 6. மஞ்சள். (வென். கக௦சு) [ஹரித.]

அரிதல் — 1.கத்திமுதலிய ஆயுதங்களாலறுத்தல். (உ–ம்.) "நாக்கரியுந்தசமுகனுர்" (இராமா. சூர்ப்பந.சஉ௫) "குன்றினிருஞ்சிறகரிந்த வயிரவொள்வாட்குரிசிலும்" (கூர்மபு. இராமனவ. க.) 2. விடுவாய்செய்திடல்.(கு. பொருளச.)

அரிதவேலி—மஞ்சணிறமுடைய ஒருவகையெலி. இது: சடித்தலால் அக்கினிமந்தமுங் கொட்டாவியும் மயிர்க்கூச்செறிவும் உண்டாகும் என்பர். (சீவரட். கூசு௦) [ஹரிதம்–மஞ்சணிறம்.]

அரிதளம்—பொன்னரிதாரம். (கா.வைத்.) [இஃது அரிதாளம் என்பதன் குறுக்கம்.]

அரிதாரம் — 1. இலக்குமி. (உ–ம்) "அரிதாரமன்னவளம்பகங்காட்டும்" (மறைசை. சஉ) [ஹரி–விஷ்ணு. தாரா–மனைவி.] 2. ஒருமருந்து. மனேசிலையென்னும் அரிதாரமானது மலைகளிலே யுதிக்குமென்றும், அதற்கு வேறாய் நறுமணம்வீசும் அரிதாரம் மான்வயிற்றுதிக்குமென்றும் பெரியபுராண உரைகாரர் கூறுகின்றார். (உ–ம்.) "மானின்வயிற் றரிதாரத் திலகமிட்டு" (பெரியபு. கண்ணப்ப.சஅ.) 3. தாளகமென்னும் பாஷாணம். இது: சீனதேசத்திலிருந்தும் பிரமாதேசத்திலிருந்துஞ் சுமித்திராதேசத்திலிருந்தும் வருகிறசரக்கென்றும் பாஷாணவகையிற் சேர்ந்ததென்றும்இது பொன்னரிதாரம், தாளகம், கட்டியரிதாரம், கரட்டரிதாரம், தகட்டரிதாரம், மடலரிதாரம், வைப்பரிதாரம், கனத்தியரிதாரம் எனப்பலவகைப்படுமென்றுஞ் சொல்லப்பட்டிருக்கின்றது" (கா. வைத்)

அரிதாலம் — 1. பொன்னரிதாரம். (உவில். கூகூ௫.) 2. மஞ்சணிறமான ஒரு சாதிப்புறு. (ஆப். கூஅஅ) [ஹரிதால.]

அரிதாலிகை — புரட்டாசிமாதச் சுக்கிலபக்சச் சதுர்த்தி. (ஆப். கூஅஅ)[ஹரிதாலிகா.]

அரிதாள்— நெல்லுமுதலியவைகளின் கதிரறுக்கப்பட்டதாள். (உவின்.கூசு)

அரிதாளம் — 1. நவதாளத்தொன்று. (மா.) 2. பொன்னரிதாரம். (ஆப். கூஅஅ.) [ஹரிதால.]

அரிதிநம்—ஏகாதசி. (உ–ம்) "ஏகமறுந்துவாதசியி னிலங்கு மரிதிநத்தும்" (வேதாரணியபு. அந்தர். க.) [ஹரி–விஷ்ணு. திந–நாள்.]

அரிதின்வயச்சி—1. திருநாமப்பாலை. (கா. வைத்.) 2. நன்னாரிக்கொடி. (உவின். கூசு)

அரிது — 1. அருமையென்னும் பண்படியிற் பிறந்து "அருமையானது" எனப்பொருள்படும் ஒரு குறிப்புவினைமுற்று. (உ–ம்.) "அரியவற்றுளெல்லாமரிதே" (வள். சசகூ) 2. அருமையானகாரியம். (உ–ம்.) "பழிப்பருமுலகங்களெவையும்பன்முறை– யழித்தழித் தியற்றுவார்க் கரிதுண்டாகுமோ" (இராமா. யுத்த. மந்திர. கூ.) 3. அருமையென்னும் பண்படியிற்பிறந்து ஏலாதெனப் பொருள்படும் ஒரு குறிப்புவினைமுற்று. (உ–ம்.) "அன்னதுசாத்திடலரிதுகாணென்றாள்" (சந்தபு. அச்கிநி. கசக.) 4. பச்சைநிறம். (உவில். கூகூ௫.) [ஹரித்.]

அரிதேவம்—திருவோணநட்சத்திரம். (ஆப்.கூஅஅ) [ஹரி–விஷ்ணு. தேவ–தெய்வம்.]

அரிதை—பகைமை. (உவில். கூஅ.)[அரிதா: அரி–பகை. தா–தன்மை.]

அரிதொடர்– துவக்குசங்கிலிகளுளொருவகை. (உ–ம்.)"துவக்குசங்கிலியெறிந்திருக்கு மரிதொடர் பிடித்தகை" (திருவிளை. நகர. உஎ)

அரிந்தமன் — 1. பகைவனையடக்குவோன். (ஆப். எஅ) 2. விட்டுணு. (உ–ம்.) "அரிந்தமன்சிலை நெடிதார்த்தலும்" (இராமா. மராமர. கசுசு)3. வெற்றியாளன். (ஆப். எஅ.) [அரிந்தம:]

அரிநர்—(நெல்) அறுக்கிறவர். (உ–ம்) "அரிநர் கீழ்மடைக்கொண்டவாளையும்" (புறநா. சஉ)

அரிநாதம்— 1. அறைகூவுதல். (உ–ம்.) "ஆங்குலகு செவிடுபட வடலரிநாதமுஞ்செய்தார்" (பாரத. பதினெட். சகூ) 2. சிங்கநாதம். (உ–ம்.) "அரிமகன்" பார். [ஹரி; நாத.]

அரிநிம்பம் — மலைவேம்பு. (மா)

அரிநூற்பொறி—நகரத்தின் மதிலிலே வைக்கப்படும் பொறிகளு ளொன்று. (சிலப். அடை. உசகூ. உரை.]

அரிநெல்லி — ஒருவகை நெல்லிமரம்.

இதன்பழம் மிகப் புளிப்புடையது. (உவின். ருகு) [இதன்பழம் சத்தியினலரியப்பட்டதுபோலும் வடிவமுடைமையின் இப்பெயர்பெற்ற தென்பர்.]

அரிப்பதாகன்—வீமன். (உ-ம்.) "அரிப்பதாக னுரகப்பதாகன்" (பாரத. பதினெட். சஅசு.) [ஹரி – சிங்கம். வபராகா-கொடி.]

அரிப்பர்–அரித்துப்பொருள்தேடுவோர். (உ-ம்) "அரிப்பர்கையகப்படுவன வாயிரத்திரட்டி" (திருவிளை. நகர. ருசு.)

அரிப்பன்—1.பொற்றுகளைமணலினின்றும் அரித்தெடுப்போன். (உ-ம்.) "குருட்டரிப்பனர்க்குங்குபேரனென்று பேரோ" (ஒழிவி. பொது. ு) [குருட்டரிப்பனரென் றிழிபின்கட் பன்மையாகக்கூறினரென்பர்.] 2. மண்முதலியவைகளையரிக்கிறவன். (உவின். ருசு.)

அரிப்பாளன்—அரிப்பன். (உ-ம்.) "பிறவியந்தகனுகிய வரிப்பாளனுக்குங் குபேரனென்று பெயருண்டு கொலோ" (ஒழிவி. பொது. ு. உரை.]

அரிப்பான்—அரிப்பன். (சி.)

அரிப்பிணு—பெண்சிங்கம். (உ-ம்.) "அரிப்பிணுவுருக் கொளலும்" (கந்தபு. அசுரர். ௨௦)

அரிப்பிரத்தம்—இந்திரப்பிரத்தம். (உ-ம்.) "இளவன்மீளவுமரிப்பிரத்தாகர்" (பாரத. இராச. ருசு.) [ஹரி-இந்திரன். வுரஸ்ர-நன்ருய் நிலைத்தது, சமநிலம்.]

அரிப்பிரியம் – 1.கடம்பு.(ஆப்.கஅஅ) 2. சங்கு. (ஆப். கஅஅ) [ஹ்ரிப்ரிய.]

அரிப்பிரியை—1. இலக்குமிதேவி. (உவில்.கககு)2. சுக்கிலபட்சத்துப்பன்னிரண்டாந்திதி. (உவில். கககு) 3. துளசிப்பூண்டு. (உவில். கககு.) 4. பூமிதேவி. (உவில். கககு)

[ஹரி–விஷ்ணு. ஃப்ரியா–பிரியமானது; வள்.]

அரிப்பு—1. அரித்தல். (உ-ம்.) "அரிப்பாளன்" 2. குற்றம். (சூ.நிகண். அ: ுஅ)3. கோபம்.(சூ.நிகண். அ: சுஉ) 4. சொறிதல், தினவு. (உவின். ருசு.) 5. பிரித்துக்கழித்தல். (உவின். ருசு.) 6. மண்ணுேடிலந்துகிடக்கும் பொற்றூள். (உ-ம்) "அரிப்பரித்தாங்கெய்த்துங் பொருள் செய்திடல்" (நீதிநெறி. அ.) [அரித்தெடுக்கப்படுதலினரிப்பெனப்பட்டது.]

அரிப்புக்காரன் – அரிப்பன். (சி.)

அரிப்புக்கூடை—அரிப்பெட்டி. (உவின். ருசு.)

அரிப்புழக்கல்—சோறு. (உ-ம்.) "வாலரிப்புழுக்கலுஞ் சாதக்கமையக்கொட்டியகறிகளின்வருக்கமும்" (திருவிளை. குண்டோ. சு.) [அரி – அரிசி. புழுக்கல்–வெந்தது.]

அரிப்பெட்டி – மாமுதலியன அரிக்கும் பெட்டி. (மா.)

அரிபாகர் – அரியர்த்தர். (உ-ம்.) "நிலவுசலந்தரதகனரரிபாகர்நீலகண்டர்" (திருநெல். அறம். கூ.) [ஹரி–விஷ்ணு. பாக-பங்கிலுடையவர்.]

அரிபாலுகம் – 1. தக்கோலச்செடி. (உவில். கககு.) 2. தக்கோலவிதை. (உவில். கககு.) [ஹரிவாலுக.]

அரிபிராணன்—சிவன். (உ-ம்.) "காலமூயர்மகேசனரிபிராணன்" (கூர்மபு. கலியா. எ.) [ஹரி – சிவன். ப்ராண-உயிர்.]

அரிபிளவை – தசையை யரிக்கும் பிளவைக்கட்டு. (உவின். ருசு.)

அரிபிறப்பு—1. பத்து. (உ-ம்) "சனிக்கொட்டையரிபிறப்பைக்கண்டரைநறுக்குச்சேரு" (தைல. தைலவ. அ௦.) [விட்டுணுவின் பிறப்புப் பத்தென்னுங் குறிப்புப்பற்றி வந்தது.] 2. விட்டுணுவின்பிறப்பு.

அரிபீடிகை – சமஸ்கிருதபாஷையிலுள்ள ஒரு வியாகரண நூல். (பி. வி. எக.) [ஹரிவீபிகா.]

அரிபுதை – இரவு. (மா.) [ஹரி–சூரியன், புதை–மறைவு.]

அரிபுரம் — 1. கலிங்கதேசத்துள்ள ஒரு நகரம். (உ-ம்.) "கலிங்கநாடதன் பாலாவதத்தனேர்மாக்கள் வாழரிபுரமதனில்" (கந்தபு. மார்க்க. ககசு.) 2. சத்துருவின் நகரம். (உவில். சுஅ.)

அரிபுழு—அரிக்கும்புழு. (உவின். ருசு.)

அரிபெட்டி – அரிப்பெட்டி. (உவின். ருசு.)

அரிமகன்—வாயுவின்மகனுகிய வீமன். (உ-ம்.) "அரிமகனடலரிதாதஞ்செய்யவே" (பாரத. மணி. சுச.) [ஹரி–வாயு; மகன். அரியென்னும் இச்சொல், அரியென்று பெயருடையவனுக்கு மகனுன எவனேயுங் கருதும்.]

அரிமஞ்சரி – குப்பைமேனிப்பூண்டு. (உவின். ருஎ.)

அரிமணல் — நுண்மணல். (உவின். ருசு.)

அரிமணி – மரகதரத்தினம். (உ-ம்) "ஏறுதேசிகவளையரிமணிக்கதிரிலக" (இரகு. நாட். சகு.) [ஹரின்மணி: ஹரித்-பச்சை. மணி-ரத்நம். ஆப். கஅஅ.]

அரிமந்திரம்-சிங்கம்இருக்குங்குகை. (உ-ம்) "அரிமந்திரம்புகுந்தாலானைமருப்பும்பெருகொளிசேர் முத்தும்பெறலாம்" (நீதிவெண்பா.) [ஹரி- சிங்கம். மந்த்ரம்–வீடு.]

அரிமர்த்தநன் — 1. ஒருபாண்டியன். (உ-ம்.) "திறலரிமர்த்தநனென்னுந் தென்பார் வேந்தன்" (திருவிளை. மண். ௫௦.) 2. சத்துருவைச்சங்கரிப்போன். (வென். சுஅக.) [அரிம'ர்தந: அரி–சத்துரு. ம்'ர்த - இடித்தல்.]

அரிமருகன் – 1. முருகமூர்த்தி. (உவின். ருசு.) 2. விநாயகமூர்த்தி. (உவின். ருசு.)

அரிமருத்தநன் — அரிமர்த்தநபாண்டியன்.

அரிமல்—மாவிலிங்குமரம். (சா. வைத்.)

அரிமா – 1. ஆண்சிங்கம். (உ-ம்.) "அரிமா பிழைப்பெய்தகோல்" (நாலடி. ௬௩: உ.) 2. சிங்கராசி. (மா.)

அரிமாநோக்கம் — சிங்கத்தின் பார்வை; அது: முன்னும் பின்னும் பார்த்தல். (உ-ம்.) "ஆற்றெழுக்கரிமாநோக்கந்தவளைப்பாய்த்துப் பருந்தின்வீழ் வன்னசூத்திரநிலை" (நன். பொது. கக.) [ஹரிமா—ஆண்சிங்கம். நோக்கம்—பார்வை.]

அரிமான்—ஆண்சிங்கம். (உ-ம்.) "அரிமானிடித்தன்ன" (கலி. பாலை. ௧௪.)

அரிமுகச்சிவிகை— சிங்கத்தலைச் சிவிகை; அது: சமயவாதிகளைவென்ற ஆசிரியர்களேறுவது. (மா.) [ஹரி—சிங்கம், முவ; ஶிவிகா.]

அரிமுகவம்பி—சிங்கமுகவோடம். (உ-ம.) "பரிமுகவம்பியுங்கரிமுகவம்பியுமரிமுகவம்பியும்"(சிலப். புற.௧௭௭)

அரிமுகன்—சிங்கமுகாசுரன். (உ-ம்.) "இற்றைப்பகனியிறந்தாயரிமுகனே" (கந்தபு. சிங்க. ௧௭௩.) [ஹரி- சிங்கம். முவ--முகம்.]

அரிமைதா — வெள்வேலமரம். (கா. வைத்.)

அரியகம் — காற்சரியென்னுங் காலிலணியும் ஆபரணம். (உ-ம்) "அரியகங்காலுக்கணிபெறப் புனைந்து" (சிலப். கடலாடு. அ௫) 2. கொன்றைமரம். (கா. வைத்)

அரியகோள்கை— தாபதர்க்குரிய அரிய இயல்பு; அவ்வியல்புகள்: பலதரமுநீரின் மூழ்கல், நிலத்திற்கிடத்தல், தோலுடுத்தல், அக்கினியோம்பல், ஊரடையாமை, சடைதரித்தல், காட்டிலுணவு, கடவுட்பூசை என எட்டு. (உ-ம்) "அரியகொள்கையர்" (சிந்தா கேம. ௧௨.; தொல். பொருள். ௭௫)

அரியசம்—கொன்றை. (சி)

அரியசாரணை – மாவிலிங்குமரம். (கா. வைத்.)

அரியணை—சிங்காசநம். (உ-ம்) "இனையகாலையிலரியணைப்பீடநின்றழியா" (கந்தபு. தெய்வ. ௨௬௧) [ஹரி-சிங்கம். அணை-ஆசநம். இங்கே செய்கைச் சிங்கத்தைக் கருதிற்று.]

அரியணைச்செல்வன்—அருகன். (சூ. நிகண். க: ௬)

அரியபச்சை—வங்காளப்பச்சை. (உ-ம்) "பச்சிலையரியபச்சைபத்திகாய்மயூரம்" (தைல. தைலவ. ௬௪)

அரியது – அருமையானது. (உ-ம்) "தவந்தனிலரியதொன்றில்லை" (கந்தபு. காசிப- ௨௬)

அரியம்—வாச்சியம். (உவின். ௬௭)

அரியமன் – 1. அரியமா என்னுஞ் சூரியன். (உ-ம்.) "பிறப்பிருளையரியுமரீயமனனவறவோய்" (வேதாரணிய பு. பிரவர. ௯.) 2. அரியமாவென்னும் பிதிரர்கணம். (உவில். ௭௪) 3. பிதிரர்களுட் டலைவன். (ஆப். அ௫) [அ. ய்ஐர்.]

அரியமா – 1. ஒரு பிதிரர்கணம். (உவில். ௭௪.) 2. சூரியன். (உவில். ௭௪.) 3. பன்னிருசூரியருளொன்று. அது: மிதுநத்திலுதிப்பதும் பதினாயிரங்கிரணங்களையுடையதுமாம். (கூர்மபு. ஆதவர்சிற. ௨; கூர்மபு. தக்கன்வே. ௬அ.) [அ'ய்ஐர்.]

அரியமான் – 1. அதிதியின்புத்திரராகிய சூரியர் பன்னிருவரிலொருவன். (கூர்மபு. அந்தகா. ௧௨.) 2. பிதிரர்களுட் டலைவனாகிய அரியமன். (உ-ம்) "தென்புலத்தோ ரிலிச்சையுறு மரியமான்யான்" (கூர்மபு. விபூதி. ௬௦) [அ'ய்ஐர்.]

அரியயற்கரியார் — சிவன். (உ-ம்.) அரியயற்கரியார்தாமும்" (பெரியபு. ஏயர். ௬௬௪.)

அரியயற்கரியோன் – சிவன். (உவின் ௬௬.) [விஷ்ணுவும் பிரமாவுங் காணுதற்கரியோன்.]

அரியர்— கிடைத்தற்கருமையானவர். (உ-ம்) "தீதடையாச்செல்வர்மொழிதிறம்பாதசூரர்நடுத்தெரிந்துநோக்குநாதரிவர்மிகவரியர்" (ஞானவா. வைராக். ௫௨.)

அரியல் – 1. அரித்தல். (உ-ம்.) "வெந்நீரரியல்விரலலை நறும்பிழி" (பெரும் பாண். ௨அ௪.) 2. அரிதல். (சி) 3. கள்ளு. (உ-ம்) "அரியலார்ந்தமர்த்தலின்" (சிந்தா. பதுமை. அ௪)

அரியன்— 1. அருமையானவன். (உ-ம்) "மறைகடேடரியனுவோன்"(பாகவத. சிசுபால. ௬௪.) 2. சிரேட்டன். (உவில். ௭௪.) 3. மேலானவன். (உவில். ௭௪.) 4. வைசிய குலத்தோன். (உவில். ௭௪.) [2- 4. அ'ய்ய.]

அரியாசநம்—சிங்காசநம். (உ-ம்.) "அரசர்சூழவரியாசநத்தினிடை" (பாகவத. பவுண்ட. ௬.)

அரியாணி — வைசியசாதிப்பெண். (உவில். ௭௪.) [அ'ய்யாணீ.]

அரியார்பவம் – 1. பத்து. (உ-ம்) "திரியாட்சிநீராடித் தேர்ந்த வெண்ணெண்ணேயமரியார்பவப்படி" (தைல. தைலவ. ௧௬௫.) [அரியார்—விட்டுணு. பவம்-பிறப்பு. விட்டுணுவுக்குப் பிறப்புப்பத்தென்பதுபற்றி வந்தபெயர்] 2. விட்டுணுவின்பிறப்பு.

அரியுண்மூலம் — கோரைக்கிழங்கு. (தைல.)

அரியேறி — துர்க்கை. (உவின். ௬௬.) [ஹரி - சிங்கம். ஏறி - ஏறுதலுடையவள்.]

அரியேறு — ஆண்சிங்கத்தினது சாயலாகச்செய்யப்பட்டவடிவம். (உ-ம்)

"நவமணி யழுத்திய வரியேறேந்து மாசநம்" (பாரத. இருட். எசு.) 2. ஆண்சிங்கம். (உ-ம்) "அடுதிறணிருப வேழக்குழா மடுமரி யேறிந்த" (இரகு. தேனுவர். கூஎ)

அரில்—1. குற்றம். (உ-ம்) "அரிலசற்றுங்கேள்வியார்" (திரிகடு. கூ.) 2. சிறுகாடு, சிறுதூறு. (உ-ம்) "பிணங்கரினுழைதொறும" (மலைபடு. கூஎக) 3. பகை. (மா.) 4. பிணக்கு. (உ-ம்.) "அகத்திணைமருங்கி னரிறப வுணர்ந்தோர்" (தொல். பொருள் ருசு.) 5. பின்னுதல். (உ-ம்.) "துணங்கரின்மாலை" (பொருநரா. கசுக.)

அரிவட்டம் — சமுத்திலே மாட்டும் அரிச்சண்டம். (மா.)

அரிவரி — அசர மூதலாக முறையே கோவைசெய்யப்பட்ட வரிவடிவமான எழுத்துக்கள். (மா.)

அரிவருடம் — நவகண்டத்துளொன்று; இஃது:ஏமகிரிக்கும் நிடதகிரிக்கும் இடையேயுள்ளது. (உ-ம்.) "அம்புவியினிசதமுதலேமங்காறுமரிவருடம்' (கந்தபு. அண்டகோ. கூஎ) [ஹரி-அங்கிரனுடைய புத்திரரிலொருவன். வருஷ--சண்டம்.]

அரிவாட்கள்ளன் — கூன்வாள்பிடிக்குங் கைப்பறண்டையில் வரும் ஒரு நோய். (சி.) [வழக்.]

அரிவாட்சோண்டன் — சடலிற்றிரியுமொருவிதக் கொக்குப்பறவை. (உவின். கூசா.)

அரிவாட்டாயர் — அறுபத்துமூன்று நாயன்மாருளொருவர். (பெரியபு. அரிவாட். உஉ.)

அரிவாண்மணை — 1. அரிவாண்மணைப்பூண்டு. 2. காய்முதலிய கறிப்பதார்த்தங்களையரியுங்கருவி செறிக்கப்பட்ட பலகை. (உவின். கூசா.)

அரிவாண்மணைப்பூண்டு — ஒருவகைப்பூண்டு. (உவின். கூ௦.)

அரிவாண்மூக்கன் — அரிவாட்சொண்டன். (செ.)

அரிவாள்-1. காய்முதலிய கறிப்பதார்த்தங்களை யரியும்படி மணையிற்செறிக்கப்படுகிறசருவி. [வழக்.] 2. நெல்லரிவி முதலியவைகளை யரியுங்கூனிரும்பு. (உவின். கூசு) 3. மரம் முதலியவைகளையரியும் ஈர்வாள். (உ-ம்.) "அறுதிமரத்துக்கீரரிவாள்" (ஞானவா. புசுண். எரு.)

அரிவி—1. அரிவிப்பிடி. (உவின். கூஎ.) 2. நெல்லுமுதல்யவற்றின்கதிர். (மா)

அரிவிக்கள்ளன் — அரிவிபிடிக்குங் கைப்பிடிப்பு, கைப்பறண்டையில் வரும் நோய். (சி.) [வழச்.]

அரிவை — 1. சௌந்தரியமான பெண். (உவின். கூஎ.) 2. பத்தொன்பது வயசுக்குமேற்பட்டும்இருபத்தைந்துவயசுக்குமேற்படாது மிருக்கும் பருவத்தையுடைய பெண். (உ-ம்.) "பதினென்காதிபத்தொன்பாண்காறு—மெதிர்தருமடந்தைமேலாறுமரிவை" (இலக்கணவி. அசுஉ.) 3. பெண். (உ-ம்.) "அம்மா வரிவை முயக்கு" (வள். கச௦எ.)

அரிவைபங்காளன் — சிவன். (உ-ம்.) "அரிவைபங்காளன்வானோரயனொடுமருகி நோக்க" (பாகவத. சிசுபால. எஎ.)

அரின்—பயம். (சி.)

அரீடம் — 1. கடுகுப்பூண்டு. (கா. வைத்.) 2. கடுரோகணிப் பூண்டு. (கா. வைத்.)

அரு — 1. அணு. (உவின். கூஎ.) 2. உருவமற்றது. (உ-ம்.) "ஒளிருமேனி-அருவென்றூர்சிலர்சிலர்கள்" (இராமா. மருந். கூசு.) 3. (பௌத்தம்) உருவல்லாதபொருள்; அது: சித்தவரு, கன்மவரு என இரண்டு. "புலன்கள் பொறிவழியோடியறிய அதனைக்கண்டது சித்தவரு" "அப்படிக் கண்டபொருளை நன்றென்றுந் தீதென்றுங் கொண்டல் கன்மவரு" (உ-ம்.) "அருவியல்சித்தங்கன்மமென்றிரண்டாகும்" (சி. சி. பர. சௌத். மதம். ச-ம். உரையும்.) 4. கடவுள். (உவின். கூஎ.) 5. காணப்படாத தன்மை. (உ-ம்) "நிலவுமருவுருவின்றி" (சிவப்பிர. பொது. க.) 6. காயம், புண். (ஆப். சஅ.) 7. மும்மலங்களுளொன்றாகிய மாயை. (உ-ம்.) "அருவினிலுருவந்தோன்றி" (சி. சி. க: உஎ.)

அருக்கசர்—அச்சுவினிதேவராகிய தேவவைத்தியர். (ஆப். அ௦.) [அ'கஜள: அ'ச—சூரியன். ஜள: -பிறந்தவர். சம்ஸ்கிருததுவிவசநவிகுதி தமிழிற் பலர்பால் விகுதியாய்த் திரிந்து வந்தது.]

அருக்கசன்—1. கன்னனென்னும் அரசன். (ஆப். அ௦) 2. சனியென்னுங்கிரகம். (ஆப். அ௦) 3. சுக்கிரீவனென்னுங் குரக்கரசன். (ஆப். அ௦) 4. யமராசன். (ஆப். அ௦.) [அ'கஜ:]

அருக்கசூநு — அர்க்கசூநு.

அருக்கசோதரம் — ஐராவதயானை. (உவில். எ௦.) [திசை காவலாகிய தொழிலிலே இந்திரனோடு கூடிநிற்றலால் வந்தபெயர். அ'கஸோதா: அ'க-இந்திரன். ஸோதர—இனம்.]

அருக்கத்தி — காயத்தாலாயநோ. (மா.) [அரு—காயம். கர்த்தித—வெட்டுப்பட்டது. இது: கத்தி எனமருவிற்று.]

அருக்கதாநம் — தேவருக்காவது பெரியோருக்காவது வணக்கத்தோடு காணிக்கைகொடுத்தல். (உவில். எ௦.) [அ'வதாந: அ'வ—காணிக்கை. தாந-கொடுத்தல்.]

அருக்கபாதவம்—வேப்பமரம். (உவில். எ௦.) [அ'கபாதவ.]

அருக்கபுத்தி—சூரியகதி. (உவின். கூஅ.) [அ'க—சூரியன். புக்தி—உணவு. அது: சூரியனுண்ணுங்காலம்.]

அருக்கம் — 1. அக்கினி. (ஆப். எக.) 2. உணவு. (ஆப். எக.) 3. எருக்கஞ்செடி. (உ-ம்.) "அருக்கவெண்பஞ்சுபோல" (அருணசலபு.திருவவ. ருக) 4. குறைவு, சுருக்கம். (உ-ம்.) "ஆவியாய வியுமாகியருக்கமாய்ப் பெருக்கமாகி" (தேவார. திருப்பய. ௪. திருநா.) 5. செம்பு. (ஆப். எக.) 6. துன்னிமித்தம். (மா.) 7. நீர்க்காக்கை. (உவின். கூள.) 8. பளிங்கு. (ஆப். எக.) [1, 2, 3, 5, 8. அ'க.]

அருக்கமண்டலம் — சூரியமண்டலம். (உவில். எo.) [அ'க-சூரியன். மண்ஜலு-வட்டம்.]

அருக்கர் — சூரியர். (உ-ம்.) "அருக்கர் தந்தொகையனைத்தையும்" (கந்தபு. திருவி. ககக.)

அருக்கல் — 1. அச்சம். (செ.) 2. அருமைப்படுத்துதல். (செ.) 3. குறைத்தல், சுருக்கல். (உ-ம்.) "மழையருக்குங்கோள்" (திரிகடு. ருo.)

அருக்கலம் — 1. கடற்றிரை. (உவில். எo.) 2. கதவடைக்குந்தாழ். (உவில். எo.) [அ'றவு.]

அருக்கவிக்கேபம் — சூரியாட்சம். (உவின் கூஅ.) [அ'க, விக்ஷெவ.]

அருக்கவிட்சேபம் — அருக்கவிக்கேபம். (சி.)

அருக்களித்தல்—1. அருவருத்தல். (உவின். கூள.) 2. பயப்படல். (உவின். கூள.)

அருக்களிப்பு — 1. அருவருப்பு. (உவின். கூள.) 2. பயம். (உவின். கூள.)

அருக்கன்—1. இந்திரன். (உவில். எo.) 2. சூரியன். (உவில். எo.) 3. ஞாயிற்றுக்கிழமை. (உவில். எo.) 4. தமயன். (உவில். எo.) 5. பண்டிதன். (உவில். எo.) 6. வேர்க்கொம்பு. (கா. வைத்.) [1-5. அ'க.]

அருக்கன்வீதி — கிராந்திமண்டலத்தை நான்கு ராசிகொண்ட மூன்று பாகமாகக்கொண்டு சூரியன் செல்லும்வீதி. (உவின். கூஅ)

அருக்காணி — 1. அருமை. (உவின். கூஅ) 2. அருமைப்படுத்துதல். (உவின். கூஅ.) 3. பிரியவீனங் காட்டிப் பின்னிற்கை. [வழக்.]

அருக்காணிகாட்டல் — பிரியவீனங் காட்டிப் பின்னிற்றல். (உவின். கூஅ.)

அருக்காணிபண்ணல் — அருக்காணி காட்டல். (உவின். கூஅ.)

அருக்கிநம் — நோவின்மை, ஆரோக்கியம். (உவில். சுக) [அரூநீ:]

அருக்கியத்திரவியங்கள் — சலம், பால், தருப்பைநுனி. அட்சதை, எள், யவம், சம்பாநெல், வெண்கடுகு என அருக்கியத்திற்கு உபயோகமாகும் எட்டுத்திரவியங்கள். (திருவாதவூர. திருப்பெ. எo-விருத்தி.)

அருக்கியம்—1. சலத்தோடரிசிமுதலியவற்றைக்கொண்டாவது தனியே சலத்தைக்கொண்டாவது தேவர்களுக்கல்லது பெரியோருக்குவணக்கத்தோடு செய்யும் உபசாரம்; நீர் சிரசிற் புரோட்சித்தல். (வென். சஅ.) (உ-ம்.) "அருக்கியமுதலினோடாசநங் கொடுத்து" (இராமா. திருவ. சக.) 2. வணங்கப்படத்தக்கது. (வென். ஜஅ.) [அ'வுo.]

அருக்கீசம் — இருதயமுதற் கண்டமட்டாக ஏழங்குலம் வியாபித்து நிற்கும் ஒருகலை. (பிராசாததீபி) [அ'4கீஶ.]

அருக்கீசன்—தேவர்யாவருள்ளும் மிகப் பூசிக்கப்படத்தக்க மகாதேவன். (வாச.) [அ'4கீஶ.]

அருக்கு — 1. அஞ்சுகை. (உவின். கூஅ.) 2. அருக்காணி. (உவின். கூஅ.) 3-5. அருக்கென்னேவலுந் தெரிநிலைவினைப்பகுதியும் பெயரெச்சத்தொகையும். 6. அருமை. (உ-ம்.) "நிதியினருக்கு முன்னி" (திருக்கோ. உஎரு.) 7. எருக்கஞ்செடி. (உ-ம்.) "சூளையருக்கஞ் சாறுதோயமது" (இராசவைத். எக.)

அருக்குத் — அர்க்கத்து. (உவின். கூசுக.) [அராபி.]

அருக்குதல்—1. அருமைசெய்தல். (உ-ம.) "ஒருக்கிநாமாடுங்குரவையுணம்மை--யருக்கினன் போனேருக்கியல்லனேய் செய்தல்-குருஉக்கட்கொலையேறுகொண்டேன்யானென்னுந்– தருக்கன்றேவாயர் மகன்" (கலித்தொகை. ௧oச) 2. ஒடுக்குதல். (உ-ம்) "முருக்கிமுன்னரரிமுதலோருயிரருக்கி" (உபதேசகா. சிவத்து. சஉஉ.) 3. குறைத்தல், சுருக்குதல். (உவின் கூஅ) (உ-ம்.) "நீரருக்கி மோர்பெருக்கி" 4. செய்யப்பின்னிறறல். (உ-ம்) "அம்புவிதனிறபொன்னுள்ளோனுலோபியாயருக்கினுனேல்" (மச்சபு. சங்கிரா. கக.) "அருக்குமங்கையர்மலரடிவருடியே" (திருப்பு. ச.)

அருக்கை — தமக்கை. (சி.) [அருக்கன். 4-பார்.]

அருக்கேந்துசங்கமம்—அமாவாசை. (உவில். எo.) [அ'கெந்துஸங்கமம: அ'க-சூரியன். இந்து-சந்திரன். ஸங்கம-கூடுதல்.]

அருக்கோபலம் — சூரியகாந்தக்கல். (உவில். எo.) [அ'கொபலு: அ'க-சூரியன். உபலு-கல்லு.]

அருக — நெருக்கமாக எனப் பொருள்படும் ஒருவினையெச்சம். (சி)

அருகசநி — பேரேலப் பூண்டு. (கா. வைத்.)

அருகஞ்சி—சீந்திற்கொடி. (கா. வைத்.)

அருகணி — பிரண்டைக்கொடி. (கா. வைத்.)

அருகத்து—(பௌத்த) தியானங்கள் ஐந்தனுள் நான்காவது. (மணிமேக. பக். சுரு.) [அ'ஹத்.]

அருகந்தர்—அருகசமயத்தோர். (உ-ம.) "ஊத்தை வாயருகந்தர் கூடி" (சூத. ஞானயோ. க: ௬௧.) [அ'ஹந்த

அருகந்தன் — 1. அருகசமயத்தோன். (உவில். எச.) 2. சிவன். (உவில். எச.) 3. சைநமதத்திற் சொல்லப்படும் இருபத்துநான்கு தீர்த்தகரருளொருவன. (த. சி. போ. கூ.) [அ'ஹந்த:]

அருகம்—1. உரிமை, உரியது. (உ-ம்.) "அருசங்கவசந்தான்" (சைவச. பொது. ௬௫௫.) 2. சமணசமயம். (உ—ம்.) "பாஞ்சராத்திரம் பௌத்தமருகமிவற்றுழல்க நாளும்" (சூத. எக்கி. பூ. உ௯: ௧௨.) 3. சமீபம். (சி. சி.) 4. பக்குவம். (உவில். எச.) 5. யோக்கியம். (உவில். எச.) [1, 2, 4, 5. அ'ஹ.]

அருகர்—1. அருகசமயத்தோர். (உ-ம்.) "கருநடர்வேந்தனருகர்ச்சார்ந்து" (கல்லா. ௫௪) 2. அருகில் இருக்கிறவர், அருகில் இருக்கு நண்பர். 3. அருகு, சமீபம். (உ . ம்.) "ஆண்டகையாண்டவ்வாறோர் துறக்காடருகர் கண்டான்" (இராமா. கடல்தா. உ) [அருகர்- அருகென்பதன் போலி.] 4. இருடிகள். (உ — ம்.) "அருகரறவனறிவோற்கல்லதென் — னிருகையுங்கூடியொருவழிக் குவியா" (சிலப். காடு. ௨0௨, ௨0௯.) 5. தக்கவர். (உ. - ம்.) "அங்கண் ஞாககிலைமைசேரவருகராகுமவர்கடாம்" (சேதுபு. முத். ௫௨) 6. யோக்கியர். (உவில். எச.) [1, 4, 5, 6. அ'ஹத்- பூசிக்கத்தக்க யோக்கியன்.]

அருகல்— 1. அணுதல். (உவின். ௬௭.) 2. (கண்) அருகல். (உவின். ௬௭.) 3. ஒழுகுதல், சிந்துதல். (உ-ம்.) "நீருகிப் பாய்தல்" (உவின். ௬௭.) 4. கிட்டுதல். (மா) 5. குறைதல், சுருங்கல். (உ - ம்.) "அருகலிலாயபெருஞ்சீரமரர்கள்" (நாலாயிர. ௬: ௯) "அருகிநறுசுப்புப்பிரகுதிதன்னை" (சூத. சிவ. ௧௧: ௯௨.) 6. சீரக்கிலேசஞ்செய்தல். (உ— ம்.) "வினைகண் மாற்றிடிவருகனும்" (கந்தபு.பாயிர.௨௬.) 7. சாதல். (உவின். ௬௭.)

அருகன் — 1. அருகசமயத்தவன். இவன, உலகமெல்லாம் நித்தியம் என்றும், அருகேசுரன் குருத்துவமாத்திரத்திலே கர்த்தா என்றும் பிராணவாயு ஆன்மா என்றுஞ் சொல்வன். (சி. சி. பாயிர. க. ஞாகப்; சி. சி. ௪:௨௬. ஞாகப்.) 2. அருகதேவன். (உ-ம்.) "அங்கம்பயர்தோனருகனருண்மொழி" (சிலப். காடு. ௧௪௭.) [பூச்சியனென்பதனல் வந்தபெயர்.] 3. அருகிலிருக்கிறவன்-நண்பன். (உவின். ௬௭) 4. தக்கவன், பக்குவி. (உ - ம்.) "அன்புகொளறத்திற்கருகனேனுதலின்" (மணிமேக. உஅ. காதை. ௬௬.) [1, 2, 4. அ'ஹ.]

அருகன்குடை— பொற்குடை, முத்துக்குடை, இரத்திநக் குடையென முறையே சொல்லப்படுஞ் சகலபாசநம், சந்திராதித்தியம், நித்திய விநோதமாகிய, அருகதேவனுக் குரியவாய முக்குடைகள். (சூ. நிகண். பாயிர. க; க. தொகை.)

அருகன்குணம்- அருகதேவனுக்குடையனவாகச் சமணநூலிற் சொல்லப்படும் நற்குணங்கள். அவை: அநந்தசுகம், அநந்தஞானம், அநந்ததரிசநம், அநந்தவீரியம், நிர்க்கோத்திரம், நிர்நாமம், நிராயுஷியம், அழிவின்மை என எட்டாம். (இது: சி. சி.பர. சமணரில் நிகண்ட. உ — ங் கவியானும் உரையானும் பெறப்படும்.)

அருகன்சிறப்பு-அருகதேவனுக்குடைய மங்கலப்பொருள்கள். அவை: தூபதீபக்காட்சி, தேவதுந்துமி, தெய்வத்துவனி, சிங்காதநம், பிண்டி, வெண்சாமரை, புட்பமாரி, மும்மைக்குடையென எட்டாம். (க. தொகை)

அருகன்ஞானம்-அருகனுக்குடைய ஐந்துவகை ஞாநங்கள்; அவை: மதிஞாநம், சுருதஞாநம், அவதிஞாநம், மநப்பரியயஞாநம், கேவலஞாநம் என்பன. இவற்றுள். மதிஞாநம் — சுபாவபுத்தி; சுருதஞாநம்-நூலுணர்ச்சி; அவதிஞாநம்-தன்னுடைய முற்பிறப்பையறியும் அறிவு; மநப்பரியயஞாநம்-தன்னுடைய முற்பிறப்பையும் பிறருடைய முற்பிறப்பையும் அறியும் அறிவு; கேவலஞாநம்-திரிகாலவுணர்ச்சி. (சிலப். நாடு. ௧௭௭. குறிப்புரை.)

அருகன்மதில் — உதயதரம், கலியாணதரம், பிரீதிதரம் எனச்சொல்லப்படும் அருகனுடைய மும்மதில்கள். (க. தொகை.)

அருகன்விட்டதுணம்— அருகதேவனுக்குடையனவல்லவாகச் சமணநூலிற் சொல்லப்படுந் தீக்குணங்கள். அவை: ஞாநாவர்ணியம், தரிசநாவர்ணியம், வேதநீயம், மோகநீயம், ஆயுஷியம், கோத்திரம், நாமம், அந்தராயம் என எட்டாம். (இது: சி. சி. பர. உ-ங் கவியானு முரையானும் பெறப்படும்.)

அருகனைமுடிதரித்தாள்— தருமதேவதை. (உவின். ௬௭) [நீதிநூலியாகிய அருகனைத் தனது முடியிற் சொண்டவளெனவே உத்தமியென்பதுகொள்ளப்பட்டது.]

அருகி—1. "அருகி" என்னும் ஒரு வினையெச்சம். 2. கள்ளு. (திவாகர) 3. யோக்கியமுடையவள். (உவின். ௬௭) [அ'ஹ.]

அருகித்தோன்றல்- 1. அரிதாகத்தோன்றல். (உ-ம்.) "விண்ணிலங்கருகித்தோன்றுமேதகுவடமீனன்றி" (பாரத. சூது. ௨0௨) 2. சுருங்கித்தோற்றல். (உ-ம்.) "அம்மலைமுடிமேலேறிநின்றுமீண்டுபார்க்குமிடத்துமுன்னிருந்தமாகிலமும்பின்வந்தமலையிடமுந் தானின்றவிடத்திற்குக் கீழ்ப்பட்டருகித் தோற்றுமாப்போலும்" (ஒழிவி. பொது. ௪௬. உரை.)

அருகியாத்தம்— பூனைக்காலிப்பூண்டு. (உவின். ௬௭.)

அருகியற்குறிஞ்சி — ஒருபண். (கந்தபு. சூரனர. உ௬)

அருகியற்சேவ்வழி—ஒருபண். (கந்த பு. சூரனர. உக)

அருகியற்பாலை — ஒருபண். (கந்தபு சூரனர. உக.)

அருகியன்மருதம்—ஒருபண்; அது:கு ரல்குரலாய செம்பாலை. (சிலப். வே னி. சo)

அருகு—1. அடுத்த இடம், சமீபம்.(உ-ம்.) "அணியுங்கழற்காற்சுயோதனனு க்கருகாசனத்தரிவர்" (பாரத.திரௌ. ருசு) 2-4. அருகென்னேவலுந் தெ ரிநிலைவினைப்பகுதியும் பெயரெச்சத் தொகையும். 5. ஓரம். (உ-ம்) "தாம ரையின்மொய்மலரைத் தும்பியருகு டைக்குநன்னாட்டரசு" (நளவெண். கலிநீங். உஉ) 6. சாரலின் ஒரு பகு ப்பு. (உ-ம்) "சான்புறமகம்புறத்தோ டருகொடுபெருகுஞ்சார-னு லுணர்ந் தறழினூற்று மூன்றதாநுவலும் ப ண்ணே" (கூர்மபு. கண்ணனமண. சுடுஅ) 7. தீவர்த்தி. (உவின். ருஎ.)

அருகுதல்—அருகல்.

அருகுறல்—கிட்டுதல், பக்கத்தில் வரு தல். (உ-ம்) "ஆன்றவிச் செல்வமித் தணையுமொய்த்தருகுற" (இராமா. பால. எதிர். உக)

அருகே—கிட்ட. (உவின். ருஎ)

அருங்கலச்சேப்பு—மணிக்கலம்பெ யதபணப்பெட்டகம். (சிலப்.)

அருங்கலச்சேவ்விதழ்—பொற்றும ரை. (சிலப்)

அருங்கலம் —1. பெறுதற்கரிய ஆபர ணமபோலுஞ் சிரேட்டமானபொரு ள். (உ-ம்.) "பூவினுக்கருங்கலம்பொ ங்குதாமரை—ஆவினுக்கருங்கலமரன ஞ்சாடுதல் — கோவினுக்கருங்கலங் கோட்டமில்லது" (தேவார. நமச்சி வாய. உ. திருநாவு) 2. பொற்பணி. (உ-ம்.) "அருங்கல வெறுக்கையொ டளந்துகடையறியா" (சிலப். இந். உo.) 3. விலையுயர்ந்த ஆபரணம் (உ-ம்.) "பெண்ணினிற்கருங்கலமனை யபெய்வனே" (இராமா. கார்கால. உo.)

அருங்கலநாயகன்—புத்தன். (திவா கர. முதலா.)

அருங்கிடை — அதிகப்பட்டினி. (உவி ன். ருக.) [வழக். அருமை; கிடை - கிடத்தல்.]

அருங்குரைத்து — அருமைத்தெனப் பொருள்படும் ஒருகுறிப்புவினை. (உ-ம்.) "சருங்களிறட்டவன் றனக்குங் காப்பதிங் கருங்குரைத்தென" (கா ஞ்சிபு. கழுவாய். சுடு.)

அருங்கேடன்—1.கேடில்லாதவன். (உ-ம்.) "அருங்கேடனென்பதறிக" (வ ள். உசo.) [அருமை-இன்மை.] 2. மி கக்கெட்டவன். (உவின். ருக.)

அருங்கேடு — கேடில்லாமை. (உ-ம்) "அருங்கேட்டாலாற்றவிளைவது" (வ ள். எருஉ.) [அருமை--இன்மை.]

அருங்கோடைத்தாநம்—உத்தமதான ம். (உ-ம்.) "அருங்கொடைத் தான மாய்ந்தவருந்தவந்தெரியின் மண்மே ன்-மருங்குடையவர்கட்கல்லால் மற் றவர்க்காவதுண்டோ" (சிந்தா. முத். ருஉசு.)

அருங்கோடை—1.மிக்க வெப்பத்தைக் கொடுக்குங் கோடைகாலம். (உவின். ருக.) 2. மிக்கவெப்பம். (சி.)

அருங்நிமேடவர்த்தமரோகம் — இ மையைப்பற்றிய ஒருவகை ரோகம்; அது: வாயு இமைச் சந்திகளிலே நிற் கும்போது பிறந்திமைகளை ஓடாதா ட்டுவிப்பது. (சீவரட். உசசு.[அ-நி -நோவின்மை. நிமேஷ- இமைக்கொ ட்டல். வர்த்தம-இமை.]

அருச்சகன் — 1. சம்பாத்தியகாரன். (உவில். எக.) [அ'ஜக.] 2.பூசைசெ ய்வோன். (உ-ம்.) "ஆதிசைவனும ருச்சகனொருவன்" (திருவிளை. வாத வூர. உடு.) [அ'சக.]

அருச்சநம்—1. சம்பாத்தியம். (உவில். எக.) [அ'ஜந.] 2. தேவர்க்கல்லது பெரியோர்க்குச் செய்யும்பூசை. (உவில். எக.) 3. பூசைத்திரவியம். (உவில். எக.) [2, 3. அ'சந.]

அருச்சநை— பூசை. (உ-ம்.) "தம்மு ளத்தரங்கை நீங்கவருச்சனைசெய்து" (கந்தபு. திருவி. சஉசு.)

அருச்சயோகம்—பூசை. (மா.)

அருச்சி— 1-3. அருச்சியென்னேவலு ந் தெரிநிலைவினைப்பகுதியும் பெயரெ ச்சத்தொகையும். (உ-ம்.) "ஆசாரிய ன்மனைவியையடிவேண்டா தருச்சி" [சு] (சைவச. மாணு. கக.) 4. பூ சை. (உ-ம்.) "வள்ளறன்னை மெய்ய ன்பினலருச்சி செய்வரனோர்" (திரு விளை. நகரங்கா. கக.) [அருச்சி - ஒருமுதனிலைத் தொழிற் பெயர்.]

அருச்சிக்கை—அருச்சித்தல். (உ-ம்.) "அந்தயுகந்தோறுமடி - தீண்டியருச் சிக்கை" (சைவச. மாணு. உo.)

அருச்சித்தல்—தெய்வத்திற்குப் பூசை செய்தல். (உ-ம்.) "அல்லும்பகலு ம ருச்சிக்க" (சைவச. பொது. ருசு.)2. பெரியோர்க்குப்பூசைசெய்தல். (சை வச. மாணு. சுக. உரை.)

அருச்சிதம்—1. தேட்டம். (உவில்.எக.) [அ'ஜித.] 2. வழிபாடு. (உவில். எக.) [அ'சித.]

அருச்சிதன்—பூசிக்கப்படுவோன். (உவில். எச.) [அ'சித.]

அருச்சிப்பு — அருச்சித்தல். (உவின். ருஅ.)

அருச்சியப்பிரபுத்துவம்— அருச்சிக் கப்படத்தக்க முதன்மை. (மா.) [அ 'ர்ய; ப்ரபு-முதல்வன். த்வ-தன் மை.]

அருச்சியம் — 1. உவப்பில்லாதது, இ ணக்கமில்லாதது. (உவில். சுக.) [அ ருச்ய: அ; ருச்ய-உவப்பு.] 2. வண ச்சம். (உவில். எக.) [அ'ர்ய.]

அருச்சுநம்—1. எருக்கஞ்செடி. (உவின். கூஅ.) 2. ஒருவகைநேத்திரரோகம். அது: வெள்விழிமேற் கடப்பம்பூநிறமான படலத்தைப் பிறப்பிக்கும். (சீவரட். உடுஎ; உவில். எக) 3. களங்கமின்மை. (உ-ம்.) "தன்றருச்சுநநான்மறையுரனுடன்ருேடர" (பாரத. பதினன். சரு) 4. புல்லு. (உவில். எக.) 5. பொன். (உவின். கூஅ.) 6. மயிற்பறவை. (உவில். எக.) 7. மருதமரம். (உ-ம்.) "சென்றருச்சுநமிரண்டுதைத்தருளினேன்" (பாரத. பதினன். சரு.) 8. வெண்மை. (உவில். எக.)
[2-8. அ'ஜுூந.]

அருச்சுநவட்டம் — திருவிடைமருதூர். (உ-ம்.) "மண்ணிடையருச்சுநவட்டதநெய்தினர்" (கந்தபு. உமைக. உரு.)

அருச்சுநன் — 1. ஒருதாயின் தனிமகன். (உவில். எக.) 2. கார்த்தவீரியனென்னும் அரசன்; இவன், ஆயிரம்புயங்களுடையவனெனபர். (உ-ம்.) "மருவலரின்றிமண்ணுண்ட -வாயிரந்திண்டோளருச்சுநன்றனக்கும்" (இராமா. கார்த்தவீ. உ.) 3. சுத்தன். (ஆப். அக.) 4. பஞ்சபாண்டவருளொருவன்; இவன், இந்திரனுக்குக் குந்தியிடம் பிறந்தவன். (உ-ம்) "பார்த்தனருச்சுநன் கரியோன்" (பாரத. அருச்சுந. சச.) [தூயசெயலினனென்றபடி.]5. வெண்ணிறமுள்ளோன். (உவில். எக)
[அ'ஜுூந.]

அருச்சுநி — குட்டிநிப் பெண். (ஆப். அக.) 2. பசு. (உவில். எக.)
[அ'ஜுநீ.]

அருச்சை—1. பூசிக்கப்படுந் தெய்வம். (ஆப். அம.) 2. பூசை. (உ-ம்.) "தீத்திவெம்மூலத்தோசைக்குஞ் சொன்முறையருச்சை" (வேதாரணிய. மண. உக.)
[அ'ர்சா.]

அருசாவிர்ா—பெருங்குமிழமரம். (கா. வைத்.)

அருசி—1. சுவையின்மை. (உவில். கூகூ.) 2. பசியின்மை. (உவில். கூகூ.) 3. வெறுப்பு. (உவில். கூகூ.)
[அரூவி: அ: ரூவி-சுவை.]

அருஞ்சயன்—சீவகனுடைய தாயாகிய விசயை யென்பவளுக்குப் பாட்டனை ஒருவன். (உ-ம்.) "அசைவிலாப்புரவிவெள்ளத்தருஞ்சயன் குலத்துட்டோன்றி" (சிந்தா. நாமக. சஎஉ.)

அருஞ்சிறை—1. அரியசிறகு. (உ-ம்.) "அருஞ்சிறைபெற்றமோருவதென்ன" (கந்தபு. தெய்வ. சஅ.) 2. கடுஞ்சிறை. (உ-ம்.) "அற்புதனரக்கர்தம் வருக்கமாசற- விற்பணிகொண்டருஞ்சிறையின் மீட்டநாள்" (இராமா. உருக்கா. உ௦.) 3. நரகம். (பிங்க. சடுரு.)

அருட்கண் — கிருபைநோக்கு. (சி.)

அருட்குடையோன்—1 அருகதேவன். (மா.) 2. கடவுள். (மா.)

அருட்குறி — சிவலிங்கம். (உ - ம்.) "ஆனுயர்த்தவனருட்குறியருச்சனைப்பயனுல்" (காஞ்சிபு. சார்ந்தா. உக.)

அருட்கேவலம்—தத்துவசுத்தியின் பின்னர்ப்படுங்கேவலம். (சி. போ. கூ:கூ. சிவஞானமுநி.)

அருட்கொடியோன் — அருகதேவன். (சி.)

அருட்கொடிவேந்தன் — அருகதேவன். (சூ. நிகண். க: உ.)

அருட்கொடையோன்—கடவுள். (உவின். கூகூ.)

அருட்சத்தி—பராசத்தி. (உ - ம்.) "முன்னருட்சத்தி தன்பான்முகிழ்க்குந்தான்முனையுரனன்றே" (சி. சி. க: கூஅ.)

அருட்சி—அருளுதல். (மா.)

அருட்சித்தி—பாதரசம். (உவின். கூகூ.)

அருட்சித்து — அநுக்கிரகத்தைச் செய்தற்குரிய சித்து. (உ - ம்.) "சிவனருட்சிததிவனருளைச்சேருஞ்சித்து" (சி. சி. கக: கக.) பரமுத்திவியத்திக்குறியநுக்கிரகம் பண்ணுஞ் சித்து. (ஷிஞாநப்.) எல்லாவற்றிற்குந் தாரகமாய் நிற்கிற ஞானமாகிய அறிவு. (ஷிநிரம்ப.)

அருட்செல்வம் — அருளான்வருஞ்செல்வம்; அது: உயிர்களையோம்பி யவ்வறத்தான் மேம்படுதல். (உ-ம்.) "அருட்செல்வஞ் செல்வத்துட்செல்வம் பொருட்செல்வம்— பூரியார் கண்ணுமுள" (வள், உ௪க.)

அருட்சோதி — 1. கடவுள். (உவின். கூகூ.) 2. கவுரிபாஷாணம். (உவின். கூகூ.)

அருட்டம்—கடுரோகணி. (உவின். கூஅ)

அருட்டல்—அருட்டுதல்.

அருட்டி — 1. "அருட்டி" யென்னும் ஒருவினையெச்சம். 2. அச்சம். (செ.) 3. நடுக்கம். (செ.) [வழக்.]

அருட்டு உ 1-3. அருட்டென்னேவலுந்தெரிநிலைவினைப் பகுதியும் பெயரெச்சத்தொகையும். 4. எச்சரிப்பு. (உவின். கூஅ.)

அருட்டுதல்—1. எழுப்புதல். (உவின். கூஅ) 2. ஏவிவிடுதல். (உவின். கூஅ) 3. சாக்கிரதைபண்ணுதல். (உ - ம்.) "தாபணமேயென- வருட்டிக்கண்சிமிட்டி" (திருப்பு. ருஎச.) 4. நித்திரையை நீக்குதல். (உவின். கூஅ.)

அருட்டை— 1. கடுரோகணி. (உ-ம்.) "அதிபலை" பார். (தைல. தைலவ. உரு.) 2. தக்கன் புத்திரிகளுளொருத்தி; இவள், காசிபனுக்கு மனைவியென்பர் (உ-ம்) "அருட்டையெனும்வல்லிதர்தாளோர்க்கி யுடும்பணில்கண்முதலாயவெல்லாம்" (இராமா. சடாயுகாண். உஅ.)

அருட்டெரிசநம்—சூரியோதயத்திலே இருளுநட்சத்திரமு மின்றிச் சூரிய

ப்பிரகாசமாத்திரங் கண்டாற்போல அருள்தோற்றிய காலத்துக் கேவல விருளுங் கருவிக் கூட்டங்களுந் தோன்றாது அருளை மாத்திரம் ஆன்மாக்கண்டு கொண்டிருப்பது. (ஒழிவி. விரத். கூ. உரை.)

அருட்பாக்கள் — கடவுள் அருள்பெற்றோர் எனப்பட்டார் செய்தபாக்கள்; அவை: தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருபபல்லாண்டு, பெரிய புராணம் என்பன. (சைவச. மாணு. அ. உரை.)

அருட்புரி — குறிஞ்சியாழ்த்திறவகையினொன்று. (பிங்க. கருஅக.)

அருடம் — 1. கோபமின்மை, (ஆப்.எக) 2. திருபதி. (ஆப். கூஅக) (உ - ம்.) "அருடமாவது மனை முதலிய வளங்களைக் கண்டு களித் தெமக் கினியென்ன குறையென் றிருக்கை" (சிவப்பிர. உ: உ. சிதம்.) 3. (ரோமப்) புளகம். (ஆப். கூஅக.) 4. பிரகாசம். (ஆப். எக.) 5. மகிழ்ச்சி. (ஆப். கூஅக.) [1, 4. அர-ஷ; 2, 3, 5. ஹ்ஷ.]

அருடணன் — வைசிய விராத்தியனும் வைசியப்பெண்ணுஞ் சோரத்திற் புணர்ந்து பெற்றபிள்ளை. (உ-ம்) "சொற்றிடுவைசியவிராத்தியன் வைசியத்தோகையைச் சோரத்திற் புணர்ந்து பெற்றிடுபிள்ளை யருடணன்" (சூத. சிவ. கஉ: கூச)

அருண்முநி — அருகதேவன். (சிலப். நாடு. கஅஎ.)

அருணகிரணகலம்-(சித்தாந்த.) பிராசாதகலைகள் பன்னிரண்டில் எட்டாவதாகிய நாதாந்தம்; அது: வலப்புறத்தில் மாத்திரம் விந்துவையுடைய கலப்பை வடிவுள்ளதாக நாதகலைக்கு மேலேபிரமரந்திரமட்டாகமூன்றங்குலம்வியாபித்துநிற்குங் கலை. (சி-வி. கிரி. கூ; பிராசாததீபி.) [அருணகிரணஹலம்.]

அருணகிரி — அருணசலம். (உ-ம்.) "அருணவடிவாதலி னலருணகிரியெனு மொருபேர்" (அருணசலபு. திருமலை. அஉ.) [அருண--சிவப்பு. கிரி—மலை.]

அருணசாரதி — சூரியன். (உவில். சுக) [அருண:- விநதையின்மகன். ஸாரதி-தேர்ப்பாகன். அருணனைத் தனக்குச் சாரதியாகவுடையவன்.]

அருணபூதரம் — அருணசலம். (அருணசலபு. திருநகர. கூ0.) [அருண—சிவப்பு. பூதர—மலை.]

அருணம் — 1. அருணதேசத்திலே வழங்கப்படும் பாஷை. (உவின். கூஅ.) 2. ஆடு. (உவின். கூஅ.) 3. எலுமிச்சம்பழம். (உ-ம்.) "அருணச் சாறுபடியிரண்டு" (தைல. தைலவ. அஎ.) 4. எலுமிச்சை மரம். (தைல. தைலவ. கூரு.) 5. ஐம்பத்தாறு தேசங்களுளொன்று. (உவின். கூஅ.) 6. கருமை கலந்த சிவப்பு. (உவில். சுக.) 7. சந்தியாகாலநிறம். (உவில. சுக) சிவப்பு. (உ- ம்.) "அருணவெங்கனலோன்" (பாரத. காண்டவ. கூஎ.) 8. சிந்தூரம். (இராசவைத்; யாச.) 9. சூரியனுடைய தேர்ப்பாகனெனப்படும உதயகாலம. (உவில். சுக) 10. நீர். (ஆப். அக.) 11. பொன். (உவின். கூஅ.) [ஹாரணம் எனபது சமஸ்கிருததத்தில் பொன்னுக்குப் பெயராயிருக்கிறது.] 12. மான். (உவின். கூஅ) [இது: ஹரிணம் என்பது அரிணம் எனத் தமிழில் வருவதை அருணமெனத் திரித்தார்போலும்.] 13. மேருமலையின் கீழ்த்திசையிலுள்ள மந்தரமென்னும்மலையடிவாரத்திலிருக்கும் ஒரு நீர் நிலை. (சிவதரு. கோபுர. கூஎ.) 14. யானை. (உவின். கூஅ.) [6, 7, 8, 9, 13. அருண. 10. அருணஸ்.]

அருணமணி — மாணிக்கம். (உ - ம்.) "அருணமணிசூழ்பாதலத்தில்" (ஞானவா. பிரகலா. சஎ.) [அருண-சிவப்பு. மணி—ரத்திநம்.]

அருணர் — சான்மலித்தீவில் அரசர் (உ-ம்) "மன்னவரை-மாறெறிவடிவேலருணரென் றுரைப்பர்" (கூர்மபு. பிலக்க. உச.)

அருணலோசநம் — 1. சிவந்தகண்ணுடையது. (ஆப். எக.) 2. புறாப்பறவை. (ஆப். எக.) [அருணம்—சிவப்பு. லோசநம்-கண்.]

அருணவம் — கடல். (ஆப். அக.) [அர்ணவ: அர்ணஸ் - நீர். வ--ஒரு வடமொழிவிகுதி.]

அருணவசம் — கடலிற்பிறந்தது. (வாச.) [அர்ணவஜம்: அருணவ—கடல்; ஜம்-பிறந்தது]

அருணவமந்திரன் — வருணன். (ஆப். அக.) [அர்ணவ - கடல். மந்திர-வீடு]

அருணவூரி— இந்திரகோபப்பூச்சி. (உவின. கூஅ.) [அருண—சிவப்பு. ஊரி-ஊர்வது.]

அருணவேலி — ஒருவகையெலி. (சீவரட். கசு0.)

அருணன் — 1. ஊமையன். (உவில். சுக) 2. சூரியன். (உ-ம்.) "அருணனையன்னசெவ்வேற்படைச் செந்திலர்க்கு" (திருச்செந்திநிரோட்ட) 3. சூரியனுடைய தேர்ப்பாகனென்று சொல்லப்படும் ஒருவன். இவன், காசிபனுக்கு விநதையிடம்பிறந்தவனென்பர். (உ-ம்.) "விநதைசுதனருணன்" (இராமா. சடாயுகாண். உகூ.) 4. புதன். (சூ. நிகண். க: சுக)
[1-3. அருண:]

அருணுக்கிரசன் — கருடன். (உவில். சுக.) [அருணாநுஜ: அருண - சூரியனுடைய தேர்ப்பாகன். அநுஜ-தமயன்.]

அருணசலம் — திருவண்ணாமலை; இது: கிர்ரதாயுகத்திலே அக்கினிமலையாகவும, திரேதாயுகத்திலே மாணிக்கமலையாகவும், துவாபரயுகத்திலே பொன்

மலையாகவும், கலியுகத்திலே கன்மலையாகவும் உருக்கொண்டதென்பர். (அருணாசலபு. திருநகர. ௩0) (உ-ம்) "கர்ருர்தொழு மருணாசலமன்போடு கைதொழுதான்" (பாரத. அருச்சுனன்றீர். ௬௫) [அருண-சிவப்பு. அசலம்-மலை.]

அருணாத்துமசன் — 1. இராமாயணத்திலே சொல்லப்படுஞ் சடாயு என்னும் பறவை. (உவில். ௬௯.) 2. கன்னராசன். (ஆப். ௭௯.) 3. சநி. (ஆப். ௭௯.) 4. சாவர்ணமநு. (ஆப். ௭௯.) 5. சுக்கிரீவன். (ஆப். ௭௯.) 6. யமன். (வாச.)
[அருணாத்மஜ: அருண-சூரியன், சூரியன்தேர்ப்பாகன். ஆத்மஜ:-மகன்.]

அருணினம் — 1. திருநாமப்பாலைக்கொடி. (செ.) 2. நன்னாரிக்கொடி. (உவின். ௩௮.)

அருணினைவு — நற்குணம்பத்தினுள்ளே யொன்று; இது, மாதத்தின் குணம். (மா. தொகை.)

அருணேறிசுரக்குஞ்செல்வன் — புத்தன். (திவாகர.)

அருணை — திருவண்ணாமலை. (உ-ம்.) "அருணையை நினைக்கவெய்தலா மூத்தியென்றுரைத்தீர்" (அருணாசலபு. திருநகர ௬௫.)

அருணோதம் — மேருமலையின் கீழ்த்திசையிலுள்ள ஒருகுளம். (உ-ம்.) "அவ்வரையின் கிழ்பாலுந்து நீர் வாவி தெண்ணீரோங்கருணோதம்" (கூர்மபு. சம்பு. ௨௨.) [அருண-சிவப்பு. உதம்-நீர்.]

அருணோதயம் — 1. சூரியோதயம். (உ-ம்.) "மணிக்குலங்க ளருணோதயத்தை வென்ற" (திருப்பு. ௧௮௮.) 2. வைகறைப்பொழுது. (உவில். ௬௯.) [அருணோதயம்: அருண-சூரியன். உதயம்-தோற்றம்.]

அருணோபலம் — பதுமராகம். (உவில். ௬௯.) [அருண-சிவப்பு. உபலம்-கல்லு.]

அருத்தகங்கை — காவேரிநதி. (உவில். ௭௧.) [அர்த்தகங்கா: அர்த்த-பாதி, கங்கா ஒருநதி. காசிக் கங்கையிலே தீர்த்தமாடுதலினால் வரும் பலனிற் பாதியளவு இது கொடுக்குமென்பர்.]

அருத்தகாமம் — பொருளாசை. (உவில். ௭௧.) [அர்த்தகாம: அர்த்த-பொருள். காம-ஆசை.]

அருத்தகோளம் — பாதிக் கோளம். (உவின். ௩௮.)

அருத்தசந்திரகுண்டம் — ஒன்பது பங்காகச் செய்யப்பட்ட நாற்கோணசேத்திரத்தின் அடியிலுங் கடையிலும் ஒவ்வொருபங்கு தள்ளி விட்டு நடுவிலிருக்கும் ஏழுபாகத்தைச் சமசூத்திரத்தினாற் சுற்ற வரும் அர்த்தசந்திராகாரமான குண்டம். (சி- லி. கிரியா. ௩௬-ஞ் சுலோ. உரை.) [அர்த்த; சந்த்ர; குண்டம்.]

அருத்தசந்திரபாணம் — பிறை முகாத்திரம். (உவின். ௩௮.) [அர்த்தசந்த்ரபாணம்]

அருத்தசந்திரம் — 1. பிறைமுகாத்திரம். (உவில். ௭௯.) 2. பிறைவடிவமான நகக்குறி. (உவில். ௭௯.) 3. மயிற்றோகையிலே பிறைபோலிருக்குங் கண்வடிவம். (உவில். ௭௯.)
[அர்த்தசந்த்ர:]

அருத்தசந்திரன் — அர்த்த சந்திரன்.

அருத்தசாத்திரம் — அருத்தவேதம்; அது: பொருள் தேடுதற் குபயோகமான பார்க்கஸ்பத்தியம், ஔசநம் முதலிய நூல்களைக் கருதும். (மநு. ௬: ௧௩.) [அர்த்தசாஸ்த்ர.]

அருத்தசாநவி — காவேரிநதி. (உவில். ௭௯.) [அர்த்த-பாதி. ஜாஹ்னவி-கங்கை.]

அருத்தசாமம் — அர்த்தயாமம். (சி.) [யகரஞ் சகரமாய்த் திரிந்தது.]

அருத்தசீரி — விளைவிற் பாதி வாரமாயெடுக்கப் பொருந்தி யுழுது பயிரிடுஞ் செய்கைக்காரன். (உவில். ௭௯.) [அர்த்தசீரி: அர்த்த; ஸீர-கலப்பை.]

அருத்தஞ்ஞன் — சொல்லின் அர்த்தங்கள் பலவற்றையும் அறிந்தவன். (உவில். ௭௧.) [அர்த்த-கருத்து. ஞ-அறிந்தவன்.]

அருத்தநம் — 1. இடுக்கண்செய்தல். (ஆப். அ௪.) [அர்தநம்.] 2. நிந்தித்தல். (ஆப். அ௪.) [அர்தநம்.]

அருத்தநாரீசன் —
அருத்தநாரீசுரன்
அருத்தநாரீசுவரன் } பாதி பெண்வடிவமான சிவன். (உவின். ௩௮; சி; ஆப். ௭௪.) [அர்த்தநாரீச: அர்த்த-பாதி. நாரி-பெண். ஈச, ஈச்வர-ஆளுகிறவன்.]

அருத்தநாள் — பாதிநாள். (சி.)

அருத்தநிசா — பாதிராத்திரி. (உவில். ௭௯.) [அர்த்தநிசா: அர்த்த-பாதி. நிசா-இராத்திரி.]

அருத்தநை — இரந்து கேட்டல். (உவில். ௭௧.) [அர்தநா.]

அருத்தப்பிரயோகம் — வட்டிக்குக் குக கொடுத்தல், வியாபாரஞ்செய்தல் முதலியவைகளிலே திரவியத்தை விடுதல். (உவில். ௭௧.) [அர்த்தப்ரயோக: அர்த்த-திரவியம். ப்ரயோக-செலுத்துதல்.]

அருத்தப்பிராத்தி — 1. சம்பத்து அடைதல். (உவில். ௭௨.) 2. பெறக்கருதியதைப் பெறுதல். (உவில். ௭௨.) [அர்த்தப்ராப்தி: அர்த்த-சம்பத்து. ப்ராப்தி-அடைதல்.]

அருத்தபதி — 1. அரசன். (வாச.) 2. குபேரன். (வாச.) [அர்த்த-சம்பத்து. பதி-தலைவன்.]

அருத்தபாகம் — பாதிப்பங்கு. (உவில். ௭௯.) [அர்த்தபாக: பாக-பங்கு.]

அருத்தபாகை—வேதநூற்பொருள்கூறும் பாகைகளிலொன்று. (சூ. நிகண். ௧0: ௨௧.)

அருத்தம்—1. அர்த்தம். (உ-ம்.) "பரவுறுமறைபருத்தம்பர மென்றுமபரமென்ற-மிருவகையாகும்" (சூத. எக்.பூ.உ:உ) 2. அரைப்பங்கு. (உ-ம்.) "மாமூசன்கை – சத்திவினையான்மா வீடருத்தமிட்டு" (தைல. தைலவ. ௧௧௯.) 3. (தர்க்க) பன்னிருவகைப் பிரமேயங்களுளொன்றாகிய பதார்த்தம், இது: திரவியம், குணம், கருமம், சாமாநியம், விசேடம், சமவாயமென்னும் ஆறுபதார்த்தங்களையுணர்த்திநிற்பது. (தர்க்கபா. ௬௧.) [1, 3. அ'ழ; 2. அ'ய.]

அருத்தயாமம்—1. அரையாமம்; அது: மூன்றேமுக்கா னுழிகை. (உவில். ௭௯.) 2. இரவில் முன்னிகழு மூன்றேமுக்கானுழிகையையும் பின்னிகழுமூன்றேமுக்கானுழிகையையும் விட்டு இரவில் திரியாமா வென மூன்றியாமங் கொள்ளப் படுவதில் நடுநிகழும் யாமம். (உ-ம்.) "அப்பதியருத்த யாமத்தனைக் களியுதவுங் கோலம்" (வேதாரணியபு. மணவா. ௮௬.) [அ'ய-பாதி. யாம – ஏழரைநாழிகை கொண்டகாலம்.]

அருத்தராத்திரம்—நடுராத்திரி. (உவில. ௭௯.) [அ'யராத்ரம.]

அருத்தரேசிதம்—கிருத்தக்கை முப்பதுலொன்று. (சிலப். அரங்கேற்று. ௧௨. குறிப்பு.)

அருந்தல்—1. உண்பித்தல். (உ – ம்.) "வேதியர்க்கருத்திப்பின்னர்" (நைட. நாட்டு ௧௬.) 2. போகிப்பித்தல். (உவின். ௬௮.) ["அருந்தல்" என்பதில் நகரங் தகரமாகத் திரிந்து பிறவினைப்பொருளில் வந்தது.]

அருத்தலக்கணை—விட்டும்விடாதலக்கணை. (உ-ம்.) "விருத்தமதுதருமமாந்தேவதத்தன்றனையே விடாதகொளினவனிவனேயிவனவனே யென்னுங்-தெரித்தலரிதாயதாதான் மியங் கூறுமாற்றேரினிதை விட்டுவிடாலக்கணையினுமிதா- னருத்தவிலக்கணை பாகத்தியாக விலக்கணையென்றறைதலினுலிது வேதத்தொம்மசி வாக்கியத்திற்குரைத்திடுவருநாரண மாயுரியதென" (வேதா. சூ. ௧௨௨) [அ'ழ; லக்ஷணா.]

அருத்தலாபம்—சம்பத்துப்பெறுதல். (உவில். ௭௨.) [அ'ழ – சம்பத்து. லாப – அடைதல்.]

அருத்தலோபம்—பொருளாசை. (உவில். ௭௨.) [அ'ழ-பொருள். லோப–ஆசை.]

அருத்தவத்—அருத்தமுடையது, கருததுடையது. (உவில். ௭௨.) [அ'ழவத்.]

அருத்தவாதம்—1. அபிப்பிராயத்தைக் கூறுதல். (உவில். ௭௨.) 2. (வேதாந்த) சிரவணத்திற்குரிய சடுலிங்கங்களில் ஆருவதானது; அது: கூடத்தனது சொரூபமாகிய பிரமத்திற்குப் பஞ்சகிருத்திய கர்த்திருத்துவஞ் சொல்லுதல். (உ – ம்.) "பிரத்திகான்மவுருவாம் பிரமந்தனக்கு-மாறரிய வைந்தொழிற் கர்த்தருத்துவஞ் செப்புறுதல் வயங்கருத்தவாதமென மதித்திடுக தெரிந்தே" (வேதா. சூ. ௪௯.) 3. துதித்தல், புகழ்தல். (ஆப். ௮௯.) 4. பொருளை விளக்கும்வாக்கியம்; அது: சாத்தரவிதியை வழங்குவிக்கும் பொருட்டு விதிப்படி நடத்தலால்வரும் நன்மைகளையும், நடவாமையால் வருந்தீமைகளையும் விவரமாகக்கூறி விதிவிடயத்தைப் புகழ்தலும், விலக்கு விடயத்தை இகழ்தலும், பிறர்செய்கை காட்டலும், பழைய நிகழ்ச்சி கூறலு முடையது. (ஆப். ௮௯.) [அ'ழ-பிரயோசனம். வாத – கூறுதல்.]

அருத்தவிற்பத்தி— அருத்தங்களிலே நன்கு பயின்ற சாமர்த்தியம். (உவின். ௬௮.) [அ'ழ-பொருள். வ்யுத்பத்தி – வித்தியை வல்லபம்.]

அருத்தவேதம்—அர்த்தவேதம். (உவின். ௬௮.)

அருத்தாங்கீகாரம்—மூழுமாராயங்கீகரியாமை. (உவின். ௬௮.) [அ'ழ-பாதி. அங்கீகார-ஏற்றுக்கொள்ளுதல்.]

அருத்தாதிகாரன் — திரவியசேம அதிகாரி. (சி.)

அருத்தாந்தரநியாசம் — அர்த்தாந்தர நியாசம்.

அருத்தாந்தரம் — வேற்றுப்பொருள். (சி.)

அருத்தாநம் — தோத்திரஞ்செய்தல். (மா.)

அருத்தாபத்தி— அளவைகளிலொன்று; அது: பகலுண்ணுனுய்ப் பருத்திருப்பானெருவன் இரவிலுண்டானென்பதிற்போல அதுமித்தல். (சி. சி. பாயிர. அளவை. ௧.)

அருத்தார்த்தி—திரவியந்தேடப் பிரயாசப்படுவோன். (ஆப். ௮௨.) [அ'ழ-திரவியம். அ'ழிந்-தேடுவோன்.]

அருத்தி—1-3. அருத்தி யென்னேவலுந் தெரிநிலைவினைப்பகுதியும் பெயரெச்சத்தொகையும். 4. "அருந்தச்செய்து" எனப்பொருள்படும் ஒருபிறவினைத் தெரிநிலை வினையெச்சம். (கூர்மபு. தக்கன்வேள். ௬.) 5. அரைப்பங்குடையவன்-ள். (உவில். ௭௯.) 6. இரந்து கேட்பேரன். (உவில். ௭௨.) 7. ஒருபொருளை வேண்டுமென்றுகேட்போன். (உவில், ௭௨.) 8. ஒருவன் றனக்குவேண்டுமென்றுகேட்கும் பொருள். (உ-ம்.) "அருத்தியீதல் பொற்சுரதருவினுக்கு மரிது" (பாரத. கிருட். ௨௬௪.) 9. கூத்து. (உவின். ௬௮.) 10. செல்வமுடையவன்-ள். "சேண்மிசை யருத்தி பெற்றவண் கையும்" (கந்தபு. தெய்வ. ௨௯௯.)

11. பாதம். (உவின். கூஅ.) 12. புசிப்பு. (உ-ம்.) "அருத்திமிகுங்கலைகாலம்" (சிவப்பிர. கச. சிவ.) 13. முறையீடு செய்வோன், வாதி. (உவில். எஉ.) 14. விருப்பம். (உ-ம்.) "கைம்மாறியற் றுதியென்னுமருத்தி" (நைடத. அன்னத்தைத்தூது. சு) 15. வேலைக்காரர். (உ-ம்.) "அணிநகரணிந்தனரருத்தியாக்களே" (இராமா. மந்தரை. உஅ.) [5. அ'யிர்; 6, 7 அ'யிர்; 8, 10. அ'யு; 13, 15. அ'யி; 14. அ'யிதம். ஆப். அச.)

அருத்தித்தல்—1. பாதிசெய்தல். (மா.) [மூ. அ'பு.] 2. வேண்டுதல். (உ-ம்) "உன்னையருத்தித்துவர்தோம்" (நாலாயிர. திருப்பாவை. உ௫) [மூ. அ'ம.]

அருத்திதம்—இரந்துகேட்டல். (ஆப். அச.) 2. விரும்பல். (ஆப். அச.) [அ'யிதம்.]

அருத்தியன்—விருப்பமுடையவன், வேண்டிவந்தவன். (உ-ம்) "ஏதிலருத்தியனென்னக் கேட்டியென்றான்" (பாரத. புட்ப. கசஅ.) [அ'யித.]

அருத்து—1-3. அருத்தென்னேவலுந் தெரிநிலைவினைப் பகுதியும் பெயரெச்சத்தொகையும். 4. பொருள். (உ-ம்) "கண்ணானாய்மணியானாய்கருத்தாயருத்தானாய்" (தேவார. திருவையாறு. பழந்தக்க. ௭. திருநா.) [அ'ம.]

அருத்துதல்—அருத்தல்.

அருத்துரு—1. ஆராய்வு. (மா.) 2. நுணுக்கம். (மா.)

அருத்துருமம்—வெள்வேலமரம். (கா. வைத்.)

அருத்தேந்து—பாதிச்சந்திரன். (உவில். எகூ.) [அ'யெ௦ஹு: அ'யு-பாதி. இ௦ஹு-சந்திரன்.]

அருத்தோதயம்—அர்த்தோதயம். (உ-ம்.) "ஆதலாற்கதிர்மதிகளை யரவங்கடண்டிற் - போதமாருத்தோதயமகோதயம்பொருந்தில்- ஓதுபுண்ணியகாலங்களாம்" (சேதுபு. சேதுபல. உகூ.)

அருத்தோபார்ச்சநம்—திரவியந்தேடுதல். (உவில். எஉ.) [அ'ய-திரவியம். உபார்ஜ்ஜநம்-தேடுதல்.]

அருதா—சதாப்புப்பூண்டினிலை. (கா. வைத்.)

அருந்ததர்—அருந்ததி புதல்வர். (உ-ம்) "அருந்ததிமைந்தரருந்ததர்" (கூர்மபு. தக்கன்வமி. எ.) [இங்கே அருந்ததியென்றது வசிட்டரது மனைவியாகிய ஊர்ச்சையல்லள் -தருமதேவதையின் மனைவி.]

அருந்ததி—1. ஒருநட்சத்திரம். (உ-ம்) "அங்கண்வானத்தருந்ததி காட்டினான்" (நைடத. மணம்புரி. உ௦.) [இது வசிட்டன்மனைவியின் பெயரால்வழங்குவது.] 2. ஒருபெண். இவள், வசிட்டனுக்கு மனைவி; கற்பிற் சிறந்தவள். (உ-ம்) "அருந்ததியனையாளையமிர்தனுமினியாளே" (இராமா. வனம்பு. அ.) 3. தக்கனுக்குமகளும் தருமதேவதைக்குப் பாரியுமான ஒரு பெண். (உ-ம்.) "அருந்ததி யிலங்கைசியாமிசங்கற்பையருண்மருத்துவதிநல் விசுவை- முருந்தளமுறுவற்சாத்தியைபாநு முகூர்த்தையடிவசுவெனத்தருமன் - பொருந்தியமடவார் பெயரினிதுரைப்பார்" (கூர்மபு. தக்கன்வமி. கூ.) [அரு-ங்யதி.]

அருந்ததிகாட்டல்—அருந்ததிப்பெண்ணைப்போலக்கற்புடையவளாயிருக்க வேண்டுமென்று வலியுறுத்துமாறு அருந்ததியின் குறியாகக்கொண்ட நட்சத்திரத்தை விவாகம் பண்ணுகிற பெண்ணுக்குக் காண்பித்தல். (உ-ம்) "பங்கயப் பதம்பைம்பொனினம்மிவைத்தங்கண்வானத்தருந்ததி காட்டினான்" (நைடத. மணம்புரி. உ௦.)

அருந்ததிதரிசநநியாயம்—மீமாஞ்சையிலே சொல்லப்பட்ட நியாயங்களுளொன்று; அது: முதலிலே யொரு பெரிய நட்சத்திரத்தைக்காட்டிப் பின் அதற்குச் சமீபமாயுள்ள அருந்ததியைக் காட்டல்போல முதலில் ஒரு பெரும்பொருளைக் காட்டிப் பின் அதற்குச் சார்பான சிறிய பொருளைக் காண்பிக்கு நியாயம். (வாச.) "தூலதத்துவங்களை முன்னர்க் காண்பித்துப்பின்னரவற்றை யொட்டிச்சூக்குமதத்துவங்களைக்காண்பித்தல் போல்வது" (சைவல். தத். உ௫) [அரு-ங்யதிஷர்ஸநந்யாயம்:]

அருந்ததிபதி—வசிட்டமுனிவன். (உ-ம்) "அருந்ததிபதிதிருவருளால்" (பாரத. குருகுல. அஎ.) [பதி-கணவன்]

அருந்தல்—1. அநுபவித்தல். (உ-ம்.) "ஆருயிர்கள் பயனருந்து மமருலகாம்" (கோயிற்பு. வியாக். கூ.) 2. "அருந்தாதொழிக" எனப்பொருள்படும் ஒரு வியங்கோள்வினைமுற்று. (உ-ம்) "அருந்தலதிபாதகாதியந்நம்" (சைவச. பொது. உசக.) 3. அருமை. (உவின். கூஅ.) (உ-ம்.) "மாம்பழம் மிக அருந்தலாயிருக்கிறது" [அருமை என்பதினின்று வந்ததுபோலும்.] 4. குடித்தல். (உ-ம்.) "தண்ணீரருந்தி", (தாயு. அருளி. கச.) 5. புசித்தல். (உ-ம்.) "அருந்தேல்விடலிபதிமனையிலந்நம்" (சைவச. பொது. ச௫) 6. விழுங்குதல். (உ-ம்.) "அங்கவற்றையும் பற்றியருந்தினான்" (கந்தபு. இரண்டாநாட்சூர. சு௫.)

அருந்தவர்—முனிவர். (உ-ம்) "அயருமருந்தவர்தம்பழி" (கோயிற்பு. பதஞ்சலி. சகூ)

அருந்திடல்—உண்ணுதல். (சூ. நிகஞ். கூ: கூ.)

அருந்து—அருந்தென்னேவலுந் தெரிநிலைவினைப் பகுதியும் பெயரெச்சத்தொகையும்.

அருந்துதல்—1. அநுபவித்தல். (உ-ம்)

"பத்தராருந்தும்பரமசுகம்" (தாயு. பரா. உஎ௦.) 2. உண்ணுதல். (உ-ம்.) "அருந்துதற்கினியமீன்கொணர" (இராமா. விபீடண. ௩௦) 3. குடித்தல். (தாயு. அருளி. சக) 4. விழுங்குதல்.

அருந்துதன்— வேதனை செய்வோன். (உவில். சுகூ.) [அரு-ந்து-தஃ: அரு-ஸ்-காயம். த-வருத்துதல்.]

அருந்துதி—அருந்ததி. (உ-ம்.) "இடப்பாலருந்துதி காணுமளவும்" (திருக்கோ. ௩௦௦.)

அருந்துவோன்—உண்போன். (உ-ம்.) "அமலவிழியிற் செய்வோனுமருந்துவோனும்" (ஞானவா. சுக்கிர. உஉ.)

அருந்தூதன்—தெண்டஞ்செய்வோன். (உவின். ௩கூ.)

அருநிலை—1. கடந்து செல்லற்கரிய ஆற்றுநிலம். (உவின். ௩கூ.) 2. யுத்தநிலை. (பாரத.)

அருநெல்லி—ஒருமரம். (மா.)

அருநெறி — 1. ஒடுங்கியவழி. (உ-ம்.) "தொடர்ந்த பல்வரை முடுக்கருமருநெறித் தொடர்பும்" (உபதேச. சிவவிர. கசச.) 2. நரகம். (மா) 3. பாலைநிலம். (மா) 4. போதற்கரியவழி. (உ-ம்.) "அருநெறிக் கடவுளர்க்கமுதமூட்டுதல்" (பாரத. வேத்திரகீ. ௩௬.)

அருப்பகம் — 1. அற்பமானது. (ஆப். அடு.) 2. குழந்தைத் தன்மையானது. (ஆப். அடு.) 3. பெலமில்லாதது. (ஆப். அடு) 4. விலங்கின்பிள்ளை யல்லது குட்டி. (உவில். எச.) [அ'ஹக.]

அருப்பகன் — 1. குழந்தை. (உவில். எச) 2. பைத்தியகாரன். (உவில்.எச) 3. மூடன். (உவில். எச) [அ'ஹக.]

அருப்பம்—1. அருமை. (உ-ம்.) "அடிநிலைதளர்க்குமருப்பமுடைய" (மலைபடு. உஉஉ.) 2. அற்பம், (உ-ம்.) "அருப்பமென்றுபகையையுமாரழல்-நெருப்பையுமிகழ்ந்தாலதுநீதியோ" (இராமா. மூதற்போர். கூஉ.) 3. உரோமக்கிளர்ச்சி. (மா) 4. ஊர். (சூ. நிகண். ௫: ௩௪) 5. கள்ளு. (உவின். ௩அ; பாரதிதீபம்.) 6. காட்டுத் துருக்கம். (பிங்க. ௫௩அ) 7. காடு. (உவின். ௩அ) 8. கொலை. (உவின். ௩அ.) [அ'ப எ ன்னும் வடமொழி வினைப்பகுதித்திரிபு.] 10. கோட்டை. (உ-ம்.) "அம்புமிழயிலருப்பம்" (மதுரைக்காஞ்சி. சுஎ.) 11. துக்கம். (உ-ம்.) "அருப்பமன்றிதுவென்றையுற வெய்தினன்" (இராமா. பள்ளி. ௬௦.) 12. தொடரிச்செடி. (உவின். ௩அ.) 13. நோய். (உ-ம்.) "அருப்பமுறினரசெனினுந்தீர்ப்பானைச்கண்டடைத்தல்" (நைட. பாயிர. ௩.) 14. பனி. (உவில். எசு.) 15. பிட்டு. (உவின். ௩அ.) 16. பிள்ளை. (உவில். எச) 17. பூண்டுகள்; கீரை. (உவில். எசு.) 18. மருதநிலத்தூர். (உவின். ௩அ) 19. (இடித்த)மா. (உவின். ௩அ.) 20. மோர். (சூ. நிகண். ௬: உஎ.) 21. வழுக்குநிலம். (பிங்க.) [2. அ'ஹக. 14, 16, 17. அ'ஹ.]

அருப்பலம் — அரிச்சமரம். (சூ. நிகண். ௬: எ.)

அருப்பு—1. அரும்பு (உ-ம்.) "அருப்பிளமுலையவர்க்கநங்கனுகிய" (சிந்தா. நாமக. உ௩௩.) [அரும்பு என்பதன் விகாரம்.] 2. கிளைத்தல். (உ-ம்.) "அருப்பறுவாக்கம்" (வள். ௫உஉ.) 3. கொலை. (உ-ம்.) "அருப்புடையறலினஞ்சம்" (பாரத. நச்சு. ௩௩.) 4. தயிர். (மா) 5. துக்கம். (உ-ம்.) "அருப்பறப்பிறந்தகோபமாறினன்" (இராமா. வருண. எசு.)

அருப்புத்துருப்பு—1. அருந்தேட்டம். (மா.) 2. அருமை. (மா.)

அரும்பண்டம்—கிடைத்தற்கரிய பொருள். (செ.)

அரும்பர்—அரும்பு. (உ-ம்.) "பஞ்சமெங்கணும்வேளெய்கணையாகப் பரம்புவ தாமரையரும்பர்" (தணிகை. நாட். அசு.) [அர்-ஓர் அசைநிலைஇடைச்சொல். இறுதியில்நின்ற உகரத்தோடு அர் என்பது ஒத்துப் போலியாய் வந்ததென்பர் பெரும்பாலார்.]

அரும்பல்—அரும்புதல்.

அரும்பாலை—ஓரிசை. (பிங். கச௦௬.)

அரும்பி — குங்கும பாஷாணம் (கா. வைத்.)

அரும்பிணி—தீராத வியாதி. (உ-ம்.) "ஐயாவதற்குமரும்பிணியோன் றெய்தியக்கா-லுய்யானே" (கந்தபு. மார்க்கண். கஅ.)

அரும்பித்தல்—தோன்றுதல், முகிழ்த்தல். (உ-ம்.) "அரும்பித்தசெஞ்ஞாயிறேய்க்குமடி" (தேவார. திருவதிகைவீர. திருவடித் திருத்தாண்டகம். ௪.) "அரும்பித்திங்சாதத்தையாலழிப்பதுபோல்" (சி. சி. கக: சஉ.)

அரும்பு — பூவரும்பு போலும் வடிவுடையணிகல ஒட்டு. (உவின். ௩கூ.) 2. மலரமுன் பூவின் உறுப்புக்களையடக்கி யிருக்கும் ஒரு புடைப்பு வடிவம். (உ-ம்.) "அரும்புமலர் காய்கனி" (தாயு. பரா.) 3. மெல்லியமயிர். (உவின். ௩கூ.)

அரும்புதல்—1. சிறிதாகத்தோன்றுதல். (உ-ம்.) "அரும்புமிளநகைபோற்றி" (திருவிளை. கடவுள். ௪.) "அமுதூற்றரும்பி" (தாயு. பொருள்விள. உ.) 2. சேட்டிக்கத் தொடங்குதல். (உ-ம்.) "ஞாநிதன் மெய்ம்மை நிட்டையையரும்பிய பந்தர்களறியவல்லரோ" (சூத. முத். ௫: ௧கூ.) 3. புன்னகை கொள்ளுதல். (உவின்.௩கூ.) 4. முகிழ்த்தல். (உ-ம்.) "காலையரும்பிப்பகலெல்லாம் போதாகி" (வள். கஉஉஅ.) 5. முளைத்தல். (உவின். ௩கூ.) (உ-ம்.) "பிள்ளைக்குப் பல்லரும்பின" 6. பூவரும்புபோலத் தோன்றுதல். (உ-ம்.) "பரந்து மீனரும்பியபசலைவானகம்" (இராமா. நைலமா. ௬.)

அரும்புமணி—பொன்னாலே செய்யப்பட்ட அரும்புகளையுடைய ஒரு சமுத்தணி. (உவின். ககூ.)

அரும்பூட்டு—1. இணைத்தற்கருமை; எட்டாப்பூட்டு. (உவின். ககூ.) (உ-ம்.) "இந்தமணியவள்கழுத்துக்கரும்பூட்டாயிருக்கிறது" 2. செம்பாகமானதொடர்ச்சியின்மை. (உவின். ககூ.) (உ-ம்.) "சொற்களையரும்பூட்டாகத் தொடுத்துப்பேசினான்" 3. மோசத்தில் அகப்படுகை. (உவின். ககூ.)

அரும்பேறல்—பெறற்கருமை. (உ-ம்.) "அரும்பெறலாரமுதம்" (பெரியபு. ஞாந. ககக.)

அரும்பொருள்—1. பிரயாசப்பட்டு விளங்கும் அர்த்தம். (உவின். ககூ.) 2. பெறுதற்கரியபொருள். (உ-ம்.) "அரும்பொருள்பெறுநரின்" (சிலப். அடை. சஉஎ.)

அருமதாளம்— நவதாளத்தொன்று. (மா.)

அருமந்த—அரியமருந்தன்ன. (உ-ம்.) "அருமந்தமேருவரையுந்தவருருமம்மா" (கந்தபு. திருக்கல். ருஉ.) [இது: ஒரு மரூஉமொழி.]

அருமந்தன்ன— அரியமருந்துபோன்ற எனப் பொருள்படும் ஒரு விகாரமொழி. (உ-ம்.) "அருமந்தன்னவதிர்கழல்சேர்மினே" (தேவார. சித்த. உக.)

அருமருந்து—1. அமிர்தம். (உ-ம்.) "ஆவிததுணையே யருமருந்தே" (தாயு. பலவகை. சரு.) 2. பெறுதற்கரியமருந்து. (உ-ம்.) "அரந்தைவெம்பிறவியென்னோய்க் கருமருந்தனையவையா" (இராமா. வாலி. சஉ0.)

அருமலதி—ஒருபண். (உவின். ககூ.)

அருமறை—1. அறிதற்கரியவேதம். (உ-ம்.) "அருமறைமுதல்வனையாழிமாயனை" (பாரத. வாரணா. க.) 2. அறிதற்கரிய இரகசியம். (உ-ம்.) "அருமறைசெவிலியறிந்தமைகூறலும்" (நம்பியக. களா. சஅ)

அருமறைக்கோடியோன் — துரோணாசாரியன். (உவின். ககூ.)

அருமேதகம்—அக்கினி கீடங்கள் இருபத்தேழினுள் ஒன்று. (சீவரட். ககசக.)

அருமேனி—கலைகளுடன் கூடாத நிட்களமான திருமேனி; அது: உருவாதீதமான சரீரம். (உ-ம்.) "உருமேனிதரித்துக்கொண்ட தென்றலுமுருவிறந்த—வருமேனியதுவுங் கண்டோம்" (சி. சி. ச: ருரு)

அருமை—1. இன்மை. (உ-ம்.) "மனக்கவலைமாற்றலரிது" (வள். எ.) 2. செய்தற்கருமை. (உ-ம்.) "அருமைநோன்புகளாற்றுதியாமன்றே" (இராமா. நகர்நீங். உச.) 3. எளிதிற்பெறக்கூடாமை. (உ-ம்.) "அருமையினெய்தும்யாக்கையும்" (சிந்தா. முத். சரு0.) 4. பிரயாசம். (உ-ம்.) "கான்புறஞ்சேறலிலருமைகாண்டலால்" (இராமா. தைலமா. ககச.) 5. பெரும்பாலுமில்லாமை. (உ-ம்.) இவ்வூரிலேநெய்க்கிடைப்பதருமை. 6. பெருமை, மேன்மை. (திவாகர.)

அருவசாட்சாத்காரம்—அறிவில் நின்று அருவாயுணர்த்தியது. (தாயு. சிற். சு. போ. எ. உரை.)

அருவசிவசமவாதி— ஆன்ம சித்துஞ் சிவசித்தும் ஒத்து வேறாய்நிற்குமென்று சொல்லுமதஸ்தன். (சி. சி. கச: கக. சிவஞா.)

அருவத்திருமேனி— சிவன் நடிக்கும் நவபேதத்திலே யருவவடிவமாகக் கற்பிக்கப்படுஞ் சிவம், சத்தி, நாதம், விந்து என்னும் நான்குமேனிகள். அது: சி. சி. உ: எச—ங் கவியாற்பெறப்படும். அது வருமாறு "சிவஞ்சத்திநாதம் விந்து சதாசிவந்திகழுமீசனுவந்தரு ளுருத்திரன்முன் மாலயனென்றினென்றாய்ப்— பவந்தருமருவநாலிங்குருவநாலுபயமொன்றாய்—நவந்தருபேதமேக நாதனே நடிப்பனென்பர்"

அருவம் — உருவமில்லாதது. (உ-ம்.) "அருவமுமுருவுமாகியநாதியாய்ப்பலவாயொன்றாய்" (கந்தபு. திருவவ. கூ௨.)

அருவருத்தல் — துர்நாற்றமுதலிய ஏதுக்களினாலே மனத்திற் கேற்காததாகக்கண்டு வெறுத்தல். (உ-ம்.) "அருவருக்குமுலகவாழ்வடங்க நீத்தோர்க்கு" (சிதம்பரம். ருச.)

அருவருப்பு — அருவருத்தல். (உ-ம்.) "புன்புலான்மயிர்தோனரம் பென்புமொய்த்திடுபுலைக்குடிலருவருப்புப்பொய்யல்லவோ" (தாயு. சுகவாரி. ச.)

அருவல்—1. கிட்டிப்போதல். (உவின். ககூ.) 2. மெல்லமெல்லப் போதல். (உவின். ககூ.) [இஃது அருகுதலென்பதன் விகாரமென்று உவின்சிலோ சொல்லுகிறார்.]

அருவன்—உருவிலி. (உ-ம்.) "அருவனுயிவற்றோடு" (சி. சி. ச: ககூ.)

அருவா — கொடுந்தமிழ்நாடு பன்னிரண்டினொன்று. (உ-ம்.) "தென்பாண்டிகுட்டங் குடங்கற்காவேண்பூழி—பன்றியருவாவதன்வடக்கு—நன்றாய—சீதமலாடுபுனனாடு செந்தமிழ்சே—ரேதமில்பன்னிருநாட் டெண்" (நன். பெயரி. சகூ. உரை.)

அருவாணம்—செம்பினாற் செய்யப்பட்டதட்டம். (உவின். ககூ.) [அந்நியபாடை.]

அருவாவசு — 1. சூரியசமுகத்துநின்று பாட்டயர்வோரில் ஒருவன். (கூர்மபு. ஆதவர்சிற. எ.) 2. சூரியன்கதிர்களுள் வியாழனை விளங்கச்செய்யுங்கதிர். (உ-ம்.) "வயங்கொளியருவாவசுவெனுங்கதிர்நல் வியாழத்தை மறுவறவிளக்கும்" (கூர்மபு. ஆதவர்கதிர். உ.)

அருவாவடக்கு—கொடுந்தமிழ்நாடு பன்னிரண்டினுளொன்று. "அருவா"பார். (நன். பெயரி. கசு. உரை.)

அருவாளர் — அருவாளநாட்டிலரசர். (உ-ம்.) "தொல்லருவாளர்தொழில்கேட்ப" (பட்டினப்பாலை. உஎரு.)

அருவாளன் — அருவாளநிலத்தான். (பி. வி. உக. உரை.)

அருவி—1. கழிமுகம். (பிங்க.) 2. தினைத்தாள். (சூ. நிசண். சு: சo.) 3. மலையின்வீழாறு. (உ-ம்.) "அருவிக்குன்றமுமைவனச் சாரலும்" (சிந்தா. கஙக. உஉஙு.)

அருவிபாய்தல்—1. மலையில்அருவிபாய்தல்போலக் கண்ணீர்பாய்தல். (உ-ம்) "அருவிபாய் கண்ணும் புண்ணுமழிகின்றமார்பும்"(இராமா. தைல.ருச.) 2. மலையினின்று நீரோடுதல். (உவின். ஙகூ.)

அருவினை—மகாபாதகம். (உ-ம்.) "அருவினையரக்கரென்ன" (இராமா. கார்கால. கூக.)

அருவுடம்பு — பத்துவகை இந்திரியவுணர்வோடும் ஐவகை வாயுக்களோடுங் காமவினைவினைவுகளோடுங் கூடியமாகம். இது, நுண்ணுடம்பு எனவும்படும். (வள். ஙசரு. பரி.)

அருவுதல் — அருவல்.

அருவுரு — சகளநிட்களத்திருமேனி. (உ-ம்.) "அருவமுமாயுருவமுமாயருவுருவுமாயெங்கு மமரா நிற்கும்" (சூத. முத். ச: கசு.)

அருவுருவத்திருமேனி—சிவன் நடிக்கு நவபேதத்திலே யருவவுருவ வடிவமாகக் கற்பிக்கப்படுஞ் சதாசிவமாகிய திருமேனி. (சி. சி. உ: எச-ங் கவி பார்.)

அருள்—1. அநுபவமுடைய தேசிகர் அருளிச்செய்யும் உபதேசம். (உ-ம்.) "அருளினாலாகமத்தே யறியலாம்" (சி. சி. பாயிர. ரு.) 2-4. அருளென்னேவலுந் தெரிநிலைவினைப்பகுதியும் பெயரெச்சத்தொகையும். 5. ஆன்மாக்களுக்காணவ முதலிய மலத்தைப் போக்கி ஞானத்தைக்கொடுத்து வீட்டையடைவிப்பிக்கை. (உ-ம்.) "அருட்செய்திதானும் – பழிப்பொழிபந்தம் வீடுபார்த்திடலருளேயெல்லாம்' (சி. சி. க: ஙஎ.) 6. கொடை. (உ-ம்.) "அருளிலார்களிலைந்தரு நிகர்க்கிலாரில்லை" (நைடத. நகர. கூ.) 7. தயவோடிடும் பணி, தயவோடுபண்ணுங்கற்பனை. (உ-ம்.) "அவனைமுனீர் – கொண்டுவருகென வருளுங்குலவுதிருவருள்கேளா" (கோயிற்பு. இரணிய. ருக.) 8. தொடர்புபற்றுதியல்பாக உயிர்கண்மேற் செல்லுங்கருணை. (வள். அதி. உரு.) ஒன்றின் துயர்கண்டாற் காரணமின்றித் தோன்றும் இரக்கம். (புறநா. ரு-ங் கவியுரை.) கிருபை. (உ-ம்.) "அருட்பெருங்கடலேயெய்த்தோம்" (கந்தபு. உற்பத். மேரு. கூ.) 'என்றித்திறங்களருளோடுபண்ணி." (சந்தபு. அவைபுகு.சகூ.) அன்பிற்குக்காரணமாய் மநத்தினிகழ்வது. (கலி. கரு. உரை.) 9. பராசத்தி. (உ-ம்.) "ஈசனருளிச்சை" (சி. சி. பாயிர. ஙு.)

அருள்செய்தல்—கிருபையோடுசொல்லுதல். (உ-ம்.) "உள்ளபடியருள்செய்யவேண்டும்" (கோயிற்பு. பதஞ். கூ.)

அருள்புரிபத்திரம் — அரசனானவன்,ஒருவனுடைய சேவகம், சௌரியமுதலியவைகளை வியந்து கொண்டாடியவனுக்குக் கிராம முதலியவற்றைக் கொடுத் ததற்குச் சாதநமாக எழுதிக்கொடுக்கும் பத்திரம். (மிருதிசந். ஙக.)

அருள்மரம் — முதிர்ந்த மாதுளைமரம். (சீவசீவ.)

அருள்விருக்ஷம் — பஞ்சதாரு. (மா.) [அருள்–கொடை, விருக்ஷம்–மரம்.]

அருளகம் — வெள்ளெருக்கஞ்செடி. (கா. வைத்.)

அருளாசி — 1. குடசப்பாலைக்கொடி. (கா. வைத்.) 2. வெட்பாலைப்பூண்டு. (கா. வைத்.)

அருளல் — 1. காத்தல், இரட்சித்தல். (உ-ம்.) "பொறுத்தே யருள்வாயென்னுவிருதாள் சென்னிபுனைந்தேன்" (இராமா. நகர்நீ. அரு.) 2. கிருபைசெய்தல். (உ-ம்.) "பரதஞ்செய் – கோலமவன்றனக்கருளி யடிமைகொளவேண்டு மென" (கோயிற்பு. இரணி. ருo.) 3. கொடுத்தல். (உ-ம்.) "ஏற்றவர்க்குமாற்றுதருள் செங்கை" (வாண. சஉசு.) 4. சிருட்டித்தல். (உ-ம்) "ஆரணத்தானருள்பாரளித்தான்" (வாண. உசுரு.) 5. சிவனுடைய பஞ்சகிருத்தியத்துள் ஒன்றாகிய அநுக்கிரகம்; அது: ஆன்மாக்களுக்குப் பாசத்தைநீக்கி ஞானத்தைக் கொடுத்து மோக்ஷமடைவித்தல். (சி. சி. க: ஙஎ.) 6. தயவோடுசொல்லுதல். (உ-ம்.) "ஐயநீதான்யாவனந் தோவருள்கென்றயர" (இராமா. நகர்நீ. எஎ.) 7. தேவரல்லது பெரியோருடைய செயன்முதலியவைகளை யுணர்த்தும், "செய்து" என்னும் வாய்பாட்டு வினையெச்சச்சொற்களை யடுத்துக் கிருபையானசெயல் அல்லது சொல் என்பதை விளக்குதற்குப் பிரயோகிக்கும் ஒருசொல். (உ-ம்.) நாதனெழுந்தருள" (கோயிற்பு. பதஞ். உச.) "திருவுள்ளமகிழ்ந்தருளி" (ஷை இரண். ருக.) 8. மகவாகப்பெறுதல். (உ-ம்) "நாட்டமொருமூன்றுடைய நாதனருண்மைந்தன்" (கந்தபு. இரண்டா. ஙஉ.)

அருளவம் — 1. அழிஞ்சில். (உவின். ஙகூ.) 2. பெருமரம். (கா. வைத்.)

அருளறம்பூண்டோன்—புத்தன். (மணிமேகலை.)

அருளாதி—குடசப்பாலைக்கொடி, (கா. வைத்.)

அருளாபு—சாரணைப்பூண்டு. (கா. வைத்.)

அருளாமை— அருள்செய்யாமை. (வள். உசக. பரி.)

அருளாழிவேந்தன் — அருகதேவன். (உவின். கூக.) 2. கடவுள். (உவின். கூக) [அருள் - கிருபை. ஆழி - கடல். வேந்தன்-தலைவன்.]

அருளாளன் —கிருபையை விசேடமாகவுடையவன். (உ-ம்.) "அத்தா விமலாவருளாளா" (தாயு. காண்பே. கூ௦.)

அருளிக்கேட்டல்— ஒருவர் சொன்னதையருள்பண்ணிக்கேட்டல், தயவோடு செவிகொடுத்துக்கேட்டல். (உ-ம்) "மன்னவவருளிக்கேண்மோ" (சிந்தா. குண. உகூஅ.)

அருளிச்செய்தல் —1. அநுக்கிரகித்தல், கிருபைசெய்தல். (மா.) 2. கிருபையோடு சொல்லுதல். (உ-ம்) "செய்கவென்றருளிச்செய்தான்" (கோயிற்பு. இரணி. ருக.)

அருளிப்பாடு— அருளப்பட்ட உத்தரவு. (உ-ம்.) "ஆயசீரிராகவனருளிப்பாடெனவாயில்காப்பாளருமகிழ்ந்து கூறலும்" (இராமா. அசுவ. சருகூ.)

அருளிலி —தயவில்லாதவன். (உ- ம்.) "கண்ணிலாவருளிலிதன்காதன்மைந்தன்" (பாரத. கிருட். சச.)

அருளுடைமை — தொடர்புபற்றுதியல்பாக எல்லாவுயிர்கண் மேலுஞ் செல்லுவதாய கருணையுடைமை. (வள். அதி. உரு.)

அருளுதல்—அருளல்.

அருளுவம் — பெருமரம். (கா. வைத்.)

அருளுறுதி —வேப்பமரம். (கா. வைத்.)

அருங்சிகைரோகம் — கபாலத்தில்வரும் ஒருவகைரோகம். அது: பித்தத்தினாற் கபாலமூளைகரையும்போது பிறந்து கபாலத்தின்மீது தினையைப்போலுங் கடுகைப்போலும் அநேககொப்புளங்களுண்டாக்குமென்பர். (சீவரட். உகூகூ.) [அரும்ஷிகை-பரவுதலையுடைய விரணம். இது, "அருஸிகா"என இருக்கவேண்டும்போலும்]

அருபகம்— உருவக அலங்காரமாகாதது. (உவில். சுக) [அ; ரூபக - உருவகம்.]

அருபதை—1. அவலட்சணம். (உவில். சுக) 2. உருவமின்மை. (உவில். சுக) 3. ஒப்பின்மை. (உவில். சுக) [அரூபதா.]

அருபம் — 1. அவலட்சணம். (உவில். சுக.) 2. உருவமின்மை. (உ-ம்.) "அஞ்சலினீருகுத்தரூபமா" (இரகு. திக்கு. உருங) 3. ஒப்பாகாமை. (உவில். சுக) 4. (சாங்கியர்சொல்லும்)பிரதானமென்னு மூலப்பகுதி. (ஆட். எக.) 5. (வேதாந்திகள் சொல்லும்)பிரமம். (ஆப். எக) [அரூப.]

அருபி — 1. அசரீரி, அரூபத்தன்மையுடையது. (உ-ம்.) "மல்லலரூபிவழங்கியதன்றே" (பாரத. புட்ப. எஎ.) 2. கடவுள். (உவின். கூக.) 3. கர்ப்பூரம். (உவின். கூக.) 4. சிவன். (பிங். சச.)

அருபிநருபிந்— எண்பத்தொரு பதங்களிலொன்று. (சி. சி. அ: எ. மறை.)

அருபை—1. அவலட்சணமுள்ளவள். (உவில். சுக.) 2. ஒப்பில்லாதவள். (உவில். சுக.) 3. உருவமில்லாதவள், (உ-ம்.) "ஆதிசத்தியரூபையாதலில்" (சதாசிவ. சஉ.) [அ; ரூபா]

அரேசகண்டு—கருணைக்கிழங்கு. (கா. வைத்.)

அரேசிகம்—வாழைமரம். (கா. வைத்.)

அரேணுகம் — 1. கடுவேர். (கா. வைத்.) 2. கவுந்திக்கொடி. (கா. வைத்.) 3. காட்டுமிளகுக்கொடி. (உ-ம்.) "கருவேம்பரேணுகங்கைச்சோரம்வாலுகமகாகோளிமகிழம்பூ" (தைல. தைலவ. எஎ.) 4. வான்மிளகுப்பூண்டு. (கா. வைத்.)

அரேணுகை—காட்டுமிளகு. (உ-ம்.) "பண்டிதவாயு மரேணுகையும்பருமரசோகங்கமழ்சரணம் பரையருணதம்புட்கரமுக்கடுகெடுகீரைந்து" (தைல. தைலவ. க.)

அரை—1-3. அரையென்னேவலுந்தெரிநிலைவினைப்பகுதியும் பெயரெச்சத்தொகையும். 4. இடை. (பா.) 5. உடம்பின் நடுப்பக்கம்; அது: வயிற்றுக்குந் தொடைகளுக்கும் நடுவிலுள்ளது. (உ-ம்.) "ஆடலரவமரைக்கார்த்தீர்" (தேவார. புகலி. ரு.) 6. ஒருமரம். (உ-ம்.) "வகுளஞெமையரையாங்கர்க்கணிகாரய்" (திருவானை. சம்புக. க.) 7. பாதி. (உ-ம்.) "வேணப்பாகஸ்தூரி வகைக்குத்தானும்விளங்கவேயரைக்கழஞ்சு வேண்டுவாயே" (அகஸ்தியர்பூ. கசஅ.) 8. பெண்களினல்குல். (உ-ம்.) "பையரைக்கோடிமின்னார்" (மறைசை. கரு) 9. மரத்தின் அடிதொடங்கிக் கொம்பு வரைக்குமான பாகம். (உ-ம்.) "பொரியரைததேமா" (நைடத. நாட். உ௦.) 10. வயிறு. (உ-ம்.) "கன்றரைப்பட்ட கயந்தலைமடப்பிடி" (மலைபடுகூ௦எ)

அரைக்கச்சு } **அரைக்கச்சை** } இடையிற் கட்டுங்கச்சு. (சீகாழி. ஆபத். ச.) "அரித்தல்" பார்.

அரைக்கல்—அரைத்தல். (உ-ம்.) "அரைக்கலாதபூர்த்தேய்வை" (கூர்மபு. சந்திர. சக.)

அரைக்காணி — (கீழ்வாய்க்கணக்கு.) ஒன்று நூற்றறுபது கூறிட்டதில் ஒரு கூறு. (சி)

அரைக்கால்— ஒன்றெட்டுக் கூறிட்டதில் ஒரு பாகம். ளு. (சி)

அரைக்குளகம் — ஒருபடி, அரைமரக்கால். (உ-ம்.) "எண்ணெயரைக்குளகம்பாண்டத்-திசைத்தொழுகக் காய்ச்சியிறுத்தாடு" (தைல. தைலவ. அ.)

அரைகல் — அம்மி. (மா.)

அரைஙகரம் — நாஞழி. (உ-ம்.) "வல்லிசம்படியுகமாபமிருஙகரமடவந்த புனலரைஙகரம்" (தைல. தைலவ. சா.)

அரைச்சதங்கை — பிள்ளைகள் அரையில் அணியுஞ்சதங்கை. (உவின். ௲கூ.)

அரைச்சல்லடம் — அரையினின்று முழங்கால் வரைக்கும் இடுஞ்சல்லடம். (மா.)

அரைசபாரம் — அரசுநடத்துங்கடமை. (உ-ம்.) "அருந்தவமரைசபாரமிரண்டுமே" (சூளா. மங். ௲கூ.)

அரைசர் — அரசுசெய்வோர். (உ-ம்.) "அரைசரிற்புகுந்து பேரரைசியானநீ" (இராமா. மந்தரை. சுக.)

அரைசன் — அரசன். (உ-ம்.) "அரைசனவன்பின்ஞேரை" (இராமா. குலமுறை. ச.)

அரைசி — இராசாத்தி, பட்டமகிஷி. (உ-ம்.) "அரைசர்" பார்.

அரைசிலை — அம்மி. (உ-ம்.) "அரைசிலைகுமிழ்ப்புவடிந்தல்" (தைல. பாயிர. கக.) [அரை-அரைத்தல். ஶிலா-கல்லு.]

அரைசு — அரசு. (உ-ம்.) "அரைசுவீற்றிருந்தாளவுமாய்மணி" (இராமா. சூளாமணி. ௲சு.)

அரைஞாண் — ஆண்மக்கள் அரையிற் கட்டுங்கயிறு. (உ-ம்.) "புனைமணியரைஞாணுெடு போதும்" (பெரியபு. ஞானசம். கூ.)

அரைஞாண்மணி — அரையிற் கட்டுஞ் சதங்கை, கிங்கிணி. (உ-ம்.) "கட்டழகுமேயவரைஞாண்மணிகறங்க" (கந்தபு. திருவிளை. உ.)

அரைத்தல் — 1. அழித்தல். (உவின். சo.) 2. உரோஞ்சல். (உவின். சo.) 3. தேய்த்தல். (உ-ம்.) "அரைத்தவாரமும்" (பாரத. நிரை. உகூ.) 4. தேய்த்துமாவாக்கல், தேய்த்துத் தூளாக்கல். (உவின். சo.) 5. நசுக்கல். (உவின். சo.) 6. வியாதியிலழுந்துதல். (சி.)

அரைத்துகில் — உடம்பின் அரையில் அணியப்படுஞ்சீலை. (உ-ம்.) "பொருவருங்குமாரும்போயினர்புறம்- திருவரைத்துகிலொரீஇச் சீரைசுற்றியே" (இராமா. நகர்நீ. கடுஉ.)

அரைத்தொடர் — அரையிற்கட்டுஞ் சங்கிலி. (உ-ம்.) "அங்கைச்சரிவளையு நாணுமரைத்தொடரும்" (நாலாயிர. மாணிக்க. ச.)

அரைதல் — 1. அரைபடல். (உவின் சo.) 2. உரோஞ்சல். (உவின். சo.) 3. தேய்தல். (உ-ம்.) "அங்கமெங்குமரைந்திட" (பெரியபு. திருநாவு. ௲சுo.)

அரைநலம் — விதைநருங்காது குறையாயிருக்கு நலம். (சி.)

அரைநலவன் — நன்றாக நலமடிக்கப்படாத ஆண்மாடு. (உவின். சo.) [வழக்.]

அரைநா — முதலை. (மா.)

அரைநாண் — அரைஞாண். (உ-ம்.) "பொன்னரைநாணுெடு மாணிக்கக்கிண்கிணிதன்னரையாட" (நாலாயிர. மாணிக்கக்கிண். உ.)

அரைநர்வை — ஒரு பாற்கோடிய கொழுவுடையதாய்ப் பாவனைக்காகாத கலப்பைப் பகுதி. (உவின். சo.) 2. ஒரு பாற்கோடிய மண்வெட்டி நுனி. (உவின், சo.)

அரைநாள் — 1. நடுநாள். (உ-ம்.) "மழையமைந்துற்றவரைநாளமயமும்" (மதுரைக்காஞ்சி. சுசகூ.) 2. நாளிற் பாதி, பாதிநாள்.

அரைநூல் — 1. அரைச்சதங்கை. (சி.) 2.? அரைநாண். (சி.) 3. நூலிற்பாதி, பாதிநூல்.

அரைநேக்கல் — அரைப்பாகம் நெகிழ்ச்சி, அரைத்திட்டம் பழுத்தது. (சி.)

அரைப்பட்டிகை — மாதராவதாடவராவதரையிற்கட்டும் பட்டிகை. (உவின். சo.)

அரைப்பணம் — 1. அல்குல். (உ-ம்.) "அரைப்பணத்தைவிற்று" (திருப்பு. உசசு.) [அரை; ஹணம்-படம்.] 2. ஒருபணத்திற் பாதி. [அரை; பண.]

அரைப்பு — 1. அரைக்கப்பட்டது. (உவின். சo) 2. அரைக்கை. (உவின். சo) 3. அரையல். (உவின். சo.) 4. இருப்பைப்பிண்ணுக்கு. (உவின். சo.) 5. தேகத்திலே செறிந்த எண்ணெய் போக்குதற்காகத் தேய்க்கும்படி பச்சைப்பயறு முதலியவற்றை யரைத்தெடுக்கப்படுவது. (உ-ம்.) "சோபைத்திப்பிசொல் லரைப்பாநெய்க்குமுற்கந்தேடியரைப்பாகுந்தெளி" (தைல. பாயிர. சகூ.)

அரைப்புக்கட்டி — இருப்பைப்பிண்ணுக்குக்கட்டி. (உவின். சo.)

அரைப்பூட்டு — 1. இடுப்புந் தொடையும் பொருந்தும்பூட்டு. (உவின். சo.) 2. இடைக்கட்டு. (உவின். சo.)

அரைமா — (கீழ்வாய்க்கணக்கு.) ஒன்றை நாற்பது கூறிடப்பட்டதில் ஒருபாகம். (செ.)

அரைமூடி — சிறு பெண்பிள்ளைகள் அல்குலைமறைத்துக் கட்டும் ஓராபரணம். (உவின். சo.)

அரையல் — 1. அரைக்கப்பட்டது. (மா.) 2. சோம்பல். (சி.) 3. துவையல், பச்சடி. (மா.) [வழக்.]

அரையலன் — சோம்பன். (சி.) (உ-ம்.)

''அவனொரு அரையலன்'' [வழக்.]

அரையன் — 1. அரசன். (உ-ம்.) "பூசைநீர்க்கடலரையற் சாற்றுவான்" (தணிகை. நாட்டு. சகஅ.) 2. அரையையுடையவன். (உ-ம்.) "வெம்மான்றேல்வீக்குமரையன்" (கலைசை. அஉ.) 3. பாதியுடையோன்.

அரையாப்பு—மேகநோயால் அரையிலுண்டாகும் விரணம். (உவின். சo.)

அரையிரவு — 1. அர்த்தராத்திரி. (உ-ம்.) "மடவரலிங்கரையிரவிற்கண்விழித்தாள்" (ஞானவா. சிகித்து. எடு.) 2. இரவிற் பாதி.

அரையிருள் — அர்த்தராத்திரி. (உ-ம்.) "அரையிருட்பொழுதில்" (கூர்மபு. பிலக்க. டுங.)

அரைவட்டம் — 1. அரைமூடி. (உவின். சo.) 2. வட்டத்திற்பாதி. (உவின். சo.)

அரைவடம்—அரையிற் கட்டும் வடம். (உ-ம்.) "அரைவடங்கள்கட்டி" (திருப்பு. உ.)

அரைவயிரக்கண்—கம்மாளர் கருவியிலொன்று. (சி.)

அரைவயிறன்—அரிசி பிடியாதநெல்லு, அரிசிமுதிராத நெல்லு. (உவின். சo.)

அரைவாசி — பாதி. (உவின். சo) [வாசி—அளவு.]

அரைவாய்—1. பங்கப்பட்டவாய். (உவின். சo.) 2. வாய்கொண்டதில் அரைவாசி. (உவின். சo.)

அரைவெறி — சிறிதுவெறி. (உவின். சo.)

அரோ — ஓர் அசைச்சொல். (உ-ம்.) "அன்புகூர்வாமரோ" (பாரத. காப்பு.)

அரோகம்—சுகம், நோயின்மை. (உ-ம்.) "அரோகதிடகாத்திரம்" (தாயு. பாய. டுக.) [அ; ரோக-நோய்.]

அரோகி — நோயில்லாதவன், சுகமுடையவன். (உவில். சுக.) [அரோகிந்: அ; ரோகிந்-நோயாளி.]

அரோகிதை — நோயின்மை, சுகமுடைமை. (உவில். சுக.) [அரோகிதா.]

அரோகை—தைத்தியநாசத்திலேகோயில்கொண்ட உமை. (உ-ம்.) "புகழ்வளைதைத்தியநாசத்தன்புறுமரோகையென்றும்" (மச்சபு. கவுரிகா. மாட்ட. கூஉ.) 2. நோயில்லாதவள். (உவில். சுக.)
[அரோகா.]

அரோசகம் — 1. அருவருப்பு. (ஆப். எக.) 2. சமியாக்குணம். (உவில். எo.) 3. பசியின்மை. (ஆப். எக.) 4. பசியின்மையையுண்டாக்குதல். (ஆப். எக.) 5. பிரகாசமின்மை. (ஆப். எக.) 6. வெறுப்பு. (ஆப். எக.)
[அரோசக: அ; ரோசக— சமித்தல், பிரகாசித்தல்.]

அரோசகரோகம் — ஒக்காளத்தையுண்டுபண்ணும் ஒருவகைநோய். (சீவரட். சுச.)

அரோசநம்—1. சந்தோஷமின்மை, பிரியமின்மை. (உ-ம்.) "அரோசநத்துடனங்நகர் நண்ணினார்" (பாரத. திரௌ. சoடு.) 2. பிரகாசமின்மை. (வென். எஅo.)
[அ;ரோசநம்—மகிழ்ச்சி, பிரகாசம்.]

அரோசம் — அரோசகம். (உவின். சo)

அரோசிகம்—1. அருவருப்பு. (உ-ம்.) "ஆழ்ந்துநினைக்கி லரோசிகமாமிவ்வுடலில்" (தாயு. யாக்கை. அ.) 2. வெறுப்பு. (உவின். சo.) [அரோசிகா.]

அரோசிகை—1. அருவருத்தல். (ஆப். எக.) 2. பசியின்மை. (ஆப். எக.) 3. பசியின்மையையுண்டாக்குதல். (ஆப். எக.) 4. பிரகாசமின்மை. (ஆப். எக.)
[அரோசிகா— பசித்தல், பிரகாசித்தல்.]

அரோசித்தல்—1. அருவருத்தல். (உவின். சo.) 2. வெறுத்தல். (உவின் சo.) (உ-ம்.) "அதுஎனக்கரோசித்துப்போயிற்று"

அரோசிப்பு — 1. அருவருப்பு. (உவின். சo.) 2. வெறுப்பு. (உவின். சo)

அரோதநம் — 1. அழுகையின்மை. (உவில். எo.) [அரோதந: அ — எதிர்மறை. ரோதந—அழுகை.] 2. தடை. (உவில். எகூடு) 3. படைவளைத்தல். (உவில். எகூடு.) [ரோதநம்— தடை, வளைத்தல். "ரோதந" என்னும் வடமொழி அகரத்தை முன்பெற்று வந்தது. அகரத்தை யெதிர்மறை யுபசர்க்கமாகக் கொள்ளுமிடத்துத் தடை முதலியவற்றினின்மைப் பொருளைத் தரலுமாகும்.]

அல்—1. அதிசாரம். (இராசவைத்.) 2. அல்லாத, இஃது அன்மை என்பதன் விகுதிகெட்டுநின்றதென்பர். (உ-ம்.) "ஒன்றலெண்ணும்" (நளவெண். உகூ) 3-5. அல்லென்னுங் குறிப்பு. 6. ஆண்பா லொருமையில் வரும் ஒரு பெயர்விகுதி. (உ-ம்.) "இளவல்" "தோன்றல்" "கறுவல்" (நன். பெயரி. சக. இராமா.) 7. இராக்காலம். (உ-ம்.) "அல்லும்பகலுமருச்சிக்க" (சைவச. பொது. எசு.) 8. இருள். (உ-ம்.) "அல்லார்குழலின்" (வாண. அ) 9. ஒருசாரியை. (உ-ம்) "தொடையல்" (நன். உருபு. டு. இராமா.) 10. ஒருதொழிற்பெயர்விகுதி. (உ-ம்) "ஆடல்" 11. ஒருடம்பாட்டுவியங்கோள்விகுதி. (உ-ம்.) "மக்கட்பதடியெனல்" (வள். ககசு.) 12. ஒரெதிர்மறைவியங்கோள்விகுதி. (உ-ம்.) "மகனெனல்" (வள். ககசு.) 13. ஒரெதிர்மறையொருமை ஏவல் விகுதி. (உ-ம்.) "இருஙகுன்ற வாணரிள

ங்கொடியேயிடரெய்தல்'(திருக்கோ. சடு)14. ஒரெதிர்மறைஇடைநிலை(உ-ம்.) "வாழலேன்" 15. சுக்கு. (இராசவைத்.) 16. தன்மையொருமை வினைவிகுதிகளுள் ஒன்று; இது. பகர வகர எதிர்கால இடைநிலைகளுள் யாதேனும் ஒன்றோடுவரும்" (உ – ம்.) "பொய்மலிசெயலிற்றப்பிப் போமெனிற்காண்பலென்னு" (பிரபுலிங்க. சைலாச. ருஎ.) "காலன்குறுகில் என்செய்குவல்" (கம்பரா. ச) 17. மதில். (உ–ம்)"அணியணையனெஞ்சே' (சென்து. கசு.) 18. மயக்கம். (உ-ம்.) "அல்லாற்சாயுச்சியப்பயனை" (ஒழிவி. சு.) "அன்னுழையாத வுள்ளத்து" (சூத. முத்தி.கூ: ருo) 19. மெய்யெழுத்து. (உ-ம்.) "மேவியமெய்கள் விளம்புமல்லொடு வியஞ்சநமாம்" (பி. வி. ச) [ஹல். இது சம்ஸ்கிருதத்திலே வகுத்துக் கொண்டபடி ஆதியிலேநின்ற "ஹ்" என்பதையும் அந்தத்திலே நின்ற "ஸ்" என்பதையும் எல்லைகண்டு அவற்றுக்குட்பட்டனவற்றுக்குப், பிரத்தியாகாரஞ் செய்தலினால் வந்தபெயர். சம்ஸ்கிருத ஒற்றுக்களுக்கே இது சிறந்த பெயராயினும் தமிழில்வரும் ஒற்றுக்களுக்கும் பெயராகக்கொள்க.]

அல்கல்—1. இராக்காலம். (உ – ம்.) "பெரு நகையல்கனிசழ்ந்தொரு நிலையே" (கலித்தொகை. சுரு.) 2. சுருங்கல், குறைதல். (உ-ம்.) "அல்கலின்மொழிசிலவறைந்து" (நைடத. அன்னத்தைக்கண். சுசு.) 3. தங்குதல், தங்கியிருத்தல். (உ-ம்.) "அல்குநன்புரத்துநண்ணி" (கந்தபு. நாம. சுக.) 4. நிசப். (உ – ம்.) "மூன்றல்கல்" (தைல. தைலவ. கருக.) 5. வறுமை. (சூ. நிகண். அ: சுக.)

அல்கலும்—நாடோறும். (உ-ம்.) "அகல்விசும்பிடையல்கலும்படர்பகலவன்" (கந்தபு. தெய்வ. ருக.)

அல்கு—1. அல்கல். எனப்பொருள்படும் ஒருமுதனிலைத்தொழிற்பெயர். (உ – ம்.) "அல்கருஞ் சிர்த்துவாரகை" (கூர்மபு. கண்ணன்மண. சoச.) [இங்கே அல்கு-குறைவு எனப் பொருள்படும்.] 2 - 4. அல்கென்னேவலுந் தெரிநிலைவினைப்பகுதியும் பெயரெச்சத்தொகையும்.

அல்குகழி—உப்பங்கழி, சிற்றாறு. (உ-ம்.) "அல்குகழியினுஞ்செல்லாதோகடல்" (நன்னெறி. கசு.)

அல்குதல் — 1. குறைதல். (உவின். சரு.) 2. சுருங்குதல். (உவின். சரு.) 3. தங்கியிருத்தல். (உவின். சரு.)

அல்குல்—நிதம்பம். (உ-ம்.) "கலந்தகிறூழமல்குற்கவான் மிசைக்கொண்டிருந்தாள்" (சிர். பதுமை. உருஉ.) 2. பெண்குறியின் மேற்பக்கம். (உவின். சரு.)

அல்பொருள்—1. அல்லாதபொருள். (உ-ம்.) "பெயர்பொருளல்பொருளென விருபொருளெனும்" (தண்டி. ருரு.)

அல்ல — 1. அஃறிணைப்பன்மை எதிர்மறைப்பொருளில் வரும் ஒருகுறிப்புவினைப் பெயர். (உ – ம்.) "கருதுபகோடியு மல்லபல" (வள். ருருஎ.) 2. அஃறிணைப் பன்மை எதிர்மறைப் பொருளில் வரும் ஒரு குறிப்புவினைமுற்று. (உ-ம்.) "ஒருவறசணியல்ல மற்றுப்பிற" (வள். கூரு.) 3. சொல்லாதொழிந்தன. (உ-ம்.) "உருவவெட்பயறுழுந்தல்லவும" (சிந்தா. காக. ரு.) 4. முன் சொல்லிக்கொண்டதற்கு மாறானவை – விரோதமானவை. (உ-ம்.) "அறங்கூறா னல்லசெயினும்" (வள். சஅக.)

அல்லகண்டம்—உபத்திரவம். (உ – ம்.) "அல்லகண்டங்கொண்டடியேனென்செய்கேனே" (தேவார. திருவானை. ச.)

அல்லகம்—1. உற்பலச்செடி. (உ-ம்.) "அல்லகாத்திரி" பார். (தணிகை. புராணவர. ருகு.) 2. சோவணச்சீலை. (செ.) 3. செந்தாமரைச்செடி. (உவில். கூகூசு.) [1, 3. ஹல்லக:]

அல்லகாத்திரி—தணிகைமலை. (உ-ம்.) "வைகறொறுமலர்மூன்றுகோலமார்காவியுயிர்த்தலினல்லகாத்திரி" (தணிகை. புராணவர. ருகூ.) [ஹல்லக-உற்பலம். அத்ரி-மலை.]

அல்லத்தட்டல்—கூடாதென்று மறுத்தல். (உவின். சரு)["அல்லவென்று தட்டல்" என்பதுமருவிக் கொடுந்தமிழாய் வழங்கும். தட்டல் – தடுத்தல்.]

அல்லது—1. அல்லாமல். (உ–ம்.) "நீயாகவல்லதுமாந்தழையாக நினைந்திலளே" (வாண. ௯உகூ) 2. தீவினை. (உ–ம்.) "அல்லதுகெடுப்பவனருள் கொண்ட முகம்போல" (கலித்தொகை. சசஅ)3. முன்சொல்லியதல்லாதது. (உ - ம்) "நல்லதுசெய்தலாற்றீராயினுமல்லதுசெய்தலோம்புமின்" (புறநா. ககூரு.) 4. முன்சொல்லியதாகாவிடத்து எனப் பொருள்படும் ஒரு குறிப்புவினையெச்சம். (உ–ம்.) "செல்வனை யின்று நாடிச் சேவடி தொழுதலொன்றோ – வல்லதிவ்வுடம்புநீங்கிவேற்றுலகடைதலொன்றோ – யெல்லையிவ் விரண்டினொன்றே யிப்பகன்முடிப்ப லென்று" (சிந்தா. கநக. கஅகூ.)

அல்லதூஉம்—அல்லாமலும். (உ-ம்.) "அல்லதூஉமவனுடைத் துணைவராயினர்க்கு" (இராமா. பிணிவீட். உஉ.)

அல்லதேல்—அல்லாதிருந்தால். (உ-ம்.) "அத்தவிங்கினிக் காத்தருளல்லதேலுவல்லே" (கந்தபு. மோந. சo.)

அல்லதை—அல்லது. (உ-ம்.)"அலியரல்லதையாண்டகையார்கொலோவவனையோர்" (கந்தபு. சூரன் றண். உரு.) [ஐ-ஒருசாரியை.]

அல்லம்— 1. அல்லென்னுமடியாற்பி

றந்து தன்மைப் பன்மையில் வரும் ஒரு குறிப்புவினைமுற்று. 2. அல்லென்னும் அடியாற்பிறந்துதன்மையொருமைச் சிறப்பில் வரும் ஒரு குறிப்புவினைமுற்று. (உ-ம்.) "பண்டையமல்லம்." (சிந்தா. கஙக. சுஎ.) 3. இஞ்சிப்பூண்டு. (சூ. நிகண். ச: சரு.) [தெலுங்கு.]

அல்லமன் — சுஞ்ஞாநி நிராங்காரன் என்னும் இருவரிடத்திலும் பிறந்த புதல்வன். (உ-ம்.) "தொல்லையிலுயர் சுஞ்ஞாநிநிராங்காரனென்போரெல்லையிறவங்கள்செய்யவெமதுமெய்வடிவந்தானே- யல்லமனுயமைந்தனுயினன்." (பிரபுலிங்க. கைலாச. ருச.)

அல்லர்-1. அல்லாதவர். (உ-ம்.) "வீரரையல்லரைவெகுளலீரென" (கந்தபு. சிங்கமுக. கக.) 2. அன்மைப்பொருளில்வரும் ஒருயர்திணைப் பன்மைப் படர்க்கைக்குறிப்புவினைமுற்று. (உ-ம்) "வறிது பெயர்குநரல்லர்" (புறநா. கஉச.)

அல்லரியல்— 1. கண்ணறை. (சி.) 2. கண்ணறையுள்ளது. (உவின். சரு.) (உ-ம்.) "அல்லரியற்புடைவை." [அல்- அல்லாத, கூடாத. அரியல்- கூடாதவையரித்தெடுக்குங் கருவிபோல்வது.]

அல்லல்— 1. துன்பம். (உ-ம்.) "அல்லலருளாள்வார்க்கில்லை." (வள். உசரு.) 2. பந்தம். (உ-ம்.) "மலத்தினீங்கியல்லலற" (கூர்மபு. பிலக்க. எசு.)

அல்லவர்—பிறர். (உ-ம்.) "சிலர்க்கெளிதாமல்லவர்க்கரியதாமதுவே" (அருணசலபு. திருநகர. சசு.)

அல்லவை—1. தீங்கான செய்கைகள். (உ-ம்.) "அல்லவைபுரியாரேனும்" (கந்தபு. காசிபன்பு. ரூக.) 2. பயனில்லன. (பிங்க.) 3. மாறுனவை. (உ-ம்.) "தவமறைந்தல்லவைசெய்தல்" (வள். உஎச.)

அல்லேன்-அல்லென்னும் அடியாற்பிறந்து படர்க்கைப்பெண்பாலொருமையில்வரும்ஒருகுறிப்புவினைமுற்று. (உ-ம்.) "மாதர்விஞ்சையும் வல்லளுமல்லளோ" (சிந்தா. கஙக. எரு.)

அல்லற்படல்—துன்பப்படல். (உ-ம்.) "அல்லற்பட்டாற்று தழூதகண்ணீரன்றே" (வள். ருருரு.)

அல்லன்—1. அல்லாதவன். (உ-ம்.) "ஒருவனே யெல்லாமாகி யல்லனுயுடனுமாவன்" (சி. சி. க: உஎ.) [இது: குறிப்புவினையாலணைந்த ஒருபெயர்] 2. அன்மைப்பொருளில்வரும்ஒருயர்திணையாண்பாற்படர்க்கைக்குறிப்புவினைமுற்று. (உ-ம்) "இறையுமல்லன்" (சி. சி. அ: ரூஅ.) 3. தீயவன். (உ-ம்.) "அல்லனுெடொருபந்தியயின்றிடல்" (சேதுபு. காசிப. சுசு.)

அல்லன—1. ஒழிந்தவை, அல்லவை. (உ-ம்.) "சொன்னான்மலருமல்லனவும" (சிந்தா. கஙக. கூசு.) 2. தீங்கானசெய்கைகள். (உ-ம்.) "நல்லாறுெழுக்கின்றலைநின்றார்-நல்கூர்ந்து-மல்லனசெய்தற்கொருப்படார்" (நீதிநெறி. சூ௦)

அல்லா—1. ஒழிந்த. (உ-ம்.) "சோதிவைகும் - பொற்றையதோன்றேயல்லாப்பொருப்பெலாம்" (கந்தபு. சூரபன். சஅசு.) [பெயரெச்ச விகுதியுந் தவ்வுங்கெட்டுநின்றன.] 2. கடவுள். (உவின். கூசுக.) [அராபி. இது: மகமதியரால் வழங்கப்படுஞ் சொல்.] 3. தாய். (உவில். எஎ.) [நாடகத்தில் வழங்கப்படும் ஒருசொல். அஹோ.]

அல்லாக்கால்—அல்லாவிடத்து. (உ-ம்.) "பதிஞானேசமுடையோனல்லாக்கால்" (சூத. ஞான. ச௦: கஎ.)

அல்லாத்தல் — அலமரல், துன்பமுறல். (உ-ம்) "ஆக்கமிழந்தேமென்றல்லாவார்" (வள். ருகூரு.)

அல்லாத — 1. தீமையுடைய எனப்பொருள்பட, அன்மையென்னும் அடியாற்பிறந்த ஒருகுறிப்புவினைப்பெயரெச்சம். (உ-ம்) "அல்லாதபரசமயவலகைத்தேர் விண்டகல" (சேதுபு. கடவு. கரு) 2. தீமையுடையவையெனப் பொருள்படும் ஒரு குறிப்புவினையாலணையும் பெயர். 3. தீமையுடையன எனப்பொருள்படும் ஒருகுறிப்புவினைமுற்று. 4. மாறுன எனப்பொருள்படும் ஒருகுறிப்புவினைப்பெயரெச்சம். 5. மாறுனவை யெனப்பொருள்படும் ஒரு குறிப்புவினையாலணையும் பெயர். (உ-ம்.) "சொலற்பாலவல்லாத சொல்லுதலுங் குற்றம்" (நீதிமஞ்சரி. கசுச. நான்மணி.)

அல்லாதது — 1. சொல்லாதொழிந்தது. 2. தகாதது, தீயது.

அல்லாதவர் — 1. தகாதவர், தீயவர். (   ) 2. முன்சொல்லப்படாதவர். (உ-ம்.) "சமயாதிபர்களுக்குமல்லாதவர்க்கும்" (பாரத. கிருட். உரூரு.)

அல்லாதன—1. ஒழிந்தபிற. (   ) 2. செய்யத்தகாத செயல்களெனப் பொருள்படும் ஒரு குறிப்புவினைப்பெயர். (உ-ம்.) "பற்றினர்போயல்லாதன புரிவர்" (கந்தபு. அயிராணிசோக. கரு.)

அல்லாதார்—1. ஒழிந்தபிறர். (உ-ம்.) "பெற்றார்மகப்பெற்றாரல்லாதார் பிறர்மக்கள் பிறரேகண்டீர்" (சிந்தா. கேம. கரூச.) 2. தீயார். (உ-ம்.) "அருட்கண்ணனேக்காதாரல்லாதரே" (தேவார. திருவாரூர். திருத்தாண்டக. க. திருநாவு.)

அல்லாது—அல்லாமல். (உ-ம்.) "அவனையல்லாதுவேறுசிலர்" (பாரத. பதினெட். ச.)

அல்லாமல் — அன்றியெனப் பொருள்படும் ஒருகுறிப்பு வினையெச்சம். (உ-ம்.) "மருவுயிர்க்கு நாண்மலர்க்கு மாமதியுமல்லாமல்" (நைடத. அன்னத்தைத்தூ. கூஅ.)

அல்லாமை—கெட்டகுணம். (உ-ம்.) "வாஞ்சைமுதலாவல்லாமை யெத்தனை" (தாயு. ஆநந்த. க.)

அல்லார்—அல்லாதார். (உ-ம்.) "அல்லார் செயுஞ் சேண்மை யாகாதே" (நன்னெறி.)

அல்லாரி—வெள்ளாம்பற்பூண்டு. (கா. வைத்.)

அல்லால்—அல்லாமல். (உ-ம்.) "அஞ்சாமையல்லால்" (வள். சகஎ.) ["ம" தொக்கது.]

அல்லி—1. அகவிதழ். (உ-ம்.) "அல்லியங்கமலந்தன்னிலாிவையும்" (கந்தபு. திருக்கல. எரு.) 2. அல்லிக்கிழங்கு. (உ-ம்) "நெய்தலல்லிசந்திருவேர்வசம்பட்டிசுரேசுவரியரைப்பூவளர்க்கமந்திட்டிசாயிரு சண்பகமாமிசிதருநாரி வேங்கை வைரங்கிடிச்செவிபுட்கரஞ்சசிபெருங் குரும்பைச்சதகுப்பை யிருபத்தேரேடு" (தைல. தைலவ. உஅ.) 3. ஆம்பல். (கா. வைத்.) [அல்-இரா. இ-விகுதி. இராக்காலத்தில் மலரும் புட்பம் என்பதுபற்றிவந்தபெயர்.] 4. இரா. (உவின். சரு.) 5. இளவேர். (உவின். சரு.) [வழக்.] 6. காயாமரம். (சூ. நிகண். கக; அ.) 7. பூந்தாது. (உ-ம்.) "அல்லியங்குழலாடன்னை" (அரிச்சந். விவாக. உரு.) 8. வெள்ளாம்பற்செடி. (கா. வைத்.)

அல்லிகம்—பேய்க் கொம்மட்டிக் கொடி. (கா. வைத்.)

அல்லிப்பிஞ்சு—பூவிழாதபிஞ்சு. (உவின். சச.)

அல்லிமூலகம்—அல்லிக்கிழங்கு. (உ-ம்.) "பூதவக்குருக்கண்மநகை பொன்றிடாவல்லிநெய்த- லல்லிமூலசருநீர்வள்ளியாமதிக்கலை யொவ்வொன்றில்" (தைல. தைலவ. கூச.)

அல்லியந்தோகுதி—விட்டுணுவின் கூத்துக்களுளொன்று; அது: மாதுலனாகிய கஞ்சன்அனுப்பிய யானையின் கொம்பினை முரித்தற்காடியது. (உ-ம்.) "கஞ்சன் வஞ்சங்கடத்தற்காக-வஞ்சநவண்ணனாடியவாடலுளல்லியத்தொகுதியும்" (சிலப். கடலாடு. சஅ.) [முசம், மார்பு, கைகால்களின் வட்டணை, அபிநயமுதலியன இருந்துந் தொழில்செய்யாது நிற்றலின் றொகுதியென்றார்]

அல்லியம்—1. அவலட்சணம். (ஆப். கூஅகூ.) 2. இடையரூர். (உவின். சச.) 3. உழக்கூடியது. (ஆப். கூஅகூ.) 4. உழுதல். (உவில். கூகூகூ.) 5. கொட்டிப்பூண்டு. (சா. வைத்.) 6. விட்டுணுவின் கூத்துளொன்று; அது: மாதுலனாகியகஞ்சன்அனுப்பியயானையின் கொம்புமுரித்தற்காடியது. (உ-ம்) "அல்லிய மாயவனாடிற்றதற் குறுப்புச்-சொலலுபவாறுமெனல்" (சிலப். கடலாடு- சஅ. உரை.) [1, 3, 4. ஹ்ரு.]

அல்லியன்—தன் குழுவைப் பிரிந்த யானை. (உவின். சச; றெற்) [ஹ்ரு. இஃதலியனெனவும் வழங்கப்படும்.]

அல்லியாமரம்—படவுவலிக்குந் தண்டு. (உவின். சச)

அல்லியான்—பிரமா. (உ-ம்.) 'அல்லியானரவைந்தணைநாகப்பள்ளியான்" (தேவார. திருக். க. திருநாவு.)

அல்லியை—சலப்பைக்கூட்டம் (உவில். கூகூகூ.) [ஹ்ரு.]

அல்லு—1. இருள். (உ-ம்.) "அந்திவானுடுத்தல்லு வீற்றிருந்ததாமென்ன" (இராமா. பிணிவீட். சரு.) 2. முடைதல். (உவின். சச.) [தெலுங்கு.]

அல்லுழி—அல்லாவிடத்து. (சி. சி. கூ: அ. சிவஞா.)

அல்லூரம்—வில்வமரம். (கா. வைத்.)

அல்லேம்—அன்மைப்பொருளில் தன்மைப்பன்மையில் அல்லது ஒருமைச்சிறப்பில்வரும் ஒரு குறிப்புவினைமுற்று. (உ-ம்) "நின்பாற்காய்சினங்கொண்டேமல்லேம்" (கந்தபு. காவிரிநீ. ருo.)

அல்லேன்—அன்மைப்பொருளுடைத்தாய்த் தன்மையொருமையில் வரும் ஒரு குறிப்புவினைமுற்று. (உ-ம்.) "கண்டவிவையல்லேனான்" (சி. சி. கூ: எ.)

அல்லை—1. அல்லாயெனப்பொருள்படும் ஒருமுன்னிலை யொருமைக் குறிப்புவினைமுற்று. (உ-ம்.) "காதரமார்தருமநமே கமலமலரயனல்லை" (சோயிற்பு. பாயிர. உரு.) 2. உணவுக்குரிய ஒருவகைக் கிழங்கை விளைக்கும் ஒருகொடி. (உவின். சச.) 3. தாய். (சி.) [அஹ்ரா. நாடகவழக்கில் வந்தது.]

அல்லோர்—1. தாழ்ந்தோர். (உ-ம்.) "ஆரணங் குயர்ந்தோரல்லோர்புள்ளிலங்கு" (நம்பியக. அகத்திணை. சரு.) 2. தீயவர். (உ-ம்.) "நல்லோர் வரவானகைமுகங்கொண்டின்புறீஇயல்லோர்வரவானமுங்குவார்" (நன்னெறி.) 3. முன்சொல்லப்பட்டவர்க்கு மாறுகொண்டவர். (உ-ம்) "அன்புளோரல்லோராயவரசமண்டலங்களெல்லாம்". (இரகு. மாலை. சஉஅ.)

அல்லோன்—1. சந்திரன். (சூ. நிகண். க: ருகூ.) [அல்-இரா. இரவுக்குடையவனென்றபடி.] 2. தீயவன். (   ) 3. முன்சொல்லப்படாதோன். (மா.)

அல்வழி—1. அல்லாதவழி. 2. (இலக்கணம்.) ஐ முதலிய வேற்றுமைப்பொருளில் வாராத நிலைமொழியை மற்றொருமொழிதொடருஞ்சந்தி. அச்சந்தி வினைத்தொகை, பண்புத்தொகை, உவமத்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித்தொகை, எழுவாய்த்தொடர், விளித்தொடர், பெயரெச்சத்தொடர், வினையெச்சத்தொடர், தெரிநிலைவினைமுற்றுத்தொடர், குறி

ப்புவினைமுற்றுத் தொடர், இடைச்சொற்றொடர், உரிச்சொற்றொடர், அடுக்குத்தொடர் எனப் பதினான்கு வகைப்படும். (உ-ம்.) "அவ்வழி- தொழில்பண் புவமை யும்மை யன்மொழி- எழுவாய்விளியீரெச்சமுற் றிடையுரி-தழுவு தொடரடுக்கெனவீரேழே" (நன். உயிரீ, உ.)

அல — 1. அல்ல என்னுங் குறிப்புவினை லகாரங்கெட்டு நின்ற ஒரு விகாரமொழி. 2–3. அலவென்னேவலுந் தெரிநிலைவினைப்பகுதியும்.

அலக்கண்—துன்பம். (உ-ம்.) "ஆதலாலெங்களலக்கணகற்றிடுவான்" (கந்தபு. தேவர்புல. உச.)

அலக்கணம் — 1. அதிட்டக்குறிகளின்மை. (ஆப். அசு.) 2. அதிட்டமின்மை. (ஆப். அசு.) 3. அதிவியாத்தியவ்வியாத்தி முதலிய தோஷங்களை விலக்கிச் சொல்லப்படாத அர்த்தவசனம். (ஆப். அசு.) 4. இலக்கணமின்மை, குறிகளின்மை. (ஆப். அசு.) [அ; லக்ஷண—இலக்கணம்.]

அலக்கிரம்— இலக்கிரமல்லாதது, துட்டலக்கிரம். (வாச.) [அலநூ.]

அலக்கியம்—1. அற்பகாரியம், தோற்றத்திற்சிறியது. (ஆப். அசு.) 2. அறியப்படாதது. (ஆப். அசு.) 3. இலக்கியமல்லாதது. (தர்க்க. பிரத்தியக்க நிரூபணம். ருரு) ["ஈண்டுச்சீவப்பிரத்தியக்கமே யிலக்கியமாகலானும் ஆண்டை ஈசுரப்பிரத்தியக்கமலக்கியமாகலானுமென்க"] 4. காணப்படாதது. (ஆப். அசு.) 5. விசேடக்குறிகளல்லாதது. (ஆப். அசு.) [அலக்ஷ்ய.]

அலக்கு — 1. மரத்தின்கிளை. (உ-ம்.) "கழைகளான செல்லினாலலக்குங்காலு நிரப்பினான்" (இராமா. ஒற்று. கஎ.) 2. வரிச்சுக்கொம்பு. (உ - ம்.) "அந்தமின்மனையினீடுமலககிளையறுத்துவீழ்த்தார்" (பெரியபு. இளையா. சகூ.)

அலக்கைச்சூரம்— கீழ்க்காய்நெல்லி. (கா. வைத்.)

அலகம்—1. யானைத்திப்பிலிப்பூண்டு. (கா. வைத்.) 2. வேப்பலகு. (கா. வைத்.)

அலகரி — பெரிய அலை. (உவில். எசாகூ.) [லஹரீ-அலை. சம்ஸ்கிருதத்தில் லகரமுதன்மொழியாயிருக்கு மொன்று தமிழில் வரும்போது அகரம் பெற்று வரவிதியில்லையாயினும் இது அகரம்பெறறதாயிருக்கிறது. நாம் இலக்கியங்களில் வந்ததாகக்கண்டதில்லை. உவின்சிலோ கண்டதாகக் குறித்திருக்கிறார்.]

அலகிடல்—1. அலகுவைத்துக் கணக்கிடல். (உவின். சo.) 2. (யாப்பில) செய்யுளிலே சந்தம்வழுவாதமைத்தற்பொருட்டு அசைகளைக்கணக்கிடுதல். (உ-ம்.) "ஓசையே குறிக்கொண்டொடுங்கவும் விரியவுமலகிடல்" (இலக்கணவி. எருஉ.) 3. துடைப்பத்தால் இடத்தை விளக்கல். (உ-ம்) "மேவுமாலயமலகிடன்மெழுகல்" (திருவாதவூர. திருப்பெ. கூகூ.)

அலகிடுதல் — அலகிடல். (உ-ம்.) "யாமருவுந்திருக்கோயிலலகிடுதல்" (காஞ்சிபு. தழுவ. ருரு.)

அலகின்மாறு — விளக்குமாறு. (உ-ம்.) "அலகின்மாறுமாறுதகலதி" (திருப்பு. கூஅக.)

அலகு—(யாப்பில) 1. அசையுறுப்பாக எண்ணப்படுதல். (உ-ம்.) "ஆருமறிவ ரலகுபெறுமை" (யா - காரிகை. ஒழி. ச.) 2. ஆயுதம். (சூ. நிகண். கக: சகூஅ.) 3. இலது அல்லாதது, கநத்தது. (உவில். எரு.) [அலவா: அ; லவா—இலகு.] 4. எண். (உ-ம்.) "அலகில் பல்வளஞ் சேர்த்தியவாவணம்" (நைடத. நகர. கூo.) 5. கதுப்பு, கொடிறு. (உவின். சo.) (உ-ம்.) "அரணை யலகுதிறக்கிறதில்லை" 6. கூர்மை. (உ - ம்.) "அலகம்பனகண்" (வாண. உகூச.) 7. கொதுகு (பிங்க. உகூகo.) 8. சலாக்கு. (தைல) 9. சோதிடகாரியம். (உ-ம்.) "அலகுசொல்லாந்தை" (கந்தபு. நகர. சரு) 10. நுளம்பு. (பிங்க. கூoகூக.) 11. நெய்வோர் பாவோட்டற்கு நிரையாக நாட்டுந்தடி. (உவின். சo.) 12. நெல். (உ-ம்.) "அலகுடை நீழலவர்" (வள். கoகூச.) [அலகு—கதிர். அஃதாகுபெயராய் நென்மேலதாயிற்று.] 13. நெற்கதிர் முதலியகதிர். (உவின். சo.) 14. பலகறை. (உ - ம்.) "அலகையன்னவெள்வேர்ட்பீலி" (மலைபடு. உகூச.) 15. பறவை மூக்கு. (உ-ம். "குயிலலகாற்பல்லவங்கள் கோதுமாலோ" (பாரத. காண்ட. உ.) 16. பிடியிற்செறிந்த ஆயுதங்களிற் பிடியொழிந்த பாகம். (உவின். சo.) 17. பொன்னாங்காணி. (இராசவைத்.) 18. மகிழம்விதை. (சூ. நிகண். கூ: கூச.) 19. மின்மினி. (உவின். சo.) 20. விசாலம். (உவின். சo.) 21. விளக்குமாறு. (உ-ம்.) "செருப்படியுநாயடியுந் திருவலகான் மாற்றிய பின்" (பெரியபு. கண்ணப். சகூஅ.)

அலகுகட்டல்—1. கணக்குப்பார்த்துத் தீர்த்தல். (உவின். சo.) 2. (மந்திரோச்சாரணத்தினால்) ஆயுதங்கள் வெட்டல் முதலியதொழில்செய்யாது தடுத்தல். (உவின். சo.) 3. (மந்திரோச்சாரணத்தால்) பாம்பு, நாய் முதலியவற்றின் வாய்கட்டல். (உவின். சo.)

அலகுகிட்டுகை—திறக்கப்பட இயலாமல் மேல்வாயலகுங் கீழ்வாயலகும் நெருங்கி நிற்கை. (உவின். சo.)

அலகுகூடை—வளாரினாற் செய்யப்பட்ட நீரிறைக்குங் கூடை. (உவின். சo.)

அலகுசோலி — அறுகம்புல்லு. (கா. வைத்.)

அலகுஞ்சம்—1. நுளம்பு. (செ) 2. மி

ன்மினி. (உவின். சக.)

அலகுநிலை — கூட்டல், பெருக்கல் முதலியவற்றான் வரும்பேறு. (உவின். சo.)

அலகுநிறுத்தல் — திரௌபதியம்மை கோவிலிலே உற்சவத்திற்குமுன்னே வாள் நாட்டிக் காப்புக்கட்டிச் செய்யும் ஒரு கிரியை. (உவின். சக.)

அலகுபருப்பு — பட்டாணிப்பயறு. (உவின். சக.)

அலகுபனை — 1. ஆண்பனை. (மா) 2. ஒருவகைப்பனை. (உவின். சக.) [அது நீண்டதட்டையோலையுள்ளது.]

அலகுபாக்கு — வெந்நீரில்அவித்து நீறமூட்டப்பட்ட பாக்குச்சீவல். (உவின். சக.)

அலகுபோடல் — நாக்கிலே யிரும்புமுதலியவற்றாலாய கம்பி குத்திக்கொண்டு சுவாமிக்குமுன் ஆடுதல். (உவின். சக.)

அலகுவிறைப்பு — குளிர்பிடித்து வாய்கிட்டுதல். (உவின். சக.)

அலகை — 1. காட்டுக்கற்றாழை. (உவின். சக.) 2. பிசாசம். (உ-ம்.) "தற்பரவடிகளுணைத்தன்மையாலலகையீட்டம்" (கந்தபு. மேரு. உக.) 3. பேய்க்கும்மட்டிக்கொடி. (கா. வைத்.)

அலகைக்கோடியாள் — காளியம்மை. (பிங்க. கசகூ.) [பேய்வடி வமைக்கப்பட்ட கொடியினையுடையாள்.]

அலகைக்கோடியுயர்த்தாள் — காளியம்மை. (சூ. நிகண். க: ௩௬.) [பேய்வடிவ மமைக்கப்பட்ட கொடிதூக்கினவள்.]

அலகைத்தேர் — 1. கானலாகிய பேய்த்தேர்போலும் அசத்தியம். (உ-ம்.) "உலகமெலாமலகைத்தேரா மென" (சி. சி. கூ: க.) 2. பேய்த்தேர்.

அலகைழலையுண்டோன் — கிருஷ்ணன். (பிங்க. கஉo.) [பூதனையென்னும் பேயின் முலைப்பாலுண்டவனைக்கொன்றவனென்றபடி.]

அலகைழலையோடாவி யருந்தினோன் — கிருஷ்ணன். (சூ. நிகண். க: கரு.) [மாமனாகிய கஞ்சன் மாதாவடிவங்கொண்டுசென்று முலைப்பாலூட்டித் தன்னைக்கொல்லும்படியனுப்பிய பூதனையென்னும் பிசாசின்முலைப்பாலருந்துவார்போன்றுயிரையுமுண்டாரென்பது பாரதகதை.]

அலங்க்ருதம் — அலங்கிருதம். (உ-ம்.) "அலங்க்ருதமணிமவுலியானவொருபதும்" (திருப்பு. உoசு.)

அலங்கடை — அல்லாவிடம். (உ-ம்.) "மூன்றலங்கடையே" (தொல். எழுத்தி. க.) [அல்—அல்லாத. அம்—ஒருசாரியை. கடை—இடம்.]

அலங்கம் — 1. அரண். (உ-ம்.) "தெண்டிரையலங்கத்துப்புக்குலவி" (திருப்பு. சகஎ.) 2. கொத்தளம். (உவின். சக.) 3. மதிலினுருறுப்பு. (உவின். சக.)
[அல்—மதில். அங்கம். உறுப்பு.]

அலங்கரணம் — அலங்கரித்தல். (உவில். எடு.) [அலம்—அணி. கரண—செய்தல்.]

அலங்கரி-1-3அலங்காரியென்னேவலுந் தெரிநிலைவினைப்பகுதியும் பெயரெச்சத்தொகையும்.

அலங்கரித்தல் — அலங்காரஞ்செய்தல். (உ-ம்.) "நாயசனுந்திருமேனிநலங்கிளரவலங்கரித்தான்" (கோயிற்பு. பதஞ். சo.)

அலங்கரிப்பு — அலங்கரித்தல். (மா)

அலங்கல் — 1. அசைதல். (உ-ம்.) "அலங்குளைப்புரவியைவரொடுசினைஇ" (புறநா. உ.) "அலங்குநீர்வெள்ளந் தள்ளியழிதரவங்குமிங்கும்" (இராமா. குகப். ருறு) 2. இரக்கம். (பிங்க. ௬oகூஉ.) இரங்குதல். (உவின். சக.) 3. ஒளிசெய்தல். (உ-ம்.) "அலங்குவெண்மதியைப்பசியடைய" (சிந்தா. கக, உகச.) 4. தளிர். (சூ. நிகண். ௬: சஎ.) 5. தாழை. (இராசவைத்.) 6. பூமாலை. (உ-ம்.) "நறைவிரிபலங்ன்மார்பிற்றிளைத்தலின்" (நைடத. அன்னத்தைக்கண். கஎ.) 7. மாங்கலங்கல். (உவின். சக.)

அலங்கனரி — முத்துச்சிப்பி. (உவின். சக.) [அலங்கல்—ஒளி. நாரி—பெண்.]

அலங்காரத்திருவிழா — துவசாரோகணம் யாகமுதலியன இன்றிச்செய்யப்படுந்திருவிழா. (மா.)

அலங்காரநைவேத்தியம் — சுவாமி முன்னிலையிலே வெளியிற்செய்யும் நைவேத்தியம். (மா.)

அலங்காரப்படுத்தல் — அலங்காரஞ் செய்தல். (உவின். சக.)

அலங்காரப்பிரியன் — விட்டுணு. (உவின். சக; நீதிசார.) [அலங்காரத்திற் பிரியமுள்ளவனென்றபடி.]

அலங்காரபஞ்சகம் — தொண்ணூற்றாறு பிரபந்தங்களிலொன்று; அது: வெண்பாவும், கலித்துறையும், அகவலும், ஆசிரியவிருத்தமும், சந்தவிருத்தமுமுறையே மாறிமாறி நூறுசெய்யுள் அந்தாதியாகவரப் பாடப்படுவது. (உ-ம்.) "வெள்ளைகலித்துறையகவல் விருத்தம்—எள்ளலில்வண்ணமிவையோரைந்தும்—அலங்காரபஞ்சகமாகுமென்ப" (இலக்கணவி. அசச.)

அலங்காரம் — 1. அழகு. (உ-ம்.) "அலங்காரநிகழரங்கு" (சேர்தினிரோட். ச.) 2. ஆபரணம். (உ-ம்.) "பாம்பலங்காரப்பரன்" (திருக்கோ. கக.) 3. உடை, உத்தரீயம், ஆபரணம் முதலிய அணிகளாற் சிறப்பித்தல். (உவில். எடு.) 4. சிங்காரம். (பிங்க. கஉருரு.) 5. பஞ்சலக்கணத்துளொன்று; அது: சொற்சுவை, பொருட்சுவைகளோடு வாக்கியம் எழுதும் முறையைக் கூறுவது. (உவில். எடு.) [இதனை அறுபத்துநான்கு கலைஞான

ங்களுளொன் றென்பர்.] 6. வாசகச் சுவை. (மா.) [அலம்-அணி. காரம்-செய்தல்.]

அலங்காரித்தல்—அலங்கரித்தல். (உ-ம்) "அயலலங்காரித்து" (தணிகை. அகத். ௧௯௬.)

அலங்கியம்— கடத்தற்கரியது. (உவில். எ௫.) [அலங்வ்யு: அ;லங்வ்யு-கடக்கத்தக்கது.]

அலங்கிருதம்---அலங்கரிக்கப்பட்டது. (உவில். எ௫. [அலங்க்ருதம்:அலம்-அணி. க்ருதம்-செய்யப்பட்டது.]

அலங்கிருதி— அலங்காரம். (மா.) [அலம்-அணி. க்ருதி-செய்யப்பட்டது]

அலங்கு— 1-3. அலங்கென்னேவலுந் தெரிநிலைவினைப்பகுதியும் பெயரெச்சத்தொகையும். 4. அலங்குதல். [ஒருமுதனிலைத் தொழிற்பெயர்.] (உ-ம்.) "முடக்குலையலங்குறுமுதியபூநுதல்" (கந்தபு. மார்க்க. அ௫.)

அலங்குதல் — 1. அசைதல், அலைதல். 2. இரங்குதல். (உவின். ௬௧.) 3. ஒளிசெய்தல். (உ-ம்.) "நிகரிலாதாம்-மறையருளாலடைந்தலங்குமுத்தியில்" (சூத. முத். அ: அ௯.)

அலங்கை—துளசிப்பூண்டு. (கா. வைத்.)

அலங்கோலம்—1. கிரமமின்மை. (உவின். ௬௧) 2. கோலக்கேடு. (உவின். ௬௧.) [அல்; அம்; கோலம்.]

அலச்சை— இலச்சையின்மை. (உவில். எ௫.) [அலஜ்ஜா; அ; லஜ்ஜா-நாணம்.]

அலசகம்—1. சோம்பு. (உவில். எ௬) 2. வாயுப்பொருமல். (உவில். எ௬.)

அலசதுட்டம்—ஒருவகைக் குட்டரோகம்; அது: இரத்தநிறமாக ஆற்றிற் கிடைக்குஞ் சிறு சிறு கூழாங்கல்லுகளையொத்த கொப்புளங்கள் பிறந்து உடைந்து இரணங்களாக வருவது. (சீவரட். ௧௪௧.)

அலசத்துவம்—சோம்புத்தன்மை. (உவில். எ௬) [அலஸத்வம்: அலஸ-சோம்பு. த்வம்-தன்மை.]

அலசம்—1. ஒருமரம். (உவில். எ௬.) 2. சோம்பு. (உவில. எ௬.) 3. பொத்தைக்கால், யானைக்காலுேய். (உவில்.எ௬.) 4. மந்தம. (உ-ம்.) "சர்த்திதலேரோயலசம்" (தைல.தைலவ. அ.) [அலஸ.]

அலசரோகம்—மந்தத்தினால்வரும் ஒருவகைக் கொடிய ரோகம். (சீவரட். அஎ.) [அலஸ-மந்தம்.]

அலசல் — I. அநுகூலமாகாதவேலை. (உவின். ௬௧.) 2. அலைவு. (மா.) 3. இழை யைதான வத்திரம். (உவின். ௬௧.) 4. கழுவுதல். (மா.) 5. சிந்துண்டுகிடப்பது. (உவின். ௬௧) 6. சோம்பல். (மா.) 7. சோர்வு. (உ-ம்.) "அவன்செயத் திருவுடம்பலச நோற்கின்ருன்" (இராமா. சூர்ப்பநகி. ௧அ.)

அலசவிரணரோகம்—விரணபேதங்களுளொன்று; அது: அழுகற்சேறு முதலியவற்றைப் பலதரம் மிதித்தலினாலே பாதங்களினேரங்களிலும் உள்ளங்கால்களிலும், விரற்சந்துக்களிலுந் தினவோடுண்டாகும் வெளிறினபுண். (சீவரட். ௬௨உ.)

அலசி—1. ஒருவகைநத்தை. (உவின். ௬௧) 2.மேகவிரணம். (சீவரட். ௬௧௫) 3. வீக்கத்தையுடையது. (சீவரட். உ௫௫.) [3. அலஜி.]

அலசிரோகம்—1. ஒருவகைக் குய்யரோகம்; அது: ஆண்குறியினின்றும் மேகத்தைவிழச்செய்து, விரணத்தையுண்டாக்குவது. (சீவரட். ௬௧௫.) [அலஜி-மேகவிரணம்.] 2. வெள்விழிக்கும் இமைச் சந்திக்கும் இடையில் வரும் ஒருவகை ரோகம்; அது: கருவிழிக்குள் வீக்கத்தைப்பிறப்பிக்கும். (சீவரட். உ௪அ.) [அலஜி.]

அலசிவர்த்தமரோகம்—இமைகளில் வரும் ஒருவகைரோகம்; அது: கருவிழிக்குவெளியிற் சிவந்த கட்டிகளைப் பிறப்பித்து ஓயாத பீளையைத் தருவது. (சீவரட். உ௪௫.) [அலஜி-வீக்கத்தையுடையது.வர்த்தம-இமை]

அலசு—1—3. அலசென்னேவலுந்தெரிநிலைவினைப்பகுதியும் பெயரெச்சத்தொகையும். 4. வருந்துதல். [இது ஒருமுதனிலைத் தொழிற்பெயர்.] (உ-ம்.) "ஐந்தின்மேனியலசுற யான்றவஞ்-செய்தது" (கந்தபு. மாயைப்.எ௧.)

அலசுதல்—1. சோம்பல். (பிங்க) 2. கழுவுதல். (உவின். ௬௧.) 3. தளர்தல். (மா.) வருந்துதல்.

அலஞ்சரம்— நீர்விட்டுவைக்கும் மட்சாடி. (உவில். எ௫.) [அலஞ்ஜர.]

அலட்சிதம்—அறியப்படாதது, காணப்படாதது. (வாச.) [அலக்ஷித:]

அலட்சியம்—அலக்ஷியம். (உவின். ௬௧) அற்பகாரியம். (உ-ம்.) "அச்சிறியவனுக்காக இப்பெரியமந்திரமநுசிதமென்பான், மந்திரம்வேண்டுமோமற்றிதற்குமே என்றலட்சியமாகக் கூறினான்" (கந்தபு. சூரனமைச். ௫௫. உரை.) [அலக்ஷ்ய.]

அலட்டல்—அலட்டுதல்.

அலட்டி — அலட்டுகிறவன். (உவின். ௬௧.)

அலட்டு— 1-3. அலட்டென்னேவலுந் தெரிநிலைவினைப்பகுதியும் பெயரெச்சத்தொகையும். 4. அலட்டுதல். (உ-ம்.) "யோக்கியர்தம்மைத்தேடியீந்திடாதொருவன்கூறும்--வாக்கியத்தலட்டுக்கீதல்" (மச்சபு. பத்திமான். உஉ.) 5. பிதற்றுகை. (உவின். ௬௧.)

அலட்டுகை—அலட்டுதல். (உவின். ௬௧)

அலட்டுச்சந்நி-பிதற்றுங் குணமுடைய சந்நிநோய். (உவின். சக.)

அலட்டுதல் — 1. பிதற்றுதல். (உவின். சக.) 2. வீண்வார்த்தைகளை மேலும் மேலும் பேசுதல். (உவின். சக.)

அலத்தகம் — செம்பஞ்சுக் குழம்பு. (உ-ம்.) "அங்கலார்தமலத்தகமலர்த்தாணீவி" (நைடத. நாட்டு. உரு.) [அலக்தக.]

அலத்தம் — செம்பஞ்சுக்குழம்பு. (ஆப். அரு.) 2. செம்பருத்திப்பூண்டு. (கா. வைத்.)
[அலக்த.]

அலத்தல் — 1. அலைதல். (உ-ம்.) "ஐவர்வந்துமுறைமுறை துயரஞ்செய்ய-வற்றுநானலந்துபோனேன்" (தேவார. திருவாரூ. அ. திருநாவு.) 2. அழுதல். (உ-ம்.) "தாலலத்திமகிழுமது போல்" (ஒழிவி. அருளவ. அ.) 3. ஆசைப்படுதல். (மா.) 4. துன்பமுறுதல். (உ-ம்) "அலந்திலர்செருக்களத்தஞ்சினாரலர்" (இராமா. கிங்கர. ருஅ) 5. வறுமைப்படல். (உ-ம்.) "அலத்தற்காலையாயினும்" (புறநா. சOரு.)

அலத்தி — துளம்பு. (மா.) மின்மினி. (உவின். சO.)

அலத்துவம் — மிக்கதன்மை. (அகராதிகாரர் அலைத்துவமென்பர்.) [அலம்-மிகுதி.(ஆப். அஎ) த்வம்-தன்மை]

அலத்தோன் — பலபத்திரன். (பாகவத. வசு. கரு.) [ஹலம்-கலப்பை.]

அலதான் — 1. உழவுகாரன். (ஆப் கூஅக) 2. பலராமன். (உவில். கூகூசு) [ஹலயுர:ஹலம்—கலப்பை. யுர—தரித்தவன்.]

அலது — அல்லதென்பதில் லகரந்தொக்க ஒருவிகாரமொழி. (உ-ம்.) "பூதங்கள் பேய்க்கோலமாய் விதண்டை பேசுமோ வலதுதான் பரிபாககாலம் பிறக்கவில்லையோ" (தாயு. எங்கு. எ.) சிவனலதறியேனுஇல்(சி. சி. பர. பாஞ்ச. மறு. உக.) "ஆக்குமறிவானல அபிறப்பினான் —மீக்கொளுயர்விழிபு வேண்டற்க" (நன்னெறி.)

அலந்தம் — மெய்யீறு. (உ-ம்.) "ஆயுமலந்தமசந்தமலாதியசாதியிவை —மாயுமெய்யீறயிரீறுயிராதி மதிநுதலாய்" (பி. வி. சரு.) [ஹல்-மெய்யெழுத்து. அந்தம்.]

அலந்தல் — செங்கத்தாரிப்பூண்டு. (கா. வைத்.)

அலந்தலை — 1. துன்பம். (உ-ம்.) "அலந்தலைப்பட்ட சிந்தையனாகி" (உபதேச. சநகாதி. உரு.) 2. மயக்கம். (உ-ம்.) "அலந்தலையுற்றவரும்புலன்களைந்தும்" (இராமா. கைகேசிசூழ். கரு.)

அலந்தவர் — 1. துன்பமுற்றவர். (   ) 2. வறுமையுற்றவர். (உ-ம்.) "ஆற்றுதலென்பதொன் றலந்தவர்க்குதவுதல்" (கலித்தொகை. ககூரு)

அலந்தார் — 1. துன்பமுற்றவர். (உ-ம்.) "அலந்தாரையல்லனோய்செய்தற்றூல்" (வள். கருOரு.) 2. வறுமையுற்றவர். (உ-ம்.) "அலந்தார்க்கொன்றீந்தபுகழும்" (திரிகடு. சக.)

அலந்தை — 1. குளம். (உ-ம்.) "இருடர்மலயமுனியலந்தையிராமனிலஞ்சியிலக்குமன்பேர்ப்— பொருவிலோடை" (சேதுபு. சேதுவந்த. சச.) துன்பம். (உவின். சஉ.)

அலந்தோர் — 1. துன்பமுற்றவர். (உ-ம்.) "அலந்தோர்க்களிக்கும்பொலம்பூட்சேஎய்" (திருமுருகாற்று.உஎக.) 2. வறுமையுற்றவர்.

அலப்படை — கலப்பைப்படை. (உ-ம்.) "அலப்படையண்ணலாம்பலபத்திரவாண்டகை" (காஞ்சிபு. பலபத். உ.)

அலப்படைகொண்டோன் — பலராமன். (சூ. நிகண். க: சக.)

அலப்பல் — அலப்புதல், உழறுதல். (பிங்க. உககஅ.)

அலப்பன் — வீண்பேச்சுக்காரன். (உவின். சஉ.)

அலப்பாரித்தல் — வீண்பேச்சுப்பேசியாரவாரித்தல். (மா.)

அலப்பியம் — அடையக்கூடாதது. (உவில். எரு.) [அலப்ய: அ; லப்ய-அடையத்தக்கது.]

அலப்பிருந்து — 1. உழுகிறவன். (ஆப். கூஅக.) 2. பலராமன். (உவில். கூகூசு.)
[ஹலப்ருத்: ஹல-கலப்பை. ப்ருத்-தரித்தவன்.]

அலப்பு — 1-3. அலப்பென்னேவலுந் தெரிநிலைவினைப்பகுதியும் பெயரெச்சத்தொகையும்.

அலப்புதல் — வீண்பேச்சுப்பேசுதல். (மா.)

அலபதுமம் — நிருத்தக்கைமுப்பதனுளொன்று. (சுத்தாநந்தப்பிரகாசிகை. சிலப். அரங்கேற்று. கஉ.)

அலம் — 1. அடைதல். (வாச.) 2. அணி, பூடணம். (உவில். எரு.) 3. அமையுமெனல், போதுமெனல், வேறுவேண்டாமெனல். (உ-ம்.) "அல்லற்பிறவி யலமலம் விண்ணுடுறைந்து — தொல்லைத் திருநகருந் துன்புமலமலமால்" (கந்தபு. சயந்தன். எஎ.) 4. அமைவு. (உ-ம்.) "அலந்துமறிவான்மூத்தோ ரனைவருமிசைய" (திருவிளை. மாமனு. சஉ.) 5. அலமரல். (உ-ம்.) "சித்தமலமில்லை" (சி. சி. அ: ருஉ. சிவாக்.) 6. கலப்பை. (உ-ம்.) "சிலையலங்கணிச்சிவெண்ணெய்தெவ்வி" (தணிகை. நாட். உக.) 7. சஞ்சலம். (உ-ம்.) "அலமகன்முத்தியுண்டாம்" (சூத. எக்கி. பூ. உ: அ.) 8. சாமர்த்தியம். (உவில். எரு.) 9. தேள். (திவாகர.) 10.

தேளின்வாலிற் கொடுக்கு. (உவில். எசு.) 11. பொன்னரிதாரம். (ஆப். அசு.) 12. மிகுதி. (உ-ம்.) "ஆசலம் புரியையம்பொறிவாளியும்" (இராமா. ஆற்று. க.) 13. முழுதும். (உ-ம்.) "புலன்களிற்பழகிச் சித்தம்பூண்ட வாதனைகண்முன்னே- யலம்பெறமா ற்றி" (ஞானவா. கசன். ௬௦.) 14. விருச்சிகராசி. (உவின். சஉ.) [1, 2, 3, 4, 8,10, 11, 12, 13. அலம்; 6. ஹலம்.]

அலம்பசன்—ஓரரக்கன். (பாரத. எட்டாம். உக.) இவன் துரியோதனனுக்காகப்போர்க்கு வந்தவன்.

அலம்பல்—1. அலக்குத்தடி. (உவின். சஉ.) 2. ஆரவாரித்தல். (உ-ம்) "மாடலம்பினமாமணித்தேர்மணி - பாடலம்பினபாய்மதயானையே" (இராமா. மூதற்போர். கஎ.) 3. கழுவுதல். (உவின். சஉ) 4. ததும்பல். (உவின். சஉ.) 5. தவறல். (உவின். சஉ.) 6. தொந்தரவு. (உவின். சஉ.) 7. பிரயாசம். (உவின். சஉ.) 8. வீண்பேச்சு. (செ.) [வழக்.]

அலம்பிறத்தல் — திருத்திபிறத்தல். (உ-ம்.) "அந்தர்யசாத்திலேமாதலம்பிறவாமல்" (சி. சி. கூ: கக. சிவாக்.)

அலம்பு—1-3. அலம்பென்னேவலுந் தெரிநிலைவினைப்பகுதியும் பெயரெச்சத்தொகையும். (உ-ம்.) "மாடலம்பு கோதையார்" (திருவிளை. வளை.கூசு.) [பெ-கை.] 4. தசநாடியிலொன்று. (சிலப். அரங்கே. உகூ. உரை.)

அலம்புசை — அப்சரஸ்திரிகளுளொருத்தி. (உ-ம்) "அவர்தமிற்சிலர்நடித்தபினலம்புசைநாமத் - துவரிதழ்க் கொடியாடினள்" (சேதுபு. விதூம. ௬சு.) [அலம்பு௸ஷா. இங்கே ஷகாரஞ் சகாரமாயிற்று. உவில். எடு] பத்து நாடிகளிலொன்று. அது மூலாதாரந் தொடங்கி யிடதுகாதளவுநிற்பது. (வேதா. தத். டுஎ.)

அலம்புடம்—1. வாந்திசெய்தல். (உவில். எடு.) 2. விரல்கள்விரித்த உள்ளங்கை. (உவில். எடு.) [அலம்பு௸ஷ.]

அலம்புடை — (தசகாரியம்.) அலம்புசை; இது: தசநாடிகளிலொன்று. மூலாதாரந்தொடங்கி யிடதுகாதளவாய் நிற்பது. (வேதா. தத். டுஎ.)

அலம்புத்தி-போதியபுத்தி. (ஆப். அஎ) [அலம்பு௸புத்தி]

அலம்புதல்—1. அதிர்தல். (உ-ம்.) "திமிர்ந்த வலம்புமோதையால்" (ஞானவா. பிரகலாத. டுடு) 2. கழுவுதல். (உ-ம்.) "வைத்தசுவாலம்பின்மண்போமோ" (தாயு. பரா. உககூ.) 3. ததும்புதல். (உ-ம்.) "கள்ளலம்புற்றதண்டார்" (கந்தபு. ஏமகூட, உஉ.)

அலம்புரிதல்—மிகச்செய்தல். (உ-ம்.) "ஆசலம்புரியையம் பொறிவாளியும்" (இராமா. ஆற்று. க.)

அலம்புருடன் — தசநாடிகளிலொன்று; இது: கண்களிலேநிற்பது. (உ-ம்.) "விண்டலம்புருடனிருகண்ணளவு மேவுங் காந்தாரியுங்காதளவாண்டையே" (ஞானவெட்டி. கருஎ.)

அலம்புநடை—அலம்புருடன். (உவின். சஉ.)

அலம்வரல் — 1. அமைவுண்டாதல். (உ-ம்.) "அலம்வரவடியேற்கருளுவாயே" (திருப்பு. டுஅசு.) 2. சுழலுதல். (உ-ம்.) "அங்குமிங்குமாகியலம்வருவோர்" (சி. சி. அ: ௬கூ.)

அலமந்த — ஒருதெரிநிலைவினைப்பெயரெச்சம். (உ-ம் "அலமரல்" 1.பார்) [இஃது "அலமரு" என்னும்பகுதியினின்று பிறந்தது.]

அலமந்து—அலமரு என்னும் பகுதியினின்றுபிறந்த ஒருதெரிநிலைவினையெச்சம். (உ-ம்.) "ஓடியலமந்து" (சோமிற்பு. இரணி. உஅ.)

அலமரல்—1. அச்சங்கொள்ளல். (உ-ம்.) "ஐமேனுந்தியலமந்தபோதாவியஞ்சேலென்றருள்செய்வான்" (திருக்கடைக்காப்பு) 2. இளைத்தல். (உ-ம். "அலமந்து" பார்.) 3. கலங்கல். (உவின். சஉ.) 4. சுழலல். (உ-ம்.) "விளரிவண்டினங்களலமருங்கழனி" (நைடத. அன்னத்தைத்து. ௬௦.) 5. துன்பமுறல். (உ-ம்.) "அருதரற்றியலமந்தாரே" (பாரத. பதினெட். கக.) 6. மாறுதடுமாறல். (தொல். சொல். ௬கக.)

அலமரு—1-3. அலமரு என்னேவலுந் தெரிநிலைவினைப்பகுதியும் பெயரெச்சத்தொகையும்.

அலமல—அலமல என்னேவலுந் தெரிநிலைவினைப்பகுதியும்.

அலமலத்தல் — 1. அங்கலாய்த்தல். (உவின். சஉ.) 2. மாங்கலங்கல். (உவின். சஉ.) [வழக்.]

அலமலாத்தல்— 1. அங்கலாய்த்தல். (மா.) 2. கலங்கல். (மா.) 3. சுழலல். (மா.) [வழக்.]

அலமாரி—1. அவாவுள்ளோன். (உவின். சஉ.) [அலவாரியென்னுஞ் சொல் இதன் அபத்தத் திரிபென்பர் உவின்சிலோ.] 2. ஒரு வகையானமரப்பேழை - அறைமாரி. [அறைமாரியென்னுஞ்சொல் அலமாரியென மருவியதென்று தைலவருக்கம், பாயிரம். கூ-ம் பாட்டுரையிற் சுப்பிரமணியபண்டிதர் கூறுகின்றார்.] "அலுமாரி பார்"

அலழகவிரும்பு— கலப்பையின் கொழு. (உ-ம்., "அலமுகவிரும்புதேய" (திருவிளை. நாட். சகூ.) [ஹல—கலப்பை.]

அலமுறல்—துன்பமடைதல். (உ-ம்) "தந்தைதாயை யிழந்தலமுறுமினென்று" (திருவிளை, பன்றிமுலை. எ.)

அலயம்—1. உற்பத்தி. (ஆப். அஎ.) 2. ஒடுங்காமை, அழியாமை. (ஆப்.

அள.) 3. நிலையுண்மை. (ஆப். அள.) [அ-எதிர்மறை. லயம்-அழிவு.]

அலயன்—1. அழிவில்லாதவன். (உவில். எசக.) [லய-அழிவு.] 2. வீடில்லாதவன். (உவில். எடு.) [அலய:: அ; லய:-வீடுடையவன்.]

அலர்—1-3. அலரென்னேவலுந் தெரிநிலைவினைப் பகுதியும் பெயரெச்சத் தொகையும். 4. நீர். (பிங்க. ருஎ.) 5. பலரறிந்து பழிதூற்றல். (உ-ம்.) "அலரெமக்கீர்ந்ததிவ்வூர்" (வள். ககசஉ.) 6. பழிச்சொல். (உ-ம்.) "அருந்தவந் தபுள்ளார்த்தலர் தூற்றுமால்" (நைடத. நகர. உக.) 7. பூமாலை. (உ-ம்.) "நீயன்றுசூட்டலர்" (வாண. உஅடு.) 8. மகிழ்ச்சி. (பிங்க. ௬௦கச.) 9. மஞ்சள். (கா. வைத்.) 10. மலர்ந்தபூ (உ-ம்.) "அலரின்வண்டளகத்தலர் பாய்வன" (தணிகை. நாட். ௬௦௬,) 11. மிளகுகொடி. (மலையக.)

அலர்க்கம்—1. ஒருவகைக்கிருமி. (வாச.) 2. விசர்நாய். (ஆப். அள.) 3. வெள்ளெருக்கு. (ஆப். அள.) [அல்ர்கம்.]

அலர்கதிர்—பரந்தகிரணத்தையுடைய சூரியன். (உ-ம்.) "அம்பொன்மால்வரையலர்கதிருச்சி சென்றணுக" (இராமா. சித்திர. உ௬.)

அலர்ச்சி—அலர்தல். (மா.)

அலர்த்தல்—1. மலரச்செய்தல். (உ-ம்.) "பருதியலர்த்திடுவதுபோல்" (சிசி. கக: அ.) 2. விரித்தல். (உ-ம்.) "கரகமலப்போதலர்த்தித்தாங்கினுன்" (திருவிளை. வெள்ளையா. ௬.)

அலர்த்தீ—அலர்ச்சி. (சி.)

அலர்தல்—1. பரத்தல். (உ-ம்.) "அலர்தலைமாநிலம்புரக்கும்" (நைடத. சிறப்புப்பாயிர. க.) 2. பருத்தல். (உ-ம்.) கனஞ்சேர்தலர்ந்துளி காலுமுன்னே" (வாண. உ௬௬.) 3. மலர்தல். (உ-ம்.) "தாமரையலர்ந்தபூந்தடம்" (நல். பாரத. நகர. உச.)

அலர்ந்தபூ—1. சொத்தான்செடி. (மா) 2. மலர்ந்தபூ. (மா.)

அலர்ந்திடுதல்—மலர்தல். (உ-ம்.) "ஏழ்பரித்தேரவற்காணி னலர்ந்திடுதெலியல்பன்றே" (நைடத. அன்னத்தைத்தூ. ௬௦௦.)

அலர்மகள்—1. இலக்குமி. (உ-ம்.) "அலர்மகள்மலிதர வவனியினிகழ்பவர்" (தேவார. திருவீழி. க. சம்.) 2. சரசுவதி. (மா.) [அலர்-பூ; தாமரைப்பூவினிடத்திருக்கிறவள்.]

அலர்முகராகம்—பரத உறுப்புக்களுளொன்று. (மா.)

அலர்வு—அலர்தல். (உ-ம்.) "வானின் முந்திரவியெதிர்மூளரியொன் றலர்வுறும்" (சிவப்பிர. ௬: ரு.)

அலரவன்—பிரமன். (உ-ம்.) "அலரவன்முதலமரருமுனிவரும்" (கந்தபு. தெய்வ. உருசு.) [அலர்-பூ.]

அலராள்—இலக்குமி. (உ-ம்.) "அலராள்பிரியாளே" (தேவார. திருச்சுழி. ௬. சங்.)

அலரி—1. அலரிப்பூ. (உ-ம்.) "அலரிவாய்கமழக்கூடினன்" (சிந். கநக. ௬உ.) 2. அழகு. (உவின். சஉ.) 3. ஒருமரம். (உ-ம்.) "பாதிரியலரி புன்னை" (சேதுபு. இராமநாத. ருரு.) [இதன்வேர் முதலியன நஞ்சுடையன என்பர்.] 4. கண்வரி. (பிங்க. ௬௦௬௬.) 5. கோதுமை. (கா. வைத்) 6. சூரியன். (உ-ம்.) "அலரியாதிமிடிதளக்குந்தேவர்தமை" (தணிகை. நகர. க௬.) 7. தேனீ. (உவின். சஉ.) 8. நீராவி. (உவின். சஉ.) 9. பூ. (உ-ம்.) "ஈரிதழலரி" (கலித்தொகை. ௬௬.)

அலரியோன்—சூரியன். (உ-ம்.) "அலரியோன்குணபாலெய்துமுன்னர்" (பாகவத. சுபத். சச.)

அலநதல்—அலர்தல். (மா.)

அலரோன்—பிரமன். (உ-ம்.) "தன்வரைப்பிலலரோனைச் சிறைப்படுப்பித்து" (காஞ்சிபு. குமரகோ. கச.)

அலல்—அல்லல். (உ-ம்.) "அலலுறவுருரியன்" (சைவச. ஆசா. எஅ.) [இஅலகரங்கெட்டுவந்தவிகாரமொழி]

அலவர்—உழுதொழிலாளர். (உ-ம்.) "அலவர்சாலிகொய்தண்ணுமை" (தணிகை. நாட். சகுச) [ஹலம்—கலப்பை.]

அலவல்—1. அலமரல். (உ-ம்.) "அலவலையுடையையென்றீதோழீ" (கலித்தொகை. சஉஉ.) 2. கந்தைச்சீலை. (உவின். சஉ.) 3. நூல்நெருங்காது செய்தசீலை. (உவின். சஉ.)

அலவலை—1. ஆராயாது மனத்திலே தோற்றியதைச் செய்தல். (உ-ம்.) "அலவலைச்செய்திக்கஞ்சினன்" (மணிமே. களங்கா. சஅ.) 2. சீர்கெட்டநிலைமை. (உவின். சஉ.) 3. புலம்பல். (உ-ம்.) "சிறைநின்றவலவலையில்லாக்குடியும்" (திரிகடு. ௬ச.) 4. பேச்சுக்காரன். (உ-ம்.) "அல்லவைசெய்யுமலவலையும்" (திரிகடு. ௬௬.)

அலவன்—1. ஆண்நண்டு (பிங்க. உ௬சஎ) (உ-ம்.) "அலவன்பேட்டுடனம்புயச்சேக்கைமேல்" 2. இஞ்சிரசம். (இராசவைத்.) 3. கர்க்கடகராசி. (மா.) 4. சந்திரன். (சூ. நிகண். ௬: ருஅ.) 5. நண்டு. (உவின். சஉ.) 6. பூனை. (சூ. நிகண். ௩: உக.)

அலவாங்கு—பிடிவேண்டாது முழுதும் இரும்பாற்செய்தபாரை. (உவின். சஉ.) [வழக்.]

அலவாட்டு—வழக்கம். (உவின். சஉ.) [தெலுங்கு.]

அலவாநிற்றல்—அங்கலாய்த்தல். (உ-ம்.) "அலவாநிற்குமன்பிலேன்" (திருவாசக. திருச்சத. ருச.)

அலவு — அலைதல். (உ-ம்.) "அலவுதுண்டுளியருவி நீரரம்பையராட" (இராமா. சித்திர. உரு.)

அலவுறல் — அலம்வருதல். (உ-ம்.) "எறையும்விரைய மோச்சியுமலவுற்று" (குறிஞ்சி. எ.)

அலவை — அல்லவை. (உ-ம்.) "அலவைசொல்லுவார்" (தேவார. பூந்தார. ௬௦. ௪ம்.)

அலவைப்பெண்டிர் — வியபிசாரப்பெண்கள். (உ-ம்.) "அவமறைந்தொழுகுமலவைப்பெண்டிர்" (சிலப். இந்திர. ௪௨௧.)

அலறல்— 1. அழுதல். (உ-ம்.) "பொருமாசணைவிட்டிடலும் புவிமீதலறிப்புரள" (இராமா. நகர்நீ. எரு.) 2. ஓயாதுசத்தமிடல். (உ-ம்.) "சங்குசூலுளைந்தலறிய தடம்பணை" (நைட. நாட். ரு.) 3. கதறுதல். (உ-ம்.) "புள்ளொடுவிலங்கலறியோட" (திருவிளை. மாயப். அ.) 4. சமையிலாதழைத்தல். (உ-ம்.) "ஆதியென்றுமாரூராவென்றென்றேயலறு நில்லே" (தேவார. திருவாரூர். திருநா. திருத்தாண்ட. அ: ௬.) 5. சிதறுதல். (மா.) [வழக்.]

அலறு—அலறென்னேவலுந் தெரிநிலை வினைப்பகுதியும் பெயரெச்சத் தொகையும்.

அலறுசந்நி — அலறியலறியெழும்பச் செய்யும் ஒருவகைச் சந்நிபாதசுரம். (சீவரட். உசு.)

அலறுதல்—அலறல். (உவின். ௪௨.)

அலன்றல்—சாதல். (உவின். ௪௨.)

அலாக்கு—தீங்கு. (உவின். ௪௨.) [இந்துஸ்.]

அலாசம்—அடிநாக்கில் வரும் ஒருநோய். (உவில். எசு.) [அலாஸ; அ;லாஸ-தமிழ்நீர்.]

அலாதம் — 1. கரி. (உவில். எசு.) 2. நெருப்புக்கொள்ளி. (உவில். எசு.) [அலாத.]

அலாதா—1. தொழிற்படாதது. (உவின். ௪௨.) 2. வேறு. (உவின். ௪௨.) [இந்துஸ்.]

அலாதார் — ஒழிந்தபிறர். (உ-ம்.) "மின்னுரிடைமின்னேரிழைமென் கொம்பையலாதார்" (பாரத. அருச்சுனன்றவ. ௬ருஉ.) [இது அல்லாதார் என்பதில் லகரங்கெட்டது.]

அலாதி — மெய்யெழுத்துமுதல். (உ-ம்.) "அலந்தம்" பார். (பி. வி. ௪௬.) [ஹல்-மெய். ஆதி-முதல்.]

அலாது—1. அல்லாது. (உ-ம்.) "கடியுடன்வந்தளிக்கினலாது களிப்பரிதாம்" (தணிகை. களவு. ௯௯௦.) [லகரங்கெட்டுவந்த ஒருவிகாரமொழி.] 2. தொழிற்படாதது. (சி.) 3. வேறு. (உவின். ௪௯.) [2, 3. இந்துஸ்.]

அலாபத்திரம் — ஒற்றைக் கைக்குக்காட்டிய முப்பத்துமூன்றுவகையுள் ஒன்று; அது: சிறுவிரன்முதலாகிய ஐந்தும் வளைந்துமறிவது. (உ-ம்.) "அலாபத்திரமேயாயுங்காலை — புரைமையின்மிகுத்த சிறுவிரன்முதலா — வரன்முறையைந்தும் வளைந்துமறிவதுவே" (சிலப். அரங்கேற்று. ௧அ.உரை.)

அலாபதம் — இலாமிச்சைச்செடி. (சா. வைத்.)

அலாபம் — 1. அடையாமை. (உவில். எசு.) 2. இடையூறு. (உவின். ௪௨.) 3. தீமை. (உவின். ௪௨.) 4. நட்டம். (உவில். எசு.) [அலாஹ: அ; லாஹ-அடைதல்.]

அலாபு—சுரைக்கொடி. (உவில். எசு.) [அலாபு: அ; லபு-தாழ்தல்.]

அலாபுகம் — சுரைக்காய். (சீவரட். உஅஎ.) [அலாபு:]

அலாபுகரோகம் — ஒருவகைரோகம்; அது:கழுத்தின் உட்புறத்திற் சுரைப்பிஞ்சுபோன்ற அடியகன்ற மாமிசகண்டமாய் வரும், அதனாற் சுவாசம் விடுதல் பிரயாசயாகும். (சீவரட். உஅஎ.) [அலாபு; ரோக.]

அலாயுதம்—கலப்பைப்படை. (உ-ம்.) "அலாயுதங்கொடுமுன் மேருமால்வரையை யைந்துவிற்கிடையிழுத்திடுங்-கிலாதன்" (கூர்மபு. தக்கன்வழி. ருஎ.) [ஹலம் - கலப்பை. ஆயுத-படை.]

அலாயுதன்—பலராமன். (உ-ம்.) "அறிவுருவகை யலாயுதன்முதல்வடமதுரைசெறியும்யாதவர்" (பாரத. அருச்சுனன்றீ. எஉ.) [ஹலாயுத. ஹலம்-கலப்பை. ஆயுத:]

அலாரம் — கதவு. (உவில். எசு.) [அலார.]

அலாரி—அலரிச்செடி. (சி.)

அலாரிதா—அலரிச்செடி. (சா. வைத்.)

அலால் — அல்லால். (உ-ம்.) "மனஞ்சஞ்சலப்படுமலால்" (தாயு. பரிபூ. சு.) [லகரங்கெட்டுவந்தது.]

அலி — 1. ஆண்பெண்ணல்லாதது. (உ-ம்.) "பெண்ணோடாணலியாய்ப்பிறவாவுருவானவனே" (தேவார. திருக்கடவூர.சுந்.சு)2 இயமன்.(மா) 3.உழவுச்சால். (உவில். ௬௬௬.) 4. உழுவோன். (உவில். ௬௬௬.) 5. காகம். (உவில். எசு.) 6. குயில். (உவில். எசு.) 7. தேள். (உவில். எசு.) 8. நறுவிலிமரம். (சூ. நிகண். ௪: ௯௨.) 9. நெருப்பு. (மா.) 10. பலராமன் (உ-ம்.) "அலிமுகந்தொழுமிளவல்", (பாரத. பதினேன். ௪௪.) 11. விருச்சிகராசி. (உவில். எசு.) 12. வேளாண்மை. (உவில். ௬௬௬.) 13. வைரமில்லாதமரம். (உவின். ௪௨.) [3, 4, 10. 12, ஹலிந்; 5, 6, 7. அலி.]

அலிக்கிரகம் — ஆண்பெண்வகுப்பிற் சேராத கிரகம். அவை சநி, கேது,புதன் என்பர். அஃது உள்ளமுடையான் சஉகூ-ங் கவியாற் பெறப்படும்.

அலிக்கை—ஆறுவகைக் கையினுளொன்று; அஃது: ஆறுவகையதென்பது பின்னே காட்டப்படுஞ் 'சுத்தாநந்தப்பிரகாசச் செய்யுளான் விளங்கும். (உ-ம்.) "சர்ப்பசிரம்வண்டு தனிமுகுளங் கத்தரிகை - விற்பனஞ்சேர் கோசங்கபித்தமுட - னற்புதமே-யாகுமலிக்கைகளாறென் றுரைப்பாரே - பாசனேயசொல்லாய் பரிந்து" (சிலப். அரங்கேற்று. கஅ. உரை.)

அலிகம்—நெற்றி. (உவில். எசு.) [அல-அலங்கரித்தல். இக-ஒருவடமொழி விகுதி.]

அலிங்கம்—1. இலிங்கமல்லாதது. (உ-ம்.) "அலிங்கமென் றுணர்ர்துமையமாயடைந்தேன்" (வேதாரணியபு.கக்கிவ. சo.) 2. குறிகளில்லாதது. (ஆப். அஎ.) [அலிங்கம்.]

அலிச்சர்ப்பம்—ஒருவகைச்சர்ப்பம்; அது:மிருதுவுடன்நீண்டஉருவத்தையும் வெளுத்த படத்தையும் மந்தநடையையுங் குறைந்ததொனியையும் அற்பகோபத்தையும்உடையது.(சிவரட். ௬௬அ.)

அலிஞ்சரம்—நீர்விட்டுவைத்திருக்கும் மட்சாடி. (உவில். எசு.) [அலிஂஜர.]

அலிந்தம் — வீட்டுவாயிலிற்றிண்ணே. (ஆப். அஎ.)

அலிநாள் — ஆண்பெண் என்னும் வகுப்பல்லாத சாதிப்பட்ட நட்சத்திரங்களாகிய மிருகசிரமுஞ் சதயமும்(வருஷாதி; உவின். சஉ.)

அலிப்பேடு— அல்லியமென்னுங் கூத்து. (சிலப். கடலாடு. சஎ. உரை.)

அலிபகம் — 1. கருவண்டு. (உவில். எசு.) 2. தேள். (உவில். எசு.) 3. நாய். (உவில். எசு.) [அலிபக.]

அலிபிஞ்ஞன் — எழுத அறியாதவன். (உவில். எசு.) [அலிபிஞ்ஜ: அ; லிபி-எழுத்து; ஞ்ஜ-அறிந்தவன்.]

அலிமரம்—முருக்குப் போல உள்ளாவது வெளியாவது வைரமில்லாத சாதிப்பட்டமரம். (சி.)

அலிமுகப்பாண்டுரோகம் — ஒருவகைப் பாண்டு ரோகம், (சீவரட். கருகூ.)

அலியர்—அலித்தன்மையுடையவர், ஆண்மையில்லாதவர். (உ-ம்.) "அலியரல்லதையாண்டகையார் கொலோ" (கந்தபு. சூரன்றண். உடு.)

அலியன் — கடமரம். (சா. ஙவத்.)

அலியெழுத்து — ஆய்த எழுத்து. (உவின். சஉ.)

அலிவேதம் — (சைகம்) மோசனுவரணியத்தொன்று. (சி. சி. அ: சஉ. மறை.)

அலீகம்—1. நெற்றி. (உவில். எசு.) 2. பொய். (உவில். எசு.) 3. வானம். (உவில். எசு.) 4. வெறுட்பானது. (உவில். எசு.) [அலீகம்.]

அலீசா — 1. கிண்டன்சிலே. (உவின். சஉ.) 2. தோணிவலிக்குந்தண்டு. (உவின். சஉ.)

அலு —1-3. அலுவென்னேவலுந் தெரிநிலைவினைப் பகுதியும் பெயரெச்சத்தொகையும். 4. நீர்விட்டுவைக்குஞ் சிறுகுடம். (உவில். எசு.) [அலு.]

அலுக்கு —(குடத்தைவனேந்தானென் பதிற்போல) வேற்றுமையுருபு வெளிப்பட்டு நிற்குந் தொடர். (ஆப். அஅ.) (உ-ம்.) "நித்தமநித்தமலுக்குலுக்காந்தொகை" (பி. வி. உஎ.) [அலூக்.]

அலுக்குத்து—மகமதியர் அணியும் ஒருகாதணி. (உவின். சஉ.) [அர்ரிய பா.]

அலுக்குதல் — பிலுக்குப் பண்ணல். (உவின். சஉ.)

அலுக்குலேதல் — 1. அடுக்குக்குலேதல். (உவின். சஉ.) 2. தாறுமாறுதல். (உவின். சஉ.) [வழக்.]

அலுக்குலேவு—அலுக்குலேதல், தாறுமாறுதல். (உவின். சஉ.) [வழக்.]

அலுசிலும்பல்—ஒழுங்கின்மை, குழம்பல். (உவின். சஉ.) [திசை.]

அலுந்தசத்தி—பேரருளுடைமை. (சி. சி. பாயிர. க. சிவஞா.)

அலுந்தம் — 1. ஆசையின்மை. (உவில். எசு.) 2. மநத்திருப்தி. (உவில். எசு.) [அலுப்த: அ; லுப்த-ஆசை.]

அலுத்தல்—1. அலைக்கழிவுபடல்.(உவின். சஙு.) 2. இளைத்தல். (உ-ம்.) "ஐயாமிகவுமலுத்தோமலுத்தோமே"(கந்தபு. தேவர்பு. கூ.) 3. வருந்துதல். (உவின். சஙு.)

அலுத்தன் — 1. ஆசையற்றிருப்போன். (உ-ம்.) "இகபரமிரண்டும்வேண்டாதிருப்பவனலுத்தனென்றும்" (மச்சபு. பத்தி. உச.)

அலுப்பு — 1. அலைக்கழிவு. (உ-ம்.)"அலுப்பையுண்டாக்கியகற்றும்" (பதார்த்தகுண. எஎச.) 2. இளைப்பு. (மா.) 3. வருத்தம். (மா.)

அலுமாரி—உடுப்பு, புத்தகம் முதலிய வைத்திருக்கும்படி பலகைத்தட்டுக்களை யொன்றின்மேல் ஒன்றாக இடைவெளிவிட்டு நிரைத்து நாலுபக்கமும் பலகைகளால் மூடி மூட்டப்படுவது. (சி.) [பறங்கிப்பாஷை. சுப்பிரமணிய பண்டிதர் அறைமாறியென்பது அலுமாறியென மருவியதென்பர்.]

அலுவல்—வேலே, தொழில். (உவின். சஉ.) (உ-ம்.) "உனக்கலுவலுண்டோ" [அலு என்னும் வினையடியா

ற் பிறந்ததுபோலும்,]

அலுவலுவெனல் — அலப்பல், ஓயாமற்பேசுதல். (உவின். சஉ.)

அலுவா — ஒருவகையூறுகாய். (உவின். சஉ.) [இந்துஸ்.]

அலுவீகம்—வில்வமரம். (மா.)

அலேகம் — 1. எழுதப்படாத வெள்ளேடு. (உ-ம்.) "ஆரியவிதழினலேகத்தையளித்தாரனையர்" (சிவதரு. சிவஞானதான. ருஅ.) 2. லோகமணல். (உவின். சஉ.)

அலை—1. அசைதல், அலைதல். (உ-ம்.) "மதியப்புத்தேள் கலங்கலம்புனலிற்றோன்றி—யலைப்படுதன்மைத் தன்றோ"(கந்தபு. வள்ளி.எகூ)2. அலையச்செய்தல். (உ.ம்.)"அலைமேற்கொண்டல்லவைசெய்தொழுகும் வேந்து" (வள். ருருக)3.அல்லை என்பதில் லகரங்கெட்டுநின்ற ஒருமுன்னிலைக் குறிப்புவினை. (உ-ம்.) நீயலையோசொல்லாய்" (தாயு. பராபர. கூஉச.) 4-6. அலையென்னேவலுந் தெரிநிலை வினைப்பகுதியும் பெயரெச்சத்தொகையும். 7. கடல். (உ-ம்.) "அலைவளம் பெரிதன்கோ" (நைட. நாட். உஉ.) 8. கடலின்றிரை. (உ-ம்.) "ஆழியினமுதம்பொங்கி யலையெறிந்தொழுகிற்றென்ன" (கந்தபு. தெய்வ. கூக.) 9. கொலை. (பிங்க. கூ0கூரு.) 10. திரையடித்தொதுக்கிய கருமணல். (உவின். சஉ.) 11. நீர். (உவில். கூகூசு.) 12. புனற்றிரை. (உ-ம்.) "அலைதவழ்வாவியில்" (நைட. அன்னத்தைக்கண். ருரு.) 13. பூமி. (உவில். கூகூசு.) 14. மது. (உவில். கூகூசு.)15. மிகுதி. (உ-ம்.) "கண்ணீரலைப்பட்டகொங்கையாள்" (நளவெண். கலிநீ. கூஉ.)

அலைக்கல் — 1. அலைத்தல். ( ) 2. நீரைக்கலக்குதல். (உ-ம்.) "முகேரெனவலைக்கலுற்றார்" (கந்தபு. சுரம்புகு. கூ0.)

அலைக்கழித்தல் — அலைந்துவருந்தச்செய்தல். (உ-ம்.) "அவனையலைக்கழித்தான்" (தண்டலையார்சதக; உவின். சரு.)

அலைக்கழிதல்— அலைந்துவருந்துதல். (உ-ம்.) "ஐம்பூதத்தாலே யலைக்கழிந்ததோடமற" (தாயு. தத். ௧.)

அலைக்கழிவு—அலைக்கழிதல், (உவின். சரு.)

அலைகுதல்—அலைதல், (உ-ம்.) "நின்றுருதலைகுதல் விருப்புனக்கு" (வைராக்கியசதக. உரு.)

அலைச்சல்—உலைச்சல். (மா.)

அலைசடி—தொந்தரவு. (உவின். சரு.) [இழிசனர் வழக்.]

அலைசடை—அலைசடி. (உவின். சரு)

அலைசல் — 1. அலைவு. (உவின். சரு.) 2. சோம்பல். (பிங்க.) 3. துன்பம். (உவின். சரு.)

அலைசுதல் — 1. கழுவுதல். (உவின். சரு.) 2. சோம்பல். (பிங்க. கஅகூக.)

அலைசோலி — அலைக்கழிவு. (உவின். சரு.) [சோலி. (தெலுங்கு.)

அலைத்தரல் — அலைதல். (உ-ம்.) "கருங்குழனிழன்றெருத்தலைத்தர" (சிந்தா. குண. உருச.)

அலைத்தல்—1. அசைத்தல். (உ-ம்.) "கொலைத்தலைய கூர்வாளிகோப்புண்டுகிடந்ததுகா-லலைத்தலையவீழ்ந்து" (திருவிளை. பழியஞ். அ.) 2. அடித்தல். (உ-ம்.) "எயிற்றிமார்கள் வயிறலைத்தோட" (இராமா. ஆற்று. சச.) 3. அலையச்செய்தல், உலைத்தல். (உ-ம்.) "ஆநிரைமுழுவதுமலைத்து" (கந்தபு. ஆற்று. சசு.) 4. கெடுத்தல். (உ-ம்.) கூற்ற-னறுமுகத்தானடியவராவியலைத்தானே" (கந்தபு. அக்கினிமுகா. உச0.) 5. திரையடித்தல். (உ-ம்.) "அலைக்குமாழிப்படங்கிட" (இராமா. சூர்ப்பநகை. எரு.) 6. நீரைக்கலக்குதல். (உ-ம்.) "அலைத்தலையடையுமெல்லை" (கந்தபு. சுரம்பு. கூக.) 7. வருத்துதல். (உ-ம்.) "ஆரணர்க்கடலலைப்ப" (கந்தபு. வீரவாகுமீ. உஉ.)

அலைத்திடல் — 1.அலையச்செய்தல். ( )2. வருத்துதல். (உ-ம்.) "உயிர்ப்பெனுமோதநின் றுயிரலைத்திட" (கந்தபு. சயந்தன்பு. ரு.)

அலைதரல்—அலையச்செய்தல். (உ-ம்) "அரங்கவாளியலைதர" (திருவிளை. நாட். கஉ.)

அலைதல்—1. ஆடுதல். அசைதல். (உ-ம்.) "திருத்தகுதாமரையலைதல்சேர்தடம்" (நைட. அன்னத்தைக்கண். சு0.) 2. சோம்பல். (உவின். சரு.) 3. தள்ளாடல். (உவின். சரு.) 4. திரிதல். (உ-ம்.) "புசிப்புக்கலைந்திடல்" (தாயு. சித்தர்கண. ரு.) 5. திரிந்துவருந்தல். (உ-ம்.) "மெத்தவலைந்தேனுன்னைமறவாவின்பத்தால் வாழ்கின்றேன்" (தாயு. பன்மா. ச0.) 6. துன்பம். (மா.)

அலைதாடி — ஆட்டின் கழுத்திலே புடைத்துத்தூங்குந்தசை. (தர்க்கசங். கூஉ.)

அலைநீர் — கடல்.(உ-ம்)"அலைநீராடை" (சிலப். இந்திர. க.)

அலைப்படுதல் — வருந்துதல். (உ-ம்.) "தாயிலாச்சேய்போ லலைந்தலைப்பட்டேன்" (தாயு. சிவன். ரு.)

அலைப்பு—1. அசைப்பு. (உவின். சரு) 2. அலைத்தல், வருத்தல். (உ-ம்.) "அலைப்புறுமனைவாழ்க்கை" (பெரியபு. வெள்ளா. உகூ.) 3. ஒன்பதுவகைக்கூத்துக்களிலொன்று. (உவின். சரு.)

அலைமகள் — இலக்குமி. (மா.) [அலை—கடல். மகள்-புதல்வி.]

அலைமான்— இலக்குமி. (உ-ம்.) "அ

லைமான்புணருமால்" (சேதுபு. காய த்திரி. ௩௨.)

அலையல்— 1. அலைதல். (உ-ம்.) "அங் குமிங்குமென்றலையலாமோ" (தாயு. பரா. ௩௨௧.) 2. சோம்பல். (மா.) 3. துன்பம். (மா.)

அலையெடுத்தல்—அலையெழும்புதல். (உவின். ௪௨.)

அலைவாய் — 1. கடல். (உ-ம்.) "சூர லைவாயிடைத்தொலைத்து" (கந்தபு. கடவுள்வா. ௩௬.) 2. திருச்செந்தூர். (உ-ம்.) "மேவருங்கூடன்மேலைவெ ற்பினிலலைவாய் தன்னில்" (கந்தபு. திருநகர. ௬௦௬.)

அலைவாய்க்கரை—கடற்றிரை வந்து மதியுமிடம். (உவின். ௪௬)

அலைவு —1. அசைவு, சலநம். (உ-ம்.) "அலைவின்மாயையசேதநமாதலானு ம்" (சிவப்பிர. ௩: ௪.) 2. அமைவின் மை. (உவின். ௪௬.) 3. அலைதல். (உ-ம்.) "ஓதநீரினலைமடவார்விழியநலி ன்சொழுந்தொடுமின் னிவைக்கெலா மலைவுகற்பித்து" (ஞானவா. வைராக். எ௪.) 4. சஞ்சலம். (உ-ம்.) "மாவ லைவெல்லா மொழித்து" (ஞானவா. சாகரா. ௨௧.) 5. வருத்தம். (உ-ம்.) "அலைவுசெய்தொல்லையி னடல்பெற் றேகுவான்" (கந்தபு. சூரனமை. ௫௬)

அலோகநம்—காணப்படாமை. (உவி ல். எ௬.) [அலோகந: அ; லோகந— காணல்.]

அலோகம் —சாட்சிக்கு விடயமாகாத து. (உ-ம்.) "தங்கியவலோகவிருளு ந்தனிதுரப்ப" (கூர்மபு. விச்சுவ.௫) [அ; லோக.]

அலோகி —பசளைப்பூண்டு. (சா.வைத்)

அலோபம் — 1. ஆசையின்மை. (உவி ல். எ௬.) 2. சிவன் முத்தர்களுடைய பத்துக்குறிகளு ளொன்று. அஃது: உலோபமின்மை. (வேதா.சூ. ௧௭௫) [அ; லோ ஹ]

அலோமி—பொற்றலைக்கையாந்தகரை ப்பூண்டு. (சா. வைத்.)

அலௌகிகசந்நிகருடம் — லௌகிக மல்லாதசம்பந்தம். (தர்க்கா. ௬௦) [அ லௌகிக; ஸந்நிகர்ஷ.]

அலௌகிகப்பிரத்தியக்கம் — லௌ கிகப்பிரத்தியக்கமல்லாதது. (தர்க்கா. ௬௦.) [அலௌகிக; ப்ரத்யக்ஷ.]

அலௌகிகம் — இலௌகிகமல்லாதது (தர்க்கா.) [அலௌகிக.]

அவ் —அவை. (உ-ம்.) "அவ்வே-இவ் வெனவறிதற்குமெய்பெறக் கிளப்ப" (தொல். சொல். ௪௨௦) [இஃது: அஃறிணைப்பன்மைச்சுட்டுப்பெயர்.]

அவ்வ—அந்த அந்த (உ-ம்.) "அவ்வக் கணைகள்விடுத்தே" (கந்தபு.தார.எ௬) [இதில் உயிர்வர அகரச்சுட்டுவகரம் பெற்றுவந்தது.]

அவ்வது—அவ்வாறு. (உ-ம்.) "அவ்வ துறைவதறிவு" (வள். ௪௨௬.) [இதி ல் வகரத்திலேறி நின்ற அகரஞ் சா ரியை.]

அவ்வயின்— அவ்விடம். (உ-ம்.) "அ வ்வயினரசவைநின்று மன்பினன்—எ வ்வமிலநுந்தவமுநிவனெய்தினன்" (இராமா. நகர்நீ. ௪௬௧.)

அவ்வவர் —அவரவர். (உ-ம்.) "அவ் வவரடிபணிந்தன்பொ டேத்தினர்" (கந்தபு. தெய்வ. ௧௭௧.)

அவ்வழி—1. அதன்பின்பு (உ-ம்.) "அ வ்வழிகுழவித்திங்க ளடுசிலைவடிவே ற்செங்கேழ்க்—கொவ்வையங்கனிவெ ண்முத்தங்குலவுமோர்சமலம்பூத்து" (கூர்மபு. வருணு. ௫.) 2. அந்தமார் க்கம். 3. அப்படிவருமிடத்து. (உ-ம்.) "அவ்வழி— யாவியிடைமையிட மிடறுரும்" (நன். எழுத். ௨௦.)

அவ்வளவு — அம்மட்டு. (உ-ம்.) "அ ல்கும்பயனெவ்வளவா மவ்வளவும்" (தணிகை. அகத். அஎ.)

அவ்வாய் — அழகிய இடம். (உ-ம்.) "அவ்வாய்வளர்பிறை" (பெரும்பா ணாற். ௬௨.)

அவ்வாறு — 1. அந்தவழி, அப்படி. (உ-ம்.) "எழில்கூர்வனத்-தவ்வாறுபயி ல்கின்றவருள்வாரி" (பாரத. புட்ப ௨௫.) [அ—ஒருசுட்டு. ஆறு—வழி.] 2. ஆறு ஆறு. (உ-ம்.) "அப்பதினு யிரவர்க்குமொவ்வொருத்திக் கவ்வா று—யொப்பரியவநுபதினுயிரங்குமர ருளார்" (திருவிளை. பழியஞ்.௪.) [ஆ று—இரட்டித்தது.]

அவ்விடம் — அந்த இடம். (உ-ம்) "வீ ழ்துயில்கொள்-அவ்விடத்தேநீத்தவ வரென்றே" (நளவெண். கலிநீ.எ௨)

அவ்வித்தல்— பொறாமைகொள்ளுத ல். (உ-ம்.) "அவ்வித்தழுக்காறுடை யானை" (வள். ௧௬௭.)

அவ்விதழ் — அழகிய இதழ். (உ-ம்.) "அவ்விதழவிழ்பதங்கமழ" (நெடுந ல். ௬௪.)

அவ்வியஞ்சநம்—1. அடையாளமில் லாதது. (ஆப். ௬௦௦.) 2. கொம்புமு ளைக்கும் பருவம்வந்துங் கொம்புமு ளையாதமிருகம். (ஆப். ௬௦௦.) [அவ்யஞ்ஜந; அ; வ்யஞ்ஜந— அடையாள ம்.]

அவ்வியத்தக்கிரமம்—வழக்கத்தில்வெ ளிப்படாதகிரமம், மயக்கமாகச்சொ லப்பட்டகிரமம். (உ-ம்.) "பாசபசுப தியென்னு மவ்வியத்தக்கிரமமாகச் சொன்னது, முதற் பாசதரிசனம்பண் ணி நீக்கினபின்பு பசுதரிசநமாயத ன் பின்பு பதிதரிசநமாக வேண்டுமோ சையால்" (சி. சி. அளவை. சிவாக்.) [அவ்யக்த; க்ரம.]

அவ்வியந்தகாயத்திரி—வெளிப்படச் செபிக்கப்படாத காயத்திரி. (த. நி. போ. ௨௬௭.) [அவ்யக்த; காயத்ரீ.]

அவ்வியத்தசாமியம் — அறியப்படாத சங்கியை எவத்துச்செய்யுஞ் சமீகரணம். [ஆப். ௬00] [அவ்யக்த; ஸாம்ய]

அவ்வியத்தபாவனை — மகேசுரியபாவனை. (கூர்மபு. வருணா. சங. உரை] [அவ்யக்த; ஹாவநா—பாவித்தல், நினைத்தல்.]

அவ்வியத்தபூதம் — அவ்வியாகிருதபூதத்தை வியாபித்திருக்கும் பஞ்சபூதம். (உபநிட. உ௮.) [ஹூத.]

அவ்வியத்தம் — 1. (வீசகணித.) அறியப்படாத எண், மறைநிலைபிராசி. (உவில். அகூ.) 2. ஆன்மா. (உவில். அகூ) 3. (வேதாந்தம்) இரச்சுவிலே சர்ப்பத்துவம் போலப் பிரமத்தினிடத்தில் விவர்த்தமாகத் தோன்றுகிற மூலப்பிரகிருதியென்னுஞ்சத்தி. (உ-ம்.) "பேசரியபரத்தினி லாரோபமதாமூலப்பிரகிருதி தனிலவ்வியத்தந்தோன்றும்" (உபநிட. கரு.) 4. ஓரெண்; அது: கோடிகோடிகோடிகோடாகோடி. (உவில். அகூ; சி.) 5. காட்சிக்கமையாதது, வெளிப்படாதது. (உவில். அகூ.) 6. சாமவேத உபநிடதத்தொன்று. (கூர்மபு. அட்டமூ. உகு. உரை.) 7. சிருட்டிக்கப்படாதது. (ஆப். கூக) 8. சூர்க்குமம். (உ-ம்) "பொருவிலவ்வியத்தமாயழிவின்றி" (கூர்மபு. பிரகிரு.ரு.) 9. நிச்சயிக்கப்படாதது, நிதாநிக்கப்படாதது. (ஆப். கூக.) 10. பரப்பிரமம். (உவில். அக) 11. (சித்தாந்த.) பிரகிருதிமாயை; அது: சுத்தமாயை தூலபரிணாமமாய்த் தோன்றுவது. (உ-ம்.) "மாயையினவ்வியத்தம் வந்திடும்" (சி. சி. க: ககூ) [மூக்குணங்களும் விளங்காதிருத்தலால் அவ்வியத்தமென்றார். சி. சி. உ: ருஎ. மறை] 12. பிரிந்துதெரியாதது. (உ-ம்.) "அவ்வியத்தசத்தம்" (சி. சி. உ: சுஉ. சிவாக்) 13. பீடமும் இலிங்கமுமா யிருக்குஞ் சிவலிங்கம்; அதுகரசரணாதியவயவங்கள் வெளிப்படத்தோன்றாதது. (உ-ம்.) "அவ்வியத்தம் பீடலிங்கமங்கமனைத்தும் வ்ளங்கு மவ்விலிங்கமேவியத்தமாம்" (சைவச. பொது. க்கக) 14. மகேச்சுரன். (உ-ம்.) "சருதரியவவ்வியத்தத் தருளானுங்காண்வருசீர்ப்- புருடனுஞற்றிடலானும்" (கூர்மபு. பிரகிரு. ககூ.) 15. (சாங்கியர்சொல்லும்) மூலப்பிரகிருதிமாயை. (உ-ம்.) "இலகு காரியமாகிய வுலசாகியிருக்கவுந் தெரிதரப்படாத-வலனுறுதலிலவ்வியத்தமேயென்றும்வகுப்ப ரம்மாயைக்குப் பெயர்கள்" (சூத. சிவமான். அ: கக.) [அவ்யக்த.]

அவ்வியத்தராசி — (வீசகணித) அறியப்படாதசங்கியை. (ஆப். ௬00) [ராஶி—அளவு.]

அவ்வியத்தலக்கணன் — சிவன். (ஆப். ௬00) [அவ்யக்தலக்ஷண: அவ்யக்த-வெளிப்படாத. லக்ஷண:—இலக்கணமுடையவன்.]

அவ்வியத்தலக்கணை — உமாதேவி. (உ-ம்.) "சருவசத்திகலையவ்வியத்தலக்கணை" (கூர்மபு. திருக்கல். உகூ.) [அவ்யக்தலக்ஷண - சிவன். ஐ - ஒரு பெண்பால்விகுதி.]

அவ்வியத்தவத்து — வெளிப்படாத பொருள். (கூர்மபு. வருணா. சங. உரை.) [அவ்யக்தவஸ்து.]

அவ்வியத்தன் — 1. சிவன். (உவில். அகு; (வேதாந்த) அந்தரியாமி. (வேதா. சூ. சஉ.) "அநந்தமயன்" பார். [இந்திரியங்களின் விடயமாகாதடங்கி நிற்றலின்வந்த பெயர்.] 2. மன்மதன். (உவில். அகூ.) 3. மூடன். (உவில். அகூ.) 4. விட்டுணு. (உவில். அகூ.) [அவ்யக்த:]

அவ்வியத்து — பிரகிருதி. (உ-ம்.) "புத்தியவ்வியத்திற்றோன்றி" (சி. சி. உ: ரு௮) [இங்கே"அவ்வியத்தம்" என்பது "அம்"செட்டுவிகாரமாகிநின்றது.]

அவ்வியதத்திதன் — அவ்வியயதத்திதன். (பி. வி. கூகூ.)

அவ்வியதி — 1. அஞ்சாதது. (வென். சு0.) 2. (வேதத்தில்) குதிரை. (உவில். அகூ.) [அவ்யதி: அ; வ்யது-வருத்தம். போரில் இளையாததென்றபடி.]

அவ்வியதிதி — 1. இரவு. (உவில். அகூ.) 2. பூமி. (உவில். அகூ.) [அவ்யதிதி.]

அவ்வியபாகம் — 1. தேவர்களுக்குப் பாகம்பண்ணப்பட்ட அவி. (உவில். கூகள.) [ஹவ்ய—அவி. பாக—அடுதல்.]

அவ்வியபாவம் — அவ்வியயீபாவம். (உ-ம்.) "முன்மொழியவ்வியஞ்சேர்தொகைபேர்முன்மொழித் தொகையே-சொன்மொழி யவ்வியபாவமருவும்" (வீரசோ. தொகை. சு.) [அவ்யயஹாவ.]

அவ்வியம் — 1. அழுக்காறு. (உ-ம்.) "அவ்வியநெஞ்சத்தானாக்கமும்" (வள். கசுக.) 2. இடைச்சொல். (உ-ம்.) "முன்மொழியவ்வியஞ்சேர்தொகை" (வீரசோ. தொகைப்பட. சு.) 3. தேவர்க்கிடும்பலி. (மநு. கூ:சகூ0.) 4. தேவர்க்குப் பலியாயிடத்தக்கது. (உ-ம்) "அவ்வியகவ்வியங்கடமை" (வேதாரணியபு. கக: கரு.) 5. நெய். (உவில். கூகள) 6. வடிவம் இல்லாமை. (உ-ம்.) "அவ்வியமென்சொப்பனமாதணிவினால்" (வேதா. சூ. க௨௮.) [அவ்யம்.]

அவ்வியய் — நிவிர்த்திகலையிற் பிருதிவிதத்துவத்திலுள்ள புவனங்களுள் ஒன்று. (சி-வி. கிரியா. உக. உரை.) [அவ்யய.]

அவ்வியயதத்திதன் — இடைச்சொற்களாலாயதத்திதன்; அவை: ஆங்கு, ஆன், ஈன் முதலியவாக வருஞ் சுட்டுப்பிளந்து நில்லாத இடப்பெயர்க

ளும் அவ்வயின், இவ்வயின், உவ்வயின், அங்கண், இங்கண், அவ்வாய், ஆயிடை எனச் சுட்டோடும் எவ்வயினென வினாவோடும் வந்து ஏழாம் வேற்றுமையிடப்பொருள்உணர்த்துவனவுமாம். (உ-ம்.) "பேர்கொண்ட சுட்டுப்பெயரிற் பிளந்துநில்லா விடனு-நேர்கொண்டவெண்சுட்டெ காரங்க ளேழோடு நின்றனவு-மேர்கொண்டவேழனிடப்பொருள்காட்டு மிடைச்சொற்களாந் - தார்கொண்ட பூங்குழ லாயவை யவ்வியதத்திதனே" (பி. வி. ௩௩.) [அவ்வியய என்றதில் ய கெட்டுநின்றது. அவ்யய.]

அவ்வியயபதம்—இடைச்சொல். (சங். பாலசிக்ஷை.) [அவ்யயபதம்.]

அவ்வியயபூர்வபதம் — ("அவ்வியயீபாவம்"பார்.) [அவ்யயபூர்வபத:]

அவ்வியயம் —1. அழியாதது. (உ-ம்.) "ஊழிதனினுங்குன்றதீர்ந்தவினாலவ்வியயம்" (வேதாரணியபு. வேதநதி. எ௩.) 2. அற்பமாகச்செலவுசெய்தல். (உவில். அக.) 3. இடைச்சொல். (பி. வி. ௩௩.) (உ-ம். "அவ்வியயதத்திதன்" பார்.) 4. செலவு செய்யாமை. (உவில். அக.)

அவ்வியயன் — விட்டுணு. (உவில். அக.) [அ; வ்யய-அழிவு.]

அவ்வியயீபாவம்—1. அழிவுறாமை. (உவில். அக)2. இடைச்சொற் சமாசம்; அது: நாமபூர்வபதம், அவ்வியயபூர்வபதம் என இருவகைப்படும். பெயர்க்குபின்வரும் இடைச்சொல் நாமபூர்வபதம்; "வாண்மனை" என்பதிற்போல. பெயர்க்குமுன்வரும் இடைச்சொல் அவ்வியயபூர்வபதம்; "மற்றையாடை" என்பதிற்போல.(உ-ம்) "முன்மொழிப்பேர்ச் சொலிடைச்சொலிரண்டு முரணிநிற்குந் - தன்மொழியவ்வியயீபாவம்"(பி.வி. ௨௩) [அவ்யயீபாவ.]

அவ்வியவகிதம் — அடுத்திருத்தல், இட்டினது. (உ-ம்.) "அவ்வியவகிதவஸ்துக்கள்" (சி. சி. ௨: ௬௩. சிவாக்.) [அ; வ்யவஹித-வேறானது.]

அவ்வியவச்சிந்நம் — தடுக்கப்படாதது. (ஆப்.அ௩௬) [அ; வ்யவச்சிந்ந-தடுக்கப்பட்டது.]

அவ்வியவத்தை—1. அபத்தமான அறிவு. (உவில். அக.) 2. கிரமமல்லாதது. (உவில். அக.) 3. விதிதவறுதல். (உவில். அக.) [அவ்யவஸ்தா: அ; வ்யவஸ்தா-கிரமம்.]

அவ்வியவாகன் — அக்கினிதேவன். (உவில். ௬௬எ.) [ஹவ்யவாஹ: ஹவ்ய-அவி. வாஹ-கொண்டுசெல்லுகிறவன்.]

அவ்வியன் —ஒன்பதாமநுவின் காலத்துள்ள ஏழுமுநிவருளொருவன். (கூர்மபு. மநுவ. ௨௩.) சுவாயம்புமநுவின் புத்திரனாகிய பிரியவிரதனுடைய ஏழுமக்களுளொருவன். (கந்தபு. அண்ட. ௨எ.)

அவ்வியாகிருதம் — (வேதாந்த) ஈசுரன்காரண சரீரமாகிய மாயை. (நாநாசீவ. கரு.) [அவ்யாக்ருத:அ; வ்யாக்ருத-பிரிக்கப்பட்டது.]

அவ்வியாகிருதன்-சுழுத்தியவத்தையிற் சமட்டிகாரணசரீரத்தில்அபிமானிக்கப்பட்ட ஆத்மாவாகிய அந்தரியாமி. (வாசுதேவ. அவத்தாத்தி.௨0௧; வேதா. சூ. ௪௨. உரை.) [நாமரூபரகிதமாயிருக்கிறபடியால் வந்தபெயர்.]

அவ்வியாசம்-கபடம்இன்மை. (உ-ம்.) "அவ்வியாச கருணாபரிபூரித சகுணையாகிய அன்னையைப்போல" (பிரமோப. க.) [அவ்யாஜ: அ; வ்யாஜ -கபடம்.]

அவ்வியாத்தம் —வியாத்தம் இன்மை, எங்குஞ்செறிந்திராமை. (உவில்.௬0) [அவ்யாப்த:அ; வ்யாப்த-செறிந்திருத்தல.

அவ்வியாத்தி —1. அடைதல் இன்மை. (உவில். அ௪௪.) 2. இலக்கணத்தைக் கெடுக்குந் தூஷணங்கள் மூன்றனுளொன்று; அஃது: ஒருசாதிப்பொருளுக்குச் சொல்லப்படும் இலக்கணம் அச்சாதிப் பொருள்கள் சிலவற்றிற்கில்லா திருத்தல். பசுவிற்குக் கருமையுடைமை யென்பதிற்போல. கருமையுடைமையாகிய இலக்கணஞ் சில பசுக்களுக்கில்லை. (தர்க்கசங். இராம. ௩௨-ம் பக்.) 3. எங்கும் இருத்தல் இன்மை. (உவில். அ௪௪.) (சி. சி. அளவை. ௪௪.சிவாக்.) 4. ஒன்றுமற்றொன்றில் அடங்கியிருத்தல் இன்மை. [அவ்யாப்தி.]

அவ்வியாப்பியம் —முழுதிலுஞ்செறிந்திராமை. (ஆப். ௪00.) வியாப்பியம் இன்மை,பெரும்பாலனவற்றிற்செறிந்திராமை. (உவில். ௬0.) [அவ்யாப்ய: அ; வ்யாப்ய-செறிந்திருத்தல்.]

அவ்வியாபகம் — வியாபகம் இன்மை. (தர்க்கபா. அ௪.) [அவ்யாபக.]

அவ்வியாபி —சர்வவியாபகம் இல்லாதது-வன்-வள். (உ-ம்.) "சண்ணுக்குத் தோற்றியபூதங்காரணமென்னும்லோகாயதனுக்குப்போல அவ்வியாபியன்றி" (சி. சி. ௨:௫௩. ஞானப்) [அவ்யாபிந்.]

அவ்வியாபித்துவம்— அவ்வியாபியாயிருக்குந்தன்மை. (உ-ம்.) "ஆன்மாவுக்கு அசர்வஞ்ஞதைக்கு உபாதி சொல்லிமேல் அவ்வியாபித்துவத்திற்குங் கிஞ்சிஞ்ஞதைக்கும்உபாதியும் ஏதுவுங் கூறுகின்றது" (சி. சி. ௪: ௨௧. சிவாக்.) [அவ்யாபித்வம்.]

அவ்வுதல் — 1. அவாவிவிழுதல். (சி) 2. அழுந்தியெடுத்தல், கடித்துப்பிடித்தல். (உ-ம்) "செருப்புத் தோலையவ்வியெடுத்துப்போட்டது"(உவின். ௪௦)

அவ்வேயன்—பதின்மூன்று மநுவின் காலத்துள்ள ஏழுமுநிவரில் ஒருவன். (கூர்மபு. மநுவர். உகூ.)

அவ்வை – 1. ஆத்திசூடி முதலிய சில நூல்கள்இயற்றிய ஒருதமிழட்பெண். (உ-ம்.) "அவ்வைபாடலுக்கு நறுநெய்பால்பெருகி" (பாரத. சிறப். அ.) 2. தவப்பெண். (உவின். சஎ.) 3.தாய். (உ-ம்.) "ஈன்றவவ்வையுமத்தனுமாரருள்செய்தார்" (கந்தபு.தெய்வ. உருஅ.)

அவ்வோன் — அவன். (உ-ம்.) "அவ்வோனுயிருக்கழிவில்லை" (பாரத. பதினெட். ககக.)

அவ—(உவில். எஎ.) 1. அறிவு, 2. கட்டளைசெய்தல், 3. குறைத்தல், 4. சுத்திசெய்தல், 5. திருத்துதல், 6. நிந்தை, 7. நீக்கம், 8. புறம்பு, 9. போஷித்தல், 10. வியாபகம் எனவும்; (ஆப். அகூ.) 11. ஆதாரம், தோல்வி எனவும் பொருள்படும் ஓர் அவ்வியயம்.

அவக்கவக்கெனல்— 1. ஒருவிரைவுச்குறிப்பு.(உவின். சச.) 2.ஓர்அச்சக்குறிப்பு. (உவின். சச.)

அவக்சியாதம் – அவமாநம். (மா.)

அவக்கியாதி – துர்க்கீர்த்தி. (உவின். சரு.)

அவக்கிரகணம் – 1. அவசங்கை. (உவில். எகூ.) 2. தடை. (உவில். எகூ.) [அவ க்ரஹண: அவ; க்ரஹணம்–எடுத்தல்.]

அவக்கிரகம் – 1. எடுத்தல். (உவில். எகூ.) 2. ஏற்றுக்கொள்ளுதல். (உவில். எகூ.) 3. சுபாவகுணம். (உவில். எகூ.) 4. தடை. (உவில். எகூ.) 5. நிந்தைப்பேச்சு. (உவில். எகூ.) 6. நிந்தித்தல். (உவில். எகூ) 7. பிடித்தல். (உவில். எகூ.) 8. மழையின்மை. (உவில். எகூ.) 9. யானைத்திரள். (உவில். எகூ.) 10. யானையின் நெற்றி. (உவில். எகூ.) [அவக்ரஹ: அவ-முன்; க்ரஹ-எடுத்தல்.]

அவக்கிரசம்— காடி. (உவின். சச.)

அவக்கிரந்தநம் – உரத்தழுதல். (உவில். எஅ) [அவ; க்ரந்தநம்–அழுதல்]

அவக்கிரயம்—1. அரசனுக்கிறுக்கும் வரிப்பணம். (ஆப். அகூ.) 2. குத்தகைப்பணம். (ஆப். அகூ.) 3. கூலி. (ஆப். அகூ.) 4. சம்பளம். (ஆப்.அகூ) 5. விலை. (ஆப். அகூ.) [அவ க்ரய: அவ–அடைதல். க்ரய–கொள்ளுதல்.]

அவக்கிராகம் — 1. அவமாநம். (உவில். எகூ) 2.சாபம்இடுதல். (உவில்.எகூ) 3. மழையின்மை. (உவில். எகூ.) [அவக்ராஹ: அவ-கீழ். க்ராஹ–எடுத்தல்.]

அவக்கிராந்தி — 1. இறங்குதல், கீழ்ப்போதல். (உவில். எஅ.) 2. சமீபமாய்ப்போதல். (உவில். எஅ.) [அவக்ராந்தி: அவ - கீழ். க்ராந்தி–செல்லல்.]

அவக்கிரியை —1. அசட்டை. (உவில் எஅ.) 2. விதித்தன செய்யாதொழிதல். (உவில். எஅ.) [அவக்ரியா: அவ–கீழ். க்ரியா–செயல்.]

அவக்குறி – கெட்டகுறி. (உவின்.சரு.)

அவக்கொடை— வீண்கொடை, வீணருக்குக்கொடுக்குங்கொடை. (உவின். சரு.)

அவக்கொலை —தன்மரணம். (மா.)

அவகட்டநம்—உரோஞ்சிததள்ளுதல். (வெவண். ருகூ.) [அவகட்டநம்.]

அவகடம்—1. எதிராயது.(உவில்.எஎ) 2. கீழே. (உவில். எஎ.) 3. பின்னே. (உவில். எஎ) 4. வஞ்சகம். (உவின். சரு.) [1, 2, 3. அவஹட.]

அவகண்டநம் — 1. அழித்தல். (ஆப். அகூ.) 2. களைதல், பிரித்தல். (பரா. மி. ருஉ.) [அவகண்டந.]

அவகண்டம்—முகத்தில் அல்லது கன்னத்தில் வரும் விரணம். (உவில். எஅ.) [கண்ட-கன்னம் அல்லது முகம்.]

அவகணிதம் – அவமதிக்கப்பட்டது. (உவில். எஅ.) [அவகணித:]

அவகணிதன் – அவமதிக்கப்பட்டவன். (உவில். எஅ.) [அவகணித:]

அவகத்தம் – புறங்கை. [அவர–புறம். ஹஸ்த-கை. உவில். அரு.]

அவகதவாய் —கீழ்க்காய் நெல்லிப் பூண்டு. (கா. வைத்.)

அவகதன் – பிரசித்திபெற்றவன், அறியப்பட்டவன். (உவில். எஅ.) [அவ-அறிவு. கத–அடைதல்.]

அவகதி – 1. அறிவு. (உவில். எஅ.) 2. இடம் விட்டுப் பெயர்தல். (உவில். எஅ.) 3. புலப்படுதல். (உவில். எஅ.) [அவ–அறிவு. கதி–போதல்.]

அவகமம்—1. அகற்றல். (உவில்.எஅ.) 2. அறிதல். (உவில். எஅ.) 3. யதார்த்தமான அறிவு. (உவில். எஅ.) [அவ–அறிவு. கம-போதல்.]

அவகர்த்தநம் — 1. சீவுதல். (உவில். எஅ.) 2. தறித்தல். (உவில். எச.) [அவகர்த்தந: அவ-கீழ். கர்த்தந–வெட்டுதல்.]

அவகர்த்தம் – குழி. (சீவரட். ருOO.)

அவகர்த்தவிரணம் — ஒருவகைவிரணம; அது: விரணத்திற் குழிவிழுந்துள்ளது. (சீவரட். ருOO.)

அவகரணம் — 1. அபகரித்தல்; (உவி

ல். அச.) 2. மீட்டெடுத்தல். (உவில், அச.)
[அவஹரண.]

அவகாகநம்—1. நன்முனப்யிற்சி. (ஆப். கூo.) 2. நீராடுதல். (உவில். எஅ.) அவமாஹா: அவ—முன்; மாஹ—ஆடுதல், முழுகல்.]

அவகாகம்—நீராடுதல். (உவில். எஅ.) 2. நீராடும் இடம். (உவில். எஅ.)
[அவ—முன்; மாஹ—ஆடுதல்.]

அவகாசதன்—ஒதுக்கிடங் கொடுப்பவன். (வெண். ருரு.) [அவகாஶ—இடம், த:—கொடுக்கிறவன்.]

அவகாசப்பிரதம் — இடங்கொடுப்பது. (உ—ம்.) "அகங்காராநுஷங்கமாயிருக்கிற பிராணாதி வாயுக்களுக்குமவகாசப் பிரதமாயிருக்கும்" (சி. சி. உ: சுரு. சிவாக்.)
[அவகாஶ — இடம். ப்ரத—கொடுப்பது.]

அவகாசம்—1. ஆகாயம். (பௌட். பும். உஅஉ.) 2. இசைந்தகாலம். (உவில். எஅ)3. இடம்.(உவில்.எஅ.) (உ-ம்.) "பரமமுத்தியிலே சிவமேயாகையினால் இந்த விசாரத்துக்கு அவகாசமேயில்லை" (சி. சி.சு: சு. சிவாச்.) 4. இடையேயிருக்கும் இடம். (உவில். எஅ.) 5. ஓய்ந்திருக்கும் நேரம். (உவில். எஅ.) 6. சொள்கலம். (உவில். எஅ.) 7. திராணி. (உ—ம்.) "கடனிறுக்க எனக்கு அவகாசம் இல்லை" (உவின். சச.) 8. துவாரம். (ஆப்.அகூ.) 9. பரந்தஇடம். (உவில். எஅ.) 10. பொருள்வைக்கும் இடம். (உவில். எஅ.)
[அவகாஶ: அவ—ஊடே. காஶ—பிரகாசித்தல்.]

அவகாசிப்பித்தல்—இடங்கொள்ளச் செய்தல், இடங்கொடுத்தல். (த. நி. போ. கசச.) [மூ. அவகாஶ.]

அவகாதம் — 1. அடித்தல். (உவில். எகூ.) 2. அவமாநம். (சி.) 3. கொல்லுதல். (உவில். எகூ.) 4. சடிதிமரணம். (உவில். எகூ.) 5. தானியங்களை யுரலிலிட்டு உலக்கையாற் குற்றுதல். (உவில். எகூ.)
[அவவாத: அவ; வாத—அடித்தல்.]

அவகாரம் — 1. அழைத்தல். (உவில். அரு.) 2. சுறுமீன். (உவில். அரு.) 3. சூதாடுகை யுத்தஞ்செய்கையாகிய இவற்றின்கின்றோய்ந்திருத்தல். (உவில். அரு.) 4. பதிதனுடையதன்மை. (உவில். அரு.) 5. யானைமீன். (உவில். அரு.)
[அவஹார.]

அவகாரன்—கள்ளன். (உவில். அரு.)
[அவஹார:]

அவகாலம்—1. அசுபகாலம். (உவின். சரு.) 2. கெடுகாலம், பஞ்சங்கொள்ளைநோய் முதலியன பரம்புங் காலம். (உவின். சரு.)

அவகிருத்தியம்—கெட்டசெய்கை. (உவின். சரு.) [அவக்ருத்யம்.]

அவகீதம் — 1. குணம் இல்லாத பாடல். (உவில். எஅ.) 2. நிந்திக்கப்பட்டது. (உவில். எஅ.) 3. பொல்லாதது. (உவில். எஅ.) 4. வசையாகப் பாடப்பட்டது. (உவில். எஅ.)
[அவகீத.]

அவகீர்ணம் — 1. அவமதிக்கப்பட்டது. (உவில். எஅ.) 2. சிதறுதல். (உவில். எஅ.) 3. பருப்பொருளாகக் குத்தப்பட்டது. (உவில். எஅ.)
[அவகீர்ண.]

அவகீர்ணி — ஸ்திரீ சங்கமஞ் செய்தலாற், பிரமசரியநெறி தவறினவன். (வெண். ருரு; மநு. கக: கஉo.) [அவகீர்ணிந்.]

அவகீர்த்தி — அபகீர்த்தி. (உ—ம்.) "உனத்தகுகீர்த்தியல்லாதவகீர்த்தி யுலகினிற்ப" (மச்சபு. புத்திமான் .சச.)
[அவகீர்த்தி:]

அவகீரணிவிரதம் — ஒரு விரதம்; அது: சந்நியாசி, மகளிர் போகம் விரும்பி நினைந்த தோஷம் நீங்கச் செய்யப்படுவது. (உ—ம்.) "வளம்பெறுசந்நியாசியென்றுரைப்போன் வரிமுலைமங்கையர்போக—முளம்பெறவேண்டினுற்றிடவேண்டுமுயரவகிரணி விரதம்" (சூத. ஞாந. கழுவா. நுக.)
[அவகீர்ணி; வ்ரதம்.]

அவகுஞ்சநம் — 1. சுருங்குதல். (உவில். எஅ.) 2. வளைதல். (உவில். எஅ.)
[அவகுஞ்சந: அவ; குஞ்சநம்—வளைதல்.]

அவகுடாரம்—1. எதிரானது, மாறானது. (உவில். எஅ.) 2. கீழ்ப்போவது. (உவில். எஅ.) 3. பின்போவது. (உவில். எஅ.)
[அவகுடார.]

அவகுண்டநம் — 1. இழுத்தல். (உவில். எஅ.) 2. சுற்றுதல். (உவில். எஅ.) 3. மறைத்தல், (உவில், எகூ.) 4. முகத்தை மறைக்குஞ்சீலை (வெண். ருரு.)
[1, 2. அவகுண்ந. 3, 4. அவகுண்ந.]

அவகுண்டிதம் — இழுக்கப்பட்டது. (உவில். எஅ.) 2. சுற்றப்பட்டது. (உவில். எஅ.) 3. மறைக்கப்பட்டது. (உவில். எகூ.) 4. மூடப்பட்டது. (உவில். எகூ.) [1, 2. அவகுண்டித. 3, 4. அவகுண்டித.]

அவகுணம்—1. கெட்டகுணம். (உவின். சரு) 2. கெட்டகுறி. (உ-ம்) "திவ்வியைச் சக்கரத்தா லவகுணஞ் செய்தன்றோட" (சி. சி. பர. பாஞ். மறு. உகூ.) [அவகுணம்.]

அவகேசி — பூத்துங் காயாத மரம், (ஆப். அகூ.) [அவகேஶிந்; கேஶ—கனி.]

அவகேடு—மிக்ககேடு. (உவின். சடு.)

அவகேளநம்—அவமதிப்பு. (உவில். அடு.) [அவஹேலந: அவ, ஹேல.]

அவகேளம் — அவகேளநம். (உவில். அடு.) [அவஹேல. ஹெடு-நிர்திந்த ல். டு-எவ்வாயிற்று.]

அவகேளிதம் — அவமதிக்கப்பட்டது. (உவில். அடு.) [அவஹெலித.]

அவகோரணம்—கொலைசெய்யக் கருதி ஆயுதங்களால் ஊறுபடுத்தல். (உவில். எகூ.) [அவஹொரண.]

அவச்சா—துன்மரணம். (மா.)

அவச்சாயை—தள்ளுபடியானசாயை. (மா.)

அவச்சாவு — அவச்சா. (செ.)

அவச்சிந்நம் — 1. எல்லைக்குள் அடங்கியது. (வென். ரூகஎ.) 2. (தர்க்கம்) ஒருபொருள் அதன் விசேடகுணங்களால் மற்றைப் பொருள்களினின்று வேறுபடுத் துணர்த்தப்படல். (உவில். எகூ.) 3. வெட்டப்பட்டது. (உவில். எகூ) 4. வேறாகப் பிரிக்கப்பட்டது. (உவில். எகூ.)
[அவச் ஛ிந்ந: ஛ிந்ந-வெட்டப்பட்டது.]

அவச்சிந்நன் — 1. எல்லைப்படுத்தப்பட்டவன். (உ-ம்.) "ஆன்மா அந்தக்கரணாவச்சிந்நனாகி யிருதயத்திலேநின்று" (சி. சி. ச: கடு. சிவாக்.) 2. வேறுபடுத்தப் பட்டவன். (உவில். எகூ.)
[அவச்஛ிந்ந:]

அவச்சுரிதகம் } **அவச்சுரிதம்**— } குதிரைக் கனைப்பு. (உவில். எகூ.) [அவச் ஛ுரிதக: ஛ுர-பிளத்தல்.]

அவச்சேதகம் — 1. எல்லைப்படுத்தல். (ஆப். கூக.) 2. ஒருபொருளை மற்றொருபொருளினின்று விசேடகுணங்களாற் பகுத்துக் காட்டல், அளவிடல். (உ-ம்.) "பதார்த்தாவச்சேதககாலம்" (சி. சி. உ: டுச. சிவாச்.) 3. நிச்சயித்தல். (ஆப். கூக.) 4. விசேடகுணம். (உ-ம்.) "ஆன்மாவச்சேதகமாயிருக்கிற அகங்காரம்" (சி. சி. உ: சூடு. சிவாக்.) 5. விசேடித்தல். (ஆப். கூக.) 6. வேறாக்கல். (ஆப். கூக.)
[அவச்஛ேதக.]

அவச்சேதநம்—1. களைதல். (உவில். எகூ.) 2. பகுத்தறிதல். (உவில். எகூ.) 3. பிரித்துவேறாக்கல். (உவில். எகூ.) [அவச்஛ேதந]

அவச்சேதம் — 1. அங்கஞ்சேதித்தல். (உவில். எகூ.) 2. எல்லை. (உவில். எகூ.) 3. ஒருபொருளை மற்றொரு பொருளினின்று விசேட குணங்களாற் பகுத்துக்காட்டல். (உவில். எகூ.) 4. தடை. (உவில். எகூ.) 5. பங்கு. (உவில். எகூ.) [அவச்஛ேத.]

அவசகுநம் — துன்னிமித்தம். (உவின். சடு.)

அவசங்கை — 1. அழகின்மை. (உவில். ரூஉசு) 2. சாமர்த்தியம இன்மை. (உவில். ரூஉசு.)
[அவசங்ஞா: அவ-எதிர். சங்ஞா – அழகு, சாமர்த்தியம்.]

அவசத்தம்—தீங்கைக் குறிக்குஞ் சத்தம். (மா.)

அவசதம்—1. கல்லூரி. (உவில். அச.) 2. கிராமம். (உவில். அச.) 3. வீடு. (உவில். அச.)
[அவஸத.]

அவசநம்—பேசாமை. (உவில். எகூ.) [அ-எதிர்மறை. வசநம்–பேச்சு.]

அவசம்-1. தன்வசப்படாமை, அடங்காமை. (உ-ம்.) இந்திரியமஞ்ஞாநிக்கவசமாயிருக்கும்" (சூத. எக்கி. உத். கக: எ.) 2. தன்னிட்டம் இன்மை. (வென். அஉரு) 3. பெலன் இன்மை, உதவியின்மை. (வென். அஉரு.) 4. மூர்ச்சித்தல், அயர்வாதல். (உ-ம்.) "விண்ணோனவசம்படவேழ்களை துண்டினன்" (கந்தபு. திருவிளை. டுச.)
[அவஶ.]

அவசயம் — 1. புட்பம் முதலியவைகளைத் திரட்டுதல். (உவில். எகூ.) 2. வெற்றியடைதல். (உவில். எகூ.) [1. அவசயம்; சய-திரட்டுதல். 2. அவஜய: ஜய-வெற்றி.]

அவசர்ப்பிணி—1. உலகம், வாழ்நாள் போகம் முதலியவற்றால் தேய்பிறை போலச் சுருங்குங் காலம். (வன். ரூசுக, பரி) 2. சைநருடைய ஒரு கால அளவு. (உவில். அச.) [அவஸர்பிணி.]

அவசரநாமம் — நிற்கும் நிலைக்கேற்ற பெயர். (சி. சி. உ: நிசு. சிவாக்.)

அவசரம்—1. இடம். (ஆப். கசு.) 2. இரகசியாலோசனை. (உவில். அச.) 3. இறக்கம். (ஆப். கூசு.) 4. உற்றகாலம். (உ-ம்.) "திராசைநெஞ்சினனவசரத்தவளிடை நிகழ்ந்த மெய்க்குறிதன்னால்" (பாரத. சம்பவ. கரு.) 5. ஓய்வுநேரம். (ஆப். கூசு.) 6. கணப்பொழுது. (உவில். அச.) 7. சமயம், காலம். (உ-ம்.) "அந்தரப்புட்பமுங் கானனீருமோரவசரத்துபயோகமோ" (தாயு. மௌந. ரு.) "ஒரவசரத்திலே பிரமாதா என்றும், ஒரவசரத்திலே பிரமிதி யென்றுஞ் சொல்வது விருத்தம்" (சி. சி. அளவை. க. சிவாக்.) 8. தக்ககாலம். (ஆப். கூசு.) 9. மழை. (உவில். அச.) 10. வருடம். (உவில். அச.) 11. விரைவு. (உவின். சச.) [வழக்.]
[அவஸர.]

அவசாதம் — 1. இளைப்பு, ஆயாசம். (உவில். அச) 2. காம ஆசையிலே சித்தி பெறாமையால் வரும் மெலிவு. (உவில். அச.) 3. தைரியக் குறைவு. (உவில். அச.) 4. தோல்வியடைதல். (ஆப். கூசு.) 5. முடிவு. (உவில். அச.)

6. (ஸ்மிர்தியில்) வீண்வழக்கு. (உவில். அச.)
[அவஸாத: ஸத் -போதல்.]

அவசாநம் — 1. இறுதி. (உவில். அச.) 2. எல்லை. (உவில். அச.) 3. ஒழிவு. (உவில். அச.) 4. மரணம். (உவில். அச.)
[அவஸாந: அவ; ஸா-முடிவு.]

அவசாயம் — 1. சமாப்திசெய்தல். (உவில். அச.) 2. நிச்சயம். (உவில். அச.) 3. நிச்சயித்தல். (உவில். அச.)
[அவஸாய.]

அவசாயகன் — 1. சமாப்திசெய்வோன். (வாச.) 2. நிச்சயிப்போன். (வாச.)

அவசாரணம் — 1. அகற்றுதல். (உவில். அச.) 2. இடம்விட்டுப் பெயரச்செய்தல். (உவில். அச.) 3. நடத்துதல். (சி.)
[அவஸாரண: அவ; ஸர்-போதல்.]

அவசாரம் — 1. புறம்போதல். (ஆப் ருஉ) 2. வேசித்தனம். (சி)
[அவஸார]

அவசாரி — வேசி. (உ-ம்) "அங்காலமான தெலாமவசாரியாடி" (தண்டலை கூ)

அவசி — கழுதைப்பாலை. (உ-ம்) "தழற்கொடியவசிதிகழ் பாதலத்தம்பியும்" (தைல. தைலவ. எஉ.)

அவசிட்டம் — மிச்சமானது. (உவில். அஙு.) [அவஶிஷ்ட: அவ; ஶிஷ்ட — மிஞ்சியது.]

அவசித்தாந்தம் — சித்தாந்தம் ஆகாதது. (உ-ம்.) "அஃதி ஆகமவசனங்களோடு முரணுதலின் அவசித்தாந்தமென்றொழிக" (சி. சி. க: உகூ. சிவஞாந.)
[அவஸித்தாந்த.]

அவசிதம் — 1. அறியப்பட்டது. (உவில். அச.) 2. கூட்டிச் சேர்க்கப்பட்டது. (உவில். அச.) 3. செய்து முடிக்கப்பட்டது. (உவில். அச.)
[அவஸித.]

அவசியம் — 1. இன்றியமையாததாய். (உவில். அஙு.) 2. நிச்சயமாய். (உ-ம்.) "அவசியஞ்செய்யவேண்டியவேளிக்கு உதவிவேண்டல்" (ஞாவா. வைராக். உகூ. உரை.) 3. வசியப்படாதது. (உவில். அஙு.)
[அவஶ்ய: வஶ்ய-வசப்பட்டது.]

அவசீநம் — தேள். (உவில். அஙு.) [அவஶீந.]

அவசுத்தம் — சுத்தமின்மை. (மா.)
[அவ; ஶுத்தி.]

அவசூலம் — சாமரை. (உவில். எகூ.)
[அவசூல: அவ-கீழ். சூட-குடுமி.]

அவசேகம் — 1. நனைத்தல். (ஆப் கூசு.) 2. புரோட்சித்தல். (ஆப். கூசு.)
[அவஸேக.]

அவசேடம் — 1. இறுதி. (உவில். அஙு.) 2. மிச்சமாய் விடப்பட்டது. (உவில. அஙு.)
[அவஶேஷ.]

அவஞ்ஞாதம் — அவமதிக்கப்பட்டது. (உவில். எகூ.) [அவஜ்ஞாத: அவ; ஜ்ஞாத-அறியப்பட்டது.]

அவஞ்யாலங்காரம் — இசழ்ச்சியணி; அஃது: ஒன்றின்குணத்தாலுங்குற்றத்தாலும் மற்றொன்றற்கவையுண்டாகாமல்இருப்பதைக்கூறுவது. இதுபின்வருஞ் செய்யுளாற் புலப்படும். "மற்றொன்றினுக்குமொன்றின்குணங்குற்றமருவிலதைச்-சொற்றலிகழ்ச்சியணிநாழிவாரிதொடினுஞ் சிறி-துற்றபுனல்கொளுங் கஞ்சக்குவிவினுடபடிக்கென — குற்றமென்றோத லிலக்கியந்தென்னிளஞசக்குமனே" (குவ. எ௦.) [அவஜ்ஞா — இகழ்ச்சி.]

அவஞாநம் — அவமாநம். (உவில். எகூ.)
[அவஜ்ஞாந.]

அவட்சயம் — 1. அழிவு. (உவில். எஅ.) 2. நட்டம். (உவில். எஅ.)
[அவக்ஷய: அவ; க்ஷய-அழிவு.]

அவட்சேபணம் — விழுதல். (தர்க்கபா. கூச.) [அவக்ஷேபண.]

அவட்சேபம் — 1. எறிதல். (உவில். எஅ.) 2. தவறாக எறிதல். (உவில். எஅ.) 3. நினைவுக்கு மாறான அர்த்தம் விளைக்குஞ் சொற்களைச் சொல்லி நிந்தித்தல். (உவில். எஅ.)
[அவக்ஷேப.]

அவடி — 1. கிடங்கு. (உவில். அ௦.) 2. கிணறு. (ஆப். கூக.) 3. திரைச்சீலை. (உவில். சச.) 4. (அங்கசோதந வித்தை) துவாரம். (உவில். அ௦.)
[1, 2, 4. அவடி. 3. அபட. உவில் சச]

அவடு — 1. கழுத்தின் பிற்பக்கம், பிடரி. (ஆப். கூக.) 2. கிணறு. (ஆப். கூக.) 3. குழி. (உவில். அ௦.) 4. பிளப்பு. (ஆப். கூக.)
[அவடு.]

அவண் — அவ்விடம். (உ-ம்.) "பால்வளாய் பசும்பொற்கஞ்ச, வீசில கொணரவேண்டுமேவுதுமவண்யாமென்று" (சேதுபு. வேதாள. கூசு.)

அவண்ணியம் — அவர்ணியம் (சி.)

அவண — அவ்விடத்தன. (உ-ம்.) "அரைசெலாமவணவணியெலாமவண" (இராமா. நகரப். எ.)

அவணம் — 1. இருபதினாயிரம்பாக்கு. (உவின். சச.) 2. ஒரு முகத்தலளவைப்பெயர்; அஃது: இத்தேசத்து ஏறக்குறைய ஏழரைப்பறை யல்லது எட்டுப்பறை கொண்ட அளவு. 3. நிந்தனை. (ஆப். கூசு.) [அவர்ண.]

அவணன் — 1. திண்ணியன். (உ-ம்.) "சுவணவண்ணனொடு கண்ணனுறை தோளன் விசைதோ-யவணன்விண்ணிடைநிமிர்ந்துபடர்கின்றவன்" (இராமா. விராதன். கூஅ.) 2. துர்க்கீர்த்தியுடையவன். (ஆப். கூசு.) 3. நீசன். (ஆப். கூசு.) [2, 3. அவர்ண: வர்ண-கீர்த்தி.]

அவணி — நன்மை. (மா.)

அவத்தம் — 1. நாய்வேளைப் பூண்டு. (கா. வைத்.) 2. பிரயோசனம் இன்மை. (உ-ம்.) "பெருஞ்சமயத்தின்மயங்கியவத்தமே பிறந்து" (இராமா. தோத்திரப். உகூ.) 3. பொய். (உ-ம்.) "அவத்தத்தன்மைவிட்டுழி"(தேவா. திருத்தினை. கூ. சங.)

அவத்தன் – பிரயோசனமில்லாதவன். (உ-ம்.) "தவக்குணம்பங்கப்பித்தனவத்தன்" (திருப்பு. எ.)

அவத்தாசதுட்டயம் — மநுடனுடைய நான்கு பருவநிலை; அவை: பாலியம், கௌமாரம், யௌவனம், வார்த்திகம் என்பன. (ஆப். கூசு.) [அவஸ்தாசதுஷ்டய: அவஸ்தா–நிலை. சதுஷ்டயம்–நான்கு.]

அவத்தாத்திரய சாட்சித்துவம் — (வேதாந்தம்) அவத்தாத்திரயங்களிற் கூடியிருந்தும், கூடாதிருந்தும் அவத்தாத்திரயத்தையும், அவத்தாத்திரய வியாபாரத்தையும் அவத்தாவாசரையும் அறிந்து கொண்டிருப்பது. (வாசுதே. சூஅ.)

அவத்தாத்திரயம் — சாக்கிரம், சுவப்பனம், சுழுத்தி என்னும் மூன்று அவத்தைகள்; சுரோத்திராதி இந்திரியங்களினற் சத்தாதி விடயஞானம் எந்தமட்டும் வருகின்றதோ அந்தமட்டுஞ் சாக்கிரம்; சாக்கிர வாசனையாற் பிறந்த விடயத்துடன் கூடின ஞானமே சுவப்பனம்; சமத்த விடய ஞானங்களும் இல்லாதிருத்தல் சுழுத்தி. (வாசுதே. உ00.) 2. மூன்றுதன்மைகள். (உ-ம்.) "சத்தர், உத்தியுத்தர், பிரவர்த்தர் என்னும் பதியவத்தாத்திரயாசாதாரணலட்சணங்கள்" (சி. சி. அளவை ரு. சிவாக்.) [அவஸ்தா-நிலை, தன்மை. த்ரய-மூன்று.]

அவத்தானம் — 1. நிலை. (வென். சுo.) 2. நிலைத்தல். (வென். சுo.) 3. நிற்கும் இடம், இருக்கும் இடம். (உ-ம்.) "மாயாதத்துவமத்தியே அவத்தானஞ் சொல்லப்பட்டது" (சி. சி அ: உ. சிவாக்) 4. (வேதாந்தம்.) விடாத்தொடர்பு. (வென். சுo) [அவஸ்தாநம்.]

அவத்திதன் — இருக்கிறவன். (உவில். அச) (உ-ம்.) "சகலாவத்திதனுனவான்மா" (சி. சி. சு: ஙகூ, சிவாக்) [அவஸ்தித]

அவத்திதி — இருப்பு. (பௌட். பும். ஙசசு.) [அவஸ்திதி]

அவத்தியகவசம் — உயிர்நாசத்தை விலக்குவதென்று சொல்லப்படுங் கவசம். (அபிதா. சஉ) [அவத்ய: வத்ய -கொலை; கவசம்.]

அவத்தியம் — 1. இழிந்தது. (உவில். அ0.) 2. தீங்கு. (உவில். அ0.) 3. பாபம். (உவில். அ0.) 4. மரணத்துக்கு விலக்கு. (ஆப். கூஉ.) 5. வெறுக்கப்பட்டது. (உவில். அ0.) [1, 2, 3, 5, அவத்ய: அ–எதிர்மறை, வத்ய -சொல்லத்தக்கது; 4. அவத்ய. வத்ய –கொலை.]

அவத்தியன் — மரணத்துக்கு விலக்கப்பட்டவன். (ஆப். கூஉ.) [அவத்ய:]

அவத்திரங்கம் — அங்காடி, கடை. (உவில். அ0.) [அவரங்க.]

அவத்திரியம் — ஆபத்து. (உவின். சசு)

அவத்து — 1. உதவாதபொருள். (உவில். அச.) 2. பொருளல்லாதது. (உவில். அச.) (உ-ம்.) "மாயை அநிர்வசநீயமாகிற அவத்து ரூபமாகாது" (பௌட். மாயா. கூ: உகூ.) [அவஸ்து: அ; வஸ்து-பொருள்.]

அவத்துறை — தீயவழி. (உ-ம்.) "அவத்துறைபோய் நெஞ்சத்தக்கனுங் கறைந்திட்டானே" (கூர்ம்பு. தக். வே. சு.)

அவத்தை — 1. ஆபத்துநிலை. (உ-ம்.) "அன்னவளவத்தைகண்டாங்கிளையவன்" (இராமா. உத். சீதை. சுக) 2. தன்மை, நிலைமை. (உவில். அச.) (உ-ம்.) "சிலைகொணுதலாய்பின்னர் வருமவத்தை சேராதருள் புரிவாய்" (நைட. அன்னத்தைத்து. ககஎ.) "செப்பரியபரைமுதலனுன்கவத்தையுறு பதத்தில்" (சூத. எக்கி. பூ. சு: உ0.) 3. மலத்தினுலே கட்டப்பட்ட ஆன்மாவினது சாக்கிரம் முதலாகிய ஐவகை நிலை; அது: காரணவத்தை, காரியாவத்தையென இருதிறப்படும். (உ-ம்) "ஆன்மாவுடலினி லவத்தையைந்துமுறும்" (சி. சி. சு: கூஉ.) [அவஸ்தா: அவ; ஸ்தா–நிற்றல்.]

அவத்தைப்பிரயோகம் — 1. அறுபத்துநான்கு கலைஞானங்களுளொன்று அஃது: உயிரைப் பஞ்சாவத்தைகளில் ஒன்றிலே நிறுத்துவதைப்பற்றியது. (உவின். சசு.) 2. சூநியம்வைத்துக்கொல்லல். (உவின். சசு.)

அவதஞ்சம் — 1. காதணியிலொன்று. (உவில். அ0.) "மருவியசெவிமலர்ப்பூமன்னுகனவதஞ்சம்" (சூ. நிகண் எ: உஅ.) 2. தலையணி. (ஆப். கூ0.) 3. பூமாலை, (ஆப். கூ0.) [அவதம்ஸ.]

அவதந்திரம் — சரியற்றவழியால் ஒன்றுசெய்தல், சதியாலோசனை. (உ-ம்.) "அவதந்திரந்தனக்கந்தரம்" (உவின் சடு.) [அவ–எதிர். தந்திரம்–நியாயவழி. ஆப். கூறுசு.]

அவதந்திரி — அவதந்திரஞ் செய்வோன். (உவின். சடு.)

அவதரணம் — 1. இறங்குதல். (உவில். அ0.) 2. பிறர்சொன்னதையெடுத்துமொழிதல். (உவில். அ0.) 3. மொழிபெயர்த்தல். (உவில். அ0.) [அவதரண: அவ; தரணம் - கடத்தல்.]

அவதரணிகை — 1. நூலின்ஆரம்பத்திலே சொல்லப்படுங்காப்பு. (ஆப். கூக) 2. முகவுரை. (ஆப். கூக.) [அவதரணிகா]

அவதரம் — 1. இறங்குதல். (ஆப். ௧௧.) 2. காலம், சமயம். (உ-ம்) "விடயங் களைப் புசிக்கவருகிறவவதரத்திலே" (சிவப்பி. உ: ௨௯. சிதம்ப.) "அஞ்ச வேவருமவதரமதில்" (திருப்பு.௧௮) [அவதர.]

அவதரித்தல் — 1. கருவிற் புகுதல். (மா.) 2. சிந்தித்தல். (உ-ம்) "அந்த மாமாதியந்தக்கரணங் கிரமத்தில்வி ஷயங்களை நினைப்பது நிச்சயிப்பது அபிமானிப்பது அவதரிப்பது வியா பாரமாம்" (த. நி. போ. ௧௧௯.) 3. தங்கல். (மா.) 4. பிறத்தல். (உ-ம்.) "அங்கவர்தம்மிடையவதரித்தனன்" (கந்தபு. பாயி. ௪௧.) [2. மூ அவயா ர.]

அவதாதம் — 1. சிறந்தது. (உவில்.அ௦) 2. சுத்தம். (உவில். அ௦.) 3. மஞ்ச ணிறம். (உவில்.அ௦) 4. வெண்மை. (உவில். அ௦.) [அவதாத.]

அவதாதன் — வெண்ணிறமுள்ளோ ன். (உவில். அ௦.) [அவதாத;]

அவதாநம் — 1. கவநம். (உவில். அ௦) (உ-ம்.) "அந்தரத்தினிறுத்துயவதா நம்போல" (தாயு. மண்டலத்தி. ௧.) 2. கிரகிக்கை. (உவில். அ௦.) 3. சாக் கிரதை. (உவில். அ௦.) 4. ஞாபகம். (உவின். ௪௪.) 5. நீட்டுதல், விரித்த ல். (உவில். அ௦.) 6. மேன்மையான செயல். (உவில். அ௦.) [1, 2, 3, 4. அ வயாந; 5. அவதாந; 6. அவதாந]

அவதாநம்பண்ணல் — 1. கவநமாய் நி னைத்தல். (உவின். ௪௪.) 2. பாடம் பண்ணல். (உவின். ௪௪.)

அவதாநித்தல் — அவதாநம்பண்ணல். (உவின். ௪௪.) [மூ. அவதாந.]

அவதாநிப்பு — அவதாநித்தல். (உவின். ௪௪.)

அவதாரணஞாநம் — நிண்ணயம். (த ர்க்கபா. ௯-வது.) [அவயாரண - நிச் சயித்தல்.]

அவதாரணபூர்வபதகருமதாரயன் - சமாசங்கள் ஆறனுளொன்று; அது: மு ன்மொழிதேற்றமாகிய பண்புத்தொ கை. அஃது "அருட்செல்வம்" என் பது போல்வது. (பி. வி. ௨௨.) [அவ தாரணம்--தேற்றம், பூர்வபதம் --மு ன்மொழி. கர்மதாரய - பண்புத்தொ கை.]

அவதாரணம் — 1. எடுத்தல். (உவில். அ௦.) 2. சிலயினேரம். (உவில்.அ௦.) 3. துண்டங்களாகவெட்டுதல். (ஆப். ௯௨.) 4. தேற்றம். (உவில். அ௦.) (உ-ம்.) "சம்பாவனையவதாரணமுறை யேயெண்ணந் தேற்றமெனப்பெயர் பெறுமே" (பி. வி. ௨௨. உரைச்சூத் திரம்.) 5. நிச்சயம். (உவில். அ௦.) 6. நிச்சயித்தல். (உ-ம்.) "அவதாரண ஞானம் நிண்ணயம்; அது பிரமாண பலம்.(தர்க்கபா.௯-வது)7. நூன்முக ம். (ஆப். ௯௨.) 8. பிளத்தல். (ஆப். ௯௨.) 9. பேயினுற் பிடிக்கப்படுதல். (ஆப். ௯௨.) 10. மண்தோண்டுங்கரு வி. (ஆப். ௯௨.) 11. மண்தோண்டுத ல். (ஆப். ௯௨.) 12. வணக்கம். (உ வில். அ௦.) 13. வற்புறுத்தல். (உவி ல். அ௦.) [1, 2, 7, 9, 12. அவதாரண; 3, 8, 10, 11. அவதாரண; 4, 5, 6, 13. அ வயாரண.]

அவதாரம் — 1. அயோநிசம்பந்தமாய் வெளிப்படுதல், இறங்குதல். (கூர்ம பு. தேவிதிருவ. முகம்.) 2. (தேவன து) உற்பத்தி. (உ-ம்.) "இடைநிகழ்ந் தவிராமாவதாரப்பேர்" (இராமா.பா யிர. ௧௧.) 3. குளம். (ஆப். ௯௨.) 4. கேணி. (ஆப். ௯௨.) 5. தீர்த்தக்கரை. (உவில். அ௦.) 6. நுட்பமாய் நிச்சயி த்தல். (ஆப். ௯௨) 7. முகவுரை. (ஆ ப். ௯௨.) 8. மொழிபெயர்த்தல். (உ வில். அ௦) 9. வெட்டுதல். (உ-ம்.) "தலை யவதாரம்பண்ண" (உவின். ௪௪) [1, 2, 3, 4, 5, 7, 8. அவதார; 6.அ வயார.]

அவதாரிகை — அவதாரஞ்செய்தல். (ஆப். ௯௨.) 2. வாக்கியத்தின் மூகத் துரைக்கும் உரை. (ஞாகவா.) [அவதாரிகா.]

அவதாவநம் — 1. சுத்திசெய்தல். (உ வில். அ௦) 2. துரத்துதல். (உவில். அ௦.) 3. பின்தொடருதல். (உவில். அ௦.) [அவயாவந: அவ; யாவந--ஓடுதல்.]

அவதி — 1. அளவு. (உ-ம்.) "எள்ளவ தியேனுங்கன்ம மடாது" (கம்பரா. ௪௮.) 2. இறுதி. (உவில் அ௧) 3. நி யமிப்பு, விதி.(உ-ம்.) "அக்காலத் தே யகலுமோவவதியென் றொன்று ளதானுல்" (இராமா. தைல. ௮௪.) 4. (காலத்திலாவது இடத்திலாவ து) எல்லை. (ஆப். ௯௨.) 5. ஐந் தாம் வேற்றுமை. (உ-ம்.) "ஒழியவ தி" (பி. வி. ௯.) [இது நீக்கப்பொரு ளுடையது.] 6. கணக்கு. (உ-ம்.) "ஆ யிரமாயிரமவதிசேரவுணர்தஞ் - சே யதண்குஞ்சியைச் செங்கையாற் பற் றியே" (கந்தபு. வச்சிரவா. ௫௪.) 7. கவநம். (உவில் அ௧.) 8. காலப்பகு தி. (ஆப். ௯௨.) (உ-ம்.) "போனவ வதியில்நாம்மிகவருத்தப்பட்டோம்" (உவின். ௪௪.) 9. காலம். (உ-ம்.) "க ங்குலவதியுமுறங்கா துற்றான்" (கந் தபு. கந்தவிர. ௧௯.) 10. கிடங்கு.(உ வில். அ௧.) 11. துன்பம். (உ-ம்.) "இ ன்னம்பாழவதிப்படவெனக்கு முடி யாது" (தாயு. பன்மாலை. ௬.) [அவதி.]

அவதிகத்தம் — 1. கடனுரை. (உவின். ௪௪.) 2. காலாந்தரத்தில் இற்றுவந் த கடவிப்பியின் ஓடு. (உவின். ௪௪.)

அவதிகாரகம் — ஆறு காரகபதங்களி ல் ஒன்று; அஃது: யாதொன்றினின் று ஒருபொருள் நீங்குமோ அது. இ ஃது "யாதனினீங்குமவதியதாம்" எ ன்பதனுற் பெறப்படும். (வீரசோ. உ பகாரக. ௧.) [அவயி; காரக.]

அவதிஞாநம் — 1. அதீதகதமான பரிஞ்

ஞாநம்" அது முற்பிறப்பை யறியும் அறிவு. (சிலப். நாடு. கசுஎ. உரை.) 2. மூக்காலத்தையும் அறியும் அறிவு. (நினைக்கும் அவதியிற்றோன்றும் ஞாநம் என்றபடி.)

அவதிதரிசநம் — தரிசநாவரணியம் ஒன்பது பேதத்துள் ஒன்று. (சி. சி. அ: சஉ. மறை.)

அவதிப்படல் — துன்பப்படல். (உ-ம். "அவதி" 1 பார்.)

அவதீரணம் — அவமதித்தல். (உவில். அக.) [அவதீரண.]

அவதும்பரதட்டரோகம் — ஒருவகைக் குட்டரோகம்; இதிற், சொப்புளங்கள் அத்திப்பழத்தை யொத்து விஸ்தரித்துச் சீக்கிரத்திற் பிறந்து நசுங்கிக் குழிவிழுந்த இரணங்களாகும். (சீவரட். சசஎ.)

அவதும்பராய் — அத்திக்காய். (சீவரட். சசஎ.)

அவதூதகீதை — அதிவர்ணாச் சிரமத்தைக் கூறும் ஒருநூல். (உவின். சச.)

அவதூதம் — 1. அசைக்கப்பட்டது. (வென். சசங.) 2. அடிக்கப்பட்டது. (வென். சசங.) 3. அவமதிக்கப்பட்டது. (வென். சசங.) 4. சிதறப்பட்டது. (வென். ஙசங.) 5. திருப்பியனுப்பப்பட்டது: (வென். சசங.) 6. நீக்கப்பட்டது. (வென். சசங.) 7. மல்லயுத்தத்திலொருவகை; அது: புறங்கையாற் கீழே தள்ளுவது. (கூர்மபு. அட்டமூர்த். உகூ. உரை.) [அவதூத.]

அவதூதர் — லௌகிகப் பற்றுக்களனைத்தையும் ஒழித்த ஒரு சந்நியாசி. (ஆப். கஉ.) இவர் அறுவகைச்சந்நியாசிகளிலொருவர். (கூர்மபு. வருணா. சo. உரை.) [அவதூதக.]

அவதூதன் — அதிவர்ணாச்சிரமி. (ஆப். கஉ.) இலௌகிகபந்தம் அனைத்தையும் விட்டு நீத்தவன். (வென். சசச.) [அவதூத:]

அவதூதி — அவதூதன். (உவின். சச.)

அவதூநநம் — 1. அகற்றல். (உவில். அக.) 2. அசைத்தல். (உவில். அக.) 3. அசைதல். (உவில். அக.) 4. கலங்குதல். (உவில். அக.) 5. மிதித்தல். (உவில். அக.) [அவதூநந: அவ-முன். தூந-அசைதல்.]

அவதூறு — 1. நிந்தை. (மா.) 2. பிறர் பழிகூறுதல். (மா.)

அவதோகம் — பால். (உவில். அo.) [அவதோஹ: அவ; துஹ-கறத்தல்.]

அவந்தரை — 1. குளப்பம். (உவின். சடு.) 2. கைவிடப்பட்டவன். (உ-ம்.) "அவந்தரையாய்ச்சாக" (உவின். சடு.) 3. சேதம். (உவின். சடு.) 4. பிரயோசநம் இன்மை. (உ-ம்.) "அவந்தரையாய்ப்போக" (உவின். சடு.)

அவந்தன் — பாக்கியகேடன், வீணன். (உ-ம்.) "நின்மகனவந்தனாய் வெறுநிலத்திருக்கலானபோது" (இராமா. மந்தரை. டுடு.)

அவந்தி — 1. அவந்திதேசத்தார். (ஆப். கூங.) 2. ஐம்பத்தாறு தேசங்களுள் ஒன்று; அது: சத்தபுரிகளுள் ஒன்றாகிய உச்சயினி புரம். (உபதேசகா. சிவநாம. சoஅ.) 3. ஒருநதி. (ஆப். கூங.) 4. காடித்தண்ணீர். (உ-ம்.) "அதிலவந்தியுமெண்ணெயுமுபயமுபயம்படிபெய்" (தைல. தைலவ. கககூ.) 5. கிளிப்பறவை. (பிங்க. ஙoகூகூ.)

அவந்திக்கண்ணி — மெருகன் கிழங்கு. (கா. வைத்.)

அவந்திகன் — அவந்திதேசராசன். (உ-ம்.) "இவனேகண்டா யவந்திகனென்னச் சொன்னாள்" (இரகுவமி. மாலையீ. கூங.)

அவந்திகை — 1. அவந்திநகரம். (உ-ம்.) "அழகியவயோத்தி மதுரையே மாயை யவந்திகை காசி நற்காஞ்சி-விழுமிய துவரை யெனப்புவிதன்னின் மேலவாய் வீடருள்கின்ற-வெழுநகரத்துள்" (கந்தபு. திருநகர. எடு.) 2. கிளிப்பறவை. (சூ. நிகண். கூ: டுடு.)

அவந்திசோமம் — புளித்த கஞ்சி. (உவில். அக.) [அவந்திஸோமம். ஸோமம்-கஞ்சி. அவந்தி நகரிற்செய்யப்படுவது.]

அவந்தியன் — அவந்தி தேசத்தவன். (உ-ம்.) "அவந்தியன்முரசமார்ப்ப" (சிங். காந்த. சஉக.)

அவநதம் — 1. குனிதல். (உவில். அக.) 2. தலைகவிழ்தல். (உவில். அக.) [அவ-கீழ். நத-வளைதல்.]

அவநதர் — 1. குனிந்தவர். (உவில். அக.) 2. தலைகவிழ்ந்தவர். (உ-ம்.) "ஓமென வோதாதவநதரானார்" (கோயிற்பு. நடரா. கூடு.)

அவநதன் — 1. குனிந்தவன். (உவில். அக) 2. தலைகவிழ்ந்தவன். (உ-ம்) "அரசனவநதனானான்" (கோயிற்பு. இரணி. சச.) [அவநத: அவ-கீழ். நத-வணங்கல்.]

அவநதி — 1. குனிதல். (உவில். அக.) 2. தலைகவிழ்தல். (உவில். அக.) 3. தாழ்மை. (ஆப். கஉ.) 4. மரியாதை. (ஆப். கஉ.) 5. மேற்குத்திசையில் அத்தமித்துப்போதல். (ஆப். கஉ.) 6. வணக்கம். (ஆப். கஉ.) [அவ-கீழ். நதி-வளைதல்.]

அவநம் — 1. அலங்கரித்தல். (உவில். அக.) 2. இருத்தல். (உவில். அக.) 3. காத்தல். (உவில். அக.) 4. கொல்லல். (உவில். அக.) 5. செய்தல். (உவில். அக.) 6. தழுவுதல். (உவில். அக.) 7. தாங்குதல். (உவில். அக.) 8. திருத்திகொடுத்தல். (உவில். அக.) 9. திருத்தியடைதல். (உவில். அக.) 10. தீவிரம். (உவில். அக.) 11. பட்சம், அன்பு. (உவில். அக.) 12. பிடித்தல். (உவில். அக.) 13. பெலன். (உவில்.

அக.) 14, தரும்படி கேட்டல். (உவில். அக.) 15. போதல். (உவில். அக.) 16. விருத்தியாதல். (உவில். அக.) 17. விருப்பு. (உவில். அக.) [அவந.]

அவநம்பிக்கை—நம்பிக்கையீனம். (உவின். சஙு.) [அவ-கேடு.]

அவநாசி—கோயம்புத்தூருக் கருகிலிருக்கும் ஒருசிவத்தலம். (உவின். சஙு.) 2. சரச்சுவதி. (மா.)

அவநாயகம் — இறங்கச்செய்தல். (உவில். அக.) [அவ—கீழ். நாயகம்—அடைவித்தல்.]

அவநி—1. பூமி. (உ-ம்.) "அன்றெனக்கு நீயிசைந்தவவநிபாதி யமையும்" (பாரத. வாரணு. அஉ.) 2. மருதநிலம். (இராசவைத்.) [அவநி: அவ—காத்தல்.]

அவநிகேள்வன்—விட்டுணு. (பூமிதேவிக்கு நாயகன் என்றபடி.) (உ-ம்.) "அவநிகேள்வனு நாற்றிசைமுகமுடைடனிநத்தேவுமே" (கந்தபு. திருவவதா. எ০.)

அவநிந்தை—தூஷணம். (மா.)

அவநிபதி—1. அரசன். (உவில். அக.) 2. உதிட்டிரன். (உவில். அக.) 3. விட்டுணு. (உவில். அக.) [அவநி-பூமி, பூமிதேவி. பதி—தலைவன்.]

அவநிபர்—அரசர். (உ-ம்.) "அந்தவந்தவவநிபரெலா மபயம்பயமென்றடிவணங்கவே" (பாரத. இராசசூ.சச.) [அவநி—பூமி. பர்—காப்பவர்.]

அவநிபன்—அரசன். (உ-ம்.) "அவனிபனகரியில்" (பாரத. வாரணு. கஅ.)

அவநிபாரகன் — அரசன், (மா.) [அவநி-பூமி. பாரகன்—காப்போன்.]

அவநிபாலகன் — அரசன். (உவில். அக.) [அவநிபால;: அவநி—பூமி. பால:-காப்போன்.]

அவநிபாலர்—அரசர். (உ-ம்.) "இந்நிலத்தவநிபாலரிவ்வகை யிரங்கியேங்க" (பாரத. பதின்மூன். கசக.)

அவநிபாலன்—அரசன். (உவில்.அக.) [அவநிபால: பால:—காப்பவன்.]

அவநியாயம் — நியாயகீனம். (உவின். சஙு.)

அவநீதம்—நீதவீனம். (மா.) [அவ; நீயு—நடத்துதல்.]

அவநீதி—நீதியின்மை. (உ-ம்.) "மறனுறுமவநீதியை" (பாகவத. குருகுல. சஙஎ.)

அவநுதி—1. (இலக்கணம்.) ஓரலங்காரம்; அஃது: ஒன்றன் உண்மையைமறுத்துப் பிறிதொன்றாக உரைப்பது. "நறைகமழ்தார் வேட்டார் நலனணியு நாணு-நிறையு நிலைதளரா நீர்மை-யறநெறிசூழ் - செங்கோலனல்லன் கொடுங்கோலன் றெவ்வடுபோர்—வெங்கோபமால்யானை வேந்து" என்பதிற்போல. இதன்கண் செங்கோன்மையுடைமையாகிய சிறப்புண்மையை மறுத்துக் கொடுங்கோன்மையாகிய பிறிதொன்றாகக் கூறியவாறு காண்க. "சிறப்பினும் பொருளினுங் குணத்ினு முண்மை- மறுத்துப் பிறிதுரைப்பதவநுதியாகும்" (தண்டியலங். பொருள். எகூ.) 2. துதித்தல், புகழ்தல்.

அவநுதியுருபகம் — ஒருவகையுருபக அலங்காரம்; அது: "பொங்களகமல்லபுயலே" யென்றதிற்போல, உண்மைப் பொருளைமறுத்து ஒப்புமைப் பொருளைப் பொருளாகச் சாதிப்பது. "உவமையேது வேற்றுமை விலக்கேயவநுதிசிலேடையென்றவற்றொடும்வருமே" என்னுந் தண்டியலங். கஎ-ம் சூத்திரமும் உரையும்.

அவநெறி—பாவவழி. (உ-ம்.) "தீவினையாலவநெறியிற்செல்லாமே" (பெரியபு. தடுத்தா. எகூ.)

அவநேசநம் — 1. கழுவுதற்கானநீர். (ஆப். கூகூ.) 2. சிராத்தக்கிரியையிலே தர்ப்பையில் நீர்தெளித்தல். (ஆப். கூகூ.) [அவநேஜநம்: அவ; நேஜநம்—கழுவுதல்.]

அவப்பிரசவம்—ஆறுக்குமேலானமாதங்களிலே கருவழிதல். (சி. சி. உ: கூகூ. மறை.)

அவப்பிரஞ்சம்—அபப்பிரஞ்சம். (உவின். சஙு.) [அவ ஸ்ரம்ச.]

அவப்பெயர் — துர்க்கீர்த்தி. (உவின். சஙு.)

அவப்பொழுது—வீண்பொழுது. (உ-ம்.) "அவப்பொழுதகலவிருப்பதென் விருப்போ" (வைராக். தீப. கஅ.)

அவபத்தி—1. பத்தியின்மை. (உவின். சஙு.) 2. வீண்பத்தி. (உவின். சஙு.)

அவபத்தியம் — பத்தியந் தவறுதல். (மா.) [அவ; பத்ய-இணக்கமானது.]

அவபாதுகவாதம்—தோள்களைக் கூம்பச்செய்யும் ஒரு நோய். (சீவரட். ககூஅ.) [அவ—கீழ். பாஹு—தோள், வாதம்.]

அவபாசகத்துவம் — விளக்குதல். (வென். ருஎ.) [அவஹாஸகத்வ.]

அவபாசகம் —1. ஒளியுடையது. (ஆப். கூகூ.) 2; பரப்பிரமம். (ஆட்.கூகூ.) [அவஹாஸக.]

அவபாசகன்—விளக்குகிறவன். (வென். ருஎ.) [அவஹாஸக;]

அபாசனை — 1. விளக்குதல். (வென். ருஎ.) 2. விளங்குதல். (வென்.ருஎ.) [அவஹாஸநா.]

அவபாசம்—1. அறிவு. (ஆப். கூகூ.) 2. இடம், எல்லை. (ஆப். கூகூ.) 3. ஒளி. (ஆப். கூகூ.) 4. காட்சியறிவு. (ஆப். கூகூ.) 5. தோற்றுதல், வெளிப்படுதல். (ஆப். கூகூ.) 6. விபரீதஞானம்.

(ஆப். கூரு,)
[அவஹாஸ: அவ; ஹாஸ்—ஒளி.]

அவபாதநம் — 1. தறித்தல். (உவில். அக.) 2. வெட்டுதல். (உவில். அக.) [அவபாதந: அவ—கீழ். பாதந—விழுதல்.]

அவபாதம் — 1. இறங்குதல். (உவில். அக.) 2. படுகுழி. (உவில். அக.) 3. யானைப்படுகுழி. (ஆப். கூரு.) 4. விழுதல். (ஆப. கூரு.)
[அவபாத; அவ-கீழ்.பாத-விழுதல்.]

அவபிருதம் — 1. சுத்திசெய்தற்கான சலம். (உ - ம்.) "அரசராடுறுந்ரவபிருதத்திலாடுக" (சூத. ஞாந. சுழுவா. ௯.) "நிகழ்பெருவேள்வி முற்றி நிறைந்த செய்க்குண்டந்தன்னைத்-திகழ்சிவகங்கைப்பேராற் றீர்த்த நாயகமாச்செய்து-புகழவபிருதநன்னீராடினன்" (காஞ்சிபு. கச்சி. ௨௧.) 2. முதலாம் யாகத்திலுண்டான குறையை நீக்கச் செய்யும் இரண்டாம யாகம். (ஆப். கூரு.) 3. யாகமுடிவிலே சுத்திசெய்தற் பொருட்டுச் செய்யும் ஸ்நாநம். (ஆப். கூரு.)
[அவஹ்ருய:]

அவபுத்தி—துர்ப்புத்தி. (உவின்.சடு)

அவபேதகம் — பிளத்தல். (சீவரட். ௬௭௪.)[அவ; ஹேத:ஹித்-பிளத்தல்]

அவபேதகவாதம்—ஒருவகைவாதரோகம்; அது; கண், புருவம்,நெற்றியென்பனவகளிலே வியாபித்து நெற்றி பிளந்துபோவதுபோலச் சகிக்கக்கூடாத வேதனையைச் செய்வது. (சீவரட். ௬௭௪) [அவஹேத:; வாத.]

அவபோதகன் — 1. உபாத்தியாயன். (உவில். அக) 2. சூரியன். (ஆப்.கூரு) 3. விழிக்கச் செய்வோன். (உவில். அக.)
[அவபோதக: அவ;போத-அறிவு]

அவபோதநம்—1. அறிவு. (ஆப்.கூரு) 2. காட்சியுணர்வு. (ஆப். கூரு.)
[அவபோதந.]

அவபோதம் — 1. அறிவித்தல். (ஆப். கூரு.) 2. அறிவு. (உவில். அக.) 3. ஊகம். (உவில். அக.) 4. படிப்பித்தல் (உவில்.அக) 5. விழிப்பு. (உவில்.அக) [அவபோத: போத—அறிவு.]

அவபோதரூபம்—அறிவுருபம். (சி-லி. சரி. அவதாரிகை.)

அவம் — 1. ஆகாயத்தாமரை. (இராசவைத்.) 2. கேடு, தீமை. (உ-ம்.) "அவஞ்செய்வாராசையுட்பட்டு" (வள். ௨௬௬.) "அன்றே மக்கட்பெற்றுயிர் வாழ்வார்க்கவமுண்டோ" (இராமா. தைலமா. ௬௫.) 2. பயனில்லாதசெயல்" (உ-ம்.) "புலியரவங்கடியாதுழல்வா ரிப்புவநியிலே" (புலியூரந். ௭௧.) 3. பயனின்மை, வீண். (உ-ம்) "அம்மையினு ரத்தவம்புரியாதவமே பிறந்தேற்கு" (தணிகைக.களவு.௬௬௪)

அவம்போதல் — வீணாகப்போதல்.

அவமதாங்குசம்—1. தோட்டிக்கடங்காத யானை. (உவில். அஉ.) 2. போகத்திலே நிற்கும் யானை. (உவில்.அஉ) [அவமதாங்குஶ: அவமத-அவமதிக்கப்பட்ட. அங்குஶ-தோட்டி.]

அவமதி—1-3. அவமதியென்னேவலும் தெரிநிலைவினைப்பகுதியும் பெயரெச்சத்தொகையும். 4. நிந்தை. (உ-ம்) "இழிஞன்புலைக்கரந்தீண்டியென்னை யவமதிசெய்திட" (காஞ்சிபு. பரசிரா. ௬௨.) 5. வெறுப்பு. (உவில்.அஉ)
[4, 5. அவமதி.]

அவமதிச்சிரிப்பு—நிந்தனையாகச் சிரித்தல். (உவின். சடு.)

அவமதித்தல் — இகழ்வாக மதித்தல். (உ-ம்.) "பரனைக்குருவை யவமதித்தோர்" (தணிகை. அகத். ௯௬௬.)

அவமதிப்பு—இகழ்வாகமதித்தல். (உ-ம்.) "அவமதிப்புமான்ற மதிப்பும்" (நாலடி. பெரியாரை. ௬.)

அவமந்தம்-கலத்தல். (சீவரட். ௯௭௫)

அவமந்தரோகம்—ஆண்குறியிலே வரும் ஒருவகைரோகம்; அது: ஆண்குறியில் நீளவடிவாய் அநேக கொப்புளங்களை யுண்டாக்க, அக்கொப்புளங்களின் நடுவில் வீறலுண்டாகிச் சீழ் இரத்தம் ஒழுகுவதும் அன்றி வேதனையும் ரோமச் சிலிர்ப்பு முண்டாம். (சீவரட். ௯௭௫) [அவமந்தம்-கலத்தல். இது பல உபத்திரவங்களோடு கலந்து வெளிப்படுதலால் வந்த பெயர்.]

அவமரணம்—அகாலமரணம். (உவின். சடு.)

அவமரியாதை-மரியாதைத்தவறு. (உ-ம்.) "பொன்போலும் அரியதவத்தையுடையஎல்லாமுநிவர்களுங்கோபித்து எங்களுக்கு அவமரியாதைசெய்தபடியினாலே" (அருணசலபு. இடப்பாக. ௪௬ உரை.)

அவமழை—கேடுசெய்யும் அகாலமழை (உவின். சடு.)

அவமா—மூன்றுதிதி யொருநாளிற் கலந்திருப்பது. (தாரணவரு. பஞ்சாங். ௬.)

அவமாக்கல் — வீணாக்கல். (உவின். சடு.)

அவமாநம் — 1. இழிவு. (உ-ம்.) "ஆசிரியன்வாடவவமாநமதுசெய்தோன்" (சூத. எக்கி. பூ. ௬௭: ௬.) 2. மாநகிநம். (உ-ம்.) "அமணர்கடாமென்னை யவமாநஞ் செய்ய" (பெரியபு. தண்டி. ௧௧.)
[அவ; மாந—மதிப்பு.]

அவமாநித்தல் — 1. அவமாநப்படல். (பாரதவெண். ௬௭௫.) 2. அவமாநப்படுத்தல். (உ-ம்.) "மாதகம்வெருவ வேந்தரவைமினிலவமாநித்த—பாதகன்" (நல். பார. சொர்க்கரோ. ௬௪.)

அவமாநிதம் — அவமாநம் அடைந்தது. (உவில். அஉ.)

அவமிருத்தியோகம் — திருவாதிரை கேட்டை ஆயிலியம் பரணி கார்த்திகை முப்பூரம் என்னும் நாட்களுடனே பாவவாரமும் இருத்தையுங் கூடிவருவது. [இந்தயோகத்திலே வியாதி கொள்ளின் மரணம்வரும். என்பது பற்றிவந்தபெயர்.] (விதாந. பஞ்சாங்க. சகூ. உரை.)

அவமிருத்து — 1. அபமிருத்து. (உ-ம்.) "பல்கோடிசன்மப்பகையு மவமிருத்தும்" (கர்தர்கலி, கககூ.) 2. (சோதிடம்) கேதுவின்மகன் (குமார.திரா. உ. உரை.)

அவமோசநம் — 1. விடுதல். (உவில். அஉ.) 2. விடுதலையாக்கல். (உவல். அஉ.) [அவமோசந. அவ; மோசந-விடுதல்.]

அவயம் — 1. (கோழிமுதலியன) அடைகிடத்தல்: (உவின். சரு.) 2: அழுகை. (சி.) 3. இலாமிச்சைச்செடி. (கா. வைத்.) 4. நன்மையின்மை. (சி.)

அவயவசாபிண்டியம் — தேக உறுப்புக்களின் கலப்பினாற் சபிண்டராயிருக்குந்தன்மை. (அவயவ சம்பந்தத்தால் மகனும் தகப்பனுஞ் சபிண்டசம்பந்தம் உடையோர்.) (பரா. மி. கூஎ.)

அவயவம் — 1. அநுமானவாக்கியத்தினுறுப்பு; அவ்வுறுப்புக்கள்: பிரதிஞ்ஞை, ஏது, உதாரணம், உபநயம், நிகமநம் என ஐந்து. (தர்க்கபா. எஉ.) 2. உடம்பு. (ஆப். கூச.) [அவ-யு-இணைத்தல்.] 3. உறுப்பு. (உ-ம்.) "ஆரமந்தொறுந் தங்களவயவம்போல் வனகொய்தார்" (பாரத. காண்ட. கூ.) 4. ஒருபொருளின் ஏகதேசமாய்த் தனித்தனி பிரிக்கப்படுந் தகுதியுடையது. ஆடையின் ஏகதேசமாய்த் தனித்தனி பிரிக்கப்படும் நூல்கள் போல. (சிவஞாநபாடியம், உச.)

அவயவவுருவகம் — 1. உருவக அலங்காரத்தின் ஒருவகை; அஃது: அவயவத்தை உருவகஞ்செய்து அவயவியை வாளா உரைப்பது. "புருவச்சிலைகுனித்துக் கண்ணம்பெண்ணுள்ள—முருவத்துரந்தாரொருவர்" என்பதிற்போல. (தண்டியல. ரூகூ-ம் உரையும்.)

அவயவி — அநுமாநவாக்கியம். (ஆப். கூச.) 2. அவயவத்தையுடையது. (ஆப். கூச.) 3. உடம்பு. (உவின். சரு.) [அவயவிந்: அவயவம-உறுப்பு. இ—ஒருவிகுதி.]

அவயவியுருவகம் — உருவக அலங்காரத்தின் ஒருவகை; அஃது: அவயவியை யுருவகஞ்செய்து அவயவத்தை வாளா உரைப்பது. "வார்புருவங்கூத்தாட வாய்மழலைசோர்ந்தசைய—வேர்வரும்பச்சேந்து விழிமதர்ப்ப—மூரல்-அளிக்குந்தெரிவை வதனாம்புயத்தாற்—களிக்குந் தவமுடையேன்கண்" என்பதிற்போல. (தண்டியல. ரூகூ-ம் உரையும்.)

அவயோகம் — 1. துர்ச்சம்பவம். (உ-ம்.) "தீமைதூற்றுமனையவண்முகங் கண்டவயோக முணர்ந் தழித்து" வேதாரணியபு. அக்கிநிதீர். அ.) 2. நாசயோகம். (விதாந. குணகுண. க. முகத்துரை.)

அவர் — அவர்கள். (பலர்பாற்படர்க்கையில்வரும் ஒருசுட்டுப்பெயர்) (உ-ம்.) "புவியினைரேனையர் புராணந்தேரினுஞ்—சிவகதையுணர்கிலரென்னிற்றீருமோ—வவர்மயல்" (கந்தபு. அவையட. கக) 2. உயர்திணைப் பொருள். (உ-ம்.) "அவையவரரய்" (சிவப்பிரகாச. உ;க.) உயர்திணையில் ஒருமைச்சிறப்பாய் வருவதொரு சுட்டுப்பெயர். 3. நாயகன். (இது நாயகி தன்னாயகன்பெயர் கூறாது படர்க்கையிற் சுட்டிச் செல்லுமிடத்து வழங்குவது.) (உ-ம்.) "யானுரைப்பதவர்திறம்" (வள். ககஅச.)

அவர்கள் — பலர்பாற்படர்க்கையில் வரும் ஒருசேய்மைச்சுட்டுப்பெயர். (உ-ம்.) "அவர்கண்முன்றேன்ற" (சூத எக்கி. பூ. உ0: உக.)

அவர்ச்சநீயம் — தள்ளிவிடத்தக்கதல்லாதது. (உ-ம்.) "அவர்ச்சநீயசம்சித்தபஞ்ச கிருத்திய கர்த்திருத்துவம்" (சி. சி. சூ: க. ஞாந.) [அ- எதிர்மறை. வர்ச்சநீயம்—தள்ளத்தக்கது. உவில். எசூஉ.]

அவர்ணியம் — வர்ணித்துச்சொல்லப்படுவதல்லாதது. [அ—வர்ண்ய-வர்ணித்துச்சொல்லப்படுவது. ஆப். எசூஎ)

அவர்வயின்விதுப்பல் — பிரிவின்கண் தலைமகனுந் தலைமகளும் வேட்கைமிகுதியால் ஒருவரிடம ஒருவர்செல்ல விரைதல். (வள். கஉஎ-ம் அதி.)

அவரகாத்திரம் — 1. கால். (சிந். காந்த. ரூகச. உரை.) [அ-எதிர்மறை. வர-சிரேட்டம், காத்ர-உறுப்பு. வரகாத்திரம் என்பதனைத் தலையென்றும் அவரகாத்திரம் என்பதனைக் கால் என்றும வடநூலார் கூறுவர் என்றுர் நச்சினார்க்கினியர்.] 2. யானையின் பின்காலும முன்காலும் [அவரம்- யானைப்பின்கால். (ஆப். கூச) நாது-யானைமுன்கால். (ஆப். உஅஅ.)

அவரசன் — 1. சூத்திரன். (ஆப். கூச.) 2. தம்பி. (உவில். அஉ.) [அவரஜ: அவர—கீழ், பின். ஜ: பிறந்தவன்.]

அவரசை — தங்கை. (ஆப். கூச.) [அவரஜா: அவர-பின். ஜா—பிறந்தவள்.]

அவரசைலம் — அஸ்தமயமலை. (ஆப். கூச) [அவரம்—மேற்கிலுள்ளது. சைலம்-மலை.]

அவரம் — 1. கடைசியானது. (ஆப். கூச) 2. கீழ்மையானது. (உவில். அஉ.) 3. பிரதாநம் அல்லாதது. (ஆப். கூச.) 4. பின்புறம். (உவில். அஉ.) 5. பின்வருவது. (ஆப். கூச.) 6. மேற்கிலுள்ளது. (ஆப். கூச.) 7. யானைப் பின்னங்கால், யானைப்பின்னந்தொடை. (உவில். அஉ.) 8. வயசிலிளையது. (உவில். அஉ.)

அவராகம்—இச்சையின்மை. (உ-ம்.) "தராதலமென்னுஞ்செங்கண்-மானவராகவேத மலர் முநிதனக்குச் சொன்னான்" (பாரத. சூதுபோர்.உ0ச.) [அவ-எதிர்மறைப்பொருளில் வந்த ஒரு உபசர்க்கம்; அவபத்தியம் என்பதிற்போல. ராகம-இச்சை.]

அவருணியம்—அவர்ணியம். (உ-ம்.) "பொதுச்சிறப்புக்களிலொன்று வருணியமாகவும் ஒன்றவருணியமாகவும் இருப்பனவாம்" (துவ. சுக. உரை.)

அவரை—ஒருகொடி. (உ-ம்.) "குளிர்புரைகொடுங்காய் கொண்டனவவரை" (மலைபடு. கக0.) அது: முறுக்கவரை, காட்டவரை, கொத்தவரை, சிவப்பவரை, பேயவரை, நகரவரை, பேரவரை, பாலவரை, கணுவவரை, தீவாந்தரவவரை, வாளவரை, சிற்றவரை யெனப் பலவகைப்படும். (உவின். சரு.)

அவரோகணம்—1. இறங்குதல். (உவில். அரு.) (இதற்குச் சில சம்ஸ்கிருத அகராதிகளிலே "ஏறுதல்"எனவும் பொருள் எழுதப்பட்டிருக்கின்றது; தமிழில் வழங்கக் காணமையால் அதனைச் சேராதுவிட்டோம்.) 2. விழுது. (சி.)
[அவரோஹண.]

அவரோகணமந்திரம்—ஒருமந்திரம். (பிரபஞ்ச. கஎசு.)

அவரோகம்—1. அடிதொடங்கி மரத்தைச்சுற்றிக் கொடிபடருகை. (ஆப். கூச.) 2. இறங்குதல் (ஆப். கூச.) 3. சுவர்க்கம். (ஆப். கூச.) 4. (ஆலமரமுதலியவைகளின்) விழுது. (ஆப். கூச.)
[அவரொஹ: அவ-கீழ். ருஹ் - ஏறுதல்.]

அவரோகி—ஆலமரம். (உவில். அரு.)
[அவரோஹிந்: அவரோஹம்-விழுது. இ-உடைமையை யுணர்த்தும் ஒரு விகுதி.]

அவரோதநம்— 1. அரசன் மனையில் அந்தப்புரம். (உவில். அஉ.) 2. தடுத்தல். (உவில். அஉ.) 3. முற்றுகை, அரணைவளைத்து வழிதடுக்கை. (ஆப். கூச.)
[அவரோ$_{ய}$ந.]

அவரோதம்—1. அடைக்கப்பட்ட இடம். (ஆப். கூச.) 2. அரசன் மனையிலே யவன் தேவி யிருக்கும் உள்வீடு. (உவில். அஉ.) 4. கட்டுப்பாடு செய்தல். (ஆப். கூச.) 5. குழியாதல். (ஆப். கூச.) 6. தடை. (உவில். அஉ.) 7. முற்றுகை, அரணைவளைத்து வழிதடுக்கை. (ஆப். கூச.) 8. வேலி. (உவில். அஉ.)
[அவரோ$_{ய}$: அவ; ரு$_{ப}$-தடுத்தல்.]

அவரோபணம்—1. இலதாசச் செய்தல். (ஆப். கூச.) 2. இறக்குதல். (ஆப். கூச.) 3. குறைத்தல். (ஆப். கூச.) 4. வேரோடுபிடுங்குதல். (ஆப். கூச.)
[அவரோபண.]

அவல்—1. ஒரு சிற்றுணவு; இது நெல்லைத் தண்ணீரிலே நனையவைத்துப் பின் சிறிது உலரச்செய்து, உரலிலிட்டிடித்தெடுக்கப்படுவது. (உ-ம்.) "அவலெறியுலக்கைபோயதிரத் தாக்கலும்" (தணிகை. திருநகர. கூரு.) 2. குளம். (உவின். சசு.) 3. பள்ளம். (உ-ம்.) "மேடவல்சிலைவிளைநிலம்" (தணிகை. அகத். உசஎ.) 4. விளைநிலம். (உ-ம்.) "மெல்லவலிருந்தவூர்தொறும்" மலைபடு. சரு0.)

அவலக்கணம்—அவலட்சணம். (உவின். சரு.) [அவ; லக்ஷண.]

அவலச்சுவை — ஒன்பது சுவைகளுள் ஒன்று; அது துயருறுதல். (கலி. குறிஞ்சி. ச.)

அவலச்சுவையலங்காரம்-சுவையலங்காரவகையுள் ஒன்று; அது: பொறியுணர்வாலாகி யுள்ளத்திலே நிகழுந் துயலரக்குறிப்பது. (உ-ம்.) "கழல் சேர்ந்த தாள்விடலை காதலிமெய் தீண்டும்-அழல்சேர்ந்து தன்னெஞ்சயர்ந்தான் - குழல்சேர்ந்த-தாமந்தரியாதசையுந் தளர்மேனி-யீமந்தரிக்குமோவென்று" (தண்டியல. சுஅ.)

அவலட்சணம்—1. அழகின்மை. (மா.) 2. இலக்கணக்கேடு. (மா.) ஒழுங்கின்மை. (மா.)
[அவ; லக்ஷண.]

அவலட்சணன் — இலட்சணம் இல்லாதவன். (உவின். சரு.)

அவலத்தருக்கம்—குதர்க்கம். (உ-ம்.) "அவலத்தருக்கமறைவானும்" (சிவதரு. பாவ. ௫0.) [அவலம்-வீண். தர்க்கம்-நியாயம்.]

அவலத்தவிநயம்—விலக்குறுப்புப் பதினன்கனுள் ஒன்றாகிய சுவை ஒன்பதுவகையுள் ஒன்று; அஃது: அவலத்தவிநயமறிவரக்கிளப்பின்-கவலையொடு புணர்ந்தகண்ணீர்மாரியும் - வாடியசீர்மையும்வருந்தியசெலவும் பீடழியிடும்பையும் பிதற்றியசொல்லும்-நிறைகையழிதலு நீர்மையில்கிளவியும்-பொறையின்றாகலும்புணர்த்தினர்புலவர்" என்னுஞ் சூத்திரத்தால் விளங்கக்கிடந்தது. (சிலப். அரங்கே. காரு. உரை.)

அவலம்—1. எண்வகை மெய்ப்பாடுகளுள் ஒன்றாகிய அழுகை. (தொல். பொரு. உ௫க. உரை.) (உ-ம்.) "எரியின் மெழு-கன்னுளவலங்கூடியலமந்தலறினளால்" (உபதேசகா. சிவவிர. உசுஅ.) 2. குற்றம். (உ-ம்.) "உள்ளுமவலத்தையற்றார்" (சைவச. ஆசா. சு.) 3. சோர்வு. (உ-ம்.) "கைதொழுதவலங்கூர்ந்து நின்றனள்" (கந்தபு. வரவுகேள், கஎ.) 4. நோய். (தைல. தைலவ. கக௫.) 5. பிரயோசநம் அற்றது. (உ-ம்.) "அபூபமாதியனைத்தையு மவலமென்றே" (சிவதரு. சிவஞானயோ. சரு.) "கற்றதுங்கேட்டது மவலமாய்ப் போதனன்றோ" (தாயு. சச்சி. ௫.) 6. பெலகீநம். (ஆப். ௯அ.) 7. மனக்கவலை.

(உ-ம்.) "நெஞ்சத்தவலமிலர்" (வள். ௧0௭௨.) 8. வறுமை. (உ-ம்.) "கெடுக நின்னவலம்" (பெரும்பா. ௬அ.) [அவலம்.]

அவலம்பகசிலேட்டுமம் — இதயத்தாநத்திலே வாசம்பண்ணிக் கொண்டு, தனது சுப்ரவ பராக்கிரமத்தைக் கொண்டு திரிகத்தாநத்துக்கும், அந்த சாரத்தைக்கொண் டிதயத்தாநத்துக்குள், சலத்தொழிலைக் கொண்டு மற்றநான்கு சிலேட்டுமங்களுக்கும் ஆதாரமாயிருக்குஞ் சிலேட்டுமம். (சிவரட். ௫.)

அவலம்பகம் — பற்றுதல். (சீவரட். ௬.)

அவலம்பம்—1. ஆதாரம், சார்வு. (உவில். அ௬.) 2. ஊன்றுகோல். (உவில். அ௬.) 3. (கணக்கதிகாரம்) ஒரு ரேகையினின் றெழும்பித் தன திருபக்கத்துஞ் சமகோணம் வரத்தக்கதாக மேலே செல்லும் ரேகை. (உவில். அ௬.) 4. தூங்குதல். (உவில். அ௬.) [அவலம்ப.]

அவலம்பித்தல்—சார்ந்து நிற்றல். (உ-ம்.) "சாலம்பசிவயோகம் அவலம்பித்து" (சி. சி. ௬: ௧0. ஞாநப்.)

அவலாக்கு—அரக்கிலொருவகை. (உவின். ௬௪.)

அவலவவிநயம் — அவலத்தவிநயம். (சிலப். அரங்கே. ௧௬. உரை.)

அவலன் — உடற்குற்றம் உடையவன். (உ-ம்.) "அறவும்பரிய னவலன்" சைவச. ஆசா. அ.)

அவலி—1-2. அவலியென்னேவலுந் தெரிநிலைவினைப்பகுதியும். 3. பூனைக்காலிச்செடி. (கா. வைத்.)

அவலித்தல்—1. புலம்புதல், அழுதல். (உ-ம்.) "அவலித்தணங்குழையாவகை தேறற்கு" (தணிகை. களவு. ருகூஉ.) 2. மாம் வருந்துதல். (உ-ம்.) "யானெவன் செய்வலென்றேயவலியாவிருந்தபோதில்" (சிந். நாம. உஅரு.)

அவலீலை—1. அவமரியாதை, நிந்தனை. (ஆப். கூடு.) 2. விளையாட்டு, களிப்பு. (ஆப். கூடு.) [அவலீலா.]

அவலுஞ்சநம் — 1. கிழித்தல். (உவில். அ௬.) [அவ; லுச்-பிரித்தல்.] 2. வேரோடு பிடுங்குதல். (ஆப். கூடு.) 3. வெட்டுதல். (ஆப். கூடு.) [அவலுஞ்சந.]

அவலுண்டநம் — 1. களவு செய்தல். (ஆப். கூடு.) 2. நிலத்திலே விழுந்துருளுதல். (ஆப். கூடு.) [அவலுண்டந: லுண்ட-களவாடல். உருளுதல்.]

அவலேகநம் — நாவினாலே நக்குதல். (உவில். அ௬.) [அவலேஹந: லேஹந-நக்குதல்.]

அவலேகம்—1. இலேகியம். (ஆப். கூடு) 2. கஷாயம். (ஆப். கூடு.) 3. நக்குதல். (ஆப். கூடு.) [அவலேஹ: அவ; லேஹ-நக்குதல்.]

அவலேசம்— 1. அவமாநம். (உவின். ௪௬.) 2. அற்பம், சிறுமை. (உவின். ௪௬.) 3. ஆபத்து. (சி) [1, 2. அவ; லேஶ-அற்பம்.]

அவலேபநம் — 1. ஒன்றுதல், கூடுதல். (ஆப். கூடு.) 2. கெர்வம், இறுமாப்பு. (ஆப். கூடு.) 3. தைலம். (ஆப். கூடு.) 4. பூசுதல். (ஆப். கூடு.) [அவலேபந: அவ; லிப்-பூசுதல்.]

அவலேபம் — 1. அலங்காரம். (ஆப். கூடு) 2. ஒன்றுதல், கூடுதல். (ஆப். கூடு.) 3. கெர்வம், இறுமாப்பு. (ஆப். கூடு.) 4. நிந்தனை. (ஆப். கூடு.) 5. பூசுதல். (ஆப். கூடு.) [அவலேப.]

அவலை — 1. கடப்பு. (செ) 2. காடு, பாழ்நிலம். (உவில். ருஉ.) (உ-ம்.) "காடுங்கடப்புமவலையின்கண்ணும்" (பிங்க. ௬௪00.) [அவலா: அ-எதிர்மறை. லஹ-பிரயோசநம்.]

அவலோககன் — ஒற்றன், வேயன். (வென். ரு௬.) [அவலோகக: அவ; லோக-பார்த்தல்.]

அவலோகநம்—பார்வை. (உ-ம்.) "அநுக்கிரசாவலோகநம்" (சி. சி. அ: ௬. சிவாக்.) [அவலோகந.]

அவலோகம்— 1. பார்த்தல். (உவில். அ௬.) 2. பார்வை. (உவில். அ௬.) [அவலோக: லுக்-பார்த்தல்.]

அவலோகிதம்—காணப்பட்டது. (உவில். அ௬.) [அவலோகித.]

அவலோகிதன்—1. ஒருசமணமுநிவன். (உவில். அ௬.) (உ-ம்.) "ஆயுங்குணத்தவலோகிதன் பக்கல்" (வீரசோ. பாயி. உ.) 2. காணப்பட்டவன். (ஆப். கூடு.) [அவலோகித.]

அவவாதம் — கடைப்பிடி. (உவில். அ௬.) 2. கற்பித்தகட்டளை. (உவில். அ௬.) 3. நம்பிக்கை. (உவில. அ௬) 3. நிந்தனை. (உவில். அ௬) 4. வீண்பேச்சு. (உ-ம்.) "அம்புயநின்-வனேமுகம்போன் மின்னுளதெனின் வீணவவாதம்" (குவ. எதிர்நிலையணி. அ.) [அவவாத: வாத-பேச்சு.]

அவவிசுவாசம் — விசுவாச ஈனம். (மா.)

அவவு — அவா. (உ-ம்.) "அவவுக்கைவிடுதல்" (கலித்தொகை. ௧௪.) [குறியதன் கீழ் ஆகாரங் குறுகி யுகரமேற்றது.]

அவள்—1. உயர்திணைப் பெண்பாற் படர்க்கையிற் செய்மைச்சுட்டுப்பொருளில்வரும் ஒருபெயர். (உ-ம்.) "அவளால்வந்தவாக்கம்" (சி. சி. ௩: ௬௬.)

2. உயர்திணைப் பெண்பாற் பிரபஞ்ம். (உ-ம்.) "அவனவளதுவெனும வை" (சிவஞானபோ. க.)

அவளம் — பிரயோசநம் அற்றது. (உ-ம்.) "நோன்றுநின்றவளங்கடருகா ரணமாம்" (வேதா. சு. ருசு.) ["அவலம்" அவளம் எனத் திரிந்தது.]

அவஸிதை-இடுதிரை. (பிங். கஉகூச) [அபடீ. ஆப். சஎ.]

அவளிவணல்லூர் — ஒரு தலம். (தேவார. அவளிவ. சம்.)

அவற்கம்—சஞ்சி. (உவின். சசு.)

அவற்காளான் — ஒருவகைக்காளான். (உவின். சசு.)

அவன்—1. அவம். (உ-ம்.) "அவன்செயத்திருவுடம்பலச ஷோற்கின்றன்" (இராமா. சூர்ப். கஅ.) [குறிலிணைக்கீழ்வந்த மகரம் னகரப்போலியாயிற்று.] 2. உயர்திணையாண்பாற் படர்க்கையிற் சேய்மைச் சுட்டுப்பொருளில்வரும் ஒருபெயர். (உ-ம்.) "ஆறுனெவன்மற்றவனீள்கழற்கன்புசெய்வாம்" (கந்தபு. கடவு. உ.) 3. உயர்திணையாண்பாற்பிரபஞ்சம்" (உ-ம்) "அவனவளதுவெனுமவை" (சிவஞானபோ. க.)

அவா—1-3. அவாவென்னேவலுந் தெரிநிலைவினைப்பகுதியும் பெயரெச்சத்தொகையும்.[ச-ம்சு-ம் பொருள்களில் வருங்கால்உகரச்சாரியை பெறும்.] 4. ஆசை. (உ-ம்.) "புன்கட்டுதவர வேட்டையினவாவெறும் பொய்யேற்றின்கட்பேரவாயாதராரயா" (இரகுவ. தசரத. கூ.) 5. ஆசைப்பெருக்கம், பொருள்களைப்பெறவேண்டுமென மேன்மேல் நிகழும் ஆசை.(வள். கூஎ०.) 6. இறங்குகை. (உவின். சசு) 7. ஒருபதந் தன்னோடன்றுவயித்துப் பொருண் முடிதற்குரிய வேறொருபதத்தை வேண்டுதல். (சைவப்பி. ௨ டு.)

அவாது-கஞ்சி. (ஆப். எ०எ.) [யவாகூ இங்கே வடமொழியகரமெய் கெட்டது.]

அவாகேசவுப்பி — பெருந்தும்பைச்செடி. (கா. வைத்.)

அவாங்மநோகோசரம் — வாக்குக்கும் மாநத்துக்கும் எட்டாதது. (உ-ம்.) "அவாங் மநோகோசரமாயிருக்கின்ற பிரமத்தினிடத்தில்" (உபநிட.கக. உரை) [அ; வாக்-வாக்கு. மநஸ்;மொசர—விடயங்களுக்குப் புலப்படுவது. மொ—புலன்.]

அவாங்மாநசகோசரம் — அவாங்மநோகோசரம். (கந்தபு. மோக. கூ. உரை.)

அவாச்சியம்— 1. கெட்டது. (உவில். அடு) 2. சொல்லத்தகாதது. (உவில் அடு.) 3. சொல்லினால் வெளிப்படுத்த முடியாதது. (ஆப். கஎ.) (உ-ம்) "அதனையின்னதென்றுரைத்திடப்படாமையா லவாச்சிய வடிவாகும்" (கைவல். சந்தே. கூடு.) 4.தெற்கிலுள்ளது. (உவில். அடு.) [அ-எதிர்மறை. வாச்யம்-சொல்லத்தக்கது. அவாச்-தெற்கு. ய-ஒருவிகுதி]

அவாசி—1. கீழ்த்தேசம். (ஆப். கஎ.) 2. தெற்குத்திசை. (உ-ம்.) "மாசிலாவவாசிநின்று" (சேதுபு. வேதாள. சக.) [அவாசி. அவ-கீழ். அஞ்ச்- போதல். கீழ்ப்போன இடம் என்றபடி.]

அவாசியர் — 1.ஞாநிகள். (உவின். சசு பராந்திமபச்சிமகாண்டம்.) 2. தென்னாட்டார். (உவின். சசு.)

அவாசீநம் — 1. இறங்கினது. (ஆப். கஎ) 2. கீழுள்ளது. (ஆப். கஎ.) 3. தெற்கிலுள்ளது. (ஆப். கஎ.) [அவாசீந.]

அவாத்தம்-அடைந்தது. (உவில். அடு) [அவாப்த: அவ-முன். ஆப-அடைதல்.]

அவாதிதம்— கண்டிக்கப்படாதது. (உ-ம்)'அததியுடைமை,யாதுபிரமாணத்தானும் அவாதிதம்" (தர்க்கபா.உடு) [அபா்யித: அ-எதிர்மறை. பா்யித-கண்டிக்கப்பட்டது.]

அவாதிதவிடயம் — (தர்க்கம்) அநுமாநவாக்கியத்திற் சொல்லப்படும் பஞ்சரூபங்களுள் ஒன்று; அஃதேதுவுக்கு விடயமான சாத்தியதருமம் எப்பிரமாணத்தானுங்கண்டிக்கப்படாதிருத்தல். (தர்க்கபா. உடு. "பஞ்சரூபம்"பார்.) [அபா்யிதவிஷய.]

அவாந்தரகாரணம் — இடையில்வந்த காரணம். (உ-ம்) "அசுத்தமாயை பிரகிருதியிரண்டுஞ் சுத்தமாயையினின்றும் முறைமையிற்றோற்றி யநித்தியமாகு மவாந்தரகாரணமென்று சொல்லுவார்கள்" (சி. சி. க: கூ.ஞாநப்.) [அவாந்தரம்-இடையினிற்பது.]

அவாந்தரசங்காரம் — பிரகிருதி தத்துவம்வரையில் நிகழுஞ் சங்காரம்; இது பிரமவருடம் பரார்த்த சங்கியையான பின் நிகழ்வது. (சி - வி. ஞாந. உசு. உரை.)

அவாந்தரசிருட்டி — இடையில் நிகழுஞ் சிருட்டி. (உ-ம்.) "நடுவே நடுவே வருமவாந்தர சிருட்டியில்" (சி. சி. ௪: ருசு. ஞாநப்.)

அவாந்தரசைவர்—சிவதீக்ஷைபெற்ற வேளாளர். (சைவச. பொது. சகூரு. உரை.) (உ-ம்.) "கரைநதவவாந்தரசைவன்றனக்குங் கன்மத்துரிமையில்லை" (திருவானை. கோச். உகூ.)

அவாந்தரதிசை — இடையிலுள்ள திசை; அவை: தென்கிழக்கு, தென்மேற்கு, வடமேற்கு, வடகிழக்கு என்பன. (ஆப். கஎ.) [அவாந்தரதிஶா.]

அவாந்தரப்பிரயோசநம்— இடையில்வரும் பிரயோசநம், பிரதாநம் அல்லாத பிரயோசநம். (உ-ம்.) "அ

வாந்தரப்பிரயோசநமாகிய போகத்தையுங்கொடுப்பவர்" (சி. சி. பாயி. க. சிவாக்.)

அவாந்தரப்பிரளயம் — பஞ்சப் பிரளயங்களுள் ஒன்று. "பஞ்சப்பிரளயம்" பார்; (வாசுதே. உ௦௯) (உ-ம்.) "அனைத்துளவிஞ்சையாவு மவாந்தரப் பிரளயத்தினீனைத்துணையாகச்சேரும்" (மச்சபு. பிரமாண்ட. க)

அவாந்தரம் — 1. அந்தர்ப்பவித்தது. (ஆப். கூள.) 2. அழிவு. (உவின். சகூ.) 3. இடையிலுள்ளகாலம், இடையிலுள்ள இடம், இடையினிற்பது. (உ-ம்.) "அவாந்தரவியாபாரம்" (சி. சி. அளவை. க. சிவாக்.) 4. உதவியின்மை. (உவின். சகூ.) 5. பிரதானமல்லாதது, இரண்டாவதாயுள்ளது. (ஆப். கூள.) 6. வெறுவெளி. (உவின். சகூ.)
[அவ; அந்தரம்-உள்.]

அவாந்தரவாக்கியம்—விதிரூபமும் விலக்குரூபமும் ஆகாதுவரும் வாக்கியம்; அது "சோதிட்டோமாதி களைப்பண்ணினுற் சிவனுச்குச் சொர்க்காதிபலனுண்டாகும்" என்ருற்போல்வது. (வாசுதே. உச௦.)

அவாந்தரவியாபாரம் — (தறித்தற்சருவியாகியாவியத்துக்கு,மரத்தோடுகூடுதல்போல) இடையிலுள்ளசெயல். (உ-ம்.) "நடுவுதோன்றிபனவாகிய சந்நிகர்ஷ முதலியன எவ்வளவோ அவையனைத்தும் அவாந்தர வியாபாரம்" (தர்க்கபா. சஉ.) [அவாந்தரம்-இடை. வியாபாரம்-தொழில்.]

அவாந்தரை — அவாந்தரம். (உவில். அடு.) [அவ; அந்தர-உள்.]

அவாபுளப்பி — பிரமிப்பூண்டு. (கா. வைத்.) (சில அகராதிகாரர் "அவாபுளிப்பி" என்பர்.)

அவாம்—அவாவும் என்னும் பெயரெச்சம். (வகர உகரங் கெட்டுநின்றது.) (உ-ம்.) "சுண்ணவாம்வனப்பிணை" (சிந். கேமசரி. ககள.)

அவாய் — அவாவி. (உ-ம்.) "கேட்டார்ப் பிணிக்குந்தகையவாய்" (வள். சுசகூ.) [இது வினையெச்சம்.]

அவாய்நிலை — ஒருபதந் தன்னோடுபொருந்திப் பொருண்முடித்தற்குரிய மற்றொருபதத்தை வேண்டிநிற்கும் நிலை. (உ-ம்.) "ஆபுரவி மகன்யானையென்னும் பதங்கள் ஒன்றற்கொன்றவாய் நிலையில்லன" (தர்க்கபா.கூ௦.)

அவாரபாரம்—கடல். (உவில். அடு.) [அவாரபார: அவாரம்-இக்கரை. பாரம்—அக்கரை.]

அவாரம்—1. ஆற்றின் இக்கரை. (ஆப். கூஉ.) 2. இந்தப்பக்கம். (ஆப். கூள.)

அவாரி—சிறுநீர். (இராசவைத்)

அவாவல் — அவாவுதல்.

அவாவறுத்தல் — ஆசைநீக்கல். (வள். ரூள-ம் அதி.)

அவாவன் — 1. கள்ளன். (ஆப். கூள.) [அவாவர்.] 2. பேராசையுடையோன். (உ-ம்.) "கோவியவாவன்" (சைவச. ஆசா. கள.)

அவாவாமை — ஆசைப்படாமை. (வள். ரூசுகூ. பரி.)

அவாவு — 1 – 2. அவாவென்னேவலும் பெயரெச்சத்தொகையும்.[உகரச்சாரியை பெற்றது.]

அவாவுதல் — 1. இறங்குதல். (உவின். சகூ.) 2. ஒருபதந் தன்னோடுபொருந்திப் பொருண்முடித்தற்குரிய மற்றொருபதத்தை வேண்டுதல். ( ) 3. பேராசைகொள்ளுதல். (உ-ம்.) "பின்னையும்போய் நெய்தற்கவாவுநெடுநாடா" (நளவெ. சகூ.)4. விரும்புதல். (உ-ம்.) "முகுந்தனேனேர்வாழ்க்கையு மவாவுகில்லேன்" (காஞ்சிபு. திருநெறி. உச.)

அவி—1-3. அவியென்னேவலுந் தெரிநிலைவினைப் பகுதியும் பெயரெச்சத்தொகையும். (உ-ம்.) "அரியலார்முரணவி மதிலயோத்தியைச் சார்ந்தான்" (சூத. சிவமா. சுகூ: அஅ. பெ-கை.) 4. ஆடு. (உவில். அடு.) (உ-ம்.) "அவிகடம்" 5 எலி. (உவில். அடு.) 6. கம்பளிப்படாம். (உவில். அடு.) 7. காற்று. (உவில். அடு.) 8. கெடுதலெனப் பொருள்படும் ஒருமுதனிலைத் தொழிற்பெயர். (உ-ம்.) "அவிதருமகிழ்வினரற நுண்மாநுகுல்" (சூத. முத்தி. அ: உஅ.) 9.சூரியன். (உவில். அடு) 10. சோறு. (சி.) 11. தலைவன். (உவில். அடு.) 12. தேவர்க்கு வேள்வித்தீயிற் கொடுக்கும் உணவு. (உ-ம்.) "அவியுணவினுன்றுரோ டொப்பர்" (வள். சகக. பரி.) 13. நீர். (உவில். ககூள.) 14. நெய். (உ-ம்.) "அவிசொரிந்தாயிரம்வேட்டலின்" (வள். உ௫கூ.) 15. மதில். (உவில். அடு) 16. மலை. (உவில். அடு.) [4, 5, 6, 7. 9, 11, 15, 16. அவி. 10, 12, 13, 14. ஹவிஸ்.]

அவிக்கிநம்—1. இடையூறின்மை. (உவில். அகூ.) [அவிக்ந: அ—எதிர்மறை. விக்ந—இடையூறு.] 2. ஒருமரம். (உவில். அகூ.) [அவிக்ந.]

அவிக்கியாதார்த்தம் — தோல்வித்தானம் இருபத்திரண்டனுள் ஒன்று; அது; பொருள் இனிது விளங்காதசொற்களை யெடுத்துக்கொண்டு பேசுதல். (சி. சி. அளவை. சஅ. மறை. சிவஞா ந.) [அவிக்யாதார்த்த: அ-எதிர்மறை. விக்யாத-அறியப்பட்ட, அர்த்த-பொருள்.]

அவிக்கிரமம்—பராக்கிரமமின்மை, வீரமின்மை. (உவில். அகூ) [அவிக்ரம: அ-எதிர்மறை. விக்ரம-வீரம்.]

அவிக்கை — அவித்தல். (சிறுபாண். உரை.)

அவிகசம்—குவிந்தது, மலராதது. (உ

வில். அடு.) [அவிகச: விகசம்-விரிதல்.]

அவிகசிதம் — மலராதது. (உவில். அடு.) [அவிகசித: விகசித-மலர்ந்தது.]

அவிகடம்—ஆட்டுக்கூட்டம். (உவில். அடு.) [அவிகட: அவி; கடச்.]

அவிகம் — வைரரத்திநம். (உவில். அடு.) [அவிக: அவி-சூரியன். க-ஒரு விகுதி.]

அவிகலம் —குறைவின்மை, நிறைவு. (உவில். அசு.) [அ; விகல-குறைவு.]

அவிகற்பம்—1. சந்தேசம் இன்மை. (உவில். அசு.) 2. நிருவிகற்பக் காட்சி; அது: பொருளுண்மை மாத்திரம் உணரும் உணர்வு. (உ-ம்.) "அவிகற்பமத்தமுளதென்றறிகை" (சி. சி. அளவை. ரு. மறை.)
[அவிகல்ப: அ-எதிர்மறை. விகல்ப-வேறுபாடு.]

அவிகாயம்—1. அழற்சி. (சி.) 2. ஒரு காசநோய். (சி.) 3. சீற்றம். (சி.) 4. மநவேகம். (சி.)
[அழன்றுகொண்டிருத்தல்; காயம்பட்டோனுக்குள்ள குணம் போலுதலின் இப்பெயர்த்து.]

அவிகாரம்—1. இயல்பான ரூபத்தினின்று வேறுபடாமை. (உவின். சசு) 2. பரிணமமல்லாதபொருள். (சி. சி. க: உஅ. ஞாநப்.) 3. விகாரம் இன்மை, வேறுபடுதல் இன்மை. (உ-ம்.) "ஈனவாதிக்னி னவிகாரமாகி" (வேதா. சூ. ௪௦அ.)
[அவிகார.]

அவிகாரவாதசைவன்—பக்குவம் அடைந்த ஆன்மாவானது ஞாநம்பெற்று, விகாரம் இன்றிநிற்கும் பதியைத்தானே சென்றடையும் என்றுசொல்லுஞ் சைவன். (கந்தபு. நகர. அரு. உரை.)

அவிச்சிந்நன்-பாரமார்த்திகன். (வாசுதே.கூ) சுழுத்தியவத்தையிற்காரணசரீரதில் அபிமாநிக்கப்பட்ட ஆத்மாவாகிய பாரமார்த்திகன். (வாசுதே. அவஸ்தாத்திரய நிரூபக.உ௦க) [தேகேந்தரியாத்யுபாதியினற் பரிச்சிந்நமாகிறபடியால் வந்தபெயர்.]

அவிசம்வாதம்—1. பிரமாணத்தையநுசரிதது. ( ) 2. உண்மைவிஷயமுடையது. ( )
[அ; விஸம்வாத-பிரமாணத்தை யநுசரியாமை, அல்லது விபரீதமாய்ப் பேசுகை. வென். அஅ௦.]

அவிசம்வாதி—வேறு பிரமாணத்தையநுசரிப்போன். (வாச; சி. சி. அளவை. க. சிவாச்.) [அவிஸம்வாதி: விஸம்வாதி - பிரமாணமுடையனல்லன்.]

அவிசு—1. உப்பின்றிச் சமைத்த பச்சரிசிப்புற்கை. (உவின். சசு.) 2. சுத்தம். (சி.) 3. நீர். (ஆப். கூகூ௦.) 4. நைவேத்தியம். (உ-ம்.) "உப்புமிளகுபுளியொழித்தே யுஞற்றுமவிசுநிவேதித்து" (மச்சபு.நட்சத்திர.உ௦.) 5. வெண்ணெய். (ஆப். கூகூ௦.)
[ஹவிஸ்.]

அவிசுவாசம்—விசுவாசம் இன்மை.(மது. ௬உ: உசு.) [அவிஶ்வாஸ: அ-எதிர்மறை. விஶ்வாஸம்-நம்பிக்கை.]

அவிசுவாசி-விசுவாசம் இல்லாதவன். (உவில். அஅ.) [அவிஶ்வாஸிந்: அ; விஶ்வாஸிந்.]

அவிசேடம்—விசேடம் அல்லாதது, ஒருதன்மையானது. (உ-ம்.) "சத்திரூபமாய்க் காரியஞ்சுருங்கிக் காரணமான காலத்திற் காரியகாரணங்கள் அவிசேடங்களாய்த் தோன்றும்" (சி. சி. க: உஎ. ஞாநப்; ஆப். கூக.) [அவிஶேஷ: அ-எதிர்மறை. விஶேஷம்-வித்தியாசம்.]

அவிஞ்சன்—1- அறியாமையுடையோன். (உவில். அ௯.) 2. போதிக்கப்படாதவன். (உவில். அக.)
[அவிஜ்ஞ.]

அவிஞ்சை—அவித்தை. (உ-ம்.) "அவிஞ்சையிங்கில்லை" (ஞாநவா. நிருவாண. க.) [அவிஜ்ஞா: அ - எதிர்மறை. விஜ்ஞா-ஞாநம்.]

அவிஞ்ஞதை — அறியாமை. (உவில். அசு)[அவிஜ்ஞதா: அ; விஜ்ஞதா-அறிவு.]

அவிஞ்ஞாதம்—அறியப்படாதது. (உவில். சுசு.) [அவிஜ்ஞாத: அ;விஜ்ஞாதம்-அறியப்பட்டது.]

அவிஞ்ஞாதார்த்தம்—அவிக்கியாதார்த்தமென்னுந் தோல்வித்தாநம். (சி. சி. அளவை. கஅ. மறை. சிவஞா.) பொருள் இனிது விளங்காத சொற்களை யெடுத்துக்கொண்டு பேசுதல். (ஷை சிவஞாந.) வாதியானவன் தனக்குவந்ததூஷணம் மறைத்தற்காகத் தெரியாத சத்தங்களைக்கொண்டு பேசுதல். (ஷை நிரம்ப வழகியர்.) வாதியானவன் மூன்று பிரகாரஞ் சொல்லியிருக்கையிலும் மத்தியஸ்தருக்கும் பிரதிவாதிக்கும் அர்த்தந்தெரியாத சத்தஞ்சொல்லுகை. (ஷை சிவாச்) பிரதிவாதியானவன் ஓரேதுவை மூன்றுதரஞ் சொல்லுகையிலுஞ் சபையிலேயிருக்கிற பரீட்சித்துக்கள் அநுவாதிக்கையிலும் வாதியானவன் ஏதுவை யறியேனென்றல். (ஷை மறை.) [அ; விஜ்ஞாத-அறியப்பட்ட. அர்த்தம்-பொருள்.]

அவிஞை—அஞ்ஞாநம். (உ-ம்.) "நிரைபவத் தவிஞையாகி" (ஞாநவா. வைராக். கூஉ.) [அவிஜ்ஞா: அ-எதிர்மறை.விஜ்ஞா-ஞாநம். உவில். அசு]

அவிட்டம்—இருபத்தேழு நட்சத்திரங்களுள் இருபத்துமூன்றாவது நக்ஷத்திரம். இதன் முன்னரை மகரமும் பின்னரை கும்பமுமாகும். (உ-ம்.) "அத்த மவிட்டம் விசாசமொட்டாதிரை" (விதாந. குணகுண. உ௦.)

அவிட்டுமோன் — ஆரு மநுவின்காலத்துச் சத்தவிருடிகளுள் ஒருவன். (உ-ம்.) "அவிட்டுமோன்சீர்காத்தருளுத்தமன் மநுவத்ரி" (கூர்மபு. மநுவந். ச0.)

அவிடி — திரைச்சீலை. (பிங். ௬௨௯௪.)

அவிடியந்தியசூக்கம் — குருவின் இல்லாளைப்புணர்ந்த பாதகந் தீர்க்குமாறு செபிக்கப்படும் ஒருமந்திரம். (உ-ம்.) "அவமில்புருட சூக்கத்தையவிடியர்திய சூக்கத்தை - யிவராசையினெண்ணிற் குரவனில்லாட் புணர்ந்துபாதகம்போம்" (சூத. எச்கி. பூ. ௪௨: ௪௫.) [ஹவிஷ்யந்தீய.]

அவிடியந்தியம் — ஒரு வேதமந்திரம். (சூத. எக்கி. பூ. ௪௨: ௪௫)

அவிடியந்தீயம் — அவிடியந்தியம். (மநு. ௧௪: ௨௫௧.) [ஹவிஷ்யந்தீய.]

அவித்தம் — 1. அறியப்படாதது. (உவில். அசு.) 2. வறுமை. (உவில். அசு.) [அவித்த: அ- எதிர்மறை. வித்தம்-அறியப்பட்டது, திரவியம்.]

அவித்தல் — 1. அடக்குதல். (உ-ம்.) "ஐந்தவித்தானாற்றல்" (வள். ௨௫.) 2. அவியச்செய்தல், வேகச்செய்தல். (உ-ம்.) "அறுதநவித்தாரச் சமைத்தபின்னைக்குகந்தார்" (மறைசை. ௨0) 3. அழித்தல், கெடுத்தல். (உ-ம்) ஒருமூன்றவித்தோன்" (சிலப். நாடு. ௧௯௪) "யானையருவிதுகளவிப்ப" (சிறுபா. ௨00.) 4. தடைத்தல். (உ-ம்.) "பொங்குபூஞ்சிலம்பிற்போர்த்தபூந்துகளவித்து" (சிந். சுரமஞ். ௭0.) 5. துன்னீர்சழலும்படி வெப்பூட்டுதல். (உ-ம்.) "வாயவிக்கமருந்து கொடுத்தான்" (உவின். ௯௬)6. நூர்த்தல். (உ-ம்.) "காலவியாப்பொன்விளக்கு" (சிந். குண. ௧௯௫.)

அவித்தா — அவித்தை. (உ-ம்.) "அவித்தாநாசம"(ஞாநவா. தாசூர. ௪௬. உரை.) [அவித்யா.]

அவித்தியசம் — பாதரசம். (உவில். அசு.) [அவித்யஜ.]

அவித்தியமாந — 1. உள்ளதல்லாத, இருக்காத. (உவில். அசு.) [அவித்யமாந: அ- எதிர்மறை. வித்யமாந-இருக்கின்ற.]

அவித்தியாகதம் — அஞ்ஞானத்தின்தாக்கம். (உ-ம்.) "அவித்தியாகதமாயிருந்த சீவனதுபுன்மையறிவாயிருந்து" (ஒழிவி. சரியை. ௧௬. உரை)

அவித்தியாபஞ்சகவுரு — அபுத்திபூர்வகமாகிய ஐவகைசசிருட்டி; அவை: தமம், மோகம், மாமோகம், தாமிசிரம், அந்ததாமிசிரம், என்பன. (உ-ம்) "அதிசயம்பயப்பவபுத்திபூருவமாவவனிடைத்தமோமயசிருட்டி—பொதிதரத்தோற்றிற்றதுதமமோகம் புகலு மா மோகந்தாமிசிரம்" (சூத். சிவமான். ௪0:௨) "அந்ததாமிசிரமெனவிவையாளுமவித்தியாபஞ்சகவுருவாய்-உந்துறவிருக்குமென நலோருரைப்பர்" ஷை ௯.)

அவித்தியா — அஞ்ஞானம். (இதே அவித்தையெனத்திரிந்தது) (உ-ம்.) "ஞானோதயமான போதே அவித்தியாரூடமான காரணதேகம் நசித்திருக்கின்றது" (வேதா. சூ. ௪௫0. உரை) [அவித்யா.]

அவித்தியை — 1. அஞ்ஞானம். (உ-ம்) "அநிர்வசநீயாவித்தியையோ" (சி. சி. வரலாறு. சிவாக்) 2. அவித்தை. (உவில். அசு) 3. அறியாமை. (உவில் அசு.) [அவித்யா: அ-எதிர்மறை. வித்யா-அறிவு.]

அவித்தியோபாதிகன் — பிராஞ்ஞன். (உ-ம்.) "காரணமெய்தியபடியபிமானி - யுற்றவிருமவித்தியோ பாதிகனென்பனமுதலாம் பிராஞ்ஞனமங்கள்" (வேதா. சூ. ௯௮.) [அவித்யா; உபாதிகன். அவித்தையின் சம்பந்தத்தால் வந்தபெயர்.]

அவித்துருமம் — இருப்பைமரம். (மா.)

அவித்துவையல் — பச்சடி. (பிங். ௧௧௨௫.)

அவித்தை — 1. அஞ்ஞானம். (உ-ம். "அடைய"பார்.) 2. அறியாமை. (உவில். அசு.) 3. ஆணவமலம். (உ-ம்.) "அவித்தைசிந்தத்தருங்கலை யாதிமாயை" (சி. சி. ௨: அ௪.) 4. பிரமத்திலே ஆரோபமாகத்தோன்றின மூலப்பிரகிருதியென்னுஞ் சத்தியில் உண்டான இராசதகுணம். இதிலே பிரம்பிரதிவிம்பமான சீவர்கள்தோற்றுவார்கள். (உ-ம்.) "இராசதமவித்தைசீவனிதிற்றோன்றும்" (உபநி. அசு.) 5. மாயை. (உ-ம். "அசத்து" பார்.) [அவித்யா.]

அவித்யமாந — உள்ளதல்லாத, அபாவம். (உவில். அசு.) [அ-எதிர்மறை. வித்யமாந-இருத்தல்.]

அவிததம் — மெய்ம்மை. (உவில். அசு.) [அவிதத: அ-எதிர்மறை. விதத-பொய்.]

அவிதம் — இரட்சிக்கப்பட்டது. (உவில். அசு.) [அவித.]

அவிதல் — 1. இறத்தல். (உ-ம்.) "பொய்ககரிபுகலும்புன்கணூர் குலங்களினவிந்தனர்" (இராமா. கிங். ௫௮) 2. கெடுதல், அழிதல். (உ-ம்.) "அகல்விசும்புறையுர்தேவ ரொளியவிந்திருப்ப" (சிந். முத்தி. ௪௫௫.) "அவியினும் வாழினுமென்" (வள். ௪௨0.) 3. சூடுபிடித்த வெதும்பல். (உவின். ௪௬.) 4. தணிதல். (உ-ம்.) "குணகடற்றிரையொடும் பொருதல தவியாதே" (சூளா. கல்யா. ௫௧.) 5. துன்னீர்கழலப் புண்பட்டல். (உ-ம்.) "வாயவிந்தது" (உவின். ௪௬.) 6. நூர்தல். (உ-ம்.) "ஓதுமவ்விளக்கவிந்தமை" (காஞ்சிபு. இருபத்தெண். ௪௩௬.) 7. யாதேனும் ஒருபொருளை நீர்விட்டபாத்திரத்திலே நீரினுள்ளா

வது மேலாவது வைத்சாவியெழும்ப நெருப்பினாற் சூடுகாட்டிப் பாகம் பண்ணுதல். (உவின். சகூ.) 8. வருந்தல். (உவின். சகூ.) 9. வேர்த்துப் புழுங்குதல். (உவின். சகூ.)

அவிதா — யாதேனும் ஓர் ஆபத்து அடைந்தவர் அதினின்றும் நீங்குதற்கு உதவிபெறும் பொருட்டு முறையிட்டுக் கூறும் ஒருசொல். (ஆப். கூஅ.) இது "துணைசெய்துணைசெய்" எனப்பொருள்படும். (உ-ம்.) "அவிதாவென்றணங்கனையாளழுத போதே" (பாரத. சூதுபோ. உருஅ.) [அவிபா.]

அவிதாநம்—1. கிரமமின்மை. (உவில். அஎ.) 2. நியமித்தவிதியை விட்டு விலகுதல். (உவில். அஎ.) [அவியாந: அ-எதிர்மறை; வியாநம்-விதி.]

அவிதாவிடல் — ஆபத்தில் உதவிவேண்டிமுறையிட்டுக்கூறுதல். (உ-ம்.) "சாவமுன்னாட் டக்கன்வேள்விதகர்தின்றுநஞ்சமஞ்சி-யாவவெந்தாயெ ன்றவிதாவிடுநம்மவரவரே" (திருவா. திருச்சத. ச.)

அவிதி — 1. கிரமமின்மை. (உவில். அஎ.) 2. விதிக்கு விரோதம். (உவில். அஎ.) [அவிதி: அ-எதிர்மறை. விதி- கட்டளை.]

அவிதூசம் — ஆட்டுப்பால். (செ; உவில். அகூ.) [அவிதூஸ. அவி - ஆடு. தூஸ-பால்]

அவிநயக்கூத்து—நிருத்தக்கை தழுவாது பாட்டின் பொருளுக்குக் கைகாட்டி வல்லபஞ்செய்யும் பலவகைக்கூத்து. (சில, அரங்கே. கஉ. உரை.) இது சாந்திக் கூத்தின் நால்வகைகளுளொன்று. (திருவி. கான்மா. ௪௦. உரை.)

அவிநயசாலை — நாடகசாலை. (உவின். சகூ.)

அவிநயம் — 1. அபிநயமாகிய நாடகாங்கம். (உ-ம்.) "சத்துவப்பெருநாடகசாலையுஞ்சமைத்தவிநயங்காட்டி — அத்தலத்தெனை யாட்டுவிப்பானும்' (மதுரை. பதிற். கஉ.) 2. அவிநயர் செய்த ஒரு யாப்பிலக்கணநூல். (உவின். சகூ.) 3. துராசாரம். (ஆப். கூஅ.) 4. நற்பழக்கமின்மை. (ஆப். கூஅ) [அ-எதிர்மறை. விநயம்-ஒழுக்கம்.]

அவிநயர் — 1. அகத்தியருடைய மாணாக்கர் பன்னிருவருள் ஒருவர். (தொல். பொருள். பதிப். உ.) 2. கூத்தர். (நிகண். உ: நூஅ.)

அவிநா—விட்டுநீங்காமல். (உ-ம்.) "அவிநாபாவம்" (சி. சி. அள. உ.) [அ-எதிர்மறை. விநா—நீக்கம்.]

அவிநாசம் — நாசமின்மை. (உவில். அஎ) [அவிநாஶ:அ-எதிர்மறை.விநாசம்-அழிவு.]

அவிநாசி — 1. அழியாமை. (உ-ம்.) "அசமநந்தமவிநாசி" (கைவல். சர். கஎ.) 2. அழிவற்றவன். (உ-ம்.) "அவிநாசிகண்டாயண்டத்தான் கண்டாய்" (தேவார.) 3. கொங்கநாட்டுள்ள ஒருசிவஸ்தலம். (உ-ம்.) "அவிநாசியெந்தைபெருமான்" (பெரிய. வெள். கூ.)

அவிநாபாவசத்தி—பராசத்தியில் ஆயிரத்தில் ஓரமிசமாய்ச் சிவனை விட்டு நீங்காதபடியிருக்கிற இச்சாஞானச் சுயரூபிணியான சத்தி. (சி. சி. உ: எச. சிவா.)

அவிநாபாவம்—விட்டு நீங்காது உடனிசமூந்தன்மை. (உ-ம்.) "அவிநாபாவம்பேசுறுமேதுக்கொண்டு" (சி. சி. அளவை. உ.) [அவிநா ஹாவ: அ-எதிர்மறை.விநா-இல்லாமல். ஹாவம்-இருத்தல்.]

அவிநாபூதம்— நீக்கமின்றியிருத்தல். (சி. சி. பாயி. உ. ஞான)[அவிநா ஹூத.]

அவிநாபூதை—விட்டுப்பிரியாதிருக்கிறவள். (உ-ம்.) "ஈசுவராவிநாபூதையானசத்தி" (சி. சி. பாயி. உ. சிவா) [அவிநா ஹூதா: அவிநா-விட்டுநீங்காமல். பூதை-இருக்கிறவள்.

அவிநிகமம் — தருக்கநூலுக்குத் தகாத நிகமநம். (உவில். அஎ.) [அவிநிகம: அ-எதிர்மறை. வி-விசேஷம். நிகமம்-நிச்சயம்.]

அவிநீதம் — 1. தீய ஒழுக்கம். (உவில். அஎ.) 2. மரியாதையின்மை. (ஆப். கூஅ.) [அவநீத. அ- எதிர்மறை. விநீதம்-நல்லொழுக்கம்.]

அவிநீதன் — நல்லொழுக்கம் பயிற்றிவளர்க்கப்படாதவன். (ஆப். கூஅ.) [அ-எதிர்மறை. விநீதன்-சன்மார்க்கன்.]

அவிநீதை—கற்பில்லாதவள். (உவில். அஎ.) [அவிநீதா. அ-எதிர்மறை. விநீதம்-சன்மார்க்கம்.]

அவிப்பலி — இன்னது செய்யேனாயின், இன்னதுசெய்வேன் என வஞ்சினங்கூறித் தன்னுயிரை அக்கினிக்குப் பலியாகக்கொடுத்தல். இது வாகைத்திணையின் துறைகளுள் ஒன்று. (தொல். பொரு. புறத். எகூ.)

அவிப்பாகம்— அவியின்பங்கு, தேவருணவின்பங்கு. (உ-ம்.) "ஆவாதிருமாலவிப்பாகங்கொண்டன்று- சாவாதிருந்தானென் றுந்தீபற" (திருவாச திருவுந். கூ.)

அவிபட்சம்—1. எதிரியில்லாதது. (உவில். அஎ.) 2. விபட்சமல்லாதது. (உவில். அஎ.) [அவிபக்ஷ: அ-எதிர்மறை. விபட்சம்-விரோதபட்சம்.]

அவிபடம் — ஆட்டுமயிர்க்கம்பளம். (உவில். அஎ.) [அவிபட. அவி-ஆடு. படம்-சீலை.]

அவிபத்தர்—1. பகுக்கப்படாதபொருட்குரியவர். (மிரு.சங். ககசு.) 2. பங்காளிகள் (மிரு. சங். ககசு.) [அவிஹக்த. அ—எதிர்மறை. விஹக்த-பிரிக்கப்பட்ட.]

அவிபந்நம்—1. அதிட்டமானது. [அ-எதிர்மறை. விபந்நம்- அதிட்டவீநம். ஆப். எகூக.) 2. கெடாதது. (உவில். அஎ.) 3. சுத்தமானது. (உவில். அஎ) 4. ரோப்படுத்தப்படாதது. (உவில். அஎ.) [அவிபந்ந.]

அவிப்வநம்—மேற்கொள்ளுதல், விசயமடைதல். (சி; ஆப். சுஉ.) [அவிஹவந.]

அவிபாகம் — 1. அசீர்ணம். (உவில். அஎ.) 2. கூறுக்கப்படாததாயம். (உவில். அஎ.) 3. கூறுக்கப்படாதது. (உ-ம்.) "மேலெங்கும் வியாபித்த வெளிகடாகாசாதிவிபாகத்தாலும் பாவவவிபாகத்தாலுந்தோன்றுமெப்படி" (சூத. எக்கி. உத். சு: கக.) 4. முதிர்வடையாமை. (உவல். அஎ) 5. முற்பிறப்பிற்செய்த வினைகளின் பயனை அநுபவியாமை. (உவில். அஎ.) [1, 4, 5. அவிபாக. அ—எதிர்மறை. விபாகம்–முதிர்தல். 2, 3. அவிஹாக. அ–எதிர்மறை. விஹாக-பிரிவு.]

அவிபாச்சியம்—பிரிக்கப்படக் கூடாமை. (உவில். அஎ.) [அவிஹாஜ்ய: அ–எதிர்மறை. விஹாச்சியம்–பிரிக்கக் கூடியது.]

அவிபாடிதம்—அதிகம் பிளத்தல். (சீவரட். ௬௯சு.)

அவிபாடிதரோகம்—வாதபித்தசிலேஷ்மங்களினால் ஆண்குறியினது சருமத்தையெல்லாம் மிகவுந் தடிக்கச்செய்து பின்பத்தடிப்பைப் பிளப்பிக்கும் ஒரு ரோகம். [அவி—அதிகம். பாடிதம்-பிளத்தல்.] (சீவரட். ௬௯சு.)

அவிபாவநம்—பிரத்தியட்சமாகாமை. (உவில். அஎ.) [அவிஹாவந: அ-எதிர்மறை. விஹாவநம்–பிரத்தியக்ஷம்.]

அவிபுச்சன்—வாலில்லாதவனல்லாதவன். (ப—ம்)

அவிபூதி—அவசங்கை. (சி; ஆப். அ0௨) [அ–எதிர்மறை. விஹூதி– மகிமைநிலை.]

அவிமுத்த—பிரதிட்டாசலையில் ஆகாயத்திலிருக்கும் எட்டுப் புவநங்களினொன்று. (சி–லி. கிரி. உக- தாற்பரி.) [அவிமுக்த.]

அவிமுத்தம்—1. காசிநகரம். (உ – ம்.) "குன்றிரண்டுசுமந்தொசியுங்கொடியன்னாரவிமுத்தங் குடிகொண்டாகம்–ஒன்றிரண்டுவடிவானார்" (குமர. காசிக்கலம். ௫௬.) 2. நீக்கிவிடப்படாதது. (உவில். அஎ.) [அவிமுக்த: அ–எதிர்மறை. விமுக்தம்-விடப்பட்டது.]

அவிமுத்தி—காசிக்குக் கிட்டஇருக்கும் ஒருதலம். (உவின். சஎ.)

அவிமுத்தேசன்—காசியிலிருக்கும் விசுவநாதசுவாமி. (உவில். அஎ.) [அவிமுக்தேஶ்வர.]

அவிமுத்தேசுவரன்— காசியிலிருக்கும் விசுவநாதசுவாமி. (உவில். அஎ.) [அவிமுக்தேஶ்வர. அவிமுக்தம்–காசி. ஈஶ்வர–கடவுள்.]

அவியம்—வடிவமில்லாமை, பொய்வடிவம். (வேதா. சூ. சஉஅ. உரை)

அவியல் — 1. அவிக்கப்பட்ட உணவு. (உ-ம்) "அணில்வாற்குரலசெந்தினையினவியலன்ன" (கூர்மபு. கண்ணன் மண. கஅ௫.) 2. அவிதல். (உவின். சசு.) 3. உடம்பிலே வாய் முதலிய உறுப்புக்களிலே வெப்பினால்வரும் புண். (உவின். சசு.) 4. புழுக்கம். (உவின். சசு) 6. வெப்பம். (உவின். சசு.)

அவியாகிருதம் — பிரிவின்றி நிற்பது. (உவில். கூ0.) [அவ்யாக்ருத.]

அவியாத்தம் — விசேடித்திருப்பது. (உவில். கூ0) [அவ்யாப்த.]

அவியாத்தி—அவ்வியாத்தி தோஷம். (ஆப். ச00.) [அவ்யாப்தி.]

அவியாப்பியம்— முழுதிலும் வியாபியாமை. (ஆப். ச00.) [அவ்யாப்பிய.]

அவியோகம்—கூடுதல்: (உவில். அஎ.) [அ– எதிர்மறை. வியோகம் – கூடாமை.]

அவிர்—1–3. அவிரென்னேவலுந் தெரிநிலை வினைப்பகுதியும் பெயரெச்சத்தொகையும். 4. பிரகாசம். (உ – ம்.) "அவிர்தருதிருமுசமாகும்" (சூத. எக்கி. பூ. சு: க) 5. பீறல். (சது; உவின். சஎ.) 6. புல்லு. (உவின். சஎ. பாரதம்.)

அவிர்தல்—1. ஒளிசெய்தல். (உ – ம்.) "அவிர்பூணொலியாமல்" (நைடத. அன்ன. தூது. சஅ.) 2. பீறல். (சதுரக.)

அவிர்ப்பாகம்—அவிப்பாகம். (உ—ம்.) "பரமனுருக்கடவுளவிர்ப்பாகமல்க" (தைல. பாயிர. சுச.)

அவிர்ப்புக்கு — 1. அக்கினி. (ஆப். ௬௯0.) 2. சத்திரியபிதிர். (மநு. ௬: ௬௯எ.) [ஹவிர்ஹுக்]

அவிரதம்—ஓயாமல். (ஆப். ௬அ.) [அ–எதிர்மறை. விரதம்– தரித்தல்.]

அவிரளம்—நெகிழ்ச்சியின்மை. (உ – ம்.) "அவிரளசிவைக்கியப்பிராப்தி" (வி-ணி. உ௬0.) [அவிரல: அ – எதிர்மறை. விரல–நெகிழ்ச்சி.]

அவிரி—நீலி. (சி.)

அவிருகம்—அதிவிடயப்பூண்டு (கா. வைத்.)

அவிருத்தம் — விரோதம்இன்மை. (உ-ம்.) "அவிருத்தமான சின்மாத்திரத்தை" (சூத. எக்கி. உத். நு: சஎ) [அ-எதிர்மறை. விருத்—விரோதம்.]

அவிரேசநம் — மலவரட்சி. (உவில். அஎ) [அவிரேசந: அ-எதிர்மறை. விரேசநம்-கழிதல்.]

அவிரோதச்சிலேடை — சிலேடையலங்கார பேதங்களுள் ஒன்று; அது: சிலேடை யாகச் சொல்லப்பட்ட பொருளை நிலைபெறுத்தற்குப் பின்னுஞ் சிலேடையாக ஏதுக்கற்பித்தல். "சோதிபிரவிகரத்தா லிரவொழிக்கும்—மாதிடத்தான் மன்மதனைமாறழிக்கும்—மீதாம் – அநசமதிதோற்றிக் குமுதமளிக்கும்– தநதனிரு நிதிக்கோன்முன்" என்பதிற்போல. (தண்டி. எசு. உரை.) [அவிரோய; ஸ்லேஷா.]

அவிரோதம் — 1. சம்மதம். (உ - ம்.) "சிவசாத்திரத்துக் கவிரோதாம் சத்தால்" (பௌட். எ: எஅ.) 2. தடையின்மை. (உவில். அஎ.) 3. மாறின்மை. (உ-ம்.) "மறையவிரோதமும் வகுப்பன்கேண்மினோ" (சூத. எச்கி. பூ. ௩௯; க.) [அவிரோய.]

அவிரோதவுந்தியார் — சாந்தலிங்கசுவாமிகள்செய்தநூல்களுள் ஒன்று. (உவின். சஎ.)

அவில் — அவற்றுள். (உ-ம்) "பெரிய வண்டங்களெத்தனை யமைத்தவிற்பிறங்கு-மூரியபல்லுயிரெத்தனை" (தாயு. என. எ.) [அவ்—அவை. இல் – ஏழாம்வேற்றுமையுருபு.]

அவிவாதம் — இணக்கம், சம்மதம், மாறின்மை. (உவில். அஅ.) [அ-எதிர்மறை. விவாதம்-மாறு.]

அவிவு — அழிவு. (உ-ம்) "கந்தத்தவிவேமுத்தி" (பெரியபு. ஞான. கூசசு.)

அவிவேகம் — விவேகம்இன்மை. (உ-ம்) "எண்ணு மவிவேகவிடன்வாழ் மனையாம்" (ஞானவா. வைராக். எகு) [அவிவேக: அ-எதிர்மறை. விவேகம்-புத்தி.]

அவிவேகி — விவேகம்இல்லாதவன்-வள். (உ-ம்) "அவிவேகிக்குப்பாரஞ்சாத்திரம்" (ஞானவா. வைராக். நசு) [அவிவேகிந்: அ-எதிர்மறை. விவேகிந்–விவேகம் உடையவன்.]

அவிவேகித்துவம் — அவிவேகியாய் இருக்குந்தன்மை. (சி. சி. சு: அ. சிவாக்.) [அ; விவேகி; த்வம்.]

அவிழ் — 1–3. அவிழெனனேவலும் தெரிநிலைவினைப் பகுதியும் பெயரெச்சத்தொகையும். (உ—ம்) "தளையவிழ்பாடலத்தின்கவரினர்" (நைடத. அன்னத்தைக்கண். ௩௩, பெ-கை) 4. சோறு. (உ - ம்.) "ஈசனுதியர்க்களித்தவூணவிழொன்றற்கு" (தணிகை. அகத். ககூக.) [இஃது அவியென்னும் வினையடியாற் பிறந்ததுபோலும்; கவிசவிழ் எனவந்தாற்போல.]

அவிழ்கேசி — விரிதலையன்-யள். (உ-ம்) 'மோரரவமாடையிலிநீடுமெவிழ்கேசி' (செகரா. யாத்தி. உக) [கேஶ–மயிர்.]

அவிழ்த்தல் — 1. சட்டுநீக்கல். (உ—ம்) "பசுநிரையையவிழ்க்கின்றனர்" (கந்தபு. யாக. எக.) 2. மயக்கிக்கிடந்த பொருளை விளக்கிக்காட்டுதல். (உ – ம்.) "நொடியவிழ்த்தல்" (உவின். சஎ.) 3. மலரச்செய்தல். (உ-ம்.) "புல்லிதழ்த்தாமரைப் புதுமுகையவிழ்ப்ப" (கல்லாட. ருக.)

அவிழ்தம் — மருந்து. (உ-ம்) "அற்பவவிழ்தமும்பலிப்பதாகும்" (தண்டலை. எடு) [இஃது, "ஔஷதம்" என்பதன்சிதைவு.]

அவிழ்தல் — 1. உதிர்தல். (உ-ம்.) "அவிழ்பன்னமூணாய்" (ஞானவா. சரகு. ௬௫.) 2. குலைதல். (உ –ம்.) "கூந்தரேமென்மலரோடவிழ" (கூர்மபு. சன்னவை. சுக.) 3. சொரிதல். (உ—ம்) "மட்டவிழலங்கன்மறவோனுடன்" (பாரத. மணிமா. ௬அ) 4. நெகிழ்தல். (உ—ம்.) "சிந்தையவிழ்ந்தவிழ்ந்து" (தாயு. பராபர. எகு.) 5. பிரிவு. (உ-ம்.) "அருட்கண்ணுகிச் –சமமுமுடன்கலப்புமவிழ்தலும் யாங்காணத்தண்ணருட்ர்து" (தாயு. ஆகாரபு. ௫) 6. மலர்தல். (உ-ம்.) "தோடவிழ்ந்ததாமரை" (நைடத. கைக்கி. கசு.) "மதவிழநிறைவானதுரியவாழ்வை" (தாயு. பொருள்வண. ரு.)

அவிளம்பம் — விரைவு. (உவில். அஎ.) [அவிலம்ப: அ-எதிர்மறை. விலம்ப-தாமதம்.]

அவிளம்பிதம் — விரைவு. (உவில். அஎ) [அவிலம்பித: அ; விலம்பித-மெல்ல.]

அவீசி — 1. இராசாதிராசநரகம். "இருமிசெறியவீசியிறை யெவற்றினுக்குங் கிளக்குங்கால்" (சிவதரு. சுவர்க்க நரகவி. ௬௨௭.) 2. இருபத்தெட்டாவதாகியமாயையென்னும்நரகத்திலுள்ளளாயகநரகங்கள்ஐந்தனுள் ஒன்று. "அறக்கொடியதீவிரமே யவீசியெனவறைந்தனவுஞ்–செறித்ததிகவொருநூற்றநாற்பதென" (சுவர்க்கநரகவி. ௬௨சு.) 3. திரையில்லாதது. (ஆப். ககூ.) [அவீசி: அ; வீசி–திரை.]

அவுக்கவுக்கெனல் — 1. ஓர் ஒலிக்குறிப்பு. (உ-ம்.) "அவுக்கவுக்கென்று வார்த்திக்கிறான்" (உவின். சஎ.) 2. விரைதலைக்கருதும்ஒருகுறிப்புச்சொல். (உ—ம்.) "அவுக்கவுக்கென்றுண்கிறான்" (உவின். சஎ)

அவுசநசம் — உசநசு முனிவராற் செய்யப்பட்ட ஓர் உபபுராணம். (ஆப். ககூ.) [ஔஶநஸ]

அவுசநம் — அவுசநசம். (கூர்மபு. இந்திரத். ௬௦.)

அவுசு — சுத்தம். (உவின். சஎ.) [இஃது தவிசு என்பதன் சிதைவென்பர் உவின்சிலேர்.]

அவுசுப்பம்—தொடரிப்பூண்டு. (சா. வைத்.)

அவுசுமாபகவாதரோகம் — ஒருவகை வாதரோகம். (சீவரட். சகூஅ.) [உட்டணத்தைவர அழைத்துக்கொள்ளுகிறதினால் வந்தபெயர். உஷ்ம-உட்டணம்.]

அவுடதகந்தகசுரம்—ஒருவகை அபிஷங்கசுரம்; அஃது: இரசம், கந்தகம், பாஷாணம், சேங்கொட்டை முதலியவைகளின் வேகத்தாற் பிறப்பது. (சீவரட். கூஉ)

அவுடதம்—ஔடதம். (உவின். சஎ.) [ஔஷத.]

அவுண்—அவுணர். (உ-ம்.) "அவுண் மகசேனை" (திருப்பு. கடுஉ.)

அவுணன்—அசுரன். (உ-ம்.) "அன்றிலம்பேர்பெற்றுள்ள வவுணனத்தன்மை கண்டான்" (கந்தபு. கிரவுஞ். க.)

அவுத்திரம்—ஔத்திரிதீக்ஷை (உ-ம்.) "அவுத்திராதியநேகமுள" (சி. சி. அ: கூ.)

அவுத்திரி — ஔத்திரிதீக்ஷை. (உ-ம்) "அவுத்திரிதான் வியன்கிரியைஞானமெனவிருபாலாய்" (காஞ்சிபு. தழுவ. நிகூ.)

அவுத்திரிதீட்சை — ஔத்திரிதீக்ஷை. (உவின். சஎ.)

அவுத்துவாசநம்—ஔத்து வாசநம். (த. நி. போ. உசஎ.)

அவுதசியம்—பசுவின்பால். (உ-ம்.) "மாருச்சிநேக பலநேயமவுதசியம்" (தைல. தைலவ. நிகூ.)

அவுப்சர்க்கிகரோகம்—கண்களில்வரும் ஒருவகை ரோகம்; அது: திர்ப்பலகாலத்திற் சூரியவிம்ப முதலிய தீட்சண ஒளிகளைத் திரந்திரம் உற்றுப்பார்ப்பதினால் வாதபித்த கபங்கள் கண்களில் வியாபிச்சும்போது பிறந் தவ்விழிகளின்ஒளியைக் குறைத்துப் பார்வையில்லாததுபோலச் செய்யும் அல்லது வைரேயத்திற் சொலிக்கும் நிறங்களைப்போலத்தோற்றுவிக்கும். (சீவரட். உருஎ.) [இது, மற்றொரு ஒளியினாற் பிறந்து நேத்திர ஒளியைக் கெடுத்தலால் வந்தபெயர். ஔபஸர்கிக.]

அவுபலபாஷாணம்—விளைவு பாஷாணம் முப்பத்திரண்டினொன்று. (உவின். சஎ.)

அவுபாசநம் — ஔபாசநம். விவாக காலத்திலே ஓமகுண்டத்தினின்றும் எடுத்த அக்கினியை அவியாது வளர்த்து வருவதற்குப் பிராமணவருணத்தாராற் செய்யப்படும் ஒருகிரியை. (கூர்மபு. வருணச். உகூ. உரை.) "வேற்றோர்புலத்தினெய்தினுந்தன்மனைவிவீந்தாளாயினும்- போற்றுமவுபாசநமொழிதல் புலவோர்புரியார்" (கூர்மபு. வருணச். உச)

அவுரி—நீலிப்பூண்டு. (உ-ம்.) "இந்திரராமுளியிலிங்கவுரிசயையாயில்" (தைல. தைலவ. எஉ.)

அவுழ்தம்—மருந்து. (உ-ம்.) "மெய்யினோய்மாற்றவுழ்தம்" (தாயு. பைங்கி. சஎ) ["அவிழ்தம்" பார்]

அவிழதம்—மருந்து. [ஔஷதம்: "அவு" ஔகாரத்தின் போலி. "ழ" ஷ என்பதனோடொத்த உச்சரிப்பினையுடையதமிழெழுத்து. ழகரத்தில் அகரங்கெட்டு "அவுழ்தம்"எனவும்வழங்கும்"]

அவுறுதம் — கிரந்திநோய். (உவின். சஎ.) 2. பித்தாதிக்கம். (உவின். சஎ.)

அவெளி—நரிவிளாமரம். (இராசவைத்.)

அவேட்சை—1. உடம்பாடு. (உவில். அஅ.) 2. கவனம். (உவில். அஅ.) 3. பார்த்தல். (உவில். அஅ.) [அவேக்ஷா: அ; ஈக்ஷ-பார்த்தல்.]

அவேட்டிதம்—சுற்றிக்கொள்ளப்படாதது, மூடப்படாதது. (பௌட். எ: உகூஇ. உரை) [அ;வேஷ்டித: [ஆப். அஉகூ.]

அவேத்தியம் — 1. அறியப்படாதது. இரகசியமானது. (உவில். அஅ.) 2. பசுக்கன்று. (உவில். அஅ.) [அவேத்ய: அ; வேத்ய-அறியப்படத்தக்கது, நோப்படுத்தத்தக்கது.]

அவேத்தியன் — அறியப்படாதோன். (உ-ம்.) "சர்வவியாபியாகிய சிவன் மாயா கரணங்களினாலே வேத்தியனும் சர்வான்மாவா அவேத்தியனுமல்லாமல் சச்சித சுவரூபனாகிநிற்பன்" (சி. சி. சு: க. சிவாக்.) [அவேத்: அ – எதிர்மறை. வேத்: – அறியப்படுவோன்.]

அவேதம்—மறதி, ஞாபகத்தில் வாராமை. (வென். கூ00.) [அவேத: அ; வேத-அறிதல்.]

அவை—1. அஃறிணைப் பன்மையில் வரும் ஒரு சேய்மைச் சுட்டுப்பெயர். (உ-ம்.) "அரசர்க்கடைவேயவையின் சணவையனைத்து- முரசக்கொடி யோனயமாகமொழிந்தபோது" (பாரத. வெளி. உநு.) 2. அஃறிணைப் பொருள். (உ-ம்.) "அவையவராய்" (சிவப்பிர. உ:க.) 3–5. அவையென்னேவலுந் தெரிநிலைவினைப்பகுதியும் பெயரெச்சத் தொகையும். 6. கற்றவர். (சூ. நிகண். உ: அ.) 7. கூட்டம். (பிங்க. உகூஉநு.) 8. சபாமண்டபம். (உ-ம்.) "வேரங்கேண்டுதமநியத்தவைக்கணேச்சி" (கந்தபு. நகரழி. கூ.) 9. சபை. (உ-ம்.) "அரசவையைக்களத்துளேகினார்" (கந்தபு. பானுகோ. வதை. கநுகூ.) 10. சபையில் வழங்கப்படுஞ் சொல். (தொல். சொல். சசஉ.)

அவைகாரணம்—1. தோண்டல். (மா.) 2. மூடல். (மா.)

அவைத்தல்—1. கையினாற்குத்துதல். (உ-ம்.) "ஆவியயர்ந்துளதங்கையவைத்தலின்" (சேதுபு. தேவிபு. சுக.) 2. நெரித்தல். (மா.) 3. நெல் முதலிய குற்றல். (உ-ம்) "அறையுரற் குழிகொளேன லவைக்குமொய்க்கோட்டலேக்கை" (சூத. எச்சி. பூ.உஉ: கூ.)

அவைதிகசாத்திரத்திரயம்—வேதவிரோதமான மூன்றுசாத்திரங்கள்; அவை: சார்வாகம், சைநம், பௌத்தம் என்பன. (ச. நி. போ. சகூ.)

அவைதிகம்— வேதசம்பந்தப்படாதது.

அவைப்பு — 1. குற்றப்பட்ட அரிசி. (உ-ம்.) "கவைக்கதிர்வரகினவைப்புறுமாக்கல்" (புறநா. உகரு.) 2. குற்றப்பட்டது. (உ-ம்.) "அவைப்புமாணரிசியமலைவெண்சோறு" (சிறுபா. கசுச.)

அவையடக்கம்—1. ஒருவர் தாஞ்செய்த நூலிலே குற்றம் ஏற்றுதபடிகற்றோரை வழிபட் டடக்குதல். (உ-ம்.) "அவையகத்தாரெல்லார்க்கும் வழிபடுகிளவி சொல்லுதல் அவையடக்கமெனப்பெறும்" (சி. சி. பாயிர. ச. மறை.) 2. சபையார் முன் அடங்கிநிற்றல். (உவின். சஎ.)

அவையடக்கு—அவையடக்கம். (உ-ம்.) "அவையடக்கியலேயரிறபத் தெரியின் – வல்லாகூறினும்வகுத்தனர் கொண்மினென் – றெல்லாமாந்தர்க்கும்வழி மொழிந்தன்றே" (தொல். பொரு. சஉரு.)

அவையம்—அபயம். (உ-ம்.) "அவையதின்னபயமென்று" (இராமா. வருண. சுஎ.) 2. கூட்டத்தார். (உ-ம்.) "சிறந்தகொள்கை யறங்கூறவையமும்" (மதுரை. சகூஉ) 3. சபாமண்டபம். (உ-ம்.) "ஆறுமாமுகவள்ளல் வாய்மையிகழ்ந்துளா னவையத்தை முன்-னீறுசெய்து" (கந்தபு. சதமுக. உக.) 4. சபை. (உ-ம்.) "தருக்குறுமவையங்காணிய பெருது" (கந்தபு. சூரனர. உ0.)

அவையர்—சபையிலுள்ளார். (உ-ம்.) "அன்னவன்கருத்துக்கேற்ப வவையருமணையரானார்" (திருவி. இசைவாது. உஉ.)

அவையல்—1. அவல். (செ.) 2. குற்றலரிசி. (உ-ம்.) "ஆய்தினையரிசிய வையலன்ன" (பொருநரா. கசு.) 3. திரட்சி. (உவின். சஎ.)

அவையல்கிளவி — அவைக்கண் உரைக்கத்தகாதசொல், (உ-ம்.) "அவையல்கிளவிமறைத்தனர்கிளத்தல்" (தொல். சொல். சசஉ.) [அவை- சபைக்குரிய சொல். அல்—அல்லாத.கிளவி—சொல்]

அவையவம்—அவயவம்.

அவையவவுருவகம்—அவயவவுருவகம்.

அவையவி— அவையவத்தையுடையது. (உ-ம்.) "அவையவிமுதலாயின முறையே கெடாதனவாய் அவையவமுதலியவற்றைப்பற்றியேநிற்கும்" (தர்க்கபா. ரு.)

அவையவியுருவகம்—அவயவியுருவகம்.

அவையறிதல் — சபையின தியல்பை அறிதல்; அது: மிகுதி யொப்புத் தாழ்வென்னுமூவகையிலெத் தன்மைத்தெனத் தன்னோடு தூக்கி யறிதல். (உ-ம்.) "அவையறிந் தாராய்ந்து" (வள். எகக.)

அவையாவரிசி—கொழியலரிசி. (உ-ம்.) "அவையாவரிசி யங்களித்துழவை" (பெரும்பா. உஎரு.)

அவையிற்றின்—அவற்றின். (உ-ம்.) "அவையிற்றின்மேலுமறைவர்" (சி. (சி. சி. அளவை. க)[இற்று—ஒருசாரியை.]

அவையிற்றுக்குள் — அவற்றுள். (சி. சி. அ: கச. நிரம்ப.)

அவைராக்கியம்—வைராக்கியம் இன்மை. (த. நி. போ. ரூ00) [அவைராற்யீ]

அழக்கு—ஆழாக்கு. (உ-ம்.) "அருந்தழக்கவிக்காச்சியமுப்பும் புளிப்பும்விட" (தைல. தைலவ. அச.)

அழகர்— அழகுடையவர். ("அழகன்" பார்.) 2. சிவன். (உ-ம்.) "மலர்மாரிசுரர்கடூற்ற-வழகரெழுந்தருளினார்" (திருவி. விருத்த. ௬௯.) 3. வெள்ளெருக்கஞ்செடி. (உவின். சஎ.)

அழகர்மலை—1. சுப்பிரமணியஸ்தலங்கள் ஆறினுளொன்று. (உவின். சஎ) 2. விட்டுணுஸ்தலங்கள் நூற்றெட்டினுளொன்று. "முத்திதருபேரழகர் திருமலையினிடையுற்றோம்" (கந்தபு. திருக்குற். கஉ.)

அழகவேதம்—அதிவிடயவேர். (கா. வைத்.)

அழகன்—1. அழகுடையவன். (உ-ம்.) "அந்தமிலழகனை" (இராமா. மிதிலை. ௬௯.) 2. சிவன். ("அழகர்" பார்.) 3. விட்டுணு. (உவின். சஎ)

அழகி—அழகுடையவள். (உ-ம்.) "அழகி கூத்தாடுகின்றாள்" (சிந். பதுமை. அகூ.)

அழகிது—நன்றாயிருந்தது. (உ-ம்.) "நோற்றுத்திரிந்தவா றழகிதாமே", (சி. சி. பர. சௌத். மறு. ச0.)

அழகிய—அழகுடைய. (உ-ம்.) "நீண்டழகிய" (சிந். கநக. கசரு.)

அழகியர்—அழகியார். (உ-ம்.) "ஆடுமாறுவல்லாரவரேயழகியரே" (தேவார. திருப்பனையூர். க. சுந்.)

அழகியவாணன் — ஒருவகைநெல்லு. (மா.)

அழகியார்—அழகையுடையவர். (உ-ம்.) "பரிமேலழகியாரடைவுறவிரிப்பார்" (திருவி. நரிபரி. ச0அ.)

அழகு—1. அளவு நிறம் முதலிய குணங்களினால் கண்ணுக்கு அல்லதுமனத்துக்கு இனிதாகத்தோன்றுந்தன்மை,

(உ-ம்.) "அழகெனுமழகுமோரழகு பெற்றதே" (இராமா. மிதிலை. ௬௪.) 2. ஒழுங்கு. (சி.) 3. சருக்கரை. (உவின். ௬௭.) 4. தக்கசெயல். (உ-ம்.) "சூதைக்கருதியமறைவிருந்துதொடுத் ததழகோசொல்லாயே" (நல். பார. இராமன்படை. ௭௬.) 5. நூலின் இனியதன்மை. (உ-ம்.) "சுருங்கச் சொல்லல் விளங்கவைத்தல்- நவின் றோர்க்கினிமை நன்மொழிபுணர்த்தல்- ஓசையுடைமை ஆழமுடைத்தாதல்-முறையின்வைப்பே யுலகமலையாமை-விழுமியதுபயத்தல்விளங்குதாரணத்த-தாகுதனூல்க்கழகெனும் பத்தே" (நன். பொதுப்பா. ௧௩.)

அழகுகாட்டுதல் — 1. உடை முதலியவற்றாலுயசிறப்பினைக் காண்பித்தல். (உவின். ௬௭.) 2. சரசஞ்செய்தல். (உவின். ௬௭.)

அழகுகாமாலை — காமாலைவகைகள் பதின்மூன்றனுள் ஒன்று; அது: சரீரம் வாட்டமில்லாமல்வெப்பத்துடன் மினுமினுத்தல்,கால்கைகள் அசதி, புருவம், கண்,மூத்திரம் இவைகளில் மஞ்சணிற முதலிய குணங்களை உண்டாக்கும். (சீவரட். ௧௩௬.)

அழகுதுரைப்பெண்-இந்திர பாஷாணம். (உவின். ௬௭)

அழகுதேமல் — அழகாகத் தோன்றும் ஒருவகைத்தேமல். (உவின், ௬௭; அழகுத்தேமல்.)

அழ்த்தியன் — பெருங்காயம். (உவின். ௬௭.) சோமநாதிப்பெருங்காயம்.(சி)

அழம் — பிணம். (உ-ம்.) "அழத்தினை வேட்டுணும்" (தணிகை.களவு.௫௬௭)

அழல் — 1—3. அழலென்னேவலுந்தெரிநிலைவினைப்பகுதியும் பெயரெச்சத் தொகையும். 4. அழுதல். (உ-ம்.) "எழுந்தோலிட்டழல்கேட்டு" (சேதுபு. அறம. ௭௨.) 5. எரிவு. (உவின்.௬௮) 6. எருக்கஞ்செடி. (கா. வைத்) 7. கள்ளி. (கா. வைத்.) 8. கார்த்திகைநட்சத்திரம். (உ-ம்.) "அழலெனுமீனவர்க்கத்தறுவரும்" (கந்தபு. திருவவ. ௧௨௬.) 9. கேட்டைநட்சத்திரம். (பிங்க. ௨௫௬) 10. கொடிவேலிச்செடி (கா. வைத்.) 11. கோபிப்பு. (உ-ம்.) சினக்காமன்வாளியுமழல் பிரிந்தன" (இராமா. நகர்நீ. ௨0௬) 12. சோபம். (உவின். ௬௮) 13. செவ்வாய். (பிங்க. ௨௬0.) 14. நஞ்சு. (உ-ம்.) "அரவின்சீற்றத்தாரழல்குளிக்க லூற்றூர்" (சிர். காந்த. ௨௫௪.) 15. நரகம். (உவின். ௬௮.) 16. நெருப்பு. (உ-ம்.) "ஆலயஞ்சிலைவேளாசமழல்பட" (கந்தபு. காமத. ௬0.) 17. வெப்பம். (உ-ம்.) "படுமழனீக்க" (கல்லாட. ௯௮) 18. வேகம். (உ-ம்.) "பன்மருந்தழலும்" (தைல. தைலவ. ௧௨௬)

அழல்வண்ணன் — சிவன். (உ-ம்) "அத்தனிடமழல்வண்ணனிடம்" (தேவார. அநேகத. ௫. ௬௩.)

அழல்வணன் — அழல்வண்ணன். (உ-ம்.) "அன்னையுமத்தனுமாவாயழல்வணு" (தேவார. மூதலாவது. தனித் திருவிருத்தம். பொது. ௬. நாவு.)

அழல்விரியன் — எரிவிரியன் பாம்பு. (உவின். ௬௮)

அழல்விரை — நேர்வாளம்.(கா.வைத்)

அழலல் — அழலுதல்.

அழலவன் — 1. அக்கினிதேவன். (உவின். ௬௮.) 2. சூரியன். (பிங்க. ௨௪0.) 3. செவ்வாய். (பிங்க. ௨௬0.)

அழலாடி — சிவன். (உ-ம்.) "அழலாடிகண்டாய் அழகன்கண்டாய்" (தேவார. திருக்கோட்டை. அ. நாவு.)

அழலிக்கை — மனமெரிதல், பொறாமை. (உவின். ௬௮.)

அழலுதல் — 1. எரிதல். (உ-ம்.) "இரவிகாந்த மழல்வதென்னவாறெனு" (கைக்கி. ௬௭.) 2. கோபித்தல். (உ-ம்.) "அவன்வந்திதுபகராதமு னதிவேகமொடழலா" (பாரத. மணிமா. ௭௬.) 3. வெம்மைசெய்தல் (உ-ம்.) "ஆலமுங்குளிர்வுறவழலவீசினன்" (பாரத. மணிமா. ௬௧.) "தேரோர்க்கழன்றவேலினை யெனவும்" (சிறுபாணு. ௨௩௪.)
[அழல் என்னும்பகுதி உகரச்சாரியை பெற்றது.]

அழலேந்தி — சிவன். (சூ. நிகண். ௧: ௬.) [அழல்-அக்கினி. ஏந்தி-தரித்தவன்.]

அழலோம்பல் — அக்கினிகாரியஞ்செய்தல். (உ-ம்.) "பொதியழலோம்பல் பூசையில்" (சைவச. பொது. ௬௪௫.) [அழல்-அக்கினி. ஓம்பல்-காத்தல்.]

அழலோன் — 1. அக்கினிதேவன். (உ-ம்.) "அஞ்சியர்தவழலோனு மப்பொழுதொரந்தணாளன் வடிவாகியே" (பாரத. இராய. ௫௭.) 2. சூரியன். (உ-ம்.) "பனிக்கதிரல்லனீயழலோய்" (கந்தபு. ஆற்று. ௨௪.) 3. செவ்வாய். (சூ. நிகண். ௧: ௬0.)

அழற்கடவுள் — அக்கினிதேவன். (உ-ம்.) "அங்காளினழற்கடவுள்கரியாக" (கந்தபு. காமத. ௬0௬.)

அழற்கண்ணன் — 1. உருத்திரன்.(சி.) 2. சிவன். (சி.)
[அழல்-நெருப்பு. கண்ணன் - கண்ணுள்ளவன்.]

அழற்கண்வந்தோன் — 1. சுப்பிரமணியன். (சி.) 2. வீரபத்திரன். (சூ. நிகண். ௧: ௨௨.) [அழற்கண்-அக்கினிக்கண்.]

அழற்கதிர் — சூரியன். (உ-ம்.) "வேலையழற்கதிர்படிந்தவியன்கங்குல்" (பெரியபு. திருஞா.அ) [அழல்-வெப்பம். கதிர்-கிரணம்.]

அழற்கருமம் — அக்கினிகாரியம். (உ-ம்.) "இல்வாழ்வுந்றோர்தருமமழற்கருமமதிதிபூசை" (கூர்மபு. வருணச். ௬௬.) [இல்வாழ்வார்க்குரிய அழற்க

ருமமாவது: சூரியனுச்சியில் வருங் காலத்துச் செய்யப்படுங் கிரியை.] "வானப்பிரத்தர்செய-ருெல்லாரணங்கள்பயிறலழற் கருமம்" (கூர்மபு. வருணச்.கக) [வானப்பிரத்தர்க்குரிய அழற்கருமமாவது: பஞ்சமகாயஞ்ஞங்களைச் செய்தல்.]

அழற்காய் —மிளகு. (உ – ம்.) "தோகைவிளங்கழற்காய்" (தைல, தைலவ. ருச.)

அழற்சி — 1. அழுக்காறு. (உவின்.சஅ.) 2. உறைப்பு. (உ-ம்.) "புளிப்புக்கைப் பழற்சியுப்பு"(ஞானவா. விரதசு. கசு) 3. எரிதல். (உ–ம்.) "நெற்றியங்கண்ணும் வெய்யவலக்கணுமழற்சிநீங்கா –திற்றிடுமென்ருல்" (கூர்மபு. கண்ணனவ. சஉச.) 4. கோபம். (உ–ம்.) "யாண்டுநேரெல்லையாக வவன்றிறத் தழற்சியின்மை – வேண்டுவலென்று சொன்ஞன்" (சிந்தா. நாம. ௯சுச.)

அழற்பால் — எருக்கஞ்செடி. (கா. வைத்.) [அழல்-அழற்சி]

அழற்பித்தம்—ஒரு வகைப் பித்தநோய். (உவின். சஅ.)

அழற்பிரபை — ஏழ்நரகவட்டத்தொன்று. (உவின். சஅ.) தீநரகு. (சி.)

அழற்புற்று—ஒருவகைப் புற்றுரோகம்; அது: வெள்விளியிற் காந்தலுடன் விம்மலான தசையையுண்டாக்கும். (சீவரட். உசுசு.)

அழற்றி — அழலச்செய்யுமது. (மா.)

அழற்று—1-3. அழற்றென்னேவலுந் தெரிநிலைவினைப்பகுதியும் பெயரெச்சத்தொகையும்.

அழற்றுதல் — 1. அழலச்செய்தல். (உ – ம்.) "அழற்றியபல்கதிராதபத்திரம்" (கந்தபு. திருப்பர, சு.) 2. சுடுதல். (உவின். சஅ.)

அழன்—பிணம். (உ–ம்.) "அத்தன்மிசைகாட்டுறை யழன்பணியையேற்றி" (சேதுபு. காசிப. சரு)

அழனம்—1. நெருப்பு. (பிங்க. ௯௫0௭.) 2. பிணம். (மா.)

அழனுகம் — ஒருவகை விடப்பாம்பு. (உவின். சஅ)

அழாக்கு — ஆழாக்சென்னும் அளவு. (உ–ம்.) "வீரியமழாக்குடற்பித்தமுழக்கு" (தணிகை. அகத்தி. ௯0அ.) ["ஆழாக்கு" "அழாக்கு" எனக்குறுகி நின்றது.]

அழால்—அழுதல். (உ–ம்.) "அழான் மறந்த புன்றலைச்சிருர்" (புறநா. சசு.) [அழு; ஆல்.]

அழி—1-3. அழியென்னேவலுந் தெரிநிலைவினைப்பகுதியும் பெயரெச்சத்தொகையும். (உ-ம்.) "அழிகருப்பம்" (பெ–கை.) 4. அழிவு. (உ–ம்) "அழிவந்தசெய்யினும்" (வள். அ0எ.) 5. இரக்கம். (உ – ம்.) "அழிவரப்பாடிவருநரும்" (புறநா. கருஅ.) 6. வைக்கோல். (உ–ம்.) "உழுதநோன்பகடழிதின்ருங்கு" (புறநா. உகரு.) [4, 5. பெயர்ப்பொருளைத்தரும் இவை மூதனிலைத் தொழிற்பெயர்கள். 6. தின்றழிதலால் வந்தபெயர்.]

அழிக்கல் — அழித்தல். (உ–ம்.) "ஐயருமழிக்கலாகா" (இரகு. மீட்சி.சுக.)

அழிகட்டு — 1. ஒன்றனையழித்தற்குச் செய்யும் எதிர்ச்செய்கை. (உவின். சஅ.) 2. தடை. (உவின். சஅ.) 3. பொய்யேதுக் கற்பித்து மறுத்தல். (உவின். சஅ.) 4. விடமுதலியவைகளுக்குமாற்று. (உவின். சஅ.)

அழிகரு—1. சிதைந்துபோகுங் கருப்பம். (உ – ம்.) "அழிகருக்கடலூடேயமிழ்தலற்று" (திருப்பு. உருக.)

அழிகருப்பம் — வயிற்றில்உருவங்கொள்ளாத இளங்கருவா யிருக்கும்போது கருப்பங்கரைந்து விழுதல். (சீவரட். உ0ரு.)

அழிகவுள்—மதம் இடைவிடாதொழுகுதலாலேதனதியற்கையழிந்தகன்னம். (உ–ம்.) "அழிகவுளியானைகொன்றவெஞ்சினத்தரியின்" (இராமா. வரைக்காட். ௯அ.)

அழிகுட்டி— வயிற்றின் மரித்த குட்டி. (சி.)

அழிகை—1.அழிவு. (உவின். சஅ.) 2.சிதைவு. (உவின். சஅ.)

அழிச்சாட்டியக்காரன்—தொந்தரவுக்காரன். (உவின். சஅ.)

அழிச்சாட்டியம்—1. அலைக்கழிவு.(உ-ம்.) "கடன்வாங்கிக்கொண் டழிச்சாட்டியஞ் செய்கிருன்" (உவின். சஅ.) 2. அழிவுசெய்தலைக்கருதியதீச்செயல். (உவின். சஅ.)

அழிஞ்சில் — 1. அழிஞ்சிற்பட்டை. (உ–ம். "அமுக்கிரி" பார்.) (தைல. தைலவ. சஉ.) 2, ஒருமரம்; இதன்வேர் பட்டை விரை பூ இலைமுதலியவை நஞ்சுக்கு மாற்ரும். (உவின். சஅ.) இதன்விரை கிராணித்திரவியங்களில் ஒன்று. (கா. வைத்.) "தொழுஞ்சகமோகக்கரப்பிற் சொல்லஞ்சாமழிஞ்சில்விரையென்றறி" (பதார்த்தகுண. ௯ருச)

அழிஞ்சு — அழிஞ்சில்வேர். (தைல. தைலவ. எஉ. "அத்தி" பார்.)

அழித்தல் — 1. இல்லதாகச் செய்தல். (உ–ம்.) "இல்லவளணிகலமழித்தல்" (தணிகை. அகத். உசச.) 2. கண்டித்தல். (உவின். சஅ.) 3. குலைத்தல். (உவின். சஅ.) 4. கெடுத்தல்.(உ–ம்.) "சோலமழித்துமேவியவரம்பையர்" (இராமா. சித்திர. உக.) "செய்தவமழித்தாள்" (கந்தபு. காசிபன்பு. கஎ.) 5. சங்கரித்தல். (உ–ம்.) "உலகமழித்துநிற்குமொருபெருங்கடவு ளொத்தான்" (கந்தபு. நகரழி. சு.) "சிவனுடைய பஞ்சகிருத்தியத்துளொன்று;

அது: பிரபஞ்சத்தை யொடுக்குதல். சதுகரணபுவனபோகங்களை யொடுக்குதல். "அறுதியிலரனேயெல்லாமழித்தலால்" (சி. சி. க: ௩௰) 6. பாழாக்கல். (உவின். சஅ.)

அழிதகன்—1. அழிக்கப்படத் தக்கவன். (உ-ம்.) "அறத்தைக்காயுமழிதகன்" (கந்தபு. தருமகோ. எஅ.) 2. தகுதிகெட்டவன். (உ-ம்.) "அழிதகன்குறுகுவான்முன்" (திருவிளை.மாபாத. உ௧.) ["தகவழிந்தவன்" என்பது "அழிதகன்" எனமாறி நின்றதெனக் கூறுவர். (பெரியபு. இயற். ௪௰, உரை.)

அழிதகை—தகுதிக்கேடு.

அழிதகையவன்—தகுதிகெட்டவன். (உ-ம்.) "அழிதகையவனைப்பார்த்தித்-திறப்பழியாங்குச்சென்றாய்" (திருவிளை. மாபாத. ௩௦.)

அழிதகையாள்—தகவழிந்தவள், கற்பழிந்தவள். (உ-ம.) "அன்னையென்னுமழிதகையாள்" (திருவிளை. மாபாத. எ.)

அழிதரவு—அழிதல். (உ-ம்.) "அன்னை மூப்பழிதர வார்கொ லாற்றுவார்" (நைட. அன்னத்தைக்கண். ௬அ.)

அழிதல்—1. இரங்குதல். (உ-ம்.) "அழிந்தநெஞ்சம்" (புறநா. உ௬௬.) 2. கலங்குதல். (உ-ம்.) "மஞ்சுதம்வயிறழிந்-தஞ்சிசீருகுத்தவே" (சிந்தா. காந்த. எஅ) 3. குலைதல். (உ-ம்.) "உண்டையுமழிதலுற்ற" (கந்தபு. தருமகோ. எஅ.) 4. கெடுதல். (உ-ம்.) "ஆரவண்டலழியும்" (நைட. கைக்கி. ௪௦.) 5. சிதறுதல். (உ-ம்.) "அழிநறுவெயர்விற்றேன்ற" (நைட. அன்னத்தைக்கண். ௨எ.) 6. தவறல். (உவின். சஅ.) 7. தோல்வியடைதல். (உ-ம்.) "ஆரமருடற்றிமல்லரனைவருமழிந்தபின்னர்" (பாரத. மற்போர். எ.) 8. நிலைகெடுதல். (உ-ம்.) "உள்ளமார்வமோ டழிந்ததே" (நைட. கைக்கி. ௬.) 9. பெருகுதல். (உ-ம்.) "அழியும்புனல்" (சிந்தா. பதுமை. உஅ.) 10. மாங்கலங்கல். (உ-ம்.) "இதற்குள்ளழியே லென்றான்" (இராமா. நகர்நீங். ௪அ.) இடுக்கணழியாமை. (வள். அதி. ௬௩.) 11. வருந்துதல். (உ-ம்.) "தீயின்மேயதளிரின் வாடியழிதல்கண்டுசிந்தியா" (நைடகைக்கி. ௧௧.)

அழிதலை—தலையோடு. (உ-ம்.) "அழிதலையங்கையிலேந்தி" (தேவார. திருவாழ். எ.சம்) [அழிந்ததலையென்றபடி.]

அழிதன்மாலைய — அழியுந்தன்மையுடையன. (உ-ம்.) "அழிதன்மாலையவென்றறத்துறந்தவர்" (தணிகை. அகத். உ௬௬.) [அழிதல்; மாலை—தன்மை.]

அழிதுளி—மிக்கதுளி. (ஐங்குறு.)

அழிதூஉ—அலி. (உ-ம்.) "அந்தணரிலழிதூஉவானீர்" (கந்தபு. அகந்தன்சா. ௬௬.)

அழிந்தோரைநிறுத்துதல்—அறத்துறுப்பெட்டினுள் ஒன்று. (உவின். சஅ.)

அழிப்பாளி—பொருளை வீணாயழிப்பவன். (மா. வழக்.)

அழிப்பு—1. அதிகஞ் செலவுசெய்தல். (உவின். சஅ. வழக்.) 2. அழித்தல். (உ-ம்.) "அழிப்பரியேவலென்றாய்" (சி. சி. பர. பாஞ். மறு. அ.)

அழிபசி—மிக்கபசி. (உ-ம்.) "அற்றாரழிபசிதீர்த்தல்" (வள். உ௨௬.) ["எல்லாமகளுநன்மைமழியவருதலினழிபசி" வள். உ௨௬. பரி, அறிவுமுதலிய அழிதற்குக் காரணமானபசி. சிறுபா, ௧௪௦. நச்சி.]

அழிபடல்—வருந்தல். (உ-ம்.) "ஆறுவின்ன லழிபடக்காண்பான்" (கல்லாட. ௪௬.)

அழிபுண்—ஆறாதபுண். (உவின். சஅ.)

அழிம்பன்—1. கடன் இறுக்காமற் புரட்டுகிறவன். (உவின். சஅ. 2. வீணாய் அதிகஞ் செலவுசெய்கிறவன். (உவின். சஅ.)

அழிம்பு—1. கேடு. (உ-ம்.) "அழிம்பு செய்ய" (உவின். சஅ.) 2. கொடுக்கவண்டியகடனைக் கொடாமற்செய்யும்புரட்டு. (உ-ம்.) "என்னுடைமைக்கழிம்பு பேசுகிறான்" (உவின். சஅ.) [வழக்.]

அழிமதி—1. கெடுபுத்தி. (உவின். சஅ.) 2. அதிகச்செலவுசெய்துபொருள் அழிதல். (உவின். சஅ.)

அழிமுதல்—முதலழிவு. (சி.)

அழியாதபத்தினி — திரௌபதி. (உவின். சஅ.) [பத்நி—மனைவி, ஐவர்க்கு மனைவியாயுங் கற்பழியாமைபற்றி வந்தபெயர்.]

அழியாமுதல்—1. கடவுள். (சி.) 2. நிலமுதலிய அசைவற்றபொருள். (சி.)

அழியாமை — 1. அழிவின்மை. (மா.) 2. மாங்கலங்காமை. (உ-ம்.) "இடுக்கணழியாமை" (வள். ௬௩. அதி.)

அழியுநர்—தோற்பவர். (உ-ம்.) "அழியுநர்புறக்கொடையயில்வாளோச்சாமை" (வெண்பாமாலை. வஞ்சிப். ௨௦.)

அழிவழக்கு — நியாயம் இல்லாத ஓர் ஏதுவைக்கற்பித்து வாதாடும் வழக்கு. (உவின். சஅ.)

அழிவி—சழிமுகம். (உவின். சஅ.)

அழிவிலான்—கடவுள். (உ-ம்.) "அழிவிலானுரையாகமம்" (திருவிளை. நகர. ௬௦.)

அழிவிலூர்—சிதம்பரம். (உ-ம்.) "அரிவையூரழிவிலூரென் றலகினூல்பரவ" (கோயிற்பு. இரணிய. ௬௬.)

அழிவு—1. சழிமுகம். (பிங்க. ௫அ௬.) 2. குற்றம். (மா.) 3. கேடு. (உ-ம்.) "அழிவிலாயுளும்" (கந்தபு. தருமகோ. ௫.) 4. தோல்வி. (உ-ம்.) "அரும்புறாகலைக்கொங்கைக் கழிவுஞ்சு

முசமொவ்வாது" (சர்தபு. மாயை. ருக.) 5. நட்டம். (சி.) 6. மாக்கலக்சம். (உ-ம்.) அடுக்கிவரினு மழிவிலா னூற்ற" (வள். சுஉகு.)

அழிவுகாலம்—புகமுடிவு. (சி.)

அழிவுபாட்டபாவம் — அபாவப்பிரமாணவகையுள் ஒன்று; அஃதொரு பொருள் அழிவதனூற் பின்னில்லையென்னும் அபாவம். "குடம்உடைந்தா லஃதில்லையென்கை" என்பதிற்போல. (சி. சி. அளவை. க. உரை.) [அழிவுபாடு-அழிவுபடல். அபாவம்-இன்மை.]

அழு — 1-3. அழுவென்னேவலுந் தெரிநிலைவினைப்பகுதியும் பெயரெச்சத்தொகையும். (உ-ம்.) "அழுகுரல்விலக்கியபி னைம்மசவையுங்கொண்- டெழுகடனிலத்தரசையீம விதிசெய்ய" (பாரத. சம்பவ. ௬௦௫. பெ-சை.)

அழுக்ககற்றி — சாம்பற்சாரநீர். (உவின். சஅ.)

அழுக்கடித்தல்-அழுக்கொழிக்கச்சீலையடித்தல். (உ-ம்.) "அழுக்கடிக்கும் வண்ணார்போலாய்" (தாயு. உடல். சுரு.)

அழுக்கணவன்—1. அழுக்கணவன்புழு வைத்த கூடு. (சி.) 2. ஒருபுழு. (சி.) [அழுக்கு; அணவு-ஒட்டல். அன்-உலகவழக்கில் ஒன்றன்பாலில் வரும் ஒரு விகுதி.]

அழுக்கம் — கலை. (உ - ம்.) "அழுக்கமுற்றெழுந்து" (திருவிளை. விறகு. சஅ.) [அழுங்கு—அம்.]

அழுக்கற்ற-1.அழுக்காறடைந்த. (உ-ம்.) "இவனூற்றலின்வெரீஇயழுக்கற்ற சிந்தையான்" (பாரத. வாரணு. உக.) [அழுக்கறு என்னும் வினையடியாற்பிறந்த ஓர் இறந்தகாலப் பெயரெச்சம்.] 2. அழுக்குநீங்கிய.

அழுக்கற்று — 1.அழுக்கறு என்னும் வினையடியாற் பிறந்த ஓர் இறந்தகால வினையெச்சம். (உ-ம்.) "அழுக்கற்ற கன்முருமில்லை" (வள். ௬௭௦.) 2. அழுக்குநீங்கி.

அழுக்கறல் — அழுக்கு நீங்குதல் (மா.) [அழுக்கு; அறல்-நீங்குதல்.]

அழுக்கறுத்தல்—பிறராக்கத்திற் பொறாமையடைதல். (வள். ௧௬௬, பரி.) ["அழுக்கறுப்பான்" பார்.]

அழுக்கறுப்பான் — 1."அழுக்கறு" என்னும் வினையடியாற்பிறந்து உயர்திணையாண்பாலில் வரும் ஓர் எதிர்கால வினைமுற்று. (உ-ம்.) "பிறனுக்கம் பேணு தழுக்கறுப்பான்" (வள். ௧௬௯.) 2. பொறாமைகொள்பவன். (உ-ம்.) "கொடுப்பதழுக்கறுப்பான் சுற்றம்" (வள். ௧௬௬.)

அழுக்காமை—ஒருவகையாமை. (மா.)

அழுக்காறாமை—அழுக்காறு செய்யாமை. (வள். அதி, ௧௭.) [அழுக்காறு என்னுஞ்சொல்,எதிர்மறையாகாரமும் மைவிகுதியும் பெற்றுநின்றது.]

அழுக்காறு — 1.பிறராக்கம் பொறாமை,—பிறராக்கத்தில் அடையும்பொறாமை. (உ-ம்.) "அழுக்காறவாவெகுளியின்னுச்சொன்னூன்கும்" (வள். ௩௫.) 2. பொய். (உவின். சஅ.)

அழுக்கு—1. அவித்தை. (உ-ம்) "அழுக்கொடுபெற்றுஞ்சிவர்க்கு" (கைவ.தத். ௩௪.) 2. அழுக்காமை. (உவின்.சஅ) 3. ஆணவமுதலிய பாசம். (உ-ம்.) "உயிர்க்கழுக்கறுக்க" (சிவதரு. பாயிர. ௭.) 4. சடப்பொருளின் அசுத்தம். (உ-ம்.) "இரண்டியக்கமுதலான வழுக்காடை யெய்தின்" (தணிகை. அகத். ௩௨௨) 5. சித்துப்பொருளின் அசுத்தம். (உ-ம்.) "அழுக்குளத்தினும்' (தணிகை அகத். உ௧௬) 6. பொறாமை. (உ-ம்) "விழுத்தகும்பலசெல்வமும்வியந்து பார்த்துள்ளத் - தழுக்கருமையாலின்னமுமமரர்கண் ணுறங்கார்" (திருவிளை. நகர. ௬௦௦.)

அழுகண்ணி— ஒரு பூண்டு. (உவின். சஅ) [நீர்பொசிந்துகொண்டிருப்பதினூல் வந்தபெயர்.]

அழுகல் — 1. அசுத்தம். (உ-ம்.) "தேம்புகலாம்விளைத்திடுவனமுகல்வாயினன்" (தணிகை, அகத். ௩௬௪) 2. அழுகுதல். (உவின். சஅ) 3. பதனழிதல், அழுகிக்கெட்டுப்போதல். (உவின். சஅ) 4. பதனழிந்தபதார்த்தம். (உவின். சஅ.)

அழுகள்ளன் — கள்ளமாய் அழுவோன். (சி.)

அழுகு — 1-3. அழுகென்னேவலுந் தெரிநிலைவினைப்பகுதியும் பெயரெச்சத்தொகையும்.

அழுகுசப்பாணி—1. அழுகுசர்ப்பம். (உவின். சஅ)2.ஒரு விடரோய். (உவின். சஅ)

அழுகுசர்ப்பம்—ஒரு விஷசெந்து.(உவின். சஅ.)

அழுகுணி—1. அழுகிற குணம் உள்ளவன்-வள். (உவின். சஅ) [அழு; குணம்; இ-ஓருவிகுதி.] 2. ஒருகரப்பநோய். (உவின்.சஅ) [அழுகு-உண்; இ.]

அழுகுதல் — 1. அருவருக்கப்படுந் தன்மையாதல். (உ-ம்) "அழுகுசேறறிந்து" (தணிகை. நாட்டு. ௬௦) 2. பதனழிதல். (உவின். சஅ)

அழுகை—அழுதல். (உ-ம்) "அழுகை யுங்காளும் பொய்யும்" (சிவதரு. பாவ. ௬)

அழுங்கல் — 1. அஞ்சுதல். (உவின். சக.) 2. அலைதல். (உவின். சக) 3. அழுதல். (உவின். சக) 4. அழுந்தல். (உவின். சக) 5. இரக்கம். (உ-ம்) "அதுசேர்ந்தல்கியவழுங்கலூரே" (புறநா.உ௨௦) இரங்குதல். (உ-ம்) "அழுங

கல்வினையலைற" (சிந்தா. முத்தி. சகரு.) 6. உருவழிதல். (உ-ம்) "பிணனழுங்கக்களனுழக்கி" (புறநா. கூஅ.) 7. ஒலித்தல். (உ-ம்) "அழுங்கியகழற்கால்வீரன்" (கந்தபு. கடல்பாய். ௬.) 8. ஒளிமழுங்கல். (உவின். சகூ) 9. கேடு, கெடுதல். (உ-ம்) "குணனழுங்கக்குற்றமுழைநின்றுகூறுஞ்சிறியவர்கட்கு" (தொல். சொல். ௬௫௦. உரை.) 10. சோம்பு. (சூ. நிகண், அ: கூஎ) 11. தாமதித்தல், தவிர்தல். (உ-ம்.) "செலவழுங்குகிளவி" (தொல். பொரு. ௯எஎ) 12. துன்பப்படுதல். (உவின். சகூ) 13 யாழ்நரம்போசை. பிங்க. ௯சச) 14. வருந்தாதேயெனப்பொருள்படும் ஒருமுன்னிலையேவல்வினை. (உ-ம்) "அலரதாகாதொழியுமேயழுங்கலென்று" (சிந்தா. ௧௩௧. ௧௯௦) 15. வருந்துதல். (உ-ம்) "ஆனநற்புலவர்தாரித்திரத்தினலழுங்கலானும்" (பஞ்சத. சுகிர். உகூ)

அழுங்கள்ளர் — கள்ளமாய் அழுவோர். (உ-ம்) "அழுங்கள்ளர்தொழுங்கள்ளர்" (தண்டலை. ௯௦௩.)

அழுங்காமை — அழுங்குதல் அடையாமை. [அழுக்காமை.]

அழுங்கு — 1-3. அழுங்கென்னேவலுந் தெரிநிலைவினைப்பகுதியும் பெயரெச்சத்தொகையும். (உ-ம்) "வெள்ளநோக்கியழுங்குசெம்பியன்" (திருவிளை. விடை. ௯௨, பெ-கை.) 4. ஒருவிலங்கு. (உ-ம்) "குறுமுயலுடும்போடாமை முட்பன்றியழுங்கிவைகொன்றருந்தினுமாம்" (கூர்மபு. அல்லவை. கூ) 5. பாலையாழ்த்திறவகையினொன்று. (பிங். ௧௩௮௩) [உவின்சிலோ ஆமையென்றுமொருபொருள் கூறுவர்.]

அழுங்குதல் — அழுங்கல். (உவின். சகூ.)

அழுங்குப்பிடி — நெகிழாது பிடித்தபிடி. (உவின். சகூ.) [அழுங்குபோலப் பிடித்தல்பற்றிவந்தபெயர்.]

அழுங்குவித்தல் — துன்பம் உறப்பண்ணல். (உ-ம்.) "நெஞ்சமழுங்குவிக்குமாலை" (சிந்தா. சுரமஞ். ௫எ.)

அழுத்தக்காரன் — 1. அடக்கமானவன். (உவின். சகூ.) 2. இறுக்கமுடையவன். (உவின். சகூ.)

அழுத்தங்கோல் — ஒருவகை யெழுதுகோல், மைதீட்டுங்கோல். (சி. சி. அளவை. ௧. மறை.)

அழுத்தம் — 1. அடக்கம். (உவின். சகூ.) 2. இறுக்கம். (உவின். சகூ.) 3. உலோபத்தனம். (உ-ம்.) "திரவியத்திலழுத்தமானவன் செத்தாலுங்கொடான்" (உவின். சகூ.) [வழக்.] 4. உறுதி, இடம். (உ-ம்.) "துகளறுசமஞ்கி-யழுத்தமாகிய வாத்துமதத்துவத்தமரந்தணன்" (ஞானவா.) 5. ஒப்பம், சருச்சரையின்மை. (சி.) 6. கடினம். (உவின். சகூ.) 7. பதிப்பு. (உவின். சகூ.) 8. பிடிவாதம், முரட்டுத்தனம். (உவின். சகூ.) 9. பிரியமாய் அழுந்திநிற்றல். (உ-ம்) "உயிரசைவால் வாதனைப்பாலழுத்தத்தாலறிவைா விரிவக்கா யென்னில்" (ஞானவா. உபசா. ௨௦.) 10. மிக்ககவனம். (உவின், சகூ.)

அழுத்தல் — அழுத்துதல். (உ-ம்.) "ஆர்தருசாக்கிரங்கனவுசுழுத்தியெனவழுத்தலுறுமவத்தைமூன்றும்" (சூத. எக்கி. பூ. ௫: ௧௯.)

அழுத்தி — அழுந்தச்செய்கிறவள்-வன். (உ-ம்.) "புயமீதேகோங்குபடைத்ததனத்தையழுத்திகள்" (திருப்பு. ௨௯௯)

அழுத்து — 1. அழுத்துகை, பதித்தல். (உ-ம்.) "நகநுதியழுத்தைக்காட்டி" (திருப்பு. ௪௦௯.) 2-4. அழுதவென்னேவலுந் தெரிநிலை வினைப்பகுதியும் பெயரெச்சத்தொகையும்.

அழுத்துகை — அழுத்துதல். (உவின். சகூ.)

அழுத்துதல் — 1. அழுந்தச்செய்தல். (உ-ம்.) "இதையுன்மனதிலேயழுத்திப்பார்" (உவின். சகூ.) 2. உரப்பித்தல். (உவின். சகூ.) 3. பதித்தல். (உ-ம்.) "தாவேதுமில்லாத் தமனியமீது தலம்புரக்குங்-கோவேயழுத்துவரோவதியோருங்குருவிந்தமே" (வாண. அ௨.) 4. பாராட்டல். (சி.) 5. மனத்திலுறைக்கச்செய்தல். (உ-ம்.) "அவன் அழுத்திப்பேசினன்" (உவின். சகூ.)

அழுதல் — 1. இரங்கல். (சி.) 2. கதறுதல். (உவின். சகூ.) 3. சிணுங்கல். (உவின். சகூ.) 4. துக்கத்தினால் அல்லது வருத்தத்தினால் கண்ணீர்விட்டுச் சத்தமிடல். (உ-ம்.) "இன்பவீடெதுவென்றேநின்று நின்றழுதிலை" (வைராக். சத. ௧௪.)

அழுந்தக்கட்டல் — இறுகக் கட்டுதல். (உவின். சகூ.)

அழுந்தல் — 1. அமிழ்ந்தல். (உ-ம்.) "அள்ளல் கூர்மமழுந்தும்" (தணிகை. நாட்டு. ௯௦எ.) "செயற்கையம்பிறவிநச்சுக்கடலகத்தழுந்துகின்றார்" (சிந்தா. பதுமை. ௨௨அ.) 2. அமுங்குதல். (உ-ம்.) "கால்கள்சேற்றிலழுந்திட" (பஞ்சத. சுகிர். உகூ.) 3. இறுகுதல். (உ-ம்.) "அவையழுந்தப்பற்றி" (புறநா. எஎ.) 4. பதிதல். (உ-ம்.) "நன்றாகவழுந்த எழுது" (உவின். சகூ.) 5. வருந்துதல். (உ-ம்.) "அழுந்தே னரகத்தியானென்றிருப்ப" (திருக்கோ. ௧௯௯.)

அழுந்து — 1. அமிழ்ந்துதல். (உ-ம்.) "அழுந்துபட்டுள ரொத்தயர்ந்தார்" (இராமா. இலங்கையெரி. உச.) 2. அழுந்துதல். (உவின். சகூ.) 3-5. அழுந்தென்னேவலுந் தெரிநிலைவினைப்பகுதியும் பெயரெச்சத் தொகையும். (உ-ம்.) "இறையடிக்கணேயழுந்து நேசமொடு" (திருவிளை. அட்ட. ௯௯, பெ-கை.) [அழுந்தும்-நேசம் எனக்கொளின் அத்தொகையன்று.] 6. ஆழம். (உ-ம்.) "அழுந்துறுபாலின்வே

லையமரர்கள் கடைந்தகாலை" (கந்தபு. காசிபன்பு. உரு.) 7. வெற்றிலை நடும் வரம்பு. (உவின். சகூ.)

அழந்துதல் — அழுந்தல். (உவின். சகூ)

அழந்துபட்டிருத்தல்— நெடுங்காலம் அடிப்பட்டிருத்தல். (உ-ம்.) "அழுந்துபட்டிருந்த பெரும்பாணிருக்கையும்" (மதுரை. நசஉ.)

அழந்தூர் — ஓரூர். (பெரியபு. ஞான. சகூச.)

அழந்தை — அழுந்தூர். (தேவார. அழுந்தூர். கூ. சம்.)

அழப்பு—சோறு. (மா.)

அழப்புகம்—தேவலோகம். (மா.)

அழம்பில் — ஓரூர்; அது: வான்விறல்வே ளென்னுங் குறுநில மன்னனுடையது. (உ – ம்.) "வானவிறல்வே ளழும்பிலன்னநாடிழந்தனரும்" (மதுரை. நசரு.)

அழவம் — 1. அப்பவருக்கம். (உவின். சகூ.) 2. அழுக்குநிலம்; (உவின் சகூ.) 3. ஆழம். (உ – ம்.) "கடன்மண்டழுவத்துக் கயவாய்கடுப்ப" (மலைபடு. ருஉஅ.) 4. கடல். (உ – ம்.) "நீண்டொலியழுவங்குறைபடமுகந்து" (புறநா. கசுக.) 5. குழி. (சி.) 6. துருக்கம்.(உவின். சகூ) 7. நடுக்கம். (உவின். சகூ.) 8. நாடு. (சூ. நிகண். ரு: கூ.) 9. பரப்பு. (உ-ம்.) "நீரழுவகிவப்புக்குறித்து" (புறநா.கசுச.) 10. பெருமை. (உவின். சகூ.) 11. போர்க்களம். (உ-ம்.) "வாளமரழுவத்தவுணர்கோன்சேனை" (கூர்மபு. அந்தகா. ருக.) 12. முரசு. (உவின். சகூ.) 13. வழுக்குநிலம். (உவின். சகூ.)

அழை —அழையென்னேவலுந் தெரிநிலைவினைப்பகுதியும்பெயரெச்சத்தொகையும்.

அழைநகை — அழைத்தல். (மா.)

அழைத்தல் — 1. கூட்டிக் கொண்டு போதல். (உவின். சகூ.) 2. கூட்டிக்கொண்டுவருதல். (உவின். சகூ,) 3. கூப்பிடுதல். (உ-ம்.) "நீலவுண்கண்-ணையாலழைப்பன போலிமையா நிற்குங் காரிகைக்கே" (வாண. கூ.) 4. வரச்செய்தல். (உ-ம்.) "அரசியலுரிமையெல்லாமாங்கவ ரழைத்து" (கந்தபு. விண்கு. சo.)

அழைப்பு — அழைத்தல். (உ-ம்.) "அப்போதொழியுமழைப்பு" (நாலாயிர. இயற்பா. கூஅ.)

அள் —1-3. அள்ளென்னேவலுந் தெரிநிலைவினைப் பகுதியும் பெயரெச்சத் தொகையும். 4. ஒருநோய். (உ – ம்.) "தள்ளும்பித்தக்கிச்சுர்சர்த்தி தலைநோவலசம்– அள்ளும்பித்துக்கொள்ளுமால்" (தைல. தைலவ. அ.) 5. காது. (உ-ம்.) "விழிமூக்கட்டான்" (தைல. பாயிர. உசு.) 6. கூர்மை. (உம்.) "அள்ளிலைவேற்கைநம்பி" (கந்தபு. வள்ளி. க.) 7. நீர்முள்ளி. (இராசவைத்.) 8. நெருக்கம். (உ-ம்.) "அள்ளிலைத்தாளி" (புறநா. உருஉ.) 9. பற்றிரும்பு. (சூ. நிகண். எ: கரு.) 10. பெயர்ச்சொல் வினைச்சொற்களிற் பெண்பாற்படர்க்கையில் வரும் ஓரொருமைவிகுதி; இவ்விகுதி தெரிநிலைவிதிவினையில் வருங்கால் இறந்தகாலஇடைநிலைத்தகரத்தையாவது,தகரத்திரிபாகியடறக்களையாவது,நிகழ்காலத்தில் வருங் கின்று என்னும்இடைநிலையையாவது, அன்சாரியைதொடர அதனை யடுத்துப் பின்வருதலுந் தெரிநிலைவிதிவினையாலணையும் பெயரில் வருங்காற் கால இடைநிலையைத் தொடர்ந்து அகரச்சாரியைவர அதனையடுத்து வகர உடம்படுமெய்யைச்சார்ந்து பின்வருதலும் ஆகும். (எங்ஙனம்?) அவள்.[பெயர்ச்சொல்]வந்தனள், உண்டனள், சென்றனள்,வருகின்றனள்.[வினைச்சொல்]வந்தவள் உண்டவள்,சென்றவள், வருகின்றவள், வருகிறவள், வருபவள்.[வினையா

லணையும்பெயர்.] 11. வரண்முள்ளி. (இராசவைத்.)

அள்வழப்பு—காதுக்குறம்பி. (உ–ம்) "அள்வழுப்புச் சார்வலமே வினையுழை" (திருப்பு. ருளகூ.)

அள்ளத்தி—ஒருமீன். (உவின். ருo)

அள்ளல்–1. அள்ளுதல். (சி,2. இசைக்கரணங்கள் எட்டினுள் ஒன்று; அஃது:"அரம்–அரும்பொற்சுட்டுவிரல் சேட்டந்தன்னுலள்ளல்" (கூர்மபு.கண்ணன்மண. கசஎ) 3. குழைசேறு (உ-ம்)'அள்ளலங்கருஞ்சேற்றிடை' (நைட. காட்டு. எ.) 4. நரகம். (உ-ம்.) "அலைசெயள்ள லகல்காறும்" (தணிகை. அகத். உஅரு)

அள்ளி — வெண்ணெய். (இராசவைத்.)

அள்ளு — 1. அள்ளப்படும் பொருள். (உவின். ருo.) 2. அள்ளுநோய். (தைல. தைலவ. அ. உரை.) 3 -4. அள்ளென்னேவலும் பெயரெச்சத்தொகையும். [உகரம்–ஒருசாரியை.]

அள்ளுகொள்ளை — 1. அதிகவரவு.(உவின். ருo.) 2. பெருங்கொள்ளை. (உவின், ருo.)

அள்ளுதல் — 1. அள்ளியெடுத்தல், திரளாயெடுத்தல். (உ–ம்.) "உதிர்சருகுசந்தமூலங்களேனுங்–கனல்வாதைவந்தெய்தினள்ளிப்புசித்து" (தாயு. சச்சி. ரு.) 2. செறிதல். (சிந்தா. காந்த. கஉஉ. உரை.) 3. நெருங்குதல். (உ–ம்.) "அள்ளியகிருமிகிண்டவழுகல்வாயாவரின்னோர்" (சூத. எக்கி. பூ. சஎ: எ.) 4. வாரியெடுத்தல். (உ–ம்.) "கற்பகநகர்க்கிறைவனை– யள்ளி மண்ணிடைகளிற்றெருடு மரைத்ததொருகை" (கூர்மபு. தக்கன்வேள். கூரு.)

அள்ளுமாந்தம்—ஒருவகைமாந்தரோகம்; அது விலாவைத் தூக்கிக்கொள்ளுவது (சீவரட்; உகஅ.)

அள்ளூறல்—வாயூறல். (உ–ம்.) "அத்தனுநந்தனமுதனென்றள்ளூறித் தித்

திக்கப்பேசுவாய்" (திருவாச. திரு வெம். ௩.)

அள்ளை — பிசாசம். (மா.)

அள—1-2. அளவென்னேவலுந் தெரிநிலைவினைப்பகுதியும்.

அளக்கர்—1. உப்பளம். (சூ. நிகண். ௫: ௨௧.) 2. கடல். (உ-ம்.) "அங்கண்மாஞாலஞ்சூழுமளக்கரைநிகர்த்த தாமே" (கந்தபு. ஆற்று. ௩௬.) 3. கார்த்திகை நட்சத்திரம். (சூ. நிகண். ௩: ௬௮.) 4. சேறு. (சூ. நிகண். ௫: ௨௮.) 5. நீள்வழி. (சூ. நிகண். ௫: ௬௪)) 6. பூமி. (சூ. நிகண். ௫: ௮.)

அளக்கார்—உப்பமைப்போர். (சி.)

அளக்கல் — அளத்தல். (உ-ம்.) "அளக்கலாகாவளவும்பொருளும்" (நன். பொதுப். ௨௮.)

அளக்கிய— "அளந்துகாட்டும்படி" எனக்கருதும் ஒருவினையெச்சம். (உ-ம்.) "நாற்றிசைக்குமென்னறிவளக்கிய கருதி" (சிந்தா. இலக்க. ௨௧௬.)

அளக்குதல்—அளக்கல். (உவின். ௫0.)

அளக்கை—அளத்தல். (சி.)

அளகத்தி — அளகம் உடையவள். (உ-ம்) "கரியகாரளகத்தி" (திருப்பு. ௬௬௨.) [அளகம்-அத்து-இ.]

அளகநந்தை—ஒருதீர்த்தம். (கூர்மபு. பேருவின். ௧௮.)

அளகநாதர்—(சைநம்.) ஒருதீர்த்தகரர். (த. நி. போ. ௨௪௬)

அளகபந்தி — பெண்களின் மயிர்முடி. (உ - ம்.) "நல்லாரளகபந்தியெனவிருண்டசெவ்விரளிர்தண்கா" (இரகு. திக்கு. ௬௨.)

அளகபாரம்—கூந்தற்பாரம். (உ-ம்.) "அளகபாரமலைந்து குலைந்திட" (திருப்பு. ௬௭.)

அளகம் — நீர். (சூ.நிகண். ௩: ௫௪.) 2. பன்றிமுள்ளு. (உவின். ௫0) 3. பனிச்சை. (உ-ம்.) "கொய்பூந்தாதுகொண்டளகத்தப்பி" (சிந்தா. முத்தி. ௬௫0.) மயிர்ச்சுருள். (உவில். ௭௪.) 4. பெண்மயிர். (உ-ம்.) "சானேயளகங்கரும்புயலே" (வாண. ௫௨.) 5. வெள்ளெருக்கஞ்செடி. (சி.) [3, 4. அலக.]

அளகாதிபதி—குபேரன். (உ-ம்.) "ஆயபொழுதளகாதிபதி" (பாரத. மணிமா. ௫௬) [அலகாயிபதி: அலகா—அளகை. அயிபதி—தலைவன்.]

அளகாதிபன் — குபேரன். (உ - ம்.) "அளகாதிபனுரைத்தவாசகம்" (இராமா. வரையெ. ௬௫) [அலகாயுப: அலகா; அயுப-தலைவன்.]

அளகாபதி—குபேரன். (உ-ம்.) "அல்லதுநீடளகாபதிதானும்" (பாரத. புட்ப. ௬௬) [அலகா; பதி-தலைவன்]

அளகாபுரி — குபேரனுடைய நகரம். (உ- ம்.) "அளகாபுரியுறைவோர்" (பாரத. மணிமா. ௪௫.)

அளகாரம்—சித்திரமாகப்பேசுகை, வீண்புகழ்ச்சியாய்ப்பேசுகை. (உவின். ௭௭. அழகாரம்.) [அலங்காரம் என்பதன் சிதைவு.]

அளது—1. அன்னப்பெடை. (உ - ம்.) "ஆதகாவென்னவன்னமயல்செல வளகுமாடே—மேதகாவெறுப்ப" (இரகு. நாட்டு. ௪௮.) 2. கார்த்திகைநட்சத்திரம். (வீமே. ௪௫.) 3. கோழி, கூகை, மயில் என்னும் பறவைகளின்பெண். (தொல். பொரு. ௬௧௬, ௬௨௨) இவற்றுள், "மனையுறையளகின்வாட்டொடும்பெறுகுவிர்" (பெரும்பா. ௨௫௮.) என்பதிற் கோழிப்பெடைக்கும், அளகினோடுபோட்டிரட்டு மாலைதொறுங் குரால்கள்" (தணிகை. நாட்டு. ௬௬.) என்பதிற் கூகைப் பெண்ணுக்குஞ்சொல்க. [திருவிளையாடற் புராணகாரர் ஆண் கோழிக்கும் போதர, "அளகைப்பொறித்தகொடியிளையோன்" என்றார். (திருவிளை. அருச்சனை. ௬௪.] 4. பறவைப்பேடு. (உ-ம்.) "அளகைநேடிப்பார் வல்வந்தணையுமாபோல்" (கந்தபு. சம்பு. ௨௬.)

அளகேசன் — குபேரன். (உ-ம்.) "அளகேச னமர்வென்றதனியாண்மையான்" (பாரத. ஐந்தாம். ௮.) [அலகா; ஈஶ:-தலைவன்.]

அளகை—1. எட்டுவயசுக்கும் பத்துவயசுக்கும் இடைப்பட்டபெண் (உவில். ௭௪.) 2. குபேரனுடைய நகரம். (உ-ம்.) "அது பொழுதவுணர்களளகை யூடுபோய்" (கந்தபு. திக்குவி. ௬௫.) [அலகா: அல-அலங்கரித்தல். க-ஒருவிகுதி.]

அளகைக்கோன் — குபேரன். (உ-ம்.) "நிருதியாடிகொண்டெதிர்வரவடிக்கடிநிதிமுகந்தளகைக்கோன்-சருதியாயிரஞ்சிதறிட" (திருவிளை. திருமண. ௧0௮.) [கோன்-தலைவன்.]

அளகைமன்சகா—சிவன். (உ-ம்)"அளகைமன்சகாவமர்ந்த" (பாகவ. ௬. ௪௫.) [மன்-அரசன். சகா-தோழன். குபேரன்றோழன் என்றபடி.]

அளகையாளி—குபேரன். (உ - ம்.) "அளகையாளியை யெம்பிரான் வரவழைத்தருளி" (உபதேசகா. சிவபு. ௬௧௪.)

அளகையான்—குபேரன். (உ - ம்.) "அளகையான்பெருக்கம்" (இரகு. இரகுகதி. ௭௬.)

அளகையையாளி —குபேரன். (உ-ம்.) "அடுங்கதிர் படைத்தகோவுமளகையையாளிதானும்" (கந்தபு. சூரபன். வதை. ௭௪௪.) [ஆளி — ஆள்பவன்.]

அளகையோர் — செட்டிகள். (உ-ம்.) "நிதிகெழு செல்வத் தளகையோர்" (பாரத. இந்திரப். ௬௬.) [ஆதியிற்

செட்டிகள் அளகையினின்றும் வந்தவர் என்னுங் கதைபற்றிய பெயர்.]

அளத்தல்—1. அளவளாதல். (உ-ம்.) "என்முகமளக்குங்கால்" (கல்லாட. சுஅ.) 2. அறிதல். (உ-ம்.) "ஆசைப்புறத்தளவா" (வாண. சுகூ) 3. எட்டுதல், தீண்டுதல். (உ-ம்.) "மோலியண்டமுகட்டினையளப்ப" (கூர்ம பு. தக்கன்வேள். சுகூ.) 4. எடுத்தல், முகத்தல், நீட்டல் என்னும் அளவைகளோடு கலந்தாவது கலவாமலாவதெண்ணி யளவுசெய்தல். (உ-ம்.) "மன்னவர் தருதிறையளக்குமண்டபம்" (இராமா. நகர. கூஉ.) 5. கீழ்ப்படுத்தல். (உ-ம்.) "தாமுலகளந்தவென்றித்தனிவிற் சேவகனுய்த்தோன்றி" (திருவிளை. யானையெ. உஅ.) 6. நியதி செய்தல். (உ-ம்.) "அளந்துகாந்தரநுகர்ந்து" (திருவாசவூ. திருப்பெருந். கூச.) 7. பங்கிடல். (உவின். சுகூ) 8. பிரமாணத்தைக்கொண்டறிதல். (உ-ம்.) "இதனுனேகாட்சிமுதலிய மூன றும்படும் பாகுபாடும் அவற்றுன் அளக்கப்படும்பொருள்களின்பாகுபாடுந்தொகுத்துக்கூறப்பட்டன" (சி. சி. அளவை. ச. சிவஞா.) 9. மட்டறிதல். (உ-ம்.) "வரம்பில்கட்புலங்கொண்டவரேனு மற்றிவ்வூர்-விரும்பியித் திருநோக்கினுமளத்தன்மேவருமோ" (கந்தபு. நகர்பு. அகு.) 10. மதித்தல். (சி.) 11. வரையறுத்தல். (உ-ம்.) "முன்னமளந்துணர்வளித்து" (சிவப்பிர. சo: கூ.)

அளத்தி—நெய்தனிலப்பெண். (சூ. நிகண். உ: எஉ)

அளத்தியர் — 1. உப்பமைப்போர்பெண்கள். (உவின். குo) 2. நெய்தனிலப்பெண்கள். (உ-ம்.) "மீட்டளத்தியர்கடாரம்பாடுபெவிளரிவேண்டார்"(இரகு. நாட்டு. குகு)

அளத்துநிலம் — களர்நிலம். (உவின். குo)

அளத்துப்பச்சை— மருக்கொழுந்துச்சக்களத்தி; இஃது அவர்கிலத்திலுண்டாவது. (கா. வைத்)

அளத்துப்புல்—முயிற்றுப்புல். (கா. வைத்)

அளத்துப்பூளை — ஒருசெடி. (உவின். குo)

அளந்திடல் — அளத்தல். (உ-ம்) "அளந்திடற்கரிதாய" (திருவிளை. புராணவர. க.)

அளப்பம்—1. அலப்பு. (உவின். சகூ) 2. அளக்கை. (உவின். சகூ) 3. ஊழ். (உவின். சகூ) 4. முறுமுறுக்கை. (உவின். சகூ)

அளப்பளத்தல் — 1. பிதற்றல், வீண்பேச்சுப்பேசுதல். (உவின். சகூ) 2 முறுமுறுத்தல். (உவின். சகூ) [அலப்பு எனற்பாலது அளப்பு எனநின்றது.]

அளப்பன்—1.குதர்க்கம்பேசுவோன். (உவின். சகூ) 2. வீணகப்பேசுவோன். (உவின். சகூ) ["அலப்பன்" என்பது திரிந்தது.]

அளப்பு— 1. அலப்பு. (உவின். சகூ) 2. அளத்தல். (உ-ம்.) "அடியினதெல்லையளப்பரிதென்றால்" (பாரத. புட்ப. ருக.) 3. அளவு, எல்லை. (உ-ம்) "ஈசனையளப்பில்கால மிதயமேலுன்னி" (கந்தபு. ததீசிப். ரூஉ) 4. ஆராய்ந்தறிதல். (உ-ம்) "அருமறையாகமமுதனூலனைத்துமுரைக்கையினுலளப்பரிதாம்" (சி. சி. அ: கச. நிரம்.) 5. ஊழ். (உவின். சகூ) 6. காலதேசவத்துக்களினுற் பரிச்சேதிக்கப்படுதல். (சி. சி. க: கச: சிவாக்.) 7. தலைவிதி. (உவின். சகூ.) 8. பிரமாணங்களால் அளத்தல். (சி.சி. க.கச:மறை)

அளப்புக்கு — முடக்கொத்தான்செடி. (கா. வைத்.)

அளப்புதல் — 1. அலப்புதல். (மா) 2. குழப்புதல். (சி)

அளபு—அளபெடை. (உ-ம்.) "குற்றுயிரளபினீறும்" (நன். எழுத்தி. ருகூ) 2. அளவு. (மா.) 3. ஓரலங்காரம்; அஃதளபெடையாய் வருவது. (சி.) 4. மாத்திரை. (உ-ம்.) "அளபிறந்துயிர்த்தலும்" (தொல். நூன்மரபு. கூகூ.)

அளபெடுத்தல்—எழுத்தின் மாத்திரையை யெழுப்புதல். (உவின். சகூ.)

அளபெடை—எழுத்துக்கள் தத்தம்மாத்திரையின்நீண்டொலிக்கப்படல்(உ-ம்.) "ஒற்றளபெடையாறேழ்" (நன் எழுத்தி. கூ.) அஃதுயிரளபெடையொற்றளபெடையென இருவகைப்படும். இயற்கையளபெடை செயற்கையளபெடையென இருவகைப்பட்டும்வரும். [அளபு-எடு-ஐ.]

அளபெடையநுகரணம் — அளபெடைப்போலி. "நூறேஒநூறென்பாணுட்கிடைக்குமென்மூலைக்கும்" என்பதுள் "நூறேஒநூறு" என்புழிப் பண்டமாற்றின்கண்அளபெடைவந்து வெண்பாவினுள் நாலசைச்சீராயிற்று; அவ்வாறுவரும் என இலக்கணம் இன்மையால் அளபெடையநுகரணமாகும். (வீரசோ. யாப். கூ.)

அளபெடைவண்ணம்—இருபது வண்ணங்களுள் ஒன்று; அஃதுயிளரபெடை அல்லது ஒற்றளபெடை பயின்றுவரப்பாடப்படுவது.(உ-ம்)"அளபெடைவண்ணம் அளபெடைபயிலும்"(தொல். பொரு. ருகூஉ) "மராஅமலரொடுவிராஅய்ப்பராஅம்"எனவும்"கண்ணிடண்ணெனக்கண்டுங்கேட்டும்" எனவும் வருவனவற்றிற்போல.

அளம் — 1. ஆயுதக்கூர்மை. (உவின் குo.) 2. உப்பளம். (உ-ம்.) "அளம்படுவார்தரும்பண்மினர் நேர" (தணிகை. களவுப். சருக.) 3. நெய்தனிலம். (உ-ம்.) "அளங்கொளளக்கரிரும்பரப்பில்"(இராமா. தைல. எஉ.)

4. நெருக்கம். (உவின். நூo.) 5. புத்திக்கூர்மை. (உவின். நூo.)

அளமரல்—அலமரல். (உ-ம்.) "அளமருபிறப்புகவமலர்க்குய்த்திடும் - வளமலர்" (தணிகை. நாட்டு. கக.) [அலம் – சுழற்சி. "ல" ளவ்வாயிற்று.]

அளமளாதல் — 1. அளவளாவுதல். (சி.) 2. மிக அளைதல். (மா.) [அலம்–மிகுதி.]

அளர்க்கம்—1. தூதுளங்கொடி. (உ-ம்.) "சிதசுரசமார்க்கவஞ்சங்குசாறடைமூட்டிதேட்கடைபெரும்புன்முள்ளி–சிம்மமுகிபொடுதலைதமாலகியளர்க்கமெண்டெரி பன்னிருவகையிரதமும்" (தைல. தைலவ. கசு.)

அளவடி—நாற்சீரான்வரும அடி. (உ-ம்.) "நாலொருசீ– ரறைதருகாலையளவடி" (காரிகை. உறுப். கஉ.)

அளவடிவிருத்தம்—கலிவிருத்தம்.(உவின். நூo; காரிகை. செய். கசு) [நாற்சீரடியால் வரும் விருத்தமாதல்ன் இப்பெயர்த்து]

அளவர் — 1. அளக்கிறவர். (சி) 2. உப்பமைப்போர். (உ-ம்) "பரதவரளவர்வாரிப்படுத்தமீனுப்பின்குப்பை" (கந்தபு. ஆற்று. கூo.)

அளவல் — 1. கலத்தல்–பொருந்தியிருத்தல். (உ-ம்) "வளமலிகாஞ்சி தன்வைப்பிடையளவலினிந்தவடுக்கலை" (தணிகை. விடை. கூக) 3. எட்டுதல். (உ-ம்) "கொண்டலையளவியகோங்குபூத்தவே" (கந்தபு.இந்திரனருச்.கஅ)

அளவழிச்சந்தம் — தனித்தனியே நான்கெழுத்துச்சிறுமையும் இருபத்தாறெழுத்துப் பெருமையும் பெற்று எழுத்தளவொத்தனவாய், குருவும் இலகுவும் ஒவ்வாத அடிகளால் வருவது.

அளவழித்தாண்டகம் — தாண்டகமென்னும் பிரபந்தத்தின் ஒருவகை; அஃது:இருபத்தேழெழுத்து முதலாக எழுத்தளவொத்துக் குருவும் இலகுவும் ஒவ்வாத அடிகளால் வருவது. (இலக்கணசிர். கசு-ம் பக்.) [அளவு; அழி–அழிந்தது.]

அளவளத்தல்—கலத்தல். (மா.)

அளவளாதல் — அளவளாவுதல். (உவின். நூo.)

அளவளாய் — அளவளாவி யெனப்பொருள்படும் ஒருவினையெச்சம. (உ-ம்.) "அருந்ததிகணவன்வேந்தோடளவளாய" (கூர்மபு. இராமனவ. எஅ)

